வெளியீடு—30—6—1972]
Issued—30—6—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1972 மார்ச் 23
Thursday 23rd March 1972

தொகுதி XX—எண் 1
Volume XX—No. 1

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

615B1

# Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*23rd, 24th and 25th March* 1972.

3897

VOLUME XX (Nos. 1 to 3).

TABLE OF CONTENTS.

***Thursday**, 23rd **March*** 1972.


| | PAGES.* |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies .. . | ix–xvi |
| 1. Questions and Answers .. .. .. .. | 1–21 |
| 2. Announcements— | |
| Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. | 31 |
| 3. Government Bills— | |
| (*a*) Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1972 ... .. .. .. .. .. | 32 |
| (*b*) Tamil Nadu Public Wakfs (Extension of Limitation) Amendment Bill, 1972 .. .. | |
| 4. Voting on Demands for Grants for the year 1972–73—*cont.* | |
| (*a*) Demand No. 19—Co-operation .. | 32–120 |
| (*b*) Demand No. 22—Khadi .. .. | 32–120 |
| 5. Papers laid on the table .. .. .. .. | 120 |

| | PAGES. |
| --- | --- |
| ***Friday, 24th March 1972.*** | |
| 1. Questions and Answers .. .. .. .. | 173-201 |
| 2. Presentation of Reports— | |
| (a) Committee on Subordinate Legislation—Third Report .. .. .. .. .. | 202 |
| (b) Committee on Estimates—Report on Cinchona Department .. .. .. .. | 202 |
| 3. Voting on Demands for Grants for the year 1972–73 (continued)— | |
| (a) Demand No. 24—Labour including Factories .. .. .. .. .. | 202-206, 265-332 |
| (b) Demand No. 5—Registration Department. | 205-268 |
| (c) Demand No. 34—Stationery and Printing. | 243 265 |
| (d) Demand No. 3—General Sales Tax and other Taxes and Duties—Administration .. | 207–243 |
| 4. Papers laid on the table .. .. .. .. | 333 |
| ***Saturday, 25th March 1972.*** | |
| 1. Questions and Answers .. .. .. .. | 501-530 |
| 2. Presentation of Reports— | |
| Report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations of the Committee on Estimates on 'Fisheries Department' .. .. .. | 530 |
| 3. Voting on Demands for Grants for the year 1972–73 (continued)— | |
| (a) Demand No. 16—Agriculture .. } (b) Demand No. 39—Capital outlay on Agriculture .. .. .. .. .. | 530-643 |
| 4. Announcement— | |
| Business of the House .. .. .. .. | 591 |
| 5. Papers laid on the table .. .. .. .. | 644 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நீதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச் சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள் கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொது பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப் வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்க உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், மூகம்மதியர் அற கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்க தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்க கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசா (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பின நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப் வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட் வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு .வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்த குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோ



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industriesi*—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

**பேரவைத் துணைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

**சட்டப் பேரவைச் செயலாளர்:**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்:**

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ. |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேலின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ. வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | வந்தவாசி (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | ஓசூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என் .. .. .. | திண்டுக்கல் |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. .. .. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. வ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. இ. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோணையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், திரு. அ. பெ. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்றம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. ஏ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. ஏ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம் திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. | மூகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி. திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ. |
| 178 பர்லையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெரும்மாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண் | உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 214 | மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 | ரங்கனுதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 | ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 | ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 218 | ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 | ராஜா, திரு. ஏ. எம். .. .. .. | பவானி. |
| 220 | ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 | ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 | லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 | வகாப், திரு. கே. ஏ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 | வடிவேலு, திரு. சீ. க. .. .. .. | தொட்டியம். |
| 225 | வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 226 | விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 227 | வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 | வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 | வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 | வேதாச்சலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 231 | வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 | வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 | ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 | ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

தொடர் எண்ணும், பெயரும்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 | மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி .. .. .. .. .. | அமைச்சர். |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**வியாழக்கிழமை, 1972 மார்ச் 23.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

முதியோர் உதவித்தொகை வழங்க வயது வரம்பு.

*640 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முதியோர் உதவித் தொகை வழங்குவதற்கான தற்போதுள்ள வயது வரம்பினை குறைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கண் பார்வை இழந்தவர்கள், காது செவிடானோர், உடல் ஊனமுள்ளவர்கள் ஆகியோர்களுக்காவது இந்த வயது வரம்பினை ஒரு சில ஆண்டுகளாவது தளர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கின்ற விதிகளின்படி 65 வயதும் அதற்கு மேற்பட்டும் வயது ஆனவர்களுக்கு இந்த முதியோர் ஓய்வூதியம் தருவது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும், கண் பார்வையற்றோர், தொழுநோய், மன நோய் உள்ளவர்கள் அல்லது உடல் உறுப்புகள் இழந்து சம்பாதிக்க இயலாதவர்கள் ஆகியோர்களுக்கு, 65 வயதும் அதற்கு மேற்பட்டும் என்று வயது வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் எதுவும் செய்வதற்கில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முன்பு இந்த ஊதியம் பெற்றுக் கொண்டிருந்தவர்களுக்கு இடையிலே நிறுத்தப்பட்டுவிட்டது. அவர்களுக்குத் திரும்பவும் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ? அதல்லாமல், இப்பொழுது கொடுக்கப்படுகின்ற தொகை மிகக் குறைவாக இருப்பதால் அதை உயர்த்துவதற்கும் அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : யாருக்கும் நிறுத்தப்பட்டுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. 31-12-1971 அன்றைய கணக்கின்படி 41,685 பேர் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இப்போதே கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவுக்கு செலவாகிக்கொண்டு வருகிறது. இதைப்பற்றி மேலும் அரசு யோசிக்கும்.

[1972 மார்ச் 23

திரு. கே. டி. கே. தங்கமணி : தியாகிகளுக்குக்கூட இந்த ஓய்வூதியத்தை உயர்த்துவது என்கிற கருத்து அரசுக்கு இருக்கும்போது இவர்களுக்கு குறைந்தது ஐம்பது ரூபாய் அளவுக்காவது ஓய்வூதியம் உயர்த்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே ஒரு கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகிறது என்று சொன்னேன். நிதி நிலைகளை உத்தேசித்து அவர்களுக்கு எவ்வளவு உயர்த்தலாம் அல்லது உயர்த்த இயலுமா என்பதைப்பற்றி பிறகுதான் அறிவிக்க முடியும்.

திரு. வை. பாலசுந்தரம் : முதியோர் உதவித் தொகை வழங்கும்போது உறவினர்கள் யாராவது இருந்தால் உதவித் தொகை பெற இயலாத நிலை ஏற்படுகிறது. உறவினர் இருந்தும் பயனில்லாத முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மையாகவே ஆதரவற்றவர்கள் என்று தெரிந்த பிறகு மாத்திரந்தான் இந்த உதவித் தொகை அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ் முருகையன் : முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் வயதுக்கான சான்றிதழைப் பெறுவதில் மிகுந்த சிரமம் இருக்கிறது. ஆகையால், வயதுக்கான சான்றிதழை தகுந்த மருத்துவர்களிடமிருந்து பெறவேண்டும் என்றால் அதற்காகப் பல கிராமங்களில் கட்டணம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. தாசில்தாரே பார்த்து, வயதை நிர்ணயம் செய்யக்கூடிய முறையில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே தாசில்தார் அதை மறுபார்வையிட்டு பரிசோதனை செய்துகொண்டுதான் இருக்கிறார். எங்காவது சிக்கல் இருந்தால் அப்படிப்பட்ட தனிப்பட்ட குறைகளைக் களைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் அரசு கவனிக்கும்.

திரு. துரைமுருகன் : முதியோர்களுக்கான உதவித் தொகை ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே அளவு உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஆண்கள் அதிகமான பேர் இந்த உதவித் தொகையைப் பெறுகிறார்களா ? அல்லது பெண்கள் அதிகமான பேர் இந்த உதவித் தொகையை பெறுகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் ஆண்–பெண் வேறுபாடு எதுவும் இல்லை. பொதுவாக 65 வயதும் அதற்கு மேற்பட்டவர்கள் என்றும், உடல் ஊனமுள்ளவர்களாக இருந்தால் 60 வயது என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் இந்த உதவித் தொகை பெறுகிறார்கள் என்கிற கணக்கு இல்லை. வயதானவர்களுக்குத்தான் இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது.



1972 மார்ச் 23]

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : குமரி மாவட்டத்தில் இந்த உதவித் தொகை எத்தனை பேர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதைக் கூற முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கன்யாகுமரி மாவட்டத்தில் 2,343 பேருக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தமிழ்நாட்டில் மனு நீதித் திட்டம் கொண்டு வந்ததன் பின்னர்தான் முதியோர்க்கு உதவித்தொகை வழங்குகின்ற இந்தத் திட்டம் வேகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது உண்மையா ? மனு நீதித் திட்டம் தமிழகத்தில் புகுத்தப்பட்டதற்குப் பின்னால் இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு செலவாகி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் மனுநீதித் திட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு ஆங்காங்கு இருக்கின்ற குறைபாடுகளை உடனடியாகக் கவனித்திடவும் உரிய முதியோர்களுக்கு இந்த உதவித் தொகைக் கிடைக்கச் செய்யவும் ஏற்ற விதத்தில் இந்தத் திட்டம் விரிவாகச் செயல்பட்டு வருகிறது என்பது சரியானதே ஆகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : முதியோர் பென்ஷன் பெறுவதற்குத் தகுதி உள்ளவர்கள் பலர் மனுச் செய்தும் அவர்களுக்கு இது வழங்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே, இப்பொழுதிருக்கும் பெண்டிங் அப்ளிகேஷன்களைப் பரிசீலனை செய்து, தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஆரம்பித்த ஆண்டில் சுமார் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்த தொகையைப் பெற்றார்கள். பிறகு பல பேர் 65 வயது ஆனவர்கள் என்ற காரணத்தால் எவ்வளவு நாள் உயிரோடு இருந்திருப்பார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரியும். இப்பொழுது ஏதோ பல பேருக்குக் கிடைக்கவில்லை என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். நான் ஆண்டு வாரியாகச் சொல்லுகின்றேன். 1964 ம் ஆண்டில் 2.891 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1965-ம் ஆண்டில் 2,560 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1966-ம் ஆண்டில் 3,165 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1967-ம் ஆண்டில் 3,600 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டில் 3,590 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டில் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோல், மனுநீதித் திட்டம் தொடங்கிய பிறகு 5,368 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். 1970-ம் ஆண்டில் 9,169 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். 1971-ம் ஆண்டில் 6,358 பேர் புதிதாக இடம் பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே மூவாயிரம் பேர் என்றிருந்த நிலை மாறி இப்பொழுது இரட்டிப்பாகியிருக்கிறது. ஆகவே, ரொம்பப் பேருக்குக் கிடைக்கவில்லை என்று கூறுவது பொருத்தமற்றது ; வேண்டுமென்றே சில பேர் வெளியே தவறாகக் கூறிக்கொண்டிருப்பதை வைத்து உறுப்பினர் அவர்கள் இப்படி கேட்கிறார் என்று கருதுகிறேன்.

## கைரேகைப் பதிவு அலுவலகம்.

*641 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) Finger Print Bureau-ல் பணி ஆற்றுபவர்களுக்கு Crime Special pay அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அளிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) (இ) இப்பிரிவில் பணியாற்றுகிறவர்களுக்கு கிரைம் ஸ்பெஷல் பே அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை எனினும் இப் பிரிவில் பணியாற்றும் விரல் ரேகை தேடுபவர்கள். விரல் ரேகை வல்லுநர்கள், விரல் ரேகை பதிவு சூபரின்டென்டெண்ட் ஆகியோர் முறையே மாதமொன்றுக்கு ரூ. 15 ரூ. 25, ரூ. 30 என்ற அளவில் ஸ்பெஷல் பே இப்போதும் பெற்று வருகிறார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : விரல் ரேகைப் பதிவு ப்யூரோவில் போதிய பணியாளர்கள் இல்லை என்ற குறை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? அதை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட யோசனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு இப்பொழுது தரப்படுகிற 'ஸ்பெஷல் பே' இன்னும் கொஞ்சம் உயர்த்தப்பட வேண்டும் என்ற செயற்குறிப்புதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போலீஸ் கமிஷன் ரிபோர்ட்டில் இம்மாதிரியான ரேகை நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கவேண்டும் என்ற பரிந்துரை இருக்கிறதே, அது சீக்கிரம் அமல் படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதி நிலைக்கு ஏற்றவாறு வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு அமல்படுத்தப்படும்.

## தமிழ்நாட்டில் மலபார் காவல்படை

*642 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழகத்தில் மலபார் காவல்படை எங்கெங்கு உள்ளது ?

(இ) இப்பிரிவை முடிவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) மலபார் சிறப்பு காவல் படை 1-ம் அணியின் ஒரு பிரிவு திருச்சிராப்பள்ளியிலும் மற்றொரு பிரிவு பழனியிலும் இருக்கின்றன. இரண்டாம் அணி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறில் இருக்கிறது.

(இ) இல்லை.



'மலபார் சிறப்பு காவல் படை' என்பது இப்பொழுது 'தமிழ்நாடு சிறப்பு காவல் படை' என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

திரு. கோவை செழியன் : தமிழகத்திற்கென்று தனியாகப் போலீஸ் படை இருக்கும்போது, தமிழகத்திலே மத்திய அரசாங்கத்தினுடைய போலீஸ் படை ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மை தானா ? அப்படியென்றால் அது யாருடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது, அதற்கு என்ன அவசியம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி 'மலபார் சிறப்பு காவல் படை' யைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகின்ற ஆர்வத்தை நான் உணர்கிறேன். அதற்கு ஒரு தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி எல்லா விவரங்களோடும் நான் எடுத்துரைக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி ; சார், சென்ற ஆண்டுவரை மலபார் ஸ்பெஷல் போலீஸ் என்று இருந்தது, தமிழ்நாடு சிறப்புப் போலீஸ் படை என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பெயர் மாற்றப்பட்டதற்குப் பிறகு அவர்களுக்கு பல வெளி மாநிலங்களிலிருந்து வருகிறார்கள் என்ற காரணத்தால், சிறப்பாக ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று அவர்கள் ஏதாவது மனு செய்து இருக்கிறார்களா ? அப்படியானால் அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கின்றது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது யாரும் வெளி மாநிலங்களிலிருந்து வருவதாக இல்லை. பொதுவாக எல்லா மாநிலத்தவர்களும் அந்தப் படையில் இருக்கிறார்கள். ஏனெனில் இந்திய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் மற்ற மாநிலத்துக்காரர்கள் என்று யாரையும் வித்தியாசம் பார்ப்பது இல்லை. பொதுவாக வேறு மாநிலத்திலிருந்து வருகிறார்கள், வரவில்லை என்பது பிரச்னைக்குரியது அல்ல. அவர்களிடமிருந்து ஊதிய உயர்வு கோரி கோரிக்கைகள் எதுவும் வந்ததாகத் தகவல் இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் மலபார் காவல் படை என்று ஏன் இருக்கவேண்டும் ? அதை மாற்றி தமிழ் நாட்டின் பெயர் வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கவனித்து இருந்தால் கேள்விக்கு பதில் முன்பே கிடைத்து இருக்கும் (சிரிப்பு).

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, கேரள மாநிலத்தின் எல்லையை ஒட்டி உள்ள தமிழ்ப்பகுதிகளில் குறிப்பாக கூடலூர் பகுதியில் தமிழ் நாட்டைச் சார்ந்த காவலர்கள் தான் இருக்கவேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது போன்ற வேண்டுகோள் எதுவும் வரவில்லை.

[1972 மார்ச் 23

## காட்பாடிக்குக் குடிநீர்த் திட்டம்

*643 வினா.—திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காட்பாடியில் குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடி விரிவுப்பகுதி (காட்பாடி பேரூராட்சியிலிருந்து வேறுபட்டது) தாராபடவேடு, கனிஞ்சூர் பேரூராட்சிகள், விருதம்பட்டு ஊராட்சி மன்றம் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கு திட்டத்தை ஆய்வு செய்வதற்காக மதிப்பீட்டுத் தொகை ரூ. 20,000 வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்மூலம் எத்தனை ஆயிரம் மக்கள் பயனடைவார்கள் ? வளர்ந்து வரும் நகரம் காட்பாடி அதற்குப் பின்னாலும் இந்தப் பிரச்னையைத் தீர்க்கப்படுகிற வகையில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதுதான் அதனுடைய ஆய்வு வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காட்பாடி பேரூராட்சி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இப்போது உத்தரவிடப் பட்டுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, தமிழகத்திற்கு என்று குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசு ஏதாவது தொகை ஒதுக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் குடி நீர் வாரியத்தின் மூலமாக ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சிகளிலே அவர்கள் தருகின்ற தொகையோடு. எல். ஐ. சி. மூலமாக நாம் தொகையினைப் பெற்று, அந்தப் பணியை குடிநீர் வாரியத்தின் மூலமாக ஆற்றி வருகிறோம். இவைகளெல்லாம் கிராமங்களில் நடைபெற வேண்டிய காரியங்கள். நம்முடைய உள்ளாட்சித் துறையின் சார்பாக நடைபெற்று வருகிறது. தனியாக இதற்கென்று மத்திய அரசு எதுவும் பணம் ஒதுக்கவில்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, கடந்த ஆண்டுகளில் குடி நீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக வறட்சி நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஒன்றியத்திற்கும் அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நேரடியாக உதவிசெய்ததுபோல் இந்த ஆண்டும் தொடர்ந்து செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு வறட்சி இல்லை.



1972 மார்ச் 23]

## இராணிப்பேட்டைக்கு மகளிர்க் கல்லூரி.

வினா 644 .—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, வாலாஜாபேட்டையில் அறிஞர் அண்ணா பெண்கள் கல்லூரி இருக்கிறது. அது இன்னும் விரிவுபடுத்தப் படாமல் அங்கே படிக்கிற மாணவிகளுக்கு ஹாஸ்டல் வசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதை விரிவு படுத்தும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே இராணிப்பேட்டைக்குப் பக்கத்திலே உள்ள வாலாஜாபேட்டையில் பெண்கள் கல்லூரி இருக்கிற காரணத்தால், அதை விரிவுபடுத்தப்படவேண்டும். அதனுடைய மாணவிகளுக்கு விடுதி கட்டடம் கட்டவேண்டுமென்பதற்கான முயற்சியை கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்கொண்டிருக்கிறார். அவருடைய ஆய்வில் அது இருக்கிறது. அவரிடமிருந்து செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வந்ததற்குப் பிறகு அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஜனத்தொகை மக்கள் எண்ணத்தில் ஆண்களைப் போல் பெண்களும் இருக்கிறார்கள். ஆகவே கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஆண்கள் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. ஆண்களுக்கு இருக்கும் வசதிக்கேற்ப பெண்களுக்கு இல்லாமல் இருக்கும் நிலை இருப்பதால், மகளிர் கல்லூரி அதிகமாகத் திறக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்கள் அளவுக்கு பெண்களின் எண்ணிக்கை இருந்தாலும்கூட படிப்பவர்களின் அளவையைப் பொறுத்து கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன. பெண்களின் தேவைக்கேற்ப, படிக்க வருகிறவர்களின் தேவைக்கேற்ப ஆங்காங்கு உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 100-க்கு 100 சமமாக படிக்கிற நிலை வருகிறபோது இதைச் செய்யலாம். இப்போது 100-க்கு 55 பேர்தான் ஆண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும், 100-க்கு 27 பேர்தான் பெண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இப்போதைக்கு இந்த முயற்சி மேற்கொள்ளப் படவேண்டியதில்லை.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பெண்களும், ஆண்களும் ஒரே கல்லூரியில் படிக்க வைப்பதற்கான கொள்கையை அவர்கள் ஆதரிக்கவில்லை. இப்போது இருக்கும் நிலையில் பெண்கள் அதிகமாக படிக்கும் சூழ்நிலை இருப்பதால், ஆண்களோடு பெண்களையும் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவிட அரசு ஏதேனும் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த அரசு பொறுத்த வரையில் அந்தக் கொள்கையைத்தான் கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தையும், மதுரைப் பல்கலைக்கழகத்தையும் பொறுத்தவரையில் இந்த முடிவை எடுத்தால் ஒரே கல்லூரி மட்டும் இருக்கிற இடத்தில் இந்தப் பிரச்னை தீரும் என்ற வகையிலும் பெண்கள் கல்லூரி என்று தனியாக இருப்பது இருக்கட்டும், அங்கே போய் படிக்கிறவர்கள் படிக்கட்டும். ஒரே கல்லூரி இருக்கிற இடத்தில் மட்டும் இத்தகைய முறை கையாளப்படவேண்டுமென்ற கருத்தை அரசு வலியுறுத்திக்கொண்டு வருகிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, வாலாஜாபேட்டை பெண்கள் கல்லூரி வேலூருக்கு வெகு தொலைவில் இருப்பதால், பெண்களின் பெற்றோர்கள் அதை வேலூருக்கு மாற்றவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா ? அப்படி வேண்டுகோள் வந்தால், அரசு அந்தப் பெண்கள் கல்லூரியை மாவட்ட தலைநகரான வேலூருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேலூர் நகரிலேயே தனியாக ஒரு பெண்கள் கல்லூரி அமைக்கவேண்டுமென்ற முயற்சியை தனியார் துறையில் இருக்கிற ஒருவர் மேற்கொண்டு இருக்கிறார். பல்கலைக்கழகத்தின் அனுமதியை அதற்காகக் கோரியிருக்கிறார்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மதுரைப் பல்கலைக்கழகம் ஒரே கல்லூரி இருக்கும் இடங்களில் ஆண்களையும் பெண்களையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டால் பிரச்னை தீரும் என்று. தமிழ்நாடு முழுவதும் 'கோ-எஜுகேஷன்' தான் இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டுவர அரசு முன் வருமா ? அதன் மூலம் எல்லாப் பிரச்னையும் தீர்ந்துவிடும் என்பதையும் அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒரு சட்டம் போடவேண்டிய அவசியம் இல்லை. ஒரே ஒரு கல்லூரி இருக்கிற இடத்தில் இரு பாலாரையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் பெற்றோர்களுக்கு இருக்கும் சங்கடம் இல்லாமல் போகும் என்பதற்காகத்தான் இத்தகைய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## *Buildings for village schools*

* 645 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Government have proposed to raise loans from the Life Insurance Corporation to construct buildings for village schools; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

(அ) ஆம்.

(இ) பேச்சு வார்த்தைகள் இன்னும் முடியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that the cost of buildings has gone up, do the Government propose to increase the building grant from Rs. 35,000 to a reasonably higher amount?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே ஏற்கெனவே துவக்கப் பள்ளிக்கு ரூ. 4000 அரசு தருவது என்றும். ரூ. 8000 ஊராட்சிகள் திரட்டித்தரவேண்டுமென்றும் இருந்தது சென்ற ஆண்டிலிருந்து அரசு பங்கு ரூ. 8000 என்றும் ஊராட்சிகள் ரூ. 4,000 திரட்டித் தரவேண்டுமென்று இருக்கிறது. ஏற்கெனவே ரூ. 8,000 உயர்நிலைப் பள்ளிகளுக்கென்று அரசு தரும் நிலை இருந்தது. இப்போது அரசாங்கப் பங்கு ரூ 13,000 என்றும், ஊராட்சிகள் ரூ. 5,000 திரட்டித்தரவேண்டுமென்று இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பல பள்ளிக்கூடங்கள் இன்று கூரைக் கட்டிடத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த மாதிரியாக பழுதடைந்து இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு முறையான கட்டடங்கள் கட்டித் தர அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் சார்பாக நடைபெறும் பள்ளிகளில் 8489 பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அவைகளுக்கு கட்டடம் கட்டிக் தரவேண்டுமானால் ரூ. 13½ கோடி தேவைப்படுகிறது. பாதியளவாவது எல்.ஐ.சி. யிடம் கடன் பெற்று 3 ஆண்டுகள் திட்டத்தில் கட்டலாம் என்று, எல்.ஐ.சி. யிடம் கேட்டோம். எல்.ஐ.சி. வைத்து இருக்கும் கொள்கைப்படி அரசுக்கு நேரடியாக தர முடியாது என்றும், ஊராட்சி ஒன்றியங்கள் கேட்டால் தரலாம் என்றும் சொன்னார்கள். எல்லா ஒன்றியங்களும் தனித்தனியாக கேட்பது என்பது முடியாது என்று சொல்லி, சிற்றூர் வளர்ச்சி இயக்குநரே அந்த ஒன்றியங்களின் சார்பாக அந்தத் தொகையைப் பெறுவதற்கான உரிமை தருவதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கிறது. அப்படி உரிமை வழங்கினால் அவரிடத்தில் தரமுடியுமா என்ற ஐயப்பாட்டை எல்.ஐ.சி.க்கு எழுதியிருக்கிறோம். அவர்கள் இசைவு தெரிவித்தால், அந்தச் சட்டத்தை திருத்தி, சிற்றூர் வளர்ச்சி இயக்குநர் அதற்குப் பொறுப்பு காட்டி அந்தக் கடனைப் பெற்று கட்டடங்களை கட்டும் முயற்சியை அரசு எடுத்து வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, லாட்டரி சீட்டு மூலம் வரக்கூடிய வருவாய் இருக்கிறதே அதிலிருந்து கிராம பள்ளிகளுக்கு ஒதுக்குவதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

அப்படியில்லை என்றால் கிராமப் பள்ளிகளை சீர்படுத்துவதற்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் தனிப்பட்ட முறையில் பில்டிங் பண்டு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் பரிசுச் சீட்டில் வரும் வருமானத்தின் ஒரு பகுதியை பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டது. மருத்துவ மனைகள், மருத்துவ விடுதிகள் கட்டுவதற்கும் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்படவேண்டும் என்பதை இனிமேல்தான் ஆராய வேண்டும். ஆனால், ஆண்டுக்கு ஆண்டு கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கு கின்ற பணம் போதுமான அளவுக்கு அமையவில்லை. ஆகவேதான் கடன் வாங்கியாவது கட்டடம் கட்டிவிட்டால், இந்தக் குறைபாடு நீங்கி விடும் என்ற அளவுக்கு ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நாம் கடன் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு, கே. டி. கே. தங்கமணி: அதிகமான தனியார் பள்ளிகளுக்கு இன்னும் கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றன என்று சொல்லப்பட்டது. இந்த ஆண்டு அவைகளில் எத்தனை பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 1000-க்கு மேற்பட்ட கட்டடங்களை நாம் கட்டித்தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மொத்தம் 22,000 பள்ளிகளில் 14,000 பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதி 8,000 சில்லரை பள்ளிகளுக்குதான் கட்டடம் தேவைப்படுகிறது. அவைகளுக்கும் விரைவிலே கட்டடம் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டால், இந்தச் சங்கடம் தீரும் என்ற முறையில்தான் நாம் கடன்கேட்டிருக்கிறோம்.

திரு. க. மு. இராசகோபால்: தனிப்பட்டவர்களிடத்தில் இருக்கிற கல்லூரிகளை எடுக்காவிட்டாலும், இளநிலைப் பள்ளிகள் தனியாரிடத்தில் இருக்கின்ற காரணத்தினால், கட்டடம் இல்லாமல் பல இடங்களில் மரத்தடியில் பிள்ளைகள் படிக்கவேண்டியிருக்கிறது. அதனால் அவைகளை எடுத்துக்கொண்டு கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பெரும்பாலான தனி யார் பள்ளிகள் கட்டடம் இருக்கின்ற வகையிலேதான் இருந்து வருகின்றன. ஏனெனில் சட்டத்தை அங்கேதான் அதிகமாக கடுமை யாக நிறைவேற்றி வருகிறோம். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களை பொறுத்த வரையில்தான் நாம் கடுமையாக இருக்கமுடிய வில்லை. தனியார்களைப் பொறுத்தவரையில் கட்டட வசதி இருக்கிற இடத்தில்தான் அனுமதி தருகிறோம். கட்டட வசதி இல்லாத நிலைமை யில், வகுப்புகளைத் துவக்குவதற்கு அல்லது மேல் வகுப்புகளைத் துவக்குவ தற்குஅல்லது உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு அனுமதி வழங்குவ தில்லை. கட்டடம் கட்டுவதற்கு அரசும் உதவி செய்து வருகிறது, அவர் களும் நிதி திரட்டி கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்தி வருகிறார்கள்.





திரு. எஸ். முருகையன்: துவக்கப்பள்ளி கட்டடம் கட்டுவதற்கு புரசு மான்யம் ரூ. 8,000 ஒன்றியம் ரூ. 4,000 கட்டவேண்டும் என்று புமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒன்றியம் கட்டவேண்டிய ரு. 4,000-ல் கிராமப் பஞ்சாயத்துகள் ரூ 2,000 கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். பல கிராம பஞ்சாயத்துக்களுடைய வருமானம் ரு. 2000-க்கும் குறைவாக இருக்கிறது. அந்த நிலையில் அந்தப பஞ்சாயத்துக் ள் தங்களுடைய பங்குத் தொகையை கட்டமுடியாத நிலை ஏற்பட்டு தொடர்ந்து குடிசையிலேயே பள்ளிகளை நடத்தும்படியான சூழ்நிலை இருந்து கொண்டு வருகிறது. வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்களைப் பொறுத்தாவது, அரசு அவைகளுக்கு முழுமான்யம் கொடுத்து, கிராமப் ள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, புரசு முழுமான்யமும் தருவதற்கு இல்லை. ரூ 4,000 என்பதிலே லெ இடங்களில் சில ஊராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்கின்றன. சில டங்களில் சில ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்கின்றன, சில டங்களில் இரண்டும் சேர்த்து ஏற்றுக்கொள்கின்றன. சில இடங்களில் பாது மக்கள் நிதி திரட்டி ரூ. 4,000 தருவதற்கு முயற்சி எடுக்கி றார்கள். எப்படியாக இருந்தாலும்; ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ன்றியங்கள் ஆகியவைகளுடைய பொறுப்பு ரூ. 4,000 அரசின் பொறுப்பு ரு. 8,000.

திரு. கா. காளிமுத்து: பல கிராமங்களில் உள்ள பள்ளிகளில் ழுதடைந்த கட்டடங்கள் அந்த நிலைமையிலேயே இருந்து, அங்கே வகுப்பு ள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக என்னுடைய தாகுதியிலிருக்கும் நாட்டறெறி உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுதுபட்ட லையில் சீர்படுத்தப்படாமல் வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக் ன்றன. பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் அனைத்தையும் சீர்படுத்து தற்கு, மராமத்து செய்வதற்கு அரசு ஏதேனும் திட்டமிட்டு செய ாற்றுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிக் கட்டடங்கள் ழுதுபட்டு இருக்குமானால், பழுது பார்ப்பதற்கு ஆண்டுதோறும் ஒரு றிப்பிட்ட தொகை மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிக்கு ஒதுக்கித் ரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற உயர் லைப் பள்ளிக் கட்டடத்தைக் குறித்து மாவட்ட தலைமைக் கல்வி திகாரிக்கு எழுதினால், அவர் பரிசீலித்து தக்க நடவடிக்கை டுப்பார்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: குமரி மாவட்டத்தைத் தவிர்த்து ளைய மாவட்டங்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிகள் ஊராட்சி ன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. குமரி மாவட்டத்தில் ாத்திரம் எல்லா பள்ளிகளையும் அரசாங்கம் நடத்திக்கொண்டு ருகிறது. எனது தொகுதியில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ரசாங்கப் பள்ளிகளுக்கு கட்டடம் வேண்டும் என்று கேட்டும், நிதி லைமையின் காரணமாக அரசுக்கு உதவிசெய்ய முடியவில்லை. அந்த லைமையில் நிதி வசதி இருந்தும், பள்ளிகள் ஊராட்சி ஒன்றியத்தின்

பொறுப்பில் இல்லாததால் அந்த ஊராட்சி ஒன்றியங்கள் அரசாங்க அனுமதியின்றி அந்தப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்க முடியவில்லை. ஆனால், அரசு அனுமதி கேட்டால்...... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: அரசு அனுமதியின்றி பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரிப் பகுதி திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து தமிழகத்தில் புதியதாக சேர்க்கப்பட்டதினால், அங்கெல்லாம் துவக்கப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்திவந்த காரணத்தினால், அதே நிலைமை இப்பொழுதும் அங்கே நீடித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று குறைபாடுகள் இருக்குமானால் அவைகளைத் தக்க முறையில் ஆராய்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, இப்பொழுது இருக்கிற நிலைமையில் அதற்கு வேறு பரிகாரம் காணமுடியவில்லை. தனியாகத்தான் ஆராய வேண்டும்.

## உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்கள்.

*646 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ் ஆசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்க்குரிய தகுதிகள் பெற்றிருந்தால், அவர்களும் விதிகளுக்குட்பட்டு தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

திரு. பி.எஸ். மணியன்: தலைவர் அவர்களே, புலவர் பட்டம், வித்வான் பட்டம் பெற்றவர்களுக்கு அனுபவம் இருந்தும் தகுதி இருந்தும் கூட அவர்களுடைய சீனியாரிட்டிப்படி அவர்களை தலைமை ஆசிரியர்களாகப் பல பள்ளிகளில் நியமிப்பது இல்லை. ஆகவே, இனியாவது அத்தகைய பட்டம் பெற்றவர்கள் ஆங்கிலப் பட்டம் பெறாமல் இருந்தாலும்கூட, அதைக் கருதாது அவர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் அனுபவம் பெற்று, தகுதி பெற்றிருந்தால், அவர்கள் யாரும் விடுபடுவதில்லை. இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கிற முறையில் இத்தகைய தகுதிகள் சில பேர்களுக்கு இல்லை என்ற காரணத்தினால் அது மறுக்கப்படுகிற சூழ்நிலை இருக்கலாம். எம்.ஏ., பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு படித்து, எல்.டி., பி.டி., பி.ஈ.டி. படித்





திருக்கவேண்டும். அல்லது பி.ஒ.எல்- படித்து தேர்ச்சி பெற்று, எல்.டி., பி.டி., பி.ஈ.டி. படித்திருக்கவேண்டும் என்ற நிபந்தனைகளை வைத்திருக்கிறார்கள். முதல்நிலை தமிழ் ஆசிரியர்கள் கூட தலைமை ஆசிரியர்களாக வருவதற்கு, அப்படி பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்குக் குறைந்தபட்சம் என்னென்ன தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும் என்று பரிசீலித்து, அப்படிப்பட்ட தகுதியுள்ளவர்களாக தங்களை அவர்கள் ஆக்கிக்கொண்டால் அவர்களையும் தலைமை ஆசிரியர்களாக மாற்றலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. முடிவு எடுத்தபிறகு அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புலவர் சி. பழனிசாமி: தமிழ் ஆசிரியர்கள் தாங்கள் ஓய்வு பெறும் நிலையிலேகூட, இன்னும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக ஆக்குவதற்கு அரசு ஏதேனும் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாக ஆக்குவதற்கு சிலபல விதி முறைகள், தகுதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப அவர்கள் தங்களை தகுதி ஆக்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வேறு முறையில்தான் அதைப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. இ. எஸ். தியாகராஜன்: தமிழ் ஆசிரியர்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிற இடத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப் படுகிறார்கள் அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட நிலை இருப்பதாகத் தெரியவில்லை. எங்கேனும் அப்படிப்பட்ட நிலை இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை உயர் தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக பணியாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளதா? இல்லையெனில். இனியாவது அப்படி அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழ் ஆசிரியர்களையே தலைமை ஆசிரியர்களாக ஆக்குவததற்கு சூழ்நிலை ஏற்படாத நிலையில், இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக ஏற்றுவது என்பது, பிறகு கவனிக்கப்படவேண்டிய ஒன்று. முதல் நிலை தமிழ் ஆசிரியர்களுக்கு எந்த வகையில் தகுதியை நிர்ணயம் செய்து அவர்களை தலைமை ஆசிரியர்களாக ஆக்குவதற்கு என்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதே இப்பொழுது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. கோவை செழியன்: இங்கிலாந்து நாட்டிலே இங்கிலீஷ் பண்டிதர் என்று தனியாக இல்லை. எல்லா ஆசிரியர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இங்கே மட்டும் தமிழுக்கு தமிழ் பண்டிதர்கள் என்று வைத்திருக்கிறார்கள். எல்லா ஆசிரியர்களுமே தமிழை நிச்சயமாக அறிந்து தமிழ் சொல்லிக் கொடுக்கக்கூடிய தகுதி பெற்றிருக்கவேண்டும் என்று அரசு உத்தரவிடுமா? தமிழ் பண்டிதர் முறையை இனிமேலாவது நிறுத்திவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ் பண்டிதர்களை நிறுத்துகின்ற நிலை இப்பொழுது ஏற்படவில்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்கவும், கல்லூரிகளில் தமிழிலே பாடங்களை பயிற்றுவிக்கவும் முயற்சிகளை மெல்ல, மெல்ல மேற்கொண்டிருக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலை தான் இப்பொழுது இருக்கிறது. இங்கிலாந்தில் தாய்மொழியிலேயே எல்லாவற்றையும் படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இங்கேயும் ஏற்படும்பொழுது, இப்பொழுது இருக்கிற நிலைமை தேவை இல்லாமல் இருக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know . . . .

MR. SPEAKER. The hon. Member can put his question in Tamil, since the main question deals with Tamil Pandits. (laughter).

மு.ப. 9-30 திரு. கே.எம். சுப்பிரமணியம்: இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் ஆனால் முதல்தர தமிழ் ஆசிரியர்களாக மாற்றப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் ஆகவில்லையானால் இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி, பாஸ் ஆகாதவர்கள் இரண்டாம் தர தமிழ் ஆசிரியர்களாக இரண்டு வருடங்கள் பணியாற்றியபின்னால் முதல்தர தமிழ் ஆசிரியர்களாக மாற்றப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் தனியாக எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி தேர்வு பெறுவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே அவர்கள் தாங்களாகவே அந்தத் தகுதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

### *Admission of students in Government Training Schools*

* 647 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that Government Training Schools were directed to admit secondary grade students on basis of merits;



(*b*) whether it is a fact that the same intention was not applied to private institutions; and

(*c*) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, கடந்த ஆண்டு எஸ் எஸ்.எல்.ஸி. யில் 300-க்கு மேல் மார்க் வாங்கிய மாணவர்களைத்தான் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படி பார்க்கின்றபோது சர்க்கார் நடத்துகின்ற பள்ளிகளில் அதிகமான மார்க் வாங்கிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரைவேட் பள்ளிகளில், குறிப்பாக மதுரையில் உள்ள ஒரு பள்ளியில் 350 மார்க் வாங்கிய ஒரு மாணவரை தேர்ந்தெடுக்காமல், 301 மார்க் வாங்கியவருக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் பள்ளிகளில் பின்பற்றப்படும் முறையை எல்லாப் பள்ளிகளிலும் பின்பற்றச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 300 மார்க்குக்குக் குறையாமல் பெற்றவர்களைதான் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களை ஒரு குழு அமைத்து, அவர்களில் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள். தனியார் பள்ளிகளிலும் இந்த உத்தரவை அமல் நடத்தவேண்டுமென்று தலைமை கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பப்பட்டது. அதை எதிர்த்து தனியார் பள்ளி நிர்வாகிகள் இதனால் சிறுபான்மையினர் உரிமை பாதிக்கப்படுகிறது என்று சுப்ரீம் கோர்ட்டில் ரிட் போட்டு, வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அதனால் இந்த உத்தரவு தனியார் பள்ளிகளுக்குப் பொருந்தாது. ஆகவே, பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதமும் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதமும் தனியார் பள்ளிகளில் நிரப்பப்படுகிறதா என்பதைத்தான் அரசு கண்காணிக்கமுடியும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தேர்வு என்பது இன்றையத் தினம் மாணவர் சமுதாயத்தின் திறமையையோ அல்லது தகுதியையோ சோதிப்பதாக இல்லாமல் அவர்களின் ஞாபகச் சக்தியை சோதிப்பதாக இருக்கிறது என்று அறிஞர்கள் பலரும் சொல்கிறார்கள். இப்போது நேர்முகத் தேர்வுக்கு 75 மார்க் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை 150 மார்க்காக உயர்த்தினால் பிற்பட்ட நிலையிலுள்ள மாணவர்களுக்கு அதிக இடம் கிடைக்கும். ஆகையால் அரசு அதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது 75 மார்க் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை 150 ஆக உயர்த்தினால், அதனால் நல்ல பலன் கிடைக்குமானால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. எஸ். தியாகராஜன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு பயிற்சிப் பள்ளிகள் சிலவற்றை மூடப்போவதாகச் சொல்லப்படுகிறது. அவை யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டு ஆண்டு காலத்திற்கு எவ்வளவு ஆசிரியர்கள் தேவையோ அந்த அளவுக்கு ஆசிரியர் பயிற்சி அளிப்பது என்றும், அதற்குத் தகுந்த முறையில் செக்ஷன்களை குறைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஆங்காங்கே இருக்கின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் பொறுத்து அதற்கேற்ப செக்ஷன்கள் குறைக்கப்படும். எங்கெங்கே குறைக்கப்படும் என்பதற்கு தனிக் கேள்வி போடவும்.

## தமிழ் வளர்ச்சிக்கு தனி அதிகாரிகள்

* 648 வினா - திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் தமிழ் வளர்ச்சி அதிகாரிகளை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஒருவர் வீதமும் (சென்னை நகரம்—செங்கற்பட்டு மாவட்டம்), திருநெல்வேலி—கன்னியாகுமரி மாவட்டங்கள்), (கோயம்புத்தூர்-நீலகிரி மாவட்டங்கள்), (சேலம்—தர்மபுரி மாவட்டங்கள்) ஆகிய இரண்டு, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு அலுவலர் வீதமும், தற்போது உள்ள ஆய்வுத் தனி அலுவலர் ஒருவரையும் சேர்த்து 10 ஆய்வு தனி அலுவலர்கள் நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ் வளர்ச்சி அதிகாரிகளை நியமிப்பதற்கு, சிறந்த தமிழ் ஆசிரியர்களையும், தமிழை நன்கு கற்றுத் தேறியவர்களையும், தமிழ்ப் பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர்களையும் தேர்ந்தெடுப்பதில் அரசு சலுகை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் அரசாங்கத் துறையில் 5 ஆண்டு காலம் பழக்கப்பட்டிருக்க வேண்டும். நல்ல தமிழ் அறிவு பெற்றவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களை அரசின் எல்லாத் துறைகளிலிருந்தும் தேர்ந்



தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தவிர, மாவட்டந்தோறும் தமிழில் திறமை பெற்றவர்களுக்கு அவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு இரண்டு பரிசுகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

## தனியார் பள்ளிகள்

*649 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1971-ம் ஆண்டு எத்தனை, எந்தெந்த தனியார் பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளது—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கீழ்க்கண்ட 3 உதவி பெறும் பள்ளிகளின நிர்வாகத்தினர் தங்கள் உயர்நிலைப்பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும்படி கேட்டுள்ளனர்:—

1. இந்து உயர்நிலைப்பள்ளி, காளாம்பட்டி, நெல்லை மாவட்டம்.
2. கன்யா குருகுலம் வாசுகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், செங்கை மாவட்டம்.
3. பாரதி நாராயணசுவாமி உயர்நிலைப்பள்ளி, சில்லமரத்துப்பட்டி மதுரை மாவட்டம்.

இக் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே. அரசு ஏற்று நடத்த இருக்கின்ற பள்ளிகளில், காளாம்பட்டி பள்ளியை இந்த ஆண்டே எடுத்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே நிர்வாகத்தினர் அரசைக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதுபற்றிய விபரங்களை தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குனரைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட தலைமை கல்வி அதிகாரியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுக்குள்ளேயே முழு விபரமும் தெரிந்துவிட்டால், இந்த ஆண்டே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி

* 650 வினா—திரு. எம் முத்தையா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டலில் உணவு,உடை விஷயமாக ஊழல் என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சமீபத்தில் தணிக்கை செய்தாரா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒட்டப்பிடாரம் மெக்காவாய் உயர்நிலை ஆரம்பப்பள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டுவரும் இன்டர்பெய்த் குழந்தைகள் இல்லம் திருநெல்வேலி முதன்மைக்கல்வி அலுவலரால் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் தணிக்கை செய்யப்பட்டது. ஆனால் உணவு, உடை சம்பந்தமாக ஊழல் எதும் கண்டுபிடிக்கப்படவில்லை. வேறு பல ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(இ) திருநெல்வேலி மாவட்டக் கல்வி அதிகாரி முதன்மைக்கல்வி அலுவலரால் கண்டு பிடிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் குறித்து ஒரு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அது பெறப்பட்டதும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த அறிக்கை எப்போது அளிக்கப்படும் ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பணியாளர் வருகைப் பதிவேட்டில 1971-ம ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை கையெழுத்துப் போடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை சம்பளப் பட்டியலில் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி வரையில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி வரையில் பணியாளர்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுபற்றி தலைமை கல்வி அதிகாரியிடம் அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## வேம்பார்பட்டி ஊராட்சி

*651 வினா—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேம்பார்பட்டி (திண்டுக்கல் வட்டம்) கிராமப் பஞ்சாயத்தை ஒரு நகர பஞ்சாயத்து ஆக்க அரசு நடவடிக்கை விரைந்து எடுக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, இந்த வேம்பார்பட்டியை நகரப் பஞ்சாயத்தாக ஆக்காவிட்டாலும் கூட, அங்கே ஒரு வாரச் சந்தை இருக்கிறது. அதை தனியார் நடத்தி வருகிறார்கள். பஞ்சாயத்தே ஏற்று நடத்தினால் நல்ல லாபம் கிடைக்கும். எனவே, அதைப் பஞ்சாயத்தே ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் அறிவுரை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி, அந்த ஊராட்சியே தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசாங்கத்திற்கு அனுப்புவார்களானால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

## *Separate convict wards in headquarters hospitals*

* 652 *Q.*—Dr. H. V. HANDE : } Will the Hon. the Minister
Thiru K. A WAHAB : }
for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to construct convict wards in all the district headquarters hospitals; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) குற்றவாளிகளுக்கு என்று மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் தனி வார்டுகள் திட்டமிரமமாக அமைக்கப்பட்டுவருகின்றன. சேலம், திருச்சி, நாகர்கோவில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் உள்ளன.

நீலகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டு கட்ட 1971-ல் உத்திரவு அளிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டு இருக்கின்றது.

1972–73-ல் இராமநாதபுரம், நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : புகழ்பெற்ற சிறைச்சாலைகள் இருக்கிற வேலூர் பாளையங்கோட்டை போன்ற இடங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் இல்லை. அந்த இடங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் தனி வார்டு அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கூடுமானவரையில் எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும தனி வார்டுகள் அமைக்கப்படவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. ஆண்டுக்கு இரண்டு இரண்டு இடங்களாக எடுத்துத்தான் நிறைவேற்றப்படும்.

## வேலூரிலுள்ள சி. எம். சி. மருத்துவ மனை

*653 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரிக்கு சென்ற ஆண்டு தமிழ் நாடு அரசால் கடனும், மானியமும் எவ்வளவு வழங்கப்பட்டது ?

(இ) அவை ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 1970–71-ஆம் ஆண்டில், வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கடன் எதும் வழங்கப்படவில்லை. ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு, இந்த நிறுவனத்தால் மருத்துவ உதவி அளிக்கப்படும் வறிய நோயாளி ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 50 காசு (ஐம்பது) வீதம் பேணுதல் மானியம், இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. 1970–71-ம் ஆண்டுக்குள்ள பேணுதல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் யாரையும் சேர்ப்பது இல்லை என்ற புகார் வந்துள்ளதா ? அப்படியிருந்தால் அரசு அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மூலக் கேள்வி வறிய நோயாளிகளைப் பேணுவதற்கு பேணுதல் மானியம் அளிப்பது பற்றியது. கல்லூரியைப்பற்றியோ, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதுபற்றியோ இதற்குரி சம்பந்தம் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் பேணுதல் மானியம் ஒவ்வொரு நோயாளிக்கும் 50 காசு என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மானியத் தொகை சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதைப் பார்க்க நம்முடைய அரசாங்கப் பிரதிநிதி அந்த மருத்துவ நிலையத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறாரா ? ஹாஸ்பிடல் கமிட்டி என்று உருவாக்கி, அதில் நமதுடைய பிரதிநிதியையும் போட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட வறிய நோயாளிகளுக்கு பேணுதல் மானியம் முதன்முறையாக வழங்கப்பட்டபோதே ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி, எப்போது வேண்டுமானாலும் மருத்துவத் துறையின் இயக்குநர் அந்த மருத்துவ மனையைப் பார்வையிடலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது 'The institution should be open to periodical inspection by the D.H.S. & F.P. or other officers of the Medical Department and should be maintained to the satisfaction of the D.H.S. & F.P.' என்பது விதி. ஆகவே அந்த மருத்துவ மனை செம்மையாக நடைபெற்று வருகிறது என்ற கருத்தோடு அரசாங்கம் பேணுதல் மானியத்தை அளித்து வருகிறது.

## மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

*654 வினா—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் மேற்படி அலுவலகம் சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், விருதுநகரில் உள்ள கட்டடம், வசதிக் குறைவானதாக இருக்கிறது என்ற காரணத்தினால் விருதுநகரிலேயே வேறு ஒரு வாடகைக் கட்டடத்திற்கு மாற்றும் யோசனைதான் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எஸ். அழகுத் தேவர் : தலைவர் அவர்களே இந்தப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரில் இருக்கிறது. சாத்தூர் பெரிய தாலூகா. அந்தத் அலுவலகத்தை சாத்தூருக்கே அதை மாற்றி அமைக்க யோசிப்பார் களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படி மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

திரு சௌடி எஸ். சுந்தரபாரதி: அந்த அலுவலகத்தை வேறு எங்காவது மாற்றவேண்டுமென்ற வேண்டுகோள் வந்ததா ? அப்படியானால் அந்த வேண்டுகோளைப் பரிசீலிக்கிறபோது—இப்போதுள்ள இடமே அந்த மாவட்டத்தின் மையமாக இருப்பதனால் அந்த இடத்திலேயே இருக்க முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : யாரிடத்தில் இருந்தும் வேண்டுகோள் வரவில்லை. விருதுநகரில் இப்போதுள்ள இடம் வசதியில்லாது இருக்கிற காரணத்தினால் அதே ஊரில் வேறு வாடகைக் கட்டிடத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்றத்தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சாத்தூர் தாலுக்கா டெரியதாக இருக்கிறது. அந்தத் தாலுகா பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முயற்சிக்கிறபோது, அந்தப் பக்க மக்களுடைய கோரிக்கையையும் கருத்தில் வைத்து சாத்தூரிலேயே கட்டடம் கட்ட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தற்போது அதற்கு விருதுநகரில் சொந்தக் கட்டடம் கட்டும் யோசனை இல்லை. வாடகைக் கட்டடத்தில்தான் மாற்றி அமைக்க இருக்கிறோம். சொந்தக் கட்டடம் கட்ட யோசிக்கும்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

## சென்னையில் அரிசி கைப்பற்று

*655 வினா—திரு என். டென்னிஸ் : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் தேதி அளவில் வணிகர்களிடமிருந்து பெருமளவு அரிசியை காவல் துறையின் உணவுப்பிரிவு கைப்பற்றியதா ?

[1972 மார்ச் 23

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகரில் அரிசி மண்டி ஒன்றில் கணக்கில் வராது இருப்பில் வைத்திருந்த சுமார் ரூபாய் ஐம்பதினாயிரம் மதிப்புடைய 669 அரிசி மூட்டைகள் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் நாளன்று சென்னை குற்றப்புலனாய்வுத் துறை உணவுப் பிரிவினால் கைப்பற்றப்பட்டன.

திரு ஜே. ஜேம்ஸ்: இம்மாதிரி காவல்துறையினர்களாலும், பறக்கும் படையினர்களாலும் பறிமுதல் செய்யப்படுகிற தானியங்களுக்கு ஒழுங்காக ரசீது கொடுக்கப்படுவதில்லை என்கிற புகார் இருக்கிறது. இதை அரசு கவனித்து ஒழுங்குபடுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொதுவாக இப்படிக் குற்றம் சாட்டுவது சரியல்ல. குறிப்பிட்ட இடத்தில் எங்காவது ஒழுங்கீனம் நடைபெற்றிருந்தால் குறிப்பிட்டு எழுதினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1971-ஆம் ஆண்டிலே இப்படி எத்தனை மண்டிகளைப் புலனாய்வு செய்தார்கள் ? அதனால் கிடைத்த பயன்கள் என்ன ? இப்படி பறிமுதல் செய்யப்படுகிற தானியங்களை—ஏலத்தில் விடுகிறார்களா அல்லது அப்படியே வைத்திருந்து கெட்டுப் போக விடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆண்டு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளைப் பற்றிய விவரம் இல்லை. பொருள்களை—நீதி மன்றத் தீர்ப்பு வரும்வரை வைத்திருக்கிறார்கள். கணக்கு ஒழுங்காகக் கொடுப்பார்களானால் திருப்பிக்கொடுத்துவிடுகிறார்கள். லெவிக்குக் கொடுக்காமல் இருந்தால் அதை வசூல் செய்து கொண்டு மீதியை அவர்களிடமே திருப்பிக்கொடுத்துவிடுகிறார்கள்.

திரு எம். சுரேந்திரன்: சென்னை நகரில் ஒரு குறிப்பிட்ட தேதியில் பிடிக்கப்பட்ட அரிசி மூட்டைகள் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது சென்னை நகரில் வேறு எந்தெந்த இடங்களில் இப்படி பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தனிக் கேள்விபோட்டால் விவரம் அளிக்கலாம். முதல் கேள்வி குறிப்பிட்ட தேதியில் பிடிக்கப்பட்ட அரிசி விவரம் பற்றியதுதான்.

திரு. துரைமுருகன்: 1971-ஆம் ஆண்டு ஜூன் 28-ம்தேதி ஒரு வணிகரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அரிசி விவரம் தந்தார்கள். அந்த வணிகரின் பெயர் என்ன என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே தங்கள் அனுமதியுடன் அந்த வணிகரின் பெயரைச் சொல்கிறேன். திருப்பள்ளித் தெருவில் நெ. 70-இல் உள்ள திரு ஜி. கிருஷ்ணசெட்டி.



1972 [மார்ச் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசி அப்படியே வைக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வைத்திருந்தால் அரிசி கெட்டுவிடுமே, ஆகவே அதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசியை எடுத்து உபயோகிக்க முடியாது. அப்படி உபயோகித்துவிட்டால், நீதிமன்றத்தின் தீர்ப்பு வியாபாரிக்குச் சாதகமாக இருந்துவிட்டால் நாம் உபயோகித்த அரிசி—முதல் தரமோ இரண்டாம் தரமோ—திருப்பி கொடுக்கவேண்டியிருக்கும்.

, திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தவறுதலான வழிகளில் நடக்கக்கூடிய வர்த்தகர்களை—அதாவது இப்போது சொன்னார்களே திரு. கிருஷ்ண செட்டி போன்றவர்களை—அரசின் ‘ பிளாக் லிஸ்டில் ’ வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே. அட்பேர்பட்டவர்கள் கணக்குகள் சரியாக வைக்கவில்லையென்பதாகப் புகார். கணக்கு சரியாக வைத்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே அவர்களை ‘ பிளாக் லிஸ்டில் ’ வைக்கத் தேவையில்லை. மேலும் அரசாங்கம் வாணிபத்திற்கு ஒன்றும் தருவதில்லை. அப்படி கொடுப்பதாய் இருந்தால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

*Quartz crushing factory at Jagir Ammapalayam*

* 656 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that Government Quartz Crushing Factory at Jagir Ammapalayam, Salem has been closed;

(*b*) the steps taken to reopen it; and

(*c*) the compensation paid to the affected workers ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) டான்சி படிக்கல் பொடி செய்யும் தொழிற்சாலையைத் திறந்து நடத்தும் உத்தேசம் இல்லை.

(உ) தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஒரு மாத கால அறிவிப்புக்குப் பதிலாக ஒருமாத சம்பளமும், ஆட்குறைப்பு நட்ட ஈட்டுத் தொகையும் வேலையிழந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. மொத்தம் கொடுக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை ரூ. 3,739·40 (ரூபாய் மூன்றாயிரத்து எழுநூற்றி முப்பெத்தொன்பதும் பைசா நாற்பது மட்டும்).

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, சேலத்திற்கு அருகில் இருக்கக்கூடிய ‘ க்வார்ட்ஸ் க்ரஷிங் பேக்டரியில் ’ எத்தனை பேர் பணியாற்றினார்கள் ? அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில்

நோய்வாய்ப்பட்டு, 'இண்டஸ்ட்ரியல் டிஸீஸ்' ஏற்பட்டதனால் எத்தனை பேர் இறந்தார்கள்? அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த பேக்டரி மூடும்போது பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் 17 பேர். இறந்தவர்கள் எண்ணிக்கை பற்றிய கணக்கு விவரம் இல்லை.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் 30 பேர்கள் வரையிலும் பணியாற்றினார்கள் என்றும், பணியாற்றிய காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கோரி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படி ஏதேனும் மனு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி அனுப்பினால் உயிர்நீத்தவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு தரப்படுமா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

## *Survey of Small Scale Industries*

* 657 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Institute of Fundamental Economic Research, New Delhi has undertaken any market survey of the Small Scale Industries and the Financial Investment in this State during July 1971; and

**(*b*) if so, the details there of?**

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) அரசிடம் இதுபற்றி தகவல் ஏதுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## பாலங்கள்

*658 வினா—திரு என். இட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் காவிரியின் குறுக்கே புதிதாக ஏதேனும் பாலங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம்.



திரு. என். இட்டப்பா: தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் காவிரியின் குறுக்கே பாலங்கள் திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, முசிரி குளித்தலை சாலையிலும், திருச்சி நகர ஊர் சாலைக்குள் இருக்கிற தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் திருச்சியிலிருந்து 194, 195 மைல்களில் இரண்டு பாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* 659 வினா.—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்கோயில் தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்க கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். இட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்குடி தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட கீழுத் தஞ்சை நெடுஞ்சாலைத் துறை, மூலமாக 75 லட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடுகளைத் தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும் முக்கியமானது. மணல்மேட்டிலிருந்து காட்டுமன்னார்குடி பகுதிக்கு செல்லவேண்டுமென்றால் 40 மைல், 50 மைல் சுற்றிப்போகவேண்டிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியிலேயே 75 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள நிதிநிலையிலிருந்து இப்போதைக்கு அது ஏற்றுக்கொள்ள முடியாது. வருங்காலங்களில் அதை எதிர்பார்க்கலாம்.

## சென்னை விமான நிலையம்

* 660 வினா.—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்டக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப் பட்டதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து நமது அரசுக்குக் கிடைத்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## வைகை அணையிலுள்ள வனப்பொருள் களஞ்சியம்.

* 661 வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணை கான் இயல் பயிற்சிப் பள்ளியில் உள்ள வன அரும்பொருள் களஞ்சியத்தை (பாரஸ்ட் மியூசியம்) ஆண்டிப்பட்டி-வைகை அணை மெயின் சாலையில் நல்ல கட்டட வசதியுடன் அபிவிருத்திசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா, பா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, "தற்போது இருக்கும் 'பாரஸ்ட் மியூசியம்' 'பாரஸ்ட் பயிற்சிப் பள்ளிக்கு' அருகில் இருக்கிறது. வைகை அணையைப் பார்க்க வருகிறவர்களுக்கு அது தெரிவதே இல்லை. நல்ல வசதிகளைக் கொண்டதாக ஆண்டிப்பட்டி வைகை அணை சாலையில் கட்டடம் ஒன்றைக் கட்டிக்கொடுத்து அங்கே அந்த மியூசியத்தை வைக்க அரசு தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்போதே வைகை அணைக்கு வருகிற சுற்றுலா பயணிகள் அங்கு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்றாக விளம்பரம் செய்யலாம்.

## *Irrigation facilities in Nilgiris District*

* 662 Q.—THIRU N. K. PALANISWAMY
THIRU K. N. KUMARASWAMY } will the Hon.
THIRU N. KITTAPPA :

Minister for Electricity be pleased to state whether any survey has been conducted for irrigation through Punnampuzha-Pandiyar Scheme in the Nilgiris District ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.



திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, முன்னரே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப்பற்றி சர்வே செய்யப்பட்டதாகும். நமது மாநிலத்தில் சர்வே செய்வதற்கு கேரள அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்ததற்குக் காரணம் என்ன ? பாசன வசதியைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டம் கோயம்புத்தூர் ஜில்லாவுக்குப் பிரயோஜனமாக இருக்குமானால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய மத்திய அரசாங்கத்தின் மூலமாகவாவது பரிசீலனை செய்ய நமது அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறையின் மூலமாக பொதுப்பணிக்காக இதுபற்றி ஆய்வு செய்து வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக ஏதாவது ஆய்வு நடந்ததா ? அப்படியானால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, பொதுவாக அது நன்மையில்லையென்று கருதப்படுகிறது.

திரு எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம் புழா திட்டம் பயனுள்ள திட்டமாகக் கருதப்படுகிறது. பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் பயன்படுத்தக்கூடிய முறையில் ஆய்வுகள் செய்யப்பட்டு மதிப்பீடுகள் போட்டதாக அறிகிறேன். ஆனால் கேரள மாநிலத்துடன் பேச்சுவார்த்தைகள் பேசுகிற நிலைமையில் சீர்கேடுகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு நல்ல முறையில் அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த ஏற்பாடுகள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டுதான் செய்ய இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சாரத்திற்கும் பாசனத்திற்கும் மதிப்பீடு தயார் செய்திருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே இந்த மன்றத்தில் 1965-ம் ஆண்டில் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் குழப்பங்களுக்கு இடம் கொடுக்காத வகையில், நமது மாநிலத்திற்குச் சாதகமாக இருக்க வேண்டும். ஆகவேதான் இதுபற்றி எந்தக் கருத்துக்களும் கூறாமல் இருப்பது நலம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மின்சாரத்துறை, பொதுப் பணித்துறை மூலமாக மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் பற்றி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த அமைச்சரைக் கேட்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இது

இருமாநிலங்களுக்குள்ள பிரச்சினை. பல கேள்விகள் மூலம் விளக்கங்களைச் சொல்லி, அதனால் அந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏற்பட வேண்டாம் என்பதுதான்.

பயணித் துணைவரில்லாத பேருந்துகள்

* 663 வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கண்டக்டர்கள் இல்லாத பஸ்களை விட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, பயணித் துணை (conductor) இல்லாமல் நீள் தொலை விரைவுப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் ஓட்டுவதென்று திட்டமிட்டுள்ளது.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, மேலை நாடுகளில் இயந்திரத்திலே காசு போட்டு டிக்கெட் பெற்றுக்கொள்ளும் நிலைமை வளர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் மிகவும் நாணயம் உள்ளவர்கள். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருப்பதற்காகவாவது, பரீட்சார்த்தமாக விரைவில் டிக்கெட் கொடுக்கும் இயந்திரங்களைப் பஸ்களில் பொருத்தி, கண்டக்டர்களை இல்லாத அளவுக்கு ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேலை நாடுகளிலுள்ள திட்டத்தை தமிழ்நாட்டிலே தற்போது அமல் படுத்துவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. நாணயத்தில் நம்பிக்கையில் நாம் அதிக தரம் உள்ளவர்களாக இருக்கலாம். இருந்தாலும்கூட, கண்டக்டர்களுக்கும் வேலை இல்லாமல் போய்விடக் கூடாது. பொதுவாக நெடுந்தூர பேருந்துகள் இரவு நேரங்களில் செல்வதால் அதிலுள்ள கண்டக்டர்களுக்கு முழுநேரமும் வேலை இருப்பதில்லை. முதல் புறப்படுமிடத்திலேயே டிக்கட்டுகள் 'புக்' ஆகிவிடுகின்றன. இடையிலே இருக்கும் நகரங்களில் புக்கிங் ஆபீஸ்கள் இருக்கின்றன. சோதனை அடிப்படையில் பார்த்தாலும் டிக்கெட் கொடுக்கும் இயந்திரங்களைப் பொருத்துவது சரியாக இருக்காது. மேலும் இதற்கும் ஒரு சில தொழிற்சங்கத்து தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்ஸில் பயணம் செய்கிறவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் அடிக்கடி தகராறுகள் வந்துவிடுகின்றன. அதைப் போக்குவதற்காக பஸ்களிலே குறிப்பாக நகரங்களிலே ஓடுகின்ற பஸ்களிலே பெண்களை கண்டக்டர்களாகப் போட்டால் அவர்கள் அமைதியாகவும் அன்பாகவும் பதில் சொல்வார்கள், தகராறுக்கே வழியில்லாமல் போய்விடும், எனவே அந்த முறையைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பஸ்ஸுக்கு வெளியிலேதான் நடக்கின்றன, அந்தத் தகராறுகள் பஸ்ஸுக்குள்ளே வந்துவிடக்கூடாது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : மேலை நாடுகள் போன்று மெஷின் வைப்பது என்று அரசாங்கம் முடிவுசெய்து கொண்டுவந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகப் போய்விடும். எனவே மேலைநாடுகளிலே இருக்கிற சில திட்டங்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காக மின்விசிறிகளை எல்லாம் எடுத்துவிட்டு பனைமட்டைகளால் ஆன விசிறிகளை வைத்துக் கொள்ளலாம் என்று உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. துரை முருகன் : நீண்ட நெடுந்தூரம் போகிற வண்டிகளில் பயணம் செய்கிற பயணிகளுக்குக் களைப்பு ஏற்படாவண்ணம் இருக்க விமானத்திலே அழகிய இளம் பணிப் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பதைப்போல் அரசாங்க பஸ்களில் நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அழகினால் சமயத்தில் ஆபத்தும் வருவதுண்டு.

திரு. எம். தேவராசன் : சில பஸ்களிலே கண்டக்டர்கள் டிக்கட்டுகளைக் கிழிக்கும்பொழுது எச்சிலைத் தொட்டுக் கிழிக்கிறார்கள். அது சிலருக்கு அருவருப்பாக இருக்கிறது. எனவே அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படியெல்லாம் டிக்கட்டுகளைக் கிழிக்கவேண்டாம் என்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, முதல் சோதனை பேருந்துகள் எந்த வழித்தடத்தில் எப்பொழுது விடப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்பொழுது விடுவோம் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தலாம் என்று ஒரு சாரார் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் சம்மதத்தோடு சோதனை ஓட்டம் விடலாம் என்று அரசாங்கம் கருதிக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கண்டக்டர் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேறாதவர்களையும் முன்னாலே நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது எஸ். எஸ். எல், சி. தேர்வு பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. எஸ். எஸ். எல். சி. தேர்வு பெறாதவர்கள் வேலை தேடித் தரும் நிறுவனங்களில் தங்க

ளுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு காத்துக்கொண்டிருக்கிருர்கள். எனவே அதை மாற்றி விதியைத் தளர்த்தி எஸ். எஸ். எல். சி. தேருதவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கண்டக்டர் லைசென்ஸ் பெற்றவர்கள் எஸ். எஸ். எல். சி. தேறியிருநதால் அவர்களுக்கு முன் சலுகை அளிக்கப்படுகிறது. அவர்களும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிருர்கள். அவர்களும் கண்டக்டர்களாக வருகிருேம் என்று சொல்கிற சூழ்நிலை இருக்கிறது. திறமையாக இருப்பார்களாஞல் எஸ். எஸ். எல். சி. குறைவாகப் படித்திருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்வதிலே இப்பொழுது விதிகள் ஒன்றும் குறுக்கே இல்லை.

## பழனியில் முருகன் கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்படும் கல்லூரிகள்.

* 664 வினு.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பழனி முருகன் கோயில் நிர்வாகத்தின் மூலமாக நடத்தப்படும் கல்லூரிக்காக 1970–71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நடத்தப்படும் நான்கு கல்லூரிகளுக்கும் 1970–71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 9,17,753.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்திஞல் நிர்வகிக்கப்படும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு குறிப்பாக பழனி தேவஸ்தானம் நடத்துகின்ற காரணத்திஞலே காவடி ஆட்டம், கரக ஆட்டம் போன்றவற்றில் பயிற்சி கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? காவடிச் சிந்து என்பது, திருப்புகழில் சேர்க்கப்பட்டு, சிறப்புப் பாடமாக வைக்க அரசு ஆவன செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பழனித் திருக்கோயில் நடத்திவருகின்ற காரணத்திஞலேயே காவடி ஆட்டம் கற்றுக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அங்கேயுள்ள செந்தமிழ்க் கல்லூரியின் மூலம் தமிழ்ப்பாடங்கள் எல்லாம் கற்றுக்கொடுக்கப் படுகின்றன.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பழனியிலே உள்ள கடவுள் முருகக் கடவுள், தமிழ்க கடவுள், அப்பனுக்கே தமிழ் போதித்த கடவுள், அப்படியிருக்கும்போழுது ஸ்ரீதண்டாயுதபாணி என்று பெயர் போட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்த ஸ்ரீ என்ற சொல் வடமொழிச் சொல்லாயிற்றே, எனவே அதை நீக்கிவிட்டுத் தமிழ்ப் பெயர் வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?





மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரை முருகன் என்று வைக்கலாமா அல்லது திருமுருகன் என்று வைக்கலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துரை முருகனை, திருமுருகன் என்று மாற்றிக்கொள்வதிலே ஆட்சேபணையில்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : பழனிக் கோயிலிலே ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று சொல்லமுடியுமா ? அதிலே எந்த அளவுக்கு அந்தக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

K. M. SUBRAMANIAM : Sir, is it not fact that.

**'Muruga' has two wives one from Draveha Nadu and one from Arya Nadu and may I know whether He is surely a Tamil— G —Arya God ?**

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மேடையிலே பிரிவினைப்பற்றி அடிக்கடி பேசிவருகிருர்கள், கடவுளிடத்திலே பிரிவினை வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கோயில்களிலே பழனியிலே உண்டியல் மூலமாக—மற்ற முறைகளிலே வருகின்ற வருமானங்கள் பற்றிய விவரங்கள் இல்லையென்ருலும், உண்டியல் மூலமாக வருகிற வருமானத்தையாவது தெரிவிக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்திருக்கிருர்கள்.

1972 மார்ச் 23

3. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனைவரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டு இருக்கிறது.

(ஆ) 1972-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன் வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அக் கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே, சாதிக் பாட்சா: இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

4. 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக்கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,58,73,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "



[1972 மார்ச் 23]

Dr. H. V. HANDE: Sir, I move the following cut motion, to discuss policy—

'That the allotment of Rs. 5,58,73,600 made under Demand No. 19—Co-operation—be reduced by Rs. 100'.

Thiru K. SUPPU: Sir, I move the following cut motion, to discuss about the need to appoint Secretaries to all co-operative societies under section 84 of the Tamil Nadu Co-operative Societies Act, 1961—

'That the allotment of Rs. 5,58,73,600 made under Demand No. 19—Co-operation—be reduced by Rs. 100'.

Thiru SOWDI S. SUNDARA BHARATHI: Sir, I move the following cut motion, to discuss about the necessity to take ameliorative measures for handloom weavers at Aruppukottai who are facing unemployment owing to rise in price of yarn—

'That the allotment of Rs. 5,58,73,600 made under Demand No. 19—Co-operation—be reduced by Rs. 100'.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கியுள்ள லிப்ட் இரிகேஷன் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுகூடிலும் செயல்படாததைக் குறித்து விவாதிக்க—

" நிதிக்கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 5,58,73,600-இல் ரூ. 100 குறைக்கவேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 22—கதர்.

மாண்மிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

" நிதிக்கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 52,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

Dr. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss policy—

'That the allotment of Rs. 52,36,000 made under Demand No. 22—Khadi—be reduced by Rs. 100'.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வறட்சிப் பிரதேசமான கோவில்பட்டி வட்டாரத்தில் வேலை வாய்ப்பளிக்கும் முறையில் கிராமப் பகுதிகளில் அம்பர் நூற்பு நிலையங்களைத் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 52,36,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the re-employment of the retrenched Bee fieldmen who were interviewed by the State Transport Department (Kanyakumari Branch) and who were not chosen pursuant to the orders issued by Government and their proposed self-immolation in the middle of March 1972—

'That the allotment of Rs. 52,36,000 made under Demand No. 22—Khadi—be reduced by Rs. 100'.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, என்னுடைய முன்னுரையாக ஒருசில கருத்துக்களைப் பேரவை முன் வைக்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை 4 பிரிவுகளைக் கொண்டது. நிர்வாகத்தையும், கணக்கையும் நீக்கிவிட்டு நான்கு பிரிவுகளைக் கொண்டது கூட்டுறவுத்துறை. முதல் பிரிவு சிறிய பெரிய கூட்டுறவு வங்கிகள். இதிலே மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள், மாவட்ட வங்கிகள், வட்டார நிலவள வங்கிகள், நகர்ப்புற வங்கிகள், அர்பன் பேங்க், மனை வள வங்கிகள், ஹவுஸ் மார்க்கெட்டிங் பேங்க், கிராம நாணயக் கூட்டுறவு வங்கிகள் அடங்கியுள்ளன. இது முதல் பிரிவு.

இரண்டாவது பிரிவு மார்க்கெட்டிங் அண்ட் ப்ராசசிங், அதாவது விற்பனைக் கழகங்கள் விளைவு பொருள் தொழிற்சாலை இவைகளைக் கொண்டது. இதிலே ஜின்னிங் பேக்டரி, டிகார்ட்டிகேட்டிங் பேக்டரி, ஆயில் எக்ஸ்டராக்ட் சம்பந்தமானது. எண்ணெய்ப் பிரிவுகள் அல்லது காபி பிரிவுகள் இப்படிப்பட்ட தொழில்கள் இதிலே நடக்கின்றன. விற்பனைப் பிரிவுகள் என்பதிலே விற்பனை நடக்கிறது.

மூன்றாவது பிரிவு கூட்டுறவுப் பண்டகசாலைகள்.

நான்காவது பிரிவு கூட்டுறவு கல்விப் பிரச்சாரம்.

இப்படி நான்கு பிரிவுகளைக் கொண்டது இந்தக் கூட்டுறவுத் துறை. இதிலே ஒவ்வொரு துறையையும்பற்றி விளக்கும்முறை* ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன்னால் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் 1971–72-ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை†

* 121—129-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.
† 127—163-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



ஒன்றும் இங்கே மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே நான் புதிதாகச் சொல்லவேண்டியது ஒன்று தான். முதல் பிரிவு சிறிய பெரிய கூட்டுறவு வங்கிகள் இவைகளைப் பற்றிக் கூறும்பொழுது மத்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு ஒன்று அதன் பரிவுரைகளைச் சென்றவாரம் நடாளுமன்றத்தில் வைத்தது. அதன்படி கூட்டுறவு வங்கிகள் மத்திய அரசின் ஆளுகைக்கு மாற்றப்பட வேண்டுமென்று அந்தப் பரிவுரையில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பரிவுரையை* அச்சிட்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளேன். இந்தப் பரிவுரையை நாடாளுமன்றம் ஏற்றால் அல்லது மத்திய சர்க்கார் ஏற்றால் இந்த முதல் பிரிவு என்று சொல்கிறேனே அதாவது கூட்டுறவுத்துறையின் முதல் பிரிவு, சிறிய பெரிய கூட்டுறவு வங்கிகள் அவைகள் அத்தனையும் மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாறும், அவை எல்லாம் மாறும்.

மாநில கூட்டுறவு நிலவள வங்கி, 100 கோடி வரவு-செலவு செய்யும் வங்கி, இந்த மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாறும். அதேபோல் மாநில கூட்டுறவு வங்கி, 60 கோடி வரவு-செலவு செய்யும், அதுவும் மத்திய அரசின் ஆளுகைக்கு மாறும். அதைப்போலவே மாவட்ட வங்கிகள், சென்ட்ரல் பேங்க் 16 வங்கிகள் இருக்கின்றன. அவைகளுக்கு 250 கிளைகள் இருக்கின்றன. அவை அத்தனையும் மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாறும், அந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுவதாகயிருந்தால், அதே போல வட்டார வங்கிகள் 228, அவைகளும் மாறும். நகர்ப்புற வங்கிகள் ஏறத்தாழ 160 இருக்கின்றன, அவைகளும் மாறும். மனைவள வங்கிகள் 80, 81 இருக்கின்றன, அவைகளும் மாறும். கிராம நாணயக் கூட்டுறவு வங்கிகள் கிராமங்களில் இருக்கும் வங்கிகள்தான். அவைகள் 5,600 இருக்கின்றன. அவைகளும் மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாறும். ஆகையால் இது கூட்டுறவு இயக்கத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கும் ஒன்றாக இருப்பதால் இந்த பேங்கின் கமிஷனின் பரிவுரைகளிலிருந்து ஒரு பகுதி அச்சிடப்பட்டு உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது, இங்கேயிருக்கும் உறுப்பினர்களுக்கு, அதை நன்றாக ஆராய்ந்து அதனுடைய நன்மை தீமைகளைக் கவனிக்க வேண்டுமென்று நான் பெரிதும் வேண்டுகிறேன்.

நான் சொல்வதெல்லாம் ஒருவேளை இவ்வாறு கூட்டுறவு வங்கிகளை மத்திய அரசின் ஆளுகைக்கு மாற்ற வேண்டுமென்பது மற்ற மாநிலங்களில் வேண்டுமென்றால் ஒருவேளை தேவைப்படலாம். தமிழகத்திற்கு அது தேவையற்ற ஒன்றாகும். அவ்வாறு சொல்வதற்குக் காரணம் என்னவென்றால் இந்தக் கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, அவைகளுக்குள் மோதல் ஏற்படுகிறது என்ற காரணத்தைச் சொல்கிறார்கள். அது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உண்மை அல்ல.

* 164—168-ம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஏனென்றால், கூட்டுறவு வங்கிகளும் வணிக வங்கிகளும் மாதந்தோறும் கூடி மாநில மட்டத்திலேயும், மாவட்ட மட்டத்திலேயும் கூடி அவைகளுக்குள் ஏதாவது கருத்து வேறுபாடு இருந்தால் அவைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் வேறு மாநிலங்களில் கூட்டுறவு வங்கிகள் தமிழ்நாட்டைப்போல் அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை என்பது உலகம் அறிந்த உண்மை. கும்பகோணத்தில் நடைபெறும் மைய வங்கி, தஞ்சாவூரில் நடைபெறும் மைய வங்கி இவைகள் இந்தியாவிலேயே முதல் தரம் என்று இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதுமட்டுமல்லாமல், இந்திய அரசின் குறிப்பில், அவர்கள் கொடுத்துள்ள ஒரு குறிப்பில் மைய வங்கிகள் அதாவது மாவட்ட வங்கிகள் எங்கே எங்கே பலவீனமாக, எத்தனை பலவீனமாக தன் காலில் நிற்க முடியாத அளவில் இருக்கின்றன என்று கொடுத்திருக்கிறார்கள். ஆந்திர பிரதேசத்தில் ஐந்து என்றும், அசாமில் ஏழு என்றும், மத்திய பிரதேசத்தில் ஆறு என்றும், மைசூரில் ஆறு என்றும், ராஜஸ்தானில் ஏழு என்றும், மேற்கு வங்காளத்தில் எட்டு என்றும் இப்படி மற்ற மற்ற மாநிலங்களில், தன் காலில் நிற்க முடியாத பலவீனமான வங்கிகள் இருக்கும் போது தமிழ்நாட்டில் மட்டும் ஒன்றுமில்லை, (நில்) என்று மத்திய சர்க்காரே கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் தமிழகத்தில் இந்த வங்கிகள் மிகச் சிறப்பாக நடக்கும்பொழுது அவைகளை மாற்ற வேண்டிய தேவையில்லை என்பது நான் சொல்லாமலே விளங்கும்.

அதுமட்டுமல்ல, இந்த வங்கிகளுக்கு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துக் கொடுத்தார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னின்ன காரியங்கள் நிறைவேற வேண்டுமென்று சொன்னதில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய காரியங்களை நாம் மூன்றாண்டுகளில் நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாக மத்திய வங்கிகள் அவைகளின் வைப்புத் தொகையை ஐந்தாண்டுகளில் 30 கோடி அளவில் உயர்த்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை நாம் மூன்று ஆண்டுகளில் 32 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். ஏற்கனவே திட்டமிட்டு இவ்வளவு சிறப்பாக நடக்கும்பொழுது அவைகள் மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாற்றப்பட வேண்டுமென்று கூறியிருப்பது பொருத்தமுடையதல்ல.

அதுமட்டுமல்ல, மாநில கூட்டுறவு வங்கிகள் வைப்புத்தொகை ஐந்தாண்டுக்காலத்தில் 15 கோடியாக உயர வேண்டுமென்று திட்டமிட்டிருக்க, அது மூன்று ஆண்டுக்காலத்திற்குள்ளாக 16 கோடியாக ஆகியிருக்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களை கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரையில் மூன்று ஆண்டுக்காலத்தில் நிறைவேற்றியிருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது இதை மாநில அரசின் ஆளுகையிலிருந்து மத்திய அரசின் ஆளுகைக்கு மாற்ற வேண்டுமென்று பேங்கிங் கமிஷன் சொல்லியிருப்பதும், அந்தப் பரிந்துரைகளை நாடாளுமன்றத்தில் வைத்திருப்பதும் குறித்து மிகவும் முன்கூட்டியே நாம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம் என்னவென்றால் வெளிக்குத் தெரியாமல் ஓசைப்படாமல் கூட்டுறவுத்துறையில் ஒரு இன்ஷ்யூரன்ஸ்



கழகத்தை, ஃபயர் அண்ட் ஜெனரல் கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் கழகத்தை மத்திய சர்க்கார் தன் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஃபயர் அண்ட் ஜெனரல் கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் கழகம் ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் லாபத்தில் நடந்தது. அந்த லாபமெல்லாம் அந்தக் கூட்டுறவுக் கழகத்தில் இருக்கப்பட்டவர்கள், இன்ஷ்யூரன்ஸ் கழகத்தில் இருக்கப்பட்டவர்கள் எல்லோருமே கூட்டுறவுக் கழகம்தான், தனியார் இல்லை. இந்த பத்து லட்சம் ரூபாய் பங்குத்தொகை, ஈவுத் தொகையாக எந்தவொரு தனி நபரும் லாபம் அடைய முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்து நடத்தும் இந்த ஃபயர் அண்ட் இன்ஷ்யூரன்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு இருப்பதைப்பற்றி நாம் எழுதியிருக்கிறோம். எடுத்திருப்பதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசிடமிருந்து இன்னும் பதில் வந்தபாடில்லை. அப்படியிருக்கும்பொழுது திடீரென்று இப்படி......

DR. H. V. HANDE : Sir, there is complete contradiction between what the Hon. Minister has stated now and what is stated at page 8 of the Extracts from the Recommendations of the Banking Commission. It is stated in the extracts—

'Central legislation would suffice on the implementation of our recommendation to confer...........

MR. SPEAKER : Dr. Hande, it is not in order. Let the hon. Member resume his seat.

முரண்பாடாக இருந்தால் என்ன ? உங்களுக்குப் பேச வாய்ப்பு வரும் போது முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : Sir, courtesy requires that whenever we speak, we yield the floor and the same courtesy I expect from the Hon. Minister.

(திரு. முனு ஆதி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் உட்கார வேண்டுமா?

MR. SPEAKER : You should not yield and I do not want you to yield.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த பாங்கிங் கமிஷன் ரிப்போர்ட், மத்திய அரசின் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் 759 பக்கங்கள் இருக்கின்றன. அவற்றிலே குறிப்பான பகுதிகளை மட்டும் வைத்துக்கொண்டு விவாதத்தை மேற்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவும் சொல்லிக் கொண்டு வருவதற்குக்

காரணம் ஏற்கனவே இன்ஷூரன்ஸ் சொஸைட்டி கூட்டுறவுத் துறையில் நடந்து, மிகச் சிறப்பாக நடந்து, இன்ஷூரன்ஸ் ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் வருவாயில் நடந்த நிர்வாகத்தை மத்திய அரசு மேற்கொண்டது போல் இதையும் திடீரென்று முன்பின் அறிவிக்காமல் செய்வதற்கு எவ்விதக் காரணமும் இல்லை என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து இதை உங்கள் முன்னால் வைக்கிறேன். இது கூட்டுறவுத் துறையிலுள்ள முதல் பிரிவு. கூட்டுறவு வங்கிகள், நாணயச் சங்கங்கள் பணம் கொடுத்து வாங்குவது, நிதி உதவி செய்வது முதல் பிரிவு. இரண்டாவது பிரிவு மார்க்கட்டிங் அண்டு பிராசசிங். விளைபொருள்களைக்கொண்டு தொழிற்சாலை அமைத்து அதன் மூலம் விளை பொருள்களின் விற்பனைக்கு வாய்ப்பு ஏற்படுத்துவது. இந்த முறையில் எவ்வளவோ பல தொழிற்சாலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

புதிதாக இரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, சூரிய காந்தி விதையில் இருந்து எண்ணெய் எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏக்கர் ஒன்றுக்கு மணிலாவைவிட இதிலே அதிகமான எண்ணெய் கிடைக்கும் காரணத்தால் அதைப் பெரிய அளவுக்குப் பயிர் செய்யலாம் என்று மத்திய அரசு வகுத்த திட்டத்தின் அடிப்படையில் மாநில அரசு விவசாயத் துறையில் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதற்கிடையில் எவ்வளவோ விவசாயிகள் தாங்களாக சூரியகாந்தி விதையை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். கிலோ $1\frac{1}{2}$ ரூபாய்க்கு வாங்கி எண்ணெய் எடுக்கவும், எடுக்கப்பட்ட எண்ணெயை கிலோ ரூ. 3·85-க்கு விற்கவும் கூட்டுறவுத் துறையில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் விவசாயிகள் சூரியகாந்தி விதையை உற்பத்தி செய்து ஏக்கர் ஒன்றுக்கு அதிக வருவாய் பெற முடியும்.

சிவப்புப் புத்தகம்* ஒன்று அச்சடிக்கப்பட்டு உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன். அச்சடிக்கப்பட்ட காகிதம் புளிச்சை என்று சொல்லக் கூடிய பளாண்டில் இருந்து தயாரிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் புளிச்சையை 'மெஸ்டா' என்று இந்தியாவிலும், 'கனோபா' என்று வெளி நாடுகளிலும் சொல்லுவார்கள். மத்திய அரசு கூட்டுறவுத் துறையில் ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஆரம்பிக்க அனுமதி அளித்திருக்கிறார்கள்.

The Co-operative Department of the Tamil Nadu Government has secured a letter of intent from the Government of India to establish a paper mill with a capacity of 100 tonnes per day. The cost of the project will not exceed Rs. 10 crores and the foreign exchange content would be Rs. 9.8 crores.

ஏறத்தாழ 10 கோடி அளவில் வெளிநாட்டுச் செலாவணி (ரூ. 9·74 கோடி) அனுமதி அளித்திருக்கிறார்கள். இதை எப்படிப் பயன்படுத்துவது எப்படி பேப்பர் ஆக்குவது என்ற குறிப்பை சிவப்புப் புத்தகத்தில் அச்சிட்டு வழங்கி இருக்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியில் இருக்கும் சிவப்பு அட்டையும் புளிச்சையில் செய்யப்பட்டதுதானா?

*168-171-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புளிச்சையிலிருந்து செய்யப் பட்ட பேப்பரில் அச்சிட்டு எப்படி பேப்பர் ஆக்குவது என்ற விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். முதல் பிரிவு வங்கிகள். இரண்டாவது பிரிவு விளைபொருள்களுடன் இணைந்த தொழிற்சாலைகள். மூன்றாவது பிரிவு பண்டகசாலைகள்.

பண்டகசாலைகள் நட்டத்தில் நடைபெறுகின்றன என்று அடிக்கடி கூறப்படுகிறது. மினி சூப்பர் மார்க்கட் என்று 28 தொடங்கப்பட்டு அவை அவ்வளவும் லாபத்தில் நடக்கின்றன. சிப்பந்திகள் கூட்டுறவு-எம்ப்ளாயிஸ் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ்—லாபத்தில் நடக்கின்றன. மாணவர் கூட்டுறவு ஸ்டோர்ஸ் லாபத்தில் நடக்கின்றன. இப்படிப்பட்ட கூட்டுறவு களுக்கு அதிக உற்சாகமும் ஊக்கமும் கொடுக்கப்படுகின்றன.

நான்காவது பிரிவு கூட்டுறவுக் கல்வி, கூட்டுறவுப் பிரசாரம் இப்போது 9 கல்லூரிகள் நடைபெறுகின்றன. ஒரு கல்லூரிக்கு ஆகும் செலவை மத்திய அரசு கொடுக்கிறது; ஒரு கல்லூரிக்கு ஆகும் செலவை மாநில அரசு கொடுக்கிறது. மற்ற ஏழு கல்லூரிகளைப் பொறுத்து அந்தந்தக் கூட்டுறவுக் கழகங்கள் அதற்கான வேலைகளைச் செய் கின்றன. இந்த ஏழு கல்லூரிகளும் தனித்தனியாக இயங்கும் காரணத் தால் பாடமும், பாடப் புத்தகமும், பரிட்சையும் ஒருங்கிணைக்கப் படாமல் இருப்பதை நீக்கி ஒருங்கிணைக்க வேண்டிய நடவடிக்கை ஆய்வில் இருக்கிறது.

இந்த நான்கு பிரிவுகளைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னேன். இந்த நான்கு பிரிவுகளிலும் என்னென்ன முன்னேற்றங்களைச் செய்ய முடியும் என்பதைப் பற்றி உறுப்பினர்கள் தங்களுடைய அரிய, மேன்மை யான கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முப்பது பேர் பேச வேண்டியிருக் கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் 15 நிமிஷங்கள் எடுத்துக்கொள் ளலாம். அதற்குள் சுருக்கமாகப் பேசவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, I shall be able to finish my speech as early as possible if there is no obstruction.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, in support of the cut motion given on behalf of our Party, I wish to offer a few remarks. The preliminary remarks of the Hon. Minister are completely contradictory to what he has placed on the table of the House or sent to us earlier. In the extracts from the recommendations of the Banking Commission on page 1 it is stated—

'The Commission has recommended that the Co-operative credit agencies (such as Co-operative Banks and Co-operative Credit Societies) should be transferred from the State List to the

Union List or to the Concurrent List, by a Constitutional amendment'.

Then on page 5 it is stated—

'Hence, though the Study Group has examined the question with reference to the position that now prevails under the Constitution, we go further and recommend that the jurisdiction to regulate money-lenders and money-lending and also co-operative credit agencies should be transferred either to the Union List or to the Concurrent List. Such transfer could be effected only by a Constitutional amendment'.

This paragraph—I request the hon. Members to carefully consider it—clearly shows that he is for such a transfer and he has not written a single sentence against that.

Then again on the last page, it is stated—

பி.ப. 0·30 'These require enabling and supporting legislation both of the Centre and of the States: Central legislation would suffice on the implementation of our recommendation to confer on the Union the power to legislate on matters relating to the incorporation, regulation and winding up of co-operative credit societies.'

Even here he does not put a single sentence complaining against the attitude of the Centre. Perhaps yesterday he might have been compelled by some senior Member of the Cabinet or the Hon. Chief Minister to change the printed speech. The preliminary remarks of the Hon. Minister and what is printed is entirely different. The last sentences are completely at variance with the policy of the Government. I request the hon. Members to consider this aspect of the matter.

Then I want to refer to some important points relating to the Co-operative Department. Sir, there are a number of co-operative societies. For instance, in Choolai we have a Consumers' Co-operative Society which has been running since 1964. Then we have Consumers' Co-operative Society in Division 94. A number of persons had come and complained to me. These consumers' Co-operative societies are not given sugar card facilities whereas private agencies have been given such facilities and given sugar and rice card, over riding the need to give such facilities to the consumer co-operative societies. Day in and day out they talk of this.

• 68—171-ம் பக்கங்களில் நன்காம் இணைப்புக அச்சிடப்பட்டுள்ளது.



I am levelling a very serious charge on the Food Minister and Minister for Co-operation, at least both of them should have come together and seen to it that co-operative societies were given preference. Even though the Co-operative Department seems to have brought it to the attention of the Hon. Minister, nothing seems to have been done with regard to that. They have said, most co-operative societies have applied late. They have not advertised. In 'Tamil arasu' it has not come. In some dailies they have said sugar cards will be distributed. They brought to the attention of Government that persons who have applied later have been given such facilities. But nothing has been done. This cuts at the root of the co-operative movement. That is the point to which I want to draw the Hon. Minister's attention.

With regard to Khadi Board, I want to say something. I have given a cutmotion on general lines. The Hon. Minister is a clever person. Suddenly last year he started mysteriously 424 oil societies and 180 agricultural farm societies. Why were these societies started suddenly all over Tamil Nadu in a very interesting manner? Is work going on in these societies? How many are functioning? Not a single society is functioning. Have any society been given loan by the Khadi Board? The societies are there in paper. The Hon. Minister, as I told before, is a clever person. He has done things cleverly. The bye-law has been changed so that anyone from these societies can come to the Apex Co-operative Central Bank and get elected. In other words, he creates voters for the Co-operative Central Bank. The voters are the persons running these small societies. They are not functioning but they are there on paper. What is the amount given to these societies, is a secret only known to the Minister and not to anybody else. He has managed the whole thing in a very clever manner. He has created voters and transferred one by one of his tribe to the Central Bank, with the result he has completely cornered the entire Co-operative Central Bank. These mushrooms created all of a sudden are not functioning properly; they are only creating voters to contest the Central Bank. As I said previously he has changed the bye-law also cleverly.

I now come to other things. There is the Oil and Allied Products Co-operative Federation. The total estimate is Rs. 30 lakhs. Rs. 10 lakhs have been given by the Khadi Board. I do not

know whether oil has been extracted (Thirumathi T. N. Anandanayaki : It is an oily question.) I don't say that. The whole thing is fishy. That is what I say.

Then there is the Namakkal Solvent Extraction Plant. Rs. 30 lakhs is the estimate but only Rs. 11 lakhs have been given by the Khadi Board. Oil-cakes are usually disposed of as cattle-feed. Since the Hon. Speaker has limited the time, I am only touching upon these things. On each item I can talk for 30 minutes and I have got so many points. But I am rushing through. If there is some percentage of oil, it is fresh. But it is dried oil-cake; our Hon. Minister has wonderful and funny ideas, it is something like what you get from P. G. Goodhouse. It is impossible to get 5 per cent oil from dry cakes. Moreover how can the department transport all the oil cakes ? To maintain the cost of production, minimum of 15 tonnes per day is required. Public money is being wasted like this. That is why I am shouting with all the vehemence at my command. Have the Department got 15 tonnes per day to keep the machine in working order? No. That is the position. But the Hon. Minister gets mysterious ideas as you find in Mr. P. G. Wood house's stories.

Then there is the Thuriyur Kandhasari Sugars. Mr. T. P. Alagamuthu had tried his best to bring it to order. He is an honest man and I know him. He knows the whole thing. To crush the cane, some machine was bought at Rs. 1 lakh at the instruction of the Secretary, Khadi Board. I shall come to the Secretary later. But the machine does not cut the cane at all. That is the position. It is not functioning for the past three years. Has the Hon. Minister taken into account that this is waste of public funds ? Gandhian theory was minimum capital and maximum employment. But here a machinery is brought at a huge cost and it is not working. It is not functioning.

Another interesting aspect is there. Money has to be collected from several persons who had not paid loans taken. The Hon. Minister got an idea, a brain-wave. He appointed six co-operative deputy registrars, from Co-operative Department to collect the dues to the Village Industries Department. Two persons have not joined yet. Others want to keep out. Each Deputy Registrar costs Government Rs. 1,000 by way of pay, etc. plus Rs. 1,000 by way of travelling allowance. There are persons employed in the department itself. Can we not utilise the services of co-operative



sub-registrars? (interruption) If the Hon. Minister wants to say anything, I am always prepared to yield. Why should you recruit Deputy Registrars ? That leads to frustration to persons in the department. Their chances of promotion are denied. It leads to a lot of dissatisfaction and employees do not take interest in their work.

I shall come to another thing. It is an interesting information which would shock the House. The Hon. Minister brought one by name Mr. Bagirathan working in the office of 'Dinathanthi' as his P.A. He was taken on lien. I have got all the facts. He is taken as P.A. in the scale of 425–25–600–30–750. He does not wear Khaddar. Of course there is no rule to wear Khaddar. Even the Hon. Minister does not wear Khaddar. This P. A. was originally Publicity Officer. Has he worked as a Publicity Officer for a single day ? The Publicity Officer's post was vacant.

MR. SPEAKER : Is it obligatory to wear Khaddar?

DR. H. V. HANDE : I do not think. Even the Hon. Minister does not bother about Khaddar However, I will give a compliment to the department, for they are doing their best I am only saying that the idea of recruiting a Publicity Officer was not genuine. It was only to get his own P.A. through that post, so that he could be made his P.A. on 'lien' or 'loan' basis. I do not know which—the Hon. Minister may know. Another Jayaraman Adittan was appointed. But on that score the departmental officers became furious and they all shouted. The persons who would have got this chance normally were very furious. That was the reaction. Various complaints were received. He did not stay; he went away and the post is vacant.

Another very interesting thing is here. A really very interesting thing, that is with regard to Kuralagam. That is very, very interesting and shocking also. From Kuralagam a monthly rent of Rs. 1.25 lakhs is got. In that Kuralagam, an area fetching Rs. 5,000 rent is kept by the Hon. Minister for Co-operation in the fifth floor. There is bed and all other facilities. I realy admire our Chief Minister and I was very happy when he said yesterday. We may have difference of opinion with him. But when he spoke yesterday, I was actually so much moved when he said that he works for 16 hours a day. I am also a hardworking man and therefore I can appreciate that. He does not bother about comforts

and he does not bother about air-conditioning, etc. Some areas are air-conditioned there. Our Co-operation Minister keeps a room in Kuralagam and he spends mostly between 1 p.m. and 8 p.m. in that office. The rent for that area is Rs. 5,000. That is the point I make. The room is in the fifth floor. There is a lift man. I have my own source of information. The lift man says he has to be on duty and he has to wait and be in attendance from 1 p.m. to 2 p.m. till the Minister actually comes there. There will be **a phone 'Amaichar Varukirar, Varukirar'** லிப்ட் மேன் ஜாக்கிரதையாகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும் **He will have to be waiting there till the Minister comes there. There will be other persons who cannot use the lift.**

திரு. சி. வி. எம். அண்ணாமலை, On a point of order, Sir, பேரவைத் தலைவரவர்களே, தலையீட்டிற்கு மன்னிக்கவும். உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசுகிறபோது தேவையற்ற விஷயங்களை பேசி இங்கே இருக்கின்றவர்களை வேறு திசைக்கு திருப்பிவிடுகிற மாதிரி பேசுவதை அனுமதிக்கலாமா என்று அறிய விரும்பு கிறேன்.

MR. SPEAKER : It is not a point of order.

DR. H. V. HANDE : The point is that all staff and officers including some Police officials are there waiting. An umber of people are not able to use the lift. Of course, that is not a major point. But all grumble; the lift boy grumbles. There is a Policeman from the nearest Station on duty there waiting for the Minister from 1 p.m. till the Minister comes. My point is why should the Minister bother to go there and remain there. Should he not take the advice of the Hon. Chief Minister and stay in his own office here. There is a bed also here and all those things. I do not complain. Some may not be able to sit for a long time. Naturally it is necessary. (Interruption) I know that.

Then there is another point. The P.As. to the Minister for Co-operation stay and sit in Kuralagam. Refreshments are supplied to them and all those things.

There is another thing also. The Secretary of the Khadi Board is holding the post for the last 12 years. My main complaint is why should a particular person hold the post for nearly 12 years I request the Hon. Minister to answer this in his reply.

Another interesting thing. **Profit and loss accounts for the various schemes of the Khadi Board have not been submitted since 1960. I would like to know the reasons in the Minister's reply.**



It is understood that there was misappropriation of about one lakh of rupees. The action taken by the Secretary is not known. It is another point to which the Hon. Minister may give his answer.

**Then, in one of the Board meetings, the Hon. Minister has said about** the introduction of Mini-Mill in the Khadi Department. My information is that a distinguished Member of the Board, Ma.Po.Si., got so furious about this, he told the Board to change the name and went away. I want the Hon. Minister to furnish information on that point also.

There are a number of points. For want of time, I cannot refer to them all now.

The most important point is with regard to handpound rice. I understand that the loans are not being paid to the Handpound Rice Co-operative Societies. Even a number of widows are affected.

Again about the workers in the Khadi Board. Even though they have increased the sales from 1.5 crores to 2.83 crores, Diwali incentive was not given to them first; afterwards on agitation they have been given.

Another very interesting and shocking thing is this. In Tiruppur, Madurai, Vellore, Thanjavur and other places the Tailoring Sections were closed. In the City of Madras also the unit was closed and a number of persons were thrown out of employment. Twenty machines were disposed off. How? We do not know. Suddenly the units were closed. There is a lot of suspicion whether there is any *male fide* position. Why were the existing ailoring units **closed and why 20 machines were put in cold-storage. Somebody** went to the court even, if I remember aright.

Then with regard to Pathanir and things like that, the Hon. Minister has got funny ideas of his own. I do not know . . .

THIRU T. GANAPATHY : On a point of order, Sir. The expression 'funny ideas' implies insinuation against the Minister.

DR. HANDE : What is wrong? 'Funny' is not objectionable.

THIRU R. PONNAPPA NADAR : There is nothing wrong about the expression.

MR. SPEAKER : You may say 'funny speech' of the hon. Member. There is nothing wrong.

DR. H. V. HANDE : I will come to Pathanir. I understand that there were proposals to get from Bombay machinery for Palm **Juice unit. How it is going to be successful. I do not know.** (Interruption). Let us wait till next year. Let us see and Mr. Ganapathy can remember this till next year. Why this fiasco?

Now I will come to the most important point. Mr. Padmanabhan is the Secretary; he has been there for the past 12 years. I understand reliably from the workers there that the Hon. Chief Minister has passed orders for the transfer of Thiru Padmanabhan. But till this day it has not bee communicated to Thiru Padmanabhan. That order is, I understand, held up at the desk of the Hon. Minister for Co-operation. That is the information I have. I would like to know whether it is a fact. How is it that the Hon. Chief Minister's orders are not being followed by the Minister for Co-operation? Even the Chief Minister's orders, he is not going to honour?

Then, the Kuralagam which has been built at huge cost, required an Assistant Engineer. For this, the Chief Engineer was addressed. Every one is like a Perry Mason Story. The Secretary Thiru Padmanabhan wanted a panel of Engineers. The Chief Engineer sent six numbers. Then Thiru Padmanabhan writes back to the Chief Engineer to include in the panel of Engineers, one ThiruP rabhakar also and now Thiru Prabhakar is working as Assistant Engineer. He can go to that extent.

Finally, I want to say one word about Thiru Giri Gowder. He has taken materials from the societies to the tune of Rs. 2 lakhs. I want to know whether he has remitted the amount.

MR. SPEAKER : How he is connected . . .

DR. H. V. HANDE : He owes Rs. 2 lakhs and the Department has not recovered the amount from him. My point is that the Secretary of the Department should have taken steps to recover the amount from him.

Then, Sir, they have appointed Thiru Raman for 'Vilambaram' . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிரி கவுடரோடு முடித்து விடுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ராமனோடு முடித்துவிடுகிறேன்.

**MR. SPEAKER : The hon. Member is permitted to take only one more minute.**



DR. H. V. HANDE : With regard to 'Vilambaram' a sum of Rs. 2,500 per month is spent. The officer by name, Thiru Raman has been appointed. The point is, whether the amount spent on it **is worthwhile. I feel that it is not worthwhile. I hope and trust** that the Hon. Minister will reply to the points raised by me without emotion.

MR. SPEAKER : The hon. Member, Thiru C. V. M. Annamalai . . .

THE HON. THIRU SI. PA. ADITANAR : The hon. Member has given some wrong statistics and may I correct them.

MR. SPEAKER : Yes, you may correct them.

THE HON. SI. PA. ADITANAR : He has been talking about funny ideas. (Interruption from Dr. H. V. Hande) **The hon. Member has used the expression "funny ideas" so many** times and why should he get excited when I have used only once. (Dr. H. V. Hande rose)

MR. SPEAKER : The hon. Member has already made his points . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member **has referred to the extraction of rice bran oil at Tiruvarur and** stated that good money is being wasted. I may give statistics. The cost of the plant is only Rs. 10 lakhs but it has earned a profit of Rs. 3.6 lakhs and there is no better proposition than this.

Then he referred to the appointment of certain persons for collection of old dues. There is the Palm Gur Federation and it is running into overdues of Rs. 1¾ crores which has to be collected. Therefore, in order to collect the money, we have to appoint certain Sales Officers of a higher rank who know the work. Even supposing half of this money goes as bad debt, an expenditure of Rs. 5,000 or Rs. 4,000 for the collection of the remaining amount is not excessive.

DR. H. V. HANDE : How much has been collected so far?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : About Rs. 30,000 has been collected. Therefore it is not a bad proposition. Also the palm gur workers who were getting money from the Palm Gur Federation are not able to get additional money because of the

heavy overdues. Now we have arranged that the same person will get money from the Central Bank. Now the money is given to them not through the Federation but through the Central Bank. As a large amount has been given to them, an expenditure of Rs. 5,000 per month or Rs. 60,000 per year is not abnormal.

Then he referred to flash light and publicity officer. So far as the flash light is concerned, it has been given on contract to Indira Advertises. The understanding is that they would be given Rs. 2,500 in order to run the flash light advertisement in front of Kuralagam and the income is more than compensated for the expenditure. It is not a loss.

DR. H. V. HANDE : It is not so

MR. SPEAKER : It is not in order for the hon. Member to interrupt like this.

**DR. H. V. HANDE : Sir, on a point of order . . . .**

MR. SPEAKER : What is the point of order?

DR. H. V. HANDE : The point of order is that whenever we speak, sometimes the Hon. Chief Minister or other Ministers want explanation from us and we give it. Now when we want clarification from them . . . .

MR. SPEAKER : What is the point of order? The hon. Member is obstructing the proceedings of the House.

**DR. H. V. HANDE : I want to refute what the Hon. Minister says . . . .**

திரு. க. மு. இராசகோபால் : இப்படி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுது அடிக்கடி டாக்டர் ஹாண்டே அவர்கள் .........

**(DR. H. V HANDE rose).**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசவேண்டியதெல்லாம் பேசியாகிவிட்டது. அப்பொழுது அமைச்சர் அவர்கள் எவ்வளவு பொறுமையாக உட்கார்ந்திருந்தார்? கடைசியில் பதில் சொல்லலாம் என்று பொறுமையாக உட்கார்ந்திருந்தார். அந்தப் பொறுமை தங்களுக்கு இருக்கக்கூடாதா? The hon. Member should understand the rules of the House. நீங்கள் பேசும்பொழுது அமைச்சர் எப்பொழுதாவது எழுந்திருந்தாரா, பொறுமையாகத் தானே உட்கார்ந்திருந்தார். அமைச்சர் அவர்களை பதில் சொல்வதற்கு விடுங்கள். The hon. Member has already had his say and now the Hon. Minister shulod have his say. டாக்டர் ஹாண்டே, நீங்கள் தெளிவாகச் சொல்லி விட்டீர்கள். You can hold your view and the Hon. Minister can hold his own view. நீங்கள் அபிப்பிராயம் சொன்னதாலேயே தப்பு ஆகிவிடாது. அமைச்சர் அவர்கள் மறுத்ததாலேயே, இல்லை என்று ஆகிவிடாது. அமைச்சர் என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்களேன். நீங்கள் எவ்வளவு நேரம் பேசினீர்கள். அமைச்சர் அவர்கள் எப்பொழுதாவது எழுந்தாரா?



THE HON. THIRU SI. PA. ADITANAR : I am merely giving facts and figures. If I give wrong facts I can easily be pulled up by the Hon. Speaker.

Sir, I have been saying that the scheme of publicity by means of flash light is not a losing proposition.

As regards the appointment of P.A. as Publicity Officer, this post is more an honorary post . . .

MR. SPEAKER : Private Secretary-*cum*-Publicity Officer . .

THE HON. THIRU SI. PA. ADITANAR : He draws salary only as Private Secretary . . .

**DR. H. V. HANDE : I have got points to refute it . . . .**

THE HON. THIRU SI. PA. ADITANAR : The other thing is that the hon. Member is carefully watching my movement in the Kuralagam so far as the co-operative matters are concerned. The hon. the Deputy Leader of the Opposition was good enough to say yesterday that I could be found in the Secretariat at any time . . . 

மு.ப. 11·00

**DR. H. V. HANDE : From 2 p.m. to 8 p.m. the Hon. Minister** is in Kuralagam and a policemen is standing there . . . .

திரு. முஹ. ஆதி : இப்படி இரண்டு பேர்களுமே பேசிக்கொண்டிருந்தால் நாங்கள் பேசுவதற்கு எப்பொழுது சந்தர்ப்பம் பெறுவது?

THE HON. THIRU SI. PA. ADITANAR : After 2 p.m. certainly hon. Members will expect me to attend to the work of other departments connected with village industries. Most of the time, till 2 O'clock I am here. After that I have to attend to other departments, for which offices are in Kuralagam. Part of which is Minister's office. I have to attend both. If there is a constable outside Kuralagam, I have not bothered about him. I have not seen him because constable is not required outside Kuralagam. There is Security Officer. I have not seen the constable.

There is complaint about air-conditioned room in Kuralagam. I may tell the hon. Member in all humility that not a single pie of the cost of air-conditioning is debited to the Village Industries Department. (Dr. H. V. Hande: I know that) The hon. Member knows that. All right.

The hon. Member was also saying that if visitors come, some refreshment is being given to them. Visitors do come.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அங்கே 'பி.எ.'-க்கள் எல்லாம் உகார்ந்து 'ரிஃப்ரெஷ்மெண்ட்' சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Personal Assistants also have got to eat. I may please tell the hon. Member that cost of refreshment, tea or coffee, which I take or refreshments which I take or which my Personal Assistants take, there is no debiting to Village Industries Department. Not a single pie of tax-payer's money or that of the Village Industries Department is spent on refreshment. I take very good care to see that it is not debited against them. Personal Assistants also have got to eat. Out of their money, they eat and there cannot be any complaint based on that.

Regarding the question of posting of Secretary, I may say that the Secretary, Thiru Padmanabhan, has been posted for the Oil Federation. To relieve him, the person to be posted as Secretary, has not yet been settled. I am sure it will be done in a few days' time.

*திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, 19-ம் எண்ணுள்ள இந்தக் கூட்டுறவு மானியத்தை ஆதரித்துப் பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவரவர்களே, வாய்ப்புகள் கொடுக்கும் நேரத்தில் காலம் குறித்துக் கொடுக்கிறீர்கள். ஆனால் மானியத்தின்மீது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள்—நான் சொன்னேன், "பாயிண்ட் அஃப் ஆர்டரில்"—ஆதாரமில்லாமலும், சரியான முகாந்தரம் இல்லாமலும் அமைச்சர் மீது குறைவு காண்பதோ, நேரடி பகைமைச் சொற்களை வீசுவதோ இந்த மன்றத்திற்கு முறையாகாது, என்று அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதன் பிறகு அமைச்சர் அவர்களுடைய உரையின் விளக்கங்கள் எத்தகைய தெளிவான எண்ணத்தை தந்திருக்கின்றன என்பதை அறிய உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இன்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். இன்னும் மேல் தட்டில் இருப்பவர்களுக்கு; கூட்டுறவுத் துறையில் இதற்கு முன்பு—தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்பு—கூட்டுறவுத் துறையில் இருந்



தவர்களுக்கு நாட்டிலே ஏழைப் பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள், அதிலும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வளவு பேர் கடன் பெறுவதற்கு தொல்லைகள் பட்டார்கள் என்பதை அனுபவபூர்வமாகக் கண்டவர்கள் இங்கே இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நில வள வங்கியில் நிலச் சீர்திருத்தத்திற்காக அல்லது வேறு முக்கிய தேவைக்காக கடன் கோரி ஒரு ஏழை விவசாயி விண்ணப்பம் போட்டால், விண்ணப்பம் போட்ட விவசாயி இறந்து விடுவான்; அதன் பிறகு அவன் மகன் வேறு ஒரு விண்ணப்பம் கொடுத்து அவனும் இறந்துவிடுவான், பிறகு அவன் பிள்ளை பணம் பெறும் நிலை இருந்து வந்தது. காஞ்சீபுரம் நில வள வங்கியில் தாமல் என்ற சிற்றூரில் ஏழை விவசாயி ஒருவர் விண்ணப்பம் போட்டு, 6 ஆண்டுகள் தீர்வு காண முடியாமல், தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்தான் ஏழை உழவர்களுக்கு நல்ல முறையில் பணி செய்யும் அளவுக்குப் பலாபலன் அமையவேண்டும் என்று தமிழக அரசும், கூட்டுறவுத் துறை பொறுப்பேற்றுக் கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இன்றைக்குப் பெரும் மாறுதலைப் புரட்சியைச் செய்திருக்கிறார்கள் என்பதை நல்ல மனதுள்ள எதிர்க்கட்சி நண்பர்கள் நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தால் தெரிந்துகொள்வார்கள். ஒரு கடன் பெற வேண்டுமானால், தனியாரிடம் கடன் விண்ணப்பம் போடுவதானால், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தை அடகு வைத்தால் இரண்டு மூன்று ஆண்டுகள் சென்ற பின், வட்டிக்கு எதிர்வட்டியாகி, எந்த நபரிடம் அடமானம் செய்யப்பட்டதோ அதே நபரால் ஜாரி செய்யப்பட்டு ஏலத்தில் எடுத்துக்கொள்ளப்படும். ஏழை விவசாய மக்கள் வசதி பெறுவதற்கு ஏழை விவசாயிகளுக்குத் தேவையான தொகை கொடுத்து உதவுவதில், பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு உறுதுணையாக வாதாடுவதில் இன்றையதினம் முனைப்பாக பலப்பட்டு வருகிறது கூட்டுறவுத்துறை என்று நான் கூரை மீதிருந்து கூறிக் கொள்வேன்.

பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்தில் ஒன்றைச் சொன்னார். மத்திய அரசு கூட்டுறவுத் துறையின் அதிகாரத்தை செம்மைப்படுத்த, முறைப்படுத்த அதிகாரத்தை மாற்றி கமர்சியல் வங்கிகளில் இருப்பதுபோல் மாறுதல் செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் 1969-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருப்பதாக நமக்குச் சொன்னார்கள். அதன்மீது டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். "இப்போது கூட்டுறவு வங்கிகள், கடன் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கு மாறாக அமைச்சர் அவர்கள் வியாக்கியானம் செய்கிறார்கள்" என்று சொன்னார்கள்.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படிக் கொடுக்கப்பட்ட விளக்கங்களும் மேலும் பல விளக்கங்களும் அவர் பேச்சில் கொடுத்ததற்கு மாறுபாடானவையாகக் கொடுக்கப்படவில்லை என்பதை இன்னும் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் இருக்கின்ற ஆதித் திராவிடப் பெருமக்களும்—வேண்டுமென்றால், எதிர்க் கட்சியில் இருக்கின்ற மதிப்புக்குரிய காங்கிரஸ் உறுப்பினர்களாகட்டும், அல்லது ஹாண்டே அவர்களாகட்டும்-யாராவது வேண்டுமென்றால் ஆய்வு செய்து பாருங்கள்—தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் மத்திய வங்கியில் இடம் பெற்றிருந்தார்கள் என்று நான் கேட்கிறேன், பணிவுடன். அது போலவே தாய்க்குல மக்கள் யாராவது இடம் பெறும் வாய்ப்பை முன்பிருந்த அரசு வழங்கிற்றா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். நம் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கக்கு வாய்ப்பு உண்டாக்கித் தந்தது தமிழக அரசும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பெருமுயற்சியும் என்பதை நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, தாய்க்குலம், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் என்ற அந்த நிலையை மாற்றி, அளித்து, அவர்களுக்கு மரியாதை அந்தத் தாய்க்குலத்துப் பெண் மணிகள் கூட்டுறவுத் துறையில் இன்று பங்கேற்கும் நல்ல வாய்ப்பை சர்க்கார் 'நாமினேஷன்' முறையில் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, 'ஃபார்ம்ஸ் சொஸைட்டி' மூலம் எண்ணற்ற தவறுகள், கட்சிக்காரர்கள் அதில் சேருவதற்கான நிலை உண்டாக்கிவிட்டார்கள் சர்க்கார்' என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன், அமைச்சர் அவர்கள், அவருக்குப் பதிலளித்தாலும், நான் கூறுவதெல்லாம், ஆரம்ப காலக் கட்டத்தில் எதுவும் சரியான நிலையில் நடத்தப்படும் வாய்ப்புப் பெறாது. ஏற்படுத்தப்படும் ஸ்தாபனங்கள் நல்ல நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? அந்த "ஃபார்ம்ஸ் சொஸைட்டி" மூலம் நல்ல ஏற்பாடுகள் நடைபெறுமா என்பதை அவர்கள் பரிசீலிக்கவேண்டுமே தவிர, அதை விரிவு படுத்தவேண்டும், துரிதப்படுத்த வேண்டும் என்ற வகையில் நம் தூண்டுதல் இருக்கவேண்டுமே தவிர, செய்யப்பட்டவைகளுக்கு நோக்கம் கற்பிப்பது, குறை காண்பது. வளர்ந்துவரும் ஜனநாயகத்திற்குக் கேடு செய்வதாகும் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, மேலும் 5 நிமிடம் கொடுத்தால் குறைகளைப் போக்குவதற்கு வாய்ப்புத் தந்ததாகும். இந்த நேரத்தில் தமிழக அரசும், தமிழக முதல்வர் அவர்களும் மிக உறுதியான குரலில் அதாவது மாநில சுயாட்சி பெறவேண்டும் என்று வலியுறுத்தி வருவதும். அப்படி வலியுறுத்தி வருகின்ற ஜீவாதாரமான குரலுக்குத் தமிழகத்தில் மட்டுமல்ல, பிற மாநிலங்களில் நன்மதியாளர்கள், தூய்மையான எண்ணங்கொண்ட அறிஞர்கள், அரசியல் பேரறிவாளர்கள் சேர்ந்து கருத்து ஒப்புமை கண்டு, ஏற்றுக்கொள்ளும் இன்றைய நேரத்தில், மாநில அரசின் நேரடி நிர்வாகத்தில் சேர்ந்த வகையில் பணியாற்றி வரும் இந்தக் கூட்டுறவுத் துறையை மத்திய அரசு தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் கொண்டுபோக வேண்டுமென்று சொல்வது, மாநில சுயாட்சி தேவைக்கு வைக்கின்ற பேரிடி என்பதை இங்கே உள்ள பெருமக்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக்



கேட்டுக்கொள்கிறேன். மாநில சுயாட்சித் தேவையை மறுப்பதற்கு செய்யப்படுகின்ற முதல் துவஜாரோகணத்திற்கு மத்திய அரசு முனைந்திருக்கிறது என்றால் தவறாகாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் இந்த வகையில் மாநில அரசுக்கு கூட்டுறவுத் துறையிலே முழு அதிகாரம் இருக்கவேண்டும். ஜனநாயக நாட்டில் சாதாரணமான நிலையிலிருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு உதவியளிக்கின்ற ஐக்கிய நாணயச் சங்கம் இது என்பதை இங்கே பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவியளிக்கும் ஒரு நல்ல நிர்வாக அமைப்பாக இருக்கிறது ஐக்கிய நாணய சங்கம் என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்தச் சாதாரண மக்கள் எல்லாம் இன்றைக்கு கடன் பெறுவது எப்படி, எப்படி விண்ணப்ப பாரம் தயாரிப்பது, எப்படி விண்ணப்பம் போடுவது என்ற ஆர்வத்தால் உந்தப்பட்டிருக்கிறார்கள்; அதன் பலனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையிலே இருக்கிறது கூட்டுறவுத்துறை. இந்தத் துறையைக் கலைப்பது ஜனநாயகத்தைக் கொலை செய்வதாக அமைந்து விடும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆகவே, தமிழ்நாடு அரசு முழு மனதுடன் இந்தத் துறையை கட்சிமாச்சரியங்கள் இல்லாமல், ஏற்றத்தாழ்வு இல்லாமல் நடத்தி வருகிறது. தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறை சிறந்து விளங்குகிறது. ஏன், இந்தியாவிலேயே சிறந்து விளங்குகிறது என்றுகூட சொல்லலாம். இந்தியத் துணைக்கண்டத்திலேயே தஞ்சை மாவட்ட மத்திய வங்கியும் குடந்தை மத்திய வங்கியும் சிறந்து விளங்குகின்றன என்பது மட்டுமல்ல, கொடுக்கின்ற கடன்களை ஒழுங்காக வசூல் செய்து, அதற்காக முதல் பரிசினையும் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட இந்தத் துறைக்கு, மத்திய அரசாங்கத்தின் செயல் சாவு மணி அடிப்பதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம், இன்றைய தினம் பசுமைப் புரட்சியைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உதவி அளிப்பதற்காகப் பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தை ஏழை எளிய பாட்டாளி மக்கள்—கிராம மக்கள் நிலவள வங்கிகள் மூலம் பெற்று வருகிறார்கள். ஆனால் நகைகளையும், பித்தளை சாமான்களையும் அடமானமாக வைத்துப் பணம் பெற முடியாத நிலை இருக்கிறது. அதற்கு ரிசர்வ் வங்கி அனுமதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்த ரிசர்வ் வங்கி இம்மாதிரியான விஷயங்களில் எல்லாம் தலையிடுகிறது. அது நமது உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. இந்த நேரத்தில் கூறிக்கொள்வதெல்லாம் மத்திய அரசின் மேற்பார்வையிலே உள்ள ரிசர்வ் வங்கி நம்முடைய நிர்வாகத்தை மேற்பார்வை செய்வதாக இருக்கவேண்டுமேயன்றி நம்மை ஆட்சி செய்வதாக இருக்கக் கூடாது என்பதுதான். ஒரு லீகல் அட்வைசராகத்தான் இருக்கவேண்டும்; அதிகாரம் செய்வதாக இருக்கக்கூடாது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிலவள வங்கிகளில் நகைகளை வைத்துக் கடன் பெறக் கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அதற்கும் தமிழக அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகம் பேசுவதற்கு நேரம் இல்லாததால் இந்த மானியத்தை நான் முழுமனதாக வரவேற்கிறேன். இந்த மானியம் சாதாரண மக்களும் கூட்டுறவுத் துறை மூலமாகப் பயன்பெறச் செய்கின்ற சரியான சகாப்தமாக இருக்கிறது என்பதைப் பெருமையோடு கூறி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. எஸ். மணியன்: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் நமது கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் கூட்டுறவுத்துறை மானியத்தின்மீது, அதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை மட்டும் கூறிக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த சுதந்திரா கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் துவக்கத்திலேயே, இன்றைக்கு கூட்டுறவுத் துறை மத்திய வங்கிகளைப் பிடிப்பதற்காக, கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் சட்டங்களையெல்லாம் திருத்தி, மத்திய வங்கிகளைப் பிடிப்பதற்கு ஒரு உபகரணமாக மட்டுமே இந்தப் புதிய சட்டத்திற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை விளக்குவதற்காக ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவுப் பாங்கில் நான் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறேன். அந்த வங்கியிலே இருக்கக்கூடிய 30 இயக்குநர்களில் 16 பேர்கள் அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்கள். அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் பக்கத்திலே இருக்கக் கூடியவர்கள் 14 பேர்கள். நான் இன்றைக்கு அந்த வங்கியின் தலைவராக இருக்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் கருதி இருந்தால் சட்டங்கள் மூலமாக எங்கள் பக்கத்தில் இருக்கிற 20 பேர்களை அங்கே வரச்செய்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. நியாயமான சட்டங்களின் அடிப்படையிலேயே அங்கே கூட்டுறவு வங்கி இயக்குநர்கள் தேர்தல் நடைபெற்றது. அதன் பயனாகத் தேர்தல் முடிவிலே 14 பேர் எங்கள் பக்கத்தைச் சேர்ந்தவர்களாகவும், 16 பேர் அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் வந்தார்கள். அங்கே இருக்கக் கூடிய சில நல்லவர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழக அரசால் தான் கூட்டுறவுத் துறையிலே நல்ல அபிவிருத்திகளைச் செய்யமுடியும் என்று நம்பிக்கை ஏற்பட்டு. எனக்கு வாக்களித்த காரணத்தினால் இன்றைக்கு நான் அந்த வங்கியின் தலைவராகப் பணியாற்றுகிறேன். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், சட்டத்தை வேண்டுமென்று திருத்தி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே வரவேண்டும் என்று செய்யவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். நியாயத்தின் அடிப்படையிலே இன்றைக்குத் தேர்தல் நடைபெற்று, அந்தப் பக்கத்தில் இருப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருந்தாலும், என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றால்,





அது இந்த அரசின் நியாயமானத் தன்மையைத்தான் காட்டுகிறதே அல்லாமல் வேறல்ல, என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இப்படி உருவாக்கப்பட்ட சங்கங்கள், வெறும் சங்கங்களாகத்தான் இருக்கின்றன; செயலாற்றவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன; நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றன என்பதை என்னால் எடுத்துக்காட்ட முடியும்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நல்ல பயன்பெற்று வருகிறார்கள். எந்த இடத்திலுமே இந்த சங்கங்கள் பணியாற்றவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவ்வாறு கூறினார்கள். எங்காவது இந்தச் சங்கங்கள் செயல்படுகின்றனவா என்று கேட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குகூட என்னுடைய மாவட்டத்திற்கு என்னுடன் வந்தால் அந்தச் சங்கங்கள் எல்லாம் பணியாற்றி வருவதைக் காட்ட முடியும். சில இடங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அலங்காநல்லூர் பிளாக்கில் எறம்பட்டி, வாடிப்பட்டி பிளாக்கில் போடிநாயக்கன்பட்டி, நத்தம் பிளாக்கில் வத்திபட்டி, தொப்பம்பட்டி பிளாக்கில் மானூர், போடி பிளாக்கில் டொம்புசேரி ஆகிய இடங்களிலே இந்த இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன. ஒன்றை மட்டும் எதிர்க்கட்சிக்காரர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறை, இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு—பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட பகுமைப் புரட்சியின் அடிப்படையில்—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய சிறமிப்புக்க ஆட்சியில்—நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் செம்மையான முறையில் நடத்தப்பட்டு வருகிறது என்றால் மிகையாகாது.

இறவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் ஒன்றும் புரியாத புதிர் இல்லை. சொந்தமாகக் கிணறு வெட்டிக்கொள்ள வசதியில்லாதவர்கள், தனியாக வெளியே கடன் வாங்க வசதியில்லாதவர்கள் இருபத்தைந்து செண்ட், 50 செண்ட், 75 செண்ட் என்று நிலம் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாது வாழ்க்கை நடத்தவே மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த துர்ப்பாக்கியமான நிலையில் இருந்தவர்கள் எல்லாம் இன்றைகக்கு இறவைப் பாசன கூட்டுறவுக் கழகம் என்று அமைத்துக்கொண்டு அதிக அளவில் பயன்பட்டு வருகிறார்கள். இன்றைக்கு என்னுடைய தொகுதியில் அலங்காநல்லூர் வட்டாரத்தில் இரவம்பட்டியில் இதுபோன்ற சிறிய விவசாயிகள் 250 பேர்களால் அமைக்கப்பட்ட இறவைப்பாசன கூட்டுறவுக் கழகத்தை வந்து பார்க்க வேண்டும். அவர்கள் 8 பொதுக் கிணறுகள் எடுத்து–வறண்ட அந்தப் பிரதேசத்தில் இன்று மிகச் செழிப்பான முறையில் சாகுபடி செய்து வாழ்வில் வளம்பெற்று வருகிறார்கள். மழையை மட்டும் நம்பி

வேளாண்மை வளர்ச்சியில்லாமல் இருந்த அந்த மாவட்டத்தில் இந்த ஆண்டுமட்டும் 40 இடங்களில் இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து செயலாற்ற கூட்டுறவுத்துறை அனுமதித்திருக்கிறது அப்படி சிறு சிறு விவசாயிகளுக்குக் கூட நன்மை அளித்துவருகிற இநதத் திட்டத்தைப் பாராட்டாவிட்டாலும் இழித்துப் பேசுவது பொருத்த மல்ல என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுபோன்ற கழகங்களைக் கொண்ட மத்திய வங்கிகள் முன்பு நம் மாநிலத்தில் 16 இருந்தன என்றால் அவற்றில் மூன்று, நான்கு வங்கிகள் பி வகுப்பிலும், இன்னும் சில வங்கிகள் ஸி வகுப்பிலுமே இருந்தன. ஆனால் சென்ற ஆண்டு தமிழகத்தில் இருக்கக் கூடிய 16 மத்திய வங்கிகளும் ஏ வகுப்பு வங்கிகளாக மாற்றப்பட்டு இருக் கின்றன. திரு. வி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தெரிவித்தார்கள். அகில இந்தியாவிலுமே 2 சதவிகிதம் மட்டும் தவணைக் கடன் பாக்கியை வைத்துப் பெரும் பெயரைப்பெற்று சிறப்பான நிர்வாகத்தோடு நடக்கா கூடியது இன்றையதினம் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியாகும். ஆளும் கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் திரு. கோ. சி. மணி இன்றைக்கு அதன் தலைவராகப் பணியாற்றி வருகிறார். கழகத்தைச் சேர்ந்தவர்கள் வந்த காரணத்தினால் வங்கி பாதிக்கப்பட்டது என்று சொல்லமுடியாது. அவைகள் எல்லாம் லாபத்தில் நல்ல முறையில் தான் பணியாற்றி வருகின்றன.

அடுத்து நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசே கூட்டுறவுத்துறையை எடுத்துக்கொள்வதற்கான சட்டத்தைக் கொண்டுவரக்கூடிய நிலையில், பாங்கிங் கமிஷன் சிபார்சு செய்திருப்ப தாக, ஒரு மாநில அரசின் நிர்வாகத்தில் ஒரு சங்கத்தில் குறைபாடு இருந்தால்தான் மத்திய அரசு அதை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். முக்கியமாக ரூரல் பாங்கிங் சிஸ்டம் ஏற்படுவதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிட் டார்கள். முக்கியமாக இன்றைக்கு இந்த முறையில்தான் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், மத்திய வங்கிகளின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. 16 மத்திய வங்கிகள் இருக்கின்றன என்றால் இன்றைக்கு 250 கிளைகள் இருக்கின்றன. அந்தக் கிளைகளில் பிக்சட் டெபாசிட் ஸ்கீம், ரெக்கரிங் டெபாசிட் ஸ்கீம், டெய்லி டெபாசிட் ஸ்கீம், நகைக் கடன் வழங்கும் திட்டம் எல்லாம் இருக்கின்றன (மணி அடிக்கப்பட்டது).

ஆகவே, நான் கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியத்தின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு பி. எஸ். மணியன் அவர்கள், இத் துறை மூலமாக சிறு விவசாயிகள் எல்லாம் எந்த அளவுக்குப் பயன் பட்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவை எல்லாம் உண்மை [illegible]



ஏழை எளிய மக்களுக்குக்கூட அதிக அளவு பயன் அளிக்கக்கூடிய தாக அமையவேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து. இன்றைக்கு எடுத்துக்கொண்டால் ரிசர்வ் வங்கியிடம் 4 சதவிகிதத்திற்குக் கடன் வாங்கி கிழேயுள்ள கிளைகள் மூலம் சாதாரண விவசாயிகளுக்குக் கொடுக்கிற போது ஒன்பதேமுக்கால் சதவிகிதம் வட்டி வாங்குகிறார்கள். இடையில் எத்தனை அதிகாரிகள், எத்தனை அமைப்புகள்—இவை எல்லாம் அவசியம் தானா? ரிசர்வ் வங்கியிடம் 4 சதவிகிதவட்டிக்கு வாங்கப்படுகிற பணம் சாதாரண மக்களுக்கு 5 சதவிகிதவட்டிக்குள் கிடைக்க வழியேற்படக்கூடிய வகையில்—பாங்கிங் கமிஷன் கொடுத்துள்ள சிபார்சை எங்கள் கட்சியும் ஆதரிக்கிறது. நானும் ஆதரிக்கிறேன்.

திரு. மணியன் அவர்கள் இறைவைப் பாசனக் கழகத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதை நானும் வரவேற்கிறேன். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புத்தகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட கடன் விவரங்கள் ஒன்றும் இல்லை. மற்ற மாவட்டங்கள் பற்றி இருக்கின்றன நீண்டகாலக் கடன் எந்த அளவு கொடுக்கப்பட்டது என்கிற விவரங்களும் இல்லை.

அமைக்கப்பட்டிருக்கிற சங்கங்களில் கூட துரதிருஷ்டவசமாக அங்கு ஆதிக்கம் செலுத்துகிறவர்களைப் பொறுத்துத்தான் அதிகமான பணம் பெறப்படுவது அமைந்திருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்க ஐநூறு வரை செலவழிக்க வேண்டிய நிலை இருப்பதையும் மறுக்க முடியாது. சில பேர்களுக்கு மட்டும் லட்சம் லட்சமாகக் கொடுக்கப்பட்டி ருப்பதையும் பார்க்கிறோம். இவை பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும். கீழ்ச்சாத்தன்குளம், மேலச்சாத்தன்குளம், சேரகுளம், கீழப்பெருமானேரி ஆகிய ஊர்களில் நான்கு சங்கங்கள் இருக்கின்றன. மொத்தம் 30 பேர்களுக்கு 20 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தொகை என்றும் சொல்லப்படவில்லை. தினத்தந்தியில் பணியாற்றக்கூடிய ஒருவர்—மாலை முரசில் பணியாற்றக் கூடிய ஒருவர்—இப்படி அதுசம்பந்தப்பட்டவர்கள் 30 பேர்கள் உள்ள 4 சங்கத்திற்கு 20 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாம் சங்கங்களை வைத்துக்கொண்டு அந்தச் சங்கங்களுக்கெல்லாம் ஒரே நாளில் 20 லட்சம் ரூபாய் என்ற அளவில் கிடைக்கிறது; ஆனால் சாதாரண மக்கள் பணம் வாங்க வேண்டுமென்றால் லீகல் அட்வைஸ் வாங்க வேண்டியிருக்கிறது. மு.ப. 11-30 அதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர்கள் ஒரே நாளில் 20 லட்சம் ரூபாய் வாங்க முடிகிறது.

நாங்கள் எல்லாம் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ஆம் தேதி நிலமீட்சிப் போராட்டம் நடத்திய காலத்தில், அந்த நிலங்கள் எல்லாம் 30 பேர்களுக்கு எழுதி வைக்கப்பட்டுவிட்டன. அதற்கு முன் அந்த நிலங்கள் யாருக்குச் சொந்தமாக இருந்தன என்பதைப் பார்த்தால் அவைகள் எல்லாம் 'ஆதித்தனார் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷனுக்கு' சொந்தமாக இருந்தது. அந்த இன்ஸ்டிடியூஷன் எப்படி அந்த நிலத்தை வாங்கியது என்பதையும் பார்க்க வேண்டும். அதற்கு முன் அந்த நிலம் திரு. எஸ். டி. ஆதித்தன் 'ப்யூயல் பிளான்டேஷனுக்காக' வாங்கப்பட்டது. அந்த நிலம் எஸ். டி. ஆதித்தன் பெயராலே வாங்கி

யிருக்கிறார்கள். அந்த நிலம் சேரகுளம் பண்ணையைச் சேர்ந்த ஜமீந்தாரிடமிருந்து வாங்கப்பட்டது. 'எரிபொருளுக்காக வாங்கப்பட்ட பிளான்டேஷன்' என்ற முறையில் அதற்கு விலக்கு இருக்கிறது என்று சொல்லி, 'ப்யூயல் ப்ளான்டேஷன்' என்று பெயர் எழுதி உழக்கூடிய நிலத்தையெல்லாம் விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கிடைக்க முடியாத நிலையில் வாங்கி வைத்திருக்கிறார்கள். அது திறமை தான். திறமை இல்லையென்று யாரும் சொல்ல முடியாது. அதற்கும் திறமை வேண்டும். அதை பினாமி முறையில் பிரித்துக்கொடுத்திருக் கிறார்கள். அதைபற்றிய டாக்குமெண்ட் போன்ற விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவரிடமிருந்து எப்படி மாறியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்கும் திறமைதான் காரணம். திறமையாகத்தான் செய் திருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியாது.

அந்த நிலம் ஆதித்தனார் எஜுகேஷனல் இன்ஸ்ட்டிடிஷனுக்குச் சொந்தமாகி, பின்னர் அந்தச் சங்கங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை ஒரே நாளில் வாங்கி, ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால்தான் இந்தச் சங்கத்திற்கு 20 லட்சம் ரூபாய் கிடைத்திருக் கிறது. இப்படிச் செய்தால் சாதாரணமாக இருக்கக்கூடிய ஏழை மக்கள் எப்படி முன்னேற முடியும்? ஏழை மக்கள் எப்படி அரசாங்கத்தின் நன்மைகளைப் பெற முடியும்?

அதுவும் தவிர, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும்போதுகூட ஒரே நாளில் வல்லநார் கூட்டுறவு வங்கியில் 2,53,517 ரூபாய் 81 பைசாவை ஒரு நபர் செலுத்தியிருக்கிறார் அதை செலுத்தியவர் யார் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அது யார் என்பதையும் சொல்வார். கூட்டுறவுச் சங்கங்கள் என்று வைத்துக்கொண்டு, 20 லட்சம் ரூபாய் என்று வாங்கிக்கொண்டு, அவர் சொன்னதுபோல புளிச்சை, சூரியகாந்தி போன்ற செடிகளைப் பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இறைவைப் பாசனத் திற்கு என்று கடன் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் இரண்டு பழைய கிணறுகள்தான் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று கிணறுகளைத் தோண்டியிருக்கிறார்கள். இதற்கு 20 லட்சம் ரூபாய் என்று சொன்னால் நாம் எப்படி நம்புவது? சாதாரண ஏழை விவசாயி எப்படி நம்புவான்?

தினத்தந்தியிலும் மற்றவற்றிலும் பணியாற்றுபவர்களுக்கு இப்படி கிடைப்பது அதிர்ஷ்டம்தான். ஆனால் சாதாரண விவசாயிக்கு லீகல் அட்வைஸ் கிடைக்காமல் இருக்கிறது. லிஸ்ட் சரியில்லை. இது சரியில்லை அது சரியில்லை என்று சொல்லி காலம் கடத்துகிறார்கள். இவர்களுக்கு ஒரே நாளில் எல்லா வேலைகளும் முடிந்து விடுகின்றன. ஏழை விவசாயி ஒவ்வொரு இன்ஸ்டால்மெண்ட் வாங்குவதற்கு, அவன் பணத்தை வாங்குவதற்குள் எவ்வளவோ இடைஞ்சல்கள், எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. கெடுபிடிகள் எல்லாம் இருக்கின்றன. அதேபோல பணத் தைத் திருப்பி வசூலிக்கின்ற நேரத்தில்கூட எவ்வளவோ கெடுபிடி கள் இருக்கின்றன. 'அனுவாரி' சர்ட்டிபிகேட் வேண்டும் என்கிறார் கள். இப்படியெல்லாம் செய்வதனால், ஏழை விவசாயி தன்னுடைய நிலத்தை விற்றுவிடக்கூடிய நிலைமையைக்கூட உண்டுபண்ணிவிடுகிறார்கள்.



நான் மிக வருத்தத்தோடுதான் சொல்லிக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கத்தை 'குடிவிரட்டும் சங்கம்' என்றுதான் அழைக்கிறார்கள். செல்வாக்குப் படைத்த நபர்கள் லட்சம் லட்சமான பணத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஏற்படுத்திக்கொண்டு, தங்களுடைய திறமையையும், அறிவு நுட்பத்தையும் சட்டஞானத்தையும் வைத்துக்கொண்டு, ஒரே இடத்தில் வைத்துக்கொண்டால் எப்படி சாதாரண மக்களுக்குப் பயன் கிடைக்கும்? இது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருக்க முடியுமா என்றால் அப்படி இருக்காது என்று நான் கருதுகிறேன். எப்படித் திறமையாகச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். மிகமிகத் திறமையோடு, செல்வாக்கை உபயோகித்துச் செயல்படுகிறார்கள். அவர் களுடைய திறமையை மெச்சத்தான் வேண்டும். ஆனால் அதே சமயத்தில் சாதாரண மக்களுக்கு நம்முடைய திட்டத்தின் முழுப் பலன் கிடைக்க வில்லையென்பதையும் பார்க்கவேண்டும்.

உலக பாங்கிலேகூட எவ்வளவு நிபந்தனைகளை வைத்தாலும் அதை ஏற்றுக்கொண்டு பணம் வாங்க அவர்களுக்குத் திறமை இருக்கிறது. கீழத்தாதன் குளம், மேலத்தாதன் குளம், சேரகுளம், கீழப்பெருமாளேரி போன்ற இடங்களிலுள்ள சங்கங்களுக்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் எப்படி நடைபெறுகிறது. இதெல்லாம் எல்லோருக்கும் தெரியக்கூடிய நாள் வரும். அதற்காக கூட்டுறவுத் துறையே மோசடி என்று நான் சொல்லவில்லை. சாதாரண மக்களுக்குப் பயன்படக்கூடிய முறைதான் நமக்கு வேண்டும். அவர்களுக்கேற்ற முறையில் நடைமுறை யில் சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண மக்களுக்காக இருக்கக்கூடியதாக அமையும் என்கிற நம்பிக்கை இருக்கவேண்டும். சாதாரண மக்களுக்காகச் செயல்படுவதில் திறமையாகச் செயல்பட வேண்டும்.

உச்சவரம்பு என்று வருகிறபோது நிலத்தை பினாமி முறையில் எழுதியும், சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள 'டிரஸ்டு' என்று ஏற்படுத்திக்கொள்வதும் ஆன நடைமுறைகள் இருப்பது ஒழிக்கப்பட வேண்டும். சாதாரண மக்களுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைய வேண்டும். நாங்கள் வெட்டுத் தீர்மானங் களின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறுவதைச் சொல்லியிருக் கிறோம்.

அடுத்ததாக இராஜபாளையம் கூட்டுறவுச் சங்கத்தில் 'பெய்டு–செக்ரடரி' போடவில்லையென்று சொன்னார்கள். முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் விதிவிலக்கு வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது வரையில் பெய்டு-செக்ரடரி அங்கே போடப்படவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து சீனியர் இன்ஸ்பெக்டர்களை - முதுநிலை ஆய்வாளர்—எஸ். எஸ். எல். சி. வரை படித்திருந்தால் போடவேண்டும். முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வர்களாக இருந்தால் பி. ஏ. படித்தவர்களாக இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தேர்வு எழுதி வெற்றி பெறுவது கடினம். தேர்வில் தவறிவிட்டால் அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார் கள். அது சரியில்லை. அவர்களையெல்லாம் திரும்பவும் அழைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் திறமையடையச் செய்ய வேண்டும்

அவர்களை வீட்டிற்கு அனுப்புவது சரியில்லை; அவர்களுடைய பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு கவனித்து, மீண்டும் அவர்களை அந்த இடத்தில் அமர்த்தும்படி கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை என்பது சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்கிற நல்லெண்ணத்தோடு நேரிய சிந்தனையுடன் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் பன்னெடுங்காலமாக ஒருசில ஆதிக்கக்காரர்கள் அங்கே ஆதிக்கம் செய்த காரணத்தால் அது ஒருசிலரை மட்டும் வாழவும் வளரவும் வைத்துவிட்டதே தவிர, எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறவில்லையென்பதை நாடும், நாட்டிலேயுள்ள மக்களும் நன்கு அறிந்திருப்பார்கள். ஆனால் 1967-க்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகம் தானைத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்தத் துறையை நிர்வகித்து வருகிற திரு. ஆதித்தனார் அவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பிற்குப் பிறகு, இந்த நோக்கம் ஈடேறவேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு கூட்டுறவு நாணயச் சங்கங்களையும், கூட்டுறவு வங்கிகளையும், கூட்டுறவு ஸ்டோர்களையும் தொழில் துறையையும் மாற்றியமைக்க வேண்டுமென்கிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்த வண்ணமாக கூட்டுறவுத் துறையில் பல ஆக்கப்பூர்வமான வேலைகள் நடைபெற்றுச் செவ்விய முறையில் எல்லா மக்களும் போற்றக்கூடிய வகையில் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இந்த விதமாக நல்ல முறையில் நடைபெற்றுவரும் பணிகளை சுதந்திரா கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் எதை எதையோ பேச வந்து, எதை எதையோ பேசிவிட்டுச் சென்றார்கள். இந்தத் துறையினால் வைக்கப்பட்டிருக்கிற கோரிக்கையையும், மானியத்தையும் எவ்வாறு இந்த நாட்டிற்குப் பயன்படுத்துவது என்ற எண்ணத்தை உணர்த்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவர் சில காழ்ப்புணர்ச்சிகொண்டு பேசிய காட்சியைத்தான் பார்க்க முடிந்தது. அறிக்கை தந்திருக்கிற அமைச்சர் அவர்கள் பேங்கிங் கமிஷனின் அறிக்கை நமக்கு சிவப்பு விளக்காகக் காட்சியளிக்கிறது என்று கூறியிருக்கிறார். இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனை தேசியமயமாக்கிய நேரத்திலே இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை) மாநில வங்கியானாலும் மாவட்ட வங்கியானாலும் எடுத்துக்கொண்டால் மத்திய அரசின் அதிகாரக் குவியல்தான் நடைபெறும் என்று உறுப்பினர்கள் கூறினார்கள். அதற்கு நல்ல முறையில் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அதைப்பற்றிச் சொல்லாமல் தனிப்பட்ட குறையைப் பேசிக்கொண்டிருந்தார். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் கமிஷனுடைய அறிக்கையிலே மாநில ஆட்சிக்கு உட்பட்ட வங்கிகளையும் கடன் சொஸைட்டிகளையும் யூனியனுடைய ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் மத்திய ஆட்சியும் மாநில ஆட்சியும் சேர்ந்து செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.



"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அரசியல் காழ்ப்பு உணர்ச்சி பார்க்காமல் நேர்மையுணர்வோடு நிதானத்தோடு பண்பாடோடு பக்குவத்தோடு எண்ணிப்பார்த்து நல்ல கருத்துக்களைச் சொல்லவேண்டும். அதை விட்டுவிட்டார்கள்.

1967-ஆம் ஆண்டுக்குப் பின்னாலே, பசுமைப்புரட்சி வரவேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் திட்டமிட்ட நேரத்திலே— முன்பெல்லாம் உங்களுக்குத் தெரியும் 20, 30 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள்கூட சென்று கடன் கேட்டால் 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும், அதை வாங்குவதற்குள் இரண்டாயிரம் தீர்ந்துவிடும். இப்படிப்பட்ட தொல்லைகளையெல்லாம் போக்கி இந்தத் துறையிலே வில்லங்க சர்டிபிகேட் வாங்குவதிலே உள்ள தொல்லைகளைப் போக்கி, கூட்டுப்பட்டாவாக இருந்தால் கடன் கிடைக்காத அளவிலே இருந்த நிலைமையை மாற்றி ஒரு ஏக்கருக்கு இருந்த மதிப்பு அந்த நிலத்தில் பம்புசெட், மோட்டார் இவையெல்லாம் போட்டால் அதனுடைய மதிப்பு எவ்வளவு உயரும் என்று கணக்கிட்டு முழுத் தொகையையும் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

என்று சொல்லியிருக்கிறார்கள். அடிக்கடி அந்த நிலைமை தமிழகத்திலே உருவாகிற நிலைமையைப் பார்க்கிறோம். அதன் காரணமாக கடன் காரணத்தினால் விவசாயிகள் தொல்லைக்கு ஆட்பட்டார்கள். அனாவாரி சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தால் கடன் தள்ளிவைக்கப்படும் என்று சிறிய விவசாயிகள் உணரக்கூடிய வகையிலே சொல்லியது கிடையாது முன்னாலே. ஆனால் இந்த அனாவாரி சர்டிபிகேட்டை தாலுகா ஆபிஸிலே வாங்கிக் கொடுத்தால், மத்திய வங்கியிலே கொடுத்தால், கடன் தள்ளிவைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

நிலவள வங்கிகள் மூலம் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. சிறு பாசன நீர்க்கழகம் என்று சொன்னார்கள். அதிலே வேறு வேறு காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"

என்ற வகையிலே அளிப்பதைத், தடுக்கவேண்டாம். எளியவர்கள் ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் எல்லாம் நிச்சயமாகப் பலனை பெறுவார்கள். கோவையிலே ஒரு கிணறு வெட்டவேண்டுமென்று சொன்னால் 160 அடி வெட்டவேண்டும். அந்த அளவுக்கு ஒருவனே பணத்தை முதலீடுபோட்டுச் செய்யமுடியாத நிலைமையில் அந்த விவசாயிகளுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற முறையிலேதான் கூட்டுறவு

நீர்ப்பாசனக் கழகத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது. அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் பஞ்சாயத்து யூனியன்கள் தோறும் சமுதாயக் கிணறுகளை உருவாக்கிடவேண்டுமென்று சொன்னார்கள். துயர் தணிப்புத் தொகை 1970–71ஆம் ஆண்டிலே 6·45 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட நிலை இல்லை. இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிற விவசாயிகளின் கடன்பட்ட நெஞ்சம் எந்த அளவுக்குப் புழுங்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி வெட்டுவதிலே நீர் வராவிட்டால் அது பலனளிக்காவிட்டால் அந்தத் தொகையை அரசாங்கமே ஈடுகட்டும் வகையில் 10 சதவீதம் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். வீடு கட்டுகிற துறையிலே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1·5 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். மீதியுள்ள தொகையையும் வேகமாகவும் விரைவாகவும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்திலுள்ள எளிய மக்கள் பயன்பெறுகிற வகையிலே கிராம சொஸைடிகளில் உள்ள பைலாக்களை எளிதாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I want at the outset to clear the impression that Congress (O) is against co-operation or co-operative business. It has been the declared policy of Congress (O) for many years, that all departments of life whether it is cultivation, whether it is manual business or house-construction, whatever it may be, co-operative department should encourage those activities. So we do not hold the views of Dr. Hande expressed here. That is the first thing I want to make clear to this House.

So far as co-operation is concerned, I am one of those who believe that there should be only one institution to give money or lend money to agriculturists. When there is a co-operative society it should be strengthened and money should be made available to them direct. When there are so many other intermediaries, ultimately when it comes to cultivator, he is disappointed to find that the interest charged is much more than what is given by Reserve Bank. The whole thing falls flat.

So I am against this red book which says that banking institutions will settle the co-operative money-lending to agriculturists. What is really happening is this.

Today for example 10 rich agriculturists can form a co-operative society (No. 10 is enough). They can get money on a particular percentage. I do not know at what percentage it is. Perhaps it is 7½ per cent. They do not require money for themselves. They



lend it to others who own one or two acres, small agriculturists at higher rates, and not through co-operative society. Many loopholes are there. During British days, when we had the composite Madras State, it was leading in co-operation in the whole of India. Under Congress regime, Madras was leading State in the field of co-operation. I am glad this Government is trying to follow up that great tradition.

But this super-market is perhaps ruinous name that can be given to any co-operative society, especially in an under-developed country. We cannot afford to put it in a place giving Rs. 25,000 as monthly rent. Simply because some one went to America, saw those stores there, and wanted those to be set up in a poor under-developed country like ours, this has been done and we find super-markets in our country. There is nothing big about this. We must know that apart from other things, we deal with human-beings. Take for instance the ration-card for sugar.

I sent my servant twice to the T.U.C.S. and each time he was told that sugar was not available. Yesterday I myself went there and I saw plenty of sugar in the society. When I asked them why sugar was refused to my servant, they told me that my servant was telling a lie and that they never told him that sugar was not available. Sir, my servant has not so far told any lie and to serve their own purpose, they had told me like that. Therefore, my point is that we should streamline the working of the co-operative societies.

The co-operative societies should be managed by persons who can serve the poor people and meet their requirements. A co-operative society should not be run by about ten persons—binami persons—joining together. This state of affairs should be put an end to.

Then I come to a very important matter. So far as Khadi and Village Industries are concerned, to-day we have shifted from our well established Gandhian policy of having village industries to mechanised industries. Now even Panchayats want lorries only to clean the streets and not carts. There are so many instances like that.

Take for instance, forest dwellers who make waste-paper basket out of bamboos. Where is the basket industry and what is the alternative you have provided for them? Of course, by saying these things I may be dubbed as archaic in outlook. But what are the Government doing to solve the unemployment problem in the country. I can understand lorries being used in Mount Road to clean the streets but I cannot understand lorries being used to clean small streets where carts would be enough. It may be stated that I am still living in bullock-cart civilisation. So long as we have got the unemployment problem, we have to live in that civilization.

So far as Khadi and Village industries are concerned, the new scheme evolved by the Government of India could be adopted in our State. In this connection, I refer to the production of cloth. To-day to set up one mill it would be cost Rs. 1½ crores and so I hope that the scheme will be implemented by the Government in right earnest.

(Mr. Deputy Speaker sounded the gong).
I wanted to refer to many points but due to want of time I stop with this.

DR. H. V. HANDE: Sir, on a point of explanation. I am not against co-operative movement and I have been misunderstood by the hon. Member. I clearly stated that we are not against the co-operative movement but I have pointed out certain irregularities, over which there may be difference of opinion. So, the charge made by the hon. Member is without any basis . . . .

MR. DEPUTY SPEAKER: So the alliance is broken . . . .

THIRU K. M. SUBRAMANIAM: There is no alliance.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We have severed our alliance with the Swatantra Party and the Jan Sangh . . .

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am a pucca Socialist...

DR. H. V. HANDE: I wonder whether he is a pucca Socialist . . . .

MR. DEPUTY SPEAKER: I admit that you are a Socialist





THIRU K. M. SUBRAMANIAM: Sir, several lakhs of people have voted for me and my party. Our party stands for socialism and not for private enterprise . . . .

DR. H. V. HANDE: Sir, our party stands for competitive system and our party has never supported private enterprise. Our party is the real socialist party . . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member is taking away the time of the other hon. Members. This is not socialism.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, even higher persons have told me that I am a Socialist and my party is a Socialist party.

DR. H. V. HANDE: Here higher or lower persons do not come into the picture. There are a number of parties which do not consider his party as a Socialist Party.

THIRU R. PONNAPPA NADAR: Let us leave it at that . . .

THIRU N. VEERASAMI: Sir, on a point of order. Under what rules, is this discussion going on?

MR. DEPUTY SPEAKER: Personal explanation has been given by hon. Members.

*திரு. க. நாகராஜன்: பேரவை துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கையின் மீது நடக்கும் விவாதத்திலே அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டுறவாளர் எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு இலக்கணம் வகுத்துச் சொன்னார்கள். எப்படியென்றால் கூட்டுறவாளர்கள் காகங்களைப்போல் கூடியிருப்பதைப் பகிர்ந்து உண்டுவிட்டுச் சென்றுவிடாமல் மேகங்களைப்போல் கூடி நன்மை மழையைப் பெய்விக்க வேண்டுமென்ற இலக்கணத்தை வகுத்துத்தந்தார் இன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே காகங்களைப் போன்ற கூட்டுறவாளர்கள் குறைந்து மேகங்களைப்போன்ற கூட்டுறவாளர்கள் நிறைந்து வருவதை நாம் பார்க்கிறோம். இது ஒன்றே கூட்டுறவுத்துறைக்கு எவ்வளவுதூரம் ஒரு சீரிய சிறப்பை இந்த ஆட்சி செய்திருக்கிறது என்பதற்குச் சான்றாகும்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். யாரோ ஹிரி கவுண்டர் என்பவரிடமிருந்து சுமார் இரண்டு லட்சத்திற்கு மேலாக வரவேண்டியிருக்கிறது அதை வசூல் செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது போன்று இன்னும் வசூல் செய்யப்படாத தொகைகளுக்கெல்லாம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். நான் அவருக்குக் கூறிக் கொள்வேன், அரசாங்கம் அதனுடைய பணியைச் செவ்வனேதான்

செய்து வருகிறது. டாக்டர் ஹாண்டே அவர்களைப் போன்றவர்கள் அதில் குறுக்கிடாமல் இருந்தால் உண்மையிலே இந்தப் பணி இன்னும் செவ்வனே நடைபெற வாய்ப்பிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், எந்த இடத்திலேயும் குறுக்கிடுவதாக இல்லையே.

Mr. DEPUTY SPEAKER ; I am not able to understand what you say, Mr. Hande.

ந. .ப டாக்டர் எச். வி. ஹாண்டே: ஹாண்டே அவர்களைப் போன்றவர்கள்
12-00 குறுக்கிடாமல் இருந்தால் என்று சொல்கிறார்கள், எதிலும் நான் குறுக்கிடுவதாக இல்லை. அங்கே இருப்பவைகளைச் சட்ட மன்றத்தில் சொல்கிறேனே தவிர எந்த இலாக்காவிலும் குறுக்கிடவில்லை, எந்த இலாக்காவிலும் குறுக்கிட்டு ரெக்கமண்டேஷன் எதுவும் செய்வதில்லை. இந்த இலாக்காவில் நடக்கும் ஊழல்களைப்பற்றிக் கிடைத்த விவாதத்தைச் சொன்னேன், அமைச்சருக்கு மறுப்பதற்கு உரிமை இருக்கிறது. எனவே குறுக்கீடு என்று சொல்லாமல் ஹாண்டே போன்றவர்களின் கருத்து என்று சொல்லலாம்.

*திரு க. நாகராஜன்: குறுக்கீடு இருந்தது என்பதற்குச் சான்றுகளைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்னதாக அவசரப்பட்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அஞ்சுகுளிப்பட்டி கூட்டுறவுச் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கத் தலைவர் பினாமி வகையில் லோன்களைப் பெற்று அந்தச் சங்கத்தை மிகவும் நஷ்டத்திற்குள்ளாக்கி விட்டார். அரசாங்க அதிகாரிகள் செக்ஷன் 65-ன் கீழ் விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது அந்தத் தலைவர் தன்னுடைய மோசடி வெளியே தெரிந்துவிடுமோ என்று பயந்து சம்பந்தப்பட்டவர்களை ஏசுவது, பேசுவது போன்ற காரியங்களைச் செய்து வந்தார், காவல் துறையினர் அவருடைய நடவடிக்கையைக் கண்காணித்து இது போன்று செய்யக்கூடாது என்று எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் மீண்டும் மீண்டும் அவர் அதைச் செய்து வந்தார்.

பின்னர் தாங்க முடியாத நிலைமை உருவானபோது அவரைக் கைது செய்து, பிரிவு 110-ன்படி கேஸ் என்று ஜாமீன் கேஸ் போட்டார்கள். அதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்களிடம் அந்தத் தலைவர் என்ன சொன்னாரோ தெரியவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னுடைய கிராமத்திற்கு வந்து ஒரு பெரிய பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளாமலே 'இது போன்ற பெரிய மனிதர்களை நீங்கள் கைது செய்யலாமா ? போலீசார் பொய் வழக்குப் போடுகின்றார்கள்' என்ற முறையில் பேசி அங்கிருக்கும் மக்கள் கருத்தை மாற்றும் வகையில் பேசியிருக்கிறார்.



டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகவும் பொறுப்பு மிகுந்தவர்கள். அந்தத் தலைவரைக் கைது செய்ததிலே நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி ஒன்றும் விசாரிக்காமலே பேசிவிட்டுப் போய்விட்டார். இதை உண்மையில் குறுக்கீடு என்றுதான் கருதவேண்டும், குறுக்கீடு இல்லையென்று மறுக்க முடியாது. குறிப்பிட்டுச் சொல்கிறேன். வட மதுரை சாணார்பட்டியில் நடந்த பொதுக்கூட்டத்தில் கூறினார். (குறுக்கீடு டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதேனும் சொல்ல விரும்பினால் பின்னர் தெரிவிக்கலாம். என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால் பலப்பல ஊழல்களைச் செவ்வனே கண்டுபிடிக்க முடியும்.

அடுத்து, சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மிக அருமையான திட்டம். முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு பி. எஸ். மணியன் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றி மிகவும் விளக்கமாக, அழகாகக் கூறிவிட்டார்கள். இருந்தாலும் நடைமுறையில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே அந்தத் தொகுதியிலே ஏ. ஆர். சி. ஸ்கீம் என்ற திட்டமும் இருக்கிறது. எஸ். எப். டி. ஏ. ஸ்கீமில் சிறு விவசாயிகள் கிணறு வெட்ட வேண்டும். மோட்டார் பம்ப் செட்டுகள் வாங்க வேண்டுமென்று கேட்டால் உண்மையிலேயே கடன்கள் தரப்படுவதில்லை. மத்திய வங்கியாகட்டும், நிலவள வங்கியாகட்டும், வணிக வங்கிகளாகட்டும், கூட்டுறவுச் சங்கங்களாகட்டும், எவற்றின் மூலமும் கடன்கள் வழங்கப்படுவதில்லை. இதனால் விவசாயிகள் பெரிய அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். கூட்டுறவு இறவை நீர்ப்பாசனக் கழகங்கள் அமைத்த பிறகு இதற்கு வழி பிறக்கும் என்று நம்புகிறேன் ஆனாலும், உடனடியாக தனிப்பட்ட முறையில் கடன் வழங்க ஏற்பாடு செய்தால் இன்னும் நலமாக இருக்கும்.

வேளாண்மை செப்பனிடும் பணிவசதிக் கூட்டுறவுக் கழகங்களின் 'பை-லா'க்களைப் படித்தேன். மிக அருமையான திட்டம். உண்மையிலேயே இது சிறு விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதிலே ஒரு சிறு வேண்டுகோளைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிலையங்களிலே மானேஜிங் டைரக்டராக, நிர்வாக இயக்குநராக என்ஜினியர்களைப் போடுவதாக இருக்கிறார்கள். பொறியாளர்கள் கருவிகளைச் சீரமைக்கும் வேலையைத்தான் செய்வார்களே தவிர, புதிதாக எடுக்கப்பட்ட பொறியாளர்களால் எந்த அளவுக்கு நிர்வாகத்தில் திறம்படச் செயலாற்ற முடியும் என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்ற ஒருவரையோ, அல்லது அரசாங்க அதிகாரி ஒருவரையோ நிர்வாகப் பொறுப்பில் விட்டுவிட்டு பொறியாளர்களைக் கருவிகள் சீரமைக்கும் வேலையில் ஈடுபடுத்துவது நல்லது.

முக்கியமான ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு விசையேற்றங்களுக்காகக் கடன் வழங்கும்போது அந்த வங்கியின் செயலாளரோ, தலைவரோ குறிப்பிட்ட வியாபாரியைக் கூறி அந்தக் குறிப்பிட்ட வியாபாரியிடமிருந்து ஒப்பந்தப் பட்டியல் வாங்கிக்கொண்டு வரும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள், இது மறைமுகமாக நடக்கிறது. இதைப்பற்றி எவ்வளவோ முறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இது தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இதனால் பலப்பல தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு மோட்டார் பம்ப் செட்டுக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என்று கமிஷன் போட்டுக் கொண்டு செயலாளரும், நிலவள வங்கித் தலைவரும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக விசையேற்றங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

மின்சார வாரியத்தில் பார்க்கிறோம். மோட்டார்கள், கேபிள்கள், டிரான்ஸ்பார்மர்கள் ஆகியவற்றைக் கொடுக்கும்போது உபயோகிப்பவர்களுக்கு அது எந்தக் கம்பெனியில் செய்தது என்று ஆராய்ந்து கேட்டுக் கொடுப்பதில்லை. வாரியத்தினரே நல்லது என்று பட்டவைகளை வாங்கி வந்து கொடுக்கிறார்கள். அதைப் போலவே நாமும் தவறுகள் நடக்காமல் இருக்கும்படியாகச் சில கட்டாய ஏற்பாடுகளைச் செய்வதில் தவறு இல்லையென்று நினைக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) இந்த வேண்டுகோள்களை எல்லாம் தெரிவித்துக் கூட்டுறவுத் துறை மானியம் மிக அருமையான ஒன்று எனக்கூறி, இதனை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற 'வங்கிப் பணிகள் குறித்த ஆணைக் குழுவின் பரிவுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்' என்ற புத்தகத்தில் இருந்து சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

சுயாட்சி சம்பந்தமாக அதிகமாகப் பேசப்படுகிற இந்தக் காலத்திலே, மாநில அரசு அதிகார வரம்புக்குட்பட்ட, கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமான சட்ட மேலாதிக்கத்தை மத்திய அரசினுடைய பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்ற பரிந்துரையை நமது அரசு செய்திருப்பதாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த ஆணைக் குழுவின் பரிந்துரை என்ற பெயரிலே—

"இந்தப் பரிவுரைகள் கூட்டுறவு இயக்கத்துக்குப் பெரிதும் இன்றியமையாதன ஆகும். மேற்குறிப்பிட்ட பரிவுரைகள் தொடர்பாக, அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள், இந்தச் சிறு நூலின், 2, 3-ம் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன" என்று சொல்லப்பட்டிருக்கிறது.





"கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களை நிறுவுதல், முறைப்படுத்துதல் அவற்றை மூடிவிடுதல் தொடர்பான பொருள்கள் குறித்து அதிகாரம் செலுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்ற நமது பரிவுரையைச் செயல்படுத்த மத்திய அரசுச் சட்டம் கொண்டுவந்தால் அது போதுமானதாகும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

கன்கரண்ட் லிஸ்டிலே கூட இல்லாத இது மத்திய அரசின் கையில் இருக்க வேண்டுமென்ற கருத்து இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து உண்மையிலேயே அப்படிச் சொல்லப்பட்டிருக்குமானால் அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஏனென்றால் அந்தக் கமிஷன் பரிந்துரைகள் ரொம்பச் சீரான முறையில் பரிசீலிக்கப்பட்டு ஆழ்ந்த பரிசீலனையின் பேரில் வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

இப்போது 'மணி பிசினஸ்' சம்பந்தமான காரியங்களை மத்திய அரசு கட்டுப்படுத்துகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் சம்பந்தமாக இரண்டு விதமான கட்டுபாடுகள் இருக்கின்றன. ரிசர்வ் பாங்கு நேரடியாகப் பணம் கொடுத்து உதவுவதால் இந்தச் சங்கங்கள் சரியாக நடைபெறுகிறதா என்று பார்வையிடுகிற அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பு மாநில அரசின் அதிகாரத்தில் இருக்கிறது. ஒரு பகுதி மாநில அரசின் கட்டுப்பாட்டிலும், ஒரு பகுதி மத்திய அரசின் கட்டுப்பாட்டிலும், ஆக இரண்டுவிதமான அதிகார வரம்புக்குட்பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதிலே பல சிக்கல்கள் இருக்கும் காரணத்தால் மத்திய அரசு ஒரு அரசியல் சட்டத் திருத்தமே கொண்டு வந்தாவது ஒரு சட்டத்தை உருவாக்கி ஒருமுகமாக நாடு பூராவும் வங்கி வங்கி சம்பந்தமான காரியங்களைச் செய்வதுபற்றி வரையறுக்க வேண்டுமென்பதுதான் அந்தக் குழுவின் பரிந்துரையாகும்.

அது நல்லது என்றுதான் நான் கருதுகிறேன். தனியார்கள் கைகளில் பொருளாதார பலஹீனமானவர்கள் சிக்கிக்கொண்டு அவர்களது உழைப்பின் பெரும்பகுதியைத் தனியார்கள் கைகளில் கொடுக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலை நாட்டிலிருந்து அகற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் கொடுக்கல் வாங்கல் செய்வதே தடை செய்யப்படவேண்டும். அதற்கான ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆனால் இன்றைய நிலையில் அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வரமுடியாது, கொண்டுவந்து அமல்படுத்த முடியாது. காரணம், அப்படி கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான அமைப்புகளை நாம் நாடு பூராவிலும் அமைத்தால்தான் அப்படிச் செய்யமுடியும். ஆகவே, அப்படி நாடு பூராவிலும் உருவாக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட அமைப்புகள் சரியான முறையில் அமைக்கப்படாத வரையில் இந்தத் தடையைக் கொண்டுவர முடியாது. எனவே, அப்படிப்பட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். கூட்டுறவு பாங்குகளும் வணிக வங்கிகளும் இணைந்து செயல்பட முடியுமா என்று பார்க்க வேண்டும். அதுபற்றி இந்தக் குழு பரிந்துரை செய்கிறது. நாம் தத்துவரீதியாகச் செயல்படலாம். ஆனால்,

நடைமுறைக்கு வரும்போது பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். ஆகவே அனுபவ ரீதியாகப் பார்த்து இருக்கிற சங்கடங்களை எல்லாம் நீக்கி பொதுமக்களுக்கு நல்லவிதத்தில் பயன்படும்படிச் செய்யவேண்டும்.

கூட்டுறவு வங்கிகள் கிராம மட்டத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. இப்போது உள்ள சொஸைட்டிகள் அக்ரிகல்ச்சரல் பாங்க்ஸ் ஆக எதிர்காலத்தில் மாற்றப்படக்கூடிய அளவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பலவித அமைப்புகள் உள்ளன. ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்க், சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பாங்க், அதன் கீழ் உள்ள சொஸைட்டிகள் என்று இப்படியெல்லாம் இருக்கின்றன. ரிசர்வ் வங்கியிலிருந்து 4% க்கு கடன் பெற்றாலும் கடைசியில் 9% கொடுக்கக்கூடிய அளவிற்குத்தான் மக்கள் கைகளுக்குச் செல்கிறது. இடையில் உள்ள அமைப்புகளுக்காக நாம் 9% என்ற அளவில் கொடுக்கவேண்டியிருக்கிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் பூராவும் கொடுக்காதபோது வணிக வங்கிகள்மூலம் பணம் வாங்கச் செய்ய முடியுமா என்று பார்த்து அப்படிச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அந்த அதிகாரம் மத்திய அரசின் கையில் இருக்கிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்கள் பூராவும் கொடுக்கமுடியாதபோது வணிக வங்கிகளை அதன் கிளைகளாக மாற்றலாம் என்று சொல்லப்படுகிறது. அந்த அமைப்பு எப்படிச் செயல்படும் என்பதை நடைமுறையில்தான் பார்க்கவேண்டும். ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்க் அல்லது சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பாங்க் மூலம் கொடுப்பது போதாது என்று வந்தால் வணிக வங்கிகள்மூலம் கொடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிக் கொடுக்கலாம் என்று மேல் நிலையிலிருந்து உத்தரவிடவேண்டும். அது மத்திய அரசின் கையில் இருக்கிறது.

நான் சொல்வது என்னவென்றால், ஒட்டு மொத்தமாக ஒரு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்து அந்தச் சட்டத்தை மாநில அரசு செயல்படுத்தவேண்டும். அமைச்சர் அவர்கள் கூறினார்கள், இது எங்கள் கருத்தல்ல என்று சுயாட்சிபற்றிச் சொல்கிறார்கள். அரசியல் அதிகாரங்கள் கீழ் மட்டத்தில் பரவலாக்கப்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் நாடு பூராவிலும் சீரான பொருளாதார வளர்ச்சி இருக்க வேண்டுமென்று வரும்போது பல அதிகாரங்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகின்றோம். இந்தப் பரிந்துரையை வைத்துப்பார்க்கும்போது மத்திய அரசுக்கு இந்த அதிகாரம் கொடுப்பதினால் நமக்கு எந்தவிதமான சிரமமும் ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை. அவர்கள் சட்டம் இயற்றி, மத்தியில் சட்டம் இயற்றி அதை அமலாக்கும் பொறுப்பை மாநில அரசுக்கு விடலாம்.

ஆகவே எல்லா வங்கிகளையும் இணைத்து முறைப்படுத்தும் சட்டம் செய்வதற்கு பார்லிமெண்ட்டுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. கூட்டுறவு சம்பந்தமாக சட்டங்களை இயற்றுவதும் அவற்றை அமல்செய்வதும் மாநில அரசுக்குச் சொந்தம். ஆகவே, பண விஷயம் சம்பந்தமாக இருவித அமைப்புகள் இருப்பதைவிட ஒன்றாக சீராக அமைத்து நல்ல முறையில், பரவலான முறையில் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஆகவே அதுகுறித்து இந்தக் குழுவின் பரிந்துரையை அமலாக்க வேண்டும்.



அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையில் பல பாங்குகள் இருக்கின்றன கிராமங்களில். லாண்ட் டெவலப்மெண்ட் பாங்க், இரிகேஷன் பாங்க், க்ரெடிட் சொஸைட்டிஸ் என்று பல இருக்கின்றன. அவை எல்லாம் ஒரே அமைப்பிற்குள் வந்துவிடவேண்டும். அது ஒரு வயபிள் யூனிட்டாக இருக்கவேண்டும். எல்லாப் பொறுப்புகளும் ஒரு இடத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் அவை நல்ல முறையில் இயங்கமுடியும். அப்போதுதான் நல்லமுறையில் கண்காணிக்கவும் முடியும். அதைப் பற்றியும் ஆலோசித்து தக்க முறைகளைக் கையாளவேண்டும். இப்போது நீர்ப்பாசனச் சங்கங்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறிப்பாக என் பகுதியில் இரிகேஷன் சொஸைட்டீஸ் மூலமாக யாருக்கும் லோன் கொடுத்து கிணறு போட்டதாகத் தெரியவில்லை. 800 ரூ.ஜத்திற்கு அப்பாற்பட்டிருந்தால்தான் கடன் கொடுக்கலாம் என்ற கட்டுப்பாட்டை விதித்திருக்கிறது உலக பாங்க். அதற்குக் கட்டுப்பட்டுத்தான் செய்யவேண்டுமென்று சொல்வதாகத் தெரிகிறது. ஆகவே இரிகேஷன் சொஸைட்டீஸ் நல்ல முறையில் கிராமங்களில் பல கிணறுகள் அமைப்பதற்கு, கிணறுகள் அமைத்துக் கிராம மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்குத்தக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) மார்கட்டிங் சொஸைட்டிகளில் பல தவறுகள் நிகழ்கின்றன. அவற்றைச் சரியான முறையில் கண்காணிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற இந்த நேரத்தில் நான் என் ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப் படுகிறேன்.

கூட்டுறவு என்பது பல கிளைகளைக் கொண்ட ஒரு தலைமை ஸ்தாபனமாக இருக்கிறது. மாநில நிலவள வங்கி, மார்க்கெட்டிங் சொஸைட்டீஸ், மத்திய வங்கி, பின்னர் பால் பண்ணைகள், வீடு கட்டும் ஸ்தாபனங்கள் என்று இப்படியெல்லாம் சேர்ந்து ஒரு தலைமை ஸ்தாபனமாகக் கூட்டுறவு என்பது இயங்கி வருகிறது. கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இந்த கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் கிராம மக்கள் பலவித நன்மைகளை அடைந்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

குறிப்பாக என் தண்டராம்பட்டு தொகுதி, ஒரு மேஜர் பஞ்சாயத்துகூட கிடையாது, எல்லாம் சிறு சிறு பஞ்சாயத்துக்கள். பெரிய தொழிற்சாலை ஒன்றும் இல்லாத கிராமங்கள், அப்பகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கிற பகுதியாகும். கடந்த நான்கைந்து ஆண்டுகளாகச் சொல்ல முடியாத அளவிற்கு எங்கு பார்த்தாலும் கிணறுகள் வெட்டப் பட்டு பம்ப் செட்ஸ் அமைக்கப்பட்டு, நமது கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கூட்டுறவு ஸ்தாபனங்கள்மூலம் ஏழை விவசாயிகளுக்கு அள்ளி வழங்கியிருக்கிறார்கள். அதை எதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறுகிறேன் என்றால் ஒரு சில இடங்களில் கடன் வாங்குவதில் சிறிது தாமதமாகிறது.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை.

அதற்குக் காரணம் நம்முடைய நிலவள வங்கியில் நாம் ரிசர்வ் பாங்கியிலிருந்து கடன் வாங்குகிறபோது அவர்கள் சில கண்டிஷன்களைப் போட்டுக் கடன் கொடுக்கிறார்கள். ஒருவன் திருமணம் செய்து கொள்வதற்கு ஒரு வரைப் பணம் கேட்கிறபோது நீ இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால்தான் பணம் கொடுப்பேன் என்பதுபோல் இருக்கிறது. கடன் கொடுப்பவர்களுக்கு வட்டி கொடுத்து விடுகிறோம். குறிப்பாக இன்னின்ன முறையில்தான் கிணறு வெட்ட வேண்டும் இன்னின்ன முறையில் செலவிடப் பட்டால்தான் பணம் கொடுப்போம் என்று கண்டிஷன் போட்டுக் கொடுக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது ஒரு சில இடங்களில் சில பேர் அதை அடைய முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் போக்கு வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி தண்டராம்பட்டு யூனியனில் மட்டும் 35—40 டிராக்டர்கள் இந்த 4—5 ஆண்டு காலத்திலே விவசாயிகள் கூட்டுறவு நில வள வங்கியின் மூலம் வாங்கிப் பயனடைந்து இருக்கிறார்கள். அதற்கு முன்னாலே பெரிய நிலச்சுவான்தார்கள் தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது சின்ன விவசாயிகள் கூட—அந்த டிராக்டர் வாங்கி விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எம். டி. லோன், எல் டி. லோன் ஆகியவற்றை கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொடுத்தால் இன்னும் துரிதமாக விவசாயம் செய்ய சௌகர்யமாக இருக்கும்.

தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியனில் சிறு பாசன விவசாய சங்கம் ஒன்றை இன்னும் 10–12 நாட்களுக்குள் ஆரம்பித்துச் செயல் படக்கூடிய அளவுக்கு அதன் பூர்வாங்க வேலை முடிந்து விட்டது என்பதையும் இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்ரோ இன்ஜினீரிங் கார்ப்பரேஷன் சர்வீஸ் சென்டர் ஆரம்பித்து இப்போது 38 மையங்களில் இருக்கிறது. தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலும்கூட ஆரம்பித்து இருக்கிறோம்.

வடஆற்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்கு கிணறுகள் வெட்டுவதற்கு பணத்தை இந்த ஜனவரி மாதம் முடிய கொடுத்து இருக்கிறார்கள், அந்தப் பணம் இன்னும் போதாத அளவில் இருக்கிறது. காரணம் கிணறுகள் அதிகமாக வெட்டிக் கொண்டு போவதால் பழைய கிணறுகள் ஆழமாகப் போகிற நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கிணறும் ஆண்டு ஒன்றுக்கு 1—2 கெஜம் ஆழப் படுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, பழைய கிணறுகள் வெட்டுவதற்கும் கடன் கொடுக்க வழி வகை செய்ய வேண்டும். நீர் ஓட்டம் கொஞ்சம் மேலாக இருந்தாலும் அந்தப் பகுதியில் பாறை வந்து விடுகிறது. ஆகவே, அவர்கள் அதை அகற்ற மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அரசாங்கம் அளிக்கும் பணம் போதவில்லை. அவர்கள் தடைப்பட்டு விடாமல் இருப்பதற்காக அரசாங்கம் அவர்களுக்கு அதிகமாகத் தொகை கொடுத்து விவசாயிகளை நன்றாக ஊக்குவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகுதான் இந்த ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்கிறது. இந்த கூட்டுறவுச் சங்கம் அதிலே தலைசிறந்து விளங்குகிறது என்று கூறி இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்தக் கூட்டுறவு மானியத்தின் மீது சொல்லும்போது 4 பிரிவுகளாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த வகைகளில் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள்.

நான், கடன் பெறுகிற மக்கள் சார்பிலே இருந்து பார்க்கிறபோது அமைச்சர் கூறிய பிரகாரம் பல இடங்களில் அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் குறிப்பாக நிலவள வங்கிகளின் மூலம் கொடுக்கும் கடன் யாரும் பெற முடியாத நிலைமை இருக்கிறது. அந்த அளவில் பார்த்தால் கிணறுகள் ஆழப்படுத்த கடன் கொடுப்பது இல்லை. பழைய கிணறுகளுக்கு பம்பு செட் போடுவதற்குப் பணம் கேட்டால் கொடுப்பது இல்லை. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் உலக பாங்கியின் நிபந்தனை என்று சொல்லுகிறார்கள். உலக பாங்கு பல நிபந்தனைகளைப் போட்டு இருப்பதால், அதற்கு உடந்தையாக நாம் இருக்கும் நிலை இருப்பதால், விவசாயிகள் அந்தக் கடனைப் பெற முடியவில்லை. புதிதாகக் கிணறு வெட்டுவதற்கு, பம்பு செட்டு வசதி செய்து கொள்வதற்குக் கடன் கேட்டால்கூட நிலவள வங்கிகளில் கொடுப்பது இல்லை. டிராக்டர் வாங்க வேண்டுமானால் ரூ. 10,000 கட்டினால்தான் ரூ. 40,000 கடன் கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். ரூ. 10,000 கையில் வைத்திருந்தால் அவன் ஏன் கடன் கேட்க வருகிறான். ஆகவே, பெரிய நிலச்சுவான்தார்கள்தான் கடன் பெறுவதற்கு முடிகிறது. சிறிய சிறிய விவசாயிகள் கடன் வாங்குவதற்கான வசதிகளை அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு வங்கிப் பணிகள் குறித்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளை வைத்து இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து சில கருத்துக்கள் நான் சொல்ல விரும்புகிறேன். ரிசர்வ் பாங்கு விவசாயிகளுக்கு உதவுவதற்காக 4 சதவீதம் வட்டி வீதத்தில் கடன் கொடுக்கிறார்கள். அது விவசாயிகளின் கைக்கு வந்து சேருகிறபோது 10 சதவீதம் வட்டியாகிவிடுகிறது அவர்கள்கட்டும் டிபாசிட், பங்குத்தொகை இப்படி அப்படி என்று சொல்லி, அந்த 4 சதவீதம் வட்டிக்கு வாங்கிய பணம் விவசாயிகள் கைக்கு வந்து சேருகிறபோது 10 சதவீதம் வட்டிக்கு ஆகிவிடுகிறது. ஒரு விவசாயி ரூ. 10,000 ரூ. 20,000 கடன் வாங்குகிறான் என்று சொன்னால், அவனுக்கு 4 சதவீதம் வட்டிக்கு வாங்கி பணத்தை 5 சதவீதம் வட்டி வீதத்திற்கு தருகிற மாதிரி இருக்க வேண்டும். இதனால் அந்த விவசாயிக்கு ஆண்டுக்கு ரூ. 500 (அ) ரூ. 1,000 மிச்சப்படும். பலவிதமான அமைப்புகள் இடையே இருப்பதால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது.

குறிப்பாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு பாங்குகள் இப்போது அதிகமான ஆதாயத்தோடு ஓடுகின்றன நஷ்டத்தில் ஓடவில்லை என்று சொன்னார்கள். வட்டிக்குக் கொடுத்து வாங்குபவன

என்றும் நஷ்டப்பட்டது இல்லை. சர்க்காரின் கியாரண்டியோடு வசூ செய்கிற வசதி இருக்கிற காரணத்தால் லாபம்தான் வரும். நஷ்ட வராது. கிராமத்திலுள்ள கூட்டுறவு பாங்கிகளுக்கு நாட்டுடைமையாக்க பட்ட வங்கிகளின் மூலம் கடன் கொடுக்க வழிவகை செய்ய வேண்டு அப்போதுதான் 4 சதவீதம் வட்டிக்கு வாங்கி 5 சதவீதம் வட்டிக்குக் கொடுக் முடியும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமக் கூட்டுற வங்கிகள் இருக்க வேண்டும். நீக்க வேண்டியதில்லை இப்போது நாட்டுடை யாக்கப்பட்ட வங்கிகளில் நமக்கும் பங்கு இருக்கிறது. ஆகவே, விவசாயி களுக்குக் கடன் வழங்குவதற்காக இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிக மூலம் கூட்டுறவு நில வள வங்கி, கிராம வங்கிகளுக்குக் கடன் வழங் ஏற்பாடு செய்தால் குறைந்த 5 சதவீதம் வட்டிக்கு மேற்படாமல் கொடுக் முடியும்.

விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காக 7 ஆண்டுக் கால தவணையி கடன் கொடுக்கப்படுகிறது. முன்பெல்லாம் 20—30 ஆண்டுத் தவணை இருந்தது. இப்போது விவசாயிகள் கிணறு வெட்டுவதற்காக கட வாங்கிவிட்டு அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிற அதற்காக அவர்களுடைய மாடு ஜப்தி செய்யப்படுகிறது, சொத்து ஜப் செய்யப்படுகிறது, மகசூல் ஜப்தி செய்யப்படுகிறது. நாம் அவர்க வாழ்விக்க வேண்டுமென்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனை கொடுத்துவிட்டு, அவர்கள் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கி போது இப்படிச் செய்வதால் அவர்கள மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே, விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தால் அதை நீண்ட கால தவணை முறையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறே நேரடியாக ரிசர்வ் வங்கியிலிருந்து கிராம பாங்கிகளுக்கு அந்தப் பண வருகிற மாதிரி செய்ய வேண்டும். இந்தப் பரிந்துரைகளை ஏற் கொண்டால், அந்த விவசாயிகள் குறைந்த வட்டி விகிதத்தில் கட வாங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

இன்று உலக பாங்கியின் நிபந்தனை காரணமாக கிணறு வெட் கடன் கேட்பவர்கள் 650 அடிக்குப் பக்கத்தில் ஒரு கிணறு இருந்தா அவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறது. ப
பி.ப. நாட்களாக ஒரு கிணற்றில் கவலை போட்டு தண்ணீர் இறைத்துக் கொண
12-30 பயிர் செய்பவன் ஒரு மின்சாரப் பம்பு செட்டு போட்டு பயிர் செய்யலா என்று கேட்டால் அவனுக்குக் கடன் கிடைக்க வழியில்லை. அப்ப யானால் விவசாயத்தை எப்படி அபிவிருத்தி செய்யமுடியும். எப்ப பசுமைப் புரட்சியை ஏற்படுத்த முடியும். ஆகவே அந்த நிபந்தனை ரத்து செய்துவிட்டு பழைய கிணறுகளை வெட்டி அபிவிருத்தி செய் தற்கும், பம்பு செட்டுகள் போட்டுக் கொள்வதற்கும் கடன் கொடுக்கலா என்று அமைச்சர் அவர்கள் உத்தரவு போட வேண்டும். அப்படியில் என்று சொன்னால் விவசாய அபிவிருத்தி செய்ய முடியாது. ஆகவே இதைச் செய்வதற்கு என்ன தயக்கம் என்பதை அறிய முடி வில்லை.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன் தவணை இப்பொழுது 7 ஆண்டுகளாக இருந்து வருகிறது. முன்னால் 20 ஆண் ளாக இருந்தது. இப்பொழுது அதை 7 ஆண்டுகளாகக் குறைத் அவர்கள் வாங்கிய கடனை 7 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்



வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்கும் கடனைத் திருப்பிப் பெறுவதில் கொஞ்சம் நீக்குப்போக்கு காட்டுவது அவசியம்.' அவனுக்குக் கொடுத்த கடனை அவன் பயன்படுத்தி, அதன் மூலம் அவனிடமிருந்து கடனைத் திரும்பிப் பெறக் கூடிய சக்தி அவனுக்கு வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தொழில் துறையில் கடன் கொடுத்தால், அதன் மூலம் உற்பத்தி பெருகி, ரி-பேயிங் கபாஸிடி வந்திருக்கிறது, அவனுக்கு திருப்பிச் செலுத்தக்கூடிய சக்தி வந்திருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகுதான் அவனிடமிருந்து கடனை வசூலிக்கிறார்கள்.

உதாரணமாக, விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுத்தால், கிணற்றில் தண்ணீர் வந்திருக்கிறதா, இல்லையா என்று கூடப் பார்ப்பது கிடையாது. தண்ணீர் அறவே இல்லாவிட்டாலும் கூட அவனுக்குக் கொடுத்திருக்கக்கூடிய ரூ. 10,000 கடனைத் திருப்பி வசூலிப்பதற்காக அவனுடைய மற்ற ஆஸ்திகளையும் ஜப்தி செய்யக்கூடிய ஒரு போக்கு இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுடைய நிலைமையை அனுதாபத்தோடு கவனித்து, அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் சக்தி வந்திருக்கிறதா என்று பார்த்து, நிதானமாகத் திரும்பிப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சுலபமாக செலுத்தக்கூடிய முறையில் தவணையை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமத்தில் இருக்கிற கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு மட்டும்தான் கடன் கொடுத்து வருகின்றன. வேறு கைத்தொழில்களைச் செய்பவர்களும் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு வேறு வழி கிடையாது. வேறு கூட்டுறவு சங்கங்களும் அவர்களுக்குக் கடன் கொடுப்பது இல்லை. கிராமத்தில் இருக்கிற கூட்டுறவு சங்கங்கள் நிலம் இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, வேறு சிறு கைத்தொழில்கள் செய்பவர்களாக இருந்தாலும் சரி அத்தகையோர்களுக்கும் கடன்கள் வழங்குவதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்குக் கடன் கொடுப்பது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. அவர்களுக்கும் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடைசியாக, காதி சம்பந்தமாக டைலரிங் யூனிட் ஒன்று இருந்தது. அதை மூடிவிட்டதால் அங்கே வேலை செய்துவந்த பலரும் வேலை இழந்து விட்டார்கள். இதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அவர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கூட்டுறவுத் துறையானது நமது தமிழகத்தில் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இந்தக் கூட்டுறவுத் துறையானது கடந்த ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு இருந்ததைவிட மிகவும் சீராகவும், சிறப்பாகவும், ஏழை, எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுகின்ற விதத்தில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கூட்டுறவுத் துறையில் நல்ல பல திருத்தங்களைச் செய்து, ஒரு சில பெரிய நபர்களின் ஆதிக்கத்தில் இருந்த துறையை சாதாரண குடி மக்களுக்குப் பயன்படுகின்ற விதத்தில் நல்ல முறையில் திருத்தி அமைத்திருக்கிறார். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு காலாகாலத்தில் கடன் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நிலவள வங்கி ஏற்படுத்தி, அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுக்குத் தேவையான கடன்களை அப்போதைக்கப்போது மிகவும் சுலபமாகப் பெறுகிற விதத்தில் நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நிலவள வங்கி தற்பொழுது ஏற்பட்டிருப்பது எவ்வளவு சௌகரியமாக இருக்கிறது என்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். எங்கள் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிக ஆழமாகத் தோண்டினால் தான் தண்ணீர் கிடைக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. நில வள வங்கிகள் கொடுக்கின்ற கடனை அவர்கள் பெற்று, கிணறு வெட்டினாலும் கூட, ஒரு சில இடங்களில் தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் கூட இருந்து வருகிற நிலைமைகளையெல்லாம் நாம் காண்கிறோம். ஆகவே, எங்கள் மாவட்டத்திற்கு மாத்திரமாவது அப்படிக் கடன் பெற்று கிணறு தோண்டினால், விவசாயிகளுக்குப் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், அவர்கள் வாங்கிய கடனில் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிற ஒரு நிலைமையை உருவாக்கித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், கூட்டுறவுத் துறையானது நான்கு பகுதிகளாக இருக்கிறது என்று. அந்த நான்கு பகுதிகளில் முதல் பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதியை மத்திய அரசு தன்னுடைய ஆதிக்கத்தின் பேரில் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு திட்டத்தை, அதை ஆய்வு செய்த குழுவினர் கூறியிருக்கிறார்கள் என்ற கருத்தினைக் கூறினார்கள். நாம் தற்பொழுது மத்திய அரசில் இருக்கிற பல அதிகாரங்களை மாநில அரசாங்கத்திற்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்கின்ற இந்தத் தருணத்தில் நமது மாநில அரசுக்கு இருக்கிற உரிமையை பறிக்கின்ற விதத்தில் அப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமேயானால், இந்த மாநில அரசின் உரிமையில் இருக்கிற கூட்டுறவுத் துறையானது மத்திய அரசின் கைக்குப் போய்விடக்கூடிய நிலைமை ஏற்படும் என்று





அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அதுபற்றி நமது அரசாங்கம் தகுந்த கருத்தினை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, இந்தக் கூட்டுறவுத் துறையானது மாநில அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்கிற ஒரு நல்ல நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சென்ற ஆண்டு இந்தத் துறையின் மீது பேசும்பொழுது குறிப்பிட்டேன். கிராம நாணயச் சங்கங்களில் இருக்கிற தலைவர்கள் ஏறத்தாழ 20 வருஷம், 30 வருஷம் என்று தொடர்ச்சியாக தலைவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் கிராம நாணயச் சங்கங்களுக்கு நடைபெறும் தேர்தல்கள் சரிவர இல்லாத காரணம் தான். அங்கே இருக்கிற கிராம நாணயச் சங்கத்தின் தலைவர்தான் தேர்தல் அதிகாரியாக இருக்கிற காரணத்தினால், அவர் தேர்தலையே நடத்தாமல், தேர்தல் நடந்ததாக எழுதிக் கொண்டு, தொடர்ச்சியாக தலைவராகவும், இயக்குனராகவும் இருந்து வருகிறார். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால், அங்கே இருக்கிற பொறுப்புள்ள பதவிகளுக்கு தகுதியுள்ளவர்கள் வரக்கூடிய நிலைமையில் தேர்தல் முறையை மாற்றித் தரவேண்டும். அப்படி மாறுதல் செய்து, கிராம நாணய சங்கங்களில் தகுதியுள்ள மற்றவர்களும் பதவிக்கு வரக்கூடிய நிலைமையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, கதர் திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கதர் திட்டமானது தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிக நல்ல முறையில் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள வெள்ளைக் கோவிலில் கதர் திட்டம் மிகச் சிறப்பாக நடக்கிறது. கதர் நூல் உற்பத்தியும், கதர் நெசவும் மிக சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கதர் திட்டம் நவீன முறையில் வகுத்து, அங்கே 18,000க்கும் அதிகமான பேர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அமைக்கின்ற நவீன முறைத் திட்டத்திலே கதர் நிலையங்களை என்னுடைய தொகுதியிலுள்ள வெள்ளைக்கோயில், மூளகூர் வட்டாரங்களில், வரண்ட பிரதேசமாக இருக்கின்ற காரணத்தினால், வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தினால், வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற விதத்தில், அங்கே நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கதர் நெசவாளர்களுக்கு, சொந்த வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு கடனாகவும், மானியமாகவும் பணம் கொடுத்துவந்தார்கள். அது தற்பொழுது இரண்டு ஆண்டு காலமாகக் கொடுக்கப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். ஏழை நெசவாள மக்களுக்கு வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு மானியமாகவும், கடனாகவும் உதவி செய்து, அவர்கள் வாழ்க்கை நடத்தக்கூடிய ஒரு திட்டத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் பொதுவாக கிராமங்களில் வசிக்கின்ற பெரும்பான்மையான மக்களிடையே பண மூலதனம் இல்லாவிட்டாலும், முயற்சி இருக்கின்றது, அந்த முயற்சியை வைத்துக் கொண்டு, மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு, நாட்டிலே பொருளாதார புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் நம்முடைய தேசத்தின் பிதா காந்தியடிகள் சர்வோதய தத்துவத்தை நமக்குத் தந்தார்கள். அந்த அடிப்படையில்தான் கதர், கிராமத் தொழில் போன்ற அடிப்படையான பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமையக் கூடிய ஒரு திட்டத்தை நம்முடைய நாடு ஏற்றுக்கொண்டது.

ஆனால் இன்று நாம் பார்க்கிறோம். கதர் திட்டம் என்றால், ஏதோ கதர் துணியை உடுத்திக் கொண்டு, உற்பத்தி செய்கின்ற கதர் துணியை ஒரு சிலர் அணிந்து கொண்டு வரும் கண்காட்சி தான் கதர் திட்டத்திற்கு, கதர் தத்துவத்துக்கு நாம் கொடுக்கிற ஒரு விளக்கமாக தவறுதலாக கருதப்படுகிறது என்ற ஒரு காட்சியைத் தான் பார்க்கிறோம். அந்தப் பாதையிலே பேசுகிறவர்கள் ஒரு சிலர் கூட அந்த வழியில் சென்றதை நாம் பார்த்தோம்.

நாட்டிலே கதர் துணி உற்பத்தி செய்ய வேண்டியது தான். எது வரையில் அந்த உற்பத்தி நாட்டு மக்களுக்கு வேலை தருகிறதோ, வேலையில்லாமல் கிராமங்களில் வாழும் மக்களுக்கு வேலை தருகிறதோ அது வரை அந்தக் கதர் திட்டத்தை நாம் ஆதரித்திடுவது இன்றியமையாதது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில கிராமப்புறங்களில் எந்தப் பொருளாதார முன்னேற்றத்தை பொருளாதாரப் 'புரட்சியை' ஏற்படுத்த வேண்டுமென்று நம்முடைய தேசப்பிதா விரும்பினாரோ, அந்தப் பொருளாதாரப் 'புரட்சியை' ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சிகள் மேற்கொண்டிருந்தால், அந்த முயற்சியில் பரவலாக வெற்றி கண்டிருக்கிறோமா என்று பார்க்கும்போது, உண்மையிலேயே இல்லை என்ற பதில்தான். நான் பார்த்த மட்டும், சாதாரணமாக எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. மிகமிகச் சிறிய தொழில்கள், மூலதனம் இல்லாமல் மனிதனின் முயற்சியையே முன் வைத்து செய்யும் தொழில்கள்—அந்தத் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், கதர் கிராமத்துறை வாரியம் என்ன செய்தது என்று கணக்கிட்டுப் பார்க்கும் போது, உண்மையிலேயே நமக்கு ஏமாற்றம் தான் ஏற்படுகிறது.

உதாரணமாக, என்னுடைய தொகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே மேற்பாங்கான மேட்டுப் பகுதி, மலைப்பகுதிகள். அந்த மலைப் பகுதியில் மூங்கில் கிடைக்கிறது. எத்தனையோ விதக் காட்டுப் பொருட்கள் கிடைக்கின்றன. அவைகளை எல்லாம் அங்கே வாழும் மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி, அதனால் ஊதியம் பெற, வருமானம் பெறுவதற்கான வழிவகைகளை இந்தத் துறை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகச் செய்திருக்கிறது என்பதைக் கேட்க விழைகிறேன். ஆகையினால், என்னுடைய பணிவான வேண்டுகோள், சிறு சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு ஒரு மனிதன் தன்னுடைய முயற்சியால், பல பேருடன் சேர்ந்து வாழும் முறையில் அது செய்யப்பட வேண்டும்,



என்னுடைய தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. அங்கே வாழும் தொழிலாளர்களில் 'அருந்ததியார்" என்ற ஒரு வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்கள் அந்தத் துறையில் சிறப்புப் பெற்று விளங்குகிறார்கள். தோல் பதனிடும் பொருட்கள், அல்லது அங்கே பெற்றிருக்கும் தனிப்பட்ட துறையினரைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கூட்டுறவு முறையில்—தொழிலாளர்களே கூட்டுறவு முறையில்—நடத்தும் ஒரு திட்டத்தைச் செய்யவேண்டும் என்று பல்லாண்டுகளாகச் சொல்லி வந்தும், இன்றைக்குகூட அந்த நிலை அங்கே உருவாகவில்லை என்று நினைக்கும் போது உண்மையிலேயே நாம் ஏமாற்றம் அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக, இன்றைக்குப் பார்க்கிறோம். அமைச்சரவர்கள் இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அன்றிருந்த நிலை என்ன? இன்றிருக்கும் நிலை என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு, கதர் என்றால் கதறிக் கொண்டிருந்தவர்கள், அது ஏதோ ஒரு குறிப்பிட்ட கட்சிக்குரிய சின்னமாகக் கருதிய நிலையை மாற்றி, கதர் என்றால் பொருளாதாரம் முன்னேறச் செய்வதற்கான ஒரு வழி என்று இவ்வளவு தூரம் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்று உண்மையிலேயே சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சியும், இறும்பூதும் அடைகிறேன்.

அதே நேரத்தில் கூட்டுறவுத் துறை பற்றி இங்கே பலவாறாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், கூட்டுறவுத் துறையில் தனிப்பட்ட முறையில் குறைகள் இருந்தால், தவறுகள் நடந்திருந்தால், அதைச் சுட்டிக்காட்டி, அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டுவதும், தனிப்பட்ட முறையில் அரசாங்க முறையில் அமைச்சர் அவர்கள் அதிலே பொறுப்பேற்றிருந்தால் அந்தப் பொறுப்பை அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் பல்லாண்டுகளாக எதிர்க்கட்சிகள் செய்யவேண்டிய பணி. அது ஒரு நியாயமானதாக இருக்க வேண்டும்.

ஆனால் தனிப்பட்ட முறையில், அமைச்சரவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை திரித்துச் சொல்வது—"இன்னுயெண்டோஸ்" என்று சொல்வார்களே, அப்படி வேறு விதமாக பல அர்த்தம் வைத்து நையாண்டி செய்து பேசுவது இந்தச் சபையின் கௌரவத்திற்கு இழுக்குத் தேடுவதாகும். சாதாரணமாக எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்து கொண்டு பணியாற்றும் பாங்கினுக்கு மாசு கற்பிக்கும் என்பதை மெத்த வருத்தத்துடன் சொல்லிக் கொள்வதுடன், அப்படி இனிமேலும் நடக்காது, எதிர்க்கட்சிகள் வீற்றிருக்கும் இந்தப் பக்கம் மிக உயர்ந்த நல்ல உறுப்பினர்களைக்கொண்ட நல்லதொரு எதிர்க் கட்சியாக விளங்குகிறது என்பதை நாட்டு மக்கள் உணரும் வகையில் செயலாற்றுவோம் என்று சூளுரை எடுத்துக் கொள்ள இது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

என் கட்சி சார்பில் நான் ஒருவன் தான் பேசுகிறேன். ஆகையினால் பொறுத்துக் கொள்ளுங்கள்.

தனிப்பட்ட துறையில் எந்தத் தவறு இருந்தாலும் எடுத்துச் சொல்ல வேண்டியதுதான். அதற்காகத் தான் நாம் இங்கே வந்திருக்கிறோம். கூட்டுறவுத் துறை பற்றி பல குறைகளை நாம் எடுத்துக் காட்டுவது

கடமையாகச் சொன்னேன். அந்தத் துறையைப் பற்றித் தான் சொன்னேன். அமைச்சரவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள் ஏதோ ஏர்-கண்டிஷன் ரூமில் உட்கார்ந்திருக்கிறார் என்ற குற்றச் சாட்டு சொன்னார்கள். அவர் விரும்பினால் ஏர்-கண்டிஷனில் உட்கார முடியாதா ? அவைகளை சபையில் வந்து சொல்ல வேண்டுமா ? நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வந்திருக்கும் நாம், அவர் ஏர்-கண்டிஷனில் உட்கார்ந்து பணியாற்றுவது அவர் பணியை மேலும் செம்மையாகச் செய்ய முடியும்; அதற்காக அவ்வாறு செய்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வேறு விதமாக எடுத்துக் கொண்டு அதற்காக இந்தச் சபையில் வாதிடுவது நல்லதல்ல. இது நம்மையே—எதிர்க்கட்சிகளையே—பலஹீனப்படுத்தும். எதிர்க் கட்சியில் உட்கார்ந்து இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்று நாட்டு மக்களுக்குச் சாட்டிக் கொடுத்துவிடும் என்ற காரணத்திற்காக—எதிர்க் கட்சிகள் என்று சொன்னால் அது நல்ல உறுதியாக இருக்க வேண்டும் என்பதில் எனக்குக் கூட அக்கறை இருக்கிறது—என்பதால் நான் இப்படி தனிப்பட்ட பேச்சுகளில் சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை பற்றி இன்று பல்வேறு கருத்துகள் சொல்லப் பட்டன. ஒரே ஒரு கருத்தை நான் சொல்லுகிறேன். சாதாரணமாக "பாங்கிங் பிஸினஸ்" இருக்கிறது. இந்த "பாங்கிங் பிஸினஸ்" என்ற ஒரு குறிப்பிட்ட பிஸினஸ், கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் என்று இரண்டு நிலைகள் ஒன்றாக இருக்கிறது. அதனால் பல கெடுதல்களும் சிக்கல்களும் ஏற்படுகின்றன என்ற காரணத்தை வைத்துக் கொண்டு, அந்த "பாங்கிங் கமிஷன்", இந்த அதிகாரங்களை எல்லாம் "கன்கரண்ட் லிஸ்டிலோ" அல்லது "யூனியன் லிஸ்டிலோ" சேர்த்துவிட வேண்டுமென்று பரிந்துரை வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைக்கு இணங்க இதில் மாநில அரசிடம் உள்ள அதிகாரங்களை எடுத்து மத்திய அரசுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். மாநில அரசுகளுக்கு முழுமையாக, அதாவது தானே இயங்கும் அதிகாரம் வேண்டும் என்று சொல்லும் இந்தக் காலத்தில், "ஆட்டானமி" அல்லது மாநில சுயாட்சி என்று சொன்னால், சாதாரணமாக "செஷன்" (Secession) அல்லது பிரிவினை என்பது பொருளல்ல.

**If the State Government decide to implement a particular thing, then automatically the Government must have sufficient powers to put that plan into practice.**

அது தான் பொருள்.

Whenever Concurrent List or the State List have given certain powers which have been exclusively given by the Constitution to the State Government, those powers should vest with the State exclusively, uninterruptedly and without there being any disturbance or interference from any part whatsoever. It should be put into practice. That is the essence of the Constitution. The function of the State Government should be automatic wherever it is necessary and within the spheres which have been enumerated or Vishalised by the Constitution that is the essence of the autonomy and the so-called 'Suya-aatchi'.





நீங்கள் சுயாட்சி என்று சொல்லுங்கள் அல்லது மாநிலங்கள் திறமையாகச் செயல்படுத்துவதற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று "வயபிள் ஸ்டேட்" (Viabile State) என்று சொல்லுங்கள். அதில் தப்பில்லை. தவறு ஒன்றும் கிடையாது. பெயரைச் சொல்வதால் பயப்படுவதில் பிரயோசனமில்லை ஆகவே,

What we want is a viable State. We want an automatic State but

Therefore I record on behalf of myself and on behalf of the party within the Indian Union and within the Indian Federation. to which I belong that any attempt to curb the powers of the State under this Act or any other Act......

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of clarification. Does the hon. Member want automatic or autonomous State?

THIRU M. A. LATHEEF: Autonomy is nothing but automatic power of functioning. That is my submission. An autonomous State, from my point of view, is nothing but a viable State, a State which can function in the way we want to function. But if the Ruling Party desires a separate State, I am not for that and I oppose it. At the same time, if the ruling Party or any party wants more powers so that they can function in an effective way and deliver the goods to the common masses of the country. I support them. Any step that would be taken to curb the powers of the State Government will be stoutly opposed by not only the legislators but the people of Tamil Nadu in their entirety will oppose it.

Thank you.

* திரு கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேரவை முன் வைத்திருக்கின்ற இந்தக் கூட்டுற மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவுத்துறை என்பது இன்றைய தினம், விவசாயத் துறையானாலும் சரி, அல்லது வேறு எந்தத் துறையாக இருந்தாலும் சரி அவைகளுக்கு ஒரு நிரந்தர பரிகாரமாக அமைந்திருக்கிறது. இந்தத் துறையை

இதற்கு முன்னால் நிர்வகித்தவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்கள், மிட்டா மிராசுதார்களாகத்தான் இருந்தார்கள். நெடும்பலம் சாமியப்ப முதலியார், பூண்டி வாண்டையார் போன்ற பெரிய பெரிய மிராசுதார்களால் தான் முடியும் என்று சொல்லி வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் மிகவும் சாதாரணமானவர்களும் அந்தத் துறையில் இருக்கிறார்கள். இந்தச் சாதாரணமானவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற நேரத்திலே கூட, நிர்வாகத்தைக் கொடுக்காமல் எந்த அளவுக்குக் குறுக்கீடுகள் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்துதான் கொடுத்தார்கள். இந்தச் சாதாரணமானவர்களால் இன்றைய தினம் நடத்தப்படும் கும்பகோணம், தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கிகள் 3-வது நிலையில் 2-வது நிலையில் இருந்தவைகள் இன்றைய தினம் முதல் நிலையில் இருக்கின்றன. நஞ்சை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டு வந்தது போக, இப்போது கரும்பு, பருத்தி, வாழை போன்ற எல்லா பயிர் வகைகளுக்கும் கடன் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்த வங்கிகள் வளர்ச்சிப் பெற்றிருக்கின்றன

இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற மத்திய வங்கி நல்ல பயன் அளிக்கிறது என்று சொன்னால் அது மிகைப்படுத்தி கூறுவதாகாது. அதன் நிர்வாகம் சிறந்து விளங்குவதே அதற்குக் காரணம். அந்தப் பொறுப்பினை மிகச் சாதாரணமானவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவு வங்கிகள் நல்லவிதமாகச் செயல்படுகின்றன என்று சொல்லும்போது குறைபாடுகளே இல்லை என்று சொல்ல முடியாது. ஆங்காங்கே சில சிறு குறைபாடுகள் இருக்கின்றன. கிராமங்களின் தொடக்கக் கடன் வழங்கும் நிறுவனங்கள் இருந்தன. இப்போது எண் 3, 4 தொடக்க கடன் வழங்கும் நிறுவனங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு யூனிட்டாக அமைத்திருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் இருந்த ஒரு யூனிட்டாக ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு கிட்டங்கி இருந்தது. ஒரு யூனிட்டாக மாற்றப்பட்ட பின்னால். அவை 4, 5 கிட்டங்கிகளைச் சேர்த்து நிர்வகிக்க வேண்டி இருக்கிறது. ஒரு கிட்டங்கிக்கு ஐந்தாயிரம், ஆறாயிரம் என்று அரசு கடன் வழங்கியுள்ளது. இது கடனுக்கு நான்கு யானையைக் கட்டித் தீனிபோடுவதுபோல் இருக்கிறது. ஒரு யூனிட்டாக அமைக்கப்பட்டிருக்கும் சங்கம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறது. இதன் மூலம் வருகிற லாபத்தில் நிர்வாகச் செலவுதான் செய்யப்படுகிறது. நிர்வாகச் செலவு இருப்பதால் லாபம் அதிகம் கிடைப்பதில்லை. அதனால் கிட்டங்கி கட்டுவதற்கு அரசாங்கம் கொடுத்த கடனுக்கு வட்டியைக் கூட கட்ட முடியாத நிலையில் இருக்கின்றது.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நில குத்தகைதாரர்கள் பணம் கடன் பெற்று வந்தார்கள். சரியான விளைச்சல் இல்லாத காரணத்தாலும், மற்றும் பல காரணங்களாலும் குத்தகைதாரர்கள் ஒழுங்காகக் கடனை திரும்ப செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. சங்கங்களுக்கு கடன் தவணை சரியாகப் போய்ச் சேராததால் கூட்டுறவு மத்திய வங்கிகளில்





இருந்து வாங்கிய பணத்திற்கு அந்தச் சங்கங்களினால் வட்டியைக் கூட கட்ட முடியவில்லை. இந்த நிலையில் குத்தகைப் பாக்கிக்காக அநேக குத்தகைத்தாரர்களை நிலச் சொந்தக்காரர்கள் வெளியேற்றி இருக்கிறார்கள். அதனால் 10, 12 ஆண்டுகளாகியும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடனை சரிவர வசூல் செய்ய முடியாமல் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. அப்படிப்பட்டச் சங்கங்களை யெல்லாம் கலைத்துவிட வேண்டுமென்று இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த சங்கங்களை கலைத்து விட்டால் அந்தப்பகுதி விவசாயத் தொழில் மக்களின் நிலை மிகவும் கஷ்டமாக இருக்கும். எனவே, சங்கங்கள் கலைக்கப்படக் கூடாது. அதன் குறைகளை ஆராய்ந்து அதனைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முன்னால் நான்கு, ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருந்தால்தான் கடன் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு இருந்தது. சொந்த நிலம் இல்லாதவர்களுக்கும் குத்தகை நிலத்தின் பேரில் கடன் கொடுக்கப்பட்டது. குத்தகைதாரர்கள் குத்தகை நெல் பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டதால் அவர்களிடம் நிலமும் இல்லை. வேறு சங்கம் சொத்துகளும் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் எந்த நிலத்தின் பேரில் கடன் கொடுக்கப்பட்டதோ, அந்த நிலத்தை இப்போது யார் வைத்திருந்தாலும் அவர்களிடம் கடனை வசூல் செய்து கொள்ள வேண்டும். தற்போது நிலத்தை இழந்து கடனுக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளிடம் ஆயிரம் ரூபாய், எண்ணூறு ரூபாய் என்று வசூலிப்பதை நிறுத்திவிட வேண்டும். அரசாங்கம் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலிருக்கின்ற விவசாயிகள் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலமாக டிராக்டர்கள் வாங்குவதற்கு நிலங்களை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கி 20 ஆயிரம், 25 ஆயிரம், 30 ஆயிரம் கடன் பெற்று கும்பகோணத்திலுள்ள ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தினிடம் டிராக்டர்கள் பெறுவதற்காக 1971 செப்டம்பர், அக்டோபரில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் டிராக்டர்கள் கொடுக்கப்படவில்லை. அந்த நிறுவனம் சரியாக இயங்கவில்லை என்று சொல்லி அதைப் பொறுப்பேற்று நடத்துபவர்கள் கலைத்துவிடுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எட்டு, ஒன்பது மாதங்கள் ஆகியும், டிராக்டர்களும் கொடுக்கப்படவில்லை, கொடுத்த பணமும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அதற்கிடையில் நிலவள வங்கி கொடுத்த முதல் கடன் தவணையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் இதனைப் பரிசீலித்து கும்பகோணம் ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தார் வாங்கிய பணத்தையோ அல்லது டிராக்டர்களையோ உடனடியாகக் கொடுப்பதற்கும் நிலவள வங்கியின் கடனை வசூலிப்பதில் காலக்கெடு அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

[திரு. கு. இராசமாணிக்கம்] [1972 மார்ச் 23

இப்படி பல விஷயங்களிலே கிராம மக்களுக்கு உதவி அளிக்கின்ற கிராமக் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று சொல்லும் போது, அந்தப் பகுதி மக்களின் நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இருக்கின்ற சங்கங்களைக் கலைப்பதற்குப் பதிலாக அவைகளைக் காப்பாற்றுவதற்கு என்ன வழி என்பதை ஆராய வேண்டும். இல்லையென்றால் கிராமங்களிலே இருக்கின்ற விவசாயிக , குத்தகைதாரர்கள், சிறு நிலச் சொந்தக்காரர்கள் இவர்கள் எல்லாம் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கி, அவர்களிடம் சிக்கி சீரழிந்து விடுவார்கள் இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, நல்ல முடிவினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நான் இந்த மானியத்தின்மீது ஒரு வெட்டுத் தீர்மானத்தையும் கொடுத்திருந்தேன். இன்றைக்கு அருப்புக்கோட்டை, இராஜபாளையம் பகுதிகளிலுள்ள நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். போதுமான தொழில் இல்லை. அதன் காரணமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற குடும்பங்கள் பட்டினியாலும், பசியாலும் துடித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் கைத்தறித் தொழிலாளர்களுக்கு பல நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருப்பதை நான் அறிவேன். இருந்தபோதிலும், அருப்புக்கோட்டை, இராஜபாளையம் பகுதி மக்களுக்கு உடனடியாக ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 'ஸ்டேப்பிள் காட்டன்' தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. எனவே, அரசாங்கம் உடனடியாக அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்தோ அல்லது வேறு வழிகளிலோ நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே அரசு செய்திருக்கின்ற ஒரு சில சாதனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறையில் இதற்கு முன்னால் ஆதிக்கக்காரர்கள் இருந்தார்கள் என்பதையும் அவர்கள் எவ்வாறு நீக்கப்பட்டார்கள் என்பதையும் பலர் இங்கே சொன்னார்கள். நானும் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னொரு
பி.ப. முக்கியமான விஷயத்தையும் நான் சொல்லிக் கொள்ள விரும்பு
1-00. கிறேன். நாம் இருந்த ஆதிக்கியத்தை ஒழித்துவிட்டோமே தவிர இன்னொரு புதிய ஆதிக்கியத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. இதில் மிகவும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத்துறையில் இன்றையதினம் பல மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம்' என்றாலும் இன்னும் செய்யப்பட வேண்டிய மாறுதல்கள் ஏராளமாக இருக்கின்றன. 1969-ம் ஆண்டிலேயே சந்தானம் கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டைக் கொடுத்துவிட்டது. ஆனால் அதன்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதைப் பரிசீலித்து உடனடியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சிபார்சுகளையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 23] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

அடுத்து, முக்கியமாக எனக்கு முன்பு பேசிய திரு. லத்தீப் அவர்கள் கூட்டுறவுத்துறையில் மத்திய சர்க்கார் நம் அதிகாரத்தில் தலையிடுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதாக வெகு வேகமாகப் பேசினார்கள். அதில் என் கருத்து என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றையதினம் மிகக் குறைந்த வட்டியில் ரிசர்வ் பாங்கில் இருந்து கடன்பெற்று நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கடன் அளிக்கிறபோது மிக உயர்ந்த வட்டியைத்தான் வாங்குகிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. மத்திய சர்க்கார் மூலமாகவே ரிசர்வ் பாங்க் மூலமாக கொடுக்கப்படுகிற பணம் அவர்களது பாங்கின் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்கே சென்று சேர வாய்ப்பிருக்குமானால் அதுதான் சிறந்த முறை. இதில் மத்திய அரசாங்கத்தின் தலையீடு என்று கருதாமல் நம் மக்களுக்குச் சௌகரியமான ஏற்பாடு என்கிற முறையில் அதைத்தான் நான் வரவேற்கிறேன் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவுத் துறை அமைச்சரால் கோரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பான முறையில் தமிழ்நாட்டில்—மற்ற மாநிலங்களை சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது என்பதை நாட்டில் பொதுநோக்கம் கொண்டவர்கள் அனைவருமே அறிந்துள்ளார்கள்.

தனியார்களிடம் சென்று கடன்பட்டு அல்லலுற்று வருகிற மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அடிப்படையில் இந்தத் துறை இன்றைய தினம் எல்லா வகைகளிலும் பணியாற்றி வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை—வர்த்தகச் சமூகத்தினர் குறைந்த விலையில் வாங்கி கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்கும் வகையில் சேமித்து வைக்கவும், சேமித்து வைக்கக்கூடிய உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் விற்று விவசாயிகளுக்குப் பணம் கிடைக்கவும், வாங்கி சாப்பிடுகிறவர்களின் நன்மையைக் கொண்டு பண்டகசாலைகளின் மூலம் விலைவாசி உயர்வைத் தடுக்கவும்—இதுபோன்று பற்பல நோக்கங்களின் அடிப்படையில் செயல்பட்டு வருவது இந்த இயக்கம்.

கடந்த இருபதாண்டு காலமாக இல்லாத அளவுக்கு இன்றைய தினம் இந்த இயக்கத்தின் மூலம் நாணயக் கூட்டுறவுச் சங்கங்களும், நிலவள வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன.

இன்றையதினம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமான உற்சாகத்தை அளிக்க வேண்டும் என்கிற முறையில் விவசாயக் கிடங்குகள் கட்டப்பட ரூ. 25,000 ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் ரூ. 12,500 மானியமாகவும், ரூ. 12,500 கடனாகவும் கொடுத்து எல்லாக் கிராமங்களிலும் விவசாயக் கிடங்குகளைக் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, வாழையடி வாழையாக ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என் இன்னும் சொல்லப் போனால் ஒரே நபர்கள் இந்த இயக்கத்தில் இருப்பதை மாற்றவேண்டும். கூட்டுறவுத் துறையில் நடைபெற்றுவந்த தவறுகளை திருத்த வேண்டும் என்கிற அடிப்படையில் கழக அரசு பலவிதமான மாற்றங்களைச் செய்திருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்ட வேண்டும்.

மேலும் 1971-72-ஆம் ஆண்டில் உலக வங்கிகள் ஒப்பந்தப்படி ரூ. 26·25 கோடிக்கு-350 லட்சம் டாலர், மேலும் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் மூலம் 40 கோடி ரூபாய் கிடைத்தது. உலக வங்கி கண்டிஷனின் முறைப்படி கடன் கொடுக்க இயலவில்லை. இதனை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களுக்கு இந்த துறையின் மூலம் உதவி அளிக்க அமைச்சர் அவர்களும், இத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் செயல்பட்டு வருகிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

மற்ற வங்கிகளைவிட—கிராம கூட்டுறவு வங்கியின் மூலமாக பம்புசெட்டு வைக்க, கிணறுகளை ஆழப்படுத்த கடன் உதவி அளிப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும். அவ்வாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம கூட்டுறவுச் சங்கத்தில் 3-இல் ஒரு பங்கு பஞ்சாயத்தார்கள் ரிடையராக வேண்டுமென்ற முறை இருக்கிறது. அப்படியின்றி பஞ்சாயத்தார்கள் 3 வருடம் தொடர்ந்து இருந்து பணியாற்ற வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்டகசாலைகளை கிராமச் சங்கங்களோடு இணைத்துச் செயல்படச் செய்வதும் மிகவும் உதவியாக இருக்கும்.

முன்பு கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஸ்டைபண்டு கொடுத்தார்கள், மத்திய அரசாங்கம் அளித்து வந்த உதவித் தொகையை இப்போது நிறுத்திவிட்டார்கள். அப்படியின்றி நமது அரசாங்கம் அவர்களுக்குத் தொடர்ந்து மாதம் ரூ. 100 உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு மண்டல இணைப் பதிவாளர் என்று போட்டிருக்கிறார்கள். குறிப்பாக சேலம்—தர்மபுரி, திருச்சி-தென்னாற்காடு, சென்னை—செங்கல்பட்டு, காஞ்சி, நீலகிரி—கோவை, மதுரை—இராமநாதபுரம், திருநெல்வேலி—நாகர்கோயில் என்பதாக இணைத்து இணைப்பதிவாளர்களைப் போட்டிருக்கிறார்கள். செங்கல்பட்டு-காஞ்சி-சென்னைக்கு ' என்று போட்டிருக்கக்கூடியவர் சென்னையில் இருக்கிறார். செங்கல்பட்டில் இருந்தாலும் மைய இடமாக இருக்கும். மாவட்டத்திற்கு ஒருவரைப் போட முடியுமா என்று யோசிக்க வேண்டும்.



திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு இந்தக் கூட்டுறவுத் துறை மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்களைக் கொண்டு பார்த்தால் குறை சொல்ல முன்வரமாட்டார்கள். நீண்ட காலக் கடனுக்காக 1966–67-இல் ரூ. 31·44 கோடி கடன் கொடுக்கப்பட்டது என்றால் இன்றைக்கு ரூ. 51·60 கோடி கடன் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல பங்குத் தொகை 1966–67-இல் 9·25 ஆக இருந்தது என்றால் இன்றைக்கு 14·84 கோடியாக உயர்ந்திருக்கிறது.

அதேபோல் மத்திய வங்கி பங்கு முன்பு 6·97 கோடி என்றால் இன்றைக்கு 11·49 கோடியாக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாடு மாநில வங்கிகளைப் பொறுத்தவரை பங்குத் தொகை 1966–67-இல் 2·01 கோடி என்றால் இன்றைக்கு 3·71 அளவுக்குப் பெருகியிருக்கிறது. அதேபோல டெபாசிட் தொகையை எடுத்தால் 1966–67-இல் 3·22 ஆக இருந்தது இன்றைக்கு 4·72 ஆக உயர்ந்திருக்கிறது.

அதேபோல் மத்திய வங்கிகளில், 1966-67-ல் டெபாசிட் தொகை ரூ. 18·99 கோடியாக இருந்தது இன்றையதினம் ரூ. 32·68 கோடியாக உயர்ந்திருக்கிறது.

அதேபோல் தமிழ்நாடு கூட்டுறவு பேங்கில் ரூ. 9·67 கோடியாக இருந்தது இன்றைக்கு 16·32 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. நாம் இந்த வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம் (மேஜையடிக்கப்பட்டது)

இன்றைக்கு வேலூர், காஞ்சீபுரம், தென் ஆர்க்காடு, கும்பகோணம் புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய வங்கிகளை 'பீ' வகுப்பிலிருந்து 'ஏ' வகுப்பில் சேர்த்திருக்கிறோம். இந்தத் துறை நல்ல முறையில் செம்மையாகச் செயல்படக் காரணமாக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைப் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் கூட்டுறவு அமைச்சராக பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பவர், இந்தத் துறையில் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பார்த்தால் தமிழகத்திலேயுள்ள ஏழை விவசாய மக்கள் வியக்கத்தக்க அளவிற்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், எதிர்க் கட்சி வரிசையிலே உள்ளவர்கள், அதுவும் குறிப்பாக சுதந்திரா கட்சியின் தலைவராக இருப்பவர் டாக்டர் ஹாண்டே கூட்டுறவு அமைச்சர் கொண்டு வருகிற அத்தனை நல்ல திட்டங்களையும், நிர்வாகத்திற்கேற்ற நல்ல திட்டங்களையும் ஆங்கிலத்திலே 'Funny Idea'—கேலிக்குரிய திட்டமாக இருக்கிறது என்று

சொன்னார்கள். கேலிக்குரிய திட்டம் என்று அவர் சொன்னதே கேலிக்குரிய விஷயமாக இருக்கிறது. அவர் சொல்வது வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு எப்படி நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவது என்பதைப் பார்க்கும்போது ஏழை விவசாய மக்கள், உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன ஏழை பாட்டாளி மக்கள் இவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கக் கூடிய வகையிலே திட்டங்கள் இருக்க வேண்டும். 1967-க்குப் பிறகு எந்த அளவிற்குக் கூட்டுறவுத் துறையிலே, கூட்டுறவு நாணயச் சங்கங்களிலும், கூட்டுறவுத் துறையில் நிறுவிய வங்கிகளிலும் கடன் பெறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது தமிழக அரசைப் பாராட்டாமல் யாரும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகரத்தில் உள்ளவர்கள் இதைப் புரிந்துகொள்கிறார்களோ இல்லையோ அதுபற்றி எனக்குத் தெரியாது. பொதுவாக கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாய மக்கள் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கொண்டு வருகிற அத்தனை திட்டங்களையும், வேடிக்கையான திட்டம் என்று எண்ணாமல், தங்கள் வாழ்வுக்கு வேண்டிய வளமான திட்டம் என்றுதான் எண்ணுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தகைய திட்டங்களைக் கொண்டு வருகிற அவரை எதிர்க் கட்சியினர் இவ்வாறு பேசுவது குறித்து வருத்தப்படுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மத்திய அரசு வியக்கத்தக்க அளவிற்கு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் இருப்பவை அகில இந்தியாவிற்கும் கூட்டுறவு சங்கத்தின் மேன்மையை எடுத்துக்காட்டும் வகையில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அதைக் கண்டு மத்திய அமைச்சர்களும் பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றி அடிக்கடி கூறுவார்களே, அதைச் சொல்ல விரும்புகிறேன். "கூட்டுறவுச் சங்கங்கள் 1967-க்கு முன்னால் காகிதங்களாக இருந்தன. 1967-க்குப் பின்னால் மேகங்கள் எல்லாம் ஒன்று திரண்டு கார்மேகமாகி மழையாகப் பொழிகிற கார்மேகங்களாகிவிட்டன" என்கிற விளக்கத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பலனை தமிழக மக்கள் நன்கு சிந்தித்துப் பார்த்த பிறகுதான் 1971-க்குப் பிறகும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதை எதிர்க் கட்சி நண்பர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

"மாண்புமிகு திரு. ஆதித்தனார் கொண்டு வருகிற திட்டங்கள் அத்தனையும் நன்மை பயக்காதவை" என்று சொன்னார்கள். ஆதித்தன் என்றால் என்ன தெரியுமா? ஆதித்தன் என்றால் சூரியன்; அதுவும் உதய சூரியன்; ஆதித்தன்தான் உதயசூரியன்; உதயசூரியன்தான் ஆதித்தன். (ஆளும் கட்சித்தரப்பில் ஆரவாரம்) மாண்புமிகு ஆதித்தனார்





சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய திட்டத்தை நமக்குத் தந்திருக்கிறார்கள். அவரைப்பற்றி வேடிக்கையாகவும் விசித்திரமாயவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய முயற்சி இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்த அளவிற்குப் பயன்படும் என்பதை ஏற்றுக் கொண்டு நன்றி செலுத்த வேண்டும்.

அடுத்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் உள்ள மேல்மலையனூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகக் காட்சியளிக்கிறது. செஞ்சி வட்டமே மிகப் பின்தங்கிய வட்டம். அங்கே இருக்கிற மக்களுக்கு எந்தவிதமான வசதியும் வாய்ப்பும் 1967-க்கு முன் கிடைக்காமல் இருந்து, இப்பொழுது நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக பொறுப்பேற்றும் ஊரில் நிலவள வங்கி ஒன்று இந்த ஆட்சியினால் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் 13 லட்சம் ரூபாயை ஏழை விவசாய மக்களுக்கு ஓராண்டில் கொடுத்திருக்கிறோம். எதிர்க் கட்சி நண்பர்கள் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சியிலே நில அடைமான பேங்க் இருபது ஆண்டு காலம் இருந்தது. 1967-க்கு முந்தி நான் அரசியலில் ஈடுபட்டிருந்த நேரத்தில் அந்த பேங்க் யாருக்கு என்ன செய்தது என்பது அங்குள்ள மக்களுக்கே தெரியாது. 1967-க்குப் பிறகு மேல்மலையனூரில் கூட்டுறவு நிலவள வங்கி திறந்து வைக்கப்பட்டு, 13 லட்சம் ரூபாய் கடனாகத் தந்திருக்கிறோம். என்னுடைய தொகுதியில் தொழிற்சாலை இல்லை. என்னுடைய பகுதியில் இருப்பவர்கள் உழவர்கள்தான். அவர்கள் செம்மையாகச் செயல்பட விவசாயிகளுக்கு மோட்டார் பம்ப் செட் அமைக்க கடனும் கிணறு வெட்டுவதற்குக் கடனாகவும் தந்து அந்தப் பகுதி இப்போது நிறைவு பெற்றுக் கொண்டு வருகிறது. அடுத்தபடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேல்மலையனூர் ஒரு பெரிய ஏரி. அதன் விஸ்தீர்ணம் 3 மைலுக்குட்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1968-69-ல் ஏற்பட்ட பஞ்சக்கோலத்தில் மதுராந்தகம் ஏரியை எப்படி தூர் எடுத்து கரையை உயர்த்திக் கொடுத்தார்களோ அதே போல் மேல்மலையானூர் ஏரியையும் தூர் எடுத்து கரையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை செப்பனிட்டுத் தந்தால் அந்தப் பகுதியிலுள்ள ஏழை விவசாய மக்களுக்கு நன்மை கிடைக்கும். மூன்று போகம் விளையும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக்க கவனத்தோடு இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது) தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் நான் இந்தக் கூட்டத் தொடரில் இதுவரை பேசவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுதான் முதல் தடவையாகப் பேசுகிறேன். ஆகவே, கொஞ்சம் நேரம் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செஞ்சி வட்டத்தில் நந்தன் கால்வாய் வேலை நடைபெற்று வருகிறது. இது 1952-லேயே செப்பனிட வேண்டுமென்று கேட்கப்பட்டு, 1967-லே இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டதும், மறைந்த நம் மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் முயற்சியால்

எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது திருவண்ணாமலை பகுதியிலே ஏற்பட்டு, செஞ்சிப் பகுதியிலே சென்று, விழுப்புரம் அருகிலுள்ள பணமலை ஏரியை அடைகிறது. அந்தக் கால்வாயிலிருந்து என்னுடைய பகுதியில் சில வாய்க்கால்களைப் பிரித்துக்கொடுத்தால், அந்தத் தண்ணீரை சக்திமங்கலம் ஏரியில் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த வாய்க்காலிலிருந்து புதிய வாய்க்கால் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நந்தன வாய்க்கால் செப்பனிட முழு முயற்சி எடுத்துக்கொண்ட, அதற்கு ஊக்கம் தந்த எங்களுடைய வாழ்வுக்கு வளம் தந்த தொண்டுள்ளம் படைத்த நம்மிடமிருந்து பிரிந்துவிட்ட "திரு. ஏ. கோவிந்தசாமி கால்வாய்" என்று அதற்கு பெயரிட்டால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*<u>திருமதி. த. ந. அனந்தநாயகி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே நாங்கள் கொடுத்திருக்கிற எல்லா வெட்டுத் தீர்மானங்களையும் ஆதரித்து என்னுடைய வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, கூட்டுறவுத்துறை சிறந்த துறை. ஆனால் யாருக்காக இதை நடத்துகிறோமோ அவர்களுக்கு இதனுடைய பலன் போய்ச் சேரவில்லை. என்ன நடந்துகொண்டிருக்கிறது என்றால், மக்களுக்கு இதனுடைய பலன் போவதற்குப் பதிலாக, மத்தியிலே இருக்கும் இடைத்தரகர்களுக்கு—ஒரு சிலர் நல்ல அனுபவம் வாய்ந்தவர்களுக்கு—போய்ச் சேர்ந்து அவர்கள் நன்றாக அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதிலேயும் நம்முடைய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, நன்றாக சட்டம் படித்தவர்கள். என்ன என்ன சந்து பொந்து இருக்கிறது, எதை எதை எப்படிப் பயன்படுத்தினால் அத்தனை கூட்டுறவு சங்கங்களிலும் கட்சிக்காரர்களைப் போட்டு கூட்டுறவுச் சங்கங்களை கட்சிக் கிளைகளாக மாற்றலாம் என்ற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்திலே அதைத்தான் சொல்லியிருக்கிறேன், புதிய காம்ப்ரஹென்சிவ் பில் ஆகக் கொண்டுவாருங்கள் என்று. நீங்கள் ஆட்சியில் இருந்தபோது வந்ததில்லையா என்றெல்லாம் பழைய பாட்டையே பாடாமல், ஏதோ கால்யாண பண்டிகையிலே எதிர் பாட்டுப் பாடுவதைப்போல் சொல்லிவிடாமல் என்ன என்ன மாறுதல்களை காலத்திற்கேற்றவாறு இந்தத் துறையிலே கொண்டுவர முடியும் என்பதைப் பார்த்துக் கொண்டு வரவேண்டும்.

ஜனநாயகத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட இவைகள் மக்களுக்கு நேரடியாகப் பொறுப்பாளியாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால்தான் அவையெல்லாம் நியாயமாக நடக்கும். நாம் இப்பொழுது அடிக்கடி செய்தித்தாள்களிலே பார்க்கிறோம். அங்கே கூட்டுறவுச் சங்கத்திலே கொள்ளை நடக்கிறது, அந்தத் தலைவர் அப்படிச் செய்தார் என்றெல்லாம் வருகிறது. கேட்டால் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று சொல்வார்கள். எத்தனை வருஷத்திற்கு இன்வெஸ்டி





கேஷன்? அது முடிவதற்குள்ளாக வேறு அரசாங்கமே வந்துவிடும். எனவே, கூட்டுறவுத் துறையிலே இந்த அரசாங்கம் அதிகமாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் அழகாக நான்கு பிரிவுகளாக பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே நாணயச் சங்கங்கள், அடுத்ததாக மார்க்கெட்டிங் அண்ட் புராஸஸிங் சொஸைடிஸ், அடுத்ததாக கன்ஸ்யூமர்ஸ் சொஸைடிஸ், கடைசியிலே டிரெய்னிங். மேலே இருக்கக்கூடிய நில வள வங்கிகளிலே பணம் கொடுக்கக்கூடிய நிறுவனங்களிலே கட்சி அடிப்படையிலே தலையிட்டு வேண்டியவற்றைச் செய்துகொள்ளக்கூடிய வகையிலே செய்திருக்கிறார்கள்.

அடுத்ததாக மார்க்கெட்டிங் அண்ட் புராஸஸிங் சொஸைடிஸ். நாங்கள் பொதுக் குழுவிலே எத்தனையோ பார்க்கிறோம். ஜின்னிங் பேக்டரி, பிறகு கடலைத்தோலை நீக்கும் இடம். ஜின்னிங் பாக்டரிக்கு வேலை இல்லை என்று சொல்லி அதனால் அதைத் தூக்கி அங்கே போட்டேன் என்று சொல்வார்கள், அல்லது கடலை கிடைக்கவில்லை அதனால் அதைத் தூக்கி அங்கே போட்டேன் என்று சொல்வார்கள். உர விற்பனை எடுத்துக் கொள்ளுங்கள். யாராவது கடன் அவஸ்தையிலே வாங்காமல் எனக்கு உரம் வேண்டாமய்யா என்று சொல்லிவிட்டால் அதை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்கு முயற்சி. கோபிசெட்டி பாளையத்திலே நடந்திருக்கிறது. அங்கே ஏதோ ஒரு ரக மண் இருக்கிறதாம், அந்த மண்ணோடு உரத்தைக் கலத்தால் வித்தியாசமே தெரியாதாம். உரத்தையும் மண்ணையும் கலந்தால் உரமாகவா போகும்? மண்ணாகத் தான்போகும். அதை நம்பி வாங்கியவர்கள் மண்ணாகவேண்டியதுதான். ஆகவே, எவ்வளவு கோடி ரூபாய் கொடுத்தோம் என்பது பெரிதல்ல, அது ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா ஒழுங்காக எவ்வளவு போய்ச் சேருகின்றது என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

அடுத்தது கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் எல்லாம் நஷ்டத்திலே நடப்பதாக அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். பல சிறப்பு அங்காடிகள் மூடப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. பல சிறப்பு அங்காடிகளில் கணக்குகள் சரியாக இல்லை. சில கன்ஸ்யூமர்ஸ் சொஸைடிகளை ஆரம்பித்துவிட்டார்களே தவிர கன்ட்ரோல்டு கமாடிட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று நினைப்பதே இல்லை. அவர்களுடைய விற்பனைக்குத் தேவையான அரிசி, சர்க்கரை கொடுக்கப் படவில்லை. எதற்காக பேர் பிரைஸ் ஷாப்ஸ் என்று தனியாருக்கு கொடுக்கிறீர்கள். கூட்டுறவு முறையிலே வைத்துக்கொண்டு அவற்றிற்கு அரிசி கிடையாது என்று சொல்லி தரமாட்டேன் என்கிறீர்கள். யார் யாருக்கோ பேர் பிரைஸ் ஷாப் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள். அதையும் வைத்துக்கொண்டு இதையும் வைத்துக்கொள்கிறீர்கள்.

ஆனால் இன்றைக்கு கன்ஸ்யூமர் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் எல்லாம் மூடப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. திருவல்லிக்கேணி சொஸைடியிலே ஒன்றுமே கிடைக்கவில்லை. அன்றைக்கு உணவுத்துறை

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 23

அமைச்சர் அவர்களே கூடச் சொன்னார்கள். ஒழுங்காக சரியாக நடைபெற வில்லை, கூட்டுறவுத் துறையிலே இல்லாமல் வேறு கடையிலே வைத்துக் கொடுக்கலாமா என்று யோசித்து வருவதாகச் சொன்னார்கள். இல்லாவிட்டால் ஒன்று செய்யுங்கள், கடன் கொடுப்பது, வீட்டுக்குக் கடன் கொடுப்பது இவற்றைமட்டும் வைத்துக்கொள்ளுங்கள் கூட்டுறவில், மற்றவைகளையெல்லாம் நிறுத்திக்கொள்ளுங்கள். அப்படிச் செய்வது தானே ? எதை எடுத்தாலும் நஷ்டம் நஷ்டம் என்றால் எப்படி ? கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் நஷ்டம், 13 நவீன அரிசி ஆலைகள் நஷ்டம், சர்க்கரை ஆலை நஷ்டம், எதை எடுத்தாலும் நஷ்டம் நஷ்டம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் அதற்குப் பொதுப் பணம் தானா கிடைத்தது ? திறமையாக எதை எதை நடத்த முடியுமோ அதை நடத்துவதற்கு வைத்துக்கொண்டு திறமையாக நடத்த முடியாதவற்றை கொடுத்துவிடவேண்டியதுதானே.

டாக்டர் ஹாண்டே அவர்கள்கூடச் சுட்டிக்காட்டினார்கள். சர்க்கரை ஆலைகள் எத்தனையோ ஆலைகளில் நஷ்டம்.

அதுமாத்திரமல்ல, பல கூட்டுறவுச் சங்கங்கள் வேலை செய்வதில்லை. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் கூட ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். லிப்ட் இரிகேஷன் புராஜக்ட் ஒன்றுகூட அங்கே வேலைசெய்யவில்லை என்று. எனவே ஆங்காங்கு அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். மேலே இருக்கிற இடத்தைப் பிடித்துவிட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்காமல் செம்மைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஹேண்ட்லூம் வீவர் கோவாபரேடிவ் சொஸைடிஸ் 1,069 ஆக இருந்ததை 764 ஆக குறைத்து விட்டீர்கள், கேட்டால் சிக் சொஸைடிகள் என்று சொல்லிவிடுகிறீர்கள். சிக் சொஸைடிகளாக இருப்பதை ரீவைட்டலைஸ் பண்ணிச் சரியாக்கவேண்டும். என்ன என்ன துறையிலே திறமையாக நடத்த முடியுமோ நடத்துங்கள், நடத்த முடியாவிட்டால் விட்டுவிடுங்கள். இதற்குள்ளே முக்கியமான நெளிவு சுளிவுகள் எல்லாம் இருக்கின்றன.

செக்ஷன் 66-ஐ எடுத்துக்கொண்டால் ரிஜிஸ்டிரார் ஸுவோ மோட்டோ இன்ஸ்பெக்ஷன் செய்யலாம் என்று இருக்கிறது, ஏன் அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் ? அவர்களிலே மூன்றில் இரண்டு பேர்கள் சரியாக நடக்கவில்லை என்று சொன்னால் ரிஜிஸ்ட்ரார் போய் இன்ஸ்பெக்ட் செய்யட்டும். அப்படிச் செய்யாமல் ஸுவோ மோட்டோ இன்ஸ்பெக்ஷன் செய்யலாம் என்று வைத்திருப்பதால் இல்லாததை எல்லாம் கண்டுபிடி எங்கு எங்கு எஃபிஷியன்ஸி இல்லை, அது சரியல்ல, இது சரியல்ல, மிஸ்மேனேஜ்மெண்ட் என்று எதையாவது கண்டுபிடி என்று சொல்லி அந்த ஆள் எப்படியாவது போகவேண்டும், எங்கள் கட்சிக்காரரைப் போடவேண்டும் என்று செய்வதற்காகத்தான் இப்படியெல்லாம் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அதை ரத்து செய்ய வேண்டும்.



1972 மார்ச் 23] [திருமதி. த. ந. அனந்தநாயகி]

72-வது செக்ஷன் சூப்பர்சீட் பண்ணுவதுபற்றி இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு என்று ஸ்பெஷல் ஆபீஸர் போட்டால், அதற்குப் பிறகு மேலும் இரண்டு வருஷத்துக்கு அதை எக்ஸ்டெண்ட் பண்ணலாம் என்று செய்திருக்கிறீர்கள், எதற்காக நான்கு வருஷம். நமக்கே 5 வருஷம்தான் ஓட்டு. அதற்கப்புறம் எந்தக் கட்சி வருமோ தெரியாது. எதற்காக நான்கு வருஷம் ? அதுவும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செக்ஷன் 85-ல்—

The Registrar has got power to wind up any society.

அது ரொம்பத் தவறு. இந்தமாதிரி அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்தால் எப்படி கூட்டுறவுத்துறை ஜனநாயக முறையில் வளரமுடியும். நன்றாக நடத்தப்படுகிற சங்கங்களிலேகூட ஏதாவது சாக்குக் கண்டு பிடித்து எப்படியாவது உடைக்கவேண்டுமென்று எண்ணுவதிலேதான் போய்க்கொண்டிருக்கிறது.

செக்ஷன் 27, அதைவிட டேஞ்சரஸ்.

'Government can nominate and the Registrar can a nominate Then, Government or Financing Bank can nominate'.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதற்காக நாமினேஷன் ? தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு ஆப் டைரக்டர்ஸ் இருக்கும்பொழுது அவர்கள் இருக்கட்டுமே. எல்லா டைரக்டர்களையும் ரிஜிஸ்திரார் நாமினேட் செய்யலாம் என்று இருக்கிறது. எனவே, நாமினேஷன் பவரை எப்படியாவது எடுத்துவிடவேண்டும். தேர்ந்தெடுத்துக்கொள்ள வழியிருக்கிறபோது அது தேவையில்லை. எத்தனை கோடி ரூபாய்கள் கொடுத்தாலும் கட்சிக் கிளைகளாகத்தான் நடத்தப்படுகிறது என்பதை நான் வன்மையாக ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் 370 கோடி ரூபாய் அளவிற்கு ரிகன்ஸிலியேஷன் ஏ.ஜி. ஆபிஸில். ஒரு கோடியா இரண்டு கோடியா ? கொஞ்சம் தாமதம் ஆனாலே செய்வது கஷ்டம். ரொம்ப தாமதம் ஏற்பட்டால் எது எங்கே போனது எப்படித் தப்பியுள்ளது என்றெல்லாம் கண்டுபிடிக்கமுடியாது.

நவமணி, கூட்டுறவுத் துறையிலே நடத்தப்படுகிற செய்தித்தாள். அரசாங்கம் எவ்வளவோ தலையிடுகிறது. அதனுடைய சீப் எடிட்டர் அந்த எடிட்டோரியல் போர்டை கூட்டுவதே கிடையாது. உங்களுக்குதான் கட்சிப் பத்திரிகை இருக்கிறதே நடுநிலைப் பத்திரிகை இருக்கிறதே இரண்டு ஒன்றுதான். அவற்றின் முதுகெலும்பையும் முறிக்கிறமாதிரி இன்றைக்கு டோட்டலிடேரியன் ஸ்டேட்டுக்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். அரசாங்கத் தலையீட்டினாலே எடிட்டோரியல் போர்டை கூட்டுவதே கிடையாது.

[1972 மார்ச் 23

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, உறுப்பினரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நவமணி பத்திரிகையில் அரசு எந்த நாளும் தலையிட்டதும் கிடையாது. எந்த விதமான கடனும் கொடுத்ததும் கிடையாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எனக்குச் சில தகவல்கள் வந்திருக்கின்றன. அதை அமைச்சரவர்களின் கவனத்திற்கு வேண்டுமானால் கொடுக்கிறேன். இப்பொழுதே சொல்வது என்றால் மற்ற பாயிண்ட்ஸ்கள் சொல்லமுடியாமல் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதே டைம் முடிந்துவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எந்த விதத்திலும் தலையீடு இல்லாமல் நடத்துவதற்கு முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தலாமா அல்லது ஒற்றி வைத்து விடலாமா?

THIRU R. PONNAPPA NADAR: It may be extended.

MR. SPEAKER: So the House will sit till the Minister replies.

இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்து விடுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அடுத்து கதர் இலாக்காவைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஏர் கண்டிஷன் போடப்பட்டிருக்கிறது. 5-வது மாடியிலே அமைச்சருக்கு என்று அறை கட்டப்பட்டிருக்கிறது. அதை வாடகைக்கு விட்டால் 5,000 ரூபாய் வரும். கதர் இலாக்காவே ஒரு குடிசைத் தொழில் இலாக்கா. அமைச்சரோ பெரிய தொழில் அதிபர். அவர்களே வேண்டுமானால் சொந்தத்தில் ஏர்கண்டிஷன் போட்டுக்கொண்டு ஜாம் ஜாம் என்று இருக்கலாம். அதை விட்டு விட்டு 5-வது மாடியிலே 5,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய இடத்தில் செலவழிக்கவேண்டிய அவசியமில்லை

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்: தொழில் அதிபர் என்று சொன்னார்களா. நான் எந்தத் தொழில் அதிபரும் இல்லை. அப்படி செக்கரட்டேரியட்டிலேயே காலையிலும், மாலையிலும் வேலை செய்ய வேண்டுமென்று விரும்பினால் அப்படியும் இருக்கமுடியும். ஆனால் இரண்டு இலாக்காக்கள் இருப்பதால் காலையில் இரண்டு மணி வரையில் இருந்துவிட்டு மாலை வேலையில் அடுத்த இலாக்கா வேலைகளைக் கவனிக்கச் செல்ல வேண்டியிருப்பதால்தான் தனி அறை இருக்கிறது.



1972 மார்ச் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி: பல இலாக்காக்கள் இருக்கின்றன என்பதற்காக இலாக்காவிற்கு இரண்டுமணி நேரம் போய்க் கொண்டிருக்க முடியுமா? ஒரேயிடத்திலேயிருந்து மந்திரிகள் அத்தனை வேலைகளையும் செய்ய முடியும். இரண்டு இலாக்காக்கள் இருக்கின்றன என்று இரண்டு இடங்களுக்கும் மாற்றிமாற்றிப் போய்க்கொண்டிருந்தால் உடம்பு வேறு கெட்டுவிடும். எனவே 5,000 ரூபாய் வாடகை வரக்கூடிய 5-வது மாடியிலே போய் வேலை பார்க்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அந்த 5,000 ரூபாய் வாடகை வந்தால் கதர் வாரியத்திற்கு வரும் கதர், கதர், என்று கதறிக்கொண்டிருக்கிறோம் நாங்கள், கதர் பிழைக்குமா என்று. எனவே அங்கே ஒரு ரூம் போட வேண்டிய அவசியமில்லை. அடியிலே வைஸ் சேர்மன் ரூம் இருக்கிறது.

The Minister can make use of it.

பாரிஸ் கார்னரிலே ஒவ்வொரு சதுர அடியும் பணம் கொடுக்கும். அந்தக் கட்டிடத்திலே 5,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு ரூமில் ஏர் கண்டிஷன் போட்டு அமைச்சர் பயன்படுத்துவது சரியல்ல.

கதர் செக்ரட்டரி 12 வருஷமாக ஒருவரே இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் சிப்பந்திகளுக்கு நல்லதே நடக்காது

Such people will develop likes and dislikes.

விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்தபடி எடுத்துக்கொள்வார்களானால் உண்மையிலேயே கஷ்டமாகிவிடும், அந்தக் குறளகத்தில் வேலை செய்பவர்களுக்கு 120 ரூபாய்தான் சம்பளம். அதிலும் ஏதாவது காணமல் போய்விட்டால் துணி வீணாகிவிட்டால் அந்தப் பணத்திலேயிருந்துதான் பிடித்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இன்க்ரிமெண்ட் ஒன்றும் கிடையாது, அப்படியே செட்டில்ட் பே 120 ரூபாய். அதைவிடக் கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று திருவாரூர் மார்க்கெட்டின் சொசைட்டியில் ஒன்றரைக் கோடி ரூபாய் கணக்கெடுத்ததில் குறைவாக இருந்ததாகத் தெரிகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பெரிய பிரமுகர் பணத்தைப் பாழாக்கி விட்டார் என்று செய்திகள் வருகிறது. அவைகளுக்கெல்லாம் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் இன்வெஸ்டிகேஷன், இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லிக்கொண்டிருக்காமல் உடனடியாக நடவடிக்கை

எடுக்கவேண்டும், நடவடிக்கை எடுத்ததன் விளைவுகளை மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும் அப்பொழுதுதான் கூட்டுறவுத் துறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும், இல்லையென்றால் மக்களை வாழவைப்பதற்கு பதில் மக்களின் பணம் பாழாக்கப்படுகிறது என்று கூறி முடிக்கிறேன்.

[திருமதி. த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 23

திரு க. மு. இராசகோபால்: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின்மீது பேச அழைத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு 15 நிமிஷங்கள் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அம்மையார் அவர்கள் பேசும்பொழுது காமன் பண்டிகை பாட்டைப் பற்றிச் சொன்னார்கள். குற்றமற்றவர்களைக் கொலை செய்ததால் காமன் பண்டிகைப்பாட்டு பாடப்பட்டது. ஆனால் பத்தாண்டுக் காலப் பட்டியலை எடுத்துக்கொண்டு பார்த்தால்

(திரு. டெ. கந்தப்பன் தலைமை)

குற்றத்திற்குப் பொறுப்பு யார் என்று தெரிந்துவிடும். அதைவிட்டு சட்டமன்றத்திலே பேசும்பொழுது மேலே உட்கார்ந்திருக்கும் மக்கள் பார்ப்பார்கள். ஆர்வத்தோடு பேசினேன், ஆதாரத்தோடு பேசினேன் என்று வெளியில் சொல்லிக் கொள்வதற்காகப் பேசக்கூடாது.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட இந்தத் தொல்லைகளுக்கு மூலகர்த்தா யார் என்று பார்க்கும்பொழுது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முன்னாலே இந்த அவையிலே துணைச் சபாநாயகராக இருந்தவரை உங்களுக்குத் தெரியும். வடார்க்காடு மாவட்டத்தில் அவருக்கு இருந்த பணம் எவ்வளவு. எவ்வளவு பணத்தைச் சாப்பிட்டுவிட்டார், அதன் புள்ளி விவரங்கள் என்ன, அந்த சாப்பிட்ட நபரை விட்டுவிட்டு அதற்குத் தலைவராக இருந்தவர் மசூலிப்பட்டணம் போய் பூச்சி மருந்து சாப்பிட்டுச் செத்த செங்கல் நாயுடுவின் கதை என்ன என்று தெரியாதா? இன்னும் எத்தனையோ பேர்களுடைய பட்டியலையெல்லாம் சொல்லலாம், எனக்கு மட்டும் நேரம் கொடுக்கட்டும் ஒரு மணி நேரம் பேசுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பட்டியலைப் பற்றிச் சொல்லித் தப்பித்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் என்ன நேர்மையான நடவடிக்கைகளை எடுத்தீர்கள்.

திரு. க. மு. இராசகோபால்: அம்மையார் அவர்கள் எந்த அளவில் செய்யமுடியுமோ அதே அளவில்தான் மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்கும். அம்மையார் அவர்களுக்கும் நடவடிக்கை எடுக்க முடியாது. நானும் முடியாது. அதைப்புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே தவறு செய்தவர்கள் யார் யார் என்று பத்தாண்டுக் கால பட்டியலைப் பார்ப்போம், அப்பொழுது தெரியும்.

பெரும்பாக்கத்தில் ஒரு லட்சத்து இரண்டாயிரம் ரூபாய். பூச்சி மருந்து சாப்பிட்டு கொலை செய்து கொள்ளப்போகிறோம் என்று தெரிந்தும், வாங்கி வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு அரஸ்ட் செய்து ஜாமீனில் வருவது மாதிரி வந்து, ரெகார்டுகள் தயார் செய்து சொத்துக்களை அச்சு ரசீது போட்டு வெளியிலே வந்து ஒருவரிடத்தில் கொடுக்கப்பட்டு, ஆள் செத்துவிட்டால் அது தெரியாதா என்ன?



1972 மார்ச் 23] [திரு. க. மு. இராசகோபால்]

நெல்வாயில் முனுசாமி முதலியார் 32,000 கதை என்ன?

இப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், பெருமளவில் தற்கொலை செய்து கொண்டவர்களைப் பார்த்துத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதை நல்ல முறையில் வைக்கவேண்டும், இதற்கு எந்தக் கட்சியின் பாகுபாடும் இருக்கக்கூடாது, தெரிந்தோ தெரியாமலோ தவறு நடந்திருக்கிறது, அதற்குச் சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கலாம் அதாவது ஆடிட் செய்பவர்கள். அதன் காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள், என்பதற்காக இதை நிறுத்தி வைத்தார்கள்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 97, 56, 955 இருக்கிறது. அம்மையார் அவர்கள் பேசினார்களே அதற்காகச் சொல்கிறேன்! நல்லாத்தூர் 49,624, பெருமானேரி 45,871, திருக்கழுக்குன்றம் விவசாய வங்கி 58,667, வீராபுரம 80,340, அனந்தமங்கலம் 38,298, கடமலைப்புத்தூர் விவசாய வங்கி 60,790, காட்டுக்கூடலூர் 23,518 மின்னல் 31,132, புரகல் 59,973, வேளியம்பாக்கம் 36,509.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவாவர்களே, பட்டியலைப் பார்க்கும்பொழுது அவரே அவர்களுடைய திறமைக் குறைவை ஒத்துக் கொள்கிறார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. க. மு. இராசகோபால்: அம்மையார் அவர்கள் எவ்வளவு குறுக்கீடுகள் செய்தாலும் எனக்கு ஒரு மணி நேரம் கொடுத்தால் நானே சமாளிக்கத் தயாராக இருக்கிறேன். அரசாணி மங்கலம் 30,068, எலப்பாக்கம் 31,873, எண்டத்தூர் வாடக்கரனை 50,211, இவ்வளவு பேரும் பழைய ஆள். பத்தாண்டு லிஸ்டிலே எடுத்துப் பார்த்தால் தெரியும். தோட்டநாவல் 59,636, பழைய தலைவர், கதர் சட்டைக்காரர், உங்கள் கட்சிக்காரர்கள், எங்கள் ஆள் இருக்கிறான் என்று சொல்ல மாட்டேன். ஹாண்டே அவர்கள் கட்சிக்காரர்கள் என்று சொல்கிறார்கள். எங்கள் கட்சி அல்ல. இன்றைக்கும் கதர் போடுபவர், பக்கா சிண்டிகேட் காரர். இன்னும் குண்ணவாக்கம் 14.5 7, நெல்வாய் 12 534 படூர் 15,931, புதுதிவாக்கம் 15,403, புலிவாய் 75,481, திருப்புலிவனம் 41,492, உத்திரமேரூர் 55,633 களியாம்பூண்டி 40,836 விநாயகநல்லூர் 101,438 கம்மாளம்பூண்டி 61,971, இந்திராபுரம் 46,644. எம் எல். ஏவாக இருந்தவர் செய்யூரில் கையாடல் இனத்தில், பத்தாண்டுக் காலம் வசூல் செய்ததையெல்லாம் பினாமி என்று அந்தந்த ஊரிலே இருக்கும் முதலாளிகள், பணக்காரர்கள், உயர்ந்த இனம் என்கிறார்களே அவர்

ளெல்லாம் தலைவராக காங்கிரஸ் காலத்தில் வந்தார்கள். அவர்களுடைய ஆள்களுக்கெல்லாம் தோட்டக்காவல் ஆடு மேய்ப்பவன் எல்லா கையெழுத்துப் போட்டு பணம் வாங்கியதாகப் புள்ளிவிவரம் இருந்ததே தவிர அவர்கள் பணம் வாங்கவில்லை. செய்யூரில் 77,754 செய்யூர் பிச்சைக்காரர்கள் இருக்கும் ஊர். ஜமீன் கொளத்தூரில் 35,191, விளம்பூரில் 47,633 அணைக்கட்டு 31 649, அமதங்கரணை 34,486 பையம்பாடி 47,261, புத்திரன்கோட்டை 52,656 இப்படி பல லட்சக்கணக்கானரூபாய் இந்த நிலையிலிருக்கிறது.

அம்மையார் அவர்கள் ஏதோ ஐந்தாண்டுக் கால் புள்ளிவிவரக் கணக்கை வைத்துக்கொண்டு பேசினால் நாங்கள் இருபதாண்டுக் காலக் கணக்கை வைத்துக்கொண்டு பேசுவோம். ஏதோ காமன் பாட்டைப் பற்றியெல்லாம் சொல்லி கிண்டல் பண்ணுகிறாயே.

(திரு. பொன்னப்ப நாடார், திருமதி அனந்தநாயகி ஆகியோர் எழுந்தனர்)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்படி 'இருக்கிறாயே' நீ, என்று பேசுவது முறைதானா?

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தப் பணத்தையெல்லாம் வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

திரு. க. மு. இராசகோபால்: முதலிலே நடவடிக்கை எடுத்தவுடன் என்னுடைய மாவட்டத்திலே மூன்று நபர்கள் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்கள்.

தலைவர் அவர்களே, நான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி விட்டுப் போகிறேன்.

தற்போது நிலவள வங்கிக்கு என்று ஒரு சட்டம் வந்திருக்கிறது. தயவு செய்து விவசாயிகளை வாழ்விக்கும் வகையில் அடிப்படையை மாற்றவேண்டும். சில இடங்களில் ஊற்று இருக்கிறது. சில இடங்களில் ஊற்று இருப்பதில்லை. எந்தெந்த இடங்களிலே ஊற்று இருக்கிறதோ அங்கு இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

டிராக்டர் வாங்க வேண்டுமென்றால் விவசாயி 25 சதவிகிதம் கொடுக்கவேண்டும். 40,000 ரூபாய் டிராக்டர் விலை என்றால் 10,000 ரூபாய் ஒரு விவசாயியால் எப்படிக் கொடுக்க முடியும் விவசாயி நொந்து போய்க் கிடக்கிறானே. 20 ஆண்டுக் காலக் கடன் என்று இருந்ததை 7 ஆண்டு; 10 ஆண்டு என்று ஆக்கியிருக்கிறார்கள். விவசாயிகள் வாழமுடியாது.

இந்த அரசு அண்ணாவின் தலைமையில் அமைக்கப்பட்டபோது சில திட்டத்தை மாற்றியமைத்தார்கள். 24 ஆண்டு கால வில்லங்கம் வாங்க வேண்டுமென்று இருந்ததை 13 ஆண்டு என்று குறைத்தார்கள். பத்தாயிரம் முதல் 90,000 வரை கடன் வாங்கலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு அமெரிக்காகாரன் கொடுத்த பணத்தில் கொடுப்பதால் திட்டம் மாற்றப்பட்டு விவசாயிகள் நன்மை பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. உள்ளபடியே இதை மாற்றித் தரவேண்டும். இப்படி இருந்தால் விவசாயிகள் வாழமுடியாது.

கதர் வாரியம் என்று சொல்லுகிறார்கள். காந்தி சொன்னார் என்கிறார்கள். ஏற்றுக் கொள்கிறோம். அவர் சொல்லிய அவ்வளவையும் கடைப்பிடிக்கிறோமா, இன்றைக்குக் கட்டை வண்டியில் போவதில்லை. காரிலேதான் சட்ட மன்றத்திற்குப் போகிறோம். இன்று





எவ்வளவோ வேகமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உங்கள் ஆட்சிக் காலத்தில் என்னை ஜெயிலில் வைத்து நூற்கச் சொன்னார்கள். மூன்று சிட்டத்திற்குமேல் ஒரு நாளைக்கு நூற்க முடியவில்லை. ஒரு சிட்டத்திற்கு இரண்டணா அல்லது நாலணாதான் கூலி கிடைக்கும். நாரிலிருந்து என்னவோ செய்கிறார்கள், வேறு என்னென்னமோ செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் பேசும் போது இரண்டுங்கெட்டான் நிலை வேண்டாமென்று சொன்னார்கள். நீங்கள்தான் மில்லுக்கும் லைசென்ஸ் கொடுத்தீர்கள். கதரையும் வளர்க்க வேண்டுமென்று கூறுகிறீர்கள். அப்போது ஒருமுறை மூன்று வார விழாக்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டார்கள். மூன்றிலும் ஒரே நாளில் பேசவேண்டிய சிக்கல் ஏற்பட்டது. கதரை எடுத்துவிட்டு கைத்தறித் திட்டத்தை மட்டும் உருவாக்கினால் நல்லது. கதரில் நஷ்டந்தான் வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கதரில் நஷ்டம் இல்லை. மூன்று கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது.

திரு. க. மு. இராசகோபால்: அங்கு கதர் மட்டுந்தான் உற்பத்தி செய்கிறார்கள் வேறு என்னென்னமோ செய்கிறார்கள். காலில் போடக் கூடிய செருப்புக்கூடத் தயாரிக்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது). இந்த மானியத்திலே எவ்வளவோ பேசவேண்டுமென்று நினைத்தேன். அம்மையார் அவர்கள் குறுக்கிட்டார்கள். தலைவரும் மணி அடிக்கிறார். ஆகவே, இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்

*திரு. எம். கந்தசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை மானியத்தின்மீது எனது கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவுத்துறை மற்ற எல்லாத் துறைகளையும் விட மிகச் சிறந்த முறையில் விளங்குகிறது என்றால், அதனுடைய அமைச்சராக இருக்கும் மாண்புமிகு *தித்தனூர் அவர்கள், முன்பு இருந்த சட்டதிட்டங்களை எல்லாம் மக்களுக்காக எந்த விதத்தில் பயன்பட முடியுமோ அதை நன்கு உணர்ந்து மாற்றிய காரணத்தாலும், அதே நேரத்தில் சட்டத்தை மட்டும் படித்து செயலாற்ற முடியாது என்று உணர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று ஆங்காங்குள்ள கூட்டுறவுத் துறையிலுள்ள அதிகாரிகளையும் கூட்டுறவு வங்கிகளில் உள்ள தலைவர்களையும் அழைத்து அந்தந்த இடத்திற்கேற்றாற்போல் எந்தெந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்பதைத் தக்க ஆதாரத்தோடு செய்கிற காரணத்தாலும் அந்தத் துறை இன்றைய தினம் நல்ல முறையில் சிறந்து விளங்குகிறது. இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் ஒன்றுதான் கூட்டுறவுத் துறையில் நல்ல முறையில் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் மின்சாரத் துறையும் சிறப்பான முறையில் சேர்ந்து இயங்குவதுதான்.

[திரு. எம். கந்தசாமி] [1972 மார்ச் 23

கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கடன் பெற்ற விவசாயிகள் மின்விசை இல்லாத காரணத்தால் அவர்கள் கிணறு வெட்டி பம்ப் செட் வைக்கமுடியாத நிலைமையிலும் அதே நேரத்தில் அடுத்த ஆண்டே தவணையைச் செலுத்த வேண்டிய நிலைமையிலும் இருந்து வருகின்றனர். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை மின்சார வாரியம் ஒரு சில இடங்களில்தான் செயல்பட்டு வருகிறது. மற்ற இடங்களில் சவுத் மெட்ரூஸ் எலக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனம் இருக்கிற காரணத்தால் விவசாயிகள் பம்ப் செட்டுக்கு கனெக்‌ஷன் கேட்டால் இரண்டாயிரம் ரூபாய், மூவாயிரம் ரூபாய் டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லுவதால் பல இடங்களில் விவசாயிகள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் நிலவள வங்கிகள், கூட்டுறவு வங்கிகள, நல்ல முறையில் செயல்படுகின்றன என்ற நிலை இருக்கும்போது, அம்மையார் அவர்கள், கிளைக் கழகங்களைப்போல் அவை இருக்கின்றன என்று கிண்டலாகக்கூட சொல்லுவது சரியல்ல. உள்ளபடியே சட்டத்திற்கு விரோதம் இல்லாமல், முன்பிருந்த ஊழல் மலிந்த நிர்வாகத்தை மாற்றியமைக்கும்படியான நிலைமையில் அதிகாரிகளும், புதிதாக வந்திருக்கும் கூட்டுறவு அமைச்சர் அவர்களும் மிகுந்த பொறுப்போடு கவனித்து "கூட்டுறவுத் துறையைப் பற்றி தவறான கணக்கு இருந்து கொண்டிருக்கிறது, அதை நல்ல முறையில் மாற்றியமைக்க வேண்டும்" என்ற முறையில் செயல்படுவதன் காரணமாகத்தான் இன்று பலர் ராஜினாமா செய்து கொண்டிருக்கிறார்கள, பலர். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் ராஜகோபால் அவர்கள் சொன்னதுபோல் விஷம் குடித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையிலிருந்து கொண்டிருக் கிறார்கள் அதற்குள்ளே எல்லாம் செல்ல நான் விரும்பவில்லை.

இன்றைக்கு உலக வங்கியிலிருந்து மாநில நிலவள வங்கித் தலைவர் நல்லதொரு ஒப்பந்தத்தைச் செய்து 26 கோடி ரூபாயைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அந்த ஒப்பந்தத்தின்படி இன்றையதினம் மாநில நிலவள வங்கியும், மற்ற நிலவள வங்கிகளும் நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்றால், கடந்த மூன்று திங்கள்களாகச் செயல்பட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து அந்த வங்கியோடு தொடர்பு கொண்டு நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்குக் குறைந்த காலத்தில் சீக்கிரமாக நல்ல முறையில் கடனைத் தரமுடியும்.

இன்றுள்ள நிலையில் விவசாயிகள் மிகுந்த தொல்லைக்குள்ளாக்கப் படுகிறார்கள். ஏராளமான பணம் உலக வங்கி, ரிசர்வ் வங்கி மூலமாகக் கொடுப்பதற்கு ஆர்வம் இருக்கிறது, அரசாங்கத்திற்கும் அக்கறை இருக் கிறது. இருந்தும் விவசாயிகள் வேதனைப்படக்கூடிய நிலையில் இருக் கிறார்கள். பணத்தைப் பெறுவதோடு மட்டுமல்ல; கிணற்றை வெட்டுவ தோடு மட்டுமல்ல; வெட்டிய கிணற்றின் மூலம் நல்ல முறையில் விவசாயம் செய்தாலும் ஓரே ஆண்டில் தவணைகளைக் கொடுக்க



V211,31'N72
31N72-2031

1972 மார்ச் 23] [திரு. எம். கந்தசாமி]

முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகள் பொறுத்து தவணையைப் பெறும் வகையில் வழி செய்தால் நலமாக இருக்கும்.

ஏ. ஆர். சி. ஸ்கீம் என்ற முறையில் கடன் பெறுகிறோம் இதிலே சிங்கில் பர்ப்பசுக்கு லோன் தர முடியாது என்ற நிபந்தனை இருக்கிறது. கிணறு வெட்டவும், அதே நேரத்தில் பம்ப் செட் வைக்கவுமான நிலை இருந்தால்தான் கடன் பெறலாம். அடிக் கிணறு வெட்டினாலும், பம்ப செட்டு சேர்த்து வைக்கவேண்டும. தனியாக பம்ப் செட் வைக்கவும் கடன் பெறமுடியாது. தனியாக கிணறு வெட்டவும் பணம் பெற முடியாது இரண்டிலே ஏதாவது ஒன்றைச் செய்வதற்குக் கடன் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் இன்றையதினம் [illegible]ங்காடிகள் [illegible] முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், [illegible]த்தில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அ[illegible] அங்காடிகள் முன்[illegible] இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இ[illegible]ந்து இருந்து கொண்டிரு[illegible]ன்றன. இன்றையதினம் வட்ட அளவிலும் [illegible]ங்காடிகள் அமைத்து விவசா[illegible]ளுக்கு நல்லமுறையில் உதவ வேண்டும்[illegible]

இவ்வளவு நல்ல முறையில் [illegible]ட்டுறவுத் துறை செய[illegible]ப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், சென்[illegible] ஆண்டு குறுகிய கால[illegible]டுத்தரக் கடன்களாக 44 கோடி ரூபாயும், [illegible] நிலவள வங்கியி[illegible] மூலம் நீண்ட காலக் கடனாக 16 கோடி [illegible] [illegible]து நல்ல முறையில் பணியாற்றி வந்தாலும், [illegible] [illegible]திகாரத்தைக் குறைக்கும் வகையில் ஆணைக்குழு அறிக்கை [illegible]து கண்டு உள்ள படியே வருத்தப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது இதற்காக ஒரு போராட்டமே வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இதிலே கொஞ்சம் நல்ல அக்கறை காட்டி நமக்கு உள்ள அதிகாரம் எப்படி முன்பு இருந்ததோ அதே நிலையில் இருக்க வேண்டுமென்ற முறையில் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக் கப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணைகளையெல்லாம் ஆதரித்து ஓரிரு கருத்துக் களைக் கூற முற்படுகிறேன்.

முதலாவதாக, நம் கிராமங்களில் கடன் வசதி பெருகுவதற்கு இந்த இலாகா நல்ல முறையில் செயல்பட்டால்தான் கிராம மக்கள் நல்ல பயன் அடைய முடியும் என்ற கருத்தினை நாம் உணர்ந்து அதற்காக என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்த கோவாப்பரேட்டிவ்

6156

ாங்க்ஸ் அண்ட் கோவாப்பரேட்டிவ் க்ரெடிட் சொஸைட்டீஸ் சம்பந்தமாக ாங்கிங் கமிஷனலிருந்து கூறப்பட்ட ஒருசில கருத்துக்களை எல்லாம் தொகுத்து இங்கு தந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே பேசுகிறபோது ாங்கிங் மத்திய ஆட்சியின் அதிகார எல்லைக்கு உட்பட்டிருக்கிறது, ட்டுறவு ஸ்டேட் சப்ஜக்டாக இருக்கிறது. இதில் நடைமுறைச் சிக்கல்கள் ல இருக்கின்றன, இந்தப் பட்டியலைத் திருத்தியமைக்கவேண்டுமென்று ரு பரிந்துரை இருப்பதாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

கூட்டுறவு அடிப்படையில் எல்லாவற்றையும் செய்துவிடாது நாம் சர்வ் பாங்கிலிருந்து நேரடியாகவும் மற்றவிதங்களிலும் பெற்றுக்கொண் ருக்கிறோம். பாங்கிங்கானது மத்திய ஆட்சியின் கையில் இருப்பதால் வைகளின் சட்டங்கள் எல்லாம் அதற்கு உகந்ததாக இருக்கும் என்ற ருத்து இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. கடைசிப் பக்கத்தில் ருப்பதை, எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்தக் ருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதற்கு மாறுபாடான ருத்தை இந்த அரசு மேற்கொள்ளப்போகிறதா அல்லது பாங்கிங் ன்று இருப்பதால் கூட்டுறவு அடிப்படையில் எல்லா காரியங்களையும் ம் மாநிலத்தில் பரிமாறுவதற்கு போதிய அளவில் அதிகாரம் வேண்டு மென்று நினைக்கிறார்களா என்பதை தெளிவுபடுத்தவேண்டும். இந்த ரையில் எட்டாவது பக்கத்தில் கூறியிருக்கிற ஒரு பகுதியை மட்டும் ங்கள் அனுமதியின்பேரில் படிக்க விரும்புகிறேன்.

'This requires enabling and supporting legislation both of the entre and of the States; Central legislation would suffice on the mplementation of our recommendation to confer on the Union the ower to legislate on matters relating to the incorporation, regulaion and winding up of co-operative credit societies.'

ன்று சொல்லி முடித்திருக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தைப் பராமரிக்கிற ல்லா அதிகாரங்களும் நமக்கு இருக்கின்றன என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நாக்பூர் ஹைகோர்ட் தீர்ப்பையும் மேற்கோளாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி விரிவாகச் சொல்லி இந்த மன்றத்தின் காலத்தை எடுக்க நான் நினைக்கவில்லை.

பொதுவாக இந்தக் கூட்டுறவு இயக்கமானது இப்போது வளர்ந் திருக்கிறது என்றும். முன்பு ஏதோ ஊழல் மலிந்திருந்தது என்றும், காங்கிரஸ்காரர்கள், கதர் போட்டவர்களுக்கெல்லாம் இது புகலிடமாக இருந்தது என்றும் பல உறுப்பினர்கள் இங்கு உருக்கமாக எடுத்துப் பேசினார்கள். குறிப்பாக ஒரு மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது ஆட்சி மாறியவுடன் ஒருசிலர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் வேதனைக்குரிய பல விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். யார் தவறு செய்தாலும்சரி, காங்கிரஸ்காரர்கள் தவறு செய்தாலும் சரி அல்லது எந்தக் கட்சிக்காரர்கள் தவறு செய்தாலும்சரி இலாகா அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதை நாங்கள் எப்போதும் ஆட்சேபிக்கவில்லை, தலையிடவும் இல்லை என்பதை எங்கள் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் பொதுவாக ஏதோ கதர் போட்டவர்





கள் எல்லாம் மகாபாவிகள் என்றும் மற்றவர்கள் எல்லாம் பெரும் புண்ணியவான்கள் என்றும் தொனிக்கக்கூடிய வகையில் இந்த மன்றத்தில் பேசுவது வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது.

கூட்டுறவுத் துறைக்கு நம் அமைச்சர் அவர்கள் வந்ததற்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன என்றும், அந்த இயக்கம் பூத்துக் குலுங்குகிறது என்றும் டலர் எடுத்துக்கூறினார்கள். கழிந்த தேர்தலுக்கு முன்னதாக ஒன்றிரண்டு இடங்களில் பாசன இறைவை சொஸைட்டிகள் என்று அப்படி மஷ்ரூம் சொஸைட்டிகள், பேப்பர் சொஸைட்டிகள் என்ற அளவில் வளர்ந்ததை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக, ஒன்று கூற விரும்புகிறேன். 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் தேதியில் கழிந்த தேர்தலுக்கு ஒருசில நாட்கள் முன்னடியாக அவசர அவசியமாக திருநெல்வேலி ஜில்லாவில் பலயிடங்களில் இப்படிப்பட்ட பாசன இறைவை சொஸைட்டி கள் எல்லாம் எப்படியோ உற்பத்தியாகிவிட்டன. 20 லட்சத்திற்கு மேலான பணம் அதிலிருந்து கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். 20 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறீர் களே, அதிலிருந்து கிடைத்த லாபம் என்ன, ரிட்டேர்ன் என்ன, அதில் கிடைக்கிற வட்டி என்ன என்பதைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

அதுபோல் இன்னொரு விஷயம்.

Setting up of modern rice mills.

என்று ஒரு இனம் இருக்கிறது. அதற்கு 1969–70-ல் ரூ. 37·10 லட்சம் செலவழிக்கப்பட்டதாக இருக்கிறது. 1970–71-ல் ரூ. 20 லட்சம் செலவழிக் கப்பட்டதாக இருக்கிறது. இந்த மாடர்ன் ரைஸ் மில்ஸ் எல்லாம் இன்று லாபத்தில் ஓடுகின்றனவா அல்லது நஷ்டத்தில் ஓடுகின்றனவா, அவை ஏதாவது இயங்கிக் கொண்டிருக்கிறதா என்பதையெல்லாம் நாம் உணர வேண்டும்.

உதாரணமாக, திருநெல்வேலிக்கு அருகாமையில் தாழையூத்து பக்கத் தில் மாடேர்ன் ரைஸ் மில் இருக்கிறது. அது திறக்கப்பட்டு பல நாட்கள் ஆகியும்கூட இதுகாறும் அது இயங்கவில்லை. திறப்பு விழா நடந்தது, அமைச்சர் அவர்கள் சென்றார்களோ செல்லவில்லையோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் திறப்பு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் திறப்பு விழா நடந்த பிறகும் அது இதுகாறும் இயங்கவில்லை, நெல் அறைவை செய்யவில்லை என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த மாதிரி பலயிடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. இதில் சட்டத்தின் சந்துபொந்துகளில் ஒளிந்து கொள்கிறார்கள் என்று இங்கு பரவலாகப் பேசப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

நாகர்கோவிலில் ஒரு சிறப்பங்காடி இருந்தது. பகவதி சிறப்பங்காடி. அதை சூப்பர்ஸீட் செய்தார்கள். அப்படி சூப்பர்ஸீட் செய்ததற்குப் பிறகு ஏன் திறக்கவில்லை ? அதிகாரம் இருக்கலாம். கூட்டுறவுச் சட்டப்படி நான்காண்டுகள் வரையில் வைத்துக்கொள்ளலாம் என்று இங்கு பேசிய அம்மையார் அவர்கள் கூறினார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 23

நான் ஒன்று கூற விரும்புகிறேன். மாநில சுயாட்சி, சுயாட்சி என்று நாம் தப்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதில் இருக்கிற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு என் டயரக்டர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். எப்படி அதிக அதிகாரம் வேண்டுமென்று நினைக்கிறோமோ அதேமாதிரி எங்களைப் போன்றவர்கள் நாங்கள் பங்குகள் எடுத்திருக்கிறோம், எங்கள் பிரதிநிதிகள் அதில் இருந்து நடத்தவேண்டுமென்று ஆசைப்படுவதில் என்ன தவறு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். அதிலுள்ள அரசியலைப் பற்றிக் கூறத் தேவையில்லை. அரசியலில் நம் அமைச்சர் பெருமான் அதில் புகுவதில்லை, அவர்களெல்லாம் அதில் ஒன்றுமே செய்வதில்லை என்று வெளிப்பட பேசினாலும் பின்னால் உள்ள சரித்திரம் எல்லாம் அந்த ஜில்லா மக்கள் அத்தனை பேர்களுக்கும் நன்கு தெரியும் என்பதை நான் இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை அவர்களுக்கு இரண்டு ஜில்லாக்கள் ஒதுக்கியிருக்கலாம். எதிர் கட்சியில் இருக்கிறவர்களை எல்லாம் அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்காக நீங்கள் பெரும் அதிகாரங்களை வைத்துக் கொண்டு—குறிப்பாக கூட்டுறவு இயக்கம் என்று சொன்னால் அதில் என்னென்னவோ காரியங்கள் எல்லாம் செய்துவிடலாம்.

நாகர்கோவிலில் உள்ள மத்திய வங்கியில் இன்று அவர்களது கட்சியின் பெயரால்—அவர் இப்போது ராஜ்ய சபா மெம்பராகப் போகிறார்—ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற கதையெல்லாம் இங்கு எடுத்துக்கூறத் தேவையில்லை. ஆயில் சொஸைட்டி வந்தது, பாசன சொஸைட்டி வந்தது, எந்த சொஸைட்டிக்காவது ஆபீஸ் இருக்கிறதா அல்லது அவற்றிற்கு மூலதனம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். எப்படி அதில் உறுப்பினர்கள் வந்தார்கள், அங்கிருந்த பிரசிடென்டை எப்படி அப்புறப்படுத்தினார்கள் என்பதெல்லாம் நாடறிந்த உண்மை. இப்படிப்பட்ட நிலைமையில் எங்கள் ஆட்சியில் நேர்மையாக இருக்கிறோம். நல்லவர்களாக இருக்கிறோம், வல்லவர்களாக இருக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது.

உங்கள் திறமை, உங்கள் ஆற்றல் இவை இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு நடந்திருக்கின்றன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நியமனம் பெற்ற ஒருவர் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எப்படி நியமனம் பெற்றவர்கள் தலைவர்களாக இருக்கலாம் என்று விதியை மாற்றியமைத்திருக்கிறீர்கள் என்று கேட்கிறேன். இந்தச் சட்டத்திலுள்ள சில நுணுக்கங்களை வைத்துக் கொண்டு யாரை வேண்டுமானாலும் அங்கு கொண்டு வர முடியும். பல திட்டங்களைத் தீட்ட முடியும். இப்போது அவர்கள் உங்களுக்கு எதிராக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என் தொகுதியில் ஒரு சின்ன சம்பவம் நடந்தது. எனக்கு எதிராக நின்ற ஒரு நபர் இருந்தார். அவர் ஒரு நிலவள வங்கிக்காக முயற்சி செய்தார்கள். பணம் பிரித்தார்கள். கொஞ்சப் பணம் அரசாங்கத்திற்கும் கட்டினார்கள். ஆனால் கடைசியாக அவரைப் பிடிக்காமல் வேறு ஒரு நபரை தலைவராக எடுத்து அவர்



1972 மார்ச் 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இன்று பவனி வருகிறார். இதெல்லாம் வேடிக்கையான சரித்திரம். இப்படி நடப்பதுதான் பொதுவாக இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் இயங்கவேண்டும் என்பதற்காக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக கூட்டுறவு இயக்கத்தில் காரியங்கள் எல்லாம் லாபமாக நடப்பதில்லை. சிறப்பங்காடிகள் நடக்கின்றன. சிறு அங்காடிகள் நடக்கின்றன. இவற்றில் எவ்வளவு லாபம் வருகின்றன என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

எதோ நாங்கள் வந்தகற்குப் பிறகு அதிகமாக பணத்தை ஒதுக்கி விட்டோம் என்று சொன்னால் போதாது. யாருடைய கையில் அந்தப் பணம் போய் சேருகிறது என்பதைப் பொதுமக்கள் அறிய ஆவலாக இருக்கிறார்கள். அந்தச் சட்டத்திலே இருக்கிற 'சூப்பர்செஷன், இன்ஸ்பெக்ஷன்' போன்ற காரியங்களைப் பற்றி விரிவாக எடுத்துப் பேசினார்கள். அந்தச் சட்டமானது விரிவாக மாற்றியமைக்கப்படவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். பி 2

அடுத்ததாக கதர் பற்றி நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நிறைய இருக்கின்றன. ஒரு சில மட்டுமே சொல்ல விரும்புகிறேன். கதரைப்பற்றி ஏளனமாகப் பேசினார்கள். ஏதோ ஒரு இயக்கத்தவர்களை கதரை அணிந்து கொள்கிறார்கள் என்று ஏளனத்தோடு முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசினார்கள். அது எத்தகைய பொருத்தம் இல்லாத வாதம் என்பதை இந்த மன்றமே அறியும். ஏழை எளியவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு 1½—2 ரூபாய் கிடைக்க வேண்டுமென்பதற்காக காந்திஜி அவர்கள் ஆரம்பித்தார்கள். காந்திஜியின் நினைவாக இருக்கிறது நாம் அதற்காக பெருமையடைகிறோம். காந்திஜியின் வழியில் போய்க்கொண்டிருக்கிறோம் என்று பெருமைப்படுகிறோம். நாம் அந்த இயக்கத்தைக் குறைத்துப் பேசுவது நல்லதல்ல, எவ்விதமான பெருமையும் அதனால் வராது என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் டெபுடி டைரக்டர் ஆபீஸ் இருக்கிறது. அது உயர்தர அதிகாரியின் வீடாக அமைந்து இருக்கிறது. அது பொருத்தமானதா என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டும். அதை மாற்றி வேறு இடத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி இருக்கிற காரணத்தால் வேறு ஆட்சேபணைகள் வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இலாகாவிலே எம்பிளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக நியமனம் நடத்தினால் மிகவும் பொருத்தமாக இருக்கும். அது இல்லாமல் அந்த அதிகாரத்தை அவர்கள் கையில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆங்காங்கு வேலை போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். இது பொருத்தமாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். உதாரணமாக, பல நியமனங்கள் நடந்ததைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். டிஸ்ட்ரிக்ட் காதி ஆபீசர் நியமனத்தைப் பற்றி எல்லாம் பல ஆட்சேபணைகள் பத்திரிக்கையில் வந்திருக்கின்றன. அதையெல்லாம் அமைச்சரவர்கள் நல்ல முறையில் ஆராயவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கைத்தொழில் பற்றி சொல்ல விரும்புகிறேன். இப்போது கார்பெண்டரி, பிளாக்ஸ்மித்தி யூனிட்டுகள் இருக்கின்றன. வடசேரியில் ஒரு யூனிட் மூடப்பட்டிருக்கிறது. திருச்சியில் மூடப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு எஸ். வி. நகரத்தில் மூடப்பட்டிருக்கிறது. இப்படிப் பார்க்கிற போது, ஒரு தொழில் எல்லாப் பகுதியிலும் மூடப்படவேண்டிய நிலை என்ன என்பதைச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கருங்கல் என்ற பகுதியில் கருமார், தச்சு யூனிட் இருக்கிறது. ரூ 60.000 என்று அனுமதிக்கப்பட்டது. ரிவாலிடேஷன் செய்யாமல் இது வரையில் பணம் கொடுக்காமல் சரியாக இயங்குவதற்கு இயலாத நிலையில் இருக்கிறது. அங்கே இருந்து எழுதி எழுதிக்கொண்டிருக்கிறார்கள். எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. கருங்கல்லில் இருக்கும் தச்சுப் பட்டறை கதர் போர்டின் கீழே இருக்கிறது. அங்கே இருந்து 1971-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ம் தேதியிலே ப்ரோசீடிங்ஸ் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். நாகர்கோவிலிலிருந்து திரும்பவும் இப்போது 1972-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ந் தேதியில் அந்த இலாகாவிற்கு எழுதியிருக்கிறார்கள். இந்த விவரத்தை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இலாகாவிலே இருக்கின்ற உத்தியோகஸ்தர்களை ரெகுலரைசேஷன் செய்யாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாரையுமே ரெகுலரைசேஷன் செய்வது இல்லை. நீண்ட நெடுங்காலமாக பலரும் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஏன் அவர்களை ஒழுங்கு செய்யவில்லை, செய்யக்கூடாதா ? அதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். 7—8 ஆண்டுகள் டெம்பரரியாக இருந்து அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அந்த இலாகாவினர் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கதர் இலாகாவில் வெளி டிபார்ட்மெண்டிலிருந்து அதாவது ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டிலிருந்து பலரும் வந்திருக்கிறார்கள். ப்ரோமோஷன் அடிப்படையில் தற்போது டி.கே.ஓ. இருக்கிறார்கள். அவர்கள் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர்கள். பி.டி.ஓ.வாக இருந்தவர்களை மாற்றிப்போட்டிருக்கிறார்கள். நகராட்சிகளிலே பணியாற்றியவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த இலாகாவிலே பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் அந்த உத்தியோக உயர்வு கொடுக்கக்கூடாது என்பதைப்பற்றியெல்லாம் இந்த இலாகாவினர் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல விஷயங்கள் அந்த இலாகாவைப்பற்றி இருக்கின்றன. சிலர் மீது கேஸ் இருக்கிறது. அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள். என்கொயரி நடந்து வருஷக்கணக்காகியும் அவர்களுக்கு ஒரு விடிவும் கிடைக்கவில்லை. அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஹைக்கோர்ட் தீர்ப்பையெல்லாம் கூட எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த மாதிரி சஸ்பெண்ட் செய்தால் அவர்களை ஒரு கால வரையறைக்குள்





ரீஇன்ஸ்டேட் செய்ய வேண்டும். இப்படி காலவரம்பின்றி என்கொயரி நீண்டுகொண்டு இருக்கக்கூடாது என்ற ஒரு கருத்தை நான் கூற விரும்புகிறேன்,

இப்போது பல சென்டர்கள் மூடிக்கிடக்கின்றன. நல்ல முறையில் கதர் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி ஆராயவேண்டும். கதர் இயக்கத்தைப் பற்றி நல்ல முறையில் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக வருவாய் உடையதாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது அந்தத் தொழிலுக்கு மத்திய வங்கி மூலம் கடன் கொடுப்பதாக திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது. இந்தமாதிரி வங்கிகளில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி நன்றாக செயல்படவேண்டும். நானும் 8 ஆண்டுகாலம் ஒரு கூட்டுறவு பாங்கின் தலைவராக இருந்தேன்; வேண்டுமானால் எந்தக் காலத்திலும் விசாரணை நடத்தினாலும் தயாராக இருக்கிறேன். கூட்டுறவு இயக்கத்தில் இருப்பவர்கள் களங்கம் உள்ளவர்கள்—காங்கிரஸ்காரர்கள்தான் என்ற வார்த்தையைக்கொண்டு வரவேண்டாம் என்பதற்காக நான் சவால் என்ற முறையில் எந்த விசாரணையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று கூறி நான் அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடைசியாக கதர் கிராமக் கைத்தொழில் இலாகாவைப் பற்றி மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் கூறியதால் அதைப்பற்றி நான் முதலில் பதில் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே அவர்கள் சொன்னார்கள், இப்போது கிராமத்தொழில்கள் எல்லாமே கிராமத்தில் நொடிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவர் சொல்கிற அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் எந்த ஒரு தொழிலும் தொடர்ந்து நஷ்டத்தில் நடக்குமானால் அதை சாத்த வேண்டிய நிலை வருகிறதே தவிர அதை ஒரு ஆண்டு நீடித்து நடத்தலாம், இரண்டு ஆண்டு நீடித்து நடத்தலாம், இப்படி மூன்று நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நஷ்டத்தில் வந்தால் யார் அந்த நஷ்டத்தை ஈடுகட்டுவது ? அதனால் சாத்தவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி வருகிறபோது யார் மிகவும் சங்கடப்படுகிறார்கள் என்றால் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்கள் தான் அதிகச் சங்கடப்படுகிறார்கள். அபரிமிதமான லாபம் கிடைக்கவேண்டுமென்று சொல்லவில்லை, நானும் சொல்லவில்லை, அவர்களும் சொல்லவில்லை. அவைகளாகவே நன்றாக நடக்க வேண்டும், தன் காலில் நின்றாக வேண்டும். Profit is not a bad word—but profiteering is a bad word. அந்த நிலையை அனுசரித்துக்கொண்டு போகிறோம்.

பொதுவாக எல்லா கூட்டுறவுத் தொழிலுமே தொடர்ந்து மூன்று ஆண்டு நஷ்டத்தில் நடந்தால் அவை மூடப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து மூன்று நான்கு ஆண்டுகள் நஷ்டத்திலிருந்தால் யார் அதற்கு ஈடுசெய்வது, அதோடு அப்படியே நடத்திக்கொண்டால் சென்றால் அந்தத் தொழிலும் கெட்டுவிடும், நாமும் நம் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவோம்.

[திரு. சி.பா. ஆதித்தனார்] [1972 மார்ச் 23

மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள், கதர் இயக்கத்தைப் பற்றி சிந்திக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த இயக்கத்தைப் பற்றி நான் பலமுறை சிந்தித்து இருக்கிறேன். இன்னும் என்னை விட சிறந்தவர்கள் சிந்தித்துப் பார்த்து இருக்கிறார்கள். அவர்கள் கதர் இயக்கத்தைப் பற்றிக் கூறினார்கள். அதிலே இரண்டு பகுதிகள் இருக்கின்றன. (1) கதர், (2) கிராமக் கைத்தொழில். இரண்டையும் பற்றி ஆராய மத்திய அரசு ஒரு குழு அமைத்தது. அவர்கள் ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டைப் படித்துப் பார்த்தவர்களுக்கு அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றுதான் என்பது தெரியும். கடைசி சிபார்சுகளை மட்டும் படித்து விடுகிறேன்.

கதர் என்றால் என்னமாதிரி நடைபெற வேண்டும். கதர் என்றால் ஏதோ சர்க்காவை வைத்து சுற்றிக்கொண்டே இருந்து நாள் முழுவதும் சுற்றி 4 அணா கூட கூலி கிடைக்காமல் இருக்கும் நிலைமை மாறியாக வேண்டுமென்று அந்தக் கதர் பற்றி சிந்தித்தவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அசோக் மேத்தா கமிட்டி ரிப்போர்ட்டை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஏற்றுக்கொண்டு விட்டது. மத்திய அரசு அந்தக் கதருக்கு ஆண்டுக்கு ரூ. 70 லட்சம் கொடுக்கிறார்கள். நமது மாநில அரசு ரூ. 23 லட்சத்திற்கு மேல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள், மேலும் ஏன் கொடுத்துக் கொண்டு வரவேண்டும் என்பதை நிச்சயம் சிந்திப்பார்கள்.

மத்திய அரசுக் கமிட்டி ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். கதரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் ? பழைய காலத்தில் கிசான் காதி, அதாவது கதரை எதற்காகப் பயன்படுத்தவேண்டும், அவரவர் சொந்தத்திற்கு, அவரவர் அணிந்து கொள்வதற்குப் பயன்படுத்தவேண்டும். அது ஒன்று. அல்லது அந்த ஊரிலேயே விற்றுவிடக் கூடிய தன்மையில் அதை பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக கதரைப்பற்றிச் சொல்லியுள்ளார்கள்—தற்காலத்தில் நல்ல முன்னேற்றமான முறைகளைக் கைக்கொண்டு, இயந்திர சாதனத்தைக் கொண்டு கதர் உற்பத்தி செய்யவேண்டும். "டெக்னிகல் அட்வான்ஸ்மெண்டு, ப்ரோகிரெசிவ்" என்று எழுதியிருக்கிறார்கள். "டெக்னாலாஜிகல் இம்ப்ரூவ்மெண்ட்ஸ்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

கதர் என்று சொன்னால், அதை ஒரு மோட்டார் வைத்து, விசையை வைத்து, எப்படி ஓட்ட முடியும் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் ரொம்ப சிந்தித்திருப்பார்கள். இவர்கள் சொல்லியிருப்பது, மோட்டாரை வைத்து ஓட்டுங்கள் என்றே சொல்லியிருக்கிறார்கள். வாசிக்கிறேன். அதனுடைய ரெகமெண்டேஷன், அசோக் மேத்தா கமிட்டி ரெகமெண்டேஷன். மத்திய அரசு அதை ஏற்றுக்கொண்டு விட்டது என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். வெகு நாட்களாக ரூ. 70 லட்சம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்றைக்காவது ஒரு நாள் கதர் என்பது தன் காலில் நிற்கவேண்டும். டிரெடிஷனல் காதி, பழைய காதி, அவர்கள் வீட்டிலேயே நூற்று, அவரவர் மனைவி, மக்கள் கட்டிக்கொள்ளவேண்டும். நான் படிக்கிறேன்.



[1972 மார்ச் 23 [திரு. சி.பா. ஆதித்தனார்]

" Traditional khadi programme should be oriented towards the individual self-use and village self-sufficiency

அதைத் தவிர டிரெடிஷனல் காதி என்பது மேற்கொண்டு தேவையில்லை. வருந்தத்தக்கது. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு இது கொஞ்சம் அதிருப்தியைத் தரக்கூடியதாக இருக்கும் ஒரு வேளை.
Production of kadhi for sale.

விற்பனைக்கு வருகிற காதி

Production of khadi for sale should in future be organised with the help of yarn spun on new model charkhas .. .. .. ..

டெக்ஸ்டூல் சர்க்கா என்று 12 கதிர்கள் கொண்ட அந்தச் சர்க்காவைத் தான் பயன்படுத்தி, அந்தக் கதரைத் தான் விற்பனைக்குக் கொண்டு வரவேண்டும். சொந்தத்திற்கே பயன்படுத்திக்கொள்கிற தன்மையாக இருந்தால், சொந்தமாக நாமே நூற்றுக்கொண்டு நாமே அணிவதில்

எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. விற்பனைக்கு காதி உற்பத்தி செய்வது, Production of khadi for sale should in future be organised with the help of yarn spun on new model charkhas. There should be free scope for introduction of technological improvements and use of power .. "யூஸ் ஆஃப் பவர்", மோட்டார் வைத்து கதர் உற்பத்தி பண்ணவேண்டும், இயந்திரத்தைக் கொண்டு உற்பத்தி செய்யவேண்டும், அப்படி உற்பத்தி செய்தால்தான் தன் காலிலேயே நிற்கமுடியும்.

அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். எப்பொழுதோ மத்திய சர்க்கார் எங்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டார்கள். ரூ. 70 லட்சம் தொடர்ந்து வரும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கதர் தன் காலில் நிற்கவேண்டும். அதைத்தான் செய்துவருகிறோம். அம்மையார் அவர்கள் அதைபோய் பார்க்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன். திருப்பூரில் பரமாந ஊரில் மோட்டாரில் சுற்றி கதரை எவ்வளவு நன்றாக உற்பத்தி செய்கிறார்கள் என்பதை, நீங்கள் கண்ணால் பார்க்கவேண்டும். அதை ஓட்டுகிற சங்கீதமானது காதுக்கு இனிமையாக இருக்கும்.

அப்படி ஒருவேளை அம்மையார் அவர்களுக்கு அங்கே போவதற்கு அவகாசம் இல்லாமல் இருக்குமானால் குறளகம், குறளகம் என்று இன்றைக்கு என் உயிரை எடுத்தீர்களே, அந்தக் குறளகத்தில் போய் பார்த்தால் அங்கே இவ்வாறு இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப் பட்ட, அந்த நூலில் நெய்யப்பட்ட சட்டை ரூ. 5-க்கு விற்கிறார்கள் (குறுக்கீடு) அரைகை சட்டை, சிலாக், கால் சட்டை ரூ. 5. அவ்வளவு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. அந்தச் சட்டையைப் போய் ஏன் வாங்கக்கூடாது ?

அதைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். அந்த இலாகாவை நான் நிர்வகிக்கின்ற வரையில் நான் நிச்சயமாகச் சொல்வேன், எந்த ஒரு தொழிலும் லாபத்திற்காக, லாப நோக்கைக் கொண்டு இருக்க

வேண்டும் என்றுதான் சொல்வேன். அது தன் காலில் நிற்க வேண்டும் என்ற அடிப்படை தத்துவத்தில்தான் நடத்துவேன். டாக்டர் ஹண்டே அவர்கள் இல்லை. புகார்கள் சொல்லியிருக்கிறாரே தவிர அவர் இப்பொழுது இங்கு இல்லை. நான் விரிவாக பதில் சொல்வதற்கு அவர்கள் இருந்து கேட்டிருக்கவேண்டும். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? கதர் இலாகா என்றால் காந்தி சொன்னபடி எல்லாம் தர்மத்துக்குத்தானே நடக்கவேண்டும், இவர்கள் வந்து என்ன கணக்குக் கேட்பது, அப்பன் வீட்டுச் சொத்தா, இவர்கள் சொந்த வீட்டுச் சொத்தா, இவர்கள் வந்து கேட்க வருகிறார்கள் என்று கேட்கிறார்கள்.

கதர் இலாகாவை நான் நிர்வகிக்க வேண்டும் என்ற பெருத்த ஆசை எனக்கு இல்லை. நான் நிச்சயமாகச் சொல்லிவிடுகிறேன். ஏர்கண்டிஷன்என்பது ரூ. 5·000 வாடகைஎன்பது இப்படிப்பட்ட அவதூறு நிச்சயமாக நிற்கவேண்டும். மாடியில் போய் சாப்பிடுவது கூடவா குற்றம்? கதர் இலாகாவின் பணத்தை எடுத்தாலே தான் குற்றம். ரெபிரஷ்மெண்ட் சாப்பிட்டால் குற்றமா? சாப்பிடாமல் பட்டினியாக இருக்க வேண்டுமா? டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்கிறார். வேலையைச் செய்துவிட்டு, சாப்பிடுவது கூடவா குற்றம்?

இவர்களுக்கு இந்தத் தன்மை ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை நான் தெளிவாகச் சொல்கிறேன். கதர் போர்டு என்று தனியாக இருக்கிறது. அதற்கு சர்வ அதிகாரம் கொடுத்து, அவர்களே ஒரு வைஸ்–பிரசிடெண்டை நியமிக்கிறார்கள். சாதாரணமாக அப்பாயிண்டுமெண்டு கமிட்டி இருக்கிறது. அதை மாற்றுவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம். அப்பாயிண்டுமெண்ட் கமிட்டி இருக்கிறது. அதற்கு நியமனம் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. யாண்டிற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். எப்படி எல்லாம் நடக்கிறது, இன்று குமாஸ்தா, மறு நாள் கெஜெடெட் ஆபீசர், அதெல்லாம் எப்படி நடக்கிறது என்று கேட்டார்கள். அந்தச் சட்டத்தில் நிச்சயம் மாறுதல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தை நான் கொண்டிருக்கிறேன். அவ்வாறு இருக்கக்கூடாது.

மேலும் பினான்ஸ் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. ஒரத்தநாட்டிலுள்ள கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்கின்ற சங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். கொடுக்கவில்லை. டாக்டர் ஹண்டே அவர்கள் ஃபைலை பார்த்துவிட்டு சொல்கிறார். கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்கின்ற சங்கத்தைப்பற்றி அந்தத் தொகுதி உறுப்பினர் பேசினால் நலமாக இருக்கும். நமக்கு மிக நன்றாகத் தெரியும். அது மிகுந்த மோசமாக நடக்கிறது அவர்களே குறிப்பிலே எழுதியிருக்கிறார். அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர், முன்னால் கூட்டுறவுத் துறையில் இருந்தவர், அதற்குக் கொடுக்கக் கூடாது என்று எழுதி இருக்கிறார். பினான்ஸ் கமிட்டி ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும், ஒரத்தநாடு கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்யும் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறது. அங்கே போய் பார்த்தால் உரல் இருக்குமா உலக்கை இருக்குமா என்பது தெரியாது. உரலும் உலக்கையும் இல்லாமலே கைக்குத்தலரிசி உற்பத்தி செய்யும் சங்கம் ஒன்று இருக்குமோ என்று நான் கருதுகிறேன்.



அதேமாதிரி கும்பகோணம் (சிரிப்பு), கும்பகோணத்தில் ஒரு கைக்குத்தல் அரிசி சங்கத்திற்கு ரூ. 20,000 கொடுக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்கு டைரக்டர்கள் யார் என்றால், அம்மணி அம்மாள், சின்னப்பொண்ணு என்று இப்படி மனைவி மக்களை தான். அந்தச் சங்கத்திற்கு ரூ. 20,000 கொடுக்க வேண்டுமென்று எழுதினால் நாம் கொடுப்பதா? கொடுக்கவேண்டும் என்று டாக்டர் ஹண்டே சொல்லப்போகிறார்கள். ஃபைல் தெரியும். யார் சொன்னது? உள்ளே இருந்து குழிபறிக்கின்ற தன்மை இருக்கும்பொழுது, அதைப் பற்றி எனக்கு மிகுந்த வெறுப்பு இருக்கிறது. அதைப்பற்றி குறிப்பு தலைமை அமைச்சர் அவர்களுக்கும், சட்ட அமைச்சர் அவர்களுக்கும் நான் அனுப்பியிருக்கிறேன்.

இதை நடத்தவேண்டுமென்றால், நிச்சயம் பம்பாயில் எப்படி சட்டம் இருக்கிறதோ அதைப்போல் நடத்தவேண்டும். கதர் போர்டு ஒன்று இருக்கவேண்டும். அதிலே ஊழியர்கள், சிப்பந்திகள் இருக்கவேண்டும். அவர்கள் அன்றாட நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன் என்று 30, 35 பேர்கள் கொண்ட அமைப்பு தனியாக இருக்கவேண்டும். அதிலே அதிகாரப் பற்று இல்லாதவர்கள் இருப்பார்கள். அவர்கள் கொள்கையைப் பற்றி மட்டும் முடிவு செய்வார்கள். அன்றாட நிர்வாகத்தில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள், அதிலே அவர்கள் இருக்கமாட்டார்கள் ஒரு பத்திரிகைக்கு வாரம்தோறும் 200 ரூபாய் கொடுப்பதாக முடிவு செய்து அனுப்புகிறார்கள். வாரந்தோறும் ஒரு பத்திரிகைக்கு விளம்பரத்திற்காக ஏன் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு வந்து பார்க்கவேண்டாமா? ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்கவேண்டாமா? நான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தை திருத்தி, அதை மாற்றி அமைக்கவேண்டிய அவசியம் நிச்சயமாக இருக்கிறது.

அவர்கள் என்ன சொல்கிறார்கள்? ஐந்தாவது மாடியில் போய்—ஐந்தாவது மாடியென்றால், மாடியில் மேலே போகப் போக வாடகை குறையும்—ஐந்தாவது மாடியில் போய் சாப்பிடப்போகிறார்களே, ரெபிரஷ்மெண்டு சாப்பிடப்போகிறார்களே' என்று கேட்டார்கள். பலமுறை சொல்கிறேன். அங்கேபோய் ரெபிரெஷ்மெண்டு சாப்பிடுவதற்கு எனக்கு ஆசையில்லை. நான் நடத்துகிற வரையில் ஒழுங்காக நடத்தவேண்டும். திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் 'திரும்பத்' திரும்ப ஏன் சொல்கிறீர்கள்" என்று டாக்டர் ஹாண்டேயை தடுத்துப் பார்த்தார்கள். ஆனால், அவர் கேட்கவில்லை. ஒரே எண்ணம், ஐந்தாவது மாடியில் உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டால் நன்றாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு அவர்கள் பேசுகிறார்களே ஒழிய, அந்தச் சாப்பாட்டுக்கு அரசாங்கமோ அல்லது காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷனோ எனக்கு பணம் கொடுக்கவில்லை. எனக்கு சாப்பாட்டுக்கு இல்லையா? சாப்பாட்டுக்குக் கூடவா நான் தவித்துக் கொண்டிருக்கிறேன்? அங்கே ரெபிரெஷ்மெண்டு கொடுக்கிறோம் என்றால், அங்கு என்னோடு வேலை செய்கிறவர்களுக்கு, குமாஸ்தாக்களுக்கு, கீழ்நிலை ஊழியர்களுக்கு, நேர்முக ஊழியர்களுக்கு கொடுக்கிறோம். அதற்கு ஒரு பைசாகூட காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டு பணத்திலிருந்து எடுக்கவில்லை. நான் அப்படி எடுப்பதாக இருந்தால் எப்படி வாழ முடியும்?

அது கிடையாது என்ற உண்மையை டாக்டர் ஹாண்டே அவர்கள் இருந்தால் திருத்தமாகச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். நடத்துவ தாக இருந்தால் எப்படி நடத்தவேண்டும்? தெளிவாக சட்ட அமைச்ச ருக்கு எழுதியிருக்கிறேன். ஆக, இப்படிபட்ட சட்ட மாறுதல் வேண்டும். அதிகாரிகள் அன்றாட நிர்வாகத்தைக் கவனிக்கவேண்டும். அதிகாரப் பற்றில்லாதவர்கள் கவுன்சிலாக இருந்து கொண்டு, புத்திமதி சொல்லும் அளவில், "டாலிசி" வகுக்கும் அளவில் இருந்து பார்க்கவேண்டும். அப்படி நடக்குமானுல் இது மிக நன்ருக நடக்கும். இதில் எந்தவித நட்டமும் அடையத் தேவையில்லை.

காதியைப்பற்றிச் சொல்லுகிறுர்கள். நண்பர் பொன்னப்ப நாடார் சொல்வது, "கர்ண கடூரமாக இருக்கிறது விலைசத்தறி வைத்து ஓட்டுவது என்ருல்..... "நம்பக்கூடமாட்டார்கள். அப்படிச் சொல்லியிருக்கிறுர்கள் என்பது மட்டுமல்ல. அதை ஒப்புக்கொண்டும் இருக்கிறுர்கள். எப்படிப் பட்டவர்கள்? தேபர் போன்றவர்கள், விஞேபா போன்றவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறுர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காதி போர்டு பற்றிச் சொன்னுர். பம்பாயில் இருப்பது மாதிரி ஏற்பாடப்படும் என்று, இங்கே "வாட்டர் போர்டு, டூரிஸ்ட் போர்டு" என்று போட்டிருக்கிறுர்களே அந்தமாதிரி போர்டு. அதை "மினிஸ்டிரிக்கும்" போர்டுக்கும் சம்மந்தமில்லாமல் ஒரு தனி "நான் அபீஷியல் சேர்மேனை"ப் போட்டு இயக்க என் கஷ்டமாக இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** அதனுல் தான் சொல்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது. மத்திய அரசு குழு காதி பற்றி ஆராய் வதற்கு எதிர்க் கட்சித் தலைவர்கள் சிந்திக்கவேண்டுமென்று சொன்னுர் கள். பலகாலம் சிந்தித்து சிந்தித்துப் பார்த்து தனிப்பட்டவர்கள் தங்கள் கதரை அணிந்து கொள்ளுங்கள். ஆனுல் விற்பனைக்கு வருகிறது இன் னெரு கதர்—அதற்கு பெயர் "நியூ மாடல் காதி" என்று பெயர் வைத்து அது விசையில் ஓடுகிறது. 5 ரூபாய்க்கு கிடைக்கும். வாங்கிக்கொள்ள லாம்.

அடுத்தாற்போல், கைத்தொழில்கள். இரண்டு கணக்குகள் இருக்கின்றன. "காதி அண்ட் வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ்" என்று. அதில் "காதி" அதற்கு தனிக் கணக்கு. "வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ்" இதற்கு தனிக் கணக்கு. அதற்கு தனி நிதி. இதற்கு தனி நிதி. அந்த "இண்டஸ்ட்ரீஸ" பற்றி 9-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறுர்கள். இண்டஸ்ட்ரீஸ் என்ருல் கைக்குத்தல் நடத்தக் கூடாதா? ஏன் அதை மூடிவிட்டீர்கள் என்று கேட்கிறுர்கள். "ரூரல் இண்டஸ்ரீஸ் ப்ரோகிராம்" இதுதான் அவர்கள் முடிவாகச் சொல்லி யது. இப்போது எத்தனையோ கைத்தொழில்கள் இருக்கின்றன. கைக்குத் தல், செருப்பு தைப்பது, தோல் பதனிடுவது இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

The Rural Industries Programme should be concentrated primarily on the development of such of the rural industries as offer reasonable prospects of becoming viable after certain period.



எந்தத் தொழில்கள் வெகு சீக்கிரமாக தன்காலில் நின்று தனித்து இயங்க முடியுமோ அப்படிப்பட்ட தொழில்களை நடத்துங்கள். கைக்குத்தல் அரிசி தன் காலில் நடக்குமா ? இதில்கூட வருத்தப்படுகிறுர்கள். செக்கு எண்ணெ தன் காலில் நிற்குமா? அப்படிப் பார்க்கவேண்டி இருக்கிறது. இயந்திரத்தைப் பயன்படுத்துவதில் எந்தவிதத் தவறுமில்லை. அதில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கவேண்டும் என்று சொல்கிறுர்கள். மத்திய அரசின் இந்தக் குழு 1968-க்கு முனபு நியமிக்கப்பட்டது. பல ஆண்டுகள் சிந்தித்துப் பார்த்து அவர்கள் செய்த சிபாரிசுப்படி என்ன கைத்தொழில்கள் செய்யலாம் என்று சொன்னதோ அவைகளை நாம் நல்ல முறையில் நடத்திக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இல்லையென்ருல், ஆண்டுதோறும் நமது தமிழக அரசு 23 லட்ச ரூபாய் கொடுததுக் கொண்டிருக்கவேண்டும். அப்படிக் கொடுப் பதாக இருந்தால், கைத்தொழில் லாபத்துடன் நடக்கவேண்டுமென்று நண்பர் பொன்னப்ப நாடார் சொல்லவில்லையா? லாபமில்லாமல் நடத்த வேண்டுமானுல், "என் மக்கள் வரிப்பணத்திலிருந்து ஆண்டுதோறும் 23 லட்சம் ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறீர்கள்? என் கொடுக்க வேண்டும்?" என்று ஹாண்டேயைப் போன்றவர்கள் சொல்லக்கூடும். கையெழுத்து வாங்கினுர்கள். அத்தனையும் எனக்குத் தெரியும். அவர்களைக் கேட்கிறேன். இப்படி தொடர்ந்து நஷ்டத்தில் "நீங்கள் சொல்கிறீர்கள் இது காந்தியால் ஏற்படுத்தப்பட்டது; ஆகையினுல் தர்மத்திற்கு நடத்தவேண்டும்" என்று. அதை தர்மத்திற்கு கொடுப்பது, மக்களுடைய வரிப்பணத்தை எடுத்து தர்மத்திற்குக் கொடுப்பது என்பதற்கு நாங்கள் நிச்சயமாக.....

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கையெழுத்து வாங்குகிறுர்கள் என்று கூறினுர். யார் கையெழுத்து வாங்குகிறுர்கள்? அவருடன் இருப்பவர்களா? அல்லது இந்தப் புறம் இருக்கிறவர்களா? மன்றத்திற்கு அதை விளக்கு கிறீர்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** முழுவதும் தெரியாது. இருந் தாலும் அதைச் சொல்ல விரும்பவில்லை. கூட்டுறவு இலாகா நிர்வாகத் தில் முழுக்க முழுக்க அரசு—நாம் ஏற்றுக்கொள்வதாக இருக்கின்ற தொழில் தன் காலில் நிற்கக் கூடியதாக இருக்கவேண்டும். மற்றவை களை கொஞ்சம் கொஞ்சமாக சாத்தி விடுவோம் இதைச் செய்வதற்கு, இப்படிச் செயல்பட அடிப்படையில் சட்டத்தில் மாறுதல் தேவை. அதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நண்பர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப் பற்றி நான் வருந்தவில்லை. ஏனென்ருல் அவர்கள் என்னைக் குத்திப் பார்க்கலாம் என்று குத்தினுர் கள். வேறு ஒன்றுமில்லை. அப்போதே சொன்னேன். இப்போது அதை விட தெளிவாக நான் சொல்ல முடியாது. அதற்கடுத்தாற்போல், காங்கிரஸ் கட்சி—நான் சிண்டிகேட் என்று சொல்லவில்லை— காங்கிரஸ் என்ற பெயர் சொல்லலாமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காங்கிரஸ் என்ற பெயரே சொல்லலாம்.

[1972 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியே சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அம்மையார் காங்கிரஸ் என்று சொல்லலாம் என்றார்கள். துணைத் தலைவரும் சொன்னார்கள். ஜனநாயகம் இல்லை என்று சொன்னார்கள். மெத்த வருந்துகிறேன். ஏனென்றால், கூட்டுறவுத் துறையில் ஜனநாயகம் இப்போதுதான் நன்றாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நமக்கும் தெரியும். குறிப்பாக ஒன்றிரண்டை எடுத்துக் கொள்ளுங்கள்.

மத்திய வங்கிகள் இருக்கின்றன. அவற்றில் இப்போது ஜனநாயகம் இல்லையா ? முன்னர், கடந்த 50, 60 ஆண்டுகளாகச் செயல்பட்ட மத்திய வங்கிகளில், இதுவரை ஒரு தாழ்த்தப்பட்ட மகன் அதில் இயக்குநராக இருந்தது கிடையாது. நமது அழகிரிசாமி மத்திய வங்கியில் இயக்குநராக இருக்கிறார். அவரைக் கேட்டுப் பாருங்கள் இப்போது 2, 3 பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு மத்திய வங்கியிலும் நிச்சயமாக இயக்குநராக இருக்கவேண்டும் என்று நாங்கள் சட்டம் இயற்றி கொண்டு வந்திருக்கிறோம் என்றால், ஜனநாயக அடிப்படையில் இது இயங்குகிறதா இல்லையா என்றும், இது ஏழை—எளியோர் அரசா இல்லையா என்றும் நீங்கள் பாரபட்சமில்லாமல் சிந்தித்து முடிவு செய்யவேண்டும். முன்னால் யாராவது செய்தார்களா?

அதனால்தான் சொல்லுகிறேன், ஜனநாயக அடிப்படையில்தான் இப்போது நடைபெறுகிறது என்று. மேலும் சொல்லுகிறேன், காரணமில்லாமல் சில கூட்டுறவுக் கழகங்களை—சங்கம் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்—கலைத்து விடுகிறார்கள் காரணமில்லாமல் என்று சொன்னார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், ஒரு கூட்டுறவு கழகத்தைக் கலைக்கவேண்டுமென்றால், முதலில் இன்னின்ன காரணம் என்று சொல்லி நோட்டீஸ் விட்டாக வேண்டும். அந்த நோட்டீசுக்குப் பதில் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும். ஆனால் காரணமில்லாமல் எந்த ஒரு கூட்டுறவுச் சங்கமோ அல்லது வங்கியோ இதுவரை கலைக்கப்படவில்லை. காரணம் சொல்லி, அதற்குப் பிறகும், அவர்கள் 'ரிட்' போட்டு—ரிட்போடுவது அவ்வளவு இலகுவாக இருக்கிறது—அதற்கு பின் கலைத்தது நியாயம் என்று தீர்ப்புச் சொல்லப்பட்டு, அப்படித்தான் பொதுவாகக் கலைக்கப்பட்ட காரியங்கள் நிறைவேறி வருகின்றன. நீதி மன்றம் சொன்ன தீர்ப்பு கூடவா தவறாக இருக்கிறது?

நீதி மன்றத்திலே வழக்கறிஞர்களாக இருப்பவர்கள், கலைக்கப்பட்ட கிட்டத்தட்ட எல்லாக் கூட்டுறவுக் கழகங்களும், நீதி மன்றத்தில் போய் கொஞ்சம் அசைத்துப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார்கள். போகாமல் வருவதில்லை. இதுவரை எத்தனையோ ஆண்டுகளாக, 2, 3 ஆண்டுகளாக எத்தனையோ முறை கலைத்திருக்கிறோம்—அதை எதிர்த்து நீதி மன்றத்திற்கு போய் கலைத்தது தவறு என்று யாரும் நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பெற்றது கிடையாது. அத்தனையும் சரி என்ற



1972 மார்ச் 23] [திரு. சி. பா. ஆதித்தனார்

தீர்ப்பை பெற்றிருக்கிறோமே தவிர, தவறு என்று எப்போதுமே பெற்றது கிடையாது. ஏறத்தாழ இது வரை 160, 170 கேஸ்கள்—வழக்குகள், நீதி மன்றத்தில் நடந்திருக்கின்றன. ஆனால் நான் பார்த்த வரையில் எனக்குத் தெரிந்து ஒன்றில்கூட கூட்டுறவுத் துறைக்கு எதிராகத் தீர்ப்பு அளித்ததில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள், காரணம் நாங்கள் அவ்வளவு நியாயத்துடன், நேர்மையுடன், நீதியுடன் நடத்துகிறோம் என்று அதற்கு பெயரே தவிர, வேறு ஒன்றுமல்ல.

மு.ப. 2·30

மாண்புமிகு உறுப்பினர்கள் கந்தசாமி, ராஜகோபால், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோரும், இன்னும் பலரும் இந்தத் துறையைப் பாராட்டிப் பேசினார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையை எதிர்த்தும் சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ம. பொ. சி. அவர்களைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லிவிட்டேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமான வட்டிக்குக் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். கிராமச் சங்கங்களும் அதிகமான வட்டிக்குக் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு வட்டி என்றால் 9 சதவிகித வட்டி என்று சொன்னார்கள். அது தவறான தகவல். 8.7 சதவிகித வட்டிக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

ரிசர்வ் பாங்கிலிருந்து மாநிலக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 4 சதவிகித வட்டிக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் லாபத்திற்காக ½ சதவிகிதம் ஏற்றி, 4½ சதவிகிதத்திற்கு மாவட்டங்களிலுள்ள மத்திய பாங்குகளுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் 2 சதவிகிதம் ஏற்றி, 6½ சதவிகிதத்திற்குக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் 2.2 சதவிகிதம் ஏற்றி, 8.7 சதவிகிதத்திற்கு மக்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ரிசர்வ் பாங்க் 4 சதவிகிதத்திற்குக் கொடுக்கின்ற கடன், விவசாயிகளைச் சென்று சேரும்போது இரண்டு மடங்குகளுக்கு மேலாகி 8.7 சதவிகிதமாகிவிடுகிறது. அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்று தட்டாகப் போய் சேருகிறது. அதனால் 4 சதவிகிதம் வட்டி, 8.7 சதவிகிதமாக உயர்ந்துவிடுகிறது. ஆகவே, இதைக் குறைப்பதற்கு என்ன வழி என்பதை நாங்களும் பரிசீலனைச் செய்து பார்த்தோம். இந்த மூன்று தட்டாக வருவதை, ஒரு தட்டைக் குறைத்தாலும் 2 சதவிகிதம் வட்டி குறையுமே, அதைச் செய்யலாமா என்றும் யோசித்தோம். ரிசர்வ் பாங்கிலிருந்து பணம் கடன் கொடுக்கும்போது மூன்று தட்டாகத்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். பணம் கொடுப்பவர்கள் என்ன சொல்கிறார்களோ அதற்கேற்பத் தான் நாங்களும் ஆடவேண்டியிருக்கிறது.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1972 மார்ச் 23

**He who pays the piper can call the tune.**

பாங்க் கமிஷன் ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள், இந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டுமென்று வாய் கூசாமல் சொன்னார்கள். நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். பாங்க் கமிஷன் தட்டைக் குறைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அகில இந்திய ரீதியில் இப்படித்தான் இருக்கிறது. அந்த முறையைத் தான் மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் நாங்களும் வேறு வழியில்லாமல் அதை ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக என்னுடைய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றைப் பாராட்டிப் பேசினார்கள். அதாவது கதர் துணியை மில்லில் தயாரிப்பது பற்றிப் பாராட்டினார்கள். மில்லில் 60-ம் நம்பர் நூலில் துணி நெய்கிறார்கள். ஆனால் இந்த கதர் 20-ம் நம்பர் நூல்தான். மோட்டாரகம். அதை மில்லில் நெய்வதனால் நல்ல துணியாகவும் கிடைக்கும் என்று பாராட்டினார்கள். நான் அதை வரவேற்கிறேன்.

**திரு. கே.டி.கே. தங்கமணி :** அன்று உணவு அமைச்சரவர்கள் சீனியைப் பற்றிச் சொல்லும்போது 60 சதவிகிதம் கூட்டுறவுத் துறை மூலமாகவே விநியோகம் செய்யப்படுகிறது என்றும், டி. யு. சி. எஸ். மூலம் விற்பனைச் செய்வதில் மோசடி நடப்பதாகவும் சொன்னார்கள். தொடர்ந்து கூட்டுறவுத் துறையின் மூலமாகவே விநியோகம் செய்யப்படுமா அல்லது வேறு வழிகளை கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விஷயத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரையும், வருவாய்த் துறை அமைச்சரையும் சண்டைபோடத் தூண்டிவிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, அதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் தண்டராம்பேட்டை சொசைட்டி நல்லமுறையில் நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். திரு. நாகராஜன் அவர்கள் கடன் கொடுப்பதில் சில சங்கடங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு கிணற்றுக்கும், இன்னொரு கிணற்றுக்கும் ரொம்ப இடைவெளியிருந்தால்தான் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இது உலக பாங்க் சம்பந்தப்பட்ட விஷயம். உலக பாங்கோடு அந்தமாதிரித்தான் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளர் கையெழுத்திட்டிருக்கிறார், மத்திய அரசு கையெழுத்திட்டிருக்கிறது. மாநில நிலவள வங்கித் தலைவர் திரு. சண்முகம் அவர்கள் அமெரிக்காவுக்குப் போய கையெழுத்திட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இரண்டு கிணறுகளுக்கிடையில் எவ்வளவு தூரம் இருக்கவேண்டுமென்று ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி நடத்தால்தான் உலக பாங்கின் கடன் கிடைக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த நிலைமையால்தான் நிலவளவங்கியால் கடன் கொடுக்க முடியாமல் இருப்பதை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இத்தனை அடி தூரம் இருக்க வேண்டும் என்று இருப்பது சரியானது என்று நான் கருதுகிறேன். காரணம், இரண்டு விவசாயிகள் இருக்கிறார்கள். ஒருவருக்கு கிணறு இருக்கிறது. அடுத்தவர் 10 அடி அல்லது 20 அடி தூரத்தில் கிணறு வெட்டுகிறார் என்றால் அதற்கு லோன் கேட்பார். லோன் கொடுக்கப்படும். கிணற்றை வெட்டி பம்புசெட்டு வைத்து தண்ணீர் இறைக்கத் தொடங்கினால், முன்னால் இருந்த கிணற்றில் தண்ணீர் வற்றிப்போகும். உடனே அவர் கிணற்றை ஆழப்படுத்த லோன் கேட்பார். அவருக்கும் கடன் கொடுக்கப்படும். இப்படியே போய்க்கொண்டிருந்தால் இரண்டு பேருக்கும் தண்ணீர் கிடைக்காமல் சண்டை போட்டுக்கொள்வார்கள். சாதாரணமாக ஒரு பழமொழியாகக்கூடச் சொல்வார்கள். இரண்டு விவசாயிகளைக் கெடுக்கவேண்டுமென்றால், பக்கத்தில் பக்கத்தில் இரண்டு கிணறுகளை வெட்டச் செய்தால் போதும். அதனால் அழிந்து போவார்கள் என்பதாகச் சொல்வார்கள். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இறவைப் நீர்பாசன கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருக்கிறோம்.

சிறு சிறு நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் இந்தச் சங்கத்தில் சேர்ந்து பயன் பெறலாம். ஆங்காங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள், விவசாயிகள், ½ எக்கர், 2 எக்கர், 3 எக்கர் நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கங்களே கதிமோட்சம் அளிப்பதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடன் வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கடன் வழங்கப்பட்ட பின்னால் வேலைகள் முடிவடைவதில் தாமதம் ஆவதாகவும் சொன்னார்கள். அந்த தாமதங்களைத் தவிர்ப்பதற்குத் துரிதமான நடவடிக்கைகளை இப்போது மேற்கொண்டிருக்கிறோம். இப்போது கடன் வழங்கப்படும் முறை சிறந்த முறை, உலக வங்கியும் அதை ஏற்றிருக்கிறது. வேகமாகக் கிணறுகளை வெட்டிக் கொடுப்பதற்காக யூனியனில் எஞ்சினீயரிங் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம்.

இரண்டு, மூன்று நீர்ப்பாசனக் கழகங்களுக்கு ஒரு எஞ்சினீயரிங் பிரிவு போதுமானது. விரைவாகக் கடன் வழங்கப்படுவதற்கு ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்களை நியமித்திருக்கிறோம். எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் கொடுப்பதற்கு வகை செய்திருக்கிறோம் ஆக மூன்று வழிகளில் (Three-pronged drive) இந்தப் பணியை நிறைவேற்றி வருகிறோம். காலதாமதம் செய்வதற்கு நியாயமே இல்லை.

நாங்கள் ஆண்டுதோறும் ரிசர்வ் பாங்கிலிருந்து கொடுக்கக்கூடிய பணத்தை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதை அவர்களிடம் சொன்னால் கேட்கமாட்டார்கள். அதனால் அபராதம் (Commitment Charges) கொடுத்து வருகிறோம். ஆகையால் வேகமாக செயல்பட்டு வருகிறோம். இப்போது இரண்டாயிரம் இரிகேஷன் சொசைட்டிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன எல்லா சொசைட்டிகளும் செயல்பட்டு வருகின்றனவா என்று கேட்டார்கள். எல்லா சொசைட்டிகளுமே நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எட்ட இருப்பவர்கள் சொல்கிற குறைகளை நீங்கள் நம்பவேண்டாம். இந்த நீரேற்றுப் பாசனக் கழகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நீங்கள் பார்க்க விரும்பினால், திரு. பொன்னப்பநாடார், திரு. சுப்பு போன்றவர்களுக்குச் சொல்கிறேன், நானே அழைத்துக்கொண்டு போய்க் காட்டத் தயாராய் இருக்கிறேன். அவை எல்லாம் மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது சரியான முறையில் இயங்கவில்லை என்பதாக டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கன்னியாகுமரி மாவட்ட நிலை அது. அந்த நிலைமையை மாற்றவும் நான் முயற்சி செய்துகொண்டு இருக்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய மாநிலத்தில் 3 கோடி ஏக்கரா நிலம் இருக்கிறது. அவற்றில் பத்தில் ஒரு பங்குதான் நீர்ப்பாசனம் பெற்றிருக்கிறது. பாக்கியுள்ள 90 பங்கு நிலங்களும் நீர்ப்பாசனம் பெறவேண்டும் என்கிற அடிப்படையில்தான் நாங்கள் இந்த நல்ல திட்டத்தையே கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தத் திட்டம் செங்கல்பட்டில் 4 இடங்களில் மிக அழகாகச் செயல்படுகிறது. நீங்களே அங்கே போய் அந்த விவசாயிகளிடமே பேசி உங்கள் சந்தேகங்களை எல்லாம் தீர்த்துக்கொள்ளலாம். அவர்கள் பினாமி விவசாயிகளா, உண்மை விவசாயிகளா என்று தெரிந்து கொள்ளலாம். தவறுகள் நடக்கின்றன என்று அவற்றைச் சென்று பார்க்காமலேயே சொல்லிவிட்டுப் போகக்கூடாது. காரணம் அவை எல்லாம் நன்றாகச் செயல்பட்டு வருகின்றன.

திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். கிணறு எடுத்துத் தண்ணீர் வரவில்லை என்றால் என்ன செய்வது என்றார்கள். அதைப்பற்றி நாங்களும் யோசிக்காமல் இல்லை. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் பக்கம் 16ல்

The State Land Development Bank has been required, further, to set apart 10 per cent of its net profits towards a Failed Wells Fund to be utilised for recouping the losses sustained by the borrowers on account of infructuous wells . . .

என்பதாக அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அது பற்றிய விதிகள் கூட கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு விளக்கங்கள் கொடுத்த பிறகும் உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் அவற்றைத் திரும்பப் பெற்று இந்த மானியத்தை ஆதரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** திருநெல்வேலி, திருவாரூர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மோசடி வழக்குகள் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அந்த வழக்குகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பீ பீல்டுமென் சம்பந்தமாக நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நேரமில்லாத காரணத்தினால் மறதியில் அதைப்பற்றிப் பேசவில்லை. அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பீ பீல்டுமென்களுக்காக நானும் வருந்துகிறேன் அது என்னுடைய கூட்டுறவு இலாக்காவும் இல்லை. கிராம கைத்தொழில் இலாகாவும் இல்லை. உள்ளாட்சித் துறையின்கீழ் முன்பு ஒரு பிரிவாக இருந்திருக்கிறது. 1967-இல் அவர்களை நிறுத்தினார்கள். அதனால் வேலை இழந்தவர்களுக்குப் போக்குவரத்துத் துறையில் வேலை அளிப்பதற்குக்கூட வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதற்குமேல் தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் இத்துடன் முடிவுற்றது.

நிதிக் கோரிக்கை எண் 19-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. க. சுப்பு, திரு. சௌடி. எஸ்.சுந்தரபாரதி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால், அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

• நிதிக் கோரிக்கை எண். 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,58,73,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 22-க்கு டாக்டர் திரு. எச். வி. ஹாண்டே, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால் அவ்வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண். 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ.52,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பி.ப. 2·48 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

### (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

77. Notification issued with G.O Ms. No. 2432, Rural Development and Local Administration, dated the 3rd November 1971, in regard to alteration of name as Melur Panchayat Union in Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.)].

78. Notification issued with G.O. Ms. No. 2486, Rural Development and Local Administration, dated the 10th November 1971 in regard to alteration of name of the Karipatti Panchayat Union as 'Ayodhyapattinam' Panchayat Union in Salem District. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Panchayats Act XXXV of 1958).]

### B. *Reports, Notifications and Other Papers.*

109. Erratum issued with Roc. No. 45514/71-E5, dated the 13th October, 1971, to the notification contained in proceedings Roc. No. 72285/70-E5, dated the 18th December 1970, published in page 4 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th January 1971.

@ 110. Policy note on Tamil Nadu Khadi and Village Industries, Board (English and Tamil).

£ 11. Policy note on Demand No. 3—" General Sales Tax and other Taxes and Duties—Administration " (English and Tamil).

---

@ Depatched to Members on 21-3-1972.

£ Despatched to Members on 22-3-1972.



## இணைப்பு I.

[.........35ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கொள்கை விளக்கக் குறிப்பு

*மானியக் கோரிக்கை எண் 20:—தொழில்கள்—கிராமத் தொழில்கள்*

*மானியக் கோரிக்கை எண் 22:—கதர்த் தொழில்கள்*

### கதர்

கதர்த் தொழிலை வளர்ச்சியுறச் செய்வதில், பம்பாய், கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு கொடுத்துள்ள வழிகாட்டிக் கோடுகளையும், இந்திய அரசின் கொள்கையையும் தம்மாநில அரசு பின்பற்றி வருகிறது. கதர்-கிராமத் தொழிலின் வளர்ச்சியை மதிப்பிடவும், இதனை வலுப்படுத்தி விரிவுபடுத்த பரிவுரைகள் செய்யவும், கதர்த் துறையின் அமைப்பிலோ நிர்வாகத்திலோ மாற்றங்கள் எதும் செய்ய கருத்துத் தெரிவிக்கவும் வேண்டி, இந்திய அரசு, திரு. அசோகா மேத்தா அவர்களின் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக்குழுவின் பரிவுரைகள் தற்போது கொள்கையளவில் இந்திய அரசினால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. இக்குழு பின்வருமாறு கூறியுள்ளது :—

" தொன்றுதொட்டு இருந்துவரும் கதர்த் தொழில் தனிபட்டோர் சொந்தப் பயனுக்காகவும் கிராமத் தன்னிறைவுக்கும் பயன்படுமாறு மாற்றியமைக்கப்படவேண்டும். புதிய வடிவச் சர்க்காக்களில் நெய்த நூலைக்கொண்டே வருங்காலத்தில் கதர்த் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வர வேண்டும். கதர் தொழிலில் தொழில் நுட்ப மேம்பாடுகளைக் கொண்டுவரவும். மின்சக்தியைப் பயன்படுத்தவும்" தாராளமாக வாய்ப்பிருக்க வேண்டும்.

குழுவின் பரிவுரையின் பேரில், புதிய வடிவச் சர்க்கா குறித்து டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையில் மதிப்பீட்டுக் குழு ஒன்றைத் திட்ட ஆணைக்குழு அமைத்தது. டாக்டர் பி. எஸ். லோகநாதன் தலைமையிலான குழு பின்வருமாறு கூறியுள்ளது:—

"நூற்பதற்கு மின்சக்தி பயன்படுத்துவது குறித்து நாம் மேற்கொண்ட கொள்கை என்னவாயிருப்பினும், மின்சக்தியில் ஓடக்கூடிய தகுந்த நூற்புப் பிரிவை (36 முதல் 64 கதிர்கள்) உருவாக்குவதில் நேரிட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு உருவாக்கினால் அதனை முன்மாதிரியாகச் செயல்படுத்த இயலும். "

இந்தப் பரிவுரையின் அடிப்படையில், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், 18,750 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் புதுமையான 375 கிராம நூற்பு நிலையங்களை ஏற்படுத்த திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம், பெருமாநல்லூரில் மின் சக்தியில் ஓடும் இதுபோன்ற நூற்புப் பிரிவு ஒன்றை ஆய்வு செய்ததன் அடிப்படையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும் 432 கதிர்களும் 17 தறிகளும் இருக்கும். ஒவ்வொரு நூற்புச் சட்டத்திலும் 48 கதிர்கள் இருக்கும். ஒவ்வொரு நிலையத்திற்காகும், மொத்தச் செலவு ரூ. 1·60 லட்சமாகும் என மதிப்பிடப்படுகிறது. கதர்

[1972 மார்ச் 23

கிராமத் தொழில் ஆணைக்குழு இச் செயற்குறிப்புகளை ஏற்கெனவே இந்திய அரசுக்குப் பரிவுரை செய்துள்ளது. இச்செயற்குறிப்புகளுக்கான இசைவினை எதிர்பார்ப்பதற்கிடையில், இத்தகைய ஐந்து பிரிவுகளை ஏற்படுத்த தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பெருமாநல்லூரில் உள்ள பிரிவு கடந்த ஆறு மாத காலமாகச் செயல்பட்டு வருகிறது. அது ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது. ஆலைத் துறையில் உற்பத்தியாகும் துணியின் விலைக்கு ஈடாகத் தரமான துணியை உற்பத்தி செய்ய இந்த நிலையத்திற்கு இயலும், கோயம்புத்தூர் மாவட்டம், சூளூரில் உள்ள மற்றொரு நிலையம் உற்பத்தியைத் தொடங்க சித்தமாயுள்ளது. வேறு மூன்று நிலையங்கள் வீரராகவபுரத்திலும் (செங்கற்பட்டு மாவட்டம்), திருநெல்வேலி மாவட்டத்தில் ஈராலிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மயிலாடியிலும் அமைக்கப்படவிருக்கின்றன. முரட்டு நூல்களைக் கொண்டு நெய்யப்பட்ட தரமான வகைத் துணியை உற்பத்தி செய்ய ஆலைகள் தயங்குகின்றன. ஆனால் இத்தகைய துணி ஏழை மக்களுக்கு இன்றியமையாததாக இருக்கிறது. எனவே, இத்தகைய துணியை உற்பத்தி செய்ய வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் நாள் ஒன்றுக்கு ரூ. 3 என்ற ஊதிய அளவில் ஏறக்குறைய 60 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். எனினும் வாரியம், ஏற்கெனவே செயல்படுத்திவரும் கதர்த் திட்டத்திற்கு இத்திட்டம் முரணாக இருக்காது. வாரியம் செயல்படுத்தி வரும் திட்டம் வழக்கம் போல் தொடர்ந்து செயல்பட்டு வரும். ஆனால், அசோகா மேத்தா குழு பரிவுரை செய்துள்ளவாறு புதிய வடிவச் சர்க்காக்களைக் கொண்டு வருவது குறித்து வலியுறுத்தப்படவேண்டும்.

2. 1970–71-ஆம் ஆண்டில் 21 பெரிய நிலையங்கள், 124 துணை நிலையங்கள், 75 கிராம நூற்பு நிலையங்கள் இருந்தன. வேலைக்கமர்த்தப் பட்ட நூற்பவர்களின் எண்ணிக்கை, உற்பத்தி செய்யப்பட்ட நூல், அவர்கள் ஈட்டிய ஊதியம் ஆகியவை பற்றிய விவரம் கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து தெரியவரும் :—

| | நூற்பவர்களின் எண்ணிக்கை. | உற்பத்தி செய்யப்பட்ட நூல். (லட்சம் சிட்டங்களில்). | கொடுக்கப் பட்ட ஊதியம். (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| 1. கிசான் நூல் .. .. | 60,637 | 48·93 | 34·25 |
| 2. அம்பர் நூல் .. .. | 11,510 | 35·64 | 10·18 |
| 3. புதிய வடிவ சர்க்கா நூல் | 2,522 | 25·87 | 7·39 |
| | 74,669 | 110·44 | 51·82 |

3. 1971-72 ஆம் ஆண்டில், புதிய வடிவச் சர்க்காக்கள் கொண்ட 15 பிரிவுகள் தொடங்கப்படும். 1972-73-ல் மேலும் 40 பிரிவுகள் தொடங்கப் படும். 1971–72-ல் நூல் உற்பத்தி 220 லட்சம் சிட்டங்களாகவும் 1972–73-ல் 310 லட்சம் சிட்டங்களாகவும் இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.



1972 மார்ச் 23]

4. 1970–71-ஆம் ஆண்டில் கதர் வாரியம் தனது கதர் உற்பத்திக்காக 3,639 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. ரூ. 176·68 லட்சம் மதிப்புடைய 50·35 லட்சம் மீட்டர் கதர் துணியை அவர்கள் உற்பத்தி செய்தனர். அந்த ஆண்டில் நெசவாளர்கள் ரூ 52·40 லட்சம் தொகையை ஊதியமாக ஈட்டினர். 1971–72-ல் ரூ. 140 லட்சம் மதிப்புடைய 40 லட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படு மென மதிப்பிடப்படுகிறது. 1972–73-ஆம் ஆண்டுக்கான உற்பத்திக் குறிக் கோள் அளவு 55 லட்சம் மீட்டராகும். இதன் மதிப்பு ரூ. 210 லட்ச மாகும்.

5. வாரியம் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 60 லட்சம் மதிப்புடைய கதர் பட்டுத் துணியையும் உற்பத்தி செய்து வருகிறது. 900 நெசவாளர்கள், நூல் சுற்றுபவர்கள் 200 பேர், சாயமிடுபவர்கள் 20 பேர் ஆகியோர் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். 1971–72, 1972–73-ஆம் ஆண்டுகளில் ரூ. 60 லட்சம் மதிப்புடைய பட்டு தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு வரும்.

6. சாயமிடுதல், வெளுத்தல், அச்சிடுதல் முறைகளில் நவீன உத்திகளைக் கையாளும் பொருட்டு, கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு கடனாகக் கொடுத்துதவும் ரூ. 5 லட்சம் தொகையைக் கொண்டு வாரியம் பவானிசாகரில் சாயமிடுதல், வெளுத்தல், அச்சிடுதல் பிரிவு ஒன்றை அமைத்து வருகிறது.

7. கதர் விற்பனையில் வாரியம் வழக்கம்போல் நாட்டம் செலுத்தி வருகிறது. 1971–72-ஆம் ஆண்டுக்கான விற்பனைக் குறிக்கோள் அளவு ரூ. 267 லட்சமும் 1972–73-ஆம் ஆண்டுக்கு ரூ. 300 லட்சமும் ஆகும்.

8. மதுரையிலுள்ள ஒரு கட்டிடத்தை வாரியம் வாங்கியுள்ளது. இக் கட்டிடத்திலதான் மகாத்மா காந்தி 1921-ஆம் ஆண்டில் மகத்தானதொரு முடிவை மேற்கொண்டு தனது உடைப் பழக்கத்தை மாற்றி எளிய உடையை அணியத் தொடங்கினார். இக்கட்டிடத்தில் தகுந்த மாற்றங்களைச் செய்த பின்னர், கதர் விற்பனைப் பெரு நிலையம் ஒன்றை நடத்த இக் கட்டிடம் பயன்படுத்தப்படும்.

9. கதர் வளர்ச்சிக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

| | 1970–71 கணக்குகள். | 1971–72 வரவு. செலவுத் திட்ட மதிப்பீடு | 1971–72 திருத்த மதிப்பீடு | 1972–73 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ரெவின்யூக் கணக்கு : செலவு.. | 4,52·34 | 4,99·52 | 4,59·56 | 5,43·03 |
| வருவாய்— | | | | |
| துறை வாரியான வருவாய் | 3,25·76 | 4,25·05 | 3,69·25 | 3,99·96 |
| கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து கிடைக்கும் தள்ளுபடி, உதவித் தொகை, மானியம். | 69·09 | 68·83 | 64·68 | 67·67 |

10. 1970-71-ஆம் ஆண்டிற்கு பம்பாய், கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து பெற்றதும் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் கடனுதவியும் மானிய உதவியும் பின்வருமாறு :—

| | 1970-71 | 1971-72 | 1972-73 |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்). | | |
| மானியம் — | | | |
| தள்ளுபடி, உதவித் தொகைகள். | 67·82 | 50·20 | 66·72 |
| ஏனைய மானியங்கள் .. | 1·27 | 14·48 | 0·95 |
| கடன்— | | | |
| நடைமுறை நிதியும், முன் பணமும். | 26·49 | 53·35 | 71·09 |
| ஏனைய கடன்கள் .. | 2·53 | 22·57 | 17·75 |
| மொத்தம் .. | 98 11 | 1,40·60 | 1,56·51 |

11. 1971-72 இறுதியில் கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிற்கு ரூ. 3,41 லட்சம் கடன் நிலுவையாக இருக்கும்.

12. கதர் நிதியின்கீழ் அரசு 1971-72-க்கு ரூ. 28·65 லட்சமும் 1972-73-க்கு ரூ. 40·92 லட்சமும் நிதியாகத் தருகிறது. இதில் முறையே ரூ. 8·84 லட்சமும் ரூ. 9·56 லட்சமும் அரசு வாணிகத் திட்டங்களின் தலைமைத் தணிக்கை அதிகாரிக்கும், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறை தலைவருக்கும் தணிக்கைக் கட்டணமாகச் செலுத்தப்படும். சமமான படிகளின் விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டதன் காரணமாக 1971-72-க்கும் 1972-73-க்கும் நிதி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்கள்.

1970-71, 1971-72, 1972-73-ஆம் ஆண்டுகளில் கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1970-71 .. .. .. | 8,46·51 | 9,63·56 |
| 1971-72 .. .. .. | 9,55·22 | 10,54·96 |
| 1972-73 .. .. .. | 10,35·15 | 11,34·87 |

1971-72-ல் கிராமத் தொழில்கள் திட்டங்களினால், 2·79 லட்சம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டு, அவர்களுடைய ஊதியமாக ரூ. 266 லட்சம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972-73-ல் 2·85



லட்சம் பேர் வேலைக்கமர்த்தப்பட்டு, ரூ. 2·67 லட்சம் ஊதியமாக அவர்களுக்கு வழங்கப்படும். கிராமத் தொழில்கள் பலவற்றின் முன்னேற்றத்திற்காகத் துறையைச் சேர்ந்த 315 பிரிவுகளும், கூட்டுறவு அமைப்புகள் 2,408-ம் செயல்படுகின்றன. 1970-71, 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து பெற்ற, பெறப்போகும் நிதியுதவி பின்வருமாறு :—

| | மானியம். | கடன். | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1970-71 .. .. .. | 4·20 | 36·77 | 40·97 |
| 1971-72 .. .. .. | 9·51 | 76·65 | 86·16 |
| 1972-73 .. .. .. | 6·21 | 1,03·78 | 1,09·99 |

2. அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகத் தமிழ்நாடு எண்ணெய்-எண்ணெய்த் துணைப் பொருட்கள் சம்மேளனம், இம்மாநிலத்தில் மூன்று எண்ணெய் எடுக்கும் ஆலைகளை நிறுவ இருக்கிறது. இதற்காக நிலங்களைக் கையகப்படுத்திக் கட்டடங்கள் எழுப்புவதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இயந்திரங்கள் தருவிப்பதற்காக ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவை 1972-73-ல் வழங்கப்படுமெனவும், அப்போதிருந்து மூன்று ஆலைகளும் உற்பத்தியைத் தொடங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சோப்பு தயாரிப்பில் இந்த அரிசித் தவிட்டு எண்ணெய் பெருமளவு பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது. சோப்பு தயாரிப்பு நிலையங்கள் பல தொடங்குவதன் வாயிலாக, படித்துவிட்டு வேலையில்லாதிருப்போருக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாம். கிராமத் தொழில்கள் வரவு-செலவுத் திட்டத்தின் நிதிநிலை விவரம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1970-71 கணக்குகள். | 1971-72 வரவு திட்ட மதிப்பீடு. | 1971-72 திருத்த மதிப்பீடு. | 1972-73 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| ரெவின்யூக் கணக்கு—செலவு | 96·57 | 1,26·46 | 1,27·65 | 1,32·90 |
| வருவாய்— | | | | |
| துறைவாரியான வருவாய். | 44·98 | 68·75 | 84·73 | 81·46 |
| கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து இடைக்கும் மானியம். | 11·24 | 12·96 | 24·10 | 7·81 |
| மாநில அரசிடமிருந்து பெற்ற மானியம். | 12·14 | 17·78 | 26·48 | 16·82 |

| | | | | |
|---|---|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கும் கடன்களும், முன் பணமும்— | | | | |
| 1. வழங்கியது .. .. | 54·78 | 78·30 | 86-84 | 96·42 |
| 2. வசூல் .. .. | 60·32 | 93·34 | 94·31 | 1,01·31 |
| கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து கிடைத்த கடன் தொகை. | 43·74 | 67·82 | 78·48 | 1,03·79 |
| கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்குத் திருப்பிக் கொடுத்த கடன்கள். | 24·88 | 15·50 | 19·55 | 20.03 |

3. 1971-72-ஆம் ஆண்டு இறுதியில் கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்கு ரூ. 4,00 லட்சம் கடன் நிலுவையாக இருக்கும்.

கிராமத் கலைகள், கைவினைகள், தொழில்கள் திட்டம்.

இத் திட்டம், சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியங்களால் செயல்படுத்தப்படுகிறது. வாரியம், தொழில்நுட்ப மேற்பார்வையை நல்குகிறது. அரசால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மானியத்தை, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தருகிறது. இம் மாநிலத்தில் தற்போது, கிராமக் கலைகள், கைவினைகள், தொழில்கள் திட்டத்தின்கீழ் 312 பிரிவுகள் இயங்குகின்றன. 1971–72-ல் அவற்றின் உற்பத்தியும் விற்பனையும் முறையே ரூ. 41 லட்சமும், ரூ. 36 லட்சமும் ஆகும். 1972–73-ல் முறையே ரூ. 40 லட்சமும், 36 லட்சமும் ஆகும்.

6. ஊராட்சி ஒன்றியங்களினால் நடத்தப்படும் அனைத்துக் கிராமக் கலை கைவினைப் பிரிவுகளையும், தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மாற்றப்படவேண்டுமென்னும் மாற்ற ஆணைகளை அரசு தற்போது பிறப்பித்திருக்கிறது.



# இணைப்பு— II

[..33-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

## 1971-72-ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களில் எய்திய முன்னேற்றம் குறித்த ஆய்வுரை.

1971–72-ஆம் ஆண்டில், இம் மாநிலத்தில், வேளாண்மைக் கடன் வசதி, வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதி, செய்முறை வசதி, பயன் துய்ப்போருக்கான பொருள்களை வழங்குதல் ஆகிய துறைகளின் வாயிலாகக் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் மூலம், குறுகிய கால, நீண்ட காலக் கடன்கள் வழங்குவதிலும், நிலவள வங்கிகள் மூலம், நிலங்களை மேம்படுத்துவதற்காக நீண்ட காலக் கடன்கள் வழங்குவதிலும் அடைந்துள்ள முன்னேற்றம், தொடர்ந்து மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்து வருகிறது. 1–4–1971 முதல் 31–1–1972 முடிய, கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் ரூ. 44·67 கோடிக்கு குறுகிய கால, நடுத்தர காலக் கடன்களையும், ரூ. 16·40 கோடிக்கு நீண்ட காலக் கடன்களையும் வழங்கியுள்ளன.

தமிழ் நாட்டில், ரூ. 20·40 கோடி செலவில் இருபத்திரண்டு சிறு பாசனத் திட்டங்களும், மொத்தம் ரூ. 8·05 கோடி முதலீட்டுடன், சிறு பாசன வகையல்லாத பிற பாசனத் திட்டங்கள் ஏழும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, உலக வங்கி (அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகம்) தமிழ் நாட்டில் ரூ. 46·76 கோடி செலவாகின்ற வேளாண்மைத் திட்டங்களுக்கு நிதியுதவியளிக்க முன்வந்துள்ளது. அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 26·25 கோடி உதவி கிடைக்கிறது. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் கிணறுகளுக்கும், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வடிமுனைக் கிணறுகள், குழாய்க் கிணறுகளுக்காகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிலத்தைப் பண்படுத்துவதற்காகவும், தமிழ் நாடு முழுவதும் பண்ணைகளை இயந்திர மயமாக்குவதற்காகவும் (டிராக்டர்கள் வாங்குதல்) இந்த உதவி அளிக்கப்படுகிறது. அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகம் அளிக்கும் நிதியுதவி இந்திய அரசின் மூலமாகவும், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் மூலமாகவும், மாநில நிலவள வங்கிகளிடம் கொடுக்கப்பட்டு, இறுதியில், தொடக்க நிலவள வங்கிகளின் மூலம் திட்டத்தால் பயன் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத் திட்டம், 2–11–1971 அன்று செயலுக்கு வந்துள்ளது. 2½ ஆண்டுக் கால அளவுக்கு இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

பொறியாளர்களிடையே நிலவும் வேலையின்மைப் பிரச்னையைத் தீர்க்கும் கருத்துடன், வேளாண்மை செப்பனிடு-பணிவசதிக் கூட்டுறவு நிலையங்களை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை, மாவட்ட அளவில், 12 சங்கங்களும், வளர்ச்சி வட்டார அளவில்

30 சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகைச் சங்கங்கள், கிணறுகளை ஆழப்படுத்தவும், நிலத்தைச் சமப்படுத்தவும், நிலத்தை மேம்படுத்தவும், அரசுத் துறைகளிலிருந்து உழவர்கள் முதலுரிமை அடிப்படையில் இயந் திரங்களைப் பெறுவதிலும், செப்பனிடு பணி வசதிகள் செய்து தருவதிலும் அவர்களுக்கு உதவி புரியும். வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், சங்கங்கள் செயல்படுவதை ஒருங்கிணைக்கும் பொருட்டு, மாநில அளவில் வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவுக் கூட்டமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கல்வி, செய்தி பரப்புதல், பயிற்சி, சேமிப்புகளைத் திரட்டுதல் ஆகியவற்றை மேம்படச் செய்யும் பொருட்டு, வட்டக் கூட்டுறவு ஒன்றியங் களையும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களையும் அமைக்கும் பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இறைவைப் பாசனச் சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, மாநில அளவில் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விலைவாசிகளைக் கட்டுக்குள் வைத்திருக்கவும், நுகர் பொருள்கள் மக்களுக்கு நியாயமான விலைகளில் கிடைக்கச் செய்யவும் சிறு சிறப்பங் காடிகள் என்னும் புதுமை சில்லறை விற்பனை நிலையங்கள் 28 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன; அதுபோன்ற விற்பனை நிலையங்கள் மேலும் 20 இடங்களில் நிறுவப்படும்.



நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் மீதான, மொத்தச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டங்கள். | 1968–69–இல் செலவு. | நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு. | 1969–70–இல் செலவு. | 1970–71–இல் செலவு. | 1971–72–க்கு வரவு–செலவு திட்ட நிதி ஒதுக்கீடு. | 1971–72–இல் செலவு (31–1–72 வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| ஏ. கூட்டுறவுக் கடன் வசதி, விற்பனை வசதி, செய்முறை துய்ப்போர் கூட்டுறவுச் சங் கங்கள், கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும், பல்வகைச் சங் கங்கள் தொடர்பான திட்டங் கள். | 45·16 | 1,022·32 | 57·91 | 72·41 | 126·16 | 55·27 |
| பி. மாநில நிலவள வங்கி களின் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் தொகைகள் கொடுத்தல், புதிய கிணறுகள், உதவித் தொகைத் திட்டத்துக்குத் தொகை கொடுத்தல். | 261·14 | 1,700·00 | 200·91 | 273·25 | 305·00 | 241·24 |
| சி. கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களில் அரசின் பங்கு. | .. | .. | 51·43 | 230·65 | 369·00 | 4·67 |
| டி. கழகத்தினால் தொடங்கப் படும் திட்டங்கள், மத்திய அரசால் தொடங்கப்படும் திட்டங்கள். | .. | 112·45 | 135·65 | 102·85 | 64·50 | 3·00 |

## I. வேளாண்மைக் கடன்.

வேளாண்மைக் கடன் வழங்குதல், நிதி வாயில்களை ஒருங்கு திரட்டுதல், முதலியவற்றில், கடன் வசதிக் கூட்டுறவுகள் எய்திய முன்னேற்றத்தைக் கீழே கொடுத்துள்ள விவர அறிக்கையில் காணலாம் :—

| தொடர் எண். | இனம். | 1968–69 முடிவில் நிலைமை. | நான்காம் ஐந்தாண்டுத்திட்ட இலக்கு. | 1969–70 –க்கு இலக்கு. | 1969–70-ல் எய்திய சாதனை. | 1970–71 –க்கு இலக்கு. | 1970–71-ல் எய்திய சாதனை. | 1971–72 -க்கு இலக்கு. | 1971–72 -இல் எய்திய சாதனை (31-1-72 வரை). |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவின் கீழ்க் கொண்டு வரப்பட்ட கிராமங்கள். | | | | | கிராமங்களனைத்தும் கூட்டுறவின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. | | | |
| 2 | தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களின் உறுப்பினர்கள் (லட்சத்தில்). | 33·00 | 39·00 | 34·00 | 34·00 | 35·25 | 35·25 | 36·50 | 36·04 |
| 3 | கடன் வழங்கல் (ரூபாய் கோடியில்)— | | | | | | | | |
| | (i) குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள். | 44·12 | 74·50 | 62·50 | 42·77 | 55·00 | 44·23 | 61·50 | 44·67 |
| | (ii) நீண்ட காலம்— | | | | | | | | |
| | (அ) சாதாரணத் திட்டத்தின்கீழ். | 14·15 | 25·00 | 16·40 | 14·95 | 19·00 | 19·07 | 21·00 | 16·40 |
| | (இ) சிறப்புத் திட்டத்தின்கீழ். | 1·33 | 16·00 | .. | 1·31 | .. | 3·29 | 8·60 | 5·00 |
| 4 | புத்துயிரளிப்பதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்கள் (எண்ணிக்கை). | 170 | 2,000 | 400 | 206 | 300 | 214 | 200 | 200 |
| 5 | மத்திய கூட்டுறவு வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகள். | 117 | 150 | 50 | 51 | 50 | 52 | 50 | 25 |
| 6 | அரசுப் பங்கு மூலதனம் நீங்கலாக, எய்திய பங்கு மூலதனம் (ரூ. கோடியில்)— | | | | | | | | |
| | (i) தொடக்கச் சங்கங்கள். | 11·25 | 15·68 | 12·11 | 12·04 | 13·01 | 12·72 | 13·75 | 13·06 |
| | (ii) மத்திய கூட்டுறவு வங்கிகள். | 7·92 | 11·55 | 8·82 | 8·47 | 9·51 | 8·92 | 10·00 | 9·12 |
| | (iii) மாநில கூட்டுறவு வங்கி | 2·14 | 3·22 | 2·74 | 2·17 | 2·86 | 2·28 | 3·00 | 2·35 |
| 7 | வைப்புத் தொகைகள் (ரூ. கோடியில்). | | | | | | | | |
| | (i) தொடக்கச் சங்கங்கள். | 3·55 | 6·25 | 4·61 | 3·31 | 5·02 | 4·20 | 5·35 | 4·65 |
| | (ii) மத்திய கூட்டுறவு வங்கிகள். | 22·87 | 30·44 | 24·88 | 25·33 | 26·27 | 29·70 | 30·00 | 32·83 |
| | (iii) மாநிலக் கூட்டுறவு வங்கி. | 11·19 | 15·00 | 12·20 | 12·86 | 12·90 | 15·20 | 16·00 | 16·06 |

கடன் வழங்கு நிறுவனங்கள் தமது கடன் வழங்கும் பணியை ஆண்டுதோறும் பெருக்கிச் செல்லும் பொருட்டு, அரசு பின்வரும் வழிகளில் போதுமான நிதியுதவி அளித்து வந்துள்ளது ; கடன் வழங்கு நிறுவனங்களின் பங்கு மூலதனத்திலும், தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்தல் ; நிர்வாகப் பணியாளர் செலவை ஈடுகட்ட உதவித்தொகை அளித்தல்; மாநில நிலவள வங்கி வெளியிட்ட கடனீட்டுப் பத்திரங்களின் அசலும் வட்டியும் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உத்திரவாதமளித்தல் ; பருவ கால வேளாண்மைத் தொழில்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அளிக்கப் பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுத்துவதற்கு உத்திரவாதமளித்தல் ஆகியன.

கடன் வழங்கு நிறுவனங்கள், தமது கடன் வாங்கும் சக்தியை உயர்த்தும் வகையில் அவற்றின் பங்கு மூலதனத்தில் இதுவரை செய்யப் பட்ட மொத்த முதலீடு ரூ. 748·32 லட்சம் ஆகும். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது ;—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி .. .. | 126·00 |
| 2. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் .. .. | 226·15 |
| 3. | தொடக்கக் கடனுதவிச் சங்கங்களும் வேளாண்மை வங்கிகளும். | 167·60 |
| 4. | தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி .. | 170·00 |
| 5. | தொடக்க நிலவள வங்கிகள் .. .. .. | 47·72 |
| 6. | கூட்டுறவு நகர வங்கிகள் .. .. .. .. | 0·85 |
| 7. | மத்திய வீட்டு அடமானச் சங்கம் .. .. | 35·00 |

1970–71 ஆம் ஆண்டில் இந்தக் கடன் வழங்கு நிறுவனங்களின் ஆதாயப் பங்குத் தொகை வடிவில், அரசுக்குக் கிடைத்த தொகை ரூ. 18·59 லட்சம் ஆகும்.

கடனுதவி நிறுவனங்கள் உழவர்களில் எளிய பிரிவினருக்கு அதாவது, ஆதாயம் குறைந்த உழவர்களுக்கும், ஆதாயம் மிகக் குறைந்த உழவர்களுக்கும், நிலமற்ற குத்தகைக்காரர்களுக்கும், போதுமான கடன்கள் வழங்கும் வண்ணம் அவற்றுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு மிக வறிய நிலையில் உள்ள உழவர்கள் பெயரில் நிலுவையாக வுள்ள கடன்களின் உயர்வின் மேல் தொடக்கக் கடனுதவிச் சங்கங்களுக்கு 12 சத வீத அளவிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு 4 சதவீத அள விலும் ஏற்படுத்தப்பட்ட மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு (Special bad debt reserve fund) அரசு முழு மானியங்களை அளித்து வந்துள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன்கள் சிறப்புச் சேமநிதிக்கா





ரூ. 1.98 லட்சம் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத்துடன் அரசு இதுவரை மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்கச் சங்கங்கள் ஆகியவற்றின் மீளாக் கடன் சிறப்புச் சேம நிதிக்கு வழங்கிய தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மத்திய கூட்டுறவு வங்கிகள் .. .. .. | 18·96 |
| தொடக்கச் சங்கங்கள் .. .. .. | 95·08 |
| மொத்தம் .. .. | 114·04 |

பொருளாதார வகையில் ஆதாயமற்ற சங்கங்களையும் நொய்ந்த சங்கங்களையும் கலைத்துவிடவும், அவற்றை ஆதாயமளிக்கும் சங்கங் களாக மாற்றி அவை ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த அளவு ரூ. 2 லட்சம் கடன் வழங்குமாறு செய்யவும், உரிய திட்டம் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் 11,000 கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை 5,522 ஆகக் குறைக்கப்பட்டது ; அவற்றில் 4,452 சங்கங்கள் ஆதாயமளிப்பன அல்லது ஆதாயமளிக்கும் திறனுடையன.

ஏற்கெனவேயுள்ள கிராமக் கடனுதவிச் சங்கங்கள் ஆதாயம் தருவன வாகச் சீரமைக்கப்பட்டன ; அவை, உழவர்களின் பல்வேறு தேவைகளை யும் நிறைவு செய்கின்ற உண்மையான பணிக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பணியாற்றுகின்றன. அவை, உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான உரங்களையும், பூச்சிக்கொல்லி மருந்துகளையும் சேமித்து வைப்பதற்கு மேல், உறுப்பினர்களின் உபரி உற்பத்திப் பொருள்களையும் சேமித்து வைக்க இயலுதல் வேண்டும். அவற்றுக்குத் தனி அலுவலக அறை வேண்டும் ; சங்க உறுப்புனர்களின் பயிர்த் தொழிற் பணிகளுக்குத் தேவைப்படுகின்ற விசைத் தெளிப்புக் கருவிகள், மருந்து தூவும் விசைக் கருவிகள் முதலிய வேளாண்மைக் கருவிகளை வைத்து வருவதற்கென பணிக் கொட்டகை ஒன்றும் அவற்றுக்கு வேண்டும். எனவே, கிடங்கு—அலுவலகம் —பணிக் கொட்டகையொன்றைக் கட்டிக்கொள்வற்காக, அரசு, அவற்றுக்குக் கடனாகவும் உதவித் தொகையாகவும் (50 சத வீதம் கடன், 50 சத வீதம் உதவித் தொகை) ரூ. 25,000 அளவுக்கு நிதி உதவி அளித்து வருகின்றது. 1969–70இல் 10 சங்கங்களுக்கு இத்தகைய உதவி அளிக்கப்பட்டது. 1970–71இல் 80 சங்கங்களுக்கு ஒவ்வொன்றுக் கும் ரூ. 12,500 கடன் வடிவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த சங்கங்களுக்கு, 1971–72இல் நிதியுதவின் பகுதியான உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும், சிறிய உழவர்களையும், ஆதாயம் குறைந்த உழவர்களையும், கைதூக்கிவிட்டு உயர்த்துவதில், புதிதாகத் தொடங்கப்பட்ட இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கவிருக்கின்றன. அதனைக் கருத்தில் கொண்டு, கடனுதவிச் சங்கங்

களாகவும் செயல்படுகின்ற, தெரிந்தெடுக்கப்பட்ட இறைவைப் பாசனச் சங்கங்கள் நாற்பதுக்கு, இடங்கு—அலுவலகம்—பணிக் கொட்டகை கட்டிக் கொள்வதற்காக, 1971–72இல் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

உழவர்களுக்குத் தேவையான நீண்டகால, குறுகியகாலக் கடன்கள், கிராம அளவில் 5,522 தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்களால் அளிக்கப்படுகின்றன. அந்தத் தொடக்க வேளாண்மைக் கடனுதவிச் சங்கங்கள், மாவட்ட அளவில் 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் வழங்கு முகவரமைப்புகள், ஆண்டுதோறும் கணிசமான அளவில், வேளாண்மை உற்பத்திக்குத் தேவைப்படும் கடன்களை வழங்குகின்றன; அதன் மூலம் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியை உயர்த்தப் பெருமளவு துணைபுரிகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளிலும், 1971–72-லும் (ஜனவரி மாத இறுதிவரை) வேளாண்மைக் கடன் வழங்கு நிறுவனங்கள் அளித்த உற்பத்திக் கடன்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. .. .. | 30·95 |
| 1966–67 .. .. .. .. .. | 31·51 |
| 1967–68 .. .. .. .. .. | 37·26 |
| 1968–69 .. .. .. .. .. | 44·12 |
| 1969–70 .. .. .. .. .. | 42·77 |
| 1970–71 .. .. .. .. .. | 44·23 |
| 1971–72 (31—1—1972 வரை) .. .. | 44·67 |

கிராமப்புற நகர்ப்புறச் சேமிப்பு வாயில்களை ஒருங்கு திரட்டும் பொருட்டும், அதன் மூலம், உற்பத்திக் கடன்களுக்குப் பெருகி வரும் தேவைகளைச் சரிக்கட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதி வாயில்களை மேம்படுத்தவும், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், எல்லா வட்டத் தலைமையிடங்களிலும், ஏனைய முக்கியமான இடங்களிலும், கிளைகளைத் திறந்து வருகின்றன. 1971–72 இல் (1972 ஜனவரி வரை) மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை 25 ஆகும்; அதன் மூலம் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 242 ஆக உயர்ந்தது.

உறுப்பினர்களின் பங்கு மூலதனத் தொகையையும் அவர்கள் வைத்துள்ள வைப்புத் தொகைகளையும் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் உயர்த்தியுள்ளன. அவை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1970–71. | 1971–72 (31 ஜனவரி 1972 வரை) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | |
| பங்கு மூலதனம் .. .. .. .. | 23·94 | 24·53 |
| வைப்புத் தொகைகள் .. .. | 49·10 | 53·54 |



வேளாண்மை உற்பத்திக்காக, குறிப்பாக ஏழைக் குடியானவர்களுக்கு கடன்கள் வழங்குவதற்காக அதிகப்படியான நிதி ஒதுக்கம் செய்வதற்காகவும், இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் விரயங்கள் காரணமாக இந்த வேளாண்மைக் கடனுதவித் திட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டிய தேவையைக் கருதியும், வேளாண்மைக் கடனுதவி (துணை உதவி-உத்தரவாதம்) நிதி ஒன்று மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அரசு இந்த நிதிக்கு 1971–72-இல் அளித்த ரூ. 12 லட்சம் உட்பட இதுவரை ரூ. 27 லட்சம் அளித்துள்ளது.

பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றால் எழும் எதிர்பாராத நிலைமைகளில், பற்பல நிலைகளிலுள்ள கூட்டுறவுக் கடனுதவி நிறுவனங்களின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்காகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்திந்திய கிராமக் கடனுதவி ஆய்வுக்குழு, பரிந்துரைத்ததற்கிணங்க, மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க கடனுதவிச் சங்கங்கள் ஆகியவை முறையே தத்தம் நிலைகளில் வைத்து வரும் வேளாண்மைக் கடனுதவி (உறுதி) நிதிக்கு உதவித் தொகைகள் அளித்து வருகின்றன. இந்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி, மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு வேளாண்மைக் கடனுதவி உறுதி நிதிக்கு மாநில அரசு ஒரு மொத்தத் தொகையை உதவித்தொகையாக அளித்து வருகிறது. இதற்கு இந்திய அரசு உதவியளிக்கிறது. மாநிலக் கூட்டுறவு வங்கியின் வேளாண்மைக் கடனுதவி உறுதி நிதிக்கு அரசு இதுவரை ரூ. 174·35 லட்சம் அளித்துள்ளது. இந்த நிதி, வறட்சி, வெள்ளம், புயல் முதலியவற்றால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகிறபோதெல்லாம் குறுகிய காலக் கடன்களை நடுத்தர காலக் கடன்களாக மாற்றிக்கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. உழவர்களுக்குத் துயர் தணிப்பு அளிக்கும் பொருட்டு 1970–71 இறுதிவரை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்பட்ட மொத்தத் தொகை ரூ. 6·45 கோடியாகும்.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் நவரைப் பயிர் விளைச்சலைப் பெருக்கும் இயக்கம் ஒன்றை அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் கூட்டுறவுத் துறையில் பங்கு, இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உழவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உரிய காலத்தில் போதுமான கடனுதவியளிப்பதாகும். திட்டத்தின் சிறப்பான முக்கியத்துவம், இரசாயன உரங்களை அதிக அளவில் பயன்படுத்திப் பயிர் விளைச்சல்களைப் பெருக்குவதாகும்.

மேற் கூறப்பட்டுள்ள மாவட்டங்களிலுள்ள மூன்று மத்திய வங்கிகளும் இத்திட்டத்தின்கீழ், 1971–72-இல் (4–3–1972 வரை) ரூ. 1·70 கோடி அளவில் கடனுதவியளித்தது.

சிறு உழவர்கள் தங்கள் பண்ணைத் தொழிலையும் பிற பணிகளையும் மேம்படுத்திக்கொண்டு உயரி விளைச்சலைப் பெற்று மேற்கொண்டு வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு

[1972 மார்ச் 23

உதவும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனங்கள் (Small Farmers Development Agencies) தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தகுதியுள்ள உழவர்களுக்கு குறுகியகாலக் கடன்களையும் நடுத்தரக் காலக் கடன்களையும், நீண்ட காலக் கடன்களையும் அளிக்க வகை செய்வதே இப்பணித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கத்தின் பங்காகும். இதன் முன்னேற்றம் பற்றிய விவரம் பின்வருமாறு :—

1971–72-ல் (31—1—1972 வரை) வழங்கிய மொத்தக் கடன்கள்.

| மாவட்டத்தின் பெயர். | குறுகிய காலக் கடன். | நடுத்தரக் காலக் கடன். | நீண்ட காலக் கடன். |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| தென் ஆர்க்காடு .. | 13·15 | 0·72 | 21·55 |
| மதுரை .. .. | 50·16 | 5·06 | 10·15 |
| திருநெல்வேலி .. | 5·21 | 0·61 | .. |

இதைத் தவிர, மிக வறிய நிலையிலுள்ள குடியானவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டமும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் ஆகிய இரண்டு வளர்ச்சி வட்டாரங்களிலும், சேலம் மாவட்டத்தில் வேலப்பாடி, பெத்த நாயக்கன்பாளையம் ஆகிய இரண்டு வளர்ச்சி வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டம் ஒரு ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நன்செய் நிலம் அல்லது 2 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான புன்செய் நிலங்கள் கொண்டுள்ள மிக வறிய குடியானவர்களுக்கும், நிலமற்ற தொழிலாளர்களுக்கும் ஒரு ஏக்கரிலிருந்து 2 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருக்கும் அல்லது 2 ஏக்கர் முதல் 4 ஏக்கர் வரை புன்செய் நிலம் வைத்திருக்கும் ஓரளவு நல்ல நிலையிலுள்ள குடியானவர்களுக்கும் வசதியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். முன்னேற்றம் பின்வருமாறு :—

1971–72-ல் (31–2–1972 வரை) வழங்கிய மொத்தக் கடன்கள்.

| மாவட்டத்தின் பெயர். | குறுகிய காலக் கடன். | நடுத்தரக் காலக் கடன். | நீண்ட காலக் கடன். |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| சேலம் .. | 9·89 | 0·32 | .. |
| வட ஆர்க்காடு .. | 14·41 | 1·06 | 0·04 |

இம்மாநிலத்திலுள்ள உழவர்களின் நீண்ட காலக் கடன் தேவையை, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள வட்ட அளவிலும் வளர்ச்சி வட்டார நிலையிலுள்ள 223 தொடக்க



1972 மார்ச் 23]

நிலவள வங்கிகள் நிறைவு செய்கின்றன. புதிய கிணறுகள் தோண்டுதல், மின் விசை இயந்திரங்கள், எண்ணெய் இயந்திரங்கள், விசையேற்றங்கள் வாங்குதல், விசையேற்றங்களை அமைத்தல், பாசனப் பயனுக்காகக் குழாய்களை அமைத்தல், நிலங்களைப் பண்படுத்துதல், டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை வாங்குதல் இவை போன்ற வேளாண்மை உற்பத்திக் காரியங்களுக்காகவே, நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகையில் ஏறத்தாழ 95 சதவீதம் வழங்கப்படுகிறது.

நிலவள வங்கிகளின் நலனைக் காப்பதற்காக மாநில நிலவள வங்கிகள் சட்டம், 1968–69-ல் திருத்தப்பட்டது. வங்கிகள் 1968 ஜூலை 4-ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் தங்கள் பெயரில் அடமானம் வைக்கப்பட்ட நிலங்கள் குறித்து, பிற எல்லா உரிமைக் கோரிக்கைகளைக் காட்டிலும் (அரசுக்குச் சேரவேண்டிய நிலவரி நிலுவைகள் நீங்கலாக) முன்னுரிமை பெற வேண்டும் என்று வகை செய்ய இச்சட்டம் திருத்தப் பட்டது. நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் கடன் விவரங்களைப் பற்றி உழவர்கள் நன்கு அறிந்து கொள்ளவும், இக்கடன்கள் அவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படிச் செய்யவும் உள்ள சில நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன. பல சலுகைகளும் குடியானவர்களுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளன. பல்வேறு காரியங்களுக்காக அனுமதிக்கத்தக்க உயர் அளவு கடன்கள் தாராளமாக கீழே கண்டவாறு முடிவு செய்யப்பட்டன :—

| | ரூபாய். |
|---|---|
| 1 விசையேற்றங்கள், டிராக்டர்கள், ஏனைய துணைக் கருவிகள். | 40,000 |
| 2 கிணறுகள் தோண்டுதல் .. .. .. .. | 35,000 |
| 3 விசையேற்றங்கள் அமைத்தல், அவைகளுக்காகக் கொட்டகைகள் கட்டுதல். | 5,000 |
| 4 கிணறுகளை ஆழப்படுத்துதல் .. .. .. | 10,000 |
| 5 நிலம் பண்படுத்தல் .. .. .. .. | 5,000 |

கடன்கள் விரைந்து அளிக்கப்படும் வகையில் கன்னியாகுமரி, நீலகிரி, சென்னை நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தன் கிளை வங்கிகளைத் திறந்துள்ளது.

கடன் விண்ணப்பங்களை முறைப்படுத்துவது குறித்த நடைமுறைகளை எளிதாக்கியதன் காரணமாகவும், வங்கிகள் கடன்களை ஒப்பளித்து வழங்கு வதற்கான நடைமுறைகளை எளிதாக்கிய காரணத்தாலும் கடன் வாங்கும் வரம்பு குறித்து குடியானவர்களுக்குச் சலுகைகள் நீட்டிக்கப்பட்டதாலும்

விலங்கச்சான்றிதழ் முதலியவற்றிற்குக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டதாலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொகை அதிகரித்துள்ளது :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் கோடியில்.). |
|---|---|
| 1965–66 .. .. .. .. .. | 3·00 |
| 1966–67 .. .. .. .. .. | 2·93 |
| 1967–68 .. .. .. .. .. | 5·70 |
| 1968–69 .. .. .. .. .. | 14·15 |
| 1969–70 .. .. .. .. .. | 14·95 |
| 1970–71 .. .. .. .. .. | 19·07 |
| 1971–72 (31–1–1972 வரை) .. .. | 16·40 |

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பில், மாநில அரசு, மத்திய அரசு, ரிசர்வ் வங்கி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஆகியவை பொதுவாக 40 சதவீதம் வரை தொகையளிக்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கு மாநில அரசு 9–3–1972 அன்றுள்ளபடி ரூ. 1,244·09 லட்சம்வரை தொகையளித்துள்ளது. அதில், 1971–72-ல் ரூ. 223·40 லட்சம் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்கான அசலையும் வட்டியையும் திருப்பித் தருவதற்கு மாநில அரசு உத்திரவாதம் அளிக்கிறது. மாநில அரசால் கொடுக்கப்படும் உத்தரவாதத்தின் உயர் வரம்பு ரூ. 125 கோடி ஆகும். 31–12–1971-ல் நடைமுறையிலுள்ள சாதாரணக் கடன் ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 95·61 கோடியாகும்.

நில மேம்பாடு குறித்த பல்வேறு காரியங்களுக்காக நிலவள வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| செயல் திட்டங்கள். | வழங்கப்பட்ட கடன்கள். 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72 (31–1–1972 வரை). |
|---|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்). | | | |
| 1 புதிய கிணறுகள் தோண்டுதல். | 3,38·26 | 5,86·09 | 7,49·35 | 5,20·45 |
| 2 கிணறுகளை ஆழப்படுத்துதல். | 2,24·71 | 2,13·62 | 4,82·28 | 5,40·73 |
| 3 விசையேற்றங்களை அமைத்தல். | 3,62·85 | 3,19·47 | 4,06·45 | 2,68·03 |



| செயல் திட்டங்கள். | வழங்கப்பட்ட கடன்கள். 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72 (31–1–1972 வரை). |
|---|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்) | | | |
| 4 விசையேற்றங்களை அமைத்தல். | 40·80 | 52·78 | .. | .. |
| 5 நிலம் பண்படுத்துதல் .. | 94·19 | 31·32 | 36·57 | 38·39 |
| 6 டிராக்டர்கள் வாங்குதல் .. | 1,11·22 | 1,06·65 | 2,00·82 | 2,28·39 |
| 7 வடிமுனைக் குழாய்க் கிணறுகள். | 6·30 | 31·35 | .. | .. |
| 8 ஏனைய நில மேம்பாடுகள் .. | 1,17·36 | 71·33 | 20·28 | 28·49 |
| | 12,95·69 | 14,18·61 | 18,95·75 | 16,24·48 |

வங்கிகளே இல்லாத வளர்ச்சி வட்டாரங்களில், தொடக்க நிலவள வங்கிகள், வட்ட அளவில் கிளைகளைத் தொடங்குவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின்படி, 134 கிளை வங்கிகள் தொடங்கப்பட வேண்டும். இவற்றில் 77 கிளைகள் நிதியுதவியில்லாமல் தனித்து இயங்கக்கூடியவையாகவும், 29 கிளைகள் மாநில அரசின் பங்கு மூலதனத்துடன் இயங்கக் கூடியவையாகவும், 28 கிளைகள் மாநில அரசின் நிர்வாக உதவித் தொகையுடன் இயங்கக் கூடியவையாகவும் இருக்கும். இதுவரை 34 கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கிராம சேமிப்புகளை ஈட்டும் நோக்குடன் தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி கிராமக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுகிறது. தனிப்பட்டவர்களாலும், இந்திய ரிசர்வ் வங்கியாலும் இந்தக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. இந்தக் கடன் ஈட்டுப் பத்திரங்களில் இருந்து கிடைக்கும் தொகைகள் வங்கியின் சாதாரணக் கடன் வழங்கு திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 31–12–1971 அன்றுள்ளபடி நடைமுறையில் உள்ள கிராமக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 2·31 கோடியாகும். ஓராண்டு முதல் ஈராண்டு வரை தனிப்பட்டோரிடமிருந்து குறிப்பிட்ட கால கையடைத் தொகை பெற வங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கையடைத் தொகைகள் கிராமக் கடன் ஈட்டுப் பத்திரங்களாக கணக்கிடப்படும். 31–1–1972 வரை வங்கி வசூலித்த இத்தகைய கையடைத் தொகை ரூ. 15·79 லட்சமாகும்.

கிராமப்புற கடன் ஈட்டுப்பத்திரங்களுக்குப் பதிலாக கிராமப்புற கடன் ஈட்டுச் சான்றிதழ்களை வழங்குவதற்கு வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

நிலவள வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களைக் கொண்டு புதிய கிணறுகளைத் தோண்டும் குடியானவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு 1968-69-லிருந்து செயலுக்குக் கொண்டு வந்துள்ளது.

[1972 மார்ச் 23

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடியானவர், ரூ. 500 என்ற உயரளவிற்குட்பட்டு கிணறு வெட்ட ஆகும் செலவில் 25 சதவீத உதவித் தொகையைப் பெறுவதற்குத் தகுதியுடையவராவார். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆண்டுவாரி உதவித் தொகையின் அளவும் தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | உதவியளிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. | உதவித் தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1968–69 .. .. .. | 640 | 3·20 |
| 1969–70 .. .. .. | 4,842 | 24·21 |
| 1970–71 .. .. .. | 5,092 | 25·46 |

இத்திட்டத்தின் கீழ் 1971–72-ல், உதவித்தொகையாக ரூ. 33 லட்சம் வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிணறுகள் வெட்டுதல், விசையேற்றங்கள் அமைத்தல் முதலிய சாதாரணத் திட்டங்களுக்காக தொடக்க நிலவள வங்கிகளின் மூலம் குடியானவர்களுக்கு நிதியுதவி அளிப்பதைத் தவிர தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கியால் வெளியிடப்பட்ட சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுப் பத்திரங்களுக்குத் தொகையளிப்பதன் மூலம், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்திடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் பெற்ற நிதியுதவியுடன் சிறுபாசனம், மலைத் தோட்டப் பயிர்த் திட்டங்கள் வாயிலாக அவ்வப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களில் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகமும், மாநில அரசும் சிறு பாசனத் திட்டங்களுக்கு 9 : 1 என்ற விகிதத்திலும், நிலமேம்பாடு போன்ற சிறு பாசனத் திட்டமல்லாத திட்டங்களுக்காகவும், ரப்பர், தேயிலை, தென்னை, காப்பி போன்ற மலைத் தோட்டத் திட்டங்களுக்காகவும் 3 : 1 என்ற விகிதத்திலும் முதலீடு செய்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் சிறப்பு மேம்பாட்டுக் கடன் ஈட்டுறுதிப் பத்திரங்களுக்கு மாநில அரசு இதுவரை ரூ. 2·12 கோடி தொகையளித்துள்ளது. அவை குறித்த விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | அளிக்கப்பட்ட தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1965–66 .. .. .. .. | 5·0000 |
| 1966–67 .. .. .. .. | 15·0000 |
| 1967–68 .. .. .. .. | 25·0000 |
| 1968–69 .. .. .. .. .. | 41·1500 |
| 1969–70 .. .. .. .. | 27·0125 |
| 1970–71 .. .. .. .. | 45·2650 |
| 1971–72 (31–1–1972 வரை) .. .. | 53·63 |
| | 212·05 |



1972 மார்ச் 23]

31–12–1971 அன்றுள்ளபடி தற்போது நடைமுறையிலுள்ள சிறப்பு மேம்பாட்டுக்கடன் ஈட்டுப் பத்திரங்களின் மதிப்பு ரூ. 11·47 கோடியாகும்.

தமிழ்நாட்டில், ரூ. 20·40 கோடி செலவில் 22 சிறு பாசனத் திட்டங்களும், ரூ. 8·05 கோடி செலவில் 7 சிறுபாசனம் அல்லாத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 18,000 புதிய கிணறுகள் வெட்டுதல், 5,000 கிணறுகளை ஆழப்படுத்துதல், 20,000 விசையேற்றங்கள் நிறுவுதல், 6,500 ஏக்கர் பரப்பளவில் காப்பித் தோட்டங்களும், 1,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களும், 1,500 ஏக்கர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்களும், 2,000 ஏக்கர் பரப்பளவில் தென்னந்தோப்புகளும் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்கள் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் திட்டங்களைத் திறம்பட உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதற்காக மாநில நிலவள வங்கியில் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப் பிரிவில் வேளாண்மைப் பொருளாதார வல்லுநர் ஒருவர், வேளாண்மை பொறியியல் வல்லுநர் ஒருவர் ஆகியோர் இருப்பர். இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு பாசனத் திட்டங்கள், நிலத்தைப் பண்படுத்தும் திட்டங்கள், மலைத் தோட்ட வளர்ச்சித் திட்டங்கள் போன்ற சிறப்புத் திட்டங்கள் பற்றி நன்கு மதிப்பிட இவ் வங்கிக்கு இயலும் பொருட்டே அத்தகைய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அன்றியும் துணைப் பதிவாளர் தரத்தில் திட்ட அதிகாரிகள் இம் மாநிலத்திலுள்ள 13 மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ்ப் பணிபுரிய வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள 12 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், தொழில் நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு ஒவ்வொன்றிலும், நில இயல் உதவி வல்லுநர் ஒருவரும், வேளாண்மை உதவிப் பொறியாளர் ஒருவரும் இருப்பர். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் வேளாண்மை உதவிப் பொறியாளருக்குப் பதிலாக, வேளாண்மைப் பொறியியல் மேற்

[1972 மார்ச் 23

பார்வையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். திட்டங்கள் வகுப்பதிலும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்ற தொழில் நுட்ப உதவி யளிப்பதிலும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, இத் தொழில் நுட்பக் குழுக் கள் உதவியளிக்கும். இது தவிர, முன்னுரிமை அடிப்படையில் சிறு பாசனத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்காகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் புதிய திட்டங்களைத் தயாரிக்கும் பணியை நிர்வாகப் பொறியாளர் தரத்தில் சிறப்பு அலுவலர் ஒருவரும் அவருக்குத் தேவையான நில இயல் உதவிப் பணியாளர்களும் கவனித்து வருகின்றனர். மற்றும் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் கிணறு கள் தோண்டி மேம்பாடு செய்யப்பட வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது. இம் மாவட்டங்களில் நீர் வளம் பற்றிய தனது பரிவுரைகளையும் மேற் சொன்ன சிறப்பு அதிகாரி தயாரித்து அனுப்புவார்.

சிறப்புத் திட்டங்களின் கீழ், நிலவள வங்கிகள் வழங்கியுள்ள கடன் களின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1968–69 .. .. .. .. .. .. | 1·33 |
| 1969–70 .. .. .. .. .. .. | 1·31 |
| 1970–71 .. .. .. .. .. .. | 3·29 |
| 1971–72 .. .. .. .. .. .. (31—1—1972 வரை) | 5·00 |

அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தின்கீழ், தமிழ்நாட்டில் ரூ. 46·76 கோடி செலவில், வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, உலக வங்கி (அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகம்) முன்வந்துள்ளது. அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவித் தொகை ரூ. 26·25 கோடியாக இருக்கும். இந்த உதவித் தொகையானது, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சாதாரணக் கிணறுகளை வெட்டுவதற்கும், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி ஆகிய மாவட்டங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவற்றை அமைப்பதற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் வடி கால் வசதி செய்வதற்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் நில மேம்பாட்டுப் பணிக்காகவும், தமிழ்நாடு முழுவதும், பண்ணையை இயந்திரமயமாக்கு தலுக்காகவும் (டிராக்டர்கள் வாங்குதல்) அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவித் தொகை ரூ. 26·25 கோடியும் பயன்படுத்தப்படும். அனைத்து நாடு வளர்ச்சிக் கழகத்தின் உதவித் தொகையானது, பம்பாய், வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் வாயிலாகக் கொடுக்கப்படும். இந்தக் கழகம், மாநில நிலவள வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றின் வாயிலாக இந்த உதவித் தொகையை வழங்கும்.



1972 மார்ச் 23]

அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டமானது, கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றக் கருதுகிறது :—

| | |
|---|---|
| வடிமுனைக் குழாய்க் கிணறுகள். | 7,000 |
| குழாய்க் கிணறுகள் (ஆழமற்ற, நடுத்தர). | 4,500 |
| தற்போதுள்ள வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான மின்விசையேற்றங் கள். | 4,000 |
| சாதாரண கிணறுகள் .. .. .. | 10,000 |
| நிலத்தைச் சமப்படுத்தல் .. .. | 10,000 ஹெக்டேர். |
| நிலவடிகால் .. .. .. .. | 18,000 ,, |
| டிராக்டர்கள் .. .... .. .. | 1,500 (25 முதல் 60 வரையி லான பரித்திறன் அளவு). |

இத்திட்டமானது, 2—11—71-ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இத்திட்டமானது 2½ ஆண்டுக்காலம் வரை செயல்படுத்தப்படும். ரூ. 11·36 கோடி செலவில் 10 சிறு பாசனத் திட்டங்களையும், ரூ. 0·63 லட்சம் செலவில் சிறுபாசனமில்லாத திட்டம் ஒன்றையும் நிறைவேற்ற வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தால் இதுவரையில் ஒப்பளிக்கப்பட் டுள்ளது. இத்திட்டங்களின் கீழ், நடப்பு ஆண்டில், ரூ. 1·80 கோடி கடன் வழங்கப்படும்.

ஒன்று அல்லது இரண்டு ஹெக்டேர் நிலம் உள்ள குடியானவர்கள் சிறு பாசனத் திட்டங்களின் நன்மைகளைப் பெற இயலும் பொருட்டும், கிணறுகள் வெட்டுவதற்கும், விசையேற்றங்களை நிறுவுவதற்கும் போதிய மூலதனத்தைக் கடனாகப் பெறும் வகையில் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறை வைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசு நிலவள வங்கிகள், பிற நிதி உதவி செய்யும் நிறுவனங்கள் ஆகியவை வழங்கும் கடன் வசதிகளை அச்சங்கங்கள் பெற்றுப் பொதுக் கிணறுகளைத் தோண்டும் பணி யையும், விசையேற்றங்களைத் நிறுவும் பணியையும் மேற்கொள்ளுகின்றன. 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய 2,031 சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இறைவைப் பாசனச் சங்கங்களின் பணிகளை இணைப்பதற்காகவும், அச் சங்கங்களுக்கு உதவி புரிவதற்கும், இறைவைப் பாசன சங்கங்களின் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால கடன் வழங்கும் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங் களைப் போலவே, மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கி ஆகியவற்றை, அவற்றின் நிகர ஆதாயத்திலிருந்து, 15 சத வீதத்தை

[1972 மார்ச் 23

வேளாண்மைக் கடனுதவி நிலை நிதிக்காக ஒதுக்குமாறு, அரசு கேட்டுக் கொண்டுள்ளது. பஞ்சம், வறட்சி அல்லது அதுபோன்ற எதிர்பாராத காரணங்களால், தாம் பெற்ற கடன் தொகையைக் காலந் தாழ்த்தித் திருப்பிச் செலுத்தும் வசதியைக் கடன் வாங்கியவர்கள் பெறுவதற்காக இந்நிதி பயன்படுத்தப்படும். மேலும், மாநில நிலவள வங்கியை அதன் நிகர ஆதாயத்திலிருந்து 10 சதவீதத்தை பலனளிக்கா கிணறுகள் நிதிக்காக ஒதுக்குமாறு, அரசு கேட்டுக் கொண்டுள்ளது. வறட்சி, அல்லது அது போன்ற எதிர்பாராத காரணங்களால் பலனளிக்காத கிணறுகளால் கடன் வாங்கியவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய இந்நிதி பயன்படுத்தப்படும்.

வீட்டு அடைமான மத்தியச் சங்கத்தோடு, 83 வீட்டு அடைமான தொடக்கச் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள வீடுகளில் இணைப்புகளைச் சேர்த்தல், மாற்றம் செய்தல், பழுது பார்த்தல் ஆகியவற்றிற்காகக் கடன்கள் வழங்குவதோடு, புதிய குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கும் ஏற்கெனவேயுள்ள கடன்களை குறிப்பிட்ட அளவுக்குத் தீர்ப்பதற்கும் இச்சங்கமானது, கடன்களை வழங்கி வருகிறது. கடன் வழங்குவதற்காக, இச்சங்கமானது, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு அரசு உறுதியளித்துள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இதுவரை, மொத்தம் ரூ. 7·67 கோடி நிதி உதவி செய்துள்ளது. 1971–72-ல் (31—1—1972 வரை) இச்சங்கமானது ரூ. 1·51 கோடி வரை கடன் வழங்கியுள்ளது.

இச்சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு அரசு, ரூ. 35·00 லட்சம் வரை தொகை செலுத்தியுள்ளது. நடப்பாண்டில், இச்சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு அரசால் ரூ. 20·00 லட்சம் முதலீடு செய்யப்படும். இத்துடன் இச்சங்கத்தில் அரசின் மொத்த பங்கு மூலதனம் ரூ. 55·00 லட்சமாகும்.

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கு, நகரக் கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி செய்வதற்காக நகரக் கூட்டுறவு வங்கிகளின் பங்கு மூலதன அடிப்படையைப் பலப்படுத்தவும், அதற்கென அவைகளுக்கு கடனுதவி செய்வதற்குமான, திட்டமொன்றை இந்திய ரிசர்வ் வங்கி உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நகர வங்கிகளின் பங்கு மூலதனத்திற்கு, அரசு ரூ. 0·85 லட்சம் வரை முதலீடு செய்துள்ளது.

## II. கூட்டுறவு விற்பனை, செய்முறை சங்கங்கள்.

கூட்டுறவு வாணிப-செய்முறைத் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு விற்பனைத் திட்டங்களுக்காகவும் செய்முறைத் திட்டங்களுக்காகவும் ரூ. 539 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில் செய்யப்பட்ட மொத்த செலவு



1972 மார்ச் 23]

ரூ. 1,19·93 லட்சமாகும். 1970–71-ம் ஆண்டிலோ ரூ. 87·72 லட்சமே செலவு ஏற்பட்டது. செலவு செய்த முக்கியமான திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டத்தின் பெயர். | பயன்படுத்தப்பட்ட தொகை. | |
|---|---|---|
| | 1969–70. | 1970–71. |
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1 நவீன அரிசி ஆலைகளை நிறுவுதல் .. | 37·10 | 20·00 |
| 2 கொள்முதல் பணிக்காக அரிசி ஆலைகளை நிறுவிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குக் கட்டுப்படியாவதற்கான தொகையை அளித்தல். | .. | 23·01 |
| 3 இரசாயன உரங்களுக்காகத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்கும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்கும் கட்டுப்படியாவதற்காகத் தொகை அளித்தல். | 16·00 | 43·00 |
| 4 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் உரமணித் தொழிச்சாலை ஒன்றை நிறுவுதல். | 8·25 | 10·00 |
| 5 பயிர் நோய் மருந்து, பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவை நிறுவுதல். | 0·82 | 1·17 |
| 6 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு டிராக்டர் பழுது பார்க்கும் பிரிவு ஒன்றை நிறுவுதல். | .. | 0·92 |
| 7 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம் உதவுதல். | 6·55 | 10·00 |
| 8 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் லாரிகள் அல்லது டிரக்குகளை வாங்குதல். | 3·00 | 1·00 |
| 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்ற, இறக்க நிதிக்கு உதவித் தொகை அளித்தல். | .. | 0·52 |
| 10 குளிர் சாதன அறை நிறுவுவதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவி. | 4·91 | .. |
| 11 செய்முறைப் பிரிவுகளை நிறுவுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலதன முதலீடும் கடனுதவியும் அளித்தல். | 2·81 | 1·10 |

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுதல் மூலதனத்தைப் பெருக்குவதற்காக 117 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலதன முதலீட்டில் மாநில அரசும் பங்கு கொண்டுள்ளது. 1971-72-ல் இது வரையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 6·95 லட்சம் உட்பட, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலதனத்தில் முதலீட்டுக்காக ரூ. 68·35 லட்சம் செலுத்தப்பட்டிருக்கிறது.

மேலாளர்கள், கணக்கர்கள், கிடங்குக் காப்பாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிப்பதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இந்த உதவி மூன்றாண்டுக் காலத்திற்குப் படிப்படியாகக் குறையும் அளவுக்கு வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் விளைபொருள்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும் பொருட்டு அவற்றைத் தரம் பிரிப்பதற்காக, தரம் பிரிக்கும் இயந்திரம் வாங்கவும், தரம் பிரிக்கும் ஊழியர்களுக்காகும் செலவுக்காகவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உழவர்களின் விளை பொருள்களை விற்பனை செய்வதற்கும், அவர்களுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்கும், விற்பனைச் சங்கங்களுக்கு விரைவான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு லாரிகள் வாங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதுவரையில 54 லாரிகள் வாங்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

விற்பனைச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களின் விளைபொருள்களை மொத்தமாக வாங்கித் தங்கள் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள அவற்றிற்கு ஊக்கமளிக்கும் வகையில், விலை ஏற்ற இறக்கத் தம்பு நிதி (Price Fluctuation Fund) ஒன்றை ஏற்படுத்த அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்குகிறது. அச்சங்கங்கள் முந்திய ஆண்டில் ஒருமொத்தமாக வாங்கிய வேளாண்மை விளைபொருள்களின் மதிப்பில் 2 சதவீத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. செயல்முறைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு, கூட்டுறவுச் சங்கங்களினால் விற்கப்படுபவையும், விலை ஏற்ற இறக்கம் அதிகமாய் இருக்கக் கூடியவையுமான பொருள்கள் அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் குறித்து அரசு உதவித் தொகையின் வரையறை 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தப்படலாமென அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் இந்த நிதிக்கு உதவித்தொகையாக ரூ. 0·52 லட்சம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டது. 1971–72 ஆம் ஆண்டில் ரூ. 1·00 லட்சம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப, மேம்பாட்டுப் பிரிவின்கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, நடப்பு ஆண்டில், தலைமைக் கணக்கு அதிகாரி ஒருவரையும், கட்டடப் பொறியாளர் ஒருவரையும் நியமித்திருக்கிறது. ஏற்கனவே, விற்பனை அதிகாரி ஒருவர், உரத் தயாரிப்பு தலைமை அதிகாரி ஒருவர், வேலைமுறைப் பொறியாளர் ஒருவர் ஆகியோரை





இப்பிரிவு நியமித்துள்ளது. இப்பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள வல்லுநர்களுக்கான செலவை 5 ஆண்டுக் கால அளவில், படிப்படியாக குறைந்து வருகிற வீதத்தில் அரசு ஈடு செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு விற்பனைச் சங்கங்களின் பணியாளர்களாக நியமிக்கப்படுவதற்குரிய பணியாளர்களைக்கொண்டு பொதுவான பணித்தரம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இப்பணியாளர்கள் அக்கூட்டமைப்புடன் இணைந்துள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயலாளர்களாகவோ, மேலாளர்களாகவோ பணியாற்றுவதற்கு தற்காலிகமாக அனுப்பப்படுவர். நிர்வாகப் பணியாளர் குறித்த செலவை அரசு ஓராண்டுக் காலத்திற்கு ஈடு செய்தது.

1970–71-ல், இந்த கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மைப் பொருளின் மதிப்பு ரூ. 19·78 கோடியாகும். 1971–72-ல் (31–12–1971 வரையில்) இந்த மதிப்பு ரூ. 14·51 கோடியாகும். குளிர்ச்சாதன அறை ஒன்றை நிறுவுவதற்காகத் தமிழ்நாடு விற்பனைக் கூட்டமைப்புக்கு ரூ. 4·91 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பு இதற்கான நிலத்தை சென்னை மாநகராட்சியிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றிருக்கிறது. கட்டடங்கள் கட்டும் பணியில் முன்னேற்றம் கண்டுள்ளது.

எண்ணெய் ஆலைகள், மரவள்ளிக் கிழங்கு, அன்னாசிப்பழம் இவற்றின் செய்முறைப் பிரிவுகளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் துணைப்பிரிவுகளாக நிறுவ அரசு பங்கு மூலதனமாகவும், கடனாகவும் உதவியளிக்கிறது. பருத்தி எண்ணெய் ஆலை ஒன்றை அமைப்பதற்கான திட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு தமிழ்நாடு விற்பனைக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆய்வு முடிந்து விட்டது; திட்ட அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. செய்முறைப் பிரிவுகளை நிறுவியுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகைக்காகவும் ரூ. 2·80 லட்சம் வழங்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான செய்முறை பிரிவுகளும், நிறுவப்பட்டு வரும் செய்முறைப் பிரிவுகளும் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், பிரிவின் வகைகளும். | பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. பருத்தி விதை நீக்கும் பிரிவுகள் .. .. .. | 18 |
| 2. வேர்க்கடலை மேல்தோல் நீக்கும் பிரிவுகள் .. .. | 25 |
| 3. எண்ணெய் ஆடும் பிரிவுகள் .. .. .. | 8 |
| 4. அரிசி உமி நீக்கும் பிரிவுகள் .. .. .. .. | 36 |
| 5. காப்பிக்கொட்டை பக்குவப்படுத்தும் தொழிற்சாலை .. | 1 |
| 6. நவீன அரிசி ஆலைகள் .. .. .. .. .. | 13 |
| 7. அரிசித்தவிட்டு எண்ணெய்ப் பிரிவு .. .. .. | 1 |

| வரிசை எண்ணும், பிரிவின் வகைகளும். | பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 8. பழங்களை டப்பியிலடைக்கும் பிரிவு .. .. .. | 1 |
| 9. ஏலக்காய் எண்ணெய்த் தயாரிப்புப் பிரிவு .. .. | 1 |
| 10. மரவள்ளிக்கிழங்கு செய்முறைப் பிரிவு .. .. | 1 |
| 11. அன்னாசிப்பழம் செய்முறைப் பிரிவு .. .. .. | 1 (நிறுவப்பட்டு வருகிறது). |

கூட்டுறவுத் துறையில் 13 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| மாவட்டம். (1) | இருப்பிடம். (2) | மணி ஒன்றுக்குத் திறனளவு. (3) (டன்) |
|---|---|---|
| தஞ்சாவூர் .. .. .. | திருவாரூர் .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. .. | திருவையாறு .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. .. | கும்பகோணம் .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. .. | மன்னார்குடி .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. .. | மாயூரம் .. .. | 4 |
| தஞ்சாவூர் .. .. .. | பட்டுக்கோட்டை .. .. | 2 |
| செங்கற்பட்டு .. .. | செங்கற்பட்டு .. .. | 2 |
| வட ஆர்க்காடு .. .. .. | செய்யாறு .. .. | 2 |
| தென் ஆர்க்காடு .. .. | கள்ளக்குறிச்சி .. .. | 2 |
| திருச்சிராப்பள்ளி .. .. | திருச்சிராப்பள்ளி .. | 2 |
| மதுரை .. .. .. | மதுரை .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. | திருநெல்வேலி .. .. | 2 |
| கோயம்புத்தூர் .. .. | பொள்ளாச்சி .. .. | 2 |

மேற்கண்ட 13 ஆலைகளில், 10 ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மாயூரத்திலுள்ள ஓர் ஆலையின் கட்டிடப்பணி நிறைவேறி வருகிறது. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலியிலுள்ள இரண்டு ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கச் சித்தமாயுள்ளன.

அரிசி ஆலைகளை நிறுவியுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள் முதல் காரியங்களுக்காக நடைமுறை மூலதனத்தைத் திரட்டுவதற்குத் துணைசெய்யும் வகையில் பங்கு மூலதன வடிவில் 1970–71-ல் அரசு 11 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 23·01 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. கள்ளக்குறிச்சி வேளாண்மை விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு, 1971–72-ல் ரூ. 1·11 லட்சம் வழங்கியுள்ளது.





அந்நியச் செலாவணி பெறும் துணைப் பொருளாகிய தவிட்டு எண்ணெய் தயாரிப்பதில் தஞ்சாவூர் மாவட்ட அரிசி ஆலைகளில் கிடைக்கின்ற அரிசித் தவிட்டை ஆதாயமுள்ளவாறு பயன்படுத்தும் பொருட்டு, ரூ. 19·75 லட்சம் செலவில் அரிசித் தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றைத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிறுவியுள்ளது. இத்தொகையில் அரசின் உதவி ரூபாய் 14·81 லட்சமாகும். (இதில் பங்கு மூலதனம் ரூபாய் 4·94 லட்சமும், கடன் ரூபாய் 9·87 லட்சமுமாகும்.)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பால், வனஸ்பதி தொழிற்சாலை, கடலை எண்ணெய் உற்பத்திப் பிரிவு, மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலை ஆகியவை நிறுவப்படுவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையிலுள்ளன.

காகித ஆலையொன்றை நடத்துவதற்காக, ஒரு கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆலையைப் பின்தங்கிய பகுதி ஒன்றில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் காகித ஆலையை நிறுவுவதற்காக, 1951 ஆம் ஆண்டு தொழில் (மேம்படுத்தல்—முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ், இந்திய அரசு, இசைவுக்கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது. இந்தக் காகித ஆலையை நிறுவுதல் தொடர்பாக, சாத்தியக்கூறு அறிக்கையொன்றை தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரிடமிருந்து பெற அரசு முடிவு செய்துள்ளது. இந்த அறிக்கையைத் தயாரிக்க, திருவாளர்கள் டெவலப்மெண்ட் கன்ஸல்டன்ட்ஸ் நிறுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு (ரூபாய் 8·25 லட்சம் பங்கு மூலதனமும், ரூபாய் 10 லட்சம் கடனும் சேர்ந்த நிதி உதவியுடன்) ஏறத்தாழ ரூபாய் 25 லட்சம் செலவில் மன்னார்குடியில் உர மணிகள் தொழிற்சாலை (Granular Fertilizer Plant) ஒன்றை நிறுவியுள்ளது. அத்தொழிற்சாலை 21–1–1971 அன்று பணி தொடங்கியுள்ளது. ஆண்டொன்றுக்கு 45,000 டன் உரமணிகள் உற்பத்தி செய்யும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. 31–12–1971 வரையில் இத்தொழிற்சாலை 17,295 டன் உரமணியைத் தயாரித்துள்ளது. "பாமினி உரம்" என்றழைக்கப்படும் இந்த வகை உரம் நன்றாக விற்பனையாகிறது.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் நிறுவனம், பயிர் நோய்களை ஒழிக்கும் மருந்துகளையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. ரூபாய் 1·30 லட்சம் பங்கு மூலதனமாகவும், ரூபாய் 0·51 லட்சம் கடனாகவும், ரூபாய் 0·18 லட்சம் உதவித் தொகையாகவும் அரசு நிதியுதவி அளித்துள்ளது. இயந்திரங்கள், சாதனங்கள் வாங்குவதற்காகவும், பணிக் கொட்டகைகள் கட்டுவதற்காகவும், வங்கியிலிருந்து உதவித் தொகை பெறுவதற்காகவும், நிர்வாக உதவித் தொகைக்காகவும், மேற்கூறிய கடனும், உதவித் தொகையும் வழங்கப்பட்டன. இப்பிரிவு 11–12–1970-ல் செயல்படத் தொடங்கியது.

மன்னார்குடியில் டிராக்டர் செப்பனிடும் பணி நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு

ரூபாய் 0·72 லட்சம் பங்கு மூலதனமாகவும், ரூபாய் 0·20 லட்சம் கடனாக வும் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பால் நிறுவப்படுகிறது.

தஞ்சாவூர் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலுமுள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், மாவட்ட அளவில் பயிற்சியளிக்கப் பட்ட உர மேம்பாட்டு அதிகாரிகளை நியமித்து, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கிராமக் கடன் சங்கங்கள் மூலம் தொகுப்பு ஏற்பாட்டில் அடங்காத உரத்தை வாங்கி வழங்குகின்றன. இக்கூட்டுறவுகள், 1970–71-ல் ரூபாய் 14·28 கோடியும், 1971–72-ல், 31–12–1971 வரையில், ரூபாய் 13·41 கோடியும் மதிப்புள்ள தொகுப்பு ஏற்பாட்டின்கீழ் அடங்குகிற உரத்தையும், அந்த ஏற்பாட்டில் அடங்காத உரத்தையும் வழங்கியுள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் உரங்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வதை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியைத் திரட்ட இயலும் வகையில், 1969–70-ல் ரூபாய் 16 லட்சமும், 1970–71 இல் ரூபாய் 43 லட்சமும் மேற்சொன்ன நிறுவனங்களுக்குப் பங்கு மூலதனத் தொகையாக வழங்குவதன் மூலம் அரசு நிதியுதவி அளித்துள்ளது. 1971–72-க்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு மேற்கொண்டும் ரூபாய் 20 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## III. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

376 சில்லறை விற்பனை நிலையங்களுடன் கூடியதும், 1,222 தொடக்கக் கூட்டுறவு விற்பனை நிலையங்களுடனும் கூடிய 30 மொத்த விற்பனை நிலையங்கள் நுகர்பொருள்களை நியாயமான விலையில் விற்கின்றன. பங்கு மூலதனத் தொகை, நடைமுதல் மூலதனம், மேசை நாற்காலி போன்ற மரச்சாமான்கள், வண்டிகள் ஆகியவை வாங்குதல், கிடங்குகள் கட்டுதல் முதலியவற்றிற்காக இந்தப் பண்டகசாலைகளுக்கு அரசு நிதி உதவி அளித்து வந்துள்ளது.

நுகர்வோர் விரைவுத் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய நகரங்களில் துறை பண்டகசாலைகள் திறக்கப் பட்டுள்ளன. இப்பண்டக சாலைகள் ஒவ்வோர் இடத்திலும் ஒன்று வீதத்தில் சென்னை, கடலூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் இரு சிறப்பு அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன. 1971–72-ல், செங்கற்பட்டு கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கம், காஞ்சீபுரத்தில் துறைப் பண்டக சாலை ஒன்றைத் தொடங்கியுள்ளது. தற்போது, தமிழ்நாட்டில் 13 துறை





பண்டக சாலைகள் உள்ளன. துறைப்பண்டக சாலைகள் மூலம் 1970-71, 1971–72 (31–12–1971 முடிய) ஆண்டுகளில் செய்யப்பட்ட மொத்த விற்பனைத் தொகை முறையே, ரூ. 929·48 லட்சம், ரூ. 869·2 லட்சமாகும்.

மூன்றாவது திட்டக்காலத்தில் கூட்டுறவுப் பண்டக சாலைகள், காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், எண்ணெய் ஆட்டும் இயந்திரம், தரம் பிரிக்கும் இயந்திரம் போன்ற நுகர்வோருக்கான சிறு அளவுத் தொழில்களை நிறுவின. 1968–69 வரை காப்பிக்கொட்டை அரைக்கும் 45 இயந்திரங்கள், 10 மாவு அரைக்கும் இயந்திரங்கள், 14 எண்ணெய் ஆட்டும், தரம் பிரிக்கும் இயந்திரங்கள் ஆகியவை நிறுவப்பட்டன. 4-ம் திட்டக்காலத்தில், நறுமணப் பொருட்களைப் பொடிசெய்தல், ரொட்டி தயாரித்தல், பருப்பு ஆலை, காகிதம் எழுது பொருட்கள் பிரிவு, காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரம், எண்ணெய் ஆட்டும் பிரிவுகள், பாலிதீன் பைகள், சோப்பு தயாரிக்கும் பிரிவுகள் முதலிய நுகர்வோர் தொழில்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70, 1970–71 ஆம் ஆண்டுகளில் நுகர்வோர் தொழில்களை அமைக்க, கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகள், மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கங்களுக்கு ரூ. 8·54 லட்சம் பங்கு மூலதனத் தொகை மூலம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் தொழில்கள், கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகள், மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கங்களினால் நிறுவப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கம்— வரையறுக்கப்பட்டது. | (1) சலவை சோப்புப் பிரிவு. (2) காப்பிக்கொட்டை அரைக்கும் பிரிவு. |
| 2 இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம். | (1) காப்பிக்கொட்டை அரைக்கும் பிரிவு. (2) காகிதம்—எழுதுப்பொருள் பிரிவு. |
| 3 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம். | (1) சோளப்பொறி தயாரிக்கும் பிரிவு. (2) காப்பிக்கொட்டை அரைக்கும் பிரிவு. |

நுகர்வோர் பண்டக சாலைகளின் வாணிகத்தை விரிவு படுத்தவும், அவற்றின் வாணிகங்களைப் பல்வகைப் படுத்தவும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களும், நன்கு செயல்படுகிற தொடக்கச் சங்கங்களும் நவீன சில்லறை விற்பனை நிலையங்களை நிறுவுகின்றன. இந்த நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் பொதுவாக "குறு சிறப்பு அங்காடிகள்" என்று அழைக்கப்படுகின்றன. இதுவரை, கீழ்க்கண்ட இடங்களில் அத்தகைய 24 நவீன சில்லரை விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன; அவையாவன : (1) கோயம்புத்தூர், (2) திருச்சி, (3) மேட்டுப்பாளையம், (4) விழுப்புரம், (5) மாயூரம், (6) நெய்வேலி, (7) சிவகங்கை, (8) அருப்புக்கோட்டை, (9) காட்பாடி, (10) திண்டுக்கல், (11) சிதம்பரம், (12) கோவில்பட்டி, (13) இளையாங்குடி, (14) வத்தலகுண்டு, (15) செங்கற்பட்டு, (16) திருப்பூர், (17) மேட்டூர் அணை, (18) கொடைக்கானல்,

(19) பொள்ளாச்சி, (20) ஆரணி, (21) அம்பாசமுத்திரம், (22) வாணியம்பாடி, (23) ஈரோடு, (24) கரூர். சென்னையில் மூன்றும், போடிநாயக்கனூரில் ஒன்றுமாக குறு சிறப்பு அங்காடிகள் விரைவில் தொடங்கப்படும். மேலும், 1971–72-இல 20 சில்லறை விற்பனை நிலையங்கள் மேற்கொண்டும் நிறுவ சங்கங்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிலையத்தையும் திறப்பதற்காகச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனத் தொகை மூலமும் கடன்கள மூலம் ரூ. 45,000 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்து வேலைவாய்ப்புகள் கொண்டுள்ள துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் விரைவான மேம்பாடுக்கான மத்திய அரசுதுறைத் திட்டத்தின்கீழ், 1971–72இல் இந்திய அரசு ரூ. 5·72 லட்சத்திற்கு ஒப்பளித்துள்ளது. அந்நிதியுதவி, (i) கோயம்புத்தூரில் சிறப்புப் பேரங்காடி நிறுவ, கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு வழங்கல்–விற்பனைச் சங்கத்திற்கும், (ii) சென்னையில் இரண்டு சில்லறை விற்பனைக் கடைகள் நிறுவவும், நான்கு பெரிய பிரிவுகளை விரிவுபடுத்தவும் டி. யு. சி. எஸ். நிறுவனத்திற்கும் ஆகும். இச்சங்கங்கள் நிதியுதவி பெறுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தலைமை நிறுவனமாகும். இது தொடங்க்க விற்பனைச் சங்கங்கள், மாவட்ட விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்களை ஒருங்கிணைக்கிறது. 1970–71 ஆம் ஆண்டு வரை இந்தக் கூட்டமைப்புக்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 6·00 லட்சம் அளிக்கப்பட்டது. இக்கூட்டமைப்பு 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 88·12 லட்சத்திற்கும், 1-4-1971 முதல் 31-1—1972 வரையில் ரூ. 77·14 லட்சத்திற்கும் விற்பனை செய்தது. இக்கூட்டமைப்பு வேளாண்மை விளைபொருள்கள் விலை ஏற்றத்தாழ்வுத் தடுப்புநிதி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். வேளாண்மை சார்ந்த இன்றியமையாப் பண்டங்களின் முடையிருப்பு குறித்துச் செயல்படுவதில் ஏற்படக்கூடிய பொறுப்பைச் சரிக்கட்ட அந்த நிதி உதவும். அதற்கென இந்த நிதியில் கூட்டமைப்பு தனது நிகர ஆதாயத்தில் 10 சதவிதத் தொகையை ஒதுக்கிவைக்க வேண்டும். கடந்த ஆண்டில் வேளாண்மைப் பொருள்களைப் பொருத்த வரையில், கூட்டமைப்பு செய்த மொத்த கொள்முதலில் 2 சதவீதத்தை அரசு நிதிக்கு வழங்குகிறது.

நான்காம் திட்டத்தின் கடைசி ஆண்டில் துய்ப்போர் விற்பனை நிலையங்களின் சில்லறை விற்பனையின் மதிப்பு ரூ. 50·00 கோடியாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசு நிர்ணயித்துள்ளது. இத்தொகையை எட்டி விடலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70ஆம் ஆண்டில நகரத் துய்ப்போர்களுக்கு விற்கப்பட்டதன் மூலம் கிடைத்த விற்பனைத்தொகை ரூ. 50·83 கோடியாகும்.

இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி 20 சதவித நகர மக்கள் இதன் மூலம் பயனடைவர். அதே சமயத்தில், 20 சதவீதம் சில்லறை வணிகர்களும் பயனடைவர், இதற்கெதிராக, 37 சதவீதம் மக்களும் 20 சதவீதம் சில்லறை வணிகர்களும் ஏற்கெனவே பயனடைந்துள்ளனர்.





### IV. சமுதாயத்தில் ஏழை எளியோர்க்கான சங்கங்கள்.

தேர்ச்சி பெற்ற தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துபவர்கள் போன்ற சமுதாயத்தில் ஏழை எளியவர்களுக்காக உதவும் நோக்கத்துடன், அவர்களின் நன்மைக்காக சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கூலி வேலை செய்பவர்களுக்கு உதவுவதற்காக, கூட்டுறவுக் கூலி வேலையாட்கள் ஒப்பந்த சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 120 சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், நடைமுதல் மூலதனம், சேமநிதி ஆகியவற்றிற்கும் கருவிகளை வாங்குவதற்கும் கடன் வடிவில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. பணியாளர்களின் இலவச படியும் அவற்றிற்கு வழங்கப்படுகிறது. 1970–71-ஆம் ஆண்டில் 9 சங்கங்களுக்கு ரூ. 0·86 லட்சத்துக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

சலவைத் தொழிலாளர் சமுதாயத்திற்கு உதவும்பொருட்டு 16 சங்கங்களும், 2 சலவை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பங்கு மூலதனம் மூலமும், சலவைப் பெட்டி, மேஜை, சலவைச் சோடா முதலிய சாதனங்கள் வாங்குவதவற்கான கடன், உதவித் தொகை மூலமும் இச்சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. உப்பு தயாரிக்கும் பணியாளர்களுக்கு உதவி செய்ய் 13 உப்புத் தயாரிப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

முடிதிருத்தும் நிலையங்களுக்காகவும், நாவிதர்களுக்காகவும் 17 சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்களுக்கு முடிதிருத்தும் இடங்களைத் திறபபதற்கும் சாதனங்கள், மரச் சாமான்கள் முதலியன வாங்குவதற்காகவும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மலைச் சாதியினர்களின் நன்மைக்காக 7 விற்பனைச் சங்கங்கள் உள்ளன இச் சங்கங்கள் வெட்டு மரக்காடுகளைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்கின்றன. இவை காடுபடு சிறு பொருள்களைச் சேகரிக்கின்றன. நடைமுதல் மூலதனம், கிடங்குகள் கட்டுதல் முதலியவற்றிற்காக இச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

பொறியாளர்களிடையே நிலவும் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் வேளாண் பணிகள் கூட்டுறவு நிலையங்களை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதுவரை பன்னிரெண்டு சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக அமைந்துள்ளன. புதுக்கோட்டை, சேலம் முசிறி, தஞ்சாவூர், சிவகெங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், வேலூர், காஞ்சிபுரம், தர்மபுரி, மதுரை "வேளாண் பொறியியல் பணி நிலையங்கள்" என்ற பெயரில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அத்தகைய சங்கங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதுவரை 100 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை சங்கத்தின் முக்கியமான குறிக்கோள்களாவன : கிணறுகளை ஆழப்படுத்துவது, நிலம் மட்டமாக்குதல் முதலியவற்றிற்கு இயந்திரங்களை முன்னுரிமை அடிப்படையில் அரசுத் துறைகளிலிருந்து உழவர்கள் பெற உதவுவது, வட்டார அளவில் வேளாண் பொறிகளைப் பழுதுபார்த்தல், செப்பனிடலுக்காக வசதிகளைச் செய்து தருதல்,

நில மேம்பாட்டினை மேற்கொள்ளுதல் ஆகியனவாகும். தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், டிராக்டர்களைப் பழுதுபார்த்தல், செப்பனிடலுக்கான நிலையங்களை நிறுவும் ஆறு சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் பங்கு மூலதனமாக ரூ. 50,000, கடனாக ரூ. 15,000, உதவித் தொகையாக ரூ. 7,500 வழங்க ஒப்பளித்துள்ளது.

வட்டார, மாவட்ட அளவுகளில் உள்ள சங்கங்களின் செயல்முறையை ஒருங்கிணைப்பதற்காக மாநில அளவில் வேளாண்மைப் பணிகள் கூட்டுறவுக் கூட்டமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## V. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.

சென்னை, தமிழ்நாடு கூட்டுறவு யூனியனைச் சேர்ந்த கூட்டுறவுப் பயிற்சியளிப்பதற்கான சிறப்புக் குழு இம்மாநிலத்தின் கூட்டுறவுப் பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பானதாகும். இத்திட்டங்கள் தமிழ்நாடு கூட்டுறவு யூனியனின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழு இளநிலை கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும் கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஒரு பயிற்சி நிலையமும் உள்ளன. நேரடியாக வேலைக்கு அமர்த்தப்பட்ட, கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை இன்ஸ்பெக்டர்கள், கூட்டுறவு உதவிப் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப் பயிற்சிக் கல்லூரி ஒன்று உள்ளது. இடைநிலைப் பணியாளர்களுக்காகக் கூட்டுறவு வங்கித் தொழில், தணிக்கை ஆகியவற்றில் குறுகிய கால சிறப்புப் பாடமுறை வகுப்புகளையும் நடத்துகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், (i) ஆங்கிலத்திலும் தமிழிலும் மாத சஞ்சிகைகள் வெளியிடுவது, (ii) இயலூர்த்தி ஒன்றை வைத்துக் கொண்டிருப்பது, (iii) அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவை கொண்டாடுவது (iv) நூலகங்களை விரிவு படுத்துவது, (v) கூட்டுறவு ஆலோசனைக் கூட்டங்களும் கருத்தரங்குகளும் நடத்துவது, (vi) பள்ளிகளில "கூட்டுறவு" பொருள் பற்றிக் கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் நடத்துவது ஆகியவற்றின் மூலம் கூட்டுறவு பற்றித் தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறது. கூட்டுறவுப் பாடமுறையைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பட்டப் படிப்பில் முதலாவதாக, இரண்டாவதாகத் தேறிய பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தங்க வெள்ளிப் பதக்கங்கள் பரிசாகக் கொடுக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டது.

கூட்டுறவுக் கல்வி, பிரசாரம், பயிற்சி, சேமிப்புகளைத் திரட்டுதல் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, வட்ட மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை, 73 வட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் 8 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஒன்றியங்கள் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ளும் :—

(i) கூட்டுறவு ஆலோசனைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(ii) கூட்டுறவுக் கருத்தரங்குகள், ஆய்வு வட்டங்கள், விவாதங்கள் முதலியன ஏற்பாடு செய்தல். கிராமங்களில் வாழ்வோருக்குக் கூட்டுறவுப் பற்றிப் பயிற்சி அளித்தல்.



(iii) நூல்கள் முதலியன வெளியிடுவது, நூலகம் நடத்துதல்.

(iv) கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கு வேலைத்தேடித் தருகிற வேலை வாய்ப்பு நிறுவனங்களாகப் பணியாற்றுவது.

கூட்டுறவு அமைப்புகள் நிகர ஆதாயத்திலிருந்து, கல்வி நிதிக்கு அளிக்கும் உயர்ந்த அளவு பங்குத்தொகை அளவு, அரசால் ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் திரட்டும் கூட்டுறவு வளர்ச்சி நிதிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிகர ஆதாயத்தில் 5 சதவீதம் தொகையை அளிக்கும்படி கோரும் வகையில் 1963-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளின் 46-வது விதி திருத்தப்பட்டுள்ளது. இந்த நிதி கூட்டுறவு வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சித் தொடர்பான செயல்கள், கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாடு, கூட்டுறவுத் துறையில் உள்ள திட்டங்களை சீரமைத்தல் அல்லது நவீனப்படுத்தல் பொதுவாகக் கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும். இதுவரை இந்த நிதியில் வரவு வைக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 8.00 லட்சமாகும்.

1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் செயல்படுத்திய சிறுபாசன திட்டங்கள், அதன் சாதனைகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மொத்தச் செலவு. திட்டச் செலவு. W. | மொத்தச் செலவு. திட்டச் செலவு. D.W. | மொத்தச் செலவு. நிதிச் செலவு. P.S. | மொத்தச் செலவு. நிதிச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையில் உள்ள சாதனைகள். திட்டச் செலவு. W. | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையில் உள்ள சாதனைகள். திட்டச் செலவு. D.W. | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையில் உள்ள சாதனைகள். நிதிச் செலவு, P.S. | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையில் உள்ள சாதனைகள். நிதிச் செலவு, (ரூபாய் இலட்சத்தில்.) | 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. திட்டச் செலவு. W. | 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. திட்டச் செலவு. D.W. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. செங்கல்பட்டு மாவட்டம். | | | | | | | | | | |
| 1 மதுராந்தகம்—செங்கல்பட்டு .. | 529* | .. | 529 | 42·23 | 380 | .. | 380 | 18·13 | 149 | .. |
| 2. தஞ்சாவூர் மாவட்டம். | | | | | | | | | | |
| 2 தஞ்சாவூர் வடிமுனைக் குழாய்க் கிணறுகள். | 1.000 | — | .. | 40·00 | .. | 587 | F.P. | 19·59 | .. | 413 |
| 3. தென் ஆர்க்காடு மாவட்டம். | | | | | | | | | | |
| 3 விழுப்புரம் வெட்டு துளைக் கிணறுகள் திட்டம். | 1,200 | .. | 1,700 | 95·50 | 142 | .. | 37 | 7·70 | 400 | . |
| 4. திருச்சிராப்பள்ளி மாவட்டம். | | | | | | | | | | |
| 4 புதுக்கோட்டை .. .. | 2,000 | .. | 500 | 72·97 | 2,000 | .. | 99 | 69·45 | .. | .. |
| 5 லால்குடி—உடையார் பாளையம். | 200 | .. | 500 | 28·00 | 29 | .. | 32 | 1·34 | 75 | .. |
| 6 முசிறி .. .. .. .. | 900 | 500 | 1,400 | 102·50 | 96 | 307 | 200 | 3·00 | 300 | 150 |
| 7 குளித்தலை .. .. .. | 700 | 300 | 1,000 | 74·50 | 75 | 121 | 23 | 6·08 | 2500 | 100 |
| 8 மணப்பாறை .. .. .. | 500 | 200 | 700 | 62·00 | 67 | 130 | 70 | 6·46 | 300 | 70 |
| 9 கரூர் .. .. .. .. | 800 | 300 | 900 | 70·50 | 67 | 103 | 55 | 6·03 | 225 | 100 |
| 5. மதுரை மாவட்டம். | | | | | | | | | | |
| 10 திருமங்கலம்—உசிலம்பட்டி .. | 1,000 | 500 | 1,300 | 114·00 | 862 | 475 | 86 | 57·16 | 138 | 25 |
| 11 திண்டுக்கல்—வேதசாந்தூர் .. | .. | 1,500 | 300 | 91·50 | .. | 780 | 203 | 29·32 | .. | 500 |
| 12 மதுரை—மேலூர் .. .. | 1,050 | .. | 1,050 | 63·00 | 200 | .. | 1 | 8·34 | 375 | .. |
| 6. இராமநாதபுரம் மாவட்டம். | | | | | | | | | | |
| 13 சிவகங்கா—திருப்பத்தூர் நிலை—I | 150 | .. | 150 | 9·00 | 150 | .. | 121 | 8·15 | .. | .. |
| 14 சிவகங்கா—திருப்பத்தூர் நிலை—II | 2,750 | .. | 2,750 | 165·00 | 727 | .. | 313 | 30·70 | 500 | .. |
| 7. திருநெல்வேலி மாவட்டம். | | | | | | | | | | |
| 15 சங்கரன்கோவில் .. .. | 1,500 | 500 | 1,800 | 134·00 | 310 | 244 | 115 | 21·21 | 400 | 150 |
| 16 நாங்குநேரி .. .. .. | 1,200 | .. | 1,200 | 126·00 | 228 | .. | 30 | 10·51 | 500 | .. |
| 17 திருநெல்வேலி—தென்காசி .. | 1,500 | .. | 1,500 | 112·50 | 311 | .. | 40 | 12·54 | 600 | .. |
| 8. சேலம் மாவட்டம். | | | | | | | | | | |
| 18 நாமக்கல் .. .. .. | .. | 1,000 | 500 | 60·00 | .. | 272 | 54 | 13·64 | .. | 500 |
| 9. தருமபுரி மாவட்டம். | | | | | | | | | | |
| 19 கிருஷ்ணகிரி—ஊத்தங்கரை .. | 203* | .. | 39 | 9·27 | 196 | .. | 2 | 5·55 | 7 | .. |
| 20 தருமபுரி—அரூர்—ஓசூர் .. | ..* | 261 | 239 | 18·89 | .. | 82 | 48 | 7·52 | . | 179 |
| 10. கோயம்புத்தூர் மாவட்டம். | | | | | | | | | | |
| 21 தொண்டாமுத்தூர், பெரியநாய்க்கன்பாளையம் | 1,000 | .. | 1,000 | 110·00 | 1,000 | .. | 555 | 101·65 | .. | .. |
| 22 உடுமலைப்பேட்டை .. .. | 1,000 | .. | 1,000 | 95·00 | 759 | .. | 276 | 46·71 | 241 | .. |
| மொத்தம் .. | 17,982 | 5,061 1,000 F.P. | 20,007 | 1,706·36 | 7,599 | 2,514 58 7F.P. | 3,140 | 503·03 | 4,460 | 1,774 413 F.P. |

| | 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு — நிதிச் செலவு. P.S. | (ரூபாய் இலட்சத்தில்.) | 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் எய்திய சாதனை. — திட்டச் செலவு. W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் இலட்சத்தில்). | 1971-72-ஆம் ஆண்டில் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கடைசிவரையில் ஏற்பட்ட சாதனை. — திட்டச் செலவு. W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) |
| **1. செங்கல்பட்டு மாவட்டம்.** | | | | | | | | | | |
| 1 மதுராந்தகம்—செங்கல்பட்டு .. | 149 | 13·47 | .. | .. | .. | 0·78 | 175 | .. | 175 | 11·71 |
| **2. தஞ்சாவூர் மாவட்டம்.** | | | | | | | | | | |
| 2 தஞ்சாவூர் வடிமுனை குழாய்க் கிணறுகள். | .. | 10·71 | .. | .. | .. | 1·05 | .. | 56 | F.P. | 10·15 |
| **3. தென் ஆற்காடு மாவட்டம்.** | | | | | | | | | | |
| 3 விழுப்புரம் வெட்டு—துளை கிணறுகள் திட்டம். | 550 | 31·25 | .. | .. | . | 0·03 | .. | .. | 144 | 0·75 |
| **4. திருச்சி மாவட்டம்.** | | | | | | | | | | |
| 4 புதுக்கோட்டை .. .. | .. | 3·52 | .. | .. | .. | 0·18 | .. | .. | .. | 0·57 |
| 5 லால்குடி—உடையார்பாளையம் .. | 225 | 15·375 | .. | .. | .. | .. | 6 | .. | 6 | 0·36 |
| 6 முசிறி .. .. .. .. | 450 | 33·75 | .. | .. | .. | 0 91 | 61 | 146 | 182 | 11·93 |
| 7 குளித்தலை .. .. .. | 350 | 26·00 | .. | .. | .. | 0·63 | 33 | 83 | 62 | 6·54 |
| 8 மணப்பாறை .. .. .. | 375 | 21·125 | .. | .. | .. | 0·49 | 73 | 57 | 66 | 6·52 |
| 9 கரூர் .. .. .. .. | 325 | 25·75 | .. | .. | .. | 0·81 | 27 | 135 | 107 | 8·07 |
| **5. மதுரை மாவட்டம்** | | | | | | | | | | |
| 10 திருமங்கலம்—உசிலம்பட்டி .. | 700 | 56·84 | .. | .. | .. | 1·30 | 137 | 6 | 193 | 22·02 |
| 11 திண்டுக்கல்—வேதசாந்தூர் .. | 97 | 30·50 | .. | 11 | .. | 1·41 | .. | 430 | 60 | 24·62 |
| 12 மதுரை—மேலூர் .. .. | 375 | 22·50 | .. | .. | 1 | 0·12 | 45 | .. | 4 | 3·19 |
| **6. இராமநாதபுரம் மாவட்டம்.** | | | | | | | | | | |
| 13 சிவகங்கா—திருப்பத்தூர் நிலை I | .. | .. | .. | .. | .. | 0·23 | .. | .. | 29 | 0·85 |
| 14 சிவகங்கா—திருப்பத்தூர் நிலை II. | 500 | 30·00 | 1 | .. | 38 | 1·10 | 261 | .. | 191 | 14·99 |
| **7. திருநெல்வேலி மாவட்டம்.** | | | | | | | | | | |
| 15 சங்கரன் கோவில் .. .. | 490 | 36·45 | .. | .. | .. | 1·07 | 139 | 101 | 106 | 13·06 |
| 16 நாங்குநேரி .. .. .. | 500 | 52·50 | .. | .. | 17 | 0·37 | 166 | .. | 61 | 9·27 |
| 17 திருநெல்வேலி—தென்காசி .. | 600 | 45·00 | .. | .. | 2 | 0·49 | 122 | .. | 18 | 7·71 |
| **8. சேலம் மாவட்டம்.** | | | | | | | | | | |
| 18 நாமக்கல் .. .. .. | 250 | 30·00 | .. | .. | .. | 0·93 | .. | 95 | 55 | 8·96 |
| **9. தருமபுரி மாவட்டம்.** | | | | | | | | | | |
| 19 கிருஷ்ணகிரி—ஊத்தங்கரை .. | 37 | 2·05 | .. | .. | .. | 0·22 | 10 | .. | 10 | 1·77 |
| 20 தருமபுரி—அரூர்—ஓசூர் .. | 191 | 5·67 | .. | 1 | .. | .. | .. | 128 | 42 | 12·26 |
| **10. கோயம்புத்தூர் மாவட்டம்.** | | | | | | | | | | |
| 21 தொண்டாமுத்தூர், பெரிய நாய்க்கன்பாளையம். | 445 | 8·35 | .. | .. | 26 | 1·92 | .. | .. | 165 | 12·64 |
| 22 உடுமலைப்பேட்டை. . .. | 450 | 40·50 | .. | .. | .. | 1·31 | 110 | .. | 225 | 17·35 |
| மொத்தம் .. | 7,059 | 540·31 | 1 | 12 | 84 | 15·35 | 1,365 | 1,181 56F.P. | 1,801 | 205·29 |

* அனைத்துநாட்டு வளர்ச்சிக் கழகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ள திட்டத்திற்கான செலவுத் தொகை கழிக்கப்பட்டுள்ளது.

சுருக்கம்.

| தொடர் எண், மாவட்டத்தின் பெயர். | திட்டங்களின் எண்ணிக்கை. | மொத்த செலவு. திட்டச் செலவு. W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் லட்சத்தில்). | இதுநாள் வரையிலுள்ள சாதனை. திட்டச் செலவு. W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 செங்கல்பட்டு .. .. | 1* | 529 | .. | 529 | 42·23 | 380 | .. | 380 | 18·13 |
| 2 தஞ்சாவூர் .. .. | 1* | .. | 1,000 | F.P. | 40·00 | .. | 587 | F.P. | 19·59 |
| 3 தென் ஆர்க்காடு .. .. | 1 | 1,200 | .. | 1,700 | 95·50 | 142 | .. | 37 | 7·70 |
| 4 திருச்சி .. .. | 6 | 4,900 | 1,300 | 5,000 | 420·47 | 2,334 | 661 | 879 | 104·61 |
| 5 மதுரை .. .. | 3 | 2,050 | 2,000 | 2,650 | 268·50 | 1,062 | 1,255 | 290 | 94·82 |
| 6 இராமநாதபுரம் .. | 2 | 2,900 | .. | 2,900 | 174·00 | 877 | .. | 434 | 38·85 |
| 7 திருநெல்வேலி .. | 3 | 4,200 | 500 | 4,500 | 372·50 | 849 | 244 | 185 | 44·26 |
| 8 சேலம் .. .. | 1 | .. | 1,000 | 500 | 60·00 | .. | 272 | 54 | 13·64 |
| 9 தருமபுரி .. .. | 2* | 203 | 261 | 272 | 28·16 | 196 | 82 | 50 | 13·07 |
| 10 கோயம்புத்தூர் .. | 2 | 2,000 | .. | 2,000 | 205·00 | 1,759 | .. | 831 | 148·26 |
| மொத்தம் .. .. | 22 | 17,982 | 5,061<br>1,000<br>F.P. | 20,007<br>.. | 1,706·36 | 7,599<br>.. | 2,514<br>587<br>F.P. | 3,140 | 503·03 |



| தொடர் எண், மாவட்டம். | திட்டங்களின் எண்ணிக்கை. | 1971-72 ஆம் ஆண்டுக்கு கோள் அளவு. திட்டச் செலவு W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் லட்சத்தில்). | 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் எய்திய சாதனை. திட்டச் செலவு. (15) | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் லட்சத்தில்). | 1971-72 ஆம் ஆண்டில் 1971 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் இறுதிவரையிலுள்ள சாதனை. திட்டச் செலவு. W. | D.W. | நிதிச் செலவு. P.S. | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) |
| 1 செங்கல்பட்டு .. | 1* | 149 | .. | 149 | 12·47 | .. | .. | .. | 0·78 | 175 | .. | 175 | 11·71 |
| 2 தஞ்சாவூர் .. | 1* | .. | 413 F.P. | .. | 10·71 | .. | .. | .. | 1·05 | .. | 56 F. P. | .. | 10·15 |
| 3 தென் ஆர்க்காடு | 1 | 400 | .. | 550 | 31·25 | .. | .. | .. | 0·03 | .. | .. | 44 | 0·75 |
| 4 திருச்சி .. | 6 | 1,150 | 429 | 1,725 | 125·52 | .. | .. | .. | 3·02 | 200 | 421 | 423 | 33·99 |
| 5 மதுரை .. | 3 | 513 | 525 | 1,172 | 109·84 | .. | 11 | 1 | 2·83 | 182 | 436 | 257 | 49·83 |
| 6 இராமநாதபுரம் | 2 | 500 | .. | 500 | 30·00 | 1 | .. | 38 | 1·33 | 261 | .. | 220 | 15·84 |
| 7 திருநெல்வேலி | 3 | 1,500 | 150 | 1,590 | 133·95 | .. | .. | 19 | 1·93 | 427 | 101 | 185 | 30·04 |
| 8 சேலம் .. | 1 | .. | 500 | 250 | 30·00 | .. | .. | .. | 0·93 | .. | 95 | 55 | 8·96 |
| 9 தருமபுரி .. | *2 | 7 | 179 | 228 | 7·72 | .. | 1 | .. | 0·22 | 10 | 128 | 52 | 14·03 |
| 10 கோயம்புத்தூர் | 2 | 241 | .. | 895 | 48·85 | .. | .. | 26 | 3·23 | 110 | .. | 390 | 29·90 |
| | 22 | 4,460 | 1,774<br>413<br>F.P. | 7,059 | 540·31 | 1 | 12 | 84 | 15·35 | 1,365 | 1881<br>56<br>F. P. | 1,801 | 205·29 |

குறிப்பு * —அனைத்து நாட்டு வளர்ச்சிக்கழகத்தின் மேற்கொள்ளவேரப்பட்டுள்ள திட்டத்திற்கான செலவுத்தொகை கழிக்கப்பட்டுள்ளது.

**1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில் செயல்படுத்திய சிறுபாசனமல்லாத பிற திட்டங்கள் அதன் சாதனைகள் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.**

| தொடர் எண். திட்டத்தின் பெயர். | மொத்தச் செலவு. திட்டச் செலவு. (ஏக்கரில்) | மொத்தச் செலவு. நிதிச் செலவு. (ரூபாய் லட்சத்தில்). | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலுள்ள சாதனை. திட்டச் செலவு (ஏக்கரில்) | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலுள்ள சாதனை. நிதிச் செலவு (ரூபாய் லட்சத்தில்). | 1971-72 ஆம் ஆண்டு குறிக்கோள் அளவு. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-72 ஆம் ஆண்டு குறிக்கோள் அளவு. நிதிச் செலவு. (ரூபாய் லட்சத்தில்). | 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட சாதனை. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட சாதனை. நிதிச் செலவு. (ரூபாய் லட்சத்தில்). | 1971-72 ஆம் ஆண்டில் 1971 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் இறுதி வரையிலுள்ள சாதனை. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-72 ஆம் ஆண்டில் 1971 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் இறுதி வரையிலுள்ள சாதனை. நிதிச் செலவு. (ரூபா லட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. தஞ்சாவூர் மாவட்டம் — | | | | | | | | | | |
| (1) தென்னை வளர்ப்பு திட்டம் | 2,000 | 29·17 | 1,501 | 10·68 | 499 | 5·60 | 49 | 0·39 | 136 | 2·8 |
| 2. மதுரை மாவட்டம் — | | | | | | | | | | |
| (2). பழநி காப்பித்தோட்டத் திட்டம். | 4,500 | 60·00 | 1,160 | 7·40 | 900 | 6·80 | 16 | 0·17 | 275 | 4·28 |
| 3. சேலம் மாவட்டம் — | | | | | | | | | | |
| (3). ஏர்க்காடு மலை, காப்பித் தோட்டத் திட்டம். | 2,000 | 25·00 | 494 | 2·47 | 800 | 5·15 | 12 | 0·18 | 143 | 2·37 |
| 4. கன்னியாகுமரி மாவட்டம் — | | | | | | | | | | |
| (4). ரப்பர் தோட்டத் திட்டம் | 1,500 | 24·00 | 1,628 | 9·70 | .. | 3·00 | .. | 0·31 | .. | 1·49 |
| 5. கோயம்புத்தூர் மாவட்டம் — | | | | | | | | | | |
| (5). பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம். | | | | | | | | | | |
| 1-ம் நிலை .. .. | 85,110 | 452·04 | 83,493 | 443·44 | .. | .. | 28 | 0·17 | 126 | 0·73 |
| (6). 2-ம் நிலை .. .. | 21,021 | 121·00 | 14,887 | 78·43 | 6,134 | 22·52 | 381 | 2·22 | 3,051 | 21·94 |
| 6. நீலகிரி மாவட்டம் — | | | | | | | | | | |
| (7) தேயிலைத் தோட்டத் திட்டம் | 1,000 | 25·00 | 1,000 | 12·65 | .. | 3·00 | .. | 0·19 | .. | 0·96 |
| மொத்தம் .. | .. | 736·21 | .. | 564·77 | .. | 46·07 | .. | 3·53 | .. | 34.60 |



**சுருக்கம்.**

| தொடர் எண். | மாவட்டம். | திட்டங்களின் எண்ணிக்கை. | மொத்தச் செலவு. திட்டச் செலவு. (ஏக்கரில்) | மொத்தச் செலவு. நிதிச் செலவு. (ரூ. லட்சத்தில்) | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலுள்ள சாதனை. திட்டச் செலவு (ஏக்கரில்) | 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலுள்ள சாதனை. நிதிச் செலவு (ரூ. லட்சத்தில்) | 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-72-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு. நிதிச் செலவு. (ரூ. லட்சத்தில்) | 1971-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்களில் எய்திய சாதனை. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்களில் எய்திய சாதனை. நிதிச் செலவு. (ரூ. லட்சத்தில்) | 1971-72-ம் ஆண்டில் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை ஏற்பட்ட சாதனை. திட்டச் செலவு. (ஏக்கரில்) | 1971-72-ம் ஆண்டில் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை ஏற்பட்ட சாதனை. நிதிச் செலவு. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் .. | 1 | 2,000 | 29·17 | 1,501 | 10·68 | 499 | 5·60 | 49 | 0·39 | 136 | 2·83 |
| 2 | மதுரை .. | 1 | 4,500 | 60·00 | 1,160 | 7·40 | 900 | 6·80 | 16 | 0·17 | 275 | 4·28 |
| 3 | சேலம் .. | 1 | 2,000 | 25·00 | 494 | 2·47 | 800 | 5·15 | 12 | 0·18 | 143 | 2·37 |
| 4 | கன்னியாகுமரி .. | 1 | 1,500 | 24·00 | 1,628 | 9·70 | .. | 3·00 | .. | 0·31 | .. | 1·49 |
| 5 | கோயம்புத்தூர் | 2 | 1,06,131 | 573.04 | 98,380 | 521·87 | 6,134 | 22·52 | 409 | 2·39 | 3,177 | 22·67 |
| 6 | நீலகிரி .. | 1 | 1,000 | 25·00 | 1,000 | 12.65 | .. | 3·00 | .. | 0·19 | .. | 0·96 |
| | மொத்தம் .. | 7 | .. | 763.21 | .. | 564·77 | .. | 46·07 | .. | .. | .. | 34·60 |

1972 மார்ச் 23]

# இணைப்பு—3

[35-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## அத்தியாயம் I

### முகவுரை

1969-ல் இந்திய அரசால் அமைக்கப்பட்ட வங்கிப் பணிகள் குறித்த ஆணைக்குழு தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. அந்த ஆணைக்குழுவின் ஆய்வு வரம்பில் கீழ்க்கண்டவை அடங்கும் :—

(1) கூட்டுறவு வங்கிகள் செயல்படுவதைச் சீர்தூக்கிப் பார்த்து, வணிக வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் ஒரு சேர வளர்ச்சியடைவதை உறுதிப்படுத்துவதற்கெனப் பரிவுரைகள் செய்தல்.

(2) வாணிக, கூட்டுறவு வங்கிப் பணிகள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களை மறுஆய்வு செய்தல்.

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் போன்ற கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றின் மூலம், மாநிலப் பட்டியலிலிருந்து மத்திய அரசுப் பட்டியலுக்கு அல்லது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமென்று ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது.

தொடக்கக் கூட்டுறவுக் கடன்சங்கங்கள் கிராமக் கூட்டுறவு வங்கிகளாக மாற்றப்படலாமென்று, ஆணைக்குழு மேலும் பரிவுரை செய்துள்ளது.

இந்தப் பரிவுரைகள் கூட்டுறவு இயக்கத்துக்குப் பெரிதும் இன்றியமையாதன ஆகும். மேற்குறிப்பிட்ட பரிவுரைகள் தொடர்பாக, அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள், இந்தச் சிறு நூலின் II, III-ஆம் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் II

### (மத்திய அரசுப் பட்டியல் அல்லது பொதுப் பட்டியலுக்கு மாற்றம்) கூட்டுறவு வங்கிகள்.

1949-ஆம் ஆண்டு வங்கி நிறுவனங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு வங்கிப் பணிகளை நடத்தி வரும் கூட்டுறவுச் சங்கங்களை முறைப்படுத்துவது தேவை இல்லையென்று கருதப்பட்டது :—

(a) மாநிலங்களின் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு அவை உட்பட்டிருந்தன ;

(b) "கூட்டுறவுச் சங்கங்கள்", மாநில அரசு கவனிக்க வேண்டிய பொருளாகும், எனவே கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்தும் பொறுப்பை மாநிலங்களுக்கே விட்டுவிடுவதென அப்போது கருதப்பட்டது.



1972 மார்ச் 23]

மாநிலங்கள், நிறைவேற்றியுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திற் குறிப்பிட்டுள்ள மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாடுகளை ஒட்டி, கூட்டுறவு இயக்கம் முறையாக வளர்ச்சி அடைவதற்கு வகைசெய்ய விழைகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் குறித்த பொறுப்பு மாநிலங்களைச் சார்வதால், அச்சங்கங்கள் வங்கிப் பணிகள் நடத்துவது குறித்துக் கூட மாநிலங்களுக்கு அதிகார வரம்பு உள்ளது என்பது வெளிப்படை.

எனினும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கி நேரடியாகவும் மறைமுகமாகவும் பெருமளவில் நிதியுதவி செய்ய வேண்டியிருந்தது. அவற்றிற்கு வழங்கப்பட்ட சலுகை நிதியுதவி, குறிப்பிடப்பட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதையும், கடன் வாங்குவோருக்குக் குறைந்த செலவில் அவை வழங்கப்படுவதையும் உறுதி செய்யும் பொருட்டும், கூட்டுறவுச் சங்கங்களைத் தாமாகவே சென்று பார்வையிடுவதற்கான ஒரு திட்டத்தை ரிசர்வ் வங்கி வகுக்கவேண்டி வந்தது. ஆனால் இது பயனளிக்கவில்லை. மேலும், "வங்கிப் பணிகள்" என்பது மத்திய அரசு கவனிக்கவேண்டிய பொருளாகும். அப்பணிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வந்தபோதிலும், அத்தொழிலை முறைப்படுத்தும் பொறுப்பை, நாடாளுமன்றம் தவிர்க்க இயலவில்லை. எனவே, 1965-ம் ஆண்டு வங்கிகள் (கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்துதல்) சட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. சில மாற்றங்களுக்குட்பட்டு, 1949-ஆம் ஆண்டுச் சட்டத்தில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, வங்கிப் பணிகள் நடத்துகிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1949-ஆம் ஆண்டு வங்கித் தொழில் செய்யும் நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளை மேற்படி சட்டம் நீட்டித்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது நீட்டிக்கப்பட்டதன் விளைவாக, வங்கித் தொழில் நிறுவனங்கள் சட்டம் என்ற பெயர் பொருந்தவில்லை. அதனால், அச்சட்டத்தின் பெயர் வங்கித் தொழிலை முறைப்படுத்துவதற்கான சட்டம் என்று மாற்றப்பட்டது. இவ்வாறாக வங்கித் தொழிற் புரியும் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, மத்திய அரசின் சட்டமும் மாநில அரசுகளின் சட்டமும் பொருந்துகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தில், கூறியுள்ளபடி, கூட்டுறவு வங்கிகள் குறித்த முதமைப் பிரச்சினை மத்திய, மாநில அதிகார வரம்புகளைச் சரிக்கட்டுவதேயாகும். இரு அதிகார வரம்புகளும் நியாயமானவையே. அவற்றைத் தவிர்க்க இயலாது. பம்பாய் உயர்நீதி மன்றத்தின், நாகபுரிக் கிளை அண்மையில் அளித்த தீர்ப்பை ஈண்டுக் குறிப்பிடுவது பொருத்தமாகும். அந்த உயர்நீதி மன்றம் கூறியுள்ளதாவது : (வங்கித் தொழில் செய்யும் சங்கம் உட்பட) ஒரு சங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டால், கூட்டுறவுத்துறைதான் அச்சட்டத்தின் பணியை மேற்பார்வையிட வேண்டும். மேலும், அச்சங்கத்தின் நிர்வாகம் செம்மையாக நடைபெறுமாறு கூட்டுறவுத்துறைதான் கவனித்துக் கொள்ள வேண்டும். சங்க நிர்வாகத்தில் கடுமையான முறைகேடுகள் இருப்பின் ஆட்சியாளர்களை (Administrators) நியமிப்பதன் மூலம் கூட்டுறவுத்துறை அந்நிர்வாகத்தை நடத்த வேண்டும். சங்கத்தின் வங்கித் தொழிலைப் பொறுத்தவரையில் ரிசர்வ் வங்கி மேற்பார்வையிடும். சங்கத்தின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டியது அவசியம் என்று

ரிசர்வ் வங்கிக்குத் தோன்றினால், அது அவ்வாறே செய்ய அதிகாரமுடையது. எனினும், அச்சங்கத்தின்மீது கூட்டுறவுத் துறைக்குள்ள கட்டுப்பாட்டு அதிகாரம் அதனால் பாதிக்கப்படமாட்டாது. ஏனென்றால், ரிசர்வ் வங்கியின் அலுவல்களும், கூட்டுறவுத்துறையின் அல்லது கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் அலுவல்களும் வேறுபட்டவையாகும்.

இப்போதுள்ள நிலையில், வங்கித் தொழில் புரிகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் மீதான அதிகார வரம்பு குறித்து மத்திய அரசும் மாநில அரசும் கொண்டாடும் உரிமைகளை, சரிக்கட்டுவதற்குச் சிறந்த வழி, அவற்றை, மாநில அரசுகளின் அதிகார வரம்புக்குப் பாதகமில்லாமல், வங்கி விதிமுறைகளுக்கு உட்படுத்துவதாகும்.

வங்கித் தொழில் புரிந்து, கடன் வசதி அளிக்கும் நபர்கள் இந்திய அரசின் அதிகார வரம்பின்கீழ் வருகின்றனர். வங்கித் தொழில் செய்யாமல் கடன் மட்டும் வழங்குபவர்கள் மாநிலங்களின் அதிகார வரம்புக்குட்பட்டவராவர். கூட்டுறவு வங்கிகள் குறித்த இரட்டைப் பொறுப்பைத் தவிர (மத்திய அரசு, மாநில அரசுகள்) கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பாகும். கடன் வழங்கு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய இரட்டை அதிகார வரம்பு அல்லது பிரிக்கப்பட்ட அதிகார வரம்பு பொருளாதார காரணங்களுக்காகவும் பிற நடைமுறைக் காரணங்களுக்காகவும் தேவையில்லை என்பது எங்கள் கருத்தாகும்.

பொருளாதார காரணங்களை பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லலாம். கடன் வழங்கு நிறுவனங்கள் நன்கு அமைக்கப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட அமைப்பில் அடங்க வேண்டும். இதைத் திறம்படச் செயல்படுத்த வேண்டுமாயின், எல்லா நிறுவனங்களையும் முறைப்படுத்தும் அதிகாரம் ஓர் அதிகார வரம்பின்கீழ் வரவேண்டும். அவ்வாறு இருந்தால்தான், புதிய பிரிவுகளை அமைப்பது, நிறுவனங்களின் விதிமுறைகள், நடைமுறைகள், மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை முதலிய பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வுகாண இயலும். தற்போதைய நடைமுறைப்படி, கூட்டுறவு வங்கிகள் மத்திய அரசினாலும் மாநில அரசுகளினாலும் முறைப்படுத்தப்படுகின்றன. வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் வருகின்றனர். ஆனால் வங்கிகள் மத்திய அரசுச் சட்டத்தினால் முறைப்படுத்தப்படுகின்றன. இதனால் நமது நாட்டில் வங்கித் தொழிலும் கடன் வழங்கு தொழிலும் ஒரு சீராக வளர்ச்சியடையவில்லை. கூட்டுறவு வங்கிகள் அடிப்படையில் பார்த்தால் வங்கிகளேயாகும். கூட்டுறவு வங்கிகள் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருப்பினும், அவை வங்கிகளே.

நடைமுறைக் காரணங்களை கீழே கண்டுள்ளவாறு விவரிக்கலாம். வங்கித் தொழில் திறம்பட நடக்க வேண்டுமாயின் நிர்வாகம் என்பது முக்கியமானதொரு கூறாகும். தற்போது கூட்டுறவு வங்கிகளின்மீது மத்திய அரசும் மாநில அரசுகளும் அதிகார வரம்பு கொண்டிருப்பதால் நிர்வாகத் திறமை குன்றி விடுகிறது. வங்கிகள் திறம்பட நிர்வகிக்கப்படவில்லையென்றால் சமுதாயத்தின் சேமிப்புகள் வீணாகிவிடும். இதனால், பணம் கையடை செய்பவர்களும் நாட்டு மக்களும் பாதிக்கப்படுவர்.



மேலும், நாடு முழுவதற்குமான பணக் கொள்கையையும் இது பாதிக்கின்றது. நிர்வாகத் திறமை இன்மையே கூட்டுறவு வங்கிகளில் நிலவி வரும் பெரியதொரு நோயாகும். மேலும், கடன் வழங்கு நிறுவனங்களில் நியமனம், பதவி உயர்வு குறித்த கொள்கைகள் ஒரு சீரான கோட்பாடுகளை ஒட்டி அமைய வேண்டும். அதே சமயத்தில் அந்தந்தப் பகுதிகளில் நிலவி வரும் நிலைமைகளுக்குத் தக்கவாறும் அவை அமைந்திருக்க வேண்டும்.

எனவே, ஆய்வுக்குழு தற்போது அரசியலமைப்பின்கீழ் நிலவிவரும் நிலைமையை யொட்டி இப்பிரச்சினையை ஆய்ந்துள்ள போதிலும் நாம் ஒருபடி மேலே சென்று கடன் வழங்குபவர்கள், கடன் வழங்கு தொழில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பு மத்திய அதிகாரப் பட்டியலுக்கோ அல்லது ஒருங்கிணைந்த அதிகாரப் பட்டியலுக்கோ மாற்றப்பட வேண்டும் என்று நாம் பரிவுரை செய்கிறோம். இத்தகைய மாற்றம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் மட்டுமே கொண்டுவர இயலும்.

## அத்தியாயம் III

### கிராம கூட்டுறவு வங்கிகள்

கிராமங்களில் கூட்டுறவு வங்கிகளை அமைக்க ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கடன் வழங்கும் நிறுவனமாக இந்த வங்கிகள் கருதப்படும். கிராம மக்களின் தேவைக்கு ஏற்ப இந்த வங்கிகள் எளிய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. தற்போதுள்ள சட்டத்தின்கீழ் இவ்வங்கிகளை ஏற்படுத்துவதில் பல சிக்கல்கள் நிறைந்துள்ளன. மேலும் இவற்றை ஏற்படுத்துவதற்கு அதிகச் செலவும் ஆகும். இந்த வங்கிகள் அமைக்கப்பட்டு அவை செவ்விய முறையில் செயலாற்றுவதற்கு வசதியளிக்கும் வகையில் சட்டத்தின் விதித்துறைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் கீழ்க்காணும் பத்திகளிலிருந்து அறியலாம்.

கூட்டுறவுக் கடன் வழங்கு தொடக்கச் சங்கங்கள் ஏற்கெனவே நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் கிளை வங்கிகளும் திறமையாகச் செயலாற்றுகின்றன. இப்பகுதிகளில் சொற்ப சரிக்கட்டல்கள் மூலம் அவை திறமை வாய்ந்த வங்கிகளாக ஆகலாம். இவ்வாறு நல்ல முறையில் செயலாற்றும் இத்தகைய கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்கள் கிராம வங்கிகளாக ஆகலாம். எனினும், சில பகுதிகளில் இந்த கிராம வங்கிகளை தனித்து இயங்கக் கூடிய பிரிவுகளாகக் கொண்டுவருவது அவசியமாகலாம்.

இவ்வாறு நல்ல முறையில் செயலாற்றும் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்கள் கிராம வங்கிகளாக மாறும்போது இவை, மேல்நிலை அமைப்பாகிய, மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கிகள் வலுவான கூட்டுறவு அமைப்பிற்குள் செயல்படுவதன் மூலம் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பிற்குள் இருப்பது விரும்பத்தக்கதாகும். எனினும், மாவட்ட அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கி பலம் பொருந்தியதாக இல்லாத காரணத்தினால் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பிற்குள்

கிராம வங்கிகள் செயலாற்ற இயலாதபோது அவை தொடர்ந்து செவ்விய முறையில் செயலாற்ற அவற்றிற்குப் பக்கபலமாகத் தகுந்த கடன் வழங்கு நிறுவனங்கள் இருப்பது அவசியமாகும். இத்தகைய கிராம வங்கிகள் வணிக வங்கிகளின் கிளைகளாக ஆவதன் மூலம் இதனை எய்த இயலும்.

புதிதாக அமைக்கப்படும் கிராம வங்கிகளைத் தனித்து இயங்கக் கூடிய பிரிவுகளாக ஆக்குவது அவசியமாயிருக்கக்கூடிய பகுதிகளில் அத்தகைய வங்கிகளை வணிக வங்கிகளின் கிளைகளாகத் தொடங்கலாம். இத்தகைய வங்கிகளுக்கு அவசியமான மூலதனத்தை முதலீடு செய்து, தகுதியுள்ள பணியாளர்களையும் வினைய ஆலோசனைகளையும் வழங்கி, அவை திறனமையுடன் செயலாற்ற அவற்றிற்கு அவசியமான உதவியையும் வணிக வங்கிகளால் மட்டுமே முடியும். எனினும், இத்தகைய கிளை வங்கிகளை அமைத்துள்ள வணிக வங்கிகள் கிளை வங்கிகள் குறித்துத் தமக்குள்ள பொறுப்பினை விட்டுவிட விரும்பினால், இந்தக் கிளை வங்கிகள் கூட்டுறவுத் துறைக்குத் திரும்ப மாற்றப்பட வேண்டும்.

வேறு வகையில் சொல்லப்போனால், நன்கு செயலாற்றும் தொடக்கக் கடன் வழங்கு சங்கங்களை, தொடக்க நிலையிலேயே, கிராம வங்கிகளாக மாற்றுவதற்குக் கிராம வங்கிகள் திட்டம் வகை செய்கிறது. அவ்வாறு மாற்றப்படும் கிராம வங்கிகள் தொடர்ந்து கூட்டுறவு அமைப்பிற்குள்ளேயே இருக்கலாம்; இவற்றை 'கிராமக் கூட்டுறவு வங்கிகள்' என அழைக்கலாம். கிராமப் பகுதிகளில் வணிக வங்கிகளின் கிளை வங்கிகளாக புதிய வங்கி நிறுவனங்களை அமைப்பதன் மூலம் இவை 'கிராமக் கிளை வங்கிகளாக' அழைக்கப்படுகிறது—கிராமப் பகுதிகளில் வணிக வங்கிகளின் கிளை வங்கிகள் இருக்கவேண்டுமென்ற நமது எண்ணமும் நிறைவேறுகிறது. தகுதியுடைய கூட்டுறவுக் கடன் வழங்கு தொடக்கச் சங்கம் ஒன்று வலிமை பொருந்திய மேல் நிலைக் கூட்டமைப்பில் இல்லாதபோது அது வணிக வங்கி ஒன்றின் கிளையாக மாறி அதன் பின்னர் 'கிராமக் கிளை வங்கியாக மாறுவதற்கு அவற்றிற்கு விருப்ப உரிமை இருக்க வேண்டும். 'கிராம கிளை வங்கி' ஒன்று கூட்டுறவுத் துறையின்கீழ் வரவும் 'கிராமக் கூட்டுறவு வங்கியாக' ஆகவும் விதித்துறைகள் இருக்க வேண்டும். ஆனால், கிராம வங்கிகளின் அமைப்பு முறையில் உள்ள வேறுபாடுகள் தவிர அந்த கிராம வங்கிகள் அனைத்தும் அனுமதி பெற்ற தொழில், பின்னர் குறிப்பிடப்படும் பிற பொருள்கள் தொடர்பாக, பொதுவான விதிமுறைகளின்கீழ் வரவேண்டும்; அவற்றின் செயல் முறையையும் திறனையும் ஒப்பிட்டுப் பார்க்க இது அவசியமாகிறது. மேலும் கிராம வங்கிகளுக்கு இவை பொருந்துவதில், கிராம வங்கிகள் எந்த நோக்கத்தைக் கொண்டு அமைக்கப்படுகிறதோ அதனைக் கருத்திற்கொண்டு வங்கி விதிமுறைகள் தக்கவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுச் சட்டங்கள் அவசியமாகின்றன; கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களை நிறுவுதல் முறைப்படுத்துதல், அவற்றை மூடிவிடுதல் தொடர்பான பொருள்கள் குறித்து அதிகாரம் செலுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்ற நமது பரிவுரையைச் செயல்படுத்த மத்திய அரசுச் சட்டம் கொண்டுவந்தால் அது போதுமானதாகும்.





## இணைப்பு 4

[57-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## CHAPTER I.

### FARMERS' CO-OPERATIVE PAPER MILLS.

The Co-operative Department of the Tamil Nadu Government has secured a Letter of Intent from the Government of India to establish a Paper Mill with the capacity of 100 tons of paper per day.

The cost of the Project will not exceed Rs. 10 crores, of which the foreign exchange content will be Rs. 9.74 crores.

It is proposed to use 'Pulichi' stems (also known as Mesta or Kenaf or Hibiscus Cannabinus) and Agathi wood (also known at Sesbania Grandiflora). A blend consisting of one-third of Pulichi sulphite pulp and two-thirds of Agathi ground wood would be satisfactory both from the view of quality and cost of production.

As the Project opens the way to farmers to cultivate an economically important new crop in Tamil Nadu, a few facts on the subject are set out in this booklet.

## CHAPTER II.

### RAW MATERIALS.

The main difficulty encountered in increasing the production of paper in the country, is the dearth of raw materials.

In Europe, and the American continuent, the raw material is soft wood (spruce, pine, etc.) which takes 30 to 90 years to grow. These countries have enough land to plan long-term growth of such soft wood trees.

In India, the conventional raw material is the Bamboo, which takes 12 to 18 years to grow, and this forest wealth is being fast depleted. Some of the Paper Mills in West Bengal have to draw their raw material from a distance of 300 miles. Even so, the Bamboo is suitable only for chemical process of pulping, which is expensive, and not for mechanical grinding.

Thus, paper, which is an essential commodity, continues to be imported, and the import gap is increasing year after year.

## CHAPTER III.

### PULICHI (KENAF).

The search for a suitable raw material for manufacture of paper, to replace Bamboo, was pursued with vigour. The aim was to find out a tree or plant, with fibre length equal to that of Bamboo and which would take less than one year to grow.

Experiments were made, with various kinds of plants numbering about 400, and finally KENAF was chosen as the most suitable. This is generally known as Mesta, or Pulichi in Tamil, its botanical name being Hibiscus Cannabinus.

There are several advantages which Pulichi has, as raw material for paper.

It is easy to cultivate, water requirements being low, and it ripens in 4 to 5 months. It is grown in Andhra Pradesh, as a substitute for Jute, but it is not at present cultivated in Tamil Nadu except as a fence crop in stray areas.

It gives a higher yield per acre in Tamil Nadu, than any other State in India, by reason of the State's climate and soil conditions.

In areas above Latitude 20, the yield is about 20 tons of dry Pulichi (dry wood including bark) per acre, but in areas nearer to the equator the yield is higher, as the plant is photo-sensitive.

In Tamil Nadu most of the land lies between Latitude 8-15, and the yield per acre is about 30 tons. As many as 1,00,000 plants per acre can be grown.

It may be noted that the plant requires high temperature but does not tolerate standing water.

## CHAPTER IV.

### BREAK-THROUGH

Pulichi is several times more productive than pulp-wood trees on a per acre per month basis. It is suitable for cultivation by small farmers and it would give a greater income than most other cash-crops. The farmers will be able to find a ready market for their product, by running the Paper Mill as a Farmers' Co-operative.



Kenaf (Pulichi) provides the break-through, in respect of the raw-materials barrier, which stood in the way of self-sufficiency in paper, an indispensable commodity in any civilised country.

The Tamil Nadu State is geographically in a happy position, to take advantage of the new development, and fill up the paper gap which confronts the country.

## CHAPTER V.

### TECHNICAL ADVANTAGES.

Some technical details which highlight the advantage of Kenaf (Pulichi) as compared to Bamboo may be mentioned here :—

Fibre-length :

| | *Millimetres.* |
|---|---|
| Pulichi-Bast ... ... ... ... | 2.9 |
| Bamboo ... ... ... ... | 1.5 |
| Pulichi-core ... ... ... ... | 0.7 |
| Hard wood ... ... ... ... | 0.9 |

*Lignin.*—As the Lignin content of Pulichi (Kenaf) is lower than that of wood, it takes less chemicals for pulping.

*Blending.*—The blending of Pulichi sulphite pulp, with ground wood gives the best quality paper, with folding endurance, opacity, etc.

## CHAPTER VI.

### AGATHI—GROUND WOOD.

The Pulichi (Kenaf) pulp has to be blended with ground wood, for the purpose of producing commercially acceptable paper.

The best trees, for making ground wood pulp, are generally believed to be Eucalyptus, Acacia (Odai), etc. These conventional types of wood are unsuitable for India as they suffer from the disqualification of requiring a large area of land. These trees require

6 to 12 years to grow and the wood produced per acre per year is not economic.

The tree, rather the plant, Agathi (Sesbania Grandiflora) grows in 8 to 9 months, and yields 80 to 90 tons (wet weight) per acre, when planted with density of 45,000 per acre. The wood of Agathi is capable of being ground and bleached more easily than other hard wood.

Besides, Agathi grows well in Tamil Nadu, as the climate is suitable, and the ground wood of Agathi may be mixed with Pulichi pulp in the proportion of 2 parts Agathi and 1 part Pulichi and the pulp so mixed is of such quality as to produce good printing and writing paper.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## வெள்ளிக்கிழமை, 1972 மார்ச் 24

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்–விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### மருந்துவாழ் மலையிலுள்ள மூலிகைகள்

*678 **வினா.—திரு. வீ. கே இராஜாப் பிள்ளை:**—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக் விடையளிப்பாரா:—

கன்னியாகுமரி மாவட்டம், மருந்துவாழ் மலையில் கிடைக்கின்ற மூலிகைகளை சித்த வைத்தியர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து மக்களுக்கு பயன்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—கன்னியாகுமரி மாவட்டம், மருந்துவாழ் மலையில் கிடைக்கின்ற மூலிகைகளை சித்த வைத்தியர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்கிற திட்டம் இல்லை.

**திரு. என். டென்னிஸ்:**—மருந்துவாழ் மலையில் வேறு எங்கும் கிடைக்காத, தீராத நோய்களைத் தீர்த்துவைக்கும் பல மருந்துகளுக்கு வேண்டிய மூலிகைகள் கிடைக்கின்ற காரணத்தால் அவைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்து மக்களுக்குப் பயன்படுத்தும் வழிவகைகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—தலைவர் அவர்களே, அந்த விவரம் இதுவரையில் இந்தத் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டதாக நான் அறியவில்லை. ஆனால், தேனிமலை, தோரால்மலை, ஆரியங்காவு, அச்சங் கோவில், குற்றாலம், வெளதமலை ஆகிய இந்த மலைகளில் உள்ள மூலிகைகளெல்லாம் ஓரளவு தேடப்பெற்று, ஏறத்தாழ ஐம்பது மூலிகைச் செடிகள் கொண்டுவரப்பட்டு, அவை பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியினுடைய இந்த ஆராய்ச்சிப் பகுதியினால் ஆராயப்பட்டிருக்கிறது அதிலே ஆறு மருந்து மூலிகைகள் அங்கேயுள்ள மருந்து மூலிகை உற்பத்தி செய்கிற தோட்டத்திலே வளர்க்கப்படுகின்றன என்ற விவரம் கிடை

**திரு. தொ. ப. சீனிவாசன்:**—பல மலைகளில் மூலிகைகள் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். போளூர் வட்டத்தில் பர்வத மலையில் மூலிகைகள் இருப்பதாகப் பலர் சொல்கிறார்கள். அது சம்பந்தமாக

அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—இந்த ஆராய்ச்சித் துறையிலுள்ளவர்கள் எந்த இடத்திலே அவர்கள் மேலே சென்று தேடிக் கண்டு பிடித்தார்களோ அந்த இடங்களெல்லாம் தான் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில வேறு எந்த எந்தப் பகுதியில், எந்த எந்த மலையில், இன்ன இன்ன மூலிகைகள் கிடைக்கின்றன என்ற விவரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கோ, அல்லது அவர்களுடைய சித்த மருத்துவ நண்பர்களுக்கோ தெரிந்திருக்குமானால், அதைக் குறித்து அனுப்பினால், அவையெல்லாம் இந்தத் துறையினரால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:**—தமிழகத்தில் ஏராளமாக மூலிகைச் செடிகள் இருப்பதாகவும் அந்த மூலிகைச் செடிகளைக் கொண்டு தீராத நோய்களைத் தீர்ப்பதற்கு வழிவகை இருப்பதாகவும் நம்முடைய சங்க கால இலக்கியங்களிலெல்லாம் விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு ஆராய்ச்சிக் குழுவை ஏற்பாடு செய்து இனிமேலாவது பரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—அடிக்கடி நாங்கள் தெரிவித்துங் கூட, உறுப்பினர் அவர்கள் ஆராய்ச்சி செய்வதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுதே ஆராய்ச்சி நடைபெறுகிறது. ஆனால், விவரங்கள் தருவதற்குப் பல்வேறு பகுதிகளில் உள்ள சித்த மருத்துவர்கள் தீவிரமாக முன்வந்தால்தான் அவற்றையெல்லாம் தொகுத்து முறைப் படுத்தி ஆராய்ச்சியை விரிவுபடுத்த முடியும்.

**திரு த. சோனையா:**—கன்யாகுமரி பகுதியிலிருக்கும் மலையில் விஷப் பாம்பு கடித்தால் அதைப் போக்குகின்ற நாட்டு மருந்துச் செடிகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படி அந்த நாட்டு மருந்தால் விஷம் போகும் நிலை இருப்பதால் அதை எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும் இந்த மாதிரி விஷம் தீர்க்கும் நாட்டுமருந்தை உபயோகப்படுத்த அரசு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—அப்படி பாம்புக் கடிக்குத் தரப்படக்கூடிய மூலிகை மருந்தினுடைய சாறு ஏற்கெனவே கண்டு பிடிக்கப்பட்டு, அது உலகத்திற்குக்கூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது கிடைக்கக்கூடிய இடத்திலிருந்து பெற்று அந்த மருந்தைத் தயாரிக்கிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:**—ஆங்கில மருத்துவ முறைகளைக் காட்டிலும் இந்த சித்த வைத்திய முறையில் சிறப்பான அம்சங்கள் இருப்பதாகவும், ஆங்கில வைத்திய முறையில் குணப்படாத கான்சர் போன்ற நோய்களைக்கூட இந்த சித்த வைத்திய முறையிலே சீர்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—கான்சர் என்பதில் பல வகைகள் இருக்கின்றன. அந்தப் பல்வேறு வகையாக இருக்கும் கான்சரைப் பற்றியும், அது தாக்குவதின் அளவைப்பற்றியும் அது தாக்கியிருக்கும் நிலையையும் சித்த மருத்துவ முறையில் முழு அளவில் கண்டுபிடிப்பதாகத்



தெரியவில்லை. ஆனால், சில வகையான கான்சர் சில கட்டங்களில் உள்ள கான்சரை நிச்சயமாக சித்த மருத்துவ முறையால் ஓரளவு குணமாக்கலாமென்று பலரால் நம்பப்படுகிறது.

**திரு. கா. காளிமுத்து:**—சித்த மருத்துவத் துறையில் பழங்கால ஓலைச் சுவடிகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு அவற்றிலே குறிப்பிடப் பட்டிருக்கிற முறைகள் எப்படி எப்படி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்த விவரம் ஏதேனும் அமைச்சரவர்கள் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—சித்த வைத்தியச் சுவடிகள் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் கொண்டு சேர்க்கப்பட்டு அவைகள் படிக்குமளவுக்கு எடுத்து எழுதப்படுகின்றன. அவை எடுத்து எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்டு, பலரால் ஆராயப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும். அதேபோல், மூலிகைகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் பிரிவும் இருக்கிறது. இரண்டும் ஓரளவு வளர்ந்த பிறகு, இரண்டுக்கும் இடையே மிகுந்த தொடர்பு ஏற்படும்.

**திரு. ஏ. எம். இராஜா:**—கிராமப் புறங்களில் கொடிய விஷப் பாம்புகள் கடித்தால்கூட பச்சிலை கொடுத்து அதை நிவர்த்தி செய்கின்ற சில வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? இல்லையென்றால், ஏதாவது புதிய திட்டம் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—பாம்புக் கடி விஷத்தை நீக்கும் வைத்தியரை மக்களே காப்பாற்றிவிடுவார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்க ஆதரவு கூடத் தேவையில்லை. ஆனால் நாட்டுக்கும் மக்களுக்கும் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமை, எந்த மூலிகையையும் எந்தப் பச்சிலையையும் அவர்கள் பயன்படுத்துகிறார்களோ அதைத் தெரிவிப்பதாகும். அவர்கள் தெரிவிக்காவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டு அப்படிப்பட்ட உண்மையை உலகுக்கு அறிவிக்க முன்வர வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:**—சாதாரணமாக சித்த வைத்திய தத்துவங்களையும் மூலிகைகளையும் சித்த வைத்தியர்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற வழக்கம் இல்லை. அதை இரகசியமாகவே வைத்திருப்பது அவர்களுடைய குறிக்கோள். ஆகவே, இந்த முறைகளின் விவரத்தை சித்த வைத்தியர்களிடமிருந்து அறிந்து நாம் ஆராய்ச்சி செய்வது என்பது இயலாத காரியம். ஆகவே, ஆராய்ச்சித் துறையினரே இதற்கு ஆக்கம் அளித்து, இதற்காக சிரமப்பட்டு, எங்கெங்கு இப்படிப்பட்ட மூலிகைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் தாக்கீது அனுப்புமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**—நேரடியாகவே ஆராய்ச்சி செய்து விடலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மக்களுடைய மிக உயர்ந்த நாகரிகத்தினுடைய பயனாகவும் சீரிய சிந்தனையினுடைய பயனாகவும், அவற்றைத் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டுவந்ததன் பயனாகவும் வளர்ந்த ஒரு மருத்துவம் சித்த மருத்துவமாகும். அந்த சித்த மருத்துவத்தில் காணப்பட்ட மூலிகைகள்கூட, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பெற்றிருந்த அதே தகுதியை

இன்றுள்ள மாறுபட்ட நிலை காரணமாக, தட்பவெப்ப நிலை காரணமாக இன்று அது பெற்றிருக்கிறதா என்பதுகூடக் கண்டறியப்பட வேண்டும். ஆகவே, எது மூலிகை என்பதையும், அது எங்கே கிடைக்கிறது என்பதையும் அந்த மூலிகை இப்பொழுது அதே வகையில் பயன்படுத்தப்பட முடிகிறதா என்பதையும் வைத்து மீண்டும் ஆராயப்படவேண்டும்.

சித்த மருத்துவ வல்லுநர்களுக்குத் தெரிந்த இரகசியங்கள், உண்மைகள் ஆகியவைகளை பிறர் அறியாமல் இருக்கக்கூடிய அந்த உண்மையை அரசுக்கோ அல்லது அந்தத் துறைக்கோ தெரிவிப்பவர்களுக்கு மிகச் சிறிய உண்மையைத் தெரிவிப்பவர்களுக்கு அரசு நிச்சயமாக ஒரு சிறப்புப் பரிசை, அல்லது உதவித் தொகையை வழங்குவதற்குக்கூட முடியும். ஆனால், இது அறிவிக்கப்பட்ட ஒன்றல்ல. அறிவிப்பதற்கு சில காலம் ஆகும். அப்படி உண்மையைத் தெரிவித்து, அது ஏற்கெனவே பிறரால் அறியப்படாததாக அந்த மருத்துவத் துறையிலிருந்து இது வரையில் கிடைக்காத ஒரு உண்மையாக இருக்குமானால் அதற்காக அரசு பரிசளிக்க முன்வரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதிகை மலையில் இம்மாதிரி மூலிகை அதிகமாக இருப்பதாகவும், அதன் காரணமாக குற்றாலம் நீர் வீழ்ச்சியில் வரும் தண்ணீர் நன்மை பயப்பதாக இருப்பதாகவும், அதில குளிப்பது நலம் தரும் என்று கூறுகிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது விவரங்கள் உண்டா? மேலும், திரு. ஜி. டி. நாயுடு அவர்கள இம்மாதிரியான சில மூலிகைகளை ஆராய்ச்சி செய்து சில முடிவுகளுக்கு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அதுபற்றி அரசுக்கு ஏதாவது விவரம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குற்றாலத்தில் அப்படிப்பட்ட மூலிகைகள் கிடைக்கும் காரணத்தால்தான், பாளையங்கோட்டை மூலிகை ஆராய்ச்சிப் பிரிவு ஏற்பட்டு பரிசோதனை செய்து வருகிறது. அங்கு கிடைக்கும் மூலிகைகள் ஆராயப்பட்டு ஓரளவுக்கு எல்லாம் தொடக்க நிலையில் இருக்கிறது. முடிவான நிலைக்கு வரும் அளவுக்கு விரிவாக இன்னும் நடத்தப்படவில்லை. திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மருத்துவ மனையில் எந்த சிறந்த சித்த மருத்துவர் இருந்து அந்த முடிவுகளை வழங்கியிருக்கிறார்களோ அவர்கள் தமிழ்நாட்டினுடைய சித்த மருத்துவ ஆலோசனைக் குழுவிலே இடம்பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கருத்துக்கள், ஆராய்ச்சியின் முடிவுகள் எல்லாம் அவ்வப்போது தெரிவிக்கப்படுகின்றன.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஆங்கில வைத்தியம், சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்திய முறைகளில் விஷக் கடியை நீக்குவதற்குப் பல்வேறு வகையான சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன. எனக்குத் தெரிந்தவரையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு போஸ்ட்-மாஸ்டர் இருக்கிறார். அவர் விஷக்கடியைப் போக்குகிறார். நாம் அவருக்குத் தந்தி அடித்தால் அவர் அங்கிருந்தே விஷக்கடியைப் போக்கு கிறார் என்று சொல்கிறார்களே, நாம் அவருக்குத் தந்தி அடித்து, அந்த விஷக்கடி மருந்தைப் பற்றித் தகவல் தெரிந்துகொள்ளலாம் அல்லவா? அதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நாமும் தந்தி தான் அடிக்க வேண்டும். (சிரிப்பு).





*Post-graduate course in Pharmacy*

* 679 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Post-graduate course in Pharmacy in the Medical Colleges in the State; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) மருந்தாக்கியல் மேல் பட்டப் படிப்பு (M. Sc.. Pharmacy) தற்போது ஆண்டிற்கு நான்கு மாணவர்களைச் சேர்த்து, சென்னை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகின்றது.

**திரு. என். கே. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, தற்போது பார்மசி வகுப்புகளில் படிக்கிறவர்களுக்குச் சரியான முறையில் டிப்ளமோ கிடைக்காத காரணத்தினால் அவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து வாங்குகிறார்களே, அதற்காக அதிகப்படியாகக் கொடுக்க தக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு செய்தி அரசுக்குக் கிடைக்கவில்லை. எம்.எஸ்.சி. பட்டப் படிப்பு இரண்டு ஆண்டுக் காலம் படித்து, பல்கலைக் கழகத்தின் தேர்வு எழுத வேண்டும். அவர்கள் சொல்வது பி எஸ்.சி., பார்மசி படித்தவர்களுக்குரிய பாடமாகும்.

**கலைஞர் கருணாநிதி நகருக்கு மருத்துவ மனை**

*680 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?—

தென் சென்னையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி நகரில் ஒரு பெரிய மகப்பேறு மருத்துவமனை கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்துடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள—எக்ஸ்டென்ஷன் பகுதி—கலைஞர் கருணாநிதி நகர், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு பெரிய மருத்துவ மனையைத் துவக்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சிறு குழப்பம். மகப்பேறு மருத்துவமனை என்று கேட்கப் பட்டதாக அறிகிறேன். இப்போது ஒரு பெரிய மருத்துவமனை வேண்டும் என்று கேட்கிறார்கள். மகப்பேறு மருத்துவமனை தேவையென்றால், நகரின் பல்வேறு பகுதிகளுக்கு மகப்பேறு மருத்துவமனை மாநகராட்சியால் அமைத்துத் தரப்படுகின்றது. அவர் கேட்பது பெரிய மருத்துவமனையாக இருக்குமானால் அதற்குப் பெரிய தொகை செலவாகும் என்பதால் எதிர்காலத்தில் இதுபற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருப்பூர் தெற்குப் பிரிவு காவல் நிலையத்துக்குக் கட்டடம்.

*665 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. அது டிசம்பர் மாதம்தான் துவக்கப்பட்டது. புதிய காவல் நிலையத்திற்கு வாடகைக் கட்டடம் என்று இல்லாமல், சொந்தக் கட்டடம் கட்ட அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்மிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்குத் தேவையானது சுமார் 4 ஆயிரம் சதுர அடியாகும். இது குறித்து நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான செயற்குறிப்பு தயாரித்து அனுப்பும்படி கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, திட்டமும் மதிப்பீடுகளும் தயார் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### *Thefts*

* 666 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of complaints of house breaking and theft received from residents of Todhunter Nagar during the period from April to July 1971; and

(*b*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) வீடுபுகுந்து களவாடியது குறித்த புகார் ஒன்று, தாதண்டர் நகரில் குடியிருப்பவர் ஒருவரால், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது.

(இ) குற்றஞ்சாட்டப்பட்ட காஞ்சீபுரத்தைச் சேர்ந்த தாமோதரன் பூட்டை உடைத்து வீட்டிற்குள் புகுந்து ரூ 200 மதிப்புள்ள வெள்ளிப் பாத்திரங்களைத் திருடினார். அவர் கைது செய்யப்பட்டு, பாத்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்டதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் தனது குடியிருப்பை அறிவிக்குமாறு கட்டளையிடப்பட்டார்.

திரு. கே. டி.கே. தங்கமணி : தலைவர் அவர்களே, டீச்சர்ஸ் காலேஜுக்கு அருகில் உள்ள தாதண்டர் நகரில் சுமார் 300 குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு அதிகமாகக் குடியிருப்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான். அவர்கள் பகல் நேரத்தில் அலுவலகங்களுக்கு வந்து விடுகிறார்கள். அந்தக்



காலனிக்கு அருகில் ஒரு கள்ளுக்கடை இருப்பதால் எல்லோரும் குடித்து விட்டு அந்த ரோடு வழியாகப் போகிறார்கள். பகல் நேரங்களில்கூட இம்மாதிரியான திருட்டுகள் நடைபெறுகின்றன. அப்படி அயலார் நகருக்குள் வராத அளவிற்கு அந்தக் காலனியின் பக்கமாகக் காம்பவுண்ட் வைத்துக் பாதுகாப்பு செய்து கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில், ஓராண்டு காலத்தில் இதுபோன்ற வீடுபுகுந்து திருடுதல் என்கின்ற இந்தக் குற்றங்கள் 7 நடைபெற்றுஇருக்கின்றன. அதில் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இரவில் இரண்டு ரோந்து காவலர்கள் போடப்பட்டு, இரவு 11 மணி முதல் விடியற்காலை 5 மணி வரையில் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் ரோந்து வருகிறார்கள். தாதண்டர் நகர் மாத்திரமல்ல. சென்னையிலே 12 தொகுதிகளிலும் ரோந்து வேன்கள் கடந்த ஆண்டிலிருந்து புதிதாக விடப்பட்டு, அந்த ரோந்து வேன்களும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் காவல் துறையினர் இந்த விஷயங்களில் மிகவும் கண்காணிப்பாக இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். தாதண்டர் நகரைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனைகள் பரிசீலிக்கப்பட்டு, ஆவன செய்யப்படும்.

* 667 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a piece goods merchant was relieved of Rs. 10,000 on 23rd July 1971 in Tiruchirappalli; and

(*b*) if so, the steps taken to book the culprits?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளியில், துணி வியாபாரி ஒருவரிடம் பணி புரிந்து வந்த எழுத்தர் ஒருவரிடமிருந்து ரூ 15,600 களவாடப்பட்டது.

(இ) உள்ளூர் காவலர்கள் புலனாய்வு செய்ததில், திருவெறும்பூரைச் சேர்ந்த ஒருவர் இத்திருட்டுக்குக் காரணமாயிருந்தார் என்று தெரியவந்தது. அவர் கைது செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி 1-வது துணை மாஜிஸ்ட்ரேட்டின் முன்பு குற்றப் பத்திரிகை ஒன்று பதிவு செய்யப்பட்டது. அவர் குற்றவாளிக்கு நான்கு மாதக் கடுங் சிறைத் தண்டனை விதித்தார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அந்தக் குமாஸ்தா கடையிலிருந்து வந்தபோது பட்டப் பகலிலே திருட்டு நடந்ததாகத் தெரிகிறது. அவர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டாரா ? குற்றவாளியிடமிருந்து எவ்வளவு ரூபாய் மீட்கப்பட்டது? அது பறிகொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திருடியவர் வேறு மாநிலங்களுக்கு எல்லாம் ஓடினார். பிறகு கைது செய்யப்பட்டார். மொத்தப் பணம் 15,600 ரூபாயில் 11,025 ரூபாய் அவரிடமிருந்து மீட்கப்பட்டு, உரியவரிடம் கொடுக்கப்பட்டது.

[1972 மார்ச் 24

## வேலம்பாளையம் பேரூராட்சிக்கு கழிவுநீர்த் திட்டம்

*668 வினு.— திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் 15, வேலம்பாளையம் பேரூராட்சி மன்ற கழிவு நீர்த் திட்டத்திற்காக கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, வேலம்பாளையம் பேரூராட்சி கழிவுநீர் சாக்கடைத் திட்டத்திற்காக கடன் கேட்டு குடிநீர் வாரியத்திற்கு விண்ணப்பித்திருக்கிறதா? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தால் இனிமேலாவது நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே வேலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை. அது குறித்து தகவல் தரப்படுமானுல், பிறகு இதைப்பற்றி ஆராயப்படும்.

## காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்

*669 வினு.— திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மூசிரி வட்டம், காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கு தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஆய்வு வேலைகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கு தண்ணீர் விஸ்தரிப்பு திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது, அதில் அரசாங்கத்தினுடைய மானியம் எவ்வளவு? அந்தத் திட்டம் எப்போது துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மதிப்பீடு செய்வதற்காகத்தான் இப்போது ஆய்வு செய்யப்படுகிறது. 15 ஆயிரம் ரூபாயை 15—11—71-ல் அந்தப் பஞ்சாயத்து ஆய்வுத் தொகையாகச் செலுத்தியிருக்கிறது. ஆய்வு வேலைகள் நடைபெற்று முடிந்தவுடன் திட்டத்தின் மதிப்பீடு அறிவிக்கப்படும்.



1972 மார்ச் 24]

## மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள்

*670 வினு—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாணவர்களுக்கு உதவித் தொகை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நல்ல திறன்மிக்க இந்திய மாணவர்களுக்கு, அவர்கள் பள்ளியிறுதித் தேர்வு அல்லது பல்கலைக் கழக இறுதித் தேர்வுகளில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தவராக இருந்தால், அவர்கள் பெற்ற மதிப்பெண் வரிசைப்படி முதல் பட்டப்படிப்பு முடிவுறும் வரை உதவித் தொகை பெறத் தகுதியுடையவராகிறார்கள்.

மற்றும் அத்தகைய மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கும் மேற்படாமல் இருக்க வேண்டும். பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் மக்களுக்கெனவும் தனிப்பட்ட வகையில் உதவித் தொகை அளிக்கும் ஒரு திட்டமும் நடைமுறையில் உள்ளது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் தாழ்த்தப்பட்டோர், அட்டவணையில் கண்ட பழங்குடியினர் அன்றி, பின் தங்கிய வகுப்பினராகிய மாணவர்களுக்கு, குறிப்பிட்டுள்ள ஆண்டு வருமான நிலைக்குட்பட்டு, சம்பள உதவித் தொகை பிற்பட்ட நலத் துறையினரால் வழங்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் மாணவர்களுக்கு வழங்குகின்ற உதவித் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? அது மத்திய சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறதா? அல்லது மாநில சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே திறமை மிக்க மாணவர்களுக்கு 'மெரிட்' அடிப்படையில் உதவித் தொகை தரப்படுகிறது. ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் உதவித் தொகை தரப்படுகிறது. திறமைதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. இது மாநில அரசாங்கத்தின் மூலமாகத்தான் தரப்படுகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பிற்பட்ட ஏழை மாணவர்களுக்கு மானியம் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக ஒரு ஜாதி இருக்கிறது என்று சொன்னால் அந்த ஜாதியிலே பல இடங்களில் உப பிரிவுகள் பெயரை வைத்து அழைக்கிறார்கள். பெற்றோர்கள் அந்த உப பிரிவுகளை தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கும்பொழுது சொல்லிவிடுகிறார்கள், அதை எஸ். எஸ். எல்.சி. புத்தகத்தில் குறித்துவிடுகிறார்கள். இதனால் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று தாசில்தாரிடம் சர்டிபிகேட் கேட்கும்பொழுது அவர் கொடுக்க மறுக்கிற காரணத்தினாலே பல ஏழை மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற முடியாமல் போய்விடுகிறது: எனவே இந்த உப-பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற உப பிரிவுகளை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கலாமா இயலாதா என்பதை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலம் ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, பட்டப்படிப்புப் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையிலும் உதவித் தொகைகள் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

***671—வினா: திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கும், தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும உதவித் தொகை அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**—இல்லை.

## *Stipends for students*

* 672 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the stipend for the students undergoing teacher's training; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:**—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னைதாக என்ன தொகை அளிக்கப்பட்டதோ அதே தொகைதான் இப்பொழுதும் அளிக்கப்படுகின்ற காரணத்தால் அந்த மாணவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே அதை உயர்த்தித் தருவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு ஆட்கள் போதாத காரணத்தினாலே அதனை ஊக்குவிக்கின்ற முறையிலே அந்தத் தொகை கொடுக்கப்பட்டது. இப்பொழுது அப்படியில்லை 300 இடங்களுக்கு 3,000 பேர்கள் வருகிறார்கள். எனவே கொடுக்கின்ற பணத்தைக்கூட நிறுத்திவிடலாமா என்று கூட ஆலோசிக்கப்பட்டது ஆனால் அவ்வித ஆலோசனைக்கு முன் கொடுக்கப்படுகிற தொகையை நிறுத்தவேண்டாம் என்று கூறியதன் காரணத்தினாலேதான் கொடுக்கப்பட்டு வருகிறது. மாதம் 18 ரூபாய் வீதம் 21 மாதங்களுக்கு 378 ரூபாய் அளவுக்குப் பெறுகிறார்கள். ஆகவே அதை உயர்த்துவதாக இல்லை.





## பணிப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதியம்

***673—வினா: திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ் நாட்டில் ஆரம்பப் பள்ளிகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பணிப்பயிற்சி ஆசிரியர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) அவ்விடு (இ) தொழில் பழகு ஆசிரியரைப் பள்ளிக்கு நியமனம் செய்யும் அதிகாரம் யாரிடம் உள்ளதோ, அந்த நபர் அல்லது அமைப்பின் கீழ் உள்ள எந்தப்பள்ளியிலாவது அத்தொழில் பழகு ஆசிரியர் கிரேடைச் சார்ந்த சாதாரண ஆசிரியர் பதவி வருவது காலி விழுமாயின் அல்லது புதிதாக ஏற்படுத்தப்படுமாயின் அப்பதவிக்கு அத்தொழில் பழகு ஆசிரியரைத்தான் நியமிக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே எல்லா தொழில் பழகு ஆசிரியர்களும் கூடிய விரைவில் சாதாரண ஆசிரியர் பதவிகளில் அமர்த்தப்பட்டு நிரந்தர ஊதியம் பெறுவர் என்பது தெளிவாகும்.

**திரு எம். முத்தையா :** தலைவர் அவர்களே, தற்பொழுது அப்ரண்டிஸ் ஆசிரியர்கள் எடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அந்த ஆசிரியர்களின் நன்மையைக் கருதியாவது இந்த ஆண்டிலிருந்து அப்ரண்டிஸ் ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது வரையில் 6,500 இடங்கள் இருக்கின்றன. 3,703 ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். 2,797 பதவிகளுக்கு 1971-72 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு எவ்வளவு இடங்கள் காலி ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு அவர்கள் நிரப்பப்படுகிறார்கள். புதிய பதவிகள், அல்லது இடம் காலியாக ஏற்படுமானால் அந்த அந்தப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களையே நிரப்புகிற முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு கோ. இளங்கோவன் :** தொழில் பழகு ஆசிரியர்கள் சாதாரணப் பட்டதாரி ஆசிரியர்களைவிட குறைவான சம்பளம் பெறுகிறார்கள். எனவே அதை உத்தேசித்தாவது அவர்களை நிரந்தரமாக நியமிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு ஏதேனும் வேலை கிடைக்க வேண்டிய வகையிலேதான் இது வகுக்கப்பட்டது. நிரந்தரமான ஊதியமும் இல்லாமல் இருக்கின்ற நிலையிலே முழு வேலை கிடைக்கக்கூடிய நிலை வரையில் இடைக்காலத்திலே அவர்களுக்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முழுமையான சம்பளமும் கொடுக்க வேண்டுமென்றால் நிதி வசதி பெருகினால்தான் செய்ய முடியும். பல ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியிலே படித்துவிட்டு வீட்டையிலே வேலையில்லாமல் இருக்கிற குறையைப் போக்குவதற்குத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு ஜே. ஜேம்ஸ் :** அப்ரன்டிஸ் ஆசிரியர்கள் அப்ரன்டீஸாக இருக்கும் பொழுது ஓவர் ஏஜ் ஆகிவிடுகிறது. அந்தக் காரணத்தினால் அவர்கள் நிரந்தரமாக வேலை பார்க்க வசதியில்லை. எனவே ஓவர் ஏஜ் ஆனால் அதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப் பிரச்சினையில்லை. அந்தப் பிரச்னை இருக்குமானால் தனியாக ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** வேலையில்லாத ஆசிரியர்களுக்கு இடைக்காலத்தில் அப்ரன்டிஸ்ஷிப் கொடுக்கப்பட்டாலும், வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கு அன் எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் அல்லது சப்ஸிடி ஏதாவது கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முழு வேலை கிடைக்கிற வரையில் தொழில் பழகு ஆசிரியர்களாக இடைக்காலத்திலே நியமிக்கப்படுகின்ற வகையிலேதான் 6,500 இடங்கள் உண்டாக்கப்பட்டன. அந்த வகையிலேதான் இப்பொழுது வேலைவாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

### பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள்.

***674. வினா:—திரு எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாடு முழுவதும் பணிபுரியும் பகுதி நேர கைத்தொழிலாசிரியர்கள் தாங்கள் பெறும் நாள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமெனக் கோரி தமிழ் நாடு அரசு தலைமைச் செயலகம் முன்னால் 7-7-71 முதல் 11-7-71 வரை அடையாள உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருந்தார்களா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(The hon. Member Thiru M. Muthiah rose.)

MR. SPEAKER : It is a most out-dated question.

***675. வினா:—திரு இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதிநேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

(இ) அவர்களை முழு நேர வேலையில் அமர்த்தி முழுச் சம்பளம் அளிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**—(அ) செங்கை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களில் கைத்தொழில் ஆசிரியர்கள் பகுதி நேர வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.





**திரு. இ எஸ். தியாகராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் 30 ரூபாய்தான் தரப்படுகிறது. அதனால் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே முழுநேர ஊழியர்களாக அவர்களை மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவிற்குப் பிறகு 30 ரூபாய் 60 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை நேரம் அதிகமாக்கப்பட்டால்தான் முழு ஊதியம் கிடைக்கும். அந்த வகையில் இயக்குநர் அவர்கள் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று பள்ளிகளைச் சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கு முழுச் சம்பளம் அளிக்கக்கூடிய வகையில் முழு நேரம் வேலை அளிக்க முடியுமா என்றெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு அதுபற்றி வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

### *Central Polytechnic at Adyar*

* 676 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the students in Central Polytechnic, Adayar, Madras, went on strike on 24th September 1971 to press their demands; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**—(அ) ஆம்.

(இ) சென்னை மத்திய பல்தொழில் நிலைய மாணவர்கள், அக்கல்வி நிலையத்தில், அதிகாரிகளால் கொண்டுவரப்பட்ட தன் பதிவேடு அட்டை முறையை ஆட்சேபித்து 24-9-71 மட்டும் வகுப்பிற்குச் செல்லாமல் இருந்தார்கள், தன் பதிவேடு அட்டை என்பது மாணவர்களுடைய ஒழுக்கத்தையும், அவர்களுடைய நடத்தை, தேர்வுகளில் பெரும் மதிப்பெண் படிப்பில் முன்னேற்றம் பள்ளிக்கு வருகை முதலியவற்றைக் குறித்து வைக்கப்படும் முறையாகும். மாணவர்களுடைய நடத்தை பற்றியும், தேர்வில் மதிப்பெண் குறைவாக பெற்றால் அச் செய்தியும் அம்மாணவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படும், இதை மாணவர்கள் வரவேற்கவில்லை. இதைப்பற்றி கவனிக்கப்படும் என்று நிலைய முதல்வர் கூறியதின் பேரில், மாணவர்கள் 27-9-71 முதல் வகுப்பிற்குச் சென்றனர்.

### சென்னையில் புலவர் வகுப்புக் கல்லூரிகள்

*** 677 வினா—திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் தமிழ்ப் புலவர் வகுப்பு பயில்வதற்கான கல்லூரிகள் எத்தனை உள்ளன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை நகரில் ஒன்றுமில்லை. ஆனால் தமிழகத்தில் ஒன்பது கல்லூரிகள் உள்ளன.

**திரு என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைநகரிலே ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். அந்தக் [illegible]

கல்லூரிகள் சிலவற்றை உருவாக்க அரசு ஆணை செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற்று நடத்தப்படுகின்றவைதான் சென்னையிலே இல்லையென்று சொன்னேனே தவிர பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்று அரசாங்கத்தின் மானியம் இல்லாமல் நடத்தப்படுகின்ற தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன. அரசாங்க அங்கீகாரம் பெற்று அரசாங்கத்தின் மானியம் பெறுகின்ற இருக்கின்ற கல்லூரிகள் 9 இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்று நடைபெறுகின்ற கல்லூரிகள் சென்னையில் இரண்டொரு கல்லூரிகள் நடைபெற்று வருகின்றன.

பகல் .30 **திரு. சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, தனியார் துறையில் பாரதிதாசன் கல்லூரி, அறிஞர் அண்ணா புலவர் கல்லூரி போன்ற அத்தனைய தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றனவே, அவைகளுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா? அப்படிப்பட்ட புலவர் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்குப் பல்கலைக் கழகம்தான் அங்கீகாரம் அளிக்க வேண்டும். அளித்து உள்ளது. பல்கலைக் கழக அங்கீகாரம் பெற்றவைகளினால் பயிற்சி தரப்படுகின்ற மாணவர்கள்தான் தேர்வு எழுத இயலும். ஆனால் இப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு அரசாங்கத்தின் மானியம் இல்லை. 9 கல்லூரிகளுக்குத்தான் அரசாங்கத்தின் அங்கீகாரமும், மானியமும் அளிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் தாங்கள் தங்களாக நடத்துபவர்களுக்கு இடம் அளிக்கக் கூடாது என்ற கிளர்ச்சி கூட இருக்கிறது. ஏனென்றால் உறுப்பினரவர்கள் கூறியது மாதிரி பல கல்லூரிகள் தோன்றி மாணவர்கள் அதிகம் உற்பத்தியாக்கப் பட்டால் அத்தனை பெருக்கும் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும் என்பதால் ஒரு கட்டுத் திட்டம் வேண்டுமென்ற அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு சோ. அழகர்சாமி :—** தலைவரவர்களே, இந்த மாநிலத்தில் தனியார் கல்லூரிகள் எங்கெங்கு இருக்கின்றன என்றும், அந்தக் கல்லூரிகள் தனியார் துறையில் இயங்குகின்றனவா அல்லது அரசாங்கத் துறையில் இயங்குகின்றனவா? அரசாங்கத் துறை என்றால் எந்தெந்தக் கல்லூரிகள் என்றும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—** தலைவரவர்களே 9 கல்லூரிகள் தனியார் முயற்சியிலேதான், தனி அமைப்புகளாக தனி முயற்சியால் நடைபெறுகின்றன.—

Karanthai Pulavar Kalloori, Thanjavur.
Ganesar Senthamil Kalloori, Melasivapuri.
Dharmapuram Adinam Oriental College, Dharmapuram.
Sri Sivagnana Balia Swamigal Tamil College, Mailam.
Sree Thavathiru Santhalinga Swamigal Tamil Kalloori, Perur.
Senthamil College, Madurai.
Kanakasabai Pillai Kalloori, Nagapattinam.





Sri K. V. S. S. Tamil Kalloori, Tiruppanandal.
Ramaswami Tamil College, Karaikudi.

இவைகள் எல்லாம் தனி அமைப்புகளாக, தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, we are in dearth of Telugu Pandits in Tamil Nadu. May I know from the Hon. Minister whether a Telugu Pandit's Course would be started in Government section in Tamil Nadu?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே தனியாகத்தான் ஆராயப்பட வேண்டும். போதுமான மாணவர்கள் வருவதாக இருந்தால் கவனிக்கலாம். இல்லாவிட்டால் தெலுங்குப் பயிற்சிக்கு அண்டை மாநிலத்திற்கு அனுப்பிக் கூட ஏற்பாடு செய்யலாம். தனிப் பயிற்சி வகுப்பு ஏற்படுத்துவதற்குப் போதுமான தேவையும் சூழ்நிலையும் ஏற்பட்டால்தான் ஆராய வேண்டும். தனியாகத்தான் ஆராயவேண்டும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பதிலில் மாயூரத்திற்கு அடுத்த தர்மபுரம் ஆதினத்திலுள்ள தமிழ்க் கல்லூரியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் கொட்டை கட்டிக் கொண்டு, சாமியார் வேஷத்தோடு விபூதி பூசியிருப்பவர்களுக்கு மட்டும் இடம் தருவதாக நிச்சயமாக நம்பப்படுகிறது. அத்தகைய விதிமுறைகளை மாற்றியமைக்க அரசு ஏதேனும் ஆலோசனை கூற முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாணவர்களைச் சேர்ப்பது அந்தந்தக் கல்லூரிகளின் விருப்பத்தைப் பொறுத்தது. அங்கே மாணவர்கள் சேர விரும்பவில்லையென்றால் திருவையாறு கல்லூரி, கரந்தைக் கல்லூரியைத் தேர்ந்தெடுக்கலாம் ஆனால் அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இயலாது.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், தனியார் கல்லூரிகள் ஏற்படுவது இந்தக் காலத்திற்குப் பொருந்தாது என்பது பலரின் கருத்தாக இருக்கிறது. தனியார் கல்லூரிகள் இப்படித் தோன்றினால், அமைச்சரவர்களே கூறினார்கள் வேலையில்லாமை ஏற்படக் கூடுமென்று. ஆகவே இதுபோன்ற கல்லூரிகளை முறைப்படுத்தி அரசாங்கத்தின் கட்டுத்திட்டத்திற்குள் கொண்டு வர, ஏனென்றால் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கூறியதைப் போன்று விபூதி போட்டவர்களுக்காக என்று ஒரு கல்லூரி வைத்திருக்கிறார்கள், இது ஜாதி மதங்களை இன்னும் விரிவாகச் செய்ய ஒரு ஏற்பாடாக இந்தக் கல்லூரிகளைக் கருவியாகப் பயன்படுத்தக் கூடாது என்பதால் அரசாங்கத்தின் சட்டத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுமா அல்லது அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் நினைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இப்படிப்பட்ட சட்டதிட்டங்களைத் திடீரென்று மாற்றுவதற்கு இல்லை. ஏனென்றால் பல்கலைக் கழகத்தின் அனுமதியின் பேரில்தான் இவைகள் நடக்கின்றன. ஆகவேதான் அரசாங்கம் 9 கல்லூரிகள் அரசாங்கத்தினுடைய மானியம் பெறுகின்ற அளவில் இந்தக் கல்லூரிகள் முறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. பல்கலைக்கழகத்தோடு கலந்துதான் பலதிட்டங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

[1972 மார்ச் 24

**திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லாப் பகுதிகளிலும் தேர்ச்சியடைந்தால் முதலிடம் பெறுகிறார்கள். ஆனால் தமிழ்க் கல்லூரிகளில் விஞ்ஞானம், பொறியியல், மருத்துவத்துறை போன்ற பாடங்கள் இல்லை. தமிழ் வரலாறு, இலக்கணம் இவைகள் மட்டும்தான் இருப்பதால் வேறு பல துறைகளில் அனுபவம் இல்லை என்று கருதுகிறார்கள். உண்மையிலேயே அந்த இடத்தை முதலிடமாகக் கருதி நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசாங்கம் எவ்வளவு முயற்சி செய்து தமிழுக்காக எவ்வளவு ஆக்கம் கொடுத்தாலும் அதற்கு முதலிடம் தரக்கூடிய அளவிற்கு நிலைமைகள் சரியாக இல்லை. ஆகவே, தமிழ்க் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவத் துறை, விஞ்ஞானத் துறை, பொறியியல் துறை பாடங்களைப் போதிக்க அரசாங்கம் முடிவு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தப் பாடத் திட்டங்களை மாற்றியமைப்பது, முறைப்படுத்துவது, சரிப்படுத்துவதெல்லாம் பல்கலைக்கழகம்தான் முடிவெடுக்க வேண்டும். பல்கலைக் கழகத்திற்கு முறைப்படி சிபார்சு செய்யப்பட்டால் அத்தகைய முறைகளைப் பல்கலைக் கழகம் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

**திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மதுரை செந்தமிழ்க் கல்லூரி தொடர்பாக ஏற்பட்ட சிக்கல் தீர்ந்துவிட்டதா? இல்லையென்றால் அதைத் தீர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதைத் தீர்த்து வைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆனால் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், வழக்கு மன்றத்தில் இருப்பதால் முடிவெடுக்கப்பட்ட பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு முறைப்படி மேற்கொள்ளும்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கல்லூரியின் பெயர்களைச் சொல்லும்பொழுது ஏதோ ஓரியண்டல் தமிழ்க் கல்லூரி என்று இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே தமிழ்மட்டும்தான் கற்றுக்கொடுக்கப்படுகிறதா? அல்லது வேறு மொழிகளும் கற்றுக்கொடுக்கப்படுகிறதா? தமிழ் மட்டும் கற்றுக்கொடுப்பதாக இருந்தால் அதற்கு வேறு பெயர் வைக்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தர்மபுரம் ஆதீனம் ஓரியண்டல் காலேஜ், தர்மபுரம் என்றிருக்கிறது. எந்தப் பெயரிலே வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. தர்மபுரம் கல்லூரியில் தமிழ்தான் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

### கால்நடை வளர்க்க அரிசனங்களுக்குக் கடன்கள்

*681 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைகள் வளர்ப்பதற்கு அரிசனங்களுக்கு கடன்கள் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இல்லை.



1972 மார்ச் 24]

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கால்நடைகள் வளர்ப்பதற்கு அரிசனங்களுக்கு கடன்கள் வழங்கும் திட்டம் இல்லை என்று கூறினார்கள். விவசாயக் கூலிகளாக இருக்கின்ற அரிசனங்கள் விவசாயம் இல்லாத நாட்களில் சிரமப்படுவதால் குறைந்த பட்சம் கோழி வளர்ப்பதற்கு தீவிர இனக் கோழிகளை வளர்ப்பதற்கு மானியமோ அல்லது கடன் உதவியோ வழங்குவதற்கு சிறப்புத் திட்டத்தை அரசு தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, கால்நடைகள் வளர்ப்பதற்கு ஏதாவது தரப்படுகிறதா என்பதற்கு நான் கூறிய பதில் அதுதான இல்லை என்று சொன்னேன். ஆனால் விவசாயிகளுக்கு உழவு மாடுகள், கறவை மாடுகள் தரப்படுகின்றன. உழவு மாடுகள் கொடுப்பதில் 500 ரூபாய் இன்றைக்கு உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது, இதில் 250 ரூபாய் மானியம், 250 ரூபாய் கடன். கறவை மாடுகளுக்கு 500 ரூபாயுமே அவர்களுக்கு மானியமாகத் தருகிறோம். உழவு மாடுகளுக்குத் தரப்படும் 500 ரூபாயில் 50 ரூபாய்க்கு விதைகளும் கருவிகளும் வாங்கிக் கொள்ளலாம். அந்த முறையிலே விவசாயம் செய்பவர்களுக்கு உதவித் தொகை தருகிறோமே தவிர வளர்ப்பதற்கு எந்த உதவியும் தரப்படவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், கால்நடைகள் வளர்ப்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்று கருதும் நிலையிலே அரிசனங்கள் பொருளாதாரத்திலும் சமூக நிலையிலும் தாழ்ந்தவர்களாக இருப்பதால் அவர்களுக்கு இந்தச் சலுகையை அளித்து கால்நடைகள் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் இன்னும் சிறப்பாக நடைபெறும் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான ஆலோசனை வருங் காலத்திலாவது செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:** இந்த இரண்டு திட்டங்களின் மூலம் அவைகளை வளர்க்கவும, அதன்மூலம் அவர்களுக்குச் சில வருமானம் வரவும் உத்தேசித்துத்தான் இன்றைக்கு அரசு செய்துகொண்டு வருகிறது. அவர்கள் முறையாகச் செயல்பட்டால் நிச்சயம் அவர்களுக்கு அதனால் வாழ்வு உண்டு.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister how many families have been benefited by supply of cattle and milking cows?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:** தலைவரவர்களே, இங்கே எத்தனை குடும்பங்கள் என்ற விவரம் இல்லை என்றாலும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்கின்ற குறிப்பு இருக்கிறது. அந்த வகையிலே கறவை மாடுகளுக்குப் போனமுறை ஒரு லட்சமும், அதைப் போன்று இந்த முறை ஒரு லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உழவு மாடுகள் பற்றிய குறிப்பு இருக்கவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is the Government aware that many of the loans applied for by Harijans last year have still not been sanctioned, particularly to cobblers and others? Though it may not be quite relevant, the information may kindly be furnished.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கேள்வி காளை மாடுகளும், உழவுமாடுகளும் பற்றியது. தனிப்பட்ட முறையிலே அருந்ததியர்களுக்கு செருப்பு தைக்கும் தொழிலுக்கு உதவுவது வேறு. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

**திரு சோ. அழகர்சாமி:** காளை மாடுகள் வாங்குவதற்காக வருஷத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவதாகச் சொன்னீர்கள். ஒரு லட்சம் ரூபாய்க்கு 200 மாடுகள்தான் வாங்க முடியும். இப்போது அரிசனங்கள் மட்டும் தனியாக வைத்திருக்கும் பால் உற்பத்திச் சங்கங்களில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும்தான் இந்த உதவி செய்யப்படுகிறது. பொதுவான சங்கங்களில் அரிசனங்கள் உறுப்பினராக இருந்தாலும் முன்பு இந்த உதவி செய்யப்பட்டது. இப்போது செய்யப்படுவதில்லை. எந்தப் பால்பண்ணையில் உறுப்பினராக இருந்தாலும் அரிசனங்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுக்கவும், மொத்தத் தொகையை அதிகமாக்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த மாதிரி கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்ற சங்கங்களை [illegible] இது காறும் நடத்தி வந்தனர். அதிலே குறிப்பிட்ட அளவு [illegible] அரிசனங்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு [illegible] பொதுவான சங்கங்களைப் பார்த்தபோது [illegible] இல்லாமல் அந்தச் சங்கங்கள் [illegible]. பொதுவான சங்கங்களில் அரிசனங்கள் இருந்து அவர்களுக்கு [illegible] உதவி செய்யப்பட்டால் அவர்கள் எந்த அளவுக்கு [illegible] பெற முடியவில்லை. அதனால்தான் [illegible] அரிசனங்களாக இருக்க வேண்டும் [illegible] பேர் மட்டுமே இருக்க வேண்டும். 150, 200 பேர் [illegible]. பெரிய சங்கங்களாக [illegible] இருக்கும் என்ற காரணத்தினால் [illegible] செய்யப்படுகிறது. [illegible] மக்களுக்கே போகிறது. 1970-ம் ஆண்டில் இருந்து [illegible] சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**அரிசனங்களுக்கு உழவு மாடுகள் இலவச விநியோகம்.**

* 682. வினா—திரு எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களைப் போல மறவர்களுக்கும் இலவசமாக உழவு மாடுகள் தற்பொழுது வழங்கப்படுகிறதா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) அரிசனங்களுக்கும் மறவர்களுக்கும் இலவசமாக உழவு மாடுகள் கொடுக்கிறோம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.





**திரு. எம். முத்தையா:** 1970-71-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் மறவர்களுக்கு மாடுகள் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 1971–72-ம் ஆண்டில் பின்தங்கியோருக்கு உள்ள தனி இலாகாவால் மறவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் பற்றிக் கவனிக்கப்படுவதால் அந்த இலாகாவைச் சேர்ந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**திரு. என். மருதாசலம்:** கோவை மாவட்டத்தில் மாடுகள் வாங்கிக் கொடுப்பதற்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன? எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கறவை மாடா? காளை மாடா?

**திரு. என். மருதாசலம்:** கறவை மாடு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது காளை மாட்டைப் பற்றிய கேள்வி.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கோவை மாவட்டத்திற்கு 8,000 ரூபாய்க்கு உழவு மாடுகள் தரப்பட வேண்டுமென்று நிதி ஒதுக்கப்பட்டு தற்போது 7,200 ரூபாயில் 16 ஜோடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 20—9—1971 வரை இந்தக் கணக்கு. மீதியும் கொடுக்கப்பட்டிருக்கும்.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** எட்டாயிரம் ரூபாய்க்கு 16 ஜோடிகள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் குறிப்பிட்டவர்கள்தான் பயன்பட முடியும். ஆகவே, அந்தத் தொகை அளவுக்கு ஆடுகளோ, பன்றிகளோ வாங்கிக் கொடுத்தால் பல குடும்பங்கள் பயன்பெற முடியும். வருமானம் பெருகும்; இறைச்சியையும் விலைக்குக் கொடுக்க முடியும். இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்துவதாக இல்லை. உழவு மாடுகள் கொடுப்பது அவர்களுக்கு விவசாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகவும், கறவை மாடுகள் பால் சங்கங்களை வைக்கப் பயன்பட வேண்டுமென்பதற்காகவும் கொடுக்கப்படுகின்றன. ஆடு போன்றவற்றை வாங்கிக் கொடுத்தால் அவர்கள் அதை விற்றுவிட்டுத்தான் பயன்படுத்துவார்கள். அதிலே அதிக லாபமும் இருக்க முடியாது.

**திரு. அ. ஆறுமுகம்:** அரிசனங்களுக்கு வருடத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு பேர்களுக்குத்தான் உழவு மாடுகள் வழங்கப்படுகின்றன. வருகின்ற விண்ணப்பங்கள் நிறைய இருக்கின்றன. தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அதிகப்படியாக உழவு மாடுகள் வழங்க மான்யம் ஒதுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த உழவு மாடுகளைப் பெறுகின்றவர்கள் பல தவறுகளைச் செய்வதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் ஓராண்டு இடையில் இந்தத் திட்டம்

[1972 மார்ச் 24

நிறுத்திக்கூட வைக்கப்பட்டிருந்தது. மாடுகளைப் பெற்றுக் கொண்டு பின்னர் விற்றுவிடுகிறார்கள். அதிகாரிகள் மேலெழுந்தவாரியாக பார்வையிடச் செல்லும்போது பக்கத்து மாடுகளைக் கொண்டு காட்டிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடந்ததால், யார் யார் ஒழுங்காகச் செயல்படுவார்கள் என்று திட்டவட்டமாக ஆராய்ந்து உழவு மாடுகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, குறைந்த பேருக்கு மட்டுமே தற்போது உழவு மாடுகள் தருவதற்குத் திட்டம் இருந்து வருகிறது.

**திரு. ஏ. கே. துரைசாமி :** உழவு மாடுகளை இலவசமாகப் பெறத் தகுதியுடையவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள், விவசாயிகளாக இருப்பவர்கள், உண்மையிலேயே பயன்படுத்தக் கூடியவர்கள் யார் என்று பார்த்துக் கொடுக்கப்படுகிறது.

**திரு. த. சோணையா :** உழவு மாடுகள் அரிசனங்களுக்கும், மறவர்களுக்கும் வாங்கிக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். முக்குலத்தோர் என்று மூன்று சாரார் சேர்ந்ததில் மறவர்கள் ஒரு பிரிவினர். ஆகவே, மற்ற இரு பிரிவினருக்கும் இந்த உழவு மாடுகள் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மத்திய அரசாங்கத்தால் டி–நோடிஃபைடு டிரைப்ஸ் என்று சொல்லுகின்ற குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இந்தத் திட்டத்தின் மூலம் உழவு மாடுகள் தரப்படுகின்றன. முக்குலத்தோரைச் சேர்ந்த மற்ற இரு பிரிவினரும் டி–நோடிஃபைடு குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களா இல்லையா என்ற விவரம் எனக்குத் தெரியாது.

**திரு. கோ. செபமாலை :** தென்னார்க்காடு மாவட்டத்தில் உழவு மாடுகள் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? விருத்தாசலம் தாலூகாவில் எத்தனை ஜோடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 8,500 ரூபாய் 1971-72-ல் ஒதுக்கப்பட்டது. இதுவரை 20—9—1971 வரை 28 ஜோடிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய மாடுகளும் வழங்கப்பட்டிருக்கலாம். அந்தக் கணக்கு இல்லை.

**திரு. நா. வீராசாமி :** அரிசனங்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதில் விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்ற காரணத்தால் குலுக்குச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த முறையை மாற்றி அதிக நிலம் யார் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுத்தால் விவசாயம் செய்ய உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நிறைய நிலம், குறைந்த நிலம் என்ற நிலை இல்லை. நிலம் வைத்திருப்பவர்கள், ஏழைகளாக இருப்பவர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்களை எடுத்து குலுக்குச்



1972 மார்ச் 24]

சீட்டுப் போட்டு அதிலே யாருக்கு விழுகிறதோ, அவர்களுக்கு உழவு மாடுகள் கொடுக்கப்படுகின்றன. ஏழைகளாக இருக்கும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்த மாடுகள் போய்ச் சேரும்.

***683. வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971–72 நிதியாண்டில் அரிசனங்களுக்கு உழவு மாடுகள் இனமாக வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு, மாவட்டவாரியாக ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ரூபாய் ஒரு லட்சம் (ரூ. 1 லட்சம்).

| | | | | ரூ. |
|---|---|---|---|---|
| செங்கை மாவட்டம் | .. | .. | .. | 9,000 |
| வட ஆற்காடு மாவட்டம் | | .. | .. | 9,000 |
| தென் ஆற்காடு மாவட்டம் | | .. | .. | 8,500 |
| தஞ்சை மாவட்டம் | .. | .. | .. | 11,000 |
| திருச்சி மாவட்டம் | .. | .. | .. | 8,000 |
| மதுரை மாவட்டம் | .. | .. | .. | 8,000 |
| இராமனாதபுரம் மாவட்டம் | | .. | .. | 11,000 |
| நெல்லை மாவட்டம் | .. | | .. | 8,000 |
| குமரி மாவட்டம் | .. | .. | . | 6,000 |
| சேலம் மாவட்டம் | .. | .. | .. | 6,000 |
| தர்மபுரி மாவட்டம் | .. | .. | .. | 6,000 |
| கோவை மாவட்டம் | .. | .. | .. | 8 000 |
| நீலகிரி மாவட்டம் | .. | .. | .. | 1,500 |
| | | ஆக மொத்தம் | .. | 1,00,000 |

**திரு. எம். முத்தையா :** இந்த மாடு வாங்குவதற்காக சீட்டு விழுந்தவர்களைச் சந்தைக்கு வா என்று அதிகாரிகள் கூறிவிடுகிறார்கள். சர்க்கார் கொடுக்கும் உதவியில் மாடு வாங்க ஆட்கள் வருகிறார்கள் என்றவுடன் சந்தையில் இருக்கக்கூடிய வியாபாரிகள் விலையைக் கூட்டிச் சொல்லுகிறார்கள். ஆகவே, சந்தைக்கு வா என்று கட்டாயப்படுத்தாமல் குலுக்குச் சீட்டு விழுந்தவர்களுக்குப் பணத்தை அந்த நபர் கையில் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பணத்தைக் கையில் கொடுத்தால் 500 ரூபாயை வாங்கிக் கொண்டு 300 ரூபாய்க்குத்தான் மாடு வாங்குவார்கள். சீட்டுப் போட்டுக் குலுக்கியவுடன் விழுந்தவர்களுக்கு உடனே சந்தைக்குக் கூட்டிச் சென்று மாடுகளை வாங்கிப் பட்டுவாடா செய்கிறார்கள். கையில் பணம் கொடுப்பது அவ்வளவு சரியானது அல்ல.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இருக்கிற விவசாயிகள் அத்தனை பேர்களும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்கள் மாடுகள் வாங்கக்கூட வசதியற்ற நிலைமையில் எவரும் இல்லை. ஆகவே, அதனால் பலருக்குப் பயன் கிடைக்காமல் இருப்பதால் இந்தத் திட்டத்தையே நிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :** இடைக்காலத்தில் அப்படிப் பட்ட ஒரு யோசனையை மாநில தாழ்த்தப்பட்டோர் குழு தெரிவித்து நிறுத்தி வைத்தோம். மீண்டும் அது எல்லோருக்கும் தேவைப்படுகிறது என்று பலர் மத்தியில் இருந்து விண்ணப்பங்கள் வந்ததால் இது அவசியம் என்று கருதி மீண்டும் அத் திட்டத்தைக் கொண்டு வந்து மறுபடியும் கொடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

**திரு. கு. காமாட்சி :** அரிசன விவசாயிகளுக்குப் பயன்படும் இந்த நல்ல திட்டம் எவ்வளவு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது ? இனி எவ்வளவு ஆண்டுகள் இது நீடிக்கும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 1961-ம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது. இறுதி வரையில் நீடிக்கும்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** ஏழை அரிசனங்களுக்கு மாடுகள் வழங்கி வருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் அமைச்சர் அவர்கள் கூறும்போது அது சரியாகப் பயன்படுத்தப்பட வில்லை என்று சொன்னார்கள். மாடுகள் வைத்துக் கொண்டிருக்கும் கிராமங்களில் கிராம அதிகாரிகளின் மேற்பார்வையில் அந்த மாடுகளை வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலையில் அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நலத்துறை அதிகாரிகள் அவர்களும் நலத்துறை தாசில்தார் அவர்களும் அவ்வப்போது போய் பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது—கொடுக்கப்படும்போது மாடுகள் மிகவும் ஆரோக்கியமானதாகவும் புஷ்டியுள்ளதாகவும் இருக்கின்றன. அதை வாங்கி ஆறு மாதங்கள் சென்ற பின்னர் அந்த மாடுகளை போய் பார்க்கும்போது ஒல்லியான மாடுகளை விவசாயிகள் கொண்டுவந்து காட்டுகிறார்கள். உனக்கு கொடுத்த மாடு எங்கே என்று கேட்டால் இதுதான் என்று சொல்கிறார்கள். சரியாகப் பராமரிக்க முடியாமல் சிலர் அவற்றை விற்று விடுகிறார்கள். சோதனைக்குச் சென்று பார்க்கும்போது பக்கத்து வீடுகளில் உள்ள மாடுகளைக் கொண்டுவந்து காட்டுகிறார்கள். இவற்றையெல்லாம் அதிகாரிகள் அடிக்கடி சென்று பார்வையிட்டுத்தான் வருகிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** உழவு மாடுகளுக்காக மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது இது ஏதோ ஒரு அடையாளமாகச் செய்யப்படுகிற ஒரு காரியமாக இருக்கிறதே தவிர உண்மையில் அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற எல்லா அரிசன மக்களுக்கும் பயன்படுகிற வகையில் அமையவில்லை என்று தெரிகிறது. அதோடு இந்த மாடுகளை வாங்குகிறவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக அதன் எண்ணிக்கையைக் குறைத்து மற்றவர்களுக்கு அதிகமாகச் செய்ய வேண்டிய நோக்கத்தைக் கொண்ட





இந்தக் காரியத்தை சிறிதாகச் செய்வது சரியல்ல. ஆகவே அதற்கு ஒரு வழி கண்டுபிடித்து, இது அடையாளமாகச் செய்யப்படுவது என்றில்லாமல் நியாயமான முறையில் எல்லோருக்கும், எல்லா ஏழைகளுக்கும் கிடைக்கத்தக்க அளவிற்குச் செய்வது அவசியம் என்று கருதுகிறேன். ஆகவே இது சம்பந்தமாக வருங்காலத்தில் அரசு யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஆண்டுக்காண்டு அதிக மாகக் கொடுத்துக் கொண்டு வருகிறோமே தவிர ஒன்றும் குறைக்கவில்லை அதனால் அவர்களுக்கு நல்ல மாடுகள் கிடைக்க வேண்டுமென்று ரூ. 400 என்பதை சமீப காலத்தில் ரூ. 500 ஆக ஆக்கியிருக்கிறோம். நல்ல முறையில் பயன்பட வேண்டுமென்றுதான் இப்படிக் கொடுக்கப்படுகிறது. அடையாளமாகச் செய்யப்படுகிற திட்டம் இல்லை எல்லா மாவட்டங் களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். எல்லா மாவட்டங்களிலும் தாலூகா வாரியாக யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவற்றை முறையாகப் பார்த்து தகுதி படைத்தவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தால் அவ்வப்போது ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு செலவழிக்க முடியுமோ அப்படிச் செலவு செய்து வருகிறோம். எல்லா விவசாயிகளுக்கும் ஒரேவருடத்தில் கொடுக்க வேண்டும் என்பது அவ்வளவு உசிதமான காரியம் அல்ல.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்தக் குலுக்குச் சீட்டு போட்டுக் கொடுப்பது உள்ளபடியே ஏழைகளுக்குக் கிடைக்கக் கூடிய தகுதி உள்ளவர்களுக்குக் கிடைக்காமல் மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இந்தக் குலுக்குச் சீட்டு முறையை மாற்றி நல்லமுறையில் தகுதி வாய்ந்த அரிசன மக்களுக்குக் கொடுப்பதற் கான ஒரு முறையை அரசாங்கம் வகுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இந்தக் குலுக்குச் சீட்டு முறையில் கொடுக்கும்போது, ஏற்கனவே உழவு மாடுகள் வாங்கினார்களா வாங்கவில்லையா, உள்ளபடியே அவர்களுக்கு நிலம் இருக்கிறதா, அவர்களுக்கு வேறு நிலங்கள் இருக்கிறதா, வேறு மாடுகள் இருக் கின்றனவா போன்றவையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கப்பட்ட பிறகுதான் கழிக்க வேண்டியவற்றைக் கழித்து எஞ்சி யார் தகுதி பெற்றவர்கள் என்று பார்த்துத்தான் அவர்கள் பெயர்களை குலுக்குச் சீட்டு போட்டு குலுக்கி எடுக்கப்படுகிறதே தவிர விண்ணப்பங்கள் போட்டவர்கள் அனைவரின் பெயர்களையும் போட்டு குலுக்கி எடுக்கப்பட வில்லை. முறைப்படி யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குத் தான் போய்ச் சேருகிறது. ஆனால் குறைந்தவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது, அதை ஒப்புக்கொள்கிறேன்.

**திரு டி. வி. சம்பத் :** அரிசனங்களுக்கு மாடுகள் வாங்கித் தருவதில் சீர்காழி வட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. பி. எஸ். மணி கூட்டுறவு சங்கம் மூலம் அஸ்ஸாம் மாநிலத்திற்குச் சென்று மாடுகள் வாங்கி அரிசனங்களுக்குத் தரப்பட்டன. அவை எந்த நிலையில் இருக்கின்றன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஒரு குறிப்பிட்ட சங்கம் பற்றி தனிக் கேள்வி போட்டால்தான் சொல்ல முடியும். இது கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கேள்வி.

[1972 மார்ச் 24

**திரு கோ. செபமாலை :** இன்றைய பொருளாதாரம் வளர்கின்ற சூழ்நிலையில் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்த ரூ. 500 அடிப்படையில் கொடுக்கப்படுகின்ற மாடுகளுக்கு மேலும் அதிகப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அதற்கு ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஆலோசிக்கப்படும்.

*Rehabilitation of physically handicapped*

* 684 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether this Government has any programme for rehabilitating the physically handicapped persons; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில்@ விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பொதுவாக இப்பேர்ப்பட்ட பிஸிக்கலி 'ஹான்டிகாப்ட்'க்கு அரசாங்கம் உத்தரவு மாதிரி போட முடியாது என்றிருந்தாலும் முதலாளிகளுக்கு, கம்பெனிகளுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மாதிரி, ஜெனரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துவிட்டால் பல 'பிஸிக்கலி ஹான்டிகாப்ட்'க்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அப்படிக் கொடுப்பதால் மற்றவர்களைவிட அவர்கள் நன்கு வேலை செய்யக்கூடிய நிலை இருக்கும். They will concentrate on their work. ஆகவே, இது பற்றி அரசாங்கத் துறைகளிலும், தனியார் துறையிலும் ஏற்பாடு செய்வதற்குத் துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயாராயிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே அப்படிப்பட்ட உத்தரவு இருக்கிறது. அரசாங்கத்திற்கும் இருக்கிறது. தனியார் துறையைப் பொறுத்த வரையில் இதற்கென்று ஒரு ஸ்பெஷல் எம்ப்ளாய்மெண்ட் ஸெல் மூலம் வற்புறுத்தி வருகிறோம். ஊக்கம் தரவேண்டுமென்ற முறையில் யார் யார் ஆண்டுதோறும் அதிகப்படியான உடல் ஊனமுற்றோர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சென்ற ஆண்டிலிருந்து நம் அரசாங்கமே சர்டிபிக்கட்ஸ் வழங்குவதோடு வேலை செய்பவர்களுக்குப் பரிசுகளும் வழங்கி வருகிறோம். எந்தெந்த வகையில் உற்சாகமூட்ட வேண்டுமென்று முயற்சி அரசின் கவனத்தில் இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதற்காக ஒரு தனிச் சட்டம் இயற்றுவதற்கு, ஒருகுறிப்பிட்ட பர்செண்டேஜ் இப்படிப்பட்ட ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

@ 162—169ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1972 மார்ச் 24]

THIRUMATHI ALDA M. FOWLER : Will the Hon. Minister please tell us whether there is a special body which will deal particularly with requests coming from handicapped persons ? Are there employment opportunities for these persons ? Many handicapped teachers or typists write to us for employment. To which address can we send those requests so that special employment could be found for them please ?

THE HON. THIRU S. MADHAVAN : I have already stated that we have got special employment office for physically handicapped people. This Government has already stated the steps taken to look after the welfare of these handicapped people.

THIRUMATHI ALDA M. FOWLER : May we know just where this place is so that we could direct our letters?

THE HON. THIRU S. MADHAVAN : The same office, the special employment office for physically handicapped. We have got it in the Directorate of Employment. The hon. Member was participating in the function for the 'World Day' for handicapped people. She must be aware of all facilities we provide through this Directorate.

THIRU K. M. SUBRAMANIAM : Have the Government received representation from Blindmen's Association that they have not been treated properly and whereever they go they do not get employment? Particularly one or two individuals have been knocking about many of the Government establishments and have been told 'no job', even though they can do many jobs and they are qualified to do many jobs. Are the Government aware of this ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஊனமுற்றவர்களை விட லட்சக் கணக்கான பேர் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். முற்பகல் 10·00 என்றாலும், ஊனமுற்றவர்களுக்குத் தனிச் சலுகை தரவேண்டுமென்ற அடிப்படையில் இதைச் செய்து வருகிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே இது வரையில் இந்த உடல் ஊனமுற்றவர்கள் எத்தனை பேருக்கு எம்பிளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் 102, மாநில சர்க்கார் 637 பேர், குவாசி கவர்ன்மெண்ட், லோகல் பாடீஸ் 50, பிரைவேட் செக்டார் 404, கண் தெரியாதவர்கள் 121, காது கேட்காதவர்கள் 245, Handicapped (Orthopaedically handicapped) 227.

[1972 மார்ச் 24

DR. H. V. HANDE: Sir, is the Government aware of the fact that just because they are handicapped, instead of giving them preferential treatment, they are chucked out. Is it possible for the Government to bring in State Enactment and give instructions to the Public Service Commission to give these handicapped persons preferential treatment and include it in their Code?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் கொண்டு வந்தால் தான் நல்லது என்று கருதுகிறேன். நம்முடைய மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய எல்லாத் துறைகளுக்கும் குறிப்பாக இப்படிப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கு டைபிஸ்ட், டெலிபோன் ஆபரேடர், டெஸ்பாட்ச் கிளார்க், லிப்ட் ஆபரேடர், இதுபோன்ற வேலைகளுக்கு பிரஃபரன்ஸ், முதலிடம் கொடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம். ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் என்று ஒதுக்கினால் அதை நடத்துவதில் பல சங்கடங்கள் இருப்பதால், நாம் ஊக்கம் அளிக்கும் முறையில் மட்டும் ஆர்வம் காட்டி வருகிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இம்மாதிரியாக ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு, அதை ஞாபகப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் 3-வது ஞாயிற்றுக்கிழமையும் விழாக் கொண்டாடுகிறார்களே, இந்த மாதம் 19-ம் தேதி எந்தெந்த இடத்தில் கொண்டாடப்பட்டது? அதன் விவரம் என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாநில அளவிலே, சென்னையிலே கொண்டாடப்பட்டது. வேறு இடத்தைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

### மேம்பாலங்கள்

*685 வினு.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 1973-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும்

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே சென்ற ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட ஏறக்குறைய ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிற—மிக விரைவாகக் கட்டப்பட்டு வருகிற—அந்த மேம்பாலத்திற்கு மாயூரத்தைச் சேர்ந்த மொழிப்போர் வீரர் மாணவர் சாரங்கபாணி—மொழிக்காக உயிர் நீத்த சாரங்கபாணியின் பெயரைச் சூட்டுவதற்கு அரசு ஆலோசிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு கோரிக்கை எழுத்து மூலம் வருமானால், அது பற்றி பரிசீலிக்கலாம்.**



மார்ச் 24]

686 வினு.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை மச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

திருவாரூர் புகைவண்டி நிலையம் அருகில் உள்ள லெவல் கிராசிங்கில் பாலம் கட்டுவதற்கு திருவாரூர் நகராட்சியிடமிருந்து கோரிக்கை துள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:**—தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளில் ங்கள், மேம்பாலங்கள் அமைவதற்கு மூலகாரணமாக இருக்கும் வாரூரில் ஒரு மேம்பாலம் கட்ட அரசு ஆலோசிக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது போன்ற ஒரு ரிக்கை நகராட்சி மன்றத்திலிருந்து வரவில்லை. கோரிக்கை வந்த து அது பற்றி பரிசீலிக்கலாம்.

### ஏலகிரி மலையில் சின்கோனு பயிரிடுதல்

*687 வினு—**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு மின்சாரத் துறை மைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் "சின்கோனு" மற்றும் ஜரேனியம்" பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி இராமன்:** இல்லை.

### அரசுப் பேருந்துகளுக்கான உதிரி உறுப்புகள்.

*688 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் றை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

அரசுப் பேருந்து போக்குவரத்துத் துறைக்கு உதிரி உறுப்புக்கள் டக்காத காரணத்தால் பழுதடைந்த பஸ்களைப் பழுது பார்க்கப் வது தடைபட்டுள்ளது என்று கூறப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இப்போது தமிழக அரசு ருந்துகளுக்கான உதிரி பாகங்கள் எந்தெந்த கம்பெனிகளிடமிருந்து ங்கப்படுகின்றன என்பதையும், அவைகளை வாங்குவதில் காலதாமதம் படுவதற்கான காரணம் என்ன என்பதையும், அதைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்டு இருக்கும் நடவடிக்கைகளையும் அறிவிக்கக் கோருகிறேன்

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்த சுப் போக்குவரத்துத் துறையிலே உள்ள பஸ்களுக்கு 'அசோக் லண்டு லிமிடெட், மெசர்ஸ் டாடா இஞ்ஜினீரிங் அண்டு லோகோ ாடிவ் கம்பெனி, மெசர்ஸ் பை—மெடல் பேரிங்ஸ் லிமிடெட்

இந்தியா பிஸ்டன்ஸ், லூகாஸ்—டி.வி.எஸ்., பெஸ்ட் அண்டு கம்பெனி, பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சுந்தாம் கிளேடன் ஹிந்துஸ்தான் பெரடோஸ் போன்ற நிறுவனங்களிலிருந்து பல்வேறு பாகங்கள் வாங்கப்படுகின்றன. பாகங்கள் (உதிரி உறுப்புகள்) சரிவரக் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் இம்போர்ட்-ரெஸ்டிரிக்ஷன், வெளிநாட்டுச் செலாவணி பெறுவதில் இருக்கும் கஷ்டம், மூலப்பொருள்கள் கிடைக்காமல் இருப்பது (ஸ்கேர்ஸிடி ஆப் ரா மெடீரியல்ஸ்) லேபர் அன்ரெஸ்ட் இவைகள் தான் காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அண்மையில் நடந்த சிம்சன் கலவரத்தால் கூட அரசாங்கப் போக்குவரத்துத்துறை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. நாகராஜன்:** தலைவரவர்களே, பல பெரிய பேருந்து நிறுவனங்கள் அவர்களுக்கு வேண்டிய சில உதிரி உறுப்புகளைத் தாங்களாகவே தயார் செய்து கொள்கிற முறையைப் பார்க்கிறோம். அதேபோல் அரசு பேருந்து நிறுவனமும், அதற்குத் தேவையான உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்ய முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஒரு பஸ்ஸுக்கு கிட்டத்தட்ட 7,500 உறுப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாமே செய்வது என்பது முடியாத காரியம். ஆனால் கூடுமானவரையில் இவற்றைச் செய்கிற நிறுவனங்கள் சென்னையைச் சுற்றி இருப்பதால் அவைகளைப் பெறுவதற்கான முறையை மேற்கொள்கிறோம். இங்கே இருக்கிற நிறுவனங்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு விட்டால் இன்னும் விரைவாக வாங்குவதற்கு எந்தெந்த நிறுவனங்கள் இத்தகைய உறுப்புகளை உற்பத்தி செய்கின்றன என்று பார்த்து, அவைகள் தரமானவைகளா என்று பார்ப்பதற்காக ஒரு டிஸைபல் ஆர்டர் கேட்கலாமா என்ற அளவில் அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

*Suggestions for improving bus routes*

* 689 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the suggestions sent by various associations in the City of Madras to improve or to change or to start new routes are attended to by the Director of Transport; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) பல்லவா போக்குவரத்துக் கழகம் ஏற்படுமுன் அக்கருத்துரைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநரால் கவனிக்கப்பட்டன. தற்போது கழகம் கருத்துரைகளைக் கவனிக்கிறது ;

(ஆ) இது குறித்துப் பல கருத்துரைகள் பெறப்பட்டன எனவே, அவற்றின் விவரங்களைத் தருவது இயலாததாகும்; ஆனால் பெறப்பட்ட ஒவ்வொரு கருத்துரையும் ஆய்வு செய்யப்படுகின்றது. ஏற்புடைய இடங்களிலெல்லாம் அவை செயல் படுத்தப்படுகின்றன.



Dr. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister whether it is possible for the Government to step up peak hour traffic ? Whether Government have received applications from persons regarding peak hour and whether Government have any programme in that respect and if so, what are the steps taken ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நெரிசல் நேரங்களில் அதிகப் பேருந்துகள் விடவேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாநகரத்தில் உள்ள பெரும் வழித் தடங்களில் ஷட்டில் சர்வீஸ் விடப்பட்டிருக்கின்றன. 62 ஷட்டில் சர்வீஸ்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

Dr. H. V. HANDE: Sir, may I know whether these shuttle buses are able to collect enough passengers and if so, whether it is possible for the Government to increase these shuttle buses ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்த ஷட்டில் சர்வீஸ் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று தான் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது. அதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போது சேசிஸ் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அதை நன்கு அறிவார்கள். 2 மாத காலமாக அசோக் லேலண்டில் சேசிஸ் உற்பத்தி செய்யவில்லை. உற்பத்தி தொடங்கப்பட்டு தேவையான அளவுக்கு சேசிஸ் தருவார்களானால் அதை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

Dr. H. V. HANDE: May I know whether a number of buses which the Government have withdrawn are not in good condition and there are a number of complaints from the public that several of the buses that are introduced are old and therefore they experience discomfort and have the Government any programme to replace these uneconomical, old, dilapidated buses and introduce new buses ?

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, information regarding replacement can be had on the day the Transport Demand is discussed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கைகள் அளித்தல்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாம் அறிக்கை

THIRU P. SEENIVASAN : Sir, I present the Third Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

(ஆ) சின்கோனாத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

THIRU K. VEZHAVENDAN : Hon. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the Cinchona Department.

(3) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண். 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,00,28,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES : Sir, I move the following cut motion to discuss about the labour unrest in Tamil Nadu—

" That the allotment of Rs. 1,00,28,400 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100. "

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss about the growing unemployment problem in the State—

" That the allotment of Rs. 1,00,28,400 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100. "

THIRU N. K. PALANISWAMY : Sir, I move the following cut motion to dicuss the failure of the Government to interfere with the disputes between labour and managements and settle the disputes in defence of genuine demands of labour—

" That the allotment of Rs. 1,00,28,400 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100. "



**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** "சார், ஐ வாண்டு டு மேக் எ சப்மிஷன் டு தி ஸ்பீக்கர்." இந்த "தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்" என்ற மான்யமானது மிகவும் முக்கியமானது. 85 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அதை வாசித்து அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்களைப் பற்றி அவர்களுடைய யோசனைகளையும், எதிர்ப்புகளையும் தெரிவிக்கக் கூடிய ஒரு நிலைமையில் இல்லை. இன்றைக்குக் காலையில்தான் இந்தப் புத்தகங்கள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. நாங்கள் எப்பொழுது இதைப் படித்து எங்கள் அபிப்பிராயத்தை எப்படிச் சொல்ல முடியும் என்பதைத் தாங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மான்யம் மிகவும் முக்கியமானது. இனிமேலாவது இவ்வாறு தாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி விவாதிக்க இன்று முடியாவிட்டால் நாளையும் ஒரு நாள் கொடுத்தால் கூட நன்றாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர், சார். சாதாரணமாக இன்று மான்ய விவாதம் இருக்கிறது என்று சொன்னால், நேற்று இரவு 10 மணிக்குத்தான் அந்த வருடாந்திர ரிப்போர்ட்டு கொடுக்கப்படுகிறது. அதனுடைய எல்லைதான் இன்று காலையில் வந்த பிறகு தான் இந்த ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். நான் பேசுகிறபொழுது அதைக் குறிப்பிடலாம் என்று நினைத்தேன். பொதுவாக இந்த ரிப்போர்ட்டு நல்ல முறையிலே தயாரிக்கப்பட்ட பயனுள்ள ரிப்போர்ட்டு. இந்த ரிப்போர்ட்டு பூராவும் படித்து ஜீரணித்துக் கொண்டு பேச வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அது எப்படி சாத்தியமாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன். ஆகவே இம்மாதிரியான வருடாந்திர ரிப்போர்ட்டுகளை அந்தந்த மான்யத்தை விவாதிப்பதற்கு இரண்டு தினங்கள் முன்கூட்டியாவது கொடுக்க வேண்டும் என்று தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்திருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மையார் அவர்கள் சொல்லி விட்டார்களே?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இது "இன் அடிஷன்"; ஏறத்தாழ 85 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையும், 17 பக்கங்கள் கொண்ட அமைச்சர் உரையும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆய்வுரையை அனுஷ்டானப் படுத்தி (ஆன் தி பேஸிஸ் ஆஃப் தி ரெவ்யூ ரிப்போர்ட்டு) இங்கே விவாதம் நடத்த வேண்டுமென்று சொன்னால், நிச்சயம் கூடாத காரியம். ஆகவே, இந்த அறிக்கைகளில் இருக்கிற விவரங்கள் அனைத்தையும் பற்றி இங்கே விவாதிப்பதற்கு இயலாது. இந்த அறிக்கைகளிலுள்ள விவரங்களுக்கும், எங்களுடைய விவாதத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்க முடியாது. ஆகவே, நல்ல முறையில் விவாதம் நடைபெற வேண்டும் என்றால், இந்த மான்யத்தின் மீது விவாதத்தை ஒத்திவைக்க வேண்டும், இல்லையென்று சொன்னால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு எதிர்க்கட்சி பொறுப்பு அல்ல என்று நான் சபாநாயகர் அவர்கள் மூலமாக

அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில் கூட பல திருத்தங்கள், கரெக்‌ஷன்ஸ் இருக்கின்றன. ஆகவே இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் இருக்கிற விவரங்கள் எல்லாம் அனைத்தும் உண்மையாக இருக்கின்றன, கரெக்டாக இருக்கின்றனவா என்பதே சந்தேகத்திற்குரிய விஷயம். நாங்கள் இதை ஏற்றுக்கொண்டோம், இதிலே இருக்கிற குறைபாடுகளை எடுத்துக் கூறவில்லை என்று மக்கள் எண்ணக் கூடாது. ஆகவே, இந்த அறிக்கையின் மீது இந்த விவாதம் நடக்கவில்லை என்பதை நான் சபாநாயகர் மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலுள்ள விஷயங்கள் இரண்டு. இந்த அறிக்கை காலதாமதமாக வந்திருக்கிறது என்பது ஒன்று. சட்டமன்றத்தின் அலுவலகத்திற்கு காலையில் 8½ மணிக்குத்தான் இவைகள் கிடைத்தன. ஆகவே, இப்பொழுது அவைகளை விநியோகிப்பதில் ஒரு தவறும் இல்லை.

இன்றைக்கு ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் மானியத்தையும் நாம் விவாதிக்க இருக்கிறோம். சட்டமன்ற இலாகாவிற்கும், ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் இலாகாவுக்கும் ஒரு தகராறு நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இந்த விவாதத்தின் மூலம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உதவி செய்து. இங்கே ஒரு தனியான அச்சக இலாக்கா இருக்க வேண்டும். அது ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் இலாகாவுக்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கக் கூடாது. சட்டசபை அறிக்கைகளை மிக விரைவாக அவ்வப்பொழுது அச்சடிப்பதற்கு ஒரு தனி அச்சகம் இருக்க வேண்டும். இப்பொழுது ஒரு பிரிவு நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் சட்டமன்றத்தை யொட்டி நம்முடைய கோட்டைக்குள்ளேயே ஒரு அச்சகம் தனியாக சட்டமன்ற இலாகாவின் கீழ் இயங்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு லேபர் டிமாண்டு, பிறகு ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் டிமாண்டும் வர இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் அவைகளுக்கெல்லாம் ஒரு நல்ல பரிகாரம் காண வேண்டும் என்று நானும் உங்களோடு சேர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது செய்யக்கூடியதெல்லாம் 'சேல்ஸ் டாக்ஸ்' டிமாண்டை இப்பொழுது வைத்துக் கொண்டு, போதிய அவகாசம் கொடுத்து, மாலையில் சட்டமன்றக் கூட்டத்தை நடத்தி லேபர் டிமாண்டை விவாதிக்கலாம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தையும், மற்றவர்களுடைய கருத்தையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'தொழிலாளர் நிலைமை" என்ற தலைப்பில் இங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கை இப்படி காலம் தாழ்ந்து வைக்கப்பட்டிருப்பது குறித்து நானும் வருந்துகிறேன். இந்த அறிக்கையைத் தயாரித்து முன்கூட்டியே தராதது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும். இனிமேலாவது இந்தத் துறையினர் போதிய கவனம் எடுத்து இம்மாதிரியான விஷயத்தில் விரைவாகப் பணியாற்றிட வேண்டும் என்று நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்தினை ஒட்டியும், தாங்கள் தெரிவித்த கருத்தினை ஒட்டியும், முதலில் கமர்ஷியல் டாக்ஸ் மானியக் கோரிக்கையை எடுத்து விவாதித்த பிறகு, "பத்திரப் பதிவு" போன்ற மானியங்களை விவாதித்துவிட்டு, பிற்பகலில் "தொழிலாளர்" மானியத்தை வைத்துக்கொள்வது நலம் என்று நான் கருதுகிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமையாகும். ஒத்துழைப்பு என்றால் எல்லோரும் பேசுவது என்பது கூட இல்லை, எல்லோரும் வரவேண்டும் என்பதுதான். ஆகவே, பிற்பகல் நான்கு மணிக்கு இந்த விவாதத்தை எடுத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும். அதற்குத் தங்களுடைய கருத்தினையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது விற்பனை வரி, பத்திரப் பதிவு, ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் ஆகிய மானியங்களை எடுத்துக்கொள்ளலாம். இன்று 1½ மணி வரையில் சட்டமன்றம் நடக்க வேண்டுமா, அல்லது முன்னாலேயே முடித்துவிட்டு நான்கு மணிக்கு ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றியும் உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விற்பனை வரி மானியத்தின் மீது விவாதத்தை இப்பொழுது வைத்துக் கொள்ளலாம். அடுத்து எழுதுபொருள், பத்திரப் பதிவு மானியம் எடுத்துக்கொள்ளலாம். எதுவரையில் போகிறதோ அதுவரையில் போய் முடித்துவிட்டு, மாலையில் தொழிலாளர் மானியத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மானியக் கோரிக்கைகளும் முன்மொழியப்பட்டு, வெட்டுத் தீர்மானங்களும் முன்மொழியப்பட்டு விட்டன. நாம் ஒவ்வொன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,31,51,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**DR. H. V. HANDE:** To discuss policy, I move the following cut motion:—

"That the allotment of Rs. 1,31,51,500 under Demand No. 5—Registration Department be reduced by Rs. 100".

**திரு என். மருதாசலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலூகா, பெருநாழி என்ற இடத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,51,500 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்.**—பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி திருவட்டாற்றிலிருக்கும் பத்திரப் பதிவு அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து ஒன்றைத் திருவட்டாற்றிலும், மற்றொன்றை குலசேகரம்பிலும் அமைப்பது பற்றி விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 1,31,51,500-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

**(இ) நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்–அச்சுத் துறை.**

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்.**—பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்–அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,82,600–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : To discuss policy, I move the following cut motion :—

" That the allotment of Rs. 4,35,82,600 under Demand No. 34 —Stationery and Printing be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : Thirumathi T. N. Anandanayaki who had given notice of cut motion No. 611 is not in her seat. So her cut motion is deemed not to have been moved.

**திரு. கே. டி. கே. தங்கமணி.**—தலைவர் அவர்களே, சென்னை அரசாங்க அச்சகத்தில் பணியாற்றுபவர்களின் ஊதியத்தை உயர்த்தவும் அச்சகத்தை விரிவுபடுத்தவும் உடனடி நடவடிக்கை தேவை என்பதை பற்றி விவாதிக்க:—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்–அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,35,82,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.



**(ஈ) நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.**—பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம் *—என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,30,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. M. SUBRAMANIAM : To discuss about the levy of surcharge on Sales Tax, I move the following cut motion :—

" That the allotment of Rs. 3,30,96,000 under Demand No. 3 –General Sales Tax and other Taxes and Duties—Administration be reduced by Rs. 100 ".

**திரு. சே. அழகர்சாமி.**—தலைவர் அவர்களே, எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்: நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,30,96,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்."

THIRU B. VENKATASWAMY : To discuss about the necessity to remove tax on silk goods manufactured on power looms in Tamil Nadu, I move the following cut-motion :—

" That the allotment of Rs. 3,30,96,000 under Demand No. 3 General Sales Tax and otther Taxes and duties—Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and Cut-motions are before the House for discussion.

THIRU K. M. SUBRAMANIAM : I did not expect that I would get an opportunity to speak so early on this subject, viz., sales tax administration. You know sales tax, unlike other taxes, is tax on human living. Whatever one wants to purchase he has to pay sales tax. This is different from tax on profit and tax on professions. The discoverer of sales tax should be complimented for

* 169–178 ஆம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஆயத்தீர்வை—மதுவிலக்கு சட்டங்களை நிர்வகிப்பது, செயல்படுத்துவது குறித்த ஆய்வுரை 178–188ஆம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

having brought this tax. This tax enables Government to increase revenue in an invisible manner; by increasing it only by a few paise they get Rs. 20 crores. The most important point is last year we introduced a surcharge. It is difficult to collect surcharge at one end. Instead of increasing the surcharge, it would be better to have more sales tax. You can increase the tax and not surcharge. There has been increase in price of commodities and besides this, you levy this surcharge. Is it a small amount? Last year the surcharge was increased. It is a bad practice. It is discriminatory to have a tax on people. I hope and trust that the surcharge would be removed. It is only passed on to the consumer and the ultimate sufferer is the consumer. So I hope it will be removed.

Coming to administration of sales tax, there is lot of possibility for harassment. I do not say everywhere there is harassment. There is good collection and there is also harassment. I hope the Government will take care to see that this harassment is stopped. Officers coming in a jeep during business hours, entering the business premises of respectable people and searching the accounts, treating the businessmen as criminal (till it is proved, it can't be said anybody is a criminal)—I say in the name of humanity, these searches should stop.

I do not say all businessmen are good. There are good as well as bad things but what I say is you should not harass people like this. You must see that taxes are not avoided. For that what you should do is to tax less so that collection will be more easy, since there will not be evasion then.

You say there is no tax on perishables but hotels are taxed. Is iddli or uppuma not perishable? At the purchase end you have the tax and on top of it, you tax the restaurants. To my mind it is something which is not illusory. I hope the Revenue Minister will consider this thing seriously. Three star and five star hotels can bear the burden. They charge Rs. 10 and Rs. 15 per head and there is 'service charge' which people are prepared to pay. But how can small hotels, those having small turnover (not Rs. 2 lakhs and Rs. 3 lakhs) be penalised ?

(Mr. Deputy Speaker in Chair)

பிற்பகல் 12.30 I am coming to a very important thing. As far as Sales Tax is concerned, in many countries it is not Sales Tax, but it is purchase tax or it is called Consumers Tax. We see on one side industries





Minister trying to develop industries; on the other side, we are getting more and more taxes, because all the components that go into the manufacture of an article are taxed, once, twice and thrice. Of course, may be it is lesser rate than higher rates elsewhere. Still they are taxed. Suppose I buy cotton or oil or any other thing for the mills, they are all taxed two or three times before they reach me. It may be 2½ per cent and the other rate may be 3½ per cent. But only difference is one per cent less. That does not make any difference.

If we are really interested in developing industries in Tamil Nadu, to beat other places, definitely certain normal concessions should be given and the most important concession will be not to have Sales Tax on raw materials, particularly used in small scale industries where it goes to play an important part in the total cost.

Now, Sir, I am coming to another very important point in which I am very much interested and that is betting tax. This betting tax is a peculiar phenomenon in India. There is an article, fortunately for me, in the Hindu written by the Secretary of the Bangalore Race Club who had gone to Australia to attend an International Racing Conference. That is one as we have International Conference in everything. We should make the best out of the race goers. In the matter of racing in India, all taxes collected are 22½ per cent of the total collection. In the Race Clubs they are appointing Executives on Rs. 3,000 and 2,000 and many of the Retired Officers find an easy place in the Race Club if they have the favour of the Race Club Stewards. We find about 13, 14 Executive are there and they draw Rs. 2,000 and 3,000 per month in the Race Club. Why should the Race Club charge 22½ per cent while Government is getting only 15 or 20 per cent? From whom do they get? The punters have to pay. Whether the punters lose or gain they have to pay. If those who gain are asked to pay, it is all right. But the punters have to pay Rs. 10 or 15 first. The winner gets his money. Just as in Sales Tax whether the business man gains or loses, or declares himself insolvent, the first thing is to pay sales tax. Like that in the Race Club also, whoever punts and bets is charged. Of course, we cannot change things overnight. But in respect of new taxes that are being introduced now, I think Government should see that the new taxes are

collected from the Race Club out of the 22½ per cent, instead of passing it on to the people who bet. If the Government passes it on to the people who bet, let them pass it on to the people who win and double the rate from 3 per cent to 6 per cent. It is fantastic to pass on to the man who loses. But the loser and the person who gains pays the same thing. That is very, very bad. I am sure that this Government will consider this aspect very seriously, taking the opinion of not only myself, but all those people who are actively connected with the Club. I may be wrong in the solution I suggest. But I am sure of the facts and if I am wrong in the solution, Government is very sure to consult experts in the matter and see what could be done in the matter.

There is another unfortunate thing. After the introduction of the extra tax of 50 per cent, bets are made illegally. There are many people roaming about the race course and collecting Rs. 4,000 and 5,000, but not paying one pie as tax. This is what is happening. I will tell the Government that higher the rate of taxation, the greater is the evasion, particularly in the gambler's den. Fortunately for us, in that place our present Inspector-General of Police is one of the stewards. It is a very fortunate thing and I congratulate our Government for having nominated him. He is very strict in these matters.

Recently there was a history, a most shameful history in the Race Club. The Chief Steward's horse was found to be doped. If the Chief Steward's horse is doped what else cannot be done in that Club? Whether the Chief Steward is at fault I do not know. I do not know whether he himself knew that the horse was doped. He may be correct if he says he did not know. I do not say he is not. If the Chief Steward's horse is doped and people bet on it Rs. 10,000 and Rs. 15,000 what is the level of administration of the Race Club? Fortunately, I can tell you, had it not been for the present Inspector-General there, this would have escaped notice. I am very happy and all the punters are happy that the Inspector-General was very strict in this case.

So far as the management of the Race Club is concerned, in other countries the management of such Clubs rests with the Secretary, a person appointed by the Government and the stipendiary steward. It is not the entire group of directors who hold monthly meetings and declare policies. That is all the main



function of these stewards. They are like other directors in any other company, sleeping directors. They hold meetings and declare policies and ask them to be executed by the Managing Director.

In Australia for example — it is the biggest Racing Centre in the World, what is done is, the stipendiary steward is there and not elected, an expert, a man who knows the business is put in charge. It is not like here where those who have got money become shareholders and then they manage things according to their wishes. There, they are experts, an expert a secretary and in certain cases the Government nominate a steward. These three people manage the race club and races on the racing days, so that nothing bad can happen, normally, of course. Many things can happen even in these circumstances, but normally nothing bad can happen. One steward cannot influence and get one horse to win and another man to manage to win another horse and take away all the poor vegetable vendors' moneys.

Ninety per cent of the people who go to the races and bet are not rich people; they are people like vegetable vendors, 'Koodai-Karis' and many people who think by investing 10 rupees they could get 2 lakhs. Because of poverty they do this, not because they are affluent. When they go to race courses, should they be cheated like this? I do not want to use stronger words. What is happening there?

I suggest that the Government should seriously think of appointing a committee to go into this question and finding out a solution for such mal-practices.

Recently an incident happened. The Chief Steward's horse was doped and the Chief Steward is M.Ct. Muthia and his horse was found to be doped. This is the way things are happening there. Of course, I know I will be the most, worst unpopular man in the Race Club. I know these things have been happening for a long time. For hundred years, ever since the Race Course was started this has been going on. But then, there were more people then who feared sin in those days. But to-day there is no fear of sin, because people have no faith in God and where is sin? Therefore, I suggest that there should be thorough investigation of the things happening in the Race Course.

Let the Government tax them on the basis of 22½ per cent of the collections earned by the Race Club. Sir, this 22½ per

cent of the collections is a colossal figure when compared to the total collections every day. In this connection, I have to say that it may not be $22\frac{1}{2}$ per cent in all cases—I am speaking subject to correction. In certain cases it may be 20 per cent or 22 per cent. Anyway, let the Government tax them on the basis of the collections earned by them.

So far as sales tax is concerned, Mr. Deputy Speaker, I earnestly request our Hon. Minister for Revenue to see that the surcharge is removed from all the cities.

In this connection, I would also suggest that the hotel-keepers who run normal restaurants—not five-star or four-star or three-star hotels—should be exempted from the levy of sales tax so that 90 per cent of them in the City and other places could get the benefit.

Then I would again urge that the punters must not be taxed. It may be asked, why should they go to the Races? As there is the Race Club, they go there. Otherwise they would not go there.

Also, the working of the Race Club should be so streamlined as to prevent any possibility of misappropriation or mismanagement.

Thank you, Sir.

**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற விற்பனை வரி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970-71-ல் விற்பனை வரி மூலம் நமக்குக் கிடைத்தது 100 கோடி ரூபாய் ஆகும். இது உண்மையில் நல்ல முன்னேற்றம். 1966-67-ல் 56 கோடி ரூபாயாக இருந்தது இன்றைக்கு 93 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்ந்திருப்பதற்குக் காரணம் திறமை மிக்க நிர்வாகம்தான் என்று சொன்னால் மிகை இல்லை. திறமையான நிர்வாகத்தால்தான் இந்த அளவு உயர்ந்திருக்கிறது. இனி வருங்காலத்தில் இதன் மூலம் பல நூறு கோடி ரூபாய்களைச் சம்பாதிக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இதில் நல்ல அனுபவம் இருக்கிறது. அவர்கள் இன்னும் பல நூறு கோடி ரூபாய்களைச் சம்பாதித்து அரசுக்குக் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். 1971-72-ல் விற்பனை வரியாக 96 கோடி ரூபாய், 1972 பிப்ரவரி 29-ம் நாள் வரை சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல் 1-ம் தேதிக்குள் நிச்சயமாக 100 கோடி ரூபாயை அது கடந்து விடும் என்று நம்புகிறேன். இது பாராட்டுதற்குரிய விஷயம்.





அடுத்தபடியாக சிறு வியாபாரிகளின் நலனை முன்னிட்டு, அவர்களின் நலனில் அக்கறை கொண்டு விற்பனை மதிப்பு 15,000 ரூபாயாக இருந்ததை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேபோல் பதிவு செய்துகொள்வதிலிருந்து 10,000 ரூபாயாக இருந்ததை 15,000 ரூபாயாக உயர்த்தி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் விற்று முதல் வரையறை அளவு 75 ஆயிரமாக இருந்ததை 1 லட்சம் ரூபாய் என்று உயர்த்தியிருப்பது பாராட்டக்கூடிய விஷயமாகும்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைக் கொஞ்சம் விளக்கமாகப் பேசலாம் என்றிருக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அதற்கு வேண்டிய நேரத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்திலிருந்து நமக்கு 182 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டு கிடைத்திருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டில் ரேஸ் கிளப்புக்கு 2 கோடி ரூபாய்க்கும் அதிகமாக கிடைத்திருக்கிறது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் $22\frac{1}{2}$ சதவீதம் ரேஸ் கிளப் எடுத்துக் கொள்கிறது என்றார்கள். அந்த அளவிற்கே ரேஸ் கிளப்புக்கு 2 கோடிக்கும் மேலாக கிடைக்கிறது என்றால் அதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி வருகிற அந்த வருமானத்தை ரேஸ் கிளப்பினர் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அதற்கு ஓரிரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன்.

குதிரை வாங்குவதற்காக வட்டியில்லாக் கடனாக ஒவ்வொரு ஆண்டும் பணம் கொடுக்கிறார்கள். குதிரை வாங்குவதற்காக 1968-69ல் வட்டியில்லாக் கடனாக 24 லட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள். 1969-70ல் 33 லட்சம் ரூபாய், 1970-71ல் 38 லட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள். இதெல்லாம் யார் வீட்டுப் பணம்? யார் வீட்டுப் பணத்தை எடுத்து வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கிறார்கள்? நிலத்தில் பாடுபட்டு உழைத்து உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயி, விவசாயத்திற்குக் கடன் கேட்டால் அவனுக்கு $8\frac{1}{2}$ சதவீதம் வட்டி போடுகிறார்கள். ஆனால் சில கொழுத்த முதலாளிகள் தங்களுடைய பொழுது போக்கிற்காக நடத்தக்கூடிய காரியங்களுக்காக இவ்வாறு வட்டியில்லாக் கடனாக பெரும் தொகைகளைக் கொடுக்கிறார்கள். குதிரை வாங்குவதற்காகக் கொடுக்கின்ற பணம் யாருடைய பணம் என்றால், ஏழை எளியவர்கள் கொடுக்கின்ற பணம் ஆகும். அவர்களுடைய பணம்தான் வட்டியில்லாக் கடனாக 38 லட்சம் ரூபாய் என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. இது நியாயம்தானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குதிரைப் பந்தயத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே பல தடவைகள் சொல்லியிருக்கிறோம். ரேஸ் கிளப் சொந்தக்காரர்கள் 'இது ஒரு கிளப்தான், கம்பெனி இல்லை' என்று சொல்கிறார்கள். இது கிளப்தான், கம்பெனி இல்லை யென்றால், ஊட்டி ரேஸிங் கம்பெனி, லிமிடெட் கம்பெனியை இதனோடு எப்படி இணைக்க முடியும்? அந்தக் கம்பெனி இதனோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு கம்பெனியுடன் இன்னொரு கம்பெனிதான் இணைக்க முடியும்.

அவர்கள், 'இது கிளப்தான், கம்பெனி அல்ல' என்று சொன்னால் நம்ப வேண்டுமா? இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இது ஒரு கம்பெனிதான். அதுவும் பொது மக்களின் பணத்தைக் கொண்டு நடக்கிறது.

இந்த நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் ஏதாவது இதற்கு முதலீடு செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள் கையிலிருந்து காலணா கூட இதற்குக் கொடுக்கவில்லை. பொது மக்களிடமிருந்து வரக்கூடிய பணத்தை அவர்கள் தங்களுடைய சுகபோகத்திற்காகச் செலவழித்துக் கொண்டு, உல்லாச வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இதை அரசாங்கமே எடுத்து நடத்தினால் 4 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை நடத்துகிறவர்கள் 'இரண்டாவது என்குளோஷர்' என்று சொல்லப்படுகிற இடத்தை எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதியில் பொது மக்கள் அதிகமாக வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. காசு கொடுத்து டிபன் வாங்கிச் சாப்பிடுவதற்குக்கூட தாராளமான வகையில் இடம் இல்லை, மிக்க நெருக்கடி, வசதிக் குறைவு. ஆனால் அதே நேரத்தில் மெம்பர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடம் 15 லட்சம் ரூபாய் செலவிலே குளுகுளு வசதியோடு அறையாகக் கட்டப்பட்டிருக்கிறது. பொது மக்கள் அந்தப் பக்கத்தில் வசதியில்லாமல் அவஸ்தைப்படும்போது, இந்தப் பக்கத்தில் குளுகுளு வசதியுள்ள அறையில் மெம்பர்கள் உல்லாசமாக இருக்கிறார்கள்.

அதுவும், மெம்பர்கள் என்று சொல்லப்படுவது 500 பேர்கள்தாம், அந்த மெம்பர்ஷிப் எண்ணிக்கையை 500-க்கு மேல் அவர்கள் ஏற்றுவது இல்லை. இதை அவர்கள் ஏதோ தங்களுடைய குடும்பச் சொத்தாக வைத்துக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். மெம்பர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும், யார் வேண்டுமானாலும் மெம்பராகலாம், என்கிற தன்மையில் 1970-ம் ஆண்டிலே அரசாங்கம் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறது. மெம்பர்களின் எண்ணிக்கையை 500-லிருந்து 600-ஆக உயர்த்த வேண்டும்—அதுவும் 100 தான் அதிகரிக்க வேண்டும்—என்று இந்த அரசு கேட்டிருக்கிறது. இது எழுதி இரண்டு ஆண்டுகளாகியும் தக்க வகையில் பதில் சொல்லாமல் சால்ஜாப்பு செய்கிறார்கள். அந்த அளவிற்கு அரசை ஏமாற்றுகிறார்கள். மெம்பர்களின் எண்ணிக்கை 500 என்பது மாற்றப்பட்டு, குறைந்தது 5 ஆயிரம் என்ற வகையில் உயர்த்தப்பட வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். மெம்பர்கள் யாராயிருந்தாலென்ன? மெம்பர்களுக்குக் கட்டணம் 100 ரூபாய் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும். யார் வந்தாலென்ன? அவர்களுக்கும் குளுகுளு வசதி செய்து கொடுக்க வேண்டுமா? வேண்டாமா என்பதல்ல கேள்வி. அரசு அங்கே இருக்கிற 'கமிட்டி ஆஃப் மானேஜ்மெண்டில்' இரண்டு பேரை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறது.



இன்னும் சொல்லப்போனால் 'இந்து' பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. பெங்களூர் ரேஸ் கிளப் செக்ரட்டரி ஹர்ஷத் அலி என்பவர் ஆஸ்திரேலியாவில் நடந்த 'ஏஷியன் ரேஸ் கான்ஃபிரன்ஸ்'க்குப் போய் வந்ததைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் அங்கே 'ஸ்டைபண்டரி ஸ்டேவர்ட்ஸ்' நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏதாவது ஒழுங்கீனங்கள் நடந்தால் அது நிவர்த்தி செய்யப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் நாமும் ஸ்டைபண்டரி ஸ்டேவர்ட்ஸ் நியமிக்க வேண்டும்.

இந்திய உபகண்டத்திலே எடுத்துக் கொண்டால் பம்பாய் மாநிலத்திலே உள்ள 'மகாலக்ஷ்மி' ரேஸ் கிளப்பிலே அரசாங்கம் 6 பேரை நியமித்திருக்கிறது. பெங்களூரில் 8 பேர், ஹைதராபாத்தில் 4 பேர் அரசாங்கத்தின் தரப்பில் போட்டிருக்கிறார்கள். ஏன் நாம் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நாமாக ஒரு சட்டத்தைப் போட்டு இவ்வளவு பேர் உறுப்பினர்கள் என்று செய்தால் அவர்கள் என்ன செய்துகொள்ள முடியும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 22½ சதவிகிதம் எடுக்கிறார்களே, அந்தப் பணத்தில் குதிரை வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் கொடுப்பது பற்றிச் சொன்னேன். அதில் சில்லறைக் கடன் என்ற தலைப்பில் ரூ. 45 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். குதிரைச் சொந்தக்காரர்கள் பயிற்சியாளர்களுக்கு மானியமாக கொடுக்கப்படுவது 1968-69-ல் ரூ. 9·7 லட்சம்; 69-70-ல் 11 லட்சம்; 70-71-ல் ரூ. 12 லட்சம், குதிரைச் சொந்தக்காரர்கள், குதிரை பழக்குகிறவர்களுக்கு இவ்வளவு லட்சம் தொகை மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

அதேபோல் குதிரைக்கு புல் வாங்கிப் போட மானியமாகக் கொடுக்கப்படுகிறது. இது 1968-69-ல் 1·63 லட்சம்; 1969-70-ல் ரூ. 2·61 லட்சம்; 70-71-ல் ரூ. 3·85 லட்சம். இங்கே மக்களுக்குச் சோறு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். நாம் அதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். நம் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எப்படியாவது எல்லா மக்களுக்கும் ஒரு வேளைச் சோறு கொடுக்க வேண்டுமென்று அதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கொழுத்த பணக்காரர்கள் குதிரைக்கு புல் வாங்கிப்போட—சந்திரலேகா என்ற படத்தில் யானைக்கு அல்வா வாங்கிப் போட என்ற பயலாக வருகிறது. அதுபோல ரூ. 3·8 லட்சம் செலவழிக்கிறார்கள். இந்த வருடம் எவ்வளவு கொடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

குதிரைக்காரர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? ரேஸ் கிரவுண்டில் நுழைந்துவிட்டால் 500 ரூபாய் எடுத்துக் கொள்கிறார்கள், ஸ்டேக்ஸ் மணி எப்படிக் கொடுத்திருக்கிறார்கள்? 1968-69-ல் ரூ. 33·5 லட்சம்; 69-70-ல் ரூ. 38·4 லட்சம்; 70-71-ல் ரூ. 45 லட்சம் ஸ்டேக்ஸ் மணியாக கொடுத்திருக்கிறார்கள். குதிரை அந்த கிரவுண்டில் நுழைந்துவிட்டால் ரூ 500. ஓடி வருவதில் முதலில் வருவதற்கு பர்ஸ்ட் பிரைஸ்; செகண்ட் பிரைஸ்; தர்ட் பிரைஸ் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட பணம் ரூ. 46 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் எந்த ஒரு ரேஸ் கிளப்பிலும் இவ்வளவு அதிகத் தொகை ஸ்டேக்ஸ் மணியாகக் கொடுத்தது கிடையாது.

[திரு எ. எம். இராஜா] [1972 மார்ச் 24

காரணம் அந்த அளவுக்கு இங்கே உள்ள நிர்வாகம் மோசமாக இருக்கிறது. நம் அரசால் கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதால் ஊதாரித்தனமாக செலவு செய்கிறார்கள். குதிரைச் சொந்தக்காரர்கள் பெரும் பணக்காரர்கள் வட்டியில்லாக் கடனில் குதிரை வாங்கி ஒரே ஆண்டில் அந்தப் பணத்தை எடுத்துவிட முயற்சிக்கிறார்கள்.

அங்கே உள்ள "ஸ்டாஃப்" பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் அவர்களில் நிரந்தர அலுவலர் 136 பேர். அந்த 136-ல் பெரிய உயர் மட்ட அதிகாரிகள் 13 பேர். அதிலே ஒருவர் செக்ரட்டரி. அந்த செக்ரட்டரிக்கு ஆண்டு ஒன்றுக்கு ஊதியமாக ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இது தவிர ஏர்-கண்டிஷன் வீடு; ஏர்-கண்டிஷண்ட் கார் ஃப்ரீயாகக் கொடுக்கப்படுகிறது. மற்ற பாக்கி 12 உயர்மட்ட அதிகாரிகளுக்கு ஆண்டுக்குச் சுமார் ரூ. 7 லட்சம் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. பாக்கி இருக்கின்ற 123 ஊழியர்களுக்கு கொடுக்கப்படுவது ஆண்டுக்கு ரூ. 2 லட்சம்தான்.

குளிர்சாதன வசதி அறை 15 லட்சத்தில் கட்டுகிறார்கள். குதிரைக்கு புல் வாங்க ரூ. 3·85 லட்சம் கொடுக்கிறார்கள். ஆனால் 123 பேர்களுக்கு 2 லட்சம்தான் கொடுக்கிறார்கள். எப்படிப்பட்ட முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட இதைக் கூறி வருகிறேன்.

இந்த ஆண்டில் நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்த ரேஸ் கிளப் கமிட்டி ஆஃப் மேனேஜ்மெண்டில் நம் பிரதிநிதிகள்—அங்கே 14 பிரதிநிதிகள்—குறைந்தது 8 பேராவது இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் அதை உடனடியாகக் நாட்டுடமையாக்கிவிட வேண்டும். நாட்டுடமையாக்குவதில் நமக்கு ஆதாயம் இருக்கிறது. நாம் சொல்வதற்கு ஒத்துக் கொண்டால் நம் உறுப்பினர்கள் 8 பேர்களை நியமிக்க வேண்டும். அதே போல் ரேஸ் கிளப் லைசென்ஸ் 2, 3 ஆண்டுகளுக்கு அவர்கள் இப்போது லைசென்ஸ் புதுப்பித்துக் கொடுக்கக் கூடாது. ஒவ்வொரு ஆண்டும் லைசென்ஸ் புதுப்பித்துக்கொள்ள நம்மிடத்தில் வரவேண்டும். அந்த முறை ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புக்கிகள்—புக் மேக்கர்ஸ் கூட்டமாக இருக்கிறார்கள். இவர்கள் ஒழிக்கப்பட்டாக வேண்டும். அவர்கள் எந்த அளவுக்கு டாக்ஸ் ஏமாற்ற வழிவகை செய்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். பெரிய ஹார்ஸ்-ஓனர்ஸ் என்று சொல்லப்படுகிறவர்கள் ரேஸ் நடக்கும்போது வருவார்கள். இரண்டு, ஒன்று என்று விரலைக் காட்டிவிட்டுச் செல்வார்கள். புக் மேக்கர்ஸ் அவர்கள் புத்தகத்தில் 200, 100 என்று போட்டுக் கொள்வார்கள். தனியாக வேறு இடத்தில் போய் பின்னாலே செட்டில் பண்ணிக் கொள்கிறார்கள். அதற்கென்று ஆளுக்கு தகுந்த மாதிரி முதலில் பேசி 'கோட் வேர்ட்' (Code word) ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இரண்டு என்றால் 2,000 புத்தகத்தில் 200 தான் இருக்கும். ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், பெரிய குதிரைச் சொந்தக்காரர் ஒருவருக்கு இந்த புக்கிகள் ரூ. 22 லட்சம் பாக்கியிருக்கிறது. மற்றொருவருக்கு 35 லட்சம் பாக்கி இருக்கிறதாம். இப்படி இந்தக் குதிரைகளின் சொந்தக்காரர்



1972 மார்ச் 24] [திரு எ. எம். இராஜா]

ஒவ்வொருவருக்கும் 20 லட்சத்திற்குமேல் பாக்கி வைத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் கணக்குக்கே வருவதில்லை. அவர்களிடத்தில் நம்மால் வரி வாங்க முடியவில்லை.

அதற்குப் பதில் அவர்களை ஒழித்துவிட்டு 100 ரூபாய்க்கு ஒரு கௌண்ட்டர், 500 ரூபாய்க்கு ஒரு கௌண்ட்டர், 1,000 ரூபாய்க்கு ஒரு கௌண்ட்டர் என்று திறந்தால் அவர்களால் ஏமாற்ற முடியாது. வந்து டிக்கட் வாங்கித் தானாக வேண்டும். வாங்கும்போது வரி கட்டித்தான் ஆக வேண்டும்.

மற்றொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சர்க்கார் நாம் நடத்தும் பரிசுச் சீட்டில் வெற்றி பெறுகிறவர்களுக்கு பரிசுத் தொகையில் 34 சதவிகிதம் வரி விதித்திருக்கிறார்கள். ஒரு பர்சென்ட் 2 பர்சென்ட் அல்ல. 34 பர்சென்ட். அதேபோல் ரேஸ் கிளப்பில் வெற்றி பெறுகிறவர்களுக்கு நாம் குறைந்தது 10 சதவிகிதம் விதித்தால் கூட ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் கிடைக்கும். ஸ்டேக்ஸ் மணி 45 லட்சம். அதன் பேரில் 10 சதவீதம் வரி போடலாம். அதேபோல் வின்னிங் அமௌண்ட் டாக்ஸ் போடலாம். அதேபோல் ஜாக்-பாட், டபிள், டிரெபிள், டன்னல்லா இவைகளின்மீதும் டாக்ஸ் போட்டால் ஆண்டொன்றுக்கு குறைந்தது 50 லட்சம் கிடைக்கும். அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அடுத்து அங்கே இருக்கின்ற ஸ்டாஃப்களுக்கு சில குறைகள் இருக்கின்றன. அங்கே ஒரே ஒரு யூனியன்தான் இருக்கிறது. அதை உடனடியாக அங்கீகரிப்பதற்கு அரசுத் துறையிலிருந்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே இருக்கும் ஊழியர்களுக்கு எச்.ஆர்.ஏ. (H.R.A.), சி.சி.ஏ. (C.C.A.), மெடிகல் ரீ-இம்பர்ஸ்மெண்ட் கொடுக்கப்படுவதில்லை. அவைகளைக் கொடுக்கச் சொல்லி அரசு அவர்களை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அங்கே வரும் பொதுமக்களுக்கு குறிப்பாக செகண்ட் என்க்ளோஷரில் இருப்பவர்களுக்கு பாத் ரூம் ஃபெசிலிட்டீஸ் கிடையாது. அதேபோல் டிபன் சாப்பிட வசதிகள் கிடையாது. உட்கார்ந்திருக்கும் காலரி ரொம்பச் சிறியதாக இருக்கிறது. அதை விரிவுபடுத்துவதற்கும் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகி றன்.

THIRU M. A. LATHEEF : Sir, it is heartening to note that முற்ப 11-0
there has been a general and continuous increase in sales tax from 1966–67. I offer my heart-felt congratulations to our resourceful Hon. Minister for Revenue for that. An indirect tax like sales tax should not be judged from the point of view of the quantum of revenue received from people but we should see clearly the economic implications, the commercial implications of such a tax measure. Government have given a note stating clearly that there has been an increase in the revenue by way of sales tax.

It is also a sound principle and a desirable principle that while bringing in tax measure or while bringing about a change in the proportion of tax level, the Government should assess its results and effects in the economy of the State or the country, particularly in the economic and commercial field. It has been very unfortunate, I do not blame the Hon. Minister but I do say that the concerned department has not taken proper care to assess as to how any particular tax increase brings about changes in economic and commercial level; this is particularly so important in the case of an indirect tax like sales tax wherein the incidence in the matter of shiftability and in the matter of tax evasion and also in the matter of arbitrary exercise of power by the authorities is great. These are important matters that should be kept in view.

As soon as you levy a particular indirect tax like sales tax, the impression is that businessmen are out to evade. It is assumed that businessmen are so clever to shift the burden imposed upon him to the consumer. No doubt it happens in some cases and not in all cases. Therefore Government must see that incidence of the shiftability, how it affects consumer and whether it will bring about some change in the consumption level. When it affects the consumption level, naturally there will be repercussions on the production level, which will in turn affect the employment level. That will in turn affect the income level. So it has got a vicious circle, I mean the effect of an indirect tax.

Indirect tax has so much economic implications. Because of this incidence of shiftability, Government must give serious consideration to this Government must have a clear picture as to how an indirect tax brings about upon the economy a change in the economic and commercial level. No doubt Government gets its revenue. We must study its effect in other spheres.

There is a complaint that tax evasion is common. What happens is this. Take the case of a person who has got touch with business in a free and competitive market. Take the sale of consumer-goods in day-to-day life. What happens There is competition in the market. Because of competition, the businessman wants to sell as much as possible and whenever price is increased, he sees that his customer does not go to some other place. Therefore he tries to maintain the price level or sees that his price does not go beyond the price that is prevalent generally





in the Market. A successful businessman gets profit by having not only a gap between selling price and buying price but also retaining some amount (I would say substantial amount) from tax collection. His resourcefulness is there.

The incidence of tax an indirect tax has to be studied. There is also the common assumption, general assumption that every businessman is likely to evade tax. That general assumption is not correct. When that is said of businessmen in general, can we not also point out the harassment to which businessmen are put to by sales tax authorities? The incidence of harassment is day by day increasing and there is a general discontentment, abhorrence and resentment among businessman against official harassment. This kind of discontentment should not be there.

There should not be general assumption that businessmen would evade tax always and so there should be searching of accounts, etc. These searches have their effects on the character of business, particularly in the case of small businessmen. Let us see its implications on a nascent economy like ours when we are now only developing. What are its implications on commerce. Hon. Minister for Revenue is a successful businessman and he knows the incidence of indirect taxation and also fluctuations taking place in the market.

I will illustrate. Take Vaniyambadi constituency which is full of tanners. I am personally connected with it. The fluctuation in the market has its implications not only within the country but outside. A small increase in price has its repercussions. One who is a "Kubera" today becomes a "Kuchela" tomorrow. He losess everything. He becomes frustrated. He has no money.

What happens if he close down his business concern and file insolvancy petition in Court? That is the position. He not only closes his business in Madras; but the tannery where hundreds of people are employed at Vaniyambadi is closed and some purchasing centres also where hundreds of people are employed resulting in unemployment. Thus thousands of people are rendered unemployed. Not only this businessman, but his family and other people are also affected. Therefore, my humble request to the Hon. Minister is that in such cases at least

utmost leniency should be shown, utmost understanding should be shown. Those who have been broken down and rendered helpless, who have been affected by fluctuations should be helped.

When this Tax was brought in, our revered Rajaji said it is Kama Dhenu. Of course, it is a Kama Dhenu. But you must not milk it when it is pregnant. Because when a pregnant cow is sought to be milked that cow does not give milk. Therefore, you must allow the cow to have a very safe delivery and then only you can milk it. Many businesses are in the formative stage and at that stage you just try to milk them, you cannot get milk. Therefore, official harassment should be kept in view, the economic development of the country and the commercial development should be kept in view and proper steps be taken to put things in right perspective. Thank you very much.

**மணலி திரு. சி. கந்தசாமி:** துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக விற்பனை வரியை எடுத்துக்கொண்டால் அது கிட்டத்தட்ட வெகுஜன வரி என்று சொல்லக்கூடிய அளவிற்கு நான்கு கோடி மக்களும் ஏதாவது ஒரு தொகையைச் செலுத்துகிறார்கள். இந்த விற்பனை வரி அமைப்பை எடுத்துக்கொண்டால் விற்பனை வரியை நீங்கள் வியாபாரிகளிடமிருந்து வசூல் பண்ணுகிறார்கள், வியாபாரிகள் மக்களிடமிருந்து வசூல் பண்ணுகிறார்கள். ஆகவே இந்த இயந்திரம் பல்வேறு ஊழல்களுக்கு இயல்பாகவே இடம் கொடுக்கக்கூடிய விதத்தில் இருக்கிறது. ஏனென்றால் ஜனங்களிடமிருந்து வசூல் செய்வதில் வியாபாரிகளுக்குப் பல வசதிகள் இருக்கின்றன. வியாபாரிகளில் பலர் கொள்முதலுக்கு, விற்றுமுதலுக்கு வரவு வைக்க மாட்டார்கள். இப்படிப் பல்வேறு விஷயங்களில் வரி ஏய்ப்பு ஏற்படுகிறது என்ற அடிப்படையில்தான் நாங்கள் எப்பொழுதுமே ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கினால் அதிக ஆதாயம் கிடைக்கக்கூடும் என்று சொல்கிறோம். ஏமாற்றுவதைக் குறைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். ஜனங்கள் வரி செலுத்துவதில் தவறில்லை.

ஆனால் வியாபாரிகள் பல்வேறு முனைகளில் ஏமாற்றுவதை மறுக்க முடியாது. வியாபாரிகளைப்பற்றி நான் குறைவாகக் கூறுவதாக எண்ண வேண்டாம். நாணயமான வியாபாரிகள் யாராவது இருந்தால் நான் அவர்களுக்குத் தலை வணங்குகிறேன். ஆனால் இன்றைக்குச் சமுதாயத்தில் பல வியாபாரிகள் நாணயமாக வியாபாரம் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். எனவே ஒருமுனை வரி என்றால் ஏமாற்றுவதற்கு இடமில்லை. மக்களும் திருப்தியாக சர்க்காருக்குக் கொடுப்பது நம்முடைய நன்மைக்குத்தான் என்ற உணர்வோடு கொடுப்பார்கள், எந்தவிதமான தில்லுமுல்லுகளுக்கும் இடமிருக்காது. ஆகவே ஒருமுனை விற்பனை வரியைப் பற்றி நிச்சயம் கவனிக்க வேண்டும். அதனால் வருமானமும் குறையாது.



ஏமாற்றப்படாத அளவில் சுத்தமாக வசூல் செய்ய வேண்டும் என்றால் அது ஒருமுனை விற்பனை வரிதான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவாப்ரேட்டிவ் செக்டாரை எடுத்துக்கொண்டால் அவர்கள் விற்பனை வரியைக் கொடுத்தேயாக வேண்டும். 10 ரூபாய்க்குச் சாமான் வாங்கினால் அவர்கள் கொடுத்தேயாக வேண்டும், ஏமாற்ற முடியாது. ஆனால் 10 ரூபாய்க்கு விற்கும் ஒரு வியாபாரி ஏமாற்றிவிட முடியும். கோவாப்ரேட்டிவ் செக்டாருக்கும், தனி வியாபாரிகளுக்கும் தாரதம்மியம் இருக்கிறது. தனி வியாபாரிகள் கோவாப்ரேட்டிவ் செக்டாரோடு போட்டிபோடும் நிலை இருக்கிறது. இதனால் கோவாப்பரேட்டிவ் செக்டார் பாதிக்கப்படுகிறது. ஏதோ கூட்டுறவு முறையில் நடக்கும் இடங்களில் சலுகை அளிக்கப்படுவதில்லை. எனவே அவைகளுக்குப் பாதுகாப்பு தருவது நல்லதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை

அடுத்தபடியாக, இதிலே சில பண்டங்களுக்கு வரி விதிப்பதில் சாராயத்திற்கும் இருக்கிறது. சாராயத்திற்கு 6 சதவீதம் போட்டிருக்கிறீர்கள். இதை ஜாஸ்தி போட்டால் என்ன, குடியாவது குறையுமே. அப்படிப் போட்டால் வருமானமும் ஜாஸ்தி வரும் 6 சதவீதம் ஒருமுனையில் போட்டிருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டும். சாராயம் குடிப்பதால் லட்சக்கணக்கான மக்களுக்கு உடல்நலம் பாதிக்கப்படுகிறது. திருட்டுத்தனமாகக் குடித்துக்கொண்டிருந்தவர்களெல்லாம் இப்பொழுது பகிரங்கமாகக் குடிக்க ஆரம்பித்துவிட்டதால் டிமாண்ட் ஜாஸ்தி ஆகிவிட்டது, சாராயம் விற்பதற்கு இல்லை என்று ஒவ்வொரு கடைக்காரரும் புகார் சொல்கின்ற அளவில் இருக்கிறது. கிராக்கி அதிகமாக இருப்பதால் விற்பனை அதிகமாகும் என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். எனவே இதில் வரியை இன்னும் தூக்கிப்போட்டால் தேவலாம். இதற்கெல்லாம் வரியை அதிகப்படுத்தி சாதாரண சாமான்களுக்கு ஒருமுனை விற்பனை வரியாகச் செய்தால் ஊழல் குறையும், நியாயமான வியாபாரிகளுக்கும் திருப்தி ஏற்படும். நியாயமான வியாபாரிகளுக்குச் சர்க்கார் இடம் கொடுக்கிறது என்ற திருப்தியேற்படும். இந்த அடிப்படையில் நாம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Chairman, I wish to offer a few remarks in support of the cut motion moved on behalf of my party.

I wish to refer to four important points. Firstly, Government must realise that this is a major source of revenue. Proper methods should be adopted to have optimum level of tax. I have been saying this often but nothing has been done. Optimum level of tax should be fixed which will yield maximum results with the minimum torture to the customers as well as merchants. Such a method should be evolved. In other words, the total revenue that we get

could be increased if optimum level of tax is fixed. By reducing the tax on individual goods, we can increase the turn-over and we can reduce the paying-resistence and thereby we can increase the quantum of money that will become available to the Government.

The present method is ultimately going to result in serious inflationary trend. I wish to give an example. Multi-point sales tax is levied. That according to my calculation is about 14 per cent of tax is collected on every goods that comes out of the manufacture. And 7½ per cent is collected before production. At three stages at 2½ per cent tax is collected and the yield of sales tax before production of the material is 7½ per cent. After production it will yield a tax of 14 per cent and the total taxation will be to the tune of 21 per cent; in other words, the tune of 21 per cent increase enhances the price of the goods. Again the total increase will be inflation of article A plus article B, that is a combined inflation. My point which I would earnestly request the Hon. Minister to consider is how far we can limit the inflationary trend that the sales tax will inflict on goods. I know he has constituted a Committee and I am also a member of that Committee. There was may give suggestions. This can be passed on there and a decision taken. That is point one.

he second point which I would like to refer to is with regard to prohibition, about which the hon. Member, Thiru Manali Kandaswami has also referred. Sir, the scrapping of prohibition would give a large quantum of revenue and the ex-minister, Thirumathi Jothi Vencatachellum also knows about it. Because prohibition was introduced the sales tax was introduced. On that account, nobody can argue that since prohibition has been scrapped sales tax should be removed. I know the difficulties of the Government in that regard, and whether we belong to the Opposition or the Ruling Party we have to speak with one voice. But whether tax concession cannot be given because of the removal of prohibition and whether the Government cannot think in terms of reduction in tax with regard to certain basic utility products like foodstuffs The Government can consider whether they can reduce the tax or practically remove it. The hon. Member, Thiru K. M. Subramaniam also wanted that the food articles ' Azhugum Porul ' like Iddli should be exempted from the sales tax. So, I request the Government to consider this aspect of the matter.



Sir, recently the Central Budget has been presented and they have taxed kerosene. Even the leader of the D.M.K. Party in the Parliament has mentioned it in the Parliament that it is not correct to tax it and I fully share his views on the subject. According to me it is a utility product and not a food product. It is an essential consumer's item which the poor people use. So, I want to know whether it is not possible for the Centre and the State to co-ordinate their action and do something to reduce or remove the tax on foodstuffs.

Then I come to the harassment of assessees by Sales Tax officials, to which my distinguished friend, Thiru Latheef also has referred. He mentioned Vaniyambadi, his constituency, in that regard. I also represent Thiru Latheef in the Assembly in the sense that all the products manufactured at Vaniyambadi are coming to Periamet as finished products for sale. My hon. Friend, Thiru Latheef also knows that harassment of all types take place....

(Thiru K. M. Subramaniam: Sr? May I know when Thiru Latheef has become his fried?)

Mr CHAIRMAN (Thiru S. KANDAPPAN): I am afraid the hon. Member is not in his seat.

Thiru K.M. SUBRAMANIAM: Sir, I am sorry.

Dr. H. V. HANDE: Thiru Latheef is always my friend. The Hon. Minister is also my friend.

A number of persons have given complaints to me. I had also drawn attention to it last year and even before last year . . .

(Mr. Chairman sounded the gong).

Sir, I will finish my speech soon.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): The hon. Member is dilating . . .

Dr. H. V. HANDE: Certainly I am dilating on this point because it is a very important matter affecting my constituency. But I am not digressing.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): The hon. Member has got to observe the constraint of time . . .

Dr. H. V. HANDE : Sir, I am the only person who is speaking on behalf of my party. I do not want any indulgence from the Chairman or for that matter from anybody. I fight for my rights.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN) : There is the time factor you have to take into account.

Dr. H. V. HANDE : I have almost come to the point . . .

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN) : Why does the hon. Member get angry? I have sounded the gong only to warn him that he can take a few minutes more and finish his speech.

Dr. H. V. HANDE : I will take only one more minute.

I come to the next point. I want to know whether it is possible for the Government to examine the request of the persons dealing in hides and skins that they should be shown some concession with regard to dressed and undressed skins.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பதப்படுத்தப்பட்ட தோலுக்கும் பதப்படுத்தப்படாத தோலுக்கும் போடப்பட்டிருக்கும் வரிகளைப் பற்றிச் சலுகை காட்ட முடியாதா என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒருமுனை வரிதான் விதிக்கப்பட்டிருக்கிறது. பதப்படுத்தப்படாத நிலையில் வரி கட்டிவிட்டால் பதப்படுத்தப்பட்ட பிறகு வரி இடையாது. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தால் வரியே இடையாது. மொத்தமாகச் சேர்த்துச் சொல்வதானால் அவர்கள் யாருமே வரி கட்டாமல் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

Dr. H. V. HANDE : So I cannot talk on the subject.

Sir, earlier I was speaking about the harassment of the assessees. I want to know whether it is not possible to re-organise the entire department and whether it is not possible to fix the number of assessees per officer and try to finish the assessment quickly as is done in the Income-tax Department. Also whether it is not possible to appoint a high official to go into the matter ?

Then I come to another important matter. I want to know whether it is not possible for the Government to provide more comforts or facilities for the assessees. I know that it iis a financial commitment to the Government but I feel that the assessees should be helped to the maximum extent.



**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது தோல் வியாபாரிகள் அனைவரும் வரி கட்டாமல் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படி அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றது போடப்பட்ட விற்பனை வரியை எதிர்த்துச் சென்றிருக்கிறார்களா அல்லது விற்பனை வரி வசூலிக்கக்கூடிய ஆபீசர்கள் அவர்களுடைய பதனிட்ட, பதனிடப்படாத தோல்களையும், வேய்யிங் மெஷின்களையும் எடுத்துக் கொண்டு போய்விட்ட காரணத்தால் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மெஷின்களை எடுத்துச் சென்றதற்காக கோர்ட்டுக்குப் போகவில்லை.

They have questioned the right of the Government in taxing hides and skins before they are tanned. When it is exported, it is completely exempted. They are frequently going to the court.

ஒவ்வொன்றிலும் அரசாங்கம் வெற்றி பெற்றவுடன் தலைமைச் செயலகத்திற்கு வருகிறார்கள். சமரசத்திற்கு ஒத்துக்கொண்டு செலுத்துகிறார்கள் உடனே அடுத்த பாயிண்டுக்கு நீதிமன்றம் போகிறார்கள். ஸ்டே பெறுகிறார்கள். இரண்டு ஆண்டு காலமாக நாம ஒவ்வொரு பாயிண்டிலும் வெற்றிபெற்று வருகிறோம். அவர்கள் மறுபடியும் மறுபடியும் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். பணத்தைக் கட்டுங்கள் என்று சொன்னால், பழைய பாக்கியைத் தவணையில கட்டுகிறோம் என்று சொல்லி ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் உடனே நேராக வீட்டுக்குக்கூடப் போகாமல நீதிமன்றத்திற்குப் போய் வழக்கு போடுகிறார்கள்.

Thiru M. A. LATHEEF : Sir, I fully agree with the Hon. Minister. In most of the cases the assessees preferred appeals with regard to levy of Inter-State Sales Tax and also the quantum and nature of assessment. It is not as if they do not want to pay the tax. My submission to the Hon. Minister is that when foreign trade is involved—a great amount of risk is involved—some leniency must be shown. I do not plead that it should be exempted. That is all.

The Hon. Thiru P. U. SHANMUGAM : Once it is exported it is completely exempted from tax. We do not tax it at all. So there is no problem.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN) : Before I call the next hon. Member to speak, I have to inform the House that the hon. Member, Dr. Hande has asked me to allot five minutes for

[1972 மார்ச் 24 [Mr. Chairman]

him to speak. I have given him 12 minutes. We are not at the mercy of any Member or Minister or Chair but we have to function according to the basic rules. That is the only point.

முற்பகல் 11-30 Thiru Narasimhan will now speak.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி மானியத்தின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொது விற்பனை வரியின் மூலம் அரசுக்கு 105 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதில் கலால் விற்பனை வரியினால் 35 கோடி கிடைப்பது போக மிச்சம் 70 கோடி ரூபாய்தான் இதிலிருந்து வருகிறது என்பது பொருள். 1966–67-ல் 2½ சதவீதம் என்றிருந்தபோதிலும் இந்த விற்பனை வரியின் மூலம் ரூ. 50 கோடி கிடைத்தது. இன்றையதினம் 3½ சதவிகிதம் என்று சொல்லும்போது 70 கோடி கிடைக்கிறது பர்சன்டேஜ் உயர்ந்திருக்கிறது, அதற்கேற்றாற்போல்தான் வருமானம் உயர்ந்திருக்கிறதே தவிர வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்துவிட்டோம், வரி ஏய்ப்புகளைத் தடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதிலும் வியாபாரிகளை மிகவும் தரக்குறைவாக சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். எந்த அரசியல்வாதியை எடுத்துக்கொண்டாலும் வியாபாரிகள் என்றால் திருடன் என்று சிலபேர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வியாபாரிகளில் ஒருசிலர் தவறு செய்திருக்கலாம். ஆனால் அதற்காக அவ்வளவு பேர்களும் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்துவிடுமா?

இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் தருகிற வியாபாரிகளைப் பற்றி தவறாகச் சொல்கிறார்களே தவிர பலவேறு துறைகளில் பல பேர்கள் இன்று வரி ஏய்த்து வருகிறார்கள். நான் சொல்வது சிலருக்கு வருத்தமாக இருக்கலாம். ஆனால் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று எவ்வளவோ வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வாங்கக்கூடிய வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அதுமாதிரி நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் பெறக்கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு வழக்கறிஞர்கள் இன்று வருமான வரி கட்டுகிறார்கள்? எவ்வளவு டாக்டர்கள் இன்று வருமான வரி கட்டுகிறார்கள்? எவ்வளவு கட்டுகிறார்கள் அவர்கள்? அவர்கள் கணக்குகளை சரியாக வைத்துக்கொள்கிறார்களா? அவர்களை எல்லாம் விட்டுவிடுகிறார்கள். ஆனால் வியாபாரிகளை திருடர்கள் போன்று கருதிக்கொண்டு பலர் இன்று பேசி வருகிறார்கள். நான் எல்லா அரசியல்வாதிகளையும் கேட்டுக்கொள்கிறேன், தயவுசெய்து இப்படிப்பட்டதொரு மனப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று. வியாபாரிகளை தயவுசெய்து இனிமேல் திருடர்கள் என்று சொல்லாதீர்கள். தமிழ்நாட்டிற்கு, நம் அரசுக்கு பெரும் வருமானத்தைத் கொடுக்கக்கூடியவர்கள் வியாபாரிகள். அப்படிப்பட்ட வியாபாரிகளை நாம் தரமாக நடத்த வேண்டும்.



1972 மார்ச் 24] [திரு ஏ. சி. நரசிம்மன்]

இன்றையதினம் விற்பனை வரி இலாகா அதிகாரிகள் திடீர் திடீரென்று இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்கள். செய்யட்டும், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதனால் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பதைப் பார்க்கும்போது அப்படிக் கிடைத்திருக்கக்கூடிய வருமானம் 1½ கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 1½ கோடி ரூபாய்க்காக இவ்வளவு பெரியதொரு சமுதாயத்தை தொல்லைக்கு ஆட்படுத்த வேண்டுமா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

சில வியாபாரிகள் ஒருமுனை விற்பனை வரி வேண்டுமென்று சொல்கிறார்கள், சிலர் வேண்டாமென்று சொல்கிறார்களே என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆகவே நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் வியாபாரிகள், அரசாங்கம், அதிகாரிகள் கொண்ட ஒரு முக்கூட்டு மாநாடு ஒன்றைக் கூட்டி எந்தமுறையில் இனிமேல் வரிவிதிப்புகள் இருக்கவேண்டும் என்று ஆலோசித்துப் பார்த்து இப்போதுள்ள சட்டத்தை மாற்றியமைத்திட வேண்டும். முக்கூட்டு மாநாடு ஒன்று நடத்தி அதன் முடிவுகளின்பேரில் இங்கு சட்டமன்றத்தில் ஒரு வொயிட் பேப்பர் வைத்து புதிய ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எக்ஸெம்ஷன் லிமிட் கொடுத்திருக்கிறார்கள். 20,000 ரூபாய் என்று கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 20,000 ரூபாய் என்று கொடுத்திருக்கக்கூடும். விற்பனை வரி அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் சென்ற ஆண்டு ரூ. 20,000 என்றால் இந்த ஆண்டில் எப்படியாவது கணக்கில் கூட்டிப் பார்த்து 25,000 ரூபாய் என்று போட்டுவிட்டு வரி விதிப்பதில்தான் சண்ணும்கருத்துமாக இருக்கிறார்கள். இன்கம் டாக்ஸில் என்ன செய்கிறார்கள் என்றால் ஒருவருக்கு 10,000 ரூபாய் வருமானம் வருகிறது என்றால் அதில் எக்ஸெம்ஷன் லிமிட் ரூ. 5,000 என்றால் அந்த முதல் 5,000 ரூபாய்க்கு வரி கிடையாது. அடுத்த 5,000 ரூபாய்க்குத்தான் வரி போடப்படுகிறது.

அதுபோல் டேர்ன் ஓவர் 30,000 ரூபாய் என்றிருந்தால் 25,000 ரூபாய் டேர்ன் ஓவருக்கு எக்ஸெம்ஷன் கொடுத்துவிட்டு மீதியுள்ள 5,000 ரூபாய்க்குத்தான் வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கம்பவுண்டிங் இப்போது ஒரு லட்சம் என்றிருப்பதை 2 லட்சமாக உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தினால் வியாபாரிகளுக்கு தொல்லையில்லாமல் அவர்கள் வரி கட்டமுடியும். உங்களுக்கும் பலபேர்கள் கணக்குகளை சரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்க்கும் பிரச்னையும் குறையும். ஆகவே இந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், அப்பீல் என்று வரும்போது ட்ரிப்யூனலுக்குப் போகிறார்கள். அங்குகூட அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் கீழே இருந்து வருவதை கொஞ்சம் குறைத்துப் போடுகிறார்கள். இல்லையென்றால் வருமானம் குறைந்துவிடுமே என்று நினைக்கிறார்கள். ஆகவே, இந்த ட்ரிப்யூனலில் ஒரு வியாபாரியும் இருக்க வேண்டும். ஒரு நீதிபதி, ஒரு அதிகாரி, ஒரு வியாபாரி என்றிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ட்ரிப்யூனலில் இப்போது நீதிபதிதான் இருக்கிறார்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** நான் கேட்டுக்கொள்வது மூவர் கொண்டதொரு ட்ரிபியூனல் அமைய வேண்டும். அதில் ஒரு வியாபாரியும் இருந்தால் வியாபாரிகளுக்கு வேண்டிய நீதி கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதையும் கவனிக்க வேண்டும்.

பின்னர் 13 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று போடுவதால் என்ன நடக்கிறது என்றால் இங்குள்ளவர்கள் கூட ஆந்திராவிற்குச் சென்று லாரிகளையும் பஸ்களையும் வாங்குவதில் ஈடுபடுகிறார்கள். காரணம் அங்கு வரிகள் குறைவாக இருக்கின்றன. அங்கு 12 சதவிகிதம் என்றிருக்கிறது. எனவே அங்கிருந்து வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக நமக்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் குறைகிறது. ஆகவே 12 சதவிகிதத்துக்கு மேல் போகாது பார்த்துக்கொள்ளவேண்டும். என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அனுதாபத்தோடும் பரிதாபத்தோடும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பந்தய வரி பற்றி அருமை நண்பர் ராஜா அவர்கள் நன்கு பேசினார்கள். கடன் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள். யாருக்கு குதிரைகள் வாங்க கடன் கொடுக்கிறார்கள்? தங்களுக்கு யார் வாக்குகள் அளிப்பார்களோ அவர்களுக்குத்தான் கடன் கொடுத்து ஸ்டூவேர்ட்ஸாக ஆவதற்குக் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர கடன் கேட்பவர்கள் அத்தனைபேர்களுக்கும கடன் கொடுப்பதில்லை. ஆகவே அங்கு நடக்கும் பல ஹம்பக்ஸ் காரணமாக குதிரைப் பந்தைய சங்கத்தை அரசே ஏற்று நடத்தினால் இரண்டு கோடி ரூபாய் அல்ல மேற்கொண்டும் அதிகப்படியான வருமானம் கிடைக்கும் அரசுக்கு. மூன்று கோடி ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து அதை நாட்டுடமை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, விற்பனை வரி மானியக் கோரிக்கையின் மீது உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை நான் கேட்டுக்கொண்டிருந்து பதில் அளிக்கிறேன். எந்தக் கருத்தும் விடுபடாது என்று நினைக்கிறேன். ஏனெனில் குறைவான உறுப்பினர்கள்தான் கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் குறை இல்லை என்று மட்டும் தெரிகிறது.

குறை இல்லாத ஒரு இலாகா, ஆனால் நிறைய சம்பாதித்திருக்கிற ஒரு இலாகா இந்த விற்பனை வரி இலாகா. துவக்கத்தில் இந்த இலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு, இந்த இலாகாவில் பணியாற்றி அகால மரணமடைந்த திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நான் அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பொதுவாக, பேசிய உறுப்பினர்கள் எல்லாம் வியாபாரிகள் மீது அதிகமாகக் கொடுமை செய்யக்கூடாது, ஹாரஸ்மெண்ட் கூடாது என்று வற்புறுத்திச் சொன்னார்கள். அதேபோல் எங்கும் நடப்பதாக இல்லை. சிற்சில இடங்களில் தவறுகள் நடக்கலாம். ஒரு பெரிய இலாகா, 100 கோடி ரூபாய் வருமானம் வரும் ஒரு இலாகாவில் ஆங்காங்கு சில தவறுகள் நடக்கக்கூடும். அதையெல்லாம் அரசாங்கம் கவனித்து நிச்சயம் அவைகளை நிவர்த்திப்பதற்கு என்ன வழி என்று யோசிக்கலாம். நண்பர் நரசிம்மன் அவர்கள் பேசும்போது முக்கூட்டு மாநாடு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே அட்வைஸரி கமிட்டி வைத்திருக்கிறோம். அதிகாரிகள், அரசாங்கம், வியாபாரிகள் இவர்களைச் சேர்த்துத்தான் அட்வைஸரிக் கமிட்டி வைத்திருக்கிறோம். அந்தக் கமிட்டி ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை கூடுகிறது.

சட்டச் சிக்கலைப் பற்றி யோசிக்கிறோம். ஆலோசித்துப் பார்க்கிறோம். அந்தக் குழு செய்கிற சில சிபார்சுகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நல்ல பெயர் வாங்கிக்கொண்டு இந்த இலாகா பணியாற்றுகிறது என்று தெரிவித்துக்கொள்வேன். நண்பர் நரசிம்மன் அவர்கள் வருத்தப்பட்டார்கள், வியாபாரிகளைத் திருடர்கள் என்று எல்லோரும் நினைக்கிறார்கள் என்று. யாருமே அப்படி நினைக்கவில்லை. அரசாங்கமும் நினைக்கவில்லை, அதிகாரிகளும் நினைக்கவில்லை. ஏன் அப்படி நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்? வியாபாரிகள் நல்லவர்கள். அவர்களாகப் பார்த்துத் தான் அரசாங்கத்திற்கு 100 கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்திருக்கிறார்கள். யாரோ சில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள். எல்லா வியாபாரிகளையும் அரசாங்கம் குற்றம் காணாது. சில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்று நண்பர் லத்தீப் அவர்கள்கூட ஒப்புக்கொண்டார்கள். சில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள்.

நண்பர் லத்தீப் அவர்கள் ஒரு வாதத்தைச் சொன்னார்கள். இந்த தோல் பொருள்களின் மீது வரி போடுவதன் காரணமாக விலைகள் உயர்ந்து, அதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு, வாணிபம் பாதிக்கப்பட்டு, இப்படி நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

இந்த விற்பனை வரி இலாகாவிலே கொடுத்திருக்கும் புள்ளிவிவரத்தை பார்க்கிறபோது எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களேதவிர எந்த அளவுக்கு வாணிபம் பெருகியிருக்கிறது என்று சொல்லவில்லைஎன்று குறிப்பிட்டார்கள். இந்த இலாகாவின் மொத்த வருமானத்தைப் பார்க்கிறபோது எந்த அளவுக்கு வாணிபம் பெருகியிருக்கிறது என்பது நிச்சயமாகத் தெரியும். வாணிபம் பெருகியதால் தான் அதிக வருமானம் வந்திருக்கிறது. வரி உயர்த்தியதால் வருமானம் அதிகமாகியிருக்கிறது என்று சொல்வது தவறான கருத்தாகும். வரி உயர்ந்தது என்று சொன்னால், சென்ற ஆண்டுதான் உயர்த்தினோம், 3% லிருந்து 3½% ஆக சென்ற ஆண்டுதான் உயர்த்தினோம்,

THIRU M. A. LATHEEF : The amount of tax that is given in the official statement does not necessarily indicate increase in trade level. Squeezability of the tax is there and with elasticity and squeezability, tax level gets changed. Therefore along with the official statement, a statement pertaining to trade development may also be useful not only to legislators but also to commercial and economic field.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வியாபார வளர்ச்சி, இதனால் நாட்டில் ஏற்பட்டு இருக்கிற வளர்ச்சிகளை இந்த வணிக வரி இலாகாவின் மூலமாகத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், இருக்கிற ஒரே வழி வரியின் மூலமாக கிடைத்து இருக்கும் வருமானத்தை வைத்துத்தான். 100 கோடி ரூபாய்க்கு மேல் இந்த அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னால் ஏறத்தாழ 103 கோடி வந்திருக்கிறது—இந்த ஆண்டு 106 கோடி வரும் என்று நிதிநிலை அறிக்கையில் கணக்கு எடுத்து இருக்கிறோம்—நிச்சயமாக 106 கோடி வசூல் செய்யப்படும் என்று கருதுகிறோம். சென்ற ஆண்டு 96 கோடி, இந்த ஆண்டு 106 கோடி என்றால் 10 கோடி அதிகமாகியிருக்கிறது என்று சொன்னால்—வியாபாரம் பெருகியதால் இது வளர்ந்திருக்கிறதே தவிர, வாணிபம் பெருகியதால் ஏற்பட்டிருக்கிறதே தவிர வியாபாரிகளை கசக்கிப் பிழிந்ததால் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது எங்கேயாவது இந்த இலாகாவினர் வியாபாரிகளை கசக்கிப் பிழிந்தார்கள் என்று சொன்னால், தவறு நடந்திருந்தால், அதைச் சுட்டிக்காட்டலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

பொதுவாக நாட்டில் வரி அதிகமாகப் போட்டுவிட்டார்கள் என்று பேசுகிறார்கள். வரி அதிகமாகப் போட்டிருப்பது என்று சொல்வது விற்பனை வரியை 3·/.லிருந்து 3½ உயர்த்திருக்கிறோம் சர்சார்ஜ் 5·/., அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் 5·/., அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் ரூ. 10 இலட்சத்திற்கு மேல் விற்று முதல் உள்ள வணிகர்கள் மீது 5·/., (இது மோட்டார் ஸ்பிரிட் போன்றவற்றின் மீது) போடப்பட்டிருக்கிறது. மொத்தமாக அரசாங்கம் போட்ட புது வரியின் மூலமாக கிடைத்து இருக்கும் வருமானம் ரூ. 6½ கோடியாகும்.

**திரு கே. டி. கே. தங்கமணி :** இந்த 5·/. சர்சார்ஜ் போட்டதால் எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது? அதில் எவ்வளவு நகர முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** இந்த இலாகாவின் மொத்த வருமானத்தையே நாட்டின் முன்னேற்றத்திற்குத்தான் செலவு செய்து கொண்டுவருகிறோம்.

**திரு கே. டி. கே. தங்கமணி :** சென்ற ஆண்டு இந்த 5·/· சர்சார்ஜ் சென்னை, மற்ற பெரிய நகரங்களுக்குப் போடப்பட்டபோது அந்த சர்சார்ஜிலிருந்து வரும் வருமானம் அந்த நகரத்தின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். அதனால் அந்த 6½ கோடி ரூபாயில் எந்த அளவுக்கு செலவு செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்து இருக்கும் வருமானம் ரூ. 205·66 லட்சமாகும். சர்சார்ஜ் ஆன சேல்ஸ் டாக்ஸ் (மோட்டார் ஸ்பிரிட்) மூலமாக கிடைத்தது ரூ. 122·97 லட்சமாகும். மல்டி பாயிண்ட் டாக்ஸ் 3·/.லிருந்து 3½./ மூலமாக கிடைக்கும் வருமானம் ரூ. 271·38 லட்சமாகும். அடிஷனல் சர்சார்ஜ் ஆன் எண்டர்டைன்மெண்ட், பெட்டிங் டாக்ஸ், இப்போது புதிதாக போடப்பட்டிருக்கும் பங்களா தேஷ் நிதிக்காக போடப்பட்டிருப்பது, மூலம் கிடைப்பது ரூ. 48·6 லட்சமாகும். மொத்தமாகச் சேர்த்து ரூ. 6½ கோடிக்கும் அதிகமாக வருமானம் வருகிறது. வரி அதிகமாகப் போட்டு விட்டதால் வருமானம் பெருகியிருக்கிறது என்று சொல்வது சரியல்ல, வரி உயர்த்தியதால் தான் வருமானம் அதிகமாக வந்திருக்கிறது என்று திரு. நரசிம்மன் அவர்கள் சொன்னார்கள். பல நடவடிக்கைகளை மேற்கொண்டு மறைக்கப்பட்ட கணக்குகளை கண்டுபிடித்து அவர்கள் மீது வரி போட்டு இருக்கிறோம்.

பொதுவாக உங்கள் எல்லோருக்கும் தெரியும், அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும், தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த அரசாங்கம் ரொம்பவும் சலுகை காட்டிவருகிறது. பலதரப்பட்ட தொழிற் போராட்டங்களால் தொழில் பாதிக்கிறது. தொழிலாளர்களுக்காக நன்மை செய்கிற நோக்கத்தில் நாட்டின் உற்பத்தி பாதிக்காத அளவுக்கு தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டும். தனிப்பட்ட கட்சிக்காகச் சொல்லவில்லை. நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிச் சொல்கிறேன். நீங்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், நாட்டில் ஏற்பட்ட தொழிற் போராட்டங்கள் காரணமாக நமக்குவரும் வருமானம் குறைந்திருக்கிறது போராட்டங்கள் ஏற்படக்கூடாது என்று சொல்லவில்லை இப்படிப் போராட்டங்கள் ஏற்படுவதால் நமக்கு வரும் வருமானம் விற்பனை வரி எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தை, கணக்கை எடுக்கச் சொன்னேன். அந்தப் புள்ளி விவரங்களைப் படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போராட்ட நேரங்களில் நாட்டின் உற்பத்தி எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது, நாட்டின் விற்பனை வரி எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது, பொருளாதாரம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை தொழிற்சங்கத்தலைவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெக்ஸ்டூல் ஸ்டிரைக் மூலம் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கும் இழப்பு ரூ. 65 லட்சம். பணியன் பாக்டரியில் ஏற்பட்ட இழப்பு ரூ. 7 லட்சம் சிம்சன் குரூப் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட இழப்பு ரூ 22·9 (23·00) லட்சம். கோ-ஸ்லோ பாலிசி இன் தி அசோக் லேலண்டு மூலமாக இழப்பு ரூ. 15½ லட்சம் ஸ்ட்ரைக் இன் தி சுகர் பாக்டரி ரூ. 2·14 லட்சம். நெய்வேலியில் இருக்கும் உரத் தொழிற்சாலை மூடப்பட்டதால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 6 லட்சமாகும். மொத்தம் ரூ. 1,20,000 லட்சம் அரசுக்கு இந்த வேலை நிறுத்தங்களினால் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. வரவேண்டிய வருமானம் அரசுக்கு வரவில்லை. இவ்வளவு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள்

மீ ா குறை சொல்லவில்லை. இப்படிப்பட்ட வேலை நிறுத்தத்தால் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பை அங்கத்தினர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** மாண்புமிகு அமைச்சர் காட்டிய கணக்குப்படி இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் காட்டிய கணக்கு சரி. இதனால் வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள். பெரும் வியாபாரிகள் அதிகமாக பாதிக்கப்படுவது இல்லை. சிறிய வியாபாரிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். சிறு வியாபாரிகளுக்கு இப்போது நீங்கள் விதிவிலக்கு கொடுத்திருப்பது ரூ. 25,000. இது மிகவும் குறைவு. காரணம் ரூ. 25,000 ஒரு ஆண்டு காலத்தில் செய்வது என்று சொன்னால் அது ரொம்பச் சாதாரணம். அதிலே ஒரு சிறு திருத்தம் கேட்கிறேன். தயவு செய்து ரூ 25,000 என்று இருப்பதை ரூ. 30,000 என்று உயர்த்தித் தர வேண்டும். அவர்களுக்கு கணக்கு வைக்கத்தெரியாது. சிலர் ஒழுங்காக வைத்து இருக்க மாட்டார்கள். ஆகவே, இதை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில் ரூ. 10,000 வரைதான் வரியில்லாமல் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனபிறகு ரூ. 15,000 வரை வரி இல்லை என்று அதை உயர்த்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் வந்தசற்குப் பிறகு அதை ரூ. 25,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கனவே ரூ. 50,000 வரை காம்பௌண்ட் செய்யலாம் என்று இருந்ததை, ரூ. 75.000 என்று உயர்த்தப்பட்டது. இன்று அது ரூ. 1 லட்சம் என்ற அளவுக்கு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த வரம்பை உயர்த்தியதன் மூலம் சிறு வியாபாரிகளுக்கு சலுகை அளித்ததன் மூலம், காம்பௌண்டிங் டாக்ஸ் அளவு உயர்த்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு ஏறக்குறைய ரூ. 40–45 லட்சமாகும். இவ்வளவு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் ரூ. 25,000, என்பதை ரூ. 30,000 என்று உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது அப்புறம் ரூ. 30,000லிருந்து ரூ. 35,000 ஆக்கவேண்டுமென்று சொல்வார்கள். இப்படி போய்க்கொண்டேயிருக்கும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** பேரறிஞர் அண்ணா அவர்கள் ரூ. 15,000-க்கு உயர்த்தினார்கள். கலைஞர் அவர்கள் காலத்தில் ரூ. 30,0 0-க்கு உயர்த்தியதாக இருக்கட்டும். தயவுசெய்து ரூ. 30,000-க்கு உயர்த்திக் கொடுத்து சிறு தொழில்களுக்கு ஆக்கம் கொடுக்கவேண்டும். சிறு வியாபாரிகள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். பல துறைகளிலும் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். சரியானபடி கணக்கு வைப்பதில்லை. அதிகாரிகள் போய் தொல்லைகள் கொடுக்கிறார்கள். ஏதோ அவர்கள் ஏமாற்றுவதாகக் கருதுகிறார்கள். கூட ரூ. 5,000 சேர்க்கவேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, திடீரென்
அறிவிப்பதற்கு இயலாது. வரிச் சலுகை கொடுக்கவேண்டுமென்
கேட்பதிலே தவறு இல்லை. அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய இழப்
எவ்வளவு என்பது பற்றிக் கணக்கிடப்படவேண்டும். இந்த ஆண்
ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் அது சாத்தியம் அல்
என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் நிறையச் சலுகைகள் அளிக்கவேண்டுமென்
சொன்னார்கள். பல அங்கத்தினர்கள் இந்த இலாகாவில் டாக்
கன்செஷனைப் பற்றி தெரிவித்தார்கள். உணவுப் பொருள்களுக்கெல்லா
வரிவிலக்கு அளிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். ஏற்கனவே சி
உணவுப் பொருள்களுக்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எ
எதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால், அரிசி, நெ
இவைகளுக்கெல்லாம் வரி கிடையாது.

அதேபோல் சோளம், கம்பு இவைகளுக்கெல்லாம், மில்லெட்ஸ்-க்
வரி கிடையாது. இப்பொழுது இருக்கிற வரி, கோதுமைக்கு மட்டு
ஒரு பெர்செண்ட் வரி இருக்கிறது. எண்ணெய், பருப்புக்கு வ
இல்லையா என்று கேட்டால் வரி இருக்கிறது. இந்த வரிகளையெல்லா
நீக்க முடியுமா என்றால், இப்பொழுது நீக்குவதற்கு இல்லை. ஆனா
பொதுவாக 1967-க்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்
பிறகு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகள், ஏறக்குறைய 107 பொரு
ளுக்கு வரிச் சலுகைகளும், வரி விலக்குகளும் அளித்திருக்கிறோ
நிறைய புள்ளி விவரங்கள் இருக்கின்றன. தேங்காய்க்கு மட்டும் விலக்
அளித்திருப்பதன் மூலம்......

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கள்ளுக்கு வரிவிலக்கு அளிக்கப்ப
டிருக்கும்பொழுது, எல்லா உணவுப் பொருள்களுக்கும் வரிவிலக்
அளிப்பது பற்றி அரசாங்கம் ஏன கஷ்டப்படவேண்டும் ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** கள்ளுக்கு வரிவிலக்கு அளி
வில்லை. வரி போடவில்லை. அதில் சில கஷ்டங்கள், சில சிரமங்க
இருக்கின்றன. சாராயம் எங்கே உற்பத்தியாகிறதோ அங்கே கண
எடுத்து வரியைப் போடலாம், அதே போல மரத்திலிருந்து கள் இ
கும்பொழுது, மரத்தைக் கணக்கு எடுத்து வரி போடவேண்டும். அ
பற்றி பிறகு யோசிக்கலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் தெ
வித்திருக்கிறார்கள். அம்மையார் சொல்வதை இந்த அரசாங்கம் தட்
தில்லை. பஸ் லீலிங் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார், உட
கொண்டுவந்தோம். இப்பொழுது கள்ளுக்கு வரிபோடவேண்டுமென்
சொல்லுகிறார், பார்ப்போம், அதையும் யோசிக்கலாம் என்று தெரிவித்
கொள்கிறேன்.

நிறைய வரிச் சலுகைகள் அளித்திருக்கிறோம். திரு லத்தீப்கூட செ
ன்னார்கள். வரி போடுவதால் பொருளின் விலைகள் கூடாதா என்று கேட்கப்
பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு கே. எம். சுப்பிரமணியம்
அவர்களும் தெரிவித்தார்கள். "ஹோட்டல்களுக்கு நீங்கள் வரி போடுவ
தால் விலைகளெல்லாம் அதிகரிக்கிறது" என்று சொன்னார்கள். இட்லி

விலையைக் குறைப்பதற்கு வரி போடக்கூடாது என்று சொன்னார்கள். தேங்காய்க்கு இருந்த வரியை நீக்கியதனால், அதன் விலை குறைந்ததா என்றால் விலை குறையவில்லை. தேங்காயின் மீதுள்ள வரி நீக்கத்தால் அரசாங்கத்திற்கு ரூ. 25 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதே தவிர, அதனால் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்பட்டதா என்றால், நிச்சயம் இல்லை. அதே போலத் தான் ஹோட்டல்களுக்கு வரி விலக்கு அளித்தால், பொருள்களின் விலை குறையுமா என்று கேட்டால், நிச்சயம் குறையாது. மக்களுக்கு நன்மை ஏற்படுமா என்றால், இல்லை. ஆகவே, வரி விலக்கு அளிப்பது என்பது இயலாத காரியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விலை கூடிவிட்டது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் புள்ளிவிவரம் கொடுத்தார்கள். ஏறக்குறைய 21% பொருள்களின் விலை கூடியிருப்பதாகக் கணக்குப் போட்டு சொன்னார்கள். எத்தனை மல்டி பாயிண்டு, எத்தனை முறை பெருக்கினாரோ தெரியாது. எத்தனையோமுறை பெருக்கிக் கணக்குப் போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அத்தனை முறை எங்களுக்கு வரி வருவது இல்லை. அதிகமாக வந்தால் மூன்று பாயிண்ட்ஸ், மூன்று முனைகளில்தான் வரி வருகிறது. மல்டி பாயிண்டு என்ற பெயராலே அதிகமாக பெரும்பாலும் இரண்டு முனைகளில தான் வரி வசூலிக்கிறோம். ஏதேனும் சில பொருள்கள் சம்பந்தப்பட்ட வரையில் மூன்று பாயிண்டுகளில் வரி வருமே தவிர, 21 சதவிகிதம்....

டாக்டர் எச். வி. ஹாண்டே: ப்ரொடக்ஷன் ஆகும்பொழுது, ரா மெட்டீரியல் மூன்று தடவைகள், அதற்குப் பிறகுப்ரொடக்ஷன் பாயிண்டு வரும் பொழுது, மார்க்கெடிங்குக்கு வரும்பொழுது என்று சொன்னேன் ......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்கு சட்டம் இருக்கிறது. ஒரு பொருள் இன்னொரு பொருளாக உரு மாறும்பொழுது, அது வேறு பொருளாகக் கருதப்படும். நாம் போட்டிருக்கிற சட்டத்தில் அம்மாதிரி விதிகள் இருக்கின்றன. வெவ்வேறு பொருள் ஆகும்பொழுது இன்னொரு வரி வரத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது.

தோல் பதனிடுவதுபற்றி, அதன் மீதுள்ள வரியைப் பற்றிச் சொன்னார்கள். வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிற தோலுக்கு வரி கிடையாது. விலக்கு அளித்திருக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து இங்கு கொண்டு வந்து பதனிடும் தோலுக்கு வரி போடப்படுகிறது. வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிற தோலுக்கு சி.எஸ்.டி. இல்லை. பதனிடப்பட்ட தோலுக்கு ஏதேனும் ஒரு முனையில வரி உண்டு. இந்த வரி போடுவதற்கு பல சங்கடங்கள் ஏற்பட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அதைப் பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை, அந்த விஷயம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தினால்.

திரு. எம். ஏ. லத்தீப்: இதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லி விடுவது நலம் என்று கருதுகிறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற தோலுக்கு வரி இல்லை என்பது உண்மை. 'தே ஹாவ் பீன



எக்ஸெம்ப்டெட்' அதைப்பற்றி நான் சொல்லவில்லை. வெளிநாடுகளில இந்தத் தோலுக்கு உரிய விலையை நிர்ணயிக்கும்பொழுது, திடீரென்று இன்சால்வெண்டாக மாறிவிடுகிறார்கள். அவர்களிடமிருந்து டாக்ஸ் அரியர்ஸ் கலெக்ஷன் செய்யும்பொழுது நொந்துபோய் இருக்கிறார்கள். அப்பொழுது போய் அவர்களை நெருக்கும்பொழுது வியாபாரத்தை அவர்கள் மூடிவிட்டு, உண்மையாகவே இன்சால்வெண்டு பெடிஷன் கொடுக்கும் நிலைமைக்கு நொந்துவிடுகிறார்கள். வியாபாரம் பாதிக்கப்பட்டு, தொழில் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த மாதிரி விஷயங்களெல்லாம் எல்லோருக்கும் இல்லை. டாக்ஸ் கலெக்ட் பண்ணவேண்டியதுதான். டாக்ஸ் கலெக்ட் பண்ணாமல் கவர்ன்மெண்டு நடத்த முடியாது. அதுமாதிரி வியாபாரிகளுக்குக் கொஞ்சம் சலுகை காட்டவேண்டும் என்றுதான் நான் வேண்டிக் கொண்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாதிக்கப்பட்டிருக்கிற அம்மாதிரி வியாபாரிகளுக்கு தவணை கேட்டால், 20 தவணை 30 தவணை என்று கொடுக்கிறோம். 20 மாதங்கள் 30 மாதங்கள் தவணை கொடுக்கிறோம். தவிர்க்க முடியாத காரணம் ஏற்பட்டு, ஒன்றுமே இல்லாத வியாபாரியாக இருந்தால், அப்படிச் சொல்வதில்லை. வியாபாரமே நொடித்துப் போய் நொந்துபோயிருக்கும் வியாபாரியாக இருந்தால் தவணை கொடுக்கிறோம். ஆனால், சொத்தை வேறு ஒருவர் பேரில் எழுதி வைத்துவிட்டு, அரசாங்கத்தை ஏமாற்றவேண்டும் என்று நினைக்கக்கூடிய வியாபாரியாக இருக்கக்கூடாது. உண்மையிலேயே நொந்துபோய் இருக்கக்கூடிய வியாபாரியாக இருந்தால், வரி தவணையைப் பற்றி அரசு சலுகை காட்டுகிறது. சட்டத்தில் அதற்கான விதி இருக்கிறது. அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் வரித் தவணை கேட்பதற்கு தாராளமாக இடம் இருக்கிறது. ஆனால், எல்லோரும் இதை வைத்துக்கொண்டு, அந்த முறையின்கீழ் தவணை கேட்கமுடியாது.

திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது உண்மையிலேயே விற்பனை வரியை மட்டும் எல்லோரும் ஒழுங்காக கட்டினால், வரி ஏய்ப்பு இல்லாமல் கட்டினால், வேறு வரியோ இந்த அரசுக்குத் தேவையில்லை. ஆகவே, வரக்கூடிய அவ்வளவு வரியையும் வசூலிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டார்கள். அதைத்தான் நானும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறக்குறைய 200 கோடிக்குப் பக்கத்தில் வசூலிக்க வேண்டிய இலாகா விற்பனை வரி இலாகா. நிறைய ஏய்ப்புகள் இருக்கின்றன. அதைத் தடுக்கவேண்டும், அதைத் தவிர்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சினிமா கட்டணத்தின் மேல் தமாஷா வரி போடப்பட்டிருக்கிறது; இதில் எப்படி ஏய்ப்பைத் தடுப்பது என்று எத்தனையோ முறைகளில் யோசித்துப் பார்த்தோம். இப்பொழுது பல இடங்களில் ட்யூப்ளிகேட் சீல் உபயோகப்படுத்தப்படுகிறது. தப்பான போலி டிக்கெட்களை விற்றுக்கொண்டு சென்னையிலே ஒரு கொட்டகை நடந்து கொண்டிருக்கிறது; அரசாங்கம் போட்டிருக்கிற விதிமுறையைப் பொறுத்த வரையில், நீதிமன்றத்திற்கும், நமக்கும் என்ன காரணமோ, ஒத்துக்

கொள்ளவில்லை. அதன் காரணமாக சென்னையில் ஒரு சினிமா கொட்டகை தாங்களாகவே வரியிலிருந்து விலக்கு அளித்துவிட்டது போல் நடந்துகொண்டிருக்கிறது. அந்த சினிமா கொட்டகையின் பெயர் மகாராஜா டாக்கீஸ் என்ற பெயரில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வரி பாக்கி இருந்தது. வரி பாக்கி இருந்தபொழுது அவர்கள் வரி இல்லாமல் டிக்கெட் விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அதிகாரிகள் சோதனையிட்டு, அதன்பேரில் மூடப்படுவதற்குப் போடப்பட்ட என்டெர்டெயின்மெண்டு இலாகா உத்தரவு ரத்து செய்யப்பட்டது. அவர்கள் நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், நிறுத்தாமல் கொட்டகை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. 100, 150 வழக்குகள் போட்டோம். கொட்டகை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. நீதி மன்றத்தில் அவர்கள் சொன்னார்கள், கொட்டகையை நிறுத்தக் கூடாது, அதிகாரிகள் பயமுறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். நீதி மன்றம் தலையிட்டு, ஒரே ஒரு ஷோ வசூலை அதிகாரிகள் வசூலித்துக்கொள்ள வேண்டும், இந்த பெடிஷன் முடிகின்ற வரையில் என்று சொல்லிவிட்டார்கள். சென்னையில் ஒரு கொட்டகை, அரசாங்கம் இருக்கிற இடத்தில் என்டெர்டெயின்மெண்டு டாக்ஸ் சீல் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. டி.வி.டி.ஓ. செல்கிறார்கள். ஒரு ஷோ கலெக்ஷன் மட்டும் வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் மீண்டும் ரூ. 40,000 ரூ. 1½ லட்சமாகி விட்டது, அர்ரியர்ஸ் அதிகமாகிவிட்டது, பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டதற்கு இரண்டு ஷோ கலெக்ஷனை வசூல் செய்துகொள்ளலாம் என்று மறுபடியும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. கொட்டகை நடப்பதை நிறுத்தவில்லை. நமக்கு வசூலிப்பதற்கு உரிமையும் கொடுக்கவில்லை. அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற வீட்டை ஜப்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஜப்தி செய்வதற்குக்கூட இப்பொழுது வழி இல்லாமல் போய்விட்டது, பல சிக்கல்களின் காரணமாக.

DR. H. V. HANDE: Can we not bring in legislation to plug these loopholes so that the Government can be protected?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். இதை சினிமாடோகிராப் ஆக்டின்கீழ் கொண்டு வருவதா, அல்லது என்டர்டெயின்மெண்டு டாக்ஸ் ஆக்டின்கீழ் கொண்டுவருவதா என்பதுதான் பிரச்சினை. சினிமாடோகிராப் ஆக்டின்கீழ் தான் லைசென்ஸை ரத்து செய்ய முடியும் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எந்த அதிகாரி உரிமம் கொடுக்கிறாரோ அந்த அதிகாரியினிடத்தில் தான் அதை ரத்துச் செய்யும் அதிகாரமும் இருக்கிறது. என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ் கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டின் கீழ்தான் சினிமாடோகிராப் ஆக்டின் கீழ் தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். சென்னையைப் பொறுத்த மட்டில் போலீஸ் கமிஷனரும், மாவட்டங்களைப் பொறுத்த மட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். போலீஸ் கமிஷனருக்கும், என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறவர்களும் உண்டு.





ஆனால், அரசாங்கம் இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துநிறை வேற்றுவதாக இருக்கிறது. அதை இந்தத் தொடர் கூட்டத்தில் கூட.... நண்பகல் 12.00

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When there is some arrears of tax, under section (3) of the Act, the licensing authority can stop renewal,

என்று இருப்பதால் அதைச் சரியாக 'எக்சர்சைஸ்' பண்ணவேண்டும். ரென்யூவலுக்குப் போகும்போது 'என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ்' அதிகாரிகள் விழிப்புடன் இருந்து, கட்டவில்லை என்றால் லைசென்ஸ் கொடுக்காமல் போகலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போதுள்ள சட்ட விதிகளை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை. நானும் 6, 7 மாதமாக பார்த்துப் பார்த்து எதையும் செய்ய முடியவில்லை. இப்போதுள்ள சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம். அது என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கமுடியுமே தவிர, என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் பாக்கிக்காக வேறு ஒரு சட்டத்தில் வரி பாக்கிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது இயலாத காரியம். இந்த இரண்டையும் சேர்த்து ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் யோசித்துக்கொண்டு வருகிறது. விரைவில் சட்டம் கொண்டுவரும். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இப்படி வரி ஏய்ப்புகள் நாட்டில் பல இடங்களில் இருக்கின்றன. அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு அங்கத்தினர்களும் பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வரி ஏய்ப்புக்கு முக்கிய காரணமே தாங்க முடியாமல் வரி போடப்பட்டதுதான். நியாயமாக வரி போட்டால் சுலபமாகக் கொடுத்து விடுவார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வரி போட்டதற்குச் சமாதானம் சொல்லுகிறார்கள். நான் ஏற்கனவே சொன்னேன். 6 கோடி ரூபாய்....

**திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன்:** இவ்வளவு துணிகரமாக, ராஜ தந்திரத்துடன் சர்க்காரை ஏமாற்றி வருகிறவர், அந்தத் தியேட்டர் சொந்தக்காரர் யார் என்று இந்த பேரவைக்கு அறிவிக்கலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** தேவையில்லாத ஒன்று. சென்னையில் உள்ள ஒரு சினிமாக் கொட்டகைக்காரர் என்று தெரிந்து கொண்டாற் போதும். நடத்துகிறவர் வாடகைக்கு எடுத்துக்கொண்டு நடத்துகிறார். சினிமாக் கொட்டகைக்குச் சொந்தக்காரர் கூட அல்ல. மகாராஜா தியேட்டர். நான் அதைச் சொன்னால் வேறு பல ரகசியங்களும் வந்து அதைப் பலர் கையாள ஆரம்பித்தால் அரசாங்கத்திற்கு ஆபத்தாகப் போய்விடும். மேற்கொண்டு விவரிக்க விரும்பவில்லை

வரி உயர்வால் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. வரி எவ்வளவு குறைவாக இருந்தாலும் ஏய்த்துவிடலாம் என்று கருதுகிறவர்கள் நாட்டில் உண்டு. எப்படியும் தடுக்கவேண்டுமென்று முயற்சிகள் அரசாங்கம் எடுத்து வருகிறது. வியாபாரிகளைத் திருடர்கள் என்று நினைக்கவில்லை. ஆனால் இந்த இலாகாவில் இருக்கும் "இன்டெலிஜென்ஸ் விங்" அதிகாரிகள் நிறைய வியாபாரிகள் கணக்கைச் சோதனையிட்டு, சரக்குகள் எடுக்கும் காலத்தில் பிடிபட்டிருக்கிறார்கள். எந்த இடம் என்று செயரித்து நிறைப்க் கொடுத்திருக்கிறார்கள். சென்னையில் இன்னொரு பெரிய வியாபாரி. அவர் சித்தூரில்—ஆந்திராவில்—வியாபாரம் செய்ததாக பில் போட்டு சென்னைக்கு வரவேண்டிய வரியை ஏமாற்றியிருக்கிறார் ஒரு பெரிய வியாபாரி, பல லட்சக்கணக்கான ரூபாய் ஏமாற்றியிருக்கிறார்கள். அதைக்கூட சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறோம். நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைத் தெரிவிப்பது முக்கியமாகக் கருதுகிறேன். மத்திய அரசாங்கத்துக்கும் நமக்கும் இந்தத் துறையில் சிறு தகராறு இருக்கிறது. மத்திய அரசாங்கம் தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் "ஃபர்டிலைசர்ஸ்" விற்கிறார்கள். இப்போது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மூலம் விற்கப்படுகிறது. முன்பெல்லாம் மத்திய அரசாங்கம் நேரடியாக விற்றபோது தமிழக அரசுக்கு வரி பாக்கி கொடுக்கவேண்டும், என்று நாம் கேட்டோம். அரசாங்கமே விற்ற காரணத்தால் எங்களை நீங்கள் கேட்கக் கூடாது என்று தெரிவித்தார்கள். நீங்கள் வசூலித்த வரியைக் கொடுங்கள் என்று கேட்டோம். அது ஒன்று தகராறு இருந்து கொண்டிருக்கிறது. ஃபர்டிலைசர் மீது வசூலித்து விட்டார்கள். கோதுமை விற்றதற்கு வரி வசூலித்திருக்கிறார்கள். அந்த வரி கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கத்துக்கும் நமக்கும் பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. இப்போது எப்.சி.ஐ. மூலம் உரம் விற்கிறார்கள். விற்பனை வரி வசூலித்து விட்டு, வசூலித்ததை தமிழக அரசுக்குக் கட்ட மறுக்கிறார்கள். கேட்டால் மத்திய அரசாங்கத்திடமிருந்து கொடுக்கவேண்டாம் என்று உத்தரவு வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா வியாபாரம் செய்கிறது. வியாபார சட்டப்படி வரி வசூலிக்கும் போது அந்தப் பணத்தை நிறுத்தி வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. இந்த அரசாங்கத்துக்குக் கட்டித் தான் ஆக வேண்டும். இதை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கூறி வருகிறோம். அப்படிப் பார்த்தால் மத்திய அரசாங்கம் ரூ. 50 லட்சத்தி சொச்சம் எப்.சி.ஐ. இடத்திலிருந்து வரவேண்டும். அதிகாரிகள் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தை மத்திய அரசு கொடுக்குமென்று நம்புகிறேன். கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தமிழ்நாட்டில் வியாபாரம் செய்கிறவர்கள் எல்லோரும் ஒவ்வொரு வியாபாரி, ஒரு அஸெஸ்ஸி என்று எடுத்துக் கொண்டு இருக்கிறோமே, அதுபோல் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ஒரு அஸெஸ்ஸி, என்று வைத்திருக்கிறோம். விற்பனை வரி வசூலிக்காமல் இருந்திருந்தால் ஒருவேளை நாம் கேட்காமல் இருக்கலாம். ஆனால்





வசூலித்த பின் அவர்கள் நிறுத்தி வைத்துக்கொள்வது சரியல்ல என்ற முறையில் இந்த அவையின் மூலம் தெரிவித்துக் கொண்டு அந்தப் பணத்தை மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்கு கொடுத்து உதவும் என்று நம்புகிறேன்.

DR. H. V. HANDE: Sir, with regard to the Oil Refinery at Manali, there was some controversy earlier and the Central Government did not agree with the view of the State Government. I want to know whether that has been solved .

**மாண்புமிகு திரு ப.உ. சண்முகம்:** தமிழ்நாட்டில் மணலி எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது மத்திய அரசாங்கம் எந்த நிபந்தனையும் நம்மிடத்தில் கேட்கவில்லை. ஆனால் மற்ற மாநிலங்களுக்கு நிபந்தனை கேட்டார்கள். வெளி மாநிலங்களுக்கு எண்ணெ ஏற்றுமதி செய்யும்போது சென்ட்ரல் சேல்ஸ்டாக்ஸ் விதிக்கக் கூடாது என்று கேட்டார்கள். நம்மைக் கேட்கவில்லை. நல்ல வேளையாக அப்போது இருந்த தமிழக அரசும் கொடுக்கவில்லை. அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அப்படிக் கேட்காத காரணத்தால் இப்போது மத்திய அரசாங்கம் கேட்பது, வேறு பல மாநிலங்கள் வசூலிக்கவில்லை. நீங்களும் வசூலிக்கக் கூடாது என்று நம்மிடத்தில் கேட்கிறார்கள். நாம் கேட்பது, வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் எண்ணெய்க்கு சி.எஸ்.டி. வசூலிக்க உரிமை தந்திருக்கிறார்கள். அந்த உரிமையை வைத்துக் கொண்டு கேட்கிறோம். 3 பர்செண்ட் கொடுங்கள் என்று. ஆந்திராவுக்கும், கேரளாவுக்கும் வேறு பல மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லும்போது அப்படி எடுத்துச் செல்லப்படும் அளவுக்கு உள்ள 3% வரி கேட்கிறோம். ஆனால் மத்திய சர்க்கார் சொல்கிறது—அந்த வரியைக் கொடுத்து விடுகிறோம். அந்த வரிக்கு தகுந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் உபயோகப்படுத்தப்படும் எண்ணெய மீது வரியை உயர்த்துவோம், அதற்குச் சம்மதமா"? என்று கேட்டார்கள். அதற்குச் சம்மதிக்க முடியாது; இன்றைக்கு சி.எஸ்.டி.க்காக தமிழக மக்கள் மீது வரி போடுவது சரியல்ல. அதை ஈடு கட்ட வரி உயர்வு கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தோம். இந்த தமிழக அரசு அதிகாரிகள் எல்லா மாநிலங்களுக்கும் சென்று விசாரித்து வரச் சொன்னோம். விசாரித்த பிறகு, கேரள அரசாங்கம் நம்மைப் பின் பற்றி அவர்களும் அந்த வரியை புதிதாக போடுவது என்று தீர்மானித்து இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். நம்மைப் போல் அவர்களும் வரி போடுகிறார்கள். மத்திய அரசாங்க நிதியமைச்சர் நம் முதலமைச்சரை வரும்படி எழுதியிருக்கிறார்கள் பலமுறை கடிதங்களும் வந்திருக்கின்றன. அடுத்த முறை சந்தர்ப்பம் கிடைக்கும்போது விவாதிப்பார்கள் என்று நினைக்கிறேன் வேறு பல மாநிலங்களும் இந்த வரிக்கு சம்மதித்து விட்டதால் தமிழக அரசு கேட்கும் வரி நியாயம் என்று நிரூபணம் ஆகிவிட்டது. எனவே மத்திய அரசாங்கம் இதற்கு இணக்கம் தெரிவிக்கும் வரி கட்டும் என்று நம்புகிறேன். சுமுகமாக முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றப்படி குதிரைப் பந்தயத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். ஐ.ஜி. ஸ்டூவர்டாக இருக்கும் காரணத்தால பெரிய தவறுகள் கண்டுபிடிக்கப் பட்டன. என்று கே. எம். எஸ். பேசும்போது தெரிவித்தார்கள். ஐ.ஜி. அவர்களை முதலமைச்சர் போட்டிருப்பது எந்தக் காரணத்துக்காக ? இங்கே உள்ள குற்றவாளிகளை மட்டுமல்ல, அங்கே தவறு செய்கிறவர்களையும் கண்டுபிடிக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் போட்டு அனுப்பி யிருக்கிறார்கள். அங்கே கண்டுபிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர் நடவடிக்கை எடுத்ததற்காகப் பாராட்டுகிறேன்.

அவர்களுக்கு இவ்வளவு பணம் கொடுப்பதா ? 22½./· என் அவர் களுக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நிச்சயமாகப் பரிசீலிப்போம். இதைப் போல் அங்கத்தினர்கள் நல்ல யோசனை சொல்லும்போது இலாபா அதை ஏற்றுக்கொள்ளும். நிச்சயம் அதைப் பரிசீலிப்போம்.

இப்போது மத்திய அரசாங்கம் ஒரு வரி போட்டிருக்கிறது. "ராபிள் டிக்கட்" பரிசுச் சீட்டில் பரிசு அதிகம் பெறுகிறவர்களுக்கு வரி உண்டு. அதே போல் குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெறும் பணத்துக்கும் வரி உண்டு. மத்திய அரசாங்கம் போட்டிருக்கிறது. இதை நாமே போடுவதாக யோசித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று மத்திய அரசாங்கம் அதைப்போடுவதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே தமிழ்நாடு அரசாங்கம் போட்டிருக்கலாம். ஆனால் நாம் போடுவதற்கு முன்பு அவர்கள் போட்டு விட்டார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is there any proposal to increase the number of Government representatives in the Race Club as there is only one representative, I.G. of Police, as illegal betting to the extent of several lakhs is going on inside the Race Club ?

**மாண்மிகு திரு. ப. உ. சண்முகம் :** சென்ற ஆண்டுவரை அரசாங்கத் திற்கு வரியை வசூலித்துக் கொடுப்பதற்கு ரேஸ் கிளப்புக்கு ஆண்டு ஒன்றுக்கு 6,000 ரூபாய் கொடுத்து வந்தோம். இப்போது அது தேவை யில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைக்குப் பதிலாக அரசாங்க அதிகாரிகளை அனுப்பி வரி வசூலிக்கப்படுகிறது. அடுத்து ரேஸ் கிளப்பில் இல்லீகல் பெட்டிங் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். அடுத்து நிறைய அரசாங்க அதிகாரிகளை ஸ்டுவெர்ட் ஸாகப் போடவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி பேச்சு வார்த் தைகள் நடைபெற்றன, அதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டும்; திருத்துவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சட்ட திருத்தம் வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** இரண்டே இரண்டு பேர்களைத்தான் போடுவதாகச் சொன்னார்கள்.





**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** சட்ட திருத்தம் வந்தபின்பு அதைப் பரிசீலனை செய்யலாம்.

ரேஸ் கிளப்பை தேசியமயமாக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதை தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்.

வரி செலுத்த வரும் வியாபாரிகளுக்கு சலுகைகள் அளிக்கவேண் டும்; குறிப்பாக அவர்கள் வசதியாக வந்து தங்கியிருந்து, உட்கார்ந்து பேசி, வரி செலுத்துவதற்கு இடவசதி செய்து கொடுக்கவேண்டு மென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக எல்லா விற்பனை வரிக் கட்டடங்களிலும் இதற்கு ஏற்பாடு செய்யப்படும். 103 கோடி ரூபாய் வரி செலுத்துகின்ற வியாபாரிகளுக்கு இந்த வசதியை அரசாங்கம் நிச்சயமாகச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, the Hon. Minister has just now stated that the Central Government are consistently refusing to hand over the amount that is due to the State Government. That is a very serious matter. On what specific ground the Central Government have refused to pay that amount. Will the Government be pleased to place the correspondence that took place between this Government and the Central Government on the table of the House ".

THE HON. THIRU P. U. SHANMUGAM : Dialogue is going on and it is not yet over. I hope it will be over soon.

**திரு . . சி. நரசிம்மன் :** அமைச்சரவர்கள் ரேஸ் கிளப்பில் அரசாங்க ஸ்டுவர்ட்ஸ் அதிகமாக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு லைசென்ஸ் கொடுக்கும்போதே அரசாங்கத் தரப்பிலே நான்கு ஸ்டுவர்ட்ஸ் போடவேண்டுமென்று கண்டிஷன் போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ரேஸ் முடியப்போகிறது. அந்த கண்டிஷன்படி ஸ்டுவர்ட்ஸ் போடப்படவில்லை. சட்டத்தைத் தக்கபடி திருத்தினால்தான் அதிகமாகப் போடமுடியும். ஜெனரல்பாடியில் அந்த சட்டத் திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேறிய உடன் போட்டுவிடலாம் என்று சொன்னார்கள். ஜெனரல்பாடியில் தீர்மானம் நிறைவேறினால் தான் சட்டத்தைத் திருத்தமுடியும் ஆனால் இது வரையிலும் ஜெனரல் பாடிக்கு அந்தத் தீர்மானம் போனதாகத் தெரியவில்லை. அப்படியே காலத்தை கடத்திவிட்டார்கள். எனவே அடுத்த ஆண்டு லைசென்ஸ் கொடுப்பதற்குள் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு கே. எம். சுப்பிரமணியம் :** அடுத்த ஆண்டுக்கும் ஐ செஸ் கொடுத்தாகிவிட்டது.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** சட்டத்தைத் திருத்தவேண்டும். அதற்கு வேண்டிய விபரங்களைச் சேகரித்து வருகிறோம். சட்டத்தைத் திருத்துவதற்கு ரேஸ் கிளப்பும் ஒப்புக்கொண்டிருக்கிறது. சட்டத்திருத்தம் வந்தவுடன் ஜெனரல்பாடியில் வைத்து அங்கீகாரம் அளிப்பார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அனுமதி சந்தேகம் வேண்டாம். நிச்சயமாக அரசாங்கம் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு கே. டி. கே. தங்கமணி :** வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு ஒரு குழு போட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் குழு ஏதாவது சிபாரிசுகள் செய்து, அதன் பலனாக வரி ஏய்ப்புகள் தடுக்கப்பட்டிருக்கின்றனவா? இந்த மகாராஜா சினிமா தியேட்டர் வரி ஏய்ப்புக் கண்டு பிடிக்கப்பட்டதுபோல், எல்லா இடங்களிலும் வரி ஏய்ப்புகளை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா? இதைத் தடுப்பதற்கு சட்ட ரீதியாக என்ன ஆலோசனை சொல்லி இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** மகாராஜா சினிமாத் தியேட்டரைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுதிருக்கிற வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம். அதுவும் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவந்து நிறைவேற்ற எண்ணியுள்ளோம். வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்கு குழு போட்டிருப்பதாக நான் சொல்லவில்லை. இதிலே இன்டலிஜென்ஸ் விங் ஒன்று இருக்கிறது. அந்த விங் வரி ஏய்ப்புகள் நடைபெறாமல் இருக்க கண்காணித்து வருகிறது. அவ்வாறு இருந்தும் சில தவறுகள் நடைபெற்று விடுகின்றன. எனவே, ஒரு மாற்று வழியாக, தக்கமுறையில் சட்டம் கொண்டுவர எண்ணியுள்ளோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் விவாதம் முடிவுற்றது. அடுத்து, வாக்கெடுப்பு.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களின் வெட்டுத் தீர்மானமும், திரு பி. வெங்கடசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானமும், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் தமது இருப்பிடத்தில் இல்லாததால், அவரது வெட்டுத் தீர்மானம் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்,—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,30,96,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."





நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**(ஆ) நிதிக் கோரிக்கை எண் 5–பத்திரப் பதிவுத் துறை;**

**(இ) நிதிக் கோரிக்கை எண் 34–எழுது பொருள்—அச்சுத்துறை".**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது "மானியக் கோரிக்கை எண் 5–பத்திரப் பதிவுத் துறை", "மானியக் கோரிக்கை எண்–34. எழுது பொருள் அச்சுத்துறை" ஆகிய இரு மானியக் கோரிக்கைகளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன் :** தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கைகளை @ சட்டப்பேரவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு என். மருதாசலம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசாங்க அச்சகத்தின் மீதுள்ள மானியக் கோரிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்றைக்கு நமது சென்னையிலே அரசாங்க அச்சகம் 40 இடங்களில் இருக்கின்றன. இந்த 40 இடங்களிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,000 பேர். இந்த 3000 தொழிலாளர்களுக்கும், மாதம் பூராவும் வேலை செய்து எவ்வளவு சம்பளம் வாங்குகிறோம் என்று தெரியாது. காரணம் அவர்களின் சம்பளம் சம்பந்தமான விபரங்களை அவர்களுக்குத் தெரிவிப்பது கிடையாது.

மில்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் அவர்களின் சம்பளம் விபரம் அடங்கிய ஒரு சீட்டும் கொடுக்கிறார்கள். அதனால் அந்தத் தொழிலாளர்களுக்கு அவர்களின் சம்பள விபரங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதே மாதிரி இந்த அச்சகத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும், அவர்களின் சம்பளம், பஞ்சப்படி, பிராவிடென்ட் பண்டு போன்ற விபரங்கள் அடங்கிய சம்பளப் பில்லையும் சம்பளத்துடன் கொடுத்துவிட்டால், அவர்கள் சம்பள விபரங்களைத் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மவுண்ட் ரோடில் ஒரு அச்சகம் இருக்கிறது. அதில் பெண்கள்தான் வேலை செய்கிறார்கள். அந்த பெண்கள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்கிறார்கள். அதற்கான அதிகப்படிச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் அங்கே சில சமயங்களில் ஆள் மாற்றாட்டம் நடக்கிறது. அதாவது அங்கே வேலை செய்கின்ற இரண்டு பெண்களின் பெயர் ஒன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு பெண் கடன் வாங்கியிருக்கிறாள். இன்னொரு பெண் கடன் வாங்கவில்லை. கடன் வாங்கிய பெண்ணுக்கு சம்பளத்திலிருந்து கடன் தவணையைப்

@ 460—384-ம் பக்கங்களில் 4, 5, 6 இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

பிடித்துவிட்டு மீதியைக் கொடுப்பதால் குறைவாக இருக்கும். கடன் வாங்காத பெண்ணுக்கு சம்பளம் அதிகமாக இருக்கும். ஆனால் அங்கே, கடன் வாங்காத பெண்ணின் சம்பளம் குறைவாகவும், கடன் வாங்கியப் பெண்ணின் சம்பளம் அதிகமாகவும் கொடுக்கப் பட்டிருக்கிறது. கடன் வாங்கிய பெண்ணின் சம்பளத்தில் கடன் தவணையைப் பிடிப்பதற்குப் பதிலாக கடன் வாங்காத பெண்ணின் சம்பளத்தில் பிடித்திருக்கிறார்கள். ஏன் சம்பளம் குறைந்திருக்கிறது என்ற விபரம் அந்த பெண்ணுக்குத் தெரியாததால், கம்மியான சம்பளத்தைப் பார்த்து அழுகின்ற நிலையில் இருக்கிறது. இதுமாதிரியான ஆள்மாறாட்டம் அங்கே நடைபெறுகிறது. மேலும் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்கத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்றைக்கு கலெக்டர் ஆபீஸில் பேப்பர் மூட்டைத் தூக்கு கிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அச்சகத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களையும் அந்த வேலைக்குப் போடுகிறார்கள்.

இந்தமாதிரி இன்றைக்கு அச்சகத் தொழிலாளிகள் மூட்டை தூக்குகிற தொழிலாளிகளாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வித வாகன வசதியும் கிடையாது. முன்பு சைக்கிள் கொடுத்திருந்தார்கள். அவை எல்லாம் ஓட்டை உடசல்களாக ஆகிவிட்டன. நல்ல சைக்கிள் கொடுக்க வேண்டும். மேலும் ஐந்தாறு வருஷங்களாக அவர்களை டெம்பரரியாகவே வைத்திருக்கிறார்கள். சம்பளம் மாதம் 120, 130 தான். அவர்களை நிரந்தரமாக்குவதோடு குறைந்தது மாதம் 200 ரூபாயாவது சம்பளம் கொடுத்தால்தான் சென்னையில் அவர்களால் தங்களுடைய குறைந்த பட்ச வாழ்க்கையை ஆவது நடத்த முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதேசமயத்திலே அச்சகத்தில் ஒரு கூட்டுறவு சொஸைடி இருக்கிறது. முன்னாலே இருந்த ஒரு இயக்குநர் அந்த சொஸைடியின் பணத்தை ஒரு லட்சம் கையாடல் செய்து விட்டார். இரண்டாவதாக வந்த இயக்குநர் தான் அதைக் கண்டுபிடித்தார். ஆனால் இன்றையதினம் கையாடல் செய்யப்பட்ட தொகையை தொழிலாளிகளிடம் இருந்து வசூலித்து வருகிறார்களே தவிர கையாடல் செய்யப்பட்டவரிடம் வசூலிக்கவில்லை. இது சரியல்ல. தொழிலாளர்களிடம் வசூலிப்பது சரியாகாது. இதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்க அச்சகம் ஒரே இடத்தில் இருக்கவேண்டும். இன்றைக்கு 40 இடங்களில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:**— அரசாங்கத்துறையில் 40 அச்சகங்கள் இல்லை. அதை உறுப்பினரின் நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு என். மருதாசலம்.**—நாற்பது கண்டிராக்டர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அங்கெல்லாம் நம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் தொழிலாளர்களுடைய வசதிக்காக எல்லாம் நம் அச்சகத்திலேயே நடை





பெற வேண்டும்—அப்போதுதான் மூன்று ஷிப்டு வேலை நடக்கும்—மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். நம் லிட்டரேச்சர்களும் நல்லமுறையில் அச்சிட வசதி ஏற்படும். ஆக இன்றைக்கு நம் அரசு அந்தத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, in support of the cut motion given on behalf of my party I wish to say a few words.

So far as the Registration Department is concerned, the Inspector-General of Registration while selecting candidates for the post of Sub-Registrars from the post of Assistants appointed five Scheduled Caste Assistants in the year 1970 and another five candidates in 1971—those who put in eight years of service with the requisite prescribed qualifications other than the duty of two years' Assistant. But the Government in their Memorandum No. 3076, Revenue, dated 21st November 1971 and G.O. Ms. No. 4006, Revenue, dated 8th December 1971, have set aside the promotion made by the Inspector-General of Registration.

In this connection, I would like to bring to the attention of the Hon. Minister the speech I had made last year and the year before last, wherein I had stated that a few seats should be earmarked for Scheduled Caste people. That point had been brought to the attention of the then Hon. Minister when the present Minister was not a Minister. The late Thiru K. M. Ramaswamy Gounder also drew attention to it. Then the Government promised that they would examine the matter.

"அரசின் நோக்கமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்புகள் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதைப் பரிசீலனை செய்கிறேன்."

The then Hon. Minister gave the assurance on 17th March 1970. So, my submission is that this grievance is there for a long time. Now the point is that the promotion made by the Inspector-General of Registration has been set aside and I request the Hon. Minister to set right the mistake that has been done. Also six candidates alone from the Scheduled Castes have been promoted as regular Sub-Registrars and placed under probation. This aspect of the matter may also be taken into consideration.

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 24

Then I come to the emoluments given to the Sub-Registrars. I am of the view that the salaries paid to them is very meagre and unreasonable when compared to the responsibility and nature of work they are entrusted with. Therefore, their pay-scale has to be properly revised. I request the Government to consider this aspect of the matter also.

Sir, in the Registration Department many unnecessary posts have been created in the cadre of Registrars of Chits (Investigation and Prosecution). In Chingleput, Cuddalore, North Arcot and in many other Registration Districts, I have come to know that these posts of Registrars of Chits (Investigation and Prosecution) are actually idle posts because they are not functioning and no work seemed to have been turned out by them.

Now that the High Court has struck down the Stamp Act, I want to know whether there is any necessity for the posts of Audit Sub-Registers. These posts have been created mainly to detect cases of undervaluatuinoun of instruments. How for these posts would be useful, is a point which I would like the Hon. Minister to consider.

Then certain Registratoin districts are created. In one district, in the Sub-Registry office at Tirupporur only 1,500 documents are registered in a year, whereas in the nearby Tirukkalukkundram, Tambaram and Chinglepat Sub-Registry offices, more than 4,000 documents are registered in a year in each office. There is no proper delimitation of each district and I want to know whether it is possible for the Government to review the whole thing so that the load of each district would be properly distributed.

Then I want to refer to another point. Recently the Government have passed the G.O. Ms. No. 145, Transport Department, dated 21st February 1972. I will read only a portion of that Government Order. It states—

"The Committee on Reorganisation of the Stationery and Printing Department has stated that the articles purchased on annual tender basis in the Stationery Stores are divided into several grades..........."

They have given powers to the officers to purchase articles to the value of Rs. 10,000 without specific tenders, etc. This has given rise to a sort of dissatisfaction among the employees of the Stationery and Printing Department. A number of officers are



1972 மார்ச் 24] [Dr. H. V. Hande]

given blanket power to buy things. Whether it is desirable or not, I do not know. I am given to understand that in Pudukkottai, Vridhachalam, Salem and Tiruchirappalli, there is a fear of 350 workers about to be retrenched. Whether that fear is connected with the Government Order mentioned I request the Government examine it.

When our Harijan Welfare Minister was in charge of the Portfolio, suggestions were made by me, by Mr. Balasubramanian and Mr. Munu Adhi and the next year, things were sorted out. There was a loss of 25,000 rupees in the canteen and an officer was connected with the defrauding of an amount of Rs. 1,85,000. In 1970 this particular thing was brought to notice. I do not know what action has been taken and what is the position. I request the Hon. Minister to go into this question also.

There are grievances of compositors. After putting in 7 or 8 years of service they are given extra load of work. From 800 points to 1000 points their load is raised. There is 20 per cent increase of workload. That is their grievance. Normally, as a person goes on increasing the number of years of service, his work load should be less, for his capacity to withstand heavy load is limited. But here in the printing press the opposite is the case. They do not get any promotion. I request the Hon. Minister to examine these things.

The Hon. Minister was once upon a time a trade union leader connected with this printing press. In the Legislative Council also when Mr. Bhakthavatsalam was the Chief Minister he strived to get them canteen facilities. Even now I would like him to take greater interest in the welfare of the people of the press and redress their grievances. Thank you, Sir.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை மானியத்திலும், அச்சகத் துறை மானியத்திலும் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் சொல்லியதோடு, நானும் சில விஷயங்களை வலியுறுத்திச் சொல்லவிரும்புகிறேன். பிற்பக 12-

முதலாவதாக, சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸை எந்த எந்த இடங்களில் அமைப்பது என்பது சம்பந்தமாக சரியான முறை அனுசரிக்கப்படவில்லை. ஒவ்வொரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்கும் எவ்வளவு டாக்குமெண்டுகளை ஒதுக்கலாம்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 24

என்பதைக் கணக்கிட்டு, அதற்குத் தகுந்தவாறு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களைத் திறக்கவேண்டும். ஒரு சில ஆபீஸ்களில் 1,500, 2,000 என்ற அளவில்தான் பதிவாகின்றன. ஆனால் இன்னொரு பக்கத்தில் 6 ஆயிரம் டாக்குமெண்டுகள் பதிவாகி வருகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஒருவருக்கு அதிக வேலை, இன்னொருவருக்கு வேலையே இல்லை என்கிற நிலைமையை உண்டாக்காமல், சரிசரியாக ஒவ்வொருவருக்கும் 2 ஆயிரம் டாக்குமெண்டுகள் பதிவாகக் கூடிய வகையிலே ஏரியாக்களைப் பிரித்து ஆங்காங்கு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களைத் திறப்பது சரியானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களையும், சப்-ரிஜிஸ்ட்ரார்களையும் ஆடிட் செய்வதற்காக 'ஆடிட் ரிஜிஸ்ட்ரார்' ஒருவர் பல இடங்களுக்குப்போய் வருகிறார். அவர் அப்படிப் போகின்றபோது அவருக்கு உண்டான செலவுகள், அவரை வரவேற்று விருந்தளித்து உபசரித்து வழியனுப்பும் காரியங்களையெல்லாம் அந்த சப்-ரிஜிஸ்ட்ரார் தன்னுடைய சொந்தச் செலவிலேயே செய்ய வேண்டியிருக்கிறது. அவருடைய சம்பளத்திலே இதெல்லாம் செலவாகிறது. இப்படியாக ஆடிட் ரிஜிஸ்ட்ரார் என்ற பதவியே தேவையில்லை. அதனால் செலவு அரசாங்கத்திற்கும் அதிகம், சப்-ரிஜிஸ்ட்ரார்களுக்கும் செலவு அதிகம். ஆகவே, அந்தப் பதவியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பதவி அவசியமா என்பதை அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பத்திரம் பதிவு செய்யும்போது, நாங்கள் என்ன விலை சொல்கிறோமோ அந்த விலைக்குண்டான ஸ்டாம்ப் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மார்க்கெட் வேல்யூ என்று சொல்லி ஸ்டாம்பு கட்டணம் வசூலிக்கிறார்கள். இது தவறு என்று கோர்ட்டில் நிரூபணமாகியிருக்கிறது. நாங்கள் வரி போட மாட்டோம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தீர்கள், ஆனால் நாங்கள் வரிதான் போடுவோம் என்று சொல்வதைப்போல, நீங்கள் கோர்ட்டு தீர்ப்புக்குப் பின்னரும் அப்பீல் செய்துகொண்டிருக்கிறீர்கள். கொடுக்கிறவர்கள் வாங்குகிறவர்கள் இருபாலரும் எந்த விலைக்கு ஒத்துக்கொள்கிறார்களோ அந்த விலைக்குத்தான் வாங்குபவர் வாங்க முடியும். ஆகவே, அவர்கள் வாங்கும் விலைக்கு ஸ்டாம்ப் கட்டணம் விதிக்க வேண்டும். வரியை எப்படியும் வசூலித்தே தீருவது என்ற முறையில் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பங்களா தேஷுக்காக வரியை உயர்த்தினீர்கள். பங்களா தேஷ் விஷயம் போய்விட்டது. ஆனால் உயர்த்திய வரி குறையவில்லை. வரிப் பணத்திலிருந்து மக்களுக்கு ஏதாவது வசதிகள் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. எந்தக் காலத்திலும் வசதி மக்களுக்குக் கிடைக்காதுபோல் இருக்கிறது. பத்திரப் பதிவுத் துறையில் அதிகமாக ஏற்படும் செலவினத்தைக் குறைக்க வேண்டும். மார்க்கெட் வேல்யூ என்ன என்பதற்காக ஒரு ஆடிட் ரிஜிஸ்ட்ரார் போடுவது சரியா? ஒரு இடத்திற்கு மார்க்கெட் வேல்யூ இன்னது என்று நீங்களே நிர்ணயித்து, வேண்டுமானால் மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகளுக்கொருதடவை ரிவைஸ் செய்து கொண்டால் நல்லதாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 24] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அடுத்தது, சிட்ஃபண்ட் ரிஜிஸ்ட்ரார். பெரிய நகரங்களில் சிட்ஃபண்ட் ரிஜிஸ்ட்ராரைப் போடுவதில் அர்த்தம் இருக்கிறது. பெரிய நகரங்களில் பலர் சீட்டு பிடிப்பார்கள், சிலர் கட்டுவதில் நஷ்டப்பட்டு நடுத்தெருவில் திண்டாடுவார்கள். சிலர் சீட்டு பிடிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, பிறகு பணத்துடன் மறைந்துவிடுவார்கள். இவர்களையெல்லாம் கண்காணிக்க பெரிய நகரங்களில் ரிஜிஸ்ட்ரார் இருப்பது அவசியந்தான். ஆனால் கிராமப்புறங்களில் இப்படியான ரிஜிஸ்ட்ரார்களைப் போடுவதில் அர்த்தம் இல்லை. கிராமங்களில் ஏதோ ஒரு பத்துப் பெண்கள் சேர்ந்துதான் சீட்டு பிடிப்பார்கள். மேலும் தெரிந்த நபரிடத்தில்தான் சீட்டு கட்டுவார்கள். அவர்களை சீட்டுப்பிடிப்பவர் ஏமாற்ற முடியாது. நகரங்களில் அப்படியில்லை. முன்பின் தெரியாதவர்கள் சீட்டு பிடிக்கிறார்கள். நகரங்களில் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டிருக்க முடிவதில்லை. கிராமப்புறங்களில் சீட்டு பண்டு ரிஜிஸ்ட்ராருக்கு வேலையே கிடையாது ஆகவே, கிராமப்புறங்களில் ரிஜிஸ்ட்ரார் போடுவதில் பயன் இல்லை. நகரங்களில் வேண்டுமானால் போட்டுக்கொள்ளலாம். அரசாங்கம் இதை யோசித்துப் பார்த்து, இந்தச் செலவுகளையெல்லாம் கட்டுப்படுத்த முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக பத்து பேர்களுக்கு ரிலேக்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரிலேக்சேஷனை அரசாங்கம் ஊர்ஜிதம் செய்யாததால், அவர்களுக்கு ரிவர்ஷன் கிடைத்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகளை இந்த அரசு செய்துகொண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது ஆனால் ரிலேக்சேஷனை ஊர்ஜிதப்படுத்துவதில் காலதாமதமாகிறது. இதில் அரிசனமக்களும் இருக்கிறார்கள். காலதாமதத்தின் காரணத்தினால் அவர்களுக்கு ரிவர்ஷன் வந்திருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்குப் போனால் நாம் அங்கே நாற்காலிகளையே பார்க்க முடியாது. அங்கே இருக்கின்ற நாற்காலிகளுக்கெல்லாம் நான்கு கால்கள் இருக்காது; மூன்றே கால்கள்தாம் இருக்கும். பெஞ்சுகளில் உட்காரலாம் என்று போனால் அதில் உட்கார்ந்தால் ஒடிந்து விழுந்துவிடுமோ என்ற அச்சம்தான் ஏற்படும்.—'சண்டம்டு பர்னிச்சர்கள்'—ஓட்டை உடைசல் சாமான்களைத்தான் அங்கே போட்டிருக்கிறார்கள். பத்திரம் பதிவு செய்ய வருபவர்களை, வாருங்கள், உட்காருங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையில் அங்குள்ள பர்னிச்சர்கள் இல்லை. ஏதோ அந்த இடத்தைப் பார்க்கும்போது பாழடைந்ததாக இருக்கிறது. இதைத் திருத்தியமைக்க வேண்டும். "வரியை உயர்த்த மாட்டோம், வசதிகளைச் செய்வோம்" என்று சொன்னீர்களே, வரியை உயர்த்தினீர்களே வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, நல்லபடியாக திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக அச்சகங்களை மாவட்டத்திற்கொன்றாக ஆரம்பிப்பது அவசியம். குறிப்பாக சட்டசபையிலே உள்ள பிரதிகளை அச்சடிப்பதற்கு நாம் அடிக்கடி கவர்ன்மெண்ட் பிரஸுக்குப் போகவேண்டியிருக்கிறது. இன்றைக்கு தொழி

லாளர் டிமாண்டு வருகிறதென்றால், அந்தப் புத்தகங்கள், குறிப்புகள் எல்லாம் காலையிலேதான் மேஜையின்மீது வைக்கப்படுகிறது. இந்தக் குறிப்புகளை முதலிலேயே கொடுத்தால்தானே படித்துப் பார்த்து அதன்மீது நல்லபடியாக பேச முடியும். மக்களுடைய குறைகளைக் கேட்கத்தான் 24 மணி நேரத்தில் 18 மணி நேரம் செலவாகிறது. முதலிலே கொடுத்தால் தானே, மீதியுள்ள நேரத்திலாவது நாங்கள் அந்தக் குறிப்புகளைப் படிக்க முடியும்.

ஏதோ சம்பிரதாயத்திற்காக வரவு–செலவுக் கூட்டம் நடக்கக்கூடியதாக இருக்கிறதே தவிர, அரசாங்கம் தன்னைத்தானே திருத்திக்கொள்ளக் கூடிய வகையில் வரவு–செலவுத் திட்டக் கூட்டம் நடத்தப்படுகிறதா என்பதை கேள்விக்குரியதாக ஆக்கிவிட்டோம். ஆகவே, சட்டசபை சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக காலதாமதமில்லாமல் இருப்பதற்காக சென்னை கோட்டையிலேயே அச்சகத்தின் கிளை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதனாலே இங்கேயே ஒரு அச்சகக் கிளை ஆரம்பிக்கப்பட்டுவிட்டால் உடனடியாக எதையெதையெல்லாம் அச்சடித்துக்கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் அச்சடித்துக்கொள்ள முடியும். கோட்டைக்குள்ளேயே அமைத்துவிட்டால் சீக்கிரமாக வேண்டியவற்றை அச்சடித்துக்கொள்ளலாம். ஆகவே அமைச்சர் அவர்கள் விரைவிலேயே அப்படி கோட்டைக்குள்ளே ஒரு அச்சகம் அமைத்து ஒரு நல்ல விழாவாக சீக்கிரமாகத் துவக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

எம். எல். ஏ.க்களுக்கு 'பேட்' கொடுக்கிறார்கள். கார்ப்பரேஷனிலும் பேட் கொடுக்கிறார்கள், நல்ல அட்ராக்டிவ் பேடாகக் கொடுக்கிறார்கள். எம்.எல்.ஏ.க்களுக்குக் கொடுப்பதைப் பார்த்தால் வேஸ்ட் பேப்பரிலே சீல் போட்டுக் கொடுப்பதுமாதிரித்தான் இருக்கிறது, நல்ல காகிதத்திலே எம்.எல்.ஏ.வின் பெயர் விலாசம் இவற்றையெல்லாம் அச்சடித்துக் கொடுத்தால் சர்டிபிகேட் கொடுப்பதற்கோ மற்ற விஷயங்களுக்கோ நன்றாக இருக்கும். நீங்கள் இப்பொழுது கொடுக்கிறதைப் பார்த்தால் எம்.எல்.ஏ.க்களை அவ்வளவு பரிதாபமாக நினைத்திருக்கிறீர்கள் என்றுதான் தோன்றுகிறது. Let it be a little more attractive. லாட்டரிச் சீட்டு அச்சடிப்பதும் அரசாங்க பிரஸ்ஸிலேதான் வருகிறது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே அங்கே வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. நம்முடைய வேலைகளையெல்லாம் தனியார் அச்சகங்களுக்கு வெளியே கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே அப்படியில்லாமல நமக்குத் தேவைப்படுகிற எல்லாவற்றையும் நம்முடைய அச்சகத்திலே செய்துகொள்வதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

கழிவுப் பேப்பர் எடுத்துக்கொள்வதைப் பொறுத்தவரையில் ஒருவர் தன்னாலே வந்து காண்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதிலே கவனமாக இருக்கவேண்டும். காரணம்



ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம், நல்ல பேப்பரே வெளியே போயிருக்கிறது கவர்ன்மெண்ட் பிரஸ்ஸிலிருந்து, ரீம் ரீம் ஆகப் போய் கொண்டிருந்தது என்பதையெல்லாம் நாம் செய்தித்தாள்களிலே பார்த்தோம்; எனவே கவனமாக இருந்து யார் ஹையஸ்ட் டெண்டர் கேட்கிறார்களோ அவர்களுக்குக் கவனமாக இருந்து சரியான முறையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மஸ்தூர்களையே மெஸஞ்சர்கள் வேலை பார்க்கச் சொல்கிறார்கள். அவர்களுக்கு மெஸஞ்சர் சம்பளம் கொடுக்கமாட்டோம் என்று சொல்கிறீர்கள்; தனியாகவும் ஆள் போடுவது இல்லை, மஸ்தூர்களையே வேலைவாங்குகிறார்கள். அவர்களையே அந்த வேலையையும் பார்க்கச் சொல்வது வருந்தத்தக்கது. அதையும் போக்கவேண்டும், நல்லமுறை யிலே சீர்திருத்தி அமைக்கவேண்டும்;

நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஓவர்டைம் என்பதையே எடுத்துவிடவேண்டும்; அதை எடுத்துவிட்டு அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். ஓவர் டைம் என்று போட்டு வேலைவாங்கினால் 50 வயது வரைகூட இருப்பவர் 30 வயதிலேயே போகவேண்டிய நிலைமைதான் வரும். இந்த நாட்டிலே எத்தனையோ ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான பேர்கள் வேலையில்லாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கி றார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைக் கொடுங்கள். எத்தனையோ பேர்கள் எம்ப்ளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்துகொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து இண்டர்வியூ வருவதே இடையாது. அதற்குள்ளே அடுத்த உலகத்திலிருந்து இண்டர்வியூ வந்துவிடும்போல் இருக்கிறது. பதிவு செய்துவிட்டு அவர்கள் அலைந்து அலைந்து சலித்துப் போகக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. காரணங்கள் என்ன என்பதைப் பார்த்து வழிவகைகளைக் காணவேண்டும். இளைஞர் வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பதிவு செய்தால் வேலையாவது கிடைக்கிறதா என்றால் இல்லை. ஆனால் ரினியூவல் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். கார்டும் வராது, ரினியூவலும் பண்ணவேண்டும். எதற்காக அடிக்கடி ரினியூவல் பண்ணவேண்டும். வீட்டு விலாசம் மாறினால் வேண்டுமானால் ரினியூவல் பண்ணலாம். அப்படியில்லாமல் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு வருஷத்திற்கு ஒரு முறை ரினியூவல் செய்யவேண்டு மென்று சொல்வதால் இளைஞர்கள் நடந்து நடந்து ஓய்ந்து சலித்துப் போய் வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட் டிருக்கிறது. எனவே ஓவர்டைம் எதற்காகக் கொடுக்கவேண்டும், அதிக மாக வேலை இருந்தால் வேலையில்லாதவர்களுக்கு அந்த வேலைகளைக் கொடுக்கக்கூடிய முறையிலே செய்யவேண்டும். ரொம்பவும் அவசிய மானால் நைட் ஷிப்ட் வைக்கலாம். அவசியம் இல்லாதபோது நைட் ஷிப்ட் ஏன் வைக்கவேண்டும். அதனால் அவர்களுடைய உடல்நிலை பாதிக்கப்படும். ஒரு அரசாங்கத் தொழிற்சாலையிலேயே இப்படி தொழி லாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவில்லையென்றால் அடுத்த தொழிற்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 24

சாலையிலே என் செய்யவில்லை என்று கேட்க என்ன உரிமை இருக்கிறது உங்களுக்கு என்று கேட்க விரும்புகிறேன்.

You must set an example for others.

நான்கூட ரொம்பச் சந்தோஷப்பட்டேன். அமைச்சர் அவர்கள் சமீபத்திலேதான் குடிதண்ணீர் வசதிகூட அங்கே கொடுத்திருக்கிறார்கள். 1971-ஆம் ஆண்டு அக்டோபரிலேதான் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்பார்கள் நீங்கள் காங்கிரஸ் ஆட்சியிலே கொடுத்தீர்களா என்று. எனக்குத் தெரியும். இதுபோன்ற அடிப்படைத் தேவைகளையெல்லாம் மேயர் மினிஸ்டர்தான் கவனித்துச் செய்து கொடுக்கவேண்டும்.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து சினிமா தியேட்டர் கட்டுகிறார்கள். ஒரு சினிமா தியேட்டரிலாவது பாத்ரூம் சரியாக இருக்கிறதா? உள்ளே நுழையவே முடியாது, போனால் தண்ணீர் இருக்காது. அடிப்படைத் தேவைகளைப் பற்றிக்கூட கவனிப்பது இல்லை. வரி வரி என்று வாங்குகிறோம், வரியை எங்கே ஏற்றுவது என்று அதிலேதான் அரசாங்கம் கவனமாக இருக்கிறதே தவிர வசதிகளைச் செய்து தருவதிலே கவனம் செலுத்துவது கிடையாது. இப்படிப்பட்ட குற்றங்குறைகளையெல்லாம் நீக்க அரசாங்கம் முனையவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, I wish to offer only a few remarks with regard to the Demands now before the House.

I fully agree with my learned Friend, Thirumathi Anandanayaki with regard to the conditions prevailing in Registrar and Deputy Registrar's Offices. Even the advocates when they go to get their documents registered, do not get proper seats. That is the way in which the Office is maintained and the work-load of some of the Registrars and Sub-Registrars is very great. The Government should find out the highest number of documents registered in a particular year and the lowest number in a particular year and readjust the jurisdiction of each office so that the work may be distributed equitably.

With regard to the maintenance of offices at least advocates who go there must be treated courteously and with respect by the officers

Another thing is that after getting the documents registered, it takes a long time to get back the documents. We must find [illegible] so that the people can get their documents



1972 மார்ச் 24] [Thiru M. A. Latheef]

immediately. For instance, take the gift deed or release deed. They try to fix the value and this takes a number of days and that causes great difficulties to the people. This aspect of the matter must be looked into.

Then I come to the Printing Department. I have got to make one submission to the Government about the depressed classes. Representation has already been made that the depressed classes like Harijans and Backward Communities must get highest priority and attention from this Government. Particularly the community to which we belong, the Muslim Community, has not been given proper representation in the Printing Department, Government Press, etc. For instance, sometime back applications were called for by the Department from persons sufficiently qualified in Litho Printing. Some five applicants came. One applicant was a Muslim. The notification indicated that the application should be a man with sufficient qualification in Litho Printing. Among the five applicants, he was the only man sufficiently qualified in Litho Printing. He has obtained qualification in it after prosecuting further studies in West Germany in Litho Printing for four years. He had returned from West Germany and has applied. Even though he had meritorious qualifications, his application was not entertained. Somebody else was taken. I do not know how it happens at official level. I have brought this matter to the notice of the Hon. Minister so that this kind of thing should not be repeated in the department in future. That is my humble submission.

With regard to printing presses, they must be started in all districts. There is no use of having it in a particular corner. You must have the press in a central place in the district headquarters. Even if it is taluk headquarters or Panchayat, it should be in a central place. It is high time you start printing presses in all districts. With these observations, I support the Demand. Thank you.

**திரு கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்றைக்கு ஏற்பட்ட ஒரு சூழ்நிலையின் காரணமாக இந்த ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட் பற்றியும், சர்க்கார் அச்சகம் பற்றியும் அதிகம் பேசுவதற்கும், பலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அதற்குக் காரணம் இந்த ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் என்னுடைய ஆலோசனை எப்படி

யென்றால் இன்றைக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள், சப்-கோர்ட்டுகள் எங்கெங்கு அமைக்கப்பட வேண்டுமென்று எப்படி ஒரு வரதராஜன் கமிட்டி அமைத்திருக்கிறதோ அதைப்போல் ஒரு கமிட்டி அமைத்து நம் உறுப்பினர்கள் மற்றும் எங்கள் தொகுதிகளிலே ஒரு சப்-ரிஜிஸ்தரார் ஆபீஸ் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்களே அதைப் பரிசீலிக்கும் முறையில், அங்கே எவ்வளவு அதிக வேலை இருக்கிறது, எவ்வளவு பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்ற முறையில் அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே சபையிலே ஏற்கெனவே பெருநாழியில் சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்கு ஒரு பிரேரணையாகவும் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே கமுதியில் இம்மாதிரி ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறக்க வேண்டுமென்று பரிசீலித்து ஒப்புதல் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அந்த இடத்திலும் திறக்கவேண்டுமென்று கூறி வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, சுருக்கமாகச் சொன்னால் இந்த ஆண்டிலாவது முறையாக இதை எப்படி ஸ்பிரெட் செய்ய வேண்டுமென்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு தினங்களுக்கு முன்பாக சபையிலே விருதுநகரில் இருக்கும் அந்த மாவட்ட ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது என்றும், அந்த நிலையிலே வேறொரு பெரிய கட்டிடத்திற்கு மாற்ற சிந்தனை இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்தத் தாலுக்காவிலிருந்து ஒரு முக்கியமான நகரம் இன்னும் கொஞ்சம் வசதிகள் பெருக வேண்டுமென்று விரும்பும் சாத்தூருக்கு அதை மாற்றலாம், அதனால் பெரிய பாதகம் ஏற்பட்டுவிடாது; காரணம் சாத்தூரில் தனிக் கட்டிடத்திலே கட்டச் செய்வதால் பெரிய உதவியாக இருக்கும். இப்பொழுது கணக்கிட்டுப் பார்த்தால் சாத்தூர் பகுதியிலிருந்துதான் அதிகமாகப் பதிவுக்கு வருகிறார்கள் என்று அறிகிறேன். எனவே இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாகச் சொல்வது உண்டு, இந்த ரிஜிஸ்திரார் ஆபீஸ் ஒன்றுதான் மக்களிடத்திலே அதிகமாக உறவு இல்லாத ஒரு ஆபீஸ் என்று சொல்வார்கள். நான் வேறு அர்த்தத்தில் சொல்லவில்லை. அவர்கள் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதிகமாக ஆபீஸ்களைத் திறப்பதன் மூலம் அதிகமான சிப்பந்திகளைக் கொண்டு வருவதற்கும், ப்ரமோஷன்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கும் உதவிகரமாக இருக்கும். எனவே, இந்தப் பிரச்னையையும் ப்ரத்யேகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை யாரும் கேட்பதற்கு பெருமளவில் இல்லாத காரணத்தினால் புறக்கணிக்கப்பட்ட இலாககாவாக இருக்கிறது என்பதை மட்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சர்க்கார் அச்சகத்தைப் பொறுத்த வரையிலே, அமைச்சரவர்களுக்கு இந்தச் சர்க்கார் அச்சகத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். அவருடைய உரையிலே பெரிய அச்சகமாக



இருக்கும் மின்றும் இப்பொழுது இரண்டு ஷிப்ட் போகிறது, இரண்டு ஷிப்டுகளை 3 ஷிப்டுகளாக ஆக்கக் கூடாது என்று நான் சொல்பவன் அல்ல, இரவில் வேலை செய்தால் தகுந்த ஊதியம் கிடைக்கிறது, அதற்கு ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது 3 ஷிப்டுகள் திறக்கப் போகிறார்கள். இந்தக் குறிப்பைப் பார்த்தால் ஏற்கனவே இரண்டு ஷிப்டுகளில் பணியாற்றும் 2,000 அல்லது 2,300 பேர்கள் இருக்கிறார்களே அவர்களையேதான் இந்த மூன்றாவது ஷிப்டுக்கும் போடுவதாக உள்ளது. அந்த முறை சரியல்ல. அதற்குமாறாக மூன்றாவது ஷிப்ட் போடுவதானால் அவைகள் இதில் பாதிப்பேர் இல்லாமல் இருக்கலாம், அல்லது மூன்றில் ஒரு பங்காவது அதிகமான தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பாக ஏற்பாடு செய்ய யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது ஷிப்ட் வைத்தால் இன்றைக்கு வெளியில் 20, 30 அச்சகங்களுக்குக் கொடுத்து அச்சிடுகிறோமே அதை கைவிடலாம். அப்படிக் கைவிட்டுவிட்டு இங்கே அதிகம் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. அந்த அச்சகத்தின் இடமே சரியாக இல்லை தான். பின்னால் யோசித்துத்தான் பெரிய அச்சகமாகிய மிண்ட் அச்சகத்தை வேறு எதாவது இடத்தில் கிண்டி போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல முடியுமா என்று யோசிக்க வேண்டும். ஏனென்றால் இந்த அச்சகத்தை மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் நாட்டுமக்கள் மத்தியில் வளரும் நேரத்தில் அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேநேரத்தில் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அந்த அச்சகத்திலே இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் வேலை செய்தாலும் அங்கே ஒரு ஆபீஸ் பாய் அல்லது மெசஞ்சர் பாய் இல்லை. டஸ்தார்கள் காகிதப் பட்டுவாடா செய்கிறார்கள். அந்தப் பையன் ஒரு ஆக்சிடெண்டில் அகப்பட்டுக் கொண்டால் நாளைக்கு அவர் தன்னுடைய வேலையின் காரணமாகப் போனபோதுதான் ஆக்ஸிடெண்டில் அகப்பட்டுக்கொண்டாரா in the course of employment என்ற கேள்வி அங்கு வரக்கூடும். அவருக்கும் அந்த வேலைக்கும் சம்பந்தமில்லாமல் போகும் நிலைமை இருக்கிறது, பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இவ்வளவு பெரிய ஆபீசிலே மெசஞ்சர் பாய் வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அந்த இடத்திலே உள்ள வசதிகளைப்பற்றிச் சொன்னார்கள். வசதி போதாது என்று யார் போய்ப் பார்த்தாலும் சொல்லிவிட முடியும். எனவே அங்கே வசதிகளைப் பெருக்க வேண்டும். இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு எஞ்ஜினியரிங் டிபார்ட்மெண்ட், அல்லது டெக்ஸ்டைல் அல்லது உருக்குத் தொழிற்சாலை இப்படிப்பட்ட தொழிற்சாலைகளிலெல்லாம் கிட்டத்தட்ட குறைந்தது 200 ரூபாய் ஊதியம் என்று நான் கருதுகிறேன், அதிகமாக டிரான்ஸ்போர்ட்டிலும் அப்படித்தான், 200 ரூபாய்க்குக் குறையாமல் ஊதியம் இருக்கும். சர்க்கார் அச்சகத்திலேயும் எந்த இடத்தில் பணியாற்றினாலும் குறைந்த அளவு total emoluments 200 ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் என்ற முறையிலே அவர்களுடைய ஊதிய

அடுத்தபடியாக, இந்த அண்ணா சாலை, மவுண்ட் ரோட்டில இருக்கும் அச்சகத்தில் அதிகமாக, 700 பேர்களில் 500 பேர்கள் பெண்கள்தான். உண்மையிலேயே பெண்கள் தனியாக மறைந்திருக்க அங்கே இடம் இருக்கிறதா? ஆண், பெண் என்ற வித்தியாசம் இருக்கிறதா என்று பார்த்தால் வேதனையாக இருக்கிறது. பைண்டிங் மற்ற வேலைகளைச் செய்கிறார்கள். பெண்கள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து. அவர்களுக்குப் போதுமான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் சில காரியங்களைப்பற்றி என்னிடத்திலே சொன்னார்கள். அவர்கள் எதாவது சில சாமான்கள் வாங்கிவிட்டால், லட்சுமி என்றால் இரண்டு லட்சுமிகள் இருப்பார்கள், மாதக் கணக்கில், சாமான் வாங்காத லட்சுமியின் கணக்கில் பற்று எழுதி சம்பளத்தைக் குறைத்துக் கொடுக்கும் நிலை இருக்கிறது. இன்னும் முறைப்படுத்தப் படவில்லை. ஏதோ எடுபிடி தொழிற்சாலை மாதிரி இருக்கிறதே தவிர தனியார் தொழிற்சாலைகளில் உள்ள முறைகூட இல்லாமல் முறை கேடுகள் நடக்கின்றன. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், தமிழ்நாட்டிலே 8 பிரஸ்கள் இருக்கின்றன. எல்லா மாவட்டத்திலும் மாவட்டத்திற்கு ஒன்று வேண்டுமென்று கேட்கப்படு கிறது.

புதுக்கோட்டையில் இருக்கும் பிரஸ் கிட்டத்தட்ட அநேகமாக மாவட்டத்தின் கெஜட்டுகளை ஒழுங்காகத் தான் கொடுக்கிறார்கள். அதிலே குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இங்குதான் பார்க்கிறோம், நமக்குத் தேவையான புத்தகங்கள் உடனே கிடைப்பதில்லை. லோக் சபாவில்கூட தனி அச்சகம் வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி சட்ட மன்றத்திற்கும்,—இதை சட்டமன்ற மானியத்தில் பேசியிருக்கலாம்—ஒரு அச்சகம் வேண்டும். அப்படியிருந்தால் இரவில் வேலை செய்து இன்றைக்கு சைக்ளோ செய்யும் பல விஷயங்களை அச்சிட்டுக் கொடுக்க—லோக் சபாவில் கொடுப்பது மாதிரி கொடுக்க—உதவிகரமாக இருக்கும். வேலையும் நன்றாக இருக்கும், சிறப்பாக நடத்துகிறோம் என்றிருக்கும். ரிப்போர்ட் காலையிலே வருவதற்குப் பதிலாக இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

இன்னொன்று இந்த ஆண்டுதான் மதுரையில் அச்சகத்தைத் திறக்க இருப்பதாக அறிகிறேன். அந்த அச்சகத்தினைத் திறக்க ஏற்பாடுகள் செய்து இடம் எல்லாம் பார்த்து ஒரு வருஷ காலமாகிவிட்டது. துரிதமாக இந்த ஆண்டு அச்சகக் கட்டடங்களை முடித்து ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





ஹைக்கோர்ட்டில் இருக்கும் அச்சகத்தில் அவர்களுக்குத் தேவையான பி வற்றை அச்சிட்டுக் கொள்ளுகிறார்கள். சிறையில் இருக்கும் அச்சகத்தில்கூட நம்முடைய அருமைத் தொழிலாளர்கள் போய் பயிற்சி கொடுக்கிறார்கள். மின்ட் அச்சகத்திற்காக இன்னொரு இடத்தில் பிரித்து வைப்பதற்காக இடம் பார்த்திருப்பதாக அறிகிறேன். அதிலே 800 பேருக்கு வேலை கொடுக்க முடியும். மின்ட் அச்சகத்திலே மூன்று ஷிப்ட் ஆக்கி அதற்குத் தக்கபடி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதன் மூலமாக இப்போது இருக்கும் பல அரியர்ஸ் இல்லாமல் போகும். அந்த அச்சகத்தில இவ்வளவு சிரமமான நிலைமையில் கூட திறமையாகப் பணி யாற்றக்கூடிய ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கூற விரும்புகிறேன்.

என்னுடைய வெட்டுப் பிரேரணையில் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது சென்னை அரசாங்க அச்சகத்தில் பணியாற்றுபவர்களின் ஊதியத்தை உயர்த்தவும், அச்சகத்தை விரிவுபடுத்தவும் உடனடி நடவடிக்கை தேவை என்று கூறியிருக்கிறேன். இவ் வாண்டில் மதுரையில் 1,000 பேருக்கு வேலை கொடுக்கும் சர்க்கார் அச்சகத்தைத் திறப்பதைப் பற்றி, சிந்திக்க வேண்டுமென்ற முறையில் வெட்டுப் பிரேரணை கொடுத் திருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கும் வகையில் மதுரையில் திறக்க இருப்பது போல் திறக்கவேண்டு மென்று மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பதிவுத் துறையைப் பற்றியும், அரசு அச்சுத் துறையைப் பற்றியும் எடுத்துக் கூறிய கருத்துக்களை மிகவும் கூர்ந்து கவனித் தேன். ஒரு பிரச்சினையில் என்னுடைய விளக்கத்தைச் சொல்ல வேண்டியது, இந்த மன்றத்தின் முன் எடுத்துக்கூற வேண்டியது எனது முக்கிய கடமையாகும்.

இன்று தொழிலாளர் மானியம் பற்றிய குறிப்புரைகள் தாமதமாக வந்து சேர்ந்தன என்றும், அதற்குக் காரணம் அரசாங்க அச்சுத் துறை தான் என்றும் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூட, இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை அவ்வப்போது அச்சிட்டுத் தருவதில் தாமதம் ஏற்படுகிறது என்று கூறினார்கள். கோட்டையில் ஒரு தனி அச்சகப் பிரிவை ஏற்படுத்த வேண்டு மென்று சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்வேன்—இங்கு ஒரு கிளை அச்சகப் பிரிவு தனியாக வேண்டுமென்பது தனிப் பிரச்சினையாகும். இன்னும் சொல்லப்போனால் எப்படி நீதிமன்றத்திற்குத் தனி அச்சகப் பிரிவு இருக்கிறதோ, அதுபோல் இங்கு ஒரு அச்சகப் பிரிவு இருப்பது வரவேற்கத்தக்கது என்பது என்னுடைய எண்ணமாகும்.

ஆனால் தொழிலாளர் நலமானியக் குறிப்பு இன்று தாமதமாகத் தரப்பட்டது ஏன் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டும். எனது முன்னுரை 23–3–1972 காலை 8 மணிக்கு அச்சாக்கப்பட்டு செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் தாமதம் எதுவும் இல்லையாது. இந்த ஆய்வுரைகள் 21–3–1972 மாலை 3½ மணிக்குத் தான் இங்கிருந்து அச்சுத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழாக்கம் 180 பக்கம், ஆங்கிலம் 95 பக்கம். இதை அச்சடித்து திருத்தி அனுப்ப வேண்டியிருக்கிறது. இது மிகவும் குறுகிய நேரம் என்பதை எடுத்துக் காட்டுவேன். அதனால் தான் இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, அரசாங்க அச்சுத் துறையிலே ஏற்பட்ட தாமதம் அல்ல. தொழிலாளர் நலத் துறையில் இருந்து ஆய்வுரைகள் அனுப்புவதற்குத் தாமதமாகி விட்டது. ஒரு துறை செய்த தவறையோ, தாமதத்தையோ திறமையாக வேலை செய்யும் இன்னொரு துறை மீது குற்றம் சாட்டுவதென்பது அவர்களுக்கு இருக்கும் உற்சாகத்தை குறைத்துவிடும் என்று கருதுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தொழிலாளர் இலாகாவிலோ தவறு ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இரண்டு இலாக்காக்களும் அவர் கீழ் இருப்பவைதான்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததைப் போல் இந்தத் தாமதத்திற்காக வருந்துகிறேன். இதில் மற்றொரு முக்கிய விவரம் என்னவென்றால் அச்சுத் துறைக்கும், தொழிலாளர் நலத் துறைக்கும் நான் அமைச்சராகயிருக்கிறேன். மற்ற துறைகளின் குறிப்புகளெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அச்சிட்டுத் தரப்பட்டுள்ளன. தொழிலாளர் நலத்துறை முன்னறிக்கை மட்டும் தாமதமாக வந்திருக்கிறது. இந்தத் தாமதம் இனிமேல் ஏற்படாமல் அந்தத் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதையும், உங்களுடைய கருத்து அவர்களுக்கு ஒரு முன்னறிவிப்பாக இருக்கும் என்பதையும் நான் மனமார உணருகிறேன்.

அரசாங்க அச்சுத் துறையில் இன்றைய தினம் எந்த அளவுக்கு வேலைகள் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றால்—முன்பு நாம் எழு லட்சம் ரூபாய் அளவுக்குத் தனியார் அச்சகங்களில் சர்க்கார் வேலைகளுக்காக ஆர்டர் கொடுத்து வந்தது இப்போது எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்றால், இப்போது நாம் மூன்று லட்சம் ரூபாய் அளவுக்குதான் இன்று நாம் வெளியார் அச்சகங்களுக்கு ஆர்டர் தந்து வருகிறோம். வெளியார் அச்சகங்களுக்கு ஆர்டர் கொடுப்பது நிறுத்தப்பட்டு எல்லாம் அரசு அச்சகத்தில் நடைபெற வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.



குறிப்பாக அண்ணா சாலையில் 499 பேர் பணியாற்றுகிறார்கள். அப்படிப் பணியாற்றும்படியான அந்தத் தொழிலாளர்களில் பெண் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள் என்று மதிப்பிற்குரிய கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு இதற்கு முன்பு ஒரு பாத் ரூம் கூடத் தனியாக இல்லை. இந்த அரசு வந்த பிறகு நான் இந்தத் துறையை மேற்கொண்ட பிறகு, அடிக்கடி "சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன்" என்ற அடிப்படையில் அங்கு சென்று உள்ள குறைகளை அறிந்து கூடுமான வரையில் அக் குறைகளை நிவர்த்தி செய்து வருகிறோம். அவர்களுக்கு வேண்டிய பல வசதிகளைச் செய்து வருகிறோம். இன்னும் முழுமையான வசதிகள் விரைவில் செய்து தரப்படும்.

சென்னை மைய அச்சகத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கெல்லாம் விளக்கு கூட மங்கிய விளக்காகத்தான் இதற்கு முன்னதாக இருந்து வந்தது. இப்போது தமிழக அரசால் நல்ல ஒளி விளக்குகள் அமைக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னதுபோல் குடிதண்ணீர் வசதி இதற்கு முன்னதாக இல்லை. இப்போது செய்து தரப்பட்டிருக்கிறது. சைக்கிள் ஸ்டாண்டு தனியாகக் கட்டித்தர வேண்டுமென்று தொழிலாளர்கள் சொல்லி வந்தனர். அந்தக் கோரிக்கை குறித்தும் கழக அரசுதான் வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது.

இங்கே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மைய அச்சகத்தில் நடைபெற்ற ஒரு தவறு பற்றியும், தொழிலாளர்களுக்குச் சம்பளம் உயர்த்தி தரப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு கே.டி.கே. அவர்களும் அனந்தநாயகி அம்மையார் அவர்களும், லத்தீப் அவர்களும் மற்றும் அத்தனை பேரும் அச்சுத் துறை பற்றிப் பேசும்போது சம்பள விகிதம் அதிகமாகத் தரப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது தரப்படுகிற சம்பளவிகிதம்—கம்பாசிட்டர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 160; அகவிலைப்படி ரூ. 15; நகர ஈட்டுப்படி ரூ. 15; வீட்டு வாடகைப்படி ரூ. 15, ஆக மொத்தம் 205 ரூபாய் அவர்களுக்குத் தரப்படுகிறது. பைண்டர்களுக்கு மொத்தம் 195 ரூபாய் தரப்படுகிறது. 160 ரூபாயிலிருந்து ஆண்டுதோறும் ஐந்து ரூபாய் இன்கிரிமென்ட் என்ற அளவில் கொடுக்கப்பட்டு கடைசியாக 240 ரூபாய் என்ற அடிப்படையில் அவர்களுடைய ஊதிய விகிதம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே மெஷின்மென்களுக்கும் பைண்டர்களுக்குத் தரும்படியான அளவில் ஊதியம் தரப்படுகிறது. அதாவது சம்பளக் கமிஷன் அமைவதற்கு முன்னதாக இருந்ததைவிட இப்போது 46 ரூபாய் அதிகமாகத் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்ற சம்பள விகிதப்படி மாதக் கடைசியில் தொழிலாளர்களுக்குச் சம்பள பில் கொடுக்கப்படுகிறதா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மஸ்தூர்களுக்கு என்ன விகிதம் ?

**மாண்புமிகு திரு என்.வி நடராசன் :** மஸ்தூர்களுக்கு என்ன விகிதம் என்ற விவரம் இல்லை. இந்த அடிப்படையில் மஸ்தூர்களுக்கும் ஊதியம் அதிகப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சம்பளமே போதும் என்று சொல்லவில்லை. நிதி வசதி ஏற்படும்போது அதிகமாக மேலும் கொடுக்க முயற்சிக்கலாம். கம்பாசிட்டர் வேலை செய்வதிலே எவ்வளவு தொல்லை இருக்கிறது என்பதை நான் அனுபவ பூர்வமாக அறிந்தவன். அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்க அரசு தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைய அச்சகத்தில் நடைபெறும்படியான வேலைகள் தாமதமாக நடைபெறுவதாகச் சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்வேன்— தமிழரசுப் பத்திரிகை, பள்ளிப் பாடப்புத்தகங்கள் 40 லட்சம் பிரதிகள் இரண்டு பொதுத் தேர்தல் வேலைகள், இரண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கைகள் ஆகியவை எல்லாம் அடிக்கப்பட்டுள்ளன. ஏழு லட்சம் ரூபாய்க்கு வெளியே கொடுக்கப்பட்ட ஆர்டர்கள் மூன்று லட்சம் ரூபாய் அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றக் குறிப்புகளை அச்சடித்து தருவதில் இப்போது தனிக் கவனம் செலுத்தப்பட்டு இதற்கு முன்னதாகவே நடந்த செலவுகள் தனி பற்ற அனைத்தையும் அச்சடித்துத் தந்திருக்கிறார்கள் என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டமன்றத் துறையில் உள்ள அதிகாரிகள், அலுவலர்கள் அவ்வப்போது அந்தப் பிழைகளைத் திருத்தி அரசு அச்சகத்திற்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதால் தான் உங்களுக்கு அச்சிட்டுத்தரப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர அச்சுத்துறையில் தாமதம் இல்லை என்பதை நான் திட்டவட்டமாக இங்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஆக அச்சுத் துறையில் உள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் நல்ல ஒத்துழைப்புத் தந்து பணி செய்வதை, நான் எடுத்துக் கூறவில்லை என்றால் அது நன்றி மறந்ததாகும்.

திரு. லத்தீப் அவர்கள் பணியாளர்களை நியமிப்பதில் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் சலுகை தரவேண்டு மென்று சொன்னார்கள். பொதுவாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் எந்த அளவிற்கு சலுகைகள் வரையறை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதை விவரமாக ஆதாரத்துடன் எழுதியனுப்பினால் பரிசீலனை செய்து தவறு இருக்குமானால் அதைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

மாண்புமிகு மருதாசலம் அவர்கள் கேட்டார்கள் இலட்சுமி என்று ஒரு பெண் வேலை செய்தால், அதே பேரில் இன்னொரு இலட்சுமி இருந்தால் யார் கடன் வாங்கினாரோ அவருக்குப் பதிலாக வேறு ஒரு இலட்சுமிக்கு நோட்டிஸ் போவதாகச் சொன்னார்கள். திரு கே. டி. கே. தங்கமணி அவர்களும் அதே போல் சொன்னார்கள்.



எந்த இலட்சுமி வாங்கினாலும் ஏமாற்றிவிட முடியாது. அவரிடம் தக்க உறுதி வாங்கிக் கொண்டு தான் கடன்கள் தருவது, வசூலிக்கப் படுவது போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே ஒரு இலட்சுமி என்ற பெயர் வேறு இலட்சுமி என்ற பெயரை ஏமாற்றிவிட முடியாது. தக்க முறைகள் தாம் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதில் தவறு ஏற்படாமல் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்பது உறுப்பினர் அவர்களின் விருப்பம் என்றால் அதைச் சர்க்கார் வரவேற்கும்.

மாவட்ட தலைநகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அரசு அச்சகம் அமைய வேண்டுமென்று கூறப்பட்டது. மதுரையில் அச்சகம் அமைப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் அச்சகம் அமைப்பதற்கான பணியில் ஈடுபட்டு வருகிறோம். ஏறக்குறை 800 பேருக்கு அங்கு வேலை தரப்படும், சென்னையில் கூளைப் பகுதியில் யானைக்கவுணி என்ற பகுதியில் ஒரு கட்டடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு 800 பேருக்கு வேலை தருவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

சில இயந்திரங்கள் மைய அச்சகத்திலிருந்தும், அண்ணா சாலை அச்சகத்திலிருந்தும் அங்கு மாற்றப்பட்டு வருகின்றன. அந்த அச்சகம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகத் துவக்கப்படும். அரசின் எண்ணம் ஆயிரம் பேர்களுக்காவது வேலை தரவேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில் வெளியார் அச்சகங்களுக்கு வேலைகள் நிறுத்தப்பட வேண்டும். மற்ற மாவட்டங்களில் நிதி நிலை வசதி ஏற்பட்டவுடன் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒவ்வொரு அச்சகம் அமைக்க நிச்சயம் ஏற்பாடுகள் செய்யும் இந்த அரசு. மைய அச்சகத்தில் முன்பு நடைபெற்ற தவறு பற்றிச் சொன்னார்கள். வெளியார் அச்சகத்தில் ஆர்டர் கொடுத்த வேலைக்கேற்ற அச்சுத் தாள் தந்ததை முறை தவறி கையாடல் செய்தது இப்போது கண்டு பிடிக்கப்பட்டு எல்லா விசாரணைகளும் முடிவடைந்திருக் கின்றன. காவல் துறையினர் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் கட்டத்தில் இருக்கிறது. அதற்கு மேல் அதுபற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை.

மற்றொன்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல், மேலவையில் நான் எதிர்க் கட்சியில் இருந்தபோது என் அருமைத் தோழர் மதிப்பிற்குரிய பூவராகன் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள் இத் துறைக்கு. நான் கேட்டேன், அரசு அச்சகங்களுக்கு நீங்கள் அடிக்கடி போய் என் சர்ப்ரைஸ் விஸிட் செய்யக் கூடாது? எவ்வளவோ தவறுகள் நடக்கின்றனவே, ரீம் ரீமாக பேப்பரை வெளியில் கொண்டு வந்து வேஸ்ட் பேப்பர் என்று போட்டு விடுகிறார்களே என்று. மேலும் தொழிலாளர்களுக்கு பன், காப்பி தருவதில்லை என்றும் சொன்னேன். என் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நான் அமைச்சராகி அச்சுத்துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் சர்ப்ரைஸ் விசிட் சென்று பார்த்ததில் ஏராளமான நல்ல காகிதத் தாள்கள் குப்பையில் போட்டு வைக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரை கூறி, இனிமேல் ஒழுங்காகக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னேன்; அதனால் 1968-69-ல் ஏறத்தாழ ரூ. 28,186 வேஸ்ட் பேப்பர்

மூலம் வருவாய் கிடைத்தது. 69-70-ல் ரூ. 51,383. 70-71-ல் ரூ. 1,77,236. 71-72-ல் ரூ. 1,43,444 பெப்ரவரி முடிய வெஸ்ட் பேப்பரில் இருந்து மட்டும் வருவாய் கிடைத்துள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 1970-71-க்கும் 71-72-க்கும் கொஞ்சம் குறைந்திருக்கிறதே 30,000 ரூபாய்.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:** பிப்ரவரி முடிய என்றேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அதை நினைவில் கொள்ளட்டும். இவ்வாறெல்லாம் தவறுகள் திருத்தப்பட்டு தொழிலாளர்களும் தங்கள் கடமைகளை நல்லமுறையில் செய்து வருகிறார்கள். எனவே அரசாங்க அச்சகம் நல்லமுறையில் பணியாற்றி வருகிறது என்பதில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கட்சிப் பாகுபாடு இன்றி பெருமைப்படலாம் என்பதற்காகக் கூறுகிறேனே தவிர வேறு எதற்காகவும் அல்ல.

மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துக்களையும் நினைவில் கொண்டு அரசு ஆவன செய்யும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பதிவுத் துறை பற்றிச் சொன்னார்கள். அங்கு சென்றால் ஒரு நாற்காலி கூட இல்லை, அப்படி இருந்தாலும் அது மூன்று கால் நாற்காலியாகத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள் அம்மையார் அவர்கள். அது காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலையாக இருக்கலாம். இப்போது நான்கு கால்கள் வந்து விட்டன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போதும் அதே நிலையில்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:** பெரும்பாலான நாற்காலிகளுக்கும் நான்கு கால்கள் வந்து விட்டன. அப்படிச் சில நாற்காலிகளுக்கு நான்கு கால்கள் இல்லை என்றால் அது விட்ட குறை தொட்ட குறையாக இருக்கலாம், அவற்றையும் சரிசெய்து விடலாம்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தரவேண்டிய ப்ரமோஷன் தரவில்லை என்று சொன்னார்கள். அது பற்றி மிகவும் கண்காணிப்போடு கவனிக்கப்பட்டு விரைவில் அவர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற முயற்சிக்கும் என்று இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப் பரிசீலிக்குமாறு அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறேன்.

சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஒரு இடத்தில் 1500 பத்திரங்கள் பதிவு செய்வதற்கு ஒன்றாக இருக்கிறது. இன்னொருயிடத்தில் 4,000 பத்திரம் பதிவு செய்ய ஒரு அலுவலகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். 1500-க்கும் மேலாக இருந்தால் வேறு ஒரு கிளை ஆபீஸ் பக்கத்தில் துவங்கப்படும் என்பதுதான் பொதுவான திட்டமாகும். குறிப்பிட்ட அலுவலகங்கள் பற்றித் தகுந்த விவரம் தெரிவித்தால் பரிசீலனை செய்து புது அலுவலகம் திறப்பதற்கு ஆவன செய்யப்படும்.





ஆடிட் சப் ரெஜிஸ்ட்ரார் பதவிகள் இருப்பதால் 2,290 பேர்கள் சொத்து மதிப்பைக் குறைத்துப் போட்டதாகவும், உரிய ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணம் கட்டாத 1021 நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதில் ரூ. 1,93,576 இத்துறைக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. எனவே ஆடிட் சப் ரெஜிஸ்ட்ராரால் அனுகூலமே தவிர நஷ்டம் இல்லை.

மற்றும் கனம் உறுப்பினர்கள் கூறிய பல்வேறு யோசனைகளும் நினைவில் வைத்துக் கொள்ளப்பட்டு தக்க சமயத்தில் ஆராயப்படும்.

நீங்கள் அனைவரும் உங்களது ஒருமித்த ஆதரவைத் தந்ததற்காக உள்ளபடியே பெருமைப்படுகிறேன். இந்த அரசு உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பங்களா தேஷ் இன்க்ரீஸையாவது வாபஸ் வாங்கிக் கொள்கிறீர்களா?

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:** நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அடிக்கடி பேசும்போது யுத்தம் முடிந்து விட்டது, போர் தீர்ந்து விட்டது என்று யாரும் எண்ணக் கூடாது என்றும் மீண்டும் எந்த நேரத்திலும் போர் மூளுமோ என்று சொல்லிக் கொண்டிருப்பதால் அதில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது நம் முக்கியமான கடமையாகும்.

**திரு என். மருதாசலம்:** இந்த அச்சகத்தில் மஸ்தூர் வைத்துத்தான் வேலை வாங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். மெசன்ஜர் ஸ்கேல் இல்லை என்று சொல்கிறார்கள். மெசன்ஜர் ஸ்கேல் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் உறுதி கூறுவாரா? ஒரு லட்ச ரூபாய் நஷ்ட ஈட்டை அந்தத் தொழிலாளர்கள் தலையில் போடாமல் அவர்களிடமிருந்து வசூல் செய்யாமல் இருப்பதற்கு அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:** தொழிலாளர் ஊதியத்திலிருந்து அந்த நஷ்ட ஈட்டை ஈடு செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆனால் யார் தவறு செய்தார்களோ அந்த அதிகாரிகளிடம் அந்தத் தொழிலாளர்கள் கடன் பெற்று இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களிடமிருந்து ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறதே தவிர தொழிலாளர்கள் அனைவரிடத்திலிருந்தும் நஷ்ட ஈட்டைக் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த ஆன்யுவல் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட் ஆப் தி ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் டிபார்ட்மெண்ட் 1968-69-க்கு அப்புறமாக வரவில்லை. அதனுடைய காரணம் என்ன? அப்படி வந்து இங்கே வைக்கவில்லையா?

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்:** அது பற்றி விசாரித்து ஆவன செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : விவாதங்கள் முடிவுற்றன. இப்போது மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

நிதிக் கோரிக்கை எண் 5-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு என். மருதாசலம் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு ஜே. ஜேம்ஸ் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் : 5—பத்திரப் பதிவுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,31,51,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் : 34-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் : 34—எழுது பொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,82,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பிற்பகல் 1·22 **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இன்று மாலை 4 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

[மாலை கூட்டத் தொடர்—4-00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. சீனிவாசன் அவர்களின் தலைமையில் பேரவை மீண்டும் 4-03 மணிக்குக் கூடியது.



### (3) 1972—73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் : 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்—தொடர்ச்சி.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மானியக் கோரிக்கை எண். 24 தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர்—அதன்மீது முன் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீது விவாதம் துவங்கும். முதலில் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் பேசுவார்.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன்** : இந்த மானியத்தின் மீது நான் இங்கே வைத்துள்ள முன் உரையை @குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : In support of my cut-motion I would like to say a few things.

In the book given by the Hon. Minister for Labour there is a very good piece of information which I would like to bring to the attention of the House. 'The situation in Tamil Nadu especially during the last one year, with regard to labour unrest has been far from satisfactory'. This is what is stated. The labour unrest, if we take into account even the years that have preceded this year, from 1967 onwards, this year there has seen the worst labour unrest. During the last one year, the unrest has been maximum. The peace in labour front has been the minimum.

The statistics speak for themselves. With regard to the Hindusthan Telepprinters, Madras, the man-days lost is more than 50,000. In the Aluminium Works, Sundaram Textile and textile mills in Coimbatore and taking into account the Simpson Group also, the total number of man-days lost is 8 lakhs. (Thirumathi T. N. Anandanayaki : It is 22 lakhs). If we take into account the Madras Rubber Factory which is not counted here, it comes to 22 lakhs. Government must find out who is responsible for this.

Let me now take the Simpson Group of companies. I do not want to go into the details since there is now peaceful atmosphere there and I would not like to upset the apple-cart and destroy the peaceful atmosphere there. According to me the ruling party has been indirectly responsible in one way for starting the whole problem in Simpson Group. That is my accusation. I know that

---

@385—401-ம் பக்கங்களில் 7-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

the Hon. Minister in his reply will explain. I am saying this so that what has happened in Simpsons might not be repeated. Political parties should not, especially when that political party is a ruling party, try to take charge of the trade union in any concern; for, when a dispute comes between union and management and it comes up before the Government, Government will not be able to take an impartial attitude, since trade union belongs to ruling party. It is necessary that the ruling party does not try to enter the trade union field. This, the ruling party should learn from what has happened in Simpsons. As I had told before, when a dispute comes before Government, arbitration is completely lost since trade union belongs to ruling party. There cannot be dispassionate consideration. Government loses its objectiveness. It becomes subjective. If the trade union is led by a third party, Government can judge things dispassionately. I do not want to go further into this matter. Let us forget the past. Let us think of the future.

The other important point is whether political parties should enter trade union or trade union should be headed by a person working inside the company. That is a point which had been discussed several times. Our party had been stating all these years that no political party should head trade union. I have now begun to feel whether that stand is correct. I have come to question my own party's stand. It is because of this. The capitalist management have a tendency to consider any person working in company as not an important person. They won't bother about him at all. Only if he has political strength, he would have bargaining power with management. That is the conclusion I have come and members of the ruling party might appreciate that.

For instance, take one company, X or Y. There a person is working and he becomes a leader of the trade union there. He walks into the Manager's Office but a number of times he has been asked to come the next day or some other day. He might even say that he is not prepared to have any negotiations with the leader of the Trade Union. At the same time if the leader happened to be Member of the Assembly or a Member of Parliament or a person who has a huge political organisation behind him or a big All-India Trade Union Organisation like the I.N.T.U.C. or A. I. T. U. C., the private management or a public body like the Electricity Board would get frightened because they



would feel that he had got the tremendous backing behind him. Consequently, the bargaining power of the trade union leader is considerably increased by the fact that (1) he belongs to a political party and (2) that he has got the huge organisation backing him. Because of that, the workers are also forced to come to the trade union which has political backing. Then, Sir, it is because of the wrong policy of the management and the capitalists that the Government are forced to intervene in favour of the trade union.

In this connection, I wish to refer to the railway union headed by an M.P. From Madurai or Coimbatore, he is able to contact the Prime Minister of India within half an hour and he is able to settle the issue quickly.

So, my point is that the primary responsibility rests on the private and public management and they are to be blamed and not the workers. Therefore, if it is possible for the management to give an assurance that they would first prefer a trade union leader who is non-political and who is working there, it is for that management to give that assurance, and the Government would be good enough to accept that assurance. I leave it at that.

Then with regard to the Madras Rubber Factory I thought that they would give greater details about it. As the matter is over, I do not want to pursue the matter.

Then I want to draw the attention of the Government to omnibuses which have been nationalised by the Government. I am not bothered about the owners of omnibuses. But I am concerned about the workers who are employed. I want to know whether the Government are providing alternative jobs for them. A number of them are unemployed and they do not have any trade union rights and they are practically on the roads. I request the Government to consider their case sympathetically.

Then with regard to the unemployment problem, have we done anything to solve it? That is the most important problem. I have a feeling that in the last two or three years we have not done anything seriously to solve it. Therefore, my charge against the Government is that they have not taken steps to solve

[Dr. H. V. Hande] [1972, மார்ச் 24

it in the manner in which it should have been done. In fact I would have been happy if they had mentioned about it in the printed Note.

Lastly, I come to an important problem affecting the workers of Ashok Leyland. I wanted to bring that matter in some other from in this House but I thought that I could refer to it on this occasion when the Labour Demand is under discussion. I request the Hon. Minister to give us some indication as to what is the position of the workers of Ashok Leyland. Now more than 1,000 of them are victims of partial or full lay-off and the reason for that was that the workers adopted go-slow policy. I am not going into other aspects of the matter. Though the Management has agreed to call off the lay-off during the meeting on Saturday the 17th instant with the Hon. Minister for Labour, yesterday all the workers, who went for work had to come back on account of the adamant attitude of the Management. I would be very happy if the Hon. Minister would use his full power to settle the issue. The reason given by the Management for the lay-off is the non-availability of certain parts for the Assembly Section. But the parts Manufacturing Section (Machine Shop) is working continuously with full capacity and the parts are put in stock.

Sir, the turnover for the year 1970-71 is Rs. 33 crores but the bonus given is Rs. 24 lakhs. The turnover for the year 1971-72 is Rs. 37 crores and the bonus eligible is Rs. 27 lakhs. The demand of the workers is Rs. 27 lakhs (without ex-gratia).

Then the amount allotted for Income-tax is Rs. 110 lakhs. But they have paid only Rs. 80 lakhs. When the company allots Rs. 110 lakhs for Income-tax it shows that they get profit. For the past four years the allotted amount for Income-tax and the actual amount remitted does not tally. Always there is a difference of about Rs. 30 lakhs in allotment and payment. Why this anomoly?

Then the Reserve Fund of the company as on date is Rs. 500 lakhs. Now what are the demands of the workers? Their demands are as follows :—

(1) Lay-off should be lifted and all the workers should be allowed to work.



1972 மார்ச் 24] [Dr. H. V. Hande]

(2) The reasonable demand of bonus should be accepted by the Management.

(3) In order to create disunity among the workers the management would not adopt the divide and rule policy. I also feel that the Management should completely drop this policy.

Finally I come to another matter. Though the turn-over of 1971-72 has exceeded 1970-71 by Rs. 4 crores, the Management is not willing to pay bonus with proportionate increase. Why ? The reason given by the Management is that in spite of the increase in total turn-over, the company has made lesser profit than that of the year 1970-71 due to the following reasons :—

Amount of royalty paid for the Current year—Rs. 45 lakhs. 1970-71—Rs. 36 lakhs.

Amount of royalty paid for the Current year Rs. 45 lakhs. There is an increase of Rs. 9 lakhs. Why?

Then the amount of interest paid to Bank of England during 1970-71 is Rs. 58 lakhs and during 1971-72, Rs. 73 lakhs. There is an increase of Rs. 15 lakhs. Why ? Sir, these facts clearly go to prove that they have made more profit and they have paid more loyalty and interest to the firm and Bank in England than bonus to the workers here. When these facts are there, they cannot escape. I shall be happy if the Hon. Minister intervenes and pulls up the Management and try to settle the issue as early as possible and not allow it to become a major crisis as has developed in the case of Simpson workers and the textile workers of Coimbatore.

***திரு கா. வேழவேந்தன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே தொழிலாளர் நல அமைச்சர் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை நெஞ்சார வரவேற்று அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

இன்றைக்கு தொழிலாளர் நிலைமையைப் பற்றி எனக்கு முன்னர் பேசிய எதிர்க் கட்சியைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்னர் இருந்த தொழில் அமைதியைக் காட்டிலும், இப்போது தொழில் அமைதி குறைவு என்று சொன்னார்கள். நான் அதை மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். ஏனென்றால் அப்படிப்பட்ட தொழில் அமைதி கெடுவதற்கு காரணம் என்ன என்பதை அவர்களெல்லாம் உளமார ஒத்துக் கொள்வார்கள்.

1967-க்கு முன்னால் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்தால் கேட்பதற்கு ஆளில்லாமல் இருந்தது. தொழிலாளர் நலத்துறை என்பதே கூட, பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்று யாரோ ஒரு அமைச்சரிடத்தில் ஒளிந்து கொண்டிருக்கும். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவை ஏற்பட்ட பிறகுதான் தொழிலாளர் நலத்துக்கென்று அமைச்சவையில் ஒரு அமைச்சரை, அவர்களுக்கு இருக்கும் 18 மணி, 20 மணி நேரத்தை அதற்காகச் செலவழிக்க வேண்டுமென்று உருவாக்கினார்கள்.

1967-க்குப் பின்னால் பல்வேறு நிலைகளில் போராட்டங்கள் நடந்து வருவதற்கு முக்கிய காரணம், இந்த அரசை விட்டால் இது போன்ற வேறு ஒரு அரசு நமக்குக் கிடைப்பது அரிது; ஆகவே இந்த நேரத்திலேயே நம்முடைய கோரிக்கைகளை எழுப்ப வேண்டுமென்று துணிந்து செயல்படுகிறார்கள். பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு கோரிக்கையை எழுப்புவது நல்லதுதான். ஆனால் நியாயமற்ற முறைகளிலே போராட்டம் நடத்துவது நல்லதுதானா என்பதை அவர்கள் யோசிக்க வேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்—அமைச்சர்கள் நடுநிலையாக நடந்துகொள்ளவில்லை என்று குறை கூறுகிறார்கள். அமைச்சர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது இன்றைக்கு துணைத் தலைவராக இருக்கின்ற உங்களுக்கே தெரியும். நான் தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது அரசாங்கம் எப்படி நடந்துகொண்டது என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

THIRU J. JAMES : The hon. Member should not refer to the Chair.

MR. DEPUTY SPEAKER : It is always better. . .

THIRU K. VEZHAVENDAN : I am referring only to an incident.

MR. DEPUTY SPEAKER : Sometimes I will have to give some reply.

**திரு. கா. வேழவேந்தன் :** நான் சொல்ல வந்த நிகழ்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட நீங்கள் இங்கே இருப்பதால், அதை மறைப்பதற்கு எண்ணவில்லை. சட்டமன்ற உறுப்பினராக இருந்த நீங்கள் விருதுநகரிலே துலுக்கப்பட்டி சிமின்ட் தொழிற்சாலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, நீங்கள் கைது செய்யப்பட்டு உள்ளே வைக்கப்பட்டீர்கள். அதற்கு முன்பு இப்படி ஒரு வரலாறு நடைபெற்றது உண்டா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொழிலாளர் போராட்டத்தில் ஒருவரை கைது செய்வது ஒன்றும் கஷ்டமானது அல்ல.

**திரு. கா. வேழவேந்தன் :** ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே, ஆளும் கட்சியால் கைது செய்யப்பட்டது கிடையாது. அப்படிப்பட்ட இந்த அமைச்சரவையைக் குறைகூறுவது நியாயமா என்பதற்காகவே இதைச்





சொல்கிறேன். நீங்களே சாட்சியாக இருப்பதால்தான் அதைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** நான் சட்டமன்றத்திலே எல்லோருக்கும் பொதுவானவன்.

**திரு கா. வேழவேந்தன் :** இப்போது நீங்கள் துணைச் சபாநாயகராக இருப்பதால் எல்லோருக்கும் பொதுவானவர்தான். அரசாங்கம் எவ்வளவு நேர்மையாக நடந்துகொள்கிறது என்பதற்காக இதைச் சொன்னேன்.

தொழிலாளர் நல அமைச்சர்களும், முதலமைச்சர்களும் தொழிலாளர் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது வெளிப்படையாகவே எல்லோருக்கும் தெரியும். 1967-க்குப் பின்னால், இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னால் தொழிலாளர் வர்க்கத்திற்கு நாம் செய்து இருக்கிற ஆறு செயற்கரிய செயல்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இவை மற்ற மாநிலங்களிலே நடைபெற்றிருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

முதலாவதாக, போனஸ் விஷயத்தை எடுத்துக்கொண்டால், முதலிலே குறைந்தபட்ச போனஸ் 4 சதவிகிதமாக இருக்கிறது. இந்த அரசு வந்த பின்னால் குறைந்தபட்ச போனஸ் 8-1/3 சதவிகிதமாக இருக்க வேண்டுமென்று போராடி வருகின்றது. இதை மாற்றுக் கட்சிக்காரர்கள் பாராட்டினார்களா? இல்லையே ! எப்படித் தொழிற் சங்கங்கள் தொழில் அதிபர்களோடு போராட்டம் நடத்தி தங்கள் கோரிக்கைகளைப் பெறுகின்றார்களோ அதைப் போன்று இந்த அரசு மத்திய அரசோடு போராடி தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பெற்றிருக்கிறது. இது பாராட்டுவதற்குரிய ஒன்றாக இருக்க முடியாதா ?

அடுத்து, கிராஜூட்டி சட்டத்தை மாதத்தில் 15 நாட்களுக்குள்ள ஊதியத்தைக் கொடுத்தால் போதும் என்று வைத்திருந்தார்கள். ஆனால் இந்த அரசு ஒரு மாத ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கி வருகின்றது. டாக்டர் ஹண்டே அவர்களைப் போன்றவர்கள் இதைப் பாராட்ட முன்வருவார்கள் என்று நினைத்தேன். யாரும் பாராட்டாதது குறித்து உண்மையிலேயே மிக்க வருத்தப்படுகிறேன்.

அடுத்து, முதன்முதலாக தமிழ்நாட்டிலேதான் மே தினத்தை விடுமுறை நாளாக்க வேண்டுமென்று கட்டாயமாகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதுவும் இந்த அரசு வந்த பின்னால் நிறைவேற்றப்பட்ட சட்டம் என்பதை எண்ணிப் பார்த்தால் யாராவது பாராட்டாமல் இருப்பார்களா ? ஆனால் இங்கே பேசியவர்கள் அதைப் பாராட்டி ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

அடுத்தாற்போல் இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கன்சிலியேஷன் அதிகாரியை நியமித்தது. அதற்கு முன்னால் இரண்டு மூன்று மாவட்டங்களுக்கு ஒரு அதிகாரி இருந்தார்.

தொழிலாளர்கள் பிரச்சனைகளைக் கூறவேண்டுமென்றால் மாவட்டம் விட்டு, மாவட்டம் செல்லவேண்டும். இந்த அரசாங்கம் வந்த பின்னால் அந்த குறையைப் போக்க கன்சிலியேஷன் அதிகாரியை—லேபர் ஆபீசரை மாவட்டந்தோறும் நியமித்தது. இதைப்பற்றி எதிர்க் கட்சிக்காரர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். ஒருவரும் பாராட்டவில்லை என்பது வேதனைப்படத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, இன்றைக்கு லேபர் வெல்பேர் பண்டு என்று ஒரு நிதியை அமைத்து, அதற்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கி, தொழிலாளர் குடும்பங்கள், அவர்களுடைய எதிர்காலத்தில் என்னென்ன செய்யலாம் என்ற ஒரு உருப்படியான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறதே, அதைப் பற்றியும் எதிர்க்கட்சிக்காரர்கள் பாராட்டவில்லை.

அடுத்தாற்போல், டில்லியிலே அளிக்கப்பட்ட ஊதியக் குழுவின்—வேஜ் போர்டின்—பரிந்துரைகள் எல்லாம் அமல் நடத்த வேண்டுமென்று நமது தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கூட்டங்கள் கூட்டி, முதலாளிகள் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பேசியிருந்தார்கள். இதற்கு முன்னால் இந்த நிலை இருந்ததா? இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இதை எதிர்க் கட்சிக்காரர்கள் ஒருவரும் பாராட்டவில்லையே.

அடுத்து, இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில்தான் 'கேர்' உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதன்மூலம் இன்றைக்குப் பல்வேறு தொழிலாளர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு பெற்று வருகிறார்கள். இது இந்த அரசின் சாதனை இல்லையா? இதைககூட எதிர்க் கட்சிக்காரர்கள் ஒருவரும் பாராட்டவில்லையே ?

இவ்வளவு நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கும்போது, சிம்சனில் நடைபெற்ற சிறு பிரச்சனைகளை வைத்து எங்கு பார்த்தாலும் பெரிது படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத் தொழிலாளர் நல அமைச்சரவர்களும், முதலமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளை எதிர்க்கட்சிக்காரர்கள் அறியமாட்டார்களா? அதையெல்லாம் யாரும் சொல்லவில்லையே. எங்களுக்கு மற்றவர்களைப் போல் ஆர்ப்பாட்டம் செய்யவோ அல்லது ஜிகினா வேலை காட்டவோ தெரியாது. பிரச்சனைகளை எப்படி அணுக வேண்டுமோ அப்படியே அணுகி சுமுகமான முடிவினையே காண விழைகிறோம். இன்றைக்குப் பலன்களைப் பெறுவதிலே மூன்று வகையினர் இருக்கிறார்கள்.

உதாரணமாக, நாவல் மரத்தின் கனிகளைப் பெறுவதைச் சுட்டிக் காட்டுகிறேன். நாவல் பழம் நன்றாக பழுத்து, கனிந்து கீழே விழும் வரையில் காத்திருந்து அந்தக் கனியைப் பெற்றுக்கொள்வது ஒருமுறை. பழம் நன்றாக கனிந்த உடனே மரத்தை உலுக்கி, அந்தக் கனிகளைப் பெற்றுக்கொள்வது ஒருமுறை. இன்னொருமுறை நாவல் மரத்தையே அடியோடு வெட்டித் தள்ளி, கனிகளைப் பெற்றுக்கொள்வது.

நம்மைப் பொறுத்தவரையோ, அல்லது இந்த அரசைப் பொறுத்த வரையிலோ முதல் இனமாக இருக்க விரும்பவில்லை. மரத்தை உலுக்கி, கனிகளைப் பெற்றுக்கொள்ளும் இரண்டாம் இனமாகவே நாம் இருக்க



வேண்டும். அதுதான் நல்லமுறை. நமக்குத் தேவையான—தொழிலாளர்களுக்குத் தேவையானவைகளை அரசுக்கு முறைப்படி எடுத்துச் சொல்லி, தானாகவே கிடைக்கும் என்று காத்திருக்காமல், மரத்தை உலுக்கி கனிகளைப் பெறுவதுபோல, தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆனால், சில தீவிரவாதிகள் என்று சொல்லப்படக்கூடியவர்கள் இன்று மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதாவது அடிமரத்தையே வெட்டித் தள்ளி, கனிகளைப் பெற்றுக் கொள்வதைப்போல் செயல்படுகிறார்கள். அது மிகவும் தவறான முறை. மரத்தை விட்டுவைத்திருந்தால்தான், மீண்டும் கனிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இல்லையென்றால் ஒரே தடவையில் கனியும் தீர்ந்து விடும்; மரமும் போய்விடும். அப்படிப்பட்டவர்கள் எதிர்காலத்தைப் பற்றியே கவலைப்படாதவர்கள். அப்படிப்பட்டவர்களின் மன நிலையைக் கண்டிப்பாகப் போக்கியே ஆகவேண்டும்; அவர்களும் மனோநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இன்று கல்கத்தாவின் நிலையைப் பார்த்தால் நாம் அந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். தீவிரவாதிகளின் செயலால் இன்று கல்கத்தா நிலைகுலைந்து விட்டது. அண்மையில் மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் அங்கே சென்றிருந்தபோது கல்கத்தாவின் நிலைபற்றி தொழிலாளர்கள் சொன்னார்கள். தீவிரவாதிகளின் போக்கால் தொழிலதிபர்கள் தங்கள் நிறுவனங்களை வேறு மாநிலங்களுக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. தொழிலிலும் அமைதியின்மை நிலவி வருகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைய நிலை என்ன என்பதை நாம் ஒரு கணம் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்டத் தீவிரவாதிகளின் சுவடே இல்லாமல் போய்விட்டது. அங்கே சோதிபாசுக்களெல்லாம் சோதியை இழந்துவிட்டார்கள்.

நமது தமிழ்நாட்டிலே பலர், 'தொழில் அமைதி கெட்டால் கூட பரவாயில்லை தங்கள் லட்சியம் நிறைவேறினால் போதும்; தங்கள் பெயர் இருந்தால் போதும்' என்ற அளவிலே நடந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் இருக்க வேண்டுமென்றுதான் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்முடைய மாநில அரசு தொழிலாளர்களுக்கு கிராஜுவட்டி கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டபோது 'நாங்களே அதைக் கொண்டு வருகிறோம் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், பொறுத்துக் கொள்ளுங்கள்; இந்தியா முழுவதும் கொண்டு வருகிறோம்' என்று சொன்னார்கள் அதனால் இப்போது அதில் தீவிரம் காட்டாமல் பொறுத்திருக்கிறோம். இதையெல்லாம் மாற்றுக் கட்சிக் காரர்கள் உணரவேண்டும்.

[திரு கா. வேழவேந்தன்] [1972 மார்ச் 24

தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதியம் பற்றி அளிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பரிசிலனையில் இருப்பதாகத் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே குறிப்பாக அதிகமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஹோட்டல் தொழிலாளர்கள் தான். இன்றையதினம் அவர்கள் வயிற்றுப்பாட்டைக் கழிப்பதற்காகத்தான் பணியாற்றி வருகிறார்கள். ஓட்டல் முதலாளிகளும், பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டுகின்ற முதலாளிகளும் அந்தத் தொழிலாளர்களிடம் நல்ல வேலை வாங்கிட்டு, அவர்களுடைய ஊதியத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பது மிகவும் முக்கியமானதாகும். அது எதிர்காலத்திலே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக அமையும். எனவே, இத்தனை மாதம் பணி செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டுவர வேண்டும்.

மாலை 4-30 அதுமட்டுமல்ல; ஹோட்டல் தொழிலாளர்கள் மிகப்பெரிய அறையில் இருக்கிற [illegible] பரிமாறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு குடியிருப்பு இல்லை. ஒரு ஹோட்டல் கட்டுகிற நேரத்திலேயே ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு மனைகளை அமைத்தால்தான் அதற்கே லைசென்சு கொடுப்பது என்கிற ஒரு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாக்டரி சட்டம் இருக்கிறது. நல்ல படித்த பி.இ. அதிகாரிகள் எல்லாம் ஆய்வாளர்களாகப் போகிறார்கள். குறைபாடுகள் இருந்தால் முதலாளிகளிடம் சொன்னால் அபராதம் போட்டுக்கொள் என்று விடுகிறார்கள். பைன் பத்து ரூபாய், இருபது ரூபாய் என்றுதான் இருக்கிறது. "போய்யா நான் பைனைக் கட்டிக் கொள்கிறேன்" என மிகச் சர்வசாதாரணமாகச் சொல்லிவிடுகிறார். ஆகவே அபராதத் தொகையைக் கூட்ட வேண்டும். அப்போதுதான் நமது அதிகாரிகள் சென்று தொழிலாளர்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகளைச் சுட்டிக்காட்டும்போது முதலாளிகள் திருந்திக்கொள்வதற்கு ஒரு அச்சம் இருக்கும்.

இன்றையதினம் சில தொழில் நிறுவனங்களில் நல்ல முறையில் அமைதி இருக்கிறது என்பதை திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் ஆகஸ்டு 15, ஜனவரி 26 என்று கொண்டாடுவது போல மே தின விழாவையும் கொண்டாடுகிறபோது எல்லாத் தொழில் நிறுவனங்களையும் சேர்ந்த தொழில் அதிபர்களையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து வைத்து விழாக் கொண்டாடலாம், நல்ல முறையில் வருடம் முழுவதும் தொழில் அமைதி காக்கப்பட்ட நிறுவனத்திற்கு கேடயம் போன்று பரிசு அளிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இ.எஸ்.ஐ. திட்டத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நமது அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று ஏற்கனவே இருந்த உச்சவரம்புத் தொகையை உயர்த்த இ. எஸ்.ஐ. கார்ப்பரேஷனிடம் வற்புறுத்தி இன்றைய தினம் அதை உயர்த்த முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் அது பற்றிக் கொஞ்சம் கவலை



1972 மார்ச் 24] [திரு. கா. வேழவேந்தன்]

குறைந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் இன்னமும் இ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல்களில் டாக்டர்கள் போதிய கவனம் செலுத்துவதில்லை என்ற குறைபாடுகள் வருகின்றன. தொழிலாளர்கள் பெரிய டாக்டர்களை அணுக முடியாது. ஆகவே இந்த இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை நல்ல திறமையான டாக்டர்களைப் போடவேண்டும். தொழிலாளர்களுக்கு நல்ல மருந்துகளைக் கொடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும் தீவிரமாக அமுல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பு நிறுவனத்தைப்பற்றி இரண்டே இரண்டு வார்த்தை. இன்றைய தினம் வேலைநாடிச் செல்பவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்துகொண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்று இருக்கிறது அதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பித்துக்கொண்டால் கூட போதும்என்று செய்வது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இன்றைய தினம் மாவட்டங்களில் இருபதாயிரம், இருபத்தைந்தாயிரம் பேர்கள் பதிவு செய்துகொண்டு வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். மாதத்திற்கு ஒரு நாள்—அவர்கள் எல்லோரையும் அழைத்து—எந்த எந்தத் துறையில் தனிப் பயிற்சி அவர்கள் எடுத்தார்களானால் வேலை சீக்கிரமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்து விளக்கினால் கூட மிக உதவியாக இருக்கும். அப்படியில்லாத காரணத்தினால் மூன்று மாதத்திற்கு ஒருமுறை புதிப்பித்துக்கொண்டு விரக்தியோடு திரும்புகிறார்கள். பெரும் அளவுக்கு இன்றைக்கு நமது மாநிலத்தில் தொழிலாளர் அமைதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றால் அதற்குக் காரணம் நமது தொழில் அமைச்சர் அவர்களுடைய முயற்சியும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய முயற்சியும் தான் என்பதை நெஞ்சார, மனமார வரவேற்றுப் பாராட்டி, பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு உறுப்பினரும் பத்து நிமிஷத்திற்குள் பேசி முடிக்கவேண்டும்.

* **திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியத்திற்கு என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

இந்தத் துறையில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்தைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலையைத் தருகிறது. இப்படி இத்துறைக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் தொழிலாளர் நலத்தில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்பதைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தொழிலாளர்களது பிரச்சினை எவ்வளவு முக்கியமானது என்று சொல்ல வேண்டியதில்லை. உழைப்பு அதிகரித்தால்தான் பொருளாதார மறுமலர்ச்சி உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால்தான் சமுதாயத்தில் உள்ள

ஏற்றத்தாழ்வுகள் அகலும். நம்முடைய சமுதாயத்தின் முதுகெலும்பாக இருப்பதே தொழிலாளர் வர்க்கம் தான். அவர்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

தொழில் அமைதி கெட்டு வருகிறது என்று நாங்கள் சொன்ன போதெல்லாம் இதுவரை ஒப்புக்கொள்ளாதிருந்த ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இன்றைக்கு மனம்விட்டு அதை ஒத்துக்கொண்டதற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். சில நாட்களுக்கு முன் மத்திய அமைச்சர் ஒருவரே இந்தியாவில் மேற்குவங்கத்திற்கு அடுத்தபடியாக தொழில் அமைதி கெட்டிருப்பது தமிழ் நாட்டில் தான் என்று கூறினார். திரு. கா. வேழவேந்தன் அவர்கள் இதுபோல் தொழில் அமைதி கெட்டி ருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம்—இந்த ஆட்சியில்தான் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் என்கிற நம்பிக்கையில் தொழிலாளர்கள் தங்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை யெல்லாம் முன் வைத்து வருகிறார்கள் என்றார். அதை நாட்டுமக்களும் நன்கு அறிவார்கள்.

அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் 20 தொழில் நிறுவனங்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு—விரயமாகிய உழைப்பு நாட்களின் எண்ணிக்கை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். 1970-ஆம் ஆண்டு 10,33, 377 நாட்கள் விரயமாகின என்றால் 1971-ல் 22, 86, 807 நாட்கள் விரயமாகியிருக்கின்றன. தொழில் அமைதி கெட்டிருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று வேறு வேண்டாம். கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையை எடுத்துப்பார்த்தாலும் 1969-ல் 174 தான், 1970-ல் 277, 71-ல் 308 ஆக உயர்ந்திருக்கிறது.

இதனால் யாருக்கு நஷ்டம்? தொழிலாளர்களுக்கு ஒருபுறம் பெருத்த நஷ்டம் என்பதோடு அரசாங்கத்திற்கும்—காலையில் வருவாய்த்துறை அமைச்சர் திரு. சண்முகம் குறிப்பிட்டதுபோல ஒரு கோடியே இருபது லட்சம் நஷ்டம். சிம்சன் வேலைநிறுத்தம் மூலமாக ஏறத்தாழ 15 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அசோக் லேலண்டு மூலமாக 7 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

இப்படி தொழில் அமைதி குலைந்து, வேலைநிறுத்தங்கள் ஏற்பட்ட தற்கு மூலகாரணமே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிற் சங்கங்களில் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதாகச் செய்த முயற்சிகள் தான். தொழிற் சங்கங்களைப் பிடித்துவிட வேண்டு மென்று தங்களிடம் இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்திச் செயல் பட்டதுதான்.

அடுத்து, தொழிற்சாலைகளில் தி.மு.க. சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால்தான் லாபம், உழைக்காமலேயே மாதம் சம்பளம் வந்து கொண்டிருக்கும் என்ற நிலை வந்தது. சிலர் வேலை செய்தும், இதுபோன்ற சிலர் வேலை செய்யாமலேயே சம்பளம் பெற்றுக் கொண்டும் இருக்கிற நிலை ஏற்படுகிறபோது எப்படி தொழில் நிறுவனத்தில் அமைதி இருக்க முடியும்?



**திரு. கா. வேழவேந்தன்:** தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். வேலை செய்யாமலேயே ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள் என்பதாக கட்சிக்குக் களங்கம் கற்பிப்பதுபோல பேசுவது சரியல்ல குறிப்பாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, சிம்சனிலே தகராறு ஏற்படுவதற்குக் காரணம் இதுதான் போக்குவரத்துத் துறையிலும் இப்படித்தான். இப்படிக் கூறிக்கொண்டே போனால் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

**திரு. செ. கந்தப்பன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், தொழிலாளர்கள் பொதுவாக வேலை செய்யவில்லை என்று சொன்னால் போதும். அதற்காக அரசியல் கட்சியை இழுத்துப் பேச வேண்டாம். ஆகவே, அப்படிப்பட்ட குறிப்புக்களைச் சட்டப் பேரவையின் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்ட கட்சியைப்பற்றிச் சொல்லி, குறிப்பிட்டுச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். இன்ன கட்சி, இப்படிச் செய்தது என்று சொல்ல வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is a fact. So long as Simpson was controlled by trade union led by D.M.K., the D.M.K. workers refused to work.

THIRU J. JAMES: In the Transport Department also, that is the truth.

**திரு கா. வேழவேந்தன்:**—தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் சங்க நிர்வாகிகள் வேலை செய்யாமல் ஊதியம் பெறுவது என்பது இப்போது மட்டுமல்ல, முன்பே இருந்த நிலைமைதான். தவறான தகவலை மன்றத்திற்குத் தர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, கடந்த பல மாதங்களாக வேலை நிறுத்தம் ஏற்பட்டு, சிம்சனில் நேற்றுதான் வேலை தொடங்கியிருக்கிறது. இப்போது வேலைஒழுங்காக நடைபெற்று வருகிறது. முன்புகூட வேலை நிறுத்தம் தொழிலாளர்களால் ஏற்பட்டது அல்ல; தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் வெளியிட்டு வந்த அறிக்கைகளால்தான் ஏற்பட்டது இன்னும்கூடச் சொல்வேன், அந்தநாயகி அம்மையார் அவர்கள் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரு சிலர் அக் கம்பெனியில் வேலை நேரத்தின்போது வேலை செய்வதில்லையென்று சொன்னார்கள். இவ்வாறு தனிப்பட்ட முறையில் கழகத்தைச் சார்ந்தவர்கள்மீது குறை கூறுவது முறையாகாது. அங்கேயுள்ள தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடுகளில் ஈடுபட்டு, கழகமும், கழகம் அல்லாதவர்களும் மேற்கொண்டதன் விளைவுதான். எனவே கழகத்தை மட்டும் குறைகூறுவது முறையல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பிளான்டேஷன் இருக்கிறது. அந்த ரப்பர் தோட்டங்களில் தொழில் சட்டங்கள் அமல்படுத்துவதில்லை. சில இடங்களில் தொழில் சட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று பிளான்டேஷன் லேபர் அட்வைசரி கமிட்டிகூட தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டிக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமை வகித்திருக்கிறார்கள். ஏனோ அந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னும், தொழில் சட்டங்கள் அங்கே செயல்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ரப்பர் தோட்டத்தில் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் தனியார் துறையில் இருக்கிற ரப்பர் தோட்டத்திற்கும், அரசுத் துறையில் இருக்கிற ரப்பர் தோட்டத்திற்கும் இடையில் ஊதியம் வித்தியாசம் இருக்கிறது. இன்றைக்கு அரசு தோட்ட தொழிலாளர்கள் தினசரி 1 ரூபாய் 56 காசு குறைவாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இது குறித்து லேபர்கமிஷனர் முன்னிலையில் கூடிப்பேசி, இறுதி முடிவு லேபர் கமிஷனர் அதிகாரத்திற்கு விடப்பட்டது. லேபர் கமிஷனர் அந்த முடிவை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து இதுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 20–3–72 முதல் தங்களுடைய குறைகள் போக்கப்பட வேண்டுமென்பதற்காக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக ஆட்டோமேஷன் பற்றியது. ஆட்டோமேஷன் புகுத்தக்கூடாது என்று ஏ.ஜி. ஆபிஸில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நமது அரசிலும் சில இலாகாக்களில் ஆட்டோமேஷன் புகுத்துவதாக இருக்கிறது என்று தெரியவருகிறது. 1969 மார்ச் மாதம் 25-ம் தேதி நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இது குறித்து இந்த மன்றத்திலே ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு இதைப் படிக்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஏ.ஜி. ஆபீசில் ஆட்டோமேஷன் புகுத்துவது பற்றி எந்தவிதமான போராட்டமும் நடைபெறவில்லை. அங்கே இருக்கக்கூடிய சில பிரிவினர், சில வேலைகளை நம்முடைய மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற பிரச்சினையினால்தான் போராட்டம் நடத்துகிறார்கள். ஏ. ஜி. ஆபீசுக்கும் ஆட்டோமேஷனுக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, "ஆட்டோமேஷன் பற்றிச் சொல்லும்போது, அரசின் தெளிவான கொள்கை என்ன" என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பாலசுப்பிரமணியம் கேட்டார்கள். தெளிவாகச் சொல்லிவிடுகிறேன், ஏற்கெனவே அதையே அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "இந்த அரசு ஆட்டோமேஷனை ஏற்றுக் கொள்ளாது; எதிர்க்கும். அதுதான் அடிப்படைக் கொள்கை. நாங்கள்



ஆட்டோமேஷனை ஏற்றுக்கொள்ளவில்லை; அதைப் புகுத்துவதை அரசு நிச்சயம் எதிர்க்கும் என்கிற உத்தரவாதத்தைத் தெரிவிக்கிறேன்" என்று மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக லேபர் டிபார்ட்மெண்ட் பற்றியது. 1969–70-ல் 8 579 ஆக இருந்தது 1970–71–ல் 7,258 ஆக கன்சிலியேஷன் செய்து வைப்பது குறைந்து வருகிறது. தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கான காலதாமதம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி விசாரித்தபொழுது லேபர் கமிஷனர் அதிகாரத்தின்கீழ் 'வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ், இலாகாவையும் கொண்டு வந்த காரணத்தினால் இப்படி காலதாமதம் ஆகிறது என்று தெரிய வந்தது. நான் சொல்ல வந்தது என்னவென்றால், லேபர் கமிஷனர் தொழிலாளர் பிரச்சினையில் தலையிட்டு சமரசம் செய்துவைக்கவும், நல்ல முடிவு காண்பதற்கும் நேரம் இல்லாத நேரத்தில் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் இலாகாவின் வேலைகளையும் கவனிப்பது இயலாத காரியம் என்பதுதான். ஆகவே, லேபர் கமிஷனர் தொழிலாளர் பிரச்சினையிலே மட்டும்தான் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான முறையில் அரசு தக்க வழிவகைகளைச் செய்து தர வேண்டும் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் இலாகா தனியாகப் பிரிக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, அசிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஆஃப் லேபர் என்று இருக்கிறார். அவர் ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ் ஆக்டை சரிவர எல்லா இடங்களிலும் அமல்படுத்துவதில்லை என்று தெரியவருகிறது. கேட்டால் வெயிட்ஸ் அண்டு மெஷர்ஸ் அலுவலகம் சேர்க்கப்பட்டதுதான் என்கிறார்கள். ஆகவே, அந்த இலாகாவைத் தனியாகப் பிரித்துவிட்டு, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மட்டும்தான் இவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாகர்கோயில் லேபர் ஆபீஸில் கடந்த ஐந்தாறு மாதங்களாக லேபர் ஆபீசர் இல்லாத நிலைமை இருக்கிறது. சுமார் 20 ஆயிரம் தொழிலாளர்கள் இருந்தும் லேபர் ஆபீசர் இல்லாமல் இருந்தால் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை யாரிடம் சொல்ல முடியும். இப்போது திருநெல்வேலி லேபர் ஆபீசர் அடிஷனல் சார்ஜ் எடுத்துக் கொண்டு செயல்படுகிறார். இந்த மாதிரியான நிலைமை இருந்தால் எவ்வாறு தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, தனி லேபர் ஆபீசரைப் போட்டு குறைகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இன்றையதினம் மாமன்றத்தில் வைத்திருக்கிற தொழிலாளர் மானியத்தை மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால், தொழிலாளர் மத்தியில் நல்ல அமைதி நிலவுகிறது என்று நாட்டுமக்கள் சொல்கிறார்கள், வரவேற்கிறார்கள். 1967-க்கு

முன்னாலே இந்நாட்டை இருபதாண்டுக் காலம் ஆண்டுவந்த காங்கிர
ஆட்சிக் காலத்தில் எங்கு பார்த்தாலும் தொழிலாளர் கிளர்ச்சிகள் எழு
நேரத்தில் அவற்றைத் துப்பாக்கியால் அடக்கியிருக்கிறார்கள்; ஒடுக்கியிரு
கிறார்கள். 1967-க்குப் பின்னால் தொழிலாளர் மத்தியில் கிளர்ச்சி அ
கொன்றும், இங்கொன்றுமாக ஏற்படுபவைகளையெல்லாம் மாண்புமி
தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்
அவர்களும் மிக சாமர்த்தியமாக, சுமூகமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்க
என்பதை நாடறியும்

இன்றைய தினம் தொழிலாளர் மத்தியில் அமைதியாக தொழில் நடந்
வருகிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரு. இராமானுஜம் அவர்க
தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். இந்த இருபதாண்டு காங்கிர
ஆட்சிக் காலத்தில், வேலை செய்யாமல் பலர் கூலி பெற்றதாக திரு. ஜேம்
அவர்களும் தங்களுடைய போக்கையே சுட்டிக்காட்டினார்கள். திராவி
முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொழிற்சங்கத் தலைவராக இரு
தாலும், தொண்டராக இருந்தாலும் சரிவர வேலை செய்து கூலி பெ
கிறார்கள். அமைதியான முறையில் நடந்து கொண்டிருக்கிற தொழிலாள
மத்தியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சுமூகமாக நம் அரசு தீர்த்து வை
பதற்காக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மு
லமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

மலைப்பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள், நீலகிரி பகு
யிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள், சேர்வராயன் பகுதியிலுள்
தோட்டத் தொழிலாளர்கள், ஆகிய எல்லா தொழிலாளர்களுடை
நிலைமைகளைப் பற்றியும் ஒருசிலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிரு
கிறேன்.

இந்த பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக தோட்டத் தொழிலாளர்களிலே
நாற்பது சதவீதம் ஆட்குறைப்புச் செய்திருக்கிறார்கள். இதனால் இப்பொ
திருக்கிற தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது
அதே நேரத்திலே கிட்டத்தட்ட 500 தொழிலாளர்கள் இருக்கவேண்டி
இடத்திலே 250 தொழிலாளர்கள் டெம்பரரியாகவும் 250 தொழிலாளர்க
பர்மனென்ட் ஆகவும் வைத்திருக்கிறார்கள். டெம்பரரித் தொழிலாளர்களுக்
எந்தவிதமான சலுகைகளும் அளிக்கப்படவில்லை. ஊட்டி, ஏர்க்காடு இந்
இடங்களில் நடைபெற்ற பிளான்டேஷன் அட்வைசரி கமிட்டியிலே நம்முடை
தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மிக உருக்கமாக தோட்ட முதலாள
களிடம் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க
வேண்டுமென்று. ஆனால் அந்த மானேஜர்கள் செய்கிறோம் என்று அ
பொழுது ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்றாலும்கூட, நிரந்தரமாக்குவதற்
அடையாளச் சீட்டுகள் கொடுக்கப்போவதாகச் சொன்னாலும்கூட, இதுவ
யிலே அவர்கள் சொன்னதை நிறைவேற்றவில்லை. அந்தக் கூட்டத்திலே
தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்களாக அதை
செய்தால் நாங்கள் அதை வரவேற்கிறோம். பாராட்டுகிறோம். இல்லை
யென்றால் நாங்கள் சட்டத்தால் செய்கிறோம் என்று கொஞ்சம் கடுமையாக
கூடச் சொன்னார்கள். எனவே அதை நடைமுறைக்குக் கொண்டுவர அர
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பது பற்றிய பேச்சு வார்த்தை வருகிற 28-ம் தேதி நடக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையில் முறிவு என்றால் நம்முடைய அரசு உடனே தலையிட்டு அந்தப் பிரச்னையைத் தீர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்டேட் ஸ்டாப்களுக்கு குரூப்வாரியாக லாபத்தின் அடிப்படையிலே மூன்று மாத போனஸ் அல்லது நான்கு மாத போனஸ் என்று கொடுக்கப்படுகிறது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு குத்துமதிப்பாக இதுதான் போனஸ் என்று வழங்குகிறார்கள். எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கும் லாபத்தின் அடிப்படையிலே போனஸ் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். உழைப்புக்குத் தக்க ஊதியம் தரப்படுவதில்லை, உழைப்புக்குத் தக்க ஊதியம் தரப்படுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் நடத்துகிற சின்கோனா பேக்டரியிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களை மாதச் சம்பளதாரர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேயிலைத் தோட்டம், காபித் தோட்டம் கொடுக்கப்படுகின்ற கூலிவிகிதம் இந்த சின்கோனா பேக்டரியிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு போனஸ் கிடையாது. அங்கே வேலை செய்கின்ற மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைக்கிறது, அங்கே பணியாற்றுகிற அரசுப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கிடைக்கிறது. ஆனால் சின்கோனா பகுதியிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைப்பதில்லை. அவர்களுக்கும் போனஸ் கிடைக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அவர்களுக்கு வீட்டு வசதிகள் இல்லாமல் இருந்தது நம்முடைய அரசு பரிவோடு அணுகி அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வால்பாறை, சேர்வராயன் பகுதி, மாஞ்சோலை இங்கேயெல்லாம் பணியாற்றுகின்ற டிரைவர், சூப்பர்வைசர், மருத்துவமனைகளிலே வேலை பார்க்கிற கம்பவுண்டர், வார்டர்கள் போன்றவர்களுக்கு அந்தஸ்து தரப்படவில்லை. சூப்பர்வைசர்கள்தான் அங்கு முழுப் பொறுப்பை ஏற்று பணியாற்றுகிறார்கள். அந்த சூப்பர்வைசர்களுக்கு வேலைக்குத் தகுந்த அந்தஸ்து தரவில்லை, அவர்களுக்குக் கூலி உயர்வு தரப்படவில்லை, எனவே அவர்களுடைய வேலைக்குத் தகுந்த அந்தஸ்தும், கூலி உயர்வும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு எல்லாம் மின்சார விளக்குகள் போடவேண்டுமென்று பிளான்டேஷன் அட்வைசரி கமிட்டியிலே பேசப்பட்டது. 1972-ஆம் ஆண்டுக்குள் மின்சாரம் கிராமங்களுக்கு எல்லாம் போடவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கையாகும். அந்த மலைப்பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு மின்சார விளக்குகள் போட வேண்டுமென்று சொல்லியும்கூட அந்த வேலையை தோட்

மேனேஜ்மெண்டார் செய்யவில்லை. எனவே உடனடியாக மின்சார விளக்குகள் போடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள், எங்கோயிருந்து எந்த எந்த மாநிலங்களிலிருந்தோ வருகிறவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் அங்கேயே இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வேலை கிடைக்காமல் அவர்கள் திண்டாடுகிறார்கள். எந்த தனிப்பட்ட கம்பெனிக்கும் அதை எப்படி வற்புறுத்த முடியும் என்று விட்டு விடாமல் வேலை பார்க்கிற தோட்டத்தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பில் முதல் வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்பதைச் சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார முறைப்படி இல்லாத முறையில் தொழிலாளர்கள் கட்டி இருக்கிற வீடுகள் மோசமாக இருக்கிறது; எனவே சுகாதார முறைப்படி அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களிலே பள்ளிக்கூடங்கள் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

தொழிலாளர்களுடைய சட்டங்கள் சில அமல் நடத்தப்படாமல் இருக்கின்றன. அமல் நடத்தப்படாத சட்டங்களையெல்லாம் அமல் நடத்தவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையின் தரமே அந்தச் சட்டங்களிலேதான் இருக்கிறது. சட்டங்கள் தான் பரிகாரம் காணவேண்டும்.

எனவே அமல்படுத்தாத சட்டங்களையெல்லாம் அமல்படுத்தவேண்டும். ஒரு தொழிலாளர் டிஸ்மிஸ் செய்யப்பட்டாலோ அல்லது சஸ்பெண்ட் செய்யப்பட்டாலோ முறைப்படி அது கோர்ட்டுக்கு அனுப்பப்படுகிறது. அது கெஜட்டில் வருகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு வரவில்லை. இதை நான் குற்றமாகச்சொல்லவில்லை. தபால் கிடைக்காமல் கூட இருந்திருக்கலாம். இனிமேலாவது அப்படி நடக்காமல் இந்த இலாகா நல்ல முறையிலே செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நான் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. கந்தப்பன் தலைமை]

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கை சம்பந்தமாக ஒரு சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டிலே சுபீட்சம் இருக்கிறதா இல்லையா என்று மதிப்பிடவேண்டுமானால் தொழிலாளர்களுடைய நடவடிக்கைகளைக் கொண்டு அதை மதிப்பிட முடியும் என்று நான் நினைக்கிறேன். காரணம் தேசத்திலே எவ்வளவு



தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதைவிட அந்தத் தொழிற்சாலைகளிலே இருக்கிற தொழில்கள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்ப்பதுதான் மிகப் பிரதானமான ஒன்றாகும். தொழிற்சாலைகளை ஆரம்பிப்பவர்கள் தங்கள் மூலதனத்தைக்கொண்டு கட்டடங்களையும், இயந்திரங்களையும், மூலப்பொருள்களையும் வாங்கிப் போட்டு விடுவதால் மட்டும் தொழிற்சாலை ஓடி விடுவதில்லை. அந்த மூலப் பொருட்களையும் இயந்திரத்தையும் ஒன்றாக இணைக்கின்ற காரியத்தைத் தொழிலாளர்கள் செய்து அதிலே மாற்றுப் பொருள்கள் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டால்தான் மூலதனத்திற்கும், இயந்திரத்திற்கும் நாட்டிலே வேண்டிய தேவைகளுக்கும் பயன் ஏற்படுகிறது. அப்படி உண்டாக்கப்படுகின்ற பொருள் மாற்றுப் பொருளாக இருந்து அந்தப் பொருள் எளிதாகவும், மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றால் அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கிறது.

காரணம், மூலதனம் போடுகிறவர்கள் தங்களுடைய லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு விடுவதால் மாற்றுப் பொருள்களை உண்டாக்கி மக்களுக்கு எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கச் செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளையும் சம்பள வசதிகளையும் அதிகமாகத் தருவதற்குத் தயங்குகிறார்கள். அவர்களுக்கு அதிகமாக வசதிகள் செய்து தந்தால் லாபத்திலே குறைந்துவிடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆகவே, மக்களுக்கு எளிதாக, மலிவாக பொருள்கள் கிடைக்க அரசாங்கம் எப்படி தலையிடவேண்டிய நிலையிருக்கிறதோ அதேபோன்று அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்னைகளிலும் தலையிடவேண்டியிருக்கிறது. அப்படி பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்திலே இருக்கிற நிலைமைகள் சுபீட்சமாக இருக்கிறதா என்று எண்ணிப்பார்க்கிறபோது நிச்சயமாக வருத்தப்படக்கூடிய நிலைமையிலேதான் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். 1970-ஆம் ஆண்டுக்கும் 1971-ம் ஆண்டுக்கும் வேலைநாட்கள் நஷ்டத்தைப் பற்றி எண்ணிப்பார்க்கிறபோது 1970-ம் ஆண்டைவிட 12,53,430 உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டன என்று சொன்னால் பொருள் உற்பத்தியில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது, அந்தப் பொருள் மக்களுக்குப் போய்ச் சேருவதிலே கஷ்டம் ஏற்படுகிறது.

விலை ஏறுகிறது என்ற பிரச்னை உண்டாகிறது. அதோடு உற்பத்தியாகும் பிற்பகல் 5.00
பொருள்களை வாங்கும் வலிமை தொழிலாளர்களுக்கு ஒருசேர இருக்க வேண்டும். ஒரு தொழிற்சாலையில் உற்பத்தியானால் மட்டும் போதாது; அதை வாங்கும் அளவிற்கு வருமானம் மற்றவர்களுக்கு இருந்தால்தான் தொழிற்சாலைகள் சிறப்பாக நடைபெற முடியும். அந்த முறையில் கடந்த வருஷம் 227 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன, அதற்குப் பதிலாக இந்த வருஷம் 308 வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றன என்று புள்ளிவிவரங்கள் கூறுகிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலை நல்லதல்ல.

அப்படி நல்லது அல்ல என்று சொல்லும்பொழுது, இன்னும் மேம்பாடான நிலைமையை எண்ணும்பொழுது, நாம் சோஷலிச சமுதாயத்தை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு இருக்கிறது என்று நான் நம்புகிறேன், அப்படியிருக்கும் அரசு தொழிலாளர்களின் பிரச்னையில் எந்தப் பக்கத்தில் இருக்க வேண்டுமோ அந்தப் பக்கத்தில் இருக்கவேண்டும்.

ஏனென்றால், எனக்கு முன்னாலே பேசிய மாஜிதொழிலாளர் நல அமைச்சர் மதிப்பிற்குரிய திரு வேழவேந்தன் அவர்கள் இங்கேயிருக்கும் அமைச்சர்களையெல்லாம் தொழிலாளர்களாக கூப்பிட்டு, முதலாளிகளைக் கூப்பிட்டுப் பைசல் காண்கிறார்கள் அவர்களுக்குப் பாராட்டுக்கூடச் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இந்தச் சபையிலேயிருக்கும் அமைச்சர்களானாலும்சரி; இந்தச் சட்டசபையிலேயிருக்கும் உறுப்பினர்களானாலும் சரி ஏதோ ஒரு சிலர் போக மற்றவர்கள் அத்தனை பேரும் சாதாரணக் குடும்பத்திலேயிருந்து வந்தவர்கள் தான். எந்த முதலாளியின் கையாளாகவோ, முதலாளித்துவக் குடும்பங்களிலிருந்தோ வந்தவர்கள் அல்ல. அவர்களுடைய அனுதாபம், உயர்வு, அன்பு எல்லாமே எந்தப் பக்கத்தில் இருக்கவேண்டுமோ அந்தப் பக்கத்திலே இருக்கிறது என்று காட்டுகிறதே தவிர பாராட்டுவதற்கு இதில விஷயம் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

இன்றைக்கிருக்கின்ற நிலைமைகளில் நாம் எடுத்திருக்கும் கொள்கை, நாம் எடுத்திருக்கும் வைராக்கியம், அதற்கு அனுசரணையாக நாம் நடைமுறையிலே என்ன செய்திருக்கிறோம் என்று பார்த்தால் அதற்குக் காலங் கடந்து தலையிடுகிறோம். காலங்கடப்பதற்கு முன்னால் தலையிட்டிருந்தால் இம்மாதிரியான சூழ்நிலைகள் ஏற்படாமல், அமைதிக்குலைவு ஏற்படாமல், இவ்வளவு வேலை நாட்கள் இழப்பு ஏற்படாமல் தடுத்திருக்க முடியும் என்று நான் எண்ணுகின்றேன்.

அதேபோன்று தொழிற்சாலை சட்டங்கள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைச் சட்டம் என்று சொல்லும்பொழுது தொழிற்சாலை எப்படி இருக்கவேண்டும், எந்தெந்த மாதிரி இயந்திரப் பாதுகாப்பு இருக்கவேண்டும், எப்படி சுகாதாரம் இருக்க வேண்டுமென்பதற்கெல்லாம் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் சட்டம் மட்டும் இயற்றப்பட்டிருக்கிறதே தவிர அவைகள் செயல்படுவதில்லை. அதைச் செயல்படுத்துவதற்கு முறையாக, நல்லுணர்வோடு செயல்படுத்தினால் அந்தக் காரியங்கள் நல்ல முறையில் நடைபெறும். ஆனால் இப்பொழுதிருக்கும் பல தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால் தொழிற்சாலை சட்டம் செயல்படமுடியாத நிலையை. நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் பல நேரங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் புள்ளிவிவரம் நமக்கு உணர்த்துகிறது. தொழிற்சாலை சட்டம் 1948-ல் ஏற்பட்ட சட்டம், இப்பொழுது 24 வருஷங்கள் ஆகிவிட்டன. அந்தச் சட்டத்தில் இருக்கும் மாறுபாடுகளை, நவீன முறையில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை ஆலோசித்து இந்த அரசு மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலை சட்டம் என்று சொல்லும்பொழுது இப்பொழுது பல இடங்களில் ரசாயனத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏற்பட்டு அங்கேயிருக்கும் தண்ணீரும், கழிவு நீரும், ஆவி போன்றவைகளும் பக்கத்தில் இருக்கும் ஜனங்களுக்கும், பக்கத்திலிருக்கும் குடிநீர்க் கிணறுகள், விவசாயக் கிணறுகள் போன்றவைகளுக்கும் கெடுதல் உண்டாக்குவதாகப் பலயிடங்களிலிருந்தும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஸ்டேண்டிங் ஆர்டர் இருக்கிறது. அங்கிருக்கும் கழிவு நீரைச் சுத்தப்படுத்திதான் அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அதைச் சரியாக அமல் நடத்துவதற்கு அதிகாரிகள் இல்லை. அம்மாதிரி அமல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கின்ற காலத்தில் அப்படிப்பட்ட தொழிற்சாலையின் நிர்வாகிகளில் செல்வாக்கு பெற்றவர்கள் அதற்குப் பணச் செலவு ஆகுமென்று கூறுகின்ற காரணத்தால் அம்மாதிரி செய்யாமல் பலருக்கும் தொல்லை விளைவிக்கின்ற வகையில தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே அதில் சிறிது கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





ரசாயனத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் நல்ல முறையில் உடலைக் கவனித்துக்கொள்வதற்கான பாதுகாப்பு அளிக்க வழிவகை செய்ய வேண்டும். ஏனென்றால், ரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரினாலேயே மற்றப் பொருட்கள் கெடும்பொழுது, அத்தகைய நிலைமை இருக்கும்பொழுது அங்கு வேலை செய்கின்றவர்களில் உடல்நிலை எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். எனவே, அவர்களை 3 மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறையோ வைத்தியப் பரிசோதனைக்கு அனுப்பி என்னென்ன கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து அதற்குப் பரிகாரம் செய்ய முயற்சிகளைத் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இம்மாதிரி இருக்கின்ற தொழிற்சாலைகளில் இப்பொழுது இயந்திர விஞ்ஞானம் வளர்ந்துவிட்டால் ஒவ்வொரு தொழிற்சாலையையும் ஆரம்பிக்கும்பொழுது, கடந்த ஆண்டு இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கைக்கு இந்த ஆண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது 47 தொழிற்சாலைகள் அதிகமாகியிருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்த 47 தொழிற்சாலைகள் அதிகப்பட்டிருக்கும்பொழுது தொழிலாளர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்துச் சில்லறைதான். ஆகவே ஒரு தொழிற்சாலைக்கு 29 பேர்தான் தொழிலாளர்கள் அதிகப்பட்டிருக்கிறார்கள். தொழிற்சாலைகள் அதிகப்படும்பொழுதெல்லாம் நாம் கருதுவோம், நிறைய தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்று. ஆனால் இயந்திர விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட காரணத்தினால் மூலதனத்தின் விகிதாச்சாரம் எவ்வளவு, தொழிலாளர்களின் விகிதாச்சாரம் எவ்வளவு என்று கணக்கிட்டால் ஒரு கோடி பேருக்கு 40 பேர் என்றுதான் தெரிகிறது. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்கு 12 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது. 12 கோடி ரூபாய் மூலதனம் போட்ட தொழிற்சாலையில் நானூற்றுச் சில்லறை பேர்கள்தான் நிரந்தரத் தொழிலாளர்கள். அப்படியென்றால் ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டால் 40 பேர்கள்தான் வேலைக்குச் சேர்கிறார்கள் என்றால் நாம் இந்தத் தொழிற்சாலைகளின் மூலம் என்ன எதிர்பார்க்கிறோம்? தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று, எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்ட வேண்டுமென்று நாம் நவீன தொழிற்சாலைகளை உண்டாக்க வேண்டுமென்று மட்டும் எண்ணினால் போதாது. அந்த எண்ணத்தின் பலன் என்ன, லாபம் என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தொழிலாளர்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற முறையிலே தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படியிருக்கும் தொழிற்சாலைகளில் கூட அவ்வளவு அதிகமான மூல தனத்தைப்போட்டு குறைந்த ஆட்களை வைத்திருந்தும்கூட அவர்களுக்கு உரிய சம்பளம், அவர்களுக்கு உரிய வசதி ஆகியவைகளைப்பெற ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு, அதைப் பதிவு செய்துகொண்டாலும்கூட அதை அங்கீகரிக்காமல் பல தகராறுகளை நிர்வாகிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

இங்கே நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால், அதிகமான விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இருந்தாலும் இந்த விபத்துக்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். தொழிற்சாலை விபத்துக்கள்—சிறிய சிறிய விபத்துக்கள் நடக்கின்றன. இப்படிப்பட்ட விபத்துக்கள் குறைந்திருக்கிறது என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. 93 விபத்துக்கள் கடந்த வருடத்தைவிடக் குறைந்திருக்கிறது. அப்படிக் குறைந்திருக்கிறது என்றாலும்கூட விபத்துக்கள் ஏற்படுகின்ற நேரத்தில் அந்த விபத்துக்களை பதிவு செய்து நஷ்டஈடு கொடுக்கின்ற உரிமையையெல்லாம் பல தொழி சாலைகளில் செய்வதில்லை. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையில், மற் தொழிற்சாலைகளைவிட அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அம்மாதி தொழிற்சாலைகள் விஷயமாகக் கவனித்து அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண் விபத்திற்குள்ளானவர்களின் மரண எண்ணிக்கை இந்த வருஷம் 10 பே அதிகமாகியுள்ளது. கடந்த ஆண்டு 32 பேர், இந்த ஆண்டு 42 பேர் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. இப்பொழுது மரண எண்ணிக்கை அதிக படாமல் பார்த்துக் கொள்வதற்கு அதிகமாகக் கவனிக்க வேண்டும். இவை களைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்புக் குழுக்கள் என்று ஏற்படுத்தியிருப் தாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய தொழி சாலைகள் 6,412 என்று இருக்கும் இடத்தில் 311 இடங்களிலேதான் பாது காப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புக் குழுக்களை 31 இடங்களிலே மட்டும் அமைத்ததற்கான காரணம் என்ன, மற்ற இடங்களில் அமைக்க முடியாததற்குக் காரணம் என்ன என்று அறிவிக்க வேண்டும் 311 தொழிற்சாலைகளில் அமைந்திருக்கிற இந்தப் பாதுகாப்புக் குழுக்கள் பாதுகாப்புக் குழுக்கள் என்ற பெயரிலே இருக்கின்றனவே தவிர அவை எத வது காரியம் செய்திருக்கின்றனவா, பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றனவா என்று மதிப்பிட்டுப் பார்க்கப்பட்டிருக்கிறதா? அப்ப மதிப்பிட்டுப் பார்த்ததில் அது பலன் உள்ளதாக இருக்கிறதா, எல்ல இடங்களிலும் பரவலாகச் செய்ய வேண்டுமென்பதற்கான காரண தோன்றுகிறதா, அதை ஆராய்கிறதா என்ற விவரங்களையெல்லாம் அறிவிக் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொழில் தகராறுகளை எடுத்துக்கொண்டால், கடந் வருஷத்தைவிட இந்த வருஷம் 503 தொழில் தகராறுகள் அதிக பட்டிருக்கிறது என்பதாகப் பார்க்கிறோம். இந்தத் தகராறுகளை உடனு குடன் தீர்த்து வைப்பதற்கு இப்பொழுதிருக்கும் முறையிருக்கிறதே அது போதுமானதல்ல. ஆகவே, தொழில் தகராறு தோன்றியவுடனேயே அந்த பிரச்னையில் தலையிட்டு உடனேயே தீர்த்துவைக்க வேறு ஏதாவது வழிபற்றி அரசு சிந்திக்க வேண்டும். யோசிக்க வேண்டும். யோசித்து அதை விரை வில் தீர்க்கும் முறையிலே, வேலை நிறுத்தம் என்று சொல்லும் அளவிற்கு





போகாமல் தீர்த்துக்கொள்வதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லும் பொழுது அம்மாதிரி ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலையை உருவாக்குகின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு சு. துரைசாமி:** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சட்ட மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் தொழில் அமைதி கெட்டுவிட்டால்தான் 22 லட்சம் வேலை நாட்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிப்பு ஏற்பட்டதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பு தொழிற்சங்கத்திலே ஆதிக்கம் செய்ய ஈடுபட்டதன் பயனாகத் தொழில் அமைதி கெட்டுவிட்டது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தலைவரவர்களே, உங்கள் மூலமாக எனக்குப் பின்னால் பேச இருக்கின்ற மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் தயவு செய்து அதற்கான விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற "தமிழ் நாட்டில் தொழிலாளர் நிலைமை—1971–72" என்கின்ற புத்தகத்தில் 23-ம் பக்கத்திலிருந்து 33-ம் பக்கம் முடிய 18 காரியங்களுக்காக வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது என்று அதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் உள்பட எடுத்துக்கொண்டால் 19 வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதற்கான காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு தொழிலாளர்கள் மத்தியில் செல்வாக்கை உருவாக்கிக் கொள்வதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கை காரணமாக வேலை நிறுத்தம் நடைபெற்றதா என்பதை தயவு செய்து இந்த மன்றத்தில் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 22 லட்சம் வேலை நாட்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு முக்கியமான காரணம், கோவை மாவட்டத்தில் நடைபெற்ற பஞ்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்தான் காரணமாகத்தான் இவ்வளவு பெரிய அளவுக்கு இழப்பு நாள் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் யாருக்காக நடத்தப்பட்ட போராட்டம், அந்தப் போராட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கத்தில் ஆதிக்கம் செய்து ஆரம்பித்ததன் பயனாக நடைபெற்ற போராட்டமா என்பதை இங்கே இருக்கிற சக சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல திருப்பூர் பனியன் தொழிலாளர் போராட்டம், அந்தப் போராட்டம் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்க அமைப்பு தொழிலாளர்கள் மத்தியில் ஆதிக்கம் செய்ய ஈடுபட்டதன் பயனாக ஏற்பட்ட போராட்டமா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுமாய் பணிவோடு

கேட்டுக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் தீபாவளியின் போது நடைபெற்ற வேலை நிறுத்தம் 5–10–71 முதல் 21–10–71 வரையில் முடிந்த ஏறத்தாழ 15 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அந்த வேலை நிறுத்தம் எதற்காக நடைபெற்றது என்றால், அன்றைக்கு ஐ.என்.டி.யு.ஸி. எச்.எம்.எஸ். தொழிற் சங்கம், திராவிட முன்னேற்றக் கழக சங்கம் உடன்பாட்டுக்கு வந்தார்கள் என்ற காரணத்தினால், அந்த உடன்பாட்டை எதிர்ப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டமே தவிர, திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் தொழிலாளர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்துவதற்காக ஒரு தொழிற்சாலையில் நடத்தப்பட்ட போராட்டம் இல்லை. 22 லட்சம் வேலை நாட்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக தலைமை தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு, அதில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்ததன் பயனாக நடைபெற்றது என்ற வாதம் தவறான வாதம் என்பதை பல்வேறு உறுப்பினர்களுக்கும் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய பல்வேறு கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தார்கள், இன்றைக்கு தொழில் அமைதி கெட்டுப்போய்விட்டது என்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், தொழில் அமைதி கெட்டதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பாளியா என்பதை அவர்கள் தயவு செய்து சொல்லவேண்டும் இந்த மன்றத்தில். இந்தக் காரியத்தில் இந்த இடத்தில் ஒரு போராட்டம், அதற்கு இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது, அதன் காரணமாகத் தான் இந்தப் போராட்டம் நடைபெற்றது, அதன் காரணமாக வேலை நாட்கள் இழப்பு ஏற்பட்டது என்று தயவு செய்து இந்த மன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மிகத் தெளிவாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்த அரசாங்கம் எந்தப் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறது என்றால்; இந்த மன்றத்திற்கு வந்தவர்களில் பெரும்பாலும் தொழிலாளர்கள் பக்கத்திலிருந்து வந்தவர்கள், அந்தப் பக்கத்தில்தான் அரசாங்கம் நிற்கிறது என்று ஒரு கருத்தைச் சொன்னதற்காக அவர்களுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் பணிவோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழக அமைப்பைப் பொறுத்த வரையில், தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில பல்வேறு சங்கங்களுடன்கூட இன்றைக்கு மிக நல்ல ஒரு சங்கமாக தொழிலாளர்கள் ஆதரவு பெற்ற அமைப்பாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதன் காரணமாக ஏற்படுகிற நோக்கத்திற்கு இந்தப் போராட்டங்களெல்லாம் கூட ஒரு அடிப்படையே தவிர, வேறு ஒன்றும் காரணம் இல்லை என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் குறிப்பாக கோவை மாவட்டத்தைச் சார்ந்த பஞ்சாலைகள், தமிழ் நாட்டிலுள்ள ஏனைய பஞ்சாலைகளிலும் தொழிலாளர்கள் ஒரு பெரிய போராட்டத்தில் ஒரு மாத காலம் ஈடுபட்டார்கள். அப்படி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபொழுது நான் பணிவோடு இந்த மன்றத்தில்





தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் 18, 19-ம் தேதிகளில் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு என்னென்ன நியாயங்களைப் பெற்றுத் தரமுடியுமோ, என்னென்ன உரிமைகளை வாங்கித் தரமுடியுமோ, அவர்கள் அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். என்றாலும், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட வேறு பல தலைவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு பேச்சு வார்த்தைகளை முறித்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகள் இரண்டு காரணங்களுக்காக முறிந்தன. ஒரு காரணம் இன்றைக்குக் கொடுக்கிற பஞ்சப்படி உயர்த்தப்பட வேண்டும். இன்னொரு காரணம் மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக உதவித் தொகை வேண்டும்.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக பணிவோடு கேட்க விரும்புகிறேன், இந்திய துணைக் கண்டத்தைச் சார்ந்த பல்வேறு மாநிலங்களில் 1967-ம் ஆண்டுக்குப் பிற்பாடு பலவேறு கட்சி அரசாங்கங்கள் அமைந்தன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை, நாடு மறந்துவிடவில்லை. தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற கட்சியாக வந்தது. மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு, மற்றும் வேறு கட்சிகள் ஆளும் கட்சியாக வந்தன. கேரளாவில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டும் வேறு பல கட்சிகளும் ஆளும் கட்சியாக வந்தன. மகாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக வந்தது. குஜராத் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக வந்தது. தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அங்கெல்லாம் பஞ்சாலைகள் மூடப்பட்டது கிடையாதா? மூடப்பட்டது மட்டுமல்ல, மூடப்பட்ட பஞ்சாலைகள் இன்னும் பல மாநிலங்களில் திறக்கப்படாத நிலையில் இல்லையா?

தமிழ் நாடு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய முதல் அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இன்றைக்கு உதவித் தொகையாக—பேரறிஞர் அண்ணா ரூ. 2 லட்சம் கொடுத்தார், இன்றைக்கு ரூ. 5 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்கள் மூலமாக பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய துணைக்கண்டத்தில் இதைவிட முற்போக்கு பேசக்கூடிய எந்த சர்க்கார் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவித் தொகை கொடுத்திருக்கிறார்கள்? தயவு செய்து இந்த மன்றத்தில் பேசுகின்ற மற்ற சக உறுப்பினர்கள் இதைப்பற்றி விளக்கவேண்டும். மேற்கு வங்கத்தில் காட்ட முடியுமா? மகாராஷ்டிரத்தில் காட்டமுடியுமா? கேரளத்தில் காட்ட முடியுமா? குஜராத்தில் காட்ட முடியுமா? எங்கேயும் இல்லை. இந்திய துணைக்கண்டத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேறு எந்த ஒரு சர்க்காராவது, தமிழ் நாடு சர்க்காரைத் தவிர உதவித் தொகை அளித்திருக்கிறார்களா? வேறு எந்தக் கட்சி சர்க்காரும் அப்படி உதவித்தொகை அளித்திடவில்லை, எங்கேயும் இல்லை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இங்கே இருக்கிற தமிழ் நாட்டைச் சார்ந்த அரசாங்கம், தொழிலாளர் நல அமைச்சர் போனஸ் பிரச்னையை எடுத்துக்கொண்டால் 8·33% என்பது தான் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்று அறிவித்திருக்கிறார்கள். கிராஜுடியைப் பொறுத்தவரையில் ஒரு மாதச் சம்பளம் ஒரு வருஷத்திற்கு என்பதையும் மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தில் இதைவிட முற்போக்குப் பேசுகிற கட்சி, இதைவிட முற்போக்குப் பேசுகிற அரசாங்கம் இருக்கிறதே அங்கே எல்லாம் சொல்லாத கருத்து; அதை நம் தமிழ் நாட்டில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தன்மையில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வேகமாக காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இன்னொரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தது. ஐ.என்.டி.யு.ஸி., ஏ.ஐ.டி.யு.ஸி., ஸி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ். ஆகிய நான்கு சங்கங்களும் அகில இந்திய ரீதி அடிப்படையில் அமைந்த தொழிற் சங்கங்கள் ஆகும். தமிழ் நாட்டில் பஞ்சப்படி உயர்வு, தமிழ் நாட்டில் அடிப்படைச் சம்பள உயர்வு, இந்தக் கோரிக்கைகளுக்குப் போராட்டம் நடத்தியவர்கள், இந்த சங்கங்கள் ஏன் மகாராஷ்டிரத்தில் போராடவில்லை, குஜராத்தில் ஏன் போராடவில்லை? அங்கெல்லாம் இந்த சங்கங்கள் இல்லையா, இந்தச் சங்கங்களைச் சார்ந்த அமைப்புகள் இல்லையா? அங்கெல்லாம் போராடாத தொழிற் சங்கங்கள் இன்றைக்கு தமிழ் நாட்டில் போராடுகிறார்கள். அதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தின் மூலம் நம்முடைய கோரிக்கைகளை எடுத்துச் சொன்னால், இந்த அரசாங்கம் பக்கபலமாக இருக்கும், இந்த அரசாங்கம் உறுதுணையாக இருக்கும் என்பது தான். இந்த ஒரே ஆவலின் காரணமாகத்தான் இந்தப் போராட்டம். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கூட அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள், பஞ்சப்படிக்கும், சம்பள உயர்வுக்கும் ஒரு சமரசக் குழு அமைத்து அதன் முடிவுக்கு விடுகிறோம் என்று அறிக்கை தந்திருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலாவது இப்படிப்பட்ட அறிக்கை தரப்பட்டதா? அங்கெல்லாம் இப்படிப்பட்ட போராட்டம் நடத்தக்கூடாதா? போராட்டம் நடத்தி மகாராஷ்டிர மாநிலத்தில் இந்த சமரசக் குழு வாங்கக் கூடாதா, வேறு மாநிலத்தில் வாங்கக் கூடாதா? இங்கே மட்டும் தான் வாங்க வேண்டுமா? ஏனென்றால் இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் பக்கத்திலே இருந்து, அந்த நோக்கத்தோடு காரியங்களையெல்லாம் மிகத் தெளிவாகச் செய்து கொண்டிருக்கிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : நான் தலையிட வேண்டாம் என்று நினைத்தேன். இந்த கோரிக்கைகளெல்லாம் நியாயம் என்றுதான் நான்கு மத்திய தொழிற் சங்கங்களும், மாநில ரீதியாக இருக்கக்கூடிய வேறு சங்கங்களும், திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கமும் நியாயம் என்று சொல்லித்தான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பதினைந்து நாட்களுக்குப் பிறகு அது எப்படி நியாயம் இல்லாமல் போய்விட்டது? இந்தக் கோரிக்கை இல்லாமல் இருந்திருந்தாலும், வேறு பல கோரிக்கை வைத்து நீண்ட போராட்டங்கள் போன அக்டோபர் மாதத்தில்





மகாராஷ்டிர பஞ்சாலைத் தொழிலாளர்கள் நடத்தியது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு சு. துரைசாமி : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் கோரிக்கைகளையெல்லாம் பெற வேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி, இந்தப் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக சங்கம் எடுத்துக்கொண்ட பங்கு, 12-லிருந்து 18-ம் தேதி வரையில் எடுத்துக்கொண்ட பங்கைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அன்றைக்கு நடத்தியிருக்கக்கூடிய போராட்டம் நியாயமான போராட்டம்தான். மூடிய பஞ்சாலைகளைத் திறப்பதற்கு மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

அனுமதி கொடுங்கள் என்று கேட்டும் அனுமதி கொடுக்கவில்லை. போராட்டம் ஆரம்பித்து வேலை நிறுத்தம் தொடங்கியவுடன் மத்திய அரசிலிருந்து ஆளை அனுப்பியிருக்கிறார்கள் என்று கருத்து தெரிவித்தார்கள். 18-ம் தேதி பேச்சுவார்த்தையில் எவ்வளவு தூரம் தொழிலாளர்களின் பக்கத்தில் நியாயத்தைப் பெற்றுத்தரமுடியுமோ, அந்த அளவிற்கு பெற்றுக்கொடுத்து அடிப்படைச் சம்பளத்திற்கும் பஞ்சப்படிக்கும் ஒரு சமரசக் குழுவிற்கு விடுகிறோம் என்று சொன்ன பிறகும் போராட்டம் என்றால் அது நியாயம்தானா?

இன்று நமது அரசைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்குத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் பெற்றுத் தரமுடியுமோ அந்த அளவிற்கு நன்மைகளைப் பெற்றுத் தர முயற்சி எடுக்கிறது. இன்று சாதாரணக் கடைகளில் பணியாற்றுகிறவர்களுக்கு சாதாரணமாக வணிகத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு நியாயமான முறையில் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்கும் நியாயமான சம்பளம் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) இன்னும் இரண்டு கருத்துக்களை மட்டும் எடுத்துக் கூறிவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ. ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை ரூ. 50, 54, 60 என்றுதான் கொடுக்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50, 54, 60 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு தொழிலாளிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் போதிய நன்மைகளைச் செய்துவிட முடியுமா என்றால் போதிய வசதிகளை செய்து கொடுக்க முடிவதில்லை. எனவே, தொழிலாளர்கள் அதிக வசதி பெறத்தக்க விதத்தில் ஈ. எஸ். ஐ. கார்ப்பரேஷன் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். நமது அரசிலிருந்து உதவி செய்கிறார்கள்; ஒரு கோடி ரூபாய் அளவிற்கு தமிழ் நாடு அரசாங்கம் தன் சொந்தப் பொறுப்பிலிருந்து அதற்காகச் செலவழிக்கிறார்கள். அதை பாராட்டுகிறோம். என்றாலும் இந்த ஈ. எஸ். ஐ. கார்ப்பரேஷன் அதிக முயற்சி எடுத்து இன்னும் அதிகப்படியான பணத்தைப் பெற்றுத்தர வேண்டும். இன்று இங்கேயுள்ளவர்களும் சரி வெளியே இருப்பவர்களும் சரி அரசாங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அரசின் உதவியை

கொண்டு தொழிலாளர்களுக்கு நன்மைகள் புரிய முழு ஒத்துழைப்பு தந்து வேண்டிய காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் சிலருக்கு பேராசை பிடித்து விடுகிறது.

பொன் முட்டை இடும் வாத்து போல் தினம் ஒன்றுக்கு கிடைக்கிற ஒரு பொன் முட்டையைக் கொண்டு வாழ்க்கை நடத்தமுடியும், ஆனால் அதைக் கொன்றுவிட்டால் எல்லா பொன் முட்டைகளும் கிடைக்குமே. பெரிய தொகை கிடைக்குமே என்ற கதைபோல்தான் இருக்கிறது. இந்த அரசு நீடித்திருக்கிற வரையில்தான் தொழிலாளர்களுக்கு நீடித்த நன்மைகள் கிடைக்கும். இந்த அரசு தொழிலாளர்களுக்கு பல துறைகளில் வேண்டிய நன்மைகளைச் செய்து வருகிறது. ஆனால் அதிகப்படியான பொன் முட்டைகள் கிடைக்கும் என்று அந்த வாத்தைக் கொன்ற கதைமாதிரி யார் யார் இந்த அரசுக்கு ஊறு விளைவிக்க வருகிறார்களோ அவர்கள் உள்ளபடியே தொழிலாளர் வர்க்கத்திற்குத் தீமை இழைப்பவர்களாவார்கள் என்று பணிவுடன் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே முதலாளிகள் கடுமையாகச் சுரண்டுவதினாலேதான் குறிப்பாக தமிழ்நாட்டில் தொழிலாளர்களுடைய போராட்டங்கள் நடக்கின்றன. வேலையிலிருந்து நீக்குவது, அதிகப்படியான அளவிற்கு வேலை வாங்குவது, விலைவாசி யேற்றம் போன்றவைகளினால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, அவர்கள் சுரண்டப்படுகிறார்கள்.

குறிப்பாக இங்குள்ள ஏகபோக முதலாளிகள் வர்க்கத்தைச் சேர்ந்த 14 குடும்பங்களினாலே இந்தப் போராட்டங்களில் சர்க்காருடைய நிலை என்ன என்பதுதான் நமக்குத் தெரியவில்லை. சர்க்காருக்குத் தொழில் விஷயத்தில் தொழிலாளர்களின் பேரில் அன்பிருக்கலாம். ஆதரவு இருக்கலாம். ஆனால் நடைமுறையில் இப்படிப்பட்ட போராட்டங்களில் சர்க்கார் பங்கு என்ன என்று பார்க்கவேண்டும். எந்தப்பக்கம் அவர்கள் நிற்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

உதாரணமாக பல போராட்டங்கள் நடக்கின்றன. அதில் கலந்து கொண்டு அந்தப் போராட்டத்தைப் பேசித் தீர்க்கிறார்கள். நீண்ட காலமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடக்கிற அளவிற்கு தொழிலாளர் களுக்கு ஒரு பாதுகாப்பான நிலை இருக்கக்கூடிய சமயத்தில் சர்க்கார் தலையீடு வருகிறது. ஒவ்வொரு வேலை நிறுத்தத்திற்கும் முன்பாகவே ஒரு மாதம் அல்லது 15 நாள் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். நோட்டீஸ் கொடுத்தவுடனேயே அந்த முதலாளியையும் தொழிலாளர்களையும் கூப்பிட்டுப் பேசுவது கிடையாது.

உதாரணமாக, சர்க்கரை மில்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு ஊதிய போர்ட் சிபார்சு இருக்கிறது. அது குறித்த நோட்டீஸ் கொடுத்த வுடன் இருவரையும் கூப்பிட்டுப் பேசினார்கள். போர்ட் சிபார்சுபடி அந்த அடிப்படையில் கூலி கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். ஆனால்





தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் காரணமாக போர்ட் சிபார்சு செய்ததைவிட பத்து ரூபாய் அதிகமாகக் கொடுக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. போனஸ் விஷயமாக 8$\frac{1}{3}$ சதவிகிதம் இது இந்தியா பூராவிற்கும் அமல் செய்யவேண்டுமென்று பம்பாய் போன்ற மாநிலங்களில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி இங்கும் அப்படி போனஸ் கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்தார்கள். சர்க்கார் இணங்கவில்லை. ஆனால் கடுமையான போராட்டம் நடந்ததற்குப் பிறகு 8$\frac{1}{3}$ சதவிகிதம் என்பதை ஒத்துக்கொண்டார்கள். அதே மாதிரிதான் பீடித்தொழிலாளர்கள். ஆயிரம் பீடிக்கு குறைந்தபட்சம் நான்கு ரூபாய் கூலி என்று நோட்டீஸ் கொடுத்தார்கள். பிறகு போராட்டம் நடந்தது. சர்க்கார் தலையிட்டு சமரசம் செய்தார்கள். அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இதுவரை அது அமல் செய்யப்படவில்லை. அதே மாதிரி பஞ்சாலைகள் உள்ளன. பெருவாரியான விவகாரங்கள் அட்ஜுடிகேஷனுக்கு விடுவதாக ஒப்பந்தம் ஏற்பட்டால், நாளடைவில் அது முதலாளிகளுக்கு சாதகமாகவே அமைகிறது.

வண்டலூரில் ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஆறு மாத காலத்தில் அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் வருடம் ஒன்று ஆயிற்று, இன்னும் 600 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. சர்க்கார் பக்கத்திலிருந்து பேசுகிறார்கள் என்றால், சர்க்கார் சங்கத்திற்காகவும் பேசுகிறார்கள். டிபார்ட்மெண்ட்க்காகவும் பேசுகிறார்கள். முதலாளிகளுக்காகவும் சர்க்கார் பேசுகிறார்கள். லேபர் டிபார்ட்மெண்ட் என்றால், அது தனியாக இயங்கவேண்டும். தொழிற் சங்கம் என்றால், அவர்களாகவே இனிஷியேட்டிவ் எடுத்து தீர்ப்பதைவிட்டு அவர்களைக் கூப்பிட்டு பேசித் தீர்ப்பது என்பது நாளாவட்டத்தில் முதலாளி களுக்குச் சாதகமாக ஆகிறது.

இன்றைய தினம் போலீஸ் முதலாளிகளுக்குச் சாதகமாக தொழிலா ளர்கள்மீது அடக்குமுறை செய்கிறார்கள். லா அண்ட் ஆர்டரை மெயின் டெயின் செய்வதற்கு முடியவில்லை. பாரலைஸ் ஆகிவிடுகிறது. தகராறு ஏற்பட்டால் எந்த முதலாளியிடம் பேசுவது, இந்த முதலாளியிடம் பேசு வதா, இல்லை அந்த முதலாளியிடம் பேசுவதா என்று மந்திரியிடம் கேட்டுச் செய்யவேண்டியிருக்கிறது. அன்றாட வேலைக்குக்கூட சர்க்காரிடத்திலிருந்து உத்தரவு வாங்கவேண்டிய துர்ப்பாக்கியகரமான நிலை இருக்கிறது.

என் போராட்டங்கள் சமயங்களில் சர்க்கார் முதலாளிகளுக்குச் சாதகமாக போலீஸை உபயோகிக்கிறார்கள். ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிறது, முதலாளிகள், தொழிலாளிகள், சர்க்கார் இவர்களுக்கிடையே அந்த ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதும், அவர்கள்மீது போடப்பட்ட கேஸ்களை வாபஸ் வாங்குவதும்தான் நியாயம். காங்கிரஸ்காரர்களின் காலத்தில் அப்படித்தான் நடந்தது.

ஒப்பந்தம் என்று ஏற்பட்டுவிட்டால் ஜெயிலில் போட்டவர்களை விடுதலை செய்வார்கள், கேஸ்கள் போட்டிருந்தால் அவற்றை வாபஸ் வாங்குவார்கள். சாரதா ஸ்டுடியோவை எடுத்துக்கொண்டாலும், ஆவடி தொழிற்சாலையை

வர்கள்மீது இன்னும் கேஸ்கள் இருந்து வருகின்றன. அவை வாபஸ் வாங்கப்படவில்லை. இப்படிப்பட்டதொரு நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக இன்றைய தினம் பிராவிடண்ட் பண்ட், ஈ.எஸ்.ஐ. பண்ட் இவற்றிலுள்ள தொழிலாளர்களின் பணத்தை முதலாளிகள் சாப்பிட்டிருக்கிறார்கள். அப்படி பலயிடங்களில் நடந்திருக்கின்றன. ஸ்டேன்ஸ் மில்லில் 14 லட்சம் ரூபாய், சோமசுந்தராவில் ரூ. 25 லட்சம். இந்த அளவிற்கு அவர்கள், முதலாளிகள் சாப்பிட்டிருக்கிறார்கள். சட்டத்தில் இடம் இருக்கிறது, அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கும், ஜெயிலில் போடுவதற்கும். ஆனால் இதுவரையில் அந்தமாதிரி ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

மோட்டார் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் வேஜ் போர்ட் தீர்ப்பு வந்தது. மந்திரி அவர்கள் ஒரு கூட்டம் நடத்தினார். அதற்கு முதலாளிகளைக் கூப்பிட்டிருந்தார்கள், அதை அமல் செய்யச் சொல்வதற்கு. ஆனால் அந்த முதலாளிகள் வரவில்லை. உடனே மந்திரியவர்கள் சொன்னார்கள் உடனடியாக அவசரச் சட்டம் கொண்டுவருவதாக, அப்படிச் சொல்லி ஆறு மாதங்களாயிற்று, இன்னும் அப்படிச் சட்டம் கொண்டு வரப்படவில்லை.

இன்னும், சர்க்காரே முதலாளியாக இருக்கும் சிங்கோனா தோட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்குள்ள தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சட்டமும் கொண்டுவரப்படவில்லை. ஏற்கெனவே தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம்கூட அவர்களுக்கு இல்லை. விலைவாசியோ ஏறிக்கொண்டே போகிறது.

-30 ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இருந்த காலத்தில் இந்த பஞ்சப்படி நிர்ணயிக்கப்பட்டது. பஞ்சப்படியை ஏற்றித்தாருங்கள் என்று போராட்டம் வரலாம். நான் முதலில் ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் உள்ள ஒரு மோசடியைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் புள்ளி 828, 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 857, 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 866, 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 871, 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 881, டிசம்பர் மாதம் 895, 1972-ம் ஜனவரி மாதம் 923 என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் ஒரு மோசடி நடந்து இருப்பதாகக் கூறினார். அந்த வார்த்தையைப் பயன்படுத்தலாமா? குறைபாடுகள் என்று சொல்லி இருக்கலாம். மோசடி என்று கூறுவது முறையாகாது.

**திரு. என். கே. பழனிசாமி** : நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்)** : அவரே அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார்.



**திரு. என். கே. பழனிசாமி** : திடீரென்று இன்று 38 புள்ளி குறைந்திருக்கிறது. எந்த விலைவாசி குறைந்து இருக்கிறது. என்ன விலை குறைந்து இருக்கிறது. எப்படி இந்த 38 புள்ளி குறையும் என்று எனக்குத் தெரியவில்லை. அதைத்தான் சொல்வதற்கு விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

பஞ்சாலைகளில் போராட்டம் நடந்து, ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை முதலாளிகள் அமல் செய்யவில்லை. அந்த ஒப்பந்தத்தை அமல் செய்யவேண்டுமென்ற உத்தரவை போட சர்க்கார் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. இராமலிங்கம்** : தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் கொண்டுவந்திருக்கக்கூடிய மானியகோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லவிழைகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக தொழில் அமைதி கெட்டு வந்தது என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிற வகையில், போராட்டங்கள், கிளர்ச்சிகள், தவிர்க்க முடியாது என்பதை பார்க்கிறோம். வளர்ந்து இருக்கிற நாடுகளில் ஆனாலும் சரி, அல்லது இந்தியா போன்று வளர்ந்துவரும் நாடுகளானாலும் சரி, இத்தகைய ஏற்றத்தாழ்வு இருக்கிறவரையில் போராட்டங்கள் தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. அவ்வப்போது நடைபெற்றுவரும் போராட்டங்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் மிகவும் அக்கறை எடுத்துக்கொண்டு அந்தப் போராட்டங்களைத் தவிர்த்திருக்கிறார்கள்.

பஞ்சாலைப் போராட்டம் கோவையில் ஏற்பட்டது. அது தமிழ்நாட்டிலே ஒரு பெரிய கிளர்ச்சியாக இருந்தது. அதை எவ்வளவு சுமுகமாகத் தீர்க்கமுடியுமோ, அப்படிச் செய்தார்கள். அரசு இன்றைக்கு அந்த மூடப் பட்ட பஞ்சாலைகளை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறது. இன்னும் மூடப் பட்டிருக்கிற பஞ்சாலைகளை ஏற்று நடத்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. பஞ்சாலைகள் மூடப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக முதலமைச்சர் அவர்களுடைய நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் நிவாரணம் வழங்குவதற்காக தந்திருக்கிறார்கள்.

கோவை, மதுரை, தூத்துக்குடி, நெய்வேலியில் பொறியாளர்கள் வேலை நிறுத்தம், சென்னையில் ரப்பர் தொழிற்சாலை வேலை நிறுத்தம், திருப்பூர் பனியன் கம்பெனி வேலை நிறுத்தம், இப்படி பல வேலை நிறுத்தங்கள் தவிர்க்கப்பட்டது, அவர்களுடைய திறமையையும், தொழிலாளர்களுக்காக இந்த அரசு எத்தகைய அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அரசு இன்றைக்கு தொழிலாளர்கள் நலத்திற்காக தீவிர கவனம் செலுத்திவருகிறது.

ஒரு காலத்தில் தொழிலாளர்கள் போராட்டம் என்றால் போலீசார் குண்டாந்தடியும், துப்பாக்கிப்பிரயோகமும்தான் உபயோகித்து அதை அடக்கி வந்தார்கள். இன்றைக்கு இதைத் தவிர்த்து

தொழிலாளர்கள் போராட்டங்கள், தொழிலாளர்களுடைய குறைகள், அவர்கள் கேட்கிற கோரிக்கைகள் சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்படுகிறது. இந்த முறையை தமிழகத்திலே உள்ள அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள். பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இந்தச் சூழ்நிலையே நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே, நான் இந்த முறை ஒரு சிறந்த முறை என்று சொல்லவிரும்புகிறேன்.

அரசு இன்றைக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கும் குழுவை நியமித்து இருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதனால் தொழிலாளர்கள் பண்ணையக்கூடங்களிலும் தொழிலில் வேலை செய்பவர்கள், மற்ற தொழிலாளர்கள் பிரிவை, இதற்குக் குறைந்த கூலி நிர்ணயக் குழுவால் தீர்மானிக்கிறது. இதைப்போல தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தி, தொழிலாளர்களுக்கு எல்லாவிதமான நல்ல காரியங்களைச் செய்யலாம் என்று அறிவித்திருக்கிறது. போனஸ் பற்றி இன்றைக்கு மத்திய அரசுக்கு 8-1/3 சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்று மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

இந்த போனஸ் பிரச்னை மட்டுமல்ல, இ. எஸ். ஐ. மருத்துவ வசதியை இன்றைக்கு 1 கோடி ரூபாய் வரை மாநில அரசு செலவழிக்கிறது என்றாலும், மருத்துவ வசதி இல்லாத தொழிலாளர்களுக்கும் படிப்படியாக கொடுக்கவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வர நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு நெசவுத் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் குறிப்பாக ஆலைத் தொழிலாளர்கள் கடன் வாங்கி காலம் கழிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள். ரூ. 100-க்கு மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வரை வட்டி கொடுக்கிறார்கள். இந்த வட்டியிருக்கும் காரணத்தால் ரூ. 500 யாராவது கடன் வாங்கினால் அவன் காலம் எல்லாம் வட்டி கொடுக்கும் நிலைமையிருக்கிறதே தவிர அசலைத் திருப்பித் தர முடிவதில்லை.

இன்னொரு பெரிய பிரச்னையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள் வீடு வைத்திருந்தால் அந்த வீட்டின் பேரில் கடன் கொடுக்க அரசு முன் வரவேண்டும். ஒரு தொழிலாளிக்கு வீடு இருக்கிறது என்றால், அவனுடைய வீட்டின் வருமானம் வருகிறது என்றால், அதன் பேரில் அவன் அடமானம் வைத்து கடன் கேட்டால் 5 சதவிகித வட்டிக்கு அரசாங்கம் கடன் கொடுக்க முன் வரவேண்டும். கூட்டுறவுத் துறையின் மூலமாவது இத்தகைய தொழிலாளர்களின் வீடுகளுக்குக்கடன் கொடுத்து துணை செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கும் ஆலைத் தொழிலாளிகள் பல போராட்டங்களை நடத்தியும், அவர்களுடைய பிரச்னை தீர்ந்தபாடில்லை. அதற்குக்காரணம் பல இருக்கின்றன என்பது நமக்கெல்லாம் தெரியும். இன்றைக்குக் குறிப்பாக அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாம் போட்டிருக்கிற சட்டங்கள் போதுமானவையாக இல்லை. 4 சத விகிதம் போனஸ்





தரவேண்டுமென்று இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். ஒரு தொழிலாளிக்கு ஒரு கம்பெனியில் போனஸ் நிர்ணயிக்கிறபோது என்னதான் லாபம் வந்தாலும் பொய்க்கணக்குக் காட்டாமல் செய்து விடுகிறார்கள். இன்றைக்கு இருக்கும் சட்டப்படி போனஸ் வராத அளவுக்கு சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றியமைக்கவேண்டும். தொழிலாளிக்கு கொடுக்கவேண்டிய பணம் வருகிறபோது எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து நஷ்டமானது, அது இது என்று கணக்குக்காட்டி விடுகிறார்கள். ஆகவே, $8\frac{1}{3}\%$ போனஸை குறைந்தது கொடுக்கவேண்டுமென்று சட்டத்தைத் திருத்துவதோடு மட்டுமல்லாமல், உயர்ந்த அளவு போனஸ் எவ்வளவு தரவேண்டுமென்பதையும் நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் இந்தச் சட்டத்தை மாற்றவேண்டும்.

ஆலைத்தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஓய்வு வயது எவ்வளவு என்று கணக்கிடுவதில் முரண்பாடு இருக்கிறது. சில ஆலைகளில் 55 என்றும், சில ஆலைகளில் 58 என்றும் இருக்கிறது. இந்த மாநிலம் முழுவதிலும் சீராக ஓய்வு பெறும் வயதை நிர்ணயிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு இருக்கிற நேரத்தில், தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தொழிலாளர்கள் மத்தியில் படித்துப் பட்டம் பெற, அவர்களுடைய குழந்தைகள் பட்டப்படிப்பு படிக்கக்கூடிய அளவுக்கு தொழிலாளர்கள் வசதி படைத்தவர்களாக இல்லை.

தூத்துக்குடி உப்புத் தொழிலாளர்கள் 5,000 பேருக்கு மேல் உப்பளத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் பாக்டரி சட்டத்தின்கீழ் வரவில்லை. பாக்டரி சட்டத்தை அவர்களுக்கு அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் மானியத்திலே பல முக்கியமான கருத்துக்களை இந்த அரசுக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இருபது ஆண்டு காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் நன்றாகத் தொழில்கள் வளர்ந்தது தமிழகத்தில், இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழில் வளர்ந்துள்ளதா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. தொழில் அமைதி கெட்டிருக்கிறது; தொழில்களும் கொஞ்சம் கொஞ்சமாக மூடப்பட்டு, தொழில் அதிபர்கள் புதிய தொழில்களை ஆரம்பிக்கப் பயப்படுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இதிலே சற்று அதிக அக்கறை காட்டவேண்டும்.

புதிய தொழில்களை ஏதாவது ஆரம்பித்திருக்கிறார்களா என்று தொழில் மானியத்தில் துருவித்துருவிப் பார்த்தேன், எங்கள் கண்ணுக்குப் பட்டதெல்லாம் சாராய உற்பத்தித் தொழிலும், சிகரெட் தொழிற்சாலையுந்தான். 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் எஞ்சினியரிங்

கூட்டல் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் எல்லாம் ஆரம்பிக்கப் பட்டன. அவை எல்லாம் இப்போது முடங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது தொழிலாளர் அமைதி குறைந்திருக்கிறது. அதைப் போக்க இந்த அரசு தக்க கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை மூடியதைத் திறந்தார்கள். எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுத்தார்களா என்றால் இல்லை. பருத்தி ஆலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்ட நிலை. தொழிலாளர் போராட்டம். பஞ்சாலைத் தொழிற்சாலைகளைத் திறக்கவில்லையே என்றால் மத்திய அரசு அனுமதி தரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஏதோ நிவாரணமாக ஐந்து லட்சம் ரூபாயைக் கொடுத்துவிடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. எவ்வளவு நிலையாகப் பிரச்சினையைத் தீர்க்கிறோம் என்பதுதான் முக்கியம். அப்போதைக்கப்போது கேட்கும் போது ஐந்து லட்சம் வைத்துக்கொள் என்று சொல்லுவது அந்தத் தொழிலாளர்களை மேலும் ஐந்து மாதங்கள் பட்டினி போடுவதாகத் தான் ஆகுமே தவிர அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் கண்டதாகக் கூறமுடியாது.

இன்றைக்கு எப்படி தொழில் அமைதி குறைந்திருக்கிறது என்பது நீங்கள் கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்தே உணர முடிகிறது. 1970-ல் 277 லாக் அவுட்ஸ்; 1971-ல 308 லாக் அவுட்ஸ், ஏறிக் கொண்டு போகிறதே தவிர, இறங்கக் காணோம். தொழிலாளர்களுக் கான பாதுகாப்பைப் பார்த்தால் ஃபாடல் ஆக்சிடெண்ட்ஸ் 32 ஆக இருந்தது, 42 ஆக உயர்ந்திருக்கிறது. தொழிலாளர் உயிர் மிக மிக முக்கியம். ஃபேடல் ஆக்சிடெண்ட்ஸ் அதிகப்பட்டிருப்பது கவனக்குறை வைத்தான் காட்டுகிறது. 'மேன் டேஸ் லாஸ்ட்' எவ்வளவு என்று பார்த்தால் சென்ற வருஷம் 10 லட்சம் மேன் டேஸ் லாஸ்ட்; இந்த வருஷம் 22 லட்சம் மேன் டேஸ் லாஸ்ட் இரண்டரைப் பங்கு அதிகமாகி இருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது பயங்கரமான சூழ்நிலையை நோக்கித் தமிழகம் போய்க் கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் 460,000 பேர் பதிவு செய்துவிட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இரண்டு லட்சத்து சொச்சமாக இருந்தது, இந்த ஆண்டு 460,000 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பது எதைக் காட்டுகிறது? வேலையில்லாத் திண்டாட்டத்தைக் காட்டுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணமென்ன? தொழில் வளராமைதான். தொழில் வளராமைக்குக் காரணம் தொழில் அமைதி யின்மை. தொழில் அமைதியின்மை பல ரூபங்களில் உருவாகிக் கொண் டிருக்கிறது. தொழிற்சங்க வாதிகளும் சரி, மானேஜ்மெண்டும் சரி, அரசாங்கமும் சரி தொழிலாளர் நலனில் கவனம் செலுத்தவில்லை. அரசாங்கச் சிப்பந்திகளுக்கே பாதுகாப்பு இல்லையென்றால் தொழிற்சாலை களில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கப் போகிறது?

தொழிலாளிக்கு எது அவசியம்? நிரந்தரமான வேலை அவசியம். வேலைக்கு உரிய கூலி அவசியம். இந்த இரண்டையும் அரசாங்கம் கொடுக்கிறதா என்றால் இல்லை. தமிழகத்தில் பால்பண்ணையில்



ஈடுபட்டிருக்கும் தொழிலாளி முதல் பைத்தியக்கார நாய் பிடிக்கும் தொழிலாளி வரை அதிருப்தியுடன்தான் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் கையில் நிரந்தரமே கிடையாது. எலக்ட்ரிசிடி போர்டில் உள்ள 80,000 தொழிலாளர்களில் 30,000 தொழிலாளர்கள் டி.சி.எல்;, என்.எம்.ஆர். நிரந்தரக் கூலி இல்லை. இஷ்டப்பட்டால் கூலி, இல்லையென்றால் இல்லை. ஒரு நாள் லீவ் எடுக்க வசதி கிடையாது. எந்த வித உரிமையும் எந்தத் தொழிலாளிக்கும் கிடையாது. அரசாங்கத்தில் இருக்கும் சிப்பந்திகள் நிலை இப்படி இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** ஒரு கிளாரிபிகேஷன், எலக்ட்ரிசிடி போர்டில் டி.சி.எல். தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பெயரை வைத்து இந்த உத்தியோ கத்தைக் கொடுக்க ஆரம்பித்தவர்களே காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸ் ஆட்சியில் 40,000 பேரில் 17,000 பேர் நிரந்தரமற்ற நிலையில் இருந் தார்கள். இப்போது அந்த விகிதாசாரத்தைப் பார்த்தால்கூட தி.மு.க. ஆட்சியில் அந்த அளவுக்கு இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:**—நீங்கள் அதைச் சரி செய்யுங்களேன், 30,000 பேர் டி. சி. எல்., என். எம். ஆர். பர்மெனண்ட் டெம்பரரி. டெம்பரரி பர்மனெனன்ட் என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. சட்டப் பேரவையிலே வேலை செய்கிறவர்களை எடுத்துக் கொண்டாலும் 15 வருஷ காலமாக டெம்பரவரியாகவே வேலை செய்கிறார்கள். இவர்களை எல்லாம் கவனிக்கவில்லை. கால்நடை இலாகாவில் கடை நிலை ஊழியர்கள் அக்ரிகல்சர் இலாகாவில் கடைநிலை ஊழியர்கள் நிலையும் அதுதான். பால் பண்ணையில் வேலை செய்கின்ற இவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய் 20 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. டி. எ., சி.சி.எ., எச்.ஆர்.எ., ஆகியவை எல்லாம் கொடுக்கலாம். ஆனால் அடிப்படைச் சம்பளம் மிகவும் குறைவு. இதற்கெல்லாம் அரசாங்கம் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

பி.டபிள்யூ.டி.ல் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் காஷுவல் லேபரர்களாக இருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் சென்ற வருஷம் ப்ரொவின்ஷியலைஸ்டு ஒர்க் சார்ஜ் என்று புதிய இனத்தைச் சொன்னார், ஒன்று பர்மனெண்ட், மற்றொன்று காஷுவல். காஷுவலாக - 3 வருடம், ஐந்து வருடம் வேலை செய்தால் அவர்களை பர்மனெண்ட்டாக வைத்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். அரசாங்கமே இப்படி இருந்தால் தொழில் அதிபர்கள் எப்படி இருப்பார்கள்? எந்தத் தொழில் அதிபரும், பத்திரிகை அதிபரும், மோட்டார்த் தொழில் அதிபரும், தினக் கூலிதான் கொடுக்கிறார்களே தவிர, இன்றைக்கு வேலை செய்தால் இன்றைக்குக் காசு என்ற அளவிலேதான் கொடுக்கிறார்களே தவிர, நிரந்தரமாக வைத்துக் கொள்ளுவதில்லை. நிரந்தரமாக வைத்துக்கொண்டால். கிராசுவிடி, ப்ராவிடண்ட் பண்ட் போன்றவை எல்லாம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். (மணி அடிக்கப்பட்டது) அப்போசிஷனுக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். How can we express our opinion? Otherwise

அரசாங்கம் இதற்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அரசாங்கத்தில் எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிருர்களோ அவர்கள் அவ்வளவு பேரையும் பர்மனெண்ட் ஆக்க வழி செய்ய வேண்டும். காஷுவல் லேபரை எவ்வளவு குறைவாக வைத்துக் கொள்ள வேண்டுமோ அவ்வளவு குறைவாக வைத்துக்கொள்ள வேண்டும். பெரிய தொழில் அதிபர்கள் இன்று நிரந்தரமான வேலைக்கு நிரந்தரமற்ற கூலிகளை வைத்து வேலை வாங்கிக் கொள்ளுகிருர்கள். அரசாங்கம் இதைப் பற்றியெல்லாம் ஆராய ஒரு கமிட்டி போட்டு அவர்களை எல்லாம் பர்மனென்டாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும்.

தமிழகத்தில் இப்போது ஒரு புதிய முறை கையாளப்பட்டு வருகிறது. 'கோ ஸ்லோ' என்று உற்பத்தியின் அளவைக் குறைக்கின்ற முறை கையாளப்படுகின்றது. தொழிலாளர் பிரச்சினைகள், கோரிக்கைகள் வந்தால் போராட்டத்திற்குத்தான். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வழி காட்டுகிருர்களே தவிர பிரச்சினையைத் தீர்க்க முன்வருவதில்லை. உற்பத்தி குறையக்கூடிய வகையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தலையிடுகிருர்கள். அதில் கவனமாக இருக்கவேண்டும். உற்பத்தி குறைந்தால் உண்மையிலேயே பொருளாதாரம் முறியடிக்கப்படும். அந்த நிலையில் 'கோ ஸ்லோ டாக்டிக்ஸை' தொழிற்சங்கவாதிகள் கடைப்பிடிக்கிருர்கள். தொழிலாளிகள் கோரிக்கையை யாரிடத்தில் கொடுக்கிருர்களோ அவர்களிடம் 'கோரிக்கையைச் சீக்கிரமாக நிறைவேற்றி விடாதீர்கள், பத்து நாள் ஆறப் போடுங்கள் எங்கள் நாடகத்தை நாங்கள் நடத்துகிறோம்' என்று முறையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தலையிடுகிருர்கள். பெரிய போராட்டம் பண்ணித்தான் வாங்கவேண்டும். அப்படிப் போராட்டம் நடத்தி பத்து நாள் கழித்துப் பெற்ருல்தான் அந்தக் கோரிக்கை வெற்றி பெற்றதாகத் தெரியுமாம். பத்து நாள் இப்படி நாடகம் நடத்தி பிறகு பிரச்சினை வெற்றி பெற்றது என்று செய்வதால் உற்பத்தி எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்று பார்க்கவேண்டும். இத்தகைய சீப் டாக்டிக்ஸ் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். இப்படி. தரக் குறைவான நிலைமைகள் எல்லாம் ஏற்படவிடக் கூடாது. தொழிலாளர் பிரச்சினையை உண்மையிலேயே தீர்க்க முன்வரவேண்டுமே தவிர, அதிலே அரசியல் தேவையில்லை. உண்மைக்கு மாருக இப்படிப்பட்ட நாடகத்தை நடத்த தொழிற்சங்கவாதிகள் முன்வரக்கூடாது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிக் கண்ணும் கருத்துமாக இருந்து பார்த்து குறைக்க முன்வரவேண்டும்.

சங்கரி சிமெண்ட் தொழிற்சாலையில் 19 தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டதைப் பற்றி எடுத்துச் சொன்னேம். கனம் அமைச்சர் அவர்கள், எப்படியும் அந்தத் தொழிலாளர்களைத் திருப்பி எடுத்துக்கொள்ளுவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள், எப்படியும் திருப்பி எடுத்துக் கொள்ளச் சொல்லுகிறேன் என்று சொன்னுர்கள். இன்றுவரை அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் மேலும் அதிகமான அளவுக்குப் பழி வாங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பரி





காரம் காண முற்பட வேண்டும். அதை மறந்துவிடக்கூடாது. அதை மறந்துவிட்டால் மீண்டும் தொழிலாளி ஆரம்பத்திலிருந்து அடியிலிருந்து கோரிக்கையை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

முதலமைச்சர் அவர்கள் கம்பியூட்டர் கணக்குப் போடத்தான் கொண்டு வரப் போவதாகச் சொன்னுர்கள். அதிகமான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினுல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் இதுபோன்ற ராட்சச இயந்திரங்களை இறக்குமதி செய்து கணக்குப் போட ஆரம்பித்தால் பல பேர் வேலைக்கு அது உலை வைத்துவிடும். முதலிலே [illegible] ஒன்றிலே ஆரம்பித்து பல இடங்களுக்கும் தேவை என்ற சூழ்நிலை உண்டாகிவிடும். ஐ. பி. எம். கம்பெனிக்குத்தான் நேரடியாக வாடகைப் பணம் கொடுக்க வேண்டும். ஐ.பி.எம். கம்பெனி அமெரிக்கக் கம்பெனி. வாடகைக்கு வாடகை கொடுக்க வேண்டும்; எவ்வளவு வாடகை கொடுக்க வேண்டுமோ தெரியவில்லை; அதே நேரத்தில் நம்முடைய மக்களுக்கு வேலை பாதிக்கப் படுகிறது. நம்முடைய பணம் அமெரிக்கக் கம்பெனிக்குப் போகும் சூழ்நிலைதான் ஏற்படும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** [illegible] அன்றைக்கே சொன்னேன். கம்ப்யூட்டர் வருவதால் நிச்சயமாக யாருக்கும் வேலை இழப்பு ஏற்படாது என்று கூறியிருக்கிறேன். இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆபீசில் நடைபெறுகின்ற கிளர்ச்சிகூட வேலை இழப்பு ஏற்படலாம் என்ற அடிப்படையிலே நடைபெறுகின்ற கிளர்ச்சியாகத்தான் விளங்குகிறதே தவிர வேறல்ல. வேலை இழப்பு நிச்சயமாக ஏற்படாது. ஐம்பதுபேர் பாதிக்கப்படக்கூடும்; அவர்கள் பாதிக்கப்படாத அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிறேன்.

அம்மையார் அவர்கள் தொழிற்சங்க வாதிகள் எந்த அளவுக்குக் கிளர்ச்சிகளை நடத்துகிருர்கள் என்ற சில அடிப்படை உண்மைகளை எடுத்துச் சொன்னுர்கள். அவர்களுக்குக் கிடைத்த குறைந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர்கள் நன்ருக உணர்ந்து கொண்டிருக்கிருர்கள்.

இப்போது நடைபெறும் கம்ப்யூட்டர் பிரச்னையின் மர்மம் என்ன, ரகசியம் என்ன என்பதை அம்மையார் அவர்கள் தயவு செய்து தனிப்பட்ட முறையில் அங்கே நடைபெறும் கிளர்ச்சியைப் பற்றி விசாரித்து உணர்ந்துகொண்டால், எந்த நோக்கத்துடன் அது நடைபெறுகிறது, யார் யார் அதிலே ஈடுபட்டிருக்கிருர்கள், யார் யார் தனக்குப் பாதகம் ஏற்படும் என்று கருதுகிருர்கள் என்பதையெல்லாம் புரிந்துகொள்ள முடியும்.

அது மாத்திரமல்ல, என்.ஜி.ஓ.க்கள் சங்கத்தினர் இப்போதுள்ள பிராவிடண்ட் ஃபண்டு கணக்கை மாநில அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிருர்கள். அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கும் எதிர்ப்பு நடவடிக்கை அங்கு எடுக்கப்பட்டு வருகிறது. அம்மையார் நேரில் அங்கே இருப்பவர்களை ரகசியமாக விசாரித்தால் அது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது என்ற உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். அதற்குமேல் நான் விளக்க விரும்பவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கணக்குகளை இங்கே கொண்டு வந்து நடத்துவதுபற்றியும், ஆட்டோமேஷனை கொள்கை ரீதியாக மறுத்துவிட வேண்டும் என்பது பற்றியும்தான் இப்போதுள்ள பிரச்னை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்காக விஞ்ஞானமே அடியெடுத்து வைக்கக் கூடாது என்ற நிலைக்குப் போய்விடக் கூடாது. அது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்துமா என்றுதான் பார்க்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாத அளவுக்கு இயந்திர உதவியைப் பயன்படுத்துவதில் எந்தவிதத் தவறுமில்லை. முதலாளித்துவ நாடுகளில் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இரஷ்ய நாட்டில் கம்ப்யூட்டர் முறை பின்பற்றப்படாமல் இல்லை. அங்கே ராக்கெட் போன்ற முன்னேற்றத்திற்கு இயந்திர முறையில் நம்பிக்கை வைத்து அவர்கள் மேலும் உற்சாகப்படுவதை மறந்துவிடக் கூடாது. வேலை குறைகிறது; அதனால் பலர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற சூழ்நிலை இல்லாதவரை தவறில்லை.

**திரு.கே.டி.கே. தங்கமணி:** சோவியத் யூனியனில் கம்ப்யூட்டர் வேண்டும் என்கிறார்கள். காரணம் அங்கே வேலை குறைவாகச் செய்யவேண்டும் என்பதற்காக. ஆனால் நம் நாட்டில் வேலையில்லை என்போர் பட்டாளம் பட்டாளமாக இருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** முதலமைச்சர் ஒரு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார். யாருக்கும் வேலை போகாது என்று. வேலை இல்லாத நிலைமைக்கு ஓட்டிக்கொண்டு போகிறதா போகவில்லையா என்பதைச் சற்று நாள் பொறுத்துப் பார்ப்போம். எங்கள் கவலையெல்லாம் இருக்கும் வேலைக்கு உலை வைக்கக்கூடாது. முதலில் சின்ன மெஷின் கொடுப்பார்கள். அடுத்து ராட்சஸ மெஷின் கொடுப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக ஆளை வீட்டுக்கு அனுப்பிவிடும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அதை நடைமுறையில் பார்க்க வேண்டும். அந்த வகையில் பாதிக்கப்படமாட்டார்கள் என்றால் பரவாயில்லை.

ஏனென்றால் இன்றைக்கு சென்சஸ் வேலையில் பல்லாயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அதில் பல ஆண்டுகள் வேலை செய்தவர்கள், ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் இன்றைக்கு அவர்கள் தேவையில்லை என்று வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். மத்திய சர்க்கார் தான் 20,000 பேரை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். திடீரென்று அவர்கள் எங்கேபோய் வேலை தேடுவது? கொஞ்ச நஞ்சம் வேலை வாய்ப்பையும் குறைத்துவைத்தால் மிகப் பயங்கர சூழ்நிலையில் போய் நின்றுவிடும். ஏற்கெனவே லட்சக்கணக்கான பேர் வேலையில்லாமல் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ஜ் வாசலில் இருக்கிறார்கள் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஹோட்டல் ஒர்க்கர்ஸ் கமிட்டி என்று போட்டார்கள். இதுவரை அதன் நிலைமை என்ன என்று தெரியவில்லை. அதுபோல் ஹேண்ட்லூம் இண்டஸ்டிரியில் நெசவாளர்கள் சில குறைந்தபட்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்னென்ன நிவாரணம் என்று பார்த்து, அவைகளைச் செய்வதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.



**திரு. எம். கோபால்:** தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்ததற்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசப்படும் இந்த மானியம் மிக முக்கியமானதாகும். காரணம் நம் நாட்டில் தொழிலாளர்களுக்காக அரும்பாடுபட்ட நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி வந்த உடன் மே திங்கள் முதல் நாளை விடுமுறையாகக் கொண்டு வந்தார்கள். ஆகவே தொழிலாளர்களிடத்தில் அந்த அளவுக்கு அக்கறை காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்கள் வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகமும் அவர்களைப் பின்தொடர்ந்து நடத்தும் மாபெரும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் தொழிற்சாலைகளில் உழைக்கும் தொழிலாளர்களை வாழ வைக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கூடிப் பேசி அப்போதைக்கப்போது தீர்வு கண்டு வருகிறார்கள். ஆனால் இந்த அரசின் மீது தொழிலாளர்களுடைய நல்லெண்ணம் உண்டாகாமல், கெட்ட எண்ணம் உண்டுபண்ணும் அளவுக்குப் பல கட்சிக்காரர்கள் முயலுகிறார்கள்.

ஆகவே, நான் சொல்கிறேன், இந்த மானியத்தின் பேரில், அந்தந்தத் தொழிற்சாலையில் அந்தந்தத் தொழிலாளர் தலைவரே தலைவராக இருந்தால் இப்படிப்பட்ட சிக்கல் ஏற்படாது. காரணம், ஒரு சில கட்சிக்காரர்கள், தங்கள் கட்சியை வளர்ப்பதற்கு உள்ளே நுழைந்துகொண்டு தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே பிரச்சினையைக் கிளப்பிவிட்டு இப்படிப்பட்ட தொந்தரவுகள் கொண்டு வருகிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்கிறேன். நம் கழகம்-கட்சி-ஆட்சிக்கு வந்த பிறகுதான் மரமேறும் தொழிலாளர்கள் விழுந்து இறந்துவிட்டால் அவர்களுடைய இறப்புக்கு ஈட்டுத்தொகையாக ஆயிரம் ரூபாய் தந்துகொண்டிருக்கிறார்கள். அதுபோல் மீனவர் குடும்பத்துக்கும் தருகிறார்கள். இதற்கு முன்னால் செய்தார்களா? கிடையவே கிடையாது.

நான் இந்த மானியத்தின் பேரில் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மலைகளைப் புரட்டி வெடிகுண்டு வைத்து உடைக்கிறார்கள். வெடி மருந்து வெடித்து பலர் இறந்து போகிறார்கள். மரமேறும் தொழிலாளர்களுக்கும், மீனவர்களுக்கும் கொடுக்கும் நஷ்ட ஈடு போல் கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கும் அந்த மானியம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. கடந்த கால காங்கிரஸ் சர்க்கார் செங்கல் தொழிற்சாலைக்குக் கண்ட்ரோல் கொண்டு வந்தார்கள். இந்த அளவுக்கு கல் விற்க வேண்டும் என்று கொண்டுவந்தார்கள். ஆனால் கல் சுடுகிறானே, மண் பிசையும் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் கொண்டு வரவில்லை. அந்தக் காலத்தில் காங்கிரஸ் சர்க்கரர் முதலாளி பக்கமே இருந்தார்கள். தொழிலாளர்களுக்கு ஆதரவாக இல்லை. அவர்கள் வானமே கூரை, பூமியே பாய் என்று செத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் கல் சுடும் தொழிலாளர்களுக்கு நல்ல கூலி நிர்ணயம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருவாரியான தொழில்கள் அம்பத்தூர் தொழிற்பகுதியில் வளர்ந்து கொண்டு வருகின்றன. தொழிலாளர்கள் நல்ல முறையில் ஒத்துழைத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால், ஒரு சில கட்சிக்காரர்கள் சென்று தொழிலாளர்களையும் முதலாளிகளையும் எழுப்பி முட்ட விட்டு அடிக்கடி வேலை நிறுத்தம் செய்கிறார்கள். நான் ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுடைய தலைவர் கூறியதுபோல் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் விலகிக் கொண்டு, அந்தந்தத் தொழிற்சாலை தொழிலாளி ஒருவரே தலைவராக இருந்தால் இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் உண்டாகாது. காரணம் கட்சி வளர்ப்பதற்குத் தலைவராகப் போய் இப்படி கலகம் மூட்டி விடுகிறார்கள்.

இப்போது என்னுடைய தொகுதியில் டபிள்யு.எஸ். இன்சுலேட்டர்ஸ் இருக்கிறது. ஒரு கட்சிக்காரர் சென்று போராட்டத்தை உண்டுபண்ணி, துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. மறைந்த மாபெரும் மேதை அண்ணா அவர்கள் சமரசம் செய்த பின் ஒழுங்காக நடந்து வருகிறது. மீண்டும் அது போல் கலவரம் தூண்டுவதற்கு முயன்று வருகிறார்கள். நாங்கள் தொழிற்சாலை அல்லது தொழிற்சங்கத்தை நம்பி கட்சி நடத்தவில்லை. தொழிலாளர் மேல் எங்களுக்கு அன்பு இருப்பதால் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் தொழிற்சங்கம் அமைத்தோம். தொழிற்சங்கத்தைக் கொண்டு நாங்கள் வளரவில்லை.

சிலர் எப்படியாவது தொழிலாளர்களை மூட்டிவிட்டு அரசாங்கத்துக்கும் தொழிலாளர்களுக்கும் பகை உண்டு பண்ணி, இந்தச் சர்க்காரை கவிழ்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அது முடியவே முடியாது. ஆகவே, சென்னையில் தான் இப்படிச் செய்கிறார்கள். மற்ற இடத்தில் வர முடியாது. விவசாயிகள், தொழிலாளர்கள், சாமானியத் தொழிலாளர்கள் கழக அரசைப் பார்த்து அன்பாக இந்த அரசை வரவேற்கிறார்கள். சென்னையில் மட்டும் ஒரு சில கம்பெனிகளில் தூண்டிவிட்டு கலவரம் மூட்டிவிட்டு கவிழ்க்க நினைத்தால் அது முடியாத காரியமாகும். நாட்டில் ஜனங்கள் பெருகி வருகிறது. அவர்களை எப்படி வாழவைக்க வேண்டும், வளரும் சமுதாயத்தை எப்படி நாம் காப்பாற்ற வேண்டுமென்று திட்டம் யாரும் சொல்லவில்லை. ஆண்டுதோறும் மக்கள் பெருகி வருகிறார்கள். அதுபோல் ஆண்டுதோறும் மக்கள் படித்து வருகிறார்கள். அவர்களை எப்படி வாழ வைக்க வேண்டும் என்பதற்கு எந்தத் தலைவரும் ஒரு திட்டத்தைத் தீட்டி தெளிவாகச் சொல்ல பயப்படுகிறார்கள்.

மாலை தொழிலாளர்கள் நலன் காக்கப்படுவதில் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும்
6-00 பங்கு உண்டு. அதேமாதிரி தொழில் அமைதியை நிலைநாட்டுவதிலும் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பங்கு உண்டு, தொழிலாளர்கள் பிரச்சினை முக்கியமானது. அவர்களின் குறைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு வருவது இன்றைய தி.மு.க. அரசு வந்த பிறகுதான். தொழிலாளர்கள் அதிக பயன் அடைந்து வருவது இந்த அரசாங்கத்தில்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டிலே தொழிலாளர்களுக்கு 4 சதவிகிதம் தான் போனஸ் கொடுக்க வகை செய்யப்பட்டிருந்தது. இப்போது இந்த தி.மு.க. அரசு 8 சதவிகிதம் போனஸ் கொடுப்பதற்குத் திட்டம் தீட்டி, மத்திய அரசைக்





கேட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், யாராவது இதற்கு முன்னால் மத்திய அரசை இப்படிக் கேட்டதுண்டா? இல்லை. யாரும் கேட்டதில்லை. ஆக, தொழிலாளர்களை வாழ வைப்பது இந்த அரசுதான் என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** உப தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தொழில் மானியக் கோரிக்கையில் எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி என்னுடையக் கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்தத் தொழிலாளர் பிரச்சினை ஒரு முக்கியமான விஷயமாகும். பல ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் நடைபெறுகின்ற நம்முடைய நாட்டிலே, பல ஆயிரக் கணக்கானத் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவைகளை எல்லாம் பார்க்கின்றபோது, இந்த நாட்டுக்கு ஒரு முதுகெலும்பாக இருக்கக்கூடியது இந்தத் தொழில்துறை தான். இந்தத் துறை நல்லமுறையிலே நடைபெற வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால் தொடர்ந்து தொழிலாளர்களுடைய பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. இந்தத் 'மான்டேஸ் லாஸ்ட்' பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவைகளைப் பார்க்கும்போது, என்னுடைய யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஸ்டிரைக் வந்தால், அதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும்; அதை நீடிக்கவிடக்கூடாது. ஸ்டிரைக் நீடித்தால், அதனால் பல தொழிற்சாலைகள் மூடப்படும்; தொழிலாளர்களுக்கு வேலை இருக்காது; அவர்கள் குடும்பம் கஷ்டப்படும். அதோடு நாட்டுக்கு அத்தியாவசியமாகத் தேவையான பொருட்கள் உற்பத்தி குறைந்தால், அந்த அளவிலே நாட்டுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது, என்பதையும் கவனிக்கவேண்டும்.

சிம்ப்ஸன் தொழிற்சாலை ஊழியர்கள் ஒருவாறு வேலைக்குப் போயிருப்பது பற்றித் கனம் முதலமைச்சர் அவர்களும், தொழிலமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக அவர்களைப் பாராட்டுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகள் உடனடியாக நிவர்த்திக்கப்படச்செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஹோட்டல் தொழிலாளர்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பல ஹோட்டல்களிலே அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மிகச் சாமர்த்தியமான முறையில் ஹோட்டல் முதலாளிகள் அவர்களை டெம்பரரியாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக, எங்களுடையக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசியதுபோல், நியமிக்கப்பட்ட இராஜன் கமிட்டியின் சிபாரிசு வந்ததா? அந்தச் சிபாரிசு என்ன ஆயிற்று என்பவைகளுக்கு அமைச்சரவர்கள் பதிலில் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பர்மா, சிலோன் அகதிகள் உள்ளனர். 257 பர்மா அகதிகளுக்கும், 131 சிலோன் அகதிகளுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதேநேரத்தில்

நம்முடைய நாட்டிலே பலபேர்கள் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் ரெஜிஸ்டர் செய்து, பல ஆண்டுகளாகியும் இன்னும் வேலைவாய்ப்புக் கிடைக்காது அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒருவழி காணவேண்டும். அவர்களுக்கு எல்லாம் ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக நான் நேரிலே அறிந்து ஒரு விஷயத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒரு நாள் நான் கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த அதிகாரிகள், கூட்டம் அதிகமாக இருந்தாலும் என்னை அழைத்துக் கொண்டுபோய் பூஜை நடத்தி வைத்தார்கள். அதைப் பார்த்துக்கொண் டிருந்த சில இளைஞர்கள் இங்கே எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் நடப்பது போல் நடக்கின்றது. பின்வருகிறவர்கள் முன்னடி செல்வதற்கு, பல ஆண்டு களுக்குமுன் ரிஜிஸ்டர் செய்தும் பிரயோஜன மில்லாமல் பின்னல் ரிஜிஸ்டர் செய்தவர் பலருக்கு வேலைகிடைப்பதுபோல என்றார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பல ஆண்டுகளாக ரெஜிஸ்டர் செய்து வைத்தும், வேலை கிடைக்காத மனக் கசப்பினால்தான் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் ரெஜிஸ்டர் செய்திருந்தால் மட்டும் போதாது. தொடர்ந்து ரினியூவல் செய்து வரவேண்டும். மூன்று மாதங் களுக்கு ஒருமுறை ரினியூவல் செய்யவேண்டும். ஏதாவது ஒரு காரணத் தினால், ஒருமுறை ரினியூவல் செய்யக் காலம் தவறிவிட்டால், அவருடைய சீனியாரிட்டி போய்விடுகிறது. அதனாலும் அவர்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ரினியூவல் செய்து வந்தாலும் விரைவில் வேலை கிடைக்க வழியில்லை. ஆகவே, ரினியூவல் செய்வதை 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை என்று வைத்துக்கொண்டால் போது மானது; அதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்டு நிதியிலிருந்து, கலியாணம், திருவிழா மற்றும்பல சொந்த விசேஷங்களுக்கும் முக்கியமான விஷயங்களுக்கு பணம் வேண்டுமென்று கேட்டால் சீக்கிரத்தில் கொடுக்கப்படுவதில்லை. அதனால் சிலசமயங்களில் அந்தக்காரியங்கள் நடைபெறாமல் போய்விடுகின்றன. ஆகவே, இம்மாதிரியான விஷயங் களுக்கு அவர்களுக்கு பிராவிடண்ட் பண்டு நிதியிலிருந்து பணம் சீக்கிரமாகக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய லேபர் ஆபீசைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். லேபர் கமிஷனரின்கீழ் பாக்டரிகளும் இருக் கின்றன. நிறைய பாக்டரிகள் இருக்கின்றன. ஆகவே, எல்லா பாக்டரிகளையும் ஒழுங்காக அவர்களால் பார்வையிட முடியவில்லை. அதனால் இந்தத் துறையைத் தனியாகப் பிரித்துச் செயல்படச் செய்யவேண்டும். இன்ஸ்பெக்டர் ஆஃப் பாக்டரீஸ் என்று சிலரைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பொறுப்புகளும், வேலைகளும் அதிகமாக இருக்கின்றன. அதனால் பாக்டரி களில் நடைபெறுகின்ற ஆக்ஸிடெண்டுகள், மற்ற விபரங்களை அவர்களால் சரியாகத் தகுந்த சமயங்களில் கவனிக்க முடியவில்லை. எனவே சில பதவிகளை அந்த Wing-ல் அதிகப்படுத்த வேண்டும்; அந்தத் துறையையும் தனியாகப் பிரிக்கவேண்டும். யுனைடெட் கிங்டமில் இந்த இன்ஸ்பெக்டர் ஆஃப் பாக்டரிஸ் என்று சொல்லக் கூடியவர்களை 'ஹர் மெஜஸ்டீஸ் இன்ஸ்பெக்டர்ஸ்' என்று அழைக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்த டிப்பார்ட்மெண்டுக்கும் அதில் இருக்கின்றவர்களுக்கும் மதிப்பு கொடுத் திருக்கிறார்கள். நமது நாட்டிலும் அவர்கள் அந்த முறையில் கௌர விக்கப்பட வேண்டும்.



அது மட்டுமல்ல. இப்போது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளமும் போதாது. நாம் மற்ற எஞ்சினீயரிங் துறையிலே எப்படி ஜே.இ., ஏ.இ., டி.இ., எஸ்.இ., என்றெல்லாம் பதவிகளை வைத்து, அதற்குத் தகுந்தாற் போல் சம்பளம் கொடுத்துவருகிறோமோ, அதேமாதிரியாக இந்த இன்ஸ்பெக்டர் ஆஃப் பாக்டரீஸ் பதவிகளையும் உயர்த்தி, அதிகச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை, மதுரை, கோவை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் இ.எஸ்.ஐ. ஆஸ்பிடல்களை நிறுவியிருக்கிறோம். இதை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அதிலும் குறிப்பாகத் தொழி லாளர்களுக்கு டி.பி. நோய் அதிகமாக வருகிறது. பீடித் தொழிலாளர்கள் பிரஸ்களில் வேலை செய்பவர்களுக்கு மற்றும் புகையிலை தொழிலில் ஈடு பட்டிருப்பவர்களுக்கு அதிகமாக டி.பி. நோய் வருகிறது. இ.எஸ்.ஐ. ஆஸ்பிடல்களில் இந்த நோய்க்காக சில வசதிகள் செய்திருந்தாலும், அது போதாது. எல்லோரையும் சேர்த்துக் கொள்வதில்லை. எனவே, டி.பி. நோய் பீடிக்கப்பட்ட எல்லாத் தொழிலாளர்களுக்கும் இ.எஸ். ஐ. ஆஸ்பிட்டல்களில் Special சிகிச்சைப் பெற வசதி செய்யப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லேபர் ஆபீஸ்களில் இருக்கக்கூடிய கன்சிலியேஷன் ஆபீஸர்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கன்சிலி யேஷன் ஆபீஸருக்குக் கீழ் பல ஸ்டாஃப்களை நியமித்திருக்கிறார்கள். இன்றைக்கு தொழில் பெருக்கத்தினாலும், தொழிலாளர்களின் பெருக்கத் தினாலும் அவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகிவிட்டது. அந்த அளவுக்கு ஸ்டாஃப்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவில்லை. எனவே, அதிகமான கன்சிலியேஷன் ஆபீஸர்களை, பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்தை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் அளித்தற்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பேச்சின் தொடக்கத்திலேயே ஒரு விஷயத்தை நான் மனப் பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன் என்று சொல்லிக்கொள்வதில் நான் அச்சப் படவில்லை. என் அன்புச் சகோதரி திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி ஆட்சிகாலத்தில் எந்தவிதமான ப் போராட்டங்களும் நடைபெறவில்லை என்று. அது உண்மையே நடக்கவே இல்லை. ஒரே ஒரு போராட்டம் தான் நடந்தது. விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து சேலம் சிறையிலே கொண்டுபோய் வைத்தார்கள். கிரிமினல், குற்றவாளிகள் எப்போதும் தொப்பிகளை அவர்கள் அணிந்து கொள்ள

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 மார்ச 2

வேண்டுமென்று சிறை அதிகாரிகளால் அவர்கள் வற்புறுத்தப்பட்டார்கள் அதை மறுத்தற்காக இந்த ஒரு காரணத்திற்காகவே அவர்களில் 20 28 பேர்கள் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள். அதற்கு பிற எந்தத் தொழிலாளியாவது இரண்டாவது போராட்டத்தை நடத்துவாரா (சிரிப்பு) நிச்சயமாக நடத்தமாட்டான். ஆகவே அவர்கள் காலத்தி தொழிலாளர்கள் போராட்டாமே நடக்கவில்லை என்பதை நான் ஒத்து கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை அடிக்க சொல்லி வருகிறார்கள். நானும் மறுத்துக்கொண்டு வருகிறேன். தா நான்காவது பிரஜை என்று அவர்கள் சொல்லுகிற கருத்து வேறு நாங்கள் மறுத்து வருகிற கருத்து வேறு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் அவர்கள் பே ஆரம்பிக்கும்போதே வம்புக்கு இழுக்கிறார். நான் குறிப்பிட்டது காங்கிர ஹுடைய 20 ஆண்டு காலத்திலே புதியதாகத் தொழில்கள் எல்லா ஏற்பட்டன. தொழில் துறையில் அமைதி இருந்தது என்பது நான் போராட்டங்கள் இருந்திருக்கலாம். துப்பாக்கிச் சூடும் நடைபெற்று இருக்கும். ஏன் இவர்களது ஆட்சியிலே திருவொற்றியூரில் துப்பாக்கி பிரயோகம் நடந்து ஒருவர் செத்தார். வரம்பு மீறி சந்தர்ப்பங்க போகிறபோது இது போல நடக்கின்றன. நான் சொன்னது அப்போது தொழில் அமைதி இருந்தது. புதியதாகத் தொழில்கள் நிறை ஏற்பட்டன என்பதுதான்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** நானும் அதைத்தானே சொல் னேன். போராட்டம் நடத்தக்கூடிய சுதந்திரத்தைக் கொடுக்கின்ற சர்க்கா அப்போது இருக்கவில்லை. வாய் திறப்பதற்கே தொழிலாளர்கள் அஞ்சி காரணத்தினால்—கிட்டத்தட்ட சர்வாதிகாரம் நிலத்திருந்த காரணத்தினா எந்தப் போராட்டமும் நடக்கவில்லை. இந்த அரசு தொழிலாளர்கள நல அரசு ஆனதனாலே பல போராட்டங்கள். இருக்கின்றன.

மேலும் கட்சியின் தலைவராக இருக்கும் நான்—இந்தத் தமிழ் நாட்டில் உப தலைவராக இருக்கும் நான்—ஒரு பீடித் தொழிலாளி தொழிலாளர்களின் மீது பற்று இல்லாதவர்கள் இங்கு யாரும் இருக்க முடியாது. நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். இத்தனை போராட்டங்கள் நடந்தனவே என்றால் அவற்றை நான் வரவேற்கிறேன். காரணம் இந்த சர்க்காரின் மீது தொழிலாளர்கள் அத்தனை நம்பிக்கை வைத்திருக்கி காரணத்தினால்தான் அவர்கள் போராட்டத்தை நடத்தினார்கள் தொழிலாளர்கள் என்னமோ தங்களுடைய நியாயமான கோரிக்கை களுக்காகத்தான் போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு—என்பார்களே அந்த கொக்குகள் அதற்கிடையே புகுந்து திசை திருப்ப ஆரம்பித்த காரண தினால்தான் இவ்வளவு பெரிய குழப்பங்களும் ஏற்பட்டன என்பதை நான் பணிவோடு சொல்கிறேன். தயவுசெய்து எல்லோருமே ஒத்து கொள்ளவேண்டும்.



1972 மார்ச் 24] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

தொழில் துறையில் இன்றைய தினம் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு எழுகிறபோது தொழிலாளர்களைப் பிரிக்கின்ற மனோபாவம் இருக்கிறது. தொழிலாளர்களைப் பிரிக்கிறபோது தொழிலாளர்களிடையே பிளவு உண்டாகிறது. அந்தப் பிளவு அவர்களிடையே வெறி உணர்ச்சியை உண்டாக்கிவிடுகிறது. அந்த வெறி உணர்ச்சியே போராட்டத்தை வலுப் பெறச் செய்கிறது. என்றாலும் உடன் கோஷ்டி உணர்ச்சி—பிறகு கட்சி உணர்ச்சி எல்லாம் நுழைகிறது. எந்தத் தொழிலாளியின் மண்டையை எந்தத் தொழிலாளி உடைத்திருந்தாலும்—போலீஸ்காரரும் ஒரு தொழிலாளிதானே—சிந்தப்பட்ட ரத்தத்தில் எங்கள் கட்சிக்கு எத்தனை பர்செண்ட் வெற்றியைத் தேடித்தரும் என்று பார்க்கிற மனோபாவ நிலை இருக்கிறதே—அதுவே தொழிலாளர்களது போராட்டத்திற்கு காரணமாக இருக்கிறது என்று துணிந்து சொல்வேன். தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நான் மறுக்கவில்லை. மதிப்பிற்குரிய திரு கே. டி. கே. சொன்னார்கள். கம்யூனிஸ்டு நாடுகளிடையே போராட்டத் திற்கு இடமில்லை என்று. நான் அதை ஒப்பவில்லை. முதலாவதாகச் சொன்ன நிலை இருந்தால் வரவேற்பேன். நம்முடைய நாட்டில் அதிக அளவில் வேலையற்ற நிலைமை இருக்கிறது. வேலையற்றோர் நிலைமை இருக்கிறபோது அவர்களுக்குச் சர்க்கார் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது.

அம்மையார் அவர்களும் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள். அவர்கள் கோயிலுக்குப் போனபோது நீண்ட க்யூ இருந்தது, கோயிலில் இருந்தவர்கள் அம்மையாரை கண்டுகொண்டு தனியாக உள்ளே அழைத்துச் சென்று தீபாராதனை செய்து, தரிசனம் செய்து வைத்தார்கள். வெளியே வந்தபோது க்யூவில் இருந்தவர்கள் சொன்னார்களாம் "இங்கேயும் எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ் நிலைமைதான் என்பதாக எடுத்துச் சொன்னார்கள்". ஆண்டவன் சந்நிதானத்திலேயே இப்படி—என்கிற போது மற்ற இடங்களிலும் இந்த உணர்ச்சிதான் பரவியிருக்கிறது. அதில் என்ன ஆச்சரியம்? நம்மைப்போல அவர்களும் மனிதர்கள்தானே, நீண்ட நேரமாக க்யூவில் இருக்கிறவர்கள்—அவர்கள் போகட்டும்—நம் முடைய முறைப்படி நாம் போனால்போதும் என்கிற நிலை இருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காது. அம்மையார் அவர்கள் முன்பு மந்திரி யாக இருந்தவர்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நான் மந்திரியாக இருந்ததற்காக ஒன்றும் இல்லை. எப்போதும் நான் முந்தி போவதற்கும் விரும்புவதில்லை. கோயிலில் இருந்தவர்கள் விரும்பி அழைத்துப்போய்விட்டார்கள். ஆனால் வெளியில் வந்தவுடன்—நின்றவர்கள் இங்கும் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ்தான் என்பதாக இன்றைக்கு எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன் ஜில் நடக்கிற முறையைச் சொன்னார்கள். அதுபோல இங்கே நடக்கக் கூடாது என்பதற்காக அதைச் சொன்னேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** நானும் அதைத்தான் சொல் கிறேன். அங்கே இருக்கிற முக்கியஸ்தர்கள் உங்களை முன்னே உள்ளே அழைத்துச் சென்றார்கள். அதைப்போல சில சந்தர்ப்பங்கள் இதிலும் நடக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லுகிற போது—ஆண்டவனுக்கு முன்னால் எல்லோரும் சமமாக இருக்க வேண்டிய

இடத்திலேயே தவிர்க்க டிய அப்போது இங்கே இந்தத் தவிர்க் வேண்டும் என்பது எப்படி முடியும்? நம்முடைய எண்ணங்களிலே ஒ மறுமலர்ச்சி ஏற்படவில்லை என்பதைத்தான் இவை காட்டுகிறது என் சொன்னேன்.

நாம் ஒத்துப்போனால்—நம் எண்ணங்கள் ஒத்து இருந்தால்—நம் எண்ணங்கள் ஒருமைப்பாட்டுடன் இருந்தால் நிச்சயமாக தொழிலாளர்களிடையே தகராறு நடந்திருக்காது. இந்த போராட்டத்தை நாம் சொல்லவா? அதில் ஒரு முடிவு இன்றைக்கு ஏற்பட்டது எப்படி அதற்காக நியமித்த அறுவர் குழு—அவர்களுக்கு "சப்பாடா—விட்டால் போதும்" என்று ஓடியது எப்படி? (திருமதி த. ந. அனந்தநாயகி: அடி உதை வாங்குவது யார்?) அவைத் தலைவர் நானும் கேட்கிறேன் அந்த நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது யார்? நாம் அல்லவா உங்களை மட்டும் சொல்லவில்லை—என்னையும் சேர்த்தே சொல்கிறேன்— நாம் அவர்களை நம் பக்கம் திருப்பினோம். திருப்பியது வேறுவகையில் திருப்பி விடுகிறது.

மன, மொழி, மெய் சுத்தியுடன் தொழிலாளர்க் கட்சியாக இருந்து நான் பேசுகிறபோது—நான் பேச ஆரம்பிக்கும்போதே "நீங்கள் ஐஸ் வைத்து தானே பேசுவீர்கள்" என்று அம்மையார் சொன்னார்கள். எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு— என்றார் வள்ளுவர்—அந்த அறிவு உள்ளத்தோடு சொல்கிறேன்—நிறை உள்ளத்தோடு சொல்கிறேன்—தோழமை உணர்ச்சியோடு அல்ல—மனிதாபிமான உணர்ச்சியோடு சொல்கிறேன்—இந்த போராட்டத்திற்குக் காரணமாக இருந்த—ஓடின ஓட றுமின்—வாடி இருக்குமாம் கொக்கு என்றார்களே—அந்த கொக்குகளை திருப்பி இருந்தால் ஆரம்பத்தி லேயே அமைதி ஏற்பட்டிருக்கும். அதிலே ஒரு அமைதியை இன்றைய தினம் உறுதியாக—உறவு உணர்ச்சியோடு இருந்து இன்றைய தினம் ஏற்படுத்தி தந்திருக்கிற தொழில் அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் பாராட்டி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளப் பெருமைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பீடித் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு அந்தத் தொழில் பற்றி நன்றாகத் தெரியும் இருபது வருஷங்களாக அந்தத் தொழிலைச் செய்தவன். அந்த தொழிலைப்போன்ற பரிதாபகரமான தொழில் வேறு எதுவும் இல்லை அவர்களுக்கு நேரம் கிடையாது. முன்பெல்லாம் பாக்டரி இருந்தது நூறு பேர், நூற்றைம்பது பேர் என்று வேலை செய்தார்கள். நம் மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள்: இன்றைய தினம் அவர்களைப் பிரித்து பிராஞ்சாகக் கொடுத்து—கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுக்காமல் பரிதவிக்கவிட்டிருக்கிறார்கள் என்பதாக. அது உண்மையாக இருக்குமானால் நிச்சயமாக பரிதாபத்திற்குரிய தொழிலாளர்களை சர்க்கார் தலையிட்டு—முதலாளிகள் எந்த ரூபத்தில் பிராஞ்சுகள் என்று பிரித்து வைத்து ஏழை மக்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருந்தாலும் தொழிலாளர்களின் வாழ்வு விழச் செய்ய விட்டுவிடாமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அந்தத் தொழிலில் டி. பி. வருவதற்கு அதி





மான காரணங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலையிலே டி. பி. அணுகாத மாத்திரைகளைத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து, அந்த நோய் வராமற் தடுத்திட உங்கள் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்தப்படி திருப்பூர் பனியன் பேக்டரி பற்றியது. இந்தப் பிரச்சினையைப் பற்றி அருமை நண்பர் திரு துரைசாமி அவர்கள் சொன்னார்கள், நானும் சொல்கிறேன். தொழிலாளர்கள்கூட. நான் இதைப் பற்றி பேசவில்லையென்பதாகக் குறைப்பட்டுக் கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். நான் அமைச்சரிடம் இதற்கு ஒரு கமிஷன் போட்டு அந்த பனியன் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் தெளிவான முடிவு கட்டி, உடனே ஸ்ட்ரைக் நிற்பதற்கான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இப்போது அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டு செய்திருக்கிறார்கள். வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

அடுத்தபடியாக, ஓட்டல் தொழிலாளர் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமானது. அவர்கள் போட்டிருக்கும் உடைகளைக் கழற்றி வைத்துவிட்டு, இரவில் அவர்கள் படுத்திருக்கும் இடங்களை மனிதாபிமானத்தோடு பார்த்தால்—மிகவும் கஷ்டமாக இருக்கும். ஓட்டல் வைத்திருப்பவன் வருஷா வருஷம் மாடி வீடு கட்டிவிடுகிறான். அவனுக்கு மட்டும் பணம் எந்தத் திசையிலிருந்து வந்துவிடுகிறது என்று தெரியவில்லை. இட்டிலி, தோசையிலிருந்து மட்டும் வருகிறது என்று சொல்லவில்லை. ஓட்டலில் பாடுபடுகின்ற தோழர்களின் ரத்தத்திலிருந்து வருகிறது அவர்களுடைய ரத்தத்தை உறிஞ்சுவதிலிருந்து வருகிறது அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. அவர்கள் தங்குவதற்குகூட இடம் இல்லை. ரோட்டில் பிளாட்பாரத்தில் படுத்திருப்பவர்கள் எல்லாம் பக்கத்தில் இருக்கிற ஓட்டல் தொழிலாளர்கள்தாம். இரவில் நேரம் கழித்துப் படுத்து, காலையில் முன்னதாக எழுந்திருக்க வேண்டும். அவனுக்கு நிரந்தரமான சம்பளம் இல்லை. கூலிதான். இந்த நிலைமையை மாற்றி, ஓட்டல் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக்கொண்டு, நான் இன்னும் அதிகம் பேச விரும்பவில்லை. பேசவேண்டிய அவசியமும் இல்லை. எனக்கு நம்பிக்கை இருக்கிறது மீண்டும் சொல்கிறேன், என்னுடைய நம்பிக்கையை தமிழகத் தொழிலாளர்கள் எந்தப் பிரிவினராயிருந்தாலும் அவர்களுக்கு உறுதியாக கூறுகிறேன், "நிச்சயமாக இந்தச் சர்க்கார் உங்களுக்காகவே நடக்கிறது. உங்களுடைய பிரதிநிதிகளால்தான் இந்த அரசு நடத்தப்படுகிறது. உங்களுடைய நலன்களைச் சிந்திப்பவர்களால்தான் இந்த அரசு நடத்தப்படுகிறது" என்று.

அடுத்தபடியாக, நான் அதிகமாக டாக்சியில் வருபவன் அல்ல; பஸ்ஸில்தான் வருகிறேன். அப்படி பஸ்ஸில் வரும்போது ஒன்றைப் பார்க்க முடிகிறது. இந்தக் கூவம் நதியில் வேலை செய்யும் மக்கள் பற்றிச் சிந்திக்கிறேன். நாம் அவர்களுடைய பிரதிநிதிகள்; அந்தத் தொழிலாளர்களைப்போன்ற கண்களில் படாத ஆயிரமாயிர தொழிலாளர்கள்

இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள்தாம் நாம். அந்தத் தொழிலாளர்களை வாழ வைக்கின்ற பொறுப்பு இந்தச் சர்க்காருக்கு நிறைய உண்டு. இந்தப் பேரவை உறுப்பினர்களுக்கும் அவர்களின் பேரில் நம்பிக்கை இருக்கிறது என்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களைப் பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்பாக இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே இதற்கு முன்னாலே அதிகமான அளவு தொழிலாளர் சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றியும், அவர்கள் போராட்டங்கள் பற்றியும், அவைகள் முடிந்தவைகளைப்பற்றி யெல்லாம் வெகுவாக விவாதித்திருக்கிறோம். இதுமாதிரியான சந்தர்ப்பத்திலே இன்றுகூட நடந்த விவாதத்திலே முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை நண்பர்கள், குறிப்பாக திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் பேசிய பேச்சுகள் பல விஷயங்களிலும் எனக்கு ஒருமைப்பாடு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே அரசினுடைய கொள்கையைப்பற்றி எடுத்துச் சொல்கிறபோது எந்த அளவிற்கு இன்னும் தொழிலாளர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். நான் பொதுவாக ஆரம்பிக்கின்றபொழுது இந்த வெட்டுப் பிரேரணைகளைக் கடைசியாகப் பேசுகிறேன் அதற்கு முன்னால் தொழிலாளர் சம்பந்தமாக 1971–72-ம் ஆண்டினுடைய சம்பவங்களைப்பற்றி, கொடுத்திருக்கக்கூடிய குறிப்பு பொதுவாக நடந்த விஷயங்களைத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் வந்திருக்கக்கூடிய முடிவுகளை நான் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். விவரமாகக் கொடுத்திருப்பது வரக்கூடிய ஆண்டிலே இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நம்புகிறேன். பொதுவாகப் பேசவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுக்கான போராட்டங்களை—தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இன்றைக்கு நாடு பூராவும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதை நண்பர் துரைசாமி அவர்களும் சொன்னார்கள்.

சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் 2½ லட்சம் ஆலைத் தொழிலாளர்கள் ஒரு மாத போனஸ் வேண்டுமென்பதற்காக இரண்டு வார காலத்திற்கு அதிகமான அளவில் போராட்டம் நடத்தினார்கள் வெற்றி பெற்றார்கள். சமீபத்தில்தான் ராஜஸ்தான் ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள் ; அஸ்ஸாம் சர்க்கார் ஊழியர்கள் வாழ்வு வளம் பெறுவதற்காக போராட்டங்களை நடத்தினார்கள். தொடர்ந்து 56 தினங்கள் தேர்தல் முடிந்ததற்குப் பின்னால் கிட்டத்தட்ட 3½ லட்சம் சர்க்கார் சிப்பந்திகள் ஆந்திர மாநிலத்திலே போராட்டங்களை நடத்தி, அடக்குமுறை கையாளப்பட்டபோதும் போராடி வெற்றி பெற்றார்கள். அவர்கள் எல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டும், தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய முறையில் ஒன்றுபட்ட முறையில் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். கட்சி வேறுபாடுகளை உதறித் தள்ளிவிட்டு ஒன்று





பட்டு அவர்கள் போராடியதும், அப்படிப்பட்ட காலத்தில் பெரு முதலாளிகளின் பத்திரிகைகள் ஆரம்பத்தில் அவர்களுக்கு உதவ செய்வதுபோல இருந்து பிறகு எதிர்ப்பு காட்டுவதுபோல் எழுத ஆரம்பித்ததையும் நாம் அறிவோம். அதேபோல் நீதிமன்றங்களில் எல்லாம் பல விரோதமான தீர்ப்புகள் வந்தன. ஆகவே தான் நேரடியாகப் பேசி காரியத்தைத் தீர்த்துவிடவேண்டுமென்று இன்றைக்கு—ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரியல் லேபராக இருந்தாலும், ஆர்கனைஸ் செய்யப்படாத—பல தொழிலாளர்களும், என். ஜி. ஓ. க்களும், பட்டதாரி ஆசிரியர்களும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும், சர்க்கார் சிப்பந்திகளும் இன்னும் உழைத்துக்கொண்டிருக்கக்கூடிய பலரும் போராட்டத்தில இறங்குவதை பார்க்கிறோம். இவ்வாறு மக்கள் எழுச்சியால் ஆட்சிக்கு வந்த இந்த அரசு இப்படிப்பட்ட எழுச்சிகள் வருகிறபோது, இந்த எழுச்சிகள் என்ன காரணத்தால் வருகிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ற முறையில் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, இப்படி நடக்கின்ற இயக்கங்கள் அரசுக்கு விரோதமாக இருக்கின்றன என்று நினைத்து அவற்றை அடக்கவேண்டுமென்று நினைக்கும்போது, தொழிலாளர்களுக்கு விரோதமான வகையில் அவர்களுடைய காசிலை வைத்து அடக்கு முறையைக் கையாளவேண்டிய முறையும்தான ஏற்படும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

ஆகையால்தான் சமீபத்தில் நடந்த சில இயக்கங்களைப் பார்த்தால் நாம் நேரடியாக பேசினால் பிரச்சினைகள் தீரும் என்பதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. மதுரையிலே உள்ள ஹார்வி மில்லில் 1 ஆயிரம் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள் எல்லா சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையாக நின்று பத்து பனிரெண்டு நாட்கள் எந்தவிதமான சச்சரவும் இல்லாமல் வேலை நிறுத்தம் கண்டார்கள். இறுதி வெற்றியும் கண்டார்கள். அவர்கள் கேட்டது பூராவும் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் ஒன்றுபட்டு போராடியதைப் பார்க்கலாம். அதேபோல் ஏழு, எட்டு வருஷங்களாக மகாலக்ஷ்மி மில்லில் இருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நான்கு சங்கங்களைக் கொண்டவர்களும் ஒற்றுமையாக இருந்து அமைதியான முறையில், உறுதியான முறையில் போராட்டத்தை நடத்தினார்கள் வெற்றியும் கண்டார்கள். அண்மையில் நடந்த டன்லப் தொழிலாளர்கள் போராட்டம் நடந்தபோது சமீபத்தில் வந்திருந்த மத்திய அமைச்சர் அவர்கள், "சிம்சனில் சில நாட்களாக கலகமும் கலவரமுமாக போராட்டம் நடக்கிறது. அங்கே 50 ஆயிரம் தொழிலாளர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒரு லட்சம் தொழிலாளர்கள் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் எந்த சம்பவத்தையும் காணோமே" என்று கூறினார்கள்.

மதுரையிலே, கோவையிலே நல்ல முறையில் பண்பட்ட முறையில் நீண்டகால பாரம்பர்யத்தின் அடிப்படையில் போராட்டம் நடைபெற்றது யாரும் குழப்பிவிட்டு எந்த ரகளையும் செய்யவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, மதுரையிலே இருப்பவர்கள் மட்டும் பண்பட்டவர்கள்; மதராசில் இருப்பவர்கள் பண்பாடு அற்றவர்கள் என்ற முறையிலே சொல்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** What is not said need not necessarily be true. நான் குறிப்பிட்ட விஷயத்திலே மாரவில்லை இருக்கக்கூடிய பக்கிங்காம் அண்ட் கர்னாடிக் தொழிலாளர்கள் அதிலே பங்கெடுத்துக்கொள்ளவே இல்லை. எனவே அந்தப் பிரச்சினை எழவில்லை. மதுரையிலே தொழிலாளர்கள் எழுப்பிய கோரிக்கை நியாயமானது என்று ஆரம்பத்திலே இந்தச் சபையிலே பேசப்பட்டது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இருக்கிறது. அங்கே வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது, அவர்கள் எப்படியாவது கோரிக்கைகள் நிறைவேற வேண்டும், அடைந்தே தீருவோம் என்ற முறையிலே நான் விடாப்பிடியாக நிற்கவேண்டுமென்று நிற்கிறார்களே தவிர யாரும அவர்களுக்குச் சொல்லவில்லை.

கோயம்புத்தூரிலே போராட்டம் நடந்தது, ஒரு லட்சம் தொழிலாளர்கள் கூடியிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே வெளியே இருந்து வந்த ஒருவர் சொல்கிறார், உங்கள் கோரிக்கைகளை நிறைவேறவில்லை மில் முதலாளிகள் சங்கம் இருப்பதால், என் நெருக்கமில்லை என்று சொன்னார். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் யாரும் அதற்கு ஆதரவு கொடுக்கவில்லை, கை தட்டவில்லை. குஜராத் மாநிலத்திலோ அல்லது வேறு மாநிலத்திலோ இருக்கிற பஞ்சாலைத் தொழிலாளர்கள் இவ்வளவு செய்ய முடிந்ததா ? சில இடங்களிலே எந்த எந்த இடங்களிலே எந்த எந்தச் சங்கங்களுக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அந்த இடங்களிலேதான் செய்துகொண்டார்களே தவிர மாநில அளவிலே செய்யமுடியவில்லை. ஆனால் தமிழகத்திலே உள்ள தொழிலாளர்கள் அப்படிச் செய்ய வைக்கக்கூடிய அளவிலே இருக்கிறார்கள் என்றால் அதற்காகப் பெருமைப்பட வேண்டும் பெருமைப்படக்கூடிய விஷயம் அது. அப்படிப் பெருமைப்படாமல் தமிழ்நாடு அரசுக்கு எதிராக நடத்தக்கூடிய போராட்டம் என்று ஆரம்பத்திலேயே முடிவுகட்டுவது நியாயமல்ல. மதுரையிலே போனஸுக்காகப் போராட்டத்தில் இரண்டு லட்சம் பேர்கள் கூடினார்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு தங்கமணி அவர்களே குறிப்பிட்டார்கள், மதுரையிலே நடைபெற்ற போராட்டம் அமைதியாக நடைபெற்றது என்று. எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். கோவையிலே அமைதியாக நடந்ததை மத்திய அமைச்சர்கூட பார்த்துவிட்டு, இவ்வளவு நாட்கள் நடைபெற்றும் இவ்வளவு அமைதியாக நடைபெற்றது என்று கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் இவ்வளவு அமைதியாக நடைபெற்றது அரசு ஒத்துழைப்பினாலேதான். அரசு தனக்கு எதிரான காரியம் என்று நினைத்து என்ன விரோதமான நடவடிக்கை எடுத்தது ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அரசு நடவடிக்கை அங்கே எடுத்தது என்று நான் சொல்லவில்லை. கோவையிலே முன்னேற்றக் கழகக் கூட்டங்களைப் போட்டு பிரச்சாரங்கள் செய்தது சரிதானா ? திரு துரைசாமி அவர்கள் இந்தப் போராட்டங்கள் செய்வது நியாயமல்ல என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவருடைய பெயரை இழுத்துவைத்து, அவர் நல்ல செல்வாக்கு உள்ள தலைவர்......





**திரு சு துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை நான் கூறவிரும்புகிறேன். 18-19 ஆம் தேதி முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது 19 கோரிக்கைகளில் எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிறைவேற்றலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதன்பிறகு திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் விலகிக்கொண்டது. நான் பேசிய நேரத்திலே அதைத்தான் குறிப்பிட்டேன், மற்றவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று நான் கேட்டது என்னவென்றால் இன்றைக்கு அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி வேண்டுமென்று கோரிக்கையை வைக்கிறோம், ஆனால் அகில இந்தியாவிலும் இந்த கோரிக்கை ஐ. என். டி. யூ. சி., ஏ. ஐ டி யூ. சி. ஏன் வைக்கவில்லை என்றுதான் கேட்டேன், வேறு அல்ல.

**திரு கே. டி கே. தங்கமணி :** இந்த அரசுக்கு எதிரான போராட்டம் என்ற முறையிலே மதுரையிலேயும் கோவையிலேயும் பொதுக்கூட்டங்களை போட்டார்கள். தீவிரமான ஒரு கட்சிப் பிரச்சினையாக ஆகிவிடக்கூடாது என்று இருந்து இருக்கலாம். பஞ்சாலைத் தொழிலாளர்கள் மத்தியிலே கழகத்திலே சேர்ந்து இருக்கிற தொழிலாளர்களும் உண்டு. அவர்கள் எல்லாம் கூட கட்சியின் சார்பாக செய்த பிரச்சாரத்தை ஏற்றுக் கொண்டு வேலை நிறுத்தத்தை விட்டு வெளியே வரவில்லை. அந்த நிலை எதைக் காட்டுகிறது என்று சொன்னால், அவர்கள் கோரிக்கை நியாயமானது என்பதைக் காட்டுகிறது.

நான் ஒரு சிறிய உதாரணம் சொல்லலாம் என நினைக்கிறேன். திருப்பூர் பனியன் பாக்டரியில் ஒரு தொழிலாளர் என்னிடம் சொன்னார். 1936 ஆம் ஆண்டிலே எம். ஜி ராமசாமி ஜயித்து எம். எல். ஏ. வாக வந்துவிட்டார். எம். எல். ஏ. வாக வந்துவிட்டார், செய்வார் என்று சங்கம் வைத்திருந்தவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். அந்த ஸ்ட்ரைக் அரசாங்கத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டது என்று நினைத்து எம். ஜி. ராமசாமியை ஒரு சங்கத்திற்குத் தலைவராக்கி இன்னொரு சங்கத்தை ஆரம்பித்துவிட்டார்கள். தொழிலாளர்கள் சங்கம் நடத்தக் கூடிய போராட்டங்கள், எல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக நடத்தக் கூடிய போராட்டங்கள் என்று நினைத்துக்கொள்வது சரியல்ல. 1970 ஆம் ஆண்டிலே பேரவை ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆளுங்கட்சி சார்பிலே தொழிற் சங்கம் இருக்கக்கூடாதா ? அப்படி இருக்கக்கூடாது என்றால் ஆளுங் கட்சியாக கம்யூனிஸ்ட் கட்சி யிருக்கிற கேரள மாநிலத்திலே கம்யூனிஸ்டு கட்சி வைத்து இருக்கிற சங்கம் கலைக்கப்பட்டுவிடுமா ?

**திரு கே. டி. கே. தங்கமணி :** கலைக்க வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. கேரளாவிலே ஆளுங்கட்சியை எதிர்த்தே நடத்தப்பட்ட போராட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி சங்கங்களும போராடியிருக்கின்றன. நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மூணாறிலே ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இ. எம். எஸ். ஆட்சியிலே நடந்தது. அங்கு நடந்த கூட்டத்திலே—நானும் போயிருந்தேன்—

அதற்காக ராஜினாமாச் செய்யவேண்டுமென்று பேசினோம். மற்ற தலைவர்களும் பேசினார்கள். பாதிக்கப்பட்ட பாப்பம்மாளிடமும் அசான் ராவுத்தரிடமும் மன்னிப்புக் கேட்டார். இ. எம். எஸ். காலிலே விழுந்தார். அந்த முறையிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சரியல்ல என்று சொல்லியிருக்கிறோம்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது கேரள அரசாங்கத்திலே தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அதற்கெல்லாம் அந்த அரசாங்கத்தில் இருப்பவர்கள் சண்டிக்கப் பட்டார்களா? நான் காலில் விழவேண்டுமென்று சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி அதைக் கண்டித்தது இருக்கிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தொழிலாளர்கள் போராட்டங்களிலே யார் அப்படிச் செய்தாலும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்காது. அது அடிப்படையிலேயே எங்களுக்குள்ள தெளிவான நிலை. இ. எம். எஸ். ஆக இருந்தாலும், அச்சுதமேனன் ஆக இருந்தாலும் கண்டிக்கத் தவறுவதில்லை....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சமீபத்திலே கேரள மாநிலத்திலே நடைபெற்ற தொழிற்சங்கப் போராட்டங்களில் கேரள அரசாங்கம் எடுத்த நடவடிக்கைபற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த நடவடிக்கை என்ன?

**திரு கே. டி. கே. தங்கமணி :** குறிப்பாக எந்தப் போராட்டம் பற்றி என்று சொன்னால் சொல்லமுடியும். முன்பு என் ஜி. ஓக்கள் பற்றி முதலமைச்சர்கள் அறிக்கை கொடுத்தார்கள், பைனான்ஸ் எல்லாம் அவர்களுக்கே போய்விடவேண்டுமா என்று அவர்கள் சொன்னது தவறு என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கண்டித்துத் தீர்மானம் போடப் பட்டது. இம்மாதிரியான இயக்கங்களையெல்லாம் அரசுக்கு எதிரானது என்று ஆரம்பத்திலேயே முடிவு செய்துவிட்டால் கண்டிப்பாக தொழி லாளர்கள் அதை விரும்பமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை பஞ்சாலை மில்களில் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை முனைப்பாக நின்று நடத்துவது அமுல்படுத்துவது யார் முதலாளியா? அல்லது தொழிற்சங்கமா? கோவைப் பகுதியிலே நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் மதுரையிலே மகாலட்சுமி மில், மீனாட்சி மில் இவற்றிலே ஒப்பந்தப்படி அமல் நடத்துவதற்குத் தயங்குகிறார்கள். எங்களுக்கு ஒப்பந்தப்படி கிடைக்கவில்லை என்று மறுபடியும் தொழிலாளர்கள் கிளர்ச்சி நடத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுபோவது சரியா? இந்த இலாகாதான் மதுரைக்குச் சென்று அந்த சம்பந்தப்பட்ட முதலாளிகளைச் சந்தித்து, இப்படி ஒப்பந்தம் செய்திருக்கிறோம், நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று அரசாங்கத்தின் மூலமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தவகையிலே அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் சரியாக இல்லாமல் இருக்கிறது.

இதைச் செய்யாவிட்டால் ஒரு இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் வரத்தான் செய்யும். என் இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் வரும் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சுப்ரீம் கோர்ட்டில், ஒரு தொழிலாளி பழிவாங்கப்





பட்டாலும் It is not an individual dispute but it is an industrial dispute. Industrial unrest affects the community. ஆகவே சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கும் தொழிலாளர் பிரச்னை என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வருமுன் காத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். வால்பாறையைப் பற்றிச் சொல்லவேண்டும். ராமசாமி அவர்கள் பேசினார்கள் எனக்கு ரொம்ப சந்தோஷம். தொழிலாளர்களை நிறுத்திவிட்டு டெம்பரரியாக பாதிப்பேரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வால்பாறையிலுள்ள சங்கத்தைக் கட்டி வளர்த்ததில் 10, 15 ஆண்டுக்காலம் எனக்கும் பங்கு உண்டு. தொழில் தகராறுகளில் வாதாடி இருக்கிறேன். நல்ல அருமையான தொழிலாளர்கள், கஷ்டப்படக்கூடிய தொழிலாளிகள், நல்ல கட்டுப்பாடாக இருக்கிறார்கள். ஐயர்பாடியில் தொழிற்சங்கத் தலைவர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று ஸ்ட்ரைக் நடத்தினார்கள். நீலகிரியில் இராமன் நாயர் செல்வாக்குள்ளவர். குறிப்பிட்ட இடத்தில் யாருக்கு செல்வாக்கு என்று பார்க்கும் நேரத்தில் அங்கே ஏ.ஐ.டி.யூ.சி.யை மீறி எந்த ஸ்ட்ரைக்கும் நடக்காது. எந்த செட்டில்மெண்டும் செல்லாது. அதேபோல் நீலகிரியில் ராமன் நாயரை ஒதுக்கிவிட்டு He will not be in a position to deliver the goods என்ற நிலையில் அப்படி ஒரு பொசிஷன் இருக்கிறது. பிடிவாதமாக இருக்கிறார்கள். ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கு கவனிக்கவேண்டுமென்பதற்காக ஏதோ டெபுடி லேபர் கமிஷனர் அளவிலே 26-ஆம் தேதி பேச்சு நடக்கிறது என்று விட்டுவிட்டால் பிறகு மீதி செட்டில்மெண்டுகளில் எல்லாம் சிக்கல் ஏற்பட்டுவிடும் என்பதை எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பலப்பல சம்பவங்கள் பல இடத்திலே நடக்கின்றன. டிஸ்ப்யூட் என்றால் தகராறு நடக்க வேண்டுமென்று அர்த்தமில்லை. தொழிலாளர்களுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக என்று டெபுடேஷன் கொடுக்கிறார்கள். வருமுன் காக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். பேச்சு வார்த்தை நடக்கிறது. ரொம்பக் கஷ்டமான விஷயம். தொழிற்சங்கங்களின் தலைவர்களை, தொழிலாளர் பிரதிநிதிகளை அடித்துவிடுகிறார்கள். இது ரொம்ப காலம் ஓராது. இங்கு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஏற்பட்டால் தொழிலாளர்கள் திருப்தியடையச் செய்யவேண்டிய சிரமம் தொழிற்சங்கத் தலைவர்களைச் சேர்ந்தது. முதலாளிகளைத் திருப்தியடையச் செய்ய வேண்டியது முதலாளிகளின் நிலை. இடைக்காலப் பேச்சுவார்த்தை ஓரளவுக்கு வந்தால் தயவுசெய்து அரசாங்கத்தின் சார்பிலேயோ அல்லது யார் சார்பிலேயுமோ பத்திரிகைகளில் அறிக்கைவிடுவது நிறுத்தப்படவேண்டும். தினசரிப் பத்திரிகையில் அறிவித்தால் குழப்பம் விளைவிப்பவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும். சிக்கல் தீரக்கூடாது என்று நினைக்கிறவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே தொழில் தகராறுகளில் பேச்சு வார்த்தைகள் நடத்துகிறோம் என்ற அளவில் இந்த அளவிற்குப் போய் இருக்கிறது என்று வைத்துவிட்டால் சாதகமாகவோ பாதகமாகவோ உடயோசித்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 24

இன்னொன்று இந்தத் தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில், தொழில் தகராறுகள் நடக்கிறது என்றால், சென்ற தடவை பேசும் பொழுது நான் சொன்னேன், 1946-ஆம் வருஷத்தில்தான் ஒரு கோடி அளவில் மேன் டேஸ் லாஸாகியிருக்கிறது. அதற்குப்பிறகு 1966-லே, பிறகு 1969-லே, பிறகு 70-லே கிட்டத்தட்ட 1 1/3, 71-லே கிட்டத்தட்ட 2 கோடி, 72-லே 2¼ லட்சம் ஆகிவிட்டது. ஏற்கனவே ஜனவரி மாதத்தில் டெக்ஸ்டைலை எடுத்துக்கொண்டால் 10 லட்சம், சிம்சனை எடுத்துக்கொண்டால் 20 லட்சம் வந்துவிட்டது. இந்த வருஷம் அதற்குமேல் போகும். That is also an indication of the mood of the people இன்றைக்கு அவர்கள் சமுதாயத்திலே மாறுதல் ஏற்படவேண்டுமென்பதற்காகவும், தவறுகள் பல வரலாம். பெரிய புரட்சியிலே தவறுகள் வரும்—புரட்சி ஏற்படுவது சமுதாய மாற்றத்திற்காக ஏற்படுவது இன்றைக்கு தொழிலாளர்கள் தங்கள் உழைப்பாலும், தகுதியாலும் தங்களுக்கு எப்படியாவது காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டுமென்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஏற்கனவே டன்னேலத் தொழிலாளர்கள், இன்றைக்குச் சர்க்கார் இலாக்காவில் தொழிலாளர்கள். ஏற்கனவே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னேன். பீடித் தொழிலாளர்கள் ஒன்றாக நின்று போராடுவோம் என்று சொன்னவுடனே அன்றைக்கு அரசு தலையிட்டது. தலையிட்டதும் போராடித்தான் தீருவோம் என்று சொல்லவில்லை. கடைசியிலே இதற்கு முன்பு 40 பைசா 1,000 பீடிக்குக் கிடைக்கும்படியாக வெற்றி பெற்றார்கள். மறுபடியும் வேண்டுமென்று கேட்பார்கள். ஏனென்றால் விலைவாசி உயர்வதால் மேலும்மேலும் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப்பற்றி ஒரு பெரிய பட்டியலையே வைத்திருக்கிறேன். ஒரு விஷயத்தைத் தெளிவாக அமைச்சரவர்கள் சொல்லவேண்டும். குறைந்தபட்ச சம்பளச் சட்டம் 1948-இல் ஷெட்யூலில் பல தொழில்கள் வருகின்றன. இன்றைக்கு அவரது குறிப்பில் ஹேண்ட்லூம் இண்டஸ்ட்ரீஸ் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். ஆனால் பட்ஜெட் பிரசங்கத்திலே நிதி அமைச்சர், அவர்களுக்கு ஒரு குழு அமைக்கப்பட்டு விட்டதாகவும், குழுவின் சிபாரிசு வெளிவரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் அறிய விரும்புவதெல்லாம், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்திற்குக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா அப்படியானால் அதில் யார் யார் இருக்கிறார்கள், அந்தக் குழுவின் அறிக்கை எப்பொழுது வெளியே வரப்போகிறது என்ற விவரத்தையெல்லாம் தெரிவிக்கவேண்டும். ஏனென்றால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நீண்ட நெடுங்காலமாக தங்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் வேண்டும், தங்களை அந்த ஷெட்யூலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இது இன்றைக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நான் அறிந்த வரையில் பீடித் தொழிலாளிகளுக்குக் குறைந்தபட்ச சம்பளம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு கைத்தறித் தொழிலாளர்களுக்கு அப்படி அமைக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் பவர் லூம்களில் பணியாற்றுபவர்களுக்கு அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் கைத்தறித் தொழிலாளர்கள் இப்பொழுது குறைந்தபட்ச சம்பளச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள் என்றால் அந்தக் குழுவிலே நெசவுத் தொழிலாளர்களின் முக்கியமான தலைவர்கள் இடம்பெற வேண்டும். பரமக்குடியிலுள்ளவர்



1972 மார்ச் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கள் இடம் பெறவேண்டும், ராஜபாளையத்தில் உள்ளவர்கள் அதிலே இடம் பெறவேண்டும் அல்லது கைத்தறிப்பேட்டையிலேயுள்ளவர்கள் அதிலே இடம் பெறவேண்டும், சேலத்திலுள்ளவர்கள் இடம் பெறவேண்டும், இவர்களெல்லாம், அந்த இயக்கத்திலே உள்ளவர்கள், தொழிலாளர்களிடம் அனுதாபம் உள்ளவர்கள், முக்கியமான தலைவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஒர்க்கிங் ஜர்னலிஸ்ட்ஸ் பற்றிக் குறிப்பு பார்த்தேன். 4 வாரத்தில் 144 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். வேறொரு முறையில் சொல்லவேண்டுமென்றால் வாரத்திலே 6 நாட்கள், ஒரு நாளைக்கு 6 மணி நேரம். இப்படி 4 வாரத்தில் 144 மணி நேரத்திற்கு மேல் போனால் மேற்கொண்டு 6 மணி நேரம் போனால் அதற்குத் தகுந்த ஒரு நாள் லீவ் கிடைக்க வேண்டும். இப்பொழுது இன்ஸ்பெக்டர் போய்ப் பார்த்தால் என்ன அறிந்து கொண்டார்கள், அதைப் போய்ப் பார்த்தார்களா, பார்த்தார்கள் என்றால் என்ன ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள், 144 மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்று பார்த்தார்களா அல்லது அதற்கும் அதிகம் என்று கொடுத்திருக்கிறார்களா? உண்மையிலேயே நான் இந்தப் பத்திரிகைகளிலேயெல்லாம், காழ்ப்புணர்ச்சியோடு நான் சொல்லவில்லை, இந்து, எக்ஸ்பிரஸ், மெயில், தினமணி இப்படிப்பட்ட பத்திரிகைகளில் வந்து இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறதா? இம்மாதிரியாக வேலை நேரத்தை நிர்ணயம் செய்யும் சட்டமெல்லாம் அமல் நடத்த இன்ஸ்பெக்டரேட்டில் சரி செய்யப்பட்டதா இல்லையா? இந்த இடத்திலே சரியாகச் செய்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய ரிப்போர்ட்டைப் பார்க்கவேண்டும். 144 மணி நேரம் வேலை என்பது எந்த முறையிலே வந்திருக்கிறது என்று தெரியும் என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆட்டோமேஷன் சம்பந்தமாக நான் சொல்ல விரும்புகிறேன், முதலமைச்சரவர்கள் உண்மையிலேயே என்னைக் கேட்டார்கள், இன்றைக்கு எல்லோருக்கும் வேலை கொடுத்து விட்டால் கம்ப்யூட்டர் வருவதைப்பற்றி எதுவும் கிடையாது. We are not opposing industrialisation, we are not opposing mechanisation. We are opposing computerisation which will necessarily reduce the work of thousands of intellectuals. இன்றைக்கு நம்நாட்டில் துரதிருஷ்டவசமாகப் பார்த்தால் பல்கலைக்கழகத்திலே அதிகமாகக் கலைக்கல்லூரிகளைத்தான் கட்டுகிறோம். இன்னும் நாம் விவசாயக் கல்லூரிக்கு வரமாட்டேன் என்கிறோம். விவசாயப் பட்டதாரிகள் 5 சதவீதம் கூட இல்லை. இவர்கள் இந்த வேலைதான் செய்யவேண்டுமென்று தலையெழுத்து என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்கள் வேலை பார்க்கப்படும். ஹாஸ்பிடலில் உபயோகப்படுத்துங்கள். என்னுடைய உடம்பை செக் செய்து, என்னென்ன கஷ்டம் இருக்கிறது, நோய் என்னென்ன இருக்கிறது என்று பார்க்க கம்ப்யூட்டர் சிஸ்டம் இருக்கிறது. அப்படி வரட்டும். அப்படிப்பட்ட சில விஷயங்களுக்கு வரட்டும், டைப்ரைட்டர் வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றைக்கிருக்கும் வேலை நடக்கும் பொழுது அதில் உடனடியாக அங்கே 200 பேருக்கு வேலை கிடைக்கலாம்.

ஆயிரம் பேர் செய்யக்கூடிய வேலையை 20 பேர் பார்க்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். அந்த முறையில் எல்லா அரசியல் கட்சிகளும் We are opposed to automation—"Automation. Down Down"

வந்திருக்கிறோம். ஆட்டோமேஷன் வருவது என்பது கொள்கைப் பிரச்சினை அல்ல. ஆட்டோமேஷன் என்பதை அரசு கொள்கை ரீதியில் அமல் நடத்துகிறது என்றால் அந்தக் கொள்கையை மாற்றியிருக்கிறார்களா என்பது தெரிய வேண்டும். இது தொழிலாளிகளைப் பாதிக்கும் விஷயம். ஏ.ஜி. ஆபீசில் இருக்கக்கூடியவர்கள் இங்கிருக்கக்கூடிய எல்.ஜி.ஓ.க்களுக்கு வேலை கிடைப்பது பாதிக்கப்படும், வேலை இழக்க நேரிடும் என்ற விதத்தில்தான் கிளர்ச்சி செய்வதாக எடுத்துக்கொள்ள வேண்டும். சகோதர உணர்வோடு செய்கிறார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களைப் பொறுத்தவரை மத்திய அரசு லேசில் ஒன்றும் செய்துவிட முடியாது. இப்போது இங்கு கொள்கைப் பிரச்சினையாகக் கொண்டிருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.

பொதுவான விஷயங்களைப் பற்றி அதிகமாக வந்துவிட்டது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் ஒரு மாதச் சம்பளத்தை குறைந்த போனஸ் என்ற அடிப்படையில் கொடுப்பது என்பதைக் கொள்கை ரீதியாக எடுத்துக் கொண்டிருக்கிறது. ஏன சட்டம் கொண்டுவர முடியாதா? முடியும். ஏன் கொண்டு வரவில்லை? மத்திய சர்க்கார் கொண்டு வருகிறார்கள் என்று காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இங்கு நாம் போனஸ் சட்டத்திற்குத் திருத்தமாகக் கொண்டுவர முடியும். அது கன்கரண்ட் லிஸ்டில் இருந்தாலும் நாம் சட்டம் கொண்டுவந்து அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை என்றால் சொல்லுங்கள். கிராச்சுவிட்டியைப் பொறுத்தவரையும் மத்திய சர்க்கார் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சி நடத்தும் மாநிலத்திலே சட்டம் கொண்டுவந்தார்கள். மத்திய சர்க்கார் அங்கீகாரம் கொடுக்கும் நிலைதான் ஏற்பட்டது. அதுகூட எனக்குத் திருப்தி இல்லை. அங்கு அரை மாதத்தான் கிராச்சுவிட்டி என்று கொடுத்திருக்கிறார்கள். ஒரு மாதம் கிராச்சுவிட்டி கொடுக்க வேண்டும். நான் கூட ஒரு மசோதாவைத் தனி நபர் மசோதாவாகக் கொடுத்திருக்கிறேன். அதை அரசு மசோதாவாக ஏற்றுக்கொண்டு ஏன் கொண்டுவரக்கூடாது?

மோட்டார் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு சம்பள போர்டு தீர்ப்பு அவ்வளவு திருப்திகரமான தீர்ப்பாக இல்லை. அந்தத் தீர்ப்பையே அமல் நடத்த முதலாளிகள் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். கண்டிப்பாக அமல் நடத்த வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தால் என்ன? மாண்புமிகு என். வி. என். அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். அதே சட்டம் கேரளாவில் வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தை நாமும் கொண்டுவரலாம். நமக்கு அதிகாரம் இருக்கிறது. நாம் அதைச் செய்யாமல் இருக்கிறோம் என்ற காரணத்தால் இதை எடுத்துச் சொல்லுகிறேன்.

முதலாளிகளைப் பொறுத்து ஒரு சிறு விஷயம். விவரம் வைத்திருக்கிறேன். சென்ற வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து கணக்குப் பார்த்தால் முதலாளிகள் பிராவிடண்ட் பண்ட் பணத்தைத் தொழிலாளிகளுக்குக் கொடுக்காமல் கையில் வைத்திருக்கும் கணக்கைப் பார்த்தால் அது ஒரு கோடி 35 லட்சம் ரூபாய் அளவுக்கு இருக்கிறது. தொழிலாளியின் பணத்தைப் பிடித்தாயிற்று. பாதிப் பணம் முதலாளி போட வேண்டும்; அவர்கள் பாதிப் பணத்தையும் போடவில்லை; தொழிலாளிகள் போட்ட பணத்தையும் திருப்பிக் கொடுக்கவில்லை. இவர்களை அனுமதிக்கலாமா? இவர்களை நடமாட விடலாமா?



**Legal Department—Plese go into this. There is what is called criminal breach of trust.**

என்று சொல்ல வேண்டாமா?

ஏன் அவர்களை ப்ராசிக்யூட் பண்ணக்கூடாது? மகாராஷ்டிராவில் ப்ராசிக்யூட் பண்ணப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் போர்டு ஆப் ட்ரஸ்ட் பிராவிடண்ட் பண்டில் இருக்கும்போது நான் முயற்சி செய்து சிறைக்கு இரண்டுபேரை அனுப்பினேன். தமிழ்நாட்டில் ஏன் செய்யவில்லை? கோவையில் மட்டும் 85 லட்சம் ரூபாய்; தியாகராஜ செட்டியார் சாரதா மில்லில் 3½ லட்சம் ரூபாய் இருக்கிறது. நான் மூடிய மில்லைச் சொல்லவில்லை. நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் மில்களைத்தான் சொல்லுகிறேன். பெரும் முதலாளிகள் ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முதலாளிகள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை சிறைக்கு அனுப்பினால் என்ன? அப்படி இரண்டு பேரையாவது செய்தால்தான் தொழிலாளிகள் மத்தியில் பெரிய நம்பிக்கை ஏற்படும். இது முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கும் அரசு அல்ல. தொழிலாளிகளுக்கு ஆதரவாக, முதலாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்குச் சில சான்றுகள் இருக்க வேண்டும்.

இதைப்பற்றிச் சொல்லும்போது தொழிலாளர் இலாகா பற்றி ஒன்றைச் சொல்லவேண்டும். அந்த இலாகா ஓவர் ஒர்க்டு இலாகா. அவர்கள் மிக அதிகமாக வேலை செய்கிறார்கள். இப்போது இருப்பதுபோல் இரண்டு மடங்கு ஆக அந்த இலாகா இருக்கவேண்டும். அதிகமான இடமும் கொடுக்க வேண்டும். லேபர் டிஸ்ப்யூட்ஸ் கன்சிலியேஷன் ஆபீசருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். நெர்வ் ராக்கிங் பிசினசாக இருக்கிறது அவர்களுடைய வேலை. சென்னை நகரத்தில் மூன்று பேர் போதாது. ஐந்து பேர் வேண்டுமென்று போன வருஷமே சொன்னேன். அதுபற்றிப் பரிசீலனை எதுவும் இருக்கிறதா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

பல விஷயங்கள் இருந்தாலும் கூட, பிரதானமாகத் தொழில் அரங்கத்திலே தொழிலாளிகளை இந்த அரசு அடித்தாலும்கூட இந்த அரசுக்கு உடனே விரோதம் என்று அர்த்தமல்ல. நேரடியாக மத்திய சர்க்கார் நடத்தக்கூடிய, நான் இருக்கக்கூடிய அந்தச் சங்கத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகள் நல்ல உதை வாங்கினார்கள். அப்படி உதை வாங்கியவர்களிலே அதிகமான உதை வாங்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். அதெல்லாம் வெளியே வரமாட்டேன் என்கிறது. தலைவர்களைப் பற்றித்தான் வருகிறது. சாதாரண தொழிலாளிகளைப் பற்றி வரமாட்டேன் என்கிறது. நெஞ்சு உடைந்த, கை உடைந்த, கால் உடைந்த தொழிலாளிகள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். நான் ஆவடி விவகாரத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன். இப்போது துப்பாக்கிப் பிரயோகம் இல்லை. காலம் மாறியிருக்கிறது. மாறுகிற காலத்தில்தான் இந்த அரசு வந்திருக்கிறது. துப்பாக்கியை தூக்காது என்று தொழிலாளர்கள் உணருவார்கள். அந்த நிலையில் இந்த அரசு இருக்கும்போது தங்களுடைய கோரிக்கைகளைச் சாதிக்கா போனால் வேறு எந்த அரசு சாதிக்கமுடியும் என்ற நிலையில் தொ

லாளர்கள் வருவது தப்பா? தொழிலாளர்கள் வளமாக இருக்க வேண்டுமென்ற முறையில்தான் இந்த இயக்கங்கள் நடைபெறுகின்றன. பொதுவாக இந்த அரசு சில காரியங்களைச் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். சீக்கிரமாகச் செய்ய வேண்டும். தொழிற்துறை சம்பந்தமாகக் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத்தான் நான் வெட்டுப் பிரேரணையாகக் கொடுத்திருக்கிறேன் என்று கூறி அதை வற்புறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு திரு என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசிய உறுப்பினர்கள் அனைவரும் அரசின் நடவடிக்கைகளைப் பெரும்பாலும் ஆதரித்துப் பேசியிருப்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால் வழக்கம்போல் நமது அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சில விவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் தெரிந்துகொள்ள வேண்டிய முயற்சி எடுக்காமல் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியைப் பற்றி இங்கே சொன்னார்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி : ஸ்டாண்டர்டு மோட்டார் சம்பந்தமாக ஒரு வார்த்தை ......

Mr. SPEAKER: That will amount to making another speech; the hon. Member can have another opportunity after the Minister finishes his reply, by way of clarification.

திரு கே. டி. கே. தங்கமணி : பிப்ரவரி 71-க்குள்ளேயே எல்லோரும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொன்னார்கள். 1972-ம் ஆண்டு ஆகியும் கூட 75 பேர் தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

Mr. SPEAKER : The hon. Member cannot make a speech now.

மாண்புமிகு திரு என். வி நடராசன் : அந்த விவரத்தை உங்களிடத்தில் எடுத்துச் சொல்வதாக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி அவர்கள் கூட 600 தொழிலாளர்கள் வேலையின்றி வெளியில் இருப்பதாகச் சொன்னார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மூடப்பட்டபோது அதைப் பற்றி காங்கிரஸ் கட்சி கவலைப்படவில்லை. கவலை எடுத்துக் கொண்டது கழக அரசும், முதல்வர் அவர்களும் தான். பெருமுயற்சி எடுத்துக்கொண்டு வேலை வாய்ப்புத் தரும்படியான நிலைமை ஏற்பட்டது. அதிலே வேலையிழந்தவர்கள் மொத்தத் தொழிலாளர் 1,532 பேர். இதுவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் 1,419 பேர். இன்னும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் 42 பேர். இது தான் இப்போதுள்ள நிலைமை. அதுமட்டுமல்ல; தொழிற்சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளான சேதுராமனை வேலைக்கு அமர்த்தியாகிவிட்டது. மற்ற இரண்டு நிர்வாகிகளான சுப்பிரமணியம், வைத்தியலிங்கம் ஆகிய இரண்டு பேரையும் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளுவார்கள். (திரு கே. டி. கே. தங்கமணி: டிசம்பர் மாதம் தான் எடுத்துக்கொள்ளுவதாகச் சொன்னார்கள்......) விரைவில் எடுத்துக் கொள்ளுவதாக வாக்களித்திருக்கிறார்கள்.



காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மற்றும் சில உறுப்பினர்களும் கழக தொழிற்சங்கத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு உதவி என்றும், அரசாங்கத்தின் மூலமாக கழகத் தொழிற்சங்கத்தை வலுப்படுத்தி வருவதாகவும் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன். பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனியில் ஐ.என்.டி.யூ.சி. சங்கமும், தி.மு.க. போலவைச் சங்கமும் இருக்கிறது. இந்த இரண்டு சங்கங்களில் எது சரியான சங்கம், அதாவது முறையாக அங்கீகரிக்கப்பட வேண்டிய சங்கம் என்ற பிரச்சினை தீவிரமாக வளர்ந்தது.

திராவிட முன்னேற்றக் கழகச் சங்கமானாலும் சரி அல்லது ஐ.என்.டி.யூ.சி. ஆனாலும் சரி ஒழுங்காக பரிசீலனை செய்து அனுமதி கொடுங்கள் என்று அதிகாரிகளிடம் சொன்னோம். ஐ.என்.டி.யூ.சி.-க்கு அங்கீகாரம் தந்திருக்கிறது. முன்னேற்றக் கழகச் சங்கத்திற்குத் தரப்படவில்லை. இப்படிப் பல உதாரணங்களைச் சொல்லமுடியும்.

இப்போது பி. அண்ட். சி. மில்லில் தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. அதன் தலைவர் கழகத்தைச் சார்ந்தவர். தொழிலாளர்களுக்கு இடையே வேறுபாடு வளர்கிறது என்பதால் அவரை ராஜினாமா செய்யச் சொல்லி தேர்தல் இப்போது நடைபெற்று வருகிறது. சிம்ஸன் கம்பெனியிலும் அதேபோல் தான். காட்டூர் கோபால் ராஜினாமா செய்தது மட்டுமல்லாமல் அந்தக் கமிட்டியே ராஜினாமா செய்து திருமதி அனந்தநாயகி அவர்கள் தலைமையில் கமிட்டி அமைத்து அதுவும் ராஜினாமா செய்து இன்றைய தினம் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியம் பற்றியும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏ.ஐ.டி.யூ.சி. சங்கம் அங்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கமாகும். அதற்கு முதல் உரிமை தரப்பட வேண்டும். அதற்கு கூட்டம் நடத்தவும் மற்றவற்றிற்கும் அந்தத் தொழில் நிறுவனத்தில் உள்ள இடத்தைத் தரவேண்டுமென்று முறை இருந்து வருகிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நாலாயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு கூட்டம் நடத்த முதல்வர் அவர்களையும் என்னையும் கலந்து கொள்ளச் செய்ய ஏற்பாடு செய்தார்கள். ஆனால் முதல்வர் அவர்கள் யார் அங்கீகரிக்கப்பட்ட சங்கமோ அவர்கள்தான் அங்கு கூட்டம் நடத்த வேண்டும், மற்றவர்கள் நடத்துவதற்கு நான் வரமாட்டேன் என்று சொல்லி கூட்டதிற்கு செல்லவில்லை. அது ரத்து செய்யப்பட்டது. இதுபோல் பல எடுத்துக்காட்டுகளை நான் காண்பிக்க முடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தொழிற்சங்கத்தை வைத்துத்தான் கழகத்தை வளர்க்க வேண்டும், அல்லது கழக ஆட்சியை வளர்க்க வேண்டும் என்ற நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவ்வளவு பஞ்சத்தோடு எங்களை விட்டுச் செல்லவில்லை. அண்ணா அவர்களது தொழிற்சங்க கொள்கை, தொழிலாளர்கள் நமக்கு என்ன செய்கிறார்கள், கட்சிக்கு என்ன செய்கிறார்கள். என்று கேட்கக்கூடாது. தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதே நமது கொள்கையாயிருக்கவேண்டும் என்று கூறினார்கள். அதுதான் இன்னும் கழகத்தின் தொழிற்சங்கக் கொள்கை. அந்தக் கொள்கையைத்தான் கழகமும் கழக அரசும் பின்பற்றி வருகிறது.

வேலைநிறுத்தங்களைப் பற்றி இங்கு பேசிய உறுப்பினர்கள் சிலர் குறைபட்டுக் கொண்டார்கள். பல வேலை நிறுத்தங்கள் ஆரம்பத்திலேயே தலையிட்டு வேலை நிறுத்தங்கள் நடைபெறுவது தடுக்கப்பட்டிருக்கிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் 25,000 பேர்கள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்வதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். தொழில் அதிபர்களையும், தொழிலாளர்களையும் வரவழைத்து கலந்து பேசி வேலைநிறுத்தத்தை தடுக்கும் வகையில் அவர்களுக்கு சம்பள உயர்வு வாங்கித் தந்தோம்.

கே. டி. கே. அவர்கள் கூட ஏதோ ஆயிரம் பீடிக்கு 40 காசு என்றார்கள். அவர்கள் எதிர்பார்த்து வந்தது 30 காசு, நாங்கள் வாங்கித் தந்தது 40 காசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு வேலைநிறுத்தங்களை நாங்கள் ஆரம்பத்திலேயே தடுத்திருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் உறுப்பினர் பழனிச்சாமி என்று நினைக்கிறேன், அவர்கள் கேட்டார்கள், இந்தச் சர்க்கார் போலீஸை விட்டு அடக்குமுறையை ஏன் பிரயோகிக்கிறது என்று. அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள வேண்டும். அவர் கட்சியைச் சார்ந்த கேரள அரசின் முதல்வர் திரு. அச்சுத மேனன் அவர்கள் பேசிய ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். போராட்டங்கள் வன்முறைக்கு இடம் தரும்போது எந்த சர்க்காரும் போலீஸைக் கொண்டு அடக்கத்தான் செய்யும். வன்முறைக்கு இடம் கொடுப்பவர்கள் போலீஸ் அடக்குமுறைப்பற்றி பேசுவது சரியாகாது. இடதுசாரி ஆட்சி செய்யும்போது போலீஸ் அடிதடி, துப்பாக்கி சூடு இல்லை யென்று யாராவது கூற முடியுமா ? அவர்கள் ஆட்சியில் ஒன்றுமறியாத ஏழைகள், பாமர மக்கள் போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் இறக்கவில்லையா? போலீஸ் லாக்கப்பில் அடக்குமுறை இருந்ததில்லையா? ஏழைகள் குடிசைகளிலிருந்து விரட்டப்படவில்லையா ? என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். கழக அரசு இதுவரையில் தொழிலாளர்கள் போராட்டங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுண்டா ? அப்படி அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்தது என்றால் அது தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பின் காரணமாகவே தவிர அரசாங்கம் துப்பாக்கி பிரயோகம் நடத்தவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததே கிடையாது.

வேலை நிறுத்தங்கள் ஏராளமாக நடைபெற்றிருப்பதாகச் சொன்னார்கள். நான் அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்வேன். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வேன். காங்கிரஸ் ஆட்சியில் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம் மதிப்பிற்குரிய திரு காமராஜ் அவர்கள் கூடச் சொல்கிறார்கள். கழக ஆட்சியில் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன என்று. ஆலைகளை எல்லாம் மூடுகிறார்கள் என்று சொல்கிறார். திரு. காமராஜ் அவர்களுக்கு திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொல்கிறார், கேளுங்கள். "சென்ற ஆண்டுக்கு இந்த ஆண்டு வேலைநிறுத்தங்கள் அதிகமாகப் போய்விட்டது என்று சர்க்கார் மீது குற்றம் சொல்லப் படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் சொல்வேன், வேலை நிறுத்தங்கள்



அதிகமாயிருக்கின்றன என்றால், அது தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை அதிகமாகக் கேட்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டுமே தவிர சர்க்கார்மீது எப்படிக் குற்றமாகும்?" என்று சொல்லியிருக்கிறார்கள். இது 1960-ம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதி இங்கு சட்ட மன்றத்தில் பேசியதாகும். அப்படி அன்று மதிப்பிற்குரிய ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொல்லியிருக்கும்போது இன்னை யதினம் இங்குள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் வேலை நிறுத்தங்கள் அதிகமாயிருக்கின்றன, இது அநீதி அல்லவா என்று கேட்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வேலை நிறுத்தம் ஏற்படுவது நல்லது தான். திருப்பூர் மொய்தீன் அவர்கள் சொன்னார்கள். 1960 ல் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொன்னதை அவர்கள் படிப்பார்கள் என்று நினைக்கிறேன். வேலை நிறுத்தத்தைப் பற்றி கவலைப்படவில்லை. வேலை நிறுத்தம் நீடிக்கக் கூடாது. That should not result in man-days lost.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அது நிச்சயமாக அரசின் தவறு அல்ல. யாருடைய தவறு என்பதை அம்மையார் அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அனுபவத்தின் மூலம் பெறும் பாடத்தைப் போல் வேறு எந்தப் பாடமும் துணை செய்யாது, அவர்களுடைய அனுபவத்தில். தொழிற்சங்கத்தில் அவர்கள் சிறிது நாட்களே இருந்தாலும் பெற்ற அனுபவம் அதிகம். வேலை நிறுத்தங்களுக்குக் காரணம் அரசு அல்ல. தொழிலாளர்கள் போராட்டங்கள் என்றால் ஏன் அரசாங்கம் நேரடியாக ஈடுபடுவதில்லை என்று கேட்டார்கள். அதற்கு நான் மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொன்ன கருத்தை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

" Sir, as I have said already, industrial disputes are common occurrences. Certain claims of labourers are being examined by the department. The duty and responsibility of Government is to provide the necessary machinery for conciliation and there is no further liability on the part of Government."

இதுவும் அவர்கள் சட்டமன்றத்தில் சொன்ன கருத்து தான். இதை காங்கிரஸ் உறுப்பினர்கள் கவனிக்கவேண்டும். கன்ஸிலியேஷனுக்கு அனுப்பிவிட்டோம். அதோடு எங்கள் கடமை தீர்ந்தது. அதற்குமேல் அரசாங்கம் ஒன்றும் செய்வதிற்கில்லை என்று அந்த நாளில் கையை விரித்துவிட்டார்கள்.

நாங்கள் அப்படி அல்ல. கடைசிவரையில் ஈடுபட்டு வேலைநிறுத்தத்தைத் தடுப்பது என்று மட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்கு உரிமைகளைத் தேடித் தந்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் மூவ்வாறு அமைச்சர்கள் சொல்லியிருந்தாலும் இவற்றையெல்லாம் அவர்கள் சொன்னார்கள், அதனால் நாங்கள் இப்படிச் செய்கிறோம் என்பது அல்ல. அந்தக் கொள்கையைப் பற்றி இன்றைய தினம் இந்த அரசு தொழிலாளர்களுக்கு எந்தளவிற்கு நன்மைகள் செய்யமுடியுமோ அதைச் செய்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். இந்த அரசு முதலாளிகள் பக்கம்

இருக்கிறதா, தொழிலாளர்கள் பக்கம் இருக்கிறதா என்று. பண்பட்ட ஒரு தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர். அதிலும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் நாங்கள் எந்தப் பக்கம் என்பதை இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாங்கள் என்றென்றும் தொழிலாளர்கள் பக்கம்தான் இருப்போம் என்ற உறுதியை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, சந்தேகத்தை விட்டுவிட்டு சர்க்காரோடு ஒத்துழைத்து தொழிலாளர்களுக்கு உரிமைகளைத் தேடித்தருவதில் உறுப்பினர் அவர்கள் தக்க கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். வேஜ் போர்ட் அமைக்கப்பட்டு ஆல் இந்தியா லெவலில் இவ்வளவு என்று சம்பளத்தை உயர்த்துகிறது. அதற்குமேல் கொடுக்கக் கூடாது. இங்கு வந்திருந்த மத்திய அரசின் மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் திரு. சடில்கர் அவர்கள் எப்படி வேஜ் போர்டைவிட அதிகமாக சிபார்சு செய்தீர்கள் என்று வருத்தத்தோடு கேட்டார்கள். வேஜ் போர்ட் 21 ரூபாய் என்று சம்பள உயர்வு தந்தது. அது தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்றார்கள். நாங்கள் எவ்வளவோ காரணங்களை எடுத்துக் கூறினாலும் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகவே மேற்கொண்டு பத்து ரூபாய் தரவேண்டுமென்று தொழில் நிர்வாகிகளை வற்புறுத்தி பத்து ரூபாயும் மற்றும் பல கோரிக்கைகளையும் பெற்றுத் தந்திருக்கிறோம். ரூ. 10 மட்டுமல்ல. அவர்களுக்கு இருந்த நீண்டகாலக் குறைகள், கோரிக்கைகள் அத்தனையும் நிறைவேற்றி, இன்றைய தினம் அந்தத் தொழிலாளர்கள் மன நிறைவோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நெல்லிக்குப்பத்தில் விரைவில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பக் கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆக வேஜ்போர்டு தெரிவித்த தீர்ப்புக்கு அதிகமாக வாங்கித்தரும் அளவில் இந்த அரசு தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது. இது முதலாளிகள் அரசா, தொழிலாளர்கள் அரசா என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள், நான் விளக்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ரூலிங் பார்ட்டி., தொழிற்சங்கத் துறையில் ஈடுபடக்கூடாது, அந்தப் பிரச்சினைகளில் தலையிடக்கூடாது என்று பொருள்படும்படிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசியபோது, தொழிற்சங்கத் துறையில் கழகம் இருக்கக் கூடாதா என்று கேட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களின் அரசியலில் அவருக்கு இருக்கும்படியான செல்வாக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டிருப்பதால் குறைந்துவிடுகிறது என்ற அச்சம் இருந்தால் அதைக் கழக அரசிடம் தெரிவித்தால் அதை முதலமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்கத் தயாராக இருக்கிறார்கள். தொழிற்சங்கத்தில் கழகம் கலந்துகொள்வதால் குழப்பம் ஏற்படுகிறது. அதனால் தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்குமிடையே நல்லுறவு கெட்டுவிடுகிறது. ஆகவே, கழகம் தொழிற்சங்கப் பணியில் ஈடுபடுவது சரியல்ல என்று சொன்னார்கள். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், தொழிற்சங்கத்தில் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அரசு முறை தவறிய செயலில் சலுகை அளிக்கவில்லை. அவர்கள்மீதும் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். நியாயமாகவே நாங்கள் நடந்துகொண்டு வருகிறோம்.





அசோக் லேலண்டு பற்றிச் சொன்னார்கள். அரசு ஏன் அதை வலியுறுத்தக்கூடாது என்று கேட்கப்பட்டது. உள்ளபடியே இந்தப் பிரச்சினையில் அசோக் லேலண்டு நிர்வாகிகள் இன்னும் கொஞ்சம் பொறுமையோடு நடந்து கொண்டிருக்கவேண்டும். அங்கே வந்த பிரச்னையெல்லாம், அக்ரிமெண்ட் கையெழுத்து ஆகும்போது, அதிலே வார்த்தைகளில் வேறுபாடு ஏற்பட்டது. குறைந்த அளவு லாபம், குறைந்த அளவு போனஸ் அந்த அடிப்படையில் பேசவேண்டுமென்று சொன்னார்கள். அந்த நிபந்தனை வேண்டாம், அதை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தச் சுலோகனை எடுத்துவிட்டு போனஸ் அதிகமாகப் பெறுவதா இல்லையா என்பதைப்பற்றி விவாதிக்கலாம் என்று சொன்னார்கள். அதைத் தொழில் நிர்வாகஸ்தர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் பேச்சுவார்த்தை முறிந்தது.

இந்த மன்றத்தின் மூலம் நான் சொல்லிக்கொள்வேன் அசோக் லேலண்டு போன்ற நிர்வாகஸ்தர்கள், தொழிலதிபர்கள் கொஞ்சம் காலத்தின் போக்கினை அனுசரித்துப் போகவேண்டும், மக்கள் தீர்ப்பை அவர்கள் அருள் கூர்ந்து மதிப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த வார்த்தையை விட்டுக்கொடுத்திருப்பார்களானால் தொழிலாளர்களிடமிருந்து நல்ல ஒத்துழைப்பை அவர்கள் பெறமுடியும். வார்த்தைகளை விட்டுக் கொடுக்காமல் இப்படிப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதா? தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் முடிந்து வேலைக்குத் திரும்பினாலும் மன நிறைவோடு வேலை செய்யமாட்டார்கள். மீண்டும் கலந்து பேசி அந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவுக்கு வருவார்கள் என்றே நம்புகிறேன். அந்த நம்பிக்கையை இன்னும் கைவிட்டு விடவில்லை, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது தங்கள் லண்டன் கம்பெனிக்கு ராயல்டி கொடுக்கிறோம் என்று தொழில் நிர்வாகிகள் சொன்னார்கள். லண்டன் கம்பெனியில் செய்துவந்த ஸ்பேர் பார்ட்ஸ் சிலவற்றை நமது தொழிலாளர்கள் இங்கேயே செய்கிறார்கள். ஆனால் லண்டனிலிருந்து இங்கே இறக்குமதியாகாத காரணத்தால் அங்கேயுள்ள அவர்கள் வருவாய் குறைந்துவிட்டது என்ற காரணத்தால் அவர்களுக்கு ராயல்டி இங்கேயிருந்து தருகிறார்கள். இந்த நாட்டிலேயே நல்ல தரமான சாமான்களைச் செய்யும் நமது தொழிலாளர்களுக்கு போனஸ் சற்று கூடுதலாகத் தருவதற்கு தொழில் நிர்வாகிகள் முன்பின் பார்க்கிறார்கள், சில முதலாளிகள் இன்னும் காலத்தின் தீர்ப்பை உணர்ந்தும் தங்கள் போக்கிலிருந்து மாறாமல் இருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கது என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் இங்கே போனஸ் விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, கிராஜுவிடி ஸ்கீம் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள், நமது அரசே சட்டம் செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். இப்போதே நாங்கள் மாநில சுயாட்சி கேட்பதைப்பற்றி எங்களை பிரிவினைவாதிகள் என்று சொல்லுகிறார்கள். இப்போது அங்கே நாடாளுமன்றத்திலே அந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்று, விவாதத்திலே இருக்கிறது. இந்த நேரத்திலே போய் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் கழகத்தையும் கழக அரசையும் வீணாகப் பிரிவினைவாதிகள் என்று தவறான பிரச்சாரம் செய்பவர்களுக்கு இடமளிப்பதாகும். அப்போது கே. டி. கே. போன்றவர்கள் யார் பக்கம் இருப்பார்கள் என்றும் சொல்லமுடியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் சட்டம் செய்யப்படுமானால் அதை எப்போதும் ஆதரிப்போம்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆதரிப்பீர்கள் ஆனால் காங்கிரஸ் கட்சி என்ன சொல்லும், அவர்கள் பிரிவினை கோஷத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்று சொல்லுவார்களா, சொல்லமாட்டார்களா என்பதை உங்கள் யோசனைக்கே விட்டுவிடுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இந்த போனஸ் பற்றிக் கூறிய கருத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன் 8 1/3 சத விகிதம் என்ற குறைந்தபட்ச போனசாக இருக்கவேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. அதுபோலவே கிராஜுவிடி ½ மாதம் என்று இருப்பதை மாற்றி 1 மாதமாக இருக்கவேண்டும். இதுதான் அரசின் கொள்கை. எப்படி அந்தச் சட்டம் உருவாகிறது என்பதைப் பார்த்து பிறகு வேண்டுமானால், அதுபற்றி விரிவாக விவாதிக்கலாம்.

நண்பர் வேழவேந்தன் அவர்கள் கழக அரசின் சாதனைகளைச் சொல்லி அதற்காவது காங்கிரஸ் கட்சியினர் பாராட்டக்கூடாதா என்று சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் இங்கே கழக அரசை பாராட்டாமல், அவர்கள் மனச்சாட்சிக்குள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பாராட்டினால் எங்கே நமக்கு அதிகமான தெம்பு ஏற்பட்டுவிடப்போகிறதோ என்று, அதனால் அவர்கள் மனதுக்குள்ளேயே நம்மைப் பாராட்டுகிறார்கள். அதை உணர்ந்து இருந்தும் நாம் அதைப்பற்றி அதிகமாகக் குறையாகச் சொல்லக்கூடாது என்பது என் எண்ணம்.

தொழிற்சங்கத்தில் தீவிர வாதம் பேசுவது மட்டும் விவேகமாகாது. காந்திஜி அவர்கள் தீவிரவாதியா, பிற்போக்குவாதியா என்று கேட்கிறேன். தொழிற்சங்கத்தை ஆரம்பித்துவைத்த திரு. வி. க. அவர்கள் பிற்போக்குவாதியா என்று கேட்கிறேன். இந்தியாவின் ஜனாதிபதி வி. வி. கிரி அவர்கள் முற்போக்குவாதியா, பிற்போக்குவாதியா? சிந்தனை சிற்பி சிங்காரவேலர் முற்போக்குவாதியா, பிற்போக்குவாதியா? இ. எல். ஐயர் தொழிற்சங்கத்துறையில் பிரதானமாக இருந்தவர்களில்





ஒருவர், அவர் பிற்போக்குவாதியா, முற்போக்குவாதியா? அறிஞர் அண்ணா அவர்கள் வரையில் சொல்வேன், தொழிற்சங்கத் துறையிலே பேசுவது கொஞ்சமாகவும், கடமைகளைச் செய்வதில் அதிகமாக செய்வதும் அந்தத் தலைவர்களின் கொள்கையாக இருந்து வந்தது. தொழிற் சங்கத் தலைவர்களைக் கேட்டுக்கொள்வேன், கோஷங்களை அதிகமாகச் செய்வது, தொழிலாளர்களுக்கு அதிகமான வாக்குறுதிகள் தந்து, அதை நிறைவேற்ற முடியாத நிலை எய்தி, நீங்களும் தொல்லைக்குள்ளாகி தொழிலாளர்களும் சம்பளம் இழந்து, நண்பர் கே. டி. கே. சொன்னது போல் பல்வேறு துறைகளில் நஷ்டம் ஏற்பட்டு சம்பளம் கூட கிடைக்காமல் போகின்ற நிலைமைக்குப் போகாமல், நிதானத்தோடு, ஆனால் உறுதியோடு தொழிற்சங்கத்துறையில் அவர்கள் கடமையாற்றி வெற்றிபெறுவதற்கு முன் வந்தால் இந்த அரசு அவர்களுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும்.

அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்வேன். கோவையில் 1 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து, அந்த ஆலைத் தொழிலதிபர்களிடம் அந்தப் பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தபோது முதல்வர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உடனே முதலமைச்சர் சொன்னார், ஏற்றுக்கொண்டால் நல்லது, இல்லையானால் எல்லா ஆலைகளையும் தேசியமயம் ஆக்குவேன் என்று சொன்னார்கள். அது வெளி உலகுக்குத் தெரியாது. தொழிற்சங்கத் தலைவர்களும் இதைப் பாராட்டமாட்டார்கள்.

**திரு கே. டி. கே. தங்கமணி :** அது பத்திரிக்கைகளில் வெளி வந்தது. தொழிலாளர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அப்படிப்பட்ட முதலமைச்சரும் அரசும் இருக்கிறபோது ஏன் நீங்கள் பயப்படவேண்டும்? எங்களிடம் வேலை வாங்கிக்கொள்ள உங்களுக்கு அனுபவம் இல்லை. கொஞ்சம் தட்டிக்கொடுத்தால் இந்த அரசும், அமைச்சரவையும், முதலமைச்சரும் எல்லாக்காரியங்களையும் செய்து தருவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்

திரு ஜேம்ஸ் அவர்கள் ரப்பர் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு அதே பதிலைச் சொல்கிறேன்.

திரு. ராமசாமி வால்பாறையிலே டெம்பரரி தோட்டத் தொழிலாளர்களை எல்லாம் நிரந்தரமான தொழிலாளர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தொழிலாளர் நல வாரியக் கூட்டத்தில் நான் தொழிலதிபர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அதை செய்யவில்லை, அடுத்தக் கூட்டத்தில் வற்புறுத்திக் கூறினேன். இப்போது இது போன்று (ஒரு புத்தகம் காட்டினார்) ஒரு புத்தகத்தைத் தந்து, அதிலே தினசரி அவர்கள் வேலையைக் குறிப்பிட்டு 242 நாட்கள் வேலை செய்த உடனே நிரந்தரமாக்க வேண்டுமென்ற திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதே மாதிரி திட்டங்களை அரசாங்க ஒர்க்ஸ் பி. டபிள்யூ. டி. ஆகிய இடங்களில் வேலை செய்பவர்களுக்கும் பல நாட்களாக அல்லல் பட்டுக்கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கும் இப்படிப்பட்ட கார்டுகள் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்த அரசு ஊருக்கு உபதேசம் செய்து விட்டு, வேறு விதமாக நடப்பவர்கள் அல்ல. சந்தர்ப்பம் வரும்போது நடைமுறைக்கு கொண்டு வர அரசு ஆலோசனை செய்யும். (மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உரிய நேரத்தில்)

திரு. சுரேந்திரன் அவர்கள் ரசாயன தொழிற்சாலைகள் பற்றிச் சொன்னார்கள். அதிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்புத் தர வேண்டும் என்று சொன்னார்கள். அதுபற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நண்பர் துரைசாமி அவர்கள் தொழில் அமைதி கெடுவதற்கு யார் பொறுப்பு என்பதை காங்கிரஸ் தரப்பினர் உணர்ந்து பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அது ஒரு ஊர் அறிந்த விஷயமானதினால் அதைப் பற்றி நான் மீண்டும் குறிப்பிட ஆசைப்படவில்லை.

அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஹோட்டல் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் மொய்தீன் அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும், திரு. வேழவேந்தன் அவர்களும், எடுத்துக் கூறினார்கள். இப்பொழுது அவர்களுக்கு உணவுப்படி நகரத்தில் ரூ. 2·75 மற்ற இடங்களில் ரூ. 2·50 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. சால்வைத் துண்டிப்பது, ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது ஆகியவற்றைப் பற்றியெல்லாம் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது.

மற்றும் உறுப்பினர்களெல்லாம் இங்கே தெரிவித்த பல்வேறு கருத்துக்களை நாங்கள் நினைவில் கொண்டு, அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக தொழிலாளர் மானியத்தில் நீங்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தும் வரவேற்கக் கூடியவையாக உள்ள கருத்துக்களே தவிர, அரசாங்கத்தைக் கண்டிக்கத் தக்க கருத்துக்களாக இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கைத்தறித் தொழிலாளர்கள் பற்றிக் கூறினார்கள். கைத்தறித் தொழில் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் இடம் பெறுகிற வகையில் அரசின் சார்பில் அறிக்கை வெளியிட்டு அபிப்பிராயம் கூற விரும்புகிறவர்களுக்கு மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலம் முடிந்த பிறகு ஊதிய நிர்ணய குழு அமைக்கப்படும். கைத்தறி, பீடி, தோல் பதனிடுவோர் போன்ற பாதுகாப்பு இல்லாத தொழிலாளர்களுக்கு வாழ்க்கையில் என்னென்ன வசதிகளைச் செய்யலாம் என்பதைப் பரிசீலிக்க ஒரு தனிக் குழு அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுடைய நல்ல சீரிய ஆலோசனைகளை நல்ல முறையில் அரசு பரிசீலிக்கும், இந்த அரசு தொழிலாளர்கள் பக்கம் நிற்கும் என்பதைக் கூறி, அருள் கூர்ந்து வெட்டுப் பிரேரணைகளை திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஸ்டாண்டர்ட் மோட்டார்விஸில் 15—2—71–லிருந்து நான்கு மாதங்களுக்குள் எல்லா தொழிலாளர்களும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1,500 தொழிலாளர்களில் 1,425 பேர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். பாக்கி 75 பேர்களில் 30 பேர்கள் சீனியர்களாக இருக்கிறார்கள். சுப்பிரமணியம், கந்தசாமி, வைத்தியலிங்கம் போன்றவர்களையெல்லாம் டிசம்பர் இறுதியில் தான் 26—12—72–ல் தான் எடுப்போம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்களே தவிர, உத்தரவு போட்டுவிட்டு ஓவர்டைம் சம்பளம் எல்லா தொழிலாளர்களும் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர்கள் தேவை என்ற முறையில் அவர்களை உடனே வேலைக்கு எடுத்துக்கொள்ள இந்த அரசு முதலாளிகளை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அவர்களை நான் நேரில் வரவழைத்து விவாதித்தேன். அவர்களிடத்திலே வற்புறுத்தியிருக்கிறேன். தொழிற்சங்கத் தலைவர்களை பழிவாங்குவதற்கு எந்த அளவுக்கும் இந்த அரசு இடம் கொடுக்காது என்று சொல்லி, டிசம்பர் முடிவிற்குள் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இரண்டு, மூன்று மாதங்களில் எடுத்துக்கொள்கிறேன் என்று உறுதி தந்திருக்கிறார்கள். அப்படி எடுக்கவில்லையென்றால் அரசு மீண்டும் அதற்கு ஆவன செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சங்கரி சிமெண்டு தொழிற்சாலைத் தொழிலாளர்களைப் பற்றி சொன்னேனே ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சில முதலாளிகள் பிடிவாதமாக இருக்கிறார்கள். தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள உறுதி கொடுத்தும் சங்கரி சிமெண்டு தொழிற்சாலை, சண்முகர் மில், ஆரூரான் ஆலை, ஐயர்பாடி தோட்டம் போல சில இடங்களில் செட்டில்மெண்டு ஆன பிறகும் கூட பிடிவாதமாக வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு மறுக்கக் கூடிய முதலாளிகளின் பட்டியலைத் தருகிறோம். அவர்களைக் கொஞ்சம் வற்புறுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்தப் பிரச்சினையில் நான் ஒன்று கூறுவதற்காக தவறாக யாரும் கருதக்கூடாது. முதலாளிகளிடத்தில், மானேஜ்மெண்டிடத்தில் சம்பள உயர்வுக்காக, மற்ற வேறு கோரிக்கைகளுக்காக வற்புறுத்தும்பொழுது எனக்கு உள்ளபடியே உற்சாகமாகவும், அது சுயமரியாதையாகவும் இருக்கிறது. பலாத்காரம் செய்தவர்களுக்கு மன்னிப்பு கொடுங்கள் என்று கேட்கும்பொழுது உள்ளபடியே வேதனையோடு அவர்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆதலால் பலாத்காரம் செய்தவர்களை நாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வோம் என்ற முறையை வளர்த்துவிட்டால் தொழிற்சங்கத் துறையில் அமைதி நிலவுவது கொஞ்சம் சிக்கலாகத் தான் இருக்கும். அதாவது 19 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வது பற்றி அரசின் கருத்துக்கேற்ப நடந்துகொள்வதாக தொழில் நிர்வாகிகள் உறுதி அளித்திருக்கிறார்கள். அதில் சற்று சிக்கல் இருப்பதால், ஏற்கனவே உள்ள சங்கத்துடனும் கலந்து பேசி விரைவிலே அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வழிவகைகள் ஏற்படுத்த முயற்சிக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பல இடங்களில் செட்டில்மெண்டு ஆகியும் கூட கேஸ்கள் வாபஸ் வாங்கப்படாத நிலையில் இருக்கிறது. ஆவடித் தொழிற்சாலை சம்பந்தமாக கேஸ்கள் வாபஸ் வாஙகவில்லை. பனியன் தொழிற்சாலை சம்பந்தமாக கேஸ்களை வாபஸ் வாங்கி விட்டார்கள். செட்டில்மெண்டு ஆன பிறகும் கேஸ்கள் வாபஸ் வாங்கப்படாமல் இருந்தால், அது எப்படி ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இதுவரையில் அரசு சார்பிலே தொழிலாளர்களின் மீது தொடுக்கப்பட்ட எந்த வழக்கிலும் கோர்ட்டு தண்டனை கொடுத்தது இல்லை. கேஸ்களை வாபஸ் பெறுவதுதான் வழக்கமாக இருக்கிறது. அந்த வழக்கத்தைத் தொடர்ந்து இந்தக் கேஸ் களும் வாபஸ் பெறப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்கள் பட்ஜெட் அறிக்கையிலே நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலிக்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். அதோடு எனக்குப் பேசுவதற்கு டைம் இல்லாமல் போய்விட்டது. காண்டிராக்ட் மூலம் தொழிலாளர்கள் சப்ளை செய்யும் முறையை, லேபர் சப்ளை செய்யும் முறையை உடனே ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் கவனம் எடுத்துச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைப்பற்றி கூட ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். கனம் உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசிலனை செய்யப்படும், நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் விவாதம் முடிவுபெற்றது. வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த திரு ஜேம்ஸ், டாக்டர் ஹாண்டே, திரு என். கே. பழனிசாமி ஆகியோரில் எவரும் இருக்கையில் இல்லை. ஆகவே வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டனவாக கருதப்படுகின்றன.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

> "நிதிக் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,00,28,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

ரவு -28

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவடைந்தன. நாளைக்காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.



## பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

79. Notification issued with G.O. Ms. No. 40, Agriculture, dated the 5th January 1972, in regard to establishment of regulated markets at Ramanathapuram, Paramakudi, Sivaganga and Devakottai in Ramanathapuram district to provide facilities for the purchase and sale of cashew nut. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

80. Notification issued with G.O. Ms. No. 3208, Agriculture, dated the 10th December 1971, in regard to regulation of trade to provide facilities for the purchase and sale of greengram, blackgram and sugarcane jaggery at the markets in South Arcot District. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

81. Notification issued with G.O. Ms. No. 512, Co-operative, dated the 10th November 1971 by regard to certain amendments to Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

### B. Reports, Notifications and Other Papers.

@ 112. Review of the Progress made in Co-operative Development Schemes—1971-72. (English and Tamil).

@ 113. Co-operative Banks and Co-operative Credit Societies—Extracts from the Recommendations of the Banikng Commission. (English).

@ 114. Policy note on Demand No. 5—Registration Department (English and Tamil).

@ 115. A Review on the Administration and enforcement of Excise and Prohibition Acts in Tamil Nadu State during 1971-72. (English and Tamil).

£ 116. Co-operative Banks and Co-operative Credit Societies--Extracts from the Recommendations of the Banking Commission. (Tamil).

---

@ Despatched to Members on 22nd March 1972.
£ Laid on the Table of the House on 23rd arch 1972.

[1972 மார்ச் 24

£ 117. Note by Hon. Thiru Si. Pa. ADITANAR : Minister for o-operation on "Farmers Co-operative Paper Mills". (English).

@ 118. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 22nd January to 1st February 1972. (Fifth Assembly—Fourth Session—First Meeting).

## இணைப்பு 1

[24-ம் பக்கத்தில் 684-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

The Government of India and the Government of Tamil Nadu have given several concessions to the physically handicapped, with a view to accelarating the pace of their rehabilitation. Details of these concessions are given in Annexure 'A'.

2. In order to encourage the physically handicapped and to focus public attention to the clause of their rehabilitation "World Day of the Disabled" is celebrated every year on the 3rd Sunday of March. This is primarily organised by the Government of Tamil Nadu through the Department of Employment and Training but a number of social welfare organisations and institutions for the physically handicapped join in this programme. These programmes have been arranged in a grand manner every year in Madras City. During this year, celebrations were also arranged in Coimbatore, Madurai, Tiruchirappalli, Salem and Tirunelveli in addition to Madras.

3. In order to serve as an incentive to the physically handicapped employees and also employers of the physically handicapped, Government of Tamil Nadu have instituted State Level Awards with effect from this year. Five awards are given to the physically handicapped employees in the categories of



1972 மார்ச் 24]

blind, deaf, orthopaedically handicapped, mentally retarded and cured leprosy. Five awards are given to the employers who employ the highest number of handicapped persons, one award in respect of each category. The award for each handicapped worker consists of a cash prize of Rs. 50 and a citation, and each award for employers consists of a certificate of merit. Similar awards known as "National Awards" are given by the Government of India also.

4. Recently, the Government of Tamil Nadu have ordered the setting up of a State Board for the physically handicapped. This Board will deal with problem of the handicapped in such a way that the activities of the various individuals, agencies, institutions and Government Departments in this field are effectively co-ordinated and channelised into productive and useful avenues. This will avoid wastages in money, time and energy caused by unco-ordinated attempts and also give a sense of direction and purpose to the whole task of rehabilitation of the handicapped. Steps are being taken for the early formation of this Board.

5. Government have also sanctioned the setting up of a Book Binding Unit in collaboration with the Director of Stationery and Printing for the physically handicapped. This unit when set up will give training to the physically handicapped in Binding work, with a view to their eventual rehabilitation. Preliminaries are being attended to for the opening of this unit.

### ANNEXURE A.

*Details of concessions given to the physically handicapped—Central Government.*—Physically handicapped persons have been accorded priority III for submission by Employment Exchanges against Central Government vacancies. For Class III or IV posts of the artisan class or those involving manual or skilled labour or routine type of work, deaf-muteness or deafness by itself is not to be regarded as a disqualification. Physically handicapped persons for appointment are not to be subjected to the usual medical examination, but their appointment should be made based

on the report of the Medical Board attached to Special Employment Office for Physically Handicapped. Phyiscally handicapped persons who are certified as being unable to type by the Medical Board attached to Special Employment Officer (or by a Civil Surgeon where there is no such Board) have been exempted from the typing qualification for clerical posts.

*Government of Tamil Nadu.*—Upper age-limit for recruitment to posts has been raised by 10 years. Temporary appointment of physically handicapped persons who do not possess the age qualification is permissible. Though at present, there is no reservation of posts for the physically handicapped, Government have issued instructions to liberally view their cases for appointment to the posts Typists, Telephone Operators, Despatch Clerks and Lift Operators. Government have ordered that the appointing authorties should view the cases of physically handicapped with the utmost sympathy in making appointments. Government have accorded priority III to the physically handicapped applicants in the matter of recruitment to State Government vacancies through the Employment Exchanges. Government of Tamil Nadu have also ordered that physically handicapped persons recommended for employment by the Special Medical Board of Experts attached to the Special Employment Office for Physically Handicapped should not be subject to the usual medical examination on the first entry into service but the question of employment should be based on the report of the Board of Experts. In Tamil Nadu, physically handicapped persons are considered for admission in certain technical trades in the Industrial Training Institute if they are otherwise qualified, subject to medical examination. The orthopaedically handicapped are admitted in the following eleven technical trades depending upon the nature of the handicap given below :—



| *Trade* | | *Nature of handicap.* |
|---|---|---|
| 1. Carpentry | ... | Handicapped persons with leg deformities. |
| 2. Draughtsman (Mechanical or Civil) | ... | Handicapped persons with leg deformities. |
| 3. Electricians | ... | Below knee amputees but with normal hands. |
| 4. General Fitter | ... | Below knee amputees and one arm amputees with artificial wrist. |
| 5. Grinder | ... | Leg deformities if they can stand. |
| 6. Machinist | | One leg amputees. |
| 7. Turner<br>8. Moulder<br>9. Pattern Maker | .. | Leg deformities. |
| 10. Welder | .. | Leg amputees or with leg deformities. |
| 11. Painter | ... | Hand and leg amputees. |

In addition to the above concessions, conveyance charges for taking the physically handicapped registrants to the employers or for medical examination and back are reimbursed and for those on trial employment, a sum not exceeding Rs. 2 per day is given for a limited period.

Apart from the above, the Inter University Board of India has recommended to the various University the following concessions :—

(*a*) Physically handicapped students who can produce reasonable evidence of having difficulty in attending normal institutions should be permitted to appear as private candidates for non-technical examination not involving practical training.

(*b*) Physically handicapped examinees should be provided free of cost the services of competent amenaunce (one who writes to dictation).

(*c*) If the physically handicapped persons desire they may be permitted to typewrite their answers. They should be permitted to take up Arts subjects in place of Mathematics or Science.

உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தினைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன், அவர்களுக்குப் பல சலுகைகளை இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் அளித்துள்ளன. இச் சலுகைகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

2. உடல் ஊனமுற்றோரை ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு ம
வாழ்வு அளிப்பதற்கான அவசியம் பற்றி பொதுமக்களின் நாட்டத்தை
ஈர்க்கவும் வேண்டி ஒவ்வோர் ஆண்டும் மார்ச் திங்கள் மூன்று
ஞாயிறன்று "உலக ஊனமுற்றோர் நாள்" கொண்டாடப்படுகிறது
இது முதற்கண், தமிழ்நாடு அரசினால் வேலை வாய்ப்பு பயிற்சித்துறை
மூலமாகத் தொடங்கப்பட்டது. ஆனால் உடல் ஊனமுற்றோர் ந
வாழ்வுக்கென சமூக நல அமைப்புகள், நிறுவனங்கள் ப
இத்திட்டத்தில் பங்கு கொள்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொ
ஆண்டும் மகத்தான முறையில் கொண்டாடப்படுகின்றன. இவ்வாண்டி
சென்னை மாநகர் தவிர கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி
சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் இவ்விழாக்கள் நடத்
ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

3. உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கும் உடல் ஊனமுற்றோரை
வேலைக்கு அமர்த்திக் கொள்பவர்களுக்கும ஊக்கமளிக்கும் நோக்க
துடன் தமிழ்நாடு அரசு இவ்வாண்டு முதல், மாநில அளவில் பரிசுகளை
வழங்கத் தொடங்கியுள்ளது. குருடர், செவிடர், முடவர், மனநோயுற்றவ
தொழுநோய் நீக்கப்பெற்றவர் ஆகிய வகையினரைச் சேர்ந்த உட
ஊனமுற்ற ஊழியர்களுக்கு ஐந்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்
ஐந்து வகை உடல் ஊனமுற்றோரை அதிக அளவில் வேலைக்கமர்த்தி
யுள்ளவர்களுக்கு வகைக்கு ஒன்றாக ஐந்து பரிசுகள் வழங்கப்படுகின்றன
உடல் ஊனமுற்றோர் ஒருவருக்கு வழங்கப்படும் பரிசில் ரூ. 5
ரொக்கப் பரிசும், பாராட்டுப் பத்திரமும் அடங்கும். வேலை அளிப்பவ
களுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு பரிசும் தகுதிச் சான்றிதழாகும்
இதுபோலவே, "தேசிய விருதுகள்" எனப்படும் பரிசுகளை இந்தி
அரசும் வழங்குகின்றது.

4. உடல் ஊனமுற்றோர்க்கு மாநில வாரியம் ஒன்றை அமைக்
தமிழ்நாடு அரசு அண்மையில ஆணையிட்டுள்ளது. இப்பணியில் ஈடுபட்
வரும் பல்வேறு தனிப்பட்ட நபர்கள், சங்கங்கள், நிறுவனங்கள்
அரசுத்துறைகள ஆகியவற்றின் நடவடிக்கைகள் திறம்பட ஒருங்கிணைக்க
பட்டு ஆதாயம் தரத்தக்க பயனுறு வழிகளில் முறைப்படுத்தும் வகையி
இந்த வாரியம் உடல் ஊனமுற்றோர் பிரச்சினைகளைக் கவனிக்கும்
ஒருவருக்கொருவர் தொடர்பிலலாமல் பணியாற்றுவதினால் ஏற்படக்கூடிய
பண விரயம், கால விரயம், உழைப்பு விரயம் ஆகியவை இதனா
தவிர்க்கப்படும். மேலும், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணியி
நோக்கமும் வழியும் நெறிப்படுத்தப்படும். இவ் வாரியத்தை விரைவி
அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

5. உடல் ஊனமுற்றோர்க்காக எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநரின் உடனுழைப்புடன் புத்தகம் கட்டுதல் பிரிவு ஒன்றை
அமைக்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. உடல் ஊனமுற்றோ
நாளடைவில் மறுவாழ்வு பெறும் நோக்கத்துடன், இப்பிரிவு அமைக்க
பட்ட பின்னர் இவர்களுக்குக் கட்டுதல் பணியில் இப்பிரிவு பயிற்
யளிக்கும். இப்பிரிவைத் தொடங்குவதற்கான தொடக்கப் பணிகள்
நடைபெற்று வருகின்றன.



## பிற்சேர்க்கை

### உடல் ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விவரங்கள்

**மத்திய அரசு.**—மத்திய அரசுப் பணிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு வேலை வாய்ப்பகங்கள், அனுப்பும் பட்டியலில் உடல் ஊனமுற்றோர்க்கு மூன்றாவது முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் வகுப்பு அல்லது நான்காம வகுப்பு கைவினைஞர் பதவிகளுக்கு அல்லது நுட்பத் திறனுள்ள பதவிகளுககு அல்லது வாலாயமான வகைப் பதவிகளுக்கு செவிட்டு ஊமை அல்லது செவிடு மட்டும் தகுதியின்மையாகக் கருதப்படவில்லை. உடல் ஊனமுற்றோர், நியமிக்கப்படுவதற்காக, வாலாயமான மருத்துவச் சோதனைக்குட்படுத்தப்படக் கூடாது, ஆனால் உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ வாரியத்தின் அறிக்கையின் அடிப்படையில் அவர்கள் நியமிக்கப்படவேண்டும். தட்டச்சு செய்ய இயலாதவர்களென சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ வாரியத்தினால் (அல்லது அத்தகைய வாரியம் எதுவும் இல்லையெனில் சிவில் அறுவகை மருத்துவர் ஒருவரால்) சான்றளிக்கப்படுகின்ற உடல் ஊனமுற்றோர் எழுத்தர் பதவிகளுக்குரிய தட்டச்சுத் தகுதியினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு அரசு.**—பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கான உயர்ந்த அளவு வயது வரம்பு 10 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது. வயது தகுதியைக் கொண்டிராத உடல் ஊனமுற்றோர் தற்காலிகமாக நியமிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உடல் ஊனமுற்றோர்க்காகப் பதவிகள் எதுவும் தற்போது ஒதுக்கப்படாவிட்டாலும்கூட, தட்டச்சர், தொலைபேசி இயக்குபவர், கடிதங்கள் அனுப்புகை எழுத்தர், மின்விசை இயக்குபவர் ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக இவர்களது மனுக்களை தாராளமாக கவனிக்கவேண்டுமென அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது. உடல் ஊனமுற்றோரை நியமிப்பதில் அவர்களது மனுக்களை நியமன அதிகாரிகள் மிகுந்த பரிவுடன் கவனிக்கவேண்டுமென்று அரசு கட்டளையிட்டுள்ளது அரசுப். பணிகளில் ஏற்படும் காலி இடங்களுக்கு வேலை வாய்ப்பகங்கள்மூலமாக நியமிக்கப்படுவது குறித்து உடல் ஊனமுற்றோர் விண்ணப்பங்களுக்கு மூன்றாவது முதன்மை அளிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. வேலையில் அமர்த்தப்படுவதற்காக உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ வல்லுநர் சிறப்பு வாரியத்தினால் பரிவுரை செய்யப்பட்ட உடல் ஊனமுற்றோர் பணியில் முதற்கண் சேரும்போது அவர்களுக்கு வாலாயமான மருத்துவச் சோதனை வேண்டாமென்றும் ஆனால் வல்லுநர் வாரியத்தில் அறிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் வேலைக்கமர்த்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாட்டில், உடல் ஊனமுற்றோர், தகுதி பெற்றிருந்தாலன்றி மற்றபடி மருத்துவச் சோதனைக்குட்பட்டு அவர்கள், தொழில் பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் நுட்பப் பிரிவுகள் சிலவற்றில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குக்

கருதப்படுகின்றனர். ஊனத்தின் தன்மையைப் பொறுத்துக் கீழ்க் காணும் பதினொரு தொழில் நுட்பப் பிரிவுகளில் முடவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் :—

| பிரிவு. | | ஊனத்தின் தன்மை. |
|---|---|---|
| 1. தச்சர் | .. | கால் ஊனமுற்றவர். |
| 2. வரைவாளர் (இயந்திரவியல் அல்லது சிவில்). | | கால் இல்லாதவர் அல்லது ஒரு கை இல்லாதவர். |
| 3. மின் வினைஞர் | .. | முழங்காலுக்குக் கீழே ஊனமுற்றவர், ஆனால் இரண்டு கைகளும் நல்ல நிலைமையில் உள்ளவர்கள். |
| 4. பொருத்துபவர் (பொது) | .. | முழங்காலுக்குக் கீழே ஊனமுற்றவர்களும் ஒரு கை இல்லாதவர்களும், ஆனால் செயற்கை மணிக்கட்டு உள்ளவர்கள். |
| 5. அரவை இயந்திரம் இயக்குபவர். | | கால் ஊனமுற்றிருந்தாலும் நிற்கக் கூடியவராயிருத்தல். |
| 6. இயந்திரம் இயக்குபவர் | .. | ஒரு கால் இல்லாதவர். |
| 7. கடைசல் இயந்திரம் இயக்குபவர். | | |
| 8. அச்சு வார்ப்பவர் | | கால் ஊனமுற்றவர். |
| 9. மாதிரி அமைப்பவர் | | |
| 10. பற்றவைப்பவர் | .. | கால் இல்லாதவர் அல்லது கால் ஊனமுற்றவர். |
| 11. வண்ணம் பூசுபவர் | .. | ஒரு கை, ஒரு கால் இல்லாதவர். |

மேற்படி சலுகைகளுடன் கூட, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள உடல் ஊனமுற்றோரை வேலையளிப்பவரிடம் அல்லது மருத்துவச் சோதனைக்கு அழைத்துச் சென்று திரும்ப அழைத்து வருவதற்கான வண்டிச் செலவுகள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன— சோதனை முறையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால அளவிற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2-க்கு மேற்படாத தொகை கொடுக்கப்படுகிறது.



மேற்கண்டவை தவிர, உடல் ஊனமுற்றோர்க்குக் கீழ்க்காணும் சலுகை அளிக்குமாறு பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு இந்தியப் பல்கலைக் கழக வாரியம் பரிந்துரைத்துள்ளது:—

(அ) வாலாயமான நிறுவனங்களுக்கு வருவதில் தங்களுக்குள்ள இடர்ப்பாட்டினை நியாயமான சாட்சியத்தின் மூலம் மெய்ப்பிக்கக்கூடிய உடல் ஊனமுற்றோர், செய்முறைப் பயிற்சி பெற்ற தொழில் நுட்பமில்லாத தேர்வினை தனிப்பட்ட மாணவர்களாக எழுதுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் ;

(ஆ) தேர்வு எழுதவரும் உடல் ஊனமுற்றோர்க்கு அவர்கள் கூறுவதை எழுத உதவியாயிருக்கும் பொருட்டு தகுதியுடைய நபர்கள் பணியினை இலவசமாக அளித்தல் ;

(இ) உடல் ஊனமுற்றோர் விரும்பினால் அவர்களது விடைத் தாள்களைத் தட்டச்சு செய்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப்படலாம். கணிதம் அல்லது அறிவியல் பாடத்திற்குப் பதிலாக கலைப்பாடங்களை எடுத்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும்.

## இணைப்பு 2

[207-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க.]

**மானியக் கோரிக்கை எண். 3**

# "பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்"

பொது விற்பனை வரிகளும் அது போன்ற பிற வணிக வரிகளும் தமிழ்நாட்டுக்குக் கணிசமான வருவாயை அளிக்கின்றன. 1966–67இல் ரூ. 56·10 கோடி கிடைத்ததற்கு மாறாக, 1970–71இல் வணிக வரிகள் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 93·27 கோடி ஆகும் இம்மாநிலத்தில் வாணிப வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் இவற்றுடன் இணைந்தும் வணிக வரித் துறை வரிச் சட்டங்களைச் சிறப்பாகச் செயற்படுத்தியதை ஒட்டியும் இவ்வரிகளின்மூலம் கிட்டும் வருவாய் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. வணிக வரித்துறை கீழ்க்காணும் சட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது :—

(i) தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம்.

(ii) 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(iii) தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(iv) தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(v) தமிழ் நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

(vi) தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(vii) தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(viii) தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம்.

2. கடந்த ஐந்து ஆண்டுகளில், வணிக வரித்துறை வசூல் செய்த வருவாய் துறையின் செலவு குறித்த விவரங்கள் பின் வருமாறு:—

| ஆண்டு. | | வருவாய். | செலவு. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1966–67 | .. | 5,610·70 | 118·38 |
| 1967–68 | .. | 6,495·21 | 133·32 |
| 1968–69 | .. | 7,146·76 | 155·76 |
| 1969–70 | .. | 8,258·38 | 170·78 |
| 1970–71 | .. | 9,327·43 | 188·95 |

1971–72இல், 1972ஆம் ஆண்டு, பிப்ரவரி 29ஆம் நாள் வரை ரூ. 9,601 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் இதற்கிணையான கால அளவில் ரூ. 8,064 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

3. அரசு மேற்கொண்ட பல்வேறு முடிவுகளின் விளைவாலும், நீதி மன்றங்கள் அளித்த தீர்ப்புகளின் விளைவாலும், விற்பனை வரி தொடர்பான சட்டம் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் மேம்பாடடைந்திருக்கிறது. அரசின் வருவாய் முற்றிலும் காக்கப்படவேண்டுமென்பதுடன், வர்த்தகத்துக்கும் எவ்வித தொல்லையும் விளைவிக்கப்படக்கூடாது என்பதே அரசின் ஆவல். சிறிய வணிகர்களுக்கு வரிச் சுமையிலிருந்து விலக்கு அளிக்கும்பொருட்டு, அரசு, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 (1) பிரிவின்கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதற்கு விற்றுமுதல் வரையறை அளவை ரூ. 15,000-த்தில் இருந்து ரூ. 25,000 ஆக உயர்த்தியுள்ளது. அதற்கு நிகராக, பதிவு செய்துகொள்வதில் இருந்து விலக்களிப்பதற்கான விற்றுமுதல் வரையறை அளவு ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுகளை ஒட்டி நிறைவேற்றப்பட்ட 1971ஆம் ஆண்டு 25ஆம் சட்டம் 1971ஜூன் திங்கள் 28-ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. விலக்களிப்பு வரம்பை இவ்வாறு உயர்த்தியது சிறிய வணிகர்களுக்குப் பெரும் பயனளித்துள்ளது.

4. விதிவிலக்கு வரம்பிற்குள் வராத, ஓரளவு சிறிய வணிகர்கள், இணக்க வீதங்களில் (Compounded rates) வரி செலுத்த அனுமதிக்கப்படுவதன் மூலம் சலுகையளிக்கப்படுகின்றனர். இதன்மூலம், அவர்கள் விரிவான கணக்குகளைப் பேணி வரவேண்டிய தொல்லை, செலவினின்றும் விடுபடுகின்றனர். 1971-ம் ஆண்டு 25-வது சட்டம் 1971-வது ஆண்டு





ஜூன் திங்கள் 28ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. அச்சட்டத்தின் மூலம் அரசு, இணக்க முறையில் வரி முடிவு செய்தலுக்கான விற்றுமுதல் வரையறையளவை ரூ. 75,000 என்பதிலிருந்து ரூ. 1,00,000 ஆக திருத்தியமைத்துள்ளது; அதுபோல மொத்த வாணிகத் தொகையில் வெவ்வேறு நிலைகளுக்கான வீதங்களையும் திருத்தியமைத்துள்ளது.

5. 1971ஆம் ஆண்டு 13-வது சட்டத்தின் மூலம், தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் பலமுனை வரிவீதம், 3 சதவீதத்திலிருந்து 3½ சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சட்டம் 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ஆம் நாளன்று செயலுக்கு வந்தது.

6. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் மூலம், தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழும், தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின் கீழும் செலுத்தவேண்டிய வரிக்கு 5 சதவீத மேல் வரி விதிக்கப்பட்டது. இச்சட்டம், சென்னை மாநகரில் 1971ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் நாளன்றும், மதுரை மாநகரிலும் சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும் 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாளன்றும், சென்னை மாநகரைச் சுற்றி 32 கி.மீ. தொலைவுக்குள் அமைந்துள்ள புற நகரப் பகுதிகளில் 1971-ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் நாளன்றும் செயலுக்கு வந்தது. இச் சட்டத்தைப் பிற நகராட்சிகளுக்கு, நகரியத்துக்கு அல்லது மதுரை மாநகரின் புற நகரப் பகுதிக்கு அல்லது வேறொரு நகராட்சி அல்லது நகரியத்தின் புற நகரப் பகுதிக்கு நீட்டிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது இந்த மேல் வரியை விதித்து வசூலிப்பதிலிருந்து கிடைக்கும் தொகை, மாநகரங்களையும், நகரங்களையும் மேம்படுத்துவதற்காக அரசால் செலவிடப்படும். சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கு வசதி போன்ற இன்றியமையா அடிப்படை வசதிகளைச் செய்து வருவதற்காகவும், குடிசைப் பகுதி மாற்றும் திட்டம் போன்றவற்றுக்காகவும் இத்தொகையை அரசு செலவிடும்.

7. 1971ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து, தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், சாராயம் ஒரு முனை விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டது; இம்மாநிலத்தில் சாராயத்துக்கு முதலாவது விற்பனை முனையில் 6 சத வீதம் வரி விதிக்கப்படுகிறது. 1971ஆம் ஆண்டு 35வது சட்டம் இதற்கு செயல் வடிவம் அளித்தது.

8. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து, சட்டத்தை நிர்வகிக்கையிலும் நீதி மன்றங்களின் சில தீர்ப்புகளின் விளைவாகவும், இச்சட்டத்தின் விதிகளைச் செயலுக்குக் கொண்டுவருவதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. இச்சிக்கலுக்குத் தீர்வு காண, இச்சட்டத்தின் சில விதிகளைத் திருத்துவதற்காக, அடங்கல் சட்ட முன் வடிவு ஒன்று, 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவையில் முகவுரைக்கப்பட்டது. இந்த சட்ட முன் வடிவு, சட்டமன்றத்தின் ஒரு பொறுக்குக் குழு முன்னர் வைக்கப்பட்டிருக்கிறது.

9. பதினைந்து சத வீதம் விற்பனை வரி விதிக்கப்பட்ட உலர்ந்த மின் கலங்கள் (Dry cells) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் 5-வது இனத்தின்கீழ் வராது என்று விற்பனை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. இது காரணமாக, வருவாய் இழப்பைத் தவிர்ப்பதற்காக, உலர்ந்த மின்கலங்களை முதல் விவர அட்டவணையின்கீழ் தனிப்பட்டதோர் இனமாக்கி, 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24-ஆம் நாள் முதற்கொண்டு, முதல் விற்பனை முனையில் அதற்கு 15 சத வீதம் வரி விதித்து அரசு அறிவித்துள்ளது.

இதுவரையில், இறக்குமதி செய்யப்பட்ட அயல் நாட்டு மது வகைகள் மீது தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 12 சத வீதம் ஒரு முனை விற்பனை வரியும் தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு ஆயத் தீர்வைச் சட்டத்தின் கீழ் 12 சத வீதம் ஒருமுனை வரியும் விதிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, அயல் நாட்டு மதுவகைகள் மீது தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ஆம் நாள் முதற்கொண்டு 24 சத வீதம் ஒருங்கிணைந்த வரி விதிப்பை அரசு அறிவிக்கை செய்துள்ளது.

மேற்கண்ட அறிவிக்கைக்குப் பதிலாக, சட்டமன்றப் பேரவையின் நடப்புத் தொடரிலேயே, தேவையான சட்டமொன்று கொண்டுவரப்படும்.

10. 1971-ல் சென்னை உயர் நீதி மன்றம் முக்கியமான வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கியது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்று முதல் உள்ள வணிகர்கள் மீது தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய வரி மீதும், தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய வரி மீதும் தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் 5 சத வீதக் கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி விதிப்பு செல்திறனுள்ளதென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (சட்டம் 2/1970) 7–எ பிரிவின்கீழ் சிலவகை வணிக நடவடிக்கைகள் மீது கொள்முதல் மீதான வரி விதிப்புகளின் செல்திறனை ஆட்சேபித்து உயர்நீதி மன்றத்தில் சில வணிகர்கள் பதிவு செய்த ரிட் மனுக்களை அனுமதிக்கையில், உயர் நீதி மன்றம், இப் பிரிவு செல்திறனற்றுப்போகும் அளவுக்கு அதன் நோக்கத்தை வரையறுத்துப் பொருள் விளக்கம் கண்டது. மாநிலத் தலைமை வழக்குரைஞரைக் கலந்தாலோசித்த பின்னர், இவ் வழக்கில் இந்திய உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்திய உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கான அனுமதி கோரி உயர்நீதி மன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

11. முக்கியமான நிலைகளில் அமைக்கப்படும் சோதனைச் சாவடிகள், வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்க குறிப்பிடத்தக்க அளவில் உதவியாக இருந்திருப்பதால், 1971–72-ல் திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் காவிரி பாலத்திற்கு அருகில் வேலாயுதம்பாளையத்திலும், கோயம்புத்தூர்



கோட்டத்தில் வேலாண்டவலம், காளிங்கராயபாளையம், பொம்மாண்டபள்ளி, தளி, கிருஷ்ணகிரி-லண்டன்பேட்டை ஆகியவிடங்களிலும் கூடுதலாகச் சில சோதனைச் சாவடிகளை அரசு அமைத்துள்ளது. சரக்குகள் கடத்தப்படுதலையும், வரி ஏய்ப்பையும் தடுக்க, விரைவாக இயங்கிச் செயல்படுகிற சோதனைப் படை ஒன்றுக்கும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

12. பல்வேறு வணிக வரி அலுவலகங்கட்குச் செல்ல வேண்டிய வணிக சமூகத்தினர்களுக்கு வேண்டிய வசதியளிப்பதில் அரசு எப்போதுமே கவனம் கொண்டுள்ளது. போதிய இடவசதி இல்லாத வாடகைக் கட்டிடங்களில் இது எப்போதுமே இயலாது. உதகமண்டலம், சேலம், ஆகிய விடங்களில் வணிகவரி அலுவலகங்களுக்கான அரசுக் கட்டிடங்கள் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்பட்டன. வணிகவரித்துறை அதிகாரிகளுக்குக் குடியிருப்பு வசதியளிப்பதன்மூலம் அவர்களுக்குக் குறைந்தபட்ச வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்பதிலும் அரசு அக்கறை கொண்டுள்ளது. வணிக வரி அதிகாரிகள் 19 பேருக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. வணிக வரி துணை ஆணையாளர்கள், வணிக வரி இணை அதிகாரிகள், துணை வணிக வரி அதிகாரிகள் ஆகியோருக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

13. தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-வது பிரிவின்கீழ் வரி விலக்கு அளிக்க அல்லது வரி வீதத்தைக் குறைக்க அரசுக்கு அதிகாரங்களுண்டு. கீழ்க்கண்டவை 1971-72-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முக்கியமான வரி விலக்குகளும், வரிக் குறைப்புகளுமாகும்:—

(i) அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக, பேருந்து மேல் பாகங்களை மோட்டார் அடிச் சட்டங்கள் தயாரிப்பவர்களுக்கு விற்கும்பொழுது அத்தகைய பேருந்து மேல் பாகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

(ii) கள் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

(iii) அரசு பால்பண்ணை மேம்பாட்டுத் துறைக்குப் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களினால், விற்கப்படும் கால்நடைத் தீவனத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

(iv) ரப்பர் சேர்ந்த கயிற்றுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து இரண்டாண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டது.

(v) அரசால் அமைக்கப்பட்டுள்ள போர் வீரர்களுக்கெனப் பரிசுப் பொருட்கள் சேகரிக்கும் குழுவுக்கு விற்கப்படுகிற பரிசுப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

(vi) லேலண்ட் காமட்டிற்கான மோட்டார் உதிரி பாகங்களையும் ஹிப்போ வண்டிக்கான அடிச்சட்டங்களையும் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு விற்பனை செய்த வகையில், சென்னை திருவாளர்கள் அசோக் லேலண்டு நிறுவனத்தால் செலுத்தத்தக்க விற்பனை வரி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 3 சத வீதமாகக் குறைக்கப்பட்டது.

(vii) சென்னையிலும், கோயம்புத்தூரிலும் உள்ள எல்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு இழுவைகள் விற்பனை செய்தது குறித்து மேற்படி நிறுவனத்தினர் செலுத்தத்தக்க விற்பனை வரி வீதம் 15 சத வீதத்திலிருந்து 3 சத வீதமாகக் குறைக்கப்பட்டது.

(viii) முதற்கண் வாங்கப்படும் கொப்பரைத் தேங்காய்க்கு விற்பனை வரி வீதம் 5 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகக் குறைக்கப்பட்டது.

**14. தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.**—1967 முதல் 1971-ஆம் ஆண்டு வரை தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| ஆண்டு. | | | | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 4,202 |
| 1968–69 | .. | .. | .. | 4,620 |
| 1969–70 | .. | .. | .. | 5,394 |
| 1970–71 | .. | .. | .. | 6,173 |

1971–72-ஆம் ஆண்டில், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் வரை ரூ. 6,391 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே கால அளவில் ரூ. 5,316 இலட்சமே வசூலிக்கப்பட்டது.

**15. 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.**—1967 முதல் 1971 வரை மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் பின்வருமாறு—

| ஆண்டு. | | | | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 1,027 |
| 1968–69 | .. | .. | .. | 1,062 |
| 1969–70 | .. | .. | .. | 1,256 |
| 1970–71 | .. | .. | .. | 1,400 |

கடந்த ஆண்டில் 1971-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் வரை ரூ. 1,236 இலட்சம் வசூலிக்கப்பட்டிருக்க 1971–72-ல் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் வரை ரூ. 1,406 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தினைத் திருத்துவதற்காக நாடாளுமன்ற மக்கள் சபையில் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவு மக்கள் சபையின் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொறுக்குக் குழு சென்னையில் 1972 பிப்ரவரி 17, 18-ஆம் நாட்களில் கூடி வணிகக் கழகங்கள், வணிகச் சங்கங்களிடமிருந்து மாநில அரசுப் பிரதிநிதிகளிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்றது.



**16. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.**—தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வரியானது, எண்ணெய் நிறுவனங்கள் விற்கும் மோட்டார் எண்ணெயின் முதல் விற்பனையின்மீது விதிக்கப்படும் ஒரு முனை வரியாகும். பெரிய எண்ணெய் வழங்கு நிறுவனங்கள் சென்னை எண்ணெய்ச் செப்பனிடு ஆலை ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் சென்னை மாநகரில் இருப்பதால் இங்கு பெருமளவு வரி வசூலிக்கப்படுகிறது.

வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தமிழ்நாட்டிற்குள் விற்கப்படும் சென்னை எண்ணெய்ச் செப்பனிடு ஆலையின் பெட்ரோலியம் துணைப் பொருட்களைப் பொறுத்தமட்டில், மாநிலங்களுக்கிடையேயான விற்பனையின்மீது விதிக்கப்படுவது போலவே 3 சதவீதம் வரி விதிப்புச் சலுகையை அரசு வழங்கியுள்ளது. ஆனால், இத்தகைய விற்பனைகள்மீது விதிக்கப்படும் வரியினின்றும் முற்றிலும் விலக்களிக்க வேறு சில மாநிலங்கள் ஒப்புக்கொண்டிருப்பதால், இம் மாநிலத்திலும் அவ்வாறே விலக்களிக்குமாறு இந்திய அரசு வலியுறுத்தி வந்துள்ளது. சம்பந்தப்பட்ட எல்லா மாநில அரசுகளும் இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று இந்திய அரசுக்கு இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஏற்கனவே இந்த விலக்கு அளித்திருந்த மாநில அரசுகள் சில இதனை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன என்பதை அறிய மகிழ்ச்சியாயுள்ளது. மேற்படி விற்பனையின்மீது தமிழ்நாட்டில் விதிக்கப்படுவதுபோலவே 3 சதவீத வரி விதித்து கேரள அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1940-ஆம் ஆண்டு முதல், சென்னை துறைமுகத்திற்கு வரும் சப்பல்களுக்கு எரி பொருளாக வழங்கப்படும் டீசல் எண்ணெய் விற்பனை குறித்து தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ், செலுத்தவேண்டிய வரியில் 50 சதவீதத்தைக் குறைப்பதன் மூலம் அரசு சலுகை காட்டி வந்திருக்கிறது. அண்டை மாநிலங்களில் இச்சலுகை அளிக்கப்பட்டிருப்பது பற்றி அம்மாநில அரசுகளிடமிருந்து நிச்சயித்து அறிந்த பின்னர், இவ்வரசு 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7-ஆம் நாள் முதல் இச்சலுகையை ரத்து செய்துள்ளது.

மேற்கூறிய சட்டத்தின்கீழ், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், கிடைத்த வருவாயின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | | | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 514 |
| 1968–69 | .. | .. | .. | 564 |
| 1969–70 | .. | .. | .. | 685 |
| 1970–71 | .. | .. | .. | 716 |

1971-72-ஆம் ஆண்டில், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்க 29-ஆம் நாள் வரையில், ரூ. 797 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ள ஆனால், முந்திய ஆண்டில, இதே கால அளவில் வசூலிக்கப்பட் தொகை ரூ. 620 இலட்சமாகும்.

**17. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.**—தமிழ் நாடு 1939-ஆம ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் மூலம், 1967-ஆ ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் கிடைத் தொகையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 .. .. .. | 332 |
| 1968–69 .. .. .. | 374 |
| 1969–70 .. .. .. | 384 |
| 1970–71 .. .. .. | 428 |

1971-72-ஆம் ஆண்டில், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆ நாள் வரையில், ரூ. 442 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் முந்திய ஆண்டின், இதே கால அளவில வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 382 இலட்சமாகும். கேளிக்கை வரிச் சட்டத்தின் மூலம் வசூலிக்க பட்ட தொகையில், 90 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக் அளிக்கப்படுகிறது.

திரைப்பட மாளிகையின் உரிமையாளர்களிடமிருந்து ஒவ்வொ திரைப்படக் காட்சிக்கும், காட்சி வரியும் வசூலிக்கப்பட்டு, இம் மாநி நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் கேளிக்கை வ (திருத்தம்) சட்டத்தின்கீழ், இச்சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டி கேளிக்கை வரிமீது, 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நா முதற்கொண்டு, கூடுதல் மேல் வரி ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. திரை படக் காட்சிகளைப் பொறுத்த வரையில், இவ்வரியான, திரைப்பட காட்சிக்கு அனுமதிக்கப்படுவதற்குச் செலுத்தப்படும் கட்டணம் ஒரு ரூபாய்க் மேற்படாதபோது 5 காசாகவும், அவ்வாறு செலுத்தப்படும் கட்டண ஒரு ரூபாய்க்கு மேற்படும்போது 10 காசாகவும் இருக்கும். குதிரை பந்தயங்களைப் பொறுத்த வரையில், இவ்வரியானது, குதிரைப் பந்தய திற்கு அனுமதிக்கப்படுவதற்குச் செலுத்தப்படும் கட்டணம் ஐந் ரூபாய்க்கு மேற்படாதபோது 50 காசாகவும், அவ்வாறு செலுத்தப்படு கட்டணம் ஐந்து ரூபாய்க்கு மேற்படும்போது ஒரு ரூபாயாகவும் இருக்கும் இந்தக் கூடுதல் மேல் வரியில், உள்ளாட்சி மன்றங்களுக்குப் பங் ஏதுமில்லை.

தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் பல்வே விதிகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்தும்பொருட்டு அச் சட்டமான தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 47-வது சட்டத்தால் திருத்தப்பட்டது.





நிதி திரட்டுதல், கல்வி அல்லது கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக நிறுவனங்களால் காட்டப்படும் திரைப்படக் காட்சிகளுக்கு, குறிப்பிட்ட சில நிபந்தனைகளை அவை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு, கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து அவைகளுக்கு விலக்களிக்க 1970-ஆம் ஆண்டு மே திங்களில், அரசு தீர்மானித்தது. தேசியப் பாதுகாப்பு நிதி உதவிக்காக காட்டப்பட்ட படக் காட்சிகள் பலவற்றுக்கு 1971–72-இல் கேளிக்கை வரியினின்றும் விலக்களிக்கப்பட்டது.

**18. தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம்.**—தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ், 1967 முதல் 1971 வரையில் கிட்டிய வருவாய் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 .. .. .. | 337 |
| 1968–69 .. .. .. | 382 |
| 1969–70 .. .. .. | 390 |
| 1970–71 .. .. .. | 428 |

1971–72-ல் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம நாள் வரையில் ரூ. 416 இலட்சம் வசூலாகியது. ஆனால் முந்திய ஆண்டில் இதே கால அளவில் ரூ. 382 இலட்சமே வசூலாகியது. கேளிக்கை வரி, காட்சி வரி ஆகியவற்றின்மீது மேல்வரியாக இவ்வரி விதிக்கப்பட்டுகிறது. இவ்வரி விதிப்பு வாயிலாகக் கிடைக்கக்கூடிய வருவாய் முழுவதும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

**19. தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.**—கிண்டி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடத்தப்படும் குதிரைப் பந்தயங்கள் மூலம் தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின்கீழ் வருவாய் கிடைக்கிறது. 1967 முதல் 1971 வரையில் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | மொத்த வருவாய். (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1967–68 .. .. .. | 84 |
| 1968–69 .. .. .. | 145 |
| 1969–70 .. .. .. | 148 |
| 1970–71 .. .. .. | 182 |

1971–72-ல் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் வரையில் ரூ. 149 இலட்சம் வசூலாகியது. ஆனால், முந்திய ஆண்டில் இதே கால அளவில் ரூ. 127 இலட்சம் வசூலாகியது.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம், கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின்கீழ், 1972 ஜனவரி முதல் தே முதற்கொண்டு குதிரைப் பந்தய வரியின்மீது 5 சதவீத மேல் வ விதிக்கப்படுகிறது.

1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பி டுள்ளபடி, குதிரைப் பந்தய பணயக் கணக்கர்களுக்கும், குதிரைப் பந்த கணிப்புப் பொறிகளுக்கும் உரிய பந்தய வரி 15 சதவீதத்திலிருந்து 20 ச வீதமாகவும், " பிறவற்றிற்கு " 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கை 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ஆம் நாள் அன்று வெளியிடப்பட்டது. இந்த வரி உயர்வின சுமார் ரூ. 50 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று எதி பார்க்கப்படுகிறது. இந்த வருவாய் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக் அளிக்கப்படும்.

1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கொண்டுவரப்பட்ட தமிழ்நா 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரி விதிகளில் ஒரு திருத்தத்தி படி, அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய குதிரைப் பந்தய வ வசூலிப்புப் பணியைக் குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து வணிக வரி துறை எடுத்துக்கொண்டது. இதனால், குதிரைப் பந்தய சங்கத்திற்கு தரகுத் தொகையாகக் கட்டப்பட்டு வந்த 1 சதவீத வரித் தொகை அரசுக்கு மிச்சமாகிறது.

20. வணிக வரிகளினால், மாநில அரசுக்கு எப்பொழுதும் கணிசமான வருவாய் கிடைத்து வந்துள்ளது. இது மாநில மொத்த வருவாயி சுமார் 30 சதவீதமாகும். வழக்கம்போல், 1971-72-லும்கூட வணி வரித் துறையின் சாதனை அரசு எதிர்பார்த்த அளவுக்கு இருந்தது வணிக வரிச் சட்டங்களை நிர்வகிப்பதில், வணிக வரித் துறையின் அதிகா களும், வணிகர்களும் ஒத்துழைத்து இந்தச் சட்டங்களை மாநிலத்திற் நன்மை பயக்கு நோக்கத்துடனும் வணிகர்களுக்கும், பொதுமக்களுக்கு எவ்வித இடர்ப்பாடுகள் ஏற்படா வண்ணமும் ஒன்றுபட்டுச் செயல்படுவ என அரசு நம்புகிறது.

## இணைப்பு 3.

[207-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாடு மாநிலத்தில் ஆயத்தீர்வை-மதுவிலக்கு சட்டங்களை நிர்வகிப்பது, செயல்படுத்துவது குறித்த 1971-72ஆம் ஆண்டிற்கான ஆய்வுரை.

——: o :——

**முகவுரை—மதுவிலக்கை ஒத்திவைக்கவும், ஆயத்தீர்வை சட்டத்தை இயற்றுவதற்கும் வழிகோலிய சூழ்நிலைகள்.**

1. மதுவிலக்கு முதன் முதலில் 1937ஆம் ஆண் அக்டோபர் திங்கள் 1ஆம் நாளில் சேலம் மாவட்டத்தி





கொண்டுவரப்பட்டது. இது 1939ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது 1943ஆம் ஆண்டில் மதுவிலக்கு கைவிடப்பட்டது. 1946ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக மீண்டும் செயல்படுத்தப்பட்டது. 1948ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாளிலிருந்து மாநிலம் முழுவதும் மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது.

2. தமிழ் நாடு அரசு தங்களுடைய மதுவிலக்குக் கொள்கையை மாற்றியமைப்பதற்கு வழிகோலிய சூழ்நிலைகளை விளக்கி 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ஆம் நாளன்று வரவு-செலவுத் திட்ட உரையின்போது சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன். அது பின்வருமாறு :—

> " இதுபோன்ற நிதிப் பற்றுக்குறை மிகுந்த ஒரு சூழ்நிலையில் உத்தமர் காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற திட்டங்களில் ஒன்றான மதுவிலக்குத் திட்டத்தை, அவரது கொள்கைகளைப் பொன்னேபோல் போற்றிவந்த பல்வேறு மாநிலங்கள் படிப்படியாகக் கைவிட்டு இறுதியில் தென்னகத்தைப் பொறுத்தவரையில் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும், அருகிலுள்ள புதுவையிலும் மதுவிலக்கு கொள்கை பிடிப்பற்றுப் போய்விட்ட நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டி, தமிழகம் மாத்திரம் தனித்து நின்று மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த இயலாமல் தத்தளிப்பதையும் சுட்டிக் காட்டி, அண்ணல் காந்தியின் மதுவிலக்குக் கொள்கையை அனைத்திந்திய அளவில் ஏற்க வேண்டும் என்றும் அல்லது நமக்கு நேரிட்டுள்ள இழப்பினை ஈடு செய்ய வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.
>
> புனித நோக்கத்தோடு, இந்தியப்புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்படவேண்டுமென்று கூறினோமோ, அந்தக் கொள்கை—புண்ணியமூர்த்தி காந்தி மகான் வலியுறுத்திய கொள்கை—அவர் ஏந்திய கொடி நிழலில் அணிவகுத்து நின்ற, அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல மத்திய அரசினை நடத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டு விட்டது, வேதனை தரும் செய்தியாகும்.

கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ் நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்? தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்துவதால் மதுவிலக்கின் வாயிலாக நாம் காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பில்லாமல் போகிறது. வரக்கூடிய வருமானத்தையும் இழந்து, கொள்கையை அமல்படுத்துவதிலும் வெற்றிகாண முடியாத அளவிற்கு புறச் சூழ்நிலைகள் உருவாகி, சிறைகள் வழிந்திடவும், கொடிய நோய்கள் பெருகிடவும் இந்தச் சட்டம் காரணமாக இருந்ததேயன்றி உற்றபயன் ஒரு சிறிதும் விளையவில்லை என்பதை ஒத்துக் கொள்வதில் நாம் வெட்கப்படத் தேவையில்லை. எனவே உயர்தனி கொள்கையான மதுவிலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறதெனினும் இந்திய நாடு முழுவதற்குமாக இந்தக் கொள்கையை அமுல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் செயல்படுவதை ஆகஸ்ட் 30ஆம் நாளில் இருந்து ஒத்திவைக்க, இந்த அரசு முடிவு செய்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்''.

3. 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாளன்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது, மதுவிலக்கு செயல்படுத்துவதை அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு பொறுப்பேற்கும் வரையில் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ஆம் நாளிலிருந்து மதுவிலக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்பது தெளிவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ் நாடு 1886ஆம் ஆண்டு அப்காரி சட்டம் அந்த நாளிலிருந்து மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியதாயிற்று. இச் சட்டம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் இயற்றப்பட்டதாலும், இது குறித்து அடங்கல் சட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்படும் வரையில், மதுவிலக்கை ஒத்திவைப்பதற்கான அரசின் முடிவைச் செயல்படுத்துவதற்காக, சில இன்றியமையாத கூறுகளில் இச் சட்டத்தினைத் திருத்த மாநிலச் சட்ட மன்றத்தில், சட்ட முன் வடிவு ஒன்று முகவுரைக்கப்பட்டது; அரசியலமைப்பின்கீழ், இந்தியக் குடியரசுத் தலைவரின்



இசைவினைப் பெறுவதற்காக அது 1971ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19ஆம் நாளன்று இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சட்ட முன் வடிவிற்கு குடியரசுத் தலைவரின் இசைவு வரப் பெறவில்லை. இதற்கிடையில், மாநில அரசு திட்டமிட்ட நடவடிக்கை எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சில 'ரிட்' மனுக்களின் காரணமாக ஏற்பட்ட சட்ட நிலைமையைக் கூர்ந்து பரிசீலனைச் செய்ததில் சட்டத் தெளிவற்ற நிலையைத் தவிர்க்கும் பொருட்டு தன்னிறைவுள்ள சட்டம் ஒன்றை இயற்றுவது சிறந்ததெனக் கருதப்பட்டது. அப்பொழுது சட்டமன்றக் கூட்டம் நடைபெறாததால் வரைவு அவசரச் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அரசியலமைப்பில் 213 (1) பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனையின்கீழ் குடியரசுத் தலைவரின் கட்டளைகளை முன்னதாகப் பெறுவதற்காக 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாளன்று இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. குடியரசுத் தலைவரின் கட்டளைகள் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ஆம் நாள் வரையில் வராததாலும், குடியரசுத் தலைவரின் கட்டளைகள் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ஆம் நாளுக்கு முன்னர் பெறப்படும் வாய்ப்பு ஏதும் இல்லை என்று கருதப்பட்டதாலும், 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ஆம் நாள் முதல் ''மதுவிலக்கு ஒத்திவைப்பதற்கான'' தொடக்க நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டதாலும், இக்கட்டான நிலைமை உருவாகியது. எனவே, மாநில அரசுப் பட்டியலில் உள்ள மதுவைப் பொறுத்தமட்டில் மதுவிலக்கை ஒற்றிவைப்பதற்கான அவசரச் சட்டம் ஒன்றினைச் சாற்றுரைப்பதென மாநில அரசு முடிவு செய்தது. அதன்படி, கீழ்க்காணும் இரண்டு அவசரச் சட்டங்களை மாநில ஆளுநரால் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ஆம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது :—

(1) தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்படுவதை ஒற்றிவைத்தல்) அவசரச் சட்டம்.

(2) தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு அப்காரி அவசரச் சட்டம்.

போதையூட்டக்கூடிய மதுவகைகளுக்கும் குடிக்கத்தக்க மதுவகைகள் மீதான ஆயத்தீர்வைக்கும் (மாநில அரசு அதிகாரப் பட்டியலில் 8-வது பதிவும், 51-வது பதிவும்) பொருந்துகிற வகையில் 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் செயல்படுவதை ஒற்றிவைக்க முதல் அவசரச் சட்டம் விழைந்தது. இரண்டாவது அவசரச் சட்டம் (மாநில அரசு

அதிகாரப் பட்டியலின் 8-வது பதிவில் உள்ளது)—போதையூட்டக்கூடிய மதுவகைகளை உற்பத்தி செய்தல், தயாரித்தல், வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல், வாங்குதல், விற்பனை செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்தவும், மாநில அரசு அதிகாரப் பட்டியலின் 51-வது பதிவில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து ஆயத்தீர்வை விதிக்கவும் விழைந்தது.

4. எனவே, ஒருங்கிணைந்த அதிகாரப் பட்டியலின் 19-வது பதிவில் உள்ள வரம்பிற்குள் வரும் போதையூட்டக்கூடிய மதுவகைகள் குறித்து மதுவிலக்குச் சட்டம் தொடர்ந்து செயலில் உள்ளது. அதேபோல், போதையூட்டக்கூடிய மருந்து வகைகள் சம்பந்தமானவற்றை தமிழ் நாடு அவசரச் சட்டங்கள் நீக்கிவிட்டன. இந்த அவசரச் சட்டங்களுக்குப் பதிலாக, தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு மதுவிலக்குச் (செயல்படுவதைநிறுத்தி வைத்தல்) சட்டமும், தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டமும் இயற்றப்பட்டன. இந்த இரண்டு சட்டங்களும் 1971ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டவையாகும்.

### நிர்வாக அமைப்பு.

5. வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் ஒருவர் ''மதுவிலக்கு-ஆயத்துறை ஆணையாளர்'' என்ற பதவிப் பெயருடன் மதுவிலக்கு-ஆயத்தீர்வைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். தலைமையிடத்தில் அவருக்கு உதவியாக துணை ஆணையாளர்-செயலாளர் ஒருவரும், ஏனைய சார்நிலைப் பணியாளர்களும் உள்ளனர். மதுவிலக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னமே இருந்ததைப்போல் ஆயத்தீர்வைச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தனிப்பட்ட பணியாளர்களுடன் முழு அளவு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது அவசியமில்லை என்று கருதப்பட்டது. மதுவிலக்குச் சட்டங்களை 1946ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வந்த காவல்துறையிடம் ஆயத்தீர்வைச் சட்டங்களைச் செயல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் செயல்படுத்தும் பணியினைக் கவனிக்க, ஆயத்தீர்வை ஆணையாளரின்கீழ் பணி புரிய, காவல்துறை (ஆயத்தீர்வை) துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின்கீழ் மாவட்ட அளவில், சென்னை மாநகரம் உட்பட மாநிலத்தில் 14 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் காவல்துறை (ஆயத்தீர்வை) துணை சூப்பிரண்டு ஒருவர் இருக்கிறார். சம்பந்தப்



பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பின்கீழ், தற்போது பணி புரிந்து வரும் காவல்துறை (ஆயத்தீர்வை) துணை சூப்பிரண்டுகள், மாவட்டக் காவல்துறையினர் ஆயத்தீர்வைச் சட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்த இயலும் வகையில் அந்தந்த மாவட்டம் காவல்துறை சூப்பிரண்டுகளுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். மதுவிலக்கு ஒற்றி வைக்கப்படுமுன்னர் மாவட்டங்கள் அனைத்திலும் இருந்து மதுவிலக்குச் செயற்படையினர் இப்போது காவல்துறை (ஆயத்தீர்வை) துணை சூப்பிரண்டுகளின்கீழ் பணி புரிகின்றனர். உரிமங்கள் வழங்கல், அனுமதிச் சீட்டு வழங்கல், கணக்குகள் சரிபார்த்தல், கடைகளை ஏலம் விடுதல், தீர்வை வசூலித்தல் போன்ற சட்ட விதிமுறைகளை முறைப்படுத்தும் அலுவல்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நிர்வாக பொறுப்பின்கீழ் வருவாய்த்துறை கவனித்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக, துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர் ஒருவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் துணைப் பணியாளர்களுடன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆயத்தீர்வை பொருள்கள் குறித்து உதவி ஆணையாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அலுவல் முறையில் நேர்முக உதவியாளராகவும் இருக்கிறார். ஆயத்தீர்வைச் சட்டங்களின்கீழ் செய்யப்படும் குற்றங்களின் போக்கைக் கவனித்தல், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கூறுதல் முதலியவற்றிற்காக காவல்துறை சூப்பிரண்டு பதவித் தரத்தில் துணைக் கமிஷனர் ஒருவரின் தலைமையிலான ஆயப் புலன் விசாரணை அரங்கம் ஒன்று காவல்துறை (ஆயத்தீர்வை) துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின்கீழ் பணிபுரிய அமைக்கப்பட்டுள்ளது. வடிசாலைகளுக்கும் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ள தயாரிப்புச் சாலைகளுக்கும் பொறுப்பு வகிக்க மதுவிலக்கு ஆயத்தீர்வை துணை ஆணையாளர் ஒருவர் இருக்கிறார்.

### கள்ளும், சாராயமும்—விற்பனை உரிமைகளை ஏலத்தில் விடுதலும், கடைகள் அமையுமிடங்களும்.

6. கடைகளில் கள்ளையும், சாராயத்தையும் விற்பனை செய்யும் உரிமை, ஏல ஏற்பாட்டின் மூலம் முறைப்படுத்தப்படுகிறது. கள்ளைப் பொறுத்தவரையில், மரவரியினை விதிப்பதற்கான உரிமையை அரசு பெற்றிருக்கையில், விற்பனை உரிமைக்கும் (குத்தகை) (மரவரிக்குப் பதிலாக) மரத்திலிருந்து கள் இறக்கும் உரிமைக்கும் ஒருங்கே ஏலத்தில் தொகை கொடுக்க முன்வர ஏலம் கேட்பவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். கடைகளின் நியாயமான தேவைகளுக்காக எவ்வளவு

மரங்களிலிருந்து வேண்டுமானாலும் கள் இறக்க அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். கள் இறக்குவதற்கு, கடைக் காரர்கள் மரங்களின் சொந்தக்காரர்களுடன் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகத் தொகைக்கு ஏலம் எடுத்தவர், வருவாய், காவல்துறையினரின் ஒப்புதலுடன் கடைகளை அமைப்பதற்குத் தகுந்த இடங்களைத் தெரிந் தெடுக்க வேண்டும். 1946ஆம் ஆண்டிலிருந்து மக்கள் தொகை வளர்ச்சியையும் புதிதாகக் குடியிருப்புகள் தோன்றி யிருப்பதையும் கருதி, கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் இடங்கள், அங்காடிகள், நீராடுதுறைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் வழிபாட்டிடங் கள், தொழிற்சாலைகள், ரயில்வே நிலையங்கள், ரயில் வண்டி நிறுத்துமிடங்கள், பொதுமக்கள் வழக்கமாகக்கூடும் பிற இடங்கள் ஆகியவற்றிலிருந்து தள்ளி இருக்கவேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்தக் கடைகள், இயன்ற மட்டில், கிராமங்கள், நகரங்களின் புறப்பகுதிகளில் அமைந் திருக்க வேண்டும். பல இடங்களில் கள், சாராயக் கடைகள் அவ்வாறு அமைந்திருக்கவில்லை என்று அரசுக்கு முறையீடுகள் வந்தன. என்வே, கள், சாராயக் கடைகள் அமைந்துள்ள இடங்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட தாசில்தார்கள் ஆய்வு செய்து, மறுப்பு தெரிவிக்கத்தக்க பகுதிகளில் உள்ள கடைகளை பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படாதிருப்பதற் காக அமைதியான இடர்பாடில்லாத இடங்களுக்கு மாற்று வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். விற்பனைக்காக அனுமதிக்கப்பட்ட மொத்தம் 7,395 கள்ளுக் கடைகளில் 7,225 கள்ளுக் கடைகளும், 3,512 சாராயக் கடைகளில் 3,507 சாராயக் கடைகளும் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ஆம் நாளிலிருந்து 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31ஆம் நாள் வரையிலான குத்தகைக் காலத்திற்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

### கள் சேகரித்தல்.

இம் மாநிலத்தில் கள் உற்பத்தி போதுமானதாய் இல்லாத காரணத்தால் மைசூர், ஆந்திரப் பிரதேசம் முதலிய அண்டை மாநிலங்களிலிருந்து 7 திங்கள் கால அளவிற்கு கள் இறக்குமதி செய்தற்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க சென்னை மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. விற்பனை



வரி செலுத்துவதனின்றும் கள் விற்பனைக்கு விலக் களிக்கப்பட்டுள்ளது. அனுமதிச் சீட்டின்றி இரண்டு லிட்ட ருக்கு மேற்பட்ட கள்ளைத் தன் வசம் வைத்திருக்கவுங்கூடாது எடுத்துச் செல்லவுங்கூடாது என அரசு விதித்துள்ளது.

### சாராய விற்பனை

சாராயம் இம் மாநிலத்தில் தற்போது இரண்டு வடி சாலைகளில் தயாரிக்கப்படுகிறது. அவையாவன : (1) இ.ஐ.டி. பாரி, நெல்லிக்குப்பம், தென் ஆற்காடு மாவட்டம், (2) திருச்சி வடிசாலை இரசாயனப் பொருள் நிறுவனம், திருச்சி ராப்பள்ளி. வரையறுக்கப்பட்ட விலையில் கடைக்காரர் களுக்குச் சாராயம் வழங்குவதற்காக மொத்த விற்பனை கிடங்குக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களுக்குச் சில்லறையில் விற்கப்படும் சாராயத்திற்கு விற்பனை விலை வரையறுக்கப்படவில்லை. மொத்த விற்பனைக் கிடங்குக் காரர்கள் கடைக்காரர்களுக்குத் தேவைப்படும் அளவிற்குச் சாராயம் வாங்கி இருப்பு வைத்துள்ளார்களா என்று கவனிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### வெளிநாட்டு மதுவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவும்

7. பயன்படுத்துவோர் தங்கள் வசம் வைத்திருக்கும் விஸ்கி, பிராந்தி, ரம், ஜின் போன்ற சாராவிகளின் அளவு 3 லிட்டராகவும், பீர் போன்ற தானிய வகை மது 9 லிட்ட ராகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தகுதியான ஓர் அதிகாரி யால் உரிமம் வழங்கப்பட்டதன்கீழ் மட்டுமே மது விற்பனை அனுமதிக்கப்படுகிறது. புட்டியில் அடைக்கப்பட்ட மதுவை மொத்தமாவும் சில்லறையாகவும் விற்பதற்கு, ஒவ்வொரு நிதியாண்டிலும் உரிமக் கட்டணம் வசூலித்து F.L.I. என்று வழங்கப்படும் உரிமம் ஒன்று வழங்கப்படுகிறது. மது விலக்கு ஒற்றிவைக்கப்பட்ட கொள்கைக்கிணங்க, புட்டியில் அடைக்கப்பட்ட மதுவை வைத்திருப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் உரிமம் வழங்கும் முறை தளர்த்தப் பட்டுள்ளது. மேலும் விற்பனை இடங்கள் பொருத்த மாயிருத்தல் முதலியவற்றிற்குட்பட்டு உரிமங்கள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. இம் மாநிலத்தில் மது உற்பத்தி செய்வது மதுவிலக்கு ஒற்றிவைக்கப்படும்வரை தடை செய்யப்பட்டிருந்ததால், உத்திரப் பிரதேசம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், கேரளா போன்ற பிற மாநிலங்களிலுள்ள டிசாலைகளிலிருந்தும் சாராயம் காய்ச்சுமிடங்களிலிருந்தும்

இறக்குமதி செய்யப்படுவதன் மூலம் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வந்தன. சுங்கவரி விதிக்கத்தக்க எல்லைப் புறங்கள் வழியாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவிற்கு ஆயத்தீர்வை ஏதும் விதிக்கப்படவில்லை. ஆனால், தமிழ்நாடு பொது விற்பனை வரியின்கீழ், ரூபாய்க்கு 12 காசு என்ற வீதத்தில் விற்பனை வரி தவிர இந்த மது வகைகளின் விற்பனை விலையில் மீது ஆய விற்பனை வரி ரூபாயில் 12 காசாக விதிக்க இடமுண்டு. மேலே குறிப்பிடப்பட்ட ஆயத்தீர்வை, விற்பனை வரி தவிர சாராவி, வாயு நுரைக்கும் திராட்சை ரசங்கள் ஆகியவற்றில் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2 வீதமும், ஏனைய திராட்சை ரசங்களைப் பொறுத்த வரையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1 வீதமும், பீரைப் பொறுந்த வரையில் லிட்டர் ஒன்றுக்கு 35 காசு என்ற வீதத்திலும் இம் மாநிலத்திலுள்ள ஏனைய சில்லறை உரிமதாரர்களுக்கு மதுவகைகளை வழங்கக்கூடிய F. L. I. உரிமதாரர்களிடமிருந்து மதுவகைகளின் மொத்த விற்பனையின் மீது 'காலன்' கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தனியுரிமை பெறாத கூட்டுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு சங்கங்களின் வளைவிற்குள்ளேயே மது வழங்குவதற்காக, அத்தகைய சங்கங்களுக்கு F. L. 2 உரிமங்கள் வழங்கப் படுகின்றன. இதற்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள நட்சத்திரத் தரம் பெற்ற ஓட்டல்களில், தங்கியுள்ளவர்களுக்கும் அங்கு வழக்கமாக உணவு கொள்பவர்களுக்கும் அந்த ஓட்டல்களில் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் மதுவகைகளை வைத்திருக்கவும் வழங்கவும் அவை அனுமதிக்கப்படுகின்றன. அத்தகைய உரிமங்களுக்கு, சென்னை மாநகரில் ரூ. 10,000மும் ஏனைய இடங்களில் ரூ. 5,000மும் உரிமக்கட்டணம் வசூலிக்கப் படுகிறது. இந்த வாணிபத்தைப் பெருக்கும் ஒரு நடவடிக்கையாக, வெளிநாட்டு மதுவையும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளையும், ஆயத் தீர்வை ஏதுமில்லாமல் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ள கிடங்குகளில் சேமித்து வைப்பதை அனுமதிக்கும் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்தகைய கிடங்குகள் செயல்படுவதை முறைப்படுத்துவதற்காக, தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு வெளிநாட்டு மது, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது (ஒப்பந்தத்திற்கிணங்க சேமித்து வைத்தல்) விதிகள் அண்மையில் இயற்றப்பட்டுள்ளன.

8. மதுவிலக்குச் சட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும் மேலே குறிப்பிட்டவாறு வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட 3 லிட்டர், 9 லிட்டர் அளவுக்கு மேல் எவரும் தகுதியான அதிகாரியால் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டைப் பெற்றிருந்தால் மட்டுமே மதுவகைகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர். இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் மதுவகைகள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வைப் பணியாளர்களால் சரிபார்க்கப்பட்ட பின்னர் மட்டுமே கணக்கில் காட்டப்பட அனுமதிக்கப்படும்.



9. தற்போது செயலிலுள்ள ஆணைகளுக்கிணங்க உணவு உட்கொள்ளுமிடம், தேனீர்க்கடை, காப்பிக்கடை, கபே, சிற்றுண்டிச்சாலை, சிற்றுணவகம், சத்திரம் (மதுவழங்கு உரிமை பெற்ற நட்சத்திரத் தரமுள்ள உணவகம் நீங்கலாக), உணவகம், தங்கும் விடுதிகளிலுள்ள ஓய்வு அறை அல்லது சிற்றுண்டி அறை அல்லது பொதுமக்கள் உணவு உட்கொள்ள அல்லது பானம் அருந்த அனுமதிக்கப்படும் ஓர் இடம் அல்லது உணவு விற்கப்படும் ஓர் இடம் அல்லது விற்பனைக்காக உணவு தயாரிக்கப்படக்கூடிய ஓர் இடம் ஆகிய இடங்களில் எவரும் மது வைத்திருப்பது தடை செய்யப்படுகிறது.

10. இது நாள் வரை, F. L. உரிமதாரர்கள் காலாண்டு அடிப்படையில் 'காலன்' கட்டணம் செலுத்தி வந்தனர். நிர்வாகத் திறனுக்காகவும் வசதிக்காகவும் பொருத்தமான விதிகள் உரிமதாரர்கள் 'காலன்' கட்டணத்தை மாதந்தோறும் செலுத்தும் வகையில் அண்மையில் திருத்தப்பட்டுள்ளன.

11. புதுச்சேரியிலிருந்து தமிழ் நாட்டுக்கு புட்டியில் அடைக்கப்பட்ட மதுவைகைகளை கள்ளத்தனமாக எடுத்து வருவதால், வருவாய் விரயம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மீது ஆயத் தீர்வை, 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து லிட்டருக்கு ரூ. 25-லிருந்து ரூ. 14 ஆகவும், பீர், தானிய மதுவகைகளைப் பொறுத்த வரையில் லிட்டருக்கு ரூ. 1லிருந்து 75 காசாகவும் குறைக்கப் பட்டுள்ளது.

12. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மது வகைகளுக்கு தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 12 சத வீத ஒரு முனை விற்பனை வரியுடன் தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு ஆயத் தீர்வைச் சட்டத்தின்கீழ் 12 சத வீத விற்பனை வரி விதிக்கப்பட்டது. இத்தகைய இரண்டு வரி விதிப்புகளுக்குப் பதிலாக, தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 24 சத வீத ஒரு மொத்த வரி விதிப்பதென தற்போது அரசு முடிவு செய்துள்ளது.

வருவாய்

13. இம் மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டங்கள் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ஆம் நாள் முதல் ஒத்தி வைக்கப்பட்டதன் பலனாக, 1971–72 திருத்த மதிப்பீட்டில் ஏழு திங்கள் கால அளவுக்கு ரூ. 25·12 கோடி கிடைக்குமென்றும், 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் முழு ஆண்டிற்கு ரூ. 35·49 கோடி கிடைக்குமென்றும் கொள்ளப்பட்டுள்ளது.

முடிவுரை

14. "மது கஷாயம்", "வார்னிஷ்" போன்ற போலி மருந்துப் பொருள்களும், கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயமும் தங்களது உடல் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என்பதை அறியாமல் அவற்றை அருந்தும் பழக்கத்திற்கு மக்கள் ஆட்படுகின்றனர் என்பதை அரசு அறியும். சில வகுப்பினரிடையே பொதுவாக உள்ள இத்தகைய வழக்கங்கள் முனைப்பாகப் பிரச்சாரம் செய்வதன் மூலமாக மட்டுமே நீக்கப்பட முடியும். கள்ளத்தனமாகச் சாராயம் வடிப்பதைப் பெரிதும் குறைப்பதற்கு ஆயத்தீர்வைச் சட்டத்திலுள்ள விதி முறைகளை எந்த அளவிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கலாம் என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது. அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசால் மதுவிலக்குக் கொள்கை செயலுக்குக் கொண்டுவரப்படும் பொன்னாள் என்று புலரும் என இந்த அரசு எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

## இணைப்பு 4

]243—ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க..]

### கோரிக்கை எண் 5

### ஆவணப் பதிவுத் துறை

ஆவணப் பதிவுத் துறை, சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளதுடன், இடம் பெயராச் சொத்துக்களின் உரிமை கோருபவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை வைத்துவரும் பொறுப்பையும் ஏற்று செவ்வனே நடத்தி வருகிறது. இத்துறை இந்தியப் பங்குதாரர் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு-இறப்பு பதிவுச் சட்டம், சிறப்புத் திருமணங்கள்



சட்டம், இந்து திருமணச் சட்டம் போன்ற முக்கியமான திருமணப் பதிவுச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது. 1969 டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு தமிழ் நாடு முழுவதும் நீடிக்கப்பட்டுள்ள தமிழ் நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் இத்துறை நிர்வகிக்கிறது.

2. 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத்தாள் தீர்வை அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் அங்காடி மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. சொத்துக்களைச் சரிவர மதிப்பிட துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வருவாய்த் துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது. கிராமப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளை நுண்ணிய முறையில் நிர்ணயிப்பதற்காக வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு சிறப்புப் பணியாளர்களை பதிவுத் துறைத் தலைவரின்கீழ் பணியாற்ற நியமனம் செய்துள்ளது. இப்பணியாளர்கள் ஆரம்பத்தில் சென்னை நகரத்திற்கும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டனர். பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கும் இத் திருத்தப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை மாநகரத்திற்கும், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மாவட்டத்திற்குமான வழிமுறைக் கோட்பாடுகள் திருத்தியமைக்கப்பட்டுவிட்டன. இப்பணியில் 75 சதவீதம் ஏனைய மாவட்டங்களில் முன்னரே முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதற்கு அடிப்படையாக ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள மதிப்புத் தொகைக்குப் பதிலாக "அங்காடி மதிப்பை" ஏற்றுக் கொள்வது குறித்த 1967 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்டத்தின் 4, 9 ஆவது பிரிவுகளும் 10-ஆவது பிரிவைச் சேர்ந்த (b), (c), (e) பகுதிகளும் அரசியல் சட்டத்திற்கு முரணானவையென்று சென்னை உயர்நீதி மன்றம் 1972 ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தீர்ப்பளித்தது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அரசு ரிட் மனுக்களை

தாக்கல் செய்துள்ளது. 1972 ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று பிறப்பித்த ஆணையின் செல்திறனை நிறுத்திவைத்து உயர்நீதி மன்றம் 1972 பிப்ரவரி திங்கள் 23 ஆம் நாளன்று ஆணை பிறப்பித்தது.

3. துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில் தணிக்கை செய்யும் முறை 1969 ஆம் ஆண்டு பத்து பதிவு மாவட்டங்களிலும் சென்னை மாநகரிலும் தொடங்கி 1970 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இத்திட்டம் ஏனைய பதிவு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வருவாய் இழப்பையும், இத்துறையில் கணக்குகளைப் பராமரிக்கும் முறையில் ஏற்படக்கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பயன் அளித்துள்ளது. இது தொடர்பாகப் பெருகியுள்ள பணியை நிறைவேற்றுவதற்காக சிதம்பரம், கோயம்புத்தூர், கடலூர், பாளையங்கோட்டை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு இப்போது முடிவு செய்துள்ளது.

4. முத்திரைத் தாள் பற்றாக்குறையினால் எழுந்த சிரமங்களைத் தவிர்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று உதவிப் பதிவாளர்களுக்கு ரூ. 500 வரையுள்ள முத்திரை கட்டணத்தை பணமாக வசூலிக்க அதிகாரமளித்துள்ளது. 1967-ல் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தற்காலிகமாக நீடிக்கப்பட்டு வந்து, 1971 ஆம ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் நிரந்தரமாக்கப்பட்டது.

5. அவசியமான இடங்களிலெல்லாம் பத்திரப் பதிவுக்காக வரும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுப் புதிய துணைப் பதிவு அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. தற்போதைய அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பின்னர், புதிதாக 33 அலுவலகங்கள் (1968–69-ல் 10 அலுவலகங்களும். 1969–70-ல் 6 அலுவலகங்களும், 1970–71-ல் 6 அலுவலகங்களும், 1971–73 ஆம் 11 அலுவலகங்களும்) திறக்கப்பட்டுள்ளன. 1972–73 ஆம் ஆண்டில் மேலும் மூன்று புதிய அலுவலகங்கள் திறப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. பதிவு மாவட்டத்தில் வைத்து வரப்படும் பதிவேடுகளில் அழிந்துபோன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகப் பிரிவு





எழுத்தர்களைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்த ஒப்பளிப்பு வழங்கவும், இத்திட்டத்தை ஒரு சோதனை நடவடிக்கையாக மதுரைப் பதிவு மாவட்டத்தில் செயல்படுத்தவும அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 1972–73 ஆம் ஆண்டில் பத்து தற்காலிகப் பிரிவு எழுத்தர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

7. 1971–72 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் நேர்வுகளில் பதிவுக் கட்டணங்களை அரசு தள்ளிக் கொடுத்திருக்கிறது :—

(i) எண்ணெய் பொறிகள், மின்சார மோட்டார் விசையேற்றங்கள் ஏனைய வேளாண்மை இயந்திரங்களை வாங்குவதற்காக ரூ. 5,000 வரை கடன் பெறுவதற்குக் கடன் பெற்றவர்கள் 1968 ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் தொடங்கி மூன்று ஆண்டுக் கால அளவில் தமிழ் நாடு வேளாண்மை—தொழில் கழகத்திற்கு எழுதிக் கொடுத்த அடைமானப் பத்திரங்கள்; கடன் தொகை முழுவதையும் செலுத்தியுள்ள, கடன் பெற்றவர்களுக்கு, 1968 ஏப்ரல் 1 ஆம் நாளில் தொடங்கி மூன்று ஆண்டுக் கால அளவில், தமிழ் நாடு வேளாண்மைத் தொழில் கழகம் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்திரங்கள்;

i) பர்மா, இலங்கை அகதிகளுக்கு வியாபாரப் பிணையக் உறுப்பினர்களுக்கு ரூ. 5,000 மேற்படாது கடன்கள் வழங்குவதற்காக அடைமானம் வைக்கப்படும் நிலங்களுக்கான வில்லங்கச் சான்றிதழ்களைப் பெறுவதற்காகக் கொடுக்கப்படும் விண்ணப்பம் ;

(iii) பர்மா. இலங்கை அகதிகளுக்கு வியாபாரப் பிணையக் கடன்கள் வழங்குவதற்காக அரசின் சார்பில் மேற்படி அகதிகள் எழுதிக்கொடுக்கும் இடம் பெயராச் சொத்து குறித்த அடைமானப் பத்திரங்கள்;

(iv) அரசு வழங்கிய கடன் தொகையிலிருந்து, வியாபாரம் செய்வதற்காக இலங்கை, பர்மா அகதிகள் வர்த்தக இடங்கள் வாங்கும்போது தனிப்பட்ட இலங்கை, பர்மா அகதிகள் சார்பில் அல்லது ஒரு கூட்டுறவு அமைப்பாக அல்லது சங்கமாக அமைந்துள்ள அகதிகள் தொகுதி சார்பில் எழுதிக் கொடுக்கப்படும் கிரயப் பத்திரம் .

(v) பதிவுச் சட்டத்தின்கீழ், இறையைப பாசனச் சங்கங்கள் அல்லது அதன் சார்பாகச் செலுத்தத்தக்க பதிவுக் கட்டணங்கள்;

1972 மார்ச் 24]

(vi) தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை கொடுப்பவர்கள் நிலம், நிலம் சார்ந்த சொத்தினைக் கொடுக்கும்போது தமிழ் நாட்டு ஆளுநர் சார்பில் ' அவர்கள் எழுதிக்கொடுக்கும் கொடை ஆவணங்கள்.

அரசு, தற்போதுள்ள சலுகைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மேலும் கூடுதலான கால அளவிற்கு நீடித்துள்ளது :—

(i) தொடக்க நிலவள வங்கிகள் அடைமானப் பத்திரங்களை எழுதிக் கொடுப்பதற்காக அவர்கள் ஏற்கனவே அச்சடித்த படிவங்களை 30—9—1971 வரை பயன்படுத்திக் கொள்ளுமாறு முதற்கண் அனுமதிக்கப்பட்டது. பின்னர், அச்சடிக்கப்பட்டு அவர்களிடம் இருப்பு வைத்துள்ள படிவ நகல்களைப் பயன்படுத்திக் கொள்ள வங்கிகளுக்கு இயலும் வகையில் மேற்படி கால அளவு 31—3—1972 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ii) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட கட்டணச் சலுகைகள் 30—6—1972 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

) வணிக வங்கிகளிடமிருந்து உழவர்கள் பெற்ற கடன்கள் தொடர்பான ஆவணங்கள், வில்லங்கச் சான்றிதழ்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டணச் சலுகை 30—6—1973 வரை நீடிக்கப்பட்டது.

8. வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் துணைப் பதிவு அலுவலகங்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவது குறித்த ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுப்பதுபற்றி அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 8 லட்சம் வழங்கவும், 1972-73 ஆம் நிதி ஆண்டிற்கான செலவை ரூ. 3 லட்சமாக வரையறுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

செய்யூர், திருவண்ணாமலை, சிவகங்கை ஆகிய இடங்களில் தற்பொழுதுள்ள கட்டிடங்களை விரிவுப்படுத்தவும், பூதப்பாண்டியில் உள்ள கட்டிடத்தைத் திருத்தி அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

9. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டம், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1964 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாள் முதற்கண் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம், பின்னர், சென்னை நகரத்திற்கு 1965 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாள் , முதற்கண் விரிவுபடுத்தப்பட்டது.



1972 மார்ச் 24]

1969 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து இச் சட்டம் மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் 17,176 சீட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சீட்டுகள் மூலம் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் அரசுக்கு ரூ. 4,25,467 வருவாய் கிட்டியுள்ளது.

10. மேற்சொன்ன சட்டத்தின் 12-வது பிரிவின்கீழ், சீட்டு நடத்துபவர் ஒவ்வொருவரும், சீட்டுத் தொடங்குவதற்கான சான்றிதழுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னதாக, சீட்டுத் தொகையில் பாதிக்குக் குறையாத ஒரு ரொக்கத் தொகையை ஏற்பளிக்கப்பட்ட ஒரு வங்கியில் செலுத்த வேண்டும், அல்லது, சீட்டுத் தொகையில் பாதிக்குக் குறையாத முகமதிப்பு அல்லது அங்காடி மதிப்பு, இவற்றில், எது குறைவானதோ அத்தொகையை அரசு ஈட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும். பின்னர் அவ்வாறு செலுத்திய தொகையை அல்லது அரசு ஈட்டுப் பத்திரங்களைப் பதிவாளருக்கு மாற்ற வேண்டும். இதைப் பதிவாளர் பிணையத் தொகையாகத் தனது பொறுப்பில் வைத்திருப்பார். இந்த மாற்றம் முத்திரைத்தாள்களில் எழுதுவதன் மூலம் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, வங்கிகளினால் சீட்டு நடத்துபவர்களுக்கு அளிக்கப்பட்ட குறித்த காலக் கையடைத் தொகைகளுக்கான ரசீதுகளைப் பதிவாளருக்கு மாற்றப்படுவதை வங்கியோ நீதிமன்றமோ ஏற்றுக்கொள்வதில்லை என்று அரசின் நினைவிற்கு கொண்டுவரப்பட்டது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக, இச்சட்டத்தின் பொருத்தமான பிரிவைத் தக்கவாறு திருத்தக் கருதப்பட்டுள்ளது.

11. 1966—67-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் இத்துறையில் வருமானமும், செலவும் கீழ் வருமாறு :—

| | 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. | 1971–72. (31–12–71 வரை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| வருமானம் | 202·72 | 229·67 | 259·70 | 270·62 | 319·99 | 253·57 |
| செலவு | 70·82 | 70·93 | 82·60 | 90·05 | 100·23 | 94·34 |

## இணைப்பு 5

[213-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### மானியக் கோரிக்கை 34 எழுதுபொருள்-அச்சுத்துறை

தமிழ் நாடு ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "மானியக் கோரிக்கை 34—எழுதுபொருள்-அச்சுத் துறை" என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,35,82,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென இம் மன்றப் பேரவையை வேண்டுகிறேன். இப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணிகளை விளக்கும் ஆய்வுரையை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

2. இத் துறையின் பணியை மேம்படுத்துவதற்காக எடுத்துள்ள, எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் விளக்க நான் விழைகிறேன். வட்டாரப் பிரிவுகளையும், கிளை அச்சகங்களையும் கொண்ட அரசு அச்சகமானது, இந்த நாட்டிலேயே பெரிய அச்சக நிறுவனங்களில் ஒன்றாகும். இதில் சுமார் 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 2,800 பேர் தங்கசாலையிலுள்ள மைய அச்சகத்தில் பணியாற்றுகின்றனர். எழுதுபொருள்-அச்சுத் துறையை வணிக அடிப்படையில் அமைத்து ஆதாயம் தரத்தக்க பணிகளில் ஈடுபடுத்த வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்குச் செயல்வடிவம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. இத் துறை சிறந்த முறையில் பணியாற்ற நடவடிக்கைகள் பலவற்றை அரசு மேற்கொண்டு வந்துள்ளது. இக் கொள்கையையொட்டி, அரசு அச்சகத்தின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் சென்னையிலுள்ள ஆனைக்கார் எஸ்டேட்டில் கட்டிடம் ஒன்று குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் புதிய அச்சகம் ஒன்றைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அச்சகம் செயல்படத் தொடங்கும்போது இதில் சுமார் 800 பேருக்கு வேலை



வாய்ப்பு கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டையில் தனி அச்சக நிறுவனம் ஒன்றைத் தொடங்கும் நோக்கத்துடன், அந்தத் தொழிற்பேட்டையில் மூன்று ஏக்கர் மனையை தொழில்-வணிகத் துறையிடமிருந்து வாங்கவும் ரூ. 60,000-க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த மனையை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. கிடைக்கக்கூடிய நிதிவாயில்களைப் பொறுத்து எல்லா மாவட்டத் தலைநகரிலும் வட்டார அச்சகங்களை அமைக்க அரசு பேராவல் கொண்டிருக்கிறது. தொடக்கத்தில், மதுரையில் தனி அச்சக நிறுவனம் ஒன்றைத் தொடங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த அச்சக நிறுவனத்தை அமைப்பதற்குத் தேவையான மூன்று ஏக்கர் மனையை அரசு கைவசப்படுத்திக்கொண்டுள்ளது. கட்டிடத்தின் வடிவமைப்பு, கட்டிடம் கட்டுவதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றிற்கு நிர்வாக முறையில் ஒப்புதல் வழங்குவதற்காக அவை ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டிடங்களிலேயே அரசு அச்சகங்களை அமைப்பது என்ற அரசின் கொள்கையைச் செயல்படுத்தும் பொருட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி, விருத்தாசலம் ஆகிய இடங்களில் வட்டார அச்சகங்களை அமைப்பதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

"தமிழரசு" பத்திரிகையை வெளியிடுவதற்கு முன்பு, அரசின் பல்வேறு துறைகளால் பத்திரிகைகள் பல வெளியிடப்பட்டன. இவற்றில் சில "மெட்ராஸ் இன்ஃபர்மேஷன்," "சீரணி," "மேழிச் செல்வம்," "பாக்கியலட்சுமி," "சுகாதாரக் கல்வி," "தொழில்-வாணிபம்," "ஆரோக்கிய மார்க்கம்" ஆகியவையாகும். இப் பத்திரிகைகளில் சுமார் 54,000 பிரதிகள் விற்கப்பட்டன.

இந்த வெளியீடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து "தமிழரசு" என்ற ஒரே பத்திரிகையாக வெளியாகத் தொடங்கின. தமிழ் நாடு அரசின் செய்தி வெளியீடான

இந்தத் "தமிழரசு" திங்கள் இருமுறை வெளிவருவதாகும். முதல் வெளியீடான "தமிழரசு" வண்ண அட்டைகளுடனும் படங்களுடனும் 1970 ஆகஸ்ட் மாதத்தில் வெளிவந்தது. தமிழில் 30,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 5,000 பிரதிகளும் தொடக்கத்தில் விற்பனையாயின. "தமிழரசு" பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பு தற்போது 55,000 பிரதிகளாக உயர்ந்துள்ளது.

கைதிகளின் திறனைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவும், கைதிகள் பயிற்சி பெற பரந்த வாய்ப்பினை அளிக்கவும், மத்திய சிறைச்சாலை அச்சகத்தில் இருமுறை மாற்றுப் பணியைக் கொண்டுவர அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1971ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் இந்த முறை மாற்றுப் பணி செயலுக்கு வந்துள்ளது.

5. அச்சுக் கோக்கும் பணியை, குறிப்பாக தமிழ் வெளியீடுகளை அச்சிடும் பணியை விரைந்து முடிக்கும் அவசியம் குறித்து அச்சகத்திற்குத் தேவையான அச்சுக்களைப் போதிய அளவுக்கு வழங்குவதற்காகக் கணிசமான அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன்; 11 தனியச்சு வரிப்பலகைகள் (Monotype keyboards), 25 தனியச்சு வார்ப்படப் பொறிகள் (Monotype casters) ஆகியவற்றுக்கான செலவு, ஈட்டுறுதிக் கட்டணம் குறித்து ரூ. 36·90 லட்சம் அளவுக்கு அந்நியச் செலாவணி பெறப்பட்டது.

6. அரசு அச்சகத்தில் உற்பத்தியை பெருக்கவும், ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வரும் இந்த அச்சகத்தைத் தனித்து இயங்கக்கூடிய பிரிவாக வைத்து வரவும், அரசு அச்சகத்தில் மூன்றாவது முறை மாற்றுப் பணியைக் கொண்டு வரும் செயற்குறிப்பு குறித்து அரசு முனைப்பாகப் பரிசீலித்து வருகிறது. ஏற்கெனவே இரு முறை மாற்றுப் பணியிலுள்ள தொழிலாளர்களை மூன்று முறை மாற்றுப் பணிகளில் பிரித்து விடுவதன் மூலம் அதிக வசதிகளை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இதனால் அச்சகத்தில் ஒவ்வொரு முறை மாற்றுப் பணியில் பணியாற்றும்



தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க இயலும். அத்துடன் இன்னும் அதிக இடவசதியையும் வேறு பல வசதிகளையும் அளிக்க முடியும்.

7. தொழிற்சாலையில் உள்ள விளக்கு வசதிகள் போன்று; அரசு அச்சகத்தில் வரியச்சு, தனியச்சு, இயந்திரத் துறைகளில் ரூ. 77,245 மதிப்பீட்டுச் செலவில் விளக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதனால் சீராகவும் போதுமான அளவிலும் ஒளி பரவும். அதன் பயனாக அந்த ஒளியில் மேலும் சிறந்த முறையில் திறமையுடன் பணியாற்ற இயலும்.

8. எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றி விரிவாக ஆய்வு செய்யும் பொருட்டு மேற்படி குறையைச் சீரமைப்பது குறித்து குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. இக் குழு இதுவரை மூன்று இடைக்கால அறிக்கைகளை அனுப்பியுள்ளது. இத் துறையின் அமைப்பு, அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல், தேவைக்குறிப்புப் பட்டியல்களைத் தயார் செய்தல், அச்சிடுவதற்காக வரும் தேவைக்குறிப்புப் பட்டியல்களை நிறைவேற்றி அனுப்புதல் குறித்த நடைமுறைகளை மேம்படுத்துதல் முதலியவைபற்றி 89 பரிவுரைகள் இந்த மூன்று அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 42 பரிவுரைகள் குறித்து அரசு இறுதி ஆணைகளைப் பிறப்பித்தது. அரசு அச்சகத்தில் பல்வேறு பணிகளின் அடிப்படைக் கூறுகள் குறித்து அறிவியல் முறையில் ஆய்வு செய்வதற்காக சென்னை உற்பத்திக் குழுவின் பணிகள் பெறப்பட்டன. அறிவியல் முறையில் தரங்களை நிர்ணயிப்பதும், உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியங்கள் அளிப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கும் பொருட்டு தகுந்த ஊக்கத் தொகை திட்டம் ஒன்றைத் தயாரிப்பதுமே இதன் நோக்கமாகும்.

9. மன நிறைவான பணி நிலைமைகளை உருவாக்க வேண்டிய தேவையை அரசு நன்கு அறியும். தொழிலாளர்களுக்கு இன்றியமையா வசதிகள் தொடர்ந்து

அளிக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வழங்குதல் போன்ற பல வசதிகள் கூடுதலாகக் கடந்த ஆண்டில் செய்து கொடுக்கப்பட்டன.

10. அரசு அச்சகம் கடந்த ஆண்டில் மிக முக்கிய அச்சுப் பணிகளைப் பெருமளவில் மேற்கொள்ளவேண்டியிருந்தது. இந்தத் தேவைக்குறிப்புப் பட்டியல்களைத் திட்டமிட்டபடி குறித்த காலத்தில் நிறைவேற்றி அனுப்பியதற்கு அச்சகப் பணியாளர், தொழிலாளர் ஆகியோரின் முழு ஒத்துழைப்பே காரணமாகும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் தொழிலாளர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் கடமை உணர்ச்சியும் வளர்ந்து வருவதையும் நான் இங்கு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். அரசு அச்சகத்தில் 1968–69-ல் 1,651 மெட்ரிக் டன் தாள் பயன்படுத்தப்பட்டிருக்க 1970–71-ல் 2,568 மெட்ரிக் டன் தாள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போலவே 1968–69-ல் 7,560 கிலோகிராம் அச்சு மை பயன்படுத்தப்பட்டிருக்க, 1970–71-ல் 13,787 கிலோகிராம் மை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பணியாளர்களின் எண்ணிக்கையையும், இயந்திரங்களின் எண்ணிக்கையையும் உயர்த்தாமல் போதிய அளவிலேயே வைத்துக்கொண்டு, தாள்களும், அச்சிடும் மையும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருப்பது, அண்மை ஆண்டுகளில் அரசு அச்சகத்தின் உற்பத்தித்திறன் அதிகரித்திருப்பதற்கு எடுத்துக்காட்டாகும். அவர்கள் தொடர்ந்து ஒத்துழைப்பை நல்கினால், தமிழ் நாடு அரசு அச்சகம் இந்த நாட்டில் உள்ள தலை சிறந்த, திறமை மிகுந்த அச்சகங்களில் ஒன்றாகத் திகழும் என்பதில் அரசுக்கு முழு நம்பிக்கையிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்வதுடன் இம் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



# இணைப்பு-6

[71-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

## எழுதுபொருள்—அச்சுத் துறை.

### 1971-72-ஆம் ஆண்டில் எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த ஆய்வுரை.

எழுதுபொருள்-அச்சுத் துறை, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயல்படுகிறது. இவர் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாவார். அச்சுப் பிரிவில் அச்சக இணை இயக்குநரும் தொழில் நுட்பப் பிரிவில் பணி மேலாளரும் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். எழுதுபொருள் பிரிவில், எழுதுபொருள் உதவி இயக்குநர் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகிறார். அரசு வெளியீடுகள் நிலையத்தில் பணியைப் பொறுத்த வரையில், விற்பனை அதிகாரி ஒருவர் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகிறார்.

அச்சகத் துறையில் கீழ்க்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன :—

(1) மைய அச்சகம், தங்கசாலைக் கட்டிடம், சென்னை-1.

(2) தமிழரசு அச்சகம், அண்ணா சாலை, சென்னை-2.

(3) உயர் நீதிமன்ற வழக்குப் பட்டியல் கிளை அச்சகம், சென்னை-1.

(4) மத்திய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை-3.

(5) கிளை அச்சகம், புதுக்கோட்டை.

(6) அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

(7) அரசு வட்டார அச்சகம், சேலம்.

(8) அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

2. தங்கசாலைக் கட்டிடம் தமிழ்நாடு அரசு அச்சகத்தில், அதன் பட்டியலின்படி சுமார் 2,800 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இந்த அச்சகத்தில் 68 அச்சு இயந்திரங்களும், 28 இடை அச்சு, வரியச்சு இயந்திரங்களும், 9 தனியச்சு இயந்திரங்கள், 15 அச்சு வார்ப்பு இயந்திரங்களும், 2 சூப்பர்காஸ்டர் இயந்திரங்களும் (Supercasters), தனி எழுத்து அச்சு வார்ப்பு இயந்திரம் ஒன்றும், 44 புத்தகம் கட்டும் யெந்திரங்களும் உள்ளன.

[1972 மார்ச் 24

தரப்படுத்தப்பட்ட படிவங்களையும், பதிவேடுகளையும், தரப்படுத்தப்படாத படிவங்களையும், பிற பலவகை வெளியீடுகளையும் மைய அச்சகம் அச்சிட்டதுடன் கூடுதலாக, கீழ்க்கண்ட பணிகளையும் பாராட்டத் தக்க அளவுக்கு அது நிறைவேற்ற முடிந்தது.

1972-ஆம் ஆண்டு அரசு நாட்குறிப்பேடுகள், நாட்காட்டிகள் போன்றவற்றை அரசு அலுவலகங்களின் தேவைப்பட்டியல்களுக்கிணங்க 1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளுக்கு முன்பே அச்சிட்டு வழங்கியதே அச்சுத் துறையில் இவ்வாண்டின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதைப்போலவே பள்ளி ஆண்டு துவங்குவதற்கு முன்னதாகவே 40 லட்சம் பாடப் புத்தகங்கள் 1971, ஏப்ரல் 30-ம் தேதிக்குள் அச்சிடப் பட்டன.

அரசிதழின் ஒவ்வொரு வெளியீட்டின் பக்கங்கள் அதிகரித்து வந்தபோதிலும், ஒவ்வொரு புதன்கிழமையும் முறையாகத் தமிழ்நாடு அரசிதழ் வெளிவருவதை உறுதிப் படுத்த, சிறப்பான முயற்சிகளை இத் துறை மேற்கொண்டுள்ளது. 1970, 1971-ம் ஆண்டுகளில் அச்சிடப்பட்டு, வழங்கப்பட்ட தமிழ்நாடு அரசிதழ்களின் பக்கங்களின் மொத்த எண்ணிக்கை கீழ்க்கண்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1970-ஆம் ஆண்டில். | 1971-ஆம் ஆண்டில். | 1970-ஆம் ஆண்டைவிட 1971-ல் அதிகரித்துள்ள சதவீதம். |
|---|---|---|---|
| A4 அளவுள்ள 8½" × 12" பக்கங்களின் எண்ணிக்கை சிறப்பிதழ்களின் பக்கங்கள் உட்பட. | 18,408 | 19,766 | 7 |
| 8vo ராயல் அளவுள்ள 6¼" × 10" பக்கங்களின் எண்ணிக்கை சிறப்பிதழ்கள் உட்பட (சட்டம், விதிகள்) முதலியவை. | 1,724 | 3,695 | 114 |
| இவ்வாண்டில் வெளியிடப்பட்ட சிறப்பிதழ்களின் எண்ணிக்கை. | 426 | 580 | 36 |



1972 மார்ச் 24]

ஆய்வாண்டில் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டமன்ற விவாதங்கள் குறித்து நிலுவையாயுள்ள அச்சுப் பணிகள் ஏறக்குறைய முடிக்கப் பட்டுள்ளன. 1969-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1971-ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டத் தொடரின் போது, சட்டமன்றப் பேரவை விவாதங்கள் குறித்து அச்சிடும் பக்கங்களின் எண்ணிக்கை சுமார் 59 சதவீதமும், சட்டமன்ற மேலவை விவாதங்கள் குறித்த அச்சிடும் பணியின் பக்கங்களின் எண்ணிக்கை 52 சதவீதமும் உயர்ந்துள்ளதைக் குறிப்பிடலாம். பணிச்சுமை அதிகரித்திருந்தபோதிலும், 1971 மார்ச்-ஏப்ரல், ஜூன்-ஜூலை, அக்டோபர் திங்கள் தொடர்பான சட்டமன்றப் பேரவை, மேலவை நடவடிக்கைகள் அச்சிட்டு வழங்கப் பட்டன. 1971-ஆம் ஆண்டு டிசம்பர், 1972-ஆம் ஆண்டு சனவரி இரு சபைகளின் கூட்டத்தொடர் சம்பந்தமான விவாதங்களின் பார்வைப் படிகள் முழுவதும் ஒப்புதலுக்காகச் சட்டமன்றத்துக்கு அனுப்பப் பட்டுள்ளன.

ஓராண்டுக்கு மேல் அச்சிடப்படாமல் நிலுவையாயுள்ள பணி இனங்கள் குறித்து குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. அவை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளால் நேரடியாக மேற்பார்வையிடப்பட்டு, இவ்வாண்டில் அச்சிடும் பணிகள் பல செய்து முடிக்கப் பட்டன. 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் அன்றுள்ளபடி, ஓராண்டு காலமாகியும் அச்சிடப் படாமல் இருந்த இனங்கள் 941 ஆகும். 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ஆம் நாள் அன்றுள்ளபடி, ஓராண்டுக்கு மேலாக அச்சிடப்படாமல் இருந்த இனங்கள் 102 இனங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளிலும், இத்துறையினால் நிறைவேற்றப்பட்ட பணியின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூபா ப. |
|---|---|
| 1968–69 .. ... ... | 1,74,89,279·87 |
| 1969–70 .. ... ... | 1,96,15,230·00 |
| 1970–71 .. ... ... | 2,03,90,308·00 |

"தமிழரசு" பத்திரிகை, ஆங்கிலத்திலும் தமிழிலும், சென்னை அண்ணா சாலையிலுள்ள தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகிறது. திங்கள் இருமுறை வெளியாகும் இப் பத்திரிகை, படங்களுடனும் பலவண்ண மேலட்டையுடனும் சுமார் 55,000 படிகள் தமிழில் அச்சிடப்படுகின்றன.

உயர்நீதி மன்றத்திலுள்ள வழக்குப் பட்டியல் அச்சகமும், மத்திய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகமும் வழக்குப் பட்டியல்கள், தரப்படுத்தப்பட்ட படிவங்கள் ஆகியவற்றை அச்சடிப்பதில் மனநிறைவளிக்கும் வகையில் பணி புரிந்துள்ளன. புதுக்கோட்டை கிளை அச்சகம், கீழ்க்கண்ட தேவைப் பட்டியல்களை அச்சிடும் பணியை மனநிறைவளிக்கும் வகையில் முடித்துள்ளது :—

(1) 13 மாவட்டங்களின் அரசிதழ்கள்.

(2) வடக்கு மதுரை, மதுரை நகரம், இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களின் புலனாய்வுக் கழகம் தொடர்பான பணி.

(3) தலைமைச் செயலகத் துறைகள் குறித்த (வார, ஆண்டு) அட்டவணைகள்.

(4) மதுரை வேளாண்மைக் கல்லூரிக்கான பால் அட்டைகள்.

(5) தமிழ்நாடு குடிவாரச் சட்டம் தொடர்பான அறிவிப்புகள்.

(6) சுருக்கு எழுத்து நோட் புத்தகங்கள், சுழல் திருகு பொருத்தப்பட்டுள்ள கோப்பு அட்டைகள் முதலியவை.

(7) தமிழ்நாடு கணக்கு விதிக்கோவை, தமிழ்நாடு நிதி விதிக்கோவை, கருவூல-கணக்கு விதி முறைகள் ஆகியவற்றின் தரப்படுத்தப்பட்ட படிவங்களும், ஓய்வூதியப் படிவங்களும்.

திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வட்டார அச்சகங்கள், தரப்படுத்தப்பட்ட படிவங்களைத் தவிர, காவல் துறையின்





அன்றாடக் குற்றத் தாள்களையும், வார, மாத குற்ற ஆய்வுரைகள் ஆகியவற்றையும் அச்சிடுகின்றன. அச்சகங்களுக்குச் சொந்தமாக கட்டிடங்கள் இருக்க வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காக, ஒவ்வொரு வட்டார அச்சகத்திற்கும் நிலங்கள் கையகப்படுத்தப்படும் பணிகள் நிறைவேறி வருகின்றன.

3. ஆய்வாண்டில் இயந்திரங்களின் கீழ்க்கண்ட பாகங்களும், சாதனங்களும் வாங்கப்பட்டு, அச்சகத்தில் சேர்க்கப்பட்டன :—

(1) மூன்று கத்திகள் கொண்ட புத்தகம் வெட்டும் இயந்திரம்—போலிகிராப் (கிழக்கு ஜெர்மனி தயாரிப்பு).

(2) கண்டால் யூனிவர்சல் ·'·போல்டிங் மெஷின் ஒன்று (இங்கிலாந்து தயாரிப்பு).

(3) மிதியச்சுப் பொறி ஒன்று (Ideal Treadle machine).

(4) லாரி ஒன்று—பார்கோ.

(5) துறை மோட்டார் வண்டி ஒன்று—அம்பாசடர்.

(6) மூன்று சக்கர டெம்போ வண்டி ஒன்று (Tempo Three-wheeler).

அச்சுக் கோப்புப் பணியைக் குறிப்பாக தமிழ் மொழியில் அச்சுக்கோப்புப் பணியை விரைவுபடுத்துவது தொடர்பாக அச்சகத்தின் தேவைகளைப் போதுமான அளவுக்கு நிறைவு செய்யும் நோக்கத்துடன், பெருமளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 11 தனியச்சு இயந்திரங்கள், 25 தனியச்சு வார்ப்பு இயந்திரங்கள் ஆகியவற்றின் உற்பத்தி விலை, காப்புறுதிக் கட்டணம்—சரக்குக் கட்டணம் ஆகியவை அடங்கிய மதிப்பாகிய ரூ. 36·90 லட்சம் அளவிற்கு அந்நியச் செலாவணி கிட்டியுள்ளது. அந்த இயந்திரங்களை வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கலாணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 1972ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த இயந்திரங்கள் பெறப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இயந்திரங்களை நிறுவிய உடன், சட்டமன்ற விவாதங்களை

அச்சிடும் பணி சீர்படுத்தப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கூட்டத் தொடரின் விவாதங்களின் படிகள் முழுமையாக அடுத்த கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு வழங்கப்படும்.

''தமிழரசு'' பத்திரிகையின் படிகளை உரிய காலத்தில் அச்சிட்டு வெளியிடும் தேவையைக் கருதி, 4 அச்சு இயந்திரங்களுடன் கூடிய ''வெப்-பெட் ஆப்செட் (Web-fed Offset Printing machine) அச்சிடும் இயந்திரம்'' ஒன்றை வாங்குவதற்கான செயற் குறிப்பு அரசின் ஆலோசனையில் உள்ளது.

இந்த இயந்திரத்தை வாங்குவதன்மூலம் ''தமிழரசு'' பத்திரிகையை விரைவாகவும் செம்மையாகவும் வெளியிட இயலும். புத்தகம் கட்டும் விதத்தை புதுமைப் படுத்துவதற்காக, புத்தகங்களைக் கம்பி மூலம் தைக்கும் பொறி (Eight-station feeder wire stitcher) ஒன்றுக்கு வேண்டுதல் ஆணை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் விரைவில் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. வெப்-பெட் ஆப்செட் இயந்திரம், ஐந்து தானியங்கி அச்சு இயந்திரத்திற்குச் சமமானது. கம்பி கொண்டு புத்தகம் தைக்கும் பொறி, புத்தகம் கட்டும் பணியை விரைவுபடுத்தி, ஒரு மணி நேரத்தில் 5,000 படிகளைத் தைத்துச் சீராக்குகிறது. இதனால், '' தமிழரசு '' பத்திரிகையை கணிசமான அளவுக்கு விரைவாக வெளியிட இயலும்.

பழைய, பழுதான இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களை நிறுவும் நோக்கத்துடன் 13 அச்சு இயந்திரங்கள், பழைய லாரி ஒன்று, மற்றும் பழுது பார்க்கவியலாத பிற வகைக் கருவிகள், ஆகியவை பொது ஏலத்தில் விடப்பட்டன. ஏலத்தில் கிடைத்த தொகையாகிய ரூ. 1,04,726 அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

கழிவுத் தாள், வெட்டுத் துண்டுகள் ஆகியவற்றை வாங்கிக் கொள்வதற்காக பொருத்தமான ஒப்பந்தக் காரர் ஒருவரை நியமிக்கவும், அச்சகத்திலிருந்து அவை முறையாக எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் முனைப்பான நடவடிக்கை எடுக்கப்





பட்டது. பழைய தாள், வெட்டுத் துண்டுகள் ஆகியவற்றை விற்றதன் வாயிலாக 1971–72-ல் (1972ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29ஆம் நாள் வரை) ரூ. 1,43,444 வசூலாகியது. கழிவுத்தாள்களைச் சரியாக விற்பதனால் வருவாய் கிடைப்பதோடன்றி, சூழ்நிலை துப்புரவாகவும் நல்ல நிலையிலும் இருக்கிறது.

4. உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும், ஏராளமான தொழிலாளர்களைக் கொண்ட அரசு அச்சகத்தை ஆதாயம் தரும் ஒரு நிறுவனமாக நடத்துவதற்கும், அரசு அச்சகத்தில் மூன்றுவது முறை மாற்றுப் பணியை ஏற்படுத்துவது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. தற்போது இரண்டு முறை மாற்றுப் பணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களை மூன்று முறை மாற்றுப் பணிகளில் பிரித்து அமர்த்தப்படுவர். இதனால், அச்சகத்தில், ஒவ்வொரு முறை மாற்றுப் பணியிலும் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை குறையும். ஒவ்வொரு முறை மாற்றுப் பணியிலும் இவ்வாறு பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதனால், போதிய இடவசதியும் நல்ல வசதிகளும் ஏற்படும். இதனால், தமிழ் நாடு அரசு அச்சகத்தில் சில இயந்திரங்களும் கருவிகளும் உபரியாக இருக்கும். இந்த உபரி இயந்திரங்களும், கருவிகளும், மத்திய சிறைச்சாலை அச்சகத்திற்கும் பிற இடங்களில் உள்ள அச்சகங்களுக்கும் அனுப்பப்படும்.

அரசு அச்சகத்தின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், சூளை, டிமெல்லோ சாலையில் உள்ள ஆனைக்கார் எஸ்டேட்டில் ஒரு கட்டிடம் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் அச்சகம் ஒன்றைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அச்சகம் தொடங்கப்பட்டால், சுமார் 800 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

அம்பத்தூரில் உள்ள தொழிற்பேட்டையில் தனி அச்சகம் (functional press) ஒன்றைத் திறக்கும் நோக்கத்துடன், தொழில் வர்த்தகத் துறை இயக்குநரிடமிருந்து, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மூன்று ஏக்கர் நிலம் வாங்குவதற்காக ரூ. 60,000 வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. அந்த இடத்தை வாங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரையில் தனி அச்சகம் ஒன்றைத் திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக மூன்று ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. வரைப்படம், திட்டங்கள் மற்றும் தொழில் வர்த்தகத் துறையின் மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து வந்த, கட்டிடப் பணிகளுக்கான மதிப்பீடுகள் ஆகியவை நிர்வாக ஒப்பளிப்பு வழங்குவதற்காகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

5. அரசு அச்சகத்தில், அறிவியல் முறையில் வேலைத் தரங்களை நிர்ணயிக்கும் நோக்கத்துடன் பல்வேறு வேலை முறைகளின் வேலை அளவு பற்றி அறிவியல் முறையில் ஆய்வு நடத்துவதற்காக சென்னை உற்பத்திக் குழுவின் பணிகள் பயன்படுத்தப்பட்டன. அச்சகத்தின் உற்பத்தி திறனளவைப் பெருக்குவதன் வாயிலாகத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான ஊதியங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் தகுந்ததோர் ஊக்கமளிப்புத் திட்டம் ஒன்றை வகுத்துத் தருமாறும் அக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

எழுதுபொருள்-அச்சுத்துறைப் பணியாளர்கள், தங்களது ஒரு நாள் சம்பளத்தை, தேசியப் பாதுகாப்பு நிதிக்காக மனமுவந்து அளித்துள்ளனர். இவ்வகையில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 35,210. இது 1972ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9ஆம் நாளில் மாண்புமிகு தொழிலாளர்-நல அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

6. கைதிகளின் திறமையை நன்முறையில் பயன்படுத்துவதற்கும், அவர்கள் பயிற்சி பெறுவதற்குப் பெருமளவு வாய்ப்பளிக்கவும் இயலும் பொருட்டு, இரு முறை மாற்றுப் பணி முறையை, மத்திய சிறைச்சாலை அச்சகத்தில் கொண்டுவர அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இம் முறையானது, 1971ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைதித் தொழிலாளர்கள், எழுதுபொருள்-அச்சுத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆகிய இருவகைத் தொழிலாளர்களுக்கும் ரொட்டியும், தேநீரும் வழங்கப்படுகின்றன.

7. அரசு எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்து, வல்லுநர் குழுவால் விரிவான ஆய்வு ஒன்று நடத்தப்பட வேண்டியது இன்றியமையாத அவசரமான



பணியாகுமென்று அரசு உணர்ந்தது. எனவே, கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட அலுவலகக் குழு ஒன்றை, 1969ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், அரசு அமைத்தது:—

(1) திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., சிறப்புச் செயலாளர், தொழில் துறை. — தலைவர்.

(2) இயக்குநர், தொழில்-வணிகத் துறை.

(3) இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி. — உறுப்பினர்கள்.

(4) தலைமைப் பொறியாளர் (பாசனம்) இவர் பொதுப் பணித்துறையின் பொறுப்பு வகிக்கிறார்.

(5) இயக்குநர், எழுதுபொருள்-அச்சுத் துறை. — உறுப்பினர்-செயலாளர்.

அரசினர் அச்சகம், எழுதுபொருள்-பண்டகசாலை ஆகியவற்றின் பணி குறித்து அவற்றின் எல்லா நிலைகளிலும் விரிவான ஆய்வு ஒன்றைச் செய்து, அரசுக்கு அறிக்கை அனுப்பிவைக்குமாறு இக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக் குழுவானது, இதுவரை மூன்று இடைக்கால அறிக்கைகளை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. தமிழ் நாடு அரசிதழை வெளியிடுவது, தரப்படுத்தப்பட்ட படிவங்கள், பிற வகைப் படிவங்கள் ஆகியவற்றை அச்சிடுதல், பழைய இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றை மாற்றியமைத்தல், தனி அச்சகப் பிரிவுகளைத் தொடங்குதல், இரவு முறை மாற்றுப் பணிக்கு அரசிதழ் பதிவு பெற்ற மேற்பார்வைப் பணியாளர்களை நியமித்தல் முதலியவை தொடர்பான பரிவுரைகள், முதல் அறிக்கையில் அடங்கியுள்ளன. எழுதுபொருள்கள் உட்பட இத் துறைக்குத் தேவையான அனைத்தையும் வாங்குதல், நிதி அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல் ஆகியவை தொடர்பான பரிவுரைகள் இரண்டாவது இடைக்கால அறிக்கையில் அடங்கியுள்ளன. அரசிதழ் பதிவு பெற்றோர் தொழிற்சாலையை மேற்பார்வையிடுவதில்லை என்பதும்,

தொழிற்சாலையில் ஒழுக்கக் குறைவு காணப்படுவதுமே உற்பத்திக் குறைவுக்குக் காரணமாகும் என்பது, இக் குழுவின் கருத்துரைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, அரசு அச்சகங்கள் அனைத்திலும் முறைவேலைப் பணி அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்காக, 3 துணைப் பணி மேலாளர்கள் பதவிகளையும், 11 உதவிப் பணி மேலாளர்கள் பதவிகளையும் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த அதிகாரிகளை நியமிப்பதன் மூலம், இத் துறையின் திறமை குறிப்பிடத் தக்க அளவுக்கு மேம்பாடடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இக்குழுவினால் இதுவரை அனுப்பி வைக்கப் பட்ட 89 பரிவுரைகளில், 42 பரிவுரைகள் குறித்து அரசு இறுதி ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

8. வழக்கம் போல, தொழிலாளர் நல வசதிகள் பற்றிக் குறிப்பாக நாட்டம் செலுத்தப்பட்டது. பல் வேறு நல நடவடிக்கைகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றிற்கு, நல நிதியிலிருந்து, இதுவரை, ரூ. 2,500 வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் குழு (Safety Committee) ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழுவின் முதல் கூட்டம் 1971ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ஆம் நாளன்று நடைபெற்றது. பணிக் குழுவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்ணா சாலை, தமிழரசு அச்சகத்தில் பணி புரியும் பெண் தொழிலாளர்களைக் கவனிப்பதற்காக, ஆர். எஸ். ஆர். எம். பேறுகால மருத்துவ மனையி லிருந்து பெண் மருத்துவர் ஒருவர், அடிக்கடி வந்து பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அச்சக மருத்துவ அதிகாரி, எழுதுபொருள் பண்டக சாலையை வாரம் ஒருமுறையும், அண்ணா சாலையிலுள்ள அச்சகத்தை வாரத்திற்கு இரு முறையும் பார்வை யிடுகிறார். ஈய நச்சுப் பாதிப்புக்கு உட்படுகிற தொழி லாளர்களுக்குப் பாலும், பல-வைட்டமின் மாத்திரை களும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. ரொட்டியும், தேநீரும் வழக்கம்போல் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டு வருகின்றன. அச்சகத் தொழிலாளர்கள் இறந்து விட்டால், அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு நல நிதி யிலிருந்து ரூ. 50 வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் 1971–72ஆம் ஆண்டில், நல நிதியிலிருந்து ரூ. 750 வழங்கப்பட்டுள்ளது.



தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறியவும், அவற்றைத் தீர்க்கவும், தொழிலாளர் நல உதவி அதிகாரி, வாரம் ஒரு முறை எழுதுபொருள் பண்டக சாலைக்கும், மாநகரிலுள்ள பிற கிளை அச்சகங்களுக்கும் சென்று பார்வையிடுகிறார்.

பெண் பணியாளர்களின் குழந்தைகளுக்கான காப்ப கங்கள் ஆய்வாண்டில் செவ்வனே பணியாற்றியுள்ளன. காப்பகத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் நாளொன் றுக்கு 280மி.லிட்டர் அளவுள்ள பால் வழங்கப்படுகிறது.

சென்னையிலுள்ள அரசினர் அச்சகத்தில் நீர்த்தட்டுப் பாட்டைப் போக்க, அங்கு ரூ. 26,000 செலவில் அமைக் கப்பட்ட குழாய்க் கிணறு ஒன்றும் மேல் நிலை நீர்த் தொட்டி ஒன்றும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ம் நாளில் திறந்து வைக்கப்பட்டன. தண்டையார்பேட்டையிலுள்ள அரசு அச்சகப் பணி யாளர்களுக்கான குடியிருப்பில் நீர் வழங்கு வசதிகளைப் பெருக்கும் பொருட்டு அரசு, ரூ. 20,000 செலவுக்கு ஒப்பளித்துள்ளது.

வரியச்சு, தனியச்சு, இயந்திரத்துறைகளில், தொழிற் சாலையில் அமைக்கப்படும் முறையில் விளக்கு பொருத்து வதற்கான செலவுக்கு ரூ. 77,245-க்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தேவையான அளவுக்கும் ஒரே சீராகவும் ஒளி வழங்குவதை இது உறுதிப்படுத்து கிறது. பணியாட்களின் கண்கள் பாதிக்கப்படுவதைக் குறைப்பதற்கு இது ஏதுவாகி, நல்ல முறையில் பணி செய்யவும் வழிவகுக்கும்.

மத்திய அச்சகம், அண்ணா சாலையிலுள்ள தமிழரசு அச்சகம் ஆகியவற்றில் சைக்கிள் நிறுத்தும் கொட்டகை கட்டுவதற்கும், புதுக்கோட்டை அரசினர் கிளை அச்சகத்தில் பணியாளர்களுக்காக ஓய்வுக் கொட்டகை கட்டுவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தனி ஒப்பந்தக்காரரால் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலை, மத்திய அச்சகத்தில் பணியாற்றுபவர்களின் தேவைகளை மனநிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து

[1972 மார்ச் 24

நிறைவேற்றி வருகிறது. அண்ணா சாலையிலுள்ள தமிழரசு அச்சகத்தில், பணியாளர்களுக்கான சிற்றுண்டிச்சாலை யொன்று திறக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்-அச்சுத் துறை பணியாளர் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம் தன்னுடைய பணியின் 50-ம் ஆண்டை எட்டியுள்ளது. அச்சங்கத்தின் பட்டியலில் 1,990 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5·97 இலட்சமாகும். 1970–71-ல் அச்சங்கம் உறுப்பினர்களுக்கு ரூ. 71·45 இலட்சம் கடனாக வழங்கியது. அது பெற்ற நிகர ஆதாயம் ரூ. 25,074 ஆகும்.

தமிழ்நாடு எழுதுபொருள்-அச்சுத் துறைப் பணியாளர் கூட்டுறவுப் பண்டகசாலை அச்சகத் தொழிலாளர்களுக்கு மனநிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து பணியாற்றியது.

தண்டையார்பேட்டை, காமராஜ் நகர் அச்சகத் தொழிலாளர் குடியிருப்பிலுள்ள 300 அங்கணங்களிலும் சென்னை அரசினர் அச்சகத் தொழிலாளர்கள் தொடர்ந்து குடியிருந்தனர். குடியிருப்புகளை முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளவும், தொழிலாளர்களால் புகார் செய்யப்படும் பல திருட்டுக்களைத் தவிர்க்கவும் ஏதுவாக, அரசினர் அச்சகக் குடியிருப்பு 'A' வகை வரிசைகளில் பற்றவைப்புச் சட்டங்களைப் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசினர் அச்சகத் தொழிலாளர்களின் குடியிருப்புகளில் வசதிகளை மேம்படுத்த தொடர்ந்து நாட்டம் செலுத்தப்படுகிறது.

தொழிலாளர் நலக் கல்வித் திட்டத்தின்கீழ், யூனிட் அளவில், வகுப்புகள் முறையாக நடத்தப்படுகின்றன. மூன்று தொழிலாளர்-ஆசிரியர்கள், சுமார் 150 தொழிலாளர்களைப் பயிற்றுவித்துள்ளனர்.

9. திருட்டுக்கள் நடப்பதைக் கண்காணிக்கும் பொருட்டு மெய்க்காப்புப் படையினரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசினர் அச்சகம், அதன் கிளைகள் ஆகியவற்றின் இயந்திரங்கள், தளவாடங்கள், மரச் சாமான்கள், அச்சுகள், அச்சுக்கான உலோகங்கள் ஆகிய



1972 மார்ச் 24]

வற்றின் இருப்புகள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சா பார்க்கப்படுகின்றன. இருப்புக் கணக்கெடுப்பு அதிகா 1971ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளில் உள்ள வாறு, ஐந்தாண்டுக் கணக்கெடுப்பு நடத்தியிருக்கிறார் அது குறித்த அறிக்கை, எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநரால் அரசிடம் அளிக்கப்பட விருக்கிறது.

மத்திய அச்சகம், அதனுடைய கிளைகள் ஆகிய வற்றின் பொருட்களின் இருப்பு, இருப்பு சரிபார்க்குப் அதிகாரியால் ஆண்டுதோறும் சரிபார்க்கப்படுகிறது.

அரசினர் அச்சகம், உற்பத்தித் திறன் மன்றத்தின் உறுப்பினராயுள்ளது.

1969ஆம் ஆண்டில், குறைந்த விபத்து ஏற்பட்ட சாதனைக்கு, எழுதுபொருள்-அச்சுத்துறைக்கு சுழற் கேடயமும், ரொக்கப் பரிசு ரூ. 1,000மும் கொண்ட மாநில முதற் பரிசு அளிக்கப்பட்டது.

10. அரசாங்க அலுவலகங்கட்கு வழங்கப்படும் எழுதுபொருட்கள், தட்டெழுத்துப் பொறிகள், கணக் கிடுங் கருவிகள், மேசைவிரிப்பு, சீருடை போன்றவற்றிற் கான துணிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குகிற முகவர் அமைப்பாக எழுதுபொருள் பிரிவு இருக்கின்றது. அது, இம் மாநிலத்திலுள்ள 2,665 அலுவலகங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. துறை அதிகாரிகள் காட்டிய பேரளவு ஆர்வத்தினாலும் முயற்சியினாலும், இத் துறை, தேவைகளைக் கணிசமான அளவுக்குப் பூர்த்தி செய்தது.

இத் துறையின் வாணிக நடவடிக்கைகளின் மதிப்பு 1968–69-இல் ரூ. 87,72,900-லிருந்து 1970–71-இல் ரூ. 1,35,83,738ஆக உயர்ந்துள்ளது. இத் துறை 1969–70-இல் 542 தட்டெழுத்துப் பொறிகளை வழங்கியிருக்க, 1970–71-இல் 982 தட்டெழுத்துப் பொறிகளை வழங்கியது.

இம் மாநிலத்தின் வாணிகத் துறைகள், சில மத்திய அரசு அலுவலகங்கள், ஓரளவு அரசுத் தன்மை வாய்ந்த சில நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு விலை முன்னதாக செலுத்தப்பட்டதன் பேரிலோ அல்லது கணக்குச் சரிக்

கட்டல் மூலமாகவோ எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நேர்வுகளில், தட்டெழுத்துப் பொறிகள், படிபெருக்கிப் பொறிகளுக்கு 5 சத வீதமும், கணக்கிடும் பொறிகளுக்கு 6 சத வீதமும், ஏனைய எழுது பொருட்களுக்கு 21 சத வீதமும் துறைக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பயனற்றவையென ஒதுக்கப்பட்ட தட்டெழுத்துப் பொறிகள், படிபெருக்கிகள், கையால் எண்பொறிக்கும் பொறிகள், ஏனைய பல்வகை எழுது பொருட்கள் ஆகியவற்றை விற்றதனுல் ரூ. 1,02,984 கிடைத்தது. எழுதுபொருள்-அச்சுத்துறையின் எழுது பொருள் பிரிவுக்கு ஏற்படும் செலவில் பெரும்பங்கு, பெரும்பாலும் இந்தியாவில் செய்யப்படும் எழுது பொருட்கள் வாங்குவதினுலும், காகிதம், அட்டைகள், தட்டெழுத்துப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கிடும் பொறிகள் ஆகியவற்றை வாங்குவதினுலும் ஏற்படுவதாகும்.

இறுதியாக, எழுதுபொருள்-அச்சுத்துறையின் சாதனை மிகவும் மன நிறைவளிப்பதாயுள்ளது.



## இணைப்பு 7

[265-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தொழிலாளர் நல அமைச்சர் உரை.

### கோரிக்கை 24—தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும்.

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் பேரில் "கோரிக்கை 24—தொழிற்சாலைகள் உட்படத் தொழிலாளர்கள்" என்பதன் கீழ் ரூ. 1,00,28,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்னுரைக்கின்றேன். வேலை தேடித்தரும் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் இக்கோரிக்கையில் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத்துறை, வேலைவாய்ப்புப் பயிற்சி இயக்குநர் அலுவலகத்தின் தொழிலாளர் வேலைவாய்ப்புப்பிரிவுத் துறை ஆகியவை 1971–72-ல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது. அதைக் கண்ணுறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத்துறையில் பொதுவான கொள்கை பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்க உரைக்க விரும்புகிறேன்.

தொழிலாளர்களிடையே அமைதியைக் காத்தும், அதன் மூலம் தொழில் வளர்ச்சி பெருகவும், தொழிலாளர் முன்னேற்றம் அடையவும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். "வளர்க தொழில்—வாழ்க தொழிலாளர்" என்ற குறிக்கோள்தான், தமிழ்நாடு அரசின் தொழிலாளர் கொள்கையாகும். கூட்டாகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஊக்கமளிக்கையில், அமைதிக்கும், தொழில் உற்பத்திக்கும் இடையூறு ஏற்படுமாயின், அப்போது தொழிலாளர் நலன், தொழில் நலன் மட்டுமல்லாது மக்களின் நலனையும் பாதுகாக்க அரசு தலையிட வேண்டியுள்ளது. தொழிலாளர் பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியவற்றைப் பாதுகாப்பதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் எத்தகைய வேறுபாடுமின்றி தொழிலாளர் சட்டங்கள் தொழிலாளர் நலச் சட்டங்கள் அனைத்தையும் திறம்படச் செயல்படுத்துவதும் இவ்வரசின் கொள்கையாகும்.

இந்த ஆய்வாண்டில், தொழிலாளர் நலத்திட்டம் ஒன்றைத் தொடங்கியிருப்பதன் வாயிலாக் தொழிலாளர் வர்க்கத்தின் நல்வாழ்வைப் போற்றிப் பாதுகாத்துப் வருவதற்காக நாம் நிறைவேற்றிவரும் திட்டங்களுக்குப் புதியதோர் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டப்படிக்கான விதி முறைகளின்கீழ் வராத தொழிலாளர்களுக்கு நல்வாழ்வையும் வசதிகளையும் அளிக்க இத்திட்டம் முற்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக வருங்காலத்தில் தொழிலாளர் வாழ்வில் பெருமகிழ்ச்சியையும் பெரும் வசதிகளையும் அளிக்க இயலும்.

தமிழ்நாடு அரசு தனது கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதில் தொழிலாளர் தலைவர்களும், தொழில் துறையில் முன்னணியில் நிற்பவர்களும் மாநிலத் தொழிலாளர்

ஆலோசனை வாரியத்தின் மூலமாகத் தமிழக அரசுக்கு ஆலோசனை
நல்குகின்றனர். மாநில நிலையில் தொழிலாளர் குறித்த பிரச்சினைகள்
அனைத்திலும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் இவ்வாரியம் இம் மாநிலத்
தில் முக்கியமான முக்கூட்டு ஆலோசனை மன்றமாகும்.

### வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் உழைப்பு நாட்கள் விரயம்

நமது மாநிலத்தில் அண்மைக் காலங்களில் நடந்த வேலை
நிறுத்தங்கள், வேலைநிறுத்த அச்சுறுத்தல்கள், பிறவகை பேராட்டங்கள்
காரணமாக ஓரளவுக்குத் தொழிலாளர் அமைதி குன்றியுள்ளது.
1970-ஆம் ஆண்டில் 277 வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும்
நடந்தன. விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 1,033,377
ஆகும். 1971-ஆம் ஆண்டில் 308 வேலைநிறுத்தங்களும், கதவடைப்ப
களும் நடந்தன. விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை
2,286,507 ஆகும். பஞ்சாலைத் தொழில் போன்ற பெரிய தொழிற்
சாலைகளிலும், சென்னை, சிம்சன் தொகுதி நிறுவனங்கள் போன்ற
பெரிய நிறுவனங்கள் சிலவற்றிலும் நடந்த வேலைநிறுத்தங்கள்,
கதவடைப்புக்கள், விரயமான உழைப்பு நாட்கள் ஆகியவற்றின்
எண்ணிக்கை உயர்ந்ததற்கு முக்கிய காரணமாகும். எனினும் இத்தகைய
தகராறுகள் எழும்போது, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக் காப்பது
நமது பொறுப்பாகும். ஒரு பக்கம் உற்பத்திக்கு இடையூறு ஏற்படா
வண்ணம் பாதுகாக்க வேண்டும். அதே சமயத்தில் தொழிலாளர்களின்
சட்டப்படிக்கான உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் நமக்கு
ஏற்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு இத்தகைய தகராறுகளுக்கு
நல்லெண்ணத்துடனும், பொறுமையுடனும் தீர்வுக் காணப்பட்டுள்ளது
இப்போதும் அவ்வாறே தீர்வு காணப்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாக
சிம்சன் நிறுவனத் தகராறில், நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள்
வேலையிருந்து நீக்கப்பட்ட பின்னர் அல்லது தற்காலிகமாக வேலையிலிருந்து
நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர், இப்பிரச்சினையில் மாண்புமிகு டாக்டர்
கலைஞர் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தீர்வு கண்டதன் பலனாக
அவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

ஊதியக் கொடைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள 4 சதவீத
குறைந்த அளவு ஊதியக் கொடையை அதிகப்படுத்த மத்திய
தொழிலாளர் நல அமைச்சர் நல்லெண்ணத்துடன் மேற்கொண்ட
முயற்சிகளினால் தொழிலாளர் உள்ளங்களில் தீபாவளி சமயத்தில்
நம்பிக்கை வளர்ந்தது. இதன் விளைவாக நாடெங்கணும் பல பகுதிகளில்
தகராறுகள் கிளைத்தன. தமிழ்நாட்டில், வேலை நிறுத்தங்களால் பாதிக்கப்
பட்ட பிற தொழிற்சாலைகளிலேயே மிகவும் பாதிக்கப்பட்டவை பஞ்சாலை
களாகும். கோயம்புத்தூரில் 78 பஞ்சாலைகளில் தொழிலாளர் சங்கங்கள்
சில பிறவற்றிற்கிடையே, ஊதியக் கொடை குறித்து உடன்பாடு ஒன்று
செயலில் இருந்தபோதிலும 8-1/3 சதவீதம் குறைந்த அளவு ஊதியக்
கொடை கேட்டும் ஊதியக் கொடையின் மீதான உச்சவரம்பினை அகற்று
மாறு கோரியும் வேலை நிறுத்தம் செய்ததன் விளைவாக இவ்வாலைகளில்
5—10—1971 முதல் 21—10—1971 வரை வேலை நின்று விட்டது.
இறுதியில் 3 லட்சம் உழைப்பு நாட்கள் விரயமான பின்னர், சென்னை
தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டினைத்
தொடர்ந்து தொழிலாளர்கள் தங்கள் வேலைநிறுத்தத்தினை கைவிட்டனர்.



ஊதியக் கொடையை 4 சதவீதத்திலிருந்து 8-1/3 சதவீதமாக உயர்த்து
வதற்குச் சட்டம் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்திய
அரசினை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

### தீர்வு காணப்பட்ட முக்கியமான தகராறுகள்

மதுரையிலுள்ள மதுரை மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார்
7,200 தொழிலாளர்கள், பணியிலிருந்து ஓய்வு பெறும் வயதை 60 ஆக
வரையறுக்குமாறும், பணிக் கொடைத் திட்டத்தை, தாராளமாக்குமாறு
கோரி 2—7—1971 முதல் பணிக்குச் செல்லாமல் நின்றுவிட்டனர்.
பின்னர் மதுரையில் 9—7—1971-ஆம் நாளன்று சென்னை, தொழிலாளர்
நல ஆணையாளர் முன்னிலையில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள்
சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின் பலனாக,
தொழிலாளர்கள் தங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு 10—7—1971-ல்
மீண்டும் பணியைத் தொடங்கினர். இதைப் போலவே, தூத்துக்குடியி
லுள்ள மதுரை மில்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 1,878 தொழிலாளர்
களும், இதே பிரச்சினைக்காக 7—7—1971 முதல் வேலைநிறுத்தம்
செய்தனர். மேலே குறிப்பிட்ட உடன்பாட்டின் பலனாக, இந்தத் தொழி
லாளர்களும் தங்கள் வேலைநிறுத்ததைக் கைவிட்டு 10—7—1971-ல்
மீண்டும் பணிக்குத் திரும்பினர்.

நெய்வேலி நிலக்கரிக் கழகத்தைச் சேர்ந்த 960 இளநிலைப் பொறி
யாளர்களும், 500 மேற்பார்வைப் பொறியாளர்களும் தங்கள் கோரிக்கை
களுக்காக 2—10—1971 முதல் தொழிற்சாலைக்குள்ளேயே வேலை
நிறுத்தத்தை தொடங்கினர். சென்னையில் 8—10—1971-ஆம் நாளன்று
மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர் முன்னிலையில் நடத்த பேச்சு வார்த்தை
களின் பயனாக 9—10—1971 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது
10—10—1971 முதல் அமைச்சர் முன்னிலையில் உடன்பாடு ஒன்று
ஏற்பட்டது. 1970—71-ஆம் ஆண்டுக்கான ஊதியக் கொடை குறித்து
நெய்வேலி நிலக்கரிக் கழகத்தில் ஏற்பட்ட தகராறுக்கும், மத்திய
தொழிலாளர் நல அமைச்சர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில்
என் முன்னிலையில் தீர்வு காணப்பட்டதோடு ஊதியக் கொடை 5 சதவீத
மாக முடிவு செய்யப்பட்டது.

சென்னை இரப்பர் தொழிற்சாலையைச் சேர்ந்த 1,527 தொழிலாளர்கள்
ஊதியங்கள், அகவிலைப்படி முதலியவற்றைத் திருத்தியமைத்தல் என்ற
கோரிக்கைகள் தொடர்பாக 17—4—1971 முதல் வேலை நிறுத்தம்
செய்தனர். இப்பிரச்சினை குறித்து பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்த
போதிலும் 1971 ஜூலை மாதம் முதல் வாரம் வரை இத்தொழிற்சாலை
யில் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடந்தது. ஊதிய உயர்வு, ஊக்கத்
தொகை உயர்வு தொடர்பான பிரச்சினைகளை இவ்வரசு 5—7—1971-ல்
நடுவர் மன்றத்திற்கு அனுப்பியது. வேலைநிறுத்தம் தொடர்ந்து நடை
பெறுவதற்கு நடுவர் மன்றமும் தடைவிதித்தது. இறுதியாக 21—7—1971-ல்
தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். இப் பிரச்சினைகளை நடுவர்
மன்றத்திடம் விட்ட பின்னருங்கூட, தொழிலாளர் தரப்பினருடனும்
நிர்வாகத்தினருடனும் நான் பேச்சு வார்த்தை நடத்தி தொழிலாளர்
களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வந்த நன்மையைக் காட்டிலும் அதிக
நன்மையை அவர்களுக்குப் பெற்றுத் தந்தேன். இந்த அடிப்படையில்
18—11—1971-ஆம் நாளன்று நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்
களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

சென்னை இரப்பர் தொழிற்சாலையில் ஏற்பட்ட தகராறில் அத்தொழிற்சாலைத் தொழிலாளர் நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் நான் தீர்வு காண விழைந்தது போலவே, இந்தியா சிமிண்ட்ஸ், சங்கரி; சேலம் டெக்ஸ்டைல்ஸ், ஆத்தூர்; பீடித் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி; சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ், நான்குனேரி; மற்றும் வேறுபல தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் அரசின் சார்பில் நான் உதவி செய்ய முடிந்தது. இம்மாநிலத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிற்சாலையிலும், சர்க்கரைத் தொழிற்சாலையிலும் அண்மையில் ஏற்பட்ட தகராறுகளுக்கு என்னால் தீர்வு காண முடிந்தது. இத்தகராறுகள் அனைத்திலும் தொழிலாளரும், நிர்வாகத்தினரும் நல்லெண்ணத்தையும், பொறுப்பு உணர்ச்சியையும் காட்டி வந்தமைக்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் சிம்சன் தொகுதி நிறுவனங்களில் அக்டோபர்/நவம்பர் மாதத்தில் எழுந்த தகராறு பற்றிச் சில வார்த்தைகளை நான் கூறவேண்டும்.

30—10—1971-ல் சிம்சன் தொகுதி நிறுவனங்களில் ஒன்றான எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனம் தொடர்ந்து விரயத்தில் செயல்பட்டு வருவதன் காரணமாக 98 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதாக அதன் நிர்வாகத்தினர் அறிவித்தனர். அதன் பின்னர் அந்நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அதே நாளன்று அண்ணா சாலையில் உள்ள சிம்சன் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சாலையில் தொழிலாளர்கள் சிலர் 1968-ல் நடந்த 24 நாட்கள் வேலை நிறுத்தத்திற்கு ஈடு செய்யும் ஓர் ஏற்பாடாக சனிக்கிழமையன்று அவர்கள் பணிக்கு வருமாறு அழைக்கப்பட்டதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இதன் விளைவாக 1-11-1971-ல் இரு தொழிலாளர் பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டு அதனால் பணி நின்றுவிட்டது. தொழிலாளர் தலைவர்களுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தி 15—11—1971-ல் சமரச ஏற்பாடு ஒன்றைக் கொண்டுவந்தேன். அதன் அடிப்படையில், வேலைநிறுத்தம் செய்துவந்த தொழிலாளர்கள் 16–11—1971-ல் பணிக்குத் திரும்பினர். ஆனால் செம்பியத்தில் உள்ள சிம்சன் நிறுவனக் கிளைகளில் மீண்டும் ஒரு தகராறு எழுந்தது. இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தில் 22–11–1971-ல் தொழிலாளர் ஒருவர் ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்டதனால் அவரை வேலையைவிட்டு வெளியே போகுமாறு அதன் நிர்வாகத்தினர் கூறினர். இதனால் இப்பிரச்சினை குறித்துக் கருத்து வேறுபாடு கொண்ட தொழிலாளர்களிடையே சண்டை ஏற்பட்டது. அதன் பின்னர், அந்தப் பிரிவிலிருந்தும், செம்பியத்திலுள்ள ஏனைய பிரிவுகளிலிருந்தும் தொழிலாளர்கள் வெளியேறினர். இதன் விளைவாக, அண்ணா சாலையிலுள்ள சிம்சன் கிளை நிறுவனங்களிலும் பணி நின்றுவிட்டது. தொழிற்சங்க அலுவலக உறுப்பினர்கள் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும். ஊதியங்கள், உற்பத்தி அளவு குறித்து ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தங்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டுமென்பதே தற்போது அவர்கள் எழுப்பியுள்ள முக்கியக் கோரிக்கைகளாகும். காவலர் பாதுகாப்பு அளித்தல், எஸ். ஆர்.வி.எஸ். நிறுவனத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்



களுக்கு மீண்டும் வேலையளித்தல், தொழிலாளர் குறித்து காவலர் தொடுத்துள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுதல், தொழிலாளர் பழிவாங்கப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல் ஆகியவை அவர்கள் எழுப்பியுள்ள பிற கோரிக்கைகளாகும். எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்தில் 98 தொழிலாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டது குறித்த தகராறு நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்காக விடப்பட்டது. அப்படியிருந்தும் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பவில்லை.

இறுதியாக, தொழிலாளர்களுக்குக் காவலர் பாதுகாப்பு அளித்தல், தொழிற்சங்கத் தேர்தல்கள், எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுதல், தொழிலாளர்களைப் பழி வாங்கவிதனின்றும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் முதலியவை குறித்து ஆவன செய்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்ததன்பேரில் தொழிலாளர்கள் 16—12—71-ல் பணிக்குத் திரும்ப ஒப்புக்கொண்டனர். இருந்தும் தொழிலாளர்களிடையே மோதல் ஏற்பட்டு அதன் விளைவாக எல்லா பிரிவுகளிலும் பணி நின்றுவிட்டது. செம்பியத்திலுள்ள சிம்சன் தொழிற்சாலை வளவும், அங்குள்ள சாதனங்களும் கணிசமான அளவுக்குச் சேதமடைந்தன. இதனால் அங்குள்ள இடிபாடுகளை அகற்ற தொழிற்சாலைகள் ஒருநாள் முதல் ஒரு வாரம் வரை மூடப்படவேண்டியதாயிற்று. இந்நிகழ்ச்சிகள் நடந்தபோதிலும், முதலமைச்சர் தாம் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குறுதியை, 17—12—1971-ல் மீண்டும் வலியுறுத்தினர். ஆனாலும் தொழிலாளர்கள் அதனைச் செவி மடுக்காது, 20—12—1971-ல் சில கிளை நிறுவனங்கள் மீண்டும் திறக்கப் பட்டபோது அவர்கள் பணிக்குத் திரும்பவில்லை. அதன் பின்னரும் முடக்க நிலை நீடித்தது. இன்றியமையாத பாதுகாப்புச் சாதனங்கள் பொதுமக்களுக்குப் பயனுள்ள பொருள்களைத் தயாரிக்கும் பிரிவுகளில் கூட ஒரு சிலரே வேலைக்கு வந்திருந்தனர். இதனால் அப்பிரிவுகளிலுள்ள பணிகளுக்கு இந்தியப் பாதுகாப்பு விதிகளின் 119-வது விதி பொருந்தும் வகையில் 4—1—1972-ல் அரசு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்து அவர்களுக்குள்ள குறைபாடுகளைப் பற்றி விசாரணை செய்யவும் 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் விசாரணை நீதிமன்றம் ஒன்றையும் அரசு அமைத்தது. அமைதியை நிலைநாட்ட மேலும் ஒரு முயற்சியாக; பல்வேறு குற்றச்சாட்டுகள், குறித்துக் காவலில் வைக்கப்பட்டுள்ள 21 தொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு அரசு ஆணையிட்டது. அத்துடன் பணியிலிருந்து நீக்கப்பட்ட 288 தொழிலாளர்களையும், தற்காலிகமாகப் பணியிலிருந்து நிறுத்திவைக்கப்பட்ட 37 தொழிலாளர்களையும் மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள்ளுமாறு அதன் நிர்வாகத்தினரையும் அரசு வற்புறுத்தியது. இவ்வாறு அடுத்தடுத்து பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பாநிலை தொடர்ந்து நீடித்தது. இறுதியாக 10—1—1972-ல் மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர் முன்னிலையில் மத்திய தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக, ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி தகராறுள்ள பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தவும், அவசரமான அன்றாடப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும், தொழிற்சங்க

உறுப்பினர்களுக்காக தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யவும் ஆறு உறுப்பினர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இவ்வுடன்பாட்டின் பயனாக, 12-1-1972-ல் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். ஆனாலும், அந்தந்த தொழிலாளர் தொகுதித் தலைவர்கள் தங்களது வழக்கமான பணியைச் செய்யாததனால் அவர்களிடையே ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக செம்பியத்தில் சில பிரிவுகளில் 1972 ஜனவரி மாதம் 19, 20, 21-ஆம் நாட்களில் மீண்டும் தடைகள் ஏற்பட்டன. 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி அண்ணா சாலையிலுள்ள சிம்சன் நிறுவனத்தைச் சேர்ந்த சில பிரிவுகளிலும் பணி நின்றுவிட்டது. 22—1—1972-ல் சிம்சன் தொகுதி நிறுவனங்கள் தொழிலாளர் பணியாளர் சங்கங்களின் தலைவர் திரு. கே. கோபாலும், ஏனைய உறுப்பினர்களும் தொழிலாளர் சங்கங்களிலிருந்து பதவி விலகினர். 24—1—1972-ல் செம்பியத்தில் தொழிலாளர்களிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டு காவலர் அதில் தலையிட வேண்டியதாயிற்று. செம்பியத்திலுள்ள தொழிற்சாலைகள் 1—2—197 வரை மூடப்பட்டு இருந்தன. 2—2—1972-ல் அவை மீண்டும் திறக்கப்பட்டன. தொழிலாளர்களும் படிப்படியாகப் பணிக்குத் திரும்பினர்.

ஆனால் 23—2—1972 அன்று செம்பியத்தில் உள்ள ஒரு பிரிவில் மறுபடியும் தொழிலாளர்க்கிடையே மோதல் ஏற்பட்டது 24—2—1972 முதல் செம்பியத்தில் எல்லா பிரிவுகளிலும் அண்ணா சாலையில் உள்ள ஒரு நிறுவனமும் மூடப்பட்டன. அறுவர் குழுவும் கலைக்கப் பட்டது.

இறுதியில் 16—3—1972 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் முன் என்னுடைய உதவியுடன் எனது சகா தொழில் அமைச்சரின் உதவியுடனும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக 20—3—1972-லிருந்து வேலையை திரும்ப தொடங்க ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. 24—3—1972 அன்று பிப்ரவரி மாத ஊதியத்தை வழங்க நிர்வாகம் இணங்கியது. தொழிலாளர் ஆகஸ்ட் 1971 உடன்படிக்கைக்கு முற்பட்ட இயல்பான உற்பத்தியைக் கொடுப்பர் என்று தொழிலாளர் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். தொழிலாளர் பிரதிநிதிகளின் ஒப்புதலோடு தொழிலாளர் துறை உதவி துணை ஆணையரை தேர்தல்களை நடத்தும் அலுவலராக அரசு நியமித்துள்ளது. தேர்தல் விரைவிலேயே எவ்விதத்திலும் வேலை தொடங்கிய 4 வாரத்திற்குள் நடத்தப்படும். தேர்தல்கள் நடத்தப்படும்வரை அன்றாடக் குறைகளை நடுவிணக்கம் செய்து தீர்ப்பதற்கு செம்பியத்தில் ஒருவரும், அண்ணா சாலையில் ஒருவருமாக இரு தொழிலாளர் துறை அலுவலரை அரசு நியமனம் செய்யும். எஸ். ஆர். வி எஸ். நிறுவனத்தில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையிலமர்த்துவது பற்றி நிர்வாகம் முதலமைச்சரின் உறுதிமொழியை நிறைவேற்றி உடனேயே 12 மஸ்தூர்களை எடுத்துக்கொள்ள இணங்கியது.

இத்தகராறுகளுக்கும், இளர்ச்சிகளுக்கும் தீர்வுகாண நானும் எனது துறையும் அயராது முயற்சி எடுத்துக்கொண்டதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அத்துடன் நமது மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர்





தமது அரிய நேரத்தை அவசியமான போதெல்லாம் இத் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் செலவிட்டு தனது அரும்பெரும் ஆலோசனையையும் உதவியையும் எனக்கு நல்கியதை நான் ஈண்டு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடியும் மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் திறப்பதும்

பஞ்சாலைகள் மூடப்பட்டதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. அரசு இப்பிரச்சினையைக் கவலையுடன் கவனித்து வருகிறது. தகராறுகள் காரணமாக ஆலைகள் மூடப்பட்டிருப்பின் அத்தகராறுகளுக்கு இணக்கமான முறையில் தீர்வுகாண ஏற்பாடு செய்வதன் மூலமும் சீரமைப்பு குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமும் ஆலைகளை மீண்டும் திறக்க அரசு உதவியோடு, பொருளாதார மந்த நிலைமை காரணமாக மூடப்பட்டுள்ள ஆலைகளை மீண்டும் திறக்க உதவி செய்வதற்காக அவ்வாலைகள் குறித்து நன்கு ஆய்ந்தபின்னர் வங்கியிடமிருந்து அவை கடன் பெறத் தேவையான உத்தரவாதத்தை அளிப்பதன் மூலமும் அரசு பஞ்சாலைகளுக்கு உதவி புரிந்து வந்துள்ளது.

1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ், மூடப்பட்ட ஆலைகளின் நிர்வாகத்தை மேற்கொண்டு அவற்றை நடத்துவதற்கு அதிகாரி உரிமை பெற்ற கட்டுப்பாட்டு அதிகாரிகளாகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தையும் அரசு அமைத்தது. இதுவரை இக்கழகம், மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகளின் நிர்வாகத்தை மேற்கொண்டு அவற்றை நடத்தி வருகிறது :—

(1) ஸ்ரீரங்கவிலாஸ் பருத்தி விதை எடுத்தல், நூற்பு-நெசவு ஆலை, கோயம்புத்தூர்.

(2) கிருஷ்ணவேணி ஆலை, கோயம்புத்தூர்.
(3) கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர்.
(4) கம்போடியா ஆலை, கோயம்புத்தூர்.
(5) ஓம் பராசக்தி ஆலை, கோயம்புத்தூர்.

இந்த ஆலைகள் திறக்கப்பட்டதன் பயனாக 4,732 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. பின்வரும் ஆலைகளையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டும் இந்திய அரசுக்கு இவ்வரசு கடிதமெழுதியுள்ளது :—

(1) காளீஸ்வரர் ஆலை, கோயம்புத்தூர்.

(2) சோமசுந்தரம் ஆலை (தனியார்), கோயம்புத்தூர்.

(3) கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை, கோயம்புத்தூர்.

(4) பங்கஜா ஆலை, கோயம்புத்தூர்.

(5) ஸ்ரீபாலமலை ரங்கநாதர் ஆலை, கோயம்புத்தூர்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 பஞ்சாலைத் தொழிற் சங்கங்களின் கூட்டுச் செயற்குழு 19 கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை வெளியிட்டு அவை நிறைவேற்றப்படாவிட்டால் 12-2-1972 முதல் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலை

நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அறிவித்தது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை பரிவுடன் கவனித்து ஆவன செய்வதாக அரசின் சார்பாக உறுதி கூறியும்கூட, தொழிலாளர்கள வேலை நிறுத்தத்தைத் திரும்ப பெறவில்லை. அதன் பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் பிப்ரவரி 18 19 தேதிகளல் பேச்சுவார்த்தை நடத்ினுர். தொழிலாளர் தலைவர்கள் முதலமைச்சருடைய ஆலோசனைகளையும் நிராகரித்து வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் தொடர்ந்து நடத்தினர். மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் முன்பாக நடந்த பேச்சுக்களையடுத்து நிர்வாகத்தினரும், தொழிலாளர் சங்கங்களும் முதலமைச்சருடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொணடதன் பின்னர்; இறுதியாக 11/12-ம் தேதி இடைப்பட்ட நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். ஒப்பந்தப்படி, அடிப்படை ஊதியத்தை மாற்றியமைத்தல், பஞ்சப்படி ஆகிய இரு கோரிக்கைகளும் 'சமரசக் குழு'வின் தீர்வுக்கு விடப்படும். தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்களின் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர் ஆலைகள் 10 நாள் மொத்த ஊதியத்தைத் தொழிலாளர்களுக்கு இடைக்காலத் தொகையாக அளிக்கும். இத் தொகையை எவ்வாறு சரி செய்வது என்பதை சமரசக் குழுவின் தீர்வுக்கு விடப்படும். கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஆறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மொத்தமாக முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அளிப்பதற்காக, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அதை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு, கூட்டுச் செயற்குழுவைச் சார்ந்த சங்கங்களையும், மற்றைய சங்கங்களையும் கலந்து பகிர்ந்து அளிப்பார்.

திருப்பூர் பனியன் தொழிலாளர் தங்கள் ஊதிய உயர்வு பற்றிய தகராறில் 7-2-1972 முதல் வேலை நிறுத்தம் செய்திருந்தனர்.

1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதி அன்று சென்னையில தொழிலாளர் நல ஆணையர் முன் நடந்த பேச்சுவார்த்தையின பயனாக தற்போதுள்ள ஊதியத்தில் 20 விழுக்காடு இடைக்கால உயர்வாகக் கொடுப்பதென்றும் 20-3-1972 அன்று தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்புவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது

இறுதியாக ஊதிய நிர்ணயம் செய்வதற்கு முன் சென்னை உற்பத்தித் திறன் குழு தொழிலாளர் செய்ய வேண்டிய வேலை அளவை நிர்ணயம் செய்யும்.

அதற்குப் பின்னுல் வேலை அளவுக்கு உரிய ஊதியத்தை சமரசப் பேச்சு மூலமாகவோ அல்லது நடுவர் தீர்ப்பு அல்லது தொழில் கோர்ட் மூலமாகவோ முடிவு செய்யப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சுமார் 7,000 தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

### குறைந்த அளவு ஊதியங்களை வரையறுத்தல்

எத்தகைய தொழிற்சங்கத்தின் கீழும் வராத (Unorganised Labour) தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை வரையறுப்பதற்காக





அரசுக்கு ஆலோசனை வழங்க கீழ்க்காணும் தொழில்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன:—

(1) விசைத்தறி தொழிலில் வேலை.

(2) (பீடி தயாரிப்புத் தொழில் உட்பட) புகையிலை தயாரிப்புத் தொழிலில் வேலை.

(3) அரிசி, மாவு அல்லது பருப்பு அரவை ஆலையில் வேலை.

இவ்வாண்டில், கயிறு தயாரிப்புத் தொழிலிலும் வெட்டு மரத் தொழிலிலும் வேலை செய்வோர்க்கான குறைந்த அளவு ஊதியங்களை அறிவிப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் தங்களது அறிக்கைகளை அனுப்பியுள்ளன. இவ்வறிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கைத்தறிப் பட்டு நெசவுத் தொழிலில் வேலைக்கமர்த்திக்கொள்ளப்பட்ட தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுக்க இயலும் வகையில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் இத்தொழிலையும் அரசு சேர்த்துள்ளது. இவ்வாறு சேர்க்க உத்தேசித்துள்ளது பற்றிய வரைவு அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனை வாரியம் 21-12-70-ல் கூடியது. அக்குழு செய்த பரிவுரைகளையொட்டி (i) அச்சகங்கள், (ii) சினிமாக்கள், (iii) உணவகங்கள், சிற்றுண்டி விடுதிகள், (iv) கடைகள் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. அட்டவணையிடப்பட்ட வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுப்பது, மாற்றியமைப்பது குறித்துக் கவனிக்கவும், தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கவும் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் பதவி ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### பீடி மற்றும் முறைப்படி அமையாத தொழில்களில் தொழிலாளர்களின் நிலை

இம்மாநிலத்தில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை குறித்து ஆய்வு செய்து, அவர்கள் நலனுக்காக என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்பது பற்றிப் பரிவுரைகள் செய்ய முத்தரப்புக் குழு ஒன்றை நியமிப்பது குறித்த அரசு பரிசீலித்து வருகிறது.

முறைப்படியமையாத ஏனைய தொழில்களில் உள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை குறித்து ஆய்வு செய்ய குழு ஒன்றை அமைப்பது பற்றியும் அரசு நாட்டம் செலுத்தி வருகிறது.

### ஊதிய வாரியங்கள்

நியாய ஊதியங்கள் அளிப்பதைப் பொறுத்தவரை, பொறியியல், மின்சாரம், சாலைப் போக்குவரத்து. தோல், சர்க்கரை, இரசாயன உரம் போன்ற பல தொழில்களுக்கும் உரிய மத்திய ஊதிய வாரியங்களின் பரிவுரைகள் சென்ற ஆண்டு வந்து சேர்ந்துள்ளன; அப்பரிவுரைகள் யாவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சாலைப் போக்குவரத்துத் தொழிலைப் பொறுத்தவரை, இதுகாறும் 208 நிறுவனங்கள் ஊதிய வாரியத்தின பரிவுரைகளை செயற்படுத்தியுள்ளன அதன் மூலம் 11,945 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை விரைவு படுத்தும் கருத்துடன், தொழிலதிபர்கள் தொழிலாளர்களது பிரதிநிதிகளின் கூட்டமொன்றை 19-6-1971 அன்று நான் கூட்டினேன். ஊதிய வாரியத்தின் பரிவுரைகள் விரைவில் செயற்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியதுடன் ஊதியவாரியப் பரிவுரைகளைச் செயற்படுத்துவதில் போதுமான முன்னேற்றம் காணப்படவில்லையென்றால், தொழிலாளர்கள் தங்களது சட்டப்பூர்வமான பயன்களை அடையும் பொருட்டு, அரசு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என தொழிலதிபர்களை எச்சரிக்கவும் செய்தேன். பரிவுரைகளை செயற்படுத்தக் காட்டப்படும் ஆர்வம் மனநிறைவளிப்பதாக இல்லாததால், ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயற்படுத்துவதற்காக கேரளத்தில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தைப் போன்ற ஒரு சட்டத்தை இயற்றும் கருத்து பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

சர்க்கரைத் தொழிலுக்கான ஊதிய வாரியப் பரிவுரைகளைச் செயற்படுத்துவது குறித்து விவாதித்து இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு சென்னை தொழிலாளர் நல ஆணையாளரை அமைப்பாளராகக் கொண்டு முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் கருத்து பற்றி இக்குழு அனைவருக்கும் இசைவான தீர்வு ஒன்றைக் காணவியலாமற் போனதால், நான் தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமொன்றை 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் நாள் அன்று சென்னையில் கூட்டினேன். அக்கூட்டத்தில், ஊதிய வாரியப் பரிவுரைகளைச் செயற்படுத்தி, 1972-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் தேதிக்கு முன்னர் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைகளைக் கொடுத்துவிடுமாறு தொழிலதிபர்களுக்கு எடுத்துக் கூறினேன். 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதிக்குப் பின்னர், மேலும் ஊதிய உயர்வுகள் அளிக்கும் கருத்து பற்றியும், தொழிலாளர்கள் எழுப்பியுள்ள பிற பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்க எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நான் தெரிவித்தேன். ஆனால், தொழிலாளர் பிரச்சினைகள் குறித்து உடன்பாடு எதுவும் ஏற்படவில்லையாதலால், அதனைத் தொடர்ந்து தொழிற் சங்கங்கள் சில வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்தன. இரு தரப்பாருடனும் நான் அடிக்கடி பேச்சுவார்த்தைகள் நடத்தினேன். அவற்றின் விளைவாக 24-2-1972 அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி ஊதிய வாரியத்தின் பரிவுரைகளுக்கும் மேலாக, தொழிலாளர்கள் அனைவருக்கும் மாத ஊதியத்தில் ரூ. 10 தற்காலிக ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

### தற்காலிக தொழிலாளர்களுக்கு பணிப் பதிவேடு கொடுத்தல்

3-8-1971 ஆம் நாள் நடைபெற்ற சிறப்புத் தோட்டத் தொழிலாளர் அறிவுரைக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஒட்டி தற்காலிகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு பணிப் பதிவேடு முறையை புகுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தினால் 30,000 தோட்டத் தொழிலாளர்கள் பயன் பெறுவர்.





23-91971-ஆம் நாள் நடைபெற்ற மாநில தொழிலாளர் அறிவுரைக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஒட்டி தற்காலிகத் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு, அரசு பணிப் பதிவேடு முறையைப் புகுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தினால் 2,500 தோல் பதனிடும் தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நல நிறுவனத்தையும் புள்ளிவிவர பிரிவையும் நிறுவுதல்

பம்பாயிலுள்ள தொழிலாளர் நிறுவனத்தின் அமைப்பைப் போன்றதொரு அமைப்புடன் தமிழ்நாட்டில் தொழிலாளர் நல நிறுவனம் ஒன்றை நிறுவ அரசு ஏற்கெனவே கருதியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கறிவர். இதன் குறிக்கோள், ஏனையவற்றுக்கிடையே, தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கப் பாணியில் பயிற்சியளிப்பதாகும். இச் செயற்குறிப்பு அரசால் மும்முரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்துடன் இணைந்த தொழிலாளர் நலப் புள்ளி விவரப் பிரிவு ஒன்றை நிறுவவும் கருதப்பட்டுள்ளது. தொழிலாளர் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும், தொழில் தகராறுகளின் காரணங்கள், வழக்கு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகள் உருவாகும் போக்குகள் மற்றும் இவை போன்ற பொருள்கள் பற்றி ஆராய்வதும் இதன் பணியாக இருக்கும்.

### மாநில தொழிலாளர் நல நிதி

மாநிலநிதியிலிருந்து ரூ. 5 லட்சம் தொடக்க மானியம் வழங்கி தொழிலாளர் நல நிதியொன்றையும் எனது தலைமையில் தொழிலாளர் நல வாரியம் ஒன்றையும் கூட அரசு அமைத்துள்ளது. தொழிலாளர் நல வரைவுச் சட்டம் முன் வடிவு ஒன்றையும் அரசு வெளியிட்டுள்ளது. இந்த சட்ட முன் வடிவு தொழிலதிபர்களிடமிருந்தும், தொழிலாளர்களிடமிருந்தும், தொழிலாளர் நலநிதிக்குப் பங்குத் தொகைகள் வசூலிக்க வகை செய்கிறது; மேலும் தொழிலாளர் நலத்திட்டத்தைச் சட்டப்படிக்கமைந்த திட்டமாக ஆக்குகிறது. இந்தத் தொழிலாளர் நல வாரியம் 1971-ல் இருமுறை கூடிற்று. 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி அன்று கூடிய வாரியத்தின் இரண்டாவது கூட்டத்தில், முதற்கண், பெண் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் மனைவிமாருக்கும் நடத்தப்படும் தையல் வகுப்புகளுடன் தொழிலாளர் நல நிலையங்கள் நிறுவப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அவை, சென்னையில் இரண்டும் (திரு.வி.க. நகர் அல்லது செம்பியத்தில் ஒன்றும், மற்றொன்று அம்பத்தூரிலும்), மதுரை, கோயம்புத்தூரில் முறையே ஒவ்வொன்றுமாகத் தொடங்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப இந்த நிலையங்கள் தொடங்கப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை, அம்பத்தூரில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் தேதியிலும், கோயம்புத்தூரில் ஜனவரி 19-ம் தேதியிலும், மதுரையில் ஜனவரி 21-ம் தேதியிலும் இந்நல நிலையங்களில் வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டு எளிய முறையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. மகளிர் நலத் துறையின் ஒத்துழைப்புடன் இந் நிலையங்களில் பெண்களுக்குத் தையல் வகுப்புகள் தொடங்கவும், குழந்தைகளுக்கு விளையாட்டு வசதிகள் செய்து தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; இத்திட்டங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும்.

தொழிலாளர் நல வாரியத்தின் இறுதிக்கூட்டத்தில், சென்னை மாநகரில் தொழிலாளர் நலனுக்கென விளையாட்டரங்கம் ஒன்று அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. அவ்விளையாட்டரங்கத்தில் பம்பாயில் உள்ளதைப் போன்று கலை அரங்கம், வெளிப்புற விளையாட்டு வசதிகள். உட்புற விளையாட்டு வசதிகள் மற்றும் நீச்சல் குளம் கூட அமைத்துத் தரப்படும். தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள், பம்பாய்க்குச் சென்று அங்குள்ள தொழிலாளர் விளையாட்டரங்கம், தொழிலாளர் நல நிலையங்கள் செயல்படும் முறைபற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அம்முடிவினுக்கு இணங்க, கடந்த மாதம் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் பம்பாய்க்கும் ஆமதாபாத்துக்கும் சென்றுவர அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் விளைவாக அவர்கள் பயணத்தை ஒத்திப்போட வேண்டியதாயிற்று.

### பணிக்கொடை

புதுடில்லியில் 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் தேதி நடைபெற்ற இந்தியத் தொழிலாளர் மாநாட்டின் 27-வது கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அக்கூட்டத்தில், பொருத்தமான மத்தியச் சட்டமொன்றை இயற்றுவதன் மூலம், நாடு முழுவதற்கும் ஒரே சீரான பணிக்கொடைத் திட்டமுறை ஒன்றுக்கு உறுதி செய்வதன் அவசியத்தை நான் வலியுறுத்தினேன்; இந்தச் சட்டத்தை இந்திய அரசு கொண்டுவராவிட்டால்; இதுபோன்றதொரு சட்டத்தைக் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு தயங்காது எனவும் நான் அவர்களிடம் கூறினேன். தொழில் நிறுவனங்களில் பணிக்கொடை வழங்குதலை உள்ளடக்கிய சட்ட முன்வடிவு ஒன்றை தற்போது மத்திய அரசு கொண்டுவந்துள்ளது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. பணிக்கொடையாக 15 நாள் ஊதியம் அளிக்கப்படுவதற்குப் பதிலாக ஒரு திங்கள் ஊதியம் அளிக்கப்பட வகை செய்யும் முறையில் அச்சட்ட முன்வடிவைத் திருத்தமாறு கேட்டுக்கொண்டு இந்திய அரசுக்கு கடிதம் வரையப்பட்டுள்ளது. ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய குறைந்த அளவு ஊதியம் பற்றிய கருத்து நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. இதுபற்றி அவசரமாக முடிவு எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி குறைந்த அளவு ஊதியக் கொடை 8-1/3 சதவீதம் என வரையறுக்கப்பட வேண்டுமென்றும் நம் அரசின் சார்பில் நான் கருத்துத் தெரிவித்தேன்.

### தேசிய நெருக்கடி நிலை ஏற்பாடுகள்

சென்ற ஆண்டு இறுதியில், வங்க தேச விவகாரம், நமது நாட்டில் பெரும் பீதியைத் தோற்றுவித்ததோடு, நமது நாட்டின் பொருளாதாரத்துக்குக் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அதன் விளைவாக எழுந்த கடுமையான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நான் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் தேதியில் தொழிலாளர்கள், தொழிலதிபர்களது பிரதிநிதிகளடங்கிய கூட்டமொன்றைக் கூட்டினேன். அக்கூட்டத்தில் நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமையைக் கருதி தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், தொழில் தகராறுகளைத்





தீர்த்து வைப்பதிலும், தொழில் அமைதியைக் காப்பதிலும், அரசுக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர்களில், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அல்லது பாதுகாப்புச் சேமிப்புத் திட்டம் ஒன்றுக்கு, தங்களது நன்கொடைகளைச் செலுத்த விரும்புவோரது ஊதியங்களிலிருந்து தொகைகளைக் கழித்துக்கொள்வது தொழிலதிபர்களுக்கு இயலும் பொருட்டு, 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் தேவையான விதிகளைச் செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

### தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம்

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம், தொழிலாளர்களின் நலனைக் கருதி, இம்மாநிலத்தில் தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மற்றெல்லா மாவட்டங்களிலுமுள்ள முக்கியத் தொழில் இடங்கள் அனைத்துக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் 3,94,250 குடும்பங்களைச் சேர்ந்த 16 லட்சம் பேர் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தற்போது, இம்மாநிலத்தில் தொழிலாளர் நலக்காப்புறுதி மருத்துவமனைகள் மூன்றும், மருந்தகங்கள் 101-ம் (93 நிலையான கட்டிடங்களில் செயல்படுபவை ; 8 இயல் ஊர்தி மருந்தகங்கள்) செயல்பட்டு வருகின்றன. மேற்சொன்ன மூன்று மருத்துவமனைகளும் அனைத்து வசதிகளும் கொண்ட பெரிய மருத்துவமனைகளாகும். அவை சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் முறையே 625, 300, 202 படுக்கைகளுடன் அமைந்துள்ளன. இவை தவிர, தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொழிலதிபர்கள் பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும், பகுதிநேரத் தனி மருந்தகங்கள் இரண்டும், இயங்கும் மருத்துவ வண்டிகள் 21-ம் செயற்பட்டு வருகின்றன. சென்னை மாநகர், மதுரை, கோயம்புத்தூர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும், முழு மருத்துவச் சிகிச்சையையும், மருத்துவமனையிற் சேர்த்துக் கவனிக்கும் வசதிகளும் அளிக்கப்படுகின்றன. பிற இடங்களில், ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவமனையிற் சேர்த்துக் கவனிக்கும் வசதிகள் அளிக்கப்படவில்லை.

மதுரையில், 202 படுக்கைகளுடன் கூடிய புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று 13—4—1971 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், போதனூர், நல்லகவுண்டன் பட்டி, வீரக்கல்புதூர் கிராமங்களில் வசிக்கின்ற ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டு, சேலம் மாவட்டம் மேட்டூருக்கருகே (ராமன் நகர்) கோனூரில் 29—5—1971 அன்று புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதே போன்று பழனி, உசிலம்பட்டி பகுதிகளில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தைச் செயற்படுத்தும் வகையில் (மதுரை மாவட்டம்) பழனி, நெய்க்காரப்பட்டி ஆகிய ஊர்களில் ஒவ்வொன்றும், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) உசிலம்பட்டியில் ஒன்றுமாக, தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் மூன்று 26—6—1971-ல் தொடங்கப்பட்டுள்ளன. மேலும்

இத்திட்டம், 28—8—1971 லிருந்து (தஞ்சாவூர் மாவட்டம்) கும்பகோணத்தில் பெருமாண்டி வருவாய்க் கிராமத்திற்கும், திருநெல்வேலி மாவட்டம், மேலத் திருவேங்கடநாதபுரம் வருவாய்க் கிராமத்திற்கும் நீடிக்கப்பட்டுள்ளது. 29—1—1972-லிருந்து இத்திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சோமனூர், சாமளாபுரம், நீலாம்பூர், அரசூர் ஆகிய பகுதிகளுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

அரசு, இத்திட்டத்தின் நலன்களை விரிவுபடுத்தி, இந்த சமுதாய நல ஏற்பாட்டின் கீழ் மேலும் பெரும் பகுதிகளையும் அதிகத் தொழிலாளர்களையும், அவர்தம் குடும்பங்களையும் கொண்டுவர ஆவல் கொண்டுள்ளது. இருந்தபோதிலும், புது டில்லியிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், மருத்துவ நலன் குறித்த செலவுக்கு உச்சவரம்பு விதித்துள்ளதையொட்டி இக்குறிக்கோளை அடைய இயலாமலுள்ளது. முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் சென்ற மாநிலப் பிரதிநிதிகள் குழு, இந்த உச்சவரம்பினைக் கைவிடுமாறு இந்திய அரசை வற்புறுத்தி முறையீடு ஒன்றை அளித்தது. அதன் விளைவாக, தொழிலாளர் நல காப்புறுதிக் கழகம் ஒவ்வொரு வகைச்கும் உரிய உச்சவரம்பைத் திருத்தியமைத்துள்ளது. திருத்தியமைத்துள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ள உச்சவரம்பு வீதங்களாவன : ஆண்டொன்றுக்குத் தொழிலாளர் குடும்பமொன்றுக்கு வரையறுத்த மருத்துவ சிகிச்சைக்கு ரூ. 50, விரிவுபடுத்திய மருத்துவ சிகிச்சைக்கு ரூ. 54, மருத்துவமனையிற் சேர்த்துக் கவனித்தல் உட்பட முழு மருத்துவ சிகிச்சைக்கு ரூ. 64. இவ்வாறு இருப்பினும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு மாநிலத்தில் ஆகும் செலவு, மேற்குறிப்பிட்ட உச்சவரம்பிற்குக் கூடுதலாகச் சென்றால், அவ்வாறு ஏற்பட்ட கூடுதல செலவை, தொடர்புடைய மாநில அரசு மட்டுமே தனித்து ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் எந்த ஒரு பங்கினையும் கழகம் ஏற்றுக்கொள்ளாது. திருத்தியமைத்த உச்சவரம்பு காரணமாக, இவ்வரசு, மருத்துவ நலன்களுக்கு வகை செய்வதற்காக பகிர்ந்து கொள்ளக்கூடிய செலவுக்குக் கூடுதலாக, ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவை ஏற்கவேண்டியிருக்கும்.

## தொழிற்சாலை தொழிலாளர் சத்துணவுத் திட்டம்

மக்கட் தொகுதியினிரில் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மிகவும் நலிந்த பிரிவினர் ஆவர்; தொழிற்சாலைத் தொழிலாளர்களின் குழந்தைகள், அவர்களைச் சேர்ந்த பெண்டிர் இவர்கட்கு உடல்நலமும், வலிமையும் பெற்றுத்தரும் பொருட்டு, அவர்கள் நலனுக்கான தொழிற்சாலைத் தொழிலாளர் சத்துணவுத் திட்டம் ஒன்று 'கேர், (CARE) நிறுவனத்தின் உதவியுடனும் தொழிற்சாலை நிர்வாகங்களின் ஒத்துழைப்புடனும் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் குறிக்கோள், தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த, பள்ளி செல்லும் வயது வராத குழந்தைகளுக்கும், கருவுற்றுள்ள பெண்டிருக்குபாலூட்டும் தாய்மாருக்கும் சரிவிகித உணவு வழங்குவதாகும். இந்தியாவில் இத்தகைய முயற்சியில் இதுவே முதலாவதாகும். இத்திட்டம் இம்மாநிலத்தில் பெருமளவு தொழில் நிறுவனங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இது, தற்போது 71 தொழிற்சாலைகளிலும், மலைத்தோட்டங்களிலும் செயலில் உள்ளது ; இத்திட்டத்தால் மொத்தம் 25,629 பேர் பயன் பெறுகின்றனர்.



## தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பும், உடல் நலனும், தொழிலாளர் நலனும்

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, உடல் நலன், தொழிலாளர் நலன் ஆகியவற்றை மேம்படுத்தும் கொள்கையைச் செயற்படுத்துகையில் தொழிற்சாலைச் சட்டத்தின் விதித் துறைகள் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படுவதைக் குறைக்க இயன்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவுபடுத்திய பயிற்சி வகுப்புகள் மூலமாகவும், காட்சி விளக்கப்படங்களைப் பயன்படுத்தியும், தொழிலாளர்களிடையே தொழிற்சாலைப் பாதுகாப்பு உணர்வு மேம்படுமாறு செய்யப்பட்டு வருகிறது. நிர்வாகப் பணியாளர்களின் நலனுக்காகவும், தொழிற்சாலைப் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அதிக சதவீதம் விபத்துக்களைக் குறைக்கும் சாதனையைச் செய்யும் நிர்வாகங்களுக்குச் சுழற் கோப்பைகளும் ரொக்கப் பரிசுகளும் வழங்குவதற்கான திட்டங்களும் கூட உருவாக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைப் பாதுகாப்பு பற்றி சிறந்த கருத்துரைகளை வழங்குகின்ற தொழிலாளர்களுக்கும், சுவரொட்டி விளம்பர அமைப்பை வரைந்து கொடுக்கும் தொழிலாளர்களுக்குக்கூட ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தொழிற்சாலைச் சூழ்நிலைகளில் ஈயத்தால் ஏற்படும் நச்சு விளைவு, ஸிலிகோஸிஸ் (Slicosis) டெர்மாடைடிஸ் (Dermatatis) போன்ற நோய்களும் மற்றும் அவை போன்று நச்சுப் பொருளால் ஏற்படும் நோய்களும் தோன்றுவதற்கான மூலகாரணங்களைக் கண்டறியவும், வெப்பம், இரைச்சல் முதலானவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் பற்றி தெரிவிக்கவும் மாநிலத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், இணைந்த தொழிற் சுகாதார—துப்புரவுப் பிரிவு ஒவ்வொன்றையும், ஆய்வு கூடத்தையும் நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி—குடும்ப ஓய்வூதிய நிதிச் சட்டம்

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி குடும்ப ஓய்வூதிய நிதிச் சட்டம் மத்திய அரசால் செயற்படுத்தப்படும் ஒரு சட்டமாகும். இது சென்னையிலுள்ள வருங்கால வைப்பு நிதி ஆணையாளரால் செயற்படுத்தப்படுகிறது. இச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் பணிகளிலொன்று, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைகளை வசூல் செய்வதில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியமைப்புக்கு உதவி புரிவதாகும். தற்போது இந்த நிலுவைகள் ஒரு கோடி ரூபாயைத் தாண்டிவிட்டன. இந்த நிலுவைகள், அண்மையில் கடந்த காலத்தில் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவால் மொத்தமாகச் சேர்ந்துவிட்டன. நிலுவைத் தொகைகளைக் கட்டத் தவறிய பஞ்சாலைகளிடமிருந்து, வழக்கு தொடுப்பதன் மூலமாகவும், வருவாய் வசூல் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாகவும் இந்த நிலுவைகளை வசூல் செய்வதற்கான நடவடிக்கையை மாநில அரசு ஏற்கெனவே எடுத்துள்ளது. இந்த நிலுவைகளைக் கட்டுவதற்குத் தவணை வசதி வழங்கப்பட்டு, மேற்சொன்ன நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து இட்டவட்டமாக விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள ஆலைகளைப் பொறுத்தவரையில் மேற்சொன்ன நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

இந்த நிலுவைகளில் பெரும்பகுதி பஞ்சாலைகளிலிருந்தே வரவேண்டியுள்ளதாலும், அப்பஞ்சாலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே அமைந்துள்ளபடியாலும், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவையை வசூல் செய்யும் பணியைக் கவனிப்பதற்கென்றே, வருவாய்த்துறை அதிகாரிகளடங்கிய சிறப்பு வசூல் பிரிவு ஒன்று, கோயம்புத்தூர் மாவட்டத்தில் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. இந்தப் பிரிவு செயல்படத் தொடங்கிவிட்டால், தொகைகள் கட்டத்தவறிய பஞ்சாலைகளிடமிருந்து, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைகளை வசூல் செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணவியலும்.

### எடைகள், அளவைகள் சட்டத்தைச் செயற்படுத்துதல்

எடைகள், அளவைகள் சட்டம் தொடர்ந்து தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர் அலுவலகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இச் சட்டத்தை டாக்சி மீட்டர்கள், ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள் குழந்தைகளை எடைபோடும் கருவிகள் ஆகியவற்றுக்கும் நீடிக்கும் கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

### தேசிய வேலைவாய்ப்பு பணி நிறுவனம்

தேசிய வேலைவாய்ப்புப் பணி நிறுவனம் படிப்படியாக எல்லாத் துறைகளிலும் தனது பணிகளை விரிவுபடுத்தி வருகிறது; நாட்டில் வேலைவாய்ப்புத் தேடுகின்றவர்களில் எல்லாவகையினரும் இதன்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். சாதாரணமாக உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர, சென்னை அண்ணாமலை நகர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டிக் கழகங்கள் மூன்று உள்ளன. இப் பணி நிறுவனம் வேலைதேடுபவர்களுக்கு வேலை தேடித் தருவது மட்டுமன்றி, தொழில்கள் செய்ய வழிகாட்டியாக இருந்தும், வேலைவாய்ப்பு ஆலோசனை வழங்கியும், வாழ்க்கைத் தொழில் பற்றிய தகவல்களைத் தந்தும் உதவுகிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றும், உயர்ந்த கல்வித்தகுதிகள் பெற்றுள்ளவர்களுக்கென தொழில் சார்ந்த நிர்வாகத்துறை வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றும்கூட உள்ளன. பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிவரும் அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிப்பதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த அகதிகளை முறையாகக் குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் தொடர்பு அதிகாரி, தனிப்பட்ட தொழிலதிபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இதில் அக்கறையுள்ள நிறுவனங்களுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டு வருகிறார். அரிசனங்கள், பழங்குடிமக்களை சேர்ந்தவர்களுக்குச் செம்மையான வழியில் வழிகாட்டி உதவியளிக்கும் கருத்துடன் இந்திய அரசு பயிற்சியளித்து வழிகாட்டியுதவும் நிலையம் ஒன்றை சென்னையில் தொடங்கியுள்ளது. ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கென்றே, சென்னையில் உடலூனமுற்றவர்களுக்கான மாநில வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்களுக்குச் சிறப்பான





முறையில வேலை வாய்ப்பளிக்கின்ற தொழிலதிபர்களுக்கும் ஊனமுற்றவர்களில் சிறந்த தொழிலாளராக விளங்குவோருக்கும் மாநில அளவில் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

தொழில் நுட்பக்கல்வித் தகுதிகள் பெற்றவர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணும் பொருட்டு, வேலையற்றுள்ள பொறியாளர்கள், பட்டயக் கல்வி தகுதி பெற்றவர்கள், கைத்தொழில் வினைஞர்கள் ஆகியோருக்கு உதவித்தொகை வழங்கிப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை அரசு கொண்டுவந்துள்ளது. வேலைவாய்ப்பின்றியுள்ள பொறியாளர் முதலானோர்க்கு இத்திட்டத்தின்கீழ், அரசின் பல்வேறு துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

ஆட்படை ஊற்றம், அவ்வப்பகுதிக்குரிய தொழில் அமைப்பு முறை, தொழில்களின் வேலைவாய்ப்புகள் குறைந்திருத்தல் ஆகியவை தொடர்பாக ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு, இயக்குநர் அலுவலகத்தில் "வேலைவாய்ப்பின்மை குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்யும் பிரிவு" (Depth Study Cell) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டத்தின்கீழ் குறித்த காலத்துக்கொருமுறை மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுடன் அவற்றுக்குத் துணையாக இந்த ஆய்வுகள் அமையும், இவை ஆட்படை ஊற்றம் குறித்துத் திட்டமிடுதல், வாழ்க்கைத் தொழிலில் வழிகாட்டியுதவுதல் திட்டமிடுதல் ஆகியவற்றில் பயன்படும்.

மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கீழ்க்கண்ட நிலையை மீண்டும் எடுத்துரைக்க விழைகிறேன். இம் மாநிலத்தில் கடந்த சில மாதங்களாகத் தொழிலாளர் நிலைமை ஓரளவு தொல்லைக்குள்ளாகியுள்ளது; அரசு அடுத்தடுத்துப் பல ஆர்ப்பாட்டங்கள், வேலை முடக்கங்கள் வேலை முடக்க மிரட்டல்கள் ஆகியவற்றை எதிர்நோக்கி வந்துள்ளது. இவ்வாறிருந்தபோதிலும், நிலைமையைச் சமாளிக்க அரசு உரிய நேரங்களில் தக்க நடவடிக்கைகள் எடுத்து வந்திருக்கிறது. இதில் தொடர்புள்ள அனைவரது நலனையும் கருத்தில் கொண்டு தொழில் அமைதிக்காகவும், உற்பத்தியைப் பேணி வரவும், அரசுக்குள்ள கடமையில் இப்பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழில் நிர்வாகங்களின் பிரதிநிதிகளும் அளித்துள்ள ஒத்துழைப்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது ஒத்துழைப்பும் நல்லெண்ணமுமே இம்மாநிலத்தில் நிலவும் மேம்பட்ட தொழில் நிலவரத்துக்குக் காரணமாகும். தொழில்களைச் சிறப்புடன் வளர்த்து தொழிலாளர் தம் நிலையையும் உயர்த்த என்றும் அயராது உழைப்பதே இவ்வரசின் குறிக்கோளாகும் என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

"வளர்க தொழில்! வாழ்க தொழிலாளர்!"

இத்தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

## இணைப்பு 8

[265ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் 1971-72 ஆய்வு.

இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்படும் தொழிலாளர் நலச் சட்டங்கள் வருமாறு :—

I பணியாளரமைப்புச் சட்டம்.

II ஊதியங்கள் பற்றிய சட்டம்.

தொழில் தகராறுகள் சட்டம்.

IV சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

V தொழிலாளர் நல ஏற்பாடுகள்.

இவைகளுடன் எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல் படுத்துவதுபற்றியும் வேலைவாய்ப்புப் பணிகுறித்தும் தனித்தனி அத்தியாங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### I பணியாளரமைப்புச் சட்டம்.

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948—ஆண்டுத் தொடக்கத்தில் பட்டியலில் 6,365 தொழிற்சாலைகள் இருந்ததற்கு மாறாக, 410 தொழிற்சாலைகள் சேர்க்கப்பட்டன ; 363 தொழிற்சாலைகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. ஆக, ஆண்டு முடிவில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,412. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | பதிவேட்டிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | 1970. (4) | 1971. (2) |
| பிரிவு 2 (m) (i) | 5,968 | 5,989 |
| பிரிவு 2 (m) (ii) | 397 | 423 |
| | 6,365 | 6,412 |
| வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 4,22,640 | 4,32,488 |

1970 ஆம் ஆண்டில் உரிமக் கட்டணமாக ரூ. 17,42,254.70 வசூலிக்கப்பட்டிருக்கையில், 1971 ஆம் ஆண்டில் ரூ. 19,45,320 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.



தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துப் பணியாளர்கள் 1970 ஆம் ஆண்டில் 10,443 ஆய்வுகள் நடத்தியதற்கு மாறாக, 1971 ஆம் ஆண்டில் 10,574 முறையான ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இவை தவிர, பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் இவ்வாண்டில் ஞாயிற்றுக்கிழமைகளில் 669 தொழிற்சாலைகளில் ஆய்வு செய்யப் பட்டன. 268 முறை திடீர் ஆய்வுகளும், 1,037 முறை சிறப்பு ஆய்வுகளும், 277 முறை இரவு நேர ஆய்வுகளும் செய்யப்பட்டன. 638 முறை பார்வையிடப்பட்டன. தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்கள் செய்த சோதனை ஆய்வுகள் 2,356 ஆகும்.

தொழிற்சாலைச் சட்டம், தொடர்பான சட்டங்கள், இவற்றின் விதித் துறைகளை மீறியதற்காகத் தொழிற்சாலைகள் நிர்வாகங்கள் மீது 1970 ஆம் ஆண்டில் 909 வழக்குகள் தொடரப் பட்டிருக்கையில், அறிக்கை ஆண்டில் 1,069 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

1970, 1971 ஆம் ஆண்டுகளில் நடந்துள்ள விபத்துக்கள்பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | மரணத்தில் முடியாத விபத்துக்கள். | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| 1970 .. .. .. | 29,721 | 32 |
| 1971 .. .. .. | 28,818 | 42 |

விபத்துக்கள் நிகழ்வதைக் குறைக்கும் பொருட்டு, 21 நாட்களுக்கு மேல் தொழிலாளர் பணி செய்ய இயலாமல் போன கடும் விபத்துக்கள்பற்றி ஆய்வாளர்கள் புலன் விசாரணை செய்துள்ளனர். இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை கூறப்பட்டுள்ளது. 311 தொழில் நிறுவனங்கள் நிர்வாகப் பிரதிநிதிகளையும் தொழிலாளரின் பிரதிநிதிகளையும் கொண்டு, அந்தந்தத் தொழிற்சாலை பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன. தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதற்காக இக் குழுக்கள் செவ்வையாகச் செயல்படுகின்றன.

இயந்திரங்களுக்கு வேலிபோட்டு, காத்து வருவதுகுறித்து ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆழ்ந்த நாட்டம் செலுத்தி வருகின்றனர். வேலிகள் போட்டுப் பேணி வருவதற்கும், கா

வைப்பதற்கும் தொழிற்சாலை நிர்வாகிகளுக்கு ஆய்வாளர்கள் போதிய ஆலோசனைகளும், அறிவுரைகளும் கொடுத்துள்ளனர். சட்டப்படிக்கான விதித்துறைகளுக்கு இணங்கி நடக்குமாறு நிர்வாகங்களுக்கு அவசியமான அறிவுரைகள் கொடுக்கப் பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, விபத்துத் தடுப்பு உத்திகளைத் தொழிலாளர்கள் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டியதன் தேவையையொட்டி, பல்வேறு மாவட்டங்களிலும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நிதி ஆண்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. மேலும் இரண்டு பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் 1972, மார்ச் திங்கள் முடிவடைவதற்கு முன்பு நடத்தப்படத் திட்டமிடப் பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு அறிவுரைகள் புகட்டி, தொழிற்சாலையில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், மூன்று வித பாதுகாப்புச் சுவரொட்டிகளை அச்சிட்டுத் தொழிற்சாலை களுக்கு வழங்குவதற்காக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்பு குறித்த திரைப்படங்கள் வாங்கப்படுகின்றன. இந்த ஆண்டின் இறுதியில் 21 திரைப் படங்கள் இருக்கும். இவை, இலவசமாகத் தொழிலாளர்களுக்குக் காட்டுவதற்கு எந்தெந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப் படுகிறதோ அவற்றிற்கு அனுப்பப்படுகின்றன.

விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டும், 1960-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற தொழிலாளர் நலத் துறை அமைச்சர்களது மாநாட்டுப் பரிவுரைகளையொட்டியும், தமிழ் நாட்டில், மாநிலப் பாதுகாப்புப் பரிசுத் திட்டம், உழைப்பு வீரர் (சிரம்வீர்) பரிசுத் திட்டம் என்ற இரு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதைக் கணிசமான அளவு குறைத்துள்ள தொழிற்சாலைகளுக்கு அல்லது நீண்ட காலமாக விபத்துக்கள் எதுவும் நிகழாத தொழிற்சாலை களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.



2. மாநிலப் பாதுகாப்புப் பரிசுத் திட்டம்.—தொழிற்சாலையில் விபத்துத் தடுப்பு வேலையில் நிர்வாகம், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் போதிய அக்கறை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்திருக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி, துணிகள் உலோகங்கள், சிமிட்டி, காகிதம், ரசாயனங்கள், பொறியியல், போக்குவரத்து போன்ற 10 பெரிய தொழில் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ( ) விபத்துக்கள் அடிக்கடி நேர்வது மிகப் பெரிய அளவில் குறைந்துள்ளது, (b) விபத்துக்கள் மிகக் குறைவாக ஏற்படுவது, (c) விபத்துக்கள் இல்லாத மிக அதிகக் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில், தொழிற்சாலைகள் எய்தியுள்ள சிறந்த பாதுகாப்புச் சாதனைகளை அறிந்து பாராட்டிப் பரிசளிப்பது இத் திட்டத்தின் பணியாகும். ஒரு காலண்டர் ஆண்டில் 5 லட்சம் உழைப்பு மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்த தொழிற்சாலைகள் இத் திட்டத்தில் கலந்து கொள்ளலாம். இத் திட்டம் இரு பகுதிகளில் செயல்படுகிறது. (1) ஓராண்டில் 5 லட்ச உழைப்பு மணி நேரத்திற்கும் 10 லட்ச உழைப்பு மணி நேரத்திற்கும் இடையே வேலை செய்துள்ள தொழிற்சாலைகள், (2) 10 லட்சத்திற்கும் அதற்கும் மேற்பட்ட உழைப்பு மணி நேரங்களுக்கு வேலை செய்த தொழிற்சாலைகள், தொடர் கோப்பைகள். சான்றிதழ்கள் வடிவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

3. "உழைப்பு வீரர்" பரிசுகள் திட்டம்.—பொதுவாகத் தொழில் திறமையை வளர்ப்பதற்குத் தனிப்பட்ட தொழிலாளர்கள் ஆற்றிய பணிக்குச் சிறப்பு ஊக்கம் அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். "மேம்பாட்டுக்குக் கருத்து கூறும் திட்டம்" செய லில் உள்ளதும், ஏற்கெனவே தொழிற்சாலை அளவில் பரிசு பெறத் தகுதியுள்ளதுமான தொழிற்சாலைகளில், சிறந்த பாதுகாப்பு, உயர் உற்பத்தித் திறன், தரமேம்பாடு, குறைந்த உற்பத்திச் செலவு, இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவது ஆகியவை குறித்துத் தொழிலாளரிடமிருந்து வரக்கூடிய சிறந்த கருத்துக்கள் ஆலோசனைகளுக்கு அரசு நிலையில் பரிசு வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். "A", "B", "C" ஆகிய மூன்று வகைகளுக்கு முறையே ரூ. 500, ரூ. 250, ரூ. 100 ரொக்கப் பரிசுகள் வடிவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மேற்சொன்ன இரு திட்டங்களின்கீழ், 1969 ஆம் ஆண்டில் வெற்றி பெற்றவர்களுக்குத் தொடர் கோப்பைகள், ரொக்கப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(1970-ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவை ஆய்வில் உள்ளன). 1967 முதல் 1969 வரையிலான ஆண்டுகளில் பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

<u>மாநில பாதுகாப்புப் பரிசுத் திட்டம்.</u>

| ஆண்டு. | வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கை. | ரொக்கப் பரிசுகள் குறித்துச் செலவிட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1967 .. .. | 68 | .. | 13,000 |
| 1968 .. .. | 130 | 60 | 19,500 |
| 1969 .. .. | 179 | 81 | 19,500 |

<u>"சிரம் வீர்" மாநிலப் பரிசுத் திட்டம்.</u>

| ஆண்டு. | வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கை. | ரொக்கப் பரிசுகள் குறித்துச் செலவிட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1967 .. .. | 8 | 8 | 1,500 |
| 1968 .. .. | 24 | 14 | 3,050 |
| 1969 .. .. | 32 | 24 | 4,500 |

4. சுகாதாரம்.—தொழிற்சாலை சூழ்நிலைகளில் ஈயத்தால் ஏற்படும் நச்சு விளைவு, ஸிலிகோஸிஸ் (Silicosis) டெர்மடைடிஸ் (Dermatitis) போன்ற நோய்களும் மற்றும் அவை போன்று நச்சுப் பொருளால் ஏற்படும் நோய்களும் தோன்றுவதற்கான மூல காரணங்களைக் கண்டறியவும், வெப்பம், இரைச்சல் முதலானவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்பற்றித் தெரிவிக்கவும், மாநிலத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் இணைந்த தொழிற் சுகாதாரத் தப்புரவுப் பிரிவு ஒன்றையும் ஆய்வுக்கூடத்தையும் நிறுவுவதற்கு 1971-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.



5. உற்பத்தித் திறன்.—இந்தப் பிரிவைச் சேர்ந்த திரைப்படக் காப்பகம், உற்பத்தித் திறன் பற்றிய திரைப்படங்களைக் கொண்டதாகும். திரைப்படங்களைப் போட்டுக் காட்டுவதற்கு வேண்டுகோள் விடுப்பதன்பேரில், உற்பத்தித் திறன் குறித்த உள்ளூர் மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் முதலியவற்றிற்குத் திரைப்படங்கள் கட்டணமின்றி கொடுக்கப்படுகின்றன. இந்தத் திரைப்படங்களுக்கு மிகுந்த தேவை ஏற்பட்டுள்ளது. கருத்துக்களைப் பரப்புவதில் அவற்றின் பயனை மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

உள்ளூர் உற்பத்தித் திறன் மன்றங்களுக்கு இத்துறை நிதியுதவி அளிக்கிறது. இத்துறையின் அதிகாரிகள் அவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுகின்றனர். உற்பத்தித் திறன் மன்றங்களுக்கு 1970-71-ஆம் ஆண்டு வரை படிப்படியாகக் குறைந்து வரும் பொது மானியம் வழங்கப்பட்டது. நிதி இடர்ப்பாடுகள் காரணமாக, இம்மானியத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று முறையீடுகள் வரப்பெற்றதன் மேல், ரூ. 5,000 என்ற பேரளவுக்குட்பட்டு, முந்திய ஆண்டில் மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகையின் 50 சதவீதத்திற்கு இந்த மானியம் உயர்த்தப்பட்டுள்ளது. 50 சதவீதப் பொது மானியத்திற்குக் கூடுதலாக மன்றங்களால் நியமிக்கப்பட்ட தொழில் பொறியாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகத் துறையில் மானியம் வழங்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டிற்கு ரூ. 51,200 (ரூபாய் ஐம்பத்தோராயிரத்து இருநூறு மட்டும்) (பொதுமானியம் + தொழில் பொறியாளர் மானியம்) வழங்கப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டிற்கு ரூ. 62,220 வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டில், மன்றங்கள் 181 வகுப்புகள் நடத்தியுள்ளன. 6,280 பேர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதில் இப்பயிற்சித் திட்டங்கள் பாராட்டத்தக்க மதிப்பை அடைந்துள்ளதைக் காணலாம். வேளாண்மைத் துறை மற்றும் எழுது பொருள்—அச்சுத்துறை ஆகியவற்றினால் மன்றங்களின் பணிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

பொதுமக்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் உற்பத்தித் திறன் இயக்கம் குறித்த அறிவிப்பைப் பரப்பும் நோக்கத்துடன், இந்த ஆண்டில், ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டைக் கொண்டாடுவது தொடர்பாக ரூ. 25,000 அரசு

வழங்கியது. பல்வேறு உள்ளூர் உற்பத்தித் திறன் மன்றங்களால் நடப்பாண்டில் ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டு குழுக் கூட்டங்கள், பொருட்காட்சிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பட்டன.

சென்னை, தொழிற்சாலை மேற்பார்வை இன்ஸ்பெக்டர் (உற்பத்தித் திறன்) உற்பத்தித் திறன் தொடர்பான மேம்பாட்டுப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

**6. தமிழ் நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம், 1947.—இச்** சட்டத்தின் விதித்துறைகள் இம் மாநிலத்தில் தொடர்ந்து செயலில் உள்ளன. 1971-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலுள்ள 110 புதிதாக அறிவிக்கப்பட்ட பட்ட பேரூராட்சிகளுக்கு இச் சட்டத்தின் விதித்துறைகளை அரசு நீடித்துள்ளது.

1970-லிருந்து 1972 வரை மூன்று ஆண்டுக் காலத் தொடக்கத்தில் இச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட கடைகள் நிறுவனங்கள் எண்ணிக்கை அவற்றில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டுத் தொடக்கத்தில். | இச் சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கமர்த்தப் பட்ட தொழிலாளரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1970 .. .. | 209,260 | 197,695 |
| 1971 .. .. | 211,190 | 215,155 |
| 1972 .. .. | 215,887 | 215,816 |

இச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் 266,548 முறையான ஆய்வுகளையும், 1,585 திடீர் ஆய்வுகளையும், 13,758 விடுமுறை ஆய்வுகளையும், 675 சிறப்பு ஆய்வுகளையும், 4,693 இரவு ஆய்வுகளையும் செய்தனர்.

338 வழக்குகள் இவ்வாண்டின் தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்தன. 1,494 வழக்குகள் தொடர ஒப்பளிப்பு வழங்கப்பட்டன (1970-ஆம் ஆண்டில் தொடரப்படுவதற்கு ஒப்பளிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,103 ஆகும்). இதில் 1,505 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 11 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. (1970-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ. 20,552 தொகைக்கு மாறாக) 1971-ல் ரூ. 31,942 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.



**1971-ஆம் ஆண்டில் வரப்பெற்று, மேற்படி சட்டத்தின் 41-வது** பிரிவின்படி தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளர்களால் முடிவு எடுக்கப்பட்ட மேல் முறையீடுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் வரை முடிவாகாமல் உள்ள மேல் முறையீடுகள். | 170 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகள். | 284 |
| மொத்தம் .. | 454 |
| முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் .. .. | 272 |
| இவ்வாண்டு முடிவில் முடிவு செய்யப்படாமலுள்ள மேல் முறையீடுகள். | 182 |

1971-ம் ஆண்டுத் தொடக்கத்தில் மேற்படி சட்டத்தின் 51-வது பிரிவின்படி இரண்டு விண்ணப்பங்கள் முடிவாகாமல் இருந்தன. இவ்வாண்டில் 4 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இவ்வாண்டில் நான்கு விண்ணப்பங்கள் மீது தொழிலாளர் நலத்துறை ஆணையாளரால் முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாண்டு முடிவில் இரு விண்ணப்பங்கள் முடிவு பெறா நிலையில் இருந்தன.

1971-ஆம் ஆண்டில் ஒரு நேர்வில் அரசு நிரந்தர விதிவிலக்கு அளித்தது. அரசு 10 நேர்வுகளில் (பொருட்காட்சிகள் திருவிழாக்கள் நீங்கலாக) தற்காலிக விதிவிலக்கு அளித்தது.

தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் விதிகளின் 16-A விதியின்கீழ், ஒரு நேர்வுக்கு விதிவிலக்கு அளித்தார். 10 நேர்வுகளில் (பொருட்காட்சி உட்பட) இச்சட்டத்தின் விதித்துறைகள் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க இவர் ஆணையிட்டார். தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையாளர்கள் 31 நேர்வுகளில் தற்காலிக விதிவிலக்கு அளித்துள்ளனர்.

இம் மாநிலத்திலுள்ள பொதுக்கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு அரங்கு அல்லது இடம் எதுவும் ஒரு நாளில் காலை 9.00 மணிக்கு முன்பு திறந்திருக்கவோ அல்லது விடியற்காலை 1.30 மணிக்குப் பிறகு மூடப்படாமலோ கூடாது என்று அரசு ஆணையிட்டுள்ளது. இது 1971, செப்டம்பர் 1 ஆம் நாள் முதற்கொண்டு செயலிலுள்ளது.

7. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம்—1971 ஆம் ஆண்டில் இச் சட்டத்தின் விதித்துறைகளும் விதிகளும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள புதிதாக அமைக்கப் பட்ட 116 பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டன.

நகர்ப் பகுதிகளில் தொழிலாளர்களுக்கு வழங்கும் உணவுப் படியை நாளொன்றுக்கு ரூ. 1-50-லிருந்து ரூ. 2.75 வரையிலும், கிராமப் பகுதிகளில் ரூ. 1.25-லிருந்து ரூ. 2.50 வரையிலும் உயர்த்தி தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகளைச் சேர்ந்த 21-வது விதிக்கு வரைவு அறிவிப்பு ஒன்று 1970-ல் பிறப்பிக்கப்பட்டு இவ்வாண்டில் அரசு அதனை உறுதி செய்தது.

1972 ஜனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி இச் சட்டத்தின்கீழ் 19,811 நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டன. இவற்றில் 9,111 நிறுவனங்களில், வெளித் தொழிலாளர்களே கிடையாது. (1971, ஜனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி, 19,776 நிறுவனங்கள் 70,069 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளதற்கு மாறாக) இந் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 70,996 ஆக இருந்தது.

1970 ஆம் ஆண்டில் 9,399 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப் பதற்கு மாறாக, இவ்வாண்டில் 11,181 நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டன. 1,487 நிறுவனங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன. 1970 ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 1,39,452 வசூலிக்கப் பட்டதற்கு மாறாக 1971-ம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 1,52,275 வசூலிக்கப்பட்டது.

1971 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 334 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இன்ஸ்பெக்டர்கள் ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு வகையான விதி மீறல்களுக்காக (1970 ஆம் ஆண்டில் 928 வழக்குகள் தொடரப்பட்டதுடன் ஒப்பிடுகையில்), இவ் வாண்டில் 858 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 838 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன. 6 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 1970 ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 19,867 வசூலிக்கப்பட்டதற்கு மாறாக, அறிக்கை ஆண்டில் ரூ. 16,814 வசூலிக்கப்பட்டது.

தொழிலாளர்களை வேலையிலிருந்து அகற்றியதற்கு அல்லது வேலையினின்று நீக்கியதற்கு எதிராக, மேற்படி சட்டத்தின் 19-வது பிரிவின்படி செய்து கொண்ட 73 மேல் முறையீடுகள், 1971 ஆம்



ஆண்டு தொடக்கத்தில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகிய தொழிலாளர் நல அதிகாரிகள் முன்பு முடிவுறாமல் இருந்தன. இந்த ஆண்டில் 160 மேல் முறையீடுகள் பதிவு செய்யப்பட்டன. 1970 ஆம் ஆண்டில் செய்துகொண்ட 167 மேல் முறையீடுகளுக்கு மாறாக, இவ்வாண்டில் 163 மேல்முறையீடுகள் மீது தொழிலாளர் நல அதிகாரிகள் முடிவு எடுத்துள்ளனர். 1971 ஆம் ஆண்டின் இறுதியில் 70 மேல்முறையீடுகள் முடிவுறாமல் உள்ளன.

1970 ஆம் ஆண்டில், தொழிலாளர் நல ஆணையாளர் முடிவு எடுக்க வேண்டி, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டத்தின் 27-வது பிரிவின்கீழ் ஒரு விண்ணப்பம் வந்தது.

இவ்வாண்டில், மேற்படி சட்டத்தின்கீழ், இன்ஸ்பெக்டர்கள் 29,342 முறையான ஆய்வுகளையும், 299 திடீர் ஆய்வுகளையும், 486 விடுமுறை ஆய்வுகளையும், 166 சிறப்பு ஆய்வுகளையும், 96 இரவு ஆய்வுகளையும் செய்தனர்.

8. மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951.—இவ்வாண்டுத் தொடக்கத்தில், 307 மலைத்தோட்டங்கள் உள்ளன. இவற்றில் 85,528 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். 26 புதிய மலைத்தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. (1,353 தொழி லாளர்கள் இவற்றில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.) 14 மலைத் தோட்டங்கள் நீக்கப்பட்டன (இவற்றில் 1,298 தொழிலாளர் பணி புரிகின்றனர்). இவ்வாறாக, அந்த ஆண்டின் இறுதியில் 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் 319 மலைத் தோட்டங்கள் உள்ளன. இவற்றில் 85,583 தொழிலாளர்கள் பணிக் கமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில், மலைத்தோட்ட இன்ஸ்பெக்டர்கள், 623 முறையான ஆய்வுகளைத் தவிர, 103 சிறப்பு ஆய்வுகளையும், 85 ஞாயிறு ஆய்வுகளையும், 80 திடீர் ஆய்வுகளையும் செய்தனர். நடப்பாண்டில் பதிவு செய்யப்படாத 38 மலைத் தோட்டங்களுக்கும் அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

சென்னை, மலைத்தோட்டத் தலைமை இன்ஸ்பெக்டரின் இசைவு பெற்று இவ்வாண்டில் தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலமாக மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு பணியிடக் கம்பளிகளும், படுக்கை ஜமுக்காளங்களும் வழங்கப்பட்டன.

[1972 மார்ச் 24

தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10-வது பிரிவின்படி மலைத்தோட்ட அதிபர்கள் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகும். மருத்துவ வசதிகள் அளிக்கும் காரியத்திற்காக, மலைத் தோட்டங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகைத் தோட்டங்களும் ஏற்பாடு செய்து வைக்க வேண்டிய மருத்துவ வசதிகளின் தரங்கள் தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளின் 21-வது விதியி[illegible]வறுக்கப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

**வகை I—**

| | |
|---|---|
| 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட மலைத் தோட்டங்கள். | மலைத் தோட்ட அதிபர்கள், சொந்தமாக மலைத் தோட்டப் பகுதியில் மருத்துவமனை வைத்து வருவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். |

**வகை II—**

| | |
|---|---|
| 1,000-க்குக் குறைவான ஆனால், 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட மலைத் தோட்டங்கள். | இம்மலைத் தோட்டங்களில் இணைந்த மருத்துவமனைக்கும், தனி மருந்தகத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். |

**வகை III—**

| | |
|---|---|
| 200 தொழிலாளர்களையும் அதற்குக் குறைந்த தொழிலாளர்களையும் கொண்ட மலைத் தோட்டங்கள். | அவை, தனித் தனியாகவோ தொகுதிகளாகவோ, அவசியமான சாதனங்களுடனும், மருத்துவர்கள் வருகைக்கான ஏற்பாடுடனும் மருந்தகங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். |

1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10-வது பிரிவின்படியும், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளின் 26-வது விதியின்படியும் மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான திட்டங்கள் மலைத் தோட்ட அதிபர்கள் அரசுக்குப் பணிந்தனுப்ப வேண்டும். தற்போது உள்ள 319 மலைத்தோட்டங்களில் 253 மலைத்தோட்டங்கள் மருத்துவ திட்டங்களுக்கு ஒப்புதலைப் பெற்றுள்ளன.



1972 மார்ச் 24]

தமிழ்நாடு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளின் 22-வது விதிக்கிணங்க, மலைத்தோட்டத் தொழிலதிபர்கள் 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருக்கும் தேர்வில் தொகுதி மருத்துவமனைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிலாளர் நலத் துறையில் 27—1—71 ஆம் நாளிட்ட 105 ஆம் எண் அரசு ஆணையில், தொகுதி மருத்துவ மனைகள் அமைப்பதற்கு 26—6—1971 வரை கால அளவை அரசு அனுமதித்துள்ளது. 1971, ஆகஸ்ட் திங்களில் நடந்த மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. தொகுதி மருத்துவ மனைகளைக் கட்டுவதற்கு பெருமளவு செலவு ஏற்படுகிறது. அதனால் ஏற்கனவே உள்ள தோட்ட மருத்துவமனைகள் மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை பொதுவாக அளிக்கின்றன. எனவே, சிறப்பு சிகிச்சை அளிப்பதற்காக அரசு மருத்துவமனைகளுக்கு, அச்சிகிச்சைக்காகும் செலவுக்காக பாதி மருத்துவமனை கட்டணங்களை செலுத்த மலைத்தோட்டத் தொழிலாளர்கள் தயாராக உள்ளதாகவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இப்பொருள் குறித்து சுகாதாரப் பணிகள்—குடும்பநலத் திட்டத் துறை இயக்குநருடன் கலந்தாலோசிக்கும் நோக்கத்துடன், இப்பொருள்பற்றி மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் அடுத்தக் கூட்டத்தில் விவாதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**வழக்குகள்.**—1971-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நீதிமன்றத்தில் 9 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இவ்வாண்டில் 10 வழக்குகள் தொடர ஒப்பளிக்கப்பட்டன. இவ்வாண்டில் 14 வழக்குகள் குறித்து முடிவு எடுக்கப்பட்டது. இவற்றில் 12 வழக்குகளுக்கு எல்லாக் குற்றச்சாட்டுகள் குறித்தும் தண்டனை விதிக்கப்பட்டது. 2 வழக்குகளுக்கு சில குற்றச் சாட்டுக்களுக்கு மட்டுமே தண்டனை அளிக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டின் இறுதியில் நீதிமன்றத்தில் 5 வழக்குகள் முடிவுறாமல் உள்ளன.

**மேல்முறையீடுகள்.**—கீழ் நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக அரசு செய்து கொண்ட இரண்டு மேல்முறையீடுகள் உயர்நீதி மன்றத்தில் முடிவுறாமல் உள்ளன.

**விதிவிலக்கு.**—1951-ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 19 முதல் 22-வரை உள்ள பிரிவுகளினின்று மலைத் தோட்டங்களில் பணிபுரியும் மருத்துவமனை மருத்துவப் பணியாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், பண்ணையாட்கள், காவலாட்கள், கால்நடை, காப்பாளர்கள், அரப்புரவுப் பணியாளர்கள், குப்பைக் காரர்கள் ஆகியோருக்கு 14—9—1971-ஆம் நாளிட்ட 1164-ஆம் எண் அரசு ஆணையில் 26—12—1970 வரை அரசு விலக்களித்தது.

**பேறுகால உதவி.**—1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து பெண் தொழிலாளர்களுக்குப் பேறுகால உதவி 1961-ஆம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டத்தின் விதித்துறைகளால் முறைப்படுத்தப்படுகிறது. தொழில், தொழிலாளர் நலன், வீட்டுவசதித் துறை, 16—8—1967-ஆம் நாளிட்ட 2610-ஆம் எண் அரசாணையில் 1961-ஆம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டத்தின்படி மாநில அரசு விதிகள் தயாரித்துள்ளது. இச்சட்டத்தின் விதித்துறைகளும், விதிகளும் இப்பொழுது செயலில் உள்ளன.

மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு, தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையில், இரண்டு சிறப்புக் கூட்டங்கள் நடத்தியது. 1971 மே திங்களில் உதகையில் ஒரு கூட்டமும், 1971 ஆகஸ்ட் திங்களில் ஏற்காட்டில் ஒரு கூட்டமும் கூட்டப்பட்டது. ஆலோசனைக் குழுவின் முக்கிய பரிந்துரைகளில் சில வருமாறு :—

1. தொழிற்சாலை உரிமையாளர்கள், தற்காலிக, தினக்கூலித் தொழிலாளர்களுக்கு பணிப் புத்தகங்கள் (Service Books) வழங்கவேண்டும்.

2. தற்போது வழங்கப்பட்டுவரும் போர்வைக்குப் பதிலாக, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நல்ல தரமான கம்பளிப் போர்வை வழங்கப்படவேண்டும்.

3. முறையான மலைத் தோட்டப் பணியில் ஒப்பந்தத்



4. மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகளைச் செவ்வனே செயற்படுத்துவதற்காக அரசு மலைத்தோட்டங்களில் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

**9. பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 தமிழ்நாடு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிபந்தனைகளை முறைப்படுத்தல்) சட்டம் 1968.**

1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் 3-வது பிரிவைத்தவிர அச்சட்டத்தின் ஏனைய விதித்துறைகள் யாவும் 1968 ஜூலைத் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன. அச்சட்டத்தின் 3-வது பிரிவு மட்டும் 1968 செப்டம்பர் 1-ஆம் நாள் முதற் கொண்டு செயலுக்கு வந்தது.

1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து இம்மாநிலத்தின் பீடித் தொழில் அதிபர்களில் சிலர் உயர் நீதி மன்றத்தில் 1968-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1-ஆம் தேதியன்று "ரிட் மனுக்கள்" தாக்கல் செய்தனர். அந்த நிறுவனங்கள் குறித்து, மேற்படி சட்டமும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும் செயல்படுவதை நிறுத்தி வைத்து சென்னை உயர் நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால், திருநெல்வேலி மாவட்டம், மூக்கூடல் சொக்கலால் ராம் சேட் பீடிக் கம்பெனி தாக்கல் செய்த "ரிட் மனுக்கள்" பேரிலே தான், மேற்படி சட்டம் செயல்படுவதைப் பொதுவாக உயர் நீதி மன்றம் நிறுத்தி வைத்தது. இதன் பின்னர், இச் சட்டமும், விதிகளும், 1968-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ஆம் தேதி முதல் இம்மாநிலத்திலுள்ள எந்த பீடி நிறுவனம் குறித்தும் செயல்படுத்த முடியவில்லை. நிறுத்தி வைப்பு ஆணையை அந்த நிறுவனத்துக்கு மட்டிலும் கட்டுப்படுத்துமாறு கோரி உயர்நீதி மன்றம் முன்பு அரசு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்த "ரிட் மனுக்கள்" மீது மாநில அரசும் மத்திய அரசும், எதிர்வாக்குமூலங்களைத் தாக்கல் செய்துள்ளன. இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் இன்னும் முடிவுறா நிலையிலுள்ளன.

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்திற்கு முரணாகாத தமிழ் நாடு சட்டத்தின் விதித்துறைகளின்படி,

உரிமங்கள் புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர் துறை ஆணையாளரை அரசு கேட்டுக்கொண்டது. ஆனால், வேலூர்-6, விருதம்பட்டு, யு. கே. அப்துல் ஜப்பார் ஸாகிப் சன்ஸ், எடையம்பட்டி, ஜோலார்பேட்டை ஏ. ரத்தினவேல் கவுண்டர் சன்ஸ், கதர்க்கொடி பீடி கம்பெனி—ஆகியோர் உயர்நீதி மன்றத்தில் அரசு ஆணையை எதிர்த்து வழக்கிட்டனர். மேற்சொன்ன அரசு ஆணைகள் செயல்படுவதை நிறுத்திவைத்து சென்னை உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வழக்கும் உயர்நீதி மன்றத்தில் முடிவுறு நிலையில் உள்ளது.

தொழிலாளர் துறை (ஆய்வுகள்) துணை ஆய்வாளர், மேற்படிச் சட்டத்தின் 6(2) பிரிவின்படித் தலைமை ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எடைகள். அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின்கீழ் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மேற்படி சட்டத்தின்படி, பொருத்தமான அதிகாரியின் அலுவல்களை நிறைவேற்றி தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவின்படி மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரிகளாகத் தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் துணை ஆணையாளர்கள், தொழிலாளர்த் துறை ஆய்வாளர்கள். துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் மேற்சொன்ன சட்டத்தின்படி அவரவர்க்குரிய அதிகார வரம்புக்குள் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

1936-ஆம் ஆண்டு ஊதியங்கள் கொடுத்தல் சட்டத்தின் விதித்துறைகளும் (மத்தியச் சட்டம் IV/1936) அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், பீடி, சுருட்டுத் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள் அனைவருக்கும், இச்சட்டம் பொருந்துகிற தொழில் வளவுகளுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) விதிகளைச் சேர்ந்த 3(2) விதியின்கீழ் பணிந்தனுப்பப்படுகிற தொழில் வளவு, கட்டிட வரை படங்களை ஆய்ந்து பார்க்கையில், பொருத்தமான அதிகாரி, மேற்படி சட்டத்தின்படி



ளவுகளாகப் பயன்படுத்துவதற்கு அந்த வளவும், கட்டிடமும் ருந்தனவையாக உள்ளனவா என்றும், மேற்படி சட்டத்தின் தல் 16 வரையுள்ள, பிரிவுகளின் தேவைகளுக்கு ஏற் ாற்றியமைத்துக் கொள்ளத்தக்கவையா என்றும் கவனித்து நாள்ளவேண்டும் என்றும் அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளத

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசி ருவிழா விடுமுறைகள்) சட்டத்தின் விதித் துறைகள், 10 அல்ல தற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள பீடி சுருட்டுத் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் நீட்டிக்க பட்டுள்ளது, இவ்வரசுக்கு உயர்நீதி மன்றம் தடை ஆணை பிற பித்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் 1970–71-லிருந்து 1971–72 வரையுள் காலத்தில் உரிமத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்ட பீடி தொழில் வளவுகளில் எண்ணிக்கை கீழே கொடுக்க பட்டுள்ளது :—

| | 1970–71. | 1971–72. |
|---|---|---|
| உரிமங்களுக்காக விண்ணப்பித்துக் கொண்ட பீடித்தொழில் வளவுகள். | 909 | 623 |
| வேலையில் சேர்த்துக் கொள்ள உரிமம் கேட்டுள்ள தொழிலாளர்கள். | 1,183 | 5,031 |

1971-ல் உரிமக் கட்டணமாக ரூ. 15,720.50 வசூலிக்கப்பட்டது ஆனால், 1970-ல் ரூ. 12,517 தான் வசூலாகியது.

இவ்வாண்டில், பீடித் தொழிற்சாலை வளவுகளை வேலைநாட்களில் 861 முறையும், விடுமுறை நாட்களில் 4 முறையும் சோதனை செய்தனர்.

10. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961.

அறிக்கை ஆண்டில், சென்னைத் தொழிலாளர் நலத் துறை (ஆய்வுகள்) துணை ஆய்வாளர் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து இருந்து வந்தார்.

1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகள் ஆகியவற்றின் விதித் துறைகள் 30—10—1971 வரை 10 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 18 தொழிலாளர்கள் நல துணை ஆய்வாளர்கள், 156 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோரால் செயற்படுத்தப்பட்டன. பின்னர், 1971 ஆகஸ்ட் 10, 11-ஆம் தேதிகளில் குற்றாலத்தில் நடத்தப்பட்ட தொழிலாளர் நல அதிகாரிகள் மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி, ஆய்வு, 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தைச் செயற்படுத்துதல் ஆகிய பணிகள் 1-11-1971-லிருந்து தொழிலாளர் நலத் துணை அதிகாரிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலத் துணை ஆய்வாளரினால் செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் ஆய்வில் 5 சதவீதத்தை சோதனையிடும்படி தொழிலாளர் நல ஆய்வாளர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டில் தொடக்கத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் 1,138 இருந்தன. புதிதாக 96 நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டதனால் அந்த எண்ணிக்கை 1,234 ஆக உயர்ந்தது. இந்த 1,234 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில், இவ்வாண்டில் 79 நிறுவனங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,155 ஆகும். இந்த நிறுவனங்களில் 41,705 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அறிக்கை ஆண்டில் விண்ணப்பிக்கப்பட்ட 111 விண்ணப்பங்களுக்கு ரூ. 1,89,250 பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. 910 நேர்வுகளில் பதிவுச் சான்றிதழ்களை புதுப்பிப்பதற்காக தொழிலாளர் நல ஆணையாளர் ரூ. 35,141.25 திரட்டினர். இரண்டாம்படி பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக கட்டணமாக ரூ. 200 வசூலிக்கப்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளர் இவ்வாண்டு 40 இரண்டாம்படி பதிவுச் சான்றிதழ் வழங்கியுள்ளார்.

தொழிலாளர் நலத் துறை, 5—4—1971 ஆம் நாளிட்ட 406 ஆம் எண் அரசாணையில் அரசு, 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து, 1970 செப்டம்பர் 22 ஆம் நாள் தொடங்கி மேலும் மூன்றாண்டுக் காலத்திற்கு அல்லது மேற்சொன்ன நிறுவனங்களில் பணிபுரிகின்ற போக்குவரத்து பணியாளர்கள், 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் பயன்கள் அனைத்தையும் அனுபவித்து வருகின்ற வரையில் இவற்றில் எது குறைவோ அது வரையில் மலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற போக்குவரத்துப் பணியாளர் அனைவருக்கும் 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து அளிக்கப்பட்ட விதி விலக்கின் கால அளவை நீட்டித்துள்ளது.





ஆண்டுத் தொடக்கத்தில் 16 வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன. 1971-ல் 75 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 91 ஆகியது. விதிகளுக்கு இணங்க பின்னர் நடந்து கொண்டமையால், ஒரு வழக்கு ரத்து செய்யப்பட்டது எஞ்சிய 90 வழக்குகளில், 74 வழக்குகள் தண்டனை விதிக்கப்பட்டு முடிக்கப்பட்டன. தண்டனை மூலம் ரூ. 3,106 வசூலிக்கப் பட்டது. ஒரு வழக்கு விடுதலையில் முடிந்தது. எஞ்சியுள்ள 15 வழக்குகளின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. விடுதலையில் முடிந்த ஒரு வழக்கில் தமிழ் நாட்டின் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துப் பணியாளர் விதிகளின் கீழ் முன்னரே வகைசெய்யப்பட்ட மூன்று சேசிய விடுமுறை நாட்கள் ஐந்து பண்டிகை விடுமுறை நாட்களோடுகூட மே 1 ஆம் நாளையும் சேர்க்க மேற்படி சட்டத்தின் 32-வது பிரிவு இந்த ஆண்டில் திருத்தப்பட்டது (தொழிலாளர் நலத் துறை, 7—7—1971 ஆம் நாளிட்ட 798 ஆம் எண் அரசாணையைக் காண்க).

மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் சட்டத்தையும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளையும் செயற்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை நல்குவதற்கான முத்தரப்பு நிலைக்குழுவின் காலம் 6—10—1971 அன்று முடிவடைந்தது. இக்குழுவை மீண்டும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

11. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் (வேலை நிலைமைகளும், பல்வகை விதித்துறைகளும்) சட்டம், 1965.—பத்திரிகை நிறுவனங்களின் ஆய்வாளர்கள் என்னும் தகுதியில் தொழிலாளர் நல ஆய்வாளர்களால் அறிக்கை ஆண்டில், இச்சட்டத்தின் விதித் துறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச் சட்டத்தின்கீழ் 3,357 பணியாளர்களைக் கொண்டு

70 நிறுவனங்கள் உள்ளன. அறிக்கை ஆண்டில் ஆய்வாளர்கள் 30 முறையான ஆய்வுகளும் ஒரு தனி ஆய்வும் நடத்தினர்.

**12. தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம், 1946.**—இவ்வாண்டில் 29 தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த நிலை ஆணைகளுக்குச் சான்றளிக்கப்பட்டன. இதனால், சான்றளிக்கப்பட்ட நிலை ஆணைகளின் எண்ணிக்கை 4,850 ஆக உயர்ந்தது. இவ்வாண்டில் 13 நேர்வுகளில் நிலை ஆணைகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் சான்று அளிக்கப்பட்டது.

**13. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள். (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். 1958.**—1971-ம் ஆண்டில் மேற்படி சட்டத்தின் கீழ்வரும் 7,09,029 தொழிலாளர்களைக் கொண்டு 69,869 தொழில் நிறுவனங்கள் (தொழிற்சாலைகள், மலைத் தோட்டங்கள் உட்பட) இருந்தன. அறிக்கை ஆண்டில், சட்டத்தைத் திருத்துவதன்மூலம், அரசு, 1970-லிருந்து மே 1-ம் நாளை ஒரு தேசிய விடுமுறை நாளாக அறிவித்தது. மேலும், மேற்படி சட்டத்தின் 11-வது பிரிவின் வரம்பு நிபந்தனையையும் நீக்கியது. இத் திருத்தத்தின் விளைவாக, 25—4—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் மே 1ம் நாளன்று அனுமதிக்கப்பட்ட விடுமுறைக்குப் பதிலாக தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் ஒரு விடுமுறை நாளைக் குறைப்பது செயல்திறனற்றதாகும்.

மேற்படி சட்டத்தின் விதித் துறைகளை மீறியதற்காக நிர்வாகத்தினர்மீது 497 வழக்குகள் தொடரப்பட்டன. 465 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. 5 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 1971-ல் அபராதமாக ரூ. 8,301 வசூலிக்கப்பட்டது.

## II ஊதியங்கள் சட்டம்.

அறிக்கை ஆண்டில். கீழ்க்காணும் வேலைகள் குறித்து. குறைந்த அளவு விதங்களை வரையறை செய்யவும் திருத்தி அமைக்கவும் அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

1. விசைத்தறியில் வேலை.
2. புகையிலைத் (பீடி தயாரித்தல் உட்பட) தொழிற்சாலையில் வேலை.
3. அரிசி, மாவு அல்லது பருப்பு ஆலையில் வேலை.





முன்னரே அமைக்கப்பட்ட கீழ்காணும் ஆலோசனைக் குழுக்கள், கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு விதங்களை வரையறுத்தல்/திருத்தி அமைத்தல்பற்றி பரிசீலனையில் உள்ளன.

1. சிறு துறைமுகங்களில் படகுப் பணியில் வேலை.
2. தங்க ஆபரணங்கள் செய்யும் தொழிற்சாலையில் வேலை.
3. உள்ளாடை தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து, குறைந்த அளவு ஊதிய விதங்களை வரையறை செய்யவும்/திருத்தியமைப்பதற்கும் குழுக்கள் அமைப்பதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1. பொது மோட்டார் போக்குவரத்து, மோட்டார் பணிக்களரியில் வேலை.
2. தாம்பூல வாசனைப் புகையிலைத் தொழிற்சாலையில் வேலை.
3. மலைத் தோட்ட வேலை.
4. ஏதேனும் உள்ளாட்சி மன்றத்தில் வேலை.
5. சாலை போடுதல், அல்லது கட்டடங்கள் கட்டுதல், கல் உடைத்தல், அல்லது கல் நொறுக்குதல், சாலைகளைப் பேணுதல் ஆகியவற்றில் வேலை.
6. கல் வெட்டி எடுக்கும் இடங்களில் கல் உடைத்தல், கல் நொறுக்குதல் ஆகியவற்றில் வேலை.
7. வேளாண்மை, துணை வேளாண்மைப் பணிகளில் வேலை.
8. பொடி தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை.
9. விசைத்தறி, பட்டு நெசவு ஆலையில் வேலை.

அறிக்கையாண்டில், கயிறு தயாரிக்கும் தொழிற்சாலையில் பணி புரிபவர்களுக்கு, குறைந்த அளவு ஊதியத்தை திருத்தி அமைப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவும், மரத்தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தை வரையறுப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவும்,

தங்களது அறிக்கைகளை பணிந்தனுப்பியுள்ளன. இந்தத் தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதிய விதங்களின் திருத்தியமைப்பு/வரையறுப்பு ஆகியவை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**விவர அட்டவணையில் மேலும் சேர்க்கப்பட்டவை.**—குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில், "கைத்தறிப் பட்டு நெசவு ஆலை"யில் பணிபுரியும் வேலையையும் சேர்த்து அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

குறைந்த அளவு வீத ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில், 'கைத்தறி நெசவு ஆலை'யில் பணிபுரியும் வேலையையும் சேர்த்துக் கொள்வதற்கான வரைவு அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டு உள்ளது. குறைந்த அளவு வீத ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் (i) அச்சகங்கள், (ii) திரைப்பட அரங்குகள், (iii) ஓட்டல்களும் சிற்றுண்டி விடுதிகளும், (iv) கடைகளும் வணிக நிறுவனங்களும், ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**விலக்குகள்.**—மலைத் தோட்டங்களில், அதாவது சின்கோனா, ரப்பர், தேயிலை அல்லது காபி தோட்டம் ஆகியவற்றை வளர்க்கும் காரியத்திற்காக பேணப்பட்டுவரும் எஸ்டேட்டில் மருத்துவ மனைகள், மருத்துவப் பணியாளர்கள், வீட்டு வேலையாட்கள், செடி பண்ணை ஆணையாட்கள், காவலாள், கால்நடை வளர்ப்பவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், குப்பைக்காரர்கள். ஆகியோருக்கு 26—12—1971 வரையிலும் 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளின் விதித்துறைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திருத்தங்கள்.—அறிக்கை ஆண்டில், 1953-ம் ஆண்டு, குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளில், அரசு, கீழ்க்காணும் திருத்தங்களைச் செய்துள்ளது.

(i) 27-வது விதியின் (5) துணை விதிக்குப் பின்னர், துணை விதி (6) என்னும் புதிய துணை விதி சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் துணை விதி, வேலையிடம், அல்லது அத்துடன் இணைந்துள்ள முக்கிய அலுவலகத்தில், தொழிற்சாலை உரிமையாளர்கள் ஒவ்வொருவரும், XI-ம் எண் படிவத்தில் தொழிலாளர்கள் பட்டியல் ஒன்றைப் பேணி வருவதற்கு வகை செய்கிறது.



(ii) தொழிற்சாலை உரிமையாளர் ஒவ்வொருவரும், தன்னிடம் பணிபுரிகின்ற ஒவ்வொரு தொழிலாளருக்கும், சம்பளம் வழங்கும் நாளுக்கு குறைந்தது ஒரு நாளுக்கு முன்னதாகவும் அல்லது நாள்தோறும் சம்பளம் வழங்கப்படுமாயின் சம்பளத்துடனும் ஊதியச் சீட்டுகள் வழங்குவதற்கு வகை செய்து 1953-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) 27 (2)-வது விதி திருத்தப்பட்டது.

இச்சட்டத்தில் அடங்கிய 9,052 நிறுவனங்கள் (தொழிற்சாலைகள், மலைத் தோட்டங்கள் உட்பட) இருந்தன. 2,42,948 பேர் பணிபுரிந்தனர். நடப்பாண்டில் 162 வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 154 வழக்குகள் அபராதத் தண்டனையிலும், 2 வழக்குகள் விடுதலையிலும் முடிந்தன. ரூ. 3,794 அபராதம் விதித்து வசூலிக்கப்பட்டது. ஆனால், முந்திய ஆண்டில், 199 வழக்குகள் தொடரப்பட்டன. 192 வழக்குகள், ரூ. 6,508 அபராதத்தோடு தண்டனையில் முடிவுற்றன.

தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள், தொழிலாளர் நல துணை இன்ஸ்பெக்டர், தொழிலாளர் நல உதவி இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் நடப்பாண்டில் 11,774 ஆய்வுகள் நடத்தினர். ஆனால், கடந்த ஆண்டில் 14,087 ஆய்வுகளே நடத்தப்பட்டன.

**2. 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.**—தொழிற்சாலைகளைப் பொருத்தவரையில், தொழிற்சாலைகள் பிரிவுகளாலும் ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர் பிரிவினாலும் இச்சட்டம் நிர்வகிக்கப்படுகிறது. தொழிற்சாலைகள் உட்பட 18,171 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் வருகின்றன. 1971-ம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை, 5,59,677 (முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 5,38,299) ஆகும்.

306 நேர்வுகளில் நிர்வாகத்தினருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறு நிலையில் இருந்த வழக்குகள் உட்பட 295 வழக்குகள் குற்றத் தீர்ப்புத் தண்டனையில் முடிவுற்றன. ஒரு வழக்கு, விடுதலையில் முடிந்தது. அபராதமாக ரூ. 4,891 வசூலிக்கப்பட்டது.

ஊதியம் வழங்குதல் தொடர்பாக இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 253 உரிமைக் கோரிக்கைகள் முடிவுறு நிலையிலிருந்தன. ஊதியம் வழங்கல் சட்டத்தின்கீழ் அதிகாரியாக உள்ள தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளர் முன்பாக (1970-ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 407 உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிராக), நடப்பாண்டில் 360 உரிமைக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், நடப்பாண்டில், 338 உரிமைக் கோரிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 1971-ம் ஆண்டு இறுதியில் 275 வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன.

ஊதியம் வழங்குதல் சட்டத்தின் 11-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரயில்வே, விமானப்போக்குவரத்துப் பணிகள், சுரங்கங்கள் முதலியவை தொடர்பாக, வேலை அளிப்போரால், சிற்றுண்டி விடுதிகளுக்கு செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் குறித்து, குறைப்புகளைச் செய்ய அதிகாரமளிக்கும் அதிகாரியாக, தலைமைத் தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

1936-ம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டத்தின் 14 (3) பிரிவுக்கு இணங்க, கீழ்க்காணும் மத்திய அரசு அதிகாரிகளை "இன்ஸ்பெக்டர்களாக" மேற்படி சட்டத்தின் காரியங்களுக்காகத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. அச்சட்டத்தின் (2) பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுக்காக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்தத் தொழில் நிறுவனங்கள் குறித்து மேற்கூறிய இன்ஸ்பெக்டர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவார்கள்.

| அதிகாரிகள். (1) | தொழில் நிறுவனங்களின் வகுப்புகள். (2) |
|---|---|
| 1 சென்னை, வட்டாரத் தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளர். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல் துறை, சரக்குத் துறை அல்லது தோணித் துறை. |
| 2 சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளர். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல் துறை, சரக்குத் துறை அல்லது தோணித்துறை. |
| 3 சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட தொழில் விதிகள் செயல்படுத்துதல் (மத்திய) அதிகாரிகள். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல் துறை, சரக்குத் துறை அல்லது தோணித் துறை. |





## III. தொழில் தகராறுகள் சட்டம்.

**1. 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.**—இவ்வாண்டில் எழுந்த தகராறுகளின் எண்ணிக்கையும் அவற்றைத் தீர்த்து வைத்தது பற்றிய விவரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| | 1970 | 1971 |
|---|---|---|
| (அ) புலனாய்வு செய்யப்பட்ட குறையீடுகளின் எண்ணிக்கை. | 8,579 | 7,258 |
| (இ) சமரசப் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,343 | 1,070 |
| (உ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 670 | 461 |
| (எ) சட்டப்படி அமையாத நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 21 | 32 |

மேலே கூறப்பட்ட (இ), (உ), (எ) இவற்றின் கீழ் வராத வழக்குகள், சட்டப்படி அமையாத நடுவிணக்கத்தால் முடிவு செய்யப்பட்டன அல்லது அதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் அல்லது நடுவர் தீர்ப்புக்கு விடுதல் அவசியமென்று கருதப்படவில்லை.

1970ஆம் ஆண்டில் வந்த 8,523 குற்றச்சாட்டுகளுக்கும் தகராறுகளுக்கும் எதிராக இவ்வாண்டில் 9,026 குறையீடுகளும் தகராறுகளும் வந்துள்ளன.

**2. வேலை நிறுத்தங்கள்.**—கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த ஆய்வு ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் கீழ்கண்டவாறு உள்ளன :—

| | 1970 | 1971 |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 277 | 308 |
| (இ) விரயமாகிய உழைப்பு நாட்களின் எண்ணிக்கை. | 10,33,377 | 22,86,507 |

[1972 மார்ச் 24

| தொடர் எண்ணும் தொழிற்சாலையும். | வேலை நிறுத் தங்கள், கத வடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளா ரின் எண் ணிக்கை. | விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **1970** | | | |
| 1. பஞ்சாலைகள் .. | 86 | 41,824 | 335,454 |
| 2. பொறியியல் தொழிற் சாலை. | 60 | 9,384 | 169,656 |
| 3. தோல் பதனிடும் தொழிற் சாலை. | 3 | 510 | 2,969 |
| 4. புகையிலை, பீடி தொழிற் சாலை. | 23 | 13,594 | 129,339 |
| 5. மலைத் தோட்டம் .. | 12 | 2,388 | 25,861 |
| 6. ஏனைய தொழிற்சாலைகள். | 93 | 73,486 | 320,098 |
| | 277 | 141,186 | 1,033,377 |
| **1971** | | | |
| 1. பஞ்சாலைகள் .. | 143 | 67,854 | 1,100,379 |
| 2. பொறியியல் தொழிற் சாலை. | 77 | 22,615 | 648,201 |
| 3. தோல் பதனிடும் தொழிற் சாலை. | 4 | 1,850 | 22,240 |
| 4. புகையிலை, பீடி தொழிற் சாலை. | 4 | 335 | 3,172 |
| 5. மலைத் தோட்டம் .. | 9 | 5,962 | 118,018 |
| 6. ஏனைய தொழிற்சாலைகள். | 71 | 39,178 | 394,497 |
| | 308 | 137,794 | 2,286,507* |

* இந்தப் புள்ளி விவரம் தற்காலிகமானதே. சிம்ஸன் தொகுதிக் கம்பெனிகளின் பிரிவுகள் அனைத்திலிருந்தும் அறிக்கைகள் வாராததே இதற்குக் காரணமாகும்.



1972 மார்ச் 24]

1971-ஆம் ஆண்டில் மேலும் முடிவுற்ற வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவுற்றவை | 19 |
| (இ) தாமே வேலைக்கு மீண்டும் வருதல் | 52 |
| (உ) அரசு/தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளால் சமரசம் செய்யப்பட்டவை | 225 |
| (எ) காலவரையறையின்றி | 5 |
| (ஐ) இவ்வாண்டில் இறுதியில் நடைபெற்று வந்தவை | 7 |
| | 308 |

இந்த ஆய்வு ஆண்டில் விரயமான உழைப்பு நாட்களின் கூடுதலுக்குக் காரணம், கீழ்க்கண்ட பெரிய தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட தொடர்ந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும், வேலைநிறுத்தங்கள் அல்லது கதவடைப்புகள் ஆகும். அத்தகைய நிறுவனங்களில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| | விரயமான உழைப்பு நாட்கள் |
|---|---|
| 1. ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர், சென்னை. | 52,589 |
| 2. திரு. கணேசர் அலுமினியம் ஒர்க்ஸ், சென்னை. | 47,135 |
| 3. மைசூர் பிரீமியர் உலோகத் தொழிற்சாலை, சென்னை. | 7,920 |
| 4. சுந்தரம் பஞ்சாலை லிமிடெட், நாங்குநேரி. | 34,450 |
| 5. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை, தூத்துக்குடி. | 56,034 |
| 6. கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய ஊர்களிலுள்ள பஞ்சாலைகள். | 332,853 |
| 7. சிம்சன் தொகுதி கம்பெனிகள் | 232,065 |

**1971-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சில முக்கியமான இணக்க உடன்பாடுகள்.**

1. **இந்தியா சிமிட்டி லிமிடெட், சங்கரி**—வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஐவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளுமாறு கோரியும், வேறுசில பிரச்சினைகளை எழுப்பியும், சங்கரி சிமிட்டி ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், 8—6—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன்பேரில், 1—7—1971-ஆம் நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன் பயனாக, 2—7—1971-ஆம் நாளிலிருந்து தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.

2. **மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை.**—மேற்கூறிய மில்லில் 8,700 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 7,200 தொழிலாளர்கள், வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயதை 60-ஆக வரையறுக்குமாறும், பணிக்கொடைத் திட்டத்தை மிகு பயன் அளிக்கும் வண்ணம் தளர்த்துமாறும் கோரி 2—7—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாடு, மதுரை தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு, மதுரையில் 9—7—1971-ஆம் நாளன்று ஏற்பட்டது. அதன்பயனாக, 19—7—1971 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் முடிவுற்றது.

3. **மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், தூத்துக்குடி.**—மேற்கூறிய மில்லில் 2,246 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். அவர்களில் 1,878 தொழிலாளர்கள், வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயதை 60 ஆக வரையறுக்குமாறும், பணிக் கொடைத் திட்டத்தை மிகுபயன் அளிக்கும் வகையில் தளர்த்துமாறும் கோரி, 7—7—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாடு, மதுரை தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு, மதுரையில், 9—7—1971 ஆம் நாளன்று ஏற்பட்டது. அதன்பயனாக, வேலை நிறுத்தம் முடிவுற்று, 10—7—1971-ஆம் நாளன்று மீண்டும் பணி தொடங்கப்பட்டது.



4. **உட்லாண்ட்ஸ் ஹோட்டல், சென்னை-4.**—இலவசமாக வழங்க படும் காலை உணவின் அளவுகுறித்து எழுந்த தகரா காரணமாக, 3—8—1971 ஆம் நாளிலிருந்து சுமார் 250 தொ லாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அதன் விளைவாக, கதவடைப் செய்யப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன்பேரில், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், இரு தரப்பினரிடையே 21—8—1971 ஆம் நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன்பயனாக, நிர்வாகத்தினர் 26—8—1971-ஆம் நாளிலிருந்து கதவடைப்பை நீக்கியது. 26—8—1971 ஆம் நாளிலிருந்து பணி மீண்டும் தொடரப்பட்டது.

5. **விசைத்தறி ஆலை, மதுரை.**—சம்பள உயர்வு முதலிய பிரச்சினைகள் குறித்து 160 விசைத்தறி பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1,000 தொழிலாளர்கள் 2—9—1971 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் மதுரையிலுள்ள மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம், மதுரை மாவட்ட தொழிலாளர்கள் சங்கம், திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை தொழிலாளர் நல அதிகாரி ஆகியோர் தலையிட்டதன்பேரில், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், இரு தரப்பினரிடையே, 25—9—1971 ஆம் நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதற்கிணங்க, சம்பள உயர்வு குறித்த பிரச்சினை குறித்து, மதுரை. தொழிலாளர் நல அதிகாரி- ஆல் முறையின் மரபில் சமரசம் செய்து வைப்பதற்காக, அப்பிரச்சினையை அவரின் முடிவுக்கு விடுவது என்றும், அவருடைய முடிவை ஏற்றுக் கொள்வதென்றும் இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர். அந்த உடன்பாட்டின் பயனாக, தொழிலாளர்கள் மீண்டும் வேலையைத் தொடங்கினர்.

6. **சேலம் பஞ்சாலை, ஆத்தூர், சேலம்.**—மேற்கண்ட ஆலையின் தொழிலாளர்கள், சம்பள உயர்வு முதலியன கோரி 4—10—1971 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அதன் விளைவாக, நிர்வாகத்தினர், 5—10—1971 ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்தனர். சேலத்தில், 18—11—1971 ஆம் நாளன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-வது பிரிவின் கீழ், சேலம் தொழிலாளர் நல அதிகாரியின்முன், 19—11—1971 ஆம்

நாளன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன் பயனாக, நிர்வாகத்தினர் கதவடைப்பை ரத்து செய்தனர். 20—11—1971-ஆம் நாளிலிருந்து தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.

**7. ஊதியக் கொடை பிரச்சினை காரணமாக, கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள பஞ்சாலைகளில் பொது வேலை நிறுத்தம்.**—குறைந்த அளவு 8·33 சதவீத ஊதியக் கொடை அளிக்குமாறும், 20 சதவீதமென்ற உச்ச வரம்பு கட்டாமல் ஆலைக்குக் கிடைத்துள்ள ஆதாயத்தில் ஊதியக் கொடை வழங்குமாறும் கோரியதோடு, எந்த உடன்பாட்டின்கீழ் 1969-ஆம் ஆண்டில் முன்பணம் வழங்கப்பட்டதோ அந்த உடன்பாட்டிற்குத் தாங்கள் கையெழுத்திடாததனால் அந்த ஆண்டில் கொடுக்கப்பட்ட முன்பணம் பிடித்துக் கொள்ளப்படக்கூடாது எனக் கூறி கோயம்புத்தூர் மாவட்ட ஆலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர் மாவட்ட யுனைடெட் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை கோயம்புத்தூரிலுள்ள பஞ்சாலை நிர்வாகத்தினருக்கு வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். 20—10—1971-ஆம் நாளன்று, தொழிலாளர் நல ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவரோடு கோயம்புத்தூருக்குச் சென்றார். அத்தரப்பினரோடு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார். அவருடைய அறிவுரையின் பேரில், வேலை நிறுத்தத்தைக் கைவிட அச்சங்கங்கள் ஒப்புக்கொண்டன. ஆனால், 1969-ஆம் ஆண்டு ஊதியக் கொடையைப் பொறுத்தமட்டில் சட்டப்படியான நடவடிக்கையைத் தொடருவதற்கான உரிமையைத் தங்களிடம் வைத்துக்கொள்வதாக கூறினார். 1970-71-ஆம் ஆண்டு ஊதியக் கொடையைப் பொறுத்தவரையில் இந்திய அரசு அல்லது முத்தரப்புக் குழு ஆகியவற்றின் சட்டப்படி எவ்வளவு என்று கூறப்படுகிறதோ அதை ஏற்றுக்கொள்வதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதற்காக மட்டுமே தொழிலாளர் எவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதில்லை என்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

**8. மகாலட்சுமி பஞ்சாலை லிமிடெட், பசுமலை.**—1965-ஆம் ஆண்டிலிருந்து 1969-ஆம் ஆண்டுவரை வழங்கப்பட வேண்டிய ஊதியக் கொடையை வழங்குமாறு, பசுமலை, மகாலட்சுமி பஞ்சாலை லிமிடெட் தொழிலாளர்கள் (800), தங்களது சங்கத்தின் மூலமாகக் கோரினர். இது குறித்து ஊதியக் கொடை வழங்கல்



சட்டத்தின் கீழ், குறைந்த அளவு ஊதியக் கொடை வழங்கு வதிலிருந்து விலக்களிக்குமாறு, நிர்வாகத்தினர் அரசைக் கேட்டுக்கொண்டும், உயர்நீதிமன்றத்திற்கு மனுத் தாக்கல் செய்தும் உள்ளனர். தொழிலாளர் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி 20—10—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)-வது பிரிவின் கீழ் 27—10—1971-ஆம் நாளன்று உடன்பாடு ஒன்றை, மதுரை, தொழிலாளர் நல அதிகாரி-I ஏற்படுத்தினார். அதன்மூலம், தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியக் கொடையைக் கொடுக்க நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டனர். அதன் பிறகு, தொழிலாளர்கள் உடனே வேலைக்குச் சென்றனர்.

**9. தமிழ் நாடு மின்சார வாரியம், சென்னை.**—மாதம் ஒன்றுக்கு ரூ. 1,600-க்கு மேற்படாத சம்பளம் அல்லது ஊதியம் பெறும் (வேலை நிறு ஊதியம் பெறுவோர், தற்காலிகப் பெயர்ப்பட்டியலி லுள்ளோர், தற்காலிக நாட் கூலிப் பணியாளர் ஆகியோர் உட்பட மாதந்தோறும், நாள்தோறும் ஊதியம் பெறுவோர்) இவ்வாரியத் தொழிலாளருக்கு 1970-71 ஆம் ஆண்டிற்கு, 5 சதவீத ஊதியக் கொடை வழங்குவது என்று, 8—10—1971-ஆம் நாள், மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது.

**10. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி.**—பெரு மளவில் பதவி உயர்வு வழங்கல், அகவிலைப்படியை மாற்றி அமைப்பது ஆகியவை அடங்கிய கோரிக்கைப்பட்டியல் குறித்து, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தில் பணிபுரியும் சுமார் 960 இளநிலைப் பொறியாளர், 500 பொறியியல் கண்காணிப்பாளர் ஆகியோர் 2—10—1971-ஆம் நாளிலிருந்து உள் இருப்பு வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர். மாண்புமிகு முதலமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் முன்பு, 8—10—1971-ஆம் நாளன்று சென்னையில் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் முன்பு, 30—10—1971-ஆம் நாள் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்மூலம் தகராறு குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத் தொழிலாளர்களுக்கு 1970-71-ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை குறித்த தகராறு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்பு ...

தீர்க்கப்பட்டது. ஊதியக் கொடையின் அளவானது, ஆண்டு வருமானத்தில் 5 சதவீதமாகும் என்று வரையறுக்கப்பட்டது.

**11. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பீடித் தொழில் நிறுவனம்.**—ஊதிய உயர்வு கோரி, திருச்சி மாவட்ட பீடித் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 400 தொழிலாளர்கள், 28—10—1971-ஆம் நாளிலிருந்து 30—10—1971-ஆம் நாள்வரை வேலை நிறுத்தம் செய்தனர். அதோடு, வேலை செய்யப் போய்க் கொண்டிருந்த பிறரையும் வேலைக்குப் போகவிடாமல் தடுத்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டதன் பேரில், வேலை தொடரப் பட்டது. 1—11—1971-ஆம் நாளிலிருந்து 7—11—1971-ஆம் நாள் வரை வேலை நடந்தது. மாவட்ட ஆட்சித் தலைவரோடு 8—11—1971-ஆம் நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தை பலனளிக் காததைத் தொடர்ந்து, 9—11—1971-ஆம் நாளிலிருந்து மீண்டும் தொழிலாளர்கள் (400) வேலைநிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதன் பேரில், ஊதிய உயர்வு கொடுப் பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. 18—11—1971-ஆம் நாளி லிருந்து வேலை தொடங்கப்பட்டது. அமைதி நிலவியது.

**12. சுந்தரம் பஞ்சாலை லிமிடெட், நாங்குனேரி.**—பணிச்சுமை, ஊதியம், 1970-ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை ஆகியவற்றை மாற்றியமைத்தல், பணிக் கொடைத் திட்டத்தைக் கொண்டு வருதல் முதலியவற்றைக் கோரி, 16—10—1971-ஆம் நாளிலிருந்து, தொழிலாளர்கள் (675) வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத் தத்தைத் தொடர்ந்து, நிர்வாகத்தினர், 17—10—1971-ஆம் நாள் கதவடைப்புச் செய்தனர். இது குறித்து, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்பு விவாதிக்கப்பட்டது. 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு, 16—12—1971-ஆம் நாள், உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன்படி, 20—12—1971-ஆம் நாளிலிருந்து தொழிலாளர் வேலையைத் தொடர்ந்தனர்.

**13. அடிசன் அண்டு கம்பெனி லிமிடெட், சென்னை.**—ஊதியக் கொடை, அகவிலைப்படியைத் திருத்தி அமைத்தல் ஆகியவை குறித்த தகராறைத் தொடர்ந்து, சென்னை, அடிசன் அண்டு கம்பெனி லிமிடெட்டிலுள்ள தமிழ்நாடு தேசிய பொறியியல் பணியாளர் சங்கத்தைச் சேர்ந்தோர், "வேலையை மெதுவாகச்



செய்தல்", "வேலையை அவ்வப்போது நிறுத்திவிடுதல்" என்ற வேலை நிறுத்தமுறையைக் கையாண்டனர். அதன் விளைவாக, நிர்வாகத்தினர், 14—10—1971-ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்தனர். (1) 1970-71-ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை, (2) அகவிலைப் படியை மாற்றியமைத்தல் ஆகிய இவ்விரு பிரச்சினைகள் குறித்து தீர்ப்பளிக்க நடுவர் தீர்ப்புக்கு அரசு அனுப்பியது. மேலும், தொழில் தகராறுகள் சட்டத்தின் 10 (3) பிரிவின்கீழ், வேலைநிறுத்தத்தையும், கதவடைப்பையும் தடை செய்தது. இந்த ஆணைக்கு இணங்க, நிர்வாகத்தினர், 29—11—1971-ஆம் நாளிலிருந்து கதவடைப்பை நீக்கினர். ஆனால், தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்பு 8—12—1971-ஆம் நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாய், 10—12—1971-ஆம் நாளிலிருந்து மீண்டும் வேலை தொடரப்பட்டது.

**14. திரு. கணேசர் அலுமினியம் ஓர்க்ஸ், சென்னை.**—வேலை யின்மை காரணமாக தற்காலிகமாகப் பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டது குறித்து, 16—9—1971-ஆம் நாளிலிருந்து, மேற் கூறிய நிறுவனத்தின் 300 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இது குறித்து இணக்கப் பேச்சு நடந்த போதிலும், வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடித்தது. முடிவாக, தொழிலாளர் நல அமைச்சர் வழங்கிய கருத்துரைகளின் அடிப்படையில், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், 22—12—1971-ஆம் நாள், சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன்பிறகு, வேலைநிறுத்தம் முடிவுற்று 24—12—1971-ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**15. மைசூர் பிரீமியர் உலோகத் தொழிற்சாலை, சென்னை.**—வேலையின்மையால் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளோர் குறித்து மேற்கூறிய நிறுவனத்தின் தொழிலாளர்கள் 200 பேர், 3—11—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றன. ஆனால், உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. முடிவாக, தொழிலாளர் நல அமைச்சர் தெரிவித்த கருத்துரைகளின் அடிப் படையில், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ்; சென்னை, தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு, 22—12—1971-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

அதற்கிணங்க. வேலை நிறுத்தம் முடிவுற்று 24—12—1971-ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர்.

**16. ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், சென்னை.**—பணி மதிப்பீடு முதலிய கோரிக்கைகளை வைத்து, சென்னை, ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட்டில் பணி புரியும் சுமார் 400 தொழிலாளர்கள் 8—11—1971-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இது குறித்து, சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர் இணக்கப் பேச்சு வார்த்தைகளை நடத்தினர். சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரால் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. 1971-ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ், இந்த வேலை நிறுத்தத்தை, 9—12—1971-ஆம் நாளிட்ட 5374-ஆம் எண் ஆணையின் மூலம், இந்திய அரசு தடை செய்தது அதன் விளைவாக, தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.

**17. வட ஆற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள்.**—வட ஆற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வேலைநிறுத்த அறிவிப்புச் செய்தார்கள். தொழிலாளர் நல அமைச்சர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக 24—2—1972 அன்று ஒரு உடன்பாடு காணப்பட்டது. அதன்படி நிர்வாகத்தினரும் பீடித் தொழிலாளர் பிரதிநிதிகளும் 1,000 ஜாடி பீடி சுற்றுவதற்கு ரூ. 2·85 லிருந்து ரூ. 3.25, 1,000 சாதா பீடி சுற்றுவதற்கு ரூ. 2.55-லிருந்து ரூ. 2.95 என்ற ஊதிய உயர்வுக்கு இணங்கினர்.

**18. சிம்ஸன் தொகுதிக் கம்பெனிகள்.**—தொடர்ந்து விரயம் ஏற்பட்டு வருகிறது என்ற காரணத்தைக் காட்டி, எஸ்.ஆர்.வி.எஸ். லிமிடெட்டில் (சிம்ஸன் தொகுதிக் கம்பெனிகளில் உள்ளது) 98 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்வதாக, அதன் நிர்வாகத்தினர், 30—10—1971-ஆம் நாள் அறிவித்தனர். அதன் விளைவாக, அந்நிறுவனத்திலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 1963-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்யப்பட்ட 24 நாட்களில் ஒரு நாளை ஈடு செய்வதற்காக, ஒரு சனிக்கிழமையன்று பணி புரிய வேண்டுமென்று, அந்நிறுவனத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் கோரப்பட்டனர். அண்ணா சாலை, சிம்ஸன் அண்டு கம்பெனி லிமிடெட்டின் தொழில் பிரிவிலுள்ள குறிப்பிட்ட சில



தொழிலாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இது நடந்ததும் அதே நாளில்தான் (30—10—1971). இது குறித்து, தொழிலாளரின் இரு பிரிவினரிடையே 1—11—1971-ஆம் நாள் கைகலப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வேலை நின்று விட்டது. தொழிலாளர் தலைவர்கள் இதற்கிடையில், செயற்குழு ஒன்றை அமைத்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளர் தலைவர்களுடன் 15—11—1971-ஆம் நாள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாய், ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன் பலனாய், வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் 16—11—1971-ஆம் நாளிலிருந்து வேலைக்குத் திரும்ப ஒப்புக் கொண்டனர். ஆனால், செம்பியம் தொழில் பிரிவில் மீண்டும் ஒரு தகராறு எழுந்தது. இத்தகராறுக்குக் காரணம், ஒழுங்கின்மைக் காரணமாகப் பணி இடத்திலிருந்து வெளிச் செல்லுமாறு தொழிலாளர் ஒருவரை, இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினர் 22—11—1971-ஆம் நாளன்று கேட்டுக் கொண்டனர். இதுவே அத்தகராறுக்குக் காரணமாகும். இதன் விளைவாகத் தொழிலாளர்களிடையே தகராறு எழுந்தது. அது குறித்துத் தொழிலாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. அதன் விளைவாக, அத்தொழில் பிரிவிலிருந்தும், செம்பியம் தொழிற்சாலையின் ஏனைய தொழில் பிரிவுகளிலிருந்தும் தொழிலாளர்கள் வெளியேறினர். அதன் விளைவாக வேலை நின்றுவிட்டது. அண்ணா சாலையிலுள்ள தொழில் பிரிவிலும்கூட வேலை ஸ்தம்பித்து விட்டது. சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உடனடியாகத் தேர்தல் நடத்துதல், சிம்ஸன் அண்டு தொகுதிக் கம்பெனிகளின் தொழிலாளர்கள், பணியாளர் சங்கங்கள் ஆகியவைகளால் ஊதியம், உற்பத்தி அளவு ஆகியவை குறித்து முன்னரே எழுதிக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை மாற்றியமைத்தல் ஆகியவையே, தற்போதுள்ள முக்கியக் கோரிக்கைகளாகும். தொழிலாளர்களுக்குக் காவலர் பாதுகாப்பு அளித்தல், எஸ்.ஆர்.வி.எஸ். தொழில் பிரிவில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டோருக்குத் திரும்பவும் வேலை அளித்தல், காவலர் வழக்குகளைத் திரும்பப் பெறுதல், பழிவாங்கப்படுவதினின்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகியவையே ஏனைய கோரிக்கைகளாகும். எஸ்.ஆர்.வி.எஸ். லிமிடெட்டில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட 94 தொழிலாளர்கள் குறித்துத் தீர்ப்பு வழங்குவதற்காக விடப்பட்ட போதுங்கூட, அத்தொழில் பிரிவின் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை.

முடிவாக, தொழிலாளர்களுக்கான காவலர் பாதுகாப்பு அளித்தல், சங்கத் தேர்தல்கள் நடத்தல், எஸ்.ஆர்.வி.எஸ். லிமிடெட்டில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட தொழிலாளர்களை ஏனைய தொழில் பிரிவுகளில் வேலைக்கு எடுத்துக் கொள்ளுதல், தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதனின்றும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகியவைக் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்த உறுதி மொழிகளின் பேரில் 16—12—1971-ஆம் நாளிலிருந்து வேலைக்குச் செல்லத் தொழிலாளர்கள் சம்மதித்தனர். ஆனால், தொழிலாளர்களிடையே நடந்த கைகலப்புக் காரணமாக இக்கம்பெனிகளின் தொழிற் பிரிவுகள் அனைத்திலும் வேலை நின்றுவிட்டது. செம்பியத்திலுள்ள இத் தொழிற்சாலையின் வாகனங்களுக்கும், சாதனங்களுக்கும் கணிசமான அளவுக்குச் சேதம் ஏற்பட்டது. இந்த இடர்பாடுகளை நீக்குவதற்காக ஒரு நாளிலிருந்து ஒரு வார காலம் வரை, செம்பியத்திலுள்ள தொழிற் சாலைகள் மூடப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் நடந்த போதிலும், முதலமைச்சர் தாம் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குறுதியை 17—12—1971-ல் மீண்டும் வலியுறுத்தினார். ஆனாலும், தொழிலாளர்கள் அதனைச் செவிமடுக்காது, 20—12—1971-ல் சில கிளை நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்ட போது அவர்கள் பணிக்குத் திரும்பவில்லை. இன்றியமையாத பாதுகாப்புச் சாதனங்கள், பொது மக்களுக்குப் பயனுள்ள பொருள்களைத் தயாரிக்கும் பிரிவுகளில்கூட ஒரு சிலரே வேலைக்கு வந்திருந்தனர். இதன் பின்னரும் அதே நிலை தொடர்ந்து நீடித்ததால், அப்பிரிவுகளிலுள்ள பணிகளுக்கு இந்திய பாதுகாப்பு விதிகளின் 119-வது விதி பொருந்தும் வகையில் 4—1—1972-ல் அரசு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. தொழிலாளர்களின் பணி நிலைமைகள் குறித்து அவர்களுக்குள்ள குறைபாடுகளைப் பற்றி விசாரணை செய்ய, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் விசாரணை நீதிமன்றம் ஒன்றையும் அரசு அமைத்தது. அமைதியை நிலை நாட்ட மேலும் ஒரு முயற்சியாக, பல்வேறு குற்றச் சாட்டுகள் குறித்து காவலில் வைக்கப்பட்டுள்ள 211 தொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு அரசு ஆணையிட்டது. அத்துடன் பணியிலிருந்து நீக்கப்பட்ட 238 தொழிலாளர்களையும், தற்காலிகமாகப் பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட 37 தொழிலாளர்களையும் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறு



அதன் நிர்வாகத்தினரையும் அரசு வற்புறுத்தியது. இவ்வாறு அடுத்தடுத்து பெரு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பவில்லை. இறுதியாக, 10—1—1972-ல் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில், மத்தியத் தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக, ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி, தகராறுள்ள பிரச்சினைகள் குறித்து நிர்வாகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தவும், அவசரமான அன்றாடப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும், தொழிற் சங்க உறுப்பினர்களுக்கான தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யவும், ஆறு உறுப்பினர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்த உடன்பாட்டின் பயனாக, 12—1—1972-ல் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். ஆனாலும், அந்தந்தத் தொழிலாளர் தொகுதித் தலைவர்கள் தங்களது வழக்கமான பணியைச் செய்யாததனால் அவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைக் காரணமாகச் செம்பியத்தில் சில பிரிவுகளில் 1972 ஜனவரி மாதம் 19, 20, 21-ஆம் நாட்களில் பணி மீண்டும் தடைபட்டது. 21—1—1972-ல் அண்ணா சாலையிலுள்ள சிம்ஸன் நிறுவனத்தைச் சேர்ந்த சில பிரிவுகளிலும் பணி நின்றுவிட்டது. 22—1—1972-ல் சிம்ஸன் தொகுதி நிறுவனங்கள் தொழிலாளர் பணியாளர் சங்கங்களின் தலைவர் திரு. கே. கோபாலும், ஏனைய உறுப்பினர்களும் தொழிலாளர் சங்கங்களிலிருந்து விலகினர். 24—1—1972-ல் செம்பியத்தில், தொழிலாளர்களிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டு காவலர் அதில் தலையிட வேண்டியதாயிற்று. செம்பியத்திலுள்ள தொழிற் சாலைகள் 1—2—1972 வரை மூடப்பட்டு இருந்தன. 2—2—1972-ல் அவை மீண்டும் திறக்கப்பட்டன. தொழிலாளர்களும் படிப் படியாக வேலைக்குத் திரும்பினர்.

ஆனால் 23—2—1972 அன்று செம்பியத்தில் உள்ள ஒரு பிரிவில் மறுபடியும் தொழிலாளர்களிடையே மோதல் ஏற்பட்டது. 24—2—1972 முதல் செம்பியத்தில் எல்லா பிரிவுகளிலும் அண்ணா சாலையில் உள்ள ஒரு நிறுவனமும் மூடப்பட்டன. அறுவர் குழுவும் கலைக்கப்பட்டது.

இறுதியில் 16—3—1972 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் முன் தொழிலாளர் நல அமைச்சர் உதவியுடன், தொழில் அமைச்சரின் உதவியுடனும் தொழிற்சங்க பிரதிநிதிகள் நிர்வாகத்தினருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக

20—3—1972-லிருந்து வேலையைத் திரும்ப தொடங்க ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. 24—3—1972 அன்று பிப்ரவரி மாத ஊதியத்தை வழங்க நிர்வாகம் இணங்கியது. தொழிலாளர் ஆகஸ்ட் 71 உடன்படிக்கைக்கு முற்பட்ட இயல்பான உற்பத்தியைக் கொடுப்பர் என்று தொழிலாளர் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். தொழிலாளர் பிரதிநிதிகள் ஒப்புதலோடு தொழிலாளர் துறை உதவித் துணை ஆணையரைத் தேர்தல்களை நடத்தும் அலுவலராக அரசு நியமித்துள்ளது. தேர்தல் விரைவிலேயே எவ்விதத்திலும் வேலை தொடங்கிய நான்கு வாரத்திற்குள் நடத்தப்படும். தேர்தல்கள் நடத்தப்படும்வரை அன்றாடக் குறைகளை நடுவிணக்கம் செய்து தீர்ப்பதற்குச் செம்பியத்தில் ஒருவரும், அண்ணாசாலையில் ஒருவருமாக இரு தொழிலாளர் துறை அலுவலரை அரசு நியமனம் செய்யும். எஸ்.ஆர்.வி.எஸ். நிறுவனத்தில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையிலமர்த்துவது பற்றி நிர்வாகம் முதலமைச்சரின் உறுதிமொழியை நிறைவேற்றி உடனேயே 12 மஸ்தூர்களை எடுத்துக்கொள்ள இணங்கியது.

தகராறுக்குள்ளான சிம்சன் தொகுதிக் கம்பெனிகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. சிம்சன் அண்டு கம்பெனி, லிமிடெட், தொழிற்சாலை I, அண்ணாசாலை, சென்னை-2.

2. சிம்சன் அண்டு கம்பெனி, லிமிடெட், தொழிற்சாலை II, III, செம்பியம்.

3. இந்தியா பிஸ்டன்ஸ் ரெப்கோ லிமிடெட் (India Pistons-Repco. Ltd.), செம்பியம்.

4. பைமெடல் பேரிங்ஸ் லிமிடெட், செம்பியம் (Bimetal Bearings, Ltd.).

5. சார்டுலோ இந்தியா லிமிடெட், செம்பியம் (Shardlow India, Ltd.).

6. தி வீல் அண்டு ரிம் கம்பெனி ஆப் இந்தியா, லிமிடெட், செம்பியம்.

7. எல். எம். வான் மோப்பஸ் டையமண்ட் டூல்ஸ் இந்தியா, லிமிடெட், செம்பியம் (L.M.Van Moppes Diamond Tools India, Ltd.).



9. டிராக்டர்ஸ் அண்டு ஃபாம் எக்யூப்மெண்ட், லிமிடெட் செம்பியம்.

9. டிராக்டர்ஸ் ஆண்டு ஃபாம் எக்யூப்மெண்ட், லிமிடெட் செம்பியம். (Tractors and Farm Equipment Ltd.).

10. அசோசியேடட் பிரிண்டர்ஸ் (சென்னை), பிரைவேட் லிமிடெட், அண்ணா சாலை, சென்னை.

11. ஸ்பீட்-எ-வே (பிரைவேட்) லிமிடெட், [Speed-A-Way (Private), Ltd.]. அண்ணா சாலை, சென்னை.

12. எஸ்.ஆர்.வி.எஸ். லிமிடெட், அண்ணா சாலை, சென்னை.

13. ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை-2.

14. தி சென்னை அட்வர்டைசிங் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், சென்னை. [The Madras Advertising Compan (Private) Ltd.]

15. ஜார்ஜ் ஓக்ஸ், லிமிடெட், அண்ணா சாலை, சென்னை (George Oakes, Ltd).

16. இந்தியா பிஸ்டன், லிமிடெட், செம்பியம்

17. ரீச்சோல்டு கெமிகல்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை-6 (Reichhold Chemicals India, Ltd.).

18. அசோசியேடட் பப்ளிசர்ஸ் (பிரைவேட்), லிமிடெட் சென்னை-2.

19. திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள்.—திருப்பூர் பனியன் தொழிலாளர் தங்கள் ஊதிய உயர்வு பற்றிய தகராறில் 7—2—1972 முதல் வேலை நிறுத்தம் செய்திருந்தனர்.

18—3—1972 அன்று சென்னையில் தொழிலாளர் நல ஆணையர் முன் நடந்த பேச்சு வார்த்தையின் பயனாக தற்போதுள்ள ஊதியத்தில் 20 விழுக்காடு இடைக்கால உயர்வாகக் கொடுப்பதென்றும், 20—3—1972 அன்று தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்புவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இறுதியாக ஊதிய நிர்ணயம் செய்வதற்குமுன் சென்னை உற்பத்தித் திறன் குழு தொழிலாளர் செய்ய வேண்டிய வேலை அளவை நிர்ணயம் செய்யும்.

அதற்குப் பின்னால் வேலை அளவுக்கு உரிய ஊதியத்தை சமரசப் பேச்சு மூலமாகவோ அல்லது நடுவர் தீர்ப்பு அல்லது தொழில் கோர்ட் மூலமாகவோ முடிவு செய்யப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சுமார் 7,000 தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

(4) மூடப்பட்ட பஞ்சாலைகள்.—நிதி இடர்ப்பாடு காரணமாக 1971-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பஞ்சாலைகள் மூடப்பட்டன :—

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 சோமசுந்தரம் ஆலை, கோயம் புத்தூர். | 1- 5-1971 | 1,300 |
| 2 காளீஸ்வரர் ஆலை, கோயம் புத்தூர். | 30- 5-1971 | 1,749 (கதவடைப்பு) |
| 3 ஜனார்த்தன ஆலை, கோயம் புத்தூர். | 23- 6-1971 | 1,200 (கதவடைப்பு) |
| 4 சாரதா ஆலை, கோயம்புத்தூர். | 13- 9-1971 | 750 |

ஏற்கெனவே மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகள், அந்த ஆலைகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள தேதிகளில், இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன :—

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளரின் எண்ணிக்கை. | மீண்டும் வேலை ஆரம்பிக்கப் பட்ட நாள். |
|---|---|---|---|
| 1 கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர். | 1- 5-1968 | 932 | 26- 6-1971 |
| 2 கிதாஞ்சலி ஆலை, சங்கரன் கோயில். | 5- 5-1968 | 289 | 30- 8-1971 |
| 3 திரு. சண்முகர் ஆலை, இராஜ பாளையம். | 18- 7-1970 | 400 | 15- 9-1971 |
| 4 ஜனார்த்தன ஆலை, கோயம்புத் தூர். | 23- 6-1971 | 820 | 6-10-1971 |
| 5 புதுக்கோட்டை பஞ்சாலை, நமண சமுத்திரம். | 30- 3-1970 | 450 | 29-11-1971 |

சென்னை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர் முருகன் ஆலையை எடுத்துக் கொள்வதற்கு 8—4—1971-ம் நாளிட்ட, தொழில்துறை அரசு ஆணை எண் 959 மூலம் அரசு ஆணை யிட்டுள்ளது.



கீழ்க்காணும் பஞ்சாலைகள், சென்னை, தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தால் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அதிகாரமளிக்குமாறு இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சரகத்தை, இந்த அரசு எழுதிக் கேட்டுள்ளது:—

1. காளீஸ்வரர் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
2. சோமசுந்தரம் ஆலை (பிரைவேட்) லிமிடெட், கோயம் புத்தூர்.
3. கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை லிமிடெட், கோயம் புத்தூர்.
4. பங்கஜா ஆலை, கோயம்புத்தூர்.
5. திரு பாலமலை ரெங்கநாதர் ஆலை, கோயம்புத்தூர்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 பஞ்சாலைத் தொழிற் சங்கங்களின் கூட்டுச் செயற்குழு 19 கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை வெளியிட்டு அவை நிறைவேற்றப்படாவிட்டால் 12—2—1972 முதல் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அறிவித்தது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை பரிவுடன் கவனித்து ஆவன செய்வதாக அரசின் சார்பாக உறுதி கூறியும் கூட, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை திரும்பப் பெறவில்லை. அதன் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் பிப்ரவரி 18, 19 தேதிகளில் பேச்சுவார்த்தை நடத்தினார். தொழிலாளர் தலைவர்கள் முதலமைச்சருடைய ஆலோசனைகளையும் நிராகரித்து வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் தொடர்ந்து நடத்தினர். மீண்டும், மாண்புமிகு முதலமைச்சர் முன்பாக நடந்த பேச்சுக்களையடுத்து, நிர்வாகத்ினரும் தொழிலாளர் சங்கங்களும் முதலமைச்சருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இறுதியாக 11/12-ம் தேதி இடைப்பட்ட நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். ஒப்பந்தப்படி, அடிப்படை ஊதியத்தை மாற்றியமைத்தல், பஞ்சப்படி ஆகிய இரு கோரிக்கைகளும் 'சமரசக் குழு'வின் தீர்வுக்கு விடப்படும். தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்களின் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர் ஆலைகள் 10 நாள் மொத்த ஊதியத்தைத் தொழிலாளர்களுக்கு இடைக்காலத் தொகையாக அளிக்கும். இத் தொகையை எவ்வாறு சரி செய்வது என்பதை சமரசக் குழுவின் தீர்வுக்கு விடப்படும். கோவை மாவட்டத்தில்

மூடப்பட்டுள்ள ஆறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மொத்தமாக முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அளிப்பதற்காக, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அதை, சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு, கூட்டுச் செயற்குழுவைச் சார்ந்த சங்கங்களையும் மற்றைய சங்கங்களையும் கலந்து பகிர்ந்து அளிப்பார்.

(5) **பஞ்சாலைத் தொழிலில் சிக்கனச் சீரமைப்பு.**—1971-ல் துறையின் உதவியோடு சிக்கனச் சீரமைப்புத் தொடர்பான 40 தகராறுகள் தீர்க்கப்பட்டன. 18 தகராறுகள் நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட்டன.

(6) **நடுவர் மன்ற முடிவு.**—குறிப்பாக வேலையிலிருந்து விடுவித்தல், தள்ளி விடுதல், அகற்றி விடுதல், ஆட்குறைப்பு செய்தல் முதலியவற்றை நடுவர் மன்றத்திற்கு அனுப்ப இசையுமாறு தகராறு குறித்த இருதரப்பினரும் பொதுவாக ஆலோசனை கூறப்பட்டனர். 1971-ம் ஆண்டில் 32 வழக்குகள் முறையின் மரபில் நடுவர் மன்ற முடிவுக்கு விடப்பட்டன. இவ்வழக்குகளின் கீழ், வேலையிலிருந்து விடுவித்தல், விலக்கல், ஆட்குறைப்பு செய்தல் முதலியன வருவதோடு, ஊதியங்கள், பூரிப்பு ஊதியங்கள், பணிச் சுமை போன்ற பெருவாரியான நிதிப் பொறுப்புள்ளவைகளும் இதன் கீழ் வருகின்றன.

(7) **நடுவர் தீர்ப்பு.**—1970-71-ம் ஆண்டுகளில் சென்னை-1 தொழில் நடுவர் மன்றம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னை, மதுரை தொழிலாளர் கூடுதல் நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கு வந்த வழக்குகளின் எண்ணிக்கை, அந்த ஆண்டுகளில் அந்த நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | தீர்ப்பளிப்பதற்காக வந்த வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1970 | 1971 |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 88 | 81 | 87 | 132 |
| தொழிலாளர் நீதி மன்றங்கள். | 582 | 380 | 445 | 435 |
| மொத்தம்.. | 670 | 461 | 532 | 567 |



மேலே குறிப்பிட்ட தீர்ப்புகளுக்குக் கூடுதலாக, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (C) (2) பிரிவின்கீழ் தொழிலாளர்களால் 1970-ல் தாக்கல் செய்யப்பட்ட 2,788 விண்ணப்பங்களுக்கு தீர்ப்பு கூறியிருக்க, 1,532 விண்ணப்பங்கள் குறித்து தொழிலாளர் நீதிமன்றங்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(8) **பொதுப்பயன் குறித்த பணிகள் பற்றிய தொழிற்சாலைகள் என அறிவித்தல்.**—பஞ்சாலைத் தொழிற்சாலை நீங்கலாக, பொதுப் பயன் பணிகள் பற்றிய தொழிற்சாலைகள் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகள், நடப்பாண்டிலும், அது போன்று நீடித்து வந்தன.

(9) **வழக்குத் தொடருதல்.**—தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ், 1971-ம் ஆண்டில், 8 வழக்குகள் தொடர அரசு ஒப்பளித்துள்ளது.

(10) **வசூல்கள்.**—1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின், 33-C (1) பிரிவின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியுள்ள நிலுவைகளை வசூலிப்பதற்காக, 127 வழக்குகளில், மொத்தத் தொகை ரூ. 2,06,788-77 வசூல் செய்வதற்கு, அரசு 1971-ல் ஆணைகள் பிறப்பித்தது.

(11) **ஊதியக் குழுக்கள்.**—(i) பஞ்சாலைகள்—பஞ்சாலைத் தொழில் குறித்த இரண்டாவது ஊதியக் குழு செய்த பரிவுரைகள், நேரடி உடன்பாட்டின் மூலமாகவும் சமரச அதிகாரிகளின் முன்பு ஏற்பட்ட உடன்பாடுகள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நாள்வரை, இப்பிரச்சினைகள் குறித்து உடன்பாட்டின் கீழ் வந்த ஆலைகளின் எண்ணிக்கையும், இதில் தொடர்பு கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| பஞ்சாலைகளின் எண்ணிக்கை | 102 |
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 93,000 |

(ii) **பொறியியல்.**—பொறியியல் ஊதியக் குழுவின் பரிவுரைகள் ஒருமுகமானதாக இல்லாததால், ஊதியக் குழுவின் தலைவர் சுயேச்சை உறுப்பினர்கள் ஆகியோர் செய்த பரிவுரைகளை ஏற்றுச் செயல்படுத்துவது என்று இந்திய அரசு தீர்மானித்தது. பிரிவுவாரியாக, மேற்கூறிய பரிவுரைகள் குறித்து கலந்துரையாடி ஓர் உடன்பாட்டிற்கு வருமாறு நிர்வாகிகளையும், சங்கங்களையும்

கேட்டுக்கொண்டு தமிழ் நாடு அரசு பத்திரிகைகளில் செய்தி ஒன்று வெளியிட்டது. தீர்வு காண இயலாதபோது, தகராறுகள் குறித்து தொழில் தகராறுகளின் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுவதன் மூலமும் தேவையான வழக்குகளில் நடுவர் மன்றத் தீர்ப்புக்காக அனுப்புவதன் மூலமும் அவற்றிற்குத் தீர்வு காணப்படுகிறது.

**(iii) சர்க்கரை.**—இத் தொழில் தொடர்பாக, இரண்டாவது ஊதியக் குழுவின் பரிவுரைகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதும்போன்று செயல்படுத்தப்படும் பொழுது ஏற்படும் பிரச்சினைகள் குறித்து பிரிவு மட்டத்தில் தீர்த்துக்கொள்ளுமாறும், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு அறிவுரை கூறி தமிழ்நாடு அரசு, பத்திரிகைக் குறிப்பு ஒன்று வெளியிட்டது. பிரிவு அளவில் உடன்பாட்டுக்கு வர அவர்களால் இயலவில்லை. எனவே, ஊதியக் குழுவின் பரிவுரைகளைக் குறித்து விவாதம் செய்து, அவற்றைச் செயல் படுத்துவது குறித்து இறுதி முடிவெடுக்க, தொழிலாளர் நலத் துணை ஆணையாளரை அமைப்பாளராகக் கொண்ட முத்தரப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இப்பொருள் குறித்து ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வுக்கு வர இக்குழுவுக்கு இயலாததால், 22—12—1971-ல் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரால் கூட்டமொன்று கூட்டப்பட்டது. ஊதியக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தி, தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பள நிலுவைத் தொகையை 10—1—1972-க்குள் கொடுத்து விட வேண்டுமென்றும், பின்னர் பிற பிரச்சினைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் தொழிலதிபர் களுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

ஆனால் பின்னர் கூறப்பட்ட பிரச்சினைகள் குறித்து உடன்பாட் டுக்கு வர இயலாததால், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், தொடர்புள்ள தரப்பினர்களுடன் பல முறை பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அதன் விளைவாக, 25—2—1972-ல் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

**(iv) சாலைப் போக்குவரத்து.**—சாலைப் போக்குவரத்துத் தொழில் குறித்த ஊதியக் குழுவின் இறுதியான பரிவுரைகள் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பரிவுரைகள்



அனைத்தும் ஒருமனதாகச் செய்யப்பட்டவை. இதுவரையில், ஊதியக் குழுவின் பரிவுரைகளை 208 பிரிவுகள் செயல்படுத்தி யுள்ளன. இதனால் 11,945 தொழிலாளர்கள் பயனடைகின்றனர்.

இந்தப் பரிவுரைகளை விரைவில் செயல்படுத்தும்படி எஞ்சியுள்ள நிர்வாகங்களை வற்புறுத்துமாறு துறை அதிகாரிகளுக்கு கட்டளை யிடப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து விவாதம் மேற்கொள்வதற்காக, 19—6—1971-ல் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரால் கூட்டமொன்று கூட்டப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். இக்கூட்டத் தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், ஊதியக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தத் தொழிலதிபர்களுக்கு 1971 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் தேதி வரையில் காலக் கெடு கொடுத்தார். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருடைய கருத்துக்கிணங்க தொழிலதிபர்கள் நடந்து கொள்ளாமையால், மேற்கண்ட பரிவுரைகளுக்கு சட்டப்பூர்வமாகச் செல்திறனளிப்ப தற்காகச் சட்டமொன்றை இயற்ற அரசு பரிசீலனை செய்து கொண் டிருக்கிறது.

**(v) மின்சாரம்.**—மின்சாரம் குறித்து ஊதியக் குழுவின் இறுதி யான பரிவுரைகளை இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ் நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், இதுவரை, மாண்புமிகு தமிழ் நாடு முதல் அமைச்சரின் தலையீட்டின் பேரில், கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஒன்று 1970-ல் ஏற்பட்டது.

மத்திய ஊதியக் குழுவின் பரிவுரைகளை மதுரை, கோயம் புத்தூர், பொள்ளாச்சி, கரூர், தஞ்சாவூர் ஆகிய நகராட்சி மின்சார நிறுவனங்களில் செயல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்வதற்காக, அதிகாரிகள் குழுவொன்றை அரசு அமைத் துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பள வீதங்களுக்கு நிகராக இருக்கும் விதத்தில் மேற்கண்ட நகராட்சி மின்சார நிறுவனத் தொழிலாளர்களுக்குச் சம்பள வீதங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இந்த அதி காரிகள் குழு தெரிவித்துள்ள பரிவுரைகளின் பேரில், அரசு அதற் கான ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(vi) **தோல் தொழில்.**—இதுவரையில், 10,021 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 231 நிறுவனங்கள் தோல் தொழிலுக்கான ஊதியக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தியுள்ளன. வட ஆர்க்காடு மாவட்டம் நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள தோல் பதனிடுதல் தொழிற்சாலைகள் குறித்து 1970 மார்ச் திங்கள் 11-ல் தொழிலாளர் நல ஆணையாளரால் வழங்கப்பட்ட நடுவர் தீர்ப்பில் ஊதியத்தைத் திருத்தியமைக்கும் பிரச்சினையும் வருகிறது. எஞ்சியுள்ள தொழில் பிரிவுகளில் இவை செயல்படுத்தப்படுவது குறித்த முன்னேற்றம் கவனிக்கப்பட்டு வருகிறது.

(vii) **கனரக இரசாயனம்.**—இம் மாநிலத்திலுள்ள கனரக இரசாயனத் தொழிலைச் சேர்ந்த 8 பிரிவுகளில், 3,255 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 6 பிரிவுகள் கனரக இரசாயனம் உரத் தொழில் குறித்த ஊதியக் குழுவின் பரிவுரைகளை இது வரையில் செயல்படுத்தியுள்ளன.

12. **தொழிற் சங்கங்கள்.**—1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்று இருந்த பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 1,856 ஆகும். நடப்பாண்டில் 299 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 117 சங்கங்களின் பதிவுகள் நீக்கப்பட்டன. இரண்டு நேர்வுகளில் இணைப்புக்காக ஆணையிடப்பட்டது; 3 சங்கங்கள் கலைக்கப்பட்டன. அதன் மூலம் நடப்பாண்டின் இறுதியில் இயங்கும் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 2,033 ஆக ஆனது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் அமைக்கும் கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

13. **தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதிக் கோவை**—ஒழுங்குமுறை விதிக்கோவை முதலியவற்றைச் செயல்படுத்தும் பணி மாநில மதிப்பீடு செயல்படுத்தும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விதிக் கோவையின் விதித் துறைகள் அச்சிடப்பட்டு, வேலை அளிப்போருக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டன. பல்வேறு தொழில் உரிமையாளர்கள், பணியாளர் சங்கங்கள், மத்திய நிறுவனங்களுடன் இணைக்கப்படாத உள்ளூர் சங்கங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, ஒழுங்குமுறை விதிக்கோவைக்கு ஏற்பளிக்கும்படி, அவர்களுக்கு ஆலோசனை கூறுமாறு தொழிலாளர் நல அதிகாரிகள், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆகியோர் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் நன் முயற்சி





களினால் 299 தொழிற் சங்கங்கள் ஒழுங்குமுறை விதிக்கோவையை தாம் ஏற்றுக்கொள்ளுவதாக 1971-ல் எழுத்து மூலம் தெரிவித்துள்ளன. 1971 டிசம்பர் 31 வரையில் 260 நிர்வாகங்களும், 24 உள்ளாட்சி மன்றங்களும் ஒழுங்குமுறை விதிக்கோவையை ஏற்றுக் கொண்டுள்ளன.

ஒழுங்குமுறை விதிக் கோவையை மீறுதல், தீர்ப்புகளைச் செயற்படுத்தாமை, சங்கங்களுக்கு ஏற்பளிக்காமை முதலியவற்றிற்காக தொடரப்பட்ட 76 வழக்குகளில் (1971 ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் அன்று முடிவுறு நிலையில் உள்ள வழக்குகள் 41; 1971-ல் அறிவிக்கப்பட்ட வழக்குகள் 35) 1971-ல் 43 வழக்குகள் முடிக்கப்பட்டன. ஆண்டு முடிவில் 33 வழக்குகள் பற்றி புலனாய்வு செய்யப்பட்டு வந்தன.

1970, மே திங்களில் கூட்டப்பட்ட தொழிலாளர் நல ஆலோசனை குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையொட்டி, மாநில மதிப்பீடு-செயல்படுத்துக் குழுவின் ஒழுங்குமுறைக் கோவையினை மீறிய, தொழிலதிபர்கள் சங்கங்களின் பெயர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நலப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றன.

மாநில மதிப்பிடுதல்-செயற்படுத்துதல் குழு 1971, ஏப்ரல் 12, 1971, செப்டம்பர் 21, 1971, டிசம்பர் 27 ஆகிய நாட்களில் மும்முறை கூடி, ஒழுங்குமுறை விதிக்கோவையினை மீறுதல், சங்கங்களுக்கு ஏற்பளித்தல், மதிப்பிடுதல், செயற்படுத்துதல் தொடர்பான பணிகள் ஆகியவற்றைப்பற்றி விவாதித்தது. இக்குழு 1970-ல் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளர் இதன் தலைவர் ஆவார். சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையாளர் இக் குழுவின் செயலாளராவார்.

14. 1965-ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்—இச் சட்டத்தின் 19-வது பிரிவின்கீழ் ஊதியக்கொடை வழங்குவதற்கான கால அளவை நீட்டிக்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. 1971-ல், 70 தொழில் நிறுவனங்களுக்குக் (1 கூட்டுறவு நிறுவனம் உட்பட) கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**1965-ம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் விதிகளின் 8 (b) விதியை 1965-ம் ஆண்டு ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தின்**

3 (1) பிரிவுடன், சேர்த்துப் படிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளவாறு நிர்வாகத்தினர் தங்களது கணக்கு ஆண்டை மாற்றிக் கொள்வதற்கு ஒரு நிறுவனத்தை அனுமதித்து இவ்வாண்டில் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணை பிறப்பித்தார்.

## IV

### சமூகப் பாதுகாப்புச் சட்டம் இயற்றுதல்.

*1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.*—1970-ம் ஆண்டில் 1,024 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கையில், இவ்வாண்டில், 1,057 விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளன. 1971-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாளின்படி 360 விண்ணப்பங்கள் முடிவுறா நிலையில் உள்ளன. மொத்தம் 1,417 விண்ணப்பங்களில் 1971-ல் 941 விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கப்பட்டன. (1970-ல் 1,092 விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கப்பட்டன). 1971 முடிவில் 476 விண்ணப்பங்கள் முடிவுறா நிலையில் இருந்தன.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோருகின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு அரசுச் செலவில் வழக்குரைஞர் பணியை ஏற்படுத்தித் தருவதற்காக 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் வரையிலான ஐந்து ஆண்டுக்கால அளவிற்கு இவ்வரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 வழங்க ஏற்பாடு செய்துள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினர் மேல் முறையீடு செய்யும்பொழுது, தொழிலாளர் உயர் நீதி மன்றத்தில் அதை எதிர்த்து வழக்காடுவதற்காக, காயமடைந்த பணியாளருக்கோ அல்லது இறந்துவிட்ட பணியாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ வழக்குரைஞரை நியமிப்பதற்கான உதவியும் வழங்கப்படுகிறது. (ஆனால், இத்தகைய நேர்வுகளில் தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளரின் முன்பு வழக்கு நடப்பதற்காக ஏற்கனவே இத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கவேண்டும்). 1971-ல் ஒரு வழக்கில் சட்ட உதவிக்காக ரூ. 50 வழங்கப்பட்டது.

இவ்வாண்டில், தொழிலாளர் இழப்பீட்டு விதிகளின் 10-வது விதி திருத்தப்பட்டது. மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்து வாழ்பவர்களுக்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகை, இந்திய



ட் வங்கியிலாவது பட்டியில் கண்ட யாதொரு வங்கியிலாவது அல்லது இது காரியத்திற்காக மாநில அரசால் குறிப்பிடக்கூடிய பிற நிதி நிறுவனங்களிலாவது முதலீடு செய்யப்படுவதற்கு அத்திருத்தம் வகை செய்கிறது. மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்து வாழ்பவர்கள் அந்த இழப்பீட்டுத் தொகை எவ்வாறு முதலீடு செய்யப்பட வேண்டுமென்று எழுத்து மூலமாக கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

2. **1961-ஆம் ஆண்டு பேறுகால நலச் சட்டம்.**—1961-ஆம் ஆண்டு பேறுகால நலச் சட்டம் (மத்தியச் சட்டம்) அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் இவற்றின் விதித்துறைகளின்கீழ் பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நலன் வழங்குதல் 1967-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் நாளிலிருந்து முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வாண்டில், இச்சட்டத்தின் கீழ் உள்ள விதித்துறைகளை மீறியதற்காக நிர்வாகங்கள் மீது 5 வழக்குகள் தொடரப்பட்டன. 5 வழக்குகள் குறித்தும் முடிவெடுக்கப்பட்டது. அதன் மூலம் ரூ. 115 அபராதம் வசூலிக்கப்பட்டது.

3. **தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி—குடும்ப ஓய்வூதிய நிதிச் சட்டம், 1952.**—தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பும், உரிய நேரத்தில் பண உதவியும் கணிசமான அளவுக்குக் கிடைக்க வகை செய்வதில், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் தொடர்ந்து முக்கியமானதோர் பங்கை வகித்தது. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் வரலாற்றில் மற்றுமொரு மைல்கல், தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் என்ற புதியதோர் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளதாகும். முதுமையடைவதற்கு முன்பே இறந்துவிடும் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நீண்ட காலப் பாதுகாப்பளிக்க அத்திட்டம் வகை செய்கிறது. அத்தகைய தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நீண்ட நாளையத் தேவையை இத்திட்டம் நிறைவு செய்கிறது.

குடும்ப ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் உறுப்பினர்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. 1—3—1971 அன்று அல்லது அதற்குப் பிறகு வருங்கால வைப்பு நிதி உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட

எல்லா தொழிலாளர்களுக்கும் அது கட்டாயமாகப் பொருந்தும். இத்தேதியன்று இத்திட்டத்தின் உறுப்பினர்களாயிருந்த தொழிலாளர்களுக்கு, புதிய திட்டத்தின் கீழ் வருவதற்கு அல்லது ஏற்கெனவேயுள்ள வருங்கால வைப்புநிதிப் பயன்களைத் தொடர்ந்து பெறுவதற்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டது. அதற்கிணங்க, 84,000 தொழிலாளர்கள் இதுவரை குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வர விருப்பம் தெரிவித்தார்கள். 2,000 தொழிலாளர்கள் புதிய திட்டத்தின் கீழ் கட்டாயமாகக் கொண்டுவரப் பட்டுள்ளனர்.

1971-ம் ஆண்டில், தொழிலாளர் வருங்கால வைப்புநிதிச் சட்டம் கீழ்க்கண்ட இரண்டு தொழில்களுக்கு நீட்டிக்கப்பட்டது:—

(i) தொழிலறிவு, ஆலோசனைப் பணி அளிக்கும் நிறுவனங்கள்,

(ii) கயிறு முறுக்குதலும், நூல் சுற்றுதலும்.

இவ்வாறாக, 1970, டிசம்பர் 31-ல் 136 தொழில்கள்/வகை நிறுவனங்கள் இச் சட்டத்தின்கீழ் வந்தன. 1970-ல் இச்சட்டத்தின் கீழ் வந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 121 ஆகும்.

நிறுவனங்களும், சந்தாதாரர்களும்—தமிழ்நாட்டில் 6,765 தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிச் சட்டத்தின்கீழ் வந்தன. இந்த நிறுவனங்களில் இருந்த தொழிலாளர்கள்/சந்தாதாரர்களின் மொத்த எண்ணிக்கை முறையே 6,69,370-ம் 5,00,049-ம் ஆகும்.

வருங்கால வைப்புநிதி பங்குத் தொகைகளின் சட்டபூர்வமான விதம் சம்பளத்தில் 6¼ சதவிகிதமாகும். ஆனால், 50 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் தொடர்பாக, 82 தொழிற்சாலைகளில், பங்குத் தொகை விதம், சம்பளத்தில் 8 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பங்குத் தொகைகளின் தற்போதைய விதத்தை முறையே 8 சதவிகிதமாகவும், 10 சதவிகிதமாகவும் உயர்த்தலாமென்று தொழிலாளர் குறித்த தேசிய ஆணைக் குழு பரிவுரை செய்துள்ளது. இக் கருத்து இந்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.



4. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பாக்கித் தொகைகள் குறித்த கேட்பு/வசூல்/நிலுவை குறித்த புள்ளி விவரங்கள்.

| நிலுவையின் தன்மை. | கேட்பு. | வசூல். | 1-10-1971 அன்று நிலுவை. |
|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்.) |
| நடப்புப் பங்குத் தொகைகள். | 724·13 | 588·19 | 135·94 |
| முந்திய சேர்மானத் தொகைகள். | 21 20 | 7·95 | 13·25 |
| நிர்வாகச் செலவு .. .. | 19·39 | 16·59 | 2·80 |
| ஆய்வுச் செலவு .. .. | 2·40 | 2·36 | 0 04 |

5. நிலுவைகளை வசூலித்தல்.—தமிழ் நாட்டில், 30—9—1971 அன்றுள்ளபடி, நடப்பு பங்குத் தொகைகளை செலுத்தத் தவறிய நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படாமலுள்ள தொகை ரூ. 1.36 கோடியாகும். 31—3—1971 அன்றைய நிலவரப்படி வசூலிக்கப் படாமலிருந்த தொகை ரூ. 1.20 கோடியாகும். மொத்த நிலுவையில், ரூ. 1.16 கோடி பஞ்சாலைகளிலிருந்தும், பொறியியல் தொழிற்சாலைகளிலிருந்தும் மட்டுமே வசூலிக்க வேண்டியுள்ளது. இத் தொழில்களில் பாதகமான பொருளாதார நிலைமைகள் நிலவியதும், பல பஞ்சாலைகள் தவணைத் திட்டத்தை அனுசரித்து நடந்து கொள்ளாமையும் நிலுவைகள் உயர்ந்துள்ளதற்கு முக்கிய காரணமாகும். தவணைத் திட்டத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றி நடக்கத் தவறிய தொழிலாளர்கள்மீது, நிலவரி நிலுவைகளை வசூலிப்பது போலவே பங்குத் தொகை நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அரசு ஒப்பளித்துள்ள நேர்வுகளில் நிறுவனங்களின் மீது வழக்குகள் தொடரப் பட்டன.

தவணைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை மறு ஆய்வு செய்தல், பஞ்சாலைகள் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி கருத்தறிவித்தல் ஆகிய காரியங்களுக்காகவென்றே தமிழ் நாடு அரசு ஒரு குழுவையும் அமைத்துள்ளது. இந்தக் குழு இது வரை இரண்டு முறை கூட்டம் நடத்தி, பல்வேறு ஆலைகளிடமிருந்து வந்த முறையீடுகளை ஆலோசித்துப் பார்த்து, ஒவ்வொரு பிரிவின் நிதி உறுதிப்பாட்டைப் பொறுத்து, அதற்குப் பொருந்தத்தக்க வகையில், நிலுவைகளைப் படிப்படியாகத் தீர்ப்பதற்கான திட்டங்களைக் குறிப்பிட்டது.

இந்த வட்டாரத்தில், தமிழ் நாடு அரசு நிர்வாணம் அளிக்கப் படவேண்டிய நிறுவனங்கள் என்ற முறையில் 5 பஞ்சாலைகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆலைகளின் அதிகார உரிமை பெற்ற கட்டுப்பாட்டு அதிகாரிகள், இந்த ஆலைகள் மேற்கொள்ளப்பட்ட தேதி முதற்கொண்டு, வருங்கால வைப்புநிதி நிலுவைகளை உரிய காலத்தில் செலுத்தி வருகின்றன. ஆனால், மாநில அரசு வழங்கிய தவணை ஒத்திவைப்பு மூலம், ரூ. 41.87 லட்சம் அளவிற்கு கடந்த கால நிலுவைகளைச் செலுத்துவது, இரண்டாண்டு காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்டு வரும் நிறுவனங்களைப் பொறுத்த வரையில், பிற எல்லாக் கடன்களைக் காட்டிலும், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்று, அரசின் கலைப்பு அதிகாரி, தேவையான உரிமைக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளார்.

தவணைத் திட்டம் பொருந்துகிற பொதியியல், பஞ்சாலைத் தொழிற்சாலைகள் அல்லாத பிற தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில், நிலுவைகளை நிலவரி பாக்கியைப்போல் கருதி வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் 14-வது பிரிவின் கீழ் வழக்குகளும் தொடரப்பட்டன. வருங்கால வைப்புநிதி நிலுவைகள் வசூலிப்பதை விரைவு படுத்தும் பொருட்டு, அந்த நிலுவைகளை வசூலிப்பதற்கென்றே மாநில அரசுத் துறைகளில் தனி வசூல் பிரிவுகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இறுதிக்கட்டத்திலுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் விரைவிலேயே அத்தகைய ஒரு பிரிவு அமைக்கப் படும்.

**6. வட்டி வீதம்.**—1971-72-ம் நிதி ஆண்டிற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் ஒவ்வொருவரின் கணக்கிலும் உள்ள தொகைக்காக 5.80 சத வீதம் வட்டி வரவு வைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டில் 5.70 சத வீத வட்டியே அனுமதிக்கப்பட்டது என்பது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**7. முன்பணங்கள்.**—இந்த ஆய்வு ஆண்டில் திரும்ப வசூலிக்காத முன்பணமாக ரூ. 66.31 லட்சம் வரையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.





**8. வருங்கால வைப்புநிதிக் கணக்குகளைத் தீர்த்து இறுதியத் தொகை கொடுத்தல்.**—1970-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை உள்ள கால அளவில் வருங்கால வைப்பு நிதியிலிருந்து கணக்குத் தீர்த்து பணம் கொடுக்கும் வகையில் ரூ. 234.55 லட்சம் வழங்கப்பட்டிருக்கையில், 1971-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் அக்டோபர் திங்கள் 31-ம் நாள் வரையுள்ள கால அளவில் இவ்வகையில் ரூபாய் 272.39 லட்சம் வழங்கப்பட்டது. தவிர, இறந்துவிட்ட 2,700 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு/நியமனதாரர்களுக்கு மரண நிவாரண நிதியிலிருந்து ரூ. 7.64 லட்சம் வழங்கப்பட்டது.

**9. ஆண்டுக் கணக்கு விவரம் அளித்தல்.**—உறுப்பினர்களுக்குக் கொடுக்கவேண்டிய 1970–71-க்கான ரூ. 4.94 லட்சம் ஆண்டுக் கணக்கு விவரத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை ரூ. 0.81 லட்சத்திற்கான கணக்கு விவரம் அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கணக்குகளை கூடிய விரைவில் அளிப்பதற்கான அனைத்து முயற்சியும் செய்யப்படுகிறது.

**10. வட்டாரக் குழு-தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி—தமிழ் நாடு.**—தமிழ் நாடு வட்டாரத் தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதியின் வட்டாரக் குழு ஆய்வு ஆண்டில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ஆம் நாளிலும், ஆகஸ்டு திங்கள் 9-ம் நாளிலும், டிசம்பர் திங்கள் 27-ஆம் நாளிலும் கூடியது. இக் கூட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, குடும்ப ஓய்வூதியத் திட்டம் செயல்படுவது தொடர்பான பல்வேறு இன்றியமையாத உடனடித் தேவையுள்ள பொருள்கள் பற்றி விரிவாக விவாதித்தது.

**11. 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்திற்கு முக்கியமான திருத்தங்கள்:**—

(i) அசலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்துவதற்காக பொருத்தமான அரசால் உத்திரவாதமளிக்கப்பட்ட உறுதிப் பத்திரங்களை, பிற அரசு சட்டுறுதிப் பத்திரங்களுக்குச் சமமாக, சட்டப்படி நிலைப்பட்ட நிதிக்கு மாற்றம் செய்யும் வகையில், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால நிதித் திட்டத்தின் 28 (2) பத்தி திருத்தப்பட்டுள்ளது.

(ii) 1971-ம் ஆண்டு குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ...ற புதிய பத்தி சேர்க்கப்பட்டுள்ளது. ...ர் இரண்டு ஆண்டுகள் என்ற குறைந்த அள-

திற்கு குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்கு முன் இறந்து விடுவாரேயானால், உறுப்பினரின் பங்குத் தொகைகளின் பங்கினை, அதன்மீது 5½ சதவீத வட்டியுடன், பயனடையும் நபருக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இந்தப் புதிய பத்தி வகை செய்கிறது.

(iii) 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில், (2-A) என்ற ஒரு துணைப்பத்தி சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளது. குறிப்பிட்ட பருவங்களில் செயல்படும் நிறுவனங்களின் தொடர்பாக, விருப்ப உரிமையைச் செயலாற்றுவதற்கான கால அளவு 30—4—1972 வரை அதன்மூலம் நீட்டிக்கப்பட்டது.

(iv) 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் 8-வது பத்தியின் கீழ் (IV) என்ற புதிய துணைப்பத்தி சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டம் பொருந்துகிற ஒரு நிறுவனம் அல்லது விலக்களிக்கப்பட்ட ஒரு நிறுவனம் தொடர்பாக எந்தத் தொழிலதிபர் மேற்படி சட்டத்தின்கீழ் அல்லது திட்டத்தின்கீழ் மத்திய வாரியத்திற்கு அல்லது மேற்படி நிதிக்குச் செலுத்தவேண்டிய நிலுவைகளைச் செலுத்தத் தவறுகிறாரோ அத் தொழிலதிபர், வட்டாரக் குழுவின் ஒரு பொறுப்பாளராக அல்லது உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு பொறுப்பாளராக அல்லது உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராகும் பொருட்டு அந்த புதிய துணைப்பத்தி சேர்க்கப்பட்டுள்ளது.

(v) 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் 9-வது பத்தி திருத்தப்பட்டுள்ளது. வட்டாரக் குழுவின் ஒரு பொறுப்பாளர் அல்லது உறுப்பினர் விலக்களிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்லது இத்திட்டம் பொருந்துகிற ஒரு நிறுவனம் தொடர்பாக ஒரு தொழிலதிபராக இருந்து, மேற்படிச் சட்டத்தின்கீழ் அல்லது மேற்படி திட்டத்தின்கீழ் வாரியத்திற்கு அல்லது நிதிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகளைச் செலுத்துவதில் தவறியிருந்தால், அவரை அப்பொறுப்பாளர் பதவியிலிருந்து அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து அகற்ற இந்திய அரசுக்கு அதிகாரம் அளிப்பதே இப்புதிய பத்தியை அமைத்துக் கொண்டதன் நோக்கமாகும்.



(vi) வருங்கால வைப்பு நிதியின் விலக்களிக்கப்பட்ட, விலக்களிக்கப்படாத சேர்மானத் தொகைகளை முதலீடு செய்வதற்கென இந்திய அரசு கீழ்க்கண்ட முதலீட்டு முறைகளை வரையறுத்துள்ளது:—

(a) மத்திய அரசில்—45 சதவீதத்திற்குக் குறையாமல்.

(b) மாநில அரசின் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள்.

மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் உத்திரவாதமளித்துள்ள கடன் ஈட்டுப் பத்திரங்கள், வரி விலக்களிக்கப்பட்டுள்ள சிறு சேமிப்புப் பத்திரங்கள், அஞ்சலகங்களிலுள்ள ஓராண்டு, மூன்றாண்டு, ஐந்தாண்டுக் கால கையடைத் தொகைகள் ஆகியவற்றில்—எஞ்சியது.

(vii) 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் 4 (2) பத்தி திருத்தப்பட்டது. 1971, மார்ச் 1-ஆம் நாளிலிருந்து ஆறு திங்களுக்குள் விருப்ப உரிமை செயலாற்றப்படுவதை அனுமதிக்க அத்திருத்தம் செய்யப்பட்டது.

(viii) 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் 26-வது பத்தி திருத்தப்பட்டுள்ளது. ஒரு தொழிலாளர் வேலையில் நிரந்தரமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டால், உடனடியாக அவரை வருங்கால வைப்புநிதி உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள அத் திருத்தம் வகை செய்கிறது. அத்தகைய நேர்வில், அவர் தொடர்ந்து ஓராண்டுப் பணியை முடிக்காமலிருந்தாலும் சரி, அல்லது முடித்திருந்தாலும் சரி அல்லது ஓராண்டில் 240 வேலை நாட்களை பணி செய்திருந்தாலும் சரி, அவர் மேற்சொன்னவாறு வருங்கால வைப்புநிதியின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட அத்திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

12. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.—1971 டிசம்பர் 31 அன்றைய நிலைப்படி, இம்மாநிலத்தில் 39 இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் செயல்பட்டு வருகிறது. 3,94,250 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 16 லட்சம் மக்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைகின்றனர். தற்போது சென்னை மாநகரில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக 3 தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்ட மருத்துவமனைகளும், முழுநேர மாநில காப்புறுதி மருந்தகங்கள்

93-ம், இயல் ஊர்தி மருந்தகங்கள் 5-ம், தொழில் உரிமையாளர்கள் பயன் பாட்டு மருந்தகங்கள் 3-ம், பகுதி நேர மருந்தகங்கள் 2-ம் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

1971-72-ல், அரசு இத்திட்டத்தைக் கீழ்காணும் பகுதிகளுக்கு அவற்றிற்கெதிரே கொடுத்துள்ள தேதிகளிலிருந்து நீட்டித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| (1) சேலம் மாவட்டத்தில் போய்தனூர், நல்லகவுண்டன்பட்டி, வீரக்கல்புதூர் கிராமங்கள். | 30—5—71 |
| (2) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உசிலம்பட்டி (மணப்பாரை.) | 27—6—71 |
| (3) மதுரை மாவட்டத்தில் பழனி, நெய்க்காரப்பட்டி. | 27—6—71 |
| (4) திருநெல்வேலி மாவட்டத்தில் மேல திருவேங்கட நாதபுரம் கிராமம். | 29—8—71 |
| (5) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் பண்டாரவாடை—பெருமாண்டி கிராமம். | 29—8—71 |
| (6) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோமனூர், சியாமளாபுரம், நீலாம்பூர், அரசூர். | 29—1—72 |

சென்னை மாநகர், கோயம்புத்தூர், மதுரை, கோவில்பட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதி உட்பட, முழு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. பிற இடங்களில், காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதி அளிக்கப்படவில்லை.

13. மருத்துவமனை.—சென்னை, அயனாவரத்தில் தொழிலாளர் நல காப்புறுதிப் பிணியாளர்களுக்கென்றே மருத்துவ வசதிகள் அனைத்தும் நிறைந்த மருத்துவ மனையொன்று, 1962-ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து செயல்பட்டு வருகிறது. சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இத்திட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு இத்திட்டத்தை நீட்டித்துள்ளதையொட்டி, அம்மருத்துவமனையில் படுக்கைகளின்



எண்ணிக்கை 625-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில், 300 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்ட புதிய மருத்துவமனை ஒன்று, 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இதைப்போன்ற மருத்துவமனை ஒன்று, 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13-ஆம் நாளிலிருந்து மதுரையில் செயல்படத் தொடங்கியுள்ளது.

வார்டுகளும் இணைப்புகளும்.—தாம்பரம், அரசினர் காச நோய் நலம் பெண் மருத்துவமனையில் 52 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி வார்டுகள் இரண்டு நிலையாகத் தொடங்கப்பட்டுள்ளன. சிவகாசி, அரசினர் மருத்துவ மனையில், 12 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பிணியாளர்களின் பயனுக்கென்றே வால்பாறையில் உள்ள அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன்கூடிய வார்டு ஒன்று முடிக்கப்பட்டுள்ளது. கோவில்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் 32 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் நல காப்புறுதிப் பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. நாகர்கோயிலில் உள்ள அரசு மருத்துவமனையில் 26 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் நலக் காப்புறுதிக் காச நோய் வார்டு ஒன்றைக் கட்டவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதேபோல் வட ஆர்க்காடு மாவட்டம், பெண்ணாத்தூரில் உள்ள காச நோய் நலம் பேண் மருத்துவமனையில் 16 படுக்கைகளுடன் கூடிய காச நோய் வார்டு ஒன்றைக் கட்டவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நாகர் கோயிலில் உள்ள காச நோய் வார்டு செயல்படத் தொடங்கியுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவேரிநகரிலும், உசிலம்பட்டியிலும் 10 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கட்டவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

14. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள்.—கீழ்க்கண்ட இடங்களில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் தற்போது செயல்படுகின்றன :—

1. தண்டையார்பேட்டை.
2. பெரம்பூர்.
3. செம்பியம்.
4. சிங்காநல்லூர்.

5. ஒண்டிப்புதூர்.
6. சௌரிப்பாளையம்.
7. உப்பிலிப்பாளையம்.
8. வெள்ளலூர்.
9. சிவகாசி.
10. இராஜபாளையம்.
11. தூத்துக்குடி.
12. விக்ரமசிங்கபுரம்.
13. காவேரி நகர்.
14. இராம்ஜி நகர்.
15. மேட்டூர் அணை (மேல் நிலை).
16. மேட்டூர் அணை (கீழ் நிலை).
17. கொண்டித்தோப்பு.
18. கீழ்ப்பாக்கம்.
19. திருவொற்றியூர்.
20. செங்குன்றம் (Redhills)
21. அம்பத்தூர்.
22. ஆவடி.
23. திருநகர்.
24. பொன்னகரம்.
25. பழுங்காநத்தம்.
26. பரவை.
27. உடுமலைப்பேட்டை.
28. பல்லாவரம்.
29. முனிச்சாலை ரோடு.
30. திருப்பூர்-I.
31. கும்பகோணம்.
32. கோவில்பட்டி.
33. சூளை.
34. திருவல்லிக்கேணி.



பணியாளர்கள் குடியிருப்புகளுடன் கூடிய மேற்சொன்ன 34 மருந்தகங்கள் ரூ. 206 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

15. செலவு.—தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஆகும் செலவு முதலில் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 7 : 1 என்ற விகிதத்தில் மாநில அரசும், தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகமும் பகிர்ந்து கொள்கின்றன. கட்டிட செலவு முழுவதையும் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஏற்றுக்கொள்கிறது.

1971 ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் கொடுக்கப்பட்ட ரொக்கப் பண உதவி புள்ளி விவரம் வருமாறு :—

| | ரூ. பை. |
|---|---|
| (அ) தற்காலிக ஊனமை நல உதவி .. .. .. | 12,65,123·29 |
| (ஆ) நிலையாக ஊனமையுற்றோர் நல உதவி .. .. | 10,56,383·73 |
| (இ) நம்பியுள்ளோர் நல உதவி .. .. .. .. | 1,29,724·11 |
| (ஈ) நோய்க்கால உதவி .. .. .. .. .. | 1,11,79,629·90 |
| (உ) பேறுகால நல உதவி .. .. .. .. | 5,18,270·60 |
| (ஊ) நாள் பட்ட நோய்க்கால உதவி .. .. .. | 6,80,676·00 |
| (எ) இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை .. | 60,091·95 |
| (ஏ) பிற பல்வகை நல உதவிகள் .. .. .. | 30,450·84 |
| மொத்தம் .. | 1,49,21,350·42 |

இத் திட்ட உதவியை நீட்டிக்கவும், சமூக நல நடவடிக்கையின்கீழ் அதிகப்படியான பகுதியைக் கொண்டுவரவும் அதிகமான தொழிலாளர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் பயனடையச் செய்யவும் அரசு விரும்புகிறது. எனினும், தொழிலாளர்கள் நல ஈட்டுறுதிக் கழகம் விதித்த மருத்துவ வசதிச் செலவுக்கான மேல் வரம்பு காரணமாக இக்குறிக்கோள் அளவை அடைய முடியவில்லை. தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், இத் திட்டத்தின்கீழ் ஒரு தொழிலாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 வரையில்தான் மருத்துவ வசதி வழங்கவேண்டும் என்று தொடக்கத்தில் மேல் வரம்பு பதித்தது. முன்னாள் தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் அனுப்பப்பட்ட மாநிலக் குழு இந்திய அரசிடம் குறிப்பு ஒன்றைக் கொடுத்து மேல்வரம்பை நீக்கும்படி கோரியதன்

பயனக, வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிக்காக தொழிலாளர் குடும்பம் ஒன்றிற்கு 50 ஆகவும், விரிவு படுத்தப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 54 ஆகவும், மருத்துவமனை தங்கல் வசதி உட்பட முழு மருத்துவ வசதிக்கு ரூ. 64 ஆகவும் மேல் வரம்பைத் தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் திருத்தியமைத்தது எனினும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இந்த மேல் வரம்பை விட மருத்துவ செலவு அதிகப்படுமேயானால் அச்செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும். தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் அச் செலவில் ஒரு பகுதியைக் கூட ஏற்காது. திருத்தி அமைக்கப் பட்ட மேல்வரம்பின் விளைவாக மாநில அரசு கூடுதலாக ரூ. 114 லட்சம் செலவு ஏற்க வேண்டியிருக்கும்.

**16. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் குடும்ப நலத் திட்டம்.**—சென்னை அய்யனாவரத்திலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, முனைப்புத் திட்டத்தின்கீழ் கருத்தடை அறுவை மருத்துவம் செய்வதற்கான ஏற்பளிக்கப்பட்ட அறுவை மருத்துவ நிலையமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தின ருக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகின்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள எல்லா மருத்துவ சாலைகளிலும் குடும்ப நலத் திட்ட மருந்தகங்கள் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**17. அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.**—1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் வரம் பெல்லைக்குட்பட்ட தொழிலாளர்களுக்கும், நிலக்கரி, மைக்கா சுரங்கங்களைத் தவிர ஏனைய சுரங்கங்களில் பணி புரிகின்ற தொழி லாளர்களுக்கும் வீட்டு வசதி கிடைக்கும் வகையில், தொழி லாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை அமைக்கும் நோக்கத்துடன் அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை இந்திய அரசு தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ், மாநில அரசு, சட்டப்படிக்கான வீட்டு வசதி வாரியம், தொழிலதிபர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு கடனாகவும், உதவித் தொகையாகவும் இந்திய அரசு நிதி உதவி வழங்குகிறது.



**18. பொதுத்துறை.**—பொது, தனியார், கூட்டுறவுத் துறை களுக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் வீட்டு வசதிக்கான நிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 50 சதவீதத்தைக் குறைக்குமாறு திட்ட ஆணைக் குழுவின் ஆலோசகர் பின்னர் பரிந்துரை செய்துள்ளார். குறைத்துப் பரிந்துரை செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | நான்காவது ஐந்தாண்டுத் திட்டம். |
|---|---|
| | ரூ. |
| அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (பொதுத் துறை). | 45 லட்சம் |
| அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (தனியார் துறை). | 20 லட்சம் |
| மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம். | 5 லட்சம். |

1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு:—

1970-71-ல் பீளமேட்டில் கோயம்புத்தூர் மாவட்டம் 12 வீடு களுக்கான கட்டட பணிகளுக்காக ரூ. 0.28 லட்சம் செலவிடப் பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் பணியும் முடிக்கப் பட்டுவிட்டது.

நடப்பாண்டில் (1971-72), பொதுத் துறையில் வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்ற வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 9 லட்சமும் திருத்த மதிப்பீட்டில் ரூ. 8.59 லட்சமும் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால், உண்மையில் நடைபெற்ற வேலை முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் 1971-72-ல் ரூ. 4.61 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 7.92 லட்சம் செலவில் திருப்பூரில், பொதுத் துறையில், அரசு உதவிபெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றிலும் 4 அங்கணங்களைக் கொண்ட இரண்டு அடுக்குக் கட்டிடம் (108 அங்கணங்கள்) கட்டும் திட்டத்திற்கு அரசு இப்போது ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ. 19.66 லட்சம்

மதிப்பீட்டுச் செலவில், அம்பத்தூர், மாதவரம், காட்பாடி, மதுரை, திண்டுக்கல், கும்பகோணம், அரக்கோணம், திருவெறும்பூர், காரக்கலூர் ஆகிய இடங்களில் ஓர் அறை கொண்ட 138 அங்கணங்கள் கட்டும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை, தொழில்துறை நிறைவேற்றத் துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**19. தனிப்பட்ட தொழில் உரிமையாளர் திட்டங்கள்.**—1970-71-ல் தனியார்துறைத் திட்டங்களுக்கு ரூ. 0.21 லட்சம் செலவாயிற்று. விளாங்குடி, ஸ்ரீ விசாலாட்சி ஆலை நிர்வாகத்தினர் இவ்வாண்டில், 8 வீடுகள் கட்டி முடித்தனர்.

1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முண்டியம்பாக்கம் திருவாளர்கள் தென் இந்திய உருக்கு சர்க்கரை லிமிடெடினால் கட்டப்பட்டுவரும் 10 வீடுகள் அடித்தளம் வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தனியார் துறையின்கீழ் 1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 3.00 லட்சமாகும். திட்ட இலக்கு 310 அங்கணங்களாகும்.

தனியார் துறையில், அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் திருவாளர்கள் சக்தி சர்க்கரை லிமிடெட் நிறுவனத்திற்கு இரண்டு சிறிய அறைகளை உடைய 120 அங்கணங்களைக் கொண்ட இரண்டு அடுக்குக் கட்டடங்களையும் டால்மியாபுரம், திருவாளர் டால்மியா சிமிட்டி (பாரத்) லிமிடெட் நிறுவனத்திற்கு 60 சிறிய இரண்டு அறைகளைக் கொண்ட அங்கணங்களும், 36 முறையான அளவுள்ள இரண்டு அறைகளைக் கொண்ட பல அடுக்குக் கட்டடங்களையும், மேட்டூர் அணை, திருவாளர் மேட்டூர் கெமிக்கல், இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு முறையான இரண்டு அறைகளைக் கொண்ட 40 அங்கணங்களைக் கொண்ட இரண்டு அடுக்குக் கட்டடங்களையும் கட்டுவதற்காக அரசு ஏற்பளித் துள்ளது.

வேலூர், வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட் நிறுவனத்திற்கு 54 அங்கணங்களைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.



கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து வந்துள்ள விண்ணப்பங்கள் ஆய்வில் உள்ளன :—

(1) கெமிகல்ஸ்-பிளாஸ்டிக்ஸ் லிமிடெட்—60 வீடுகள்.

(2) சேலம் கூட்டுறவு நூற்பாலைகள் லிமிடெட்—24 வீடுகள்.

(3) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் லிமிடெட்—44 வீடுகள்.

அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதிகளுக்குத் தொழிலாளர் நல ஆணையாளர் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியமும், தொழில்—வணிகத் துறை இயக்குநரும் இதனை நிறைவேற்றும் முகவாமைப்புகளாயிருந்தனர்.

பொதுத் துறையில், அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பணியை விரைவுபடுத்தும் நோக்கத்துடன், தொழிலாளர் நலத் துறையின் 15—11—71-ஆம் நாளிட்ட 1493-ஆம் எண் அரசு ஆணையில் (வீட்டு வசதி) அரசு கீழ்க்கண்டவாறு ஆணை யிட்டுள்ளது :—

(i) பொதுத் துறையில் அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் நிதிகள், முன்பணம் வழங்குவதன் மூலம், நேரடியாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ii) நிலங்களைக் கையகப்படுத்தும் பணி, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

(iii) தொழில்—வாணிகத் துறை இயக்குநரால் நிறைவேற்றப் படும் திட்டங்கள் தொடர்பான நிதிக் கட்டுப்பாடு அவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

**20. மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.**— இத்திட்டம், மலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் தங்களது தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டது. அவ்வீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 3,200 செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 கடனாகவும், 37½ சதவீதம் உதவித் தொகையாகவும் இருக்கும்

குறைக்கப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத் திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட. தொகை ரூ. 5.00 லட்சம். 1971–72-ற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 2 லட்சம் ஆகும்.

வீடுகள் கட்டுவதற்காக, கீழ்க்காணும் மலைத்தோட்ட உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

| | மலைத்தோட்டத்தின் பெயர். | உதவியின் தன்மை. | |
|---|---|---|---|
| | | கடன் 50% | உதவித் தொகை 37½% |
| | | ரூ. | ரூ. |
| 1 | சேர்வராயன் எஸ்டேட், ஏற்காடு (12 வீடுகள்.) | 19,200 | 14,000 |
| 2 | எர்ணி எஸ்டேட், பட்டி வீரன்பட்டி (10 வீடுகள்.) | 16,000 | 12,000 |
| 3 | பி.ஆ.கே. ஜோசப்ஸ் காப்பி எஸ்டேட் (4 வீடுகள்.) | 6,400 | 4,800 |
| 4 | வாட்டர் பால்ஸ் எஸ்டேட் (4 வீடுகள்.) | 6,400 | 4,800 |
| 5 | அய்யர் தோட்டம் (6 வீடுகள்.) | 9,600 | 7,200 |
| 6 | லியனூர்டு எஸ்டேட், பட்டிவீரன் பட்டி (4 வீடுகள்.) | 6,400 | 4,800 |
| 7 | சிவசைலம் எஸ்டேட்-II (6 வீடு கள்.) | 9,600 | 7,200 |
| 8 | சிவசைலம் எஸ்டேட்-III (5 வீடு கள்.) | 8,000 | 6,000 |
| 9 | மகம்மது பீக் எஸ்டேட் (13 வீடு கள்.) | 20,800 | 15,600 |
| 10 | காவேரி பீக் எஸ்டேட், ஏற்காடு (8 வீடுகள்.) | 12,800 | 9,600 |
| 11 | எம். எஸ். பி. நாடார் சன்ஸ், ஏற்காடு (4 வீடுகள்.) | 6,400 | 4,800 |
| 12 | மாணம் போலி எஸ்டேட், வால் பாறை (32 வீடுகள்.) | 51,200 | 38,400 |



31—12—1970 அன்றுள்ளபடி, 1951-ம் ஆண்டு மலைத் தோட்டங்கள் தொழிலாளர் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள மலைத் தோட்டங்கள் அனைத்திலும், தனித்து வசிக்கும் தொழிலாளர்கள் 4,932 பேரும், 32,207 தொழிலாளர் குடும்பங்களும் இருந்தன. தமிழ் நாடு 1955-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளின் 50-வது விதிக்கிணங்க, தனித்து வசிக்கும் தொழிலாளர்கள் நான்கு பேருக்கு ஒரு வீடு விதமும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வீடு விதமும் குடியிருப்பு வசதி செய்து தரப்பட வேண்டும். மேற்சொன்ன, தனித்து வசிக்கும் தொழிலாளர்களுக்கும், குடும்பங்களுக்கும் 33,400 தரநிலை வீடுகள் தேவைப்பட்டன ; அவற்றில், வரையறுத்த தரநிலையுடைய 31,880 வீடுகள் தொழிலதிபர்களால் கட்டித் தரப்பட்டன ; இப்புள்ளி விவரம் 31—12—70 உடன் முடிவடைந்த அரையாண்டு முடிவில் உள்ளபடியான தகவலாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், முன்னர் செயலில் இருந்த மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நீட்டிக்கப்பட்ட கடன் உதவியைக் கொண்டு தொழிலதிபர்கள் 195 வீடுகளைக் கட்டி முடித்துள்ளனர்.

1971-ல், நான்கு தோட்டத் தொழிலதிபர்களிடமிருந்து வீடுகள் கட்டுவதற்காக வந்துள்ள திட்டங்களுக்கு சென்னையி லுள்ள மலைத்தோட்டங்கள் தலைமை ஆய்வாளர் ஏற்பளிப்பு வழங்கியுள்ளார்.

**21. மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்.**—மலைத்தோட்டங்கள் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம், தொழிலாளர் நலத்துறை அரசுச் செயலாளர் தலைமையில் 12—2—71 அன்று கன்னியாகுமரியில் கூடியது. அவ்வமயம் விவாதிக்கப்பட்ட பொருள்களாவன : மலைத் தோட்டங்களில் வசித்து வரும் தொழிலாளர்களில் வீட்டு வசதி செய்து தரப்படாமலுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை கொடுத்தல், வீட்டு வாடகைப்படி வழங்குதல், பொழுது போக்கு அறை, கால்நடைத் தொழுவம், கால்நடைப் பட்டியாள், (Cattle Keeper) குளியலறை, கழிப்பறைகள், குழந்தைக் காப்பகங்கள், மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், மலைத் தோட்டப் பணியாளர் வீடுகளுக்கு தரங்களைக் குறிப்பிடுதல், மலைத் தோட்டப் பள்ளி ஆசிரியர் களுக்கு வீடுகள் கட்டித் தருதல், வண்டி வலவர்கள், தச்சர்கள், வார்டு பையன்கள் போன்ற கைவினைஞராயல்லா [illegible]

களுக்குக் கூடுதல் வீட்டு வசதியளித்தல், குடியிருப்பு இல்லங்களில் மின் இணைப்புத் தருதல், வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஏற்பளிப்பு வழங்குதல், வீட்டு வசதிக்குத் தரங்களும் குறிப்பீடுகளும் வரையறுத்தல், தொழிலாளர்கள் குடியிருப்புக்களில் தாழ்வாரங்களுக்கு மறைப்புச் சுவர் கட்டுதல், மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தில் மெட்ரிக் அலகுகளைப் பயன்படுத்துதல் ஆகியன.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியத்தின் சிறப்புக் கூட்டமொன்று 25—5—1971-ல் உதகமண்டலத்திலும், 4—8—1971-ல் ஏற்காட்டிலும் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டன.

மலைத் தோட்டப் பணியாளர்களுக்கான வீடுகளின் தரங்களை நிர்ணயித்தல், மலைத் தோட்டப் பள்ளி ஆசிரியர்களுக்கு வீடுகள் ஒதுக்குதல், இது குறித்து அரசின் ஆணைகளை மலைத் தோட்ட அதிபர்கள் செயல்படுத்தாமல் இருப்பது, வலவர்கள் போன்ற கைவினைப் பணியாளர்களுக்கு கூடுதல் இடவசதி ஏற்பாடு செய்தல், மாநிலத் துறையிலிருந்து மத்தியத் துறைக்கு மலைத்தோட்டத் தொழிலாளர் குடியிருப்புத் திட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலம் விளைவு, ஏற்கெனவே தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ள குடியிருப்புத் திட்டங்களுக்கு கடன் உதவித் தொகை அளித்தல், பணியாளர்களின் குடியிருப்புத் தொகுதிகளில் மின்சார இணைப்பு கொடுத்தல், தொழிலாளர் குடியிருப்புத் தொகுதிகளுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தல், தாசில்தார்களிடமிருந்து சரிபார்த்து அறிக்கையைப் பெறுதல், இரண்டாம் முறை அடகு வைத்தலைப் பணையமாக ஏற்றுக்கொள்ளுதல், தொழிலாளர் குடியிருப்புகளில் தாழ்வாரங்களுக்கு மறைப்புச் சுவர் கட்டுதல், குளியல்-கொல்லையறைகள் கட்டுதல், தொழிலாளர்களின் வீடுகளுக்கு ஓடு மூடுதல், தொழிலாளர் குடியிருப்புகளில் பழுது பார்த்தல், காலி நிலங்களில் பயிர் செய்தல், கால்நடை வளர்ப்பு—கால்நடைக் கொட்டில்களைக் கட்டுதல், வீட்டு வாடகை போன்றவை.

இவ்வாண்டில், தொழிலாளர் குடியிருப்புகளைச் சுற்றி தெருவில் மின்சார விளக்குகளை அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகையைக் குறித்து ஆராய, அரசு, ஐவர் குழுவொன்றை



அமைத்துள்ளது. மேற்சொன்ன குழு அதனுடைய அறிக்கையை 31—12—1971-ல் அரசிடம் அளித்தது. இக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது

மலைத் தோட்டப் பணியாளர்களுக்கான வீடுகள் பற்றிய தரங்களை நிர்ணயிப்பது பற்றி விவாதிப்பதற்காக, ஆய்வாண்டில், குழுவொன்று அமைக்கப்பட்டது.

22. தொழிலாளர் கல்வித் திட்டம்.—தொழிலாளர்கள் கல்வித் திட்டம், இந்திய அரசால் நாடு முழுமையிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆய்விலுள்ள இந்த ஆண்டில் (1971-72) தொடர்ந்து வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் எதிர்படும் பிரச்சினை பற்றி விவாதிக்க, தொழிலதிபர்கள், தொழிற் சங்கங்கள் ஆகியோருடைய பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை தொழிலாளர் நல அமைச்சர் 20—4—71-ல் கூட்டினார். இவ்வகையில் தமிழ் நாட்டிலேயே முதன் முறையாக நடைபெற்ற இக் கூட்டத்திற்குத் தொழிலதிபர்கள், தொழிலாளர் நல அமைப்புகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். தொடக்க உரையில் தொழிலாளர் நல அமைச்சரவர்கள், தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அப்போது, தொழிலதிபர்களும் தொழிற் சங்கங்களும் மேலும் ஒத்துழைத்தால், தொழிலாளர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள எல்லாத் தொழிற் பிரிவுகளும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவது இயலும் என்று எடுத்துரைத்தார்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வட்டார நிலையங்கள் தொழிலாளர்—ஆசிரியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்கின்றன:—

| | சென்னை. | மதுரை. | கோயம்புத்தூர். |
|---|---|---|---|
| முடிக்கப்பட்ட தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை. | 4 | 32 | 3 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்-ஆசிரியர்களின் எண்ணிக்கை. | 84 | 96 | 120 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 5,049 | 7,390 | 4,711 |

தொழிலாளர் நல ஆணையாளர் மூன்று வட்டாரக் குழுக்களின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றுகிறார்.

( ) **சென்னை.**—தொழிலாளர்களிடையே, இத்திட்டத்தைப் பரப்புவதற்காக ஒரு நாள் பள்ளித் திட்டங்கள், மூன்று நாள் கருத்தரங்குகள், கல்வி மன்றங்கள், குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை இந்நிலையம் நடத்தியது. 1971-72-ல் (31—12—1971 முடிய) நடைபெற்ற அத்தகைய திட்டங்கள், அதனால் பயிற்சி பெற்ற தொழிலாளர் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | சிறப்பு வகுப்புகள். | பயிற்சி பெற்ற தொழிலாளர்கள். |
|---|---|---|
| (a) ஒரு நாள் பள்ளிகள் .. | 26 | 952 |
| (b) மூன்று நாள் கருத்தரங்குகள். | 1 | 17 |
| (c) கல்வி மன்றங்கள் .. .. | 1 | 20 |
| (d) முழுநேரப் பிரிவு பட்ட வகுப்புகள். | 2 | 72 |
| (e) தொழிலாளர்—ஆசிரியர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள். | 1 | 19 |
| (f) தொழிலாளர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள். | 5 | 128 |
| (g) பணிக் குழுக்களும் இணை நிர்வாகப் பயிற்சி குழுக்களும். | 1 | 8 |
| (h) தொழிற் சங்கத் தலைவர் பயிற்சி வகுப்புகள். | 4 | 105 |

சென்னை வட்டார இயக்குநரகம், தொழிற்சங்கத் தலைவர் ஒரு வார முழுநேரப் பயிற்சி வகுப்பிற்கு ஏற்பாடு செய்தது. தொழிலாளர்—தொழிலதிபர் தொழில் உறவு பற்றிய துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக் கால வளர்ச்சிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவும் என்ற நோக்கத்தில் அது ஏற்பாடு செய்யப் பட்டது. பலதரப்பட்ட தொழிற் சங்கங்கள் காட்டிய மிகுந்த ஆர்வத்தினைக் கண்டதனால், இவ் வகுப்பைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், இத் திட்டத்தின் கீழ் நான்கு பிரிவுகளில் 105 தொழிற்சங்க அலுவலர்கள் பயிற்சி பெற்றனர்.



நவீன போதனை உத்திகளிலும், தொடர்பான பாடங்களிலும் பயிற்சி பெற்ற தொழிலாளர்-ஆசிரியர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

ஆய்விலுள்ள இந்த ஆண்டில், பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை வகுக்கவும், செயற்படுத்தவும் தொழிற்சங்கங்களுக்கு மத்திய தொழிலாளர் நல வாரியம், நிதி உதவியளிக்கும் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 15,000 அளித்தது.

(ii) **மதுரை.**—இந்நிலையத்தைச் சேர்ந்த உள்ளூர்க் குழுவின் 14-வது, 15-வது கூட்டங்கள், முறையே, 12—8—1971-லும் 1—12—1971-லும் நடத்தப்பட்டன. இந் நிலையத்தின் பணிகளின் முன்னேற்றத்தைக் குழு ஆய்வு செய்தது. மதுரைப் பல்கலைக் கழகம், கள விளம்பர அலுவலகம் முதலிய அமைப்புகளின் உடனுழைப்புடன் இந்த வட்டார நிலையம் ஏற்பாடு செய்த பல்வேறு சிறப்புத் திட்டங்களைப் பாராட்டியது. 1—12—1971-ல் மதுரையில் நடைபெற்ற விழாவில் 1970-ம் ஆண்டிற்கான வட்டாரத் தகுதிப் பரிசுகள் வழங்கப்பட்டன. உள்ளூர்க் குழுவின் தலைவரான, தொழிலாளர் நல ஆணையாளரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

'ஹைவேஸ் எஸ்டேட்' தொழிலாளர்களுக்காக இரண்டு நாள் சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றை இந்த வட்டார இயக்குநரகம் 17—4—1971-லும் 18—4—1971-லும் நடத்தியது.

29—11—1971, 30—11—1971 ஆகிய இரண்டு நாட்களிலும் மதுரையில், "தொழிற் சங்கங்களும் தேசியப் பாதுகாப்பும்" என்பது பற்றிக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இவ் வகையான கருத்தரங்கு இந் நாட்டில் அப்போதுதான் முதன் முதலாக நடந்தது. பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவர்களும், அலுவலர்களும் இரண்டு நாட்களிலும் இக் கருத்தரங்கிற்கு வருகை புரிந்தனர்.

(iii) **கோயம்புத்தூர்.**—முதன் முதலாக, 1971 மே 7-ல், நீலகிரி அரவங்காட்டில், தொழிலாளர் கல்வி மத்திய வாரியத்தின் தலைவர்கள் கூட்டமொன்று (43-வது கூட்டம்) நடைபெற்றது. கூட்டத்திற்குப் பின், தொழிலாளர் கல்வி மத்திய வாரியத்தின்

வகுப்புகளை அரவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலையிலும், ஒரு பிரிவு மட்ட வகுப்பினை, கூனூர் மின்சார வாரியத்திலும் பார்வையிட்டனர்.

30—6—1971-ல் "தொழில் உறவுகள்—தகராறுகளைத் தீர்த்தல்" என்பது பற்றிய கருத்தரங்கு, இந்நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. முதன்மை வாய்ந்தத் தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலாளர்—ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தொழிற்சங்க அலுவலர்களுக்காக, இந்நிலையம், இரண்டு சிறப்புக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தது. முதற் கருத்தரங்கு, "தொழிலாளர் கல்வி மத்திய வாரியத்தின் உதவி மானியம்" என்பது பற்றி, தமிழ் நாடு மின்சார வாரிய கணக்குகள் சார்நிலைப் பணியாளர்களுக்காகும். இதுபோல், தமிழ் நாடு மின்சார வாரியம் காசாளர் சங்கத்தின் நன்மைக்காக கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

19—11—71-ல் பயிற்சி பெற்ற தொழிலாளர்-ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்க சிறப்பு விழாவொன்றை இந்நிலையம் ஏற்பாடு செய்தது. சான்றிதழ் வழங்கி, தொழிலாளர் நல அமைச்சர் பயனுள்ள வகையில் தொழிற் சங்கங்கள் செயல்படுவதற்குத் தொழிலாளர் கல்வியின் பங்கினைப் பாராட்டினார்.

23. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் நியாய விலைக் கடைகளும்.—இருநூற்றைம்பது அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் பணிபுரிகின்ற தொழில் நிறுவனங்களும், மலைத் தோட்டங்களும் அங்குப் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் பயனுக்கென நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள்/நியாய விலைக் கடைகளை அமைக்குமாறு கேட்கப்படுகின்றனர். இது வரை இத்தகைய பண்டகசாலைகள்/கடைகள் அமைக்கப் பட்டுள்ளன நிறுவனங்களின் எண்ணிக்கை :—

பண்டசாலைகள்—189.

கடைகள்—168



24. தமிழ்நாடு தொழிலாளர் சஞ்சிகை.—'தமிழ் நாடு தொழிலாளர் அரசிதழ்' என்பது 'தமிழ் நாடு தொழிலாளர் சஞ்சிகை' என்ற பெயர் பெற வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தொழில் தகராறுகள், வேலை முடக்கம், தொழிற் சங்கங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள் உயர்நீதி மன்றம், தலைமை நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறிப்புகள், முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்களையும், புள்ளி விவரங்களையும் இந்தத் திங்கள் வெளியிடு தருகிறது. அத்துடன், தொழிலாளர்கள் பிரச்சினைகள், தொழில் நிர்வாகம் பற்றிய கட்டுரைகளையும், அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவன அறிக்கைகள், இந்திய தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக்குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலிய வற்றின் தீர்மானங்கள், பரிவுரைகள் ஆகியவற்றையும் இது வெளியிடுகிறது. இச் சஞ்சிகையின், முக்கியப் பகுதியாகிய புள்ளிவிவரப் பகுதி இப்போது தமிழில் அச்சிடப்பட்டு வருகிறது.

23—9—1971-ல் திருச்சியில் நடைபெற்ற மாநில தொழிலாளர்கள் ஆலோசனை வாரியத்தின் 21-வது கூட்டத்தில், தொழிலாளர் பிரதிநிதிகள் சிலர், குறிப்பிட்ட காலத்தில் சஞ்சிகை வெளியிடப்படுவதில்லை என்று கூறினார்கள். குறித்த காலத்தில் சஞ்சிகை வெளியாக வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ் நாடு தொழிலாளர் சஞ்சிகையை அச்சிடும் பணியை 1971 மே முதல் தனியார் அச்சகம் ஒன்றில் ஒப்படைக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதற்கேற்ப, டான்சி அச்சகத்தில் அச்சிடு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன

25. வாழ்க்கைச் செலவுப் புள்ளி.—இம் மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் அகவிலைப்படி மொத்தத்தில் சென்னை மாநகரத்தின் வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் இணைந்துள்ளது. 1970-ல், சென்னை மாநகரில் உள்ள தொழிலாளர்களின் 1960-ம் ஆண்டிற்கான வாழ்க்கைச் செலவுப்புள்ளி, வல்லுநர்கள் குழுவின் பரிவுரைகளுக்கிணங்க, 132 புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் திருத்தப்பட வேண்டுமென அரசு

முடிவு செய்தது. இதனால் 1960-க்கான சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 476 ஆக உயர்ந்துள்ளது. இத்தகைய திருத்தத்திற்குப் பிறகு வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1936 சென்னை வரிசையிலிருந்து சிறிலா, தொழிலாளர் கழக இயக்குநர் தொகுத்த 1960 அடித்திருந்தியப் புள்ளிக்கு 1970-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ம் நாளிலிருந்து மாற்றப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது. கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில், கடலூர் திருச்சிராப்பள்ளி போன்ற வெளியூர்களின் வாழ்க்கைச் செலவுப் புள்ளியைத் தக்கவாறு மாற்றுவது பற்றி மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்துடன் அரசு கலந்தாலோசித்தது. இந்த இடங்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளியையும் 1—10—1970 முதல் சென்னையில் செய்தது போலவே திருத்தங்கள் செய்த பிறகு 1960 அடிப்படை ஆண்டிற்கு மாற்றும்படி அரசு ஆணையிட்டுள்ளது. 23—9—71-ல் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் கூட்டத்தில், வாரியத்தின் தொழிலாளர் பிரதிநிதிகள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி, சென்னையைப் போல், வெளி நகரங்களிலும், 1—2—70 முதற்கொண்டே செயலுக்கு வரும் வகையில், 1960 அடிப்படைக்கு மாற்றப்பட வேண்டுமென்றனர். அதனால் அந்தக் கால அளவிற்குத் தொழிலாளர்கள் பொருத்தமான அகவிலைப் படியைப் பெறுவார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தனர். திருத்திய வாழ்க்கைச் செலவுப் புள்ளி, 1—2—70-லிருந்து வெளி நகரங்களுக்கும் செயலுக்கு வரும் பொருட்டு, இது குறித்து மறு ஆய்வு செய்ய தலைவர் (தொழிலாளர் நல அமைச்சர்) ஒப்புக் கொண்டார். இப்பொருள் குறித்து அரசு மறு ஆய்வு செய்தது. சென்னை மாநகருக்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி மாற்றியமைக்கப்பட்டிருப்பதைப் போல் வெளி நகரங்களுக்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி, 1—2—1970-லிருந்து செயலுக்கு வரும் வகையில் 1936-ம் ஆண்டுத் தொடரிலிருந்து 1960-ம் ஆண்டுத் தொடருக்கு மாற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

26. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.—தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், மாநில அளவில் முதன்மை வாய்ந்த முக்கூட்டு ஆலோசனை மன்றமாகும். தொழிலாளர்களைப் பாதிக்கின்ற முக்கியமான பிரச்சினைகள் யாவும் இம் மன்றத்திற்கு ஆலோசனைக்காக அனுப்பப்படுகின்றன.



இவ்வாரியத்தின் 21-வது கூட்டம், 23—9—1971-இல் திருச்சியில் நடைபெற்றது. அக் கூட்டத்தில், பணிக் குழுக்கள் தொடர்பாகத் தொழில் தகராறுகள் சட்டத்தைத் திருத்துவது, சங்கங்களை அங்கீகரிப்பதற்கான சட்டம் இயற்றுவது, சர்க்கரை, போக்குவரத்துத் தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் அரசு காப்புறுதிச் சட்டத்தை நீட்டிப்பது, கைத்தறி நெசவாளர்களுக்கான உதவித் தொகை பெறும் தொழிலாளர் வீட்டுவசதித் திட்டம், கைத்தறி நெசவாளர் சிக்கன நிதிக்கு நிதி வழங்கல், தற்காலிக பதவி நீக்கத்தின்போது உணவும் அளித்தல், சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்கான ஊதிய வாரியத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்தல் முதலிய பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. வாரியத்தின் 22-வது கூட்டம், 14—2—1972, 15—2—1972-ஆம் நாட்களில் மதுரையில் நடைபெற்றது.

27. துறை அதிகாரிகளின் கூட்டம்.—1971, ஆகஸ்டு 10, 11-ஆம் நாட்களில் குற்றாலத்தில் தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. தொழிலாளர் நிர்வாகத்தின் பல்வேறு பொருள் பற்றிக் கலந்தாலோசிக்கவும் தொழிலாளர் சட்டங்களை மேலும் சிறந்த முறையில் செயற்படுத்தவும் அது நடைபெற்றது. அக் கூட்டத்தைத் துவக்கி வைத்து, தொழிலாளர் நல அமைச்சர் இரண்டு நாட்களிலும் கலந்து கொண்டார்.

28. தொழிலாளர் நல நிதி.—இந்திய அரசினால் அமைக்கப்பட்ட தொழிலாளர் நல நிதிக்குழு, தேசீயத் தொழிலாளர் ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கேற்ப, தமிழ் நாடு அரசு, முதலில் மாநில நிதிகளிலிருந்து ரூ. 5.00 லட்சம் மானியத்துடன் தொழிலாளர் நல நிதி ஒன்றை அமைத்தது. மேலும், தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும், தொழிலாளர், நிர்வாகம் ஆகியோருடைய பிரதிநிதிகளை உறுப்பினராகவும் கொண்ட தொழிலாளர் நல வாரியம் ஒன்றையும் அமைத்தது.

தொழிலாளர் நல வாரியத்தின் முதற் கூட்டம், 1971 பிப்ரவரி 26-ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம், 2—12—1971-இல் தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டத்தில், சென்னையில் இரண்டும் (திரு. வி. க. நகர் அல்லது செம்பியத்தில்

ஒன்றும், அம்பத்தூரில் ஒன்றும்) மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ஆகத் தொழிலாளர் நல நிலையங்களை நிறுவுவது என்பது ஏற்கப்பட்டது. 15—1—1972-இல் சென்னை அம்பத்தூரிலும், 19—1—1972-இல் கோயம்புத்தூரிலும், 21—1—1972-இல் மதுரையிலும் தொழிலாளர் நல நிலையங்கள் சென்னையில் மற்றுமொரு தொழிலாளர் நல நிலையத்தைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்நிலையங்களில், பெண் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களின் மனைவியர்க்கும் தையல் வகுப்புக்கள் நடத்தவும், குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பம்பாயில் உள்ளதுபோல், கலை அரங்கு, உள்ளிருந்தும், வெளியிலும் விளையாடுவதற்கான வசதிகள், நீச்சல் குளம் ஆகிய வசதிகள் நிறைந்த விளையாட்டரங்கு ஒன்றைத் தொழிலாளர்களின் நன்மைக்காக அமைப்பது என்று, 1—12—1971-இல் நடைபெற்ற தொழிலாளர் நல வாரியத்தின் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. வாரியத்தின் உறுப்பினர்கள் பம்பாய்க்குச் சென்று, அங்குள்ள தொழிலாளர்களின் விளையாட்டரங்கு, நல நிலையங்கள் ஆகியவற்றைக் கண்டு அவற்றின் செயல் முறையை அறிய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு செல்வது 1972 ஏப்ரல் திங்களில் ஆக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தொழிலாளர் நல நிதியின் வரைவுச் சட்ட முன்வடிவை அரசு வெளியிட்டுள்ளது. அதில் ஏனையவற்றுடன் தொழிலாளர்கள் தொழிலதிபர்கள் ஆகியோரிடமிருந்து தொழிலாளர் நல நிதிக்கு பங்குத் தொகைகள் பெறுவது பற்றியும் வகை செய்யப் பட்டுள்ளது.

**29. தொழிலாளர் நல மானியங்கள்.—(i) காப்பித் தொழில் வாரியத்தின் மானியம்.**—காப்பித் தொழில் வாரியம், பட்டிவீரன் பட்டி அரசினர் மருத்துவமனைக்குக் கருவிகளும் சாதனங்களும் வாங்குவதற்கு ரூ. 2,000, பண்ணைக்காடு அரசினர் மருத்துவமனையில் வார்டு ஒன்றைக் கட்டுவதற்காக ரூ. 20,000 ஆகியவற்றை அதனுடைய 1970-71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலிருந்து தமிழ்நாடு அரசிற்கு வழங்கியது. அரசும் அம்மானியம் பெற ஒப்புக்கொண்டது.



இருப்பினும், பண்ணைக்காடு அரசினர் மருத்துவமனையில் வார்டு ஒன்றைக் கட்டுவதற்காக காப்பித் தொழில் வாரியத்தால் வழங்கப்பட்ட தொகை ரூ. 20,000-ஐ, அவ்வாரியத்தின் ஒப்புதல் பெற்றுத் தற்போது பண்ணைக்காடு அரசினர் மருத்துவமனையில் அகநிலை நோயாளிகள் பகுதியை விரிவாக்கப் பயன்படுத்தும்படி அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

**(ii) தேயிலை வாரிய மானியம்:**—தேயிலை வாரிய நிதியினைக் கொண்டு, தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த ஒன்பது பேர்களுக்கு கோயம்புத்தூர் அரசினர் மருத்துவமனையில் துணைச் செவிலியர்-மருத்துவச்சிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் குழந்தைகளுக்கு, கூனூர் தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கடைசியாக நடந்த துணைச் செவிலியர்-மருத்துவச்சிப் பயிற்சி வகுப்பு, 1—8—1970 முதல் 31—7—1971 வரை, சேலம் தலைமையிட மருத்துவமனையில் நடத்தப்பட்டது.

**30. தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.**—தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்கும் குழந்தைகளுக்கும் புதிய வலுவினையும் உயிர்ச்சத்தினையும் தர இம் மாநிலத்தில், 'கேர்' (CARE) நிறுவனத்தினரின் உதவியோடும், தொழில் நிர்வாகத்தினரின் ஒத்துழைப்போடும், தொழிலாளர்கள் சத்துணவுத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த, பள்ளி செல்லும் வயதடையாத சிறுர்கள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்குச் சீரான உணவு வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இவ்வகையில், இந்தியாவில் இதுவே முதல் முயற்சியாகும். இத்திட்டம், இம்மாநிலத்திலுள்ள பல தொழில் நிறுவனங்களில் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டம் 71 தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் செயலிலுள்ளது. அதன் மூலம் 26,629 பேர் நன்மையடைகிறார்கள்.

**31. எடைகளும், அளவைகளும்.**—தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டம் எடைகள் அளவைகளின் தரத்தைச் செயற்படுத்துவதற்கும் அது தொடர்

பானவற்றிற்கும் வகை செய்கிறது. இச் சட்டம் மாநில முழுமைக்கும் பொருந்துகிறது. தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம், தொழில்நுட்பத் தொழிலாளர்க்கான சட்டங்கள் பிற அல்லாத தொழிலாளர் சட்டங்களைத் தவிர எடைகள்—அளவைகள் சட்டத்தையும் அதன்கீழ்ச் செய்யப்படும் விதிகளையும் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் மெட்ரிக் முறை படிப்படியான திட்டத்தின் கீழ்ச் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1967 டிசம்பர் முதல் நாளிலிருந்து எல்லாவகைச் சரக்குகள் பற்றிய வணிக நடவடிக்கைகள் அனைத்திலும் மெட்ரிக் அளவுகளைக் கடைப் பிடிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1971-ஆம் ஆண்டில் 91 தயாரிப்பாளர்கள், 512 விற்பனை யாளர்கள், 189 எடைகள்—அளவைகள் பழுதுபார்ப்போர் ஆகியோருக்கு எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி உரிமங்கள் வழங்கியுள்ளார்; புதிதாக வழங்கப்பட்ட உரிமங்களும், புதுப்பிக்கப்பட்ட உரிமங்களும் இதில் அடங்கும். முன்னிரு ஆண்டுகளில் வழங்கப்பட்ட உரிமங்களின் நிகரான எண்ணிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1969. | 1970. |
|---|---|---|
| தயாரிப்பாளர்கள் .. .. .. .. | 108 | 101 |
| விற்பனையாளர்கள் .. .. .. | 522 | 518 |
| பழுதுபார்ப்பவர்கள் .. .. .. | 191 | 193 |

கடந்த ஆண்டுகளைப் போல் மாநிலம் முழுவதும் 28—12—1971 முதல் 3—1—1972 ஆம் நாள் வரை மெட்ரிக் முறையில் விளம்பர வாரம் கொண்டாடப்பட்டது. விளம்பர வாரம் தொடர்பாக தமிழ் நாடு எடைகள்—அளவுகள் கட்டுப்பாடு அதிகாரி "தினசரி வாழ்க்கையில் மெட்ரிக் முறை" என்பது பற்றி அனைத்திந்திய வானொலியில் 1972 சனவரித் திங்கள் 3-ஆம் நாளன்று தமிழில் உரையாற்றினார்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல் படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகளையும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் மீறியதற்காக 1971-இல் 378 பேர்களின்



மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த 373 வழக்குகளில், 296 வழக்குகள் குற்றத்தீர்ப்பு கண்டு தண்டனையில் முடிந்தன. மூன்று வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டனர். எஞ்சியுள்ள வழக்குகளில் 1971 ஆம் ஆண்டு முடிவு வரை நீதி மன்றத்தில் விசாரணை முடியவில்லை.

தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் கூட்டம், 1971 ஆகஸ்டு திங்கள் 10, 11 ஆம் நாட்களில் குற்றாலத்தில் நடைபெற்றது. அதில், நிறுக்கும் பாலங்களைச் சோதனையிட்டு முத்திரையிடும் பணிக்குக் கூடுதலாக, மருந்து அளவுக் குழாய்களைச் சரிபார்த்து முத்திரையிடுதல், லாரிகளில் பொருத்தப்பட்ட தொட்டிகளின் கொள்ளளவை மதிப்பிட்டளித்தல் பணியை, தொழிலாளர் துணை இன்ஸ்பெக்டர்களிடம் ஒப்படைக்க முடிவெடுக்கப்பட்டது. இத் தீர்மானம் 1—11—1971 முதல் செயலுக்கு வருமாறு செய்யப் பட்டது.

**தேசிய வேலைவாய்ப்புப் பணி.—I. வேலை வாய்ப்புகள்.**— சென்னை-35, தொழில் நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை-35-லிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், அண்ணாமலைநகர், சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களிலுள்ள 3 பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் வழி காட்டிக் கழகம் ஆகிய சிறப்பு அலுவலகங்களும், திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, காஞ்சீபுரம், மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள 5 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும் உட்பட தமிழ்நாட்டில் 26 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தேசிய வேலை வாய்ப்பு பணியின்கீழ் உள்ளன.

இக்கால அளவில், அம்பத்தூரில் இன்னொரு துணை வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அது விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.

1970-71-ல் நிகரான கால அளவை ஒப்புநோக்கும்போது அறிக்கைக் கால அளவில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை, வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, செயல் பதிவு ஏட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை, அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு அலுவலகத்தின்

[1972 மார்ச் 24

பணியைப் பயன்படுத்திக்கொண்ட அரசு, தனியார் துறை வேலை கொடுப்பவர்கள் ஆகியோரின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| தொடர் எண்ணும், விவரங்களும். | அறிக்கை ஆண்டில், 1971 எப்ரலிலிருந்து, நவம்பர் வரை. | 1970—71 வரவு-செலவு திட்ட ஆண்டில், (1970 எப்ரலிலிருந்து 1971 நவம்பர் முடிய உள்ள கால அளவுக்கு.) |
|---|---|---|
| 1. பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 307,305 | 279,457 |
| 2. வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 29,195 | 28,552 |
| 3. அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை. | 40,074 | 38,762 |
| 4. வேலைவாய்ப்பு அலுவலகத்தைப் பயன்படுத்தும் வேலை கொடுப்போரின் சராசரி எண்ணிக்கை— | | |
| (அ) அரசு (பொதுத்துறை). | 1,237 | 1,167 |
| (இ) ஏனையோர்கள் (தனியார் துறை). | 201 | 227 |
| 5. 30—11—71-ல் செயல் பதிவேட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை. | 460,259 | 413,479 |

II. **உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம்.**—இவ்வலுவலகம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உடல் ஊனமுற்றோர்களை (குருடர், செவிடர், முடவர்) பதிவு செய்து அவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்பு உதவிகளை வழங்குகிறது. பல்வேறு வகையான உடல் ஊனமுற்ற பதிவாளர்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பு அளிப்பதில் இவ்வலுவலகம் தனிமுயற்சி எடுத்துக்கொள்கிறது. அரசு இதன் பொருட்டு அரசு தனியார் வேலை கொடுப்பவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் அதைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. உடல் ஊனமுற்றவர்களை இத்தகைய சிறப்பு முயற்சிகள் மூலமாகவும் வேலை கொடுப்பவர்களின் ஒத்துழைப்பினாலும் மட்டுமே அவர்களுக்குப் பொருத்தமான பணிகளில் அமர்த்த முடிந்துள்ளது.



1972 மார்ச் 24]

இவ்வலுவலகம் எப்ரல் 1971 முதல் நவம்பர் 1971 வரையுள்ள கால அளவில் 392 உடல் ஊனமுற்றோர்களைப் (63 குருடர், 54 செவிடர், 275 ஏனையோர்) பதிவு செய்து, 121 பேரை (4 குருடர், 1 செவிடர், 116 ஏனையோர்) வேலையில் அமர்த்தியுள்ளது. 30—11—1971 தேதியில் அலுவலக செயல் பதிவேட்டில் 950 பேர் (166 குருடர், 121 செவிடர், 663 ஏனையோர்) வேலை வாய்ப்பை எதிர்பார்த்து உள்ளனர்.

III. **தொழில்—நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம்.**—இந்த அலுவலகம் தமிழ்நாட்டில் தொழில், அறிவியல், பொறியியல், நிர்வாகம், மேற்பார்வையியல் போன்ற பல வகைகளில் உயர் கல்வியும் தேர்ச்சியும் பெற்றிருப்பவர்களின் வேலை வாய்ப்புத் தேவைகளை நிறைவு செய்வதுடன், அவர்களுக்கு ஏற்ற வேலைகளைக் கண்டறிந்து நல்ல பொருத்தமான பணிகளில் அவர்களை அமர்த்துவதற்காக, இந்த அலுவலகம் அரசு, தனியார் துறையிலுள்ள வேலை கொடுப்பவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்கிறது. இவ்வலுவலகம் அறிக்கை காலத்தில் உயர்ந்த கல்வித் தகுதி பெற்றிருக்கும் 3,532 பேரை பதிவு செய்து, 557 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. 30—11—1971 தேதியில் 3,514 பேர் அலுவலக செயல் பதிவேட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்து உள்ளனர்.

வேலை காலி இருப்பது பற்றி அறிந்துகொள்ளவும், தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து அனுப்புவதற்கும் இவ்வலுவலகம் மாநில வேலை வாய்ப்பு ஒருங்கிணைந்த அலுவலகமாகவும் செயல்படுகிறது.

IV. **அண்ணாமலை, சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிக்காட்டிக் கழகம்.**—இக்கழகங்கள் பல்கலைக் கழக பட்டதாரிகள் மாணவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டி நடவடிக்கைகளை தொடர்வதுடன் இது போன்ற வேலை வாய்ப்பு உதவியை நாடுபவர்களையும் பதிவு செய்து கொள்கிறது.

1971 எப்ரல் முதல் நவம்பர் வரை, அண்ணாமலைநகர், சென்னை, மதுரை பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகங்கள் 3,532 பேரை பதிவு செய்து 557 பேரை வேலையிலமர்த்தியது. 30—11—1971 தேதியில் இக் கழகங்களின் செயல் பதிவேட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்து 3,514 பேர் உள்ளனர்.

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுவதும், வேலை வாய்ப்புப் பற்றி ஆலோசனை கூறுவதும்—நீலகிரி, தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களைத் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் விண்ணப்பதாரர்களின் நன்மைக்காக, தொழில்கள், வேலை வாய்ப்புகள், வாழ்க்கைத் தொழில் பயிற்சி வசதிகள், உதவியாளர் பதவிகள், பற்றிய பயனுள்ள தகவல் தருவதுடன், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி நிலையங்களாகச் செயல்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளிலுள்ள தொகுதியினருக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழிகாட்டியாக இருப்பதுடன் விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை நல்குகின்றன. அவை மாவட்டங்களிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், பிற கல்வி பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, பள்ளிகள் கல்லூரிகளிலுள்ள இறுதி வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில்கள் குறித்து உரை ஆற்றுகின்றன. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் இந்த பிரிவுக்காக இளைஞர்களின் நன்மைக்காக தொழில், வேலை வாய்ப்புத் தகவல்களைத் திரட்டித் தருவதுடன் "மாவட்டங்களில் தொழில் வேலை வாய்ப்புகள் பயிற்சி வாய்ப்புகள்" என்பது பற்றி காலாண்டுச் செய்தி ஏட்டினையும் வெளியிடுகின்றன.

இத்திட்டத்தின் பயனை திட்ட காலத்தில் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| அலுவலகத்தின் பெயர். | கூட்டாகப் பலருக்கு வழிகாட்டுதல் திட்டத்திற்குச் சென்றவர்களின் எண்ணிக்கை. | தனிப்பட்டவர்களுக்கு பயனுள்ள ஆலோசனை. | தனிப்பட்டோர் ஆலோசனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை-35 .. .. .. | 29,075 | 474 | . |
| 2 செங்கற்பட்டு .. .. .. | 9,109 | 2,415 | 242 |
| 3 [illegible] .. .. .. | 2,979 | 7 | .. |



| அலுவலகத்தின் பெயர். | கூட்டாகப் பலருக்கு வழிகாட்டுதல் திட்டத்திற்குச் சென்றவர்களின் எண்ணிக்கை. | தனிப்பட்டவர்களுக்கு பயனுள்ள ஆலோசனை. | தனிப்பட்டோர் ஆலோசனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 4,428 | 380 | 101 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 6,789 | 10 | 93 |
| 6 கோயம்புத்தூர் .. .. .. | 7,361 | 248 | .. |
| 7 சேலம் .. .. .. .. | 2,586 | 587 | 203 |
| 8 திருநெல்வேலி .. .. | 2,349 | 354 | 6 |
| 9 நாகர்கோயில் .. .. .. | 4,064 | 649 | 117 |
| 10 மதுரை .. .. .. .. | 4,851 | 420 | 55 |
| 11 இராமநாதபுரம் .. .. .. | 3,671 | 320 | 38 |
| 12 வேலூர் .. .. .. .. | 8,826 | 614 | .. |
| 13 கடலூர் .. .. .. .. | 9,315 | 424 | .. |
| 14 தருமபுரி .. .. .. | 3,981 | 32 | 1 |
| 15 நீலகிரி .. .. .. .. | 64 | 6 | .. |
| மொத்தம் .. | 99,448 | 6,940 | 856 |

இயக்குநரகத்திலுள்ள மாநிலத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, நடப்புக் காலத்தில் மாவட்டங்களில், தொழில், வழிகாட்டித் திட்டத்தின் நடவடிக்கைகளை இணைத்தல், கண்காணித்தல், மதிப்பிடுதல், ஆகிய பணிகள் குறித்துத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அறிக்கை கால அளவில் அம்பத்தூர், வட சென்னை, கடலூர், அரியலூர், கோயம்புத்தூர், மதுரை ஆகியவிடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிகளின் செயல் திறனைக் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. 21 தேர்வு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களிலும், கிண்டி, மாதிரி பயிற்சி நிலையத்திலும், 1971 ஆகஸ்டு மாதத்தில் தமிழ்நாட்டிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான ஆர்வத் தேர்வுத் திட்டங்கள் நடத்தப்பட்டன. அறிக்கை கால அளவில் 26,762 விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

[1972 மார்ச் 24

புதுடில்லி, மத்திய வேலைவாய்ப்பு ஆராய்ச்சி--பயிற்சி நிலையத்தில் 11—5—1971 முதல் 22—5—1971 வரை ஆர்வுத் தேர்வு திட்டத்தின் பயிற்சி– பொருட்காட்சியில் உதவி இயக்குநர் (தொழில் வழிகாட்டிப் பிரிவு) கலந்து கொண்டார். லட்சுமண புரியில் முன்னாள் ராணுவத்தினரின் புதுவாழ்வு குறித்த பொருட் காட்சியிலும் 24—5—1971 முதல் 28—5—1971 வரை உதவி இயக்குநர் கலந்து கொண்டார். இவற்றைத் தவிர சென்னை பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் ஆலோசனை நிலையத்தினால் நடத்தப்பட்ட தொடர்பு அதிகாரிகளுக்கான மறுபயிற்சி வகுப்பிலும் தொழில் வழிகாட்டும் முறையைப்பற்றி உதவி இயக்குநர் உரையாற்றினார்.

சென்னை விவேகானந்தர் கல்லூரியிலும், அண்ணாமலைநகர் பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் ஆலோசனை நிலையத்திலும் தொழில் வாய்ப்புப் பற்றிப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. (Blow-up charts) தயாரிக்க அரசு ரூ. 5,000-க்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், பொருட் காட்சிகளிலும் வைப்பதற்காக இந்த (Blow-up charts) தயாரிக்கப் பட்டு வருகின்றன.

மதுரை அண்ணாமலைநகர் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல் ஆலோசனை நிலையங்களையும் கோயம்புத்தூரிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவையும், உதவி இயக்குநர் (வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு) பார்வையிட்டு ஆய்வு நடத்தினர்.

அறிக்கை காலத்தில் இப்பிரிவினால் கீழ்க்கண்ட வேலைவாய்ப்பு பற்றிய வெளியீடுகள் தயாரிக்கப்பட்டன:—

(a) அரிசனங்கள், பழங்குடி மக்கள் விண்ணப்பதாரர் களுக்குக் கிடைக்கும் சலுகைகள்.

(b) தமிழ்நாட்டில் அரசுப் பணிகளுக்காக வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட ஏற்பளிக்கப்பட்டிருக்கும் பல்வேறுபட்ட கல்வித் தகுதிகளுக்குச் சமமான கல்வித் தகுதிகள்.

(c) "சொந்தத் தொழில் நடத்துவதற்கான வாய்ப்புகள் தமிழ்நாட்டில் இதற்காக நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள்" என்ற தலைப்பில் புத்தகம்.



1972 மார்ச் 24]

(d) பட்டதாரிகளுக்கு கணக்குத் துறையில் உள்ள வேலை வாய்ப்பு (சிறு வெளியீடு).

(e) முன்னாள் ராணுவத்தினருக்கும், ராணுவத்தினருக்கு மான சிறு வெளியீடுகள் :—

(1) ராணுவப் படையில் உள்ள வேலைவாய்ப்புகள்.

(2) ஊனமுற்றோர்களுக்கு கிடைக்கும் சலுகைகள்.

**VI. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.**—1971-ம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து, 1971-ம் ஆண்டு நவம்பர் திங்கள் வரையி லான காலத்தில் வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டத்தின்கீழ் இரண்டு காலாண்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. 1971 செப்டம்பர் திங்களுடன் முடிவடையும் காலாண்டு வேலைவாய்ப்பு நிலவரத்தகவல் விசாரணை 1971, நவம்பரில் செவ்வனே நடந்தது. 1971 மார்ச், 1971 ஜூன் மாதங்களுடன் முடிவடையும் காலாண்டு வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் விசாரணை முடிந்துவிட்டது. கீழ்க் காணும் அட்டவணை, மேற்கூறப்பட்ட இரண்டு காலாண்டுகளில் கடிதம் அனுப்பப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, பதில் அனுப்பியவர்களின் எண்ணிக்கை, பதில் அனுப்பியவர்களின் சதவீதம் ஆகியவற்றைக் காண்பிக்கிறது :—

| கீழ்க்காணும் திங்களுடன் முடிவடைந்த காலாண்டு. | கடிதம் அனுப்பப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | பதில் அனுப்பியவர்களின் எண்ணிக்கை. | பதில் அனுப்பியவர்களின் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மார்ச் 1971 .. .. .. | 17,185 | 15,129 | 88·0 |
| ஜூன் 1971 .. .. .. | 17,347 | 15,422 | 88·9 |

30—9—1969, 30—9—1970 நாட்களோடு முடிவடையும் இரண் டாண்டுக்கொருமுறையான தனியார் துறை, அரசுத்துறை வேலை வாய்ப்புத் தகவல் சேகரிப்புப் பணி இந்த அறிக்கை ஆண்டில் முடி வடைந்தது. வேலைவாய்ப்பு குறித்து சேகரித்த தகவல்கள், மாநில வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவில் ஆய்வு செய்து,

தொகுக்கப்பட்டு, இயந்திர முறையில் பட்டியல் படுத்துவதற்காக புதுடில்லியிலுள்ள வேலை வாய்ப்பு-பயிற்சித் தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டன. 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்களோடு முடிவடையும் இரண்டாண்டுக்கொரு முறையான தனியார் பிரிவுகள் குறித்து நடத்தப்படும் வேலை வாய்ப்புத் தகவல் சேகரிப்பு பணியும் அறிக்கை ஆண்டிலும் நடைபெற்று வந்தது.

கீழ்க்காணும் சிறப்பு ஆய்வுகள் அறிக்கை காலத்தில் செவ்வனே நடந்து வருகின்றன :—

(1) பொறியியல் பட்டதாரிகளிடையே நிலவும் வேலை வாய்ப்பின்மையைப்பற்றி ஆய்வு நடத்துதல்.

(2) பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு பற்றிய அமைப்பு.

(3) வேலைப் பற்றுக்குறை பற்றிய ஆழ்ந்த ஆய்வு.

(4) தமிழ் நாட்டிலுள்ள உப்பளங்களில் வேலைவாய்ப்பு மதிப்பீட்டு ஆய்வு.

(5) சிமிட்டி பயன்படுத்தப்படும் அடிப்படையில், கட்டுமானத் தொழிலில் வேலை வாய்ப்பு மதிப்பீட்டு ஆய்வு.

(6) அரிசனங்கள், பழங்குடி மக்கள் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வேலை, காலியிடங்களைப்பற்றிய ஆய்வு.

கீழ்க்கண்ட குறிப்புகள் அரசுக்கும்; பிற நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன :—

(1) வேலைவாய்ப்பு—பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் வளர்ச்சித்திட்டங்களைப்பற்றிய குறிப்பு.

(2) தமிழ் நாட்டில் 1970–71-ல் வேலைவாய்ப்பு நிலைமை.

(3) கிராமப்புற மக்களுக்கான வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்.

(4) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புத் திட்டங்களைப்பற்றிய குறிப்பும், அதைச் செயல்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட சாதனைகளும், செயல் படுத்திய விதமும்.

மாநில வேலைவாய்ப்புத் தகவல் பிரிவில் புள்ளி விவரங்களை முறைப்படுத்தும் கருவிகளைப் பயன்படுத்துவதற்காக, அவ்வியந்திரங்களை வழங்குவதற்கான வழங்கல் ஆணை, அனைத்து நாடுகள் கம்ப்யூட்டர் நிறுவனத்தாருக்கு கொடுக்கப்பட்டு, அவ்வியந்திரங்கள் விரைவில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



மாநில வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவில், புள்ளிவிவர ஆய்வாளர் (மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரியின் பதவித் தரத்தில்) இளநிலை வேலைவாய்ப்பு அதிகாரி, தட்டெழுத்தர் ஆகியோரைக்கொண்ட ஆழ்ந்த ஆய்வுப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது 1971, டிசம்பரில் செயல்படத் தொடங்கியது. அவ்வப்போது தேவைப்படும் பணியாட்களின் பல்வேறுபட்ட நிலைகளைப் பற்றி ஆழ்ந்த ஆய்வு நடத்துவதற்காக குறிப்பாக இப்பிரிவு அமைக்கப்பட்டது.

VII. மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு :— அறிக்கை ஆண்டில், மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, தொழில் ஆய்வு, பகுப்பாய்வு பணி ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. இப்பிரிவு கீழ்க்காணும் இனங்களில் பணிகள் முடித்துள்ளது. செவ்வனே செய்துவருகிறது :—

(1) "வானொலி தொழில் நுட்பம்"; "துப்புரவு ஆய்வாளர்" ஆகிய வாழ்க்கைத் தொழில் நிலைகளைப்பற்றிய புத்தகங்களை வெளியிட்டுள்ளன.

(2) கடல்வாழ் பிராணிகளின் உடற்கூறுகள், உயிரியல் ஆகிய துறைகளில் உள்ள வேலைவாய்ப்பு நிலைமைகளைப்பற்றிய நூல்கள் வெளியிடும் பணி செவ்வனே நடந்து வருகிறது.

(3) "நூலகர்" பணியில் வாழ்க்கைத் தொழில் வாய்ப்புகளை தொகுத்து புத்தகமாக்கும் பணி செவ்வனே நடந்து வருகிறது.

(4) "வானொலி, டெலிவிஷன் இயந்திரக் கம்மியர்"; "குளிரூட்டுதல் சீர் வளி சாதன அமைப்பு இயந்திரக் கம்மியர்" ஆகிய இரு துறைகளில் தொழில் வாய்ப்பு குறித்து சிறு புத்தகங்கள் திருத்தியமைக்கப்பட்டு, புதுடில்லி, வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(5) "மீனவத்துறை"-யைப் பற்றிய சிறப்பு தொழில்—வேலை வாய்ப்பு குறித்த ஆய்வு, கேள்விகளுக்கான பதில்கள் மூலம் கிடைத்த தகவல்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு செவ்வனே நடந்த வருகிறது.

(6) "விளம்பர ஓவியர்கள்", "கருவிகள் செய்பவர்", "தொழிற்சாலை-உற்பத்திப் பொறியாளர்" ஆகியவற்றில் தொழில்

1972 மார்ச் 24]

வாய்ப்பு குறித்த சிறு நூல்கள் திருத்தியமைக்கும் பணி செவ்வனே நடந்து வருகிறது.

தொழில்களைப் பற்றி ஆய்வு நடத்துவதற்கு, தொழில் வாய்ப்புகள் குறித்து தகவல் தயாரிப்பது முதலியவைகளுக்கும் வல்லுநர்களோடு கலந்துரையாடல் நடத்தியதோடு, புதிய தொழில்களைக் கண்டறிவதற்கும், வேலைப் பகுப்பாய்வுகளை நடத்துவதற்கும் இம்மாநிலத்திலுள்ள நிறுவனங்களுடன் மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி தொடர்பு கொண்டார்.

சென்னை-5-ல் உள்ள வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகத்தின் நடவடிக்கைகள்.—ஆய்வு ஆண்டில், 1,230 பர்மா அகதிகளும், 1,944 இலங்கை அகதிகளும், தமிழ்நாட்டிலுள்ள வேலை செய்துள்ளனர். 257 பர்மா அகதிகளும், 131 இலங்கை அகதிகளும் அறிக்கை காலத்தில் வேலையில் அமர்த்தப்பட்டனர். 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் நாள் நிலவரப்படி, 1,496 பர்மா அகதிகளும், 1,975 இலங்கை அகதிகளும் வேவாய்ப்பு அலுவலகச் செயல் பதிவு ஏடுகளில் பதிவு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு எதிர்பார்த்துள்ளனர்.

தேயிலை, ரப்பர் சின்கோனா மலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புக்காக, 1,060 இலங்கை அகதிகளின் பெயர்கள், அவர்களது தகுதி விவரங்களுடன் காடுகள் துறை தலைமைக் கண்காணிப்பாளருக்கு பரிவுரை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை, எழுதுபொருள்—அச்சுத்துறை இயக்குநர், சென்னை—துறைமுக பொறுப்புக் கழகம், கோயம்புத்தூரிலுள்ள இந்திய அரசினர் அச்சகம் ஆகிய விடங்களுக்கு தகுதியான வேலைவாய்ப்பு உதவிக்காக 15 பர்மா அகதிகள் பற்றிய தகுதி விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தொழில் முன்னோடி பயிற்சி நிலையத்தில் 52 அகதிகள் 3 திங்கள் பயிற்சிப் பெற்றனர். தகுதியான தொழிற் பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக முறையான தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இவர்கள் அனுப்பப்பட்டனர். தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்போதைய வகுப்புகளில் 29 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.



1972 மார்ச் 24]

அறிக்கைக்காலத்தில் பயிற்சிபெற மாறு தொழில் நுட்ப பயிற்சி நிலையத்துக்கு 172 அகதிகள் அனுப்பப்பட்டனர்.

நங்கல், கோட்டா ஆகியவிடங்களிலுள்ள தொழில்-நுட்ப பயிற்சி நிலையங்களுக்கு மண்வாரி கனரக இயந்திரம் இயக்குவதில் பயிற்சி பெற 29 அகதிகள் அனுப்பப்பட்டனர். அவர்கள் தங்கள் பயிற்சியை முடித்துவிட்டனர்.

அறிக்கைக் காலத்தில், கோட்டாவிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் 10 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். கோட்டா, தொழில் நுட்ப பயிற்சி நிலையத்துக்கு அனுப்பப்படுவதற்கு முன்னால் இந்த அகதிகள் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தில் 3 மாதங்கள் தொடக்கப் பயிற்சியைப் பெற்றனர்.

புட்னி, டிராக்டர் பயிற்சி சோதனை நிலையத்தில், டிராக்டர் இயந்திரம் குறித்து இதுவரை 5 அகதிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

ராமகுண்டம், கரீம் நகர் கூட்டுறவு நூற்பு ஆலை, நெல்லூர் கூட்டுறவு நூற்பு ஆலை ஆகியவற்றில் பணி புரிய 76 அகதிக் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த அகதிகளை ஆலைகளுக்கு அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அகதிகள் புது வாழ்வுத் துறை இயக்குநர் ஆணைகள் பிறப்பித்து கேட்டுக்கொண்டுள்ளார்.

கீழ்க்கண்ட திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன:—

(1) திருத்தணி, சரஸ்வதி ஆலையில் வேலைக்கு அமரத்தப் படுவதற்காக 100 அகதிகளுக்கு தொடக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

(2) "கொதிகலப் பணியாளர்" தொழிலில் 50 அகதிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்.

(3) சென்னை—18, ஆழ்வார்ப்பேட்டை, சிமிட்டிப்பணி நிறுவனத்தில், கான்கிரீட் தொழில் நுட்பம் பற்றி 20 அகதிகளுக்குக் குறுகிய கால பயிற்சி அளிக்கும் திட்டம்.

(4) மீனவத்துறையின் படகு கட்டும் தலத்தில் 200 அகதிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம். இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் தச்சுத் தொழிலில் ஓராண்டுப் பயிற்சியை முடித்தபிறகு படகுகட்டும் கலத்தில் 6 மாத சிறப்பான பயிற்சிக்காக, இவர்கள் மீனவத்துறை இயக்குநரிடம் அனுப்பப்படுவர்.

(5) உணவு தயாரிப்புமுறை தொழில்நுட்ப நிலையத்தில் உணவு பதப்படுத்துதல் (உணவைக் கொள்கலன்களில் அடைத்தல்) பணியாளர்களாகச் செயல்படுதல் ஆகியவற்றில் அகதிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

IX. சென்னையிலுள்ள மாநில இயக்குநரகத்தில் பணியாளர்கள் பயிற்சி பிரிவு.—மாநிலத்திலுள்ள தேசிய வேலைவாய்ப்பு பணியின் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்த இயக்குநரகத்தில் பணியாளர்கள் பயிற்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்திய அரசினால் வகுக்கப்படும் தேசியக் கொள்கைகளுக்கேற்றவாறு, வேலைவாய்ப்பு அலுவலகங்களினால் பின்பற்றப்படவேண்டிய அலுவலக நடைமுறை, பணிகள் ஆகியவற்றில் இந்த பணியாளர் பயிற்சிப் பிரிவு, பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும். அறிக்கைக் காலத்தில் இப் பிரிவு 3 பணியாளர் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. இப்பிரிவின் விரிவுரையாளர்களான துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சிறப்பான பொருள்கள் குறித்து இவ்வகுப்புகளில் உரையாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

X. மாநில இயக்குநரகத்தில் ஆய்வுப்பிரிவு.—மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் விரிவான ஆய்வு நடத்துதல், அவற்றின் பணித் திறன்களைப்பற்றி அறிதல், அவற்றின் பணிகளை மேம்படுத்துவதற்கு தகுதியான மாற்று நடவடிக்கை பணிகள் குறித்து கருத்துரை நல்குதல் ஆகியவை மாநில இயக்குநரின் பொறுப்பாகும். வரைமுறைகளின்படி, ஆறு திங்களுக்கொரு முறை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பொதுவான ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். முறையாக ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், நன்முறையில் பொது மக்களுக்கு பணி செய்வதைக் கருத்திற்கொண்டு ஆய்வு அறிக்கைகளின் மீது தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சரியாக எடுத்தல் ஆகியவற்றுக்காக மாநில இயக்குநரகத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சென்னை-35. வட சென்னை,



இராமநாதபுரம், திருநெல்வேலி, உதகமண்டலம், தஞ்சாவூர், மதுரை, நாகர்கோவில், வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னை-35-லுள்ள உடல் ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பு அலுவலகம்; சென்னை, மதுரை, அண்ணாமலைநகர் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு தகவல்-ஆலோசனை நிலையங்கள்; திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவை குறித்த தொடக்க ஆய்வுக் குறிப்புகளை மாநில இயக்குநரகத்தின் ஆய்வுப்பிரிவு தயாரித்தது.

XI. சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம்.—உடல் ஊனமுற்றோர்களின் புதுவாழ்வுகுறித்த பிரச்சினைகளின் அளவை அறிதல், உடல் ஊனமுற்றோர்களுக்கு முழு அளவில் புதுவாழ்வு கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அரசுடனும், ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்காக சென்னையில் உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவ்வாரியம் 17—5—71-லிருந்து செயல்படத் தொடங்கியது. இது தொடக்க நிலையில் உள்ளது. இவ்வாரிய உறுப்பினர்களை நியமிப்பது குறித்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. உடல் ஊனமுற்றோருக்குக் கொடுக்கப்படும் பல்வேறு வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சி வாய்ப்புகள், வேலை வாய்ப்பு நிலைமை ஆகியவற்றை அறிவதற்காக, உடல் ஊனமுற்றோருக்குப் புதுவாழ்வளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் பணிகளைக் குறித்த விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

XII. தொழில்நுட்பக் கல்வித்தகுதி பெற்றவர்களுக்கிடையேயுள்ள வேலைவாய்ப்பின்மையைப் போக்குவதற்கான திட்டத்தைச் செயல்படுத்த சிறப்புப் பிரிவு.—பொறியாளர்கள், தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களிடையேயுள்ள வேலை வாய்ப்பின்மையைப் போக்குவதற்குத் தற்காலிக திட்டமாக வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள், கைவினைஞர்கள் ஆகியோர்களுக்கு வேலை பழகும் பயிற்சியினைக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு

ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தினைச் செயல்படுத்த இயக்குநரகத்தில் ஒரு சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப் பயிற்சிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேலைவாய்ப்புப் பயிற்சித்துறை இயக்குநரைக் கூட்டுநராகக் (Convener) கொண்ட வாரியம் ஒன்று உள்ளது. மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கொடுத்த பட்டியல்களிலிருந்து 261 பட்டதாரிகள், 734 தகுதிப் பட்டயம் பெற்றவர்கள், 800 கைவினைஞர்கள் ஆகியோரை இவ்வாரியம் தேர்வு செய்தது. வேலை பழகும் பயிற்சியில் சேர்ந்துள்ள பயிற்சியாளர்களின் நிலை கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| எண். | துறை. | பட்டம் பெற்றவர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | பட்டம் பெற்றவர்கள் — சேர்ந்துள்ளவர்கள். | தகுதிப்பட்டயம் பெற்றவர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | தகுதிப்பட்டயம் பெற்றவர்கள் — சேர்ந்துள்ளவர்கள். | கைவினைஞர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | கைவினைஞர்கள் — சேர்ந்துள்ளவர்கள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (a) | (3) (b) | (4) (a) | (4) (b) | (5) (a) | (5) (b) |
| 1. | பொதுப்பணித் துறை. .. | 31 | 14 | 200 | 68 | 172 | 81 |
| 2. | நெடுஞ்சாலை கிராமப் புறப் பணிகள். .. | 5 | 1 | 164 | 73 | .. | .. |
| 3. | மக்கள் நல்வாழ்வுத்துறை பொறியியல் நகராட்சிப் பணிகள். .. | 5 | 3 | 55 | 23 | 267 | 127 |
| 4. | மாநில வீட்டு வசதி வாரியம். | .. | .. | 40 | 16 | .. | .. |
| 5. | தொழில் நுட்பக் கல்வித் துறை. | 50 | 20 | 100 | 35 | .. | .. |
| 6. | தமிழ்நாடு மின் வாரியம். | 170 | 85 | 175 | 74 | 362 | 87 |
| 7. | வேளாண்மைத் துறை. | 100 | .. | 50 | .. | .. | .. |
| 8. | தொழில்—வர்த்தகத் துறை. | 6 | .. | .. | .. | .. | .. |



| எண். | துறை. | பட்டம் பெற்றவர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | பட்டம் பெற்றவர்கள் — சேர்ந்துள்ளவர்கள். | தகுதிப்பட்டயம் பெற்றவர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | தகுதிப்பட்டயம் பெற்றவர்கள் — சேர்ந்துள்ளவர்கள். | கைவினைஞர்கள் — தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | கைவினைஞர்கள் — சேர்ந்துள்ளவர்கள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | | (5) | |
| 9. | தமிழ்நாடு சிறு தொழிற் கழகம். | 90 | .. | .. | .. | 136 | .. |
| 10. | தமிழ்நாடு போக்குவரத்துத் துறை. | 50 | .. | .. | .. | .. | .. |

கீழ்க்கண்ட தொழில்நுட்பத் தகுதி பெற்றவர்களை பல்வேறு துறைகளில் பணிக்குச் சேர்த்துக்கொள்ளவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

| | துறை. | பட்டம் பெற்றவர்கள். | தகுதிப் பட்டயம் பெற்றவர்கள். | கைவினைஞர். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | வேளாண்மைத் துறை. | 100 இயந்திரப் பொறியியல் பட்டதாரிகள். | 50 | .. |
| 2 | தொழில் வணிகத் துறை. | 5 (இயந்திரப் பொறியியல்)<br>1 (இரசாயனப் பொறியியல்). | .. | .. |
| 3 | தமிழ்நாடு சிறு தொழில் கழகம். | 80 முதல் 90 பட்டதாரிகள். இயந்திரப் பொறியாளர் 60 சதவீதம் மின் பொறியாளர் 40 சதவீதம். | .. | 136 |
| 4 | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை. | 50 இயந்திரப் பொறியாளர்கள். | 50 | .. |

மேற் சொன்ன பயிற்சி இடங்களை நிரப்புவதற்குத் தகுதியுள்ளோரை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1972 மார்ச்

XIII. தொழில் நுட்பத் தகுதியுள்ள பயிற்சி பெற்ற வேலை யில்லா கைவினைஞருக்கான கடனுதவித் திட்டம்.—தொழில் நுட்ப பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் உள்ள தொழில் நுட்பத் தகுதி பெற்ற கைவினைஞர் 3,000 பேர்களுக்கு கருவிகள் சாதனங்கள் வழங்குவதற்கான கடன் உதவித் திட்டத் திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ் சொந்தமாக தொழில் நடத்துவதற்காக, பயிற்சி பெற்ற ஒவ்வொரு கைவினைஞர்களுக்கும், வட்டியில்லாமல், ரூ. 1,000 மதிப்புள்ள கருவி களும் சாதனங்களும் வழங்கப்படும்.

XIV. ஆட்படை ஊற்றத்திட்டங்களும் வேலைவாய்ப்புத் திட்டங் களும்—சாதனைகள்.—1969-70 ஆம் ஆண்டிலும் 1970-71 ஆம் ஆண்டிலும் தொடங்கப் பட்ட கீழ்க்காணும் திட்டங்கள் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

(a) மாநிலத் தலைமையிடத்தில் பணியாளர் பயிற்சி பிரிவு ஒன்று நிறுவுதல்.

(b) மாநிலத் தலைமையிடத்தில் ஆய்வுப்பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(c) மதுரையில் பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனை நிலையம் ஒன்றை அமைத்தல்.

(d) திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் துணை வேலைவாய்ப்பு நிலையங்களை அமைத்தல்.

(e) பல்கலைக்கழக வேலைவாய்ப்பு—தகவல் ஆலோசனை நிலையத்தில் தொழில் நுட்ப உதவியாளரை நியமித்தல்.

(f) ஒரு தொழில்நுட்ப உதவியாளரையும் ஓர் உதவி யாளரையும் நியமிப்பதன் மூலம் மாநிலத் தலைமையிடத்திலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் மாநிலப் பிரிவைப் பல படுத்துதல்.

(g) தொழில்களில் அமர்வது குறித்து "வாழ்க்கை வழி காட்டி" என்னும் சிறு நூல்களை அச்சிடுதல்—இத்திட்டத்தின்கீழ் குறிப்பிடத்தக்க திட்டக் குறிக்கோள் எதுவும் வரையறுக்கப்பட வில்லை. ஆனால், "வாழ்க்கை வழிகாட்டி" என்னும் சிறு நூல்கள் அச்சிடுவதற்கான செலவுக்காக ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



1972 மார்ச் 24]

உடல் ஊனமுற்றோரின் பயனுக்காக, நூல் கட்டும் தனிப் பிரிவு ஒன்றை அமைப்பது குறித்த இத்திட்டம் நிறைவேற்றப்பட விருக்கின்றது. கட்டிடம் ஒன்றைப் பெற்று இளநிலை முதலாள் ஒருவரை நியமித்து இப்பிரிவை தொடங்குவது குறித்த பணி வாங்குவதன் மூலம், இத்திட்டம் நிறைவேற்றப் படவிருக் கின்றது.

அதோடு, மாநில வேலை வாய்ப்புத் தகவல் பிரிவில் புள்ளி விவரக் கணக்கீடு பொறியை அமைப்பது குறித்த இத்திட்டம், புள்ளி விவரக் கணக்கீடு பொறி இயந்திரத்தை விரைவில் வாங்குவதன் மூலம், இத்திட்டம் நிறைவேற்றப்படவிருக்கின்றது.

புள்ளி விவரங்களை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்வதன்மூலம், மாநில வேலைவாய்ப்புத் தகவல் பிரிவு, வேலைவாய்ப்பு நிலவரம் பற்றிய தகவல் திட்டத்தை மேம்படுத்தல் ஆகியவற்றை வலுப் படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு 1971-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த ஆய்வுப் பிரிவு செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும், அம்பத்தூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றைத் தொடங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அது விரைவில் திறக்கப்படும்.

198-10—42

# இணைப்பு—8—அ

## 1971-ஆம் ஆண்டில் மூடப்பட்ட பஞ்சாலைகள்

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 சோமசுந்தரம் ஆலை, கோயம்புத்தூர் .. .. .. .. | 1— 5—1971 | 1,300 |
| 2 காலீஸ்வரா ஆலை, கோயம்புத்தூர் .. .. . .. | 30— 5—1971 | 1,749 |
| 3 சாரதா ஆலை, கோயம்புத்தூர் .. .. .. . | 13— 9—1971 | 750 |

கடந்த ஆண்டுகளில் மூடப்பட்டு 1971-ஆம் ஆண்டில் மீண்டும் திறக்கப்பட்ட பஞ்சாலைகள்.

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | மீண்டும் தொடங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|
| 1 கோயம்புத்தூர் முருகன் ஆலை .. | 1— 5—1968 (முன்பே மூடப்பட்டவை). | 932 | 26— 6—1971 |
| 2 கீதாஞ்சலி ஆலை .. .. .. | 5— 5—1968 | 289 | 30— 8—1971 |
| 3 சண்முகா ஆலை .. .. .. | 18— 7—1970 | 400 | 15— 9—1971 |
| 4 ஜனார்த்தன ஆலை .. .. .. | 23— 6—1971 | 820 | 6—10—1971 |
| 5 புதுக்கோட்டை பஞ்சாலை, நமணசமுத்திரம். | 30— 3—1970 | 450 | 29—11—1971 |

1951-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகள்.

(1) ஸ்ரீரெங்க விலாஸ பஞ்சு அடித்தல்—நூல் நூற்றல் நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
(2) கிருஷ்ணவேணி பஞ்சாலை, கோயம்புத்தூர்.
(3) கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
(4) ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.
(5) கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர்.



# இணைப்பு 8—ஆ

## முக்கியமான புள்ளி விவரங்கள்.

| ஆண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிமைக் கட்டணம். (4) ரூ. |
|---|---|---|---|
| **(1) 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்:—** | | | |
| 1969 .. .. .. .. .. .. | 6,218 | 3,92,558 | 16,83,261·00 |
| 1970 .. .. .. .. .. .. | 6,365 | 4,22,640 | 17,42,254·00 |
| 1971 .. .. .. .. .. .. | 6,412 | 4,32,488 | 19,45,320·00 |
| **(2) தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் :—** | | | |
| (ஆண்டுத் தொடக்கத்தில்) | | | |
| 1970 .. .. .. .. .. .. | 2,09,260 | 1,97,695 | இதற்கு இடமில்லை. |
| 1971 .. .. .. .. .. .. | 2,11,190 | 2,15,155 | ,, |
| 1972 .. .. .. .. .. .. | 2,15,887 | 2,15,816 | ,, |
| **(3) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவு வழங்கல் நிறுவனங்கள் சட்டம் :—** | | | |
| (ஆண்டுத் தொடக்கத்தில்) | | | |
| 1970 .. .. .. .. .. .. | 19,720 | 68,608 | 1,22,592·50 |
| 1971 .. .. .. .. .. .. | 19,776 | 70,069 | 1,39,452·00 |
| 1972 .. .. .. .. .. .. | 19,811 | 70,996 | 1,52,275·00 |

இணைப்பு 8—ஆ—தொடர்ச்சி.

முக்கியமான புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **(4) 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :—** | | | |
| 1969 .. .. .. .. .. .. | 309 | 85,267 | இதற்கு இடமில்லை. |
| 1970 .. .. .. .. .. .. | 307 | 85,528 | ,, |
| 1971 .. .. .. .. .. .. | 319 | 85,583 | ,, |
| **(5) 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் :—** | | | |
| 1969—70 .. .. .. .. .. | 1,139 | 5,542 | 14,591·00 |
| 1970—71 .. .. .. .. .. | 909 | 1,183 | 12,517·00 |
| 1971—72 .. .. .. .. .. | 623 | 5,031 | 15,720·50 |
| **(6) 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் :—** | | | |
| 1969 .. .. .. .. .. .. | 1,061 | .... | 33,552·50 |
| 1970 .. .. .. .. .. .. | 1,138 | .... | 43,716·25 |
| 1971 .. .. .. .. .. .. | 1,155 | .... | 37,233·75 |
| **(7) 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :—** | | | |
| 1969 .. .. .. .. .. .. | 18,555 | 5,08,636 | இதற்கு இடமில்லை. |
| 1970 .. .. .. .. .. .. | 27,197 | 5,38,299 | ,, |
| 1971 .. .. .. .. .. .. | 18,717 | 5,59,677 | ,, |
| **(8) 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம் :—** | | | |
| 1969 .. .. .. .. .. .. | 9,704 | 1,69,494 | இதற்கு இடமில்லை. |
| 1970 .. .. .. .. .. .. | 8,748 | 1,55,562 | ,, |
| 1971 .. .. .. .. .. .. | 9,052 | 2,42,948 | ,, |

**(9) 1926-ஆம் ஆண்டு தொழிற் சங்கச் சட்டம் :—**
(சனவரி முதல் நாள் அன்றிருந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை)

| 1970 | 1971 | 1972 |
|---|---|---|
| 1,758 | 1,856 | 2,033 |

**(10) 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் :—**

(வேலை நிறுத்தங்களும்—கதவடைப்புகளும்).

| ஆண்டு. (1) | வேலை நிறுத்தங்கள்—கதவடைப்புக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. (2) | விரயமான உழைப்பு நாட்கள். (3) |
|---|---|---|
| 1969 .. .. .. .. .. .. .. .. .. .. | 174 | 6,83,059 |
| 1970 .. .. .. .. .. .. .. .. .. .. | 277 | 10,33,377 |
| 1971 .. .. .. .. .. .. .. .. .. .. | 308 | 22,86,507 |

(தற்காலிகமாக)

## இணைப்பு 8—இ

### 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி குடும்ப ஓய்வூதிய நிதிச் சட்டம்.

| ஆண்டு. | இச் சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங் களின் எண்ணிக்கை.* | இச் சட்டத்தின்கீழ் வரும் பணியாளர் களின் எண்ணிக்கை*. | வழங்கப்பட்ட நன் கொடைத் தொகைகள்*. | நிர்வாகச் செலவுகள். | ஆய்வுச் செலவுகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1968-69 .. .. .. | 5,589 | 497,471 | 883·47 | 21·02 | 2·80 |
| 1969-70 .. .. .. | 5,834 | 524,359 | 1,018·52 | 25·81 | 3·18 |
| 1970-71 .. .. .. | 6,271 | 541,126 | 1,017·02 | 26·37 | 3·03 |
| 1971-72 .. .. .. | 6,896 | 650,181 | 618·48 | 14·78 | 2·31 |

(31—12—1971 வரை)

* ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இருந்தவாறு.

## இணைப்பு 8—ஈ

1) தொழிலாளர் நல ஈட்டுறுதிச் சட்டம்:—

| ஆண்டு. | இதன் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | இதன்கீழ்வரும் பணியாளர்கள். | | நாட்பட்ட நோய் களுக்கு நீட்டிக்கப் பட்ட நலன்கள் உட்பட நோய்க் கால நலன்கள். |
|---|---|---|---|---|
| | | ஈட்டுறுதி செய்து கொண்ட நபர்கள். | குடும்பப் பிரிவுகள். | (ரூபாய் லட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1970 .. .. .. .. .. .. | 32 | 352,000 | 329,350 | 128·31 |
| 1971 .. .. .. .. .. .. | 39 | 390,150 | 390,150 | 159·47 |

) தொழில் காயம் குறித்த நலன்கள் முதலியன:--

| ஆண்டு. | தற்காலிக இயலாமை குறித்த நலன்கள். | | நிலையான இயலாமை குறித்த நலன்கள். | | சார்ந்துள்ளோர் குறித்த நலன்கள். | | மகப் பேறு குறித்த நலன்கள். | | மருத்துவ வசதிக்கு வகை செய்வதற்கான செலவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | | (4) | | (5) | | (6) |
| | ரூ. | பை. | ரூ. | பை, | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. |
| 70 .. .. .. .. | 15,05,775 | 75 | 13,26,264 | 05 | 1,63,355 | 21 | 6,21,700 | 20 | 2,75,80,461 |
| 71 .. .. .. .. | 16,67,160 | 51 | 14,49,973 | 07 | 1,76,742 | 70 | 6,85,693 | 65 | 3,27,49,670 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

**சனிக்கிழமை, 1972 மார்ச் 25.**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. பெ. சீனிவாசன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

1. *வினாக்கள்—விடைகள்.*

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 690, 691 *ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் இரண்டும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.*

**அரசு ஊழியர்களுக்கு திருமண முன்பணம்**

*** 690 வினா—திரு. என். கிட்டப்பா :** *மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 1971-72-ல் *அரசு ஊழியர்கட்குத் திருமணக் கடன் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?*

(இ) *இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ரூ. 40.00 இலட்சம்.

(இ) ரூ. 40,45,039.

*** 691 *Q.*—Thirumathi T. N. ANANDANAYAKI :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount of marriage loan so far disbursed to Government employees during the year 1970–71 ; and

(*b*) whether there is any proposal to extend the benefit to the employees who are working under local bodies ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ரூ. 33,52,869.

(இ) *அரசுக் கடன் உதவியின்றிச் செலவு ஏற்கும் அளவிற்குப் போதிய நிதி வசதியைக் கொண்ட நகராட்சி மன்றங்களின் ஊழியர்களுக்கும் திருமணக் கடனுதவி அளிக்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.*

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** *இந்தத் திருமணக் கடன் வசதி ஒவ்வொரு அதிகாரியும் வகிக்கின்ற பதவிக்கேற்ப கொடுக்கப்படுகிறதா ? அல்லது, அவரவர்களுடைய சம்பள அடிப்படையில் தரப்படுகிறதா ?*

[1972 மார்ச் 2

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் ஆண் அரசுப் பணியாளருக்கு தனது திருமணத்திற்காக அல்லது தன்னுடைய மகனுடைய திருமணத்திற்காக முன்பணம் பெறுவதாக இருந்தால், அவருடைய உயர்ந்த அளவு முன்பணத் தொகை அவருடைய 15 மாத சம்பளம் அல்லது ஆயிரம் ரூபாய், இதில் எது குறைவோ அந்தத் தொகை வழங்கப்படுகிறது. அரசுப் பணியாளருடைய மகள் திருமணத்திற்கோ அல்லது பெண் அரசுப் பணியாளராக இருந்தால் அவருடைய திருமணத்திற்கோ 15 மாதச் சம்பளம் அல்லது ரூ. 2,000, இதில் எது குறைவோ அந்தத் தொகை வழங்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த அரசுப் பணியாளர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்களுடைய மகள் திருமணத்திற்கு ஒரேமாதிரியான சலுகை கொடுக்கப்படுமா? கார்ப்பரேஷன், முனிசிபாலிடி போன்ற இடங்களில் பண வசதி இல்லாவிலிருந்தாலும் மத்திய அரசு அவர்களுக்கு ஏதாவது ஒரு ஸ்பெஷல் கொடுத்து, அவர்களுக்கும் திருமணக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசுக்கும் திருமணக் கடனுக்கும் சம்பந்தம் இல்லை. இதை மாநில அரசு செய்கிறது. மாநில அரசு என்று சொல்லக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாய் வரவில்லை, இப்பொழுது. என்ன செய்வது? வாய் தவறிக் கூட மத்திய அரசு என்றுதான் வருகிறது. பரவாயில்லை. ஆனால், நான் ஏற்கனவே சொன்னேன். அரசுப் பணியாளர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்களுடைய மகன் திருமணத்திற்கு 15 மாதச் சம்பளம் அல்லது ஆயிரம் ரூபாய், மகள் திருமணத்திற்கு 15 மாதச் சம்பளம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் கடனாகத் தரப்படுகிறது. போதுமான நிதி வசதியுள்ள நகராட்சி மன்றங்கள் அவர்களே அந்தக் கடன் வழங்கலாம் என்று இருக்கிறது. நிதி வசதி இல்லாத நகராட்சி மன்றங்கள் திருமணக் கடன் வழங்கினால், அதை ஈடு செய்ய மாநில அரசாங்கத்தினிடத்திலிருந்து கடன் கேட்காமல் இருக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நகர மன்றத்தில் தங்களுக்குப் பண வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதை ஈடு கட்ட மாநில அரசு ஏதாவது கடன் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே ஆண்டுதோறும் நாம் இந்தக் கடன் தொகைக்காக ஒதுக்குகிற பணத்தை விட அதிகமாகவே இந்தத் திருமணக் கடன்களுக்காகப் பணம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். உதாரணமாக, 1969-70-இல் பத்து லட்சம் ரூபாய்தான் பட்ஜெட்டில் ஒதுக்கினோம். ஆனால், 22 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் தரப்பட்டிருக்கிறது. 1970-71-ம் ஆண்டில் இருபது லட்ச ரூபாய் ஒதுக்கினோம். ஆனால், 33 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதற்கான கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1971-72-ஆண்டில் 40 இலட்ச ரூபாய் ஒதுக்கினோம். ஆனால், 40 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதி நிலையை உத்தேசித்து, அதற்கு மேலே இதை விரிவுபடுத்த இயலாத நிலையில் இருக்கிறோம்.



1972 மார்ச் 25]

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : இந்த விதி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்துமா என்பதையும், பொருந்துமென்றால் சமீபத்தில் திருமணம் செய்துகொண்ட எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினராவது கடன் கோரி விண்ணப்பித்து இருக்கின்றாரா என்பதையும், பொருந்தாது என்றால் இனிமேல் திருமணம் ஆகப்போகின்றவர்களுக்கு இந்த விதியைப் பொருத்தி, அவர்களுக்கோ அல்லது அவர்களுடைய குழந்தைகளுக்கோ கடன் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செய்தாலும்,செய்யாவிட்டாலும் திரு. இராஜாப் பிள்ளை அவர்களை இது பாதிக்காது என்று கருதுகிறேன். (சிரிப்பு).

திரு. கோவை செழியன் : திருமணம் செய்துகொள்ளுகிற ஆண் பெண் இரண்டு பேரும் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தால் இருவருக்கும் அந்தத் தொகையைத் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் இருவரும் ஒருவராகத் தான் திருமணம் செய்துகொள்ள முனைகிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சமத்துவத்தை உண்டாக்க விரும்பும் நமது அரசு, அரசுப் பணியாளர்களுக்குச் சலுகை அளித்து, அதே நேரத்தில் உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு இந்தச் சலுகையை விஸ்தரிக்காமல் இருப்பது சமத்துவத்திற்கு விரோதம் அல்லவா? ஆகவே, இனிமேலாவது உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றுகிறவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு இந்தச் சலுகை அறவே அளிக்கப்படவில்லை என்று கூறுவது தவறு. நிதி வசதி இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்கள் இந்தச் சலுகையை அளிக்க அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

திரு. த. சோனையா : அரசு ஊழியர்களில் கடை நிலை ஊழியர்களாக வேலை செய்பவர்களுக்கு இந்தக் கடனுதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசுப் பணியாளர்களில் அவர்களும் சேருவார்கள்.

திரு. என். மருதாசலம் : அரசுப் பணியாளர்களிடமிருந்து கல்யாணக் கடனுக்காக வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை? எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை நான் ஏற்கனவே இங்கே ஒப்பிட்டுக் காட்டிச் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா :திருமணச் செலவுக்காக ஆண்களுக்கு ஆயிரம் ரூபாய், பெண்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் கடனாகக் கொடுப்பதாக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசியல் சட்டத்தில் ஆணும், பெண்ணும் சமம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஆண்களுக்கும் இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எப்போதும் பெண்களுக்காகத் தான் அனைவரும் வாதாடுவார்கள். ஆண்களுக்காக நம்முடைய நண்பர் திரு இராஜா அவர்கள் வாதாடுகிறார்கள். ஆனால், இப்போதுள்ள நிலையில் அதை மாற்றுவதற்கு இயலாது.

**திரு. எம். தேவராசன் :** இந்தக் கடன் எந்த அடிப்படையில் தரப்படுகிறது ? எத்தனை ஆண்டுகளில் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கடன் திருமண அடிப்படையில் தரப்படுகிறது (சிரிப்பு). அறுபது மாதாந்திரத் தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படுகிறது.

**திரு. கு. காமாட்சி :** இந்த அரசுப் பணியாளர்களுக்கு அல்லது அவர்கள் குழந்தைகளுக்குத் திருமணம் செய்கின்றபோது கலப்புத் திருமணம் செய்துகொண்டால், அவர்களுக்கு ஏதேனும் கடன் வழங்குவதில் தனிச் சலுகை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இருக்கின்ற திட்டம் திருமணக் கடன் திட்டம் ; கலப்புத் திருமணக் கடன் திட்டம் அல்ல.

**திரு. வை. பாலசுந்தரம் :** இந்தக் கடன் பெற்றுத் திருமணம் செய்துகொள்ளக்கூடியவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் தீவிரமாகப் பங்கு கொள்ளுவார்களானால் அவர்களுக்கு ஏதாவது விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதை ஆரம்பத்திலேயே அவர்களிடத்திலே கேட்டு இந்த நிபந்தனையின் மீது கொடுப்பது இயலாது (சிரிப்பு).

**திரு. நா. வீராசாமி :** அரசாங்கப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற இந்தக் கடனுக்கு ஏதாவது வட்டி வசூலிக்கப்படுகிறதா ? அப்படி என்றால், என்ன விகிதம் என்று கூற முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வசூலிக்கப்படுகிறது. அது பிராவிடெண்ட் நிதியிலிருந்து வழங்கப்படும் முன்பணத்திற்கு என்ன வட்டி வசூலிக்கப்படுகிறதோ அந்த வட்டி விகிதம்.

**திரு. எம். முத்தையா :** திருமணக் கடனுக்காக அவர்களுடைய ஊதியத்திலிருந்து எத்தனை சத வீதம் பிடிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதலிலேயே சொன்னேன். 15 மாதச் சம்பளம் அல்லது ஆயிரம் ரூபாய் ஆண்களுக்கு. பெண்களாயிருந்தால் 15 மாதச் சம்பளம் அல்லது இரண்டாயிரம் ரூபாய். இவைகளில் எது குறைவோ அது தரப்படுகிறது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** இந்தத் திருமணக் கடனை இது வரை எத்தனை ஆண் பணியாளர்கள், எத்தனை பெண் பணியாளர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள் ? வட்டியில்லாமல் அவர்களுக்கு இந்தக் கடன் உதவித் தொகை அளிப்பது பற்றி ஏதேனும் பரிசீலனை செய்யப்பட்டதா ? அல்லது பரிசீலனையில் இருக்கிறதா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியொன்றும் திட்டம் இல்லை. எத்தனை பேர் கடன் உதவி பெற்றிருக்கிறார்கள், அவர்களில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால், சில பேர் கடன் வாங்கிக்கொண்டு இன்னும் திருமணம் கூட செய்யாமல் இருக்கிறார்கள்.

### கன்னர் திரு ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு நிதி உதவி.

***692 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டிற்காக தன் இன்னுயிரைத் தியாகம் செய்த வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த கன்னர் ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

(உ) வீரர் ஆறுமுகத்தின் மனைவி தனக்கு ஒரு வீடு கட்டித் தர வேண்டுமென்று அரசைக் கோரியுள்ளாரா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) உயிர் நீத்தார் சிறப்பு நிவாரண நிதியாக ரூ. 5,000 திரு கன்னர் ஆறுமுகத்தின் மனைவி திருமதி முனியம்மாளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு ஆறுமுகத்திற்கு வீரச் சக்கர விருது வழங்கப்பட்டுள்ளமையால், அதற்குரிய அரசின் பரிசுத் தொகையான மேலும் ரூ. 5,000 வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவில் அத்தொகையை வழங்குவார்.

(உ) ஆம்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, கன்னர் ஆறுமுகம் தமிழகத்திற்கு நல்ல சிறப்பான புகழைத் தேடித் தந்திருக்கிறார். அவரைப் போன்ற மூன்று வீரர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். தமிழகத்திலே வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான வீரர்கள் இறந்திருக்கிறார்கள். எனவே அந்த மாவட்டத்திற்கும் ஒரு சிறப்புப் பரிசு அளித்தால், அது மற்ற மாவட்டங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். அரசாங்கம் அதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதில் குறிப்பிடப்பட்ட கேள்வி வீரர் ஆறுமுகத்தின் குடும்பத்தைப் பற்றியது. ஆறுமுகத்தின் மனைவிக்கு மாநில அரசாங்கம் 5,000 ரூபாய் வழங்கியுள்ளது. அவருக்கு வீரச் சக்கர விருது கிடைத்ததன் மூலம் அதற்குரிய தொகையாக 5,000 ரூபாய் கிடைக்கும். மூன்று ஏக்கர் புஞ்சை நிலம் கொடுக்கப்படுகிறது. சாகுபடிக்கு அரசு மானியமாக ரூ. 2,000 வழங்கப்படுகிறது. இவை தவிர, பொது மக்கள் 2,000 ரூபாய் நிதி திரட்டி கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 107 பேர் உயிர் நீத்திருக்கிறார்கள். அதில் 40 பேர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நாற்பது பேர் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்ததால் அதற்கென்று தனிப் பரிசு வழங்க இயலாது. ஏனெனில் இறந்தவர்கள்தான் வீரர்கள் என்று சொல்ல முடியாது. காயமுற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் சந்தர்ப்பம் வந்திருந்தால் செத்திருப்பார்கள். சாகாதவர்களும் வீரர்கள்தான்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மதுரை மாவட்டத்தில் வாகைக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வராஜும், நிலக்கோட்டையைச் சேர்ந்த ராஜமாணிக்கமும் வீர மரணம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கும் அரசு உதவி அளித்திருக்கிறது. ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று மாவட்டக் கலெக்டர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிலம் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதை ஒரு மூலக் கேள்வியாகப் போட்டிருந்தால் விபரமாகப் பதிலளித்திருக்க முடியும். இப்போது விபரம் இல்லை. மற்ற வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நிதி உதவி அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாக அவர்களே சொன்னார்கள். நிலம் கொடுக்கப்படாததற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கும் என்று கருதுகிறேன். விசாரித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் கேட்கக் கூடிய கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். இல்லையென்றால், அனுமதி மறுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நம்முடைய மாநில அரசாங்கம் உயிர் துறந்த வீரர்களுக்கு 5,000 ரூபாயும், மற்றும் சில உதவிகளும் அளிக்கிறது. இவை மத்திய அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி செய்யப்படுகின்றனவா ? அகில இந்திய அடிப்படையில் மற்ற மாநிலங்களிலும் இது போல் உதவி செய்கிறார்களா ? அல்லது நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மற்ற மாநிலங்களில் கொடுக்கின்றார்களா என்பது தெரியாது. நம்முடைய மாநிலம் கொடுத்து வருகிறது. ஏற்கெனவே மத்திய அரசாங்கத்திலிருந்து, வீரர்களை ஊக்குவிக்கின்ற முறையில் வீரச்சக்கரம், மகாவீரச் சக்கரம், சேனா சக்கரம் போன்ற விருதுகளை வழங்கி, அதற்குரிய தொகையைக் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் கொடுத்து வரும் பணத்தை, ஏற்கெனவே இருப்பதைவிட நாம் உயர்த்திருக்கிறோம். ஏற்கெனவே 3,000 ரூபாய் இருந்தால் அதை 5,000 ஆகவும், 5,000 இருந்தால் 10,000 ஆகவும், 10,000 இருந்தால் 15,000 ஆகவும் ஆக்கியிருக்கிறோம். அந்த நேரத்தில் இந்தியாவிலேயே நம்முடைய தமிழகம்தான் முதன்முதலாக இப்படிச் செய்கிறது என்று பாராட்டிப் பேசினார்கள். அதுதான் எனக்குத் தெரியும்.



**ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்.**

*** 693 வினா—திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு முதல் அமைச்ச
;யவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம் மாநிலத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஐ.ஏ.எஸ்
அதிகாரிகள் தொகை தற்போது எத்தனை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 112 (நூற்றுப்பன்னிரெண்டு).

**திரு. மே. சி. தூயமணி :** தலைவரவர்களே, தமிழை தாய்மொழியாக
கொண்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்
றைந்துகொண்டே வருவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா
ன்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக ஒவ்வொரு மாநிலத்
லும் 50 சதவிகிதம் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களையும், 50 சத
கிதம் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களையும் நியமிக்கவேண்டுமென்
றை இருக்கிறது. அதற்குப்பிறகு அதிகாரிகள் மாற்றப்படுகின்
ரணங்களால் அந்த விகிதாச்சாரத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது
மிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் குறைவாக இருப்பதாக
கவல் இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இப்போது ஐ.ஏ.எஸ்.
திகாரிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ? சர்வீஸில் இருந்தவர்களில்
த்தனை பேர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?
தில் முஸ்லீம்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய
ரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது விபரம் இல்லை.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இப்போது ஐ.ஏ.எஸ்.
ட்சை ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டுமே எழுதலாம் என்றிருக்
து. அதனால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதிக
க தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும், இந்தியில்
ழுதியிருந்தால் அதிகமான மார்க் போடப்படுவதாகவும் சொல்லப்
கிறது. அதனால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு
திக வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, தமிழிலும் ஐ.ஏ.எஸ்.
ட்சை எழுதலாம் என்ற முறையை மத்திய அரசோடு போராட்டம்
த்தியாவது பெறப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது ஆங்கிலத்திலும்,
ந்தியிலும்தான் பரீட்சை எழுத அனுமதித்திருக்கிறார்கள். கனம்
றுப்பினரின் ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். அதற்காக மத்திய
சிடம், தமிழக அரசும், ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்
னேற்றக் கழகமும் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்திருக்
றன.

Thiru B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister how many such officers whose mother tongue is Tamil are outside our state ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** அதுபற்றிய விபரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வுக்குச் செல்வதற்காக அரசு உதவித் தொகையில் சென்னையில் பயிற்சி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** இப்போதுதான் தொடங்கப் பட்டிருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன் :** உப தலைவரவர்களே, பொதுவாகவே, கடந்த ஆண்டுகளைவிட அகில இந்தியத் தேர்வில் வரவர தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தொகை குறைவாக இருக்கிறது. இதற்கு நம்முடைய கல்வித்தரக் குறைவுதான் காரணம் என்று வட மாநிலங்களில் உள்ளவர்களால் பேசப் படுகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இந்தத் தேர்வில் நம்முடைய அரசின் கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** இந்தக் குறைவுக்கு, தேர்வு செய்யப்படுவதுதான் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது; தேர்வுக்குச் செல்கிறவர்களின் தொகை குறையவில்லை. ஆனுல் முடிவுதான் நாம் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. இதற்கு தரம் குறைவா அல்லது இடம் குறைவா என்று தெரியவில்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். தேர்வுக்குழுவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** விபரம் இல்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதுவதற்கு பின்தங்கிய வகுப்பினர்களுக்கு ஒரு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ? அந்தப் பயிற்சிப் பள்ளியில் எத்தனை பேர் சேர்ந்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் இத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எடுத்தாக வேண்டும் என்று ஏதாவது கட்டுப்பாடு வைத்திருக்கிறதா ? இல்லை



என்ருல் நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். பதவிகளுக்கு மாநில சர்வீஸ்களில் இருக்கின்றவர்களுக்கு அதிகமான பதவி உயர்வு அளித்து நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஐ.ஏ.எஸ். பிரமோஷன் இப்போது இருப்பதைவிட இன்னும் அதிகமாக உயர்த்தப்பட் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் 8 அல்லது 9 அதிகாரிகளை அனுப்புகிறது. இந்த ஆண்டுக்கு 5 பேரை அனுப்பினுல் போதுமென்று கேட்டிருக்கிறோம். இவை மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன்.

### ஐ. ஸி. எஸ். அதிகாரிகள்

*** 694 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் தற்பொழுது பணிபுரிந்து வரும் ஐ.சி.எஸ். அதிகாரிகள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** மூன்று ஐ.சி.எஸ். அதிகாரிகள் தமிழ் நாடு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பதவித் தொகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கு நியமனம் செய்யப் படும் அதிகாரிகள் தொகுப்பின் கீழ் இப்போது இந்திய அரசில் பணியாற்றி வருகின்றனர்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே இந்த ஐ.ஸி.எஸ். அதிகாரிகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையே உள்ள அவர்களுடைய சர்வீஸ் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் முன்பு முயற்சி செய்ததே, அதுகுறித்து நமது மாநில அரசின் கருத்து என்ன ? ஏதேனும் பரிந்துரைகள் செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** அப்படி ஒன்றும் தகவல்கள் இந்த அரசுக்கு இல்லை.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** நமது நாட்டுக்கு சுதந்திரம் இடைப்பதற்கு முன்பு பிரிட்டிஷாரின் நேரடி நிர்வாகத்தில் இருந்த மாகாணங்களில்தான் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் போட்டார்கள். திருவிதாங்கூர், கொச்சி, மைசூர், புதுக்கோட்டை போன்ற சுதேச மன்னர்களுடைய ராஜ்யத்தில் அவர்களே திறமையுள்ள அதிகாரிகளை கீழ் நிலையில் இருந்து ப்ரமோஷன் செய்து மாவட்ட கலெக்டர்களாகக் கூடப் போட்டிருந்தார்கள். அவர்களும் நல்ல முறையில் பணியாற்றி வந்தார்கள். அது போல இன்றைக்கு நம் தமிழ்நாட்டிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு, கீழேயுள்ள அதிகாரிகளை அப்பதவிகளுக்கு உயர்த்த முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. நா. வீராசாமி :** இன்று நம்முடைய அரசாங்கத்தில் இருந்து தான் ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கின்ற அதிகாரம் நமக்கில்லை. டிரான்ஸ்பர்தான் செய்யலாம். அத்தகைய அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங் கத்தை நமது அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதற்காகத்தான் நாம் நம் கொள்கைகளை முழங்கி வருகிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளுக்கு என்று சில தனிச் சலுகைகள் உண்டு. அந்தச் சலுகைகளை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் அளிக்க நம் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்த அரசு என்பது புரிய வில்லை.

***695 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state —**

(*a*) the number of retired I.C.S. Officers now re-employed in State service ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஒருவர்.

(இ) திரு டி. ஏ. வர்கீஸ், ஐ.ஸி.எஸ். (ஓய்வு பெற்றவர்) சென்னை. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் தலைவராக மாநில அரசினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. என். டென்னிஸ் :** இதுபோன்று ஓய்வு பெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் போடாது குறிப்பிட்ட துறையில் உள்ள நிபுணர்களை நியமிக்க அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதில் மற்ற நிபுணர்களும் இருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சீக்கிரத்தில் பரிசீலித்து முடிவு செய்யப் படவேண்டிய ஒரு குழுவுக்கு ஓய்வுபெற்ற அதிகாரியைப் போடுவதால் அப்படியே அதை நீடித்துக்கொண்டு போகக்கூடுமே, அப்படியின்றி சர்வீஸில் உள்ள திறமைசாலிகளைப் போடுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாம் சீக்கிரத்திலேயே ஒரு அறிக்கை அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நீண்ட காலம் நீட்டிக்கொண்டு போவார் என்று நினைப்பதே தவறு.



**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரி திரு வர்கீசையே நாம் எல்லாத் தலைமைக்கும் போட்டுக் கொண்டிருக்கிறோமே, வேறு தகுதி வாய்ந்த ஆபீஸர்கள் இல்லையா ? இவரை மாற்றி வேறு யாரையாவது அரசு போடக் கூடாதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது நிரவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகள் பாதிக்குமேல் நடைபெற்றுவிட்டன. இப்போது போய் அவரை மாற்றினால் நிர்வாகச் சீர்திருத்தத்திற்குப் பதில் நிர்வாகச் சீர்குலைவாக அது ஆகிவிடும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக தமிழ் தெரியாத வர்களைப் போட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக ஆங்கிலமே தெரியாத வர்களிடம் அவர்கள் தவிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே தமிழ் தெரிந்தவர்களைத்தான் போடவேண்டும் என்பார்களா அல்லது இவர்கள் தமிழ் கற்றுத்தான் ஆகவேண்டும் என்று செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வெளி மாநிலங்களில் இருந்து இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வருகிறவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறது. தமிழ் நன்றாகக் கற்றுக்கொண்டி ருக்கிறார்கள். இன்னும் பொது நிகழ்ச்சியில் கூட முன்பெல்லாம் ஆங்கிலத்தில் பேசியவர்கள் நான்காண்டு காலமாக நல்ல தமிழில் பேசி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பதிலாக நம் மாநில சர்வீசுக்கு நாமே டி.ஏ.எஸ். **Tamil Nadu Administrative Service** என்பதாக ஏற்படுத்தி தேர்வு பெறுகிறவர்களை நியமிக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவை எல்லாம் விரைவில் ஆகக் கூடிய காரியங்கள் அல்ல. கருத்துக்களை ஆராய்ச்சி செய்திடல் வேண்டும்.

**திரு. எம். முத்தையா :** ஓய்வுபெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரியை நியமிக்கும்போது பென்ஷன் தொகைதான் ஊதியமாகப் பெறுகிறாரா? தனியே அதிக ஊதியம் தரப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவருக்குத் தனியாக ஊதியம் அளிக்கப்படுகிறது.

## பல்லடம் வட்டத்தில் சமுதாயக் கிணறுகள்

***696 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி—உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்தனவா ?

(இ) ஆம் எனில், எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் எதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழவில்லை.

**கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்.**

***697 வினா—திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் யூனியனில் உள்ள கோபால் சமுத்திரம், திரு முல்லைவாசல் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம்**

***698 வினா—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை மாநகராட்சிப் பணியின் IA, IB, II பிரிவு அலுவலர்களுக்கான பொறியியல் பணி விதிகளிலும், பொதுச் சுகாதாரம், மருத்துவப் பணி விதிகளிலும் நேரிடையாக அலுவலர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்று விதியுள்ளது. மற்ற III, IV பிரிவு அலுவலர்கள் நியமனம் சம்பந்தமாக டி விகிதாச்சாரம் ஏற்படுத்தப்படவில்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** சென்னை மாநகராட்சி போன்ற ஸ்தல ஸ்தாபன அமைப்புகளில் அவர்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. நம் அரசு அவ்வாறு ஒதுக்குவதற்கு சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சியில்தான அவர்களுடைய பைலாக்கள் திருத்தப்பட வேண்டும்.**



**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாநகராட்சிகளுக்கு சிப்பந்திகளை சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கச் செய்வது என்று யோசித்தோமே, அது எதிர்காலத்திலாவது செயல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் அதுபோல எண்ணப்பட்டு பிறகு கைவிடப்பட்டது. அவர்களே குழுக்கள் அமைத்துக் கொண்டு, விதிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் அடிப்படையில் தேர்வுகளை நடத்துகிறார்கள்.

**புலவர் திரு. சி. பழனிச்சாமி :** பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய சிலைகளை நாம் சென்னையில் வைத்திருக்கிறோம். பறவைகள் அந்தச் சிலைகளை அசுத்தப்படுத்துகின்றன. அவற்றை நல்லமுறையில் பராமரிக்க மாநகராட்சி சில பணியாளர்களை நியமிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

*Salary for Municipal Councillors*

***699 *Q.*—Thiru N. DENNIS :** Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have turned down the request of the Tiruvottiyur Municipality for payment of salary to Municipal Councillors ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ), (இ) திருவொற்றியூர் நகராட்சி நகரமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாத ஈட்டுப் படியாக ரூ. 75 தர அனுமதிக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**திரு. என். டென்னிஸ் :** நகர மன்றத்தின் அங்கத்தினர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய பணிகளும் விரிவு அடைந்திருக்கின்றன. ஆகவே எல்லா நகர மன்ற அங்கத்தினர்களுக்கும் ஓரளவு சம்பளம் கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நீண்டகாலத்திற்குப் பிறகு இப்போதுதான் சென்னை, மதுரை நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு முறையே ரூ. 100, ரூ. 75 மாதந்தோறும் படி வழங்கும் ஏற்பாடு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் நகரங்கள் விரிவு அடைந்துவிட்ட காரணத்தினால் அதிக தூரத்தில் இருந்து அடிக்கடி செலவு செய்து கொண்டு வந்துபோகவேண்டியிருக்கிறது என்பதாகும். மற்ற நகராட்சிகளைப் பொறுத்தவரை அங்கத்தினர்கள் அங்கங்கே இருக்கிறவர்கள்—மேலும் பலவற்றின் நிதி நிலையும் சரியாக இல்லை, ஆகவே இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

முற்பகல் 9-30 **திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை இருக்குமானால் கொடுக்கவேண்டாம். நிதிவசதி நன்றாக இருக்கும் நகராட்சி மன்றங்களில் கவுன்சிலர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான தக்க ஏற்பாடுகளை அரசு செய்துகொடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது வேண்டுமானால் நிதி நன்றாக இருக்கிறது என்று சொல்லலாம். சில காலங்களில் பற்றாக்குறையாகிவிடக் கூடும். ஆகவேதான் இதற்கென ஒரு கொள்கையென்று வகுக்கப்படுமானால் நல்லது.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கோவை நகராட்சியில் பணிபுரியும் அங்கத்தினர்கள் சம்பளம் வேண்டுமென்று தீர்மானம் போட்டு நிறைவேற்றி, அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற " கன்வேயன்ஸ் அலவன்ஸ் " 100 ரூபாய் போதாது என்று அங்கத்தினர்கள் அமைச்சர் அவர்களிடம் தூது வந்தார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்களுக்குப் போதுமா என்று கேட்டால், எவ்வளவு கொடுத்தாலும் போதாதுதான். அங்கு இருக்கக்கூடிய நிதி வசதிகளைக் கண்டறிந்துதான் அவர்களுக்கு கன்வேயன்ஸ் அலவன்ஸ் 100 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

### நூலகங்களுக்கு பத்திரிகைகள்

*** 700 வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மானியம் பெற்று இயங்கி வரும் நூலகங்களில் எத்தகைய பத்திரிகைகளை வரவழைக்க வேண்டுமென்று விதிமுறை வகுக்கப் பட்டுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நூலகங்களே விதி முறைகளை வகுத்துக்கொள்ளலாம். பொதுவாக, எப்பிரிவினரையும் இழிவு படுத்தும் ஏடுகளை வாங்கக்கூடாது என்று மட்டுமே அரசு கூறியுள்ளது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பத்திரிகைகளை நூலகங்களில் வரவழைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ? எந்த அரசியல் கட்சிப் பத்திரிகையையாவது நிராகரித் திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படி எந்தப் பத்திரிகையை வாங்கலாம், எந்தப் பத்திரிகையை வாங்கக் கூடாது என்று அரசு சுற்றறிக்கை எதுவும் விடவில்லை. இனம், சமயம் ஆகிய வேறுபாடுகளைத் தூண்டக்கூடிய நூல்களையோ பத்திரிகைகளையோ,





குறிப்பிட்ட இனம், சமயத்தைத் தாக்கக்கூடிய பத்திரிகைகளையோ, விரும்பத்தகாத பத்திரிகைகளையோ, " அப்சீன் " பத்திரிகைகளையோ, இன உணர்ச்சியைத் தூண்டக்கூடிய பத்திரிகைகளையோ நூல்களையோ, விரும்பத்தகாத கருத்துக்களைக் கொண்ட பத்திரிகைகளையோ வாங்கக் கூடாது என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த நூலகங் களில் இருக்கிற குழுக்களே பார்த்து, தேர்ந்தெடுத்து, நடைமுறையில் இருக்கிற மாத, வார, தின ஏடுகளை வாங்கிக்கொள்ளலாம் என்கிற முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படிப்பட்ட பத்திரிகை வரவழைக்க வேண்டுமென்ற இலக்கணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நடைமுறையில் பார்த்தால் அரசாங்கத்தின் கொள்கைகளை அவதூறு செய்து, கண்டித்து எழுதும் சில பத்திரிகைகளை ஆங்காங்கு இருக்கின்ற சில நகரசபைகள் வரவழைத்து, மக்கள் மனதைக் கெடுக்கின்றன. ஆகவே, அம்மாதிரியான பத்திரிகை களை வாங்கக்கூடாது என்று அரசு ஏதாவது விதி வகுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கூடுமான அளவுக்கு அந்தந்த நகராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் கூடிக் கலந்து பேசி, எது தகுதியுடையது, எது தகாதது என்பதைப்பற்றி ஆராய்ந்து, அந்த அடிப்படையில் வாங்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, மதத்தின் அடிப்படையில் வெறியுணர்ச்சியைத் தூண்டக்கூடிய பத்திரிகைகளை வேண்டுமானால் வாங்காமல் இருக்கலாம், ஆனால் மதத்தின் அடிப்படையில் நல்ல பல கருத்துக்களை, நல்ல கொள்கைகளைப் பரப்பக்கூடிய வகையில் இருப்பதை அரசாங்கம் ஏன் தடுக்கவேண்டும் ? மேலும், அரசாங்கத்தை விமர்சனம் செய்வதே தவறு என்கிற அடிப்படையில் தடை போட அரசு முயற்சிக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கேள்வி கேட்பதற்குப் பதிலாக அம்மையார் அவர்கள் இதை விவாத மாகவே மாற்றியிருக்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னேன். அந்தந்த மன்றங்களே யாருக்கும் பாதகம் ஏற்படாத வகையில் பத்திரிகைகள், நூல்கள் வாங்கிக்கொள்ளலாம் என்கிற ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. கருத்து விமர்சனங்கள் வருவதைப்பற்றி கவலை இல்லை. ஜனநாயக நாடுகளில் கருத்துக்களைப்பற்றி விமர்சனம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கதே ஆகும். ஆனால் வன்முறைகளை உண்டாக்குகின்ற வகையில், தகாத உணர்ச்சிகளை தூண்டக்கூடிய வகையில், உண்மைக்குப் புறம்பாக இருக்கக்கூடிய வகையில் இருக்கின்றனவா என்பதைப் பார்த்து, அவைகள் எல்லாம் இல்லாத வகையில் இருக்கின்ற பத்திரிகைகள், நூல்கள் வாங்குவது நல்லது என்கிற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, மூட நம்பிக்கைகள் பரவிக் கிடக்கும் இந்த நாட்டில் அறிவியலை தமிழில் பரப்பக்கூடிய வகையில் இருக்கின்ற " கலைக்கதிர் " யுனெஸ்கோ ஸ்தாபனத்தாரின் " கூரியர் " போன்ற நல்ல தமிழ் அறிவியல் நூல்கள் கட்டாயமாக வாங்க வேண்டுமென்கிற ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எதையும் கட்டாயமாக வாங்கித் தீர வேண்டுமென்கிற விதி இல்லை. நூலகங்கள் விரும்பினால், இப்படிப்பட்ட ஏடுகளை வாங்கிப் பயன்படுத்தலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, அரசு மானியம் பெறுகின்ற நூலகங்களில் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பத்திரிகைகளை வாங்க வேண்டுமென்கிற ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படி இதைத்தான் வாங்க வேண்டும், இதை வாங்கக் கூடாது என்று சொல்லவில்லை. பொதுவாக குறிப்பு தரப்பட்டிருக்கிறது. நூலகங்களுக்கு இருக்கின்ற நிதிவசதிகளின் அடிப்படையில், சில நூலகங்கள் வாங்குவது எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். சில அதிகமான அளவில் வாங்கலாம். அதுபற்றி அவைகளுக்கு முழு உரிமை தரப்பட்டிருக்கிறது. அந்த நூலகக் குழுவில் எது வாங்க வேண்டும் என்பதை ஆராய்ந்து, தேர்ந்தெடுக்க நல்ல வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, அறிவியல் நூல்கள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி கட்டாயப்படுத்த முடியா விட்டாலும் "கூரியர்" போன்ற ஏடு இருப்பதாகவே பலருக்குத் தெரியாது—இருக்கிறதென்று எடுத்துச் சொல்லி, வாங்கலாம் என்று பரிந்துரை செய்யலாம் அல்லவா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நூல்கள் இருக்கின்றன என்று கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், வாங்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கின்ற பத்திரிகை அரசாங்க மானியம் பெறுகின்ற நூலகங்களில் வாங்கப்படுகிறது என்பதை அரசாங்கம் அறியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்தாலும், நல்ல கடுமையாக விமர்சனம் செய்தாலும், ஜனநாயக அரசாங்கம் இருக்கின்ற காரணத்தால், நூலகங்கள் அவற்றின் விதிமுறைகளுக்கிணங்க வாங்கிக்கொள்ளலாம்.

(உறுப்பினர்கள் பலர் கைகளை உயர்த்தினார்கள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. இன்னும் பத்து அமைச்சர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, நூலகங்களில் பத்திரிகைகள் வாங்குவதற்கு திறமை பெற்ற குழுக்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். . . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீண்ட கேள்விகளை அதிகமான பேர்கள் கேட்கிறார்கள். ஒவ்வொரு கேள்வியும் ஒரு ஸ்டேட்மெண்டாக இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் சொன்னதைத்தானே சொல்லிக் கேட்க வேண்டும். விளக்கம் பெறுவதற்காகத்தான் அவர் சொன்னதைக் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் கேள்வி கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, நூலகங்களில் பத்திரிகைகளை இம்மாதிரியாக வாங்கிக் கொள்வதற்கு திறமையான நூலகக் குழுக்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அந்தக் குழுக்கள் இருக்கும்பொது, எதற்காக அரசாங்கத்திலிருந்து ஒரு குறிப்பினை அனுப்பவேண்டும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் குழுக்களுக்கு ஒரு "கெய்டு லைன்" ஆக இருக்கவேண்டுமென்பதற்காக அரசாங்கத்திலிருந்து ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. மேலும், அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகவும் அது அனுப்பப்படுகிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, "தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் காப்பாற்ற பத்திரிகை நடத்துகிறோம்" என்று சொல்கிறவர்கள் நடத்துகின்ற பத்திரிகைகள் மிகவும் ஆபாசமாகவும், அருவருக்கத்தகுந்த படங்களைப் போட்டதாகவும், "டீன் ஏஜ்" பற்றியும், ஹிப்பிகளின் தத்துவங்களைப் பற்றியும், ஆபாசமிக்க கருத்துக்களைக்கொண்ட படங்கள், கதைகள் ஆகியவற்றைக் கொண்டதாகவும், தமிழ்நாட்டின் பண்பாடு, கற்பு, ஒழுக்கம், மேம்பாடு ஆகியவற்றைக் கெடுக்கின்ற வகையில் இருக்கின்றன. அம்மாதிரியான பத்திரிகைகளையெல்லாம் நூலகங்களில் போட வேண்டாமென்று அரசு சொல்லுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நூல்களை முதலில் மாண்புமிகு உறுப்பினர்கள் படிக்காமல் இருந்தால் நல்லது (சிரிப்பு). அப்படிப்பட்ட நூல்கள் வாங்கத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியே ரொம்ப ஆவலைத் தூண்டுகிறது.

**திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே, லைப்ரெரிகளில் நல்ல நூல்களை வாங்குவதற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. இந்தக் குறையைத் தீர்க்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் லைப்ரெரி செஸ் 3 காசாக இருந்ததை 5 காசு என்று உயர்த்தியிருக்கிறோம். ஈட்டு மானியம் தருவதன் மூலமாக நிதி வளம் பெருகும். அதற்கேற்ப நூல்களை வாங்கிக் கொள்ளலாம்.

## *Thirumalai Naicker Mahal*

*701 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Thirumalai Naicker Mahal in Madurai is going to be declared as a protected monument by the Government ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையை, தமிழ் நாடு வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்க அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. திருமலை நாயக்கர் அரண்மனையை வரலாற்றுச் சின்னமாக அறிவித்ததும், அதுபற்றி பொது மக்களுக்கு ஆட்சேபம் இருந்தால் தெரிவிக்கும்படியும் கோரும் அரசின் செய்தி, 1971ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழில் பகுதி 2, பிரிவு 3, பக்கம் 454இல் வந்துள்ளது. இது பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநருடன் கலந்துகொண்டு எடுக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இப்பொழுது திருமலை நாய்க்கர் மஹாலில் நீதிமன்றம் இல்லாத காரணத்தினாலே ஜனங்கள் அங்கு போவதற்கு இடம் இல்லாமல் அந்த இடமே பழுதாகிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே அங்கே ஜனங்கள் அதிகமாகப் போகக்கூடிய வகையில் மியூஸியம் போன்ற கலைப் பொருட்களை வைப்பதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பொதுப்பணித் துறையின் கீழே இருக்கிறது. அதற்காக ஒரு சட்டம் கொண்டுவந்து தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு மாற்றி அதற்குப் பிறகு தென் மாவட்டங்களிலே இருக்கின்ற எல்லாத் தொல் பொருள்களையும் அங்கு கொண்டுவந்து காட்சிப் பொருட்களாக வைக்க அந்த அரண்மனை மிக மிகப் பயன்படும். அதுவும் பொதுமக்களை ஈர்க்கத் தக்க ஒன்றாக அமையும்.

## *Medical Centres in Rural areas*

*702 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to assist private sector to start Medical Centres in Rural areas ; and

(*b*) if so, the details thereof ?





**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விவர அறிக்கை* ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, வெளிநாட்டிலேயிருக்கின்ற சில பாதிரிமார்கள் கிராமப்புறங்களிலே மருத்துவ மனைகள் தொடங்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கு அரசு அனுமதி கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வெளிநாட்டிலே இருக்கக்கூடிய பாதிரிமார்கள் இங்கே தொடங்க முடியாது. வெளிநாட்டிலேயிருந்து இங்கே வந்திருக்கின்ற பாதிரிமார்கள் மத்திய அரசின் அனுமதியோடு தொடங்கலாம். வெளிநாட்டிலேயிருக்கின்றவர்களுடைய ஆதரவோடு இங்கேயுள்ளவர்கள் மருத்துவ மனைகள் தொடங்கவேண்டுமானால் அதற்கு தமிழக அரசு ஒத்துழைத்து மத்திய அரசின் அனுமதியைப் பெறலாம். ஆனால் இங்கே இருக்கின்ற மூலக் கேள்வி உள்நாட்டிலிருக்கின்றவர்கள் கிராமங்களிலே மருத்துவ மனைகளைத் தொடங்குவது பற்றி.

**திரு. எஸ். வடிவேல் :** எந்த எந்த இடங்களிலே தனியார்களின் மருத்துவ மனைகள் நடைபெறுகின்றன. மத்திய அரசு அளித்துள்ள தொகை எவ்வளவு............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் விவரங்கள் கேட்கிறீர்கள்........

**திரு. எஸ். வடிவேல் :** சொல்லட்டுமே !

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சொல்லட்டுமே என்றால் எப்படி ? கேள்வி கொள்கை பற்றியது. ஆனால் விவரங்கள் கேட்டால் எப்படி ? நான் இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கிறேன்.

## *Employment opportunities for Medical Graduates*

* 703 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government has any proposal to give employment to all the Medical Graduates ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

---

* 645-646-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பல் டாக்டர்.

*704 **வினு—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் அரசினர் மருத்துவ மனையில் பல் டாக்டர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆம்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டல் சர்ஜன்கள் வேலையில்லாமல் யாராவது இருக்கிறார்களா ? அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் முதலிலே அவர்களுக்கு வேலை கொடுக்கப் பட்டுவிடும். இலாக்காவால் நேரடியாக வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் தாற் காலிகமாக அனுமதிக்கப்பட்டவர்கள்தான். அப்படி உடனடியாக அனை வரையும் எடுக்க முடியாது.

**திரு. அ. ஆறுமுகம் :** பல் டாக்டர் பகுதி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலே பல் டாக்டர் பகுதி அமைக்கப்பட்டாகிவிட்டது. வட்ட மருத்துவ மனைகளிலேதான் இனிமேல் செய்ய வேண்டும். ஐந்தாறு வட்ட மருத்துவ மனைகளில் அமைக்கப்பட விருக்கிறது.

## சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சைகள்.

*705 **வினு—திரு. தி. பொன்னுமலை :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

1971-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற மொத்த ஆண், பெண் அறுவை சிகிச்சைகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

1971-ம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண் பெண்களின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்கள்—23,516.

பெண்கள்—3,397.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற உதவித் தொகை யில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு குறிப்பிட்ட அளவு உதவித் தொகையை வழங்குகிறது. அதற்கு மேல் சில வகை வசதிகளைச் செய்வதற்காக மாநில அரசும் தொகை அளிக்கிறது. அதற்கு மேலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது மக்களிடமிருந்து நிதி பெற்று அதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு உதவித் தொகை சேர்த்து வழங்குகிறார்கள்.

## உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்,

*706 **வினு—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-71-ஆம் ஆண்டுகளில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

(இ) அவர்களுள் எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப் பட்டது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) & (இ) : 1969-70-71 ஆகிய மூன்றாண்டுகளில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் வழக்குகள் தொடரப்பட்டோர், தண்டிக்கப்பட்டோர் ஆகியவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| வட்டத்தின் பெயர். | ஆண்டு. | வழக்குகள் தொடரப் பட்டவர்களின் எண்ணிக்கை. | தண்டிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செஞ்சி .. .. .. | 1969 | 16 | 15 |
| ஷை .. .. .. | 1970 | 6 | 3 |
| ஷை .. .. .. | 1971 | 3 | 3 |
| திண்டிவனம் .. .. | 1969 | 16 | 16 |
| ஷை .. .. .. | 1970 | 15 | 15 |
| ஷை .. .. .. | 1971 | 11 | 10 |

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, இப்படி உணவு கலப்படத்தை பெரிய வியாபாரிகள்தான் செய்கிறார்கள். கலப்படம் செய்வதால் பொதுமக்களுக்கு எவ்வளவு சுகாதாரக் கேடு வருகிறது என்பதை அரசு அறிகிறது. கலப்படம் செய்கிறவர்களைத் தண்டிப்பதோடு அவர்களுடைய கடைகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உணவு கலப்படச் சட்டம் அகில இந்திய அளவிலே பாராளுமன்றத்திலே உருவானது. அதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு மத்திய அரசுதான் ஒத்துழைக்க வேண்டும். பெரும்பாலும் சில்லரை வியாபாரிகள்தான் தண்டிக்கப்படு கிறார்கள் என்ற குறை இருக்கிறது. சில்லறையாக வாங்கி விற்கிறவர்கள் கவனம் செலுத்தி கலப்படம் இல்லாத பொருட்களை வாங்கி பொது மக்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசு மிகவும் வற்புறுத்தி வருகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** அரிசியில் கல் கலக்கிறார்களே, அதுவும் உணவு கலப்படச் சட்டத்திலேதானே வரும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தச் சட்டத்திற்குள்தான் வரும். ஆனால், வேண்டுமென்றே கலந்தார்களா என்பது விவாதத்திற்குரிய தாகும்.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** பெரும்பாலும் பால் கேஸ் கள்தான் இதிலே வருகின்றன என்று சொல்லப்படுகிறது. மற்ற கேஸ்கள் எல்லாம் விடப்படுகின்றன. எனவே இதிலே பாலுக்காகப் போடப்பட்ட கேஸ்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், அரிசியிலே கலப்படம் செய்யக் கூடிய வகையில் கல்லை அரிசி போன்று தயாரிக்கிற தொழிற்சாலை இருந்ததாகவும் அதைப் பற்றிச் செய்தியெல்லாம் வந்ததே, அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தக் கேள்விக்குரிய செஞ்சி, திண்டிவனம் வட்டத்திலே அப்படி இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், மத்திய அரசாங்கத்தினுடைய கலப்பட சட்டத்திலே பல கிளாஸ்கள் நம்முடைய மாநிலத்திலே அமல் படுத்தப்பட கஷ்டம் இருக்கிறது. எனவே அதை மாற்றியமைக்க வேண்டு மென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி சில ஆலோசனைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த அளவுக்கு மத்திய அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

## *Gratuity to Industrial Workers*

*707 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce uniform gratuity schemes for the Industrial Workers of the State ; and

(*b*) if so, the details of the same ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) & (இ) மைய அரசு 10-12-1971 அன்று மக்கள் சபையில் 1971-ஆம் ஆண்டின் பணிக் கொடை வழங்கல் சட்ட முன்வடிவு கொண்டுவந்து இந்தச் சட்ட முன் வடிவு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. பணிக்கொடை ஆண்டு ஒன்றுக்கு 15 நாள் ஊதியம் என்பதற்கு மாறாக, ஒரு மாத ஊதியம் வழங்க வழி செய்யும் வகையில் சட்ட முன்வடிவைத் திருத்த மைய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த கிராஜுவிட்டியைப் பொறுத்த வரையில் நாம் முன்னாலேயே சட்டத்தைக் கொண்டுவரலாமே, ஒரு மாத போனஸ் என்று தமிழக அரசே கொண்டுவந்து ஒரு சட்டத்தைப் போட்டு அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருக்கக் கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் சட்டத்தைக் கொண்டுவருவார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத்தான் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே வற்புறுத்தினேன். ஆனால், மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் இந்தியா முழுவதற்கும் ஒரு சீராக சட்டம் இருப்பது நல்லது என்பதால் அப்படிக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். இப்பொழுது நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எந்த வகை யிலே நிறைவேற இருக்கிறது என்று பொறுத்திருந்து பார்த்து, நாம் நம்முடைய பரிந்துரையைச் செய்யலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்தச் சட்டத்தை இந்த 1972 ஆம் ஆண்டிலாவது கொண்டுவருவதற்கு ஏற்பாடு உண்டா ? இந்த வருஷமே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, எவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டுமோ அந்த அளவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## *House-sites for Harijans in Erode taluk*

* 708. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the reasons for the delay in providing house-sites for the Harijans in Ganapathipalayam, Samiarpalayam, Kammalakuttai, Vamalaigoundenpalayam, Vaduhanpalayam and Thalaraipalayam in Uttukuli firka of Erode taluk ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கவுண்டன்பாளைய கிராமத் தின் குக்கிராமமாகிய வாமலைக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்த மட்டில் 4 (1) பிரிவின்கீழ் முன்மொழிவு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. பிரிவு 6-ன் கீழ் செயற்குறிப்பு கோயம்புத்தூர் மாவட்ட

ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளது. மற்றக் கிராமங்களைப் பொறுத்த மட்டில் பிரிவு 4 (1)-ன் கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயற் குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளன.

### அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

*** 709 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த புதிய திட்டம் ஏதேனும் வகுத்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அனுப்பப்பட்டது, தற்போது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) 1964-ஆம் ஆண்டிலிருந்து மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. சமீபத்தில் 3-2-1972-லும் கடிதம் வரையப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்காக 1964-ஆம் ஆண்டிலிருந்து தொடர்பு கொள்ளுவதாக சொல்லப்படுகிறது ? ஏன் அதற்கு இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? இதைத் துரிதமாகச் செய்ய மாநில அரசு மத்திய சர்க்காரிடம் கேட்க விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, இது மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கும் திட்டம் அல்ல. மத்திய அரசே மாநில அரசிடத்தில், இந்த 1,000 ரூபாய் திட்டத்தில் கட்டப்படுகிறதே அதற்குப் பதிலாக இன்னும் அதிக அளவில் கட்டடைப் டிசைன் போட்டு கட்டப்படக் கூடாதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். 2,680 ரூபாய் 2,850 ரூபாய் என்ற இரண்டு திட்டங்களை வரைந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். அப்பொழுது 50 சத விகிதம் மானியம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டோம். அதற்கு ஒத்துக் கொண்டார்கள். பிறகு அந்த வீடும் போதாது, 5,000 ரூபாய் வரையிலுள்ள திட்டத்தை 1970 மே மாதத்தில் கேட்டார்கள். அதற்கும், 5,000 ரூபாயில் வீடு கட்டும் திட்டத்தைப் போட்டு அனுப்பி, அது முழுவதையும் மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு முழு மானியம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்தத் திட்டம் ஒத்துக்கொள்ளப்பட்டதாகப் பதில் வரவில்லை. கடந்த மாதம் கூட நினைவுபடுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம்.



**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டம் அனுப்பப்பட்டு, இன்னும் ஒப்புதல் வரவில்லை என்று கூறினார்கள். ஆகவே, மாநில மட்டத்திலாவது இதற்காகத் தனி வாரியம் அமைத்து எல்.ஐ.சி. அல்லது மற்ற பேங்குகள் மூலமாகக் [illegible] பெற்றுக் கடன் முறையிலே அளித்து வீடு கட்ட வீடில்லாத [illegible] அரிசன மக்களுக்கும் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திருப்பி கடனைக் கொடுப்பவர்களுக்குத்தான் எல்.ஐ.சி.யின் மூலம் கடன் பெற்று, அந்த விதத்தில் ஒரு கழகத்தைத் தமிழ் நாடு வீட்டு வாரியக் கழகம் என்று நிறுவியிருக்கிறோம் என்று இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த அரிசன நல மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவரமாகக் கூறியிருக்கிறேன். அது கடனைத் திருப்பித் தருபவர்களுக்கான திட்டம். ஆனால், கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், மிகவும் ஏழையாக இருப்பவர்களுக்காக 940 ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்தை மாற்றி, 1,500 ரூபாயாக ஆக்கி வீடுகள் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த ஆண்டிலே உருவாக்கியிருக்கிறோம். ஆறு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

**திரு. கோ. செபமாலை :** தலைவரவர்களே, இந்த 1,500 ரூபாய் கொடுக்கும் மானியத்திற்கு அரிசனங்கள் முதலிலே 250 ரூபாய் கட்டினால் தான் கிடைக்கும் என்று இருக்கிறதே, அப்படியில்லாமல் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 250 ரூபாய் கட்டினால் தான் கொடுக்க வேண்டும் என்று இல்லை. 250 ரூபாய்க்கு அவர்கள் பணமாகவோ, அல்லது உடல் உழைப்பாகவோ கொடுக்க வேண்டுமென்ற திட்டமிருக்கிறது. சிலர் 250 ரூபாயைக் கூட ஐந்து ரூபாய் தவணை வீதத்திலும் கொடுக்கிறார்கள். சிலர் உடலுழைப்புத் தருகிறார்கள். சிலர் சாமான்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். எனவே, கட்டாயமாக 250 ரூபாய் கொடுத்தால்தான் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நிலைமை இல்லை.

### இராணிப்பேட்டைக்கு அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

*** 710 வினு.—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

இராணிப்பேட்டையில் அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இராணிப்பேட்டை வட்டாரத்திலே அரிசன மக்கள்தான் அதிகமாக இந்தத் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏழைகளாக இருப்பதால்

பெரிய தொழிற்சாலைகளை நடத்த முடியவில்லை. ஆகவே, தொழில் அமைச்சரின் உதவியைப் பெற்று தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதுவரையில் இதுபோன்ற தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கங்கள் 1,859 உறுப்பினர்களைக் கொண்டு, 53 சங்கங்கள் நடந்துகொண்டுதான் வருகின்றன. தமிழகம் பூராவும் இருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்திலேயும் அந்தச் சங்கம் இருக்கிறது. எனவே, இராணிப்பேட்டையிலே தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to mechanise tanneries because there is nasty smell coming out of them and this is felt by the persons going on the road near the tanneries ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அது பற்றித் தொழில் அமைச்சரைக் கேட்கலாம். ஆனால், மெகனைஸ் பண்ணினால், பலருக்கு வேலை இருக்காது என்று எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் கூக்குரல் இடலாம். இது மாண்புமிகு தொழில் அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

### செய்யாற்றிலிருந்து நீர்ப்பாசனக் கால்வாய்

***711 வின.—திரு. பூ. எட்டியப்பன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாற்றில், விண்ணமங்கலம் முதல் பெரணமல்லூர், வட தின்னலூர் வரை விவசாயத்திற்கு நீர்ப்பாசன கால்வாய் ஒன்று வெட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பூ. எட்டியப்பன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் இரண்டாண்டுகளுக்கு முன்பு 42.5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு, தண்டரை அணை முடிந்த பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் மூன்று போகம் விளையும் வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, செய்யாற்றில் நீர் பற்றுக்குறை காரணமாகவும், மேலும் ஆற்றின்கீழ் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட எல்லா நிலங்களும் முற்றிலும் பயிரிடப்





படாத நிலையிலிருப்பதாலும், பெரணமல்லூர், நெடுங்குணம் [illegible]காக் களில் நிலங்களுக்கு செய்யாற்றிலிருந்து பாசன வசதி கொடுக்க [illegible]-ல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தண்டரை அணைக்கட்டு முடிந்த பிறகுதான் இது கவனிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, செய்யாற்றிலே கட்டப்படும் அந்தத் தண்டரை அணைக்கட்டு இன்னும் வேலை துரிதமாக நடக்காமல் மத்திய சர்க்காரில் ஏதோ சில பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படியென்றால் தண்டரை அணைக்கட்டு வேலையை விரைவில் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தண்டரை அணைக்கட்டுத் திட்டம் அனுமதிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ஏற்கெனவே வேலைகள் தொடங்கியிருக்கிறது. வேலை துரிதமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கத்திற்கும் நமக்கும் தகராறு கிடையாது.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவரவர்களே, தண்டரை அணைக் கட்டுத் திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பத்தாண்டுகளுக்கு முன்பு போட்ட கமண்டலநாக நதியில் செண்பகத் தோப்பில் அணைக்கட்டும் திட்டம் இந்த தண்டரை அணை கட்டுவதால் நிறுத்தி வைக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்கிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கமண்டலநாக நதி திட்டத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி போடவும்.

### *Renaming Tuticorin Port*

*** 712 Q.—THIRUMATHI T. N. ANANTHANAYAKI:** Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government had requested the Centre for naming the Tuticorin Port after the great patriot and freedom fighter V.O. Chidambaram Pillai ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, தூத்துக்குடியில் கட்டப்பட்டு வரும் புதிய துறைமுகத்திற்கு வி. ஓ. சி. துறைமுகம் என்று பெயர் சூட்டவேண்டுமென்ற தூத்துக்குடி நகராட்சி மன்றத் தீர்மானத்தை மத்திய சர்க்காரின் கவனத்திற்கு தமிழக அரசு 1971-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ம் நாளன்று அனுப்பியுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், தீர்மானத்தை அனுப்பினால் மட்டும் போதாது. கப்பலோட்டிய தமிழனின் பெயரில் துறைமுகம் வைக்க வெகு சீக்கிரத்தில் நேரடியாகவாவது சென்று, அமைச்சர் டெல்லிக்குச்சென்று ஞாபகப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கப்பலோட்டிய தமிழனுக்கு சிலை வைக்காமல் இருந்தது அந்தக் காலம், சிலை வைத்துப் பாராட்டுவது இந்தக் காலம். ஆகவே கப்பலோட்டிய தமிழனின் பெயரில் துறைமுகம் ஏற்பட வேண்டுமென்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிலை வைப்பதிலே எங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. துறைமுகம் வைப்பதில் தான் அதிக நம்பிக்கை உண்டு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த நம்பிக்கையை நேரு வந்து இங்கு சிலை திறந்தபொழுது தெரிவித்திருக்கவேண்டும்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** தலைவரவர்களே, இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பொழுது ஜெர்மனியில் ராஷ்பிஹாரி கோஷ் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தாலும் உலகப் பெரும் போரில் எம்டன் என்ற நீர் மூழ்கிக் கப்பல் நமது துறைமுகத்திற்கு வந்தபொழுது உயர்நீதி மன்றத்திலிருந்து குண்டு வீசியவரும் மாவீரருமான சண்பகராமன் பிள்ளையின் பெயரை சென்னை துறைமுகத்திற்கு வைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவுமில்லை.

## டிராக்டர் தொழிற்சாலை.

ற்பகல் 0–00 * 713 **வினா.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை ஒன்றை தமிழ்நாட்டில் அமைப்பதுபற்றி 1969-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அந்நாட்டுத் தொழில் அதிகாரிகளுடன் பேச்சு நடந்தது. ஆனால் இதற்கான மத்திய அரசு அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ந. வீராசாமி :** ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி டிராக்டர் தொழிற்சாலையை உருவாக்கும் செயற்குறிப்பின்படி எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இதற்கான பேச்சு வார்த்தை ஹங்கேரி நாட்டு அதிகாரிகளுடன் நடைபெற்று தமிழ்நாட்டில் அதை நிறுவுவது பற்றி நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் இதற்கான மத்திய அரசின் அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.



**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தியது தமிழ்நாட்டில். அதற்கான மத்திய அரசின் அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்குப் போயிருக்கிறது என்றால் அதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு காரணம் கேட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** காரணம் என்ன என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட டிராக்டர் தொழிற்சாலை அமைக்கத் தகுந்த வசதிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி இன்னும் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு தான் இருக்கிறோம்.

**திரு. எம். முத்தையா :** ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தியது எந்த ஆண்டில் ? எந்த இடத்தில் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஹங்கேரி நாட்டு அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது சென்னையில் 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள். அந்தத் தொழிற்சாலையினை ராஜஸ்தான் மாநிலத்தில் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி இருக்கும் காரணத்தால் இனிமேல் செய்ய வேண்டியது எல்லாம் அதை அங்கிருந்து இங்கு மாற்றுவதற்கான முயற்சி தான்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அந்த டிராக்டர் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் அமைக்க மத்திய அரசாங்கம் ஏதாவது நிபந்தனை வைத்ததா ? அந்த நிபந்தனையை மாநில அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொதுவாகச் சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எந்த நிபந்தனையும் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை இருக்கிறது என்பதை மத்திய அரசு சுட்டிக் காட்டியிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, ஒரு டிராக்டர் தொழிற்சாலை ஏற்கெனவே தமிழ்நாட்டில் இருக்கின்ற காரணத்தால் மற்றொன்றைக் கொடுக்கக்கூடாது என்று கிடையாது. தமிழ்நாடு அரசு ஹங்கேரியோடு கொலாபரேஷன் செய்வதற்கு எல்லாவித பேச்சு வார்த்தையும் நடத்தி முடிவு கண்ட பிறகு அது ராஜஸ்தானுக்குப் போயிருப்பது சரியல்ல. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முடிவு கட்டுவது நாமல்ல. ஹங்கேரி நாட்டுத் தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் நடத்துவதில் சில அனுகூலங்கள் இருக்கின்றன என்று கருதி இதற்கு முன் வந்தார்கள். இருந்தாலும் இறுதியில் எல்லாவற்றையும் மத்திய அரசு முன்னால் வைத்து அந்த அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நம் நாட்டிலே நல்ல டிராக்டர்கள் தயாரிக்கும் திறமை இருக்கும்போது ஹங்கேரி நாட்டு கொலாபரேஷன் தேவை தானா ? முழுதும் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் தொழிலை ஊக்குவிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : டிராக்டர்கள் இப்போது கூட இங்கு நூற்றுக்கு நூறு உற்பத்தி செய்யப்படவில்லை. முதலில் வெளிநாட்டுப் பகுதியாக நூற்றுக்கு நூறு என்று ஆரம்பித்து பிறகு 90, 80 என்று படிப்படியாகக் குறைந்து, பிறகு நூற்றுக்கு நூறு இந்தியா அல்லது தமிழ்நாடு என்ற முறையில் உற்பத்தி செய்கிறோம். அந்த முறையில் தான், இதிலே கூட, 49 பகுதி தமிழ்நாடு 51 பகுதி ஹங்கேரி என்று ஆரம்பித்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய பகுதியைக் குறைக்கலாம், என்று திட்டமிடப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வி எண் 714 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].**

(2) அறிக்கை அளித்தல்.

*மீனளத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.*

**THIRU K. VEZHAVENDAN** : Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Fisheries Department.

(3) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**THIRUMATHI T. N. ANANTHANAYAKI** : Sir, to discuss about the introduction of Crop Insurance Scheme in Tamil Nadu I move the following cut motion :—

"That the allotment of Rs. 21,03,85,400 under Demand No. 16, Agriculture, be reduced by Rs. 100."

**திரு. சோ. அழகர்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களுக்கு உற்பத்திச் செலவை அனுசரித்து நியாய விலை கிடைக்க ஏற்பாடு செய்வதில் அவசியம் பற்றி விவாதிக்க—



"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,03,85,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி** : பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வருவதன் முக்கியத்துவத்தை வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,03,85,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

**THIRU B. VENKATASWAMY** : Sir, to discuss about the need to extend the Horticultural Extension Service to the people and ryots of Tamil Nadu, I move the following cut motion :—

"That the allotment of Rs. 21,03,85,400 under Demand No. 16. Agriculture, be reduced by Rs. 100."

**திரு. கே. எ. வகாப்** : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதைப் பண்ணைகளில் சரியான பராமரிப்பு இல்லாமல் நஷ்டமடையும் தானியம், உரங்கள் பாதுகாப்புப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,03,85,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,46,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**திரு. எஸ். வடிவேல்** : பேரவைத் தலைவர் அவர்களே, மண் பரிசோதனை நிலையங்களை அதிகப்படுத்துவதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,46,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மன்னை நாராயணசாமி** : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை கோரிக்கைபற்றி அவையில் வைத்துள்ள கொள்கை விளக்க குறிப்பை* எல்லோரும் சிறப்பாக விவாதித்து எனக்கு ஒத்தாசையாக உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைத்

*646-707ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

துறையைப்பற்றி தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நல்ல முயற்சிகள் எல்லாம் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகின்ற முறையில் விவாதத்திே உங்கள் கருத்துக்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விவாதத்தில் 34 பேர்க பங்குகொள்ள இதுவரையில் முன்வந்திருக்கிறார்கள். ஆகவே வழக்கப்படி ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிஷம் பேசினால்தா மாலை வேளையிலாவது விவாதத்தை முடிக்க முடியும். வேளாண்மை துறை மானியத்தில் பொதுவாக சட்டமன்றத்திற்கும், தமிழ்நாட்டுப் பிர நிதிகளுக்கும் இருக்கிற அக்கறையையும் ஆர்வத்தையும் நல்ல வகையி மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறும் வகையில் விவாதத்தில் பங்குகொண் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முதலில் திரு. கே. ப கோபால் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

***திரு. கே. பி. கோபால் :** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற் முன் எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்காகத் தலைவர் அவர்களுக் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய விவசாயி தான் பிறக்கும்போது கடனாளியாகப் பிறக்கிறா இறக்கும்போதும் கடனாளியாக இறக்கிறான் என்பது பொருளாதா நிபுணர்களின் கருத்தாகும். இப்போதும் அந்த நிலையில் ஒரு மா பாடும் இல்லாத வகையில் விவசாயிகள் எந்த அளவிற்கும் முன்னேற்ற அடையாமல் தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளாத நிலையில் இரு கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உபகரணங்களின் விலைக அதிகரித்துள்ளன. ஆனால் அவர்களின் விளைபொருள்களுக்கு நியாயமா விலை கிடைப்பதில்லை.

இந்த நிலையில் ரசாயன உரத்திற்கு மத்திய சர்க்கார் வரிவிகிதத்தை அதிகரித்திருக்கிறது. மாகாண அளவில் மின்சாரக் கட்டணம் உயர்த்த பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் விவசாய வருமான வரி திருத்த மசோதா கொண்டுவரப்பட்டபோது பொது மக்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க அதை மறு பரிசீலனை செய்து அதை கைவிட்டுவிட்டார்கள். நாட்டின் முதுகெலும்பு என்று கருதப்படும் விவசாயப் பெருங்குடி மக்களை உற்சாகப்படுத்தும் விதத்தி ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட விவசாய வருமான வரிச் சட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக் வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நீர் பிரச்னைபற்றி தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சார்ந் விவசாயிகளுக்கு எந்த விதமான பொறுப்பும் கிடையாது. இருப்பினு உயர்நீதி மன்றத்தில் அதற்காக வாதாடுவதற்காக விவசாயிகளிடமிருந் வசூல் செய்வதை இந்த அரசு தவிர்த்திருக்கவேண்டும். உச்ச வரம்



விதிக்கவேண்டிய தொழில்கள் எவ்வளவோ இருக்கின்றன. மலைப் பயிர்கள், நகர்ப்புறச் சொத்துக்கள், லாரிகள் இது போன்ற பலவற்றிற்கு உச்சவரம்பை நிர்ணயிக்காத நிலையில் விவசாயிகளுக்கு மட்டும், நிலத் திற்கு மட்டும் 15 ஏக்கர் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 15 ஏக்கர் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்த நிலங்கள் தான் விவசாயிகள் தங்கள் பெரும் உழைப்பைக் கொடுத்து உற்சாகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு விரும்புகிறார்கள். திராட்சை, வாழை, கரும்பு இது போன்ற பொருள்களை விவசாயம் செய்தால் அவர்களுடைய வருமானம் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஸ்டாண்டர்ட் ஏக்கர்பற்றி விவசாய வருமான வரிக்காக சென்ற ஆண்டு விளக்கம் கொடுக்கும்போது திராட்சை, வாழை, கரும்பு இவற்றிற்கான விளக்கம் மிகவும் கடுமை யாக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகளுக்கு வாழை, திராட்சை, கரும்பு இவைகளை விவசாயம் செய்வதில் ஆர்வம் குறைந்து அவர்கள் மற்ற நவ தானியங்களை உற்பத்தி செய்யக்கூடும். ஆகவே அந்தக் கடுமையான விளக்கத்தை மீண்டும் நல்ல முறையில் மறுபரி சீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் தொழில் கழகம் சார்பில் விவசாயிகளுக்கு டிராக்டர் கள் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் மாவட்டத்தில் ட்ராக்டர் கடனாகவும் வழங்கப்படுகிறது. இதில் வாகன வரிச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைச் செய்யவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் ஒருவர் தன் வசதிக்காக கார் வைத்துக்கொள்ளலாம், ஜீப் வைத்துக்கொள்ளலாம், ஜீப்போடு ட்ரெய்லர் வைத்துக்கொள்ளலாம், ட்ராக்டர் வைத்துக்கொள்ளலாம். ஆனால் ட்ராக்டரோடு ட்ரெய்லர் இணைக்கப்படவேண்டுமானால் அதற்கு ஃபிட்னஸ் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று இருக்கிறது. அதோடு ஐந்து ஆண்டு களுக்கு ஒரு முறை பெர்மிட் வாங்கவேண்டுமென்றும் ஒரு முறை இருக்கிறது. தனிப்பட்டவர்கள் ஜீப்போடு ட்ரெய்லர் வைத்துக்கொள்ளலாம். ட்ராக்டர் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கும்போது ட்ரெய்லர் மட்டும் வாங்கிவிட்டால் ஏன் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பர்மிட் வாங்க வேண்டுமென்றும், ஃபிட்னெஸ் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்றும் இருக்கிறது ? ஆகவே அதை மறு பரிசீலனை செய்து அதற்கான திருத் தத்தை வாகன வரிச் சட்டத்தில் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும். மாவட்டத்திற்கு ஒரு ட்ராக்டர் வாடகைக்கு விடும் நிலையம் ஒன்றும் அதையொட்டிய வொர்க்ஷாப்பும் இருக்கிறது.

ஒரு சில மாவட்டங்களில் ட்ராக்டர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் ஒரு சில மாவட்டங்களில் அதன் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும். எனவே, மாவட்டத்திற்கு ஒன்று என்றில்லாமல் எல்லா மாவட்டங்களிலும் முதல் கட்டமாக ஒவ்வொரு ட்ராக்டர் வொர்க்ஷாப் ஏற்படுத்திவிட்டு ட்ராக்டர்கள் அதிகமாகவுள்ள மாவட்டங்களிலும் ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு வொர்க்ஷாப் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருவி களைப் பழுதுபார்க்க 15 துணை நிலையங்கள் தொடங்கியிருப்பதாகத் தெரி கிறது. 15 துணை நிலையங்கள் என்பது நம் மாநிலத்திற்குப் போதாது. ஆகவே மேலும் அதிகப்படியான துணை நிலையங்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு தகவல் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ட்ராக்டர் வொர்க்ஷாப் திட்டத்தைத் தவிர மேலும் இரண்டு என்.வி.டி.வி. கூட்டுறவுத் துறையில் மதுரை மாவட்டத்தில் தொடங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான நிதியும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது மூன்றாகிறது.

**திரு. கே. பி. கோபால் :** அடுத்தபடியாக, விமானத்தின்மூலம் மருந்து தெளிப்பதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. விமானம் மூலம் மருந்து தெளிப்பதை விட பவர் ஸ்ப்ரேயர்ஸ்மூலம் மருந்து தெளிப்பதை விவசாயிகள் மிகவும் வரவேற்பார்கள். கிராமப் புறங்களில் இப்படி விமானம்மூலம் மருந்து தெளிப்பதினால் எவ்விதப் பயனும் இல்லை என்று கிராம மக்கள் கருதுகிறார்கள். காரணம் மண்வளம் ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டே வருகிறது. சக்தி வாய்ந்த மருந்து களைத்தான் இப்போது உபயோகப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி சக்தி வாய்ந்த மருந்துகளைத் தெளிக்கும்போது குடிநீர் உள்ள குளங்கள், கிணறுகள் இவற்றில் மருந்து கலந்து விடும் அபாயம் இருக் கிறது. எனவே, விமானங்கள்மூலம் மருந்து தெளிப்பதை விட பவர் ஸ்ப்ரேயர்ஸ்மூலம் மருந்து தெளிப்பதுதான் நல்லது. இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக குளிர்சாதன அறை. உத்தமபாளையம், பெரியகுளம் வட்டங்களில் அதிகமான அளவிற்கு திராட்சை, வாழை போன்றவை பயிரிடப்படுகிறது. அப்பகுதிகளில் குளிர்சாதன அறைகள் திறக்கப்படு மானால் அங்குள்ள மக்கள் பயிரிடும் வாழை, திராட்சை இவற்றை அந்த குளிர்சாதன அறைகளில் வைத்திருந்து நியாயமான விலை கிடைக்கும் போது அதிலிருந்து எடுத்து விற்று நல்ல பயன் பெறமுடியும். ஆகவே அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவு வாய்ப்பு அளித்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**1971**-ல் வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கம் ஆராய்ச்சிப் பணி செய்வதற்காக. கல்வி ஒரு பக்க மிருந்தாலும் முக்கியமாக ஆராய்ச்சி செய்வதற்காகச் செயல்படக்கூடிய நிலையில் அந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து நிபுணர் குழு ஒன்று எப்படியெல்லாம் செயல்படவேண்டுமென்ற முறையில் ஒரு திட்டத்தை வகுப்பதற்காக வந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஒரு புதிய திட்டத்தை உருவாக்கக்கூடிய முறையில் செய்முறை, ஆராய்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தனியாக வேளாண்மைத் துறை கூட்டு இயக்குநர் ஒருவரை அரசு நியமித்துள்ளது. ஐ.வி.ஆர். லிருந்து இரண்டு கோடி ரூபாய் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதை வாங்கி





ஆராய்ச்சிகள் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும். அதற்குப்பதிலாக இன்றையதினம் அன்ஹெல்தி காம்பெடிஷன் நடக்கும் வகையில் எல்லாம் செயல்பட்டு வருகிறது.

ஆராய்ச்சியில் மூன்று வீதம் உள்ளன. ஒன்று பேஸிக் ரிசர்ச், அப்ளைட் ரிசர்ச், அடாப்டிவ் ரிசர்ச். இதில் பேஸிக் ரிசர்ச்சும், அப்ளைட் ரிசர்ச்சும் யூனிவர்ஸிடி பொறுப்பில் இருப்பது நலம். அப்படித்தான் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இருக்கின்றன. பஞ்சாபில் இரண்டையும் இணைத்து வேலை செய்வதால்—பேஸிக் ரிசர்ச் அண்ட் அப்ளைட் ரிசர்ச் இவற்றினை இணைத்து வேலை செய்வதால்—அது நல்லதொரு முன்னேற் றத்தைக் கண்டிருக்கிறது.

இன்று பஞ்சாபை எடுத்துக்கொண்டால் கோதுமை மட்டுமல்ல, நெல் உற்பத்திக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டு இன்று அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டு காஷ் க்ராப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அங்கு அவர்கள் அரிசி சாப்பிடவில்லை என்றாலும்கூட நெல் உற்பத்தி செய்து வெளியே அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நமக்கு இரண்டு கோடி ரூபாய் கொடுக்கத் தயாராகயிருந்தபோதிலும் கூட அதைப் பெறுவதற்கான திட்டம் இன்று நம்மிடம் இல்லை. அந்த இரண்டு கோடி ரூபாயை பெறுவதை விட்டு நம் இலாகாவிலிருந்து பணத்தை விரயம் செய்துகொண்டிருக்கிறார்கள். நான் முக்கியமாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நிதி அமைச்சராகவும் இருப்பதால் இதைக் கவனிக்கவேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கோடி ரூபாய் அவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். **1971**-ல் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகம் இன்னும் செயல்படாமல் ஸ்தம்பித்துக்கொண்டு இருக்கிறது. செயல்படு வதற்கு ஊக்கம் கொடுக்கும் நிலையில் நம்முடைய அரசு செயல்பட வேண்டும். அதற்குப் பதிலாக விவசாய இலாகா தனியாக இயங்கக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது.

கிட்டத்தட்ட **25** ஆராய்ச்சிக் கூடங்கள் தங்கள் வசம் வைத்துக்கொண்டு தனியாக இயங்குகிற நிலை இருக்கிறது. அதுவும் காணாமல் இன்று வேளாண்மை உற்பத்தி மன்றம் ஒன்று துவக்க இருப்பதாகத் தெரிகிறது. இந்த மன்றம் வேளாண்மை வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகள், இப்போதுள்ள பணிகளைத் திருத்தியமைத்தல், மாற்றியமைத்தல், நவீன வேளாண்மையில் அறிவியல் சார்ந்த பயிர் முறை உத்திகளைக் கொண்டுவருதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள இந்த அமைப்பு பெரிதும் உதவும் என்று கூறப் பட்டிருக்கிறது. இப்படி "பேரலல் ஆர்கனைசேஷன்" என்று சொல்லக் கூடிய அளவில் பல மன்றங்களை வைப்பது அபிவிருத்தியைத் தடைப் படுத்தும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

யூனிவர்ஸிடி அமைக்க அதற்கென தனிச் சட்டம் கொண்டு வந்தோம். ஆர்டினன்ஸ்கூட கொண்டு வந்தோம். **1971**-ல் ஆரம்பிக்கப்பட்ட வேளாண்மைக் கழகத்திடம் ஆராய்ச்சிக் கூடங்கள் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இப்படி இரண்டு "பாரலல் ஆர்கனைசேஷன்" இருப்பதன் மூலம் நாடு முன்னேறாது. நம்முடைய நாடு வேளாண்மையில் முன்னேற வேண்டுமானால் அந்தப் பணத்தை வாங்கவேண்டும். அந்த 2 கோடி

ரூபாய் வாங்குவதற்குத் தாமதம் ஏன் ? அதற்குப் பதிலாக நம்முடைய நிதியைச் செலவழிக்கவேண்டியிருக்கிறது. 1971-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட கழகம் புதிதாக ஆராய்ச்சிப் பணியில் முழுக் கருத்து செலுத்தி செயல்பட இட்டத்தட்ட 1 மாதம் ஆகும் என்று நினைக்கிறேன் ஒரு புது அடிஷனல் டைரக்டர் போட்டு இருக்கிறார்கள். சிவராமன் வைஸ்-சேர்மன், ஐ.சி.ஏ.ஆர். வருகிறார், 2, 3 தினங்களில் வருகிறா என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்தால் அவர்களை அழைத்து வரத் தயாராக இருக்கிறேன். அவர்கள் கொடுக்கும் திட்டத்தை அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அதன்மூலம் 2 கோடி ரூபாயை வாங்கிக்கொண்டு, ஆராய்ச்சியை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. அ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1972–73-ம் ஆண்டுக்கான வேளாண்மைக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று இந்திய உப கண்டத்திலேயே தமிழகம்தான் வேளாண்மை யிலே சிறந்த மாகாணம் என்று பெயர் பெற்று விளங்குகிறது என்பதை அறிவோம். அதே நேரத்தில் விவசாயிகள் இன்று இருக்கும் நிலையில் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால், அவர்களுடைய நிலத்திலே விளைகின்ற விளைபொருள்கள் பருவ மழை தவறி விட்டால் சில நேரங்களில் அழிந்து விடுகின்றன. அப்படி அழிந்து போகும் நிலையில் அவர்களுக்கு விளைபொருள் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவரவேண்டும் அவர்களுடைய வேளாண்மை கெட்டுவிடுகிற நேரத்தில், விவசாயிகள் உழுது பயிரிட்டு அதற்கான மகசூல் அவர்களுடைய விளைபொருள்கள் வராத நேரத்தில், விவசாயிகளுக்கு மிகவும் பயன்படுகிறவகையில் நம்முடைய அரசு விவசாய இன்ஷூரன்ஸ் திட்டத்தைக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி மருந்து தெளிக்கும் நேரங்களில், விஷ மருந்து தெளிக்கிற காரணத்தால் அவர்களுக்குப் போதுமான பயிர்ச்சி இல்லாத காரணத்தால் பூச்சி மருந்து தெளிக்கும் விவசாயிகள் சிலர் இறந்து விடும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அரசு விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து தெளிக்கும் பணியில் பயிற்சி தருவதற்காகப் பயிற்சி பெற்றவர்களை நியமித்து விவசாயிகளுக்கு அந்த மருந்து தெளிக்கும் முறையை கற்றுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு தேவைப்படுகிற தோட்டா கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும்தான் இது கிடைக்கிறது. அங்கே சென்று வாங்குவது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, வெடி மருந்து தோட்டாக்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கிடைப்ப தற்கு நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பது சுலபமாக இருந்தாலும்கூட அவர்களுக்கு பருவ காலங்களில், பருவ மழை தவறி வறட்சி ஏற்பட்டு அதனால் சரியான நிலையில் விவசாயம் வளவில்லையென்றால், அவர்



வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. 6 மாதக் கடன் என்றால், 6 மாத கெடு முடிந்த உடனே கடனைத் திருப்பிக்கட்டவேண்டு மென்று உத்தரவு வருகிறது. அவர்களுக்குச் சரியான முறையில் உற்பத்தி கிடைக்காத காரணத்தால் அவர்களால் அந்தக் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. ஆகவே, அவர்களுக்குத் தவணை கொடுத்து விவசாயிகளிட மிருந்து அந்தக் கடனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவெண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் பெருகவேண்டுமானால், சிறிய நீர்த் தேக்கங்கள் அதிகமாகக் கட்டப்படவேண்டும். சிறு, சிறு நீர்த்தேக்கங்கள் மூலமாகத்தான் நாம் விவசாயத்தை அதிகமாகப் பெருக்க முடியும். ஆகவே, ஆங்காங்கு சிறிய நீர்த்தேக்கங்களைக் கட்ட விரைவில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய நீர்த்தேக்கம் என்று வருகிறபோது என்னுடைய தொகுதியில் 2, 3 நீர்த்தேக்கங்கள் வேண்டுமென்று நான் கொடுத்திருக்கிறேன். அந்த சிறிய நீர்த்தேக்கங்களை விரைவில் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, என்னுடைய சேலம் மாவட்டத்தில் சங்கரி வட்டத்தில், தங்காயூர் என்ற கிராமத்தில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் வேண்டுமென்று பல முறை கேட்டு இருக்கிறேன். அதுவும் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். அதை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழைத்தோட்டம் வைத்திருக்கும் விவசாயிகளைப் பொறுத்தவரையில், பெருத்த காற்று வருகிற நேரத்தில் அந்தக் காற்றினால் அவை சரிந்து விடுகின்றன. அப்படிச் சரிந்து விடும் நேரத்தில் அவர்களின் ஆண்டு வருமானம் பாதிக்கப்படுகின்றது. அப்படி ஏற்படுகிறபோது அந்த விவசாயி களுக்கு அரசாங்கத்தின் மானியமாகவோ அல்லது இனமாகவோ பண உதவி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம விவசாயிகளுக்கு விதைபொருள்கள் கொடுக்கிறார்கள். ஒவ் வொரு விவசாயியும், அங்கே இருக்கும் ஒன்றியத்திலிருநது விதை பொருள்கள் வாங்கி, அதைப் பயிரிட்டு ஒரு மாதம் கழித்த பிறகு பார்த்தால் சில விதை பொருள்கள் முளைக்காமல் போய்விடுகின்றன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, விதை பொருள்கள் கொடுக்கும் நேரத்தில் அதை நன்கு பரிசீலித்து, மிகுந்த கவனத்தோடு, விவசாயிகளுக்கு நல்ல விதை பொருள்களாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இப்போது ஆரம்பித்து இருக்கும் இளைஞர் அணி கிராமந்தோறும் சென்று விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறது. அந்த இளைஞர் அணியை விவசாயத்தில் இருக்கும் நல்ல சிறந்த முறைகளை விவசாயி களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் அமைத்தால், விவசாயத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். அதற்கு வழிவகை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி ஆற்றிலிருந்து வேளாண்மைக்குத் தண்ணீர் எடுப்பதற்கு தடை இருக்கிறது. அந்தத் தடையை நீக்குவதற்கு நம்முடைய அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று விவசாயிகள் பம்பு செட் கேட்டு மனு போடவேண்டுமானால், தடையில்லாச் சான்று வாங்கவேண்டுமென்று புதிய உத்தரவை நம்முடைய அரசு பிறப்பித்து இருக்கிறது. ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய கிணற்றுக்கு பம்பு செட் போடவேண்டுமானால் தடையில்லாச் சான்று வாங்கவேண்டியிருக்கிறது. அப்படி வாங்குவதற்கு அவன் மிகவும் தொல்லைக்குள்ளாக்கப்படுகிறான். ஆகவே, அந்த விவசாயிகள் தடையில்லாச்சான்று வாங்கவேண்டுமென்று இருப்பதை எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசாங்கம் ஆலோசனைசெய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு கிராமந்தோறும் மின்சார இணைப்பு பம்பு செட்டுகளுக்கு கொடுப்பதற்கு, எந்தக் கிராமத்திலும் மின்சாரம் இல்லை என்று சொல்கிற அளவுக்கு இல்லாமல் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதுபோலவே, கிராமத்தில் இருக்கும் கிணறுகளுக்கு பம்பு செட்டுகளுக்கு எல்லாம் மின்சாரம் வழங்குவதற்கும் ஒரு காலக்கெடுவை உண்டாக்க வேண்டும்.

இன்று இருக்கும் சூழ்நிலையில் விவசாயிகளுக்கு மாடுகளோ, பம்பு செட்டோ இல்லாமல் வேலை செய்ய முடியாது. ஒரு வேலையாளுக்கு ரூ. 1,000 , ரூ. 1,500 ரூபாய் சம்பளம் தேவைப்படுகிறது. காளைகள் வாங்கவேண்டுமானால் ரூ. 2,500 கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டும். மின்சாரம் அளித்தால்தான் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். அவர்களுக்குச் செலவும் குறையும். எனக்கு முன்பு பேசிய நண்பர் மின்சாரக்கட்டணம் அதிகமாக உயர்த்திவிட்டார்கள் என்று பேசினார்கள். மற்ற மாநிலங்களைப் பார்த்தால் நம் மாநிலத்தில் தான் மின்சாரக்கட்டணம் குறைவு. மின்சாரக் கட்டணம் உயர்ந்து விட்டது என்று குறிப்பிட வில்லை. இருந்தாலும் மற்ற மாகாணத்தைவிட நம்முடைய மாநிலத்தில் குறைவாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக விவசாயிகளுக்கு வேண்டிய மின்சாரத்தை வழங்கவேண்டுமென்பதற்காகத் தான் என் கோரிக்கையை முன்வைக்கிறேன். இப்போது விவசாயிகள் மின்சார இணைப்பு பம்பு செட்டுகளுக்கு வாங்கவேண்டுமானால் ஓராண்டுக்கு மேல் காத்திருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு நல்ல உரம், கடன் வசதி, மின்சார இணைப்பு முதலியவற்றை உடனடியாக வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சின்ன வெள்ளையன் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையைப் பொறுத்து இந்த அரசு கொண்டு வந்திருக்கும் 1972-73-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பசுமைப் புரட்சியின்மூலம் சாதாரண விவசாயிகள் பயன் பெறும் அளவுக்குத் துணை புரிந்து வந்திருக்கிறது. ஏழைகளின் அரசான இந்த அரசை நான் மனதார, உளமாரப் பாராட்டுகின்றேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வேளாண்மைக்காக ரூ. 61 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்குப் புதிய திட்டமொன்றைத் தீட்டி, அதற்கு ரூ. 1.93 லட்சம் ஒதுக்கியிருப்பது குறித்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை



விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 29·40 கோடியாக உயர்த்தியிருப்பது நாம் விவசாயிகளிடத்தில் வைத்திருக்கிற அக்கறையைக் காட்டுகிறது.

என்னுடைய தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியைப்பற்றி நான் இங்கே சொல்லிவிடக் கடமைப்பட்டுள்ளேன். என் தொகுதியில் கொல்லி மலைப் பகுதியில் ஏராளமான பழவகைகள் உற்பத்தியாகின்றன. காய்கறிகளும் விளைகின்றன. இந்த அரசு கொல்லி மலையில் ஒரு கூட்டுறவு வங்கி ஏற்படுத்தி, மலைவாழ் மக்களுக்கு எளிதாகக் கடனும், உரமும் கொடுத்து உதவி, உற்பத்தியை அதிகமாக ஆக்குவதற்கு உதவவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மலைவாழைப்பழம், அன்னாசிப்பழம், பலாப்பழம், ஆரஞ்சுப் பழம் முதலிய ஏராளமான பழங்கள் உற்பத்தியாகின்றன. இப்பழங்களை வைத்து பழக்குழம்பு (ஜாம்) செய்கின்ற தொழிற்சாலை ஒன்றை அரசுப் பொறுப்பில் ஏற்படுத்தவேண்டுகின்றேன். உரிய காலங்களில் உரமும், விதைகளும் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் அதிகமான அளவு கொடுத்து விவசாயிகளை ஊக்குவிப்போமேயானால் ஏராளமான உருளை, முட்டைக் கோசு உற்பத்தி செய்ய முடியும். அதற்கான உதவிகளை அரசு செய்திட வேண்டுகின்றேன்.

கொல்லிமலையில் காபி, ஏலக்காய், கோதுமை முதலிய பயிர்கள் ஏராளமாக விளையக் கூடியவைகள். ஆகவே, அந்தப் பயிர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, இன்னும் அதிகமான உற்பத்தியைச் செய்ய அரசு துணை புரியவேண்டுகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையை நான் மிகவும் பாராட்டி, புதிய வரிகள் இல்லாது எல்லா வகை மக்களும் பயன்பெறும் வகையில் இது அமைந்திருப்பதற்காக நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**திரு. எஸ். வடிவேல் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் நேரடியாக உழவுத் தொழிலில் பங்கு கொண்டவர்கள். அந்தத் தொழில் நாட்டினுடைய ஜீவநாடியான ஒரு தொழில். 100-க்கு 60 பேர் அந்தத் தொழிலை நம்பி வாழக்கூடிய மக்கள். அந்தத் தொழிலுடைய வாழ்வில் மாறுதலும் மறுமலர்ச்சியும் கண்டால்தான் தமிழகத்தின் வரலாற்றில் அந்தத் தொழில் ஒரு சிறப்பு மிக்க வரலாற்றைப் பெற முடியும்.

பொதுவாக, தமிழ்நாட்டிலே மொத்த வரவை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், வரவிலே 40 சத வீதம் இந்த விவசாயத் துறையிலிருந்து அரசுக்கு வருகிறது. இந்தத் துறையிலிருந்து அரசுக்கு வருகிற வருமானத்தை எடுத்துக்கொண்டால், பல்வேறு புரட்சிகரமான மாறுதலைக் கண்டிருக்கிறோம். புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திக்கொண்டு வருவதைப் பார்க்கும்பொழுது, இன்றைக்குப் பல்வேறு நவீன சாதனங்களைப்

பயன்படுத்தி நாம் உற்பத்தியைப் பெருக்கியிருந்தும், உழவுத் தொழில்
ஒரு அடிப்படையான மாற்றம் ஏற்படவேண்டும். அன்று காந்தியிரு
காலத்திலும்சரி, காங்கிரஸ் ஆட்சி காலத்திலும்சரி, அடிப்படையாக நி
சீர்திருத்தம் என்று சொன்னார்களே தவிர, நிலச் சீர்திருத்தம் பல்வே
தவணைகளில் கொண்டுவருவதினால், அந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்க
பயன்பெறத்தக்க சட்டங்களாக இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்
வந்த் அந்த சட்டம் அந்த சட்டத்தையே சாகடிக்கக்கூடிய நிலைமைய
தான் இருக்கிறது. அம்மாதிரி நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவ
வேண்டுமென்றால், திடீரென்று சட்டம் கொண்டுவந்து, திடீரென்
விவசாயிகளுக்கு நல்ல பலன் அளிக்கக்கூடிய வகையில் கொண்டுவ
வேண்டும். அப்படிச் செய்யாமல் பல்வேறு சட்டங்களாக வருகின்
காரணத்தினால், அவைகளெல்லாம் சட்டப்புத்தகத்தை அலங்க
கின்றனவே தவிர, மக்களுடைய சமுதாய வாழ்வை அலங்கரிப்பத
அமையவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் ஒரு • ஒருங்கிணை
சட்டத்தைக் கொண்டுவர முன்வரவேண்டும். என்னுடைய கட்சி
தோழர்கள் மணலி அவர்களும் ஏ. கே. சுப்பையா அவர்களும் அம்மாதி
ஒரு மசோதாவைக் கொண்டுவர முன்வந்திருக்கிறார்கள். இந்த அ
காலத்திலேயே அந்த சட்டத்தைக் கொண்டுவர முன்வரவேண்டுமென்
கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பூச்சிகொல்லி மருந்து ஆகாயவிமானம் மூலம் அடிக்க
படுவது நடைமுறையில் பார்த்தால் சரியாக இல்லை என்பது என்னுடை
தாழ்மையான கருத்தாகும். இப்பொழுது 8,000 ஸ்ப்ரேயர்க
இருக்கின்றன. 10,000 ஸ்ப்ரேயர்களை வாங்கிக்கொடுக்க சர்க்கார் முன்
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு கோடி ரூபா
செலவழித்தாலும் பரவாயில்லை. நாட்டினுடைய அடிப்படையான உழவு
தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கக்கூடிய வகையில் அதை
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு யூனியனிலு
வொர்க்ஷாப் வைத்து ஸ்ப்ரேயர்கள் கெட்டுப்போனால் அதை உடனடியா
ரிப்பேர் செய்துகொடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்
கொள்கிறேன்.

இன்றைக்கு கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவருவதாக சர்க்க
சொல்லியிருக்கிறார்கள். கடன் என்று சொல்லும்பொழுது, 33 ச
விகிதம்தான் அரசாங்கத்தின்மூலம் கடன் கிடைக்கிறது. விவசாயிகளை
பொறுத்தவரையில். மூன்றில் ஒரு பங்குதான் அரசாங்கத்தின் மூல
கடன் கிடைக்கிறது. விவசாயிக்குத் தேவையான பாக்கி இரண்
மடங்குக் கடனை விவசாயிகள் வேறு இடங்களிலிருந்துதான் வாங்
வேண்டிய நிலைமை இருக்கிறது. தடுக்கி விழுந்தால் வட்டிக்கடைக்கு
போய் கடன் வாங்கவேண்டிய நிலைமைதான் இருக்கிறது.

அரசாங்கம் தொழில் முதலாளிகளுக்கு தொழில் வைப்பதற்
கொடுக்கும் கடனை லாபம் கிடைத்த பிறகு அரசுக்குத் திருப்பிக் கட்டலா
என்று சட்டம் இருக்கிறது. ஆனால், உழவனுக்குக் கொடுத்த கடனை
இருந்தால், அவன் உடனே கட்டவேண்டும். இல்லாவிட்டால், அவனுடை
ஆடு மாடுகளைப் பிடித்துக்கொண்டு வரக்கூடிய நிலைமைதான் இருக்கிறது
உழவுத் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்ற வகையி





இந்தக் கடனைத் திருப்பிப் பெறவேண்டும். பிரான்ஸ் நாட்டில் ஏறக்
தறைய 75 ஆண்டுகளில் திருப்பித்தரலாம் என்ற நிலைமை இருக்கிறது.
ஜெர்மன் நாட்டில் 50 ஆண்டுத் தவணையில் கடன் கிடைக்கிறது விவசாயி
களுக்கு. இத்தாலிய நாட்டில் 30 ஆண்டுத் தவணையில் கடன் கொடுக்
கிறார்கள் விவசாயிகளுக்கு. நம் நாட்டில் வீடுகள் கட்டிக்கொள்வதற்குக்
டன் கொடுத்தால் 20 ஆண்டுத் தவணை அனுமதிக்கப்படுகிறது. ஆகவே,
பாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத வகையில் விவசாயிகள்
டனிலேயே பிறந்து, கடனிலேயே வளர்ந்து, கடனிலேயே மூழ்கிச் சாக
வேண்டிய நிலைமை இருக்கிறது.

2,000 ஆண்டுக்கு முன்னால் தோன்றியது உழவுத் தொழில் என்று
அதைத் தூக்கி வைத்து உச்சி மேலே வைத்திருக்கிறார் வள்ளுவர்
பெருமான். மற்றத் தொழில்களைவிட விவசாயத் தொழில் ஏழை, எளிய
மக்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில். இதைக் கொஞ்சம் பிராக்டிகலாகப்
பார்க்கவேண்டும். மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிற பெண்
தொழிலாளிகளை எடுத்துக்கொண்டால் பிரசவ காலத்தில் அவர்களுக்கு
இரண்டு மாதம் லீவு கிடைக்கிறது. ஆசிரியர் பணி புரிபவராக இருந்தாலும்
அல்லது வேறு தொழில்களில் பணிபுரியக்கூடியவராக இருந்தாலும்
அவர்களுக்கு இம்மாதிரி லீவ் இருக்கிறது. ஆனால் விவசாயத்தில் ஈடு
பட்டிருக்கக்கூடிய பெண் தொழிலாளிகளுக்கு அப்படி இல்லை. கண்
பார்த்துச் செய்கின்ற தொழில் அல்லது கால் எடுத்து வைத்துச் செய்கின்ற
தொழில் என்பது இல்லை. கண் மண் தாங்கிக்கொள்ளும் என்று
பின்னாலே பெயர்த்துவைக்கின்ற தொழில். அந்தத் தொழிலில் ஈடு
பட்டிருக்கக்கூடிய பெண்களுக்கு பிரசவகாலமாக இருந்தாலும்கூட,
வயலில் பிரசவமாகுமோ அல்லது ரோடில் பிரசவமாகுமோ தெரியாது.
எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுக்குப் பிரசவகால விடுமுறையோ
அல்லது வேறு விடுமுறையோ போன்ற வசதி வாய்ப்பு இல்லை. போடுகின்ற
திட்டங்கள் அனைத்தையும் விவசாயத் தொழிலாளர்களை வைத்துக்
கொண்டுதான் நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட விவசாயத்
தொழிலாளர்களுக்குப் பல்வேறு வகைகளிலும் நமது அரசாங்கம் எந்த
விதமான சலுகையும் அளிக்கவில்லை என்பதுதான் என்னுடைய
குற்றச்சாட்டு.

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்று எல்லாம்
தொழுது உண்டு பின்செல் பவர் ”

என்ற குறள் இருக்கிறது.

“ உழுதுண்டு வாழ்வாரே இளைப்பார், மற்று எல்லாம் தொழுது உண்டு
தொந்தி பெருப்பார் ” என்று காலத்திற்கேற்ப குறளை மாற்ற வேண்டும்.
உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி செத்து மடிகிறான்.
அவன் வயலில் செத்தாலும்சரி, பூச்சிகொல்லி மருந்தினால் பாதிக்கப்
பட்டு செத்தாலும்சரி, அவன் எப்படிச் செத்தாலும் செத்து மடிய
வேண்டியதுதான். ஆனால், மரமேறித் தொழிலாளியை எடுத்துக்
கொண்டால், மரத்திலிருந்து வழுக்கி விழுந்துவிட்டால் அவனுக்கு
அரசாங்கம் உதவித் தொகை அளிக்கும். மீனவருக்குக் கடலில் செல்லும்
பொழுது ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அவனுக்கு அரசாங்கம் சில
சலுகைகளைத் தருகிறது. ஆனால், விவசாயி வயலிலே செத்தாலும்சரி,

நடவு நடும்போது செத்தாலும்சரி, அவனுக்கோ, அவனுடைய குடும்பத்துக்கோ எந்த விதமான நஷ்ட ஈடும் இல்லை. ஆகவே, விவசாயத் தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கவேண்டும். விவசாயத் தொழிலைப் பொறுத்தவரையில் அடிப்படையில் மாறுதல் ஏற்படக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே இன்றைக்குப் பல கல்லூரிகள் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. ஆகவே, இந்தக் கல்லூரிகள் தவிர ஒரு விவசாயக் கல்லூரி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தவேண்டும். அதில் படித்துப்பட்டம் பெற்று வந்தவர்கள் அந்தந்த மாவட்டத்தில் விவசாயத்தில் அதிக பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். அதன்மூலம் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். குறிப்பாகத் தஞ்சை மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாவட்டம். ஆகவே, அந்த மாவட்டத்தில் அவசியமாக ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகள் இன்றைக்கு வாங்கி இருக்கிற கடன்களையெல்லாம் பரிசீலனை பண்ணி, அந்த கடன்களெல்லாம் நியாயமான கடனா, திரும்பக் கொடுக்கமுடியாத கடனா என்று பார்த்து, அந்தமாதிரிக் கடன்களையெல்லாம் ரத்துசெய்யவேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது 1381 பசலிக்கு நாம் குத்தகை பாக்கியைக் கொடுத்துவிட்டால் அதற்கு முன்னால் உள்ள பாக்கியெல்லாம் ரத்து செய்துவிடுவார்கள் என்று இருக்கிறது. ஆனால் இப்படிக் கொடுக்கிற பாக்கி எல்லாம் முந்தைய பாக்கிக்குத்தான் வரவு வைக்கிறார்கள். அதனால் இப்போதுள்ள பாக்கியைக் கட்டவில்லை என்று பொருளாகிறது. அதனால் ஏழை விவசாயிகள் நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு கட்டிய குத்தகைத் தொகையை இந்த ஆண்டு பாக்கிக்குக் கட்டியதாகப் பொருள் கொள்ளவேண்டும். அவர்களை நிலத்தை விட்டுப் போகச் சொல்லக்கூடாது.

குறிப்பாக, இன்றைக்கு டிராக்டர் இருக்கிறது. முந்தைய ஆண்டு அந்த டிராக்டரைக் கொண்டு 10 ரூபாய்க்கு அடித்தார்கள். ஆனால் இன்றைக்கு 15 ரூபாய் கேட்கிறார்கள். ஆகவே, முன்புமாதிரி 10 ரூபாய்க்கே அடிக்க அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

உழவுத் தொழில் இன்றைக்கு வளர்ச்சி அடைந்து உற்பத்தி பெருகி இருக்கிறது. ஆனால் அதனுடைய பலன் யாருக்குக் கிடைத்திருக்கிறது ? இன்றைக்கு மார்க்கெட்டில் அரிசி மலை போல குவிந்திருக்கிறது. ஆனால் யாரால் வாங்க முடிகிறது ? ஏழை விவசாயி இப்போது சோற்றுக்குக் காக்காய் போல் பறக்க வேண்டிய நிலைமையிலிருக்கிறான்.

கணபதியா பிள்ளை கமிஷனில் ஒரு ஏழை விவசாயிக்கு ஒரு ஆண்டுக்கு 300 ரூபாய்தான் ஊதியம் கிடைக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 500 ரூபாய், 1,000 ரூபாய், 2,000 ரூபாய் என்றும், வடபாதி மங்கலம் மேனேஜ்மெண்ட் டிரஸ்ட்டியில் இருக்கிறவர்களுக்கு



5,000 ரூபாய் என்றும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஏழை விவசாயிக்கு 300 ரூபாய்தான். ஆகவே இப்படிப்பட்ட நிலைமை மாற்றப்பட வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான இந்த மானிய கோரிக்கையில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்கிறேன்.

பட்ஜெட் தொடரின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப் பகுதிகளிலுள்ள சாலைகளையெல்லாம் இரண்டு ஆயிரம் மைல் அளவிற்குச் செப்பனிட இந்த ஆண்டு திட்டமிட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்மறை போற்றும் வள்ளுவர் சொல்லியிருக்கிறார் :—

“ ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு ”

என்று. ஒரு விவசாயி தன்னுடைய வீட்டிலிருந்து எரு கொண்டு சென்று நிலத்தில் போட்டான் என்றால், அந்த நிலத்திற்கு நீர் இல்லை என்று சொன்னாலும் அந்த எரு நிலத்தைக் காக்கும் என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர். ஆகவே, இப்படி கிராமங்களில் நிலத்திற்கு எரு ஏற்றிச் செல்கிற அளவிற்கு நல்ல பாதையை இரண்டு ஆயிரம் மைல் தூரத்திற்குச் செப்பனிடுவது விவசாயிகளுக்கு ரொம்ப நன்மையாக இருக்கும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புவது, சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு சாகுபடி நிறைய நடக்கிறது. ஆகவே, அங்கே ஒரு குளுக்கோஸ் தயாரிக்கிற பாக்டரி ஒன்று தொடங்கினால் அங்கேயுள்ள அந்த விவசாயிகளுக்கு நன்மையாக் இருக்கும். அந்த மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு நிறைய விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மூட்டைக்கு ஒரு சமயம் 40 ரூபாய் கிடைக்கிறது. சில சமயம் 100 ரூபாய் வரைகூட கிடைக்கிறது. இப்படி நிரந்தரமற்ற நிலைமை. ஆகவே, அவர்களால் நிரந்தரமாக குச்சிக் கிழங்கு பயிரிடமுடியவில்லை. ஆகவே, குளுக்கோஸ் பாக்டரி ஒன்றை ஆரம்பித்து அவர்களுக்கு நிரந்தர குச்சிக் கிழங்கு விவசாயத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் திராட்சை சாகுபடி செய்கிறார்கள். அதற்குக் கூட நிரந்தர மார்க்கெட் விலை இல்லை. ஒரு சமயம் ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. மற்றொரு சமயம் அது 50 காசுக்கு விற்கிறது. ஆகவே அங்கேயுள்ள விவசாயிகள் அதைக்கூட நிரந்தரமாகச் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சேலம்-மதுரை மாவட்டங்களில் “ ஒயின் ” தொழிற்சாலை ஆரம்பித்து அந்த விவசாயிகளுக்குத் திராட்சை சாகுபடி நிரந்தரமாகச் செய்ய ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாவட்டத்தில் ரோஜாப் பூ, மல்லிகைப் பூ பயிரிடப் படுகிறது. அந்தத் தொழிலில் கூட அதேபோல் சில நேரங்களில் நிறைய விலை கிடைக்கிறது. சில நேரங்களில் கூலியாட்களுக்குக் கூலி கொடுக்கக் முடியாத அளவிற்குத்தான் வருமானம் வருகிறது. ஆகவே, வாசனைத் திரவியம், தைலம் அந்தப் பூக்களிலிருந்து இறக்கக் கூடிய ஒரு தொழிற் சாலையைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் ஒரு பகுதியில் மழை யில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பாகச் சொல்லப்போனால், சேலத்திலிருந்து ஆத்தூர் செல்கிற வழியில் 30 மைல் தூரத்திற்கு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் தென்னை, பாக்கு போன்ற மரங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து அழிந்துவிட்டன. ஒரு தென்னை மரம் பயன் தரவேண்டுமென்றால் குறைந்தது 10 ஆண்டுகள் ஆகும். ஆகவே, அந்த இடத்திற்கு நம்முடைய சர்க்காரிலிருந்து ஒரு தனி அதிகாரியை அனுப்பி எந்தெந்த ஊரில் எந்தெந்த விவசாயிக்கு எத்தனை எத்தனை மரங்கள் அழிந்து போயிருக்கின்றன என்று கணக்கு எடுத்து, அந்த விவசாயி மீண்டும் அந்தமாதிரி உற்பத்தி செய்ய உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மனுக் கொடுத்தேன். அதைப் பரிசீலனை செய்வதாக செயலாளர் அவர்கள்கூட எனக்கு எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நான் முன்பு சொன்னது மாதிரி சேலம் மாவட்டம் இந்த அளவுக்குப் பாதிக்கப்பட்ட . . . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு தகவல் குறிப்பிட விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு சிறப்பாக விளைகிறது என்று சொன்னார். ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சேலம் மாவட்டம் தென்னை பயிர் செய்யக் கூடிய அளவுக்கு அவ்வளவு சிறப்பாக இல்லை என்று விவசாய நிபுணர்கள் கூறுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 200 தென்னைகள் வளருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத் மாவட்டத்தில் கடற்கரை ஓரம் உள்ள இடங்களில் 80 முதல் 90 தென்னைகள்வரை வளர்கிறது. ஆகவே, தஞ்சாவூரிலும், கன்னியா குமரியிலும் ஒரு ஏக்கருக்கு 3,000 ரூபாய் அளவிற்குக் கடன் உதவி செய்கிறோம். ஆனால் சேலம் மாவட்டத்தில் அந்த, மாதிரி விளைச்சல் இல்லை என்பதால்தான் அந்த அளவுக்கு உதவிசெய்யமுடியவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** இப்போது இந்தத் திட்டம் இல்லா விட்டாலும்கூட, நீங்கள் குறிப்பாக நமது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், பொதுவாக நஞ்சை நிலத்தைவிட புஞ்சை நிலத்தில்தான் தென்னை மரம் நன்றாகக் காய்க்கும் என்பது நான் பார்த்த உண்மை. இருந்தாலும்கூட அதை மறு பரிசீலனை செய்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இப்போது குறிப்பிட விரும்புவது, சேலம் மாவட்டத்தின் கீழ்ப் பகுதியில் லட்சக்கணக்கான பாக்கு மரங்கள், தென்னை மரங்கள் தண்ணீர் இல்லாமல் செத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அங்கே உள்ள விவசாயிகள் " அடிக்கிணறு " வெட்ட, 10,20 அடி கீழே வெட்ட



வேண்டும். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். அங்கே ஒரு அதிகாரியை அனுப்பி, எந்தெந்த விவசாயிக்கு எத்தனை பாக்கு மரங்கள் எத்தனை தென்னை மரங்கள் செத்துப் போயிருக்கின்றன என்று பார்த்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த அடிக் கிணறு வெட்ட கூட்டுறவு வங்கியிலிருந்தும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலிருந்தும், சர்க்காரிலிருந்தும் கடன் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, அடிக் கிணறு வெட்ட உதவி செய்யவேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த நல்ல வாய்ப்பைத் தந்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. சி. க. வடிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, தமிழக அரசு பொறுப்பேற்றப் பிறகு இந்த வேளாண்மைத் துறை எந்த அளவுக்கு முன்னேடியாக இருக்கிறது என்று அமைச்சரவர்களுடைய அறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டி ருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. பொதுவாக தமிழகத்திலே உணவு உற்பத்தி செய்வதில் இந்தியாவிலே அதிகமான அளவுக்கு தமிழ் நாடுதான் இருக்கிறது. அப்படிப்பட்ட தமிழக அரசுக்கு மத்திய அரசு இன்னும் அதிகமான அளவிலே மானியம் ஒதுக்கித் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இன்றைக்கு இருக்கிற விவசாயிகள் எந்த லாபத்தையும் அடையாமல் இருக்கிறார்கள். எந்த அரசு வந்தாலும் அவர்களுக்கு மானியம், உதவித் தொகை இதுவரை சரியாகக் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாக மத்திய அரசு அதிகத் தொகை ஒதுக்குவதற்குப் போராட வேண்டுமென்று இந்த மன்றத்தின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, தஞ்சாவூரிலே மழை பெய்தால் மேட்டூர் அணை தண்ணீர் வராமல் அடைத்துவிடுகிறார்கள். அப்போது திருச்சி மாவட்டத்தில் உள்ள நஞ்சை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அதனால் விவசாயிகள் பெரிதும் துன்பப்படுகிறார்கள். அதைப்பற்றிப் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களிடம் கூறியிருக்கிறோம் ; அவர்கள் ஆவன செய்வதாகச் சொல்லியிருக் கிறார்கள். திருச்சி மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், ஊராட்சி ஒன்றியங்களில் சில சாலைகள் வசதியில்லாமல் இருக்கின்றன. அந்த ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலைமை சரியாக இல்லாததால், சாலைகள் பராமரிக்கப்படவில்லை. அதனால் விவசாயிகள் உரங்கள், மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது ; விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இப்போது காவிரித் திட்டம் என்று இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப் படையிலே அப்பேர்ப்பட்ட ரோடுகளைப் பராமரிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங் ந்து, ரோடுகளைச் செப்பனிடவேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். காவேரி டெல்டா திட்டம் என்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் சீனிவாச நல்லூர் T. O. தொட்டியம் சாலைகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, கொல்லிமலைத்திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் துரித மாக நடைபெற்று வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய உடன் மேட்டுப்பாளையம் முதல் தாத்தையங்கார்ப்பேட்டை வரையில் ஒரு சிறு கால்வாய் வெட்டினால் அங்குள்ள கிணறுகளுக்கு நல்ல ஊற்றுக்கிடைக்க வகை ஏற்படும். அதனால் விவசாயிகளுக்குப் பெரும்பயன் கிட்டும் எனவே, அரசாங்கம் அதற்கு ஆவனச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கூட அங்கே குடிதண்ணீருக்கு கஷ்டமாக இருக்கிறது. வறட்சிப் பகுதியில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் கஷ்டமும் இந்த வாய்க்கால் வெட்டுவதினால் தீரும் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் இப்போது ஐ.எப்.எஸ். லோன் வாங்கி யிருக்கிறார்கள். வறட்சியின் காரணமாக கடனை தற்போது கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதி வறட்சிப் பகுதி என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கடன்களை தள்ளிப்போட வேண்டும் அல்லது மானியமாகவோ வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், எங்கள் பகுதியிலே வாழை ஏராளமாகப் பயிரிடப் படுகின்றன. காட்டுப்புத்தூர், தொட்டியம் பகுதியில் அதிகமான வாழை இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அப்பேர்ப்பட்ட பகுதியில், விவசாய பண்ணை அமைக்க வேண்டும். எனக்கு முன்னால் ஒரு உறுப்பினர் இதுபற்றி பேசினார்கள்—பருவக்காற்று அடித்தால் வாழை மரங்கள் சரிந்து, பல்லாயிரக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்படுகின்றது. அதனால் அந்த விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நஷ்டத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு, வாழைகள் நடப்படுவதற்குமுன்னால் கண்டிப்பாக இன்ஷூரன்ஸ் செய்யவேண்டுமென்று சொல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிலவள வங்கிகள் இருக்கின்றன. அதன் மூலம் இப்போது அடிக்கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுக்கக் கூடாது என்று இப் போது ரிசர்வ் பாங்கு சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அதைப்போன்று பம்புசெட்டுக்கும் கடன் கிடையாது என்று சொல்கிறார்கள். அதனால் கடன் பெறமுடியவில்லை. ஆகவே நம்முடைய அரசாங்கம், மோட்டார்கள் வைப்ப தற்கும், அடிக்கிணறுகள் வெட்டுவதற்கும் கடன் கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை).

அத்தோடு எங்கள் பக்கத்திலே பொதுவாக எல்லாக் கிராமங்களுக்கும் தெருவிளக்கு போட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும் கிணறுகளுக்கு பம்புசெட்டுகள் வைக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு வசதி இல்லை



என்று சொல்கிறார்கள். விவசாயிகள் நல்லமுறையில் வாழவேண்டும்; நல்லமுறையில் உணவு உற்பத்தியைப்பெருக்க வேண்டும் என்று சொன்னால் மின்சார இலாகாவும், பொதுப்பணித் துறையும், வேளாண்மைத்துறையும் ஒன்றுபட்டு செயல்பட்டால்தான் முடியும் என்பதைத் தெரிவித்து, பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கோ. செபமாலை :** தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறையின் இந்த மானியத்தை ஆதரித்து, அதுசம்பந்த மாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய பணியினால் இன்று தமிழகம் விவசாயத்தில் நல்லமுறையில் முன்னேறி இருக்கிறது. அதற்காக என் பாராட்டுதல்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று தமிழகத்தில் களி மண், செம் மண், உவர் மண் என்று மண் வகைகளை நான்காகப் பிரித்து, 'விவசாயம் அதற்கு ஏற்ற முறையில் நடைபெற்று வருகிறது. மண் வகைகளைத் தெரிந்து பயிரிடுவதனால், உழவர் பெருங்குடி மக்கள் நல்ல ஊக்கம்பெற்று, பயனடைந்து வருகிறார்கள்.

பொதுவாக விவசாயிகள் மண் வகைகளைத் தெரிந்து, அதற்கு ஏற்ற உரங்களைப் போட்டு, தங்கள் கருவிகளைக் கொண்டு பயிரிட்டு வருகிறார்கள். அப்படிப் பயிரிட்டு வருகின்ற வேலையில் பருவமழை இல்லாமல், பயிரிட முடியாமல் போய்விடுகிறது. அப்போது அங்குள்ள வட்டார வளர்ச்சி அதிகாரி களும், அங்குள்ள உழவர் பெருங்குடி மக்களும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, அதன் அடிப்படையில் பயன்பட கருத்துதரங்குகள் நடத்தினால் இன்னும் வேளாண்மை சிறந்து விளங்கும் என்று கருது கிறேன். பல வட்டாரங்களில் சில சமயங்களில் கருவிகள், கொடுக்கப் படாமல் போய்விடுகின்றன. மேலும் பொறுக்கு விதைகளும் உரங்களும் தக்க நேரத்தில் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அப்போது விவசாயிகளுக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அப்படி இல்லாமல் தக்க நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற விதைகள், மற்ற சாதனங்கள் எல்லாம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயம் பெருகவேண்டுமென்றால், அங்கே நீர்வளம் பெருக வேண்டும். பெருகிய நீர்வளத்தைப் பெருமளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானால் பம்புசெட்டுகளுக்கு போதுமான அளவுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் இன்னும் விவசாயம் வேகமாக முன்னேறும். உற்பத்தி பெருக்கும் அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு அமைச்ச ரவர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் விரைவாக மின்சாரம் வழங்க திட்ட மிட்டு தீவிரமாகச் செயலாற்றிவருகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்.

எங்கள் தொகுதியாகிய மங்களூர் பகுதியில் இப்போது இருக்கின்ற கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்தாகிவிட்டது. இன்னும் என்ன செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டார்கள். அப்படி இருக்கும்

[திரு. கோ. செபமாலை] [1972 மார்ச் 25

போது, மின்சாரம் மட்டும் அளித்துவிட்டால் போதாது; விளக்குகள் போட்டால் மட்டும் போதாது. அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேளாண்மைத் தொழிலுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும். ஆகவே மின்சாரத் துறை அமைச்சரவர்கள் எங்கள் தொகுதி விவசாயிகளுக்கு பம்புசெட்டுகள் வைப்பதற்கும் உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்க ஆவனச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கும், மற்ற உற்பத்திப் பொருள்கள் பெருகுவதற்கும் அங்குள்ள உழவர் பெருங்குடி மக்கள், விவசாயிகள், நல்ல நடுத்தர வாலிபர்கள் ஆகியோரைக் கூட்டி, மூன்று மாதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறையாகிலும் கருத்தரங்குகள் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் மேலும் நல்ல முறையில் விவசாயம் நடைபெறும்.

முற் பகல் 11-00 சில சமயங்களில் ரசாயன உரங்களும், கலப்பு உரங்களும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்காமல் போகிறது. அப்படியின்றி அவர்களுக்குத் தேவைப்படுகிற காலத்தில் கிடைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னும் விவசாயப்பெருங்குடி மக்களுக்கு வேளாண்மையைப்பற்றி நல்ல முறையில் எடுத்துச் சொல்லகிராம சேவக்குகள் பயன்படுத்தப்படவேண்டும்.

என் தொகுதி பாக்கம்பாடியில் ஒரு அணையைக் கட்டினால் மூன்று லட்சம் ஏக்கராவுக்குமேல் வேளாண்மை செய்வதற்குப் பயன்படும். டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த அணையைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கே. வி. சுப்பையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை நான் வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறை நன்கு முன்னேறியிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது எல்லோருக்கும் பெருமையாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டில் நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால் வேளாண்மைத்துறை படித்த வாலிபர்களையும் ஈர்க்கின்ற ஒரு லாபகரமான துறையாக ஆகவேண்டும். இன்றையதினம் படித்தவர்கள் வேலைக்குப் போகவேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர விவசாயத்திற்கு வருவதில்லை. நிலத்தில் இருந்து நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் வருமானம் வரக்கூடியவர்கள் எல்லாம் கூட இன்றைக்கு தங்கள் பிள்ளைகள் படித்து வேலைக்குப்போக வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். காரணம், இன்றைக்கு இது இலாபகரமாக இல்லை. ஆகவே படித்த வாலிபர்களையும் ஈர்க்கின்ற முறையில் வேளாண்மைத் துறையை லாபகரமான ஒன்றாக ஆக்க வேண்டுமென்பது என் வேண்டுகோளாகும்.



1972 மார்ச் 25] [திரு. கே. வி. சுப்பையா]

விவசாயிகள் அடிக்கடி பலரிடம் சென்று கடன் வாங்க அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியின்றி அவர்களுக்கு ஒரு பாஸ் புக் கொடுத்து அதில் இவ்வளவு தொகை வரையில் கடனாக வாங்கிக்கொள்ளலாம் என்று குறித்துவிட்டால் வேண்டியபோது அதைக்கொண்டுபோய்க் காட்டி கடன் வாங்கிக் கொள்ள வசதியேற்படும்.

அதேபோல கூட்டுறவுக் கடனாக இருந்தாலும், அரசாங்கக் கடனாக இருந்தாலும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆண்டு கடன் வசூலைத் தள்ளி வைக்கிறார்கள். ஆனால் அடுத்த ஆண்டே இந்த ஆண்டுத்தொகையையும் சேர்த்துக் கட்ட வேண்டும் என்கிறார்கள். அப்படியின்றி தள்ளி வைக்கப்பட்ட ஆண்டின் கடன் தவணையை பாக்கித் தவணைகளோடு சேர்த்துப் பரவலாக்கி வசூலிக்கவேண்டும். அல்லது கடைசி தவணை முடிந்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டில் வசூல் செய்வது என்கிற ஏற்பாட்டினையாவது செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடுகள் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். கரும்புப் பயிர் வைக்கிற இடங்களில் செஸ் வசூல் செய்வதைக்கொண்டு ரோடுகள் போடப்படுகின்றன. அதுபோல நிலக்கடலை பயிரிடப்படுகிற இடங்களிலும் ரோடுகள் போட்டுத்தர ஏற்பாடு செய்ய வேண்டும். ஊராட்சி மன்றங்களினால் அவற்றைச் செய்துகொடுக்க முடியவில்லை.

அதுபோல சில பாலங்கள் கட்டவேண்டுமென்றால் ஹைவேசிடம் கேட்டால் அவர்கள் மறுக்கிறார்கள். பப்ளிக் வொர்க்சிடம் கேட்டால் அவர்கள் மறுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிடம் வருமானம் இல்லை. பஸ்கள் விடப்பட்டால் நாங்கள் பாலங்களைக் கட்டுகிறோம் என்று ஹைவேஸ் சொல்கிறார்கள். பாலங்கள் கட்டப்பட்டு, ரோடுகள் செப்பனிடப் பட்டால்தான் நாங்கள் பஸ்கள் விடுவோம் என்கிறார்கள் பஸ்காரர்கள். இவற்றைக் கவனித்து அரசாங்கமே அந்தப் பாலங்களைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

குறிப்பாக, என் தொகுதியில் ரெகுநாதபுரம், சூரன்விடுதி, முதலிப்பட்டு, வல்லத்திராக்கோட்டை ஆகிய இடங்களில் பாலங்கள் இல்லை. சென்ற ஆண்டு வெள்ளத்தில் ரெகுநாதபுரத்தில் ஒரு பஸ்ஸையே அடித்துக் கொண்டு போயிற்று. சூரன்விடுதியில் ஒரு பெண் அடித்துச் செல்லப் பட்டாள். இந்த இடங்களில் பாலங்களைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் பகுதியில் நூற்றுக்கு நூறுபேர் விவசாயிகள். வேறு எந்தவிதமான தொழிலும் கிடையாது. புதுக்கோட்டையில் ஒரு பகுதி, தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதி மக்காச்சோளம் விளைகிற இடம். மக்காச்சோளத்திற்கு மார்க்கெட் இல்லாத காரணத்தினால் அவர்கள் முன்னுக்கு வர முடியாத நிலை இருக்கிறது. மக்காச்சோளத்தைக் கொண்டு ஒரு தொழிற்சாலை அங்கே ஆரம்பித்துத் தரவேண்டும். அதனால் மக்காச் சோளத்திற்கு மார்க்கெட் ஏற்படும்.

அதுபோல புதுக்கோட்டைப் பகுதியில் புளிச்சக்கீரை நன்றாகப் பயிராகிறது. ஆகவே அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடுமியாமலையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

புதுக்கோட்டைப் பகுதியில் காடுகள் அதிகம். அந்தக் காட்டு நிலங்களை அங்கிருக்கிற ஏழை விவசாய மக்களுக்கு அடமானம் செய்துதரவேண்டும். புறம்போக்கு நிலங்கள் எல்லாம் அடமானம் செய்துகொடுக்கப்பட்டுவிடுவதனால் மாடுகள் மேய்க்க இடமில்லை. மனிதனைப்பற்றிச் சிந்திக்கிறோமே தவிர கால்நடைகளைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது.

கால்நடைத் தீவனமாக சீமைப்புல் விளைவிக்கிறவர்களுக்கு சப்சிடி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக் கழகத்தின் சார்பில் டிராக்டர்கள் வாடகைக்கு விடுகிறார்கள். விவசாயத்துறையின் மூலமும் வாடகைக்கு விடுகிறார்கள். வாடகை அதிகமாக இருப்பதால் சிறிய விவசாயிகளால் அதைப் பயன்படுத்த முடியவில்லை. ஆகவே அரசாங்கத்தின் மூலம் சப்சிடி கொடுத்து விவசாயிகளுக்கு உதவவேண்டும். முன்பு கொடுத்து வந்தது போலவே பூச்சி மருந்துகளுக்கும் சப்சிடி தொடர்ந்து கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் டிராக்டர்கள் ரிப்பேர் செய்வதற்கான தொழிற்சாலை கிடையாது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் அளித்தார்கள். வேளாண்மைத் தொழில் கழகத்தின் சார்பில் அப்படிப்பட்ட டிராக்டர்கள் ரிப்பேர் செய்வதற்கான தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் பல இடங்களிலும் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். 15 இடங்களில் சப் சென்டர்கள் திறப்பதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி பலவகையிலும் விவசாயிகளுடைய மேம்பாட்டுக்காகப் பாடுபடவேண்டும். அவர்களுக்கு எல்லாத்துறையிலும் வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டும்.

பூச்சி மருந்து நல்லமுறையில் தயார் செய்கிறார்கள். அதைப்போல Weedicide தயார் பண்ணுவதற்கு திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நல்லமுறையில் சப்ஸிடி கொடுத்து ஆக்கத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக காகிதத் தொழிற்சாலைத் திட்டம் போட்டு மத்திய அரசாங்கத்திலிருந்து உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் காகிதத் தொழிற்சாலையை எங்கள் பகுதியில் அமைத்தால் அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

அடுத்தபடியாக, பூச்சிகொல்லி மருந்துகள் போன்றவற்றை அரசாங்கத்தின் மூலமாகக் கொடுத்தால் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு மிக்க பலன் தரக்கூடும். அதனால் விவசாயிகள் அதிக ஊக்கத்தோடு பணியாற்ற முன்வருவார்கள்.



அடுத்தபடியாக மாட்டுத்தீவனத்திற்கும் சப்சிடி கொடுக்க வேண்டும். அதேபோல டிராக்டர்கள் வாங்குவதற்கும் சப்சிடி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயத் துறை மானியத்தின்கீழ் 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போன வருஷத்தை விட ஐந்து லட்சம்தான் அதிகம். அதனால் கிடைக்கும் தானியம் போன்றவற்றையெல்லாம் சேர்த்து 73 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது என்று சொன்னார்கள். வரப்போகிற ஆண்டில் 75 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த அதிகப்படியான உற்பத்தி எப்படி வந்தது என்று பார்த்தால், நவீன ரக உரங்களை உபயோகப்படுத்தி, பாசன வசதிகளை அதிகப்படுத்தி, ஒருபோக நிலத்தை இருபோகமாக்கி, இருபோக நிலத்தை மூன்று போகமாக்கியதன் காரணத்தாலும், பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக கிணறுகளை வெட்டி பாசனம் செய்து கொடுத்த காரணத்தாலும் தான் என்பது விளங்கும். பாசனம் பெறக்கூடிய பகுதி 15 லட்சம் ஏக்கர் அளவுதான். மற்ற பகுதிகளிலே வசதி ஒன்றும் இல்லை.

இப்படி பாசன வசதி செய்துகொடுத்த பகுதிகளில் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்குச் சரியான விலை கிடைக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உரத்தினுடைய விலை உலகத்திலே நம் நாட்டில்தான் அதிகம். மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலும் வரி போட்டிருக்கிறார்கள். பூச்சிகொல்லி மருந்தும் விலை அதிகம். முன்பு இவற்றிற்கெல்லாம் கன்சஷன் கொடுத்துவந்தார்கள். இப்போது மூன்றில் ஒரு பங்குதான் கன்சஷன் கொடுக்கிறார்கள். விவசாயிகள் இவற்றையெல்லாம் வாங்கி உபயோகிக்கக்கூடிய முறையில் விலைவாசிகள் இருக்கின்றனவா என்றால் இல்லை.

பொதுவாகச் சொல்லப்போனால் விவசாயிகளுக்கு விவசாயத்தில் நஷ்டம் ஏற்படுகிறதே தவிர, லாபம் இல்லை. கொள்முதல் செய்யும்போது, 60 கிலோ என்று எடுத்துக்கொண்டு, 53 கிலோ என்றுதான் பில் போடுகிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு இன்னும் மூட்டை ஒன்றுக்கு 10 ரூபாய் கூட்டித் தர வேண்டும். கொள்முதல் வினியோகத்தை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். இதைத் தனிப்பட்டவர்களிடம் விடக்கூடாது.

15 லட்சம் ஏக்கர்தான் பாசன வசதி பெறுகிறது. அதனால் எந்த அளவிற்கு மற்ற இடங்களிலும் பாசன வசதியை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரை என்னென்ன முறைகளின் மூலம் பூமிக்கு மேலே கொண்டுவர முடியுமோ அவைகளையெல்லாம் செய்து தர வேண்டும். அதற்காக ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் கொடுக்க மூன்று வருஷம் ஆகும் என்கிறார்கள். இதை அவசரமாகச் செய்ய வேண்டும். எப்படி பாசன வசதிக்காக "ரேட்" போட்டு வசூலிக்கிறோமோ அதேபோல சர்க்காரே இந்தச் செலவை ஏற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். "கம்யூனிடி வெல்" போன்ற கிணறுகளை வெட்டி சர்க்கார் செலவழித்து தக்க வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். கம்ப்ரஸர் ரிஞ்ச் போன்ற கருவிகளைக் கொண்டு ஆழமான

[திரு. என். கே. பழனிசாமி]

குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டும். திருவொற்றியூரில் "அக்ரிகல்சரல் ஒர்க்ஷாப்" ஒன்று இருக்கிறது. அதனிடம் அந்தக் கருவிகளைத் தயார் செய்ய ஆர்டர் கொடுத்து இரண்டு வருஷங்களாகியும் இதுவரையும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. வெளி நாடுகளிலிருந்து வரவழைத்தால் அதிகமான செலவாகும் என்ற காரணத்தால் இங்கேயே தயாரிக்க முடிவு செய்தோம். இரண்டு ஆண்டுகளாகியும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அடுத்தப்படியாக, கரும்பு உற்பத்தி நமது மாநிலத்தில் ஒரு லட்சம் ஏக்கரில் இருக்கிறது. நமது மாநிலத்தில் கரும்பு மிகவும் குறைந்த விலைதான் கொடுக்கப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் டன் ஒன்றுக்கு 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது; உத்திரப் பிரதேசத்தில் 90 ரூபாய் வரையில் கொடுக்கப்படுகிறது; ஆந்திர மாநிலத்தில் 90 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. ஆனால் நமது மாநிலத்தில் 75 ரூபாய் என்றுதான் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? எந்த அடிப்படையில் இதைச் செய்தார்கள் என்று தெரியவில்லை. மற்ற இடங்களில் அதிகமாக இருக்கும்போது இங்கே மட்டும் ஏன் குறைந்த விலை? இதற்காக என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

இன்னும் சொல்லப்போனால் உண்மையில் 73 ரூபாய், 74 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. சமீபத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 80 ரூபாய் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் மொத்தம் 16 சர்க்கரை மில்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்பது கூட்டுறவுத் துறையிலும், மற்ற ஏழு தனிப்பட்டவர்களிடத்திலும் இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் நடத்தும் சர்க்கரை மில்லில் விவசாயிகளுக்குச் சில கடன்களைக் கொடுத்து, விவசாயிகளின் சங்கங்களை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு சில நன்மைகள் செய்து கொடுக்கிறார்கள். இதன் காரணமாக ஒரு லட்சம் ஏக்கராவுக்கு அவுட் டர்ன் 98 பர்செண்ட் வருகிறது. சர்க்கார் மில்களில் 75, 80 பர்சண்ட் என்று தான் வருகிறது. மொத்தம் 200 மூட்டை சர்க்கரை உற்பத்தியாகிறது என்றால், அதில் 50 மூட்டைகள் பிளாக்கில் போய்விடுகின்றன. அப்படிச் செய்வதால்தான் பிளாக் மார்க்கெட் ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அகில இந்திய ரீதியில் சர்க்கரை உற்பத்தியின் அளவு 85 சத வீதம் என்று இருந்தாலும் கூட நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் 80 சத வீதம் என்று தான் இருக்கிறது. இது யாருக்கு சௌகர்யமாக இருக்கிறதென்றால் தனிப்பட்ட முதலாளிகளுக்குத் தான் ஆதரவாக இருக்கிறது; விவசாயிகளுக்கு அல்ல.

அடுத்தபடியாக, பருத்தி எப்போதும் பற்றாக்குறை தான். அதிகப்படியான நூல் மில்கள் இருக்கின்றன. நாம் பல மாநிலங்களிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. பருத்தி அமெரிக்காவில் அதிகமாக விளைகிறது. இந்தியாவிலே பருத்தி விளையும் பிரதேசம் எல்லாம் வறண்ட பகுதியாக, பாசனம் இல்லாத பகுதியாகத் தான் இருக்கிறது. நாம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் செலவு செய்து வருகிறோம், அதை விவசாயிகளுக்குக் கொடுத்தால், தண்ணீர் வசதியை



[திரு. என். கே. பழனிசாமி]

அதிகப்படுத்தி அதிகமான உற்பத்தியைப் பெருக்குவார்கள். பாக்கேஜ் ஸ்கீம், மருந்து அடிப்பது போன்றவைகளுக்குச் செலவிடுவது போதாது. பருத்தி விளையும் பிரதேசம் பூராவும் மானம் பார்த்த பூமியாக இருக்கிறது. சர்க்கார் அதிகப்படியான அளவில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கவேண்டும். கடன் வசூலிப்பதை 10 தடவை என்றிருப்பதை 20 தடவை என்று மாற்றிக்கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, 5 ஆயிரம் ஏக்கர் வரையில் ரிசர்வ் பாரெஸ்ட் என்று இருக்கிறது. அதில் 638 ஏக்கர்களில் மருந்து வகைகள், செண்ட் வகையராக்கள் பயிரிடுகிறார்கள். மருந்து வகைகள், செண்ட் வகையராக்கள் போன்றவற்றில் போன வருஷம் 5 லட்சம் வருமானம் வந்திருக்கிறது. இந்த வருஷம் 10 லட்ச ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. அதாவது 5 லட்சம் ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. ரிசர்வ் பாரெஸ்டில் சின்கோனா போன்ற மருந்துச் செடிகளை அதிகமாக உற்பத்தி செய்ததன் காரணமாகத் தான் இந்த அளவு கிடைத்திருக்கிறது. மேலும் வெளி நாடுகளிலிருந்து செண்ட் வகையராக்கள் இறக்குமதி செய்வதையும் நாம் தடுத்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனிலே பணியாற்றுகின்ற கிராமசேவக்களை எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களாகப் போட்டிருக்கிறார்கள். மேலே என்ன நடக்கிறது என்று அவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. ஆகவே, அங்கே இருக்கிற கிராமசேவக்கள் மேஸ்திரிகளைக் கேட்டுத் தான் தெரிந்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்காக தாலூகா மட்டத்தில் அவர்களுக்கு ஒரு "ரெஃப்ரஷர் கோர்ஸ்" வைத்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே உற்பத்தியாகிற மஞ்சள் வெளிநாடுகளுக்கும் செல்கிறது. இதற்கு என்று ஒரு ரிசர்ச் கிடையாது. எனவே மஞ்சளுக்கும் ஒரு ரிசர்ச் செண்டரை அமைத்து எப்படி அபிவிருத்தி செய்வது? என்ன என்ன நோய் வருகிறது அதை எப்படிப் போக்குவது என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவர் அவர்களே, 1972–73ஆம் ஆண்டுக்கான வேளாண்மை மானியக் கோரிக்கையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் வைத்திருக்கிறார்கள். அதனை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்ற வள்ளுவர் "அதனால் உழந்தும் உழவே தலை" என்று கூறியிருக்கிறார். அந்த வள்ளுவப் பெருந்தகையின் கருத்திற்கேற்ப பேரறிஞர் அண்ணா அவர்கள் நல்ல பல திட்டங்களை உருவாக்கினார்கள். அவர் வழிவந்த டாக்டர் கலைஞர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் காட்டி, மேலும் நல்ல பல திட்டங்களை உருவாக்கிடத் தேவையான நிதியையும் கோரியிருக்கிறார்கள். நிதி தேவை என்று சொல்கிறார்கள் என்றால் இதுவரையில் நிறைவேற்றியிருக்கின்ற நல்ல பல சாதனைகளையும் அவர்கள் இதிலே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கோ. இளங்கோவன்] [1972 மார்ச் 25

கடந்த காலச் சாதனைகள் என்று பார்க்கும்பொழுது தமிழ்நாட்டிலே ஒரு ஹெக்டேருக்கு சுமார் 1972 கிலோகிராம் என்ற அளவுக்கு 1970–71-ஆம் ஆண்டுக்கான அனைத்திந்திய சராசரி விளைவோடு ஒப்பிடுகிற நேரத்தில் நமக்கு உண்மை புலனாகிறது. தமிழகம் உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெற்றிருக்கிறது என்பது மட்டுமல்ல, பிற மாநிலங்களுக்கும் அனுப்புகிற பேற்றையும் பெற்றிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், தரமான விதைகள் தரப்படுகின்றன, உரிய காலத்திலே உரம் வழங்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன்கள் தாராளமாக வழங்கப்படுகின்றன, விவசாயம்பற்றிய அறிவு மக்களுக்குச்சரியாகப் பரப்பப்படுகிறது. ஏழை விவசாயிகளுக்கு ஏர் தேவைப்படுகிறது. ஏர் இருக்கிறது என்றாலும் எருதுகள் வாங்குவதற்கு பணம் இல்லை, அதனை அரசாங்கம் தருகிறது. ஏர் இருந்தால் மட்டும் போதுமா? நீர் தேவைப்படுகிறது. அதனை நம்முடைய பொதுப்பணித் துறை செம்மையாக ஏற்றுச் செய்து தருகிறது.

பொதுவாகத் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது என்றாலும் கூட என்னுடைய தொகுதி காவிரிப் பகுதியைச் சேர்ந்த வெண்ணாற்றுப் படுகையைச் சேர்ந்தது. அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கத்தான் செய்கிறது. திருச்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், கீழ்த்தஞ்சையிலே மழையில்லை என்றால் மேட்டூரில் தண்ணீர் நிறுத்தப்படுகிறது, மேலத் தஞ்சையும் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்கிட அரசு ஆவன செய்யவேண்டும்.

இதிலே என்ன என்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலைப் படிக்கவே நேரம் போதாது. அவற்றையெல்லாம் பாராட்டுகிறேன். மனிதனுக்கு உண்ண உணவு தேவைப்படுகிறது. உடுக்க உடை தேவைப்படுகிறது. எனவே பருத்தி பயிர்செய்யப்படவேண்டும். கோவில்பட்டியிலே ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 8,000 ஏக்கர் நிலத்திற்குப் பயன்படுகிறது என்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து, அண்ணா பண்ணையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பிட்ட ரக விதைகளைக் கொடுப்பதற்காக திருச்சி மாவட்டத்திலே உள்ள குடுமியான் மலையில் உள்ள அண்ணா பண்ணையிலே உள்ள ஆயிரம் ஏக்கர் நிலத்தை, காட்டு நிலத்தைத் திருத்தி இன்று காடு கழனியாக்கப்பட்டிருக்கிறது. அண்ணா பண்ணை இன்றைக்கு ஆதாயத்திலே நடைபெறுகிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போலவே அருகிலே இருக்கிற ஆராய்ச்சி நிலையமும், கலைஞர் ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரில் இருக்கிற அந்த ஆராய்ச்சி நிலையம் எப்படிச் செயல்படும் என்று நான் சொல்லத் தேவையில்லை.



1972 மார்ச் 25] [திரு. கோ. இளங்கோவன்]

கரும்புப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கிறது என்பது மட்டுமல்ல, கரும்பாலைகள் எங்கெங்கெல்லாம் அமைந்து இருக்கின்றனவோ அங்கெல்லாம் நல்ல நல்ல பாதைகள் ஆண்டு தோறும் போடப்படுகின்றன.

அடுத்ததாக பழ வளர்ச்சித் திட்டம் மனிதனுக்குத் தேவையான சத்து வளர்ச்சி உணவு தேவையென்றால் நாம் இனிய பழங்களை ஏராளமாக உற்பத்திசெய்யவேண்டும். அந்த வகையிலேதான் கூனூரிலும், குற்றாலத்திலும், மனத்திற்கினிய மருங்குளத்திலும் பழப்பண்ணைகள் அமைந்துள்ளன. இதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைக் கல்வி. கோவையிலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அது நகரப்புறத்து மக்களுக்கு மட்டும் அல்லாமல் நாட்டுப்புற மக்களுக்கும் பயன் படச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரி தேவையென்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே வாழுகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறார்கள். எனவே, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையமைச்சர் அவர்களும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பள்ளிகள் 14 இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகுதியாக ஆக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் உயர்நிலைப் பள்ளிகளிலாவது வேளாண்மைக் கல்வி புகுத்தப்படவேண்டும். தோட்டக்காரர்கள் பயிற்சிபற்றி பேசப்பட்டது. பெண்களுக்கு தரப்படுகின்ற பயிற்சி வீட்டிலே சொல்லித்தரலாமா, தோட்டத்திலே சொல்லித் தரலாமா அல்லது தனியாகச் சொல்லித்தரலாமா என்றெல்லாம் கேட்டார்கள். உயர்நிலைப்பள்ளிகளிலேயே இந்த வேளாண்மைக் கல்வியைப் புகுத்திவிட்டால் இப்படிப்பட்ட கேள்விகளுக்குகே இடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை விவசாயிகளுக்காக நல்ல பல திட்டங்கள், சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இரண்டு இடங்கள் இருக்கின்றன. கடுவளி, கண்டியூர் என்ற இடங்களிலே விவசாயிகள் நிலத்தை விற்கிறார்கள், வாங்குகிறார்கள். ஆனால் பட்டா பெயரில் சிக்கல்கள் வருகின்றன. ஆண்டவன் பெயரால், ஆண்ட மன்னனின் பெயரால் இருக்கின்ற நிலையில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றையெல்லாம் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்திடவேண்டும்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஒரு வண்ணமிழ் வேந்தனுக்கு ஔவையார் வாழ்த்துக் கூறினாராம். வரப்புயர என்று சொன்னார்கள். வரப்புயர நீர் உயரும், நீர் உயர, நெல் உயரும், நெல் உயர அரசின் கோல் உயரும், கோல் உயர குடி

உயரும் என்று சொன்னார்கள். அந்த வகையிலே நானும் வரப்புயரச் செய்வதற்கு நம்முடைய தமிழக அரசு வழிவகைகள் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. செ. பெருமாள் :** தலைவர் அவர்களே, 1972-73ஆம் ஆண்டின் வேளாண்மை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பாராட்ட வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேளாண்மைத் துறையிலே தமிழ் நாடு பசுமைப் புரட்சி என்ற முறையிலே வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆனால் மத்திய அரசானது மானியம் தரவில்லை. "கோதுமைக்கு மானியம் தருகிற மத்திய அரசு நெல்லுக்கு மானியம் தர மறுப்பது மாற்றாந்தாய் மனப்பான்மையைத் தான் காட்டுகிறது." அது தவிர்க்கப்பட்டு மனிதாபிமானத்தோடு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுத் துறையிலே தமிழ் நாடு தன்னிறைவு பெறும் நிலையை வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது. காரணம், அரசின் புரட்சிகரமான திட்டங்கள். சென்ற பல ஆண்டுகளைவிட அரசு இந்த ஆண்டு பல லட்சம் டன்கள் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறது. மாநில அரசு 22 கோடி ரூபாய் வேளாண்மைக்காக ஒதுக்கியிருக்கிறது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டு அதன் மூலம் நல்ல விதைகளும் நல்ல உரங்களும் கண்டுபிடிக்கப்படுகிற முயற்சி நடைபெற்று வருகிறது. குடியானவர்களுக்கு கல்வி என்ற முறையிலே சுமார் 8 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் தொழில் நுட்பங்கள், விவசாய நுண்ணறிவு இவற்றைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

ற் பொறுக்கு விதைகள் 2,780 டன் தற்சமயம் உற்பத்தியாகி உள்ளது.
ல் அதைப்போல எல்லா விவசாயிகளுக்கும் தரமான விதைகளை
30 அளிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரசாயன உரத்தைக் கிடங்குகளிலே 'அதிகமாக வினியோகம் செய்தாலும் இன்னும் அதிகமான ரசாயன உரங்களை வினியோகிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பயிர்ப் பாதுகாப்பிற்காக விமான மூலம் மருந்து தெளிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் எல்லா நிலங்களையும் அந்தத் திட்டத்தின் கீழ் தீவிரமாக கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக் கருவிகள் வழங்கும் திட்டத்தில் தீவிரம் காட்டவேண்டும். சிறு விவசாயிகள் கூட கடன் வாங்குவதற்கு வகை செய்யப்படவேண்டும்.

சிறு பாசனத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் வேளாண்மைக்கு அதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆற்றுத் தண்ணீர் கிடைக்கும் இடங்களில் கூட கோடைக்காலங்களில் தண்ணீர் அற்று விடுகிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே அந்த இடங்களிலும் கிணற்றுப் பாசனத்தைச் செயல்படுத்த வேண்டும். சில நேரங்களில் சில





கிணறுகள் நீரற்றுப் பாழடைந்து விடுகின்றன. அவைகளை ஆழப்படுத்துவதற்கான திட்டங்களை விரைவுபடுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நாடுகளில் கூட கான்கிரீட் பரப்பில் விவசாயம் செய்யும் முறை இருந்தது. அந்த முறையையும் தமிழக அரசு பொறுப்பேற்று நடைமுறைப் படுத்தி வருகிறது. அந்த முறை தமிழகம் பூராவும் ஆக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களைப் பெருக்க வேண்டும். நகர்ப்புறங்களில் மாடி வீடுகளில் மணல் பரப்புகளில் காய்கறித் தோட்டம் அமைத்து தனியார் நடத்துகிறார்கள். அதற்கு ஊக்கமளித்து அரசாங்கம் மாடிகளில் காய்கறிகளைப் பயிர் செய்ய உதவி செய்தால் காய்கறிப் பிரச்னை தீரும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிக் கூற விரும்புகிறேன். என் தொகுதியாகிய காட்டுமன்னார் கோவிலில் மேற்பகுதியில் சுமார் 1,500 ஏக்கர்களுக்கு மேல் இருக்கிறது. ஜெயங்கொண்டம் பகுதியிலிருந்து தண்ணீர் வந்து பாழ்படுத்துவதால் வெள்ளம் ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. அப்படி வீணாக ஓடும் தண்ணீரை கால்வாய்கள் மூலமாக ஓடச் செய்தால் அந்த இடம் பொன் விளையும் பூமியாக, மேற்குப் பகுதி, அமையும்; இந்த ஆண்டு நாறேகால் ஏரியின் மூலம் வீரநத்தம் ஏரியில் விழும்படி ஒழுங்குபடுத்த வேண்டும்.

குறுகிய தீவிர தென்னை பயிற்சித் திட்டம் விரிவுபடுத்தப்படவேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் பழத் தோட்டத் திட்டம் இருக்கிறது. எனவே, அணைக்கரையிலிருந்து கொள்ளிடம் வரையில் மணற்பாங்கான பரப்பை பயன்படுத்தினால் நல்லது.

சிவபுரியில் உயர்ந்தரக புகையிலை செய்யப்படுகிறது. நடைமுறையிலே விலை பொருளின், உற்பத்தித் திட்டத்தின் கீழ் சிவபுரியையும் பயன்படுத்திக்கொண்டு வந்தால் புகையிலையின் தரம் உயரும். புகையிலை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நடைமுறையிலே ஒவ்வொரு இடத்திலும் உழவர் பயிற்சிக் கல்வித் திட்டத்தை நடத்துகிறார்கள். அந்த நிலையத்தை எனது காட்டு மன்னார்கோயில் ஒன்றியத்தில் டாக்டர் கலைஞர் பெயரால் அமைத்தால் விவசாயிகளுக்கு மிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த அளவில் எனக்குச் சிறிதளவில் வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி சொல்லி அமர்கிறேன்.

**திரு. மு. பழனிசாமி :** தலைவரவர்களே, 1972-73 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன்.

[திரு. மு. பழனிசாமி] [1972 மார்ச் 25

இந்த மாமன்றத்தில் கடந்த ஆண்டு பேசிய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் நவதான்ய உற்பத்தியிலே இந்த நாட்டிலேயே தமிழகம் தான் முதன்மை இடம் வகிக்கிறது என்ற நல்ல செய்தியைக் கூறினார்கள். இந்த ஆண்டு அதற்கடுத்த மாபெரும் செய்தியாக இந்தியாவிலேயே தமிழகம் தான் அதிகமான நெல் உற்பத்தி செய்திருக்கிறது. ஒரு ஏக்கருக்கு விளைவித்திருக்கிறது என்ற நல்ல செய்தியைக் கூறியிருக்கிறார்கள். இந்த நல்ல செய்தியைக் கூறியவர்களுக்கும், அதற்கு ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலை தொடர்ந்து நீடித்து, ஜப்பான் போன்ற நாடுகள் ஒரு ஏக்கரில் எவ்வளவு உற்பத்தியைப் பெறுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து அதைவிட இந்தத் தமிழகம் சிறப்புறும் வண்ணம் அமைச்சரவர்கள் செய்வார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலே விவசாயிகள் தான் அதிகமாக இருக்கிறார்கள், 100-க்கு 80 பேர் விவசாயப் பெருங்குடி மக்களாக இருக்கிறார்கள். ஆனால் விவசாய மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள தொகை போதாது, நமது நாட்டின் விவசாயிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போல் இந்த மானியக் கோரிக்கைக்கு இன்னும் அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்து நமது விவசாயிகளுக்கு இந்த அரசு நன்மைகள் செய்திருக்கிறது. அதிலும் சிலர் தப்ப முன் வருவார்கள். நமது விவசாயப் பெருங்குடி மக்களிடம் கடன் கொடுப்பவர்கள் ஒன்றுக்கு இரண்டாகக் கையெழுத்து வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நன்றாகக் கவனித்து அவற்றையெல்லாம் நிவாரணம் செய்யும் முறையிலே சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த நாட்டிலே ஏராளமாகக் கிணறுகளை வெட்டி நாட்டை வளப்படுத்த முன் வருகிறார்கள். சில நேரங்களில் சில கிணறுகளில், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்று செலவு செய்த கிணறுகள் வறண்டுவிட்டால் விவசாயிகள் அந்த நஷ்டத்தை தாங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். அதற்காக இந்த அரசு வேளாண்மைத் துறையின் மூலம் ஒரு 50 சத விகிதமாவது உதவியைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாட்டிலே எல்லாப் பொருள்களுக்கும் நிர்ணய விலை இருக்கிறது. ஆனால் விவசாயப் பொருள்களுக்கு மட்டும் நிர்ணய விலை இல்லை. சில சமயங்களில் விவசாயப் பொருள்களின் விலையெல்லாம் வீழ்ந்து விவசாயப் பெருங்குடி மக்கள் துன்பப்படுகிறார்கள். ஆகவே, நமது அரசு விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயத்தை ஏற்படுத்தி அவர்களை நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேல்நாடுகளில் உள்ளதைப் போல் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டக்கைக் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.



1972 மார்ச் 25] [திரு. மு. பழனிசாமி]

அடுத்து, மத்திய சர்க்கார் நமது புகையிலைக்கு விளைவுப் பொருள்களுக்கு அதிகச் சுமையை, அதாவது ஒரு கிலோவிற்கு 65 பைசா என்று இந்த ஆண்டு விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, புகையிலையின் விலை குறைந்து விட்டது. புகையிலை வாங்குபவர்கள் இல்லாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். ஆகவே, நமது மாநில அரசு மத்திய அரசை அணுகி, முன்பே அதிகமாக வரி இருக்கிறது. ஆகவே அதை இப்பொழுது குறைக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் புகையிலை விவசாயிகள் பயன் அடைவார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நமது நாட்டிலே செயற்கை மழையைப் பற்றிப் பேசப்பட்டது. அது இப்பொழுது செயலில் இல்லாமல் இருக்கிறது. அந்த செயற்கை மழையைப் பற்றி தீவிரமாக அமைச்சரவர்கள் தமது கோரிக்கையிலே அதிகமாக தொகை எடுத்துக்கொண்டு வருங்காலத்திலே வறண்டிருக்கும் நிலங்களுக்கு, பூமிகளுக்கு செயற்கை மழையின் மூலம் அதிகமாகப் பயன் கிடைக்கும் முறையிலே சட்டங்களை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவுத் துறையிலே தமிழகத்திலே தன்னிறைவு பெற்றுகிவிட்டது. அதைப் போல அரிசி உற்பத்தியிலும் நாம் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட மிக அதிக உற்பத்தியைக் காட்டியிருக்கிறோம். இந்த இரண்டும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயம். பாராட்டுக்குரிய ஒரு விஷயம். இதற்கு முக்கிய காரணஸ்தர்கள் யார் என்பதைச் சிந்திக்க வேண்டும். நமது வேளாண்மைத் துறை அலுவலர்கள் இந்தத் துறையிலே நாம் நல்லதொரு சாதனையைப் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காக இந்தத் தமிழகம் என்றென்றும் அவர்களைப் பாராட்டவும், வணங்கவும் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னால், வேளாண்மையிலே, நம்முடைய நாட்டிலே விவசாயிகள் தான் முதுகெலும்பு என்று சொல்வோம். இன்றைய தினம் விவசாயிகள் மட்டுமல்ல, வேளாண்மைத் துறையிலே உள்ள அதிகாரிகளும், வேளாண்மைத் துறையும் மற்றும் விவசாயிகளும் இரண்டும் சேர்ந்து இந்த நாட்டில் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள் என்று சொல்லும் நிலையை நாம் இப்பொழுது அடைந்திருக்கிறோம். முன்பெல்லாம் வேளாண்மைத் துறை அதிகாரிகளை விவசாயிகள் பார்த்தால் அவர்கள் யாரோ படித்துப் பட்டம் பெற்றவர்கள், நமக்கு யோசனை சொல்ல வந்திருக்கிறார்கள் என்று சற்று ஒதுங்கியிருந்த காலம் போய் இப்பொழுது நவீன முறையிலே விவசாயத்திலே ஆர்வத்துடன் வருகிறார்கள் என்று கேட்டுத் தெரிந்துகொள்கிறார்கள். வேளாண்மைத் துறை அதிகாரிகளைத் தங்கள் சொந்த சகோதரர்களாக, விவசாயிகளாகப் பார்த்துப் பழகும் காலம் வந்திருக்கிறது.

[திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி] [1972 மார்ச் 25

இது நம்முடைய நல்ல முயற்சியைக் காட்டுகிறது. விவசாயிகள், விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளைச் சகோதரர்களாக நினைக்கக்கூடிய காலம் வந்துவிட்டது என்பதை நினைக்கும்போது இனி மேல் நம் நாட்டில் உணவுப் பஞ்சம் என்ற நிலைமையே வராது என்று நிச்சயமாக கூறலாம்.

இன்னொன்றையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விவசாயிகள் நமக்கு உணவு உற்பத்தியின் தன்னிறை வைக் காட்டிவிட்டாலும்கூட அவர்களுடைய நிலை எப்படியிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு நாம் எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறோம். அவர்களும் அதை நினைத்துப் பார்க்கிறார்கள். அதிலே பாகுபாடான கருத்து எதுவும் இல்லை. இருந்தாலும்கூட, இவ்வளவு உற்பத்தி செய்தாலும்கூட, அவர்களுக்கு உரிய தொகை கிடைக்கிறதா, அவர்களுக்கு உரிய பங்கு கிடைக்கிறதா என்றால் இல்லை. அதற்கு முக்கியமான காரணம் அரசு அல்ல; இடைத் தரகர்கள், நடுத்தரகர்கள், கமிஷன் மண்டி வைத்திருப்பவர்கள் தான் காரணம். விவசாயிகள் பாடுபட்டுப் பலனை அனுபவிக்க முடியாமல் போய் விடுகிறது. இந்த இடைத் தரகர்களை ஒழித்துக் கட்டும் முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது விவசாயிகளுக்குப் பலவகைகளில் சேவை செய்து வருகிறோம் என்றாலும் பலனைப் பூராவும் அவர்கள் அனுபவிக்க முடியாத நிலை இருப்பதால் அவர்களுடைய ஆழ்ந்த கவலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் பூராவையும் அரசே வாங்கிக்கொண்டு விற்கக்கூடிய நிலையைச் செய்தால் நிச்சயமாக விவசாயிகள் அதனுடைய லாபம் பூராவையும் அடையக்கூடிய நிலை ஏற்படும். அதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்திக்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் போல் பருப்பு வகைகளைப் பொறுத்தவரை தமிழகம் தன்னிறைவு பெறாத நிலையில் அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. பொதுமக்களும் உணர்ந் திருக்கிறார்கள். அதிலே தன்னிறைவு காண, விளைச்சலை அதிகப்படுத்த அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். போன ஆண்டு 1971–72-ஆம் ஆண்டு நம்முடைய இலக்கு இரண்டு லட்சம் டன் என்று இருந்தது. இந்த ஆண்டும் நம்முடைய இலக்கு இதிலே இரண்டு லட்சம் டன் என்றுதான் இருக்கிறது. இலக்கு அதிகரிக்கப்படவில்லை. ஏன் இலக்கு அதிகப்படவில்லை என்பது புரியாத ஒன்றாக இருக்கிறது. நம்முடைய விவசாயத் துறை அலுவலர் களுடன் கலந்து பேசி இதிலே தன்னிறைவு பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை கேட்டு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இதிலே தன்னிறைவு பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1972 மார்ச் 25] [திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி]

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பல திட்டங்களைச் சொல்லி யிருக்கிறார்கள். அதிலே ஒருங்கிணைந்த புஞ்சை நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், சிறு உழவர்கள், குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்கள், பண்ணை தொழிலாளர்களுக்குரிய திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் குறிப்பிடப்பட்ட திட்டங்களாகும். இந்தத் திட்டங்கள் எங்கெங்கு செயல்படுகின்றன என்று பார்த்தால், மதுரை மாவட்டத்தில் ஒன்று, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்று, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒன்று என்ற வகையில்தான் செயல்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தரமான கரிசல் நிலங்கள் இருக்கின்றன. செவ்வல் நிலங்களும் இருக்கின்றன. இந்த இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த மிகவும் லாயக்கான இடம் இராமநாதபுரம் மாவட்டம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு திட்டங்களின் பலனும் இராமநாதபுரத்திற்குச் செல்ல வேண்டியது அவசியம். அது பின்தங்கிய மாவட்டம் என்பது எல்லோ ருக்கும் தெரிந்த விஷயம். விவசாயத் துறையில் மட்டுமல்ல. எல்லாத் துறையிலும். சிறு விவசாயிகள், குறைந்த அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் அதிகமாக இருக்கும் மாவட்டம் அந்த மாவட்டம். இந்த மாவட்டத்தில் இருப்பவர்களை நல்ல முறையில் ஊக்குவிக்க, விவசாயத் துறையில் நல்ல பலன் கிடைக்க இருக்கக்கூடிய பல திட்டங்களில் இந்த இரண்டு திட்டங்கள் அந்த மாவட்டத்திற்கும் கொண்டுவரப்பட வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தை இந்தத் திட்டத்தில் சர்க்கார் சேர்த்துக் கொள்ளாதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அரசு இந்த ஆண்டில் இருந்து இந்த இரண்டு திட்டங்களையும் இராமநாதபுரத்தில், குறிப்பாக அருப்புக்கோட்டை தொகுதியில் நிறைவேற்றித் தரவேண்டுமென்றும், அதன் மூலம் இந்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய 1·6 கோடி ரூபாய், இன்னொரு ஒரு கோடி ரூபாய் ஆகியவை எங்களுடைய மாவட்டத்திற்குக் கிடைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Thiru B. VENKATASWAMY** : Sir, I thank you for giving me an opportunity to speak on the Agiculture Demand for the year 1972–73. At the outset, I want to point out that 75 to 80 per cent of the population of Tamil Nadu are agriculturists. This is a most important Demand which is being discussed not only in this House but throughout the nation. In this connection, I want to stress particularly the employment opportunities for the agricultu-rists in our State.

Regarding high-yielding varieties it has been stated in the Note placed on the Table of the House that we are getting more yield as compared to other States. Now, I want to stress one point, parti-cularly regarding production which has increased because of the inputs that we are putting to the land. But now the people are

not interested in agriculture because it is not a commercial and profitable one. Our policy must be such as to make more and more people to take to agricultural operations.

In this connection, I wish to strike a note of warning that slowly and steadily the persons who have been indulging in agricultural operations have begun to show an increasing tendency to run away from the agricultural operations to more gainful occupations in urban areas. If this trend is not halted by practical measures by this Government, I am afraid farmers will utlimately lose interest in agriculture and that will positively affect agricultural production in the long run. So, please do not derive wrong satisfaction from our illusory statistics. There is greater production year by year. This is not because of the greater enthusiasm of the farmers but this is only because of the tremendous inputs and agricultural requisites that have been put into the agricultural operations and also favourable climatic conditions from the last two years.

Even my Hon. Friend, the ex-Minister, Thiru Subbiah has just now pointed out that people are not willing to keep their educated boys for agricultural purposes. That is true. Now agriculture is not a profitable occupation. Nowadays the cost of production is being increased day by day. Besides, the cost of fertilisers, pump-sets, electricity rates, etc., have all increased. But what about the price of foodgrains ? There is no increase in the price of foodgrains and so, the people are not willing to take up to agriculture. They want to go away to towns to take up occupations where they could earn easily. So, the Government should give more incentives to the ryots. Otherwise, definitely agriculture will suffer. Regarding multiple cropping and incentive agricultural programmes, I request this Government to take effective steps to improve cultivation of pulses.

Regarding Nematode disease attacking potatoes in Nilgiris, I think the Indo-German project had done good work and I understand from the report that that disease had been controlled. It is a dangerous disease and if it has been controlled it is a great achievement. At the same time it has been mentiomed in the book that a 'package of practices' has been announced. I request the Hon. Minister to give the 'package of practices' to each and every member of the rural folk that so they may know what it is. It will greatly benefit the ryots.



Regarding Horticulture, I want to stress something important. In the neighbouring State of Mysore, Horticulture had made tremendous strides. There is the Horticulture Extension Officer and they have kept all kinds of things in Lalbagh. I hope the Hon. Minister will go there and see how Horticulture extension work is progressing there. I had seen some gardens in the Bangalore side. One man was able to get Rs. 39,000 from one acre by cultivating the sweet grapes without the nut. He was able to get so much because the Horticulture Extension Officer went there every morning, visiting the garden and giving technical advice to the people. That kind of service could be extended to Madras State also. We can bring more land under grapes. Moreover we can also increase grape cultivation, for manufacture of wine. Now, the Bangalore wine could be easily cultivated in Hosur Taluk which has excellent climate for the same. It is now mostly done by industrialists in Bangalore area. For an agriculturist raising grapes (Bangalore wine variety) Rs. 1,600 is not enough for one acre. This is very meagre. It should be at least Rs. 6,000 per acre. Only from second year, there would be yield. In years to come, we can easily recover the amount. We can definitely grow grapes, producing Bangalore wine, which is popular in Western countries also. We can capture the market. Hosur has excellent climate for such cultivation'

Regarding coffee cultivation, I want to stress one thing. Bettamugalalam and Thoddamanchi area in Denkanikotta taluk, stretch of 20 to 50 miles is excellently suited for coffee cultivation. I had inspected that place with the District Agricultural Officer.

Coming to fertilisers and pesticides, rates have been increasing. One bottle of folidol cost Rs. 6 now. It has increased from Rs. 3. Prices of fertilisers also have risen. We must see that prices are not increased ; otherwise ryots would not be able to cultivate at all.

Agriculture is one occupation where there is no security or safety. If there is no rainfall, there is doom for agriculturist. But at the same time, Government would not keep quite and there will recover loan taken by the ryot. So what I say is 'let us introduce crop insurance' scheme.

Vegetable growing has to be encouraged. In Hosur taluk, there is good climate for growing of vegetables. So let

good intensive vegetable growing scheme be started at Hosur. Unlike in Ooty, we can grow vegetables in all seasons in Hosur. I request the Hon. Minister to do the needful in the matter. Thank you.

THIRU M. A. LATHEEF : I wish to offer a few points in support of the Demand.

Actually agricultural sector as it is rightly said is the pivot around which the entire economic life revolves. So, this Demand is basically important to get a very real and perspective picture of the economic development of this State. Actually we have been committing a grievous mistake in giving priorities to the various sectors of development. The peculiar situation that is prevalent in our country is this. Agriculture being the major and important occupation of the people, it was stressed from the beginning that top prioirty must be given to the development of agriculture. What happened? With there being a good base, there has been a tremendous pace of industrial development. We entered into a period of industrial development.

நண்பகல் 12-00

In our country we have got what is called disguised unemployment in the agricultural sector where the people living in the villages are employed. It has been rightly pointed out that in an agricultural holding only two people are needed. But we are having five extra persons who are nothing but disguised unemployed. In order to give them more extra employment, what we have done and that is a major question which the Government must seriously consider. We have consistently failed to give serious attention to this important problem. Whether the Malthusian theory is correct or not, so far as India is concerned, it is applicable still. You just go on boosting the industrial development and that is also very important. When we go on increasing our industrial development, more and more people are employed.

Also, more and more people from the village side are moving away from farms fields and thus more and more people are employed in the industries. Consequently the level of income is increased and also the purchasing power is increased. When these people get more purchasing power by way of wages, what they do ? The first thing that they want to do is to fill up their half-belly. They only want to feed themselves. Therefore, the demand for food



increases. Thus it will be seen that in our anxiety to increase the pace of industrial development, we increase the demand for food. But at the same time what we have done to develop the agricultural economy. We have completely neglected this aspect of the economic development of the country. So I submit that the Government should pay sufficient attention to the village folk and the rural economy.

Sir, when our great Anna assumed the Office of Chief Ministership, he wanted to effect green revolution in the State. What we have done for years together. Population is increasing and there should be co-relation and co-ordination between the industrial development and the agricultural development. Now the Agriculture Department functions in a separate cell as if it has nothing to do with the industrial cell. There should be an understanding between the industrial cell and the agricultural cell. There should be statistical data collected and there should be co-ordinated development in the agricultural field. It is high time that the Government should appoint a Committee or Commission consisting of experts in that field and they should sit together and mutually discuss the problem of industrial development and the agricultural economy. Unless and until you employ more people in the agricultural field, you cannot employ more people in the industrial field.

(Mr. Chairman sounded the gong).

Sir, I want three more minutes.

Now I come to rural indebtedness which is devouring the entire developmental activities. It has given a vital blow to agrarian development in our country because the Indian farmer is always in debt, and there is no doubt about it. The Government have instituted so many crash programmes and sanctioned so many loans to agriculturists. But the way in which the loans of the Government are collected, is not happy. After the harvest, they go to the farmer and ask him to pay back the loan. Then what happens ? He sells his produce to the merchants for a lower price. The produce which will fetch Rs. 50 he sells for Rs. 30. Thus he is incurring a loss o Rs. 20. . . .

(Mr. Chairman sounded the gong).

Sir, I want one more minute.

[1972 மார்ச் 25

MR. CHAIRMAN : (THIRU S. KANDAPPAN) I have to apportion time.

THIRU M. A. LATHEEF : The other alternative is for him to borrow money from the money-lender. Therefore, utmost leniency must be shown to the village folk by the officials. They should be given some time to sell their produce at the market rate. The Government should also provide marketing and other facilities for them. Then only they can pay back their loan without incurring any loss.

Lastly I come to the agrarian reforms, the so-called land reforms. What we have done in order to kindle extra zeal and enthusiasm among the landholders. Nowadays it has become a fashion to speak of land reforms. Fragmentation or sub-division of holding will bring nothing to you. A holding must be economical to operate. You want to give lands to more and more people and that will not bring any good. Therefore, the advocates of agrarian reforms must understand that holdings should be economic holdings. The Government must provide marketing and credit facilities. The whole thing should be viewed in a new perspective and more and more official patronage must be given to the agriculturists. There are a lot of "tharagars" in our country. We have the privilege to have this type of "tharagars" and we must put an end to these intermediaries.

கடன் கொடுத்தால் அவன் கைக்கு போய் சேராது. என்ன ஐயா சும்மா கொடுத்த மாட்டுக்கு பல்லை பிடித்துப் பார்க்கிறார்களா என்று கேட்கிறார்கள். யார் சும்மா கொடுக்கிறார்கள் ? அரசாங்கம் கொடுக்கிறது. அவர்களுக்கு கொஞ்சம் அந்தத் தரகர்கள் இல்லாமல் கடன் கொடுக்க அரசு ஏதாவது செய்யவேண்டும். நம்முடைய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு அரசாங்கமே ஏதாவது செய்வதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Then, Sir, for the development of hilly areas, what have you done? I am living in a hilly area. It is 40 to 60 miles hilly area. This area of Javvadu hills in North Arcot contains very good natural resources. Has any officer of the Department of Agriculture come and tested the soil there and given a report that such and such a crop could be raised there successfully. That is my submission. What I say is the department must take interest in the locality of Javvadu Hills.



1972 மார்ச் 25] [Thiru M. A. Latheef]

One word more with regard to Agriculture Machninery Shop in Washermanpet. I submit to the Hon. Minister that he could invite all members to visit this workshop. I know there are officers connected with this workshop sitting here. It has got a future and it has got great potentiality. We are not giving due attention much to this workshop. We can get out of these drills and other machinery required for agriculture. We must give it more attention. The development of this workshop will help our economic development. I hope and trust that the Hon. Minister will keep in mind what I had said and do what he can to redress the suffering of the village folk, on whom the fate of India and the State is depending. Thank you.

திரு. கு. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 1972-73-ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மான்யக் கோரிக்கையினை வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரின் சார்பாக இதை வரவேற்று நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் குறளிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினார்கள். "சுழன்றும் ஏர் பின்னது உலகம்", 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" போன்ற குறள்களை மேற்கோள் காட்டினார்கள். குறள் சமுதாயத்தின் சட்டநூலாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றப்பட்டிருந்தாலும் விவசாயத்திற்கு விவசாயிகளுக்கு இது வரையில் எந்த அளவுக்கு அதன் கருத்துக்கள் உண்மையாக இருந்தன என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் அது நிச்சயம் இல்லை.

இருபது ஆண்டுக்கு முன்பாக புதிய குறளை இயற்றிவிட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் 'கதர் கட்டி வாழ்வாரே வாழ்வார், மற்றவர் கைகட்டி பின் செல்லுவார்' என்ற குறள் 20, 25 ஆண்டு காலமாக சமுதாய வாழ்க்கைக்குச் சட்டமாக அமைந்து இருந்தது. அந்த நிலைமை ஐந்து ஆண்டுகளுக்குமுன் மாற்றப்பட்டு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வாழ்க்கையில் அல்லல்படுகிறவர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் நமது முதல்வர் அவர்கள் இதயபூர்வமாக 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் ஒரு பிரகடனத்தை இப்பேரவையின் வாயிலாக வெளியிட்டார்கள். விவசாயிகளின் நல் வாழ்க்கையின் ஆரம்பத்துக்கு அடிக்கால் நடுகிற ஒரு நாளாக அந்த நாள் அமைந்துள்ளது என்பதால் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகளின் சார்பாக நமது முதல் அமைச்சர் அவர்களை அதற்காக இதயபூர்வமாக பாராட்டி, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் கொண்டு வரப்பட இருக்கிற இந்த சட்டத்தின் மூலம் பயன் அடைபவர்கள், அதிக பலன் அடைபவர்கள் யார் என்று பார்த்தால் காங்கிரஸ்காரர்கள் தான். பகைவனுக்கு அருள்வாய் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதுபோல, காங்கிரஸ்காரர்கள் பகைவன் என்றால், அரசியல் கொள்கை ரீதியாகத்தான் இருக்குமே தவிர, மனித அடிப்படையில் நமக்கும் அவர்களுக்கும் தனி பகைமை இல்லை.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் மிகுந்த பலன் அடைபவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான். மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், பொது மக்கள் 50 கலம், 40 கலம் குத்தகை பாக்கி வைத்திருக்கிறார்கள் என்றால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 800 கலம், 900 கலம், 1,000 கலம், 1,500 கலம் என்ற அளவில் பாக்கி வைத்திருக்கிறார்கள். அப்படிப் பாக்கி வைத்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் கிராமம் கிராமமாக இருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட, கலைஞர் ஆட்சியை வாழ்த்துகிறார்கள். அவரைப் பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுடைய நிலைமைகளை எண்ணங்களை தெளிவாக புரிந்துகொண்டிருக்கிற ஒரு அரசு இது வரையில் தோன்றியதில்லை. எல்லா விவசாயப் பெருங்குடி மக்களும் மனப் பூர்வமாக சொல்லி விடுவதை கேள்விப்படுகிறேன். நான் ஒப்புக்காக நன்றியறிதலைத் தெரிவிக்கவில்லை. உண்மையாகவே தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே கட்சி வேறுபாடு ஒன்றும் கிடையாது. அவர்களுக்கெல்லாம் இங்கு வருவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமானால், இங்கேயே திரண்டு வந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1972-வது ஆண்டுக்குள் குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அதுவும் நிலச் சொந்தக்காரர்கள் சாகுபடியாளர்களை வெளியேற்றி, சாகுபடி செய்திருந்த நிலத்தை அறுத்து மகசூலை எடுத்துக் கொண்டவர்களும் உண்டு. அறுத்த பிறகு நிலத்தை விட்டுவெளியேற்றுவதற்கான ரெவின்யூ கோர்ட்டு உத்தரவுகளும் உண்டு. இந்த நான்கு ஆண்டு குத்தகை பாக்கியை தள்ளிவிடுவதன் மூலம் இங்கு கொண்டுவரப்படப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிற சட்டத்தில் 1972-ஆம் ஆண்டு, அதாவது 1381-வது பசலிக்கு குத்தகை பாக்கியைக் கொடுப்பதன் மூலம் அப்படி 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளுக்குப் பின் வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் அந்த நிலங்களில் சாகுபடி செய்வதற்கு உரிமையை அளிப்பதற்கு உரிய வழிவகைகளை மேற்கொண்டு செய்து தர வேண்டும் என்று முதல்வர் அவர்களையும், சட்ட அமைச்சர் அவர்களையும் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த 1972-ஆம் ஆண்டினுடைய குத்தகைப் பாக்கியைக் கொடுத்துவிட்டால் என்ற ஒரு வார்த்தைக்குப் பதிலாக, குத்தகை பாக்கியை ஜூன் மாதம் வரையில் நீடித்துக் கொடுப்பதற்கு, மேலே ஓரிரண்டு மாதங்கள் கூடுதலாக தவணையை நீட்டிக்கொண்டு இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1972-ஆம் ஆண்டு ஜூன் அல்லது ஆகஸ்டு வரையில் குத்தகை பாக்கியைக் கொடுப்பதற்கான அவகாசத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





விவசாயிகளுக்கு இருக்கிற அதிக குத்தகை பிரச்சினையின் காரணமாக அவர்கள் தொடர்ந்து கடனாளிகளாகவே இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, குறைந்தபட்ச குத்தகை நிர்ணயச் சட்டம் கொண்டுவரவேண்டும். ஒரு போக நிலத்தில் ஒருவன் சாகுபடி செய்தால் ஒரு ஆண்டுக்கு ஒரு முறை தான் அந்த விவசாயிகளுக்கு வருமானம் வருகிறது. அதில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயி கூட்டுறவு சங்கத்திற்குக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். விவசாயச் செலவுக்குப் பணம் வேண்டும். பிறகு அவன் குடும்ப வாழ்க்கைச் செலவுக்குப் பணம் தரவேண்டும். இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் களத்து மேட்டிலேயே கண்டு முதல் சரியாகப் போய்விடும். விவசாயி வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு தான்யம் எதுவும் மிச்சம் இருக்காது.

ஒரு போக நிலத்தை இரண்டு போகம், மூன்று போகமாக ஆக்குவதற்கு வழிவகைகள் செய்யப்பட வேண்டும். வடிமுனைக் குழாய்களை (பில்டர் பாயிண்டு) அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படைக் குத்தகையை நிர்ணயித்து விடவேண்டும். இவ்வளவு தான் கொடுத்தால் போதும் என்று நிர்ணயித்து ஏக்கருக்கு 12 அல்லது 15 கலம் குத்தகை தந்தால் அதற்கு மேல் கால் அல்லது காலே அரைக் கால் பாகம் 15 அல்லது 18 கலம் வரை இரண்டு போகம் மூன்று போகம் சாகுபடி செய்து விளைந்தால் விவசாயிகள் ஒப்புக்கொள்ளலாம்.

ஆனால் இன்றையதினம் கோவில், மடங்கள், போன்ற நிலச் சொந்தக்காரர்கள் ஏக்கருக்கு 12 கலம் என்று உள்ளதை இரு போகம் சாகுபடி செய்யக் கேட்டால் 24 கலம், 36 கலம் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். இரண்டு போகம், முப்போகம் விளைந்தால் கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம் என்கிற ஆசையில் காரணமாக ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டும் என்று விவசாயிகள் முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் அதிக குத்தகையினால் நஷ்டம் ஏற்பட்டு விடுகின்றது. அதனால் குத்தகை பாக்கிக்காக 3 ஆண்டுகள், 4 ஆண்டுகளுக்குப் பிறகு நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும். நிலத்தில் உழுபவர்களுக்கு உழைப்பவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும். சுதந்திரம் கொடுக்கவேண்டும். உழைப்பவன் உழைப்பின் பலனைப் பெற வேண்டும். அதற்குரிய வழிவகைகளை சட்டபூர்வமாகச் செய்யவேண்டும்.

மேலும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. இளங்கோவன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆடுதுறையில் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. வாழை ஆராய்ச்சி மைய நிலையம் ஒன்று இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி அமைப்பது மிகவும் இன்றியமையாதது. வேளாண்மைத் துறை அமைச்சர், அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில் தான் சொல்கிறேன். அங்கே விவசாயக்

கல்லூரி ஏற்பட்டால் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மையைப் பெருக்குவதற்கு பல வசதிகள் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும். 28, 30 உயர் ரக நெல்களையெல்லாம் ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடித்திருக்கிறார்கள். எனவே ஆடுதுறையில், ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாசன வசதிக்காக.......... (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது எங்களுடைய கட்சி கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

நமது நாடு விவசாய நாடு. 100-க்கு 70 பேர்கள் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள். பயிர்த் தொழிலை உயிர்த் தொழிலாக வைத்து வாழ்க்கை நடத்துகிறவர்கள். நமது பொருளாதாரத் துறை முன்னேற வேண்டுமென்றால், விவசாயத் துறை வளர்ச்சி அடைந்தாகவேண்டும். தொழில் அபிவிருத்தியும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளும் ஏற்படுவதற்கும் விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டியது மிகவும் அவசியமாகும். 100-க்கு 70 பேர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறவர்கள் முன்னேற்றம் அடைந்தால் தான், இந்தியா பொருளாதார முன்னேற்றம் அடைந்ததாகக் கருத முடியும். விவசாய முக்கியத்துவத்தைக் கொண்டு விவசாயத்திற்காக பெரிய அளவில் மான்யம் கொடுக்கப்படுகிறது. கடன் கொடுக்கப்படுகிறது. இவ்விதமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்கள், மான்யங்கள் விவசாயிகளுக்குச் சரிவரப்போய்ச்சேருகிறதா என்றால், கிராமங்களிலுள்ள மக்கள் இதன் பலனைச் சரிவர அடைகிறார்களா என்று பார்த்தால் அவரகள் சரியாக இவைகளின் பலனை அடைவதில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் துறையில் அகில இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற விவசாய முன்னேற்றத்தின் அடிப்படையில் நம்முடைய தமிழ் நாட்டிலும் விவசாய உற்பத்தியிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயத் துறையில் பல முரண்பாடான காரியங்கள் விவசாயிகளுக்கு கஷ்டங்கள் இன்றும் இருக்கின்றன. விவசாயத் துறையில் அபிவிருத்தியிருந்தும் விவசாயிக்குக் கிடைக்கிற வருமானம் போதுமானதாக இல்லை. இன்னும் ஒரு பக்கத்தில் விவசாய உற்பத்தி வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளுக்குப் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அவை போகவில்லை. அவர்கள் சரியாக ஊதியம் பெறுவதாகக் காணவில்லை.

அடுத்ததாக, ஒரு பக்கம் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலை போதாதென்று விவசாயிகள் சொல்கிறார்கள். அதே சமயத்தில், அதை வாங்குகிறவர்கள் விலை அதிகம் என்று சொல்கிறார்கள். இப்படியான முரண்பாடுகள் மாற்றப்படவேண்டும். உற்பத்தியும் அதிகரிக்கவேண்டும். அதே சமயத்தில் விவசாயிகள் அவர்களுக்கேற்ற ஊதியம் பெற வேண்டும்.

முதலில் இந்த முரண்பாடுகளைப் போக்க வேண்டுமென்று பார்த்தால் விவசாயத்தில் புது நவீன முறைகளை அவர்கள் கைக்கொள்ளக்கூடிய வழிவகைகளை வகுக்கவேண்டும். இன்று நம் விவசாயிகள் நவீன முறைகளை விவசாயத்தில் அதிகமாக உடனே பயன்படுத்துகிறதாக காணவில்லை. அதற்காக அதிக அளவிலே விளம்பரம் செய்யவேண்டும். பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் சரியான முறையில் அதிக அளவிலே விவசாயிகளை அணுகி விளம்பரங்கள் செய்யவேண்டும். சினிமா காட்சிகள் மூலமாக மேலும் விளம்பரப்படுத்தலாம். பயிர் விளைச்சல் போட்டி வைத்து உற்பத்தியைப் பெருக்கலாம்.





அடுத்தபடியாக, விவசாய உற்பத்திப் பொருள்களின் விலையை, விவசாயிகளுக்கு சரியான ஊதியம் கிடைக்கும் வகையிலும், அதே சமயத்தில் வாங்குகிறவர்களுக்குச் சாதாரண விலைக்கு அதை வாங்கக்கூடிய நிலையிலும் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு உற்பத்தியில் ஏற்படுகின்றதான பெரு உற்பத்திச் செலவு தான் இந்த விவசாயப் பொருள்களின் விலை ஏறக் காரணமாக இருக்கிறது. உரத்திற்கும், விதைக்கும், விவசாயக் கருவிகளுக்கும், கூலி கொடுக்கவும், மாட்டுக்கு தீனி கொடுக்கவும் பெரும் தொகை செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆதலால் உற்பத்திச் செலவு கூடுகிறது. ஆதலால், உற்பத்திப் பொருள்களின் விலையும் ஏறுகிறது. ஆகவே, விதை, உரம், கருவிகள் போன்றவற்றை வாங்க அரசாங்கம் மானிய விலையில் வட்டி இன்றி கடனைக் கொடுத்தால் இந்த உற்பத்திச் செலவு குறையும் பொருள்களின் விலையும் குறையும். விவசாயிகள் விவசாயத்தை அதிக உற்சாகமாகச் செய்வார்கள். விலைக்கு வாங்குகிறவர்கள் சாதாரண விலைக்கு பொருட்களை வாங்கமுடியும். இந்த நல்ல சூழ்நிலையில் அரசாங்கமும் விவசாயப் பொருள்களின் விலையையும் நிர்ணயிக்க முடியும். விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய சில கஷ்டங்களும் அரசாங்கத் துறை நிர்வாகத்தில் இருக்கக்கூடிய சில குறைகளும் அதற்குக் காரணமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, விவ்சாயத்தில் முக்கியமானது தண்ணீர். அணைகளில் தண்ணீர் இருந்துக் கூட விவசாயத்திற்குச் சரியான முறையில் தண்ணீர் கொடுக்கப்படுவதில்லை. எங்கள் பகுதியில் சிற்றூர்-பட்டணங்கால் நீர்ப்பாசனத் திட்டத்தில் கருங்கல் டிஸ்ட்டிரிப்யூடரில் தண்ணீர். சரியாக விநியோகம் செய்யப்படாததால் பயிர்கள் எல்லாம் அந்தப் பகுதியில் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. பல பெட்டிஷன்கள் கொடுத்தும் அதிகாரிகள் கவனிக்கவில்லை. ஆதலால், இந்த தண்ணீர் விநியோகக் குறையைப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மைனர் இரிகேஷன் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்தில் மைனர் இரிகேஷன் மூலமாக அதிக விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் அதற்கான குளங்கள் சரியாக பராமரிக்கப்படுவதில்லை. மடைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை. கன்யாகுமரி மாவட்டத்தில் இதற்காகக் கொடுக்கும் மானியம் சரியான நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. கோடைக்காலத்தில் கொடுக்கப்படவேண்டிய அந்த மானியத்தை மழைக் காலத்தில் கொடுப்பதால் அதைப்பயன்படுத்த முடியவில்லை. ஆகவே, அதைச் சரியான தருணத்தில் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

அடுத்ததாக, உரம் உற்பத்தி அதிகரித்தும் அது சரியாக விநியோகம் செய்யப்படவும் வேண்டும். ஆகவே, இதில் தகுந்த நடவடிக்கை எடுத்து காலாகாலத்தில் உரத்தை கிடைக்கச் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு அவசியம் ஏற்படுகிற நேரத்தில் அதை விநியோகிக்கச் செய்யவேண்டும். இன்று இதைப் பெறுவதற்கு கால தாமதமாகிறது. இன்றைக்கு வெளி நாடுகளை விட இங்கே உரத்தை குறைவாக உபயோகிக்கிறார்கள். விலை உயர்ந்திருப்பது தான் அதற்குக் காரணம். ஆகவே, நியாய விலையில் உரம் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் கிடைக்கச் வழி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொறுக்கு விதைகளை நல்ல முறையில் பரிசீலித்து, மண் தன்மைக்கேற்ப அதையும் விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, விவசாயக் கருவிகளை எடுத்துக்கொண்டால் அது குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழி வகைகள் வகுக்கவேண்டும். இன்று விவசாய கருவிகளுக்கு இருக்கக்கூடிய வரியை விடுவித்து எக்செம்ட் செய்து கொடுத்தால் குறைந்த விலையில் அந்தக் கருவிகளை கொடுக்க வழி வகுக்கக்கூடியதாகும்.

அடுத்ததாக, பயிர் பூச்சி மருந்து. மனிதனுக்கு நோய் வந்தால் டாக்டர் பார்த்து மருந்து கொடுக்கிறார். அதே போல பயிர்களுக்கு நோய் வந்தால் அரசாங்கம் அதற்கு மருந்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(அடுத்து, பழனிவேல், மாணிக்கவாசகம் என்ற உறுப்பினர்கள் பேச அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஆசனத்தில் இல்லாத காரணத்தால் மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் உறுப்பினர் திரு. பூ. எட்டியப்பன் அவர்களை பேசுமாறு கேட்டுக்கொண்டார். இந்த நேரத்தில் திரு. இரா. மாணிக்கவாசகம் பேச வந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்** (திரு. செ. கந்தப்பன்) : சபையில் பேச பெயர் கொடுத்தவர்கள் பேச அழைக்கிறபோது சபையில் அவரவர் இருக்கைகளில் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பூ. எட்டியப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

வேளாண்மைத் துறை கடந்த 5 ஆண்டு காலமாக நல்ல முறையில் செயல்பட்டுவதின் காரணமாக பற்றுக்குறையாக இருந்த நம்முடைய தமிழகம், பிற மாநிலங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தமிழகம், இன்றைக்கு உபரியான நிலைமையில் இருக்கிறதென்று சொன்னால், நாம் இன்றைக்கு மற்ற மாநிலங்களுக்கு அனுப்புகிற நிலையில் இருக்கிறோம் என்று சொன்னால் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பது கண்கூடாகத் தெரிகிறது. கடந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வறட்சியின் போது மக்களெல்லாம் க்யூவில் நின்றுகொண்டு, அரிசி கிடைக்காமல் ஏழைகளெல்லாம் பட்டினியால் செத்தார்கள் என்பதைப் பார்த்திருக்கிறோம். இப்போது அந்த நிலைமை இல்லாமல், கடந்த



வறட்சி வந்த போது தமிழகத்தில் தி.மு.க. பொறுப்பு ஏற்ற பிறகு தண்ணீர் இல்லாமல் இருந்த நேரத்தில் எல்லாம் ஒரு பட்டினிச் சாவு என்று எதிர்க்கட்சிப் பத்திரிகையில் வராத அளவிற்கு மிக நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறோம்.

நம்முடைய உணவு உற்பத்தித் துறையில், குறிப்பாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு உரம் கொடுப்பதில்லை. இப்போது வெளி மார்க்கெட்டில், கூட்டுறவுத் துறை மூலமாக நிறைய உரங்கள் கிடைக்கிறது. என்றாலும், இந்த ஆண்டிலே சிறிது பற்றுக்குறை இருந்தாலும் கூட விலை அதிகமாக உயர்ந்திருப்பதன் காரணமாக விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக யூரியாவை எடுத்துக்கொண்டால், அதை கூட்டுறவுச் சங்கங்களில் கொடுப்பதில்லை. ஆகவே, வெளி மார்க்கெட்டில் ஒன்றுக்கு ஒன்றரை என்று விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்த விவசாயிகளுக்கான உரங்களைக் கூட்டுறவுத் துறை கொடுப்பதற்கும், தனி யார்கள் கொடுக்கக்கூடாதென்றும், ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் காய்கறி கூட்டுறவு சங்கம் என்று ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அதிலுள்ள அதிகாரிகள் கிராமங்களில் உற்பத்தியாகும் காய்கறிகளை மொத்தமாக வாங்கி நகரங்களில் அதை விற்றுக்கொடுக்கிற அளவிற்கு இருக்கிறது.

இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டத்தில் வேலை செய்கிறது. அதற்குக் பிற்
காரணம் அதிகாரிகள் கிராம மக்களிடமிருந்து காய் கனிகளை வாங்குவ பகல்
தில்லை. நூற்றுக்குப் பத்து பேர்களிடம் கூட வாங்குவதில்லை. வெளி 12-30
மார்க்கெட்டுகளிலே, கொத்தவால்சாவடி போன்ற வெளி மார்க்கெட்டுகளில் வாங்கி வியாபாரம் செய்வதன் காரணமாக இந்தத் திட்டம் சரியாக செயல்படவில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். எனவே, அந்த அதிகாரிகளுக்குப் பதிலாக அதிகாரப் பற்றற்றவர்களை நியமனம் செய்து, கிராமங்களில் உற்பத்தியாகும் காய் கனிகளை வாங்கி வியாபாரம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் தங்கள் நிலங்களுக்குச் சென்று வர போதுமான சாலை வசதிகள் இல்லை. 500 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் இருந்தால் கூட, குப்பை, உரம், இதர விவசாயப் பொருள்களை தலையிலேயே சுமந்து செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாய நிலங்களுக்குச் செல்ல போதுமான பாதை வசதிகள், ரோடு அமைப்புகள் இருந்தால் சுலபமாக அவைகளைக் கொண்டு செல்லலாம். தலையிலேயே சுமந்து செல்வதால் விவசாயச் செலவும் அதிகமாகிறது. எனவே, ஆயிரம், ஐந்நூறு ஏக்கர் நன்செய், புன்செய் விளையக்கூடிய நிலங்களுக்கு எல்லாம் அரசு வேளாண்மைத் துறையின் செலவிலேயே ரோடுகள் அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசாங்கம் தற்போது ரசாயன உரம், பம்பு செட்டுகள், மண்ணெண்ணெய் போன்ற பொருட்களுக்கு நிறைய வரி விதித்திருக்கிறார்கள். சர்சார்ஜ் போட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, குறிப்பாக விவசாய பெருங்குடி மக்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், இந்த ஆண்டு மிக நெருக்கடியான கட்டம் அவர்களுக்கு

ஏற்படும். விவசாய சாகுபடி பொருட்களுக்கு முன்னால் இருந்த உற்பத்திச் செலவை விட இப்போது மூன்று மடங்கு கூலி உயர்ந்து இருக்கிறது. குறிப்பாக ஒரு பெண் கூலிக்கு காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை வேலை செய்வதற்கு ஒரு வேளை சாப்பாடு போட்டு, இடையிலே ஒரு மணி நேரம் ஓய்வு கொடுத்து, ஒன்றரை ரூபாய் கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படி ஒரு ஏக்கர் நிலத்திற்கும் விவசாயம் செய்வதற்காகும் செலவையும், கூலியையும் சேர்த்து வருமானத்தையும் கணக்குப் பார்த்தால் ஒரு பைசா கூட மிச்சம் கிடைக்காது. இந்த முறையில் விவசாயம் நடைபெற்றால் விவசாய நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு ஊக்கம் இல்லாமல் போய் விடும்.

விவசாய கூலி வேலை செய்யும் மக்களுக்கு எல்லாம் உயர்ந்த கூலி கொடுப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர்களைப் பற்றி யாரும் பேசவில்லை. அதேநேரத்தில் மில்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் பற்றித்தான் பல உறுப்பினர்கள் நேற்றுகூட இந்த மன்றத்திலே பேசினார்கள். மற்ற வேலை செய்பவர்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. காலை முதல் மாலை வரை கஷ்டப்படும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அதிகக் கூலி கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அரிசிக்கு நியாயமான விலை கிடைத்தால் தான் உற்பத்தியாளர்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் ஏற்படும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேமாதிரி விவசாயிகளுக்கும் மற்றப் பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச்செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் மிக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் மத்திய அரசாங்க விதைப்பண்ணையில் இப்போது தரமான விதைகள் கிடைக்கச் செய்கிறார்கள். அதனால் 500 பேருக்கு வேலைவாய்ப்பும் இருக்கிறது. அதன்மூலம் நல்ல விதைகளை நாம் பெற்று விவசாய உற்பத்திப் பெருக்கக்கூடிய அளவிலே வேலை செய்ய முடியும் என்பதை தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கக்கூடிய அந்தச் சலுகைகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், விவசாய உற்பத்தியாளர்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஆதரவு தந்தால் மாநிலம் எங்கும் இரண்டு மூன்று ஆண்டுகளில் நாம் எதிர்பார்ப்பதைவிட அதிக அளவு உற்பத்தி பெருகும். நம்முடைய மாகாணம் 1972-ல் 75 லட்சம் டன் உற்பத்தியை எதிர்பார்க்கிறது. இந்தச் சலுகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டால் 100 டன்னையும் மிஞ்சிவிடும் என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மன்றத்திலே எனக்கு பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. சி. இராமநாதன் :** தலைவரவர்களே, இந்த மன்றத்தில் வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் தந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது கலந்துகொண்டு, உரையாற்றுகின்ற வாய்ப்பினை தந்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு உணவுதானிய உற்பத்தியில் உயரிய இலக்கினைப் பெற்ற அடிப்படையிலே அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் சராசரி ஏக்கர் விளைச்சலில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நமது மாநிலம் விளங்குவது குறித்துப் பெருமைப்படுகிறோம். அதை எண்ணிப் பார்க்கின்றபோது உழவர் பெருங்குடி மக்களுக்கு அந்த பெருமையிலே பெரும் பங்கு உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. வேளாண்மைத் தொழிலைக் கொண்ட தஞ்சை மாவட்டம் அந்தப் பெருமைக்குரிய மாவட்டம் என்பதையும் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் இந்த அளவுக்கு நமது மாநிலத்திற்கு உணவு அளித்து வருகின்ற தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய நாங்கள், இப்படிப்பட்ட நெற்பயிரை செய்துவருகின்றபோது, மற்ற மாவட்டங்களிலே இருக்கக்கூடியவர்கள் இன்றையதினம் புஞ்சைதானியமானப் பணப் பயிர்களை பயிரிட்டு வருகிறார்கள். அவர்களோடு எங்கள் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிச்சயமாக விவசாயிகளாகிய நாங்கள் தாழ்ந்துவிடுவோமோ என்ற ஐயப்பாடு எழுகின்றது. அந்த அச்சத்தை இந்த அரசு உணர்ந்துகொண்டதன் காரணமாகவோ என்னவோ இன்று பட்டுக்கோட்டைப் பகுதியில் ஒரு போக நிலமாக இருந்த இடங்களை இருபோக நிலமாகவும், இருபோக நிலமாக இருந்த இடங்களை மூன்றுபோக நிலமாகவும், இப்படி பலபோக விவசாயக் கோட்டம் ஒன்றை நிறுவி இருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்று ; பாராட்டுகிறேன்.

அதே தஞ்சை மாவட்டத்திலே காவேரி டெல்டாப் பிரதேசத்தில் வடிமனைக் கிணறுகளையும், குழாய்க் கிணறுகளையும் அமைத்து விவசாயத்திற்கு ஊக்கமளிப்பது பாராட்டப்பட வேண்டிய மற்றும் ஒரு அம்சமாகும். புஞ்சை தானிய விதைகளைப் பொறுத்தவரையில் இன்றையதினம் தஞ்சை மாவட்ட மக்கள் அறிஞர் அண்ணா அரசினர் பண்ணையில் இருந்துதான் பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் புஞ்சை தானிய விதைகளை அதிகமாக தருவதற்கு இருக்கின்ற பண்ணைகளை மேம்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, அறந்தாங்கிப் பகுதியில் நாட்டுமங்கலத்தில் ஒரு விவசாயப் பண்ணை இருக்கிறது. அதை மூடுகின்ற நிலைமை ஏற்பட்டது. அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இன்றைக்கு திரும்பவும் செயல்பட்டு வருகிறது. அந்தப் பண்ணைக்கு நான்கு கிணறுகள் அமைக்கப்படவேண்டும். 150 ஏக்கர் பரப்புள்ள புஞ்சை தானிய நிலம் இருக்கிறது. இப்போது ஒரு கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று கிணறுகளையும் அமைத்து, அந்தப் பண்ணையை நல்லமுறையில் இயங்கச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட குறுவை சாகுபடியாளர்களுக்கு முக்கியமாக இருக்கின்ற ஒரு கஷ்டத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைய தினம் போக்குவரத்துச் சாலைகளை அந்த மாவட்ட மக்கள் களங்களாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதனால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. வாகனங்கள் சிலசமயங்களில்

பழுதடைந்து விடுகின்றன. இன்னும் சில சமயங்களில் வாகனங்கள் வருவதை கவனிக்கமுடியாத நிலையில், விவசாயிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுகிறது. அந்தக் குறையைப் போக்குவதற்கு 100 ஏக்கர் அல்லது 200 ஏக்கர் அளவில் உள்ள நிலப்பகுதிக்கு ஒரு களமாவது அமைக்கவேண்டும். அப்படி களம் அமைப்பதற்கு தனிப்பட்டவர்களிடமிருந்து நிலத்தை வாங்கியாவது களம் அமைத்துத் தருவதற்கு ஒரு சிறப்பான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட இடத்திலே விவசாயத்தில் அதிக வருமானம் கிடைத்தாலும் ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் என்ற அளவில்தான் கிடைக்கிறது. அதை உணர்ந்துதானே என்னவோ இன்று தஞ்சை மாவட்டத்திலே உள்ள நஞ்சை, புஞ்சை நிலச் சொந்தக்காரர்கள் எல்லாம் தென்னை மரங்களை நட்டுவருகின்றனர். அதைத் தடுத்து, நன்செய் நிலத்திலாவது தென்னை பயிரிடக்கூடாது என்று ஒரு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றோம் என்ற பெருமை இருந்தாலும் கூட, கந்தர்வகோட்டை, அறந்தாங்கி, சிரமங்கலம் ஆகிய பகுதிகள் அடங்கிய புதுக்கோட்டைப் பகுதி வறட்சி மிக்க இடமாக இருக்கிறது. இப்படிப்பட்ட அந்தத் தொகுதிக்கு நலம் பயக்கும் வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, மத்திய அரசின் உதவியுடன் செயல்பட இருக்கிறோம் என்று முன்பு இருந்த வேளாண்மை அமைச்சரவர்கள் கூறியிருந்தார்கள். அதை மனதிலேக்கொண்டு, நிச்சயமாக அந்தப் பகுதிக்கு அந்தச் சிறப்புத் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்லணையில் இருந்து அறந்தாங்கி வட்டத்தில் இருக்கிற கடைமடைப்பகுதி மும்பாலை வரை கல்லணைக் கால்வாயின் ஒரு கரையை அகலப்படுத்தித் தரவேண்டும்.

தஞ்சாவூரில் இருந்து வெட்டிகாடு வரை, கல்லணையில் இருந்து திருக்காட்டுப்பள்ளி வரை இன்றையதினம் இந்தக் கால்வாயின் கரையில் பஸ்கள் செல்கின்றன. அந்த பஸ் ரூட்டை மும்பாலை வரை நீட்டித்துத் தந்து, அதை ஒரு பெரும்சாலையாக ஆக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் பாம்பாறு, வெள்ளாறு போன்ற காட்டாறுகள் இருக்கின்றன. பாம்பாற்றில் களபம், திருப்பணவாசல், வெள்ளாற்றில் கீரனூர், வீரமங்கலம், திருநாளூர் ஆற்றில் திருநாளூரில், மருதங்குடி ஆற்றில் மாங்குடி, மருதங்குடி ஆகிய இடங்களில் அணைகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிணறுகளை ஆழத்தோண்ட வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் தோண்டு கருவிகள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் வேளாண்மைத்துறை இலாக்கா மூலம் கொடுக்கின்றபோது என்ன



வாடகை வாங்குகிறார்களோ அதைவிட அதிகமாக வாடகை வாங்குகிறார்கள். வேளாண்மைத் தொழில் கழகத்திலும் வேளாண்மைத்துறை இலாக்கா வாங்குகிற வாடகையே வாங்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத்துறை ஓரளவுக்கு பஞ்சாயத்து யூனியன்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பல அலுவல்களை இன்றையதினம் கவனித்து வருகிற பஞ்சாயத்து யூனியன்கள் ஓரளவுக்கு இதிலும் கவனம் செலுத்துகிறார்களே தவிர வேளாண்மைத்துறைக்கு சிறப்பான முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அந்தப் பகுதிகளில் உள்ள கிராம நல ஊழியர்கள் எல்லாம் வேளாண்மையிலேயே ஈடுபடுத்தப்படவேண்டும் என்பதாக சமீபத்தில் 1805 அரசு ஆணை கூடப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிலர் கூட அந்த ஆணைக்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. அதற்குமாறாக நிச்சயமாக கிராம நல ஊழியர்கள் விவசாயத்திற்கு மட்டும் பணியாற்றுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட விவசாய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகின்றேன்.

விவசாயத்துறையானது இன்றைக்குப் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய துறையாக நடைபெறுகின்றது. விவசாயத்துறை, மின்சாரத்துறை, பொதுப் பணித்துறை, சட்டத்துறை, தொழிலாளர் நலத்துறை, கூட்டுறவுத்துறை என்பதாக பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படவேண்டியதாக இருக்கிறது. இவ்வளவு துறைகளையும் உள்ளடக்கிய ஒன்று இன்று பீடு நடை போடுகின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருப்பதற்குக் காரணம்— ஒரு உதாரணம் சொல்வார்கள். மெழுகுவர்த்தி தன்னைத்தானே உருக்கிக்கொண்டு பிறருக்கு வெளிச்சத்தைத்தருகிறது— என்பதாக. அதுபோல இன்றையதினம் மற்றவர்களுக்கு எல்லாம் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்துகொடுக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் அளவில் பொருளாதார நிலையிலோ, வாழ்க்கை வசதிகளை மற்றவர்களைப் போல பெறுகின்ற நிலையிலோ முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு” என்பதாக வள்ளுவப் பெருந்தகையார் சொன்னார். நாம் நாட்டிலே பசுமைப் புரட்சியை உண்டாக்க பல்வேறு சிறப்புத் திட்டங்களைப் போட்டு செயல்படுத்தி வருவதன் காரணத்தினால் உணவு பஞ்சத்தை பெரும் அளவு போக்கியிருக்கிறோம் என்பது உண்மைதான். ஆயினும் இந்த நேரத்தில் விவசாயத் தொழிலாளர்களின் நிலை என்ன? விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க மறந்துவிட்டோம். இன்றையதினம் விவசாயத்துறையில் உள்ளவர்கள் நாளைக்கு இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய் கூட வருமானம் இல்லாது இருக்கிறார்கள். ஆலைத்தொழிலாளர்களுக்குச் சம்பளம் போதவில்லை—

எல்லோரும் சொல்கிறார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டும்—வெட்டுத் தீர்மானங்களே தருகிறார்கள். அவ்வாறு எல்லாம் சொல்வதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இன்றைய தினம் விவசாயிகளுடைய நிலைமை என்ன என்பதை அனைத்துக்கட்சித் தலைவர்களும் ஆராய்ந்து பார்த்து அவர்களுடைய சொந்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு பொதுக் கருத்தினைப் பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு ஒரு கட்டுபடியாகக் கூடிய விலை நிர்ணயம் இல்லை. ஒரு பம்பு செட்டை உற்பத்தி செய்கிற தொழிலதிபர் அதன் விலையை நிர்ணயிக்கின்ற தகுதியைப் பெற்றிருக்கிறார். உற்பத்தி செய்கின்ற பருத்தியைக்கொண்டு துணிகள் உற்பத்தி செய்கிற ஆலை முதலாளி துணியின் விலையை நிர்ணயிக்கிற உரிமை பெற்றிருக்கிறார். ஆனால் இன்றையதினம் விவசாயி தான் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு தனக்குக் கட்டுபடியாகும் விலையை நிர்ணயிக்க உரிமை இருக்கிறதா? அண்மையில் பருத்தி ஆலை வேலை நிறுத்தம் என்றார்கள்.

இன்றையதினம் 450-க்கு விற்ற பருத்தி ரூ. 250-க்கு விலை சரிந்து கேட்பாரற்றுக் கிடக்கிறது. இதனால் விவசாயிகள் அடைந்த கடன் தொல்லை எவ்வளவு? இதுபோன்று விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக மார்க்கெட்டிங் கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அது நடைமுறையில் விவசாயிகளுக்குப் பயன்படவேண்டுமென்றால் விவசாயிகளுக்கு அது ஒரு 60 சத வீதம், 70 சத வீதம் கடன் தருகிற அளவு மாற்றி அமைக்கவும் பரிசீலனை செய்தாகவேண்டும்.

அதேபோல விவசாயத்திற்காக குளம் குட்டைகள் தூர் எடுக்கப் படுகின்றன. பொதுப்பணித்துறையின் மூலமாகவும், விவசாய என்ஜினியரிங் துறை மூலமாகவும் புல்டோசர்கள் கேட்டால் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்கிறார்கள். அது கிடைக்காத காரணத்தினால் குளம் குட்டைகள் எல்லாம் மேலெழுந்தவாரியாகத்தான் மராமத்து செய்யப் படுகிறது. ஆழத் தூர் வாருவதற்கு புல்டோசர்கள் எல்லாம் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய உபதொழிலாக கோழி வளர்ப்பு இருக்கிறது. இன்றையதினம் அவர்கள் தங்கள் வீட்டு முட்டைகளை மின்சாரத்துறையில் குஞ்சாகப் பொரிப்பதற்குக் கொடுக்கிறபோது அதிகமான கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படியின்றி விவசாயிகளுக்கென்று குறைவாகக் கட்டணம் வசூலிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் ஐம்முகண்ட பள்ளம் இருக்கிறது. எட்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போன ஆண்டே போடப்பட்ட திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை. அதை மீண்டும் துரிதமாகத் துவங்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்கனூர் பள்ளத்தில் வெள்ள காலத்தில்—பள்ளிமடையில் குறுக்கே அணைகட்டினால்—அங்கங்கே உள்ள கிணறு களிலாவது தண்ணீர் ஊறுகின்ற தன்மை உருவாகும்.





இன்னொன்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம் என்று கருதுகிறேன். மைனர் இறிகேஷனுக்காக 1971–72-ல் ரூ. 29·45 லட்சம் ஒதுக்கப்பட்டது என்றால் 1972–73-ல் ரூ. 28·92 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இது குறைக்கப்படுவதன் காரணமாக குளம், குட்டைகள், ஏரி முதலியன தூர் எடுக்க முடியாமல், மைனர் இறிகேஷன் ஏற்பாடுகள் நடைபெறுவதற்குத் தடை ஏற்படும் என்று கருதி, அதற்கு மேலும் நிதி உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை விவசாயத்திற்கு இன்றியமையாதது. கால்நடைகளை வளர்ப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், கால்நடைத் தீவனம் மலிவான விலையில் கிடைப்பதற்கும் அரசு சிறப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும். மத்திய சர்க்காரால் உரத்திற்கும், மற்றும் பம்பு செட் ஆகியவற்றிற்கெல்லாம் வரி அதிகமாகப் போடப்பட்டிருப்பதால் விவசாயிகள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, விவசாயிகளின் இன்னல்களைப் போக்குவதற்காக நமது அரசு இதையெல்லாம் மத்திய அரசிடம் தெரிவித்து அவற்றின் வரிப் பளுவை குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் மேலும் அதிக அளவில் கம்போஸ்ட் உரத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, விவசாயிகளை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு ஆ. கருப்பையா**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயத் துறை மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத் துறையிலே தமிழகம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பண்டைய புலவர்கள் பாடியதைத் தான் நாம் இதுவரை படித்திருக்கிறோம். அப்படி ஒரு காலம் தமிழகத்தில் வருமா என்று எதிர்பார்த்தது உண்டு. அந்த நன்னாளை நாம் இவறையதினம் காண்கிறோம்

"கட்டு கலம் காணும்
கதிர் உழக்கு நெல் காணும்
அறுதாள் அறுத்து
மறுதாள் பயிராகும்"

என்று பாடி வைத்த பாடல்கள் எல்லாம் உண்மை என்று நமக்குத் தெரிவிக்கின்ற வகையில் ஐ.ஆர். 8 போன்ற ரகங்கள் இன்று நல்ல விளைச்சலைத் தந்து வருகின்றன.

அதுமட்டுமல்ல, "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த தமிழ் நாடு" என்று பாடிவைத்தார்கள் பண்டையப் புலவர்கள். இன்றைக்கு யானையைக் கட்டிப் போரடிக்க யானை கிடைக்காவிட்டாலும், டிராக்டர் வைத்து போரடிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடு நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது. இதற்காக நாம் பெருமைப்படுகிறோம், இந்த அரசைப் பாராட்டுகிறோம்.

விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள், தாம் விவசாயத்தில் போடுகின்ற முதலை எப்படியாவது எடுத்துவிடலாம் என்ற நோக்கோடு செயல்படுகிறார்கள். எங்கள் பகுதியில் விவசாயம் மூன்று வகையாக நடத்தப்படுகிறது. ஒரு வகை இறைவைப் பாசனத்தின் மூலம் விவசாயம் நடைபெறுகிறது.; இன்னொரு வகை வானம் பார்த்து, மழையை நம்பி விவசாயம் நடப்பது ; மூன்றாவது வகை ஆற்றுப் பாசனத்திலிருந்து வருகின்ற தண்ணீரைக் கொண்டு நடப்பது. இந்த மூன்று வகைகளையும் பார்க்கும்போது ஆற்றுப் பாசனத்தினால் நடத்தப் பெறும் விவசாயத்தில், தாங்கள் எப்படியும் போட்ட முதலை எடுத்துவிடலாம் என்று நம்புவதற்கு இடம் இருக்கிறது.

இரண்டாவதாக, மானாவாரிப் பயிர்கள் அதாவது வானத்தை எதிர் பார்த்து மழை வராதா என்று அண்ணாந்து பார்த்துக்கொண்டு, மழையை நம்பிப் பயிரிடும் விவசாயி போட்ட முதலை எடுப்பது மழையை— வானத்தைப் பொறுத்திருக்கிறது.

மூன்றாவதாக இறைவைப் பாசனத்தில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயி தான் இட்ட பயிர் விளைந்து கதிர் அறுப்பதற்கு வரையிலுமாவது கிணற்றில் தண்ணீர் இருக்குமா, இருக்காதா என்ற பயத்துடனே, கிணற்றுத் தண்ணீரை நம்பிக்கொண்டு பயப்பட்டுக்கொண்டே இருக்கிறான். இப்படிப் பட்ட நிலைமைகளில்தான் விவசாயி, விவசாயம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கெல்லாம் பயிர் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விவசாயம் மூன்று பகுதிகளாக நடைபெறு கிறது. ஒன்று தாமிரவருணி ஆற்றுப் பாசனம் கொண்ட பகுதி, இரண்டா வது மழையை நம்பியிருக்கும் பகுதி. சங்கரன்கோவில், மானூர் போன்ற பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கிறது. இன்றைக்கு தாமிர வருணி ஆற்றுப் பாசனம் பெறக்கூடிய விவசாயிகள் நல்ல முறையில் பயிர் செய்து மிகுந்த விளைச்சலை விளைவிக்கிறார்கள். மானூர் பகுதியில் கிணற்றை நம்பியிருக்கிறார்கள். மணமேடையிலிருந்த மணமகளை இழந்து தவித்த குடும்பம் போல அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள் நாம் இட்ட பயிரை காப்பாற்றிவிடலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். ஒரு பானையிலே தண்ணீர் வைத்து ஒரு சிறு துவாரம் இட்டு அதில் உள்ள தண்ணீர் வடியும் மட்டும்தான் ஒரு விவசாயிக்கு மீட்டர் சிஸ்டம் வைத்து குளத்தில் இருக்கும் தண்ணீரை முடியும் வரையில் மேலுக்குக் கொண்டு வந்து பயிரைக்காப்பாற்ற முயற்சிகள் எடுத்துக் கொண்டோம் ஆனால், பயிரை எங்களால் காப்பாற்ற முடியவில்லை.

சென்ற நவம்பரில் பெய்த மழையால் ஏரியை நம்பி விவசாயிகள் உரம் வாங்குவதற்கு, மற்றவற்றிற்கு என்று ஆயிரம் ரூபாய் வரையிலும் கடன் வாங்கியிருக்கிறார்கள். இப்போது திருப்பிக் கொடுக்க வகையில்லா மல் தவிக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் வாங்கிய கடனை இப்பொழுது வசூலிக்காமல் தள்ளி வைக்க வேண்டும். முக்கியமாக மானூர் பகுதி விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 1956-ம் ஆண்டு பூச்சி மருந்து அடித்ததற்கு, அதை வசூலிக்க வேண்டுமென்று வசூலிக் கிறார்கள். அதை வசூலிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கெடுபிடியாக இருக்கிறார். ஆகவே, அதையும் தள்ளி வைக்கவேண்டும்



அடுத்தபடியாக, எல்லாக் குளங்களையும் அரசாங்கமே மராமத்து செய்ய வேண்டும். தண்ணீர் உரிமையின் பேரில் மிராசுதாரர்கள் குளங்களை மீன் பிடிப்பதற்காக ஏலத்திற்கு விட்டு விடுகிறார்கள். குளங்களை குத்தகைக்கு எடுத்தவர்கள் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை) மீன் மகசூலை எடுப்பதற்காக குளத்திலுள்ள தண்ணீரை இறைத்து விடுகிறார்கள். ஆகவே, அரசாங்கமே அந்தக் குளங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். பின்னர் அதை அந்தந்த பஞ்சாயத்துக்களின் கையில் கொடுத்து பஞ்சாயத்து ஏலம் விடுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். அதனால் கிராம குளங் களை குடி மராமத்து செய்ய வசதியாய் இருக்கும்.

இன்றைக்கு நாம் குத்தகை வாரச் சட்டம் கொண்டு வந்த காரணத்தால் விவசாயிகள் பாராட்டுகிறார்கள். மடாலயங்கள், அன்ன சத்திரங்கள் பேரால் இருக்கின்ற நிலங்களுக்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவேண்டும். அந்த நிலங்களை உழுது பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் தருகின்ற கடன்கள் கிடைப்பதில்லை. மேலும், தங்களை நிலங்களி லிருந்து வெளியேற்றி விடுவார்களோ என்றும் பயப்படுகிறார்கள். அந்த மடாலயங்களின் டிரஷரர்கள், "குறிப்பிட்ட இந்த விவசாயி இந்த நிலத்தில் பயிரிடுகிறார்" என்று சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத் தால் தான் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். ஆகவே, அந்த மடாலயங்களுக்குள்ள நிலங்களையும் அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, சேர்வலாறு திட்டம் மின்சாரத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் மானாவாரிக் குளங்களுக்கு தண்ணீர் கிடைக்கும். மானாவாரிக் குளங் களுக்குத் தண்ணீர் கொண்டுவந்தால் தண்ணீர்க் கஷ்டம் நீங்கும். தாமிர வருணி ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்டினால் இந்தத் தண்ணீர்க் கஷ்டம் இல்லாமல் இருக்கும். மேலும் குளங்களிலுள்ள தூர் எடுக்க வேண்டும். மானூர் குளம் 1,100 ஏக்கருக்கான நீர் அளவைக் கொண்டதாகும். 600 ஏக்கருக்கான நீர் அளவைக் கொண்டது கங்கைகொண்டான் குளம். இந்தக் குளங்களையும் தூர் எடுக்கவேண்டும். தாமிரவருணி ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டினால் இந்தக் குளங்கள் நிரம்பி, விவசாயம் நல்ல முறை யில் அபிவிருத்தியடையும் என்பதைச் சொல்லிக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. கோ. சிவபெருமான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அரியலூர் தொகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் தமிழக அரசு வந்த பிறகுதான் தங்களுடைய கிணறுகளுக்குத் தேவையான மோட்டார் பம்பு செட்டுகள் நல்ல ரக உரம் போன்றவற்றை சர்க்கார் மூலமாக உதவி பெற்று, நல்ல முறையில் விவசாயத்தை உற்பத்தி செய்யக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். ஆனால் இந்த ஆண்டு பருவ மழை நல்ல நேரத் தில் பெய்தும், பயிர்கள் வளமாக வளர்ந்திருந்த நேரத்தில் பலத்த

மழையின் காரணமாக அந்தப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. புஞ்சை நிலங்களில் பயிராகும் சோளம், கம்பு, வரகு, ராகி போன்ற பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மிளகாய் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக விளையக் கூடிய அந்தப் பயிர்கள் விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. காரணம், விடாத மழை பெய்ததுதான். பாதிக்கப்பட்ட பயிர்களினால் விவசாயிகளுக்கு அதிக கஷ்டமாக இருக்கிறது.

மேலும் அரசாங்கத்திலிருந்து விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு என்னுடைய தொகுதியில் சில கிராமங்களில் இந்த ஆண்டு கடன்களை வசூல் செய்வதை ஒத்தி வைத்து, அடுத்த ஆண்டு வசூலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான அனுமதியை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் ஆற்றுப் பாசனம் அதிகம் இல்லையென்று சொன்னார்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர் வட்டம், உடையார்பாளையம் வட்டம், ஆகியவை வானத்தை எதிர்பார்த்திருக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஆடி மாதத்தில் எப்போது பருவ மழை பெய்யும் என்று வானத்தை எதிர் பார்த்திருக்கிற நிலைமை இருக்கிறது. ஏராளமான ஏரிகள் இருந்தும் எங்களுக்குப் பயன்படவில்லை.

பிற்பகல் 1-00.

குறிப்பாக அரியலூர் பகுதியில் இலந்தகுளம் என்ற ஏரி இருக்கிறது. அது பெரிய ஏரி. அந்த ஏரியைச் சுற்றி ஆயிரக்கணக்கான எக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அந்த ஏரி மண்மேடிட்டு இருக்கிறது. அந்த ஏரியை அரசு தூர் வாரினால் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள், பொன் விளையக்கூடிய பூமியாக இருக்கிறது. தொடர்ந்து பயிர் செய்ய முடியும். கரும்பு பயிர் செய்யப்படுகிறது. நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சில சமயங்களிலே தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக மகசூல் குறைந்து விடுகிறது. எனவே அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பகுதி நல்ல வளம் உள்ள பகுதியாக இருக்கும்.

புள்ளம்பாடி வாய்க்காலை நம்பி சுக்கிரன் ஏரி என்ற ஏரி இருக்கிறது. நான் முன்னாலேயே குறிப்பிட்டபடி அருங்கால் ஓடைத் திட்டத்தின் கீழ் அந்த அருங்கால் ஓடைக்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டிவிட்டால் இந்தச் சுக்கிரன் ஏரிக்குத் தண்ணீர் கிடைக்கும். அதன் மூலம் பயன் கிடைக்கும்.

எங்கள் பகுதியிலே ஓடக்கூடிய ஒரு பெரிய ஆறு மருதை ஆறு. ஓ. வி. அளகேசன் மத்திய அமைச்சராக இருந்தபோது ரயில் கவிழ்ந்ததே அந்த ஆறு தான். அந்த ஆறும் வஞ்சியாறும் கலக்கின்ற இடத்திலே—ரயில் கவிழ்ந்த ஆறு மருதையாறு—ஒரு நீர்த்தேக்கம் கட்டலாம். மருதையாற்றிலே ரயில் கவிழ்ந்தது உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்த இரண்டு ஆறுகளும் கலந்து தண்ணீர் எந்த விதமானப் பயனும் இன்றி கொள்ளிடத்திலே விழக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. எனவே வஞ்சியாறும், மருதையாறும் ஒன்றாகக் கலக்கின்ற இடத்திலே ஒரு நீர்த் தேக்கம் ஏற்படுத்தினால் அந்த இரண்டொரு வட்டங்களில் இருக்கக்கூடிய புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அந்தப் பகுதி வளமுள்ள பகுதியாக மாறும்.





எங்கள் பகுதியிலே நாகமங்கலம் ஏரி, கடுகூர் ஏரி, சித்தேரி, குறிஞ்சாகுளம் ஏரி என்று பல பெரிய பெரிய ஏரிகள் எல்லாம் இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் சரி செய்வது என்றால் யூனியன்கள் மூலம் செய்யமுடியாது. அவற்றைப் பராமரிப்பதற்கு 1,000 ரூபாய் அல்லது 2,000 ரூபாய் தான் யூனியன்களால் கொடுக்கமுடியும். அது எப்படி என்றால் யானைக்கு அல்வா போடுவது போல் தான் இருக்கிறது. எனவே ஒரு லட்சம் ரூபாய், இரண்டு லட்சம் ரூபாய் தேவைப்படுகிற திட்டங்களுக்கு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் சாதாரணமாக உடைப்பை அடைப்பதற்குக் கூட போதாது. ஒன்று அந்த ஏரிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது அதிகமான தொகை கொடுத்து பராமரிக்கச் செய்ய வேண்டும். எங்கள் பகுதியிலே பருவ மழை அதிகமாகப் பெய்ததால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சார மோட்டார்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகளாக மின்சார இணைப்பு சில கிராமங்களிலே கிடைக்கவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மின் இணைப்புகள் கொடுக்கச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து சொசைடிகள் மூலம் கடன்கள் வழங்கக் கூடிய நிலைமையைச் செய்தால், அந்த வறண்ட பகுதி வளமான பகுதியாக ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு விவசாயிகளுக்கு பல நன்மைகளைச் செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது. எங்கள் பகுதியிலே அதிக மழையினால் பாதகம் இல்லாமலிருந்தால் எங்களுடைய பகுதிக்கு அரசு கொடுக்கிற கடன், அரசு கொடுக்கிற மின்சாரம் அத்தனையும் நல்ல முறையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சிக்கார நண்பர்கள் விலைவாசி ஏறிவிட்டது, விலைவாசி ஏறி விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் ஆறு அவுன்ஸ் கொடுத்தார்கள் என்ற நிலைமையைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உணவு உற்பத்தியிலே முன்னேற்றப்பாதையிலே இந்த அரசு அதிகமாகச் செய்துகொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது சில பெரிய மனிதர்கள் விவசாயிகளிடத்தில் சென்று தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். விலை குறைந்து விட்டது என்று சொல்கிறார்கள். அதே சமயத்திலே தொழிலாளர்கள் மத்தியிலே விலை ஏறிவிட்டது, அதிக ஊதியம் தேவை என்றும் சொல்கிறார்கள். தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் தேவை தான், நான் மறுக்கவில்லை. ஆனால் விவசாயிகள் மத்தியிலே விலை பற்றாது உங்களுக்கு அதிக லாபம் வரவில்லை என்று சொல்லி அப்பாவி விவசாய மக்களை ஏமாற்றக்கூடிய முறையில் இடத்திற்கு இடம் நிறம் மாறும் பச்சோந்தியைப் போல் பேசக்கூடிய முறையிலே இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் கள்ளுக்கடை வைத்து விட்டதால் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** விவசாய மானியத்திலா அதைப்பற்றிப் பேசவேண்டும் ? ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் 6 அவுன்ஸ் கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். நாங்களாவது ஆறு அவுன்ஸ் கொடுத்தோம். நீங்கள் 5 அவுன்ஸ் கூட இன்றைக்குக் கொடுக்கவில்லை. விவசாயிகள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசவேண்டுமே தவிர பச்சோந்தி

என்று பேசுவது சரியல்ல. பச்சோந்தி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு நியாயம் கிடையாது. எனவே, தயவுசெய்து குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. சிவபெருமான் :** மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியிலே விவசாயிகளுக்கு நன்மை இல்லை. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்ன காரணத்தினாலே தான் நான் அதைச் சொன்னேன். இந்த அரசு இத்தனையும் செய்து இருக்கிற நேரத்திலே முன்னேற்றப்பாதையிலே சென்று கொண்டிருக்கின்ற நேரத்திலே இப்படியெல்லாம் ஏன் பேச வேண்டுமென்றுதான் கேட்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே கள் அருந்தச் சொல்லி கெடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவுக்குச் சொல்லக்கூடிய நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தமிழக அரசு மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நல்ல முறையிலே விவசாயிகளுக்கு உதவி செய்கிறது என்பதைத் தேர்தல்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. கிராம மக்கள் எல்லாம் தமிழக அரசை வரவேற்கக்கூடிய நிலைமை, டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வாக்குகளை அளித்து தமிழக அரசை ஏற்படுத்தி இருக்கிறார்கள், நல்ல முறையிலே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதைச் சொல்லாமல் இல்லாததை எல்லாம் எடுத்துச் சொல்லிக்கொள்ளக்கூடாது. அம்மையார் அவர்கள் காலத்தில் ஆறு அவுன்ஸ் என்று சொன்னார்கள். உங்கள் காலத்திலே பையை கக்கத்திலே வைத்துக்கொண்டு பகல் நேரத்திலே சென்று வாங்கக்கூடிய நிலைமை இல்லாமல் இரவு நேரத்தில் குறுக்கு வழியில் வாங்கினார்கள். என்னைவிட அதிகமாக அரசியல் தெரிந்தவர்கள், படித்தவர்கள், வக்கீலாக இருக்கின்ற அம்மையார் அவர்களுக்குத் தெரியாததா எனக்குத் தெரிந்து விடப்போகிறது ? இன்றைக்கு எங்கு பார்த்தாலும் எந்த எந்த ரக அரிசி இருக்கிறதோ அவையெல்லாம் கிடைக்கின்றன. தானிய வகைகள் எந்த எந்த ரகம் தேவையோ அந்த ரகம் எல்லாம் இருக்கின்றன. இரவு பன்னிரண்டு மணிக்குக் கூட அரிசி வாங்கலாம். வாங்குவதற்கு ஆள் இல்லை. தானியத்தை விட அரிசி சாப்பிடுகிறவர்கள் தான் அதிகம். நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் நான் சிறிய வியாபாரி. நான் வியாபாரியாக இருப்பதால் தானியத்தின் விலையும், விவசாயிகளின் நிலையும், உற்பத்தியின் விலையும், விவசாயப் பொருட்களின் விலையும், அவர்கள் எந்த அளவில் இருக்கிறார்கள் என்று நான் புரிந்துகொண்டிருப்பதால் தான் எடுத்துக் கூறினேனே தவிர அம்மையார் அவர்களுக்காக வேண்டுமென்றே கூறவில்லை என்பதைக் கூறிக்கொண்டு, மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் வருங்காலத்தில் இன்னும் அதிகப் பலன் ஏற்படும் என்று கூறிக்கொண்டு—நான் துதி பாடவில்லை, அம்மையார் அவர்கள் துதி பாடுவதாகக் கூறினார்கள், துதி பாடக் கூடியவர்கள் வேறு வேண்டுமானால் இருக்கலாம். உண்மையை எடுத்துச் சொல்லும் நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம் என்று கூறிக்கொண்டு—விடை பெறுகிறேன்.





***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த வேளாண்மை மானியத்தின் பேரிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன்.

நாட்டிலேயிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் வளர்ச்சிக் குறைவு, வாழ்க்கைத் தரம் குறைவு இவைகளையெல்லாம் ஈடு செய்ய வேண்டுமென்று சொன்னால் வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்து வேளாண்மையை அபிவிருத்தி செய்வதைத் தவிர நாட்டிலே வேறு வழி கிடையாது. ஆகவே, இந்த வேளாண்மை மானியத்திற்கு இன்னும் அதிகப்படியான கவனத்தை—ஓரளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்றாலும்—இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தார் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக நிலப்படை ஒன்றை அமைக்க வேண்டுமென்று வெகு நீண்ட காலமாக கருத்துக் கூறப்பட்டு வந்திருக்கிறது. படித்தவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டியதிலே விவசாயத் துறையிலே வேலை கொடுக்க உதவியாக இருக்கும். நாட்டிலே இன்னும் பல்லாயிரக்கணக்கான நிலங்கள் தரிசாக இருக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களையெல்லாம் ஒருமிக்க சாகுபடிக்குக் கொண்டு வரக்கூடிய தீவிர முயற்சியிலே அரசாங்கம் இறங்கினால் அது ரொம்பப் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தில் தான் இந்த நிலப்படை அமைப்பைப் பற்றி நான் கூறுகிறேன். அதிகமாகப் படித்தவர்கள் முன் வரவில்லை என்றாலுங்கூட, ஏதோ ஓரளவிற்கு வசதியிருக்கிறவர்கள் முன் வரவில்லை என்றாலும் கூட, எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படித்து விட்டு, வேலையில்லாமல், தினம் எனக்கு 3 ரூபாய் சம்பளம் கொடுத்தால் போதும் என்று அலையும் வாலிபர்கள் இருக்கிறார்கள். அந்த வாலிபர்களை ஒருங்கிணைத்து இந்த நிலப்படை அமைத்து, தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருகின்ற பெரு முயற்சியில் ஈடுபட வேண்டும். எத்தனையோ பல திட்டங்களுக்கு நாம் ரூபாய்களை ஒதுக்குகிறோம். அதேபோல் இந்த நிலப்படைக்கு ஒரு ஐந்து கோடி ரூபாய் மூலதனம் வைத்து, அதை ஆரம்பித்தால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். அதிலே அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு விவசாயி என்ற முறையிலே எனக்குக் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்பொழுது ஒரு குடும்பத்துக்கு இரண்டு ஏக்கர் நிலத்தை ஒழுங்காக கணவனும், மனைவியும் தினம் ஒன்றுக்கு 6 மணி நேரம் வேலை செய்தால், ஆபீசிலே 8 மணி நேரம் வேலை செய்வது, தொழிற்சாலையிலே 8 மணி நேரம் செய்வது என்பது போல் கூட இல்லாமல், 6 மணி நேரம் வீதம் வேலை செய்தால் வருஷத்திற்கு 250 நாட்கள் அல்லது 260 நாட்கள் வேலை செய்தால் அந்தக் குடும்பத்திற்கு 250 அல்லது 300 ரூபாய் மாதத்திற்கு வருவாய் கிடைப்பதற்கு வழிவகையை நாம் செய்ய முடியும். இதை நான் தத்துவமாகச் சொல்லவில்லை. அனுபவ ரீதியாகச் சொல்கிறேன்., இதைச் செய்ய முடியும். தஞ்சை மாவட்டத்திலேயும் செய்யலாம். தண்ணீர் மட்டும் நல்ல தண்ணீராகக் கிடைத்தால் செய்ய முடியும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 25]

ஆகவே தான் நான் கூறுகிறேன், பத்தாயிரம் ஏக்கர் நிலங்களைப் பரீட்சார்த்தமாக எடுத்துக்கொண்டு 5,000 பேர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் தேவைப்படும். அந்த மூலதனத்தைக்கொண்டு அந்த 10,000 ஏக்கர்களில் வேலையை ஆரம்பித்தால் நாம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 250 ரூபாய் மாத வருவாய் கிடைக்கும் நிலையை ஏற்படுத்த முடியும். இன்னும் என்னைக் கேட்டால் இரண்டு ஏக்கர் என்று வைத்துக்கொண்டு தனியாகச் சாகுபடி செய்வதை விட 50 குடும்பங்களுக்கு 100 ஏக்கர் என்று வைத்துச் செய்தால் 350 ரூபாய் மாதம் ஒன்றுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. இதை நான் இப்பொழுது சொல்கிறேன். அடுத்த ஆண்டு பிராக்டிகலாக உங்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சென்று காண்பிக்கின்ற நிலையும் வரலாம். ஏனென்றால் விவசாயத்திற்கு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருப்பதெல்லாம் போதாது என்றெல்லாம் பல பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் 10 ஏக்கரே போதும். முறைப்படி செய்ய வேண்டும், நிலம் எவ்வளவு அதிகம் என்பது பிரச்னை அல்ல, ஒழுங்கான முறையில் செய்ய வேண்டுமென்பது தான் பிரச்னை. விஞ்ஞான ரீதியில் செய்ய வேண்டும். விஞ்ஞான ரீதியாக, ஒழுங்காகச் செய்யவில்லையென்றால் 100 ஏக்கர் கொடுத்தாலும் வருவாய் கிடைக்காது. ஒழுங்காக 10 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் கிட்டத்தட்ட 20,000 ரூபாய் எடுக்க முடியும் என்ற அளவில் மாடல் பண்ணையைத் தயார் செய்திருக்கிறேன். (குறுக்கீடு) தண்ணீர் இருக்கும் இடத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம். போர் வெல் வைத்தும் செய்யலாம். இருக்கும் இடத்திலேயே நாம் இன்னும் செய்யவில்லையே. தஞ்சாவூர் மாவட்டத்தில் சரியானபடி, போர்வெல் போட்டு நான் மூன்று போகத்திற்குக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறேன். 12 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 25,000 ரூபாய் நிகர வருவாய் எடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார், 12 ஸ்டாண்டர்டு ஏக்கராவில் 25,000 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்களே, என்ன பயிர் செய்யப் போகிறார்கள், பணமாகவே பயிர் செய்யப்போகிறாரா அல்லது பயிராகச் செய்யப் போகிறாரா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அம்மையார் அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி அதிகமாகத் தெரியாது. அட்வகேட்டாகச் சென்னையில் இருப்பதால் தெரியாது. என்னுடைய வயலிலே......

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள், விவசாயிக்கு வாழ்க்கைப்பட்டவள். ஆகவே விவசாயத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** விவசாயம் என்பது வாயால் கேட்டுத் தெரிந்துகொள்வதல்ல. செயல் மூலம் தான் தெரிந்துகொள்ள முடியும். சென்னை நகரத்திலே விவசாயத்தைப் பார்க்க முடியாது. அம்மையார் அவர்கள் கேட்டதற்காகக் கூறுகிறேன். நெல் தான் பயிரிடுகிறேன்.



1972 மார்ச் 25] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இரண்டு போகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மூன்றாவது போகத்திற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) புஞ்சைப் பயிர் போட்டால் லாபம் வரும். ஆனால் என்னுடைய நிலமெல்லாம் ஊத்துக்கால் நிலம், ஆகையால் புன்செய்ப் பயிர் செய்ய முடியாது. 4 ஏக்கர் தென்னந்தோட்டம் வைத்திருக்கிறேன். குறிப்பாக நான் முன்னே சொன்ன கருத்துக்களை புதிதாக வந்திருக்கும் விவசாய அமைச்சரவர்கள் நிச்சயமாகக் கருத்திற்கொண்டு வேலை வாய்ப்பிற்காக நான் சொன்ன கருத்துக்களை ஆராய வேண்டும், அது பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக டிராக்டர்கள். வெறும் மாட்டை வைத்து அபிவிருத்தி செய்வது என்பது சிரமமான காரியம். டிராக்டர்களுக்கு உழவுக்கூலி ஜாஸ்தியாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு உழவுக்கு 30 ரூபாய் வரை கேட்கிறார்கள். 27 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால் 30 ரூபாய் வரை வாங்குகிறார்கள். அதை 25 ரூபாயாகக் குறைக்க வேண்டும். இரண்டு ஓட்டு ஓட்டிவிட்டு 30 ரூபாய் கொடுப்பது என்றால் சிரமமாக இருக்கிறது.

சிறு நிலக்காரர்கள் விலைக்கு வாங்கி உபயோகிக்கும் அளவில் குறைந்த அளவில் பவர் டிரில்லர்களைத் தயாரிக்க வேண்டும். 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள் பெரிய டிராக்டரை வாங்க வேண்டுமென்றால் 40,000 ரூபாய் வரையில் ஆகிறது. 10 ஏக்கர், 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள் அதற்கு முழு வேலையும் கொடுக்க முடியாது. நிர்வகிப்பதும் சிரமம். எனவே, சிறிய அளவில் 10 ஹார்ஸ் பவருக்கு முன்பு ஜப்பானிலிருந்து வந்திருந்தது. அம்மாதிரியான முறையிலே 10,000 ரூபாய்க்குள்ளே இருக்க வேண்டும். பத்து ஏக்கர் வைத்திருப்பவர்கள் 10,000 ரூபாயில் பவர் ட்ரில்லர் வாங்கிக்கொள்ள முடியும். ஆனால், 15,000 ரூபாய், 20,000 ரூபாய் என்று கொடுத்து வாங்குவதற்கு முடியாது. எனவே குறைந்த அளவில் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷனில் இருக்கிற தொழிற்சாலையில் ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பித்து பவர் ட்ரில்லர்களைக் குறைந்தவிலைக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் தீவிரமாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி பகுதிகளில் வெகுவாக கடன் தொகை வழங்கப்படுகிறது. கடற்கரை ஓரத்தில் தென்னை நன்றாக வரும் என்ற அளவிற்கு அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கடற்கரை ஓரங்களில் மட்டுமல்ல, உள்ளுக்குள்ளேயும் செம்மண் பகுதியில் தென்னை நன்றாக வரும்.

ஆகவே, என் பகுதியில் ஒரத்தநாடு தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஆலங்குடி தாலூகா போன்ற பகுதிகளையும் தீவிர தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுவதன்மூலம் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் தென்னை பயிர் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 25

தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவது போதுமானதாக இல்லை. தேவையான அளவுக்குத் தென்னங்கன்றுகளை அரசாங்கப் பண்ணையில் இருந்து கொடுக்க முடியவில்லை. ஆகவே, அதிகப்படியாக இரண்டொரு பண்ணைகளை ஏற்படுத்தி தென்னங்கன்றுகளை அதிகமாக உற்பத்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது பால்பண்ணை. பால்பண்ணையில் வருஷம் பூராவும் ஒரே சீராக உற்பத்தி இருப்பதில்லை. சில மாதங்களில் குறைவாகக் கிடைக்கிறது. சில மாதங்களில் அதிகமாகக் கிடைக்கிறது. அதிகமாகக் கிடைக்கும்போது கீழே இருக்கும் பெடரேஷனோ, சொசைடியோ அதிகமாகப் பால் கிடைக்கும் போது இவ்வளவு பால் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு : பால் பண்ணை டிமாண்ட் இன்று இல்லை) சொன்னது சொல்லிவிட்டேன். இதைப்பற்றிக் கூறி முடித்துவிடுகிறேன். இதனால் சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அதிகமாக பால் உற்பத்தி செய்யப்படுகின்ற காலத்தில் பால் பவுடர் தயாரிக்கும் ஃபாக்டரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு ரோடுகள் மார்க்கெட்டிங் செய்வதற்கு ரொம்பவும் அவசியம். விவசாயிகள் உரங்களைக் கொண்டுபோக ரொம்ப அவசியம். இதற்கான திட்டம் ஐந்து கோடிக்குப் போட்டு, மூன்று கோடியாகி, இப்போது 1½ கோடிக்கு வந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகத் தொகை பெற அரசு முயற்சிக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் முக்கியமாக இரண்டு இணைப்புச் சாலைகள் தேவை. அதிகாரிகள் மட்டத்தில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறேன். பட்டுக்கோட்டை தாலுகாவில் அணைக்காடு-பழஞ்சூர் ரோடு, ஒரத்தநாடு தாலுகாவில் கதம்பை-அலிவலம் ரோடு ஆகிய இரண்டையும் மார்க்கட்டிங் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முன்பு போர்வெல் போடுவதற்கு அரசாங்கமே பைப்புகளைக் கொடுத்து வந்தார்கள். இப்போது அரசாங்கம் பைப்புகளைக் கொடுப்பதில்லை. பம்ப் மட்டும் போடுகிறார்கள். வெளியிலிருந்து பைப் வாங்க வேண்டியிருக்கிறது. இதிலே ஒன்றும் அறியாத விவசாயிகள் ஏமாற்றப்படுகிறார்கள். ஏ க்ளாஸ் பைப் என்று சொல்லி பி. கிளாஸ் பைப்பைக் கொடுத்து விடுகிறார்கள். இதனால் பணம் செலவு பண்ணியும்கூட தரமான பைப்புகள் கிடைக்காத காரணத்தால் அரசாங்கமே இந்த பைப்புகளை சப்ளை செய்தால் தரமான பைப்புகளாகக் கொடுக்க முடிவதோடுகூட நியாயமான விலையிலும் கொடுக்க முடியும். லாண்ட் டெவலப்மென்ட் பாங்கில் லோன் சாங்ஷன் ஆனவுடன் பைப்களை சப்ளை செய்துவிட்டு நேரடியாக அரசாங்கம் லாண்ட் டெவலப்மெண்ட் பாங்கிலிருந்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இது விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். தவறுகள் நடப்பதைத் தவிர்க்க முடியும்.

மழையை நம்பி வாழக்கூடிய பகுதிகள் பல இருக்கின்றன. அங்கெல்லாம் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமலாக்குவது விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இதைப்பற்றி நீண்டநாளாகப் பேசிக் கொண்டு வருகிறோம். மத்திய அரசில் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை நமது தமிழ் நா



1972 மார்ச் 25] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

பூராவும் கொண்டு வரவில்லையென்றாலும், இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை மாவட்டம் போன்ற இரண்டு மூன்று மாவட்டங்களிலாவது, மழை இல்லாத காரணத்தால் பயிர்கள் கெட்டுப் போகக்கூடிய பகுதிகளிலாவது பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வர மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்த வேண்டும். அதேபோன்று கால் நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற முகத்தான் என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்......"

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறள் தந்த வள்ளுவன் சொன்னது மட்டுமல்ல ; இன்றைக்குக் கூட "ஏர் முனையில் பார் முழுதும்......" என்ற பண்ணை இசைத்து வருகிறோம். அதே நேரத்தில் இன்று நாட்டிலே இன்னொரு பழமொழியும் இருக்கிறது. "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்பது. ஆனால் இன்றையதினம் விவசாயிகள் கணக்குப் பார்க்கின்ற அளவிலாவது இருக்கின்றார்கள். உண்மையிலேயே மிஞ்சுகிறதா என்பது பிரச்சினை அல்ல ; ஆனால் இன்று நிச்சயமாக மிஞ்சுகிறது. விவசாயிகள் கணக்குப் பார்க்கத் தெரிந்து கொண்டார்கள் ; அந்த அளவிலே திருப்தி. இன்று விவசாயிகளுக்கான நல்ல தீவிரமான முன்னேற்றத் திட்டங்களை இந்த அரசு ஆக்கி வருகிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய நாடு விவசாய நாடாக இருந்தும் கூட, பற்றாக் குறையில் இருந்துவருகின்ற தன்மையைப் போக்க தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் நல்ல பல திட்டங்களை அமல் நடத்தியிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு நெல் உற்பத்தியில் ஐ.ஆர். 8, 20, 22, கருணா, பத்மா, விஜயா போன்ற அழகான பெயர்களை எல்லாம் கொண்ட நெல்லை உற்பத்தி செய்கிறோம். அழகான பெயரோடு கூட இவற்றிலிருந்து அதிகமான மகசூல் கிடைக்கிறது. விவசாயிகள் பெருமைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்குள்ள சில குறைபாடுகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஐ.ஆர். 8 நெல் முதல் ஆண்டில் நல்ல மகசூல் கொடுக்கிறது. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு அதனுடைய மகசூல் குறைந்து கொண்டே வருகிறது. அதைப்பற்றி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே தஞ்சை மாவட்டந்தான் எல்லோருக்கும் நெல்லையும் அரிசியையும் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் தஞ்சைக்கும் உயர்ந்த விதத்தில் வட ஆற்காடு மாவட்டம் இன்று இருக்கிறது. தஞ்சையில் காலால் மடையைத் தள்ளும் அளவுக்கு நீர் வசதி இருக்கிறது. அதனால் அங்கு உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகள்

தங்களுடைய வியர்வையை நிலத்தில் பாய்ச்சுகிறார்கள், பல விவசாயிகள் தங்களுடைய ரத்தத்தைப் பாய்ச்சி நீரை எடுத்து நிலத்திற்குப் பாய்ச்சுகிறார்கள். அப்படிப் பாய்ச்சி இன்று உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறார்கள். இதெல்லாம் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்று தமிழகத்திலேயே தீவிர சாகுபடித் திட்டத்தில் வட ஆற்காடும், செங்கற்பட்டு மாவட்டமுந்தான் முன்னணியில் இருக்கிறது என்பதை உணருகிறபோது, இப்படி உடல் உழைப்பால் விவசாயத்தைப் பெருக்கக்கூடிய இந்த மாவட்ட விவசாயிகளுக்கு அதிகமான சலுகைகள், மானியங்கள், கடன்கள் ஆகியவற்றைக் கொடுத்து அவர்களை நல்ல முறையில் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்குள்ள புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது அதிலே மணிலாப் பயிரைப் பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 12 லட்சம் ஏக்கரில் மணிலா பயிர் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே கொஞ்சம் முயற்சி எடுத்தால் இது அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும். இது வட ஆற்காடு, தென்னாற்காடு, தெற்கு மாவட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. அந்தப் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்குப் போதிய கடன் உதவிகள், மற்றச் சலுகைகள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயத்தைத் துவக்குவதற்கு முன்பு அந்த விவசாயி தன்னுடைய வீட்டிலிருக்கும் பித்தளைச் சாமான்களை, மனைவியின் நகைகளை கடனுக்காக அடகு வைத்து மணிலாப் பயிர் செய்யும்படியான நிலை இருக்கிறது. பிறகு மண்டிக்காரனிடம் கடன் வாங்கி, அறுவடை செய்து அவர்களிடத்தில் கொடுக்கிற நிலைதான் இருக்கிறதே தவிர, விவசாயிக்கு ஒன்றும் மிஞ்சும் நிலை இல்லை. ஆகவே, அவர்களுக்கென்று ஒரு கடன் திட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டும். பயிருக்கென்று கடன், உரத்திற்கென்று கடன் ஆகியவற்றை விவசாயத் துறை மூலமாகக் கொடுத்து வசூல் செய்கிற தன்மையை ஏற்படுத்தினால் மணிலாப் பயிர் இன்னும் சீரும் சிறப்புமான முறையில் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன்.

மணிலா அதிகமாக விளையக்கூடிய இடத்தில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பித்தால் இந்தியா பூராவும் சப்ளை செய்து வசதி பெற முடியும். வட ஆற்காடு மாவட்டத்தில் அத்தகைய ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்பதாக அறிகிறேன். அப்படி ஆரம்பிப்பதை மணிலா பயிர் அதிகமாக பயிர் செய்யப்படுகின்ற இடத்தில் அமைக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் ராணிப்பேட்டை தொகுதியில் நவ்லாக் என்ற பிரபலமான பண்ணையைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது. அந்தப் பண்ணை நல்ல முறையில் நடந்து வருகிறது. அதற்கு இப்போது 70 ஏக்கர் நிலந்தான் இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள நிலங்கள் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன. அதைப் பற்றிக்கூட மூன்று நாட்களுக்கு முன்பு பேசும் போது சொன்னேன். ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான இடத்தில் விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள்.





மீதமுள்ள எழுபது ஏக்கர் நவ்லாக் பண்ணைக்கு இருக்கிறது. 500 ஏக்கருக்கு அதிகமாக அந்தப் பண்ணைக்குச் சொந்தமாக ஆக்கவேண்டுமென்று அரசு முயற்சி எடுத்திருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பிருந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நவ்லாக் பண்ணையை தன் செல்லப் பிள்ளையாகப் பாவித்து வந்தார்கள். அவர்களுக்கு அதில் தனிப்பற்று இருந்தது. அந்தச் செல்லப்பிள்ளையை தாங்களும் தத்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் வளர்ச்சிக்காக அவர்கள் எடுத்த முயற்சிகளை தாங்களும் தொடர்ந்து எடுத்து அந்தப் பண்ணையை பெரியதொரு பண்ணையாக ஆக்கி எதிர்காலத்தில் அங்கு ஒரு கல்லூரி அமைக்கும் அளவில் அதைவிரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணியடிக்கப்பட்டது.

(4) அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து

MR. SPEAKER : I have to make the following announcement to the House regarding the further programme of business for the meeting of the Legislative Assembly as decided by the Business Advisory Committee at its meeting held on 25th March 1972.

| | | |
|---|---|---|
| 31st March 1972 (Friday) | .. | GOOD FRIDAY—Holiday. |
| 1st April 1972 (Saturday) | .. | Private Members' Business. |
| 2nd April 1972 (Sunday) | .. | Holiday. |
| 3rd April 1972 (Monday) | .. | Official Bills. |
| 4th April 1972 (Tuesday) | .. | Official Bills. |

The Assembly will meet on 5th April 1972 (Wednesday) if necessary.

The Assembly will sit as usual from 9 a.m.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் பேரவை மாலை 4 மணி அளவில் கூடும். மாலையில் தொடர்ந்து திரு. வகாப் அவர்கள் ஐந்து நிமிடங்கள் பேசுவார்கள்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

[மாலைக் கூட்டத் தொடர்.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையின் கீழ் மாலை 4-07 அளவில் பேரவை மீண்டும் கூடியது.

(3) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 16, வேளாண்மை, மானியக்கோரிக்கை எண். 39—வேளாண்மை மூலதனச் செலவு—விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, காலையிலே நான் நவ்லாக் பண்ணையைப் பற்றி பேசிக்கொண்டு முடிக்க இருந்த நேரத்திலே இருந்ததால் இப்போது அந்தப் பண்ணையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பண்ணையை நவீன முறையில் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயிருக்கும் ஆயிரக்கணக்கான நிலத்தை விவசாயிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரய்ட்வாரி நிலமாக மாற்றியமைக்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட பண்ணைகள் எல்லாம் ஆங்காங்கு நல்ல முறையிலே செயல்படவேண்டும். அங்கே இருக்கின்ற விதைகள் எல்லாம் சில நேரங் களில் கெட்டுப்போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதை வைப்பதற்கு சரியாக கிடங்கு இல்லாத காரணத்தால் இது ஏற்படுகின்றது. விதை கெட்டுப்போனால் என்னவாகும் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு பகுதியில் அந்த விதைகள் வந்து விட்டால், விவசாயிகள் தங்களுடைய உழைப்பைப் பயன்படுத்திய பிறகு, அது கெட்டுப்போன விதையாக இருப்பதால் பயன்தராமல் போய்விடுகிறது. அதனால் அவனுக்கு வர வேண்டிய வருவாய் குறைந்து விடுகிறது. ஆகவே, அந்த விதைகள் விஷயத்தில் மிகவும் கவனத்தோடு இருந்து தக்க தரமான விதைகளை விவசாயிகளுக்குத் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றியங்களுக்கு வரும் விதைகள் நல்ல விதைகளாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆயிரக்கணக்கான மூட்டை உரங்கள் பாழாகிப்போய் இருக்கின்றன என்று சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான மூட்டைகள் டை அம்மோனியம் பாஸ்பேட் என்று நினைக்கிறேன். அது பல கிடங்குகளில் இருந்து கெட்டு விட்டது என்று சொல்கிறார்கள். வந்தசவாசியில் ஏறக்குறைய பல ஆயிரக்கணக்கான மூட்டைகள் வீணாகிப் போய் இருக்கின்றன. கல்லையும் மண்ணையும் கூட சேர்த்து விற்கும் அளவுக்கு நிலைமைகள் வந்திருக்கிறது.

இதற்குக் காரணம் கிடங்கு வசதி இல்லாதது தான். கிடங்கு வசதிகளை ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்தித்தந்தால் நல்ல முறையில் செயல்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். பழைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் உரத்தட்டுப்பாடு இருந்தது. இன்று அந்த மாதிரி உரத்தட்டுப்பாடு வருமோ என்ற அச்சம் இருக்கிறது. 50 ரூபாய் விற்ற உர மூட்டை இன்றும் 60 ரூபாய் கூட இன்று வெளி மார்க்கெட்டில் விற்கிறது. உடனடியாக அரசு கண்காணித்து, அதைக் கட்டுப்படுத்தி, உண்மை உழவர்களுக்கு உரத்தைக் கிடைக்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது வேளாண்மைத் துறையில் டிராக்டர்கள் கடனாகக் கொடுக்கிறார்கள். எல்லோரும் பெர்குஸன் டிராக்டர் வேண்டும் என்று விரும்பிக் கேட்கிறார்கள். ஏனென்றால் அது சேற்றில் உழுவதற்கு



சாதகமாக இருக்கிறது. அரசாங்கம் சில நேரங்களில் அதை வேறு நாடுகளிலிருந்து கிழக்கு ஜெர்மனி நாட்டிலிருந்து சரியாக பரிசீலித்து வாங்காத காரணத்தினால், பல டிராக்டர்கள் சும்மா இருந்துகொண் டிருக்கின்றன. விவசாயிகள் விரும்பிக் கேட்கின்ற டிராக்டர்களை, விலை கூடுதலாக இருந்தாலும், அதையே வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

ரூ. 30,000, 40,000 கொடுத்து எல்லா விவசாயிகளும் டிராக்டர்களை வாங்க முடியாது. ஜப்பான் நாட்டில் சிறிய டிராக்டர்கள், மாடுகளை வைத்து வேலை வாங்கக்கூடிய அளவுக்கு டிராக்டர்கள் வைத்து உபயோகப்படுத்தியிருப்பதை நானே நேரில் பார்த்து வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட டிராக்டர்களை நம் நாட்டில் அறிமுகம் செய்ய வேண்டும். அல்லது அங்குள்ள கம்பெனியின் ஒத்துழைப்பு பெற்று, இங்கேயே உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதிகபட்சமாக ரூ. 5,000-க்கு மேல் விலை கொடுக்கப்படாத அளவுக்கு டிராக்டர்கள் செய்கிறார்கள். அதற்கான முயற்சியை இங்கேயும் செய்யுமாறு வேளாண் மைத்துறை அமைச்சர் அவர்களையும், தொழில் துறை அமைச்சர் அவர் களையும் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் அரசு அம்மாதிரி டிராக்டர்களை உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை ஏற்கவேண்டுமென்று என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்பு பற்றி நாம் மிகவும் கண்காணிப்போடு இருக்க வெண்டும். ஏனென்று கேட்டால் உற்பத்தி ஒரு பக்கம் பெருகிக் கொண்டிருக்கிறது. மறு பக்கம் உற்பத்தியாகும் தானியம் அழிகிறது. வெள்ளத்தால் அழிகிறது, புயலால் அழிகிறது, பூச்சிகளால் அழிகிறது. ற்றபடி நல்ல கண்காணிப்பு இல்லாத காரணத்ததினால் அழிகிறது. ு இல்லாத காரணத்தினால் அழிகிறது. மிகவும் கஷ்டப்பட்டு பயிர் ர்ய்து, கதிராக வரும்பொழுது எலிகளின் உபத்திரவத்தினால் பெரிய ழிவு ஏற்படுகிறது. எலிகளின் காரணமாக ஏற்படும் பெரிய அழிவை நம்முடைய அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும். இந்தியா பூராவிலும் ஏற்படுகின்ற தன்மையாக இருக்கிறது அது. லட்சக்கணக்கான எலிகள், கோடிக்கணக்கான எலிகள் வளர்ந்திருக்கின்றன. நான் அதைத் தடுப்ப தற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். நாம் சாதாரணமாக ஆடு, மாடு, கோழிப் பண்ணைகளைத் தான் ஏற்படுத்துகிறோம். ஒரு பாம்புப் பண்ணையை ஏற்படுத்தவேண்டும். விஷம் இல்லாத பாம்பாக இருக்க வேண்டும். வேளாண்மைத் துறையில் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து பாம்புப் பண்ணையை ஏற்படுத்தவேண்டும். எலிகளை சாப்பிடக் கூடிய பாம்புகளாக இருக்கவேண்டும். அப்படி ஒரு பண்ணையை ஏற் படுத்த ஏராளமான பாம்புகளை உற்பத்தி செய்து, விஷப் பல்லை எடுத்து விட்டு, விஷம் இல்லாத பாம்புகளை வளர்த்து எலிகளைப் பிடிக்கவேண்டும். (பேரவைத் துணைத் தலைவர் : ரொம்ப பயங்கரமாக இருக்கிறது). பாங்காங் நகரத்தில் நான் ஒரு பாம்புப் பண்ணையை பார்த்தேன். விஷத்தை எடுத்து வைத்தியத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். நாம் ஏன் அது மாதிரி ஏற்படுத்தக்கூடாது என்பது பற்றி சிந்திக்கவேண்டும். எலக்டிரிக் கரெண்டு வைத்து எலிகளை சாகடிக்க ஏற்பாடு செய்தால், மனிதர்கள் சாகக்கூடிய ஆபத்து ஏற்படும். ஆகவே, இதை ஒரு திட்டமாக அரசாங்கம் ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிப்பது பற்றி விவசாயிகளிடயே பரவலாக அதிருப்தி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு மிகவும் செலவாகிறது. ஹெலிகாப்டராலும் ஏறி இறங்குகிறது. "பிக்செட்" என்பது நேராக அடித்துக்கொண்டிருக்கிறது. அதனால் பலன் இல்லே. அந்த மூலதனத்தைக் கொண்டு ஹாண்டு-ஸ்ப்ரேயர்களே, கையினால் இயங்கக்கூடிய மின்சார ஸ்ப்ரேயர்களே நிறைய வாங்கி விவசாயிகளுக்குக் கடனாகவும், மானியமாகவும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கிறது).

* **திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மான்யக் கோரிக்கைகளே ஆதரித்து சில கருத்துக்களேப் பேச முற்படுகிறேன். நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும் வருவாய்த்துறை, பாசனவசதி அளிக்கும் பொதுப்பணித் துறை, கடன் வழங்கும் கூட்டுறவுத் துறை, உழவர்களுக்கு நேரடியாக உதவி செய்யும் உள்ளாட்சித் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த சிறப்பான பணிகளால் வேளாண்மைத்துறை சிறப்படைந்து வருகிறது. 1967-ம் ஆண்டுக்குப் பிறகு நம்முடைய தமிழகத்தில் மிகச் சிறப்பானமுறையில் பணியாற்றிவருகிறது என்பதையும், அதன் மூலமாக உணவுத் துறையில் தமிழகம் தன் நிறைவு பெற்றிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு மனதார நாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய விவசாயத் துறையிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் மிகுபயன்தரும் தானியவகைகள் திட்டம், பல போகப் பயிர்த் திட்டம், பருப்பு வகைகள் பெருவிளைவுத் திட்டம், மலைப் பகுதிகளில் தோட்ட வளர்ப்புத் திட்டம், தரமான விதைகள் உற்பத்தி—விநியோகத் திட்டம், வணிகப் பயிர் வளர்ச்சித் திட்டம், எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம், தென்னை வளர்ப்புத் திட்டம், முந்திரி வளர்ப்புத் திட்டம், பழ வளர்ச்சித் திட்டம், புகையிலை வளர்ச்சித் திட்டம், வாழை வளர்ப்பில் முனைப்புத் திட்டம், காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம், மண்ணை பண்படுத்தும், பாதுகாக்கும் திட்டம், உரவகை வழங்கல் திட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மிக. சிறப்பான முறையில் கவனம் செலுத்தி பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். 1971–72-ல் 73 லட்சம் டன் உணவு தானியங்களே விளைவித்த பெருமைக்கு நாம் ஆளாகியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, நடப்பு ஆண்டில் 75 லட்சம் டன் அளவுக்கு நாம் குறியீட்டை வகுத்து நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். இதற்காக ஒத்துழைப்புத் தருகின்ற சகல தரப்பு அலுவலர்களுக்கும், மற்றும் அந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தமிழ் நாடு மக்களின் சார்பாக நம்முடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

அக்ஷய பாத்திரம் என்பது மணிமேகலையில் வரக்கூடிய நிகழ்ச்சி. அக்ஷயபாத்திரம் வைத்திருந்தவர்களின் கவனக்குறைவாலோ என்னவோ தமிழ் நாடு என்ற அக்ஷய பாத்திரம் வரட்சிப் பாத்திரமாக மாறியிருந்தது. அந்த அக்ஷய பாத்திரம் இந்தத் தமிழக அரசு கையில்



வந்தவுடன், மாண்புமிகு முதல்வர் கையில் வந்தவுடன் அந்த அக்ஷய பாத்திரம் இன்றைய வற்றாத அளவுக்கு நல்ல முறையில் வளர்ச்சி தந்திருக்கிறது. பஞ்சாப் மாகாணம் 40 சதவிகிதம் உணவு தானியத்தை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதாகத் தகவல் வந்திருக்கிறது. அது போன்று எதிர்க் காலத்தில் நம் தமிழகமும் உன்னத நிலையை அடைந்து, நம்முடைய நாடு வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தச் சூழ் நிலையில் நடைமுறையில் உழவர்களுக்கு இருக்கிற இரண்டொரு சிரமங்களைப் பற்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் மானியமாகக் கொடுக்கப்படும் பல சலுகைகள் ஏழை உழவர்களுக்கும், விவசாயிகளுக்கும் சென்று சேரத் தக்க அளவுக்கு, மேலும் அந்தத் துறையில் ஊக்கமும், கண்காணிப்பும், கவனமும் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வாயிலாக 1967-க்கு முன்பு கிணறு வெட்டுவதற்கும் பம்பு செட்டுகள் வாங்குவதற்கும், ஆயில் என்ஜின்கள் வாங்குவதற்கும் நிறைய கடன் கொடுக்கப்பட்டது. அப்படி பணம் தந்தபொழுது, அந்தப் பணம் ஊரில் செல்வாக்கு பெற்றவர்களுக்கு மட்டும், சிறப்புப் பெற்றவர்களுக்கு மட்டும் போய்ச் சேருவதற்கு எப்படி வாய்ப்பு இருந்ததோ, அதே போன்று விவசாயத் துறையில் அந்தத் துறை பரவலாக ஆக்கப்பட்டிருந்தும் கூட, சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்கு சில இடங்களில் அந்தச் சலுகைகள், மானியங்கள் முறையாக சேர்க்கப்படாமல் இருக்கிறது என்பதையும் இந்தத் துறையின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

குறைந்தபட்சம் இரண்டு எக்கர் நிலம் உள்ளவர்களுக்குக்கூட கூட்டுறவு வங்கிகள் கிணறு வெட்டவும், நிலச்சீர்திருத்தம் செய்யவும் நிலவள வங்கிகள் மூலம் தாராளமாகக் கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கூட்டுறவு நாணய சங்கங்கள் ஒரு வருடத்திற்குள்ளாக பயிர்ச் செலவு ஆகிற பயிர்க்கடன் தான் தற்பொழுது வழங்கிவருகின்றன. என்னுடைய தொகுதியான பெரம்பலூர் தாலூகாவை எடுத்துக் கொண்டால் நிலவள வங்கி புதிய கிணறு வெட்டுவதற்காக, அல்லது வேறு எந்த காரியத்திற்காகவும் கடன் வழங்குவது இல்லே. அடிக் கிணறு வெட்டுவதற்குத் தான், செகண்டு இன்ஸ்டால்மெண்டாக கடன் வழங்கிக்கொண்டிருக்கிறது. புதிய கிணறுகள் வெட்டுவதற்கு கடன் வழங்குவதில்லே. கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் கொடுத்து வந்த கடன்களும் நிறுத்தப்பட்டு விட்டன. பெரம்பலூர் தொகுதியில் ஏராளமான நிலங்களில் விவசாயம் செய்ய நிலம் அற்ற ஏழை விவசாயிகளும், பொது மக்களும் அதில் வளர்ச்சி காணுவதற்கு முனைந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் கிணறு வெட்டுவதற்குப் பணம் இல்லாமல் போனால், நிச்சயம் எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, கிராமக் கூட்டுறவு நாணய சங்கங்களின் மூலமாகவும் நிலவள வங்கிகளின் மூலமாகவும் கடன் வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். பயிர்கள் நோயால் பீடிக்கப்படும்போது, பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மருந்து தூவான்கள் வைத்து, தக்க உதவிகள் செய்வதற்கு நிறைய அதிகாரிகள் இருக்கிறார்கள் என்றாலும் கூட, அவர்கள் முறையாக பணியாற்றுவதற்கும், தக்க நேரத்தில் விவசாயிகளுக்கு உதவுவதற்கும் மேலும் அதிகமாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கொட்டாரக் குன்று, காரியானூர் இந்த இரண்டு கிராமங்களுக்கும் அருகில் சுமார் ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. இந்தக் காட்டிலாகா நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்கு தரவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். மேலிருப்பவர்கள் கீழே இருந்து ரிபோர்ட்டு கால்பார் பண்ணினால் சந்தன மரம் முளைக்கிறது. பெரிய செடி கொடிகள் சூழ்ந்துகொண்டு காடாக இருக்கிறது என்று சொல்லி மறுத்து பதில் எழுதி விடுகிறார்கள்.

ஆகவே நிச்சயமாக அது விவசாயிகளுக்குத் தரப்படலாம். ஆனால் அந்த டிபார்ட்மெண்டிலே வேலை வாய்ப்பு குறைந்து போய் விடும் என்று சொல்லி ரிப்போர்ட்டை சரியாக அனுப்பாமல் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு காட்டிலாகா அமைச்சர் அவர்கள் இதில் தயவுசெய்து கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருந்து அடிக்கின்ற விஷயம் இன்றைக்கு யூனியன்கள் மூலம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு யூனியனிலும் ஒரு இ. ஓ. (அக்ரி) இருக்கிறார். அவர், அவருக்குள்ள வேலையை ஒழுங்காகச் செய்கிறார். அப்படிச் செய்தாலும் கூட அவர்களுக்குக் கீழே இருக்கிற கிராம சேவக், மேஸ்திரி போன்றவர்கள் நிச்சயமாக கிராமம் கிராமமாகச் சென்று வேலை செய்யவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. இன்றைக்கு கிராமத்திலுள்ள விவசாயிகள் எப்படி மருந்து கலப்பது, அடிப்பதென்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகவே, கிராம சேவக்குகள், மேஸ்திரி போன்றவர்களை நல்ல முறையில் பயன்படுத்தி விவசாயிகளுக்கு அந்த மாதிரி விஷயங்களைக் கற்றுத்தர வேண்டுமென்று சொல்லி பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறைத் திட்டத்தின் மூலம் பொதுவாக நாட்டில் உற்பத்தி பெருகியிருக்கிறது. அந்த அளவிலே இந்தத் துறை அதிகாரிகள் கவனம் செலுத்தி இருக்கிறார்கள் என்று முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். உற்பத்தி எவ்வளவு பெருகி இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. ஆனால் அந்த அளவிற்கு விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை. அதற்கு முக்கிய காரணம், அவர்கள் இந்த உற்பத்திக்காக வாங்கக்கூடிய கடன்களும், வட்டிச் சுமையும் தான். வாங்கிய கடனை அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம் அதிக வட்டியும், குறுகிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதும் தான்.



அதற்கு அடுத்தபடியாக, அவர்களின் உற்பத்திக்கு நியாயமான விலை கொடுக்கப்படவில்லை. அது அனைவருக்கும் தெரியும். உற்பத்தி நேரத்தில் அவர்கள் விற்கவேண்டியிருப்பதால் அவர்களின் உற்பத்திக்கு அதிக விலை கிடைக்காமலிருக்கிறது.

அதேபோன்று பூச்சி மருந்து அடிப்பது, சாகுபடிச் செலவு ஆகியவை அதிகமாக இருப்பதால், விவசாயிகளுக்கு அதற்குத் தகுந்த விலை உற்பத்திப் பொருள்களை விற்கிறபோது கிடைப்பதில்லை. அதைத்தான் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் சேர்மன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள்.

அதேபோல பாசன வசதியை எடுத்துக்கொண்டால் மானம் பார்த்த பூமியில் கிணறு வெட்ட வேண்டுமென்று சொன்னால் 10 ஆயிரம், 20 ஆயிரம் வரை ஆகிறது. கோயம்புத்தூர் போன்ற மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வரைக் கூட ஒரு கிணறு வெட்ட ஆகிறதென்று ஒரு உறுப்பினர் சொன்னார்கள். 10 ஆயிரம் ரூபாய் வாங்குகிறபோது, அதில் ஒரு வருடத்திற்கு வட்டியும், அசலுமாகச் சேர்த்து ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த அளவில் இப்படி 20 ஆயிரம், 30 ஆயிரம் கடன் வாங்கக் கூடியவர்கள் வருடா வருடம் 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று கட்ட வேண்டியிருப்பதால் அவர்களுக்கு லாபம் கிடைப்பதில்லை. அதற்காக பாசன வசதியைப் பொறுத்த வரையில் குழாய் கிணறுகள் வெட்டினாலும், அல்லது கம்யூனிட்டி கிணறுகள் வெட்டினாலும் அரசாங்கம் அதைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின் கட்டண உயர்வால் இன்றைக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். முன்பு 9 பைசாவாக இருந்தது, இன்றைக்கு அது 12 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, திரும்பவும் அதை 9 பைசாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் மின்சாரத்துக்காக மட்டும் விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் 600, 700 என்று செலுத்தவேண்டியிருக்கிறது. ஆனால் வேறு பல தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும் மிகவும் சலுகையான கட்டணத்தில் மின்சாரம் கிடைக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கும் அது குறைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பூச்சி மருந்து தெளிக்கிற விஷயத்தைப் பற்றிப் பல பேர்கள் பேசினார்கள். ஏரியல் ஸ்ப்ரே வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. விமானங்கள் மூலம் ஸ்ப்ரே செய்வதற்கு, அதிகமான செலவு ஆகிறது. அதற்குப் பதிலாக கிராமங்களிலுள்ள ஏராளமான படித்த வேலை வாய்ப்பு இல்லாமலிருக்கும் இளைஞர்களுக்கு "பவர் ஸ்ப்ரே" அடிப்பதற்கு நல்ல பயிற்சி கொடுத்து அவர்களைக்கொண்டு ஸ்ப்ரே செய்யச் சொல்லலாம். அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு வகையில் தீரும். மேலும் ஏரியல் ஸ்ப்ரே மூலம் கூட்டுறவு பண்ணைகளில் வேண்டுமானால் ஒரே மாதிரியாக பூச்சி மருந்து தெளிக்கப்படலாம். ஆனால் நம்முடைய நாட்டைப் போன்ற சிறு, சிறு நிலங்களாக உள்ள இடத்தில் இந்த ஏரியல் ஸ்ப்ரே மூலம் ஒரே சீராக ஏரியல் ஸ்ப்ரே செய்ய முடியாது.

அது மட்டுமல்ல ஏரியல் ஸ்ப்ரேக்கு ஒரு ஏக்கருக்கு 10, 12 ரூபாய் வரை செலவு ஆகிறது, பவர் ஸ்ப்ரேயர் வைத்து அடித்தால் 2 அல்லது 3 ரூபாய்க்கு மேல் ஆகாது. இது என்னுடைய அனுபவம். அது மட்டுமல்ல. ஒரு 10, 15 ஸ்ப்ரேயரை வைத்து 2 3 நாட்களில் ஒரு கிராமத்திலுள்ள எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்து அடித்துவிடமுடியும். ஆகவே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்காக "விசைத்தெளிப்பான்களை" உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, 5 ஏக்கர் நஞ்சை உள்ளவர்களுக்கு வரி விலக்கு என்று சொல்லப்பட்டது. நாங்கள் எல்லாம் சந்தோஷப்பட்டோம். ஆனால் உண்மையைப் பார்க்கிறபோது, 2 ரூபாய் தான் வரி விலக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, மேற்கொண்டு தண்ணீர் தீர்வை என்று 10, 15 ரூபாய் வரை வாங்கப்படுகிறது. ஆகவே, எல்லாவற்றிலும் வரி விலக்கு செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பம்பாயில் பஞ்சு கார்ப்பரேஷன் என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இங்கே ஒன்று ஏற்படுத்தி, விவசாயிகளிடமிருந்து அவர்கள் உற்பத்தி செய்கிற பஞ்சை நியாயமான முறையில் வாங்கி, மில்களுக்கு விற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல உற்பத்திச் செலவை விவசாயிகளுக்குக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கடன் வசதி முறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிப்பதைப் பற்றிக் கூட முன்னாள் அமைச்சர் கே. வி. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். ஒரு கடன் தொகையை ஒத்தி வைக்கிறபோது அதை அடுத்த ஆண்டு வசூலோடு வாங்கக்கூடாதென்றும், கடைசியில் வாங்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம். சிறு விவசாயிகள் என்ற அடிப்படையில் என்னுடைய மாவட்டத்தில் 10, 15 வட்டாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் சரியாக செயல்படவில்லை. அதில் 3 கிராமங்களுக்குத்தான் கோழிக் பண்ணை வைப்பதற்கும், மாடுகள் வாங்குவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை அங்கே நடந்த ஒரு விழாவிற்கு அழைக்கவில்லை என்பதால் அந்தப் பகுதிக்குக் கடன் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதற்கான மத்திய சர்க்காரின் மானியத் தொகை செலவழிக்கப்படாமலிருக்கிறது. ஆகவே, அந்தப் பணம் பூராவும் அங்கேயுள்ள சிறு விவசாயிகளுக்கும் பயனளிக்கச் செய்யப்படவேண்டும் என்று சொல்லி பேச வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் பெருவாரியான மக்கள் இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டதனால் நமது மாநிலம் உணவு உற்பத்தியில் இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் தர மாநிலமாக உணவு உற்பத்தியில் விளங்குகிற அளவிற்கு வந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அந்த அளவிற்கு நாம் அதிக அக்கறையை விவசாயத்தில் செலுத்தி வருகிறோம் என்று சொல்லிக் கொள்வேன்,





விவசாயிகளுக்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளித்து வேளாண்மைத் துறையில் உள்ள அதிகாரிகள் அந்த விவசாயிகளுக்கு வேண்டிய பல சலுகைகளைத் தந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

உணவு உற்பத்தியில் நாம் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கிறோம். முன்பு அண்டை அயல் மாநிலங்களிலிருந்து உணவிற்காக எதிர்பார்த்த நிலை போய் இன்றைக்கு நாம் உபரி ஆகவே உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர்ந்திருக்கிறோம். அது நம்முடைய அரசு வேளாண்மைத் துறையில் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.

அரிசி உற்பத்தியில் 1972-ம் ஆண்டில் 54 லட்சம் டன் நாம் பெற்றிருக்கிறோம். 1973-ல் 55 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதேபோல் 17 லட்சம் டன் எதிர்பார்க்கப்பட்டு இன்றைக்கு 1973-ல் 17½ லட்சம் டன் உற்பத்தி செய்ய இருக்கிறோம். பருப்பு வகையில் 2 லட்சம் டன் உற்பத்திச் செய்யக்கூடிய அளவுக்கு நாம் திறமை பெற்று விளங்குகிறோம்.

விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், இன்னும் நல்ல முறையில் செயல்படுவதற்கு உதாரணமாக இந்த மிகுபயன் தரக்கூடிய விதைகளைப் பயன்படுத்தும் திட்டத்தை மற்றும் பல இடங்களில் விஸ்தரிக்கவேண்டும். 1966-67-ல் ஏறத்தாழ 5¼ லட்சம் ஏக்கரில் அந்தப் பயிர் வகைகள், மிகு பயன் தரும் தானியுங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் 1967-68-ல் ஏறத்தாழ 12¾ லட்சம் ஏக்கர் அளவுக்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது. 1968-69-ல் 17 லட்டம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டது. 1969-70-ல் 30½ லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது. 1970-71-ல் ஏறத்தாழ 49½ லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது. இன்றைக்கு நாம் அந்த பயிர் வகையை இன்னும் அதிகமாகப் பயன்படுத்தி வருகிறோம்.

அடுத்தபடியாக, இந்த பல போக பயிர் திட்டம், ஒரு போக நிலத்தை இரு போக நிலமாகவும், இரு போக நிலத்தை மூன்று போக நிலமாகவும் மாற்றியிருப்பது. இந்தத் திட்டம் ஒரு முன்னோடியானத் திட்டம், பெருமைப்படக் கூடியத் திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தில் இன்றைக்கு சில இடங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதிலே திருச்சி மாவட்டத்திலே பழைய நஞ்சை நிலங்கள் நிறைய இருக்கின்றன ; அவைகளை எல்லாம் சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். உய்யக்கொண்டான், கட்டளை கால்வாய்ப் பகுதிகள் பழைய நஞ்சைப் நிலப்பகுதிகளாகும். நல்ல வளமான நிலங்கள் அவை. அவைகளை இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தண்ணீர் இல்லை என்று வேண்டுமானால் ஒரு குறை சொல்லலாம். என்னைப் பொறுத்த வரையில் தஞ்சைப் பகுதியில் நிறைய தண்ணீர் செலவழிக்கப்படுகிறது. என்பதை நான் கூறிக்கொள்ளாமல் இருக்க முடியாது. அங்குள்ளவர்கள் தண்ணீரைக் கொஞ்சம் சிக்கனமாகப் பயன்படுத்தினால், அதனால் மீதமாகும் தண்ணீரை மேல் பகுதியிலே பழைய நஞ்சை நிலங்களுக்குக் கொடுக்க முடியும். அதற்கு இப்போது இருக்கின்ற மேல் அணையில் ஒரு ரெகுலேட்டர் வைத்து பாசனத்தை ஒழுங்கு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் சிறந்த முறையிலே பணியாற்றுவதால்தான் நாம் விவசாயத்திலே நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளோம். விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படக்கூடிய வகையில் பல காரியங்கள் செய்யப்படுகின்றன. இன்றைக்கு விவசாயிகள் எல்லோரும் டிராக்டர்கள் கொண்டு உழுது பழக்கப்பட்டுவிட்டார்கள். ஒரு ஊராட்சிக்கு இன்றைக்கு ஒரு டிராக்டர் தான் இருக்கிறது. அது போதாது. கூடுமான வரையில் நஞ்சைப் பகுதியிலே ஒரு டிராக்டர் ஒரு நாளைக்கு 10 அல்லது 15 எக்கர் தான் உழ முடிகிறது. அதனால் அங்கே இருக்கின்ற எல்லா எக்கர் நிலங்களையும் உழுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகவே, கூடியவரையில் ஒரு யூனியனுக்கு 2 அல்லது 3 டிராக்டர்களாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே பெரும்பகுதி நிலங்கள் மானாவாரியாக இருக்கின்றன. அவைகளுக்கு நீர் வேண்டுமானால், அதற்கு போதுமான பாசன வசதி கிடையாது. கிணறுகள் வெட்டி, பாசனம் செய்வதற்கும் ½ எக்கர், 1 எக்கர், 2 எக்கர், 3 எக்கர் நிலம் வைத்திருக்கக்கூடியவர்களால் முடியவில்லை. காரணம் செலவு அதிகமாகிறது. அவர்களுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் அது அவர்களுக்குச் சாத்தியப்படவில்லை. ஆகவே, 10 அல்லது 15 எக்கர் நிலங்களுக்கு ஒரு குழாய்க் கிணற்றை அரசாங்கமே அமைத்துத் தந்து, அதற்குத் தண்ணீர் வரியை வசூலிக்கின்ற ஒரு ஏற்பாட்டினை செய்தால் நலமாக இருக்கும். விவசாயிகளுக்கும் பயன்படத்தக்க வகையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல உரம்....... (மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்).

* **திரு. மூ. மாரிமுத்து :** தலைவரவர்களே, இந்த மன்றத்திலே வேளாண்மைத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை வரவேற்று, அதிலே என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இந்தியாவிலேயே நாம் உணவு உற்பத்தியில் முதல் இடம் பெற்றிருக்கிறோம். அந்த நிலையை அடைந்திருப்பதற்கு ஒரு பகுதியிலே போதிய பருவ மழையும், இன்னொரு பகுதியிலே விவசாய பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பும்தான் காரணமாகும். அதற்கடுத்தபடியாக, வேளாண்மைத் துறையில் பணி செய்கின்ற அதிகாரிகள் உரிய காலத்தில் உரம், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை கொடுத்து விவசாயிகளை ஊக்கப்படுத்தியதுமாகும். அப்படிப்பட்ட அதிகாரிகளையும், அ தற்குக் காரணமாய் இருந்த வேளாண்மைத் துறை அமைச்சரவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இந்தத் துறை நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றால் வேளாண்மைத் துறை உள்ளாட்சித் துறையிலிருந்து பிரிந்துவிடுவதுதான் நல்லது. ஏனென்றால் இன்றைக்கு எதற்கெடுத்தாலும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற விவசாய அதிகாரிகள் அலுவலர்கள், தனியாகச் செயல்பட முடியாமல், சேர்மனையும், பி.டி.ஓ.வையும்



கலந்துகொண்டுதான் செய்ய முடிகிறது. போகவும் முடிகிறது. அதனால் வேலை தடைபடுகிறது. ஆகவே இந்தத் துறையை உள்ளாட்சித் துறையிலிருந்து பிரித்து, செயல்படச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி தனியாக அமைக்கப்படுகின்றபோது இந்தத் துறையிலே பணிபுரிகின்ற மேஸ்திரிகள், ஃபீல்டுமென், சி.டி.ஐ. போன்ற அலுவலர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதைப் பற்றி நான் பலமுறை இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். கீழ் நிலைகளில் இருக்கின்றவர்களுக்கு, மற்றத் துறைகளில் இருக்கின்றவர்களுக்கு எப்படி பணி முறைகள் வரையறை செய்யப்பட்டு சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அதேபோன்று வரைமுறை செய்து கொடுக்கப்படவேண்டும். இப்போது அது மாதிரி கொடுக்கப்படாமல் இருக்கிறது. இது பற்றி இந்த மன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு, கீழ் நிலையில் பணியாற்றக் கூடியவர்களுக்குக் குறிப்பாக சி.டி.ஐ. போன்றவர்களுக்கு முதல் நிலை கிராம சேவக்குகளுக்குக் கொடுக்கப்படுவது போல் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற பட்டதாரிகளுக்கும், பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் ஒரு பாகுபாடு சம்பளத்திலே இருக்கிறது. மற்றத் துறைகளிலே உள்ளவர்களுக்கு இந்தப் பாகுபாடு இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் வருவாய்த் துறையில் ஒருவர் எழுத்தாக வந்தால் அவர் டிப்டி கலெக்டர் வரை வந்து, அவருக்குச் சமமான சம்பளமும் பெறலாம். ஆனால் இந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்குள் ஒரு பாகுபாடு இருக்கிறது. ஒரு பாரபட்சம் காட்டப்படுகிறது. கீழ் நிலையிலிருந்து பிரமோஷனில் வரக்கூடியவர்களுக்கு 350 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே பதவியில் இருக்கின்ற பட்டதாரிகளுக்கு 450 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைபாட்டினைப் போக்க, பாரபட்சமான நிலை நீக்கப்பட ஒன் மேன் கமிஷனுக்கு இதை அனுப்பி, அவர்கள் அளிக்கின்ற பரிந்துரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், கடந்த இரண்டு வருட காலமாக இந்தத் துறையிலே பணி புரியக்கூடிய பட்டதாரிகளை அரசிதழ் பதிவு பெற்றவர்களாக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து டாக்டர்கள், எஞ்சினியர்களுக்கு எப்படி அரசிதழ் பதிவு செய்யப்படுகிறதோ, அதேபோன்று இவர்களையும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே 5 ஆண்டு காலம் பதவி வகித்தவர்களுக்குக்கூட அரசிதழ் பதிவு செய்யப்படவில்லை. ஆகவே, இவர்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாயில் கன்சர்வேஷன் சப் அஸிஸ்டெண்ட் இருக்கிறார்கள். இவர்கள் காலை 7 மணி முதல் மாலை 5, 6, மணி வரை நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும் உரிய காலத்தில் பதவி உயர்வு கொடுக்கவேண்டும்; ஊதியமும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதற்கு பப்ளிசிடி செய்யவேண்டும். கிராமந்தோறும் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட வேண்டும். அந்த போர்டில், எந்தெந்தக் காலத்தில் என்னென்ன பயிர் செய்யலாம், எந்தப் பயிருக்கு எந்த உரம் போடலாம்; எப்போது போடலாம், எந்த பருவத்தில் பூச்சி மருந்து அடிக்கலாம் என்பன போன்ற விபரங்களை ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அது நல்ல பலன் தரும் திட்டமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு விவசாயத் துறையில் பல ஆராய்ச்சிப் பிரிவுகள் இருக்கின்றன. விளம்பரப் பிரிவுகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நல்ல முறையில் சினிமாப் படங்களாக எடுத்து நியூஸ் ரிலீஸ் மூலம் கொடுத்தால் மக்களுக்கும் பல விஷயங்களைத் தெரிந்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

மலை மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக சென்ற ஆண்டு நான் சொன்னேன். அந்தத் திட்டத்திற்குக் கூட கடந்த மாதம் அனுமதி வழங்கப்பட்டது. மாவட்ட விவசாய அதிகாரி, உதவி தோட்டக்கலை அதிகாரி பதவிகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். திட்டத்திற்குப் பணம் அனுமதி கொடுக்கிறபோது வருட ஆரம்பத்திலேயே கொடுத்து விட வேண்டும். வருடக் கடைசியில் வந்தால் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையை நல்ல முறையில் செலவிடக்கூட முடிவதில்லை.

குறிப்பாக கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால் கடன் வசதி சரியாகக் கொடுப்பதில்லை. கிணறு வெட்டுவதற்கோ, உரத்திற்கோ, பூச்சி மருந்துக்கோ கொடுக்கப்படுகிற உதவி காலாகாலத்தில் கிடைத்தால்தான் மிகவும் பயனுடையதாக இருக்கும். பம்பு செட்டுக்குக் கடன் கொடுப்பதைக் கூட நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கி கடன் கொடுக்க வசதி செய்யவேண்டும். அடுத்தாற்போல மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கில்லை. இல்லாவிட்டாலும் இத்துறை இயக்குநர் இங்கே இருக்கிறார். அவர் மின்சார வாரியத்தில் ஒரு உறுப்பினராகவும் இருப்பதால் மின்சார பம்பு செட்டுகளுக்கு உடனுக்குடன் மின்சாரத்துறை கனெக்ஷன் கொடுக்கும்படியாகக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

***திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே, 1972–73ஆம் ஆண்டுக்கான விவசாய மானியக் கோரிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

வேளாண்மைத் துறையில் நமது தமிழகம் தன்னிறைவு பெற்றுள்ளது. என்றாலும் அதில் ஒரு சில குறைகள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டில் உள்ள முன்னேற்றத்தைப் பார்க்க கிராமத்தின் முன்னேற்றத்தைத் தான் பார்க்க வேண்டும். கிராமங்கள் முன்னேறியிருக்கின்றன என்றால் அந்த நாடு முன்னேறியிருக்கிறது என்று அறிஞர்கள்



இன்றைக்கு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் முதலாவதா நகர்ப்புறங்களுக்குத்தான், முன்னால் இருந்த சர்க்காரும் கிராமங்களை கவனிக்கவில்லை, இப்போது இருக்கிற சர்க்காரும் ஏதோ கவனிக்கிறதே தவிர, இன்னும் சரியான முறையில் கவனிப்பதாகச் சொல்ல முடியாது இன்னும் பல கிராமங்களில் சாலை வசதி கிடையாது. இந்த நாட்டுக் கிராமங்கள் தான் முக்கியம். அங்கே உழைக்கின்றவர்களால்தான் இன்றைக்கு நகரத்தில் உள்ளவர்களால் நாகரிகமாக வாழ முடிகிறது இங்குள்ளவர்களுக்கு எல்லாம் கிராமத்தில் உள்ளவர்கள் தான் சாப்பா போடுகிறார்கள். ஜப்பான் போன்ற சிறிய நாட்டில், எந்த அளவுக் விவசாயத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பதை பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம். அந்த முறைமி கிராமத்தில் உள்ள விவசாய மக்களிடம் அக்கறை கொண்டு, கிராமங்க முன்னேற வேண்டும். கிராம மக்கள் முன்னேற வேண்டும் என் திட்டங்கள் வகுத்தால்தான் நன்மை அளிக்கும். ஔவை சொல் வில்லையா, வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உ குடி உயரும், குடி உயரக் கோன் உயரும் என்றார்கள். விவசாயத்தி கண்ணும் கருத்துமாக இருந்தால்தான்நமது நாடு முன்னேற முடியு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசாங்கத்தில் இன்று நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவ அதிகமாக உதவுகிறார்கள். ஆனால் நிலவ வங்கிகளா, வளவள வங்கிகளா என்கிற முறையில்தான் அவை இயங் வருகின்றன. கோவில்பட்டியில் ஒரு நிலவள வங்கி இருக்கிறது. அ வைத்துத்தான் சொல்கிறேன். சாதாரணமாக நடுத்தர விவசாயிகளுக்கு கீழ் மட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு அவற்றினால் எவ்விதப் பயனு இல்லை. லோனுக்கு அப்ளை செய்தால், வில்லங்க சர்டிபிகேட்டு 13 வருஷ கேட்கிறார்கள். அதைக் கொண்டுவந்து கொடுத்தால் முன்னால் இருந்தவ களுடைய கையெழுத்து வேண்டும் என்கிறார்கள். அவர்கள் ஏதே கையெழுத்துப் போட பயப்படுகிறார்கள். இதனால் நடுத்தர விவசா களுக்கு எல்லாம் லோன் கிடைப்பதில்லை. இதற்காகத்தான் நாங்க முன்பே சொன்னோம், 1968-ல் பாஸ் புக் முறை கொண்டுவந்து வி வேண்டும் என்று. பாஸ் புக்கில் எத்தனை ஏக்கரா, எத்தனை சென் நிலம் இருக்கிறது என்று குறிக்கப்பட்டு, அதிக அளவு அவர்களுக் எவ்வளவு லோன் சாங்ஷன் என்பதையும் குறித்துவிட்டால் தேவைப்பட் போது வாங்கிக்கொள்ள வசதியாக இருக்கும்.

விமானம் மூலமாக பருத்தி சாகுபடிக்கு மருந்து தெளிக்கப்படுகிறது அந்த வட்டார பஞ்சாயத்து யூனியன் சேர்மன், பஞ்சாயத்துத் தலைவ அல்லது அந்த வட்டாரத்தில் உள்ள மிகப் பிரபலமானவர்களுடைய நூறு ஏக்கராவுக்கு மேல் மருந்து தெளித்துப் போகிறார்களே தவிர, சாதாரண விவசாயிகளுடைய நிலத்திற்குத் தெளிப்பது இல்லை. அது மட்டுமல்ல யூரியா உரம் 25¼ ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். அதை ப்ளாக்கில் 5 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆக இன்றைக்கு வசதி உள்ளவர்கள்தா பயன் அடைய முடிகிறதே தவிர சாதாரண நடுத்தர விவசாயிகள் எல்லா பயன் அடைய வழியில்லை. நடுத்தர விவசாயிகளும் கூட பயன் அடைகி முறையில் நம்முடைய திட்டங்களை அரசு செயல்படுத்த முன்வரவேண்டும்

மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களை எடுத்துச்செல் அங்கங்கே சாலைகள், சாலைகளில் பாலங்கள் இல்லாத காரணத்தினு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவை எல்லாம் சரியான முறையில் கவனிக்க படாத காரணத்தினால் "என்ன ஐயா, இவங்க வந்துதான் என் செய்து விட்டார்கள்? இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டா என்ன" என்கிறார்கள். இதுபோன்ற சோர்வுகள் வராதிருக்க கிராம சாலைகள், பாலங்கள் ஆகியவற்றைப் போட வேண்டும்.

விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இதுபோல கிராமங்க முன்னேற்றம் செய்வதற்கு இந்த அரசு பல திட்டங்களை வகுக்கவேண் மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு, பேச வாய்ப்பளித் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[திரு. செ. கந்தப்பன் தலைமை]

**திரு. த. சோனையா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே 1972–73-ம் ஆண்டுக்கான விவசாய மானியக் கோரிக்கையை நான் மு மனதோடு ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு ஒரு காலத்தில், பர்மாவையும், மற்ற பிற நாடுகளையு உணவுக்காக எதிர்பார்த்து நோக்கிக்கொண்டிருந்தது. அந்த நிலைமை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந் நாட்டிலே தன்னிறைவு பெற்று, நமக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கு கொடுக்கின்ற வாய்ப்பு உணவுத் துறையில் நாம் பெற்றிருக்கிறோம் தன்னிறைவு பெறுவதற்கான தகுதியையுண்டாக்கியவர்கள் தமிழர்கள் தமிழக அரசு என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன் ; பூரி படைகிறேன். அதற்காக இந்த அரசை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, உணவுப் பிரச்னையில் இராமநாதபுரம் மாவட்டம் பஞ்ச மாவட்டம் என்றும், தஞ்சை மாவட்டத்தை நோக்கித்தான் படையெடுத் வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்கிற நிலையை உடையது எங்க மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டமாகும். எங்கள் மாவட்டத்தைப்பற் விவசாய அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். ஆகவே, எங்க மாவட்டத்திற்கு விசேஷ சலுகைகள் தர வேண்டுமென்று கேட்டுக்கொ கிறேன். இராமநாதபுரம் மாவட்டம்தான் மிகவும் பின்தங்கிய மாவட்ட என்று கிராமப்புறங்களில் கூடச் சொல்வார்கள். இந்த மாவட்டத்திற்கு தமிழக அரசு செய்தது போக, செய்ய வேண்டியவை இன்னும் நிறை இருக்கின்றன. அவைகள் அனைத்தும் செய்யப்படவேண்டும் என் கிராம மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்ட மாவட்டம் இராமநாதபுர மாவட்டமாகும். இது அத்தனை கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியு எனவேதான் அந்த மாவட்டத்திற்கு விவசாயத் துறையில் மூலமா விசேஷமான சலுகைகள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறே இன்றைக்கு அந்த மாவட்டத்தில் வைகை பாசனம் உள்ள இடங்களி வாழை, அதுவும் நாட்டு வாழை பயிரிடுகிறார்கள். அதுவும் த மோரிஸ், மற்றும் இதர வாழைகளுக்கு அரசு சலுகைகள் தந்திருக்கிற





இராமநாதபுரம் மாவட்டத்தில் அந்த மாதிரியான சலுகைகள் தரப்பட வில்லை. இனியாவது அந்தச் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வாழை பயிரிடுவதில் விவசாயிகள் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அரசு அதற்கு கடன் உதவி செய்வதாகத் தெரியவில்லை. நாட்டு வாழைக்குக் குறைந்த பட்சமாக ஏக்கரா ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாவது கடன் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். வாழை பயிராகி பயன் தரக்கூடிய நேரத்தில், சித்திரைப் புயலில், அதைச் ''சித்திரைச் சுழி'' என்று சொல்லுவார்கள். சிக்கி வாழை மரங்கள் வேரோடு சாய்த்து விடும் நிலைமை ஏற்படுகிறது. அரும்பாடுபட்டு பயிரிட்ட விவசாயிகளுக்கு இதனால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இன்ஷ்யூரன்ஸ் மூலமாக அவர்களுக்குச் சலுகை அளிக்கும் வகையில் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு விவசாயம் அங்கே அதிகமாக செய்யப்படு கிறது. கரும்பைப் பிழிந்து சாறெடுத்து வெல்லமாக்கி, மதுரை மார்க் கெட்டுக்கு வருகிற நேரத்தில் வெல்லத்தின் விலை குறைந்து விடுகிறது. அந்த வெல்லத்தை விற்றுவிட்டு வந்த மூன்று மாதங்கள் கழிந்த பிறகு அந்த வெல்லத்தின் விலை மூன்றுமடங்கு அதிகமாக உயர்ந்து விடுகிறது. இதனால் கரும்பு உற்பத்தி செய்கிறவர்கள் முதலிலேயே குறைந்த விலைக்கு வெல்லத்தை விற்பதால், நிறைய நஷ்டம் ஏற்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் அறுவடையாகும்போது எப்படி அரசாங்கம் கொள்முதல் செய்து வைத்துக்கொண்டு, பின்னர் விநி யோகம் செய்கிறதோ, எப்படி நெல் விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்க நெல்லுக்கு ஒரு விலை நிர்ணயித்து அதை வாங்கி வைத்துக்கொள்கிறதோ, அது போலவே வெல்லத்தையும் அரசாங்கமே தக்க விலை கொடுத்து வாங்கி, மூன்று மாதம் கழித்து பிறகு விற்றால் அரசுக்கும் இழப்பு இருக்காது, விவசாயிக்கும் நஷ்டம் ஏற்படாது. முதலில் 10 ரூபாய்க்கு விற்கின்ற வெல்லம் நிச்சயமாக 20 ரூபாய்க்கு பின்னர் விற்கும். மற்றும், கொடிகால், பருத்தி, தென்னை போன்ற பயிர்களுக்கெல்லாம் இன்ஷ் யூரன்ஸ் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தித் தர வேண்டும். சில நேரங் களில் புயல் வந்தாலும், பெரு வெள்ளம் வந்தாலும் முதலில் இராம நாதபுரம் மாவட்டத்தைத்தான் தாக்குகிறது. எங்கள் பகுதி விவசாய மக்கள் ஏற்கெனவே கெட்டுப்போய் நொந்து இருப்பவர்கள். அப்படிப் பட்டவர்களுக்கு அரசாங்கம் பயிர் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புத் திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். பயிர் நன்றாக விளைந்து வருகிற நேரத்தில் சாவியாகப் போய் விடுகிறது. ஆகவே இன்ஷ்யூரன்ஸ் முறையில் நஷ்டஈடு கொடுத்து, இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளை ஆதரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளு கிறேன். வணக்கம்.

**திரு. ப. முத்துசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் துறையில் குறிப்பாக உணவுத் தானியங்கள் உற்பத்தி செய்வதிலே தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிற

கருத்தை எல்லோரும் சொன்னார்கள். விவசாயத்தைப் பெருக்குவதற்காக பொருத்தமான விதைகளைக் கொடுத்தது மட்டுமல்ல; விவசாயிகள் விரும்பிய வண்ணம் நல்ல விளம்பரங்களை வானொலி மூலமாகவும், பிற வகைகளிலும் செய்து, பொறுக்கு விதைகள், உர உபயோகம் போன்றவற்றை நல்ல முறையில் விளம்பரம் செய்து உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். பூச்சி மருந்து தெளித்தல், உர உபயோகம் ஆகியவற்றை விவசாயிகள் மனதில் புரிந்துகொள்ளக்கூடியவாறு விளம்பரப்படுத்தி, நல்ல முறையில் உழைத்ததன் காரணமாக இந்தப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு நல்ல உற்பத்தியை உருவாக்கியிருந்தாலும் விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள், இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள் ஆகியவை பல இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

விவசாயிகளுக்கு இருக்கின்ற சங்கடங்களை நாம் தினந்தினம் பார்க்கிறோம். அதில் முக்கியமானது என்னவென்றால் கூட்டுறவு வங்கிகளில், எளிதான முறையில் கடன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு வங்கியின் மூலமாக கடன் பெறுகிற திட்டத்தின் அடிப்படையில் அடிக்கிணறு வெட்ட, மோட்டார் பம்ப் செட் வாங்க கடன் கிடைப்பதில்லை. இவ்வளவு ஆழம் வெட்டவேண்டுமென்று திட்டம் இருக்கிறது. கடன் பெறுவதில் சிரமங்கள் இருக்கின்றன. அதைச் சீர்படுத்தாததன் காரணமாக கடன் தக்க தருணத்தில் பெற முடியாமல், கிணறு வெட்ட முடியாமல் மோட்டார் பம்ப் செட் வாங்க முடியாமல் அவதிப்படக்கூடிய நிலைமைகள் உண்டாகின்றன. அரசாங்கம் இதைக் கவனித்து உடனடியாகச் செய்து தராவிட்டால் உற்பத்தித் தடைப்படும்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு வருமான வரி கொண்டுவருகிற நேரத்தில், விவசாயிகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள கர்ணம், வில்லேஜ் முனிசீப் போன்றவர்கள் கொடுக்கின்ற கணக்கை வைத்துத்தான் அரசாங்கம் வரி விதிக்கின்ற நேரத்தில் சரியான முறையில் அமையாது என்பதை எல்லோரும் உணர்ந்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்குக் கடன் தர வேண்டுமென்றால், தனிப்பட்டா வேண்டும் என்கிறார்கள். கிராம அதிகாரிகள் அதை எளிதில் செய்து கொடுப்பதில்லை. அதனால் விவசாயிகளின் நிலைமை அல்லல் படுவதாய் இருக்கிறது. இன்றைக்கு விவசாயம் முன்னேற வேண்டுமென்றால் பாசனம் மிகவும் முக்கியமானது. பல இடங்கள் வறண்ட பகுதியாக இருக்கின்றன. ஆழமான கிணறுகளை வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு மோட்டார் போட்டு தண்ணீர் இறைக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் பழனி, வேடசந்தூர், திண்டுக்கல் போன்ற இடங்களில் சில திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அங்காங்கே சிறு சிறு குட்டைகளை (பாண்ட்ஸ்) ஏற்படுத்தித் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ள வேண்டும். சிறுசிறு ஓடைகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக அந்தப் பகுதிகளில் விவசாயத்தைப் பெருக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, சிறு சிறு குட்டைத் திட்டங்களை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயிகள் முன்னேற வேண்டுமானால் கிராமப் புறத்தில் இருக்கிற சாதாரண விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் தர வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் விவசாயத்திற்குத் தேவையான கருவிகளை வாங்கித் தர வேண்டும். கம்ப்ரஸர் போன்ற கருவிகளையும், மற்றும் நல்ல உரம் அளித்தல், பொறுக்கு விதைகள் அளித்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற காரியங்களில் உதவி செய்வதோடு, அவர்களுக்குக் கொஞ்சம் சலுகைகளையும் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்வதன் மூலமாக நிச்சயமாக இன்றைக்கு அதிகமாக உற்பத்தியைச் செய்ய முடியும். இதற்கு அரசாங்கம் வேண்டிய வழி வகைகளைச் செய்து தர வேண்டும். கிராமப் புறத்தில் இருக்கிற விவசாயிகள் சாதாரண ஏழை விவசாயிகள் 100-க்கு 90 சத வீதம் அவர்களுக்கு நம் அரசு கைகொடுத்து உதவி செய்து வருகிறது. இந்த அரசு இன்னும் நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. அந்தக் காரியங்கள் எல்லாம் வலிவடையத்தக்க வகையிலே விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங்களை சிரமங்களைப் போக்கி விவசாயிகளுக்கு உதவி செய்து வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். முருகையன் :** மாண்புமிகு தலைவர் அவைகளே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின்முன் வைத்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய முக்கியமான ஒரு துறை இந்த வேளாண்மைத் துறை ஆகும். வேளாண்மைத் துறையிலே விவசாயிகளுக்கு மிக முக்கியமாக சிறந்த விதைகள், பாசன வசதிகள், உரிய நேரத்திலே கடன் வசதிகள் கொடுப்பதிலே மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது இந்த அரசு. இந்த அரசு சிறந்த முறையிலே செயலாற்றிக் கொண்டு வந்தாலும் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒருசில குறைகளை இந்த நேரத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டமான வட ஆர்க்காடு மாவட்டம் உணவு உற்பத்தியிலே நல்லதொரு சிறந்த சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே அதிகப்படியாக உணவு தானியத்தை உற்பத்தி செய்தாலும் உற்பத்தி செய்வதிலே குறிப்பிட்ட ஒரு எக்கர் நிலத்திலே அதிகமான அளவு உற்பத்தி செய்வது வட ஆர்க்காடு மாவட்டம்தான். வட ஆர்க்காடு மாவட்டம் ஒரு எக்கருக்கு 15 மூட்டை நெல் உற்பத்தி செய்கிறது என்றால் தஞ்சை மாவட்டத்திலே அதைவிடக் குறைவாகத்தான் உற்பத்தி செய்கிறார்கள். மத்திய அரசிலிருந்து இதற்காக பரிசுகள் கொடுக்கிறார்கள். சென்ற ஏழு, எட்டாண்டுக் காலமாக அந்தப் பரிசைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டு வருகிறது. அங்கேயுள்ள விவசாயிகள் மிக அதிகமாக கஷ்டப்பட்டு உற்பத்தியிலே ஈடுபடக்கூடியவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஏழை விவசாயி தனக்கு இரண்டு எக்கர் நிலம் மட்டும் இருந்தாலும் அந்த நிலத்தின் மதிப்பு இரண்டாயிரம் ரூபாய் தான் இருந்தாலும் அதற்கு நான்காயிரம் கடன் வாங்கியாவது உடனடியாக கிணறு வெட்டுவான், கிணறை வெட்டி இறைவைப் பாசனம் செய்து உற்பத்தி அதிகமாகச் செய்யக்கூடிய விவசாயிகள் எங்களுடைய மாவட்டத்திலே செயலாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

மின்சாரத் துறையிலே தமிழகம் பூராவும் ஏறக்குறைய நான்கரை லட்சம் பம்பு செட்டுகள் இருந்தாலும் ஏறக்குறைய 1 லட்சம் பம்பு செட்டுகள் வட ஆற்காடு மாவட்டத்திலே தான் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு உணவு உற்பத்தியிலே அதிகக் கவனம் செலுத்தக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய காலத்திலே சிறந்த விதைகள் வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. விதைப்பண்ணைகளிலிருந்து வரக்கூடிய விதைகளாக இருந்தாலும் சரி, வேறு யாராவது உற்பத்தி செய்து வட ஆற்காடுக்கு அனுப்பக்கூடிய விதைகளாக இருந்தாலும் சரி, சிறந்த விதைகளாக இல்லாத காரணத்தினாலே விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

பாசன வசதிகளைப் பொறுத்த வரையிலும் விவசாயிகள் தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே பெரிய ஆற்றுப் பாசனம் இல்லாத மாவட்டம். இருக்கின்ற ஆறுகளை வைத்துக்கொண்டு பாசன வசதிகளைச் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பாசன வசதிகள் அதிகமாகச் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இருந்துகொண்டு இருக்கின்றன. சமுதாயக் கிணறுகள் அதிகப்படுத்தப்படலாம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வறட்சி ஏற்பட்ட நேரத்திலே அரசாங்கத்திலே இது போன்ற பாசன வசதிகளுக்காக உதவி செய்தார்கள்.

எங்களுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும் அப்பொழுது அங்கே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த டி. வி. வெங்கட்டராமன் அவர்கள் பத்து சமுதாயக் கிணறுகளை வெட்டச் செய்தார். அதற்கு மொத்தம் செலவான தொகை ஒன்றே கால் லட்சம் ரூபாய் தான். ஒன்றேகால் லட்சம் ரூபாயில் பத்து சமுதாயக் கிணறுகளைத் தோண்டி இன்றைய தினம் நானூறு, ஐநூறு எக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு கிணறுக்கு பதினைந்து ஆயிரம் ரூபாய் செலவழித்து அந்தக் கிணற்றிலிருந்து 67 எக்கர் பாசன வசதி பெறுகிறது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகளை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டத்திலே சமுதாயக் கிணறு வெட்டினார்கள். ஆளுநர் அவர்களும் சென்று பார்த்து சினிமா படம் எல்லாம் எடுத்தார்கள். பாசன வசதிக்காகச் செலவு செய்த ரூபாய் எவ்வளவு என்று பார்க்கிறபோது அந்தச் செலவிலே நாலில் ஒரு பங்குகூட செலவில்லாமல் எங்களுடைய பகுதியிலே வெட்டப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு நிறைய சாத்தியக் கூறுகள்



இருக்கின்றன. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்து சுற்றிப் பார்த்து இன்னும் அதிகப்படியாக ஏற்படுத்த தனியாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியிலே ஏறக்குறைய 21 ஆயிரம் எக்கர் பாசனம் பெற்றுக்கொண்டிருக்கிறது. ஆயக்கட்டுப் பகுதி 21 ஆயிரம் எக்கர் ஆகும். ஆனால் பாயக்கூடிய பகுதி 23 ஆயிரம் எக்கர் ஆகும். இருந்தாலும் ஆயக்கட்டிலே சேர்ந்த பகுதியில் 3 ஆயிரம் எக்கர் 4 ஆயிரம் எக்கர் இன்னும் பாசன வசதி பெறாமல் இருந்துகொண்டிருக்கிறது. இதைப் பற்றி நான் பொதுப்பணித் துறை பற்றிப் பேசும்பொழுதே பேசியிருக்கிறேன். விவசாயிகளுக்குச் சரியான முறையில் தண்ணீர் கிடைப்பதற்கு முயற்சி செய்வது பொதுப்பணித் துறையாக இருந்தாலும், விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால்தான் நான் சொல்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

செய்யாற்றுப் பகுதியிலே சாகுபடி செய்வதற்கேற்ற ஆற்றோரங்கள் இருந்தாலும் அரிப்பு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட குறைகளையெல்லாம் போக்க எங்கெங்கு அரிப்புகள் ஏற்படுகிறதோ அங்கங்கு ரிவட்மெண்ட் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்வதற்கு பஞ்சாயத்திலே பணம் இல்லை. சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் எல்லாம் உற்பத்தியில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. எனவே உடனடியாக அதைத் தடுக்கவேண்டும்.

விவசாயிகள் உற்பத்தி செய்து ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு அனுப்பவேண்டிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. திருவண்ணாமலைப் பகுதியில் இரண்டாயிரம், மூவாயிரம் மணிலா மூட்டை வந்தது என்றால் குறிப்பிட்ட மூன்று, நான்கு வியாபாரிகள் சேர்ந்துகொண்டு பாகம் போட்டுக்கொண்டு குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அது நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையில்லை. ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. இருக்கவேண்டியதுதான். ஆனால் அதே நேரத்திலே அங்கே தான் சென்று விற்றாகவேண்டுமென்று கட்டாயப்படுத்தினால் நியாயமான விலை கிடைக்காமல் பெரிய வியாபாரிகள் லாபம் அடையக் கூடிய சூழ்நிலை தான் ஏற்படும்.

விசைத் தெளிப்பான்கள் சரியான முறையிலே எந்த ஒன்றியத்திலேயும் பயன்படுவதில்லை. ஆங்காங்கு அருகில் இருக்கிற அரசினர் தொழில் பயிற்சிப் பள்ளியிலே மராமத்துச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயிகளுக்கும் 15 நாட்கள் அல்லது 1 மாதம் என்ற அளவிலே பயிற்சி அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் எந்த நோக்கத்திற்காக அவை வழங்கப்பட்டனவோ அந்த நோக்கம் பலன் அடையத்தக்க சூழ்நிலை ஏற்படும். எந்த ஒரு ஒன்றியத்தை எடுத்துக்கொண்டாலும் 15 விசைத் தெளிப்பான்கள் இருக்கிறது என்றால் 3, 4 தான் வேலை

செய்யும். பெரிய தொகை இதற்காக ஒன்றும் ஒதுக்க வேண்டியதில்லை. இந்தத் துறையிலே இருப்பவர்கள் ஒழுங்காகச் செயல்படச் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும்.

கடைசியாக பாசன வசதிக்காக எரித் தண்ணீரைப் பயன்படுத்தும் பொழுது சிக்கனமாக செலவழிக்கின்ற வகையிலே அக்கறை செலுத்த வேண்டும். சிக்கனமாகச் செலவழிக்கக்கூடிய முறையிலே விவசாயி களுக்குச் சொல்ல அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பசுமைப் புரட்சித் திட்டத்தினை நம்முடைய முதல்வரவர்கள் நல்ல முறையிலே செயல்படுத்துவதால் இன்றையதினம் இந்திய உப கண்டத்திலேயே அரிசி உற்பத்தியில் தமிழ் நாடு தலைசிறந்து நிற்கிறது. அதேபோல ஒவ்வொரு துறையிலேயும் விவசாயத்தைப் பொறுத்த வரையில் நம் மாநிலம் எல்லா மாநிலங்களையும் விட நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. பற்றாக்குறையாக இருந்த இந்த மாநிலம் இன்றைய தினம் உபரி மாநிலமாக ஆக்கப்பட்டிருக்கிறது நம்முடைய அரசின் நல்ல முயற்சிகளால்.

இந்த நேரத்திலே நம் மாநிலத்தில் விளையும் கரும்பைப் பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே கரும்பு இரண்டாண்டுகளுக்கு முன்பு எந்த அளவிற்குப் பயிரிடப்பட்டதோ அதைவிடக் குறைவாகத்தான் இப்பொழுது பயிரிடப்பட் டிருக்கிறது. அதாவது 2·48 லட்சம் ஏக்கரில் தான் பயிரிடப்பட்டிருக்கிறது. கிடைக்கும் சர்க்கரையின் அளவு 9·91 டன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கரும்பைப்பற்றி இன்னும் நாம் பழைய முறையிலேயே நிற்கிறோம். புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாநிலத்தில் 15 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளின் எந்தப் பகுதியிலாவது இந்தப் புதிய கரும்பு பற்றி எந்த அளவிற்கு விவசாயிகளிடத்தில் பரப்பப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் ஆலையிலிருக் கும் நிர்வாகிகளுக்கே, பல ஆலைக்காரர்களுக்குத் தெரியவில்லை. நம் முடைய நாட்டிலே சிறந்த நிர்வாகம் நடைபெறும் என்னுடைய பகுதி யிலிருக்கின்ற சக்தி சர்க்கரை ஆலைக்காரரைக் கேட்டபொழுது இந்தப் புதிய 6,805, 62,175, 1288, 1295, 1305, 6405 போன்ற புதிய ரகங்களைப் பற்றி நான் அவர்களிடம் கேட்டபொழுது அவர்கள் எங்களுக்கே அவைகளைப் பற்றி அதிகம் தெரியாது என்று குறிப்பிட்டார்கள். அமைச் சரது உரையிலாவது அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்று பார்த்தேன், அதிலும் எந்தக் குறிப்பும் இல்லை. வேளாண்மைத் துறை யில் ஒரு சிறிய குறிப்பைக் கொடுத்தார்கள். அதிலும் விளக்கமாக எந்தக் குறிப்பும் இல்லை. இப்பொழுது கோ. 419 கரும்பு......

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் சொல்கின்ற அந்தப் புதிய திட்டக் கரும்புகளெல்லாம் இன்னும் பல மாவட்டங்களிலேயும் மாதிரிப் பண்ணைக்கு அனுப்பி





ஆராய்ச்சியில் இருக்கிறது. அதன் முழு விவரமும் இந்த ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டுக்குள் பயிரிட ஏற்பாடு நடந்துகொண்டிருப்பதால்தான் அதனுடைய தரம் என்ன, அதனுடைய சக்தி என்ன என்பது ஆராய்ச்சி செய்து முடிவுறாமல் இருப்பதால்தான் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்களின் விளக் கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கரும்பிலே நாம் அவசியம் புதிய முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது கரும்பு 419-க்கு 12 மாதங்கள் ஆகின்றன. 6,806, எட்டு மாதத்தில் வெட்டலாம் என்று குறிப்பிடுகிறார்கள். நானும் பயிர் செய்து பார்த்தேன். 8 மாதங்களிலே அரைத்தால் நல்ல சர்க்கரை வருகிறது. ஆகவே இம்மாதிரியான புதிய ரகங்களைப் பற்றி நம்முடைய அரசு எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்குக் கொடுக்கப்படும் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. இப்பொழுது 80 ரூபாயிலிருந்து 85 ரூபாய் வரையில் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இந்த விலை ரெகவரி பேசிஸிலே நிர்ணயிக்கப்படு வதாகச் சொல்லுகிறார்கள். இந்த ரெக்கவரியில் ஆலைக்காரர்கள் சொல் வதைத் தான் கேட்கிறோம். உதாரணத்திற்கு என்னுடைய பகுதியில் உள்ள ஆலையை எடுத்துக்கொண்டால் இப்பொழுது 11-க்கும் அதிகமாக ரெகவரி கிடைக்கிறது. ஆனால் கடைசியாக ஆண்டு முடிவில் 9·4 சத வீதம் தான் ரெகவரி என்று சொல்கிறார்கள். இந்த 9·4 சத விகிதத்தை மினிமம் என்ற நிலையிலேதான் எடுத்துக்கொண்டு 85 ரூபாய் கொடுக் கிறார்கள். ஆகவே, இந்த ரெகவரியைக் கண்டுபிடிப்பதற்காக அரசு 'செக்' ஏற்படுத்தவேண்டும். எல்லா ஆலைகளிலும் நம்முடைய அரசு அலுவலர்கள் இருந்து ஒவ்வொரு மாதமும் என்ன ரெகவரி என்று கண்டுபிடித்து அந்தந்த மாதத்திலே அறைக்கும் கரும்புகளுக்கான ரெகவரி பேசிஸிலே அரசு விலை நிர்ணயித்திருக்கிறதே அந்த விலை கொடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் ஒன்றை இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த கேன் செஸ் ஃபண்டைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கரும்புத் தொழிற்சாலை இருக்கும் பகுதி களுக்கு சாலை மேம்பாட்டுத் திட்டம் வகுத்து கரும்பு தீர்வையிலிருந்து இதற்குச் செலவு செய்யப்படுகிறது. இது ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் வருகிறது. ஆனால் இதிலிருந்து சாலை மேம்பாட்டுக்காக அளிக்கப் படும், ஒதுக்கப்படும் தொகையோ மிக மிகக் குறைவாக இருக்கிறது. 33 லட்சம் தான் ஒதுக்கப்பட்டு, 40 கிலோ மீட்டர் தான் நீளமுள்ள சாலைகள் புதிதாக அமைக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் நமக்குக் கிடைக்கின்ற இந்த 2 கோடி ரூபாயில் ஒரு பாதியையாவது ஒதுக்கி இந்த ஆலைகள் இருக்கும் பாகங்களிலேயுள்ள சாலைகளை விரைவில் மேம்படுத்தி விட்டால் பின்னால் இதற்கு மிகமிகக் குறைவாகத்தான் செலவாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இந்த கேன் செஸ் ஃபண்டினால் அமைக்கப்படும் சாலைகளை ஹைவேசிலும் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஒன்றியங்களிலும் நாங்கள் பராமரிக்க முடியாது என்று சொல்கிறார்கள். என்னுடைய பகுதியிலே கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வந்து 7 இலட்சம் ரூபாயில் போடப்பட்ட சாலையைத் திறந்து வைத்தார்கள். திறந்து இப்பொழுது 3 ஆண்டுகள் ஆகிறது. அந்தச் சாலை இப்பொழுது மறுபடியும் அந்தப் பக்கத்திலேயிருக்கும் விவசாயிகளால் ஆக்ரமிக்கப்படுகிறது. அந்தச் சாலை பழுதுபட்டு, அதைக் கவனிக்க ஆள் இல்லாமல் தூர்ந்து போகிறது. இப்படி 7 லட்சம் ரூபாய் செலவழித்தும் அந்தச் சாலையைச் சரியாகப் பராமரிக்காத காரணத்தினால் அவை பழுதடைகின்றன. கேன் செஸ் நிதியிலிருந்து போடப்படும் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை சாலைகளுமே அனாதைப் பிள்ளைகளாக இருக்கின்றன. அவைகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டிடம் ஒப்படைத்து அதற்கான ஒரு தொகையை ஒதுக்கி கேன் செஸ் ஃபண்டிலிருந்தாவது கொடுத்து, அந்தப் பராமரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தென்னை, வாழையைப் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தென்னை, வாழையைப் பார்த்தால், நான் நாடு பூராவும் சுற்றுகிறேன். அவைகளுக்கு நிறைய நோய் விழுந்திருக்கிறது. அதை ஒழிக்க தென்னைக்கு ஒரு புழுவை (Parasite) விடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு நாங்கள் குரல் எழுப்பினால் விடுகிறார்கள். இல்லையென்றால் யாரும் கவனிப்பதில்லை. வாழைக்கும் நோய் வருகிறது. குட்டை வாழை என்பது ஏற்றுமதி செய்யக்கூடிய திட்டத்தின் கீழ் வருகிறது. அதற்கு எங்கே பார்த்தாலும் அதனுடைய இலைகள் வரண்டு வரண்டு இருக்கும். டைதேன் அடித்துப் பார்த்தாலும் சாக மறுக்கிறது. எனவே அதற்குப் புதிதாக மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். மஞ்சள் நிறைய விளைகிறது. பவானி, கோபி, ஈரோடு பகுதிகளில் மஞ்சள் நிறைய விளைகிறது. அது ஒரு ஏற்றுமதி பொருள். அதற்கு இது வரையிலும் விவசாயக் கல்லூரியிலே ஒரு ஆராய்ச்சித் துறை இல்லை. மஞ்சளுக்கு எவ்வளவு உரம் இட வேண்டுமென்று தெரியாது. மஞ்சளுக்கு நோய் வந்தால், சாதாரணமாக வைத்தியர்கள் எதற்கும் ஒரு பச்சையிலைத் தண்ணீரைக் குடிக்கச் சொல்வார்களே அதைப் போல இந்த இலாக்காவினர் டைதீனை அடி என்று சொல்கிறார்கள். அடித்துப் பார்க்கிறோம். அதற்கும் அது போவதில்லை. இந்த ஆண்டு எங்கே பார்த்தாலும் மஞ்சளுக்கு நோய் வந்து பாதி விளைச்சல்தான் வந்திருக்கிறது. எனவே இதற்காக உடனடியாக ஆராய்ச்சித் துறையை ஏற்படுத்தி, உடனடியாக இந்த நோயை நிவர்த்திப்பதற்கு வேண்டிய வழிவகைகளை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மஞ்சளில் சில நேரங்களில் தழை நன்றாக இருக்கும். ஆனால் கீழே கிழங்கு இருக்கிறதே அந்தக் கிழங்குக்கு நோய் வந்து கிழங்கு பூராவையும் சாப்பிட்டு விடுகிறது. அதற்கும் ஏதாவது வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சேனைக் கிழங்குக்கு வரக்கூடிய நோயைப் போக்குவதற்கும் மருந்து கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.





**திரு. அ. சின்னசாமி** : சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் சீரிய உழைப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்ட இந்த மானியத்தை வரவேற்றுப் பேசுவதிலே மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைகின்றேன்.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி நடந்த நேரத்தில் அரிசிக்காகத் தமிழ்நாட்டிலேயிருக்கும் மக்கள் பட்ட கஷ்டத்தை அனைவரும் அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இங்கேயிருக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் எடுத்துக்கொண்டிருக்கும் நல்ல முயற்சியின் காரணமாக இன்றைய வீதிகளிலேயெல்லாம் அரிசியோ அரிசி என்று விற்பதைப் பார்க்கிறோம். விவசாயப் பெருங்குடி மக்களின் ஆர்வம் தான் இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. காங்கிரஸ் நண்பர்களும், காங்கிரசிலே பெரியவர்கள் என்று சொல்பவர்களும் வீடு வீடாகச் சென்று அரிசி, நெல்லை ஏன் பயிரிடுகிறீர்கள், கரும்பு பயிரிடுங்கள் போதும் என்று கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் செல்லும்பொழுது 3 படி போடுங்கள் என்று கேட்பார்கள். இங்கே ஏழை மக்களுக்கு எந்தவிதமான வசதியும் தெரியவில்லை, நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்குத் தான் எல்லாவிதமான வசதிகளையும் செய்கிறார்கள் என்று தூண்டி விட்டார்கள். அதையெல்லாம் தாங்கிக்கொண்டு மாண்புமிகு அமைச்சர்களும், அதிகாரப் பெரு மக்களும் எடுத்துக்கொண்டு நல்ல முயற்சியின் காரணமாகத் தான் பசுமைப் புரட்சி ஏற்பட்டு இன்றைய தினம் உணவு வகையிலே முன்னேறியிருக்கிறோம்.

இருந்தாலும், அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திய விவசாயப்பெருங்குடி மக்களுக்கு நாம் போதுமான அளவுக்கு, மகிழ்ச்சி கொள்ளுகின்ற அளவுக்கு வசதிகளைச் செய்தோமா, வாய்ப்புகளைத் தந்தோமா என்று பார்த்தால் போதுமான அளவுக்கு இல்லை.

குறிப்பாகவும், சிறப்பாகவும் தாழ்த்தப்பட்ட மக்களில் ஏறத்தாழ 80 சதவிகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு மற்றவர்களைப் போல் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியத்தின் சார்பாக அரிசன மக்கள் இருக்கின்ற பகுதியில் எல்லாம் மின் விளக்குக்கு எந்தவிதக் கட்டணமும் வசூலிக்கக்கூடாது. மின்சாரத் துறை அமைச்சரும், மாண்புமிகு டாக்டர் அவர்களும் முயற்சி எடுத்து எங்கெங்கு ஏழை அரிசன மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்கள் மோட்டார் வைத்திருந்தால் மோட்டாருக்கான செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

என்னுடைய பகுதி உடையார்பாளையம் பகுதி எல்லா வகையிலும் பிற்போக்கான பகுதியாகும். ஏற்கெனவே வேறு மானியத்தில் பேசிய போது இரண்டு திட்டங்களைக் கேட்டிருக்கிறேன். டி. பழூரில் விக்கிரமங்கலம் என்ற ஊரில் மருதை ஆற்றுத் திட்டத்தை ஏற்படுத்திவிட்டால் ஏழாயிரம் விவசாயப் பெரு மக்கள் பயன்பெறுவார்கள். இந்த ஆண்டு வேறு எந்த ஆண்டையும் விட மழை பெய்தும் வறட்சிதான் இருக்கிறது. பெய்த மழை ஓடையிலே ஓடிவிட்டது. ஆற்றிலே ஓடிவிட்டது. அந்த நீரையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தும் வகையில் ஏரிகளையும், குளங்களையும் வெட்டி சீரமைத்தால் உள்ளபடியே பலன் தரக்கூடியதாக இருக்கும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. பொன். சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைமாற்றுத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு வேளாண்மைத் துறை மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்னால் இந்த நாட்டில் வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய தானைத் தலைவர் பேறறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியதன் காரணத்தால் இன்றையதினம் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயப் பெருங்குடி மக்கள், குறிப்பாக சிதம்பரம் வட்டத்தில் இருக்கக்கூடிய அத்தகைய சிறு விவசாயிகள் சிறந்த முறையில் விவசாய உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். ஐ.ஆர். 8, 20, பத்மா போன்ற உயர்ந்த ரக விதைகளைக் கொண்டு சிறந்த விவசாயத்தைச் செய்து நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு ஏக்கரில் சராசரி ஏறத்தாழ 3,000 கிலோ அளவு நெல் உற்பத்தி செய்யலாம் எங்கள் பகுதி விவசாயிகள் செய்து காட்டியிருக்கிறார்கள். நானும் ஒரு விவசாயி—அப்படி ஒரு நல்ல விவசாயத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நின்று செய்து ஏறத்தாழ இந்த ஆண்டு முதல் போகத்தில் பத்மா என்ற நெல்லை விவசாயம் செய்து 3,000 கிலோ அளவுக்குக் கண்டுமுதல் செய்திருக்கிறேன். பின்னால் இரண்டாம் போகத்தில் ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டு ஏறத்தாழ 2,400 கிலோ கண்டுமுதல் செய்திருக்கிறேன். இப்படி விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க தமிழக அரசு பெருமளவு ஊக்கம் கொடுத்தாலும் ஆங்காங்கு இருக்கக்கூடிய இ.ஓ. (அக்ரி) என்று சொல்லக்கூடிய விவசாய ஆராய்ச்சியாளர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று தங்கள் பணியைத் தரமான முறையில் செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தில் தன்னிறைவு பெற அரசு மானியங்களை வழங்கினால் மட்டும் போதாது; டிராக்டர்களைக் கொடுத்தால் மட்டும் போதாது; பசுந்தாள் உரம் கொடுத்தால் மட்டும் போதாது; விவசாயிகளுக்கு பூச்சி மருந்து அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும். அந்தப் பூச்சி மருந்துகளை தனியார் கம்பெனிகளில் வாங்குகின்ற நேரத்தில் சில பல நேரங்களில் அந்த மருந்துகள் தரமான மருந்துகளாக இருப்பதில்லை. மாதிரிக்குக் காண்பிக்கின்ற பூச்சி மருந்துக்கும் பிறகு அனுப்புகின்ற பூச்சி மருந்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் அனுப்புகின்ற பூச்சி மருந்து சரியாக வேலை செய்வதில்லை. ஹெலிகாப்டரில் சென்று அந்த மருந்தை அடித்தாலும் அதனால் பலன் ஏற்படுவதில்லை. இதனால் நம்மை எதிர்க்கிறவர்கள், இந்த அரசுக்கு எதிராக இருக்கக்கூடியவர்கள் போய் இதைப் பற்றிப் பிரசாரம் செய்கிற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, பூச்சிமருந்து





தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை வேளாண்மைத் துறை மூலமாக நம்முடைய அரசே உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாய அதிகாரிகள் ஆங்காங்கு விளைச்சல் நடந்திருக்கின்ற இடங்களுக்குச் சென்று நன்றாக அதிகப்படியாக விளைவித்தவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கும் போது 4 செண்ட், 5 செண்ட் நிலத்தைத் தேர்ந்தெடுக்காமல், ஒரு ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று வைத்து அதிலே அதிகப்படியாக விவசாயம் செய்தவர்களை மகசூல் கண்டவர்களைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்க முடிவு செய்தால் மேலும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் முனைவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த் கால காங்கிரஸ்காரர்கள் ஆட்சியின்போது—சிதம்பரம் வட்டத்தில் உள்ள மிராளூர் வெண்டராயன்பட்டு ஆகிய இரு இடங்களில் விவசாயிகள் உழுது வந்த நிலத்தை வாங்கி விதைப்பண்ணை வைத்தார்கள். அந்த இரண்டு விதைப் பண்ணைகளிலும் அடிக்கடி வெள்ளாற்று வெள்ளத்தால் தண்ணீர் வந்துவிடுவதால் தரமான விதைகளை உற்பத்தி செய்ய முடியாது நம்முடைய அரசுக்கு அது லாபம் தராத நிலையில் இருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகள் அதுபற்றிப் பார்த்து ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நஞ்சை நிலங்களைச் செம்மைப்படுத்துவதற்காக நம்முடைய அரசு விவசாயத் துறை மூலமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத் தரப்படுகின்ற பணம் அந்தந்தப் பகுதிகளில் நஞ்சை நிலங்களை விவசாயிகள் செம்மைப் படுத்தி இருக்கிறார்களா என்பதைப் பார்த்து அறிய விவசாய இலாகா மூலமாக ஒரு அதிகாரியை அனுப்பி பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலங்களை எல்லாம் உண்மையிலேயே எந்த அளவுக்குச் செம்மைப் படுத்துகிறார்களோ அந்த அளவுக்குத்தான் விவசாய உற்பத்தி அதிகரிக்க முடியும். இன்றைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் தரமான பாமணி உரத்தை தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கி இருக்கிறார்கள். தரமான பூச்சி மருந்தைத் தயாரிக்கவும் விவசாயத் துறை மூலமாக ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பெரிய மானியத்திலே 5 நிமிஷ காலத்திலே எல்லாக் கருத்துக்களையும் சொல்லுவது என்றால் அது முடியாத காரியமாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏழு நிமிடங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : அதிலே கூட முடியாது. ஆகவே, கொஞ்சம் கருணை கூர்ந்து சில நிமிட நேரம் அதிகமாகத் தரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயம் செய்கிறவர்கள் எவ்வளவு கேவலமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் எல்லாம் அறிவோம். இந்த நாட்டில் முதுகெலும்பு விவசாயிகள் என்று சொல்லுகிறோம். அந்த முதுகெலும்பு போன்றவர்கள் மத்தியில் ஒரு ஒற்றுமை இல்லாமல் அவர்களால் போட்டி போடுவதற்கு வசதி இல்லாத நிலையில் இந்த நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் அப்படித்தான் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒற்றுமை இல்லாத காரணத்தால் உலகத்தில் இருக்கும் எல்லா அரசியல்வாதிகளும் விவசாயிகள் தலையிலேதான் கை வைக்கிறார்கள்.

சமீப காலத்தில் டெல்லியில் ஒரு பட்ஜட் போட்டார்கள். அதிலே பெர்டிலைசர், பம்ப் செட் மோட்டார் போன்று விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய பொருள்களின் மீது வரியைப் போட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு விவசாயிகள் என்ன பாவம் செய்தார்கள்? தொழிற்சாலை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எவ்வளவு தொழிற்சாலை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அவர்கள் வரியைக் கட்டினாலும் கூட வருமானத்தை ஏராளமாகச் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் ஆண்டுக்குக் கோடிக்கணக்கில் ரூபாய் சம்பாதிக்கலாம். ஆனால் விவசாயிகளுக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் அவனால் வைத்துக் கொள்ள முடியாது. விவசாயிகள் வெள்ளைவேட்டி கட்டக்கூடாது. விவசாயி நல்ல சாப்பாடு சாப்பிடக்கூடாது. விவசாயிகள் தங்களுடைய குழந்தைகளைக் கல்லூரிக்கு அனுப்பக்கூடாது என்ற நிலையிலே இன்றைக்கு மத்திய அரசாங்கம் அக்ரிகல்சுரல் இன்கம்டாக்சை தன்னுடைய கையிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப் படுகிறது. அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் கொண்டு வந்து விவசாயிகளை எல்லாம் ஓட்டாண்டியாக்கி விட்டால் இந்த நாடு சுகமாக இருக்குமா? ஆகவே, மத்திய அரசாங்கத்தோடு போராடி அந்தச் சலுகையைப் பெற்றுத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாலை 5–30. இன்று பொதுவாக நம் நாட்டில் விவசாயத்திற்கு மூலகாரணமாக இருப்பது இரிகேஷன். பாசனத்திற்கான தண்ணீர் வசதி தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் போதுமான அளவில் இல்லை. காவிரியைத் தடுத்துவிட்டால் இருக்கிற தண்ணீரைத்தான் நாம் பயன்படுத்தவேண்டும். பலயிடங்களில் 12 மாதங்கள் நாம் தண்ணீர் விடுகிறோம். எல்லாவற்றிற்கும் ஸீலிங் வைக்கிற நாம் இதற்கும் ஒரு ஸீலிங் வைக்கவேண்டும். அந்தத் தண்ணீரைப் பகிர்ந்து தண்ணீர் இல்லாத இடங்களுக்கு மூன்று மாதங்களுக்காவது விட்டால் கிணறுகளில் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். பழைய ஆயக்கட்டுகளை எல்லாம் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

காலையில் ஒரு உறுப்பினர் சொன்னார், வரப்பு உயர என்று....அது பழைய பாட்டு. வரப்பு உயர்ந்தால் வெள்ளாண்மை உயராது. இன்று நாம் தண்ணீரை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்தத் தண்ணீரை மிச்சப் படுத்தி பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியும். பழைய ஆயக்கட்டுகளை சீர்திருத்தம் செய்யக்கூடிய பணியை இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள்.





பைலட் ஸ்கீமாக தஞ்சையில் சித்தமல்லியில் துவக்கியிருக்கிறார்கள். அது எல்லாயிடங்களுக்கும் பரப்பப்படவேண்டும்.

பின்னர் பாண்ட்ஸ் ஸ்கீமை நிறைய போடவேண்டும். என் தொகுதியில் ஊத்துக்குளிகுள்ளத்தூர் பகுதிகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் வாய்க்கால்கள் வர வாய்ப்பில்லாததால் பாண்ட்ஸ் ஸ்கீமை அங்கு நிறையப் போட்டு கிணற்றுத் தண்ணீருக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

காலையில் ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் அக்ரிகல்ச்சுரல் யுனிவர்ஸிட்டிபற்றிச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களோடு நானும் என் கருத்துக்களை சொல்லவிரும்புகிறேன். அக்ரிகல்ச்சரல் யுனிவர்ஸிட்டி இன்று ஐ.ஸி.ஏ.ஆர். யின் பரிந்துரையின் பேரில் தமிழகத்தில் வைத்திருக்கக்கூடிய எல்லா ரிசர்ச் செண்டர்களும் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏற்கனவே எட்டு செண்டர்களை நாம் அந்த யுனிவர்ஸிட்டிக்குத் தந்திருக்கிறோம். அதற்கு மேலும் தேவை என்று ஐ.ஸி.ஏ.ஆர். கமிஷன் கேட்கிறது.

தமிழகத்தில் இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு நாம் எல்லாவித உதவிகளையும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் இரண்டு விதக் கருத்து இல்லை. ஆனால் இருக்கிற எல்லா ரிசர்ச் செண்டர்களையும் அவர்களுக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு மட்டும்தான் இப்படி எல்லா ரிசர்ச் செண்டர்களையும் தந்துவிடச் சொல்கிறார்கள். ஆனால் வடநாட்டில் பஞ்சாப், பாட்நகர், போன்ற யிடங்களில் ஐ.ஸி.ஏ.ஆர். அந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க கட்டடம் கட்டுவது முதற்கொண்டு ஏறத்தாழ எல்லா ரிசர்ச் செண்டர்களும் அவர்கள் பண உதவியினால் நடைபெற்றிருக்கின்றன. நாம் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் உள்ள நம் அக்ரிகல்ச்சரல் காலேஜை அவர்களுக்கு தந்திருக்கிறோம். நம் ரிசர்ச் செண்டர்களை தந்திருக்கிறோம். இவ்வளவிற்குப் பிறகும் அவர்கள் எல்லா செண்ட்டர்களையும் கேட்பது என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

ஹோம் ஸயன்ஸ் வேண்டுமென்று சொல்கிறார்கள். வெட்டரினரி காலேஜ் வேண்டுமென்று சொல்கிறார்கள். தரவேண்டியதுதான். ஆனால் மற்ற மாநிலங்களில் அவர்களாகவே அவற்றைக் கட்டியிருக்கிறார்கள். இங்கு அஃபிலியேஷன் தருகிறோம் என்றால் கூடாது என்று சொன்னார்கள்.

அடுத்து, இரண்டு ரிசர்ச் செண்டர்கள் இருப்பது, அதாவது டுப்ளிகேஷன் செய்வது தவறு என்று காலையில் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னார்கள். இரண்டு இடங்களில் இருந்தால்தான் காம்பெட்டிஷன் வரும். அப்போது தான் சிறந்த ஆராய்ச்சிகள் நடைபெறும். அமெரிக்காவில் மூன்றுவிதமான ஆராய்ச்சிகள் ஒரே துறையில் இன்று நடக்கின்றன. ஒன்று ஃபெடரல் கவர்ன்மெண்ட், இன்னொன்று லாண்ட் கிரண்ட் காலேஜ், மூன்றாவது, ஸ்டேட் கவர்ன்மெண்ட். இந்த மூன்று ரிசர்ச் செண்டர்களும் ஒரே பிரச்னையை ஆராய்ச்சி செய்கிற காரணத்தினால் அங்கு நல்லவித அபிவிருத்திகள் ஏற்படுவதைக் காண்கிறோம். இன்று தமிழகத்தில் அப்படி பல ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும்.

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 2

இந்த ஆராய்ச்சி நிலையங்களில் விவசாயிகள் அங்கம் வகிக்கவேண்டுப் குறிப்பாக இன்று தமிழகத்திற்கு ஒரு பெரிய ஆபத்து வந்து கொ டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான சோளம் இலங் போவியா என்னும் பூண்டு கோவை மாவட்டத்தில் நிறையயிட களில் உற்பத்தியாகியிருக்கிறது. அதன் வேர்கள் வலை போல் பின்னி கொண்டு ஆழமாகச் சென்று ஏராளமாக வளர்கிறது. எந்த மருந் போட்டாலும் அதை அழிக்கமுடியவில்லை. இந்நிலைமையை தொடர்ந் ஐந்து ஆண்டுகளுக்கு இருக்க விட்டால் கோவை மாவட்டம் மட்டுமல் தமிழ்நாட்டிலே ஒரு அங்குல நிலம் கூட விவசாயத்திற்கு இருக்காத ஆகவே இந்த களையைப் போக்குவதற்கு நம் அரசு ரிசர்ச் சென்டர்க மூலம் முயற்சி எடுக்கவேண்டும்.

இன்று நாஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்ச்சர் என்றதொரு நிறு வனம் அரசாங்கத்திலிருக்கிற எல்லா ரிசர்ச் சென்டர்களையும் யுனிவ ஸிடிக்குத் தரக்கூடாது என்றும் இங்கேயே வைத்திருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் ஐ.ஸி.ஏ.ஆர். புராவும் வேண்டுமென்று கூ கிறார்கள். ஐ.ஏ.ஆர்.ஐ. என்ற மத்திய அரசின் நிறுவனம் கோவை போன்ற இடங்களில் ரிசர்ச் சென்டர்கள் வைத்திருக்கிறார்கள். அவைக முதலில் டிருஜன்ஸ்பர் செய்துநாருங்கள் என்றால் மாட்டேன் என்கிறார்கள் பாரஸ்ட் காலேஜ் இருக்கிறது. தரமாட்டேன் என்று சொல்கிறார்கள் அப்படியிருக்க தமிழ்நாட்டில் வைத்திருக்கக்கூடிய இந்த ரிசர்ச் சென்டர்க மட்டும் வேண்டுமென்று கேட்பதில் பொருள் என்னவென்று விளங்கவில்லை தேவைதான். ஆனால் அதைப் பொறுத்திருந்து நிதானமாகத், தரலாப் புதிதாக ஆரம்பிக்கலாம். அதைவிட்டுவிட்டு உடனே எல்லா ரிசர்ச் சென்ட களையும் எடுத்துவிட்டால் ஒரு பலனும் இல்லாத முடமா இருக்கக்கூடிய நிலை அரசாங்க டிபார்ட்மெண்டிற்கு ஏற்பட்டுவிடும்.

டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் இங்கு வந்திருந்தபோது சொன்னார்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சென்டர் கொடுத்துவிடுங்கள் என்று பாக்கியை டிப்பார்ட்மெண்ட் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொ ஞர்கள். அதைவேண்டுமானால் ஆரம்பத்திலே ஏற்றுக்கொள்ளலாம். அதில் தவறு ஒன்றுமில்லை.

அடுத்து, பெஸ்டிஸைட்ஸ். இன்று நல்லமுறையில் உருப்படியான முறையில் பெஸ்டிஸைட்ஸ் கிடைக்கவில்லை. கம்பெனிகள் அத்தனையு களும் மோசடி செய்கிறார்கள். அவர்கள் சாம்பிளாக ஒன்று தருகிறார்கள் அதைப் போட்டால் நல்லமுறையில் விளைகிறது. ஆனால் விலைக்கு வாங்கி போட்டால் அங்கிருக்கிற நோய்கள் சாவதற்குப் பதில் செடிகள் செத் விடுகிறது. இப்படியெல்லாம் ஏமாற்றுவேலைகள் நடக்கின்றன. டிப்பார் மெண்டில் இருப்பவர்கள் இதையெல்லாம் கண்டுபிடித்து அவர்களை உள்ளே தள்ளவேண்டும். இப்படிச் சண்டாளத்தனம் செய்கிறவர்கள் கலப்படம் செய்கிறவர்கள் இந்த நாட்டின் விவசாயத்தை. இந் நாட்டின் வருமானத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

பின்னர், ஏறியல் ஸ்ப்ரேபற்றிச் சொன்னார்கள். இதிலே கூட என கருத்து, நம் நாட்டிற்கு அது பொருந்தாது. அமெரிக்காவிற்கு பொருந்தலாம். ஒருவன் அப்போதுதான் வெள்ளாமை போட்டிருப்பான் ஒருயிடத்தில் விளைந்திருக்கும். இன்னொருயிடத்தில் பாதி விளைந்திருக்கும்



1972 மார்ச் 25] [திரு. கோவை செழியன்]

ஆகவே இந்த ஏறியல் ஸ்ப்ரே என்பது தேவையில்லாத ஒன்று. பவர்ஸ் ப்ரேயர்ஸ் மூலம், சென்ட்ரல் கவர்ன்மெண்ட் தரும் மானியத்தைக் கொண்டு அதைப் பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு அவை நல்ல முறையில் விற்பனையாவதற்கு மார்க்கெட்டிங் சொஸைட்டீஸ் நிறைய ஏற்படுத்த வேண்டும். காட்டன் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்த வேண்டும். ஸ்ட்ரைக் நடந்து ரூ. 500-க்கு விற்கக்கூடிய பருத்தி ரூ. 250 ஆகிவிட்டது. விவசாயிகள் எல்லோரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளிடம் உள்ளதை ரூ. 500-க்கு விலைக்கு வாங்கி ஸ்டாக் செய்ய வேண்டும்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் சொன்னார். கரும்பு விலையை ஏற்ற வேண்டுமென்று. இன்று விவசாயிகள் நம் நாட்டில் ரூ. 80-ல் இருந்து ரூ. 86 வரையில்தான் பெறுகிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களில் ரூ. 100 பெறுகிறார்கள். மத்திய அரசோடு போராடி கரும்பு விலையை டன்னுக்கு ரூ. 100 ஆக உயர்த்த வேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரிகேஷன் பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று பல திட்டங்களை உருவாக்குகிறோம். அத் திட்டங்கள் அத்தனையும் நமக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

வேர்ல்ட் பாங்க் பொறுத்தவரையில் ஒரு கண்டிஷன் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆயிரம் அடி வித்தியாசத்தில்தான்இரு கிணறுகள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏ. ஆர். சி. 650 அடி என்று இன்று அதை மாற்றியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இறு நிறுவனங்களின் கண்டிஷன் தவறாகும். ஏனெனில் இங்கிருக்கிற நிலத்தில் 75% ஹார்ட் ராக் ப்ளேஸஸ் பாறைகள் நிறைந்த பகுதிகள். ஆகவே ஒரு கிணற்றுத் தண்ணீர் இன்னொரு கிணற்றுக்குப் போய்விடும் என்ற தத்துவம் இங்கு நடைமுறைக்கு சரிப் பட்டு வராது. இதுபற்றி உலகத்தில் யாரும் சர்வே எடுத்தது கிடையாது. தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, உலகத்திலேயே எங்கும் அதற்கான சர்வே எடுத்ததில்லை. டெல்டா ஏரியாவில் இந்தத் தத்துவம் சரியாக இருக்கலாம். கோவை, சேலம், தர்மபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் எல்லாம் ஹார்ட் ராக் ப்ளேஸஸ். எனவே, வேர்ல்ட்பாங்க் கண்டிஷனை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அடுத்து, சிமெண்ட் அடியில் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுவும் தேவை இல்லை. மணல் பிரதேசத்தில் அது சரியாக இருக்கலாம். பாலைவனங்கள் போன்ற மணல் நிறைந்த பிரதேசங்களில் வேண்டுமானால் அடியில் சிமெண்ட் போடும் முறை லாயக்காக இருக்கும், சரியாக இருக்கும். ஆனால் ஒரு ஏக்கருக்கு ஏழாயிரம் ரூபாய் செலவு செய்து அப்படி மற்றயிடங்களில் போட வேண்டிய அவசியமில்லை. சிமெண்ட் போடுவதால் முழு தண்ணீர் விடும்போது 1 முதல் 3 அடி வரை உப்பு தேங்கிவிடும் . இது ஆபத்து. இருக்கிற தண்ணீரை ஒழுங்குபடுத்தினாலே நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை

செய்து தர முடியும். ஆகவே தண்ணீரை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டத்தை அரசு முன் நின்று செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

வெளிநாடுகளிலிருந்து வீடிஸைட்ஸ் இறக்குமதி செய்ய வேண்டும். **Weedicides like, Atrazine Simazine, Propozine, 2, 4-D Salts,** இவை தமிழ்நாட்டில் கிடைப்பதில்லை. ஆகவே இவற்றை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கத்தோடு சண்டை போட்டு வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்குமுன் கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நிலங்கள் எல்லாம் பிராக்மென்டேஷன் சிறு சிறு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. இதனால் மெகனேசேஷன் செய்ய முடியவில்லை. நவீன கருவிகளைக் கொண்டு விவசாயத்தை விரிவு செய்ய முடியவில்லை. இதனாலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வைத்திருந்த கலப்பையைக் கொண்டுதான் வேளாண்மை செய்கிறோம். இதனால் வேளாண்மை விருத்தி அடையாது. இந்த சீலிங் கூட 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று போட்டிருப்பது, இதற்கு இடம் தரம் வேறுபடுகிறது. தரம் பிரித்ததை, இன்னொரு முறை பரிசீலிக்க வேண்டும். கொடுமுடியில் 15 ஏக்கர் என்பது 15 லட்சம் ரூபாய். என்னுடைய பகுதியில் 100 ஏக்கர் என்றால் கூட 50,000 ரூபாய்க்குக் கிடைக்கும். அதிலிருந்து வருமானத்தைக் கணக்குப் பார்த்துக்கொள்ளுங்கள் ஆகவே, சீலிங் வைக்கும்போது தரம் பிரித்து வைக்க வேண்டும். ப்ராக்மென்டேஷன் செய்வதால் மெகனேசேஷன் செய்ய முடியாத நிலையேற்படுகிறது.

அரசாங்கமே, எல்லா நிலங்களையும், ஒரு அங்குல நிலம் உள்பட, எடுத்துக் கொள்ள வேண்டும். யாருக்கும் சொந்தமாக இருக்கக் கூடாது. எல்லா நிலங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்புறம் 500 ஏக்கர் 1,000 ஏக்கர் என்று சொல்லி சீராகப் பிரித்து, கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்குத் தரவேண்டும். அப்படிச் செய்தால் வேளாண்மை விருத்தி யடையும். 5 ஏக்கர் 3 ஏக்கர் என்று பிரித்துக் கொடுப்பதால் வெறும் கலப்பையை வைத்துக் கொண்டு தான் வேளாண்மை செய்ய முடியும். எல்லா நிலங்களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு இஞ்சு நிலம் கூட இல்லாமல் 5,000 ஏக்கர் 1,000 ஏக்கர் என்று வைத்து ஒரு "பார்ம்" ஆக வைத்து கூட்டுறவு முறையில் டிராக்டர்கள், மற்றும் ஏரியல் ஸ்ப்ரே ஆகியவற்றை பயன்படுத்தினால் வேளாண்மை அபிவிருத்தி யடையும்.

இந்த விவசாயிகள் மீது மத்திய அரசாங்கம் கருணையில்லாமல் பயங்கரமாக, கொடூரமாக, நெஞ்சிலே ஈரம் இல்லாமல் வரி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நம்முடைய மாநில அரசு அதை எதிர்த்துப் போராடி அந்த அப்பாவி விவசாயிகளுக்கு, அழுது அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு, வருணனை நம்பியிருக்கும் விவசாயிகளுக்கு கை கொடுத்து உதவுங்கள். இது நம்முடைய ஆட்சியில் நடக்காமல் வேறு எந்த ஆட்சியில் நடக்கும்? நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இந்த விவசாய மக்களின் மீது கருணை கொண்டு, கண் திறந்து அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லி முடிக்கிறேன்.





**திருமதி. த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் விவசாயிகள் எவ்வளவு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகத் தெளி வாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால் சிறு தவறு செய்து விட்டார்கள். மத்திய அரசாங்கம் வரி போட்டு விட்டார்கள், மாநில அரசாங்கம் தான் எல்லாச் சலுகைகளையும் காட்டுவதாகச் சொன்னார்கள். மாநில அரசாங்கம் ஏற்கெனவே வரி விதித்து விட்டது. மத்திய அரசாங்கம் அதற்குப்பிறகுதான் இப்போது புதிய வரிகளைப் போட்டிருக்கிறது என்று இருக்கிறபோது உண்மையிலேயே விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் பசுமைப்புரட்சி நேற்று வந்தது போல பேசுகிறார்கள். 15—16 ஆண்டுகளாக 3 ஐந்தாண்டு திட்டங்கள் போட்ட பின்னால் தான் இன்று அறுவடை செய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக வந்ததும் சுலபமாக இருக்கிறது. ஆனால் பேசுகிறவர்களைப் பார்த்தால், அதற்கு முன்னாலே அரிசி கிடைக்காத மாதிரியும், தழையை மாத்திரம் தின்று கொண்டு இருந்தது மாதிரியும், இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் அரிசி விற்பது மாதிரியும், இந்த அமைச்சரவையைப் பாராட்டியிருக்கிறார்கள். விடுதலை அடைந்த 1947 ஆண்டிலிருந்து 1966 ஆண்டு வரையில் நல்ல அரிசிதான் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். 1966-ல் மழை தவறியதால் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்த அரிசித் தட்டுப்பாட்டை யாரும் மறக்கவில்லை. அதையே திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள் என்பதற்காக வருத்தப்படுகிறேன்.

நம்முடைய விவசாயிகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நல்ல விதை பூச்சி கொல்லி மருந்து, நல்ல விஞ்ஞான ரீதியில் பயிர்களை வளர்ப்பது, இன்னின்ன முறைகளில், விஞ்ஞான முறைகளில் மாற்றங்கள் கொண்டு வருவது போன்றவற்றைசெய்துவந்த காரணத்தால்தான், இந்த 20 ஆண்டு காலத்தில் செய்து வந்த காரணத்தால்தான், இந்த உற்பத்திப் பெருக்கம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இன்று விவசாயிகளின் நிலை என்ன என்றால் எல்லாத் துறைகளிலும் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நில உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்து இருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய திரு. கோவை செழியன் சொன்னார்கள். ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கரை டிபைன் செய்வதற்கு 13 வித்தியாசமான கிளாஸை வைத்திருக்கிறார் கள். 10 ரூபாய்க்கு மேல், 8 ரூபாயக்கு மேலே, என்று ப்ராக்ஷனில் அவர்கள் போட்டு இருப்பதைப் பார்க்கும்போது ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் கணக்கு என்ன என்பது ஒரு சாமர்த்தியசாலியால்தான் சொல்ல முடியுமே தவிர சாதாரணமாக யாரும் போட்டுவிட முடியாது. மீண்டும் அதை புனர் ஆலோசனை செய்து எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன வருமானம் வருகிறது என்பதை வைத்து ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயித்தால், 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ஒழுங்காக எவ்வளவு வருமானம் வரும் என்பதைப் பார்க்க முடியும். ஒரு ஆண்டு நல்ல விளைச்சலாக இருக்கும். அடுத்த ஆண்டு விளையாது. விளைந்த காலத்தில்

அரசாங்கம் அவர்களிடமிருந்து வருமானத்தைப் பெற்று விடுகிறது. விளையாத காலத்தில் அவர்களுக்கு ஒன்றும் செய்வது இல்லை. அதற்காகத் தான் நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் கூட விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக "க்ராப்" இன்ஷ்யூரன்ஸ் திட்டம்" உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

இராமநாதபுரத்தில் கஷ்டப்பட்டு மிளகாய் உற்பத்தி செய்வான். அந்த மாவட்டத்தில் மழை சரியாகப் பெய்வது இல்லை. மழை பெய்யாது போய் விட்டால், பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாமல் போய் விட்டால் அவன் மிகவும் பாதிக்கப்படுகிறான். இன்றுள்ள விவசாயிகளின் உண்மை நிலையைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகளின் கழுத்திலே கொஞ்சம் கொஞ்சமாக வரிகளை ஏற்றி விட்டோம் என்பதைப் பார்க்க வேண்டும். பேசிக் டாக்ஸ் தான் 5 ஏக்கர் வரை விதிவிலக்கு கொடுத்து இருக்கிறோம். உண்மையிலே விதி விலக்கு கொடுக்க வேண்டுமானால் சிறு விவசாயிகளுக்கு முழுவதுமாக தீர்வையிலிருந்து விதி விலக்கு கொடுக்க வேண்டும். பேசிக் டாக்ஸ் மட்டுக் விதிவிலக்கு கொடுத்துவிட்டு, வரி விலக்கு கொடுத்து இருக்கிறோம் என்று சொல்லி விட முடியாது.

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் எவ்வளவு ஏற்றியிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அகில இந்தியாவில் இருக்கும் பம்பு செட்டில் பாதி பம்பு செட்டை தமிழகத்தில் வைத்திருக்கிறோம் என்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக விவசாயி தலையில் வரியை ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். 1970-ல் தான் 1 பைசா வரி ஏற்றியதற்காக தாங்க முடியாது என்ற விவசாயி கிளர்ச்சி செய்து, 3 விவசாயிகள், நமக்கு மிகவும் தேவையானவர்கள், ஒரு குற்றமும் செய்யாதவர்கள், துப்பாக்கிச் சூட்டினால் இறந்து போனார்கள். இன்றைக்கு 12 பைசா என்று அந்தக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். இது தான் உண்மையிலேயே விவசாயிகள் மீது நீங்கள் காட்டுகிற அக்கறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்ற ஆண்டு 1 பைசா ஏற்றினோம். இந்த ஆண்டு 12 பைசா ஏற்றினோம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு ஏற்றப்பட்டது எவ்வளவு?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 1970-ல் 8¼ பைசாவிலிருந்து 10.8 பைசாவுக்கு உயர்த்தினீர்கள். 9 பைசாவாகக் குறையுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது 1972-ல் 12 பைசாவாக உயர்த்தியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 10.8 பைசாவிலிருந்து 12 பைசாவாகத் தான் ஆக்கியிருக்கிறோம். 1.2 பைசா தான் உயர்ந்து இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 1.2 பைசா தான் உயர்ந்து இருக்கிறது என்று உங்கள் நியாயத்தைத் தான் பேசுகிறீர்கள். விவசாயி கொடுக்கப் போவது எவ்வளவு?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சிண்டிகேட் காங்கிரஸ் ஆண்ட மைசூர் மாநிலத்தில் எவ்வளவு, ஆந்திராவில் எல்வ்வளவு கேரளத்தில் எவ்வளவு? நம்முடைய தமிழகத்தில் அதை விட அதிகம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கேரளத்தில் எவ்வளவு பம்பு செட் இருக்கிறது? ஆந்திராவில் எவ்வளவு பம்பு செட் இருக்கிறது? இவ்வளவு பம்பு செட்டுகள் அங்கெல்லாம் கிடையாது. இங்கே தான் அதிகமான பம்பு செட்டுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதிகமான பம்பு செட்டுகள் இருப்பதால் அதிகமான மின்சார சப்ளை செய்ய வேண்டியிருக்கிறது. அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தை ஈடு செய்யத் தான் 1·2 பைசா என்ற அளவுக்கு இப்போது கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** லட்சக்கணக்கான பம்பு செட்டுகள் இருப்பதால் அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் கண்ணோட்டத்திலேயே நீங்கள் அதைப் பார்க்கிறீர்கள்.

**திரு. நா. வீராசாமி :** முதலமைச்சர் அவர்கள் 1·2 பைசா தான் ஏற்றியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அம்மையார் அவர்களுக்கு புள்ளி தெரியவில்லை போல் இருக்கிறது. 12 பைசா என்று சொல்லுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர்கள் புள்ளிக்கும் கணக்குக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசுகிறார்கள். உங்கள் கண்ணுக்கு புள்ளி தெரிகிற மாதிரி இருக்கிறது. ஆனால் விவசாயிகள் கட்டப்போவது 12 பைசா, கேரளா, மைசூர் ஆந்திராவைப் பாருங்கள் என்று சொன்னார்கள். தமிழகத்தை தனியாக வையுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தமிழகத்தை தனியாக வையுங்கள் என்பது பிரிவினை வாதம். அதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. (சிரிப்பு).

**திருமதி த. ந. அனந்தநாயகி :** விவசாயிகளுக்குச் சலுகை பற்றி மட்டும் சொன்னேன். அது பிரிவினை வாதம் அல்ல.

உள்ளபடியே தமிழகத்தில் எந்த அளவுக்கு உணவு உற்பத்தி செய்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, இப்படிக் கட்டணம் உயர்த்தினால் நியாயமா என்பதை மீண்டும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இதற்கு முன்னால் 90 ரூ. மீட்டருக்கு வாடகை 75 பைசா என்று இருந்தது. இன்று ரூ. 2½ ரூ. ஆக்கியிருக்கிறீர்கள். முன்பு குறைந்தது 3 எச். பி. இன்ஜினுக்கு ரூ. 45 என்று இருந்தது

இப்போது ரூ. 60 ஆக்கி விட்டீர்கள். முன்பு அபராதம் 25 பைசா என்று இருந்தது. இப்போது 1 ரூபாய் என்று வாங்கப்படுகிறது. இப்படி பைசாவுக்குப் பைசா வட்டி போடுவது மாதிரி, இந்த விவசாயிகள் மீது வரிக்கு வரி போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

விவசாயிகளுக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 12 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வரி விலக்கு கொடுத்து இருந்தோம். தி.மு.க. ஆட்சி வந்த உடனே அதை 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்து விட்டார்கள். இந்த வரி போதாது என்று, நமது உணவு அமைச்சர் புதிதாக ஒரு வரியைப் புகுத்திவிட்டார்கள். 2½ ஏக்கர் நிலம் இருந்தால் போதும் பணப் பயிர் ஏதாவது பயிர் செய்கிறான் என்று தெரிந்தால் போதும் அவன் வரி கட்ட வேண்டும். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அவன் தலையில் வரிச்சுமையை ஏற்றி வருகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் உறுப்பினர் பேசும்போது இப்போது போடப்பட்டிருக்கிற விவசாய வருமான வரி சிறு நிலச்சுவான் தார்கள் மீது போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சிறு நிலச்சுவான் தார்களுக்குக் குறைவான வரிப் பளுவும், பெரிய நிலச்சுவான்தார்களுக்கு வரிப்பளு அதிகமாகவும் இருக்கிற மாதிரி நாம் வரியை பேலன்ஸ் செய்து இருக்கிறோம். புதிதாகப் போட்டோம் என்று சொல்வது சரியல்ல. 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை கம்பௌண்டிங் வைத்திருக்கிறோம். அந்த முறையைப் புதிதாகப் புகுத்தியிருக்கிறோம். 12 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருந்ததை 7½ ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்து இருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. சிலாப் ரேட் வைத்திருக்கிறோம். சிறு நிலச் சுவான்தார்களுக்கு இந்த அரசு போட்டிருக்கிற சட்டத்தால் நிறையச் சலுகை இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இங்கே தான் இப்பொழுது உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்து விட்டீர்களே, பெரிய நிலச் சொந்தக்காரர்கள், பெரு நிலக்காரர்கள் ஏது? 500 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இப்பொழுது யார் இருக்கிறார்கள்? இப்பொழுது தான் உச்சவரம்பு வந்து விட்டதே? பாமிலிக்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கர் சீலிங் என்றிருந்தது கூட இப்பொழுது 45 என்று வந்துவிட்டது. இண்டிவிஜுவலைப் பொறுத்த மட்டில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தானே வைத்துக்கொள்ள முடியும்? ஆகவே, இப் பொழுது பெரிய நிலச் சொந்தக்காரர், சிறிய நிலச் சொந்தக்காரர் என்ற வித்தியாசம் அதிகமாகக் கிடையாது.

உங்கள் கன்வர்ஷன் டேபிள் இருக்கிறதே அது எல்லோரையும் பாதிக்கும். வேறு பணப் பயிர்களைப் போட்டால் சாதாரண விவசாயி கூட அதிக வரி கட்ட வேண்டும் என்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் வருத்தப்பட வேண்டிய கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அரசாங்கத்துக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சரி அது போனால் போகட்டும், விவசாயிக்குக் கடன் காலாகாலத்தில் கிடைக்கிறதா என்று கேட்டால் இல்லவே இல்லை. மின் இணைப்புக்கு அவன் படுகின்ற பாடு, இங்கே இருந்து சர்டிபிகேட் வாங்கி, பம்பு செட் வாங்கி வைத்துக்கொண்டு, கடன் வாங்கிவிட்டு, மின் இணைப்புக் கொடுங்கள் என்று கேட்டால், விவசாயி, நடந்து நடந்து, அசந்து போய் மின் இணைப்பு கிடைக்காமல் தவிக்கிறான். மின் இணைப்பு வரும் என்று கடன் வாங்கி விட்டு, பம்பு செட்டு வாங்கி வைத்துவிட்டு, மின் இணைப்புக் கிடைக்காவிட்டாலும், கடனைத் திருப்பிக் கொடு, கொடு என்று உடனே நெருக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அந்த விவசாயி இரண்டுக்கும் மத்தியில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப் படுகிறான். எனக்கு தினமும் நான்கு, ஐந்து கடிதங்கள் வருகின்றன. 1½ ஆண்டு ஆகிவிட்டது, மின் இணைப்பு வரவில்லை. 2 ஆண்டுகள் ஆகிவிட்டது, மின் இணைப்பு வரவில்லை, மின் இணைப்பு தரப்படவில்லை. வாங்கி வைத்த பம்பு செட் பழுதடைந்து போய்க்கொண்டிருக்கிறது என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு உடனடியாக தாமதமில்லாமல் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். பம்பு செட்டு வாங்கி வைத்து, மின் இணைப்பு வராத காரணத்தினால், எப்படா அப்பா மின் இணைப்பு வரப்போகிறது என்று காத்துக் கொண்டே இருந்து அவதிக்குள்ளாக வேண்டியிருக்கிறது.



கூட்டுறவு இலாகா என்ன செய்கிறது என்று தெரியவில்லை? மின் இலாகா என்ன செய்கிறது என்று தெரியவில்லை. அக்ரிகல்சுரல் இலாகா என்ன செய்கிறது என்று புரியவில்லை. இதைப் பார்க்கும்பொழுது இந்த இலாகாக்களிடையே ஒற்றுமையான உழைப்பு இல்லை, பல இலாகாக்களுக்கு மத்தியில் கோஆர்டினேஷன் இல்லை. கோஆர்டினேஷன் இல்லாத காரணத்தினால் பல விவசாயிகள் பம்பு செட்களை வாங்கி வைத்துக் கொண்டு மின் இணைப்புக் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் சொல்லிக் கொள்வேன், மூன்று மாத காலத்திற்குள், பம்பு செட்டு வைத்த மூன்று மாதங்களுக்குள், மின் இணைப்புக் கொடுத்து கனெக்ஷன் கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கடுமையான உத்தரவு போடவேண்டும். அவர்கள் எந்த வரிசையில் எப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்கிறார்களோ, அந்த வரிசையில் ஸீனியாரிடிபடி கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் இஷ்டப்படி கொடுத்தால், விருப்பு வெறுப்புக்கு இடம் ஏற்படுகிறது என்று பல பேர் பல குறைகளை என்னிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு மூன்று மாத காலத்திற்குள் மின் இணைப்பு பெறக்கூடிய அளவுக்கு வசதி செய்துதர வேண்டும்.

மேலும், மின் இணைப்புக்கு அப்ளிகேஷன் போடும்பொழுதே வையரிங் கண்டிராக்டர் கையெழுத்து வேண்டும் என்று கேட்கிறார்கள். மின் இணைப்புக் கொடுத்து இணைத்த பின்னர் ஒழுங்காக இணைக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கின்ற அளவிலே அந்தத் தருணத்தில் வையரிங் கண்டிராக்டர் கையெழுத்து வாங்கினால் போதாதா? அப்ளிகேஷன் போடும்பொழுதே வைரிங் கண்டிராக்டர் கையெழுத்து வாங்கவேண்டும் என்று ஏன் கட்டாயப்படுத்த வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. அதோடு கூட டிபென்ஸ் பண்டுக்கு நீங்கள் ரூ. 50 தரவேண்டும், ரூ. 60 தரவேண்டும், தீர்வையில் மறுபாதி கொடுக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுவதால் விவசாயிகள் பெரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக, கடன் கேட்டால் தாராளமாகக் கிடைக்கிறதா? சுலபமாக கிடைக்கிறதா? இல்லை. விவசாயி நடந்து நடந்து, அசந்து போய் கடன் வருமா என்று எதிர்பார்த்த பிறகு தான் கடன் வந்து சேருகிறது. விவசாயி அப்ளிகேஷன் போட்ட 60 நாட்களுக்குள் கடன் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். விவசாயி நடந்து நடந்து அசந்து போய் வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிலைமையில் தான் இருக்கிறான். பருவத்தே பயிர் செய். விவசாயத் துறையில் மட்டும் காலம் தவறி எதைச் செய்தாலும் பலன் அளிக்காது. காலாகாலத்தில் உதவி செய்ய அரசாங்கம் முன்வந்தால் தான் பலன் அளிக்கும், இல்லையெனில் பலன் அளிக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சில கிராமங்களில் கூட்டுறவுச் சங்கம் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. நான்கு பேர்களுக்குக் கடன் கொடுத்துவிட்டு, வங்கி மூடப்பட்டுவிடுகிறது. கடனைத் திருப்பி வாங்குவதற்கு அங்கே சரியான ஆள் கிடையாது. ஸ்டிரிக்ட்சூபர்விஷன் வேண்டும். 4,000 பாங்குகள் இருக்கின்றன. 5,000 பாங்குகள் இருக்கின்றன என்று கணக்குக் காட்டிவிட்டால் மட்டும் போதாது. எந்தெந்த பாங்குகள் வலிக் பாங்குகள், நொண்டி பாங்குகள் என்பதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாங்குகள் மூலம் விவசாயிகளுக்குக் காலா காலத்தில் கடன் வசதி செய்து தர முடியாத அளவுக்கு, நம்மால் கவனிக்க முடியாத அளவுக்கு இன்றைக்குக் கூட்டுறவுத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நான் கூட விளையாட்டாகச் சொன்னேன். விவசாயிகள் யாருக்குக் கடன் பட்டிருக்கிறார்கள் என்றால், அமைச்சர் ஆதித்தன் இலாகாவிற்குத் தான் அதிகமாகக் கடன்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கடன் வாங்கியும் பலனை அடைய முடிகிறதா என்றால், உடனடியாக கடனைத் திருப்பிக் கேட்பார்களே என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். வேர்க்கடலை அதிகமாக உற்பத்தி செய்வதற்குக் கடன் தருகிறோம் என்று சொன்னால், வேர்க்கடலை எதிர்பார்த்தபடி விளையவில்லை. உற்பத்தியாகவில்லை என்றால் அவன் எப்படி கடனைத் திருப்பித் தருவது, கிணறு வெட்டக் கடன் கொடுக்கிறார்கள். தண்ணீர் வந்திருக்கிறதா என்று பார்த்தா கடனைத் திருப்பிக் கேட்கிறார்கள்? கடனை வாங்கி, அதனுடைய பலனை விவசாயி அடைந்திருக்கிறானா என்று பார்க்கிறார்களா என்றால், இல்லை. தண்ணீர் வரவில்லை என்று கிணற்று அடியில் குனிந்துபார்த்துக் கொண்டிருக்கிற நிலையில் கடனைத் திருப்பிக் தரவேண்டிய நிலையில் இருக்கிறான் விவசாயி........

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எந்தப் பகுதியிலே இப்படிக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பல பகுதிகளில் இருக்கிறதை நான் சொல்வேன். அன்பில் என்ற இடத்தில் இந்த நிலைமை தான். அங்கே கூட்டுறவு வங்கி கிடையாது.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மேடைப் பேச்சு போல் பேசுவது சரியல்ல. குற்றம் சாட்டுகிறபொழுது தனியாக எங்கு கடன் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் ஒன்றும் மேடைப் பேச்சு பேசவில்லை. இருப்பதைத் தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏதோ விவசாயிகள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடன் பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். தனியாரிடமிருந்து கடன் பெறக் கூடாது. கூட்டுறவுத் துறையிலே கடன் பெற வேண்டும் என்பது அரசின் திட்டம், அந்தக் கொள்கையை வைத்திருக்கிறோம். சோஷலிஸத்தை விரும்புகிற எந்த ஒரு கட்சியும் அதைத் தான் விரும்பும். ஒரு வேளை புதியதாக ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்கக் கூடாது, தனியாரிடம் தான் கடன் வாங்க வேண்டுமென்று கருதுகிறார்களோ என்னவோ? கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் பெறுவது தான் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். அது நல்ல முறையும் கூட.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கூட்டுறவு அமைச்சருக்குக் கடன் பட்டிருக்கிறார்கள் என்று கூறுவது சரியல்ல. கூட்டுறவு அமைச்சரைப் பாராட்ட வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாராட்டவேண்டும் தான், பாராட்டுகிறேன். கொடுத்த கடன் பணம் பலன் அளித்திருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். இன்னும் ஆழப்படுத்த வேண்டுமா, எங்கே கோளாறு, கொஞ்ச நாட்களுக்குக் கடன் வசூலை தள்ளிவைக்கக் கூடாதா? எப்பொழுது வரும் தண்ணீர் என்று பார்க்க வேண்டாமா? கிணறு வெட்டுவதற்குக் கடன் வாங்கிக் கொண்ட பிறகு, கிணறு வெட்டினால் தண்ணீர் கிடையாது. தண்ணீர் வரவில்லை என்றால் ஆழப்படுத்துவதற்கு நாம் வசதி செய்து கொடுக்க வேண்டாமா? கடனைத் திருப்பிக் கொடு, கொடு என்றால் எப்படிக் கொடுப்பது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இரண்டு நிமிடங்களுக்கு முன் பேசியபொழுது கொடுத்த கடனை திருப்பி வாங்குவதற்கு ஆற்றல் இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது கடனைக் கொடு கொடு என்று கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ? நாம் எதை எடுத்துக்கொள்வது,

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இரண்டு தவறுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டியது தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இரண்டும் தவறு என்று ஒத்துக் கொண்டதற்கு நன்றி.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இரண்டும் தவறு என்று சொல்லவில்லை. இரண்டு முறையிலும் தவறுகள் ஏற்படுகின்றன. இந்தத் தவறுகளைத் திருத்துவதற்கு விவசாய இலாகா கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும், விவசாயிகளைப் அவஸ்தைப் படுத்துவது நியாயம் இல்லை.

[திருமதி த. ந. அனந்த நாயகி] [1972 மார்ச் 25

1960-ம் ஆண்டில் இன்டென்ஸிவ் பாகேஜ் ப்ரோகிராம் என்று ஒன்றை நாம் தஞ்சை மாவட்டத்தில் புகுத்தினோம். அதைப் பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தால், அதிகமாக விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று நினைக்கிறேன். தஞ்சையில் போர்டு பவுண்டேஷன் நிறுவனத்தின் ஒத்துழைப்போடு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதை பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவேரி டெல்டாவில் வடிமுனை வசதிகளைத் தீவிரமாகச் செய்து கொடுக்க வேண்டும். ரொம்ப நாட்களாக திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். இன்னும் அந்தத் திட்டத்திற்கு எந்தவிதமான பச்சைக்கொடியும் காட்டவில்லை. எப்பொழுது காட்டுவீர்களோ தெரியவில்லை. தஞ்சை மாவட்டம் தான் தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம். அந்த நெற்களஞ்சியத்திற்கு வேண்டிய வசதிகளை நீங்கள் இப்படித் தாமதமாகச் செய்வீர்களேயானால், மற்ற இடங்களுக்கு எப்பொழுது செய்யப்போகிறீர்கள் என்பதைப் பார்க்கும் பொழுது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. திட்டத்தைத் தீட்டினோம் என்ற அளவிலே மட்டுமல்லாமல், திறமையாக அதை அமல் நடத்தினோம் என்ற அளவில் இருக்குமானால், அப்பொழுது தான் அங்கே வசதிகளுக்கு வழி பிறக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில் மூன்றாவது பக்கத்தில் 1972-73-ம் ஆண்டுக்கு உற்பத்தி 75 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் உற்பத்தி அளவு 72 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1972-73-ம் ஆண்டு மதிப்பீட்டின்படி அரிசி 55.00 லட்சம் டன், சிறு தானியங்கள் 17.50 லட்சம் டன்கள், பருப்பு வகைகள் 2.00 லட்சம் டன்கள், ஆக மொத்தம் 75 லட்சம் டன்கள் என்று கணக்குப் போடப்பட்டிருக்கிறது. கணக்கில் ஒரு அரை லட்சம் டன் கூடப் போட்டுக் காட்டிவிட்டார்கள்.

**திரு. என். கணபதி :** சாதாரணமாக பாதியும், பாதிக்கு மேற்பட்டால் அதை முழுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும் கணக்கில் என்று மாண்புமிகு உறுப்பினர் அறிந்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சுட்டிக்காட்டுவதை சரியாகக் காட்ட வேண்டும். இது அரசாங்கம் கொடுக்கின்ற புள்ளி விவரம். மூன்றையும் சேர்த்து 74·50 லட்சம் டன் என்றுதான் காட்டியிருக்க வேண்டும். எதற்காக அரை லட்சம் அதிகமாகச் சேர்த்துக் காட்ட வேண்டும்? நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் பருப்பு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். அச்சுப் பிழைகள் இருக்கின்றனவா என்று காலையிலேயே முன்னமேயே அமைச்சர் அவர்கள் பார்த்து, திருத்திக் கொடுத்திருக்க வேண்டும். அந்த வகையில் 74½ லட்சம் டன் என்பது 75 லட்சம் டன்னாக, அரை டன் அதிகமாகக் கூட்டி கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உழவன் கணக்குப் பார்க்க



1972 மார்ச் 25]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உழக்குக் கூட மிஞ்சாது கணக்குப் பார்த்தால். பருப்பு வகையிலே ஏதாவது உற்பத்தி பெருகி இருக்கிறதா என்று பார்த்தால், 2 லட்சம் டன்னாகத்தான் இருக்கிறது. பருப்பு விற்கின்ற விலையைப் பார்க்கும்பொழுது பருப்பு உற்பத்தி அதிகமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கும் இங்கே இடத்தைக் காணோம் என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

தென்னை வளர்ச்சித் திட்டம் தீவிரமாகத் தீட்டுகிறோம் என்று சொல்லும்பொழுது, கன்யாகுமரி மாவட்டத்தில் தென்னை வளர்ச்சிக்குக் கொடுக்கப்பட்ட கடன் நிறுத்தப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. தென்னை வளர்ச்சிக்குக் கொடுத்த கடனை மறு வருஷத்திலே நிறுத்தி விட்டால் பிரயோசனம் கிடையாது. ஐந்து வருஷங்களுக்குப் பிறகுதான் பலன் கிடைக்கும். ஐந்து வருஷம் சென்ற பிறகுதான் தென்னை பலன் கொடுக்கும். இதைத் தயவு செய்து அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து, நிறுத்தப்பட்ட கடனை மறுபடியும் தருவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே இன்றைக்குக் கடனை திடீரென்று நிறுத்தி மாற் விட்டால் அந்தத் திட்டம் பாதிக்கப்படும்.

அடுத்தபடியாக, பழத் தோட்டங்கள் கம்போஸ்ட் உரம் செய்யக்கூடிய திட்டங்களெல்லாம் இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுத் திருக்கிறார்கள். நல்ல தலைவர்கள் அமைந்தால் நன்றாக இருக்கும். இல்லையென்று சொன்னால் என்ன ஆவது? சில ஊர்களில் உள்ள பழத் தோட்டங்களில், அந்தப் பழக் கன்றுகளுக்கு, உரம் உண்டா? தண்ணீர்தான் காட்டியதுண்டா? இப்படிப்பட்ட பழத் தோட்டங்களில் எங்கேயாவது கன்றுகள் இருக்கிறதா என்று பார்த்தால் அங்கேயெல்லாம் கணக்கில்தான் கன்றுகள் இருக்கிறது. ஆகவே பணம் மட்டும் ஒதுக்கினால் போதாது. ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பழத் தோட்டங்களில் கன்றுகள் இருக்கிறதா? உரம் இடுகிறார்களா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

அதே மாதிரி, விவசாயிகளுக்கு, சணல், புளிச்ச கீரை, சூரியகாந்தி போன்றவற்றை பயிர் செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும். அதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் விவசாயிகள் இன்னும் திரும்ப திரும்ப நெல்லையே பயிர் செய்துகொண்டிருக்கிறார்களே தவிர இதைப் போன்றவற்றை பயிர் செய்யமுன்வரவில்லை. ஆகவே, இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இந்த பூச்சி கொல்லி போன்ற மருந்து வகைகளை விவசாயிகளுக்கு சகாய விலையில் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆனால் அதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை. வரி என்னமோ ஏறுகிறதே தவிர, வசதிகள் குறைந்து கொண்டே போகின்றன. இப்படியே போனால் எந்தக் காரியத்தைத் உருப்படியாகச் செய்யப் போகிறோம்.

அதேமாதிரித்தான் இந்த டிராக்டர் விஷயமும், சாதாரணமாக ஒரு டிராக்டர் ஒரு விவசாயி வாங்க வேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட 4 மாதம் ஆகிறது. அப்படி என்று சொன்னால் எப்படித் தீவிர சாகுபடி

செய்யமுடியும்? சித்திரை, வைகாசியிலாவது டிராக்டர் கிடைத்தால் அவர்கள் உழுது சாகுபடி செய்து அடுத்து வருகிற ஆடியிலாவது பலன் பெற முடியும். ஆகவே, அந்த டிராக்டர் கிடைப்பதில் உள்ள கஷ்டத்தைப் போக்க வேண்டும்.

அதைவிட இந்த பம்ப்செட் மெக்கானிக் சமயத்தில் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அதே மாதிரி டிராக்டர் ரிப்பேருக்கும் ஆட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்படி இருந்தால் எப்படி விவசாயிகள் விவசாயத்தில் அதிக அக்கறையோடு இருக்க முடியும்? ஒரு பம்ப்செட்டை சாதாரணமாக ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால் 20 நாட்களுக்கு மேலாகிறது.

**திரு. செ. கந்தப்பன் :** எந்தெந்த இடத்தில் பம்ப் செட்டுகள் ரிப்பேராக இருக்கின்றனவென்று சொன்னால் எங்களுடைய மாவட்டத்திலிருந்து அவைகளை ரிப்பேர் செய்வதற்கு மெக்கானிக்குகளை அனுப்பி வைக்கிறோம். ஏனென்று சொன்னால் எங்களுடைய மாவட்டத்தில் பம்ப் செட் மெக்கானிக்குகள் வேலை இல்லாமலிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதை நான் சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். நானே எங்கள் நிலத்திலுள்ள பம்பை ரிப்பேர் செய்ய ரொம்ப கஷ்டப்பட்டிருக்கிறேன். மேலும் உங்களுடைய மாவட்டத்திலிருந்து, கோயம்புத்தூரிலிருந்து ஆளைக் கொண்டு வந்து ரிப்பேர் செய்வதென்றால் எவ்வளவு செலவாகும்? சும்மா கொண்டுவந்து செய்தால் நல்லது. ஆகவே, இந்த பம்ப் செட்டுகளை உடனுக்குடன் பழுது பார்த்துத் தர வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** நான் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சேலம் மாவட்டமும், கோயம்புத்தூர் மாவட்டமும் பக்கத்து பக்கத்து ஜில்லாக்கள் தானே. உங்கள் மாவட்டத்து விவசாயிகளெல்லாம் ரொம்பக் கெட்டிக்காரர்கள். 100, 80 அடி ஆழத்திலிருந்தெல்லாம் தண்ணீரைக் கொண்டுவந்து விவசாயம் செய்கிறார்கள். ஆனால், தஞ்சாவூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் காலுக்கடியில் தண்ணீர் இருந்தாலும் கூட எடுத்து விவசாயம் செய்வதில்லை.

அடுத்தபடியாக, சென்னை நகரத்தில், இங்கே சென்னை நகரத்தில் ஒரு பெரிய பிரச்சனை, காய் கறிப் பிரச்சனைதான். பச்சை மிளகாய், வெங்காயம், தக்காளி எல்லாம் விலை அதிகமாக விற்கிறது. தமிழ் நாடு அரசு காய்கறி விற்பனைத் திட்டம் என்று ஒன்று போட்டிருக்கிறது. ஏற்கெனவே, சென்னை நகரத்தில் காய்கறி மலிவு விலைக் கடைகள் என்று வைத்து அதில் $1\frac{1}{4}$ லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் அதிகாரிகளைப் போட்டு அவர்களைக் கொண்டு கொத்தவால்சாவடியில் இருந்து காய்கறிகளை வாங்கச் சொன்னால் எப்படி இருக்கும்?

ரொம்ப தூரத்துக்குப் போக வேண்டாம். நம்முடைய கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிற் [illegible] ஒரு நியாய விலைக் கடை இருக்கிறது. அங்கே போய் [illegible] பார்த்தால்,



ரிதாபமாக இருக்கிறது. இதை யார் தலையிலாவது கட்டிவிடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அங்கே இருக்கிறவர்கள். இந்தமாதிரி டை வைப்பதைவிட அதை மூடிவிட்டால் பரவாயில்லை.

ஆகவே, இதை விட்டு நகரத்துக்குள்ளேயே இந்தப் பொருள்களை அதிக ற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறைய இடம் இருக்கக் டிய பங்களாக்களில் எல்லாம் காய்கறிகளைப் பயிர் செய்ய ஊக்கம் கொடுத்து, நல்ல விதைகளையும் பாதி விலைக்குக் கொடுத்து, அவர்களுக்கு வ்வப்போது உதவி அரசாங்கச் செலவில் ஒரு கார்டனரையும் போட்டால் ாய்கறி உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படியெல்லாம் பெரிய பங்களாக்களில் உள்ளவர்களுக்கு அரசாங்கம் பாதி விலையில் விதைகளைக் கொடுத்து, அவர்களின் உதவிக்கு அரசாங்க செலவிலேயே ஒரு கார்டனரையும் போட இந்த அரசாங்கம் தயாராக இல்லை. இது ஏழை அரசு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படியானால் ஏழைகளின் வீட்டுக்கு அனுப்புங்கள். $1\frac{1}{2}$ கிரவுண்டில் டவுன் ப்ளானிங்கில் வீடு கட்டியிருக்கிறார்களே, அவர்களுக்குச் செய்யுங்கள். பங்களாக்கள் என்று சொன்னால் அமைச்சர் அவர்களுக்கு முத்தையா செட்டியாரின் பங்களாதான் ஞாபகம் வருகிறது. சாதாரண பங்களாக்கள் ஞாபகம் வருவதில்லை. ஆகவே, இந்தக் காய்கறிகளை வாங்க அரசாங்க அதிகாரிகளை அனுப்பினால் அவர்களுக்கு என்ன தெரியும். ஆகவே, இந்த மாதிரி திட்டத்தில் பணத்தை போடுகிறபோது நாம் செலவழிக்கிற பணம் மக்களுக்குப் பயன்படக் கூடியதாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அதை விட்டு விட்டு நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச் தருகிறோம் என்று சொல்வதில் பயனில்லை.

இந்த உரத்தில் கூட கலப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லப் படுகிறது. விவசாயிகளுக்கு எந்த மண்ணில் எந்த உரம் போட்டு விவசாயம் செய்தால் நல்ல விளைச்சல் காண முடியும் என்பதை அவர்களின் நிலத்திலுள்ள மண்ணை ஆராய்ந்து அவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். இன்றைக்கு ஒரு நிலத்தின் மண் சாம்பிளை சோதனைக்கு சாயில் ரிசெர்ச் செண்டருக்கு அனுப்பினால் ரொம்ப நாட்கள் ஆகிறது. ஆகவே, தாமதத்தைத் தடுக்க இந்தமாதிரி செண்டர்கள் அதிகமாக திறக்கப் படவேண்டும்.

அடுத்து, இந்த ஐ.சி.ஏ.ஆர். பற்றி உறுப்பினர் செழியன் அவர்கள் சொன்னார்கள். கோயம்புத்தூரிலுள்ள அக்ரிகல்சர் யூனிவர்சிடி நாங்கள் புதிய, புதிய விதைகளைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி பண்ணுகிறோம். ஆகவே அந்த 2 கோடி ரூபாய் கிராண்டை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே, நாங்கள் ஐ.சி.ஏ. ஆருக்கு இந்த மாநிலத்தில் தனிஆராய்ச்சி நிலையம் வைக்க அனுமதிக்கமாட்டோம் என்று சொன்னார்கள்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வட நாட்டில், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலும், மற்ற மாநிலங்களிலும் கட்டிடம் கட்டுவதிலிருந்து, மற்றும் ரிசர்ச்சுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்ய மத்திய சர்க்கார் பணம் தருகிறது. ஆகவே, ரிசர்ச் செண்டர்

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஐ.சி.எ.ஆர். யூனிவர்சிடியில் ரிசர்ச் சென்டர் தனியாகக் கொடுங்கள் என்று சொன்னால் கொடுத்துவிடுங்களேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஐ.சி.எ.ஆரிடம் இருந்து 2 கோடி ரூபாய் வாங்குவதில் எங்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி பேசி சூழ்நிலையைத் தெரிந்துகொண்டு செய்ய வேண்டும். அதனால்தான் நாங்கள் சடபுடா என்று காரியங்களை செய்வதில்லை. ஆகவே இந்தத் திட்டத்தைப் பற்றி எங்களுக்கு அக்கறை இருக்கிறது. நாங்கள் இதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். ஏதோ நாங்கள் இதை வேண்டாம் என்று சொல்வது போல் பேச வேண்டாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எனக்குப் பயம் எல்லாம், சடபுடா என்று இங்கே மந்திரிகள் மாறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது நடக்காமல் போய்விடுமோ என்பதால்தான் சொல்கிறேன். நாம் இப்படி காலதாமதப்படுத்தி பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் நிலைமை ரொம்ப பயங்கரமாகப் போய்விடும். ஆகவே இப்படி இல்லாமல் இன்றைக்குப் பேச்சில் அதிக வேகம் காட்டி பிரச்சனையை முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொன்னால் எங்கே இருந்து எந்த உதவி வந்தாலும் நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, ஆர அமர இப்படி யோசித்துக் கொண்டிருந்தால் மற்ற மாநிலங்களுக்கு இந்த உதவி மாறிவிடும். ஆகவே, இதில் அதிக விரைவு காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, "க்ராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்" பற்றி இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதனால் இங்கே உள்ள சாதாரண விவசாயிக்குப் பலன் இருக்குமா † விளைச்சல் இருந்தால், உற்பத்தி இருந்தால் கடன் கொடுப்பார்கள். விளைச்சல் இல்லை என்று சொன்னால், அப்போ யாரும் கடன்கூட கொடுக்கமாட்டார்கள். ஆகவே, இன்றைக்கு இப்படி விஷயங்களை எல்லாம் மனதில் கொண்டு திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தைப் பற்றி பேசிய உறுப்பினர்கள் எல்லாம் மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்போது கொடுக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டைத் தயாரிக்கின்றபோது அமைச்சராக இல்லை என்றாலும், இந்த வேளாண்மைக் கோரிக்கையிலே நான் கலந்துகொள்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய உறுப்பினர்கள் அவர்கள் சொன்னது போல் அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள், இருப்பார்கள். அவர்கள் எதை மனதிலே வைத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. இது அனாவசியமான பேச்சாக இங்கே அமைந்திருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மேடையிலே ஒன்றைப் பேசுகிறார்கள். இங்கே மன்றத்தில் ஒன்றைப் பேசுகிறார்கள். ஒருவேளை இதையும் மேடை என்று நினைத்துவிட்டார்கள் போலும். அவர்களுக்கு



மக்களிடத்திலே உண்மையிலே அக்கறை இருக்குமானால் இப்படிப் பேசியிருக்கமாட்டார்கள் ; மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைப்பற்றிச் சொல்லியிருப்பார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மக்கள்மீது அக்கறை இருப்பதினால் தான் இங்கே பல பிரச்சனைகளைப் பற்றிப் பேசுகிறோம். உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் கட்சியைப் பற்றியோ எங்களுக்கு அக்கறை இல்லை. நீங்கள் யார் வேண்டுமானாலும் வாருங்கள், போங்கள். எங்களுக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மக்கள்மீது எங்களுக்கு அக்கறை இருப்பதினால்தான் அமைச்சராக இருக்கிறோம். அது இந்த சட்டமன்றத்திற்கும் தெரியும் ; நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் தெரியும். தலைமையிடம் என்ன உத்தரவைப் பிறப்பிக்கின்றதோ அதற்கு ஏற்ற வகையில் நாங்கள் பணியாற்றுகிறோம். நான் இடையிலே அமைச்சராக வந்திருக்கிறேன் என்றால் அது தலைமையிடத்தின் உத்தரவினால்தான். முன்னால் இருந்த அமைச்சரவர்கள் எவ்வளவு திறமை மிக்கவர்கள் என்பதை இங்கே பேசிய பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். சிலர் வேண்டுமென்றே குறைகூறி இருக்கிறார்கள். இந்த விவசாயத் துறையைச் செம்மையாக நடைபெறச் செய்ய, அதுவும் பொதுவாக சோஷலிசக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகளுக்கு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

இங்கே பேசிய பல உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டாலும், இங்கே அளித்திருக்கின்ற இந்தத் திட்டங்களைப் படித்துப் பார்த்தாலும் ஐந்தாண்டு காலத்திலே அகில இந்தியாவிலே எவ்வளவு சிறப்பான இடத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்பது நன்கு விளங்கும். மத்திய அரசிலே உள்ளவர்களும் அதை உணர்ந்து நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ இங்கே இருக்கக்கூடிய சிலர் நம்மை பாராட்டுவதற்குப் பதிலாகப் பழி கூறுகிறார்கள். ஒருவேளை எதிர்க் கட்சியில் இருப்பதால் அப்படித்தான் கூற வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆக்க வேலைகள், சிறப்புத் திட்டங்கள் எதுவாயிருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாராட்டிப் பேசுவதுதான் எல்லா நாடுகளிலும் வழக்கமாக இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்றவர்கள் ஒட்டுமொத்தமாக புள்ளி விபரங்களே இல்லாமல் எதிர்த்தே பேசுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** திஸ் லுக்ஸ் லைக் மேடைப் பேச்சு. நாங்கள் புள்ளி விவரமே இல்லாமல் பேசினோம் என்று சொல்கிறீர்களே. நாங்கள் புள்ளி விவரம் இல்லாமலா பேசினோம்? புள்ளி விபரங்களோடுதான் இங்கே பேசியிருக்கிறோம். புள்ளிவிவரமே இல்லாமல் பேசினோம் என்று நீங்கள் பேசுவதுதான் மேடைப்பேச்சாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** புள்ளி விவரங்களோடு நீங்கள் பேசவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இங்கே கொடுத்திருக்கின்ற

மானியக் கோரிக்கைகள் ஆங்கிலத்திலும் பிரிண்ட் செய்யப்பட்டு, தமிழிலும் பிரிண்ட் செய்யப்பட்டு, இரண்டும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. 75 லட்சம் என்று மொத்தக் கணக்கு வருவதற்கு முன்னால் ஒரு இடத்தில் 2·50 என்று சரியாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதே இடத்தில் தமிழில் 2·00 என்று தவறுதலாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் கோர்ட்டிலே கொலைக் குற்றவாளியை விடுதலை செய்வதற்கு வாதாடுவது போல் இங்கே கூறினார்கள். இம்மாதிரியான வாதங்களில் ஈடுபட்டு குழம்பிக் கொள்ளவேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு இந்தத் துறையிலே எடுத்துள்ள நடவடிக்கைகளை உள்ளபடியே யார் யார் ஆதரிக்க வேண்டுமோ அவர்கள் எல்லாம் ஆதரித்து நல்ல கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். சிலர் வழக்கப்படி குறைகளையே சொல்லியிருக்கிறார்கள் என்பதை பொதுவாகப் பார்க்கின்றபோது தெரிகிறது. இந்தத் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்று நீண்ட நாள் திட்டமிட்டு, அதன் தொடர்பாக பேறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு இப்போது இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயரிய விதைகளை எல்லாம், ஐ. ஆர். 8, கருணா போன்ற மிகுபயன் தரக்கூடிய விதைகளை எல்லாம் கண்டுபிடித்து, அவைகளைப் பயிரிடச் செய்து, போதிய கடன் உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

நாங்கள் விவசாய உற்பத்திக்காக, பசுமைப் புரட்சித் திட்டத்திற்காக கடன் உதவி அளிக்கிறோம் என்று சொன்னால், சிலர் எங்கே கொடுக்கிறீர்கள், எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்று பேசுகிறார்கள். எந்த அளவுக்குக் கடன் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாகக் கொடுத்து வருகிறோம். அப்படிச் செய்ததால் தான் இன்றைக்கு விவசாயத்திலே இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

1966-67-ல் 66 லட்சம் ஏக்கரில் 37 லட்சம் டன் அரிசி உற்பத்தி ஆகியிருக்கிறது. அதைப்பற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். எங்கள் ஆட்சிக் காலத்தில் 370 லட்சம் டன் உற்பத்தி செய்தோம்; தி.மு.க. ஆட்சியில் 54 லட்சம் டன் தான் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று சொல்வார்கள் என நினைத்தேன். யாரும் சொல்லவில்லை. அவர்கள் ஆட்சியில், 20 ஆண்டு கால ஆட்சியில் 66 லட்சம் ஏக்கரில் 37 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்த 5 ஆண்டு காலத்தில் 54 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். இதற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார்? விவசாயிகளுக்கு என்ன என்ன ஊக்கம் தந்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து அவர்கள் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் ஊக்கமளித்திருக்கிறோம். உற்பத்தியை இந்த அளவுக்குப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் அவர்களை உற்சாகப் படுத்தியிருக்கிறோம். கடன் கொடுத்தோம் என்று சொல்லும்போது,



கொடுத்த கடனை வசூலித்தீர்களா என்று கேட்பார்கள். கடனைக் கொடுத்து விட்டு, அதே மாதிரி ஒழுங்காக, விவசாயிகளுக்கு எந்தவித தொந்தரவும் இல்லாமல் திருப்பி வாங்கியிருக்கிறோம்.

இங்கே சிலர் சொன்னார்கள், விவசாயிகள் ஆதித்தனாருக்கு கடன் பட்டிருக்கிறார்கள் என்று. ஆதித்தனார் கடன் கொடுக்கிறார் என்றால், தனிப்பட்ட நபர் கொடுப்பது என்று ஆகாது. ஆதித்தனார் ஒரு அமைச்சர்; அரசின் ஒரு அங்கம். கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்குக் கடனைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் துறையின் மூலமே கடனை நல்ல முறையில் வசூல் செய்திருக்கிறார்கள். கடனைப் பெறுவதிலே விவசாயிகள் கஷ்டப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு நமது மாநிலத்திலே தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கி, சிறந்த முறையில் கடன் கொடுத்து, நல்ல முறையிலே பாக்கி இல்லாமல் உரிய காலத்தில் கடனை வசூலித்திருக்கிறது என்பதற்காக முதல் பரிசு வாங்கியிருக்கிறது. கடன் பெற்றவர்களும் உற்சாகத்தோடு கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு வங்கிகளும், விவசாயிகளும் ஒரு குடும்பம் போல செயல்பட்டு வருகிறார்கள். விவசாயிகள் சிறப்பான நல்வாழ்வு வாழ்கிறார்கள். அதனால்தான் 1971-லே சிறப்பான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையைப் படித்தபோது நான் அமைச்சராக இல்லை; பின்னாலே உட்கார்ந்து இருந்தேன். நம்முடைய உறுப்பினர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் பட்ஜெட் உரை முடிந்ததும், விவசாயிகளுக்கு அளித்திருக்கின்ற சலுகைகள், நிலச் சீர்திருத்தம், குத்தகைதாரர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள், பினாமி முறை ஒழிப்பு இவைகளைப் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு சிறப்பான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது பக்கத்திலே இருந்ததாலோ என்னவோ உறுப்பினர் அம்மையார் அவர்களும் தலையாட்டிக் கொண்டிருந்தார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் பக்கத்தில் பக்கததில் இருப்பதால் எதையாவது பேசிக்கொண்டிருப்போம். அதை ஏன் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் (சிரிப்பு). அதைப்பற்றி நீங்கள் எதுவும் சொல்ல வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் கூட பக்கத்தில் தான் இருந்தேன். அதனால் தான் நீங்கள் என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள் என்று சொல்கிறேன். பெரியவர் மணலி கந்தசாமி அவர்களுக்கு அவ்வளவு உற்சாகம் இந்தப் பட்ஜெட்டைப் பார்த்தவுடன். அதனால் பாராட்டியிருக்கிறார்கள்.

நான் தஞ்சை மாவட்டத்தைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் குறிப்பிடுவதால், தஞ்சை மாவட்டத்தைப் பற்றி மட்டும் பேசுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

"நீர் நிறைந்த கடலை ஒக்கும் நீர் உரைப்பவள் தொகை
நீர் நிறைந்த ஓடமொக்கும் நிறை முதல் கொள்வாள் தொகை
சூரை ஒன்று மேவுமாயின் தோணி ஓடம் மேவுமோ"

என்ற கவிதை என் நினைவுக்கு வருகிறது. தஞ்சை மாவட்டம் இன்று அந்த நிலையில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற முதலாளிகள் ஓடம் போல் இருக்கிறார்கள். அந்த ஓடத்தை அடித்துச் செல்கின்ற சூரையாகவே இந்த திட்டங்கள் அமைந்திருக்கின்றன. இதையெல்லாம் அறிந்துதான் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள். அவரை அறியாமலே பாராட்டிப் பேசினார்கள். திரு. வடிவேல் அவர்களும் பாராட்டினார்கள். திரு. அழகர்சாமி அவர்களும் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஏனோ அவர்கள் பாராட்டவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் 20 ஆண்டுக் காலம் போராட்டம் நடத்தியும் கிடைக்க முடியாத சலுகைகளை, உதவிகளை இன்றைக்கு தொழிலாளர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்திலே பல போராட்டங்கள் நடைபெற்றன. அதன் பயனைகளே இன்றைக்கு அவர்கள் சரியாக நடக்கமுடியாமல் இருக்கிறது. 20, 25 ஆண்டு காலமாகப் போராடினார்கள். அந்தப் போராட்டங்களின் வாயிலாக, இடைக்காலத்தில் யாராலும் செய்ய முடியாததை இன்றைக்கு நாங்கள் செய்து காட்டியிருக்கிறோம்.

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்கு சர்க்கார் பலவகையில் உதவி செய்திருக்கிறது. ஆடுதுறை 27 போட்டால் அதற்கு ரூ. 350, ஐ.ஆர். 8 போட்டால் அதற்கு 380 ரூபாய் என்பதாக எந்த அளவுக்கு கடன் உதவியைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறது.

விவசாய உற்பத்தி பெருகினால் மட்டும் போதாது. விவசாயிகளுடைய நிலைமையை உயர்த்த வேண்டும். கடந்த கால காங்கிரஸ் ஆட்சியில் நான் முன்பு சொன்னதுபோல கூலி உயர்வு கேட்டதற்காக அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாக்கப் பட்டார்கள் என்பதை நாடே அறியும். கூலி உயர்வு வேண்டும் என்று கேட்டதற்காக இரணியன் சுட்டுக் கொல்லப்பட்டான். கோட்டூர் நடேசன் என்பவர் கைது செய்யப்பட்டு பலவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாகி— சேரன்குளத்தில் சுட்டுக் கொல்லப்பட்டான். அவர்கள் கேட்டது எல்லாம் 4 படி கூலியை 6 படியாக உயர்த்தித் தரவேண்டும் என்பதுதான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் மாவட்ட ஆணையாளருக்கு உத்தரவிட்டு 4 படி கூலியை 6 படியாக உயர்த்தினார்கள். ஒரு விவசாயி, அவன் மனைவி இருவருமாக 8 கலம் அறுத்தால் முன்பு 32 படி கூலி வாங்கினார்கள் என்றால் இன்றைக்கு 48 படி கூலியை மனக் களிப்போடு வாங்கிப் போகிறார்கள். விவசாய மக்களிடையே இன்றைக்கு உற்சாகம் இருக்கத்தான் செய்கிறது.

தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் சோம்பேறிகள் என்றார்கள். அந்த மாவட்ட விவசாயிகள் சோம்பேறிகள் அல்ல. களிமண் நிலத்தில் ஆழ உழ வேண்டும் என்கிறபோது உழுது



பார்த்தால்தான் தெரியும். முதலாளிகள் சாட்டையால் அடித்து உழச் சொல்வார்கள். அத்தகைய கொடுமைகளை எல்லாம் அனுபவித்து வந்தார்கள்.

ஒருவருக்கு அந்த விவசாயிகள் குடியிருக்கிற மனைக்கட்டுகள் மட்டும் 200 ஏக்கரா, 300 ஏக்கரா என்று இருக்கும். அதோடு ஒரு கோயிலுக்கு இரண்டாயிரம் வேலி, மூவாயிரம் வேலி என்று நிலம் இருக்கிறபோது அந்தக் கோயிலுக்கும் அவரே டிரஸ்டியாக இருப்பார். ஆகவே குடியிருக்கிற மனைகளில் இருந்து அகற்றிவிடுவதாக மிரட்டி மிரட்டியே வேலை வாங்குவார்கள். அதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைக்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகள் குடியிருக்கிற மனைக்கட்டுகளை அவர்களுக்கே சொந்தமாக்கியிருக்கிறது. இனி யாருக்கும் பயப்படாத வகையில் தம் சொந்த மனைக் கட்டில் குடியிருக்க வசதி செய்திருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே வந்து 5,500 பேர்களுக்கு பட்டா கொடுத்தார்கள். தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமாக இருந்த 130 ஏக்கரா அதுபோல பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக நிலப்பட்டா 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியில் கொடுக்கப் பட்டது ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் தான். ஆனால், கடந்த ஐந்து வருஷங்களுக்குள் நமது கழக அரசு வழங்கியுள்ள பட்டாக்கள் ஐந்து லட்சமாகும். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1,861 ஏக்கரா மட்டும் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது காங்கிரஸ் ஆட்சியில். ஆனால் கழக அரசு 27,555 ஏக்கராக்களைக் கொடுத்திருக்கிறது, 27 ஆயிரம் பேர்களுக்கு மேல். ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பாக 60 ஸ்டாண்டர்டு ஏக்கரா வைத்துக் கொள்ளலாம் என்று இருந்ததை மாற்றி 40 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றதோடு இன்றைக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்திருப்பது கழக அரசுதான்.

அதுமட்டுமல்ல; 1381-வது பசலிக்குக் கட்டிவிட்டால் பாக்கியிருந்த கடனை எல்லாம் வஜா செய்வதற்கு முன் வந்திருப்பது நம்முடைய அரசு. இப்படி விவசாயம், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களின் மீது அக்கறை கொண்டு இந்த அரசு ஆற்றி வருகிற நற்பணிகளை எதிர்க் கட்சித் தலைவர்கள் பாராட்டியிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

நாம் ஒரு பக்கம் இப்படி விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிற நேரத்தில் மத்திய சர்க்கார் மண்ணெண்ணெய் மீது வரியைப் போட்டிருக்கிறார்கள். இரசாயன உரத்தின் மீது வரியைப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு தந்தி கூட வந்தது. ஒரு டன்னுக்கு 26, 30 ரூபாய் உயர்கிறது என்கிறபோது நம் மாநில விவசாயிகள் பெரிதும் கவலைக்குள்ளாகியிருக்கிறார்கள். இதைக் கண்டிக்கவோ, மத்திய சர்க்காரை குறை கூறவோ யாரும் முன்வரவில்லை. அதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை.

அதற்கு மாறாக வெளியே பெரிய கூச்சல் கிளம்பிக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்ட நிலச்சுவான்தார்கள் கிளம்பிவிட்டார்கள். ஒத்துழைக்க வேண்டியவர்கள்தான் அவர்களோடு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். சாதாரணமாக பெருநோய் பிடித்தவனை நல்லவன் அழைத்துக் கொண்டு

பிச்சைக்குப் போவான். அதுபோல ஏழை விவசாய மக்களைப் பிடித்துக் கொண்டு முன்னால்வர நிலச்சுவாந்தார்கள் முயல்கிறார்கள். இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்ன வெல்லாம் செய்து வருகிறது என்பதை அவர்கள் இன்றைக்கு நன்றாக உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

இன்னும் உரத்தைப்பற்றிச் சொன்னார்கள். நெய்வேலியில் கூட ஒரு நாளைக்கு 200 டன் உற்பத்தி செய்து தருவதாக இருந்தது. ஸ்ட்ரைக் காரணமாக ஒரு நாளைக்கு 120 டன் உற்பத்தி செய்ய முடியவில்லை. யுத்தம் வந்த காரணத்தினால் கப்பல்கள் வருவதும் கடுமையாகியது. அதன் காரணமாக நமக்கு வர வேண்டிய உரம் 60 சத வீதம்தான் வந்தது. 40 சத வீதம் கிடைக்காமல் போய் விட்டது. நமக்குத் தேவையான உரத்தை எந்தவகையிலும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தால் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியில் பாமினி உரமணித் தொழிற்சாலை நிறுவப்பட்டது. கிடைக்கின்ற உரத்தை நல்ல முறையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

6-30. இன்னமும் எல்லோரும் ஒத்துழைத்தால் விவசாயத்துறை நல்ல முறையில் முன்னேறி—உணவுப் பிரச்சினையில் வெற்றி கண்டு இன்னும் பல நற்பணிகளை ஆற்றுவதற்கு வசதி ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் ஒத்துழைப்பை அளித்து, விவசாயத்துறையை முன்னேற்ற ஊக்கம் அளிக்க வேண்டும். ஆதரவை நல்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூச்சி மருந்து பொறுத்தவரையில் 1970-71-லே 352 லட்சம் ரூபாய்க்கு மருந்து வாங்கித் தெளித்திருக்கிறோம். 1971-72-லே 480 லட்சம் ரூபாய் அளவிற்கு மருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, அது சரியில்லை, இந்த மருந்து சரியில்லை என்று சொல்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற கம்பெனிகளின் நிலைமை எல்லோருக்கும் தெரியும். எந்த அளவிற்கு நாம் உஷாராக இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்கிறோம். இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று சொல்வார்களே அதுபோல் நாம் ஒற்றுமையாகச் செயல்படாவிட்டால் அவர்களுக்குக் கொண்டாட்டம். எந்தெந்த முறையில் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அப்படிச் செய்துவிடுவார்கள். ஆகவே, எல்லாரும் நல்ல முறையில் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உருளைக்கிழங்கைப் பற்றிச் சொன்னார்கள். ஓசூரில் ஏக்கருக்கு 750 ரூபாய் என்றும், நீலகிரியில் ஏக்கருக்கு 900 ரூபாய் என்றும் கடன் கொடுக்கிறார்கள். உருளைக்கிழங்கில் 120 வகைகள் இருக்கின்றன. அவற்றில் 5 மட்டும் சிறப்பானவை என்று எடுத்துக் கொண்டு, அவற்றைப் பயிரிடுவோருக்கு "டைடின்" என்ற பூச்சி மருந்தை இனமாகக் கொடுக்கிறார்கள். இவ்வாறு 750 பேர்களுக்கும் மருந்தை இனமாகக் கொடுத்து 100 சதவீதம் உற்பத்தியாக்கியிருக்கிறார்கள். உருளைக் கிழங்கு சரியாகப் பயிரிடவில்லை என்று திரு பி. வெங்கடசாமி அவர்கள்



சொன்னார்கள். உருளைக்கிழங்கு நல்லமுறையில் பயிர் செய்யப்படுகின்றது. நல்ல முறையில் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விதைப் பண்ணைகளில் நஷ்டம் வருவதாகவும், அந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அங்கு இலாபமே தான் கிடைக்கிறது. 1970–71-லே 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. 1971-72-ல் 14 லட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. இலாபம் கிடைத்திருக்கிறதே தவிர நஷ்டம் என்று சொல்வது சரியில்லை. நீலகிரி விதைப் பண்ணையைப் பொறுத்த வரையில் இலாபம் கிடைத்திருக்கிறது.

அடுத்தபடியாக பருத்தி உற்பத்தியைப் பற்றி—அது சரியான, தீவிரமான முறையில்—நடவடிக்கை எடுக்கவில்லை என்று பலர் சொன்னார்கள். கோவில்பட்டி, மணப்பாறை, திருப்பூர் ஆகிய மூன்று இடங்களிலும், இராமநாதபுரம் பகுதியிலும் தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடித் திட்டத்தின் கீழ் சிறப்பாக ஆராய்ச்சி வேலைகள் செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது. இரண்டு லட்சத்து ஐம்பது ரூபாய் செலவில் தீவிர திட்டம் செயல்பட வழி செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டியில் பண்ணையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

அடுத்தபடியாக, கரும்பு 3 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர்களில் பயிராகின்றது. கரும்புக்குச் சரியான முறையில் பலன் கிடைக்கவில்லை. சரியான அபிவிருத்தி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். கரும்பைப் பொறுத்த வரையில் புதிய புதிய இனங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எந்த ரகக் கரும்பை எங்கே பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும் என்பதை அறிய வேண்டும். எந்த ரகம் எந்த மண்ணுக்கு ஏற்றதாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குழுவை ஒவ்வோரு பகுதிக்கும் அனுப்பி என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். கரும்பின் தரம், மண்ணின் ரகம், தன்மை ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டுக்குள்ளாக எந்தெந்த ரகம் எந்தெந்த இடங்களுக்குப் பொருந்தும் என்பதைக் கண்டு பிடித்துச் சொல்லுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகம், ஆம்பூர், ஆப்புக்கூடல், முண்டியம்பாக்கம், பெண்ணாடம், புகளூர், அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் கரும்பு ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்பட வழி செய்யப்பட்டிருக்கின்றது. விரைவிலே அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, கரும்பின் விலையைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய கரும்புக்கு 80 ரூபாய், 85 ரூபாய்தான் கிடைக்கிறது என்று திரு கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் வளரும் கரும்பில் சர்க்கரைச் சத்து அதிகமாக இல்லாத காரணத்தால் விலை குறைகிறது. மற்ற மாநிலங்களில் பார்த்தால் கரும்பில் சர்க்கரைச் சத்து மிகுந்து காணப்படுகிறது. பீகார் மாநிலத்தில் 9·01 பர்செண்ட் சர்க்கரைச் சத்து கரும்பில் இருக்கிறது. மகாராஷ்டிரத்தில் 11·25 சத வீதம் சர்க்கரைச்

சத்து இருக்கிறது. குஜராத்தில் 10·22 சத வீதம் இருக்கிறது: பஞ்சாபில் 8·57 சத வீதம் இருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் 10·21 சத வீதம் சர்க்கரைச் சத்து இருக்கிறது. மைசூரில் 10·56 சத வீதம் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் 9·29 சத வீதம் இருக்கிறது. கேரளாவில் 8·68 சத வீதம் இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் 9·16 சத வீதம் இருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் விளையும் கரும்பில் 7·87 சத வீதம்தான் சர்க்கரைச் சத்து இருக்கிறது. 1970–71–லே 8·99 சத வீதமாகச் சர்க்கரைச் சத்து இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே விலையை ஏற்றுவது என்பது சரியல்ல. மேலும் சர்க்கரையை உற்பத்தி செய்கிற ஆலைகள் அநேகமாகக் கூட்டுறவுத் துறையில்தான் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, பணத்தை உயர்த்துவதற்கான நிலைமையில் கரும்பின் தரம் இல்லை. தரமான கரும்பை உற்பத்தி செய்து, சர்க்கரைச் சத்தை அதிகப்படுத்தினால், அந்த நிலைமையைப் பற்றி எட்டிப் பார்க்கலாம்.

அடுத்து, விவசாயத்திலே பல திட்டங்களைப் போட வேண்டுமென்று பலர் யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்திலே பல திட்டங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. பல திட்டங்களைப் போட வேண்டுமென்று சாதாரணமாகச் சொல்லிவிட்டால் போதுமா ? மண்வளம் எப்படி இருக்கிறது, தண்ணீர் கிடைக்கிறதா, இந்த விதையைப் போட்டால் இந்த இடத்தில் சரியாக வளருமா ? நல்ல பலன் கொடுக்குமா ? என்பதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இப்போதுகூட, சூரியகாந்திப் பூ, வள்ளிக் கிழங்கு, இன்னும் மற்றவற்றைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். வெறும் திட்டங்களை ஆரம்பித்துவிட்டால், மட்டும் போதாது. அந்த மண்ணுக்கும், பயிருக்கும் ஒத்துக்கொள்ளாத நிலைமை இருந்தால் திட்டம் என்ன ஆவது ? அப்படி ஆராயாமல், திட்டத்தை ஆரம்பித்துவிட்டால், நஷ்டம்தான் ஏற்பட்டு விடுகிறது. விவசாய அபிவிருத்திக்காக, விவசாயம் சம்பந்தப்பட்ட வித்துக்களை ஆராயவும், மற்றவற்றிற்கும் 1972–73–ம் ஆண்டுக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, 1972–73–லிருந்து செயல்பட்டு விவசாய அபிவிருத்தி வேலைகள் சிறந்ததாக இருக்க வழி வகைகள் செய்யப்படும். திறமையான குழு போட்டு, எந்தெந்த இடத்தில், எந்தெந்த சாகுபடி செய்யலாம், அங்கே முதலிலே தண்ணீர் கிடைக்குமா என்பதை அறிவதற்காக ஒரு பம்பு செட் அமைத்து தண்ணீர் கிடைக்குமா என்பதையும் ஆராயும். மேலும் புஞ்சை பயிர் செய்கிற இடங்களில் நஞ்சைப் பயிர் செய்வதால் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்தமாதிரி செய்கிற இடங்களில் தேவையான தண்ணீர் கிடைக்குமா, என்பனவற்றையெல்லாம் ஆராய நிபுணர் குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன்.

அடுத்தபடியாக, மஞ்சள் பற்றிச் சொன்னார்கள். அதற்காக ஈரோடு, கோபிசெட்டிபாளையம் ஆகிய இடங்களில் முனைப்புத் திட்டம் போடப்பட்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. அடுத்த ஆண்டில் அதிகமான அளவுக்குக் கெடாமல் இருக்க வழி வகைகள் விரைவிலே காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பூச்சி மருந்து தருகிறார்கள், இப்போது நெல்லுக்குக் கூட பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். எந்த ரகத்திற்கு எந்த மருந்து தெளிப்பது என்று பார்ப்பதில்லை. ஒரு பகுதியில் உபயோகிக்கும் மருந்தை இன்னொரு பகுதியில் இருக்கும் பயிருக்கு அடித்தால்கூட சரியாக வேலை செய்வதில்லை. பூச்சி மருந்துகளை ஏரியல் ஸ்ப்ரே மூலமாகச் செய்கிறார்கள். சிலர் அந்த முறை சரியில்லை என்கிறார்கள். விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்ய வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். பூச்சி மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்யும் யோசனை இருக்கிறது. ஒரு யூனியனுக்கு 3 அல்லது 4 விசைத் தெளிப்பான்கள் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். குறைந்தது ஒரு யூனியனுக்கு 30–ஆவது வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் யூனியன் பூராவுக்கும் சப்ளை செய்யப்படும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பயிர்களுக்கு நாம் நைட்ரஜன் உரம் போடுகிறோம். அதன் காரணமாக பயிர் பச்சை நிறமாக வந்து விடுகிறது. அதன் காரணமாக பூச்சி எளிதில் வந்து விடுகிறது. சீக்கிரமாகப் பச்சை வந்துவிடுகிற காரணத்தால் எவ்வளவு வேகமாகப் பரவ முடியுமோ அவ்வளவு வேகமாகப் பூச்சிகள் பரவுகின்றன. ஆகவே, மூன்று, நான்கு விசைத் தெளிப்பான்களை வைத்துக் கொண்டிருப்பதால் பிரயோசனம் இல்லை. அதை வைத்துக்கொண்டு ஒரு நான்கைந்து ஏக்கர்களுக்குத்தான் மருந்து தெளிக்க முடியும். நாம் ஒரு பக்கம் மருந்து தெளித்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு பக்கத்தில் பூச்சி பரவிக் கொண்டே போகும். ஆகாய விமானம் மூலம், ஹெலிகாப்டர்கள் மூலம் மருந்து தெளிப்பதால் ஒரே சமயத்தில் ஒரே நாளில் மருந்து தெளிக்க முடியும். ஒரே சமயத்தில் பூச்சிகளும் அழியும். அப்போது பூச்சிகள் எல்லாம் இறந்துவிடும். பல பகுதிகளில் மக்கள் அதை விரும்பவில்லையென்ற காரணத்தால்தான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். ஒரு விசைத் தெளிப்பான் விலை 700 ரூபாய் ஆகிறது. அதற்கு ஒரு நாளைக்குச் செலவு 4 ரூபாய் ஆகிறது. அதற்காக ஒவ்வொரு யூனியனிலும் விசைத் தெளிப்பான் ரிப்பேர் செய்வதற்காக ஒரு மெக்கானிக் போட வேண்டும். அதற்கான ஷெட்டை மாவட்ட அளவில் வைப்பதா, அல்லது யூனியன் அளவில் வைப்பதா என்பதை ஆராய்ச்சி செய்து, அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறோம்.

உறுப்பினர்கள் எல்லாம் பல பிரச்னைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவையெல்லாம் எந்த எந்த அளவிலே விரைவிலே கவனிக்கப்பட வேண்டுமோ அந்த அளவில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று மக்கள் நன்மைக்காக அவர்கள் சொன்னதையெல்லாம் நான் கவனிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எலியினாலே பாழாவது அதிகமாக இருக்கிறது. எலியை ஒழிப்பதற்கு குடும்பக் கட்டுப்பாடு மருந்துபோல் அதற்கும் கண்டுபிடித்து விவசாய இலாகா முயற்சி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கு எப்படி குடும்பக் கட்டுப்பாடு செய்வது என்று உறுப்பினர்களே சொன்னால் நல்லதாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாம் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம் கண்டுபிடித்திருப்பதாக. எலிகளினால் கோடிக்கணக்கான ரூபாய் பாழாகிறது. மனிதன் சாப்பிடுவதிலே பாதிக்குமேலே அது சாப்பிட்டுவிடும் போல் இருக்கிறது. எனவே இதைத் தடுப்பதற்கு இந்த இலாகா ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விவசாயிகளில் திறமையானவர்கள் எலிகளைக் கொன்று கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவை இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றைத் தடுப்பதற்கு முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

**திரு. ஏ. எம். இராஜா :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது சர்க்கரை ரெக்கவரி தமிழ் நாட்டிலே 8·6 சதவீதம்தான் என்றும் அதனால் தான் விலை குறைவாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு ஒவ்வொரு ஆலைக்கும் ஒரு ரேட் கொடுக்கலாம் என்று நிபந்தனை கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே நேரிலே கூட வந்து பார்க்கலாம். சக்தி சர்க்கரை ஆலையிலே மோர் தேன் 11 சத வீதம் வந்து கொண்டிருக்கிறது. எனவே அதிகப்படியாக வருகிற ஆலைகளுக்கு அதிகப்படியாக விலை கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு சர்க்கரை ஆலையிலே தினமும் இவ்வளவு ரெக்கவரி என்று கணக்கு வைக்க வேண்டுமென்று சட்டம் தெளிவாக இருக்கிறது. எனவே தினம் தினம் எடுக்கிற கணக்கை வைத்து ஒரு ஆண்டுக்கு எவ்வளவு ரெக்கவரி என்று ஆவ்ரேஜ் ஆகத்தான் பார்க்கிறோமே தவிர பீக் பீரியடை மட்டும் பார்ப்பதில்லை. ஆரம்ப காலத்திலே 10 சத வீதம் வரலாம், 11 சத வீதம் வரலாம். முடியும் பொழுது 7½ சத வீதம் வரலாம் 8 சத வீதம் வரலாம். அந்த நிலையில் உயர்ந்த பட்சத்தை மட்டும் எடுத்துக்கொள்ள கூடாது. ஆண்டு முழுவதும் கணக்கிட்டுத்தான் எவ்வளவு வந்திருக்கிறது என்று பார்க்கிறோம். பீக் பீரியடை மாத்திரம் பார்ப்பது சரியல்ல, நியாயம் அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கிராப் இன்ஷ்யூரன்ஸ் பற்றிக் கேட்டேன், அமைச்சர் அவர்கள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மத்திய அரசாங்கமும் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே சில இடங்களிலே பரிசீலனை செய்யப்படுகிறது. விரைவிலே எப்படிச் செய்வது என்ற முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்



திருவாளர்கள் சோ. அழகர்சாமி, பி. வெங்கடசாமி, சௌடி எஸ். சுந்தரபாரதி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. வடிவேலு அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,46,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை 1972-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27-ம் நாள் காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

82. Notification issued with G.O. Ms. No. 2780, Agriculture, dated the 19th October 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

### B. *Reports, Notifications and Other Papers.*

* 119. A Review of the working of the Stationery and Printing Department during the year 1971-72. (English and Tamil.)

* 120. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour on Demand No. 34—Stationery and Printing for the year 1972-73. (English and Tamil.)

† 121. A Review on Labour in Tamil Nadu 1971-72. (English and Tamil.)

† 122. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour on Demand No. 24—Labour including Factories for the year 1972-73. (English and Tamil.)

† 123. Third Report of the Committee on Subordinate Legislation.

† 124. Fifth Report of the Committee on Estimates on Cinchona Department—1971-72.

125. The Performance Budget relating to Agriculture Department—1972-73.

126. Commerial Budget of the Agricultural Engineering Workshop—1972-73.

127. Report of the Committee on Estimates on Fisheries Department.

---

* Despatched to Members on 23rd March 1972.

† Laid on the table of the House on 24th March 1972.



### இணைப்பு I.

519-ம் பக்கத்தில் 702-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

#### விவர அறிக்கை.

(அ) & (இ) : ஆம். கிராமப் பகுதிகளில் மருத்துவ நிலையங்களை நிறுவுவதற்கு, தனியார் துறைக்கு உதவி செய்வதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு வகுத்துள்ளது. அந்தத் திட்டத்தின் முக்கிய கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(a) மருத்துவ நிலையங்களை நிறுவுவதற்கான நிலம் வாங்குவதற்கும், மருத்துவ மனைகள், அறுவை சிகிச்சைக் கூடங்கள், வார்டுகள் ஆகியவற்றிற்காகக் கட்டடங்கள் கட்டுவதற்கும், இன்றியமையா மருத்துவக் கருவிகள் வாங்குவதற்கும் இந்திய அரசு உதவி செய்யும்.

(b) மருத்துவ மனையை நிறுவுவதற்குத் தொடக்கத்தில் ஏற்படும் செலவில் 1/3 பாகத்தைக் தொண்டு நிறுவனங்கள் ஏற்கும். மருத்துவ மனையின் நடைமுறைச் செலவையும் இத் தொண்டு நிறுவனங்கள் ஏற்க வேண்டும்.

(c) புதிய மருத்துவமனைகளை நிறுவுவதலுக்காகும் தொடக்கச் செலவில் 1/3 பாகத்தை மாநில அரசு ஏற்கும். மேலே (b) இனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, மருத்துவமனையின் நடைமுறைச் செலவைத் தொண்டு நிறுவனங்கள் ஏற்கும் அந்தச் செலவை ஏற்கத் தொண்டு நிறுவனங்களால் இயலவில்லையெனில், சம்பந்தப்பட்ட மாநில அரசு முன்வந்து, பற்றுக்குறையைச் சரிக்கட்ட மானியம் வழங்கும். பின்னர், இந்தப் பொறுப்பை ஏற்கத் தொண்டு நிறுவனத்தால் இயலவில்லை யெனில், மத்திய அரசு உதவியுடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தை நடத்தும் பொறுப்பை மாநில அரசு மேற்கொள்ளவேண்டும்.

கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தத் திட்டத்தை, மாநில அரசு, கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது :—

(i) நிலங்கள் வாங்கப்பட்டு, அவற்றில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன், அவை எந்தக் காரியத்திற்காக முதலில் வாங்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டனவோ, அவற்றிற்காக அவை முழுதும் பயன்படுத்தப்பட வேண்டும். ;

(ii) எந்த நிலம் கட்டடத்திற்காக மானியம் வழங்கப்பட்டதோ, அந்த நிலம்/கட்டடம், அரசால் ஏற்படுக்கப்பட்ட மருத்துவமனைக் காரியத்திற்காக அவை பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டால், மானியத்தைப் பெறுகிற அந்த நிலையங்களின் அதிகாரிகள் அந்த மானியத்தை அல்லது அதன் பகுதியைத் திருப்பி செலுத்த வேண்டும் ;

(iii) நிலம் அல்லது கட்டடம் சம்பந்தமாக பொருத்தமான முத்திரைத்தாள்கள் ஒட்டப்பட்டதும், பதிவு செய்யப்பட்டதுமான உரிமைப் பத்திரத்தை அதிகாரிகள் எழுதிக்கொடுக்கவேண்டும். இப்பத்திரத்தில் மேற் கூறிய நிபந்தனைகள் கண்டிருக்கவேண்டும் ;

(iv) பணி முடிக்கப்பட்ட பிறகும், பணி முடிக்கப்பட்டது குறித்து நிலையம் சான்றிதழ் காட்டிய பிறகும் இந்திய அரசின் பங்குத் தொகையான 1/3 பாகம் கொடுக்கப்பட்ட பின்னரும் மாநில அரசின் பங்குத் தொகை வழங்கப்படும்.

(v) எந்த நிறுவனங்கள் மருத்துவமனைகளை ஏற்படுத்தி வைக்கின்றனவோ அவை அம் மருத்துவமனைகள் தொடர்ந்து பேணி வரப்படுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்; அந்நிறுவனங்கள் சட்ட ஏற்பு பெற்றவையாகவும் சிறந்த திறன் உடையனவாகவும் இருக்கவேண்டும்.

(vi) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், தனியார் துறையால் ஏற்கவியலாதவிடத்து மருத்துவமனையை நடத்துவதற்காகும் செலவினத்தில் துண்டு விழுந்தால், அது இந்திய அரசு, மாநில அரசு மற்றும் தொண்டு நிறுவனம் ஆகியவற்றால் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இந்த அரசால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் குறித்து இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

## இணைப்பு II.

(531-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

### 1972-73-ம் ஆண்டு வேளாண்மைக் கோரிக்கைகள் பற்றிய குறிப்பு தோற்றுவாய்.

1972-73-ம் ஆண்டுக்கான கோரிக்கை எண் "16. வேளாண்மை" யின் கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத ஒரு தொகையையும், கோரிக்கை எண் "39, வேளாண்மை மீதான மூலதனச் செலவுகளி"ன் கீழ் ரூ. 18,46,300-க்கு மேற்படாத ஒரு தொகையையும் அரசுக்கு வழங்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

1971-72-ம் ஆண்டில் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றியதில் அடைந்த முன்னேற்றம் குறித்த ஆய்வுரையையும், 1972-73-ம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் இப் பேரவை முன்னர் வைக்கிறேன். கடந்த ஆண்டில் "வேளாண்மை" மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்து பேசுகையில் எனக்கு முன்னர் இத்துறையின் பொறுப்பினை வகித்து வந்த மாண்புமிகு அமைச்சர், 1970-71-ல் இம்மாநிலத்தில் உணவுதானிய உற்பத்தியின் முன் ஒருபோதும் எய்திராத சாதனையை இம்மாமன்றத்தில் அறிவிக்கும் பேறு பெற்றார். 1970-71-ல் இந்திய நாட்டில், அரிசி உற்பத்தி செய்யும் எல்லா மாநிலங்களைக் காட்டிலும், அரிசி உற்பத்தியில் சராசரி ஏக்கர் விளைச்சலில் தமிழ்நாடு



மிகவாய்ந்த சாதனையைப் புரிந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது என்னும் மகிழ்ச்சி பொங்கும் செய்தியை, இம்மாமன்றத்தில் அறிவிக்கும் பேறு எனக்கு கிட்டியுள்ளது எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய சாதனையின் சராசரி உற்பத்தியளவு ஹெக்டேர் ஒன்றுக்கு 1,974 கிலோகிராம் ஆகும். இது, 1970-71-ம் ஆண்டு அனைத்து இந்திய சராசரி விளைச்சல் அளவான ஹெக்டேர் ஒன்றுக்கு 1,134 கிலோகிராம் அளவுடன் ஒப்பிடுகையில் மிகவுயர்ந்த சாதனையாகும். உயர்விளைச்சல் தரும் ரகங்களைப் போலப் பல்வகை விதைகள், தர விதைகள், இரசாயன உரங்களைச் சரி விகிதத்தில் பயிர்களுக்கு இடுதல், முனைப்பு நடவடிக்கைகள், மேம்படுத்திய தொழில்நுட்ப உத்திகள், மும்முர அணுகு முறைகள் இவை அனைத்துக்கும் மேலாக பயிர் பாதுகாப்பு ஆகியவை பாராட்டத்தக்க வகையில் கூட்டாகப் பலனளித்து இம்மகத்தான சாதனை உற்பத்தி கிட்டுவதற்கு வழிகோலின. 1971-72-ம் ஆண்டில் நமது இலக்கான 73 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தியை நாம் எய்த முடியுமென உறுதியுடன் நம்பலாம். அதுமட்டுமல்ல, மக்கள் தொகை பெருகி வரும் நிலையிலும், உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையைத் தொடர்ந்து பேணுதல் இயலுமென நாம் மேற்கொண்ட தற்காலிக மதிப்பீட்டாய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு, நமது மதிப்பிற்குரிய மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், உணவுத் துறையில் நாம் அடைய வேண்டுமெனக் காட்டிய இலட்சியத்தை, நமது போன்பிற்குரிய முதல்வரின் திறமைசால் தலைமையின்கீழ் நாம் அடைய முடிந்துள்ளது.

வரும் ஆண்டிற்கான (1972-73) இலக்கு 75 லட்சம் டன் என வரையறுக்கப்பட்டுள்ளது. உழவர் பெருமக்களும் அரசும் இணைந்து நின்று, இடைவிடாமலும் உறுதியுடனும் உழைப்பதன் மூலம் நாம் நமது திட்ட இலக்கை அடைய இயலுமென நம்புகிறோம்.

### பருவ மழை நிலைமைகள்.

1971-72-ம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழையின் போதும் தென்மேற்குப் பருவ மழையின் போதும் இம்மாநிலம் முழுவதிலும் மழை நன்கு பெய்தது. சாதாரணமாக இம்மாநிலத்தில் கோடை மழையின் சராசரி அளவு 137.8 மி.மீ. தான்; ஆனால், 1971-ம் ஆண்டில் கோடை மாதங்களில் இம்மாநிலம் முழுவதும் பதிவான மாத சராசரி மழை அளவு 159.00 மி.மீ. ஆகும். வடகிழக்குப் பருவ மழை தொடக்கத்தில் சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் போதிய அளவில் பெய்யவில்லை என்றாலும், பின்னால் டிசம்பரில் மும்முரமாக மழை பெய்ததால், நிலைமை சீரடைந்தது. இதன் மூலம் இந்த மாவட்டங்களிலும் கூட வெற்றிகரமாகப் பயிர்கள் விளைவிக்க ஏதுவாயிற்று. பொதுவாக இக்காலத்தில் மாநிலம்

முழுவதும் பதிவான மழையளவு 320 மி.மீ. ஆகும். ஆனால், இப்பருவ காலத்தில் பெய்யக்கூடிய சராசரி அளவு 307 மி.மீ. தான். இவ்வாறு மழையளவு சற்று உயர்ந்துள்ளது. செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பாசன வேர்க்கடலை, கலப்பினக் கம்பு, நவரை, நெல் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான வாய்ப்புகள் பெருகி உள்ளன.

1971-72-ல் பயிர்கள் மீது பூச்சிகளோ நோய்களோ அதிக அளவில் பற்றவில்லை. நெற்பயிரில் தோன்றிய முக்கிய பூச்சிகளாவன : தண்டு துளைக்கும் புழு, இலைச் சுருட்டை, ஜெஸ்லிட்ஸ் ஆகியன. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் நெற்பயிரில் நெல் கொலை நோய் ( Paddy Blast ), இலைப்புள்ளி நோய் ஆகியவையும் காணப்பட்டன. செந்நிறக் கம்பளிப் பூச்சி, வேர்கடலையில் சுருள் பூச்சி, பருத்தியில் செடிப் பேன், தத்துப் பூச்சிகள், காய் கறிகளில் வண்டுகள் ஆகியன முக்கியமாகக் காணப்பட்ட பூச்சிகளாகும். உரியகாலத்தில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இந்தப் பூச்சிகளும், நோய்களும் கட்டுப் படுத்தப்பட்டன.

### உணவு தானிய உற்பத்தி அளவு

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது முதல், அதாவது, 1969-70-ம் ஆண்டு தொடங்கி தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் துறையில் முகத்தான முன்னேற்றம் கண்டுள்ளது. மிகு விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிடும் திட்டம், பல் பயிர்த் திட்டம், பிற மும்முர வளர்ச்சி அணுகு முறைகள் ஆகியவற்றை விரைவுபடுத்தியதன் விளைவால், 1970-71 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி அளவு 70.30 லட்சம் டன் ஆக உயர்ந்தது. இதுவரை இம்மாநிலத்தின் உற்பத்திச் சாதனைகளில் இதுவே மிக உயர்ந்த சாதனையாகும். 1968-69-லிருந்து அரிசி உற்பத்தி படிப்படியாக உயர்ந்துள்ளது. 1970-71-ல் அரிசி உற்பத்தி 53.03 லட்சம் டன்னுக்கு உயர்ந்தது. இது நமது மாபெரும் சாதனையாகும்.

1971-72-ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியளவு கீழே காட்டியுள்ளவாறு 73 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | லட்சம் டன்கள் |
|---|---|
| அரிசி | 54.00 |
| சிறுதானியங்கள் | 17.00 |
| பருப்பு வகைகள் | 2.00 |
| | 73.00 |



1972-73-ஆம் ஆண்டுக்கு, திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தியளவு கீழே காட்டியுள்ளவாறு 75 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது :—

| | லட்சம் டன்கள் |
|---|---|
| அரிசி | 55.00 |
| சிறுதானியங்கள் | 17.50 |
| பருப்பு வகைகள் | 2.00 |
| | 75.00 |

### மிகு பயன்தரும் தானிய வகைகள் திட்டம்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மிகுபயன்தரும் நெல் வகைகள் சிறு தானிய வகைகளைப் பயிரிடக் கொண்டுவருவதற்கு மிகுபயன் தரும் தானிய வகைகள் திட்டம் வழிகோலுகின்றது. இத்திட்டத்தின்கீழ், பயிர்களுக்கு வேண்டிய இடு பொருள்கள் முழு அளவில் பயன்படுத்தப்படும்; அதே சமயம் கடன் வசதிகளும் செய்துதரப்படும்.

1966-67 முதல் 1970-71 வரை ஒவ்வோராண்டிலும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | லட்சம் ஏக்கர்கள் |
|---|---|
| 1966–67 | 5.28 |
| 1967–68 | 12.79 |
| 1968–69 | 17.09 |
| 1969–70 | 30.46 |
| 1970–71 | 49.11 |

1970-71 இல் 37.50 லட்சம் ஏக்கர் பரப்பில் மிகுபயன்தரும் நெல்வகை பயிரிடக் கருதப்பட்டது. இப்பரப்பு இம்மாநிலத்தில் நெல் பயிரிடப்படும் பரப்பளவில் சரிபாதியாகும். இதற்கெதிராக, 44.93 லட்சம் ஏக்கர் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதாவது, இப்பரப்பளவு மொத்தம் நெல் பயிரிடப்படும் பரப்பளவில் 2/3 பங்கைவிட அதிகமாகும். மிகு விளைச்சல் தரும் சிறு தானிய வகைத் திட்டத்தின்கீழ் 2.50 லட்சம் ஏக்கர் இலக்கு வரையறுத்திருக்க,

2.82 லட்சம் ஏக்கர்கள் இதன்கீழ்க் கொண்டுவரப்பட்டன. 1966-67-க்கும் 1970-71-க்கும் இடையே இத்திட்டத்தின்கீழ் விளைச்சலுக்குக் கொண்டுவரப்பட்ட பரப்பளவு எட்டு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது என்னும் செய்தி நாம் அடைந்துள்ள முன்னேற்றம் பெரிதும் மெச்சத்தக்கது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

1971-72-ம் ஆண்டுக்குக் குறிக்கப்பட்ட இலக்குகளும் எய்திய சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | இலக்கு (இலட்சம் ஏக்கரில்) | 1971 டிசம்பர் வரை எய்திய சாதனை (இலட்சம் ஏக்கரில்) |
|---|---|---|
| சிறுதானியங்கம் | 4.00 | 2.66 |
| நெல் | 50.00 | 45.78 |
| எச்.பி. கம்பு | | 11.00 |

1972-73 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது :—

| | (லட்சம் ஏக்கர்கள்) |
|---|---|
| நெல் | 51.00 |
| சிறுதானியங்கள் | 4.00 |
| எச் பி. கம்பு | 11.00 |

பல போகப் பயிர்த் திட்டம்.

வேளாண்மை உற்பத்திக்கான புதிய திட்டங்களில் ஒன்றாக, 1967-68-இல், தமிழ்நாட்டில், பலபோகப் பயிர்த் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், இடையறாப் பாசன வசதிகள் பெற்றுள்ள பகுதிகளில், கீழ்க் கண்ட முறைகளால், சாதாரணப் பயிர் முறைக்கு மேற்பட்டுப் பயிரிடப்பட்ட பயிர்கள் அனைத்தும் பலபோகப் பயிர்களாகக் கருதப்படும் :—

(i) ஒரு போகம் பயிரிடும் வழக்கமான நடைமுறைக்கு மாறாக இரு போகம் பயிரிடுவது.

(ii) இருபோகம் பயிரிடும் வழக்கமான நடைமுறைக்கு மாறாக மூன்று போகம் பயிரிடுவது.

(iii) பருப்பு வகைகளை போன்ற துணைப் பயிர்களைப் (catch crop) பயிரிடுவது.

(iv) முன்னர் ஒரு போகம் பயிரிட்டு வந்த இடங்களில், கிணறுகள் வெட்டி பாசனம் பெறும் ஒரு போகத்துக்குக் கூடுதலாகப் பயிரிடுவது.



| | சாதனைகள். 1969-70. | சாதனைகள். 1970-71. | எதிர் பார்க்கப் படும் சாதனை. 1971-72. | குறிக்கப் பட்டுள்ள இலக்கு. 1972-73. |
|---|---|---|---|---|
| திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பு (லட்சம் ஏக்கரில்). | 9,95 | 12,99 | 13,00 | 14,00 |

பலபோகப் பயிர்த் திட்டத்தை மும்முரப்படுத்தும் பொருட்டு, இந்திய அரசு பலபோகப் பயிர் முன்னோடித் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது; இந்த முன்னோடித் திட்டம் இம்மாநிலத்தில் பட்டுக்கோட்டை, முசிரி, கடலூர் ஆகிய வேளாண்மைக் கோட்டங்களில் செயற்படுத்தப்படும். இது மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும்; இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய காலப் பகுதிக்கு இந்திய அரசு ரூ. 12 லட்சம் அனுமதித்துள்ளது. பலபோகப் பயிர்த்திட்டத்தை மேலும் அதிகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதன் பொருத்தத்தைப் பற்றி இந்த முன்னோடித் திட்டம் விளக்கிக்காட்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்.

முனைப்புத்திட்டம் என்று கூறப்படும் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1960-ஆம் ஆண்டிலிருந்தே செயற்பட்டு வருகிறது. உணவு தானிய உற்பத்தியைப் பின்வரும் வழிகளில் உயர்த்துவதே இத் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். (அ) அந்தந்த மண்ணிற்கு மிகவும் பொருத்தமான வேளாண்மை முனைப்பு நடைமுறைகளை உருவாக்கி, அவற்றைப் பல்வேறு வளர்ச்சிக் கல்வி உத்திகள் மூலமாக உழவர்களிடையே விரைந்து பரப்புதல்; (ஆ) உழவர்கள் மேம்படுத்திய நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான பயிரிடுதேவைப் பொருள்களில் அவர்தம் ஆற்றலுக்கு உட்பட்டனவற்றை உரிய நேரத்தில் அவர்கட்குக் கிடைக்கச் செய்தல்.

திருவாரூரில் வேளாண்மைக் கருவிகள் பணிக்களரி ஒன்று நிறுவப் பட்டுள்ளது. இப்பணிக்களரி இயந்திரங்களைக் கொண்டு பயிர்த்தொழிலை மேம்படுத்த உதவும்; சொந்தமாக டிராக்டர்கள் வைத்துள்ள தனியார்க்குச் செப்பனிடு பணி வசதிகள் அளிக்கும்; தஞ்சாவூர் மண்வள நிலைகளுக்குப் பொருத்தமான புதிய கருவிகள் இயந்திரங்களை வடிவமைத்துத் தரும். நெல் பயிரிடும் நிலத்தில் இரசாயன உரங்களைப் போடுவதற்கான புதிய கருவியொன்று இங்கு உருவாக்கப்பட்டுள்ளது; இக்கருவி, மாநிலம் முழுவதும் உள்ள நிலையங்களில் விளக்கிக் காட்டப்பட்டு வருகிறது.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மண்வள மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் மண்வள பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்றும் இந்த மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஐந்து ஏக்கர் தொகுதி நிலத்துக்கும் மண் மாதிரிகள் எடுத்துச் சோதனை செய்யப்படுகிறது. இதுவரை பரிசோதனை செய்யப்பட்ட மண் மாதிரிகளின் அடிப்படையில் (5 ஏக்கர்) நிலத்தொகுதி வாரியான மண்வள வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன; அவை, வளர்ச்சிப்பணி அதிகாரிகள் பயன்படுத்துவதற்காக அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்ட நடவடிக்கைகளின் விளைவாக, உயர் விளைச்சல் தரும் வகைள், காவிரி, கயவாய்ப் பகுதியில் 75 சதவீதப் பரப்பிற்கும் அதிகமான பரப்பளவில் விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. நைட்ரஜன் இராசயன உரங்களைப் பயன்படுத்தும் அளவும் கணிசமாக உயர்ந்துள்ளது. இவையனைத்தின் விளைவாக இக் கயவாய்ப் பகுதியின் மொத்த நெல் உற்பத்தியளவு கணிசமாக உயர்ந்துள்ளது.

1971-72-இல் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு 16.50 லட்சம் ஏக்கர் இலக்கு குறிக்கப்பட்டுள்ளது. திட்டத்துக்குக் கிடைக்கின்ற, பாசனவசதியுடன் கூடிய 12.5 லட்சம் ஏக்கர் பரப்பில், 5 லட்சம் ஏக்கர் இருபோகப் பயிர்த் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். 30—9—1971 அன்றுடன் முடிவுற்ற கால அளவுக்கு 10.00 லட்சம் ஏக்கர் இலக்காயிருக்க, 10.44 லட்சம் ஏக்கர் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. நெல் அறுவடை செய்தபின்னர், மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ஏக்கரில் பயறு வகைகளும், சுமார் ஏழாயிரம் முதல் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் பருத்தியும், ஒருலட்சம் ஏக்கரில் எள்ளும் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கரில் வேர்க்கடலையும் ஆகிய கோடைப் பயிர்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

வேளாண்மை உற்பத்தி உயர்விற்கு உறுதிசெய்யும்பொருட்டு, மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்துடன் இணைந்து, அதில் ஒரு பகுதியாக, கீழ்க்கண்ட பரிசோதனைகளும் கட்புல விளக்கங்களும் நடப்பாண்டில் நடத்தப்பட்டு வருகின்றன :—

1. மூன்று போக, பல போகப் பயிர், இவற்றிற்குத் தொடர்புள்ள நேரிட விளக்கங்கள்.

2. மானவாரிப்பகுதி, உவர்நிலப்பகுதி, ஆழநீர்ப் பகுதிகள் ஆகியவற்றில் குறுவை, சம்பா, தாளடி ஆகியவை பயிரிடச் சிறப்பான பொருத்தமான வகைகளைத் தெரிந்தெடுப்பதற்கு, அரசு விதைப் பண்ணைகளிலும் உழவர் நிலங்களிலும் சோதனைகள் நடத்துதல்.



3. ஆற்றல் வாய்ந்த பூச்சி கொல்லி மருந்துகளையும், காளான்கொல்லி மருந்துகளையும் தெரிந்தெடுப்பது குறித்த சோதனைகள்.

4. தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் பொருத்தமான களைகொல்லி மருந்துகள் பற்றிய சோதனைகள்.

### மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம்.

இத்திட்டம், செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 169 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஐந்து மாவட்டங்களிலும், பிற மாவட்டங்களுடன் ஒப்பிட, அதிகப் பகுதிகளில் இடையறாப் பாசன வசதியுள்ளது. இப்பகுதிகளில் உள்ள உழவர்கள் தங்கள் நிலங்களைப் பயிரிடுவதில் முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக்கமளிக்கப் படுகின்றன. இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், விதைகள் போன்ற பயிரிடு தேவைப்பொருள்களை வாங்க உழவர்களுக்குத் தேவையான கடன்வசதியளிக்கப்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டிற்கு 26.72 லட்சம் ஏக்கர் இலக்கு குறிக்கப்பட்டிருக்க, 1971 டிசம்பர் இறுதிவரை எய்திய சாதனை 23.74 லட்சம் ஏக்கர்களாகும்.

### பருப்பு வகைகள் பெருவிளைவுத் திட்டம்.

நம் மாநிலத்தில் பயறு வகைகளின் தற்போதைய உற்பத்தி 1.25 லட்சம் டன்களாகும். ஆனால் நமது தேவையோ 8 லட்சம் டன்களாகும். தற்போதைய உற்பத்தி அளவுப்படி ஒரு நபருக்கு தினப்படி தேவையான 56 கிராம் பருப்புக்குப் பதில் சுமார் 8 கிராம் அளவுதான் கிடைக்கிறது.

பருப்பு வகைகளின் தேவைக்கும், வழங்கல் அளவுக்கும் இடையே பெரும் இடைவெளி உள்ளது. இதனைச் சரி செய்து பருப்பு வகைகளின் தேவையளவை ஒட்டி, வழங்கல் அளவை உயர்த்தும்பொருட்டு, பருப்புவகைகள் பயிரிடுவதற்கான விரைவுத் திட்டமொன்று 1970-71-ஆம் ஆண்டில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், 1972-73-இல் கீழ்க்கண்ட புதிய திட்டங்களைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது :—

(i) மேம்படுத்திய வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.

(ii) கலப்புப் பயிர் முறையில் பயிரிடுதலை மேற்கொள்வதன் மூலம், பருப்புவகைகள் விளைவிக்கும் பகுதிகளை விரிவுபடுத்துதலும், இதற்கு முன்னர் பருப்புவகைகள் பயிரிடப்படாத பகுதிகளுக்கு விரிவு படுத்துதலும்.

(iii) ஏற்கெனவேயுள்ள பழைய வித்து வகைகளை விட்டுவிட்டு அதற்குப் பதிலாக, துறை மேம்படுத்திய தர வித்து வகைகளைப் பயன்படுத்துதல்.

(iv) நுண்ணுயிர்மங்களை வளர்த்து விதைகளுடன் அவற்றைக் கலந்த விதைகளைப் பக்குவப்படுத்துதல்.

(v) பலசெய்முறை விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(vi) தொழில் நுட்பப் பணியாளர்கள் மூலம் வளர்ச்சிப்பணி உதவிகள் அளித்தல்.

விரைவுத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னால், பருப்புவகைகள் பயிரிடப்பட்ட சுமார் 8.50 லட்சம் ஏக்கருக்குக் கூடுதலாக, இத்திட்டம் சுமார் 14.00 லட்சம் ஏக்கரில் செயற்படுத்தப்படும்; ஆண்டு உற்பத்தியளவை 2.50 லட்சம் டன்னாக உயர்த்துவதே இதன் நோக்கம்.

1972-73-ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன்கீழ் 50,000 ஏக்கர்களையும், பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் 1,00,000 ஏக்கர்களையும் கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது; இவ்விரு வழிகளிலும் ஏக்கரின் சராசரி உற்பத்தியளவு பெரிதும் உயரும்.

### இந்தியா-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மையின் உற்பத்தியளவை விரைந்து உயர்த்துதலும், அங்குள்ள உழவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும். உழவர்களுக்குப் பயிரிடு தேவைப் பொருள்களும், தொழில் நுட்ப அறிவு உதவியும் அளிக்கப்படும். மேலும் அவற்றைத் தொடர்ந்து, பயிரிடுதேவைப் பொருள்கள், கடன்வசதி, விற்பனை வசதி ஆகியவற்றை ஒருங்கிணைத்து திறமையான வளர்ச்சிப் பணித் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

2. சாதனைகள்.—(1) மொத்தம் சுமார் 100 ஹெக்டேர் பரப்புள்ள எட்டு அரசு விதைப்பண்ணைகளை சீரமைத்துப் புதுப்பிக்கும் பணி செய்து முடிக்கப் பெற்றுள்ளது.

(2) ஏராளமான சோதனைகள் நடத்தி, அதன்மூலம் இத்திட்டம், உருளைக் கிழங்கு, காய்கறிகள், தானியவகைகள், கால்நடைத் தீவனப்புல் ஆகியவற்றைப் பயிரிடுவது குறித்த அடிப்படைப் புள்ளிவிவரத் தகவல்களைச் சேகரித்து அவற்றை Packages of Practices என்னும் வெளியீட்டில் வெளியிட்டுள்ளது.



(3) ஒரு பகுதி உழவர் தம் நிலங்களிலே நச்சுயிர்த் தொல்லை நீக்கப்பட்ட உருளைக்கிழங்கு விதைப் பெருக்கவும், தர விதைகளைப் பங்கிடுதலும் ஏற்பாடு செய்துதரப்பட்டுள்ளது. இந்த தரப்பொருட்களைப் பயன்படுத்தியதன் மூலம் கிடைத்த உற்பத்தி உயர்வு சுமார் 50 சதவீதம் ஆகும்.

(4) மொத்தம் 131 உருளைக்கிழங்குவகைகளில் உயர் விளைச்சல் தருகிற, பின்கருகல் ( Late B ght ) நோயினை எதிர்க்கும் ஆற்றலுடைய வகைகள் ஐந்து தெரிந்தெடுக்கப்பட்டு பெருக்கம் செய்யப்பட்டது.

(5) நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கினைத் தாக்கும் பொன்னிற நூற்புழுக்களைக் (Golden Nematode) கட்டுப்படுத்தும் விரைவுத் திட்டத்தின்கீழ், உருளைக்கிழங்கு பயிரிடுவோர் 786 பேருக்குச் சொந்தமான 1,234 ஹெக்டேர் பரப்பில் 'டாசனிட்' மருந்திடப்பட்டது; இதன் விளைவாக, உதகமண்டலத்தில் பாசனம் பெறும் பகுதியில் உருளைக்கிழங்கு விளைச்சல் 100 சதவீதத்துக்கும் அதிகமாகியது.

(6) உயர் விளைச்சல் தரும் காய்கறி வகைகள் 15 உள்ளூர் வகைகளைக் காட்டிலும் சிறந்தனவாகக் கண்ட பின்னர், தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்விதைகள் 400 கிலோ கிராம் இறக்குமதி செய்யப்பட்டு அவை காய்கறி பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்டுள்ள விதைகள் பெருக்கப்பட்டு வருகின்றன.

(7) மலைப்பகுதிகளில் உற்பத்தியாகும் காய்கறிகள், மலர்கள் முதலியவற்றை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை மதிப்பிடும் பொருட்டு தனியார் விற்பனை ஆய்வு நிலையம் ஒன்று, ஐந்து நகரங்களில் காய்கறிகள், கொய்தல் மலர்கள் விற்பனை குறித்த ஆய்வினை நடத்தியுள்ளது.

(8) ஆஸ்திரேலியா நாட்டு ஸ்ட்ராபெர்ரி என்னும் பழவகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 60,000 நாற்றுகள் உழவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

(9) மால்ட் எடுக்கும் காரியத்திற்காக பார்லி பயிரிடலாம் எனப் பரிவுரை செய்யப்பட்டுள்ளது. உழவர்களின் வயல்களில் பார்லி பயிரிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(10) புதிய தீவனப் பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(11) மிகு பயன்தரும் நெல், இஞ்சி வகைகள் கூடலூர் வட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைப் பயிர்களை விரிவுபடுத்தும் பணி இப்பகுதியில் முனைப்பாக நடைபெற்று வருகிறது.

(12) வேளாண்மைப் பொருட்களை உற்பத்தி செய்யும் காரியத்துக்கா நீலகிரி மாவட்ட உழவர்களுக்குக் கடன் வழங்கும் பொருட்டு ரூ. 11 லட்ச அளவுக்குக் குறுகிய காலப் பயிர் கடன் நிதி ஏற்படுத்தும் திட்டம் ஒன் கொண்டுவரப்பட்டுள்ளது.

(13) மண் மாதிரிகள் இலவசமாக சோதனையிடப்பட்டு சிறந்த முறையி உரமிடுவதற்கான பரிவுரைகள் அளிக்கப்படுகின்றன.

(14) உழுதல், மேடுபள்ளங்களைச் சமன்படுத்துதல், சாலைகள் போடுத் இவற்றிற்காக டிராக்டர்களும், மண்வாரிக் கருவிகளும் வாடகைக்குக் கொடுக்க படுகின்றன.

(15) இருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், உழவர்க தங்களது உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை பெற இயலும் வகையி உருளைக் கிழங்குகளைச் சேமித்து வைப்பதற்காக ரூ. 4.5 லட்சம் மதிப்பீட் செலவில் குளிர்ப்பதனத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு நிர்வாக ஒப் தல் அளித்துள்ளது.

சென்னையில் குளிர்ப்பதனத் தொழிற்சாலை ஒன்றைக்கட்டும் செயற்குறிப்பை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான தகுந்த மனையை தெரிந்தெடுப்பதில் அரசு நாட்டம் செலுத்திவருகிறது.

**3. வருங்காலத் திட்டங்கள்.**—(1) நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங் களுக்குப் பொன்நிறப் புழுக்களால் ஏற்படும் நோயைத் (Golden Nematod தடுப்பதற்கான முனைப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(2) உருளைக்கிழங்கு விதைப் பெருக்குத் திட்டம் புதிய உழவர்களுக்கு நீட்டிக்கப்படும்.

(3) பார்லி இன்னும் அதிக பகுதிகளில் பயிரிடப்படும். பார் விதைகள் மேலும் பெருக்கப்படும்.

(4) நீட்டிப்புப் பணியின்கீழ் தீவனப் பயிரிடுதலில் ஈடுபாடுடைய உழவ களுடன் தீவனப்பயிர் பயிரிடும் பணி மேற்கொள்ளப்படும்.

(5) தெரிந்தெடுக்கப்பட்ட நெல், இஞ்சி வகைகள் மேலும் பெருக் பட்டு, மேற்படி வகைகளில் பற்றுடைய உழவர்களுக்கு வழங்கப்படும்.

(6) நீலகிரி மாவட்ட உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன் கொடுக்கு திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.





(7) ஸ்ட்ரா பெர்ரி பழவகைகள் பயிரிடும் பகுதி கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்படும்.

(8) காய்கறி விதைப் பெருக்கத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

(9) மண் பரிசோதனை பெரிய அளவில் மேற்கொள்ளப்படும். மண் பரி சோதனை வரைபடம் தயாரிக்கப்படும்.

திட்ட ஒப்பந்தம் 1972 ஜூன் இறுதியில் முடிவடைகிறது. இத்திட்டத்தின் கால அளவை 30—6—1972-க்குப் பின்னரும் நீட்டிப்பது குறித்துப் பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

**மலைப்பகுதிகளில் தோட்டங்களை வளர்த்தல்.**

மலைப்பகுதிகளில் உற்பத்தியாகும் பொருள்களை வாணிபம் செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதன் மூலம் இம்மாநிலத்தில் மலைப்பகுதிகளின் ஒருங் கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும். மலைப்பகுதிகளில் வசிப்ப வர்களின் நலன்களையும், மலைவாழ் மக்களின் நிலைமைகளையும் சீர் படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி, கோடைக்கானல் மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, ஜவ்வாது மலை, பச்சை மலை ஆகிய ஐந்து மலைப் பகுதி களில் மொத்தம் ரூ. 1.93 லட்சத்திற்கு மேற்படாத செலவில் தோட்டங்கள் வளர்க்கும் திட்டத்தினைச் செயல்படுத்த அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் இத்திட்டத்திற்கான கடன் கள் வழங்கப்படும்.

**சிறு உழவர்கள், குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள சிறு உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்குரிய திட்டம்.**

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர் களின் பயனுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நெருக்கமான பகுதிகளில் கொண்டு வரப்படவிருக்கிற சிறப்புத் திட்டங்களுக்கு இந்திய அரசு நிதியுதவியளிக்க முன்வந்துள்ளது. இத்திட்டங்கள் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசுத் திட்டங்களாக இருக்கும். அதன்படி, சிறு உழவர்களுக்கான இத்திட் டத்தை, ஒவ்வொரு மாவட்டத்திலும் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் (மாவட்ட ஆட்சித் தலைவர் இதன் தலைவரா வார்) மேற்பார்வையின்கீழ்ச் செயல்படுத்த தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 12 வளர்ச்சி வட்டாரங்களும், மதுரை மாவட்டத்தில் 18 வளர்ச்சி வட்டாரங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 11 வளர்ச்சி வட்டாரங்களும் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இந்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 1.6 கோடி இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தின்கீழ் 50,000 உழவர்கள் பயன்பெறுவோர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த பயிரிடு முறைகளை மேற்கொள்ளவும், இணை

வெட்டுதல், ஏற்கெனவேயுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல், கிணறுகளுக்கு மின்சக்தி அளித்தல் மூலமாக நிலையான மேம்பாடுகளை மேற்கொள்ளவும் பாற் பண்ணை வளர்ச்சி, கோழி இனவளர்ச்சி முதலிய துணைப்பணிகளை மேற்கொள்வதன்மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் உழவர்களுக்கு இயலும் வகையில் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்கெனவே மேற்கொண்டுள்ள இருப்பு, விற்பனை, முறைப்படுத்து வசதிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரு வளர்ச்சி வட்டாரங்களில், இது காரியத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்ட ஓர் நிறுவனத்தின் மேற்பார்வையின்கீழ், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ஒவ்வொரு திட்டத்திற்கும் இந்திய அரசு ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது. குறைந்த நிலமுள்ள உழவர்கள், மிகக் குறைந்த அளவுள்ள நிலமுடைய உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றாகச் சேர்த்து சுமார் 20,000 குடும்பத்தினரை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும். மிகக் குறைந்த அளவுள்ள நிலம் உடையவர்கள் தங்களிடமுள்ள குறைந்த நிலங்களில், தோட்டங்கள் வளர்த்தல், கால்நடை வளர்ப்பு, கோழி இனவளர்ப்பு முதலியவற்றை மேற்கொள்வதன் மூலம் பெருமளவிற்கு உற்பத்தியைப் பெருக்க உதவிசெய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கடன் வசதிகள், மேம்பாடடைந்த பயிரிடு பொருள்கள், நவீன நடைமுறைகளுக்கு வழி வகுப்பதன் மூலம் பெருமளவுக்கு வருவாயைப் பெருக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமச் சிறப்புப்பணிகள் மூலம் பெருமளவிற்கு ஏற்படுத்தப்படும் வேலைவாய்ப்புகளைக் கொண்டு, குறைந்த நிலமுள்ள உழவர்களுக்கு, சிறப்பாக நிலமற்ற பண்ணைத் தொழிலாளர்களுக்கும் உதவி செய்யப்படும். இப்பகுதிகளில் பெருமளவிற்கு வேளாண்மை செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதில் அவர்களுக்கு இவை உதவி புரியலாம்.

சிறு உழவர்கள், குறைந்த நிலமுள்ள உழவர்கள், பண்ணைத் தொழிலாளர்களுக்கான இந்த சிறப்புத் திட்டங்கள் 1970-71 பிற்பகுதியில் தொடங்கப்பட்டுள்ளன. 1971-72-ஆம் ஆண்டில், வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், உழவர்களுக்கு சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனம்/குறைந்த நிலமுள்ள உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இதுவரை ரூ. 195.90 லட்சம் கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 1972-73-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



## ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், கோவில்பட்டி.

ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, முன்னோடிப் பகுதி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகில் இருக்க வேண்டும். இதனால், புன்செய் பயிர் விளைவித்தல், நிலப் பிரச்சினைகள் தீர்வுக்காக வருகையில் அவைபற்றிய பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து திட்டப்பகுதிக்கும், திட்டப் பகுதியிலிருந்து ஆராய்ச்சி நிலையத்திற்கும் அனுப்ப இயலும். இத்திட்டத்தில், வேளாண்மை ஆராய்ச்சி இந்தியக் கழகம் பெரும்பங்காற்றுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறந்த கரிசல் மண் நிலப்பகுதியை உடைய கோவில்பட்டியில் சுமார் 8,000 ஏக்கர் நிலத்திற்குப் பயனளிக்கும் வகையில் முன்னோடித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்காக 1970-71 ஆம் ஆண்டில் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1970-71-ல் மத்திய அரசு ரூ. 4.20 லட்சம் வழங்கியது. இதில் ரூ. 2.80 லட்சம் உதவிமானியமும் ரூ. 1.40 லட்சம் நீண்டகாலக்கடனும் அடங்கும். அந்த ஆண்டில் திட்டத்திற்குக் காலம் தாழ்த்தி ஒப்பளிப்பு வழங்கி அது செயல்படுத்தப்பட்டதன் காரணமாக, ரூ. 1.05 லட்சம் (ரூ. 0.98 லட்சம் மானியம் ரூ. 0.07 லட்சம் கடன்) நிதி உதவியைக்கொண்டு 800 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிந்தது. 1971-72-ஆம் ஆண்டில், முந்திய ஆண்டு திட்ட இலக்கான 2,000 ஏக்கருக்கு மேற்பட்டு கூடுதலாக 2,000 ஏக்கர் திட்ட இலக்கு, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வரையறுக்கப் பட்டுள்ளது. 1971-72 ஆம் ஆண்டிற்கு இந்திய அரசு அளித்துள்ள உதவி பின் வருமாறு :—

| | (ரூ. லட்சத்தில்) |
|---|---|
| மானிய உதவி | 10.40 |
| நீண்ட காலக் கடன்கள் | 12.25 |
| குறுகிய காலக் கடன்கள் | 3.85 |
| மொத்தம் | 26.50 |

## ஒருங்கிணைந்த புன்செய்நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், புதுக்கோட்டை

புதுக்கோட்டையைச் சுற்றிலும் உள்ள செம்மண் நிலப் பகுதியின் பயனுக்காக, கோவில்பட்டி திட்டத்தின் அடிப்படையில் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பயனடையும் பகுதி புதுக்கோட்டைக்கும், குடுமியாமலையில் உள்ள கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையத்

திற்கும் அருகில் அமைந்துள்ளது. எனவே, குடுமியாமலைப் பண்ணையின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படும். இத்திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தையொட்டி, 1971 ஆகஸ்டு மாதத்தில் இத்திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1971-72-ல் 2,000 ஏக்கர் பரப்பளவு இத்திட்டத்தின் கீழ் அடங்கும். இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 19.89 லட்சமாகும். இதில் இந்திய அரசிடமிருந்து பெறும் ரூ. 11.57 லட்சம் நீண்டகாலக் கடனும் ரூ. 8.32 லட்சம் மானிய உதவியும் அடங்கும். இத் திட்டம் செயல்படும் பகுதி புதுக்கோட்டை வட்டத்தில் மாத்தூர், வடவாளம், திருக்கட்டளை கிராமங்களில் அடங்கும்.

தரவிதை உற்பத்தித்திட்டங்கள்.

அரசு விதைப் பண்ணைகள், 'அண்ணா பண்ணை', குடுமியாமலை.

வேளாண்மை உற்பத்தி பெருக பாசனம், உரம், பயிர்ப் பாதுகாப்பு போன்ற பயிரிடு பொருள்கள் இன்றியமையாதவையாயிருப்பது போலவே தரவிதைகளும் இன்றியமையாதவையாகும். அரசு நடத்தும் மாநில விதைப் பண்ணைகளில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதைகள், தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளிலுள்ள இரண்டாம் நிலை விதைப்பண்ணைகளில் பெருக்கப்படுகின்றன. தனியார் பண்ணைகளில் பதிவு செய்துகொண்ட பயிரிடுவோர்களாலும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழும், அவர்களது ஆலோசனையின் மேலும் தரவிதைகள் பெருக்கப்படுகின்றன. அரசு விதைப்பண்ணைகளில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்வதற்காகத் தேவைப்படும் மூல விதைகள், அரசினால் நடத்தப்படும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

நான்காவது திட்டக்காலத்தில் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்வதற்காக அரசு விதைப்பண்ணைகளுக்கு 230 பிரிவுகள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் 25 ஏக்கர் கொண்டதாகும். இன்றைய நிலவரப்படி, செயல்பட்டு வரும் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

| | பிரிவுகளின் எண்ணிக்கை. | மொத்தப் பரப்பளவு ஏக்கரில். |
|---|---|---|
| 1. கையகப்படுத்தப்பட்ட பிரிவுகள் .. .. | 80 | 2,077·47 |
| 2. கேட்டுப் பெறப்பட்ட பிரிவுகள் .. .. | 27 | 635·47 |
| 3. அரசு புறம்போக்கு நிலங்கள் .. .. | 112 | 3,065·12 |
| 4. உதகமண்டலத் திட்டப் பண்ணைகள் .. | 13 | 333·63 |
| | 232 | 6,111·69 |

நான்காவது திட்ட இலக்கு முற்றிலும் எய்தப்பட்டுள்ளது.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், குடுமியாமலையில் உள்ள அண்ணா பண்ணை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குடுமியாமலையில் உள்ள அண்ணா பண்ணை, இயந்திரங்களைக்கொண்டு பயிரிடுகிற பெரிய பண்ணையாகும். இம் மாநிலத்தில் விதை உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு 1,000 ஏக்கர் காட்டு நிலப் பகுதியில் இப்பண்ணை தொடங்கப்பட்டது. இங்கு 31 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றைக்கொண்டு பாசன வசதி செய்து பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மேலும் 10 கிணறுகள் வெட்டுவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இப்பண்ணை தற்போது ஆதாயத்தில் செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையிலேயே இப்பண்ணை நன்கு செயல்படுவதனால், ஊக்கம் பெற்ற அரசு, இப்பண்ணை செயல்படும் பகுதியை மேலும் சுமார் 1,200 ஏக்கர் பரப்பளவிற்கு நீட்டிப்பதற்கான செயற்குறிப்புக்கு ஏற்பளித்துள்ளது.

அண்ணா பண்ணைக்கு அடுத்துள்ளதும் ஒதுக்கக் காடாக இருப்பதனின்றும் நீக்கப்பட்டுள்ள திருவரங்குளத்தில் உள்ள காட்டு நிலங்களில் 1,500 ஏக்கர் பரப்பளவில் துவரை விதைப் பெருக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சிறுதானியங்கள் முதல் நிலை விதைகளின் உற்பத்தியில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக, கோயம்புத்தூர் மாவட்டம், முதுகண்துறை கிராமத்தில் சிறு தானியங்களுக்காகவே 105 ஏக்கர் பரப்பில் புதிய அரசு விதைப்பண்ணை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டம், நவ்லாக் அரசு விதைப் பண்ணையில் விதைகளைப் பக்குவப்படுத்தும் பிரிவு ஒன்று வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம், சாக்கோட்டையில் விதைச் செய்முறைப்பிரிவு ஒன்றும், குடுமியாமலை அண்ணா பண்ணையில் மற்றொரு விதைச் செய்முறை பிரிவும், ஆக இரண்டு பிரிவுகள் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. கள்ளக்குறிச்சியில் ஒன்றும், போளூரில் ஒன்றுமாக இரண்டு பிரிவுகள் இயன்ற அளவு விரைவில் அமைக்கப்படும். இதைத்தவிர, காய்கறி விதைகளுக்கான சிறப்புச் செய்முறைப்பிரிவு ஒன்று குடுமியாமலை அண்ணா பண்ணையில் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம், சோழவந்தான் என்னுமிடத்தில் 1972-73-ல் விதை செய்முறைப் பிரிவு ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தர விதை வழங்கும் திட்டம்.—நெல், சிறுதானியங்களின் சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பெருக்கி, வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இரண்டாம் நிலை விதைகளைக் குடியானவர்களுக்கு வழங்குவதற்காக, அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் அடிப்படை விதைகள்

இரண்டாம் நிலை விதைகளாகப் பெருக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிரிடுவோருக்கு வழங்கப்படுகின்றன. இரண்டாம் நிலை விதைப் பண்ணை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் விதைகள் செப்முறைப்படுத்தப்பட்டு, குடியானவர்களுக்கு அவை சான்றளிக்கப்பட்ட விதைகளாக விற்கப்படுகின்றன. இந்த விதைகள்மூலம் திட்டமிடப்பட்ட பகுதி இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், மூன்றாண்டுகளுக்கொருமுறை மாறி மாறி இம்மாநிலத்திலுள்ள மொத்த விளைச்சல் பகுதியில் 1/3 பகுதியில் தர விதைகள் விதைக்கப்படும். மேற்சொன்ன பகுதியின் 1/3 பகுதியில் மாநில வேளாண்மைத் துறை வழங்கும் விதைகள் விதைக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 2/3 பகுதியில் உழவர்கள் தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொள்கிற விதைகள் பயிரிடப்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய காலத்தில் கீழ்வரும் அளவுகளில் விதைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| | இலக்கு (டன்னில்) |
|---|---|
| நெல் முதல் நிலை | 2,730 |
| நெல் இரண்டாம் நிலை | 41,700 |
| சிறுதானியங்கள் முதல் நிலை | 60 |
| சிறுதானியங்கள் இரண்டாம் நிலை | 1,528 |

**விதைகளின் தரம்பற்றிச் சான்றளிக்கும் திட்டம்.**—குடியானவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், 1966 ஆம் ஆண்டு விதைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்திய அரசு, வெவ்வேறு மாநிலங்களுக்குச் சாகுபடி செய்யும் பயிர்களின் முக்கியமான ரகங்களை அறிவிக்கிறது. அறிவிக்கப்பட்ட ரகத்துக்கென வரையறுத்துள்ள முளைவிடுதல், கலப்பின்மைத் தன்மைகளைக் கொண்டிருந்தால்தான், அத்தகைய ரகங்களுக்கென அந்தத் தன்மைகள் குறித்த வரம்புகள் குறிப்பிடப்படுகின்றன.

வேளாண்மைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் விதைகள் தரம் குறித்துச் சான்றளிக்கும் நிறுவனம் ஒன்றைத் தமிழ் நாடு அரசு நிறுவியுள்ளது. இது 1—4—1970 முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. சான்றளிக்கும் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யும் பகுதிகளுக்கு மூன்று முதல் நான்கு முறை சென்று, அப்பயிரில் அயல் ரகங்கள் கலக்காமல் உள்ளதா என்று சோதிப்பர். விதைகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அறுவடை, உலரவைத்தல், சுத்தப்படுத்தல், சலித்தல், மூட்டைகளில் கட்டுதல் ஆகிய நடைமுறைகளைச் சான்றளிக்கும் பணியாளர்கள் மேற்பார்வையிடுகிறார்கள். 1971-72-ல் விதைத் தரம்பற்றி சான்றளிக்கும் திட்டத்தின்கீழ்





12,000 ஏக்கர் நிலத்தைக் கொண்டுவருவதற்கான இலக்குக்கு மாறாக, 1971 டிசம்பர் வரை 9,210 ஏக்கர் நிலம் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. 1972-73-ல் சான்றளிக்கப்படவிருக்கிற திட்டமிட்ட பகுதியின் பரப்பளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நெல்—3,000 ஏக்கர்.
பருத்தி—6,000 ஏக்கர்.
கலப்பினச் சிறுதானியங்கள்—3,000 ஏக்கர்.

**விதைப் பரிசோதனை.**—கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் மற்றொன்றுமாக இம்மாநிலத்தில் இரண்டு விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றும், ஓராண்டில் 10,000 மாதிரிகளைச் சோதனை செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டில், 1971 டிசம்பர் முடிய 7,500 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

### வட ஆர்க்காடு மாவட்டம், செங்கத்திலுள்ள மத்திய அரசுப் பண்ணை.

பெரிய அளவுப் பண்ணை ஒன்றை நிறுவுவதற்கென வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் ஒதுக்கப்பட்டப் பகுதியிலுள்ள 10,000 ஏக்கர் காட்டுப் பகுதியைக் குத்தகை அடிப்படையில் இந்த அரசு, அரசுப் பண்ணைகள் குறித்த இந்தியக் கழகத்தினிடம் ஒப்படைத்துள்ளது. குத்தகைக் கால அளவு 30 ஆண்டுகளாகும். ஆண்டு ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குத்தகை ரூ. 1 என்ற அடிப்படையில் பெயரளவில் குத்தகை விதிக்கப்படுகிறது.

இப்பண்ணை, முன்னுரிமை அடிப்படையில், நெல், கம்பு, வேர்கடலை ஆகியவற்றின் விதைகளை உற்பத்திச் செய்யும். இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் முன்னுரிமை அடிப்படையில் மாநில அரசுக்கு அல்லது நியமனம் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு அங்காடி நிலவா விலையில் விற்கப்படும். இதைத் தவிர, நிலங்களைப் பண்படுத்துவதற்கும், சமப்படுத்துவதற்கும் தேவைப்படும் நுட்பமான கருவிகளை வாடகை அடிப்படையில் உழவர்களுக்கு இப்பண்ணை வழங்கும். இப்பண்ணை சுமார் 500 பேருக்கு வேலை வாய்ப்பளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வாணிகப் பயிர்கள்.

பருத்தி, தமிழ்நாட்டில் பயிர் செய்யப்படும் ஒரு முக்கியமான வணிகப் பயிராகும். பருத்தி பயிரிடப்படும் பகுதி சுமார் 10 லட்சம் ஏக்கராகும். பாசன வசதிகள் போதாமை, வறட்சிநிலைமை ஆகிய காரணங்களால் 1970-71-ல் பருத்தி பயிரிடப்படும் பகுதி 7,67,700 ஏக்கருக்கு வரையறுக்கப்பட்டது. 1970-71-ல்

பருத்தி உற்பத்தியின் அளவு ஒவ்வொன்றும் 180 கிலோ கிராம் கொண்ட 3.4
லட்சம் பேல்களாகும். இம்மாநிலத்தில் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவத
காக ஒருங்கிணைக்கப்பட்ட பருத்தி வளர்ச்சித் திட்டமும், பருத்தி முனைப்பு
திட்டமும் செயல்படுத்தப்படுகின்றன.

தர விதைகளைப் பயன்படுத்தல், உரங்களிடுதல், பயிர்ப் பாதுகாப்
நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றின்மூலம் பருத்தி உற்பத்தியை
பெருக்கும் நோக்கத்துடன், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலா
இம்மாநிலம் முழுவதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட பருத்தி வளர்ச்சித் திட்ட
செயல்படுத்தப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டிற்காக வரையறுக்கப்பட்
இலக்கு கிட்டத்தட்ட எய்தப்பட்டுள்ளது. 1972-73-ல் இத்திட்டத்தின் கீ
ஐந்து லட்சம் ஏக்கர் நிலத்தைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி முனைப்புத் திட்டத்தின் நோக்கம், அடைவான பகுதிகளில் முனை
புத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் குறுகிய காலத்தில் பருத்
உற்பத்தியைப் பெருக்குவதே ஆகும். 1971-72 ஆம் ஆண்டிற்கான இலக்கு
பகுதி 2,05,000 ஏக்கரில், சேலம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்
பாசனப் பருத்தி விளைச்சலின் கீழுள்ள பரப்பளவு 70,000 ஏக்கராகும். மா
வாரிப் பருத்தி பயிரிடப்படும் பகுதி சேலம், தருமபுரி, மதுரை, இராமநாதபுர
மாவட்டங்களில் 1,20,000 ஏக்கராகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்
சாகுபடி செய்யப்படாத நெல் பயிராகும் நிலங்கள் 15,000 ஏக்கரில் மானவாரி
பருத்தி பயிரிடப்படும்.

பருத்தி விளைச்சல் மேம்பாட்டில் காணப்படும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி
மத்திய அரசின் ஆதரவு பெறும் மும்முரப் பருத்தி வளர்ச்சித் திட்டத்தை
கொண்டுவந்ததே ஆகும். 1971-72-ல் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்
பாசனம் பெறும் பகுதி அனைத்தையும் பருத்தி விளைச்சலின்கீழ்க் கொண்டு வ
வதும், திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டியிலுள்ள 50,000 ஏக்க
பரப்பளவை மானவாரிப் பருத்திச் சாகுபடியின்கீழ்க் கொண்டுவருவதும் இ
திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் தொடர்ந்து மேலும் இரண்
ஆண்டுகளுக்குச் செயல்படும். விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மரு
துகள், புல், பூண்டுகள் போன்ற களைகள் வளராமல் தடுக்கும் மருந்துக
போன்றவற்றை வாங்குவதற்காக உழவர்களுக்கு உதவிப்பணம் அளிக்கப்ப
கிறது.





பயிர் பாதுகாப்புப் பிரிவுகள், ஒவ்வொரு 10,000 ஹெக்டர் நிலத்திற்கு ஒரு
வு வீதம் சிறந்த பயிர்ப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக
வப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இலக்கும், சாதனைகளும் கீழே கொடுக்கப்
டுள்ளன :—

| இனம். | 1971–72-ஆம் ஆண்டிற்கான இலக்கு. | 1971, டிசம்பர் வரை எய்திய சாதனை. | 1972–73 ஆம் ஆண்டிற்கான தற்காலிக இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ஏக்கரில்) | |
| விதைகளைக் கொண்டு விதைக்கப்பட்ட பகுதிகள் | 1,85,000 | 1,76,160 | 2,00,000 |
| பிடப்பட்ட பகுதி | 1,85,000 | 1,50,443 | 2,00,000 |
| ர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதி. | 1,85,000 | 1,31,476 | 2,00,000 |
| ம்பட்ட வேளாண்மை பொருளாதார நடவடிக்கைகள். | 1,85,000 | 1,63,918 | 2,00,000 |

**முனைப்புத் திட்டம் உட்பட, கரும்புப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

மும்முரச் சாகுபடியின் மூலம் கரும்பின் தரத்தை உயர்த்துவதும், ஏக்கர்
றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்க
ும். கலப்படமற்ற, சத்துள்ள, நோயற்ற குறுகிய காலத்தில் பயன்தரும்
தகளைப் பயன்படுத்த குடியானவர்களுக்கு ஊக்குவிக்கும் திட்டமாக இது
ல்படுகிறது. கரும்பு நாற்றுப் பண்ணைகள் வைத்துள்ள கரும்பு பயிரிடு
ருக்கும், அந்தப் பண்ணைகளிலிருந்து நாற்றுக்களைத் தங்கள் நிலங்களுக்கு
த்துச் சென்று பயிரிடும் உழவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.
டுவதுகுறித்து கட்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. 50 செண்ட்
பு கொண்ட நிலப் பகுதி ஒன்றுக்கு 50 சத வீத உதவித்தொகை அளிக்கப்
கிறது. பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் 15 சத வீத ஈடுசெய்
யில் விற்கப்படுகின்றன. இரசாயனக் கட்டுப்பாட்டுக்குக் கூடுதலாக,
ண்ணி வளர்ப்பு நிலையங்களில் ஒட்டுண்ணிகளை வளர்த்து வழங்குவதன்
ம் உயிரியல் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிக
வு கரும்பு உற்பத்தி செய்யப்படுவதற்காக, கரும்பு பயிரிடுவோரை ஊக்கப்
துதும் பொருட்டு, மாநில அளவிலும், தொழிற்சாலை அளவிலும், வட்டங்கள்

அளவிலும், ஒவ்வொரு ஆண்டும் பயிர்ப் போட்டிகள் நடத்தப்பட்டு யார் அதிக விளைச்சலைப் பெருக்கியுள்ளார்களோ அவர்களுக்கு ரூ. 15,000 முதல் 20,000 வரை பரிசுகள் வழங்கப்படுகின்றன. வெவ்வேறு தொழிற்சாலை மண்டலங்களுக்குப் பொருத்தமான வெவ்வேறு ரகங்களைக் கண்டுபிடிக்கவும், ஒவ்வொரு பகுதிக்கும் சிறந்த வேளாண்மை பொருளாதார நடைமுறைகளை வகுக்கவும் கரும்பு மண்டலப் பண்ணைகள் (Sugarcane Zonal Farms) நடத்தப்படுகின்றன. லட்சுமணங்குடியில் உள்ள வடபாதிமங்கலம் தொழிற்சாலைப் பகுதியில் தற்போது ஒரு மண்டலப் பண்ணை செயல்பட்டு வருகிறது.

அதிகமான பரப்பளவில் பயிரிடுவதைக் காட்டிலும் எக்கர் ஒன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக, 8 கரும்புத் தொழிற்சாலைப் பகுதிகளில் முனைப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள கரும்பு பயிரிடப்படும் பகுதி முழுவதும் வளர்ச்சி மண்டலங்களின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, எல்லா மாவட்டங்களிலும் 47 வளர்ச்சி நிலையங்களும், மதுராந்தகம், ஆம்பூர், ஆப்பக்கூடல், முண்டியம்பாக்கம், பெண்ணாடம், வடபாதிமங்கலம், அலங்காநல்லூர், புகலூர் ஆகிய பகுதிகளில் 8 முனைப்புத் திட்டப் பிரிவுகளும், செங்கற்பட்டு, ஆம்பூர், பொள்ளாச்சி, காஞ்சிபுரம், விருத்தாச்சலம், காட்டூர், மேலூர் ஆகிய இடங்களில் மண்டலப் பண்ணை ஒன்றும், 7 ஒட்டுன்னி வளர்ப்பு நிலையங்களும் தற்போது உள்ளன. இத்திட்டத்தின் இலக்கும், சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | இலக்கு. | சாதனை. | உற்பத்தி செய்யப்பட்ட வெல்லத்தின் அளவு. (லட்சம் டன்னில்.) |
| --- | --- | --- | --- |
| | (லட்சம் ஏக்கரில்) | | |
| 1970–71 | 3·3 | 2·42 | 11·43 |
| 1971–72 (எதிர்பார்க்கப்படுகிறது) | 2·48 | 2·48 | 9·91 |
| 1972–73 (திட்டமிடப்பட்டது) | 2·54 | .. | 10·41 |

கரும்புத் தொழிற்சாலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்.

வயல்களிலிருந்து கரும்பைத் தொழிற்சாலைகளுக்கு எளிதாகவும், விரைவாகவும் எடுத்துச் செல்வதற்கு சர்க்கரை தொழிற்சாலைப் பகுதிகளிலும் அதைச் சுற்றிலும் உள்ள சாலைகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



கரும்புத் தீர்வை நிதியிலிருந்து அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகையைக் கொண்டு சர்க்கரைத் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன. பெறப்படும் கரும்புக்காக டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் தொழிற்சாலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் தீர்வை இந்த நிதியில் அடங்கும். ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 30 லட்சம் வீதம் சாலை மேம்பாட்டிற்காக அரசு ஒதுக்கீடு செய்கிறது. கோட்டப் பொறியாளர் ஒருவரைக் கொண்டுள்ள தனிச் சிறப்புப் பொறியியல் பிரிவு ஒன்று இப்பணிகளின் பொறுப்பை ஏற்கிறது. 1970-71-ஆம் ஆண்டில் 46 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள், ரூ. 32.63 லட்சம் செலவில் அமைக்கப்பட்டன. 1971-72-ல் ரூ. 33.30 லட்சம் செலவில் 40 கிலோமீட்டர் நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1972-73 ஆம் ஆண்டின் இலக்கு 40 கிலோமீட்டர் சாலைகளை அமைப்பதாகும்.

எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

பத்து லட்சம் டன் அடிப்படை உற்பத்தி அளவுக்கு மாறாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இம் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அளவை 13 லட்சம் டன்னுக்கு உயர்த்துவதற்காக எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் பல செயல்படுத்தப்படுகின்றன. அரசு நிலங்கள், உழவர்கள் நிலங்கள் ஆகியவற்றில் மண்டலத் தொடக்க நிலை விதைப் பண்ணைகளையும், இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளையும் அமைப்பதன் மூலம், தர விதைகளைப் பெருக்கி, வழங்குவதன் மூலம் பத்தில் ஒரு பகுதி நிலத்தை வேர்க்கடலை விளைச்சலின்கீழ்க் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேளாண்மைத் துறையின் தொழில்நுட்ப உதவியுடன், கூட்டுறவுச் சங்கங்கள், வேர்க்கடலை விதையின் மூன்றும் நிலை விதைகளைப் பெருக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இதுவரை, 19 கூட்டுறவுச் சங்கங்கள் இப்பணியை மேற்கொண்டுள்ளன. விதைகளை விற்பதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படும் விரயத்தை அரசு ஈடுசெய்கிறது. மேம்படுத்தப்பட்ட சாகுபடி முறைகளை அனைவரும் அறியும்பொருட்டு அரசு உதவித் தொகையைக்கொண்டு செய்முறை விளக்கங்களும் நடத்தப்படுகின்றன.

இதுபோன்று, எள், ஆமணக்கு ஆகியவற்றிற்கும் மண்டல விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, விதைகள் பெறப்பட்டு, வழங்கப்படுகின்றன.

வேர்க்கடலை முனைப்புத் திட்டம்.—முனைப்புத் திட்டத்தின் நடைமுறைகளை உழவர்கள் அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவையாவன :—

(1) தர விதைகளை வழங்குதல்.

(2) மேம்படுத்தப்பட்ட வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகள்.

(3) உரங்களைப் பயன்படுத்துதல்.

(4) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

செய்முறை விளக்கங்களும் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படுகின்றன. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 8 பிரிவுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ½ ஏக்கர் பரப்புள்ள நிலப்பகுதி விளக்கப்பாத்தி ஒன்றுக்கு 50 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. குறுவைப் பயிர் போன்ற முன்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 350 வீதமும் சம்பா போன்ற பின்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 450 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமும் துறையைச் சேர்ந்த மும்முர உரமிடும் திட்டத்தின் மூலமும் குறுகிய காலக்கடன்கள் வழங்கப்படுகின்றன.

**மண்டல மூல விதைப் பண்ணைகள்.**—வேர்க்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றின் தர விதைகளைப் பெருக்குவதற்காக, 21 மண்டலப் பண்ணைகள் உள்ளன. 1971-72-ல், பன்பொழில், குடுமியாமலை ஆகிய இடங்களில் கூடுதலாக இரண்டு மண்டலப் பண்ணைகள் தொடங்கப்பட்டன.

**ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக வேர்க்கடலை உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்.**—இது மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டமாகும். பரிவுரை செய்யப்பட்டுள்ள முனைப்புத் திட்ட நடைமுறைகள் அனைத்தையும் மேற்கொள்வதன் மூலம், ஏற்றுமதி செய்யும் காரியங்களுக்காக வேர்க்கடலை உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அந்த நடைமுறைகளாவன :—

(1) தர விதைகளை வழங்குதல்.

(2) உரமிடுதல்.

(3) பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளல்.

**ஏற்பளிக்கப்பட்ட மேம்படுத்திய வேளாண்மைப் பொருளாதார நடைமுறைகளை மேற்கொள்ளலும், கட்புல விளக்கங்களை நடத்துதலும்** செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் 11 பிரிவுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்பருவப் பயிர்கள் குறித்தும், பின்பருவப் பயிர்கள் குறித்தும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றை நடத்துவதற்காக, முன்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60 வீதமும், பின்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 80 வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. முன்பருவப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 70 வீதமும் பின்பருவப் பயிருக்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதமும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமாகவும் துறை மூலமாகவும் குறுகிய காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன.



**ஆமணக்கு செய்முறை புல விளக்கத் திட்டம்.**—குறுகிய காலத்தில் மிகு பயன் அளிக்கும் ஆமணக்கு ரகங்களையும் முனைப்புத் திட்ட நடைமுறைகளை மேற்கொள்ளுதலையும் அனைவரும் அறியச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 50 என்ற உதவித் தொகையுடன் குடியானவர்களின் நிலத்தில் செய்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன.

**சூரியகாந்தி பூ குறித்த செய்முறை விளக்கத் திட்டம்.**—ரூ. 52,000 செலவில் இத்திட்டத்தை மேற்கொள்ள அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மற்றொரு எண்ணெய் வித்தாக சூரிய காந்திச் செடிவிதைகளை மக்களிடையே பிரபலப்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். வெளிநாட்டு ரகத்தைச் சேர்ந்த குறுகிய காலத்தில் மிகுபயன் தரக்கூடிய, அதிக அளவு எண்ணெய்ச் சத்துள்ள சூரியகாந்தி விதைகளை முனைப்புத் திட்ட அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கான விளக்கப் பாத்திகளை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பெரிய அளவில் சூரியகாந்தி பயிர்செய்தல்.**—வீடு, தொழிற் பயன்களுக்கான உண்ணத்தக்க எண்ணெய்களின் அதிகரித்துவரும் தேவையை நிறைவுசெய்யும் வகையில் விரைவாகவும் அதிக அளவிலும் பலன் தரும் எண்ணெய் வித்துக்களைப் பயிரிடவேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக மத்திய அரசு திட்டமாக நீலகிரி, கன்னியாகுமரி, சென்னை மாநகரம் நீங்கலாக பிற பகுதிகளில் 2 லட்சம் ஏக்கர் மொத்தப்பரப்பில் பெருமளவில் சூரியகாந்தி செடிகளைப் பயிரிடுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. விரைவில் இது இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## தென்னை வளர்ப்புத் திட்டம்.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் தென்னை வளர்ப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன :—

**(1) தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்துதல்.**—தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை வளர்க்கும் தனிப்பட்ட நபர்கள், ஊராட்சிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் 7 லட்சம் தென்னங்கன்றுகளை வளர்க்கும் வசதியுடன் கூடிய 19 தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் தற்பொழுது இம் மாநிலத்தில் உள்ளன. உள்ளூர்

அங்காடி விலை விதத்திற்கு மேல் 20 சத விதத் தொகையைக் கொடுப்பதன் மூலம் அடையாளம் இடப்பட்ட தாய் மரங்களிலிருந்து நெற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தென்னங்கன்றும் ரூ. 1.50 என்ற சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது.

(2) தென்னை உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம்.—தென்னை வளர்ப்பை மக்களிடையே பிரபலபடுத்தி, மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகள், பயிர் வளர்ப்பு, நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்களைப் பயன்படுத்துவது ஆகியவற்றைக் கடைப்பிடிக்க மும்முரப் பிரச்சாரம் இம் மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. மேம்படுத்தப்பட்ட முறைகளைக் கையாளு வதற்கு, உரமிடுதல், உயர் பயிர்வகைகளை வளர்த்தல் ஆகியவை குறித்த ஒவ்வொரு கட்புல விளக்கமும் முறையே ரூ. 50, ரூ. 100 உதவித் தொகை வழங்குவதன் மூலம் உழவர்களின் நிலங்களில் இத்தக் கட்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. உதவித் தொகை வழங்கும் அடிப்படையில் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தெளிப்பானுக்கும் ரூ. 100 என்ற பேரளவு உதவித் தொகைக்கு உட்பட்டு, தென்னங்கன்றுகளுக்கு மருந்து தெளிப்பதற்குத் தகுந்த தெளிப்பான்களுக்கு 50 சத வித உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(3) தென்னை வளர்ப்பு முனைப்புத் திட்டம்.—காய்ப்பை 25 சத விதம் பெருக்கும் நோக்கத்துடன், தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பகுதியில் உள்ள 1,000 ஏக்கர் கொண்ட அடைவான பகுதியில் கொண்டுவரப்பட்டது. தற்போது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சியில் ஒன்றும், மதுரை மாவட்டம் கோட்டம்பட்டியில் ஒன்றுமாக இரண்டு பிரிவுகள் செயல் படுகின்றன. முனைப்புத் திட்டம் செயல்படாத இடங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 5,000 நெற்றுகள் விளைகின்றன. முனைப்புத் திட்டம் செயல்படுகின்ற இடங் களில், இந்த இடங்களைவிட 25 சத விதம் அதிகமாக நெற்றுகள் காய்க்கின்றன. உரங்கள், இரசாயனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகக் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கடனும் உதவித் தொகையும் முதல் மூன்று ஆண்டு களுக்கு வழங்கப்படுகின்றன.

(4) புதிய தென்னந் தோப்புகளை ஏற்படுத்துதல்.—தென்னை வளர்ப்பை, அதிகரிக்க ஊக்கமளிக்கும் பொருட்டு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 விதம் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பதினோராவது ஆண்டு முதற்கொண்டு இந்தக் கடன்கள் 5 சம ஆண்டுத் தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படத் தக்கவை யாகும். நீலகிரி, கிழக்கு இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம் மாநிலம் முழுவதிலும் இது செயற்படுத்தப்படுகிறது.



(5) கிழக்கு இராமநாதபுரத்தில் தென்னை வளர்ப்புத் திட்டம்.—மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், 300 நிலமற்ற ஏழைகளையும், அகதிகள் குடும் பத்தினர்களையும் குடியமர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட் டத்தின் மூலம், ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுக்கப் படுகிறது. நெடுங்காலக் கடன் வழங்குவதன் மூலம் ஒவ்வொருவரும் குறைந் தது 3 ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிடச் செய்யப்படுகிறது. இத்துடன், நீண்ட காலக்கடன் வழங்குவதன்மூலம் 7,500 ஏக்கர் பட்டா நிலங்களில் தென்னை வளர்க்கப்படவிருந்தன. இப்பகுதியின் தேவையைச் சரிக்கட்ட மொத்தம் மூன்று தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகள் செயல்படுகின்றன. மொத்தத்தில் ஒவ்வோர் ஆண்டும் 60,000 தென்னங்கன்றுகள் வழங்கப் படுகின்றன. அகதி ஒவ்வொருவருக்கும், அல்லது நிலமற்ற ஏழைகளுக்கு 6 ஆண்டுகளுக்கு ரூ. 5,000 கடன் வழங்கப்படுகின்றது. கிணறு வெட்டுவதற் காக பட்டாதார்களுக்குக் கிணறு ஒன்றுக்கு ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

நான்காவது திட்டக்காலத்தில், 300 ஏக்கர் அரசு நிலங்களில் 100 குடும்பத் தினரைக் குடியமர்த்தவும், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலம் 700 ஏக்கர்களில் தென்னை வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) முன்னோடி விளக்கப்பாத்திகள் (Pilot Demonstration Plots) அமைப்பதற்கான திட்டம்.—ஒவ்வொன்றும் ஒரு ஹெக்டேர் பரப்பளவுள்ள 500 விளக்கப் பாத்திகள் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னந் தோப்புகளைச் சரியாகப் பராமரித்தல், உரமிடுதல், சரியான அளவில் நீர்பாய்ச்சுதல் ஆகியவற்றை உழவர்களுக்கு எடுத்துக்காட்டி உதவுவதற்காகவே இந்தக் கட்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் இதில் பங்கு கொள்பவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

(7) உயரமான, குட்டையான கலப்பினத் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கான திட்டம்.—ஆண்டு ஒன்றுக்கு 5,000 கலப்பினத் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம், வேப்பங்குளம் வட்டாரத் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் 1969-70 லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(8) ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம்.—பெதிலைடு (bethylids) யுலோபைடுஸ் (eulophids), பாரக்கோடாஸ் (bracodes) போன்ற ஒட்டுண்ணிகளை அதிக அளவில் வளர்த்து, நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டங்களில் அவற்றை இலவசமாக விடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். குடியாத்தம், தஞ்சாவூர், கோயம்புத்தூர், உடங்குடி, நாகர்கோயில், சேலம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, மதுரை ஆகிய இடங்களில் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(9) திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் முந்திரி, தென்னை வளர்ப்பு.—சாகுபடி செய்யத்தக்க தரிசு நிலங்களில் தென்னை வளர்ப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் தென்னம் பிள்ளைகள் வளர்த்து வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### முந்திரி வளர்ப்புத் திட்டங்கள்.

இம்மாநிலத்தில் கீழ்க்காணும் முந்திரி வளர்ப்புத் திட்டங்கள் செயலில் உள்ளன :—

(1) தமிழ்நாட்டில் முந்திரி வளர்ப்புத் திட்டம்.

(2) கிழக்கு இராமநாதபுரத்தில் முந்திரித் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(3) திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் முந்திரி, தென்னைத் தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டம்.

(4) முந்திரி பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் (மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டம்)

(அ) முந்திரி பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

(இ) முந்திரி குறித்து கட்புலவிளக்க நிலத்துண்டுகள் அமைத்தல்.

ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3,000 என்கிற பேரளவுக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 விதம் நீண்டகாலக் கடன்கள் வழங்கி, ஆண்டு ஒன்றுக்கு 5,000 ஏக்கர் விதம் நான்காம் திட்டக் காலத்தில் 25,000 ஏக்கரில் முந்திரிச் சாகுபடியை விரிவுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சாகுபடி செய்பவர் ஒவ்வொருவருக்கும் தரமான முந்திரிக் கொட்டைகள் வழங்கப்படுகின்றன.



பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ் தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 5,916 ஏக்கரில் முந்திரி பயிரிடுவதற்கும், விளக்கப் பாத்திகள் அமைக்கவும் முந்திரி வளர்ப்பு முனைப்புத் திட்டம் 1971-ல் தொடங்கப்பட்டது. சாகுபடியில் நவீன முறைகளைக் கையாளுதல், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ் முனைப்பு நடவடிக்கைகளைக் கையாளுதல் ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்காக, இரசாயனப் பொருள்கள் வாங்குவதற்காகப் பயிரிடுவோருக்கு உதவித்தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 அளிக்கப்படுகிறது. விளக்கப்பாத்திகளுக்கு துண்டு நிலம் ஒன்றுக்கு (2 ஏக்கர்) இந்திய அரசு ரூ. 300 உதவித் தொகை அளிக்கிறது. இத்திட்டத்தினால் உற்பத்தி 20 சதவிதம் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பழ வளர்ச்சித் திட்டம்

பழத் தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலமும் பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்த இத்திட்டம் வகைசெய்கிறது. ஒவ்வொரு தனியாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்கிற பேரளவுத் தொகைக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 விதமும் ஏனைய பழ மரங்களை வளர்ப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 3,000 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 விதமும் நீண்டகாலக் கடன்கள் வழங்க இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. 1971-72-ல் இத்திட்டத்தின்கீழ் 1,600 ஏக்கரில் பழ மரங்கள் வளர்க்கப்பட்டன. ரூ. 6.00 லட்சம் வரையில் நீண்டகாலக் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. 1972-73-ல் 1,800 ஏக்கரில் பழ மரங்கள் பயிரிடவும், ரூ. 6.90 லட்சம் நீண்டகாலக் கடன் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### அரசு பழத்தோட்டம்—பழ நாற்றுப்பண்ணைகள் அமைத்தல்.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும், பழத்தோட்டக்காரர்கள், பழ உற்பத்தியாளர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் விளக்கப் பாத்திகளாகப் பணி புரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் 9 பழத்தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன. அவை அமைந்துள்ள இடங்களாவன :—

ஆத்தூர்—செங்கற்பட்டு மாவட்டம்.

குடப்பட்டு—வட ஆர்க்காடு மாவட்டம்.

மருங்குளம்—தஞ்சாவூர் மாவட்டம்.

கோடைக்கானல்—மதுரை மாவட்டம்.

பூவணி—இராமநாதபுரம் மாவட்டம்.

குற்றாலம்—திருநெல்வேலி மாவட்டம்.

பெரியகுளம்—மதுரை மாவட்டம்.

திம்மாபுரம்—தருமபுரி மாவட்டம்.

கூனூர்—நீலகிரி மாவட்டம்.

சேலம் மாவட்டத்தில் மேட்டூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடுமியாமலையில் உள்ள அண்ணா பண்ணையிலும் இதைப்போன்ற பழத் தோட்டங்கள்-நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1972-73-ல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு பழத் தோட்டம்—நாற்றுப் பண்ணை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வாழை பயிரிடுவதுகுறித்து முனைப்புத் திட்டம்.

குட்டை வகை வாழையின் ஏற்றுமதியை அதிகரித்தல், வாணிகப் பயன் குறித்த பிற வகையான வாழைகளின் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட, இத்திட்டம் வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

பல்வேறு பயிரிடு பொருள்களின் தேவையைக் காட்டும் பண்ணைத் திட்டம் ஒன்றை இத்திட்டப் பணியாளர்கள் தயாரித்து வருகின்றனர். கூட்டுறவுகள், வங்கிகள் மூலமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரையில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

நோயற்ற வாழைக் கன்றுகளும் தேவையாக உள்ள உழவர்களுக்கு அளிக்கப் படுகின்றன. வாழை பயிரிடுவோருக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன.

1970-71-ல் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 21,481 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டன. 1971-72-ல் சுமார் 22,500 ஏக்கரில் உற்பத்தியை முழுமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1972-73-ல் 25,000 ஏக்கரை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.



### பாக்கு உற்பத்தி.

குற்றாலம், குமரி முனை, கல்லாறு, கூடலூர், பெரியகுளம் ஆகிய இடங்களில் ஐந்து நாற்றுப் பண்ணைகள் அமைப்பதன் மூலம் தரமான கமுகுக் கன்றுகளை வளர்த்து வழங்குவதே பாக்கு உற்பத்தித் திட்டத்தின் நோக்கமாகும். உதவித் தொகை அதிக அளவு ரூ. 100 என்பதற்கு உட்பட்டு 50 சத விதவிலையில் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. வேளாண்மை நிதி உதவிக் கழகத்தின் நிதி உதவியுடன் மேட்டுப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள மற்றொரு பாக்கு உற்பத்தித் திட்டத்தின் மூலம், மேட்டுப்பாளையத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கால்வாய்க்கு அருகில் உள்ள பிற வட்டாரங்களிலும் 245 ஏக்கரில் பாக்கு பயிரிடக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் பயிரிடுவோருக்கு ரூ. 5,000 வழங்கப்படுகிறது.

### தமிழ்நாட்டில் கோக்கோ வளர்ச்சித் திட்டம்.

கோக்கோ வளர்ச்சியை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், மதுரை மாவட்டத்தில் மங்கலங்கொம்பு ஆகிய இடங்களில் மூன்று கோக்கோ முன்னோடித்திட்ட நிலையங்கள் உள்ளன.

1970-71-ல், 30 ஏக்கரில் கோக்கோ பயிரிடப்பட்டது. 1971-72-ல் 250 ஏக்கரில் பயிரிடுவதற்காக ஒரு லட்சம் கோக்கோ நாற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1972-73-ல் 500 ஏக்கரில் கோக்கோ பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் கருமிளகு வளர்ப்புத் திட்டம்.

நல்ல மிளகுக் கொடிகளை வளர்த்து அவற்றை மிளகு பயிரிடுவோர்களுக்கு மலிவான விதத்தில் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அறிவியல் முறையில் மிளகு பயிரிடுவதன் பலன்களை மிளகு விளைவிப்போருக்குக் கட்புல விளக்கம் அளிக்க உதவித் தொகை பெறும் விளக்கப் பாத்திகள் பேணப்படுகின்றன. தெளிப்பான்களும் தூவுகருவிகளும் மலிவான விதங்களில் அளிக்கப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பேச்சிப்பாறையிலும், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூரிலும் இரண்டு சிறு நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளன.

1971-72-ல், 50 ஏக்கரில் பயிரிடுவதற்காக 40,000 மிளகுக் கொடிகள் வழங்கப் பட்டு வருகின்றன. 1972-73-ல் 60 ஏக்கருக்கு, 50,000 மிளகுக் கொடிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பன்னியூர் 1 கலப்பு மிளகுக் கொடியுடன் விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கான திட்டம்.**

கேரள மாநிலத்திலிருந்து 10,000 பன்னியூர் 1 கலப்பினவகை மிளகுக் கொடியைக் கொண்டுவந்து, நீலகிரி மாவட்டத்தில், மிளகு பயிரிடுவோருக்குச் சொந்தமான நிலங்களில் 10 விளக்கப் பாத்திகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், தொடக்கத்தில், நீலகிரி மாவட்டம், கூடலூரில் செயற்படுத்தப்படுகிறது. 1970-71-ல் 10 விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. 1971-72-ல் மேலும் 10 விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு வருகின்றன. முந்திய ஆண்டுகளில் அமைக்கப்பட்ட நிலப்பகுதிகளைப் பேணிவருவதுடன், 1972-73-ல் மேலும் 10 விளக்கப் பாத்திகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் மஞ்சள் பயிர் மேம்பாட்டுத் திட்டம்.**

ஈரோடு, கோபிச்செட்டிப்பாளையம் பகுதிகளில் உள்ள முன்னைப்புத் திட்ட அமைப்பை விளம்பரப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1971-72-ல் 6,054 ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. 10 விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன.

**தமிழ் நாட்டில் சணல், புளிச்சக்கீரை (மெஸ்டா) உற்பத்திக்கான திட்டத்தை சோதனை அடிப்படையில் மேற்கொள்ளல்.**

இது ஒரு புதிய திட்டமாகும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சணல், புளிச்சக்கீரை (மெஸ்டா) ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக ஒவ்வொன்றுக்கும் இரண்டு ஏக்கர் பரப்பளவுள்ள 100 சோதனைகளை (50 சோதனைகள் சணல், 50 சோதனைகள் புளிச்சக்கீரைகள்) நடத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1972-73-ல் மொத்தம் 200 ஏக்கரில் சணல், புளிச்சக்கீரை (மெஸ்டா) பயிரிடப்படும்.

**புகையிலை அபிவிருத்தியும் முன்னைப்புத் திட்டமும்.**

சுருட்டுப் புகையிலை, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, புகையிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றில் புகையிலை விளைச்சலை அதிகரிக்கச் செய்ய, கோயம்புத்தூர் மாவட்டத்திலும் புகையிலை முன்னைப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 100 விளக்கப் பாத்திகள்



அமைக்கத் திட்டமிடப்பட்டது. 31—12—1971 வரையில் 98 நிலத் துண்டுகளே அமைக்கப்பட்டுள்ளன. புகையிலை முன்னைப்புத் திட்டத்தின்கீழ், 1971-72-ல் 14,000 ஏக்கரில் பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 1972-73-ல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், 16,000 ஏக்கரில் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**புகையூட்டிப் பக்குவப்படுத்தப்பட்ட வெர்ஜீனியா புகையிலை வளர்ச்சித் திட்டம்.**

புகையூட்டிப் பக்குவப்படுத்தப்பட்ட முக்கியவகை வெர்ஜீனியா புகையிலையை 700 ஏக்கரில் பயிரிடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 31--12--1971 வரையில் 345 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. 1972-73-ல் 700 ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. துறையினால் வளர்க்கப்பட்ட நாற்றங்கால்களிலிருந்து இலவசமாக நாற்றுகள் வழங்கப்படுகின்றன. களஞ்சியங்கள் அமைத்தல், கிணறுகள் வெட்டுதல், தெளிப்பான்கள் வாங்குதல், இவற்றிற்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர, சோதனை நடவடிக்கைகள் நடத்தவும், புகையிலையைப் பதப்படுத்தவும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**தமிழ் நாட்டில் காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்.**

முக்கிய மாநகரங்களிலும், நகரங்களிலும் அவற்றைச் சுற்றி 30 மைல் பரப்பளவுக்குள் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்துடன் நீலகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்தின் ஓசூர் பகுதியிலும், மலைப்பகுதிகளில் பயிராகும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வகை செய்கிறது. காய்கறி விதைகள் பாதிவிலையில் விற்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும், பருவம் ஒன்றுக்கு, சொந்தப் பிணையத்தின் மேல், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகியகாலக் கடன் வழங்கப்படுகிறது. முன்மாதிரி நடவடிக்கைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக, விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டமானது, தமிழ் நாட்டில், 25 வேளாண்மைக் கோட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1971-72-ஆம் ஆண்டில், 28,200 கிலோ காய்கறி விதைகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972-73-ஆம் ஆண்டில், 30,000 கிலோ காய்கறி விதைகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டுத் தோட்டங்களுக்குத் தேவையான விதைகள், நாற்றுகள், உரங்க
முதலியவற்றை வழங்குவதற்குப் புதிய காய்கறி விற்பனை நிலையங்களை
திறந்ததன் மூலம், மாநகர் காய்கறிப் பயிர் வளர்ச்சித் திட்டமான
வலுப்படுத்தப்பட்டது. காய்கறி பயிரிடுவோருக்கு தொழில்நுட்ப உதவிய
வழங்கப்படுகிறது.

காய்கறி, பழங்கள், அழகூட்டும் செடிகள் ஆகியவற்றை, அறிவியல் முறையி
பயிர் செய்வதற்குத் தோட்டக்காரர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கோ
ஒருமாத கால அளவுள்ள தோட்டக்காரர் பயிற்சியானது தொடங்க
பட்டுள்ளது. இப்பயிற்சியை மேற்கொள்ளும் தோட்டக்காரர்களுக்கு, மாத
ஒன்றுக்கு ரூ. 50 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. முதல் தொகு
யில் 20 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். அடுத்த தொகுதியினர் பயிற்சியை மே
கொண்டுள்ளனர்.

### சென்னை மாநகரில் காய்கறி விற்பதற்கான திட்டம்.

இத்திட்டமானது, சென்னை மாநகரைச் சுற்றி சுமார் 50 மைல் சுற்ற
விலுள்ள உழவர்கள் தங்களுடைய காய்கறிகளை விற்பதற்கும், அவற்றிற்
நியாயமான விலை கிடைக்கச் செய்வதற்கும் உதவி புரிவதோடு, சென்னை மாநக
மக்களுக்குப் புத்தம் புதிய காய்கறிகளை நியாயமான விலையில் வழங்குவதற்கு
வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### நகர்ப் பகுதித் திட்டம்.

வேளாண்மை மானியத் திட்டத்தின்கீழ், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய
கள் ஆகிய பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு வழங்கப்படுவதுபோல நகராட்சி
மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள உழவர்களுக்கும் சலுகைகள் வழங்
வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பின்
வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

(i) 50 சத வீத விலையில் காய்கறி விதைகளையும், பழச்செடி
தென்னம் பிள்ளைகளை 75 சத வீத விலையிலும் வழங்குதல்.

(ii) 50 சத வீத விலையில் வழங்கப்படும் கருவிகளின் விவரம் கீழே
கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) மண்வெட்டிகள்.

(2) களைக் கொட்டுகள்.



(3) பாம்புகள்.

(4) வெட்டுக்கத்தரிகள்.

(5) பூவாளிகள்.

ஒவ்வொரு உழவரும் ஒரு கருவியும் ரூ. 15 மதிப்புள்ள விதைகளும் பெறத்தகுதி பெறுவார்.

இத்திட்டம் 84 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 1970-71-ஆம் ஆண்டிலிருந்து, பள்ளிகள், அனாதை இல்லங்கள் போன்ற பொது நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### உருளைக் கிழங்கு பயிர் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டம், கோடைக்கானல் மலையிலும், தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்திலும், உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்க வகைசெய்கிறது. ஓசூர் பகுதியில் துறை மூலமாக உருளைக் கிழங்கு பயிரிடுவோருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 750 வீதமும், கோடைக்கானல் மலைப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏக்கருக்கு ரூ. 900 வீதமும் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. தேவைப்படும் விதை உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை வேளாண்மைத் துறையால் அளிக்கப்படுகின்றன. பயிரிடுதலிலும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவை குறித்தும் இத்துறையின் பணியாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கின்றனர். இது தவிர, மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மூல விதைகளைப் பெருக்குவதற்கும், ஒரு மொத்தமாக வழங்குவதற்கும், இத்திட்டம் வகை செய்கிறது. தற்போது, "ரைபிள் ரேஞ்சு" என்னுமிடத்தில் ஒன்றும், கோடைக்கானல் மலையில் வில்பட்டியில் மற்றொன்றுமாக இரண்டு அரசு விதைப் பண்ணைகள் உருளைக்கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்காக உள்ளன.

1971-72 ஆம் ஆண்டில், 310 டன் உருளைக் கிழங்கு விதைகளை வழங்குவதென்ற குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டிருக்க, 31—12—1971 ஆம் நாள் வரை 234 டன் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. 1972-73 ஆம் ஆண்டில், 350 டன் உருளைக்கிழங்கு விதைகளை வழங்குவதென்று திட்டமிடப்பட்டுள்ளது.

### இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத்தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகு பயன் தரும் தானிய ரகங்கள் பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்த பிறகு, இரசாயன உரங்களைப் பயன்

படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த இரசாயன உரத்தின் மீதானக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதன் காரணமாக மத்திய உரத் தொகுப்பு, இறக்குமதியாகும் உரங்களை மட்டும் பங்கீடு செய்து வருகிறது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய உர அளவினை வழங்குவதற்கு, இந்த அரசு உறுதியளிக்கிறது. எஞ்சிய தேவைகளை மத்திய உரத் தொகுப்பிடமிருந்து பெற்று நேர் செய்யுமாறு இந்திய அரசை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின் உரத் தேவை முழுமையாக நிறைவு செய்யப்படுகிறது. இம்மாநிலத்தில், இரசாயன உரங்கள் வழங்குவதற்காக, 140 உரக் கலவை நிறுவனங்களும், 11,000 சில்லறை விற்பனையாளர்களும் உள்ளனர். பல்வேறு இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது படிப்படியாகப் பெருகி வருகிறது என்பது கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவருகிறது :—

| ஆண்டு. | பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்கள். | | |
|---|---|---|---|
| | நைட்ரஜன். | பாஸ்பேட். | பொட்டாஷ். |
| | (லட்சம் டன்களில்.) | | |
| 1968-69 .. .. .. | 1·13 | 0·35 | 0·31 |
| 1969-70 .. .. .. | 1·48 | 0·42 | 0·33 |
| 1970-71 .. .. .. | 1·73 | 0·72 | 0·51 |
| 1971-72 .. .. .. | 1·95 | 0·68 | 0·58 |
| (எதிர்பார்க்கப்படுகிறது) 1972-73 (இலக்கு). | 2·07 | 0·75 | 0·55 |

1972-73 ஆம் ஆண்டு முன்பருவ, பின்பருவப் பயிர்களுக்காகத் தேவைப்படும் உரங்களின் மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| பருவம். | தேவை. | | டன். |
|---|---|---|---|
| முன் பருவப் பயிர், 1972 .. | யூரியா .. .. | .. | 54,000 |
| | அமோனியம் சல்பேட் | .. | 43,000 |
| பின் பருவப் பயிர், 1972-73 | யூரியா .. .. | .. | 44,000 |
| | அமோனியம் சல்பேட் | .. | 43,000 |



### உரக் கட்டுப்பாடு ஆணை.

கலப்பட இரசாயன உரங்கள் அங்காடிகளில் விற்கப்படுவதைத் தடுப்பதற்காகப் பல்வேறு உர விற்பனை நிலையங்களிலிருந்து உர மாதிரிகள் பெறப்பட்டு, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள ஆய்வுக் கூடங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இரசாயன உரங்களில் கலப்படங்கள் செய்வது, தரக் குறைவான இரசாயன உரங்களை விற்பனை செய்வது ஆகியவை குறித்துக் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு எப்போதும் தயங்காது.

### கடன் வசதிகள்.

கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் ஆகியவைமூலம் அதிக அளவில் கடன்கள் வழங்கப்படுகின்றன. மும்முர உரத் திட்டத்தின்கீழ், உரங்கள் வாங்க அரசால், கடன்கள் வழங்கப்படுகின்றன. ஏக்கர்கள் அடிப்படையிலும், தனிப்பட்டவர்கள் அடிப்படையிலும், அவ்வப்போது அரசினால் முடிவு செய்யப்படுகிற மேல்வரம்புக்கு உட்பட்டு, பல்வேறு பயிர்களுக்கான கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1971-72 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 6.25 கோடி கடன் வழங்குவதற்கு, அரசு வகை செய்துள்ளது.

### பாமினி உரமணிகள் உற்பத்தி தொழிற்சாலை.

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் நிறுவப்பட்டுள்ள பாமினி உரமணித் தொழிற்சாலை 1971 சனவரித் திங்கள் முதல் உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளது. இந்த தொழிற்சாலையில் ஆண்டு உற்பத்தி அளவு 45,000 டன் உரமணிகள் ஆகும். பல்வேறு தரங்களில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் கொண்ட உரமணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம்மாதிரி உரமணிகளை உற்பத்தி செய்வதற்கும் அவைகளை விவசாயிகளிடையே பரப்புவதற்கேதுவாக அரசு தங்களது உரத் தொகுப்பிலிருந்து யூரியா, அமோனியம் சல்பேட் முதலிய மூல உரங்கள் தந்து உதவுகிறது. இந்த உரமணிகள் கையாள்வதற்கும், பயிர்களுக்கு இடுவதற்கும், விநியோகம் செய்வதற்கும் சுலபமாக இருக்கின்றன. மேலும் சாதாரணக் கலப்பு உரங்களில் உரமல்லாப் பொருள்களைக் கலப்படம் செய்ய இயலும். ஆனால் இந்தக் கலப்பு உரமணிகளில் கலப்படம் செய்வதற்குச் சாத்தியக் கூறு இல்லை.

### உரமிடும் திட்டம்.

### கிராமப்புற கலவை எருத் திட்டம்.

கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் அனைத்தையும் பயன்படுத்துவது, அவைகள் நல்ல தரமுள்ள கலப்பு உரமாக மாற்றுவது ஆகியவையே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கலப்பு உரமிடும் கூடங்களை வைத்துவர்வும், நல்ல தரமுள்ள கலப்பு

உரத்தைத் தயாரிப்பதில் தேவையான தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கவும் வேண்டி, உழவர்களுக்கும், ஊராட்சிகளுக்கும் உதவுவதற்கு, கலப்பு உர வளர்ச்சி இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒவ்வொரு வட்டாரத்திலும் நியமிக்கப்பட்டுள்ளார். வட்டார அளவில், மாவட்ட வேளாண்மை அதிகாரி (கலப்பு உரம்) ஒருவர் கலப்பு உரத் தயாரிப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கிறார். இத்திட்டத்தின்கீழ், நிதி உதவி எதற்கும் வகை செய்யப்படவில்லை. இப்பணியாளர்களுக்காகும் செலவு, திட்டத்தின்கீழ் வராத செலவுகளிலிருந்து சரிக்கட்டப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டில் 72.00 லட்சம் டன் உரம் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்று குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டிருக்க, 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 60.49 லட்சம் டன் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நான்காவது திட்டக்காலத்தின் இறுதிக்குள், உற்பத்தி அளவை 75.00 லட்சம் டன்னுகப் பெருக்க வேண்டுமென்பதே நோக்கமாகும்.

## நகரக் கலவை எருத் திட்டம்.

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் கிடைக்கப் பெறும் குப்பைகள், மலக்கலவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, அறிவியல் அடிப்படையில் நல்ல தரமுள்ள கலவை எருவாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கலவை எரு உற்பத்தி செய்வதற்கேற்ற இடத்தை வாங்கவும், குப்பைகள், மலக்கலவைகள், கலவை எருக்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு லாரிகள் வாங்கவும், கலவை எரு இடத்திற்குப் போதுமான சீரமைப்புகளைச் செய்யவும் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் உதவி வழங்கப்பட்டு வருகின்றது. கலவை எரு விற்பதில் ஏற்படும் விரயத்தைச் சரிக்கட்ட, கலவை எருத் தயாரிப்பின் செலவில் 25 சத வீதம் அல்லது உண்மையான விரயம் இதில் எது குறைவோ அது, உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகின்றது. 1971-72 ஆம் ஆண்டில், சுமார் 7.50 லட்சம் டன் கலவை எரு தயாரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972-73-ம் ஆண்டில், 9.00 லட்சம் டன் தயாரிக்கப்படவேண்டுமென்று குறிக்கோள் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

## கழிப்பு எருத் திட்டம்.

கழிப்பு எருத் தயாரிப்பதற்காக, கிராமங்களில் கிடைக்கும் மலக்கலவை உட்பட உள்ள கழிவுப் பொருள்களை, ஊராட்சிகள் பயன்படுத்துவதற்கு வசதிகள் செய்துகொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பணியை மேற்கொள்வதற்காக, ஊராட்சிகளுக்கு, தொடர் இனச் செலவில் 25 சத வீதம், உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்த உதவித் தொகையானது,





ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும், ரூ. 150 என்ற பேரளவுக்கு உட்பட்டதாக இருக்கும். நான்காவது திட்டக்கால அளவின் ஒவ்வொரு ஆண்டிற்குமான திட்டக் குறிக்கோள் அளவு 3.00 லட்சம் டன்னுக வரையறுக்கப்பட்டுள்ளது.

**தழை உரத் திட்டம்.**—தழை உரமிடுவது, இம் மாநிலத்தில், ஏற்கெனவே, செயலில் உள்ளது. இம்மாநிலத்திலுள்ள நெல் வயல்கள் முழுவதையும் தழை உரத்தால் நிரப்புவதே இத்திட்டத்தின் முடிவான நோக்கமாகும். தழை உரத்தின் தேவை, துறையின் மூலம் தழை உர விதைகள் வழங்கப்படுவதன் மூலமும், உழவர்களிடையே தழை உர விதைகள், தழை உரங்கள், ஆகியவற்றை மாற்றிக்கொள்வது, கொழிஞ்சி, போன்ற பிற தழை உரப் பயிர்களைத் தாங்களே விதைத்துக்கொள்வது ஆகியவற்றின் மூலமும் சரிக்கட்டப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டில், 2,100 டன் விதை வழங்குவது என்றும், அதன் மூலம் 23.72 லட்சம் ஹெக்டேர்களை இதன்கீழ்க் கொண்டுவருவது என்று குறிக்கோள் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டி டிசம்பர் திங்கள்வரை, 1,649 டன் அளவுள்ள விதை வழங்கப்பட்டுள்ளது.

## மண்ணைப் பண்படுத்தும் பொருள்கள்.

இத் திட்டமானது, இம்மாநிலத்தில், தஞ்சாவூரைத் தவிர, ஐந்து வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில், 100 ஏக்கர் கொண்ட கட்புல விளக்கப் பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கு 150 டன் களிக்கல் (ஜிப்சம்) இலவசமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 8 இடங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. 1971-72 ஆம் ஆண்டில், இத்திட்டமானது, திருவண்ணாமலை, செய்யாறு, சங்கரன்கோயில், சாத்தூர், பொள்ளாச்சி ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டில், மொத்தம் 1,200 டன் அளவுள்ள களிக்கல் (ஜிப்ஸம்) வழங்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில், ரூ. 1.20 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 8 கட்புல விளக்கப் பகுதிகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மண் பண்படுத்தும் பொருள்கள் மலிவு விற்பனை செய்தல்.

இத்திட்டமானது, இம்மாநிலத்தில், தஞ்சாவூர் உட்பட 6 வட்டாரங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. களிக்கல் (ஜிப்ஸம்) சுண்ணும்பு போன்ற மண் பண்படுத்தும் பொருள்கள், 50 சதவீத ஈடு செய் விலையில் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1971-72 ஆம் ஆண்டில், 2,000 டன் களிக்கல் (ஜிப்ஸமும்), 500 டன் சுண்ணும்பும், மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 2.50 லட்சத்தில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1972-73 ஆம் ஆண்டிலும், மொத்தம் ரூ. 2.75 லட்சம் செலவில், 2,000 டன் களிக்கல்லும் (ஜிப்ஸமும்), 500 டன் சுண்ணாம்பும் வழங்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

### நவீன வேளாண்மை முறைகள்—பயிர்ப் பாதுகாப்பு.

பயிர்ப் பாதுகாப்பு என்பது முக்கியமானதொரு நடவடிக்கையாகும். பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கையின்றி, எருவிடுதல், நீர் நிர்வாகம், பிற சாகுபடி முறைகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டும் நாம் விரும்பும் பயன் கிட்டிவிடாது. 1971-72 ஆம் ஆண்டில், 75 சதவீதத்திற்கு மேற்பட்ட நெல்வயல்களில் அதிக விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிடும் பெரிய அளவிலான திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. 1971-72 ஆம் ஆண்டில், நெல், சிறு தானியம் ஆகியவற்றில் அதிக விளைச்சல் தரும் வகைகளைப் பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டும், வணிகப்பயிர்களின் விளைச்சலைப் பெருக்கும் பொருட்டும், 15 சத வீத உதவித் தொகையுடன் அதிக அளவு பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கிடைக்கச் செய்ய போதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

1971-72 ஆம் ஆண்டில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள பரப்பளவின் புள்ளிவிவரமும், 1972-73 ஆம் ஆண்டில் இந்நடவடிக்கைகளின்கீழ்க் கொண்டுவர இலக்கிடப்பட்டிருக்கும் பரப்பளவின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(எக்கர் லட்சத்தில்)

| | 1971-72-ஆம் ஆண்டிற்கான இலக்கு. | 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையுள்ள சாதனை. | 1972-73-ஆம் ஆண்டிற்கான இலக்கு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| உணவுப் பயிர்கள் .. .. | 78·79 | 61·689 | 81·00 |
| உணவுப் பயிரல்லாத பிற பயிர்கள். | 44·70 | 35·592 | 32·00 |
| விதைப் பக்குவப்படுத்தல் .. | 15·00 | 10·103 | 16·37 |
| எலித் தொல்லைக் கட்டுப்பாடு. | 6·00 | 5·377 | 6·05 |
| விமானம் மூலம் மருந்து தெளித்தல். | 10·00 | 9·81 | 15·00 |



### பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களைப் பழுதுபார்த்தல், வாடகைக்கு விடுதல் ஆகியவற்றிற்கான வசதிகள்.

தெளிப்பான்கள், தூவுகருவிகள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்கும் நோக்கோடு, செயல்படாமலுள்ள பிரிவுகளை உடனடியாகப் பழுது பார்ப்பதற்காக ரூ. 4.08 லட்சம் செலவில், வலம் வரும் ஆறு பிரிவுகள் அமைப்பதற்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பயிர்ப் பாதுகாப்புப் பணிக்காக விசைத் தெளிப்பான்களை இயக்குவதற்கு, பயிற்சி பெற்ற தொழிலாளர்களை நியமிப்பதன் மூலம் முறையான பணியைப் புரிவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான ஊதியங்களும், வாடகைக் கட்டணங்களும் பயன்பெறுவோரிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

### விமானம் மூலம் மருந்து தெளித்தல்.

இந்நாட்டில் விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படும் மொத்த பரப்பளவைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 1970-71 ஆம் ஆண்டில் மொத்தம் 6.974 லட்சம் ஏக்கரில் விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. 1971-72 ஆம் ஆண்டில், 10 லட்சம் ஏக்கரில் விமானம் மூலம் மருந்து தெளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில், 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 9.81 லட்சம் ஏக்கரில் தெளிக்கப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் 9 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மருந்து தெளிப்பதற்கான செலவுகளைச் சரிக்கட்டும் வகையில், இந்திய அரசு, தற்போது ரூ. 63.00 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது. மொத்தத் திட்ட மானியத்துக்கு மேல் இது வழங்கப்படும், பயிர் செய்யப்பட்ட நிலங்களுக்கிடையேயுள்ள தரிசு நிலங்கள் மீதும், பிற பயிர்கள் மீதும் மருந்து தெளிப்பது குறித்து ஏற்படும் செலவில் குறிப்பிட்ட சத வீதத் தொகையும் மாநில அரசினால் ஏற்கப்படுகிறது.

விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படுவதற்காக, இரண்டு ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கு வேளாண்-தொழில் கழகம் தீர்மானித்துள்ளது, இது குறித்து இந்திய அரசுடன் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது.

### பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடம்.

தற்போது கோயம்புத்தூர், கோயில்பட்டி, ஆடுதுறை, காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களில் ஐந்து பூச்சி கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் உள்ளன. விற்பனையாவதற்குமுன் விற்பனை நிலையங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் சோதனையிடப்படுகின்றன,

இந்தத் தரமான மருந்துகள் மட்டுமே வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன. பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம், 1—8—1971 லிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் விதித் துறைகளில் ஒன்று, பயிர்ப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் இரசாயனங்களைச் சோதனை செய்வதற்கான இயந்திரங்களை வழங்குவதும் வசதிகளை செய்துகொடுப்பதுமாகும். கூடுதலாக, ஒன்பது பூச்சிக் கொல்லி மருந்துச் சோதனைக் கூடங்களை அமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

### மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்.

நீராலும், காற்றாலும் ஏற்படும் மண் அரிப்பிலிருந்து நிலத்தைக் காப்பதும், மிகவும் தேவைப்படும் மண் ஈரத்தைப் பாதுகாப்பதும் மண்வளப் பாதுகாப்பின் நோக்கமாகும். வேளாண்மை நிலங்களில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் கீழ்க்கண்ட முறைகளில் நிறைவேற்றப்படுகின்றன; நில வளைவுக்கேற்ப வரப்பு கட்டுதல், மலைப்பகுதிகளில் சரிவுப் பாத்திகள் அமைத்தல், ஆற்றுநீர் அரிப்புத் தடுப்பு, மற்றும் நிலத்தைச் சீராக்குதல், மட்டப்படுத்துதல், பாசன வடிகால் கால்வாய்களை அமைத்தல் போன்ற நீர்சிக்கனப் பயன்பாட்டு முறைகள். மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதால், மண் அரிப்பு தடுக்கப்படும். அத்துடன், உபரி நீர் பாதுகாப்பான முறையில் வெளியேற்றப்படும். இதனால், நிலையான அடிப்படையில் நிலத்தின் உற்பத்தி திறன் ஒரே சீரான முறையில் பாதுகாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணியை 23 துணைக் கோட்டங்கள் கவனித்துக் கொள்கின்றன. ஒவ்வொரு துணைக் கோட்டமும் 4,800 ஏக்கர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறாக, நான்காவது திட்டத்தின் ஒவ்வொரு ஆண்டுக்காகவும் இலக்கிடப்பட்ட பரப்பளவு, 1,03,000 ஏக்கராகும். 1971-72-க்கு என இலக்கிடப்பட்ட 1,03,000 ஏக்கரில், 31—12—1971 வரையில், 77,596 ஏக்கர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### மண்வளப் பாதுகாப்பு, நிலப்பயன் ஆய்வு.

கீழ்க்கண்ட காரியங்களுக்காக, தமிழ்நாட்டு மாவட்டங்களில் விரிவான மண்வள நோட்ட ஆய்வை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்:—

(1) மண்வகைகளின் தனித் தன்மைகளைத் தீர்மானித்தல்;

(2) அவற்றை வெவ்வேறு தொகுதி, தொடர், வகைகளாகப் பகுத்தல்;



(3) வெவ்வேறு மண்வகை எல்லைகளையும் தீர்மானம் செய்து வரைபடம் தயார் செய்தல்;

(4) பல்வேறு பயிரிடு முறைக்களுக்காக, மண்வகைகளின் பொருத்தம், பயன்பாடு ஆகியவற்றை ஒப்பிட்டு முன்னுரைத்தல்.

மண்ணுக்கேற்ற பயிர், அதைப் பயன்படுத்தும் முறை ஆகியவற்றை சரிவர வகுப்பதே இத்திட்டத்தின் இறுதியான நோக்கமாகும். கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம், அவிநாசி, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டங்கள், தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, சீர்காழி வட்டங்கள், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் ஆகியவற்றில் மண்வளம் பற்றிய நோட்ட ஆய்வு முடிவு பெற்றுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம், அறந்தாங்கி வட்டம் ஆகியவற்றில் மண்வள நோட்ட ஆய்வு நிறைவேறி வருகிறது. மண்வள நோட்ட ஆய்வுச் சோதனை கிட்டத்தட்ட 30 லட்சம் ஏக்கரில் நடத்தப்பட்டது.

1971-72-க்கென 7.5 லட்சம் ஏக்கர் என்று இலக்கிட்டிருக்க, அவ்வாண்டில் இதுவரையில் 7 லட்சம் ஏக்கரில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. 1972-73-ல் 10 லட்சம் ஏக்கரில் மண்வள ஆய்வு நடத்த இலக்கிடப்பட்டுள்ளது.

### வட ஆர்க்காடு மாவட்டம் சாத்தனூர் திட்டப் பாசனப் பகுதியில் மண்வளத்தைப் பாதுகாத்தல்—நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் திட்டம்.

**மண்வளத்தைப் பாதுகாத்தல்.**—நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன், வட ஆர்க்காடு மாவட்டம், சாத்தனூர் திட்டத்தின் பாசனப் பகுதியில் இத்திட்டம் செயலிலுள்ளது. 1971-72-ல், 250 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1972-73-ல் 3,400 ஏக்கர் பரப்பளவில் இப்பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மண்வளப் பரிசோதனை.**—உழவர்கள் தொழில் நுட்ப உத்திகளை அறியாமலும், தங்களது நிலங்களுக்கும் பயிர்களுக்கும் தேவையான சரியான சத்துக்களைப்பற்றி அறியாதவர்களாயும் இருந்தால், போதிய அளவுக்கும், உரிய காலத்திலும் உரங்களை அவர்களுக்கு வழங்கிவிடுவதனாலேயே, முழுப் பயன்கள் கிட்டிவிடாது. எனவே, உழவர்கள் உரங்களை சீரான முறையில் பயன்படுத்துவதை மேம்படுத்தும் திட்டத்தின் ஒருங்கிணைந்த முக்கியப்பகுதி

ந, மண்வளப் பரிசோதனைத் திட்டம் செயல்பட வேண்டும். தமிழ்நாட்டில் போது 11 மண்வளப் பரிசோதனைக் கூடங்கள் கீழ்க்கண்டவிடங்களில் யல்பட்டு வருகின்றன :

| ஊரின் பெயர். | ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள். |
|---|---|
| 1. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர். |
| 2. ஆடுதுறை | தஞ்சாவூர் |
| 3. கோவில்பட்டி | திருநெல்வேலி, கன்னியாகுமரி. |
| 4. கடலூர் | தென் ஆர்க்காடு. |
| 5. குடியாத்தம் | வட ஆர்க்காடு. |
| 6. மதுரை | மதுரை |
| 7. காஞ்சிபுரம் | செங்கல்பட்டு. |
| 8. சேலம் | சேலம், தருமபுரி. |
| 9. பரமக்குடி | இராமநாதபுரம். |
| 10. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி. |
| 11. உதகமண்டலம் | நீலகிரி. |

தருமபுரி மாவட்டத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 1972-73-ல் மபுரியில் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவ முடிவு ய்யப்பட்டுள்ளது. இந்திய அரசிடமிருந்து பெற்ற இயல் ஊர்தி, மண்வளப் சோதனை ஆய்வுக் கூடமொன்று, ஆடுதுறை மண்வளப் பரிசோதனை ஆய்வுக் த்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அத்தகைய மண்வளப் பரிசோதனை வுக் கூடங்கள் மேலும் இரண்டை இந்திய அரசு வழங்குமென்று எதிர் க்கப்படுகிறது.

ஆடுதுறையில் உள்ள ஓர் ஆய்வுக் கூடம் நீங்கலாக, ஏனைய மண்வளப் சோதனை ஆய்வுக் கூடங்கள் ஆண்டொன்றுக்கு நீர் மாதிரிகள் தவிர, 30,000 மாதிரிகளை ஆய்வு செய்யவேண்டும். ஆடுதுறையிலுள்ள ஆய்வுக் கூடம், மாதிரி ஆய்வு தவிர, 1,00,800 மண்மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய ண்டும்.



வளர்ச்சி வட்டார அளவில் மண்ணின் செழிப்புத் தன்மை பற்றிய ஆய்வு ஏற்கெனவே முடிக்கப்பட்டு விட்டது. தஞ்சாவூர் மாவட்டம் தவிர, ஏனைய மாவட்டங்களில், பாசனம் பெறும் பகுதிகளுக்கான, கிராம நிலங்களின் செழிப்புத்தன்மை பற்றிய வரைபடங்கள் தயாரிப்பது முன்னேற்ற நிலையி லுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட வேளாண்மை முழுமுறைத் திட்டத்தின் கீழ், செழிப்புத்தன்மை பற்றிய அதி முழுமுறை ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**சென்னை வேளாண்மைப் பொறியியல் பணிக்களரிகள் உட்பட, டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்.**

இதுவரை பயிரிடப்படாத நிலங்களையும், நடப்புத் தரிசு நிலங்களையும் பயன் படுத்துவதற்காகவும், ஏற்கெனவேயுள்ள நிலங்களின் விளைச்சலைப் பெருக்க அவற்றை உழுவதற்காகவும் உழவர்களுக்கு வேளாண்மை இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதே டிராக்டர் வாடகைத் திட்டத்தின் நோக்கமாகும்.

சொந்தமாக டிராக்டர் வாங்குவது எல்லா உழவர்களுக்கும் இயலாத ஒன்றாகும். அதற்காக, இத்துறை, டிராக்டர்கள், அதற்கான சாதனங்கள், சங்கிலி சக்கர டிராக்டர்கள் (Crawlers) ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு விடுகிறது. தற்போது, இத்துறையிடம் 156 சங்கிலி சக்கர டிராக் டர்களும், 151 டிராக்டர்களும் உள்ளன. இந்த இயந்திரங்களின் பயனை உழவர் கள் உணர்வதற்காகவும், அவர்களை அவற்றைப் பயன்படுத்த ஊக்குவிப்பதற் காகவும், 22—9—1971 வரையில், வாடகைக் கட்டணங்கள், குறைக்கப்பட்டது. 22—9—1971 முதற்கொண்டு கட்டுபடியாகிற கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக் கின்றன. பயிர்ப் பருவமில்லாத காலத்தில், டிராக்டர்களுக்கு தேவை இல்லாத போது, வேளாண்மைச் சாராத காரியங்களுக்காகவும், சாதாரணமாக வசூலிக்கப்படும் கட்டணங்கள்போல் இரண்டு மடங்குக் கட்டணத்தில் அவை வாடகைக்கு விடப்படுகின்றன. அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், வேளாண்மை சாராத பணிகளுக்காக டிராக்டர்கள் கேட்கப்பட்டாலும், வேளாண்மைக் காரியங்களுக்காக வசூலிக்கப்படும் கட்டணமே அவர்களிட மிருந்து வசூலிக்கப்படுகிறது. சிறு பாசனத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் டிராக்டர்கள் சிறு பாசனப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படாத போது, அவை நிலத்தை உழுவதற்கும், பிற வேளாண்மைப் பணிகளுக்கும் பயன் படுத்தப்படுகின்றன.

வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்ய, ஒவ்வோர் ஆண்டும் கூடுதலான சங்கிலி சக்கர டிராக்டர்கள் வாங்கப்பட்டு, அந்த டிராக்டர்களின் தொகுதியில்

கூடுதலாகச் சேர்க்கப்படுகின்றன. திட்ட இலக்குகளும், எய்திய சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1970 | | 1971-72. | | 1972-73 |
| --- | --- | --- | --- | --- | --- |
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை.* | இலக்கு. |
| 1. நிலத்தைச் சமன் படுத்துதல். | 9,733 | 11,681 | 10,615 | 9,580 | 12,108 |
| 2. இயந்திரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் சாகுபடியின்கீழ். | 35,000 | 35,061 | 50,900 | 39,772 | 50,900 |

*(1971 டிசம்பர் வரையிலும்.)

இத்துறையின் இயந்திரங்களின் தொகுப்பிலுள்ள இயந்திரங்கள் அதிகரித்துள்ளதாலும், ஊராட்சி ஒன்றியங்கள், உழவர்கள் ஆகியோர் வைத்துள்ள டிராக்டர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாலும், நியாயமான கட்டணத்தில் பழுது பார்க்கும் வசதிகள் போதிய அளவில் கிடைக்க ஏற்பாடு செய்வது அவசியமாகும். எனவே, படிப்படியான திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிக்களரி ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இத்துறைக்கு, கோயம்புத்தூர், திருவாரூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகியவிடங்களில் 5 டிராக்டர் பணிக்களரிகள் உள்ளன. விரைவில், கடலூரிலும் பணிக்களரியொன்று ஏற்படுத்தப்படும். செப்பனிடு கருவிகளுடன் கூடிய இயல் ஊர்திப் பிரிவுகள் இரண்டு கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட டிராக்டர் பணிக்களரிகள் ஆறினைத் தவிர வணிக முறையில் நடத்தப்படும் வேளாண்மைப் பொறியியல் பணிக்களரி ஒன்றும் சென்னையில் இருக்கிறது. விசைத் தூளக் கருவிகள், பிற வேளாண்மைச் சாதனங்கள் உற்பத்தியும் இப்பணிக்களரியில் மேற்கொள்ளப்படுகின்றது. ரூ. 40 லட்சம் செலவில் இப்பணிக்களரியை வலுப்படுத்தி, 15 விசைத் தூளக் கருவிகள் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

## சிறுபாசனம்.

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலமும், இறைவைப் பாசன வசதிகளை விரிவுப்படுத்துவதன் மூலமும், மிகு பயன்தரும் பயிர்வகைத் திட்டம் போன்ற வேளாண்மை உற்பத்தி பெருக்கத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற இயலும். இத்திட்டங்களுக்கு கடன் வழங்கும் பொறுப்பு, நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் முதலிய கடன் வழங்கு நிறுவனங்களிடம் மாற்றப்பட்டுள்ள போதிலும், அரசு தொடர்ந்து தேவையான இயந்திரங்களை வழங்கியும், பணிகளை நிறைவேற்றியும் வருகிறது.



969-70 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சிறுபாசனத் திட்டங்களின் கீழ்த்திட்டக் குறிக்கோள் அளவுகள், சாதனைகள் 1972-73-க்கான திட்டக் குறிக்கோள் அளவுகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| திட்டத்தின் பெயர். | 1969-70 | | 1970-71 | | 1971-72 | | 1972-73 |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| ணியார் குழாய்க் கிணறுகள் திட்டம். | 2,000 | 2,205 | 2,300 | 2,237 | 2,300 | 2,300 | 2,200 |
| ரீகைக் கிணறுகள் திட்டம். | 600 | 568 | 700 | 699 | 700 | 700 | 900 |
| டிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம். | 2,000 | 2,055 | 2,000 | 1,559 | 2,500 | 2,500 | 2,000 |
| ணறுகள் ஆழப்படுத்தும் திட்டம். | 850 | 1,248 | 810 | 1,220 | 1,050 | 1,050 | 900 |
| ருணிக் கிணறுகள் திட்டம் | 10 | 10 | 10 | 7 | 10 | 10 | 10 |

தனியார் குழாய்க் கிணறுகள் திட்டத்தின் கீழ், அதிகரித்து வரும் தேவைக்கேற்ப, 1972-73-ல், ரூ. 15 லட்சம் மதிப்புள்ள 10 விசைத் துளைக் கருவிகளைப் (இறக்குமதி செய்யப்பட்டவை) பெறுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டங்களின் கீழ், உழவர்கள் வெடி மருந்துகளைப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. எனவே, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் வெடிமருந்து சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, வேளாண்மைத் துறையால் வெடிமருந்துகள் வாங்கப்பட்டு, சேமித்து வைக்கப்பட்டு, தேவையான உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்தகைய வெடிமருந்து சேமிப்புக் கிடங்குகளை, இராமநாதபுரம், திருநெல்வேலி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் அமைக்கப்பட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. வெடிமருந்து மோட்டார், லாரி ஒன்றுடன் கூடிய அத்தகைய சேமிப்புக் கிடங்கு ஒன்றை, 1972-73-ல் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாறைகளை வெடிவைத்துத் தகர்க்கும் இயந்திரங்களுக்கான தேவை அதிகரித்து வருவதை ஈடு செய்யும் பொருட்டு, 1972-73-ல், கூடுதலாக, பாறைகளை வெடிவைத்துத் தகர்க்கும் 10 இயந்திரங்கள் வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## விற்பனை வசதி.

உற்பத்தியான விளைபொருளை வாங்குவது, விற்பனை செய்வது ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கு அங்காடிகள் இருந்தாலன்றி, உணவு தானியங்கள், வாணிபப் பயிர்கள் உற்பத்திப் பெருக்கத்தால் பயனேதும் ஏற்படாது. சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர் கொடுக்கிற விலையிலிருந்து தகுந்த பங்கை, உற்பத்தியாளர் பெறுவது, இயலும் பொருட்டும், முறைப்படுத்தப்பட்ட பதினெரு அங்காடிக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்படி, முறைப்படுத்தப்பட்ட 106 அங்காடிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டின் இறுதிக்குள் மேலும் 21 முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் தொடங்கப்படும். நான்காம் திட்ட இறுதிக்குள், மேலும் 150 அங்காடிக் கூடங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், தங்களது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்தும்படி அவர்களைத் தூண்டும் நோக்கத்துடனும், 1970-71 ஆம் ஆண்டு இறுதி வரையில் 10 தரப்பிரிவு நிலையங்கள்



ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1971-72 ஆம் ஆண்டின் இலக்கான 10 நிலைய ஏற்படுத்தப்பட்டுவிட்டன. 1970-71 வரையில், 12 தரப்பிரிவு ஆய கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. "அக்மார்க்" தரத்தின் கீழ் எல் பொருட்களைத் தரப்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பூர், இராஜபாளையம், பொள்ளா பெருந்துறை, புதூர் ஆகியவிடங்களில் 'கப்பாஸ்' பருத்தித் தரப் நிலையங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன.

1970-71-ல் வணிகத் தரங்களுக்கேற்ப, கீழ்க்கண்ட அளவுள்ள வேளாண் பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டன :—

| வரிசை எண். | விளைபொருள். | தரம் பிரிக்கப்பட்ட (குவிண்டால் அள |
|---|---|---|
| 1. | வேர்க்கடலைப் பருப்பு | 3,15,971 |
| 2. | வேர்க் கடலைத் தோல் | 11,138 |
| 3. | எள் | 21,162 |
| 4. | கரும்பு வெல்லம் | 77,168 |
| 5. | உருளைக் கிழங்கு | 1,64,729 |
| 6. | பழங்கள் (எண்ணிக்கையில்) | 27,08,550 |
| 7. | கப்பாஸ் பஞ்சு | 1,09,152 |

உற்பத்தியாளர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை பொருள் அங்காடிகள் சட்டத்தின் பயன்களைச் சரியான முறையில் அடை செய்ய, அரசு இச்சட்டத்தின் விதித்துறைகளைத் திருத்தியுள்ளது. அதன் அரசால் அறிவிக்கப்படும் ஒரு தேதியிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள அங்க பகுதியில் உள்ள அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளைபொருள் ஒன்றை பகுதிக்கு வெளியேயுள்ள அங்காடியில் வாங்குவதோ, விற்பதோ தடை செ படுகிறது.

## தமிழ்நாட்டில், காவிரி பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்.

காவிரி நீர்ப்பாசனப் பகுதியில், அங்காடிக் கூட்டுத் தொகுதி இணை சாலைகளுக்கு முக்கியம் அளித்து, மத்திய அரசுத் துறைத் திட்டத்தின் ரூ. 1.50 கோடி செலவில், பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசு ஒப்பு வழங்கியுள்ளது. அங்காடித் தொகுதிகள் 6-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 லட அளவில் மொத்தம் ரூ. 30 லட்சமும், 56 இணைப்புச் சாலைகளின் மேம்பா காக ரூ. 1.20 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செ படுத்த, 1971-72-ல் இந்திய அரசு, ரூ. 50 லட்சம் ஒதுக்கியுள்ளது.

## வேளாண்மைக் கல்வி

1971 ஜூன் முதல் நாளிலிருந்து கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செயல்படத் தொடங்கியது. இப்பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(a) வேளாண்மைத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் தொடர்பான அறிவியல் பாடமுறைகளிலும், பல்கலைக்கழகம் முடிவு செய்யும் வகையில் கல்வியறிவு அளித்தல்;

(b) வேளாண்மை, துணை அறிவியல் பாடங்களில் கல்வியறிவைப் பெருக்கி, ஆராய்ச்சி மேற்கொள்வதை மேம்படுத்துதல்;

(c) சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப் புற மக்களுக்கு அத்தகைய அறிவியல் பாடங்களைப் போதிக்கும் பணியை மேற்கொள்ளுதல்;

கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகள், பவானி சாகர், பொள்ளாச்சி, ஆளியாறு நகர், பெரியகுளம் ஆகியவிடங்களிலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள், சத்தியமங்கலம் கலப்பின வகை உற்பத்தித் திட்டம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்பு, அவை ஆற்ற வேண்டிய செயல் பொறுப்புகள் ஆகியவற்றைப்பற்றி ஆராயும் பொருட்டு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து நிபுணர் குழு ஒன்று அண்மையில் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டது. வேளாண்மைத்துறை அமைச்சருடனும், சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகளுடனும் இக்குழு விவாதம் நடத்தியது.

## வேளாண்மைப் பள்ளிகள்

குறைந்த காலத்தில் முடிந்தவரை பல கிராமங்களில் வேளாண்மைத் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பெருக்குவதற்காக, 1961-62-லிருந்து வேளாண்மைப் பள்ளிகளை நிறுவி நடத்திவருவதன் வாயிலாக, கல்லூரி பாடமுறைக்குக் கீழான அளவில் வேளாண்மைப் பாடங்களைப் போதிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்சமயம் 14 வேளாண்மைப் பள்ளிகள் இருக்கின்றன. தற்போதைய தேசிய நெருக்கடி நிலைமை நீக்கப்பட்ட பின்னர், மேலும் பல பள்ளிகளைத் தொடங்குவதற்கான பணி மேற்கொள்ளப்படும். 18 வயதிலிருந்து 30 வயது வரையுள்ள உழவர்களின் மக்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஓராண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.



## வான்வழி மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி

இம்மாநிலத்தில் விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சியளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தியிருப்பது வேளாண்மைத் துறையின் தனிச் சாதனையாகும். பூச்சி நோய்களைத் தடுக்க பூச்சிக் கொல்லி மருந்துகளையும், களான் ஒழிப்பு மருந்துகளையும் விமானமூலம் திறம்படத் தெளிப்பது குறித்து ஆராய்ச்சி நடத்தவும், உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் புதிய வாய்ப்புகளைக் கண்டுபிடிப்பதும் இதன் நோக்கமாகும். நாட்டில் முதல் தடவையாக இத்தகைய பள்ளி ஒன்று தொடங்கப்படுகிறது. விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி 1970 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

## வேளாண்மைத் துறை ஆராய்ச்சி

பூச்சி நோய், நோய்த் தடுப்புத்திறன் பெற்றுள்ள மிகுபயன் தரும் ரகங்களைக் கண்டுபிடிப்பதில் வேளாண்மை ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள கணிசமான முன்னேற்றம், தானிய வகைகளின் விளைச்சல் திறனைப் பெருக்குவதற்கு சரியான வேளாண்மை முறைகளைப் பின்பற்றப்பட்டமை ஆகியவை காரணமாக தமிழ் நாடு இந்தியாவிலேயே 1970-71 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. வேளாண்மை வளர்ச்சி விகிதம் 8.9 சதவிகிதமாகப் பதிவு செய்யப்பட்டது. அரிசி ரகங்களில் விரைவில் 100-110 நாட்கள் அறுவடைக் கால அளவுடைய 'கருணை' 'காவேரி', 115-120 நாட்கள் அறுவடைக் கால அளவுடைய 'காஞ்சி' 'பெண்ணை' 125-140 நாட்கள் அறுவடைக் கால அளவுடைய ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22, 140 நாட்களும் அதற்கு மேற்பட்ட கால அளவுடைய ஐ.ஆர். 5 ஆகிய ரகங்கள் மாநிலத்தில் அதிக அளவு பயன் படுத்தப்பட்டதுடன் மாநிலத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும் பயனளித்தன.

தினை வகைகளில் தானிய வளர்ச்சி பணிகளின் விளைவாக பாசனம் பெறும் நிலைகளின்கீழ் சோளம் கோ.4, கோ. 12, கோ. 18, கே. 2, கே. 4 ஆகியவையும், மழையினால் பாசனம் பெறும் நிலைகளில் கோ. 19, கோ. 20, கே. 3 ஆகியவையும் சி.எஸ்.எச். 1 (C.S.H.1) கலப்பினச் சோளத்துடன் மாநிலத்தில் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சுத்த சோள வகையைச் சேர்ந்த 'ஸ்வர்ணா', சி.எஸ்.எச். 1 கலப்பினச் சோளத்தைவிட அதிக அளவில் விளைச்சல் திறனைக் கொடுத்துள்ளது. கலப்பின விதைகளுக்காகும் அதிகச் செலவு இதில் தவிர்க்கப்

படுகின்றது. இதனால் இதற்குச் சிறப்பு அதிகம். கோ. 3, கோ. 4, எச்.பி. 3 கம்புகள் மிகவும் விரும்பிப் பயிரிடப்படும் வகைகளாகும். வடமாவட்டங்களில் கோ. 7, கோ. 8, கோ. 9 ராகியும், தென் மாவட்டங்களில் கே. 1, கே. 2, 'சாரதா', ராகியும் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்படுவனவாகும்.

இதைப்போலவே, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், காய்கறி ஆகிய மேம்படுத்தப்பட்ட வகைகள் அண்மையில் அறிமுகப்படுத்தப் பட்டன.

இவை வேளாண்மை முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. விரைவுத் திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தப்படும் பணியில் பருப்பு வகைகளில் சரியான விதைகளை மேம்படுத்துவதில் பெரு முயற்சியை மேற்கொள்ள கீழ்கண்ட மூன்று ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 1971-ல் ஒப்பளிப்பு வழங்கப் பட்டது:—

(1) திருவரங்குளம் வேம்பன் பண்ணையில் பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம்;

(2) நன்செய் நிலப் பருப்பு வகைகளை மேம்படுத்துவதற்கான முன்னோடித்திட்டம்;

(3) தமிழ்நாட்டில் துவரை, சோயா, மொச்சை ஆகியவற்றின் விளைச்சலை உயர்த்துவதற்கான திட்டம்.

பட்டுக்கோட்டையிலுள்ள அரசு விதைப் பண்ணையை பல் பயிர் ஆராய்ச்சி நிலையமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் புதிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றைத் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்**—மேற்கண்ட நிலையம் குடுமியா மலை அண்ணா பண்ணையில் உள்ளது. வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் இந்நிலையம் முழு அளவிலான ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்பட்டது. சிறப்பான மண் வளம், நீர் நிர்வாகம் ஒட்டிய பயிர் வள ஆராய்ச்சிப் பணியில் இந்நிலையம் முழு நாட்டத்தைச் செலுத்தும். மேலும் முன்னோடி ஏற்பாடாக, திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சிக்குரிய முறையான நல வளர்ச்சிப் பணிகளிலும் இந்நிலையம் ஈடுபடும்.

மரவள்ளிக் கிழங்குத் தொழிலின் தேவைகளை நிறைவு செய்வதற்காக வென்றே ஆராய்ச்சித் திட்டம் ஒன்று 1971 ஜூன் மாதத்திலிருந்து சேலத்தில் செயல்பட்டுவருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மரவள்ளிக் கிழங்கு



வகைகளின் மிகு பயன்தரும் ரகங்களை தேர்ந்தெடுக்கும் சோதனைப்பணி, இப்பயிர் விளைச்சலுக்கான தகுதியான வேளாண்மை முறைகள் ஆகிய பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

செய்முறை, ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தனியாக வேளாண்மைத் துறை கூட்டு இயக்குநர் ஒருவரை அரசு நியமித்துள்ளது. ஆராய்ச்சிப் பணியிலேயே முழுக் கருத்தும் செலுத்தப்பட வேண்டுமென்பது தான் இதன் நோக்கமாகும்.

வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட ஆராய்ச்சி நிலையங்கள் இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன :—

(1) வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.

(2) அரிசி ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்.

(3) அரிசி ஆராய்ச்சி நிலையம், திரூர் குப்பம்.

(4) பருப்பு வகைகள் ஆராய்ச்சித் துணை நிலையம், செயங்கொண்டம்.

(5) பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

(6) பருத்தி வேளாண்மை கூட்டு ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

(7) வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.

(8) வட்டார ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்.

(9) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நஞ்சு நாடு.

(10) கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.

(11) கரும்பு ஆராய்ச்சித் துணை நிலையம், சிறுகமணி.

(12) கரும்பு ஆராய்ச்சித் துணை நிலையம், மேலாலத்தூர்.

(13) வாழை ஆராய்ச்சி மைய நிலையம், ஆடுதுறை.

(14) வாழை ஆராய்ச்சி நிலையம், வேலூர்.

(15) மலை வாழை ஆராய்ச்சி நிலையம், மங்கலம்கொம்பு.

(16) மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்.

(17) முந்திரி ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.

(18) அனைத்திந்தியக் கூட்டு வளர்ச்சித் திட்டம் (மிளகாய்), கோவில் பட்டி.

(19) பழ வளர்ப்பு நிலையம், குன்னூர்.

(20) பழப்பண்ணை, கன்னியாகுமரி.

(21) பர்லியார் பழ நிலையம், நீலகிரி.

(22) கல்லார் பழ நிலையம், நீலகிரி.

(23) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பாலூர், தென்னார்க்காடு மாவட்டம்.

(24) தாவர இயல் தோட்டம், ஊட்டி.

(25) சிம்ஸ் பூங்கா, குன்னூர்.

## வேளாண்மை உற்பத்தி மன்றம்

நன்கு சீரமைக்கப்பட்ட, அறிவியல் சார்ந்த இன்றியமையா அடிப்படை வசதிகள் இருந்தால்தான் வேளாண்மை மேம்பாட்டுப்பணிகள் நீடித்து நடைபெற முடியும். இத்தகைய வசதிகள் இன்றி முக்கிய பணித் திட்டம் எதையும் மேம்படுத்துவதென்பது இயலாது. வேளாண்மை உற்பத்தி குறித்த பிரச்சினைகளைப் பாகுபடுத்தி, வேளாண்மை சீர் பெறுவதற்கான பல்வேறு ஏற்பாடுகள் பற்றி ஆலோசனைகள் நல்குவதற்காக வேளாண்மை உற்பத்தி மன்றம் ஒன்றையமைக்கலாம் என்று கருதப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி மன்றம் வெவ்வேறு நிலைகளில் பயிற்சிக்குரிய வசதிகளை நல்கும்.

வேளாண்மை வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகள், இப்போதுள்ள பணிகளைத் திருத்தியமைத்தல், மாற்றியமைத்தல், நவீன வேளாண்மையில் அறிவியல் சார்ந்த பயிர்முறை உத்திகளைக்கொண்டு வருதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள இந்த அமைப்பு பெரிதும் உதவும். இம் மன்றத்திலுள்ள நிபுணர்கள், வேளாண்மைத்துறை இதன் தொடர்பான பணிகள் ஆகியவற்றின் பிரச்சினைகள் முழுவதுமாக ஆராய்ந்து இதன் மேம்பாட்டுக்காக கருத்துரைகளை வழங்குவர். மேலும் வேளாண்மை சம்பந்தமான பணிகளிலும் தங்கள் ஆலோசனையை இவர்கள் நல்குவர். இம்மன்ற அமைப்பு பற்றிய விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

## உழவர்களுக்குப் பயிற்சியும் கல்வித் திட்டமும்

உழவர்களுக்குப் பயிற்சியும் கல்வித் திட்டமும் எனும் இத்திட்டம் மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டமாகும். நிறுவனங்கள் மூலம் பயிற்சி, களப் பணிப் பயிற்சி, தாமாக முன்வந்து, தொகுதி தொகுதியாகப் பயிற்சி பெறுதல்



போன்ற முறையான பயிற்சிகள் மூலம் உற்பத்திப் பொருள்களின் திட்டத்துடன் தொழில் நுட்ப அறிவை இணைப்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவையாவன :—

(1) உழவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(2) பண்ணை மகளிர்.

(3) உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்.

உழவர்களுக்கான பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட பாட முறைகள் நடத்தப்படுகின்றன :—

(a) உழவர்களுக்கான குறுகிய கால நிறுவனப் பாட முறை.

(b) பண்ணை மகளிருக்கான குறுகிய கால அளவு நிறுவனப் பாட முறை.

(c) விவாதக் குழுக்களின் கூட்டுநருக்கான நிறுவனப் பாட முறை.

(d) உற்பத்தி-கட்புல விளக்கம் முகாம்கள்.

(e) உழவர்கள், பண்ணை மகளிர் விவாத குழுக்கள்.

கோயம்புத்தூர், இராணிப்பேட்டை, ஆடுதுறை, கோவில்பட்டி, மதுரை, திண்டிவனம் ஆகிய இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அண்மையில் திருச்சிராப்பள்ளியில் புதூர் உத்தமனூரில் ஏழாவது நிலையம் செயல்படத் தொடங்கியது. 1972-73-ல் எல்லா நிலையங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

## தேசிய செய்முறை விளக்கத் திட்டம்

மிகு பயன்தரும் உணவுத் தானிய வகைகளை பல பயிர்களாகப் பயிரிடுவதிலும், வாணிபப் பயிர்களிலும் பரிவுரை செய்யப்பட்ட சிறந்த முனைப்பு முறைகளைப் பின்பற்றியும் ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவில் விளைச்சல் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை கணிசமான அளவுக்கு வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1971-72-ல் 130 செய்முறை விளக்கத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் 98 செய்முறை விளக்கத் திட்டங்கள் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. கோயம்புத்தூர், இராணிப்பேட்டை, ஆடுதுறை கோவில்பட்டி ஆகிய இடங்களில் முனைப்புச் சாகுபடிப் பகுதிகளில் அமைக்கப்பட்டன. 32 செய்முறை விளக்கத் திட்டங்கள் சாதாரண சாகுபடி பகுதிகளில் அமைக்கப்பட்டன. 1972-73-லும் இத்திட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

## ஆயக்கட்டு வளர்ச்சித் திட்டம்

குடியானவர் நிலங்களில் செய்முறை விளக்கப் பண்ணைகளை நடத்தி மேம்படுத்தப்பட்ட பயிர் சாகுபடி முறைகளை செயல் முறை விளக்கம் மூலம் குடியானவர்களுக்கு விளக்குவதும், பாம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்,

[1972 மார்ச் 25

சித்தார்-பட்டணங்கால் திட்டப் பகுதிகளில் சரியான பயிர் முறைகளை வரையறுப்பதும், பாசனம் பெறும் புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்வதை மக்களிடையே பிரபலப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட குறிக்கோள் அளவுகளும் அடையப்பட்ட சாதனைகளும் வருமாறு—

| திட்டத்தின் பெயர். | 1970-71 குறிக்கோள் அளவு. | 1970-71 சாதனை. | 1971-72 குறிக்கோள் அளவு. | 1971-72 சாதனை. | 1972-73 குறிக்கோள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம். | 180 | 180 | 180 | 180 | 180 |
| சித்தார்-பட்டணங்கால் திட்டப் பகுதி. | 26 | 26 | 26 | 26 | 26 |

**விளைச்சல் போட்டி.**—மேம்பட்ட பயிரிடு உத்திகளைப் பயன்படுத்துதல், தரமான விதைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் உணவுப் பயிர்களின் விளைச்சலைப் பெருக்குவதற்கான சாத்தியக் கூறுகளை விளக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம வளர்ச்சி வட்டார, மாவட்ட, மாநில நிலைகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 1965-66-லிருந்து நாடு முழுவதற்குமாகவும் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

கீழ்க்கண்ட பயிர்களில் அதிக விளைச்சலைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் :—

(1) நெல்.
(2) சோளம்.
(3) கம்பு.
(4) கேழ்வரகு.

1971-72-ல் 50,000 போட்டியாளர்கள் கலந்துகொள்வார்கள் என்று குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டிருக்க, 1971- டிசம்பர் வரை எல்லா போட்டி நிலைகளிலும் 33,000 போட்டியாளர்கள் கலந்துகொள்ள பெயர் கொடுத்துள்ளனர்.



1972 மார்ச் 25]

## வேளாண்மைத் தகவல்

### வேளாண்மை சார்ந்த செய்திப்படங்கள் தயாரிக்கும் பணித்திட்டம்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான தேவையும் புதுமைச் சாகுபடி முறைகளை வகுப்பதற்கான அவசியமும் நாளுக்கு நாள் பெருகிவருவதால், பயிர் வேளாண்மையில் அறிவியல், நவீன முறைகளை உழவர்களுக்கு எடுத்துரைப்பது இன்றியமையாததாகும்.

வேளாண்மை உற்பத்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை உழவர்களுக்கு அறிவுறுத்துவதில் பலதரப்பட்ட வழிகள் பின்பற்றப்பட்டாலும், செய்திப் படங்களைத் திரையிடுவது அதிக அளவில் பயன் தரத்தக்கதாகும். மேலும் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகளை உழவர் குடிமக்கள் தத்தம் பண்ணைகளில் செயல்படுத்த ஏராளமான குடியானவர்களுக்கு இதன் மூலம் எளிதில் அறிவுறுத்தலாம். பலதரப்பட்ட வேளாண்மை சார்ந்த பொருள்களில் இதுவரை 10 செய்திப் படங்களை வேளாண்மைத் துறையைச் சேர்ந்த வேளாண்மைத் தகவல் பிரிவு தயாரித்துள்ளது. மாநிலம் முழுவதும் இச்செய்திப்படங்கள் திரையிடப்படுகின்றன. இப்படங்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. 1972-73-ல் இன்னும் இரண்டு செய்திப் படங்களை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. "மண்வளச் சோதனை", "கட்புல விளக்கம்", "தாவிதைச் சான்றளித்தல்" ஆகிய செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருவதுடன், மற்றொரு செய்திப் படத்தை தயாரிப்பதற்கான பணியும் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மாநில நிதியிலிருந்து நிதியுதவி அளித்தும், மத்திய அரசின் உதவியுடனும், மாநில வேளாண்மைத் துறை வாயிலாக இந்த அரசு செயற்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தவிர, வேளாண்மை தொழிற்கழகம், வேளாண்மை நிதியுதவிக் கழகம், வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம், வணிக வங்கிகள் ஆகியவற்றின் வாயிலாக அளிக்கும் உதவிகளையும் அரசு பெற்று வருகிறது. இந்த நிறுவனங்களின் பணிகள் பற்றிய சுருக்கமான ஆய்வுரை பின்வருமாறு :—

**வேளாண்மை தொழிற்கழகம்.**—மாநில அரசால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மை தொழிற்கழகம்—1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதன் முதன்மையான குறிக்கோளாவன :—

வேளாண்மை கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய துறைகளில் புதுமைகளைப் புகுத்துதல், அவற்றிற்கான கருவிகளைத் தயாரிக்க தொழில்களை ஏற்படுத்தி நடத்துதல், வேளாண்மை விளைபொருள்களைச் செய்முறைக்குட்படுத்தத் தொழில்களைத் தொடங்கி நடத்துதல், வசதிகள்

ஏற்படுத்துதல் ஆகியவையாகும். 1966 ஜூலை 5 ஆம் நாள், இந்நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், 1968 ஏப்ரல் 1-இல் தான் அது செயல்படத் தொடங்கியது. உழவர்களுக்கு ரொக்கப்பண அடிப்படையில் வழங்குவதற்கென டிராக்டர்களை இறக்குமதி செய்வதுடன், டிராக்டர்கள், எண்ணெய் எஞ்சின்கள், மின்சார மோட்டார் விசையேற்றங்கள் போன்ற பண்ணைப் பொறிகளைத் தவணைக் கொள்முதல் முறையில் வழங்கும் திட்டமொன்றை 1970 அக்டோபர் வரை இந்நிறுவனம் செயற்படுத்தி வந்தது. இப்பண்ணைக் கருவிகளை வாங்குவதற்கு, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் நிதியுதவி செய்ய முன் வந்ததால் தமிழ்நாடு வேளாண்மை தொழிற் கழகம் தவணைக் கொள்முதல் முறையில் வழங்குவதை 1—10—1970-லிருந்து நிறுத்திவிட்டு, இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை மட்டும் வழங்கி வருகிறது. 1970-71-ம் ஆண்டில், ரூ. 9.98 லட்சம் மொத்த ஆதாயத்தோடு, இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள் 760, தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தால் உழவர்களுக்கு வழங்கப்பட்டன. இதைத் தவிர இக்கழகம், டிராக்டர் உதிரிப் பகுதிகளை நியாயமான விலைக்கு விற்று வருகிறது. அந்த ஆண்டில், 1,360 எண்ணெய் எஞ்சின்கள்/மின்சார மோட்டார் விசையேற்றங்களும், 64 டிராக்டர்களும் பங்கீடு செய்யப்பட்டன. டிராக்டர்கள், துளையிடு சாதனங்களை விற்பது, வாடகைக்கு விடுவது, தேவையான உழவர்களுக்கு பண்ணைக் கருவிகளைப் பழுதுபார்க்க வசதிகளைச் செய்து தருவது ஆகியவற்றை முதன்மையான நோக்கமாகக் கொண்டு, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, விழுப்புரம் ஆகிய இடங்களில் வாடகைக்கு விடுதல்-பழுதுபார்த்தலுக்கான பணி வட்டார நிலையங்களை இக்கழகம் துவக்கியது, அந்த ஆண்டின் குறிப்பிடத்தக்க பணியாகும். 1971-72-இல் 1,080 டிராக்டர்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. தற்போது, இக்கழகத்தின் ஏற்பளிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 3.30 கோடியாகும். இது, சரிபாதி அடிப்படையில் மாநில, மத்திய அரசுகளால் வழங்கப்பட்டதாகும். 1970-71-ல், வரி செலுத்த தொகை ஒதுக்கிய பிறகு, நிகர ஆதாயமாக ரூ. 1.93 லட்சம் ஈட்டியது.

3. கழகத்தின் தற்போதைய பணிகளாவன—

(1) சிறு உழவர்களுக்கு நேரடி விற்பனை அடிப்படையில் விசை உழு கருவிகளை வழங்குவது.

(2) வேளாண்மை கருவிகளைப் பழுதுபார்க்கும் பணி நிலையங்கள்.—டிராக்டர் முதலானவற்றை விற்ற பிறகு, தேவையான உழவர்களுக்கு அவற்றைப் பழுதுபார்க்கும் பணிகளைச் செய்வது, உதிரிப் பகுதிகளை



வழங்குவது ஆகியவற்றை அதன் ஐந்து வட்டார நிலையங்களின் வாயிலாகச் செய்கிறது. தனிப்பட்டவர்களின் டிராக்டர், மற்றும் ஏனைய பொறிகளைப் பழுதுபார்க்க இயந்திரக் கம்மியர்களின் பணிகளை வழங்குவதுடன், டிராக்டர்கள், ஏனைய பொறிகளின் பெரிய அளவிலான செப்பனிடும் பணிகளை மேற்கொள்கிறது. இந்த ஐந்து நிலையங்களுடன் இணைந்த 15 துணை நிலையங்களைத் தொடங்குவதற்கு கழகம் திட்டமிட்டுள்ளது. இவற்றில் வாடகைக்கு விடும் பணிகள் மேற்கொள்ளப்படும். 15 துணை நிலையங்களில் இரண்டு துணை நிலையங்கள், ஏற்கெனவே, செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி, மதுராந்தகம் ஆகிய ஊர்களில் திறக்கப்பட்டுள்ளன.

(3) (அ) வேளாண்மை, அதனைச் சார்ந்த துறைகள் தொடர்பான தொழில்கள், பணிகள் நிறுவுதல்.—வேளாண்மை, அதனைச் சார்ந்த துறைகளை இயந்திரமயமாக்குதல், நவீனமயமாக்குதல் ஆகியவற்றில் தனது நாட்டத்தை ஒருமுகப்படுத்தும். அது தொழில்களை நிறுவும் பணிகளை மேற்கொள்ளும். அத்துறைகளில் உற்பத்தியைப் பெருக்கவும், தக்க செய்முறைகளினால் கழிவுகளைப் பயன்படுத்தி உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பை உயர்த்தவும் அவை உதவும். அது பின்வரும் திட்டங்களை வகுத்துள்ளது. அவை செயற்படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) வேளாண்மைக் கருவிகளைத் தயாரித்தல்.

(2) வேளாண்மை-வான்வழிப் பிரிவை நிறுவுதல்—அதன்கீழ், தமிழ்நாடு, மற்றும் அண்டை மாநிலங்களில் வானவூர்திகளிலிருந்து பூச்சி மருந்து தெளிக்க வான ஊர்திகளைப் பெறுதல்.

(3) முந்திரித் தோலிலிருந்து 'டானின்' (Tannin) தயாரித்தல்.

(4) மும்முரப் பருத்தி வளர்ச்சித் திட்டத்தில் பயன்படுத்த 'என்ட்ரின்' (Endrin) (தொழில் நுட்பம்) அரசுக்கு வழங்குதல்.

(5) அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த மான்ட்ரோஸ் கெமிக்கல் கார்ப்பரேஷனின் உடனுழைப்புடன் களை கொல்லி மருந்துகளைத் தயாரித்தல்.

(6) ருமேனியா நாட்டின் உடனுழைப்போடு, 'டெர்மிசெம்' (Termicem) வெப்பக் காப்புப்பொருள் தயாரித்தல்.

(7) வேர்க்கடலை, பருப்புவகைப் பயிர்களுக்குப் பயன்படுத்துவதற்காக பயறு மருந்து வகைகளைத் தயாரித்து வழங்குவதற்கான வாணிகப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(8) மக்காச்சோளப் பொருட்கள் தயாரிப்பதற்காக, மக்காச்சோள செய்முறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

(9) தமிழ்நாட்டில், பல்வகை பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பங்கிட் வழங்குவதற்கான திட்டம் வகுத்தல்.

(10) உரங்களைப் பங்கிட்டு வழங்க திட்டமொன்று வகுத்தல்.

(ஆ) மீனளம்.—(1) தமிழ்நாட்டில், நைலான், மீன்வலை தயாரிக்கு தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல்.

(2) மீன்களை உறைய வைக்கும் பிரிவும் உறைந்த மீன் சேமிப்பு கிடங்கும் நிறுவுதல்.

## வேளாண்மை நிதியுதவிக் கழகம்.

திருநெல்வேலி மாவட்டத்தில், பின்வரும் இரண்டு திட்டங்கள் வேளாண்மை நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவி பெற்றுச் செயல்படுத்த படுகின்றன :—

(1) நிலத்திற்கு கான்க்ரீட் மேற்பரப்பிட்டு, திருநெல்வேலி மாவட்ட திருச்செந்தூர் வட்டத்தில் மணற்பாங்கான நிலங்களில் நெற் பயிரிடுதலுக்கான திட்டம்.

(2) தூத்துக்குடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள் "தேரி நிலங்களை" வாழை பயிரிடுவதற்காக மேம்படுத்தும் திட்டம்.

முதல் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே கிணற்றுப் பாசனம் பெறும் 20 ஏக்கர் நிலங்களுக்கு கான்க்ரீட் மேற்பரப்பிடப்படும். மேலும் 2,000 ஏக்க நிலங்களுக்குப் பாசனம் கிடைக்க விசையேற்றங்களுடன் கூடிய 40 கிணறுகள் வெட்டப்படும். இரண்டு ஆண்டுகளில் இந்நிலங்களில் வாழை பயிரிடப்படும். பின்னர், 20 சதவீதப் பரப்பளவு, அதாவது 400 ஏக்க கான்க்ரீட் மேற்பரப்பிடப்படுவதற்காக ஒதுக்கப்படும். எஞ்சிய 1,600 ஏக்க தென்னை பயிரிடுவதற்காக ஒதுக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த கடன் உதவி ரூ. 109 லட்சமாகும்.

இரண்டாவது திட்டம் தூத்துக்குடியிலும் அதனைச் சுற்றிலுமுள்ள "தே நிலங்களை" ஏற்றுமதி செய்வதற்கேற்ற வாழை பயிரிடும் நிலங்களாக மே படுத்துவதைக் கருதியது. இத்திட்டத்தினால் ஆறாயிரம் ஏக்கர் நிலங்க பலன் பெறும். 3,000 ஏக்கர் வாழை பயிரிடுவதின் கீழும், எஞ்சிய பரப்பு



நெல், வேர்க்கடலைப் போன்ற பயிர்களையும், காய்கறிகளையும் பயிரிடுவதன் கீழும், கொண்டுவரப்படும். இதற்காகும் மொத்தச் செலவுத் தொகை ரூ. 443.3 லட்சமாகும்.

1970 மே 1-லும் அதற்குப் பிறகும் உழவர்களுக்கு கடனாக வழங்கிய தொகை திருப்பிச் செலுத்தப்படுவதற்கு, 1, 2, திட்டங்களுக்காக முறையே ரூ. 74.80 லட்சம், ரூ. 244.80 லட்சம் வரை, மாநில அரசு, வேளாண்மை நிதியுதவிக் கழகத்திற்கு உத்தரவாதம் அளிக்கும்.

## வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம்.

வேளாண்மை மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைத் துறைக்குக் கடன் வசதிகள் அனைத்தையும் அளிக்கவும் அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. மறுநிதியுதவிக் கழகம் உதவி செய்யும் திட்டங்களைப் பொறுத்த வரையில், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலவள வங்கிகள் நீண்டகாலக் கடன்களையும், கூட்டுறவுக் கடன் வழங்கு வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கியும் நடுத்தரக்கால கடன்களையும் வழங்கி வருகின்றன.

வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் நிதியுதவி பெறும் சிறுபாசனத் திட்டங்களல்லாத பிற திட்டங்களைப் பொறுத்த வரையில், வேளாண்மைத் துறை கவனித்து வருகிறது. சிறுபாசனமல்லாத திட்டங்களைப் பொறுத்த வரையில், அரசு ரூ. 833.73 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடன், எட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவ்வளர்ச்சித் திட்டங்களாவன, நீலகிரியில் தேயிலை வளர்ச்சித் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப்பகுதியில் நிலத்தைப் பண்படுத்தும் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னந்தோப்பு வளர்ச்சித் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் வளர்ச்சித் திட்டம், சேலம், மதுரை மாவட்டங்களில் காப்பிப் பயிர்த் தோட்டங்கள் வளர்ச்சித் திட்டம், சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மீன் வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவை ரூ. 833.73 லட்சத்தில், 1971 டிசம்பர் இறுதிவரை, ரூ. 602.64 லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1971 டிசம்பர் இறுதியில், திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்பிடி தொழில் வளர்ச்சிக்காக, ரூ. 78.70 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பிரிவில், 20 திட்டங்கள் வகுக்கப்பட்டு, அரசின் ஆய்வில் உள்ளன. அவையாவன; மதுரை மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், மதுரை, சேலம் மாவட்டங்களில் திராட்சை வளர்ச்சித் திட்டம், தென் ஆர்க்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் முந்திரிப் பயிரிடும் திட்டம், கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தென்னை வளர்ச்சித் திட்டம், கன்னியாகுமரி, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நில மேம்பாட்டுத் திட்டங்கள், நீலகிரி மாவட்டத்தில் காப்பிப் பயிர் வளர்ச்சித் திட்டங்கள், மதுரை மாவட்டம் கீழ்ப்பழனிக் குன்றுகளில் மாவள்ளிக் கிழங்கு பயிரிடும் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடும் திட்டம் முதலியன. மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 17.5 கோடிக்கு மேலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் ஆய்வில் உள்ளன. முடிவெடுக்கப்பட்ட பின், நிதியுதவிக்காக வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஒப்பளிப்புக்காக அனுப்பப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் ரூ. 8.00 லட்சம் செலவில் கோக்கோ பயிர் வளர்ப்புத் திட்டமொன்று வேளாண்மைத் துறை இயக்குநரால் வகுக்கப்பட்டு வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திற்கு மேலனுப்பப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்புப் பிரிவில், திருநெல்வேலி, சேலம், மதுரை, வட ஆர்க்காடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர், செங்கற்பட்டு, தருமபுரி மாவட்டங்களில் ரூ. 44.19 லட்சம் செலவில் செம்மறியாடு வளர்ப்புத் திட்டங்கள் 39 வகுக்கப்பட்டு, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஒப்பளிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதுபோல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கலப்புப் பண்ணைப் பிரிவுகள் ஏற்படுத்துதல், விருதுநகரில் கோழி வளர்ப்புத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் கலப்புப் பண்ணைச் சங்கங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவையும் உள்ளன. இத்திட்டங்களுக்கு ஆகும் செலவு ரூ. 192.36 லட்சம். இத்திட்டங்கள் அனைத்தும் ஆய்வில் உள்ளன. முடிவெடுக்கப்பட்டவுடன், இத்திட்டங்கள் தேவைப்படும் நிதியுதவிக்காக, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்தின் ஏற்பளிப்புக்காக மேலனுப்பப்படும்.

### வாணிக வங்கிகள்.

தமிழ்நாடு அரசின் உத்தரவாதத்தின்கீழ் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பதினொன்று கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் டிராக்டர்கள், மின்சார மோட்டார் விசையேற்றங்கள், எண்ணெய் எஞ்சின்கள்,





விசை உழுகருவிகள் முதலியவை வாங்குவதற்காக உழவர்களுக்கு நடுத்தரக் காலக் கடன்களை, இந்த வங்கிகள் வழங்குகின்றன. பதினொரு வங்கிகளுக்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்ட ரூ. 490.00 லட்சம் அளவில், வங்கிகள் ரூ. 317.34 லட்சத்தை கடனாக வழங்கியுள்ளது.

### முடிவுரை.

வேளாண்மைத் துறை பல்வகைப்படுத்தப்பட்டதன் விளைவாகவும் துணிகரமான வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதன் விளைவாகவும் அண்மை ஆண்டுகளில் நம் மாநிலத்தில் வேளாண்மை விளைபொருள்களின் உற்பத்திப் பெருக்கம் பெருமளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் அனைத்து இந்திய அளவில் நம்முடைய சாதனை பாராட்டுப் பெற்றுள்ளது நமக்கெல்லாம் பெருமிதமளிக்கிறது. உழவர்பெருங்குடி மக்கள் காட்டிய ஆக்கபூர்வமான ஊக்கமே இதற்குப் பெருமளவு காரணமாகும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப, முன்னேறிய தொழில் நுட்ப உத்திகளையும் நடைமுறைகளையும் ஏற்றுக்கொண்டு, தம்முடைய திறமையை அவர்கள் வெளிப்படுத்தினர். அரசும் தன்னுடைய கடமையாக எப்போதும் உழவர் நலனைப் பெருக்குவதிலேயே ஆர்வமாயுள்ளது. சமூக நீதிக்கேற்ப, சாதாரண மனிதனுடைய நலங்கருதி, புதிய முயற்சிகளில் நவீன தொழில் நுட்ப முறைகளின் பலன்களை சிறு உழவர்களுக்குப் பரப்புவதையும், புஞ்சை நிலங்களை மேம்படுத்தப்பட்ட முறையில் சாகுபடி செய்வதையும் அரசு மேற்கொண்டது. இந்தப் பணிகள், நம்முடைய வேளாண்மைப் பொருளாதார நிலையை, பெருமளவிற்கு உயர்த்தாவிட்டாலும், நிலையான வளமிக்க பொற்காலத்தை உருவாக்கும் என்பது உறுதி. எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட வாணிகப் பயிர்களின் உற்பத்திப் பெருக்கம், வேளாண்மை சார்ந்த தொழில்களை நிறுவுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது. வேளாண்மை விளைபொருள் உற்பத்தியில் தற்போதுள்ள முன்னேற்ற வேகம் மேலும் அதிகமாகி, வரும் ஆண்டுகளில், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

| | |
|---|---|
| **Consid.** | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | Discussion for Short Duration/on an urgent matter of Administration. |
| D. S. G. | Demands for Supplementary Grants. |
| G. A. | Governor's Address. |
| G. D. | General Discussion |
| H.A.H. Dis./H.H.D. | Half-hour Discussion. |
| Int. | Introduction stage of a Bill. |
| L. A. | Legislative Assembly. |
| L. C. | Legislative Council. |
| M. | Motion. |
| P. M. | Privilege Motion. |
| R/Res. | Resolution. |
| St. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

23rd, 24th and 25th March 1972.

*Volume XX* (*Nos.* 1 *to* 3).


PAGES.

A

ABDUL JABBAR, THIRU V. M.—
I.C.S. Officers in Tamil Nadu, number .. .. 509–510

ACT(S).—
Prevention of Food Adulteration Act, Cases under—
in the taluks of Gingee and Tindivanam .. .. 521–522

ADITANAR, THIRU Si. Pa.—
Budget 1972–73,
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 534–544
Co-operation, Khadi .. .. .. .. 32, 33, 34, 39, 47, 50, 94, 107, 119

ADMINISTRATION.—
District Registrar's Office, Virudhunagar, shifting .. 20–21

AIR PORT.—
Madras, renaming as Arignar Anna Air Port .. 25–26

PAGES.

A—*cont.*

ALAGARSWAMY, THIRU S,—
Budget 1972–73 :
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 530, 531, 596, 598
Co-operation, Khadi .. .. .. .. 73, 75 34, 116
General Sales-Tax, Other Taxes and Duties - Administration .. .. .. .. .. 207

ALAGU THEVAR, THIRU S.
District Registrar's Office, Virudhunagar, shifting 20–21

ANANTHANAYAKI, THIRUMATHI T. N.
Budget 1972–73.
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 530, 583, 584–586, 621–622, 623, 624–626, 627, 628, 629, 630, 631, 632, 633, 635, 641, 642
Co-operation, Khadi .. .. .. .. 64, 81, 90–95, 96, 97, 98, 112, 113, 119
General Sales-Tax and Other Taxes and Duties—Administration .. .. .. 233–237
Labour including Factories .. .. .. 297–302, 308
Registration and Stationery and Printing .. 247–252



PAGES.

A—*cont.*

ANANTHANAYAKI, THIRUMATHI T. N.
Marriage advance to Government servants, extension of the benefit to local bodies' employees .. .. .. .. .. .. 501–505
Tuticorin Port, re-naming .. .. .. .. 527–528

ANNAMALAI, THIRU C. V. M.—
Budget 1972–73:
Voting :
Co-operation, Khadi .. .. .. .. 44, 50–54

ARCHAEOLOGY—
Thirumalai Naicker Mahal, Madurai, declaration as a protected monument .. .. .. 518

ARUMUGAM, THIRU A—
Budget 1972–73:
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 536-538

ARUMUGAM, THIRU S.—
Budget, 1972–73,
Voting :
Co-operation, Khadi .. .. .. .. 85–87

ARUMUGAM (GUNNER)—
Financial assistance to the family of .. 505–506

B.

BILL(S).—
General Sales-Tax (Amendment) Bill, 1972—
Int .. .. .. .. .. .. .. 32
Message from Governor .. .. .. .. 31
Public Wakfs (Extension of Limitation) Amendment Bill, 1972—
Int. .. .. .. .. .. .. 32

PAGES

B—*cont.*

BRIDGES AND CULVERTS—

Cauvery, Tiruchirappalli .. .. .. .. 24-25

Coleroon river .. .. .. .. .. .. 25

Railway overbridge at Mayuram, construction .. 198-199

Tiruvarur Railway Station, Overbridge .. .. 199-200

BUSES.

Plying without conductors .. .. .. .. 28-36

C

CHAIR

Announcement :

B. O. H. .. .. .. .. .. .. 591

Rulings and Observations of the Chair—

*DEBATE—*

*Allegations—*

Allegations should be specific .. .. 277

*Interruptions—*

It is not in order for a Member to interrupt a Minister quite often. Just as the Member had his say and just as the Minister had been patient enough to hear the Member in full, the Minister was also entitled to be heard uninterrupted .. 48-49

With reference to the frequent interruptions made by a Member who claimed that his party was real socialist party, the Chair observed that the Member was taking away the time of other Members and that was not 'socialism' .. 65



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observation—*cont.*

*DEBATE*—cont

*Members to be in their seats—*

Members who had given their names to take part in the discussion should remain in their seats when called upon to speak .. .. .. 572

*Second speech—*

A Member could not interrupt a Minister who was replying to a debate and make a second speech. He could only seek clarification on some points after the Minister had concluded his reply .. 322

*Time limit—*

Members should observe the constraint of time and should function according to the basic rules .. .. .. .. 225-226

*DELAY IN CIRCULATION OF PAPERS—*

With reference to the complaints voiced forth about the late receipt of the Policy Note on the Labour Demand, the Chair observed that the Assembly Department was not responsible for the delay as the papers were received in the Assembly Office only that morning. As the Stationery and Printing Demand was also to be taken up that day, the Chair took the opportunity to inform the House that the question of printing all Assembly papers expeditiously by having a separate Press in the Fort under the control of the Assembly Department, and not under the Stationery Department, exclusively for printing Assembly papers then and there, was constantly under the consideration of the Assembly and the Stationery and Printing Departments. It was for the Minister concerned to evolve a satisfactory solution to the problem.. 203-204

PAGES.

C—*cont.*

HAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*XPRESSIONS USED IN THE HOUSE*—

'மோசடி' (Fraud) in the sentence, 'I wish to refer to the fraud in the Statistics Department'. Withdrawn by the Member when objected to by a Minister .. .. .. .. .. 394

'Funny' in the sentence '..the Honourable Minister has got funny ideas....'. Held to be not wrong .. .. .. .. . 45

*UESTIONS AND ANSWERS.*

*Supplementary questions* :

Relevancy—

A supplementary question which did not relate to the main question and in which detailed information was sought, was disallowed 519

Supplementaries which did not relate to the main question would be disallowed .. 506

HINNASAMI, Thiru A.—

Budget, 1972 73 :

Voting :

Agriculture, Capital Outlay on Agriculture . 613–614

HINNAVELLAIYAN, Thiru C.—

Budget, 1972-73 :

Voting :

Agriculture, Capital Outlay on Agriculture .. 538–539

OLLEGES.

Run by Murugan Temple authorities, amount spent .. .. .. .. .. 30–31

Tamil Pulavar Course, number of Colleges . 185–188

Women, Ranipet .. .. .. .. 7–8

PAGES.

C—*cont.*

COMMITTEE(S)—

Estimates :

Report on Fisheries Department, presentation .. 530

Report on Cinchona, presentation .. .. 202

Subordinate Legislation :

Third report, presentation .. .. .. 202

CO-OPERATIVES—

Harijan Tanners Industrial Co-operative Society for Ranipet, formation .. .. .. .. 525–526

CORPORATION—

Madras, appointment of staff, representation to the depressed class people .. .. .. 512–513

D

DENNIS, Thiru N—

Budget, 1972-73 :

Voting :

Agriculture, Capital Outlay on Agriculture ... 570–572

I.C.S. Officers retired and re-employed in the State, number .. .. .. .. 510–511

Rice, seizure in Madras ... .. .. 21–23

Small Scale Industries and the Financial Investment, Survey in State .. .. .. 24

Tiruvottiyur Municipality, payment of salary to Municipal Councillors .. .. .. 513–514

DURAISAMY, Thiru S.—

Budget, 1972-73 :

Voting :

Labour including Factories .. .. 287–292

Building for Police Station, Tiruppur South Division .. .. .. .. .. 178

D—*cont.*

DURAISAMY THIRU S.—*cont.*
Government Hospital, Tiruppur, appointment of a Dental Surgeon .. .. .. .. 520
Velampalayam Town Panchayat, Drainage Scheme. 180

DISABLED PERSONNEL—
Physically handicapped, rehabilitation .. .. 196-198

DURAIMURUGAN, THIRU.—
Drinking water, Katpadi .. .. .. 6

E

EDUCATION—
Central Polytechnic, Adyar, students' strike .. 185
Scholarships for students .. .. .. 181-182
Students undergoing teacher's training, stipend .. 182
Tamil College and Tamil Teacher's Training, scholarships .. .. .. .. 182

EMPLOYEES—
Government servants, amount allocated for marriage advance .. .. .. .. 501-505

EMPLOYMENT—
Opportunities for Medical Graduates .. .. 519

ETTIAPPAN, THIRU P.—
Budget, 1972-73—
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 572-574
Irrigation canal from Cheyyar river, excavation .. 526-527

F

FACTORIES—
Tractor Factory in collaboration with Hungary, establishment .. .. .. .. 528-530
Quartz Crushing Factory, Jagir Ammapalayam, closure .. .. .. .. .. 23-24





FAMILY PLANNING—
Sterilisation under Family Planning Programme, Salem district .. .. .. .. 520-521

FINANCIAL BUSINESS—
Budget, 1972-73 :
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 530-643
Co-operation, Khadi .. .. .. 32-120
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. 207-243
Labour including Factories .. .. 202-205, 265-331
Registration .. .. .. .. 205-206 243-265
Stationery and Printing .. .. .. 206, 243-265

FORESTS—
Forest Museum at Vaigai Dam .. .. 26

G

GANAPATHY, THIRU T.—
Budget, 1972-73 :
Voting :
Co-operation, Khadi .. .. .. 45

GOPAL, THIRU K. P.—
Budget, 1972-73 :
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 532-533, 534

PAGES.

G—*cont.*

GOPAL, THIRU M—
Budget, 1972–73 :
Voting :
Labour including Factories .. .. 303-305

GURUSWAMY, THIRU N. V.—
Forest Museum at Vaigai Dam .. .. .. 26

H

HANDE, DR. H. V.—
Budget, 1972–73,
Voting :
Co-operation, Khadi .. .. .. 33, 37, 39–49, 64, 65, 66
General Sales Tax and Other Taxes and Duties —Administration .. .. .. 221–226 234, 236, 239
Labour including Factories.. .. .. 202 265–269
Registration and Stationery and Printing .. 205, 206, 245–247

Buildings for village schools, loans from Life Insurance Corporation .. .. .. 8–12
Central Polytechnic, Adyar, students' strike .. 185
Headquarters hospitals, convict wards, construction .. .. .. .. 19
Improving bus routes, suggestions .. .. 200–201
Medical Graduates, employment opportunities .. 519
Physically handicapped, rehabilitation .. .. 196–198



PAGES.

H—*cont*

HANDE, DR. H. V.—*cont.*
Thirumalai Naicker Mahal, declaration as a protected monument .. .. .. 518

HANDICRAFTS—
Part-time Instructors, strike .. .. .. 184

HARIJANS—
Construction of houses, new scheme .. 524–525
House-sites in Erode taluk .. .. .. 523–524

HARIJAN WELFARE—
Cattle Breeding, loans for Harijans .. .. 188–190
Draught animals to Harijans, amount allotted . 193–196
Plough bulls to Harijans and Maravas free distribution .. .. .. .. 190–193

HOSPITALS AND DISPENSARIES—
C.M.C., assistance particulars .. .. .. 19–20
Government Hospital, Tiruppur, appointment of Dental Surgeon .. .. .. .. 520
Headquarters hospitals, convict wards, construction .. .. .. 19
Maternity Hospital for Kalaignar Karunanidhi Nagar .. .. .. .. .. 177

HOUSING—
Houses for Harijans, new scheme .. .. 524–525

I

ILANGOVAN, THIRU G.—
Budget 1972-73,
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture .. 553–556

PAGES.

I—*cont.*

INDUSTRIES—
Small-scale and the Financial Investment, survey .. 24

IRRIGATION—
Canal from Cheyyar river, excavation .. .. 526–527
Punnampuzha-Pandiyar Scheme, survey .. .. 26–28

J

JABAMALAI, THIRU G.—
Budget, 1972–73,
Voting:
Agriculture—
Capital Outlay on Agriculture .. .. 547–548

JAMES, THIRU J.—
Budget, 1972–73,
Voting:
Co-operation .. .. .. .. 33
Labour including Factories .. .. .. 202, 203–204, 275–276, 278–279
Registration .. .. .. 206

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Budget, 1972 73:
Voting:
General Sales Tax and Other Taxes and Duties —Administration .. .. .. 225
Labour including Factories .. .. .. 203, 305-307, 309



PAGES.

K

KAMATCHI THIRU K.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 598–600

KANDAPPAN, THIRU S.—
Budget, 1972–73.
Voting:
Labour including Factories .. .. .. 277

KANDASAMY MANALI, THIRU C.—
Budget, 1972–73,
Voting:
General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. .. 220–221

KANDASWAMY, THIRU M.—
Budget, 1972–73,
Voting:
Co-operation—Khadi .. .. .. 99–101

KARUNANIDHI, DR. M.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 622, 623, 627
Labour including Factories .. .. 204–205 301, 302, 314

KARUPPIAH, THIRU A.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 579–581

KITTAPPA, THIRU N.—
Bridges across Cauvery, Tiruchirappalli .. .. 24–25
Bridge across Coleroon river .. .. .. 25
Buses without conductors .. .. .. 28–30

PAGES.

K—*cont.*

KITTAPPA, THIRU N.—*cont.*

Colleges run by Murugan Temple authorities, amount spent .. .. .. .. 30–31

Government Servants, amount allocated for marriage advance .. .. .. 501–505

Madras Air Port, naming as Arignar Anna Air Port .. .. .. .. 25–26

Maternity Hospital, Kalaignar Karunanidhi Nagar .. .. .. .. .. 177

Old Age Pension, age limit .. .. .. 1–3

Punnampuzha-Pandiyar Scheme, survey for irrigation .. .. .. .. .. 26–28

Railway overbridge at Mayuram, construction .. 198–199

Repairing old buses, spare parts, non-availability .. .. .. .. .. 199–200

Tamil Development, appointment of Special Officers .. .. .. 16–17

Tamil Pulavar Course, number of colleges .. 185 188

Tiruvarur Railway Station, Overbridge .. .. 199–200

KOVAI CHEZHIAN, THIRU—

Budget, 1972–73,

Voting:

Agriculture, Capital Outlay on Agriculture 615–620

KUMARASWAMY, THIRU K. N.—

Cattle breeding, loans for Harijans .. .. 188–190

Community wells in Palladam taluk, digging .. 511-512

Punnampuzha-Pandiyar Scheme, survey for irrigation .. .. .. .. .. 26–28

L

LABOUR—

Industrial Workers, introduction of uniform gratuity .. .. .. .. .. 522–523



PAGES.

L—*cont.*

LANGUAGE—

Tamil Development, appointment of Special Officers .. .. .. .. 16–17

LATHEEF, THIRU M. A.—

Budget, 1972–73,

Voting:

Agriculture, Capital Outlay on Agriculture .. 564–567

Co-operation, Khadi .. .. 78–81

General Sales-Tax and Other Taxes and Duties —Administration .. .. .. 217–220, 230, 241

Registration, Stationery and Printing .. 252–253

'Cinchona' and 'Geranium' cultivation, Elagiri Hills .. .. .. .. .. 199

LIBRARIES—

Purchase of newspapers and periodicals, rules and regulations .. .. .. .. .. 514–517

LOAN(S)—

Marriage advance to Government Servants, amount allocated for 1971–72 .. .. .. 501–505

Marriage advance to Government servants, extension of the benefit to local bodies employees .. 501–505

M.

MALAICHAMY, THIRU P.—

Malabar Police, location, etc. .. .. .. 4–5

MANIAN, THIRU P. S.—

Budget, 1972–73,

Voting:

Co-operation, Khadi .. .. .. 54–56

Scholarships for students .. .. 181–182

Tamil Teachers, appointment as Headmasters .. 12–14

PAGES.

M—*cont.*

MANICKAVASAGAM, THIRU R.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 577–579
Co-operation, Khadi .. .. .. 60–61

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 585–586, 587–589
Co-operation, Khadi .. .. .. 68–71

MARIMUTHU, THIRU M.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 600–602

MARUDHACHALAM, THIRU N.—
Budget, 1972–73,
Voting:
Registration, Stationery and Printing .. 206, 243–245

MEDICAL—
Centres in rural areas .. .. .. 518–519
Post-Graduate course in Pharmacy .. 177
Practitioners in Siddha Research in herbs found in Marunthuval Hill .. .. .. .. 174–176

MOHIDEEN THIRUPPUR, THIRU A. M.—
Budget, 1972–73,
Voting:
General Sales Tax and Other Taxes and Duties —Administration .. .. .. 232, 237,
Labour including Factories .. .. .. 307–312



PAGES.

M—*cont.*

MUNICIPALITIES—
Tiruvottiyur, payment of salary to Municipal Councillors .. .. .. .. 513-514

MUNUSWAMI, THIRU R. R.—
Budget, 1972–73,
Voting:
Co-operation, Khadi .. .. .. 87–90
Prevention of Food Adulteration Act, cases under —in the taluks of Gingee and Tindivanam .. 521–522

MURUGAIYAN, THIRU S.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 607-610

MUTHIAH, THIRU M.—
Aided Schools, taking over by Government .. 17
Apprentice—teachers in primary schools, regular salary payment .. .. .. .. 183–184
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 602–604
Draught animals to Harijans, amount allotted .. 193–196
Meecavai Higher Elementary School, Ottapidaram .. .. .. .. .. 17–18
Part-time Handicrafts Instructors, strike .. 184
Plough bulls for Harijans and Maravas, free distribution .. .. .. .. 190–193

PAGES.

M—*cont.*

MUTHUSAMI, THIRU P.—
Budget, 1972–73,
Voting :
Agriculture, Capital Outlay on Agriculture 605–607

N.

NAGARAJAN, THIRU K.—
Budget, 1972–73,
Voting:
Co-operation, Khadi .. .. .. 65–68
Vembarpatti Village Panchayat, upgrading .. 18-19

NARASIMHAN, THIRU A. C.—
Budget, 1972-73,
Voting:
General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. .. .. 226–228 241

NARAYANASWAMY, THIRU MANNAI P.—
Budget 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 530, 531—532, 610—611, 626, 627, 632, 633, 634, 635–641, 642,

NATARAJAN, THIRU N. V.—
Budget, 1972–73,
Voting :
Labour including Factories .. .. 202, 265, 277, 294, 322–332



PAGES.

N—*cont.*

NATARAJAN, THIRU N. V.
Budget, 1972–73—*cont.*
Voting—*cont.*
Registration and Stationery and Printing .. 205, 206, 243, 244, 257–264

NEDUNCHEZHIAN. DR. V. R.—
Budget, 1972–73,
Voting:
Labour including Factories .. .. 205

P.

PALANISWAMI, THIRU M.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 557–559
Co-operation, Khadi .. .. .. 75–77

PALANISWAMI, THIRU N. K.—
Budget, 1972–73,
Voting:
Agriculture, Capital Outlay on Agriculture .. 551–553
Labour including Factories .. .. .. 202 292–295
House-sites for Harijans Erode taluk .. .. 523–524
Industrial Workers, introduction of uniform gratuity .. .. .. .. .. 522–523
Punnampuzha Pandiyar Scheme, survey for irrigation .. .. .. .. .. 26–28
Post-Graduate Course in Pharmacy .. .. .. 177

PAGES.

P—*cont.*

PANCHAYATS—

Coleroon Panchayat Union, conversion into Town Panchayat .. .. .. .. 512

Drainage Scheme, Velampalayam .. .. 180

Vambarpatti Village Panchayat, upgrading .. 18–19

PANCHAYAT UNIONS—

Part-time Craft Instructors, Chingleput .. .. 184–185

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, notification .. .. .. 333, 644

Banking Commission recommendations, extracts .. 333

Commercial Budget of the Agricultural Engineering Workshop .. .. .. .. 644

Committee on Estimates:

Cinchona Department Report .. ..
Fisheries Department Report .. .. 644

Committee on Subordinate Legislation, Third Report .. .. .. .. .. 644

Co operative Societies Act, 1961, notification .. 333

Co-operative Development Schemes, review .. 333

Demand No. 24—Labour including Factories for the year 1972-73, speech by Honourable Minister for Labour .. .. .. .. 644

Demand No. 34—Stationery and Printing, speech by Honourable Minister for Labour .. 644

Excise and Prohibition Acts, review on enforcement .. .. .. .. 333

Farmers Co-operative Paper Mills, Minister's Note .. .. .. .. .. 334

Gazette, dated 6th January 1971, erratum issued .. .. .. .. .. 120

General Sales Tax and Other Taxes and Duties—Administration. Policy Note .. .. 120



PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Khadi and Village Industries Board, Policy Note .. .. .. .. .. 120

Legislative Assembly, resume of work from 22nd January to 1st February 1972 .. .. 334

Labour in Tamil Nadu, 1971-72, review .. 644

Panchayats Act, 1958, notification .. .. 120

Performance Budget relating to Agriculture Department, 1972-73 .. .. .. 644

Registration, Policy Note .. .. .. 333

Stationery and Printing Department, review .. 644

PENSION—

Old age, age—limit .. .. .. .. 1–3

PERUMAL, THIRU S.—

Budget, 1972-73,

Voting :

Agriculture

Capital Outlay on Agriculture .. .. 556-557

PLANTATIONS—

Cinchona and Geranium cultivation, Elagiri Hills .. 199

POLICE—

Building for Police Station, Tiruppur South Division .. .. .. .. .. 178

Finger Print Bureau, Crime Branch, Special pay for staff .. .. .. .. .. 4

Malabar Police, location, etc. .. .. .. 4–5

PAGES.

P—*cont.*

'ON. CHOCKALINGAM, THIRU P.—
Budget, 1972-73,
Voting:
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 614-615

'ONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1972-73,
Voting:
Khadi .. .. .. .. .. 34, 45, 65, 101-107, 113, 118, 119

'ONNUMALAI, THIRU T.—
Budget, 1 72-73,
Voting:
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 543-544, 545

Family Planning Programme in Salem district, sterilisation – – .. .. 520-521

'ORT(S)—
Tuticorin Port, re-naming .. – .. 527-528

UBLIC HEALTH—
Cases under Prevention of Food Adulteration Act in the taluks of Gingee and Tindivanam .. 521-522

R

ADHAKRISHNAN, THIRU M.—
Budget, 1972-73,
Voting:
Co-operation, Khadi .. .. .. 71-73



PAGES.

R—*cont.*

RAJA, THIRU A. M.—
Budget, 1972-73,
Voting:
Agriculture
Capital outlay on Agriculture } .. .. 610, 611-612
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. .. 212-217

RAJAGOPAL, THIRU K. M.—
Budget, 1972-73,
Voting:
Co-operation, Khadi .. – .. 96-99

RAJA PILLAI, THIRU V.K.
Practitioners in Siddha, research in herbs found in Marunthuval Hill .. .. .. 173-176

RAJAMANICKAM, THIRU K.—
Budget, 1972-73,
Voting:
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 567-570
Co-operation, Khadi . .. .. 81-84

RAJU, THIRU J. S.—
Budget, 1972-73,
Voting:
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 594-596

RAMALINGAM, THIRU R.—
Budget, 1972-73,
Voting:
Labour including Factories .. .. 295-297

PAGES.

R—*cont.*

RAMANATHAN, THIRU C.—
Budget, 1972-73,
Voting :
Agriculture
Capital Outlay on Agriculture .. .. 574–577

RAMASWAMY, THIRU E.—
Budget, 1972-73,
Voting :
Labour including Factories .. .. 279–282

RICE—
Seizure of rice in Madras .. .. .. 21–23

S

SADIQ PASHA, THIRU S. J.—
The Public Wakfs (Extension of Limitation) Amendment Bill, 1972, Int., .. .. .. 32

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Medical centres in rural areas .. .. .. 518–519

SARATHY, THIRU M. P.—
C.M.C. Hospital, assistance, particulars .. .. 19–20
Finger Print Bureau, Crime Branch, Special Pay for staff .. .. .. .. .. 4
Tractor factory in collaboration with Hungary, establishment .. .. .. .. 528–530

SCHOOLS—
Aided, Government take—over .. .. 17
Buildings for village schools, loans from Life Insurance Corporation .. .. .. 8–12
Government Training, admission of students .. 14–16
Meccavai Higher Elementary School, Ottapidaram .. .. .. .. .. 17–18



PAGES.

S—*cont.*

ENIVASAN, THIRU P.—
Subordinate Legislation Committee, Third Report, presentation .. .. .. .. 202

ERVICES—
I. A. S. officers, officers having Tamil as their mother-tongue, number .. .. .. 507–509
I.C.S. officers in Tamil Nadu, number ... .. 509–510
I.C.S. officers retired and re-employed in the State, number .. .. .. .. .. 510–511

IANMUGHAM, THIRU P. U.—
Budget, 1972–73,
Voting :
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 624, 627, 631, 642

Budget, 1972–73,
Voting :
General Sales Tax and Other Taxes and Duties
—Administration .. ... .. 207, 224, 225, 228–242

General Sales Tax (Amendment) Bill, 1972, Int., .. 32

VAPERUMAL, THIRU G.—
Budget, 1972-73,
Voting :
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 581–583, 584

MASUNDARAM, THIRU N.—
Corporation of Madras, appointment of staff, representation to the depressed class people .. 512–513

PAGES.

S—*cont.*


SONIAH, THIRU T.—
Budget, 1972–73:
Voting :
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 604–605

SOUNDARAPANDIAN, THIRU P.—
Houses for Harijans, new scheme .. .. 524–525

SUBBIAH, THIRU A.R.—
Budget, 1972–73,
Voting :
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 534–536

SUBBIAH, THIRU K. V.—
Budget, 1972–73, Voting :
Agriculture
Capital Outlay on Agriculture } .. .. 548–551

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1972–73, Voting :
Co-operation, Khadi .. .. .. .. 62–65
General Sales Tax and Other Taxes and Duties—
Administration .. .. .. .. 207–212, 240

SURENDRAN, THIRU M.—
Budget, 1972–73, Voting :
Labour including Factories .. .. .. 282–287

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1972–73, Voting :
Agriculture,
Capital Outlay on Agriculture } .. .. 531, 559–561
Co-operation, Khadi .. .. .. .. 33, 84–85




PAGES.

S—*cont.*


SUPPU, THIRU K.—
Budget, 1972–73, Voting :
Co-operation .. .. .. .. 33, 56–60
Libraries, rules and regulations for the purchase of newspapers and periodicals .. .. .. 514–517


T.


TEACHERS—
Apprentice—teachers in primary schools, regular salary payment .. .. .. .. 183–184
Tamil Teachers, appointment as Headmasters .. 12–14

THANGAMANI, THIRU K. T. K.—
Budget, 1972–73, Voting :
Co-operation, Khadi .. .. .. .. 115, 116
General Sales Tax and other Taxes and duties—
Administration .. .. .. .. 230, 242
Labour including Factories .. .. .. 203, 290, 291, 312–322, 331, 332
Registration and Stationery and Printing .. 206–253, 257
Government Training Schools, admission of students .. .. .. 14–16
House-breaking and thefts in Todhunter Nagar, particulars .. .. .. .. 178–179
Theft from a merchant, Tiruchirapalli .. .. 1.9
Quartz Crushing Factory, Jagir Ammapalayam, closure .. .. .. .. 23–24

THEFTS—
House-breaking and thefts in Todhunter Nagar, particulars .. .. .. .. 178–179
Theft from a merchant, Tiruchirappalli .. .. 179

PAGES.

T—*cont.*

THOOYAMANI, THIRU M. C.—

I.A.S. Officers having Tamil as their mother-tongue, number .. .. .. .. 507–509

THYAGARAJAN, THIRU E. S.—

Part-time Craft Instructors in Panchayat Union, Chingleput district .. .. .. .. 184–185

Students undergoing teacher's training, stipend .. 182

TRANSPORT—

Improvement of bus routes, suggestions .. .. 200–201

Repair of old buses, spare parts (non-availability).. 199–200

V.

VADIVEL, THIRU S.—

Budget, 1972–73, Voting ;

Agriculture, Capital Outlay on Agriculture } .. .. 531, 539–543

Panchayats in Coleroon Panchayat Union, conversion into Town Panchayats .. .. .. 512

VADIVELU, THIRU S. K.—

Budget, 1972–73, Voting :

Agriculture, Capital Outlay on Agriculture } .. .. 545–547

Kattuputhur Town Panchayat, rinking ater Supply Extension Scheme .. .. .. 180

EERASAMI, THIRU N.—

Budget, 1972–73, Voting :

Co-operation, Khadi .. .. .. .. 65

Labour including Factories .. .. .. 278, 299

ENKATASWAMY, THIRU B.—

Budget, 1972–73, Voting :

Agriculture, Capital Outlay on Agriculture } .. .. 531 561–564

General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. .. .. 207



PAGES.

V—*cont.*

VEZHAVENDAN, THIRU KA.—

Budget, 1972–73, Voting :

Labour including Factories .. .. .. 269–275, 277

Estimate Committee, Report on Cinchona
" " Fisheries
Presentation } 202–530

W.

WAHAB, THIRU K. A.—

Budget, 1972-73, Voting :

Agriculture, Capital Outlay on Agricultur[illegible] .. 531, 589–591, 592–594

College for women, Ranipet [illegible] .. 7–8

Financial assistance to fam[illegible] of Gunner Arumugam [illegible]5–506

Harijan Tanners' Industri[illegible] Co-operative Society for Ranipet, formation .. .. ., [illegible]5–526

Headquarters Hospital, Co[illegible] Wards construction .. .. .. .. 19

Tamil College and Tamil T[illegible]g, scholarships .. .. .. .. 182

WATER-SUPPLY—

Drinking water, Katpadi .. .. . 6

Kattuputhur Town Panchayat, Drinking Water Supply Extension Scheme .. .. .. 180

WELLS—

Community wells in Palladam taluk, digging .. 511–512

6156

# HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R.) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business the entry in which cases will be self explanatory.

All the Bills are alphabetically arranged under the main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading 'Chair'.

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C. A. St. | .. | Calling Attention Statement. |

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R.) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business the entry in which cases will be self explanatory.

All the Bills are alphabetically arranged under the main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading 'Chair'.

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C. A. St. | .. | Calling Attention Statement. |